எனது போராட்டம்

இரண்டாம் பாகம்



சிலம்புச் செல்வர்

டாக்டர். ம.பொ.சிவஞானம்

எனது போராட்டம்

(இரண்டாம் பாகம்)

சிலம்புச் செல்வர்

டாக்டர் ம.பொ.சிவஞானம்

அன்னை சிவகாமி பதிப்பகம்

15, சி.பி. ராமசாமி தெரு, ஆழ்வார்பேட்டை,
சென்னை - 18. தொலைபேசி: 2499 3644

நூல் விவர அட்டவணை

நூலின் பெயர்	:	**ஏனது போராட்டம் (இரண்டாம் பாகம்)**
நூலாசிரியர்	:	சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம்
மொழி	:	தமிழ்
வெளியிடுவோர்	:	அன்னை சிவகாமி பதிப்பகம் ஆழ்வார்பேட்டை சென்னை - 18.
விலை	:	ரூ.300.00
நூல் உரிமை	:	பதிப்பகத்தாருக்கு
பதிப்பு ஆண்டு	:	முதற் பதிப்பு 26 மே 1974 இரண்டாம் பதிப்பு டிசம்பர் 2003
நூல் அளவு	:	1 x 8 டெம்மி
பக்கங்கள்	:	818
எழுத்து	:	11 புள்ளிகள்
தாள்	:	16.6 கி.கி. வெள்ளைத்தாள்
பைண்டிங்	:	கெட்டி அட்டை
ஒளி அச்சுக்கோர்வை	:	ஓவியம், சென்னை-20.
அச்சிட்டோர்	:	இலட்சுமி பிரிண்ட்ஸ், சென்னை-21

காணிக்கை

என்னை ஆளாக்கிவிட்ட
அண்ணல் காந்தியடிகளுக்கு
இந்நூலைக்
காணிக்கை யாக்குகிறேன்.

— ம.பொ.சிவஞானம்

முதல் பதிப்பின் முன்னுரை

எனது வாழ்க்கை வரலாற்றை நானே எழுதி நூலாக்க வேண்டுமென்று, என்பால் பேரன்பு கொண்டுள்ள நண்பர்களும், தமிழரசுக் கழகத் தோழர்களும் நீண்ட நெடுங்காலமாக என்னை வற்புறுத்தி வந்தனர். என் சரித்திரத்தை எழுதி, வருங்காலத் தலைமுறையினரின் பார்வையில் வைக்கவேண்டுமென்ற விருப்பம் என் மனத்துள்ளும் இருந்து வந்தது.

ஒரு தொழிலாளியின் மகனாகப் பிறந்து, தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடங்கி அரசியலில் முன்னேற்றமடைந்த ஆபிரகாம் லிங்கன், பெஞ்சமின் பிராங்க்ளின் ஆகியோருடைய வாழ்க்கை வரலாறுகளை என் இளமைப் பருவத்தில் நான் படித்தபோதுதான் அரசியல் துறையில் ஈடுபட்டு முன்னேற வேண்டுமென்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. அந்த ஆர்வமே இன்றுள்ள நிலைக்கு என்னைக் கொண்டு வந்தது.

வறுமை நிறைந்த குடும்பத்திலே பிறந்த ஒருவன், வாலிபப் பருவத்திலே கடுமையாக உழைக்கும் தொழிலாளியாக வாழ்ந்து, அரசியல் துறையிலும் ஈடுபட்டு முன்னேறுவதென்றால், அது ஒன்றும் முடியாத காரியமல்லவென்பதனை என் மூலமாகவும் தொழிலாளி வர்க்கம் அறிந்து கொள்ள வேண்டுமென்பது என் பேரவா.

என் வரலாற்றை எழுத வேண்டுமென்று நான் கருதியதற்கு மற்றொரு முக்கிய காரணமும் உண்டு. அது, என் வாழ்க்கையானது ஒரு தனிநபருடைய சரித்திரமாக மட்டுமல்லாமல், உருவாகிக் கொண்டுவரும் புதிய தமிழகத்தின் வரலாறாகவும் இருந்து வருவதாகும். ஆம்; என்னை முதல்வனாகக் கொண்டுதான் புதிய தமிழகம் அமைக்கும் பணி 1946-இல் பாரதப் பெருநாடு சுதந்திரத்தை அணுகிக் கொண்டிருந்த நேரத்தில் — தொடங்கியதென்று நான் உறுதியாகக் கூற முடியும்.

பாரதம் முழுவதிலும் நடைபெற்ற விடுதலைப் போரில் தொடர்ந்து 20 ஆண்டுக் காலம் ஈடுபட்டு, 6 முறை சிறை புகுந்து அல்லல் பல அடைந்தேனென்றாலும், அதெல்லாம் என்னுடைய

சூழ்நிலை யிலேயே இந்தச் சமுதாயம் என்னை வைத்துவிட்டதால், ''எனது போராட்டம்'' என்னும் தலைப்பையே நான் தேர்ந்தெடுக்கலானேன்.

அரை நூற்றாண்டுக் காலம் நான் பொது வாழ்க்கை நடத்தி வந்திருக்கிறேன். இவ்வளவு நீண்ட காலப் பொது வாழ்க்கையிலே பல்வேறு சந்தர்ப்பங்களில், பல வகையிலே எனக்கு உதவி புரிந்து, என்னோடு ஒத்துழைத்து, என்னுடைய சாதனைகளிலே பங்கு கொண்டு வந்துள்ள நண்பர்கள் பலராவர். அவர்களுக்கெல்லாம் என்னுடைய சுயசரிதத்திலே இடந்தந்து, அவர்களோடு எனக்குள்ள தொடர்பை நிரந்தரப்படுத்த விரும்பியும் இந்நூலை எழுதி வெளியிடுகின்றேன்.

நான் அரை நூற்றாண்டுக் காலம் — சமயம் — சமூகம் — இலக்கியம் ஆகிய பல்வேறு துறைகளில் ஈடுபட்டு வந்துள்ளேன். இருப்பினும் இன்னமும் ஓர் எளிய தொண்டனாகவே நான் வாழ்ந்து வருகின்றேன். ஆம்; லட்சியப் பாதையிலே அங்குலம் அங்குலமாகத் தான் — அதற்கும் போராடிப் போராடித்தான் நான் முன்னேற வேண்டியிருக்கிறது. ஆயினும், என் மனத்துள் வளர்ந்துவரும் நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும், தெய்வப் பற்றும் மனநிறைவோடு பொது வாழ்க்கை நடத்தும் பேற்றினை எனக்குத் தந்து வருகின்றன.

இந்த நூலை இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு வி.வி.கிரி அவர்கள்தான் வெளியிட வேண்டுமென்று நான் விரும்பினேன். வடபுலத்திலுள்ள அமராவதிச் சிறையிலே (ஆகஸ்டுக் கிளர்ச்சியின் போது) ஓராண்டுக் காலம் அடைபட்டு அங்கு நான் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த நேரத்திலே, என்னைச் சிறைக்கு வெளியிலுள்ள மருத்துவமனையில் சேர்த்து, என் உயிரைக் காப்பதற்கு, சிறையில் என்னோடிருந்த தலைவர்களில் பலர் பெரு முயற்சி செய்தனர். அவர்களிலே முக்கியமானவர் டாக்டர் வி.வி.கிரி. அவர் என் அழைப்பை ஏற்று, இந்த நூலை வெளியிட இசைந்தது, யான் செய்த பேறு என்றே கருதுகின்றேன்.

கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் யான் எழுதிய நூல்களில் பெரும்பாலானவற்றை இன்ப நிலையத்தாரே வெளியிட்டுள்ளனர். இந்த நூலையும் சிறப்பாக வெளியிட முன்வந்தனர். அதற்காக இன்ப நிலைய உரிமையாளர் திரு.சோம. சுவாமிநாதன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ம.பொ.சிவஞானம்

இரண்டாம் பதிப்பின் பதிப்புரை

சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்களின் திருமகனார் ம.பொ.சி. திருநாவுக்கரசு அவர்களின் மகன்களான தி.திருஞானம் மற்றும் தி.ஞானசிவம் ஆகிய நாங்கள் எங்கள் தாத்தா அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலான **"எனது போராட்டம்"** என்னும் இந்நூலை மறுபதிப்பாக வெளியிடுவதை நாங்கள் பெற்ற பெரும் பேறாகக் கருதுகிறோம். ஏனெனில் எங்கள் தந்தை திருநாவுக்கரசு அவர்கள் இருந்திருந்தால் இந்தப் பணியை அவர் செய்திருக்கக் கூடும். ஆனால், இளமையிலேயே இறைவனடி சேர்ந்து விட்டதால் அவர் விட்ட பணியை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

இந்த நூலை வெளியிட நாங்கள் முயன்றபோது பதிப்பகம் ஒன்றை நாங்கள் தொடங்க வேண்டியதாயிற்று. அந்தப் பதிப்பகத்துக்கு **"அன்னை சிவகாமி பதிப்பகம்"** என்று பெயரிட்டோம். எங்கள் தாத்தாவின் அன்னைதான் சிவகாமி. என் தாத்தாவுக்குச் சிறு வயதில் பண்பாட்டோடு சேர்ந்த பயன்மிகு கல்வியறிவை ஊட்டி, எங்கள் தாத்தா உன்னத நிலைக்கு உயர உறுதுணையாக விளங்கியவர். வறுமை வாட்டிய போதெல்லாம் மனம் தளராது தமிழை ஊட்டி வளர்த்ததனால் தான் எங்கள் தாத்தா இலக்கிய அறிவு பெற்று ஆன்றோர் - சான்றோர் பெருமக்களின் வரிசையில் முதலிடம் பெற்றுத் திகழ்ந்தார். இத்தகைய பெருநிலைக்கு முதற் காரணமாக விளங்கிய எங்கள் தாத்தாவின் தாயார் சிவகாமி அவர்களின் திருப்பெயரை வைத்தது மிகவும் பொருத்தம் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை.

இந்நூலை இன்ப நிலையம் பதிப்பகத்தார் 1974-இல் முதலில் வெளியிட்டனர். எங்கள் தாத்தா ம.பொ.சி. அவர்களின் சிறைத் தோழரும் அப்போதைய குடியரசுத் தலைவராக இருந்த திரு.வி.வி.கிரி அவர்களால் வெளியிடப்பட்டது. ''எனது போராட்டம்' ஒரு தனிமனிதரின் வரலாறாக மட்டுமல்லாமல்,

சரிதத்தின் முன்னுரையாகத்தான் இருக்க முடியும். இதனாற்றான் எனது வரலாற்றைப் புதிய தமிழகத்தின் வரலாறாகக் கருதி அதனை எழுதும் முயற்சியை நான் மேற்கொண்டேன். நான் எழுதாவிடில், புதிய தமிழகம் உருவான சுவைமிக்க வரலாறு, உலகினரின் பார்வையிலிருந்தே மறைந்து போய்விடவும் கூடும்!

இப்படி, என் சுயசரிதத்தை எழுதுவதற்கான காரணங்கள் பல இருப்பினும், அதில் ஈடுபடுவதற்கு நான் பெரிதும் தயங்கினேன். அதை நினைக்கும் போதெல்லாம் அச்சங்கூட ஏற்பட்டதுண்டு. ஏனெனில், என்னுடைய வாழ்க்கையிலே இன்பகரமான நிகழ்ச்சிகள் மிக மிகக் குறைவானவை. துன்பகரமான நிகழ்ச்சிகளே மிகுதியானவை. அவற்றைத் திரும்பவும் நினைவுக்குக் கொண்டு வந்து, அந்தத் துன்ப நிகழ்ச்சிகளோடு உணர்வுபூர்வமாகக் கலந்து, அவற்றை அப்படியே வாசகர்களுக்குக் காட்சிப்படுத்த நான் முயற்சித்தால், இன்றைய வாழ்க்கையிலும் மனஅமைதி ஏற்படாமல் போய் விடுமோ என்ற ஐயமும் எனக்கு இருந்து வந்தது. அதனாற்றான், எனது வரலாற்றை எழுதி வெளியிடு வதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தேன்.

எனது பொது வாழ்க்கை — என் அதிர்ஷ்டவசமாக — முடிந்து போன கதையாகி விடவில்லை. முடியாத தொடர்கதையாகவே நீண்டு வருகிறது. ஆகவே, என் கதையைத் தொடங்கினால் அதை எங்கே முடிப்பது என்ற பிரச்சினை வேறு! இருந்தாலும், முடிவைக் காலத்தின் கையில் விட்டுவிட்டு, என் சுயசரிதத்தை எழுதி வெளியிடுவதற்கான துணிவைப் பெற்றேன்.

இந்த நூலுக்கு என்ன தலைப்பு கொடுப்பது என்பது பற்றி நீண்ட காலமாகச் சிந்தித்து வந்தேன். என்னைச் சூழ்ந்துள்ள தமிழரசுக் கழக முன்னணித் தோழர்களிடமும் ஆலோசனை நடத்தினேன். பலர் பல பெயர்களைச் சொன்னார்கள். என் மனத்திலும் எத்தனையோ பெயர்கள் தோன்றின.

''சத்திய வாழ்க்கை'' என்ற தலைப்புத் தரலாம் என்றுகூட எண்ணினேன். ஆம்; என்னைப் பொறுத்தவரையில் சத்திய வாழ்க்கை நடத்தவே நான் முயன்று வந்திருக்கிறேன். முடிந்த வரையில் அப்படியே வாழ்ந்தும் வந்திருக்கிறேன். ஆயினும், ''சத்திய சோதனை'' என்னும் பெயரிலே காந்தியடிகள் தம்முடைய வாழ்க்கை வரலாற்றை வழங்கியிருக்கிறார். ஆதலால், கிட்டத்தட்ட அந்தப் பெயரையே பயன்படுத்த எனக்குத் துணிவு ஏற்படவில்லை.

என் கடந்தகால வாழ்க்கை, போராட்ட மயமாகவே இருந்திருப்பதால் எனது விருப்பத்துக்கு மாறாக, போராட்டச்

தமிழகத்தின் - தமிழினத்தின் - தமிழ் மொழியின் அரை நூற்றாண்டு கால வரலாறாகவும் இருப்பதனை வாசகர்கள் உணர்ந்திருப்பார்கள்'' என்று எங்கள் அருமை தாத்தா நூலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவ்வகையில் அரிய வரலாற்று ஆவணமாகவும் இந்நூல் விளங்குகின்றது. இளைய தலைமுறைக்குப் புதிய தமிழகம் அமைந்த வரலாற்றுச் சம்பவங்கள் இந்நூலில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. சொந்த வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் போராடிப் போராடி வெற்றி பெற்று முன்னுக்கு வந்தவர் எங்கள் தாத்தா. கார்ல் மார்க்சிடம், ''உங்களுக்கு மிகவும் பிடித்தது எது'' என்று கேட்கப்பட்டபொழுது ''போராட்டம்'' என்றார். இவ்வுண்மையின் விளக்கத்தை ''எனது போராட்டம்'' நூலில் தெளிவாக அறியலாம். இந்நூலைப் படிக்கும் இளைய தலைமுறையினர் ஆக்கமும் ஊக்கமும் பெறுவர் என்பதில் எங்களுக்கு எள்ளளவும் ஐயமில்லை.

இந்நூலை ஒளிஅச்சுக் கோர்வை செய்த ஓவியம் நிறுவனத்தாருக்கும் அச்சிட்ட இலட்சுமி பிரிண்ட்ஸ் நிறுவனத்தாருக்கும் இப் பதிப்பகத்தைத் தொடங்கவும் இந்நூல் வெளியீடு தொடர்பாக ஆலோசனைகள் வழங்கிய திரு. 'பூங்கொடி' வே.சுப்பையா அவர்களுக்கும், இந்நூலின் மறுபதிப்பைப் பிழையில்லாமல் வெளியிட உதவிய எங்கள் பெரியப்பா திரு. பா.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும், எங்கள் சகோதரி தி.பரமேஸ்வரி அவர்களுக்கும், அனைத்துக்கும் மேலாக மேற்பார்வை பார்த்துக் கொடுத்த எங்கள் தாத்தா அவர்களின் அருமை நண்பராக விளங்கிய பெ.சு.மணி ஐயா அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அனைத்து வகையிலும் இந்நூலை அழகுற வெளியிட உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டுள்ளோம்.

அன்னை சிவகாமி பதிப்பகம் **ம.பொ.சி.தி. திருஞானம்**
சென்னை - 18 **ம.பொ.சி.தி. ஞானசிவம்**

பொருளடக்கம்

முன்னுரை ... 4

பதிப்புரை ... 7

இரண்டாம் பாகம்

''தமிழ் முரசு'' தோற்றம் ... 11

தமிழர் திருநாள் ... 41

தமிழினமே, ஒன்றுபடு! ... 70

விடுதலை விழா நாளிலே... ... 87

திருப்பதி மீது படையெடுப்பு ... 96

தமிழ் மாநில காங்கிரஸ் மாநாடு ... 128

கண்ணீரால் எழுதிய கட்டுரை ... 159

சோஷலிசப் பிரச்சாரம் ... 168

இயக்கம் வளர்ந்தது இமயம்போல! ... 184

போட்டி இயக்கங்கள் ... 194

இலங்கைத் தீவில் சுற்றுலா ... 210

திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு ... 226

மீண்டும் கோஷ்டிப் பூசல் ... 283

ஆந்திர மாநிலப் பிரிவினை ... 305

வடக்கெல்லைப் போராட்டம் ... 342

மாயூரத்தில் பெற்ற விழுப்புண்! ... 389

கழக — காங்கிரஸ் தகராறு! ... 397

தெற்கெல்லைப் போராட்டம் ... 450

தட்சணப் பிரதேசத் திட்ட எதிர்ப்பு ... 478

1946 முதல் 1956 வரை ... 521

பொன்விழாக் கண்டேன்! ... 536

பர்மா பயணம்	...	544
மீண்டும் வடக்கெல்லைப் போர்	...	559
திரு. படஸ்கர் தீர்ப்பு	...	579
சேலம் மாநாடு	...	590
வடக்கெல்லை வெற்றி விழா	...	595
ஆக்கவழிப் பணிகள்	...	607
தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர்	...	619
''தமிழ்நாடு'' பெயர் போராட்டம்	...	623
அன்னையை இழந்தேன்!	...	642
இலங்கையில் தமிழுரிமைப் போர்	...	646
1962 பொதுத் தேர்தல்	...	652
பயிற்சிமொழிப் போர்	...	668
'கட்டபொம்மன்' போராட்டம்	...	706
மலாசியாவில் சுற்றுலா	...	724
தி.மு.க.வின் மனமாற்றம்	...	732
சோதனை மிக்க காலம்	...	742
மணிவிழா	...	749
1967 பொதுத் தேர்தல்	...	775
1967 முதல் 1972 வரை	...	783
நிறுத்தி வைக்கிறேன்!	...	814

''தமிழ் முரசு'' தோற்றம்!

தமிழகக் காங்கிரசுக்குள் நடைபெற்ற கோஷ்டிப் பூசலில் பங்கு கொண்டிருந்தபோதே புதிய தமிழகம் படைக்கும் பிரச்சாரத்திலும் ஈடுபட்டு விட்டேனென்று சொல்ல வேண்டும். 26.6.45இல் திருச்சி மலைக்கோட்டை மண்டபத்தில் இலக்கியக் கூட்டமொன்று நடைபெற்றது. பேராசிரியர் ம.ரா.போ. குருசாமி அவர்களின் தமையனார் திரு. சண்முகசுந்தரம் அவர்கள் அந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். அவர் அப்போது அரசு அறத்துறைத் துணை ஆணையராக இருந்து வந்தார். அந்தக் கூட்டத்திலே ''புதிய தமிழகம்'' என்னும் பொருள்பற்றி விரிவாகப் பேசினேன். இலக்கியம் பேசுவதாகத் தொடங்கி எனது கற்பனையிலிருந்த புதிய தமிகம் பற்றி விரித்துரைத்தேன்.

நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை அந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். எனது பேச்சு அவரைப் பெரிதும் கவர்ந்தது.

பரபரப்பு!

மலைக்கோட்டைச் சொற்பொழிவில் தமிழரசுக் கோரிக் கையை வற்புறுத்தியதோடு, அப்போது மிகவும் பரபரப்போடு விவாதிக்கப்பட்டு வந்த ''திராவிடத் தனிநாடு'' கோரிக்கைக்கு ஒரு நிபந்தனையோடு ஆதரவு தெரிவித்தேன். மொழிவழி மாநிலக் கோரிக்கையை ஏற்பதாயின், இந்திய சமஷ்டிக்கு உட்பட்ட ஒரு துணை சமஷ்டியாகத் திராவிடநாடு அமையலா மென்று கூறியிருந்தேன்.

எனது பேச்சு ''சுதேசமித்திரன்'', ''மதறாஸ் மெயில்'' ஆகிய ஏடுகளில் வெளியானது. அதனால், தி.க. வட்டாரத்திலும் காங்கிரஸ் வட்டாரத்திலும் பரபரப்பு

ஏற்பட்டது. ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் திரு.பி. பாலசுப்பிரமணியம், தமது ''சண்டே அப்சர்வர்'' பத்திரிகையில் சிறிது வக்கணையோடு எனது பேச்சை விமர்சித்தார்.

மலைக்கோட்டைப் பேச்சுக்குப் பின்னர் 5 மாதம் கழித்து அதாவது 11.11.45இல் சென்னை மண்ணடிப் பகுதியில் லிங்கிச் செட்டித் தெருவிலுள்ள ஒரு கட்டிடத்தில் ''புதிய தமிழகம்'' எனும் தலைப்பிலே தொடர்சொற்பொழிவைத் தொடங்கினேன். ஞாயிறுதோறும் தொடர்ந்து 6 சொற்பொழிவுகள் நிகழ்த்தினேன். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளைதான் இதனைத் தொடங்கி வைத்தார்.

புதிய தோழர்கள்

வாரத்திற்கு வாரம் எனது பேச்சைக் கேட்கும் மக்கள் அதிகரித்து வந்தனர். குறிப்பாகத் தமிழாசிரியர்களும் மாணவர்களுந்தான் மிகுதியாக வந்தனர் என்று கூறவேண்டும். ஆசிரியர் களிலே வித்வான் மு.வரதராசனார் (பிற்காலத்தில் டாக்டர் பட்டம் பெற்றார்), பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம், வித்வான் அன்பு. கணபதி ஆகியோர் தொடர்ந்து வாரந்தோறும் வந்திருந்து என் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்தனர்.

வகுப்பு நடந்த இடம் பெரியதுதான் என்றாலும், அதுவும் கொள்ளாத அளவில் கூட்டம் பெருகி வந்ததால் 6ஆவது வாரத்துடன் எனது தொடர் சொற்பொழிவை நிறுத்திக் கொண்டேன்.

தென் சென்னையிலும் இதே பொருள்பற்றித் தொடர் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டுமென்று பலர் கேட்டுக் கொண்டதால், தியாகராய நகரிலுள்ள இந்தி பிரச்சார' சபைக் கட்டிடத்தில் 1946 ஜனவரியில் தொடர்ந்து 4 சொற்பொழிவுகள் நிகழ்த்தினேன்.

பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர்களும் மாணவர் களுமே என் கூட்டங்களுக்கு மிகுதியாக வந்திருந்தனர்.

மாணவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் திருவாளர்கள் கொ.மோ.ஜனார்த்தனம், ம.ரா.போ. குருசாமி, திருப்பத்தூர் அ.ச. ரகுநாயகம், சி. வேங்கடசாமி ஆகியோராவர்.

புதிய தமிழகம் பற்றி நான் சொற்பொழிவு நடத்திக் கொண்டிருந்த காலத்திலே ராஜாஜி — காமராசர் கோஷ்டிப் பூசல் உச்ச நிலையிலிருந்தது. மேலே குறிப்பிட்ட பச்சையப்பன் கல்லூரி மாணவர்களில் திரு.கொ.மோ. ஜனார்த்தனம் இந்தக் கோஷ்டிப் பூசலிலும் என்னோடு கலந்து கொண்டார். எனக்கு வலது கரமாக இருந்தார் என்றும் சொல்ல வேண்டும். அவர் கல்லூரி மாணவர் படையொன்றையே திரட்டித் தந்தார்.

இந்த மாணவ மணிகளின் தூண்டுதலாலும் துணையாலும் 1946 ஜனவரி 14இல் — தைத் திங்கள் முதல் நாளில் சென்னை கோகலே மன்றத்தில் 'தமிழர் திருநாள்' நடத்தினேன். பேராசிரியர் நமசிவாய முதலியார் அவர்கள், 'தமிழ்த் திருநாள்' என்ற பெயரில் தமிழாசிரியர்களைக் கூட்டி வைத்து, பொங்கல் நாளைக் கொண்டாடியதுண்டு. ஆனால், தமிழினத்தின் ஒருமைக்காகவும், உரிமைக்காகவும், ''தமிழர் திருநாள்'' என்ற பெயரில் தலைநகரிலே பொங்கல் திருநாளைத் தமிழகத் தலைவர்களைக் கூட்டி வைத்துக் கொண்டாடியது இதுதான் முதன் முறை.

எனது அழைப்பின்பேரில், திரு.வி.க., ராஜாஜி, காமராசர், ப.ஜீவானந்தம், ரசிகமணி டி.கே.சி., தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் ஆகிய சான்றோர் இந்த விழாவில் கலந்துகொண்டு பேசினர். நான் தலைமை வகித்தேன். இந்த மேடையில் ராஜாஜியும் காமராசரும் தோன்றியது நகர மக்கள் பார்வையிலே அபூர்வ சந்திப்பாக இருந்தது.

ஆந்திரர் ''மதறாஸ் மனதே'' என்று கோஷித்துக் கொண் டிருந்த காலமாதலால், இந்த விழாவிலே, ''சென்னை தமிழருடையதே'' என்ற வாக்கியம் பொறித்த சின்னங்களைத் தயாரித்து, அவற்றைச் சொற்ப விலைக்கு விற்கச் செய்தேன். கூட்டத்திற்கு வந்த மக்களிலே ஒவ்வொருவரும் அந்தச் சின்னங்களை விலைகொடுத்து வாங்கித் தத்தம் சட்டைகளில் பொருத்திக் கொண்டனர்.

அன்று பேசியவர்கள் எல்லோரும் சென்னை நகரின்மீது ஆந்திரர் எழுப்பிய தாவா பற்றியே பேசினர். இந்தத் தமிழர் திருநாள் கூட்டம் தமிழரசுக் கழகம் தோன்றுவதற்கான ஒத்திகையாக அமைந்ததெனலாம். இந்துமதப் பண்டிகையான பொங்கல் விழா மதங்கடந்த இனவழித் திருநாளாக மாறிய அற்புதம் அன்றுதான் நிகழ்ந்தது.

காங்கிரசுக்குள் கோஷ்டிப் பூசல் முடிவுக்கு வந்துகொண டிருந்த தருணத்திலே புதிய தமிழகம் காணும் பிரச்சாரத்தைத் தீவிரமாக்கிவிடத் தீர்மானித்தேன். அப்போதும் கழக மொன்றைத் தொடங்குவதென்ற முடிவு என் மனத்துள் இல்லை. அரசியல் கூட்டங்களிலும் இலக்கியக் கூட்டங்களிலும் பேசுவதற்கு எனக்கு அடிக்கடி வாய்ப்பு கிடைத்து வந்ததால், அந்தக் கூட்டங்களிலேயே எனது லட்சியத்தைப் பிரச்சாரம் செய்தால் போதுமென்று நினைத்தேன். அந்தப் பிரச்சாரத்தால் தமிழ்நாடு காங்கிரசை என்வழியில் திருப்பிவிட முடியுமென்றும் நம்பினேன். ஆயினும் பிரச்சாரத்தை வலுப்படுத்த ஒரு பத்திரிகை தேவைப்படுவதை உணர்ந்தேன்.

அப்போது இரண்டாவது உலகப் பெரும் போர் நடந்து முடிந்திருந்த தருணமாதலால் புதிதாக ஒரு பெயரில் பத்திரிகை தொடங்குவதற்கு அரசு அனுமதிக்காத நிலை இருந்தது. ஆகவே, ''தமிழ் முரசு'' என்னும் பெயரில் மாதம் ஒரு புத்தகம் வெளியிடுவதென்று திட்டமிட்டேன். முதல் புத்தகம் 1946 மே திங்கள் முதல் தேதியன்று வெளிவந்தது.

அதிலே எனது கற்பனையிலிருந்த புதிய தமிழகம் பற்றி விரிவாக விளக்கித் 'தமிழகத்தில் தமிழரசு' எனும் தலைப்பில் சிறப்புக் கட்டுரையொன்றை எழுதியிருந்தேன். அதில் பழைய தமிழகத்தின் அருமை பெருமைகளையெல்லாம் வருணித் திருந்தேன். அன்றைய தமிழகத்தின் குறைபாடுகளையும் தொகுத்துக் காட்டியிருந்தேன். இனித் தோன்றவேண்டிய தமிழகம் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் வரைந்து காட்டி இருந்தேன்.

''புதிய தமிழகம்''

''புதிய தமிழகம்'' பற்றி நான் எழுதியிருந்த பகுதி வருமாறு:

''வருங்கால சுதந்திர இந்தியாவில் சுதந்திர தமிழரசு அமைந்தே தீர வேண்டும். தமிழ் வளர, தமிழர் வாழ, தமிழ்நாடு செழிக்கத் ''தமிழரசு'' வேண்டும். அத்தகைய சுதந்திர அரசியலை நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமை தமிழருக்கு உண்டு.

''மேற்சொன்ன சுயநிர்ணய உரிமை இந்தியாவிலுள்ள எல்லாத் தேசிய இனங்களுக்கும் உண்டு என்பதே நமது கொள்கை. இந்தக் கொள்கை சமரச முறையில் ஒப்புக் கொள்ளப்பட்டு அமுலுக்கு வருமானால், தமிழன் ஒரு புதிய தமிழகத்தைக் காண்பான். பழைய தமிழரின் பண்பாடும், இன்றைய புதிய உலகத்தின் புத்துணர்ச்சியும் கொண்ட புதிய தமிழினத்தைச் சமைப்பான். அந்தப் புதிய தமிழகத்தின் அமைப்பும், தமிழினத்தின் வாழ்வும் பின்வருமாறு இருக்குமென்று கனவு காண்கிறேன்:

''தமிழ்நாட்டைத் தாய்நாடாகவும், தமிழ் மொழியைத் தாய் மொழியாகவும் கொண்டு வாழும் தமிழ்நாட்டின் நிரந்தரக் குடிகளனைவரும் தமிழராகக் கொள்ளப்படுவர்.

'தமிழர் எங்கெல்லாம் பெருவாரியாக வசிக்கிறார் களோ, அந்தத் தொடர்ச்சியான பிரதேசங்கள் தமிழ் நாடாகக் கொள்ளப்படும்.

''வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கூடி, தமிழகத்தில் சுதந்திர தமிழரசை அமைப்பர்.

''அந்தப் புதிய தமிழரசு, தனியரசுத் தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும் என்றாலும்,

கடந்த கால சுதந்திரப் போராட்டத்தில் இந்திய தேசிய இனங்கள் அடைந்துள்ள ஒற்றுமை உணர்ச்சி விஞ்ஞான வளர்ச்சி, சர்வதேச நிலை ஆகியவை காரணமாக, தமிழரசு, தானே தன் விருப்பத்தின் மீது ஏனைய இன அரசுகளடங்கிய இந்திய சமஷ்டியில் இணைய வேண்டும்.

''தமிழரசானது, தனது கலாச்சாரத்துடன் நெருங்கிய தொடர்புகொள்ள ஆந்திர - கேரள - கன்னட இன அரசுகளுடன் கூட்டுறவு கொண்டு ஒரு சிறிய சமஷ்டியை நிறுவிக் கொள்ளும் உரிமையையும் உடையதாயிருத்தல் வேண்டும்.

''புதிய தமிழகத்தின் பொருளாதாரக் கொள்கை பொதுவுடைமையேயன்றி, தனிவுடைமையல்ல. இந்தப் பொதுவுடைமை லட்சியமானது தமிழரது பண்பாட்டின் படியும் தற்கால விஞ்ஞான ரீதியாக வகுக்கப்பட்ட முறை களின்படியும் நிறைவேற்றப்படும்.

''புதிய தமிழகத்தில் சகல துறைகளிலும் தமிழ் மொழியே ஆட்சி செலுத்தும் ஆயினும், தமிழுக்குக் கேடு பயக்காத முறையில் வேறு எந்த மொழியையும் யாரும் இஷ்டப்பட்டுக் கற்க உரிமையுண்டு.

''மத விஷயங்களில் அரசாங்கம் பூரண நடுநிலைமை வகிக்கும்.

''ஒடுக்கப்பட்ட மக்களை உயர்த்துவதிலேயே அரசாங்கம் தனது சக்தியை முதன்மையாகச் செலவழிக்கும். மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பிக்கும் பழக்க வழக்கங்கள் சட்டப்படி தடுக்கப்படும்.

''ஏற்றமும் இழிவுமில்லாத சமத்துவ குணத்தை யூட்டும் கல்வி முறையையே சர்க்கார் பின்பற்றும்.

''சமயச் சார்பற்ற கலைகளை வளர்க்கும் பொறுப்பை அரசாங்கம் தானே மேற்கொள்ளும்.

''மேற்சொன்ன வகையில் ஒரு புதிய தமிழகத்தைப் படைக்கத் தமிழரசு ஒன்றினால்தான் முடியும். அத்தகைய அரசு வேண்டுமென்று முரசு கொட்டுவோம்!''

ராஜாஜியின் புன்முறுவல்!

எனது கட்டுரையில் 'மத்தியில் சமஷ்டி; மாநிலத்தில் சுயாட்சி' என்று கூறியதோடு நில்லாமல், விரும்பாதபோது மத்தியிலிருந்து பிரிந்து வாழவும் மாநிலத்திற்கு உரிமை வேண்டுமென்று நான் வற்புறுத்தினேன். காரணம், அப்போது காங்கிரஸ் மகாசபை மாநிலங்களுக்குப் பிரிந்து வாழும் உரிமை உண்டு என்று உறுதி கூறியிருந்ததுதான்.

''தமிழ் முரசு'' முதல் புத்தகத்தில் மேலே எடுத்துக் காட்டிய அரசியல் கட்டுரையேயன்றி, ''வீரக் கண்ணகி'' என்ற இலக்கியக் கட்டுரையொன்றையும் எழுதியிருந்தேன். சிலப்பதிகாரம் பற்றிய எனது முதல் எழுத்தோவியம் இதுதான்.

''தமிழ் முரசு'' முதல் புத்தகத்தை ராஜாஜி அவர்களிடம் நானே நேரில் சென்று கொடுத்தேன். அவர் எனது அரசியல் கட்டுரையை மேற்போக்காகப் படித்துவிட்டு ஒரு புன்முறுவல் பூத்தார். அதற்குமேல் தமது கருத்தை அவர் வெளியிடவில்லை; நானும் கேட்கவில்லை. எனது குறிக்கோளின் முதல் நெம்பர் எதிரி அவர்தான் என்பதையும், அவரோடுதான் பிற்காலத்தில் போராட வேண்டியிருக்குமென்பதையும் அப்போது நான் நினைத்துப் பார்க்கவில்லை. அவர், ஏதோ விளையாட்டாக அல்லது புரியாத்தனமாக நான் புதிய தமிழகம் பற்றி கனவு காண்கிறேன் என்று கருதியிருக்க வேண்டும். எனது கனவை நனவாக்கும் சக்தி எனக்கில்லையென்று கருதி, அவர் என் குறிக்கோளை அலட்சியப்படுத்தியிருக்கலாம். நல்லவேளை யாக நாடு என்னை அலட்சியப்படுத்தவில்லை. எனது அரசியல் கட்டுரைக்கு நாட்டில் நல்ல வரவேற்பு இருந்தது. ராஜாஜியின் ஆப்த நண்பரான திரு. ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தமது 'கல்கி' வார இதழிலே 'தமிழ்முரசு' முதல் புத்தகத்துக்கு மதிப்புரை எழுதியிருந்தார். அதிலே எனது கற்பனையிலிருந்த

புதிய தமிழகத்தை ஆதரித்து எழுதியிருந்தார். எனது கனவை நனவாக்குவதில் எனக்குள்ள ஆற்றலை அவர் சந்தேகிக்கவில்லை.

''குடியரசு'' வார இதழிலே பெரியார் ஈ.வெ.ரா. அவர்களும் ''தமிழ் முரசு'' புத்தகத்துக்கு மதிப்புரை எழுதியிருந்தார். எனது அரசியல் கட்டுரையைப் பொதுவாக அவர் வரவேற்றாரென்றாலும், கதர் அணிந்து கொண்டு, ஆரியரது (அவரது கருத்துப்படி) செல்வாக்கிலுள்ள காங்கிரசிலும் இருந்து கொண்டு நான் புதிய தமிழகம் படைக்கக் கனவு காண்பதனைச் சிறிது நையாண்டி செய்திருந்தார்.

அப்போது திராவிடர் முன்னேற்றக் கழகம் தோன்றியிருக்கவில்லை. திராவிடர் கழகம்தான் இயங்கி வந்தது. அதன் பொதுச் செயலாளராகவும் தளபதியாகவும் திரு.சி.என். அண்ணாதுரை, எம்.ஏ. இருந்து வந்தார். ''தளபதி அண்ணாதுரை'' என்றுதான் அவரை அழைப்பார்கள். அவர், தமது ''திராவிட நாடு'' வார இதழிலே, 'சொன்னோம், சொல்கிறார்கள்' என்னும் தலைப்பிட்டு, ''தமிழ் முரசி''ல் நான் எழுதிய அரசியல் கட்டுரைக்கு மதிப்புரை வரைந்திருந்தார். அவரும் எனது புதிய தமிழகக் கொள்கையைப் பொதுவாக வரவேற்றார் என்றாலும், காங்கிரஸ்காரனாகிய நானும் தி.க.வின் திராவிட நாட்டுக் கொள்கையையே கூறுவதாகச் சுற்றி வளைத்துச் சான்றுகள் காட்டி விமர்சித்திருந்தார்.

பிரிட்டிஷ் திட்டம்

''தமிழ் முரசு'' இரண்டாவது புத்தகம் வெளிவருவதற்குள் பிரிட்டிஷ் மந்திரிசபைத் தூதுக் குழுவினர் இந்தியாவுக்கு வந்தனர். அவர்கள் கொண்டுவந்த இந்திய சுதந்திரத் திட்டம் வெளியிடப்பட்டு, இந்தியத் தலைவர்களால் விவாதிக்கப்பட்டு வந்தது. பிரிட்டிஷ் திட்டம், பாதுகாப்பு, போக்குவரத்து, அயல்நாட்டுறவு ஆகிய மூன்று அதிகாரங்களை மத்திய அரசுக்கு வழங்கி, மற்ற அதிகாரங்களனைத்தையும் மாநில அரசுகளுக்கே உரிமையாக்கியது. ''மிச்ச அதிகாரங்கள்'' மாநில அரசுகளிடமே விடப்பட்டன.

இந்த அளவில் பிரிட்டிஷ் திட்டம் எனக்கு மனநிறைவைத் தந்தது என்றாலும், மொழிவழி இன அடிப்படையில் அந்தத் திட்டம் தமிழர், ஆந்திரர், குசராத்தியர், மராத்தியர் ஆகிய தேசிய இனங்களுக்கு உரிமை வழங்கவில்லை. இதைப்பற்றித் திட்டத்தில் மறைமுகமாகக்கூடக் குறிப்பெதுவும் இல்லை. அப்போதிருந்த பன்மொழி ராஜ்ய அடிப்படையில்தான் மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்கியது பிரிட்டிஷ் திட்டம்.

அரசியல் நிர்ணய மன்றத்துக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வயது வந்த வாக்காளர்களுக்கு வழங்கப்படவில்லை. அப்போதிருந்த மாநிலச் சட்டமன்றங் களின் உறுப்பினர்களைக் கொண்டே அ.நி.மன்ற உறுப்பினர்களை ஒற்றை மாற்று ஓட்டு முறையில் தேர்ந்தெடுக்க வழி செய்தது. இந்து — முஸ்லிம் — கிறித்துவர் என்னும் மத அடிப்படையில் அ.நி. மன்ற உறுப்பினர்களைத் தேர்ந் தெடுக்கவும் உதவி புரிந்தது. இதனை அனுமதித்தால் மொழிவழி இன உணர்ச்சி கொல்லப்பட்டு விடுமென்று நான் அஞ்சினேன்.

பிரிட்டிஷ் திட்டம் இன்னொரு பெருங்கேட்டையும் செய்யவிருந்தது. இந்தியாவில் அப்போதிருந்த மாநிலங்களை 'ஏ', 'பி', 'சி' என மூன்று பிரிவுகளாகத் தொகுத்தது. இதன்படி, 'ஏ' தொகுதி இந்து ராஜ்யங்களின் மண்டலமாக்கப்பட்டது. அப்போதைய சென்னை மாநிலமும் அந்த மண்டலத்திலே சேர்க்கப்பட்டிருந்தது.

இந்தக் கேடுகளைக் கொண்ட பிரிட்டிஷ் திட்டத்தைத் திருத்தினாலொழிய, சுதந்திர இந்தியாவிலே தமிழினத்தார் தலையெடுத்து வாழ முடியாதென்று நான் உறுதியாக நம்பினேன். மத அடிப்படையில் மாநிலங்கள் மூவேறு தொகுதிகளாக அமைக்கப்பட்டதனை அடியோடு வெறுத்தேன். ஆகவே, ''தமிழ் முரசு'' இரண்டாவது (ஜூலை மாத) புத்தகத்திலே, ''தமிழருக்கும் சுயநிர்ணயம்'' என்னும் தலைப்பில் சிறப்புக் கட்டுரை எழுதினேன்.

தமிழருக்கும் சுயநிர்ணயம்

அதிலே, பிரிட்டிஷ் திட்டம் திருத்தப்பட வேண்டிய வழி வகைகளையும் கூறினேன். அந்தக் கட்டுரையில் சில பகுதிகள் வருமாறு:

''பிரிட்டிஷ் திட்டத்தில் தமிழர்களை மட்டும் பாதிக்கும் விஷயங்களைக் கவனிப்போம்.

''மாகாணங்களை மொழிவாரி பிரிக்க வேண்டியதைப் பற்றி பிரிட்டிஷ் திட்டத்தில் பேச்சே இல்லை. என்றாலும், அரசியல் நிர்ணய சபைக்கு அதைச் செய்யும் உரிமை உண்டென்றே நம்பலாம். ஆனால், மொழிவாரி மாநிலங்களைப் பிரிப்பதற்கு முன்னர் அரசியல் நிர்ணய சபைக்கு அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது. இந்திய சமுதாயத்தை மதவழி இந்து — இஸ்லாமிய சமுதாயங்களைக் கொண்டதாக அல்லாமல் — மொழிவழி பல்வேறு தேசிய இனங்கள் அடங்கிய ஒற்றுமையுள்ள ஒரு கூட்டுக் குடும்பமாகக் கொள்ள வேண்டும்.

''மாகாணங்களை மொழிவழி பிரித்து, மாகாணந்தோறும் தனித் தனி அரசியல் நிர்ணய சபை அமைக்க வேண்டும். அந்தச் சபைகள், அந்தந்த மாகாணங்களில் பூரண சுதந்திரமுள்ள அரசாங்கங்களை அமைக்க உரிமை பெற்றவையாயிருக்க வேண்டும்.

''மேற்சொன்ன மாகாண அரசியல் நிர்ணய சபைகள் அனைத்தும் — மாகாணங்களின் அரசியலைத் தயாரித்த பிறகு — ஒன்றுகூடி மத்திய யூனியன் அரசியல் அமைப்பைத் தயாரிக்க வேண்டும்.

''மத்திய யூனியன் அதிகாரங்கள் மாகாணங்கள் தாமாக விட்டுக் கொடுத்தவையாக இருக்க வேண்டுமே யொழிய, கட்டாயப்படுத்திப் பறித்துக் கொண்டவையாக இருக்கக் கூடாது.

''மத அடிப்படையில் மாகாணங்களின் தொகுதி அமைப்பதற்குப் பதிலாக கலாச்சாரக் கூட்டுறவின் பேரில் தொகுதி சேர்ந்து கொள்ள மாகாணங்களுக்கு உரிமை இருக்க வேண்டும். எப்போது, எந்த மாகாணம், எந்த மாகாணத்தோடு அல்லது மாகாணங்களோடு சேர்ந்து கொள்ள வேண்டுமென்பதை மாகாணச் சட்ட மன்றங்களின் விருப்பத்துக்கே விட்டுவிட வேண்டும்.

''இத்தகு திருத்தத்துடன் கூடிய திட்டந்தான் தமிழருக்கு மட்டுமின்றி இந்தியாவிலுள்ள எல்லாத் தேசிய இனங்களுக்கும் பூரண சுதந்திரத்தையளிப்பதாய் இருப்ப துடன், இந்தியாவின் இயற்கை அமைப்புக்கும், தேசிய இனங்களின் நீண்டகால வரலாற்றுக்கும் பொருந்தும்படி யாகவுமிருக்கும். இதைவிட்டு, தமிழ் இனத்தை மதக் கோடரி கொண்டு பிளக்கும் ஏகாதிபத்தியத் திட்டத்தையோ, மதத்தின் பெயரால் மக்களைச் சுரண்டும் முதலாளித்துவ முறையையோ தமிழர்கள் ஒருநாளும் ஏற்க மாட்டார்கள்.

''தமிழர் வேண்டுவது தங்கள் வருங்கால வாழ்வைத் தாங்களே நிர்ணயிக்கக் கூடிய சுயநிர்ணயம்; தங்கள் தாய்நாட்டைத் தாங்களே ஆளக்கூடிய சுய அரசு.''

'திராவிடநாடு'வுக்குப் பதில்

''தமிழ் முரசு'' இரண்டாவது புத்தகத்தில் யான் எழுதிய ''தமிழருக்கும் சுய நிர்ணயம்'' என்னும் கட்டுரைக்கும் ''திராவிட நாடு'' இதழில் மதிப்புரை எழுதப்பட்டது. அதன் ஒரு பகுதி வருமாறு:

''இந்தியா ஒரு நாடு அல்ல; இது பல நாட்டு நாகரிகம், கலாசாரம் கொண்ட உபகண்டம். இதில் பல மொழியினர், நாகரிகத்தினர் வாழ்கின்றனர் என்று திராவிடத் தோழர்கள் கூறினால் அவர்களுக்குத் தேசியத் தாள் களும் தோழர்களும் அளித்த பட்டம், தேசத்தைத் துண்டாடும்

துரோகிகள், வகுப்புவாதிகள், பிரிட்டிஷாரின் கூலிகள் முதலியன. அவர்களே சற்று அமர்ந்து, தோழர் ம.பொ.சிவஞான கிராமணியார் வெளியிட்டுள்ள 'தமிழ் முரசு' இரண்டாம் புத்தகத்தில் ''தமிழருக்கும் சுயநிர்ணயம்'' என்ற கட்டுரையைப் படித்துவிட்டுப் பிறகு கூறட்டும். திராவிடத் தோழர்கள் கூறியதில் குற்றம் என்ன என்பதை!''

'திராவிட நாடு' எனக்குக் கை கொடுப்பதற்குப் பதிலாக, காங்கிரஸ்காரர்களும் என்னை வெறுக்கும்படி செய்வதிலேதான் அதிக அக்கறை காட்டியது. இது, அந்தக் காலத்தில் திராவிடர் கழகம் கடைப்பிடித்த பிரச்சார பாணி! வேறொன்றும் இல்லை; காங்கிரசிலிருந்து என்னைப் பிரித்தெடுத்துவிட வேண்டுமென்ற ஆசைதான்! 'தமிழ் முர'சில் பிரசுரமான எனது இரண்டாவது கட்டுரை, ''தமிழரும் பிரிட்டிஷ் திட்டமும்'' என்ற பெயரில் நூலாக வெளிவந்தது. இந்த நூலுக்கும் அண்ணாவின் 'திராவிட நாடு' (15.9.46) வார இதழில் மதிப்புரை எழுதப்பட்டது. அதிலும், பொதுவாக எனது சுயாட்சிக் கொள்கை வரவேற்கப்பட்டது என்றாலும், யான் கோரும் தமிழரசுக்கும் தி.க. கோரும் திராவிடத் தனிநாடு கொள்கைக்கும் அடிப்படையில் வேற்றுமை இல்லையென்றும், இரண்டும் ஒன்றே என்றும் கூறப்பட்டிருந்தது. நான் அப்போது காங்கிரசில் இருந்தேனாதலால், காங்கிரஸ் வட்டாரத்திலே என்னைப் பற்றித் தவறான எண்ணத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது, ''திராவிட நாடு'' மதிப்புரை. ஆகவே, ''தமிழ் முரசு'' 5ஆவது புத்தகத்தில் ''வேண்டியது தமிழரசே'' என்னும் தலைப்பிட்டு 'திராவிட நாடு'வுக்குப் பதிலளித்தேன். அந்தக் கட்டுரையின் சில பகுதிகள் வருமாறு:

''தமிழரும் பிரிட்டிஷ் திட்டமும்'' என்ற பெயருடன் ஒரு நூலை யான் சமீபத்தில் வெளியிட்டிருந்தேன். அந்நூலைப் பற்றி 15.9.46 ''திராவிட நாடு'' இதழிலே ''சொன்னோம்! சொல்கிறார்கள்!'' என்னும் தலைப்பில் மதிப்புரை எழுதப்பட்டிருக்கிறது.

''அதில் 1938 முதல் 1945ஆம் ஆண்டு வரை 'விடுதலை', 'திராவிடநாடு' ஆகிய பத்திரிகைகளில் அவ்வப்போது வெளிவந்துள்ள கருத்துகளை எடுத்துக் காட்டி, அதே கருத்துகளைத்தான் காங்கிரஸ்காரனாகிய நானும் இப்போது வெளியிடுவதாகத் தீர்ப்புக் கூறப்பட்டுள்ளது. அந்தத் தீர்ப்பு சரிதானா?

''... எனது கொள்கைப்படி தமிழ்நாட்டில் தமிழரசு அமைய முடியும். அதேபோல் ஆந்திர, கேரள, கன்னட மாகாணங்களும் தனித்தனியே பிரிந்து சுய அரசை நிறுவிக் கொள்ளவும் உரிமை பெற்றதாயிருக்கும்.

''இந்தக் கொள்கையும் 'திராவிட நாட்டு'க்கு உடன்பாடென்றால், அதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கத் தயாராயிருக்கிறேன். ஆனால், 'திராவிட நாட்'டின் கொள்கை இதற்கு நேர்மாறாக இருப்பதாகத் தெரிகிறது.

''தமிழகம், ஆந்திரம், கன்னடம், கேரளம் ஆகிய நான்கு மாகாணங்களும் ஒரே ''திராவிட நாடு'' என்றும், அவற்றில் வாழும் நான்கு மொழி பேசும் இனங்களும் ஒரே திராவிட இனம் என்றுமே இதுவரை 'திராவிட நாடு' பிரச்சாரம் செய்து வந்திருக்கிறது.

''இது அனுபவத்துக்குப் பொருந்தாத கொள்கை என்றே நான் எண்ணுகிறேன். தன்னைத் திராவிடன் என்று சொல்லக்கூடிய ஆந்திரரையோ, கன்னடரையோ அல்லது மலையாளியையோ நான் கண்டதில்லை. இதற்கு நேர் மாறாக மேற்சொன்ன மூன்று இனத்தவரும் தமிழ் இனத்தவரிடமிருந்து பிரிந்து தனித்தனி அரசுகள் அமைத்துக் கொள்ளத் துடியாய்த் துடிக்கின்றனர். தங்கள் மீது தமிழர் ஆதிக்கம் செலுத்துவதாகவும் குற்றம் சாட்டுகின்றனர்.

''இந்த நிலையில், தென்னிந்தியா முழுமைக்கும் ஒரே திராவிட அரசை நிறுவ முடியுமென்று கூறுவதை என்னால்

நம்ப முடியவில்லை. ஆந்திரர் ஆதரிக்காத, மலையாளத்தார் மனம் ஒப்பாத, கன்னடத்தார் கை கொடுக்காத நிலையில் தமிழ்நாட்டில் மட்டும் 'திராவிடம்' 'திராவிட நாடு' 'திராவிட அரசு' என்ற கோஷங்களைக் கிளப்பிக் கொண்டிருப்பதில் பயனில்லை என்பதே எனது பணிவான கருத்து.

''இதுமட்டுமல்லாமல், சுயாட்சி பெற்ற இந்திய மாகாணங்கள் அனைத்தும் கொண்ட ஓர் ஐக்கிய சர்க்காரின் அவசியத்தை எனது நூலில் வற்புறுத்தியுள்ளேன். இதைப்பற்றி ''திராவிட நாடு'' தனது கருத்தை வெளியிடவே இல்லை. தேசியவாதி என்ற முறையில் மட்டுமல்ல; தமிழன் என்ற இன உணர்ச்சியோடு பார்த்தாலும் இந்திய சமஷ்டியில் தமிழ்நாடு தனது நன்மைக்காகவேனும் இணைய வேண்டியது அவசிய மென்றே நான் கருதுகின்றேன்.

''பொதுவாக நோக்கினால், இப்போது உடனடியாகத் தமிழகத்தில் தமிழரசு நிறுவுவது ஒன்றிலேயே நாம் கருத்து செலுத்த வேண்டும். கடந்த காலத்தில் தேசியத் தமிழர்கள் இதில் அக்கறை காட்டவில்லையென்றால், அதற்குத் தமிழ்நாட்டின் நலத்தில் அவர்களுக்கு நாட்டமில்லை என்று பொருளல்ல. இந்திய மண்ணிலிருந்து வெள்ளையரை வெளியேற்றுவதற்கான போராட்டத்திலேயே அவர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டியிருந்ததுதான். இன்றோ, தேசியப் போராட்டம் ஒரு முடிவான கட்டத்தை நெருங்கிவிட்டது. அதனாற்றான், என்போன்ற தேசிய வாதிகளும் தமிழ்நாட்டின் தனியுரிமைகளைப் பற்றி எண்ணவும் எழுதவும் அவசியமேற்பட்டிருக்கிறது. ஆகவே, கடந்த காலத்தில் யார், என்ன சொன்னார்கள்; இப்போது என்ன சொல்லுகிறார்கள் என்ற ஆராய்ச்சியில் இறங்குவது பயனற்றது. இப்போது பக்குவமாயுள்ள நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு தமிழர்களின் நல்வாழ்வுக்கு வழிதேட தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென்பதே எனது வேண்டுகோள்.''

'தமிழ் முரசு' இரண்டாவது புத்தகத்திற்கும் 'கல்கி'யில் மதிப்புரை வெளிவந்தது. அதிலே தமிழ் இனத்தவருக்கும் சுயநிர்ணயம் வேண்டும் என்ற எனது கோரிக்கை நேரடியாக ஆதரிக்கப்பட்டிருந்தது. பொதுவாகச் சொன்னால், எனது தமிழரசுப் பிரச்சாரம் தமிழக அரசியல் கட்சிகளிடையிலும் அரசியல் ஆர்வமுள்ள பொது மக்களிடையிலும் சிந்தனையைக் கிளறுவதாக இருந்தது. தமிழினத்தின் சார்பில் ஒரு புதிய இயக்கம் தோன்றிக் கொண்டிருக்கிறதென்பதனைத் 'தமிழ் முரசு' உணர்த்தியது.

பிரிட்டிஷ் திட்டத்திலே மாநிலங்களை மொழிவாரி திருத்தியமைப்பது பற்றி எதுவும் கூறப்படாததால், தமிழ் மாநிலம் கோரவும், அவற்றின் எல்லைப் பகுதிகளை மீட்கவும் ஒரு கிளர்ச்சி தேவைப்படுவதனை உணர்ந்து, அதனையும் 'தமிழ் முரசு'ப் புத்தகத்தின் வாயிலாகத் தொடங்கி வைத்தேன்.

'முரசு' 5ஆவது புத்தகத்திலே 'புதிய தமிழகம்' என்னுந் தலைப்பில் ஒரு சிறப்புக் கட்டுரை எழுதினேன். அதில், மொழிவழித் தமிழ் மாநிலம் அமைக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியதோடு, தமிழகத்தின் வடக்கு — தெற்கு எல்லை களையும் வரையறுத்துக் கூறியிருந்தேன். வடக்கெல்லையில் தமிழர் மிகுதியாக வாழும் தாலுக்காக்கள் பற்றிய விவரங்கள் அப்போது எனக்குத் தெரியாமலிருந்ததால், ''வடவேங்கடமே தமிழகத்தின் வடக்கெல்லையாக அமைய வேண்டும்'' என்று எனது கட்டுரையில் குறிப்பிட்டதற்கு மேல் நான் எதுவும் சொல்லவில்லை.

தமிழகத்தின் தெற்கெல்லைப்பற்றி விரிவாக விளக்கியிருந் தேன். திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் தமிழர் மிகுதியாக வாழும் தாலுக்காக்களைக் காட்டும் நிலப்படமொன்றையும் எனது கட்டுரையில் சேர்த்திருந்தேன். தாலுக்கா வாரியான ஜனத் தொகையில் தமிழருடைய சதவிகிதத்தைக் காட்டும் புள்ளி விவரங்களையும் வழங்கியிருந்தேன். மற்றும், மைசூர் ராஜ்யத்திலுள்ள கோலார் தங்கவயல் பிரதேசத்தின் மீதும் உரிமை கொண்டாடியிருந்தேன்.

இலங்கையின் வடபகுதியும் இந்தியத் தமிழகத்தை அடுத்தாற் போலுள்ளதும் தமிழர் மிகுதியாக வாழ்வதுமான யாழ்ப்பாணத்தின் மீதும் உரிமை கொண்டாடியிருந்தேன். இலங்கையில் தமிழர் மிகுதியாக வாழும் மட்டக்களப்பு போன்ற பகுதிகளைப் பற்றி அப்போது நான் அறிந்திருக்கவில்லை யாதலால், யாழ்ப்பாணத்தை மட்டும் கோரியிருந்தேன்.

அந்நாளில், இந்தியாவிலும், இலங்கையிலும் பிரிட்டிஷ் ஆட்சியே நடைபெற்று வந்ததால், இந்த இரண்டு நாடுகளிலுள்ள மக்களுக்குக் குடியுரிமை ஒன்றாக இருந்தது — அதாவது இன்றிருப்பது போன்று இந்தியாவிலிருந்து இலங்கை செல்லவும், இலங்கையிலிருந்து இந்தியா வரவும் 'பாஸ்போர்ட்' — 'விசா' பெற வேண்டிய சங்கடங்கள் இருக்கவில்லை. இந்தியாவில் வாழும் எனக்கு இலங்கை அயல்நாடாகத் தோன்றவில்லை. ஆம்; யாழ்ப்பாணத்தை அயல் நாடொன்றின் உட்பகுதியாக நான் கருதவில்லை. அதனால், இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் பிரிட்டிஷார் வெளியேறவிருந்த தருணத்திலே, மொழி அடிப்படையில் இந்திய — இலங்கை எல்லைகளைத் திருத்தி அமைக்குமாறு கோருவது தவறென்று நான் கருதவில்லை.

இந்தியாவையும் இலங்கையையும் கடல்நீர் பிரித்து நிற்பதை நான் அப்போது அறியாமலில்லை. அறிந்தும், நிலத்தொடர்பற்ற யாழ்ப்பாணத்தின் மீது உரிமை கொண்டாடக் காரணமிருந்தது. அப்போது, இந்தியாவில் முஸ்லிம்கள் மிகுதியாக வாழும் மாநிலங்கள் கொண்ட பாகிஸ்தானை முஸ்லிம் லீக் கோரி வந்தது. வடமேற்கிலுள்ள பஞ்சாப் — சிந்து — எல்லைப்புற மாநிலங்களும், அதற்குச் சுமார் ஆயிரம் கல் தொலைவிலுள்ள வங்க மாநிலமும் இணைந்ததே முஸ்லிம் லீக் கோரிய பாகிஸ்தான். நிலத் தொடர்பற்ற — ஆயிரம் கல் இடைவெளியைக் கொண்ட — இருவேறு பகுதிகளை இணைத்துப் பாகிஸ்தான் அமைக்கப்படலாமென்றால், ஒரு மனிதன் எளிதில் நீந்திக் கடக்கக் கூடிய அளவேயுள்ள கடல் பரப்பால் பிரிக்கப்படும் யாழ்ப்பாணத்தையும் இந்தியத் தமிழகத்தையும் பிணைத்துப் புதிய தமிழகம் படைப்பதில்

தவறில்லையென்றே நான் கருதினேன். ஆனால், பிற்காலத்தில் யாழ்ப்பாணம் பற்றிய கோரிக்கையை நான் அடியோடு கைவிட்டு விட்டேன். ஆம்; பிரிட்டிஷார் வெளியேறிய பின்னர், இந்தியாவுக்கு இலங்கை முற்றிலும் அயல் நாடாகி விட்டதல்லவா!

பொதுவாகப் புதிய தமிழகம் கீழ்க்கண்ட பகுதிகளும் இணைக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்று எனது கட்டுரையில் கூறியிருந்தேன்:

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் தமிழர் மிகுதியாக வாழக்கூடிய தென்பகுதித் தாலுக்காக்கள்;

மைசூரிலுள்ள கோலார் தங்கவயல் பிரதேசம்;

பிரெஞ்சுப் பேரரசின் பிடியிலிருந்த புதுவை — காரைக்கால்;

திருப்பதி மலைக்குத் தெற்கேயுள்ள சித்தூர் மாவட்டத் தமிழ்ப் பகுதிகள்;

புதுக்கோட்டை சமஸ்தானம்;

இலங்கையிலுள்ள யாழ்ப்பாணப் பகுதி.

முதல் பயணம்

'முரசி'ல் வெளியான 'புதிய தமிழகம்' என்ற கட்டுரை தமிழரிடையே நல்ல விழிப்பை ஏற்படுத்தியது. அதுகாறும் சென்னை மாநிலத்திலே தமிழகத்தின் எல்லைகளை மீட்பது பற்றி அரசியல் கட்சிகளேயன்றித் தனி நபர் எவரும் கூடச் சிந்தித்ததே இல்லை. அதனால் எனது கட்டுரைக்குத் தமிழகத்தில் நல்ல வரவேற்பிருந்தது.

இந்த நேரத்தில் தென் திருவிதாங்கூர் நாஞ்சில் நாட்டிலுள்ள வடிவை வாலிபர் சங்கத்தார் தங்கள் சங்கத்தின் ஆண்டு விழாவில் பேசுமாறு எனக்கு அழைப்பு விடுத்தனர். இது பழம் நழுவிப் பாலில் விழுந்து, அதுவும் நழுவி என் வாயில் விழுந்தது

போலிருந்தது. நான் அழைப்பை ஏற்றுக் கொண்டேன். திரு.கொ.மோ. ஜனார்த்தனம், பி.ஏ., பி.காம். அவர்களை உடன் அழைத்துக் கொண்டு நாஞ்சில் நாட்டுக்குப் புறப்பட்டேன்.

இதற்கு முன்பு நான் திருவிதாங்கூர் சமஸ்தானத்துக்குச் சென்றதில்லை. இப்போதுதான் முதன் முறையாகச் செல்கிறேனாதலால், திருநெல்வேலிக்குச் சென்று, அங்கிருந்து பஸ்ஸில் நாகர்கோவில் செல்லும் நேர்வழியை அறியாதவனா யிருந்தேன். என்னை அழைத்த நாகர்கோவில் நண்பர்களும் வழிப்பயணம் குறித்து எனக்கு எழுதவில்லை. ஆகவே 24.10.46 இரவில் சென்னையில் திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் ஏறி, மறுநாள் இரவு திருவனந்தபுரம் சென்று அங்கிருந்து பஸ்ஸில் நாகர்கோவிலுக்குச் செல்லும் வகையில் பயணம் செய்தேன். தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போன்று நான் மேற்கண்ட இந்தப் பயணமும் தெற்கெல்லைக் கிளர்ச்சியில் நான் ஈடுபடுவதற்கு எனக்குத் துணை புரிந்ததெனலாம். ஆம்; செங்கோட்டையைக் கடந்து செல்லும் வழியிலுள்ள வளமானதும் அழகியதுமான காட்டுப் பிரதேசத்தைப் பார்த்தேன். அது என்னைப் பெரிதும் கவர்ந்தது. அந்தக் காட்டுப் பகுதியைத் தன்னகத்தே கொண்ட செங்கோட்டைத் தாலுக்காவில் தமிழரே மிகுதியாக வாழுகின்றனர் என்பது எனக்கு முன்கூட்டியே தெரிந்திருந்ததால், எப்படியும் திருவிதாங்கூர் தமிழ்த் தாலுக்காக்களைத் தமிழகத்தோடு சேர்க்கும் கிளர்ச்சியில் ஈடுபட வேண்டுமென்ற ஆர்வம் மிகுதியானது.

நாகர்கோயில் செல்லும் வழியில் நான் திருவனந்தபுரத்தை அடைந்தேன். அப்போது இரவு 7 மணி இருக்கும். அந்த அழகிய நகரம் என்னைப் பெரிதும் கவர்ந்தது. ஆம்; ஆடம்பரமற்ற அழகிய நகரம். கேரள மக்களின் எளிய வாழ்க்கை தமிழினத்தின் பண்டை நாகரிகத்தையே எனக்கு நினைப்பூட்டியது. மொழி வேறுபாடுடைய ஒரு நாட்டிலிருக்கிறோம் என்ற நினைப்பே எனக்கு ஏற்படவில்லை. தமிழ்நாட்டின் பூர்வ நகரமொன்றில் இருப்பதாகவே நினைத்தேன். திருவனந்தபுரம் கடைகளில் வரிசை வரிசையாகத் தொங்கிக் கொண்டிருந்த வண்ண வண்ண வாழைப்பழக் குலைகளைக் கண்டு வியப்புற்றேன். ஆம்; அத்தகைய வாழைப்பழக் குலைகளை நான் தமிழ்நாட்டில் பார்த்ததில்லையல்லவா!

இருளைக் கிழித்த ஒளி!

திருவனந்தபுரத்திலிருந்து 45 கல் தொலைவிலுள்ள நாகர்கோயிலுக்குப் பேருந்து வண்டியில் சென்றேன். நாகர்கோயில் பேருந்துத் திடலில் உணர்ச்சித் துடிப்புடைய இளைஞர் பலர் என்னை வரவேற்கக் காத்திருந்தனர். அவர்களில் பலர் — ஏன், எல்லோருமே — அதற்கு முன் என்னை நேரில் பார்த்திராதவர் களாதலால், தசை வளமற்ற 'என்புதோல் போர்த்த உடம்பு'டைய என்னைக் கண்டதும் அவர்கள் வியந்தனர். ஆம்; நான்தான் ''புதிய தமிழகம் படைக்கக் கிளர்ச்சி தொடங்கியிருக்கும் ம.பொ.சிவஞானம்'' என்பதனை அவர்களால் நம்ப முடியவில்லை. ஆயினும், நண்பர் கொ.மோ.ஜ. என்னை அவர்களுக்கு அறிமுகப் படுத்தியதும், ஒருகணம் வியப்புற்று, பின்னர் வியப்பை மறைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, வாழ்த்தொலி எழுப்பி என்னை வரவேற்றனர்.

தமிழகத்தின் தெற்கெல்லையில் முதன் முதல் நான் வரவேற்கப்பட்ட நிகழ்ச்சியை திரு.கொ.மோ.ஜ.வின் வருணனையைக் கொண்டே புலப்படுத்துகிறேன்:

''பஸ்ஸில் இரவு 11 மணிக்கு திருவிதாங்கூர்த் தமிழ்நாட்டின் தலைநகரான நாகர்கோவிலுக்குப் போய்ச் சேர்ந்தோம். பஸ் நிலையத்தில் எண்ணற்ற தமிழ் இளைஞர்கள் கூடிக் களிப்புடன் வரவேற்றனர். ''தமிழ் வாழ்க'', ''தமிழினம் வாழ்க'', ''தமிழ்நாடு தமிழருக்கே'', ''தமிழருக்கும் சுயநிர்ணயம் வேண்டும்'' என்ற இன்பத் தமிழோசை எங்கள் காதுகளின் வழியாக உள்ளத்தே சென்று பாய்ந்தது. மூவர்ணக் கொடியுடன், கதராடையணிந்த தேச பக்தக் கூட்டத்தினர்தான் இப்படி முழங்கினர்.

''இரவு 12 மணிக்கு இருளை விலக்கி ஒளியூட்டும் மின்சார விளக்குக்களை விட எங்களை வரவேற்ற இளைஞர்களின் உள்ளத்தே தோன்றிய உண்மையொளி

அவர்களின் முகத்தே வீசக் கண்டோம். இரவு 2 மணி வரை அந்த வீரத் தமிழிளைஞர்களின் மத்தியில் ம.பொ.சி. சிறைப்பட்டு விட்டார். அவர்கள் கேட்ட கேள்வி களிலிருந்து மலையாள ஆட்சியில் அவர்களுக்குள்ள மனக்குறை வெளிப்பட்டது. அதுமட்டுமா? தங்களை மறந்த தமிழினத்தவர் பற்றி — தமிழ்நாட்டுத் தலைவர்கள் பற்றி அந்த இளைஞர்கள் குறைபட்டுக் கொண்டபோது நாங்களே வெட்கித் தலைகுனிய வேண்டியிருந்தது.''

('தமிழ் முரசு' 7ஆவது புத்தகத்தில்)

நான் நாஞ்சில் நாட்டுக்குச் செல்வதற்கு 10 மாதங்களுக்கு முன்பே, ''அகில திருவிதாங்கூர் தமிழர் காங்கிரஸ்'' தோன்றியது. பின்னர் 30.6.46இல் அதன் பெயர் ''திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ்'' என்று மாற்றப் பெற்றது. திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் தமிழர் மிகுதியாக வாழும் தாலுக்காக்களைத் தாய்த் தமிழகத்துடன் சேர்க்கப் பாடுபடுவதென்ற குறிக்கோளையும் கொண்டதாகத்தான் தி.த.நா. காங்கிரஸ் தோன்றியது.

வாலிபர் சங்க விழா

நான் தென் திருவிதாங்கூர் செல்லு முன்பே தி.த.நா.கா. நிர்வாகிகள் 'தமிழ் முரசு' புத்தகங்களைப் படித்து — குறிப்பாக, ஐந்தாவது புத்தகத்தில் நான் எழுதிய 'புதிய தமிழகம்' என்ற கட்டுரையைப் படித்து என்னைத் தங்களுடைய வழிகாட்டியாகக் கொள்ள விருப்பம் கொண்டு, என்னுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருந்தனர். அதனால், நான் நாஞ்சில் நாடு சென்றபோது, என்னை வரவேற்பதில் தி.த.நா.கா. நிர்வாகிகள் மிகுந்த ஆர்வங்காட்டினர்.

1946 அக்டோபர் 25இல் நாகர்கோயில் நகரின் ஒரு பகுதியான வடிவீசுவரத்தில் வடிவை வாலிபர் சங்கத்தின் ஆண்டு விழாவில் பேசினேன். அதுதான் தெற்கெல்லைக் கிளர்ச்சிபற்றிய எனது முதல் பேச்சு. வடிவை வாலிபர் சங்கம் எல்லைக் கிளர்ச்சியோடு தொடர்புடையதன்று. நாஞ்சில் நாட்டுக்கு நான் அழைக்கப்பட்டதும் எல்லைக் கிளர்ச்சிக்காக

அல்ல. ஆயினும், நாகர்கோயில் அடைந்த சில மணி நேரங்களுக்குள் தி.த.நா.கா. நிர்வாகிகள் என்னுடன் உரையாடி, என்னைத் தங்கள் பிரச்சாரகனாக மாற்றிவிட்டனர்.

நான் பேசிய கூட்டத்திற்குத் தி.த.நா.கா. தலைவர் திரு.எஸ். நதானியல்தான் தலைமை வகித்தார். இவர் மிகுந்த செல்வாக்குள்ள வழக்கறிஞர். பூமாதேவியை விடவும் பொறுமைசாலி. பலனை எதிர்பாராமல் பாடுபடும் பண்புடையவர். தன்னுடன் மாறுபடக் கூடியவர்களையும் அணைத்துக் கொண்டு செயலாற்றும் அன்புள்ளமுடையவர். தி.த.நா. காங்கிரஸ் தோன்றிய ஆரம்ப ஆண்டுகளில் அதற்கேற்பட்ட இன்னல்கள் எண்ணில; அவற்றிலிருந்தெல்லாம் அந்த அமைப்பைக் காப்பாற்றினார்.

இப்போது கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்துடன் சேர்ந்ததற்குத் திரு. நேசமணிதான் காரணமென்று தமிழர் கருதும் நிலை ஏற்பட்டுவிட்டது. நான் முதன் முதலாக தி.த.நா.கா. வுடன் தொடர்பு கொண்டபோது, திரு. நேசமணி அந்த அமைப்பில் இல்லை. அவர் திருவிதாங்கூர் திவான் சர் சி.பி.யின் ஆதரவாளராக இருந்தார். திரு. நதானியல்தான் ஏகத் தலைவர். அவர் தலைமையில் தி.த.நா.கா. தொடங்கியிருந்த எல்லைக் கிளர்ச்சிக்கு ஆதரவளித்துப் பேசினேன். என் பேச்சு முழுவதும் எல்லைக் கிளர்ச்சி பற்றியதாகவே அமைந்தது.

மறுநாள் (26.10.46) வடசேரியில் 'மனோன்மணீயம் சுந்தரனார் வாசகசாலை' ஆண்டு விழாவில் பேசினேன். அந்தப் பேச்சும் தெற்கெல்லைக் கிளர்ச்சி பற்றியதுதான். அந்தக் கூட்டத்தில் நாகர்கோயில் வழக்கறிஞர் பி. சிதம்பரம் பிள்ளை தலைமை வகித்தார். இவர், நாஞ்சில் தலைவர்களில் மூத்தவர்; முது பெருந் தலைவர்! இளமைதொட்டே தமிழர் நலன் கருதிப் பாடுபட்டு வந்தவர். 'தமிழன்' என்ற பெயரில் பத்திரிகை நடத்தியவர். பழுத்த அரசியல்வாதி. இவரைத் தனியாகச் சந்தித்துப் பேச நேர்ந்தபோது, தமிழினத்தின் குறைபாடுகளை யெல்லாம் கூறி, ''தமிழன் உருப்படமாட்டான். தமிழனை நம்பி

நீங்கள் எதிலும் ஈடுபடாதீர்கள்'' என்று அந்தப் பெரியவர் என்னை எச்சரித்தார், ஆம்; மனமொடிந்த காரணத்தால்! பெரியவர் சிதம்பரம் பிள்ளையின் அனுபவ வாக்கு மனத்துள் கொள்ளத்தக்கதென்றே நான் கருதினேன்.

முதல் சந்திப்பு!

அக்.25,26 தேதிகளில் நாகர்கோயில் நிகழ்ச்சிகள் முடிந்ததும் குளச்சல், இரணியல், மயிலாடி ஆகிய ஊர்களிலும் பொதுக் கூட்டங்களில் பேசினேன்.

சென்னை புறப்படுவதற்கு முன்பு கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களைச் சந்தித்தேன். அவர் என்னைக் கண்டதும் 'நிந்தாஸ்துதி' என்பார்களே அந்தப் பாஷையிலே,

> *''தமிழ்நாட்டிலிருந்தா நீங்கள் வருகின்றீர்கள்! உங்களை வாழ்த்துகின்றேன். நாங்கள் இங்கு இருப்பதாகத் தாயினத்தவராகிய உங்களுக்கு இப்பொழுதாவது நினைவு வந்ததே; மிக்க மகிழ்ச்சி''*

என்று கூறி, என்னை வரவேற்றார்.

கவிமணியை நான் சந்திப்பது இதுதான் முதன் முறை. அவரோடு உரையாடுவது இன்பந் தருவதாகும். திருவிதாங்கூர்த் தமிழ்த் தாலுக்காக்கள் தாய்த் தமிழகத்தோடு சேர்க்கப்பட வேண்டுமென்பதிலே கவிமணி மிகுந்த ஆர்வங் காட்டினார்.

தி.த.நா. காங்கிரஸின் தூண்களாகத் திகழ்ந்த சிலரை நான் இங்குக் குறிப்பிட வேண்டும். அவர்கள் டாக்டர் எம்.இ. நாயுடு, திரு.பி.எஸ். மணி, திரு.ஆர்.கே. ராம், திரு. ஸ்ரீ. எஸ்.வி. தாஸ், காந்திராமன், கே. நாகலிங்கம், ம. சங்கரலிங்கம் ஆகியோராவர். இவர்களில் காந்திராமனும் பி.எஸ். மணியும் உணர்ச்சித் துடிப்புடைய தமிழர்கள். இவர்கள் என் இதயத்திலே இடம் பெற்றுவிட்டார்கள். தென் திருவிதாங்கூரில் நான் சுற்றுலா செய்த நாட்களில் திரு.பி.எஸ். மணி எனது மெய்க்காப்பாளர் போல இருந்தார்

தமிழர் மறதி!

தென் திருவிதாங்கூரில் நான் சென்ற இடந்தோறும் இன உணர்ச்சி பெற்ற தமிழர்கள் என்னை ‘ராஜோபசாரம்’ செய்து வரவேற்றனர். நான் பேசிய ஒவ்வொரு கூட்டத்திலும் மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு மிகுந்த ஆர்வத்துடன் எனது பேச்சுகளைக் கேட்டனர். செயலாற்றும் ஆர்வமுடைய இளை ஞர்கள் நான் செல்லுமிடமெல்லாம் என்னைப் பின்பற்றினர்.

தாய்த் தமிழக மக்களில் பலர் நான் வடக்கெல்லைக் கிளர்ச்சியில் ஈடுபட்டுத் தணிகைத் தாலுக்காவை மீட்டதைத்தான் நினைவில் வைத்துள்ளனர். தெற்கெல்லைக் கிளர்ச்சியோடு எனக்குள்ள தொடர்பைப் பலர் அறியமாட்டார்கள். நான் முதன் முதலில் ஈடுபட்டது வடக்கெல்லைக் கிளர்ச்சியிலல்ல; தெற்கெல்லைக் கிளர்ச்சியில்தான்! நான் அதிக அளவு அல்லலுற்றதும் அந்தக் கிளர்ச்சி காரணமாகத்தான்! ஆம்; ‘இருசப்ப கிராமணித் தெரு எலும்புருவம்’ என்று என் அரசியல் விரோதிகள் என்னைக் கேலி செய்யுமளவுக்கு என் உடல் மெலிந்திருந்த — வயிற்று வலி என்னை மிகுதியாக வாட்டி வந்த — அந்தக் காலத்திலே, அடிக்கடி தமிழகத்தின் வடகோடியிலுள்ள சென்னையிலிருந்து தென்கோடியிலுள்ள குமரி முனைக்கு யாத்திரை செய்த போதெல்லாம் நான் பட்டபாடு எனக்குத்தான் தெரியும். தென் திருவிதாங்கூர் தமிழர் பயன்படுத்தும் சம்பா அரிசிச் சாதமும், தேங்கா யெண்ணெயால் தயாரிக்கப்பட்ட கறிவகை களும் என் வயிற்றுக்குப் பிடிக்காமல், பலமுறை நாஞ்சில் நாட்டில் நான் கடுமையாக நோய்ப்பட்டதுண்டு. போக்குவரத்துச் செலவுக்கும் இடர்ப்பாடு இருந்ததுண்டு. இவ்வளவு இன்னல்களுக்கிடையிலும் தென் திருவிதாங்கூர் தமிழர்களுக்கு முதன் முதலில் கைகொடுத்த தாய்த் தமிழகத்துத் தமிழன் நான்தான். கடைசி வரையிலும் உறுதியாகத் துணையிருந்தவனும் நான்தான்.

அந்நாளில் திருவிதாங்கூர் சமஸ்தானம் சுதந்திரமடையாத் தனி ராஜ்யமாக இருந்ததால், தமிழ்நாட்டிலிருந்து செல்வோர் அதன் எல்லையை அடைந்ததும் சுகாதார அதிகாரிகள் காலராத்

தடுப்பு ஊசி போடுவார்கள். மட்டரகமான ஊசியைத்தான் பயன்படுத்துவார்கள். நானும் அந்த ஊசியைப் போட்டுக் கொண்டுதான் எல்லையைத் தாண்டவேண்டும். அதனால், திருவிதாங்கூர்த் தமிழகம் சென்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் காலராத் தடுப்பு ஊசி போட்டுக் கொள்வதன் விளைவாகக் கடுமையான காய்ச்சலுக்குள்ளாகி இன்னலுறுவேன். தெற் கெல்லைப் பிரதேசத்திற்குச் செல்லும்போதெல்லாம் காலராத் தடுப்பு ஊசியை நினைத்து நான் கவலைப்பட்டதுண்டு.

தமிழகத் தலைவர்களின் நிலை

நான் தென் திருவிதாங்கூர் செல்வதற்கு முன்பு தி.த.நா.கா. நிர்வாகிகள் தாய்த் தமிழகத்திலுள்ள தமிழ் மாகாண காங்கிரஸ் தலைவர்களை அணுகி உதவி கோரினர். அவர்களுக்கும் அப்போது எனது விலாசம் தெரியவில்லை. தமிழகத்தில் அவர்கள் பெற்ற அனுபவத்தை திரு.பி.எஸ். மணி தாம் எழுதிய ''திரு—தமிழரியக்கம்'' என்ற நூலில் கூறுகிறார், கேளுங்கள்:

''அகில திருவிதாங்கூர் தமிழர் காங்கிரஸ் ஒரு உரு வத்திற்கு வந்துவிட்டது. திரு — தமிழக எழுச்சியையும், அதனாலாகிய பிரச்சினைகளையும் சென்னைத் தமிழர் களும் நன்கு அறிய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் இதனை நேரடியாக நன்கு தெரிவிப்பதன் மூலந்தான் அது முடியும் என நிர்வாகிகள் எண்ணினர். அதன்பொருட்டு அ.தி.த.நா. காங்கிரசின் ஒரு தூதுக் கோஷ்டி சென்று பலரைச் சந்தித்துப் பேசுவதெனத் தீர்மானமாயிற்று.

''1946 ஜனவரி 24-ஆம் தேதியன்று தலைவர் நதானியேல் தலைமையில் திருவாளர்கள் ஆர்.கெ.ராம், பி.எஸ்.மணி, ஸ்ரீ எஸ்.வி. தாஸ், வி. மார்க்கண்டன், இரா. வேலாயுதப் பெருமாள் ஆகியோர் நாகர்கோயிலில் இருந்து தங்கள் சொந்தச் செலவில் சென்னை சென்றனர். ஒரு வார காலம் சென்னையில் தங்கி இருந்தனர்.

''தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு.கே. காமராஜ் நாடார், திரு.எம். பக்தவத்சலம், எஸ்.எஸ். கரையாளர்,

'தினசரி' ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம், 'தினத்தந்தி' ஆசிரியர் எஸ்.பி. ஆதித்தன், 'இந்து' ஆசிரியர் விசுவனாதய்யர், 'பாரததேவி' ஆசிரியர் ராமரெத்தினம், 'தினமணி' ஆசிரியர் ஏ.என். சிவராமன், முத்துரங்க முதலியார் ஆகியோரையும் மேலும் பலரையும் கண்டு பேசினார்கள்.

''இவர்களோடு பேசியதிலிருந்து இவர்களில் சிலர் திரு — தமிழர்களைப் பற்றியும் திரு — தமிழகத்தைப் பற்றியும் எவ்வளவு அறிவுடையவர்களாக இருக்கிறார்கள் என்று அறிய முடிந்தது.

''ஒரு தலைவர்.... 'நீங்கள் எல்லோரும் நன்கு தமிழ் பேசுகிறீர்களே! உங்களுக்குத் தமிழ் எழுதத் தெரியுமா?' என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

''இன்னொரு தலைவர் ''திருவிதாங்கூரில் இருந்தா வந்திருக்கிறீர்கள்? சந்தோஷம். ஓ! எனக்குத் தெரியுமே, நாகர்கோவில் பக்கத்தில் கொஞ்சம் பேர்களும், சுசீந்திரம் பக்கத்தில் கொஞ்சம் பேர்களுமாகத் தமிழர்கள் குடியேறி வாழ்கிறார்கள். அவர்கள்தானே நீங்கள்?'' என்றார்.

''இவர்களுக்கெல்லாம், திருவிதாங்கூரின் மொத்த நிலப்பரப்பில் நாலில் ஒரு பாகம் — 2000 சதுர மைல்கள் தமிழர் நிலப்பரப்பு என்றும், மொத்த ஜனத் தொகையில் ஆறில் ஒரு பாகம் — பதினைந்து லட்சம் பேர்கள் தமிழர் என்றும், துர்பாக்கியமாக மலையாளத்தார் ஆட்சியில் சிக்கிவிட்ட காரணத்தால் தமிழரில் பெரும்பான்மையோர் தமிழ் எழுத வாசிக்கப் பேச முடியாதிருக்கின்றனர் என்றும், தமிழர்களாக வாழுகின்றவர்கள் எல்லோரும் திரு — தமிழகத்தின் நெடுங்காலக் குடிகளே என்றும் தூதுக் குழுவினர் தெரிவித்தனர்.''

இப்படி, தென் திருவிதாங்கூர் தமிழர்கள் தாய்த் தமிழகத்தாரால் கைவிடப்பட்டிருந்த நிலையில்தான், நான் — அவர்களே எதிர்பாராத வகையில் குமரி மாவட்டம் சென்று ஒரு வார அளவில் அவ்விடம் சுற்றுலா செய்தேன்.

தி.த.நா.கா. டானிக்!

குமரிமுனைப் பிரதேசத்தில் நான் செய்த சுற்றுலாவின் பயன்பற்றி திரு. பி.எஸ். மணி தமது நூலில் கூறியுள்ளதை இங்குத் தருகின்றேன்:

''அரசாங்க அரசியல் மலையாளிகளுடைய செயல்கள் எல்லாம் தமிழ் மக்களைக் குழப்பின. தமிழ்நாட்டோடு. சேர இயங்கும் தி.த.நா.கா.வுக்குத் தமிழ்நாட்டினின்று தலைவர்களுடைய ஆதரவு போதிய வாறு இல்லையே என திரு — தமிழ் மக்களிடை ஒரு தோல்வி மனப்பான்மை உருவாகி வந்தது. இம் மனப்பான்மையை மாற்றுவதற்குத் தி.த.நா.கா. தலைவர்கள், தமிழ்நாட்டுத் தலைவர்கள் பலரை நேரில் சந்தித்தும், கடிதங்கள் எழுதியும் திரு — தமிழகத்திற்கு அழைத்தனர். பெரும்பான்மையோரிட மிருந்து பதிலே இல்லை. ஆனால் ஒருவர் ''இதோ நான் இருக்கிறேன்; இந்திய சுதந்திரத்திற்காகப் பல்லாண்டு பாடு பட்டதில் இழந்துவிட்டது போக மீதம் என்னிடம் சிறிது உயிரும், உடலும் இருக்கின்றன. திடமான, உறுதியான மனமும் இருக்கின்றது. என்னினம் — தமிழினத்திற்குத் தொண்டாற்றும் பெரும் பாக்கியம் குமரிமுனையில் எனக்கு ஏற்படுவதற்குச் சந்தர்ப்பம் வாய்த்ததில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன்'' என்று தெரிவித்துக் கொண்டே தி.த.நா.கா.வினர் அழைக்காமலே திரு — தமிழகத்திற்கு 1946 அக்டோபர் 24-ஆம் தேதியன்று வந்தார்.

''யானை வரும்பின்னே மணி ஓசை வரும் முன்னே'' என்பதுபோல் இத்தலைவர் வருமுன்பே இத்தலைவரின் ''தமிழ் முரசு'' திரு — தமிழகப் பிரச்சினை பற்றிப் 'புதிய தமிழகம்' என்னும் தலைப்பில் முரசு கொட்டியது.

''மெலிந்த உருவமும், பிரம்மாண்ட மீசையும், கூர்ந்த கண்களுமுடைய அத்தமிழ் நாட்டுத் தலைவர், தலைவர் நதானியேல் தலைமையில் நாகர்கோயில் வடிவை வாலிபர் சங்க ஆண்டு விழா மேடையில் தமிழ் முழக்கம் செய்தார். அவர் வாயிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ஒவ்வொரு

வார்த்தையும் தி.த.நா.கா.விற்கிருந்த எதிர்ப்புகளைத் தவிடுபொடியாக்கிக் கொண்டிருந்தது. அன்றிலிருந்து ஒரு வாரத்திற்கு அத்தலைவர், தலைவர் நதானியலோடு திரு — தமிழகத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தார். வடசேரி, குளச்சல், இரணியல், மயிலாடி என்னும் ஊர்களில் திரு — தமிழக எழுச்சியைத் தமது சொற்பொழிவுகளால் எழுப்பினார்.

''தாயகத்தினின்று முதன் முதல் திரு — தமிழகத்திற்கு வந்து திரு — தமிழக இயக்கத்தைத் தி.த.நா.கா. மேடையில் நின்று உதவி ஊக்கம் கொடுத்தவர் இவர்தான். இவர் யார்? ம.பொ.சி. என்றழைக்கப்படும் சிவஞான கிராமணியார் அவர்கள்தான்!

''திரு — தமிழரியக்கத்திற்குத் தமிழன்னையால் கொடுக்கப்பட்ட 'டானிக்' இவர்!

''தமிழ் முரசு'' 1946 செப்டம்பர் இதழில் ''புதிய தமிழகம்'' எனும் தலைப்பில் திரு. ம.பொ.சி. எழுதிய கட்டுரையை தி.த.நா.கா. ஒரு சிறு புத்தகமாக அச்சடித்து நூற்றுக்கணக்கில் பரப்பியது.

''திருவிதாங்கூர் தமிழ்த் தாலுக்காக்களாகிய நிலப்பரப்பைக் குறிப்பிடும் படம் தமிழ் முரசில்தான் முதன் முதலில் வெளிவந்தது.''

(திரு—தமிழரியக்கம், பக்கம் 34-37)

ஒரு வார காலம் தென் திருவிதாங்கூரில் வெற்றிகரமாகச் சுற்றுலா செய்த பின்னர், புதிய ஊக்கமும் உற்சாகமும் பெற்றவனாகச் சென்னை திரும்பினேன்.

இன உணர்ச்சியற்ற தமிழர்

தமிழக எல்லைக் கிளர்ச்சியில் எனது கருத்து சென்றிருந்த காலத்திலே நாட்டில் அரசியல் மாறுதல்கள் வேகமாக உருவாகி வந்தன. பிரிட்டிஷ் அமைச்சரவைத் திட்டத்தைக் காங்கிரசும் முஸ்லிம் லீகும் ஏற்றுக் கொண்டு விட்டன. மத்தியில் கூட்டாட்சி

அமைக்கவும் அவை தயாராகி விட்டன. அரசியல் நிர்ணய மன்றத்திற்குத் தமிழ்நாட்டிலிருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக் கப்பட்டனர். அவர்களிலே தமிழரல்லாத இராமனாத கோயங்கா, கேரளப் பெண்மணிகளான தாட்சாயணி வேலாயு தம், அம்முசாமிநாதன் ஆகியோரும் இருந்தனர். இந்த மாறுதல் களின் விளைவாக சுதந்திரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

நாடு சுதந்திரம் பெறுவதிலும், காங்கிரசும் லீகும் ஒன்றுபட்டு மத்தியில் கூட்டாட்சி அமைப்பதிலும் எனக்கு மகிழ்ச்சிதான். என்றாலும், தமிழகம் தனியரசு மாநிலமாக அமைவதற்கு வழி ஏற்படாத நிலை எனக்கு மிகுந்த வருத்தத்தைத் தந்தது. ஏகாதிபத்தியச் சிறையில் இருந்து இந்தியா விடுதலை பெற்ற பின்னரும், ''சென்னை மாகாணம்'' என்னும் சிறையிலிருந்து தமிழ்நாடு விடுதலை பெறாதது எனக்கு வேதனையைத் தந்தது. அத்தகைய விடுதலை என்றுமே ஏற்படாமற் போய்விடுமோ என்ற அச்சம் என் மனத்துள் தோன்றியது.

தமிழகத்தில் தமிழரசு காண்பதிலே திரு.கு. காமராசர் தலைமையிலிருந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கருத்து செலுத்தவில்லை. அதனைத் தேவையற்ற ஒன்றாகவும் அது கருதியது. தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் சுதந்திரத்தின் பலன்களை அனுபவிக்கத் தயாராகிக் கொண்டிருந்தார்கள்.

இவற்றால், காங்கிரசைக் கொண்டே சுதந்திர இந்தியாவில் சுயாட்சித் தமிழகத்தைப் படைத்துவிட முடியுமென்பதில் எனக்கிருந்த உறுதி தளர்ந்துவிட்டது.

பெரியார் ஈ.வெ.ரா. தலைமையிலிருந்த திராவிடர் கழகம் ''திராவிடத் தனிநாடு' கோரிவந்ததென்றாலும், அதற்காகப் போராடுவதற்கான எண்ணமே அதற்கிருக்கவில்லை. மற்றும், தி.க. அன்று கோரிய திராவிட நாடு எனது புதிய தமிழகக் கொள்கை அடிப்படையில் விரோதமானதாகும்.

ஆந்திரர் ''விசால ஆந்திரம்' கோரியும், கேரளர் 'ஐக்கிய கேரளம்' விரும்பியும் கிளர்ச்சி நடத்தி வருவதைக் கண்டும் தமிழகத்தாருக்கு இன உணர்வு ஏற்படவில்லை.

இந்நிலையில், எனது கற்பனையிலிருந்த ''புதிய தமிழகம்'' படைப்பதற்காகப் பாடுபடுவதற்குத் தனியாக ஒரு அமைப்பினைத் தோற்றுவிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதனை உணர்ந்தேன். தமிழரசு காணும் முயற்சியில் ஈடுபட்டு விட்டால் தமிழ் மக்கள் என்னைக் கைவிட மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. நான் ஏற்கவிருப்பது என் சக்திக்கு மீறிய பெரும் பொறுப்பு என்பதனை நான் உணர்ந்திருந்தேனென்றாலும், செயலில் ஈடுபட்டு விட்டால் அதற்குத் தேவைப்படும் ஆற்றலைத் தெய்வம் எனக்கு அளிக்கும் என்று நான் உறுதியாக நம்பினேன். அப்போது,

''குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்''

என்ற குறள் எனது நினைவுக்கு வந்து செயலில் ஈடுபட என்னை ஊக்குவித்தது. பலநாட்கள் நன்கு சிந்தித்துப் பார்த்த பின்னர் புதிய அரசியல் கழகமொன்றைத் தோற்றுவிப்பதென்ற முடிவுக்கு வந்தேன்.

த.அ.க. பிறந்தது!

திரு.வி.கலியாணசுந்தரனார், தெ.பொ. மீனாட்சி சுந்தர னார் ஆகிய பெரியார்களுடன் பலமுறை இதுபற்றிக் கலந்து பேசினேன். அவர்களும் எனது கருத்தை ஆதரித்து, என்னை உற்சாகப்படுத்தினர். நான் தமிழரசு இயக்கத்தைத் தோற்றுவித் தால் தாங்கள் ஒத்துழைப்பதாகவும் அவர்கள் உறுதி கூறினர்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் 1946-ஆம் ஆண்டு நவம்பர் 21-ஆம் தேதியன்று மண்ணடி லிங்கி செட்டித் தெருவிலிருந்த எனது ''தமிழ் முரசு'' அலுவலகத்தில் தமிழின இளைஞர் கூட்டமொன்றைக் கூட்டினேன். தமிழகம் தழுவிய இயக்கத்தைத் தொடங்குவதற்காகத்தான் இந்தக் கூட்டத்தைக் கூட்டினேனென்றாலும், அதில் கலந்து கொண்ட அனைவரும் சென்னை நகரவாசிகளேயாவர். வெளியூர்களிலிருந்து ஆதரவாளர்களைச் சென்னைக்கு அழைக்க என்னிடம் பொருள்

வசதி இல்லை. பொருள் வசதியுடைய வெளியூர்வாசிகளில் எவரும் அப்போது என்னை ஆதரிப்பவர்களாக இருக்க வில்லை.

புதிய சரித்திரம் படைப்பதற்குக் கூடிய இந்தக் கூட்டத்தில் திரு.வி.கலியாண சுந்தரனார், பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர்கள் வித்வான் மு.வரதராசனார், அன்பு கணபதி ஆகியோர் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டம் பற்றித் 'தமிழ் முரசு' (1.1.47) இதழில் வெளியான செய்தியை இங்கு அப்படியே தருகிறேன்:

''கடந்த நவம்பர் மாதம் 21ந் தேதி மாலை 'தமிழ் முரசு' காரியாலயத்தில் தமிழரசுக் கோரிக்கையை ஆதரிப்போரின் கூட்டம் ஒன்று கூடியது. நகரின் பல பாகங்களிலிருந்தும் சுமார் எழுபது பேருக்கு மேல் வந்திருந்தனர். திரு.ம.பொ. சிவஞானம் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

''தலைவர் முகவுரையில், தமிழகத்திற்கு வெளியே திருவிதாங்கூர், தென் ஆப்பிரிக்கா, மலாயா, சிங்களம் முதலிய பிரதேசங்களில் தமிழர்கள் படும் அல்லல்களையும், அவர்கள் விஷயத்தில் தமிழ்நாட்டவர் அக்கறை கொள்ள வேண்டியதன் அவசியத்தைம் விவரித்துக் கூறினார்.

''மேலும், பிரிட்டிஷ் மந்திரி சபையினர் திட்டத்தின்படி, தமிழ்நாடு 'ஏ' தொகுதியில் சேர்க்கப்பட்டால் ஏற்படும் கேடு களையும் எடுத்துக் காட்டினார். நெடுநேர ஆலோசனைக்குப் பிறகு 'தமிழரசுக் கழகம்' என்ற பெயருடன் ஒரு கழகம் நிறுவப்பட்டது. அதன் தலைவராகத் திரு.ம.பொ.சிவஞானம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.''

இவ்வாறாக இற்றைக்கு 25 ஆண்டுகட்கு முன்பு தோன்றிய தமிழரசுக் கழகந்தான் இன்று நாம் காணும் புதிய தமிழகத்தைப் படைத்தது.

வளர்க, தமிழரசுக் கழகம்! வாழ்க, புதிய தமிழகம்!

தமிழர் திருநாள்

1946 நவம்பர் 21-இல் தமிழரசுக் கழகம் தொடங்கப் பெற்றதும் அது மேற்கொண்ட முதற்பணி ''தமிழர் திருநாள்'' கொண்டாட்டம் ஆகும்.

1946-ஆம் ஆண்டிலேயே எனது தனிப்பட்ட முயற்சியால் சென்னை நகரில் மட்டும் 'தமிழர் திருநாள்' எனது தலைமையில் கொண்டாடப்பட்டதென்பதனை ஏற்கனவே கூறியிருக்கிறேன். அதன் தொடர்ச்சியாகத் தமிழ்நாடு முழுவதிலும், தமிழர் வாழும் பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் தமிழர் திருநாள் கொண்டாடப்படுவதற்கான பெருமுயற்சிகளைக் குழவிப் பருவத்திலிருந்த தமிழரசுக் கழகம் மேற்கொண்டது.

தமிழகத்திலே உட்பகை!

தமிழரசுக் கழகம் தோன்றியபோது தமிழகத்தின் சூழ்நிலையானது தமிழினத்தின் ஒற்றுமைக்கு உதவி புரிவதாக இல்லை. அரசியலிலே, உத்தியோகத் துறையிலே பார்ப்பனர் — பார்ப்பனர் அல்லாதார் என்ற வகுப்புப் பூசல் வலுத்திருந்தது.

இதுவன்றி ''சீர்திருத்தம்'' — ''பகுத்தறிவு'' என்ற கொள்கைகளைப் பரப்பத் திராவிடர் கழகம் மேற்கொண்டிருந்த முயற்சிகள் காரணமாக ஆரியர் — திராவிடர் என்ற நிறவழி வகுப்பு வாதமும் வளர்க்கப்பட்டு வந்தது.

சுதந்திரம் நெருங்கிக் கொண்டு இருந்ததன் காரணமாக, பாகிஸ்தான் பிரிவினைக் கிளர்ச்சி உச்சநிலையிலிருந்ததால், இந்து — முஸ்லிம் வகுப்புவாதமும் விசுவரூபம் எடுத்திருந்தது.

இந்தப் பிரிவினைப் போக்குகள் காரணமாகத் தமிழினத்தார் பல்வேறு பாசறைகள் அமைத்துப் பரஸ்பரம் பகை கொண்டிருந்தனர்.

ஆந்திரரும், கேரளரும் தனித்தனியே ஒருமைப்பாடு உடையவராகி விசால ஆந்திரம் பெறவும், ஐக்கிய கேரளம் காணவும் கிளர்ச்சி நடத்திக் கொண்டிருந்த நேரத்திலே — தமிழகத்தின் தலைநகரையும் அதன் எல்லைப் பகுதிகளையும் ஆக்கிரமித்துக் கொள்வதற்கான ஆர்ப்பாட்டங்களை அவர்கள் நடத்திக் கொண்டிருந்த காலத்திலே, தமிழினத்தார் சாதி — வருண — மத வகுப்புவாதப் பூசல்களிலே ஈடுபட்டிருந்தது, என் மனதுக்கு மிகுந்த வேதனையைத் தந்தது. இந்த வகுப்புவாதக் கிளர்ச்சிகளை நேரடியாக மோதி முறியடிக்கும் துணிவு எனக்கு அப்போது இருந்ததென்றாலும் அதனால் பயன் ஏற்படுமென்று நான் நினைக்கவில்லை. வகுப்புவாதப் பூசல்கள் எனது நேரடி மோதலால் மேலும் வளர்ந்துவிடக் கூடுமென்றே நான் அஞ்சினேன். அதனால், ஆக்க வழியில் அணுகி, தமிழினத்தை ஒன்றுபடுத்துவதிலே கருத்து செலுத்தினேன். அதற்கான முதல் முயற்சியாகவே 'தமிழர் திருநாள்' கொண்டாட முனைந்தேன்.

இதற்கான வேலைத் திட்டத்தை வகுக்கத் தமிழரசுக் கழகச் செயற்குழுவின் முதல் கூட்டத்தை எனது இல்லத்தில் கூட்டினேன். திரு.வி.க., தெ.பொ.மீ., டாக்டர் மு.வ. ஆகியோர் சிறப்பு அழைப்பினராக இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு தமிழர் திருநாள் கொண்டாடுவதற்கான ஆலோசனைகளைக் கூறி உதவினர்.

சாதி மத வேற்றுமையின்றித் தமிழ் பேசுவோரெல்லோரும் இந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு செயய வேண்டுமென்று கனவு கண்டேன். அப்போதுதான் உதயசூரியன் போன்று அரசியல் அடிவானத்தில் தோன்றிக் கொண்டிருந்த தமிழரசு இயக்கத்திற்கு வலுவூட்டவும் தமிழர் திருநாளைப் பயன்படுத்த விரும்பினேன். ஆம்; புதிய தமிழகம் கோரும் ஒரு கோரிக்கைத் திருநாளாகக் கொண்டாடப்படும் வகையில் தமிழர் திருநாளுக்குத் திட்டம் வகுத்தேன்.

தமிழரசுக் கழகச் செயற்குழு, தமிழர் திருநாளைக் கொண்டாட வேண்டியதற்கான காரணங்களை விளக்கி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

பன்னிருவர் கூட்டறிக்கை

தமிழரசுக் கழகம் அதிகாரபூர்வமாகத் தயாரித்த இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாகத் தமிழக அரசியல் க்ட்சிகளின் தலைவர்களுடைய கையொப்பத்தையும் பெற்றேன். அந்தத் தீர்மானத்திலே கையொப்பமிட்டவர்கள் என்னையும் சேர்த்துப் பன்னிருவராவர். அவர்கள் பெயர்கள் வருமாறு:

திரு. வி. கலியாணசுந்தரனார்.
'' கு. காமராசர்
'' டி.டி. கிருஷ்ணமாச்சாரி
'' டாக்டர் ப. சுப்பராயன்
'' ப. ஜீவானந்தம்
'' வ.ரா.
'' டி.கே. சிதம்பர நாத முதலியார்
'' த. செங்கல்வராயன்
'' 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி
'' பாரதிதாசன்
'' தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்
'' ம.பொ. சிவஞானம்

செயற்குழுத் தீர்மானம் மேற்கண்ட பன்னிரு தலைவர்களின் கூட்டறிக்கையாகப் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டது. அக்கூட்டறிக்கை வருமாறு:

''தைத் திங்கள் முதல்நாளைத் தமது நாட்டுத் திருநாளாகவும் தமிழர் கொண்டாடுவது வழக்கம். இவ்வாண்டு அம் முதற்பெருநாள் 1947 ஜனவரி 14இல் வருகிறது. வழக்கப்படி அத்திருநாள் நாட்டவரால் கொண்டாடப் பெறும்.

''இம்முறை, தமிழ்நாட்டின் திருவிழா ஒருவார காலம் — நாடெங்கும் ஒவ்வொரு மூலை முடுக்கிலும், சிறப்பாக நிகழப் பெறல் வேண்டுமென்பது எங்கள் வேணவா. காரணம், பலபடக் கூற வேண்டுவதில்லை. ஒன்று கூறுதல் சாலும். அது தமிழ்நாட்டிற்கெனச் ''சுய நிர்ணய''

அறிக்கையை உறுதி செய்வதாகும். ''சுய நிர்ணய'' உணர்வு தமிழ்நாட்டுக்குப் புத்துயிர் வழங்குமென்பதில் ஐயமில்லை.

''சுய நிர்ணய''த்தின் வழியே தமிழ்நாட்டின் எல்லை கோலல், அரசியல் அமைப்பை வரையறுத்தல் முதலிய நிகழ்தல் வேண்டும். இதில் தமிழ் மக்களுக்குக் கருத்து வேற்றுமை இராது என்று நம்புகிறோம்.

''ஆகவே, தமிழகத்தின் விடுதலைக்குரிய ஒரு விழாவில் கலந்து உழைக்குமாறு எல்லாக் கட்சியாரையும் வேண்டுகிறோம். தமிழர் திருநாளை — பெருவிழாவை — ஆங்காங்கே சிறப்பாக நடத்தப் பலதிற அரசியல் கட்சி யினர், தொழிலாளர், மாணாக்கர் முதலிய யாவரும் முற்படுவாராக. தமிழ் இனம் எழுவதாக!''

இந்த அறிக்கை செய்தித் தாள்களில் பிரதான தலைப்புகள் தந்து பிரசுரிக்கப்பட்டது. உண்மையில் இந்த அறிக்கையால் தமிழ் இனத்தாரிடையே — குறிப்பாக, தமிழின இளைஞர் களிடையே ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டதென்றே சொல்ல வேண்டும்.

அறிக்கையின் நகல் அதில் கையொப்பமிட்டவர்களுக்குத் தனித்தனியே அஞ்சலிலும் நேரிலும் அனுப்பப்பட்டது. பெரும் பாலோர் முணுமுணுக்காமல், தடை சொல்லாமல் கையொப்ப மிட்டு அனுப்பினர். இது எனக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்தது. இதே நேரத்தில் எனக்கு சோர்வைத் தந்த நிகழ்ச்சியும் உண்டு.

பெரியார் — அண்ணா ஒத்துழையாமை

தமிழர் திருநாள் பற்றிய அறிக்கையின் நகல் திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களுக்கும், பொதுச் செயலாளர் தளபதி சி.என். அண்ணாதுரையவர்களுக்கும் என்னால் அனுப்பப்பட்டது. அறிக்கையில் கையொப்பமிட்டு அனுப்புமாறு தனியாகக் கடிதமும் எழுதியிருந்தேன்.

அண்ணாவிற்கு எழுதிய கடிதத்திற்கு அப்போது அவருடைய 'திராவிட நாடு' வார இதழின் துணையாசிரியராக இருந்த திரு. ஈழத்தடிகளிடமிருந்து கீழ்வரும் பதில் கடிதம் எனக்குக் கிடைத்தது.

4.1.47

பேரன்புடையீர்! நலம்.

தங்கள் கடிதம் கிடைத்தது. அண்ணா தஞ்சை சென்றுள்ளார். நாளை வருவார். வந்ததும் தங்கள் கடிதத்தைப் பார்த்து உரியது செய்வார்.

அன்பன்
ஈழத்தடிகள்

இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டபடி அண்ணாவிடமிருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை. பெரியார் நிலையும் இதுதான். இருவருக்கும் திரும்பவும் நினைப்பூட்டும் கடிதம் எழுதினேன். அதற்கும் பதிலில்லை. உண்மையில் திராவிடர் கழகத்தையும் இணைத்து வைத்துத் தமிழர் திருநாள் கொண்டாட நான் பெரிதும் விழைந்தேன். ஆகவே, அந்தக் கழகத்தின் தலைவரும், பொதுச் செயலாளரும் ஒத்துழைப்பு தரத் தவறியது எனக்கு மிகுந்த வருத்தத்தைத் தந்தது. அப்போது அவர்களோடு எனக்குப் பழக்கமில்லாததால் நேரில் அணுகி அவர்களுடைய ஒத்துழைப்பைக் கோரத் தயங்கினேன்.

திரு. கு.காமராசர், திரு.டி.டி. கிருஷ்ணமாச்சாரியார், டாக்டர் ப.சுப்பராயன் ஆகியோர் தமிழகத்திற்குச் சுயாட்சியும் சுயநிர்ணயமும் கோரும் அறிக்கையில் அப்போது கையொப்ப மிட்டது இப்போது தமிழ் மக்களுக்கு வியப்பைத் தரலாம். ஆனால், அப்போது நான் வியப்படையவில்லை. அந்த மூவரும் தங்கள் மனச்சாட்சிக்கு மாறாகக் கூட்டறிக்கையில் கையொப்பமிட்டார்கள் என்று நான் சொல்லமாட்டேன். அப்போது மாநிலங்களை மொழிவாரி திருத்தி அமைப்பதையும், பாதுகாப்பு — போக்குவரத்து — அயல்நாட்டு உறவு ஆகிய மூன்று பொறுப்புகளை மட்டுமே மத்திய அரசிடம் விட்டு வைத்து மற்ற பொறுப்புகளை எல்லாம் மாநிலங்களுக்கு

வழங்குவதையும் காங்கிரஸ் மகாசபை தன் கொள்கைகளாகக் கொண்டிருந்தது. அதனால்தான் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த திரு. காமராசர், தமிழகத்திற்குச் சுயாட்சி கோரும் அறிக்கையில் முணுமுணுக்காமல் கையொப்பமிடுவது சாத்தியமானது.

தைத் திங்கள் முதல் நாளில் — ஜனவரி 14-ஆம் தேதியில் சென்னை செயின்ட்மேரிஸ் மண்டபத்தில் தமிழர் திருநாள் மிகுந்த ஆரவாரத்துடன் தமிழரசுக் கழகத்தின் சார்பில் கொண்டாடப்பட்டது. அந்த விழாவே தமிழரசுக் கழகத்தின் தொடக்க விழாவாகவும் அமைந்தது.

இந்த விழாவைத் தொடங்கிவைக்க திரு. காமராசர் இசைந்திருந்தார். ஆனால், விருதுநகர் சென்றவர் விழா நாளன்று சென்னை திரும்ப இயலாமற் போய்விட்டதால், வர இயலாமை தெரிவித்தும், விழாவுக்கு வாழ்த்துக் கூறியும், விருதுநகரி லிருந்து தந்தி மூலம் செய்தி அனுப்பியிருந்தார். அவருக்குப் பதிலாகத் தமிழ்ப் பெரியார் திரு.வி. கலியாணசுந்தரனார் விழாவைத் தொடங்கி வைத்தார். தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் விழாவுக்குத் தலைமை தாங்கினார். பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை, த.செங்கல்வராயன், டி.டி. கிருஷ்ணமாச்சாரியார், டாக்டர் ப.சுப்பராயன் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டதுடன், தமிழரசுக் கழகத்தின் மாநிலச் சுயாட்சிக் கொள்கையை மிகுந்த உற்சாகத்துடனும், உத்வேகத்துடனும் ஆதரித்துப் பேசினர். இந்த விழாவிலே, இறுதியில் பேசிய நான் தமிழரசுக் கழகம் ஆட்சியைக் கைப்பற்ற விரும்பும் பார்லிமெண்டரி அரசியல் கட்சி அல்ல என்பதனைத் தெளிவுபடுத்தினேன்.

தமிழினத்தார் கோரிக்கை

சாதி — சமய வருண வேற்றுமையின்றி, தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்களும், வீட்டு மொழி வேறாகவிருப் பினும் தமிழ்நாட்டின் நிரந்தரக் குடிகளாகிவிட்டவர்களும் தமிழர்களாகக் கருதப்படுவர் என்றும் கூறினேன். இந்தக்

கூட்டத்தில் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. அது வருமாறு:

''இம் மாபெருங் கூட்டம், தமிழர் திருநாளாகிய இன்று எல்லாத் தமிழ் மக்களுக்கும் வாழ்த்துக் கூறுகிறது. சிறப்பாக, திருவிதாங்கூர் தமிழகம், பிரெஞ்சிந்தியத் தமிழகம் ஆகிய இடங்களில் சுயநிர்ணய உரிமைக்காகத் தமிழர் நடத்தும் போராட்டத்துக்கும்; தமிழகத்துக்கு வெளியே இலங்கை, மலேயா, பர்மா, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளிலுள்ள தமிழர்கள் உயிர் நாடியான உரிமைகளுக்காக நிகழ்த்தும் வீரம்மிக்க போராட்டங் களுக்கும் ஆசி கூறுவதுடன் அவர்களுக்கு எல்லா விதத்திலும் ஆதரவு நல்குமாறு தமிழகத்தாரைக் கேட்டுக் கொள்கிறது.

''இப்போது டெல்லியில் நடந்துவரும் அரசியல் நிர்ணய சபை, மொழிவாரி நாடுகளைப் பிரிக்கும் வேலையை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்துவதுடன், அப்படிப் பிரிக்குங்கால், திருப்பதி முதல் குமரி வரை உள்ள நிலப்பரப்பைக் கொண்ட புதிய தமிழகத்தை நிறுவப் பாடுபடுமாறு அ.நி.சபையின் தமிழ்நாட்டு அங்கத்தினரைக் கேட்டுக் கொள்கிறது.

''அந்தப் புதிய தமிழகத்தின் அரசியல் அமைப்பை வேறு எவர் தலையீடுமின்றித் தாமே வகுத்துக் கொள்ளத் தமிழருக்குச் சுயநிர்ணய உரிமை உண்டென்பதை உறுதிப்படுத்துகின்றது.

''இந்தச் சுயநிர்ணயத்தின் வழியே தமிழகத்தின் அரசியல் அமைப்பை வகுக்குங்கால், அது சோசலிசக் குடியரசாக அமைய வேண்டுமென்றும் விரும்புகின்றது.

''மேற்சொன்ன உரிமைகளை அடைவதற்காக ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென்று தமிழினத்தார் யாவரையும் கேட்டுக் கொள்கிறது.''

தமிழர் திருநாள் நடைபெற்ற செயின்ட்மேரீஸ் மண்டபத்தில் எள் விழவும் இடமின்றி மக்கள் திரண்டிருந்த காட்சியை இன்னமும் என் அகக் கண்களால் பார்க்க முடிகின்றது. அவ்வளவு பெருங்கூட்டம்! தமிழினம் புத்துயிர் பெற்றுவிட்ட காட்சியைக் கண்ணாரக் கண்டேன். தமிழகத்திலே இப்படி ஒரு புதிய எழுச்சியைத் தூண்டிவிட்டவன் என்பதற்காக அன்றைய தினம் மக்கள் என்பால் காட்டிய மரியாதையும், அன்பும், நான் பேசுவதற்கு ஒலிபெருக்கி முன் நின்றபோது அவையில் எழுந்த கைதட்டலும், வாழ்த்தொலியும் என்னால் மறக்க முடியாதவையாகும். நலிந்திருந்த எனது உடலுக்கு மிகுந்த தெம்பூட்டியது அன்றைய நிகழ்ச்சி!

சென்னை நகரம் முழுதும் பல்வேறு வட்டங்களில் தமிழரசுக் கழகத்தின் சார்பில் தொடர்ந்து ஒரு வார காலம் தமிழர் திருநாள் கொண்டாடப்பட்டது. தமிழரசுக் கழகமேயன்றி, நகரிலுள்ள வேறு பல தமிழ் மன்றங்களும் இவ்விழாவைக் கொண்டாடின.

காங்கிரஸ் ஏடுகள் ஆதரவு

தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலும் இந்த விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திராவிடர் கழகம் இந்த விழாவைப் பொறுத்தவரையில் தமிழரசுக் கழகத்தோடு ஒத்துழைக்க முன் வரவில்லையென்றாலும், 'திராவிடர் திருநாள்' என்று, அதன் பல்வேறு கிளைகள் மாற்றுப் பெயர் கொடுத்து இந்த விழாவை அந்த ஆண்டில்தான் தமிழரசுக் கழகத்துடன் போட்டி போட்டுக் கொண்டு கொண்டாடின.

'தமிழினமே ஒன்றுபடு' என்னும் கோஷமடங்கிய சுவரொட்டிகள் தயாரித்துத் தமிழ்நாடு முழுவதிலும் பரப்பியது தமிழரசுக் கழகம். தமிழகத்திற்குச் சுயாட்சியும், தமிழினத்திற்குச் சுயநிர்ணய உரிமையும் கோரித் தமிழர் திருநாள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அப்போது திரு.டி.எஸ். சொக்கலிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்து கொண்டிருந்த 'தினசரி' நாளிதழ் ஆதரித்தது.

''மத்திய சர்க்கார் இந்தியாவின் வடகோடியிலிருப்பதால், தென் கோடியிலுள்ள தமிழர்கள் சிறப்படைய முடியவில்லை. தென்னாடு இந்தியாவின் முக்கிய பகுதி என்பதை வடநாட்டாருக்கு உணர்த்த வேண்டிய காலம் வந்துவிட்டது!''

என்று அப்போது திரு.கு. காமராசர் கோஷ்டியினுடைய பிரச்சார பேரிகையாகத் திகழ்ந்த 'தினசரி' கூறியது.

'ஆனந்த விகடனு'ம் செயின்ட் மேரிஸ் மண்டபத் தீர்மானத்தை ஆதரித்து தலையங்கம் எழுதியது. சுருங்கச் சொன்னால், காங்கிரஸ் வட்டாரத்திலேயும் தமிழரசுக் கழகத்தின் கொள்கை எதிரொலித்தது எனலாம்.

ராஜாஜி வாழ்த்து

அப்போது ராஜாஜி மத்திய அரசில் அமைச்சர் பொறுப்பை ஏற்று, டில்லியில் தங்கியிருந்தார். தமிழர் திருநாளையொட்டி வானொலியின் வாயிலாக இனவழி ஒற்றுமையை வலியுறுத்தித் தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடவேண்டுமென்று கேட்டுக் கொண்டு நான் ராஜாஜிக்குக் கடிதம் எழுதியிருந்தேன். சென்னை விழாவுக்குச் செய்தியனுப்புமாறும் அந்தக் கடிதத்தில் கோரியிருந்தேன். எனது வேண்டுகோளுக்கிணங்கி, ராஜாஜி அனுப்பிய செய்தி வருமாறு:

தில்லி
12.1.47

ம.பொ.சி. அவர்களுக்கு அன்புடன் எழுதியது. உங்கள் கடிதம் இன்று ஊருக்குத் திரும்பியதும் பார்த்தேன். உள்ளக் களிப்புடன் இருப்பேன் என்று நம்புவதாக எழுதியிருக்கிறீர்கள். உள்ளக் களிப்பு இல்லை. முடியவில்லை.

ஆயினும் தமிழர்கள் பொங்கல் அன்று மகிழ்ச்சியுடன் விழாவை நடத்துவார்கள் என்று கருதுகிறேன். கருதி திருப்தி அடைகிறேன். எல்லோரும் ஒத்து வேலை செய்து நாட்டைச் சிறப்புறச் செய்யுங்கள்.

நீங்களே தமிழ்முரசு வேறு என்ன முரசு வேண்டும்?

என் செய்தி ஒன்று ரேடியோவில் சொல்ல வேண்டுமென்கிறீர்கள். இனி அதற்கு அவகாசமில்லை; பம்பாயிலிருந்து இன்றுதான் விமானத்தில் வந்து இறங்கினேன்.

தங்கள் பிரசங்கமே என் செய்தி என்று வைத்துக் கொண்டு பேசக் கோருகிறேன். அப்படியே கேட்பவர் களும் எண்ணி கேட்கவேண்டும்.

— இராசகோபாலாச்சாரி

தமிழர் திருநாள் தொடங்கியதெப்போது?

இப்போது தமிழர் திருநாள் தமிழகத்தில் மட்டுமின்றித் தமிழர் வாழும் நாடுகளிலெலாம் தமிழரால் கொண்டாடப் படும் தேசியத் திருநாள் ஆகியிருப்பதைப் பார்க்கிறோம். வரலாற்று உண்மையை ஒப்புக் கொள்ளும் நேரிய மனப்பான்மை இன்ன மும் தமிழகத்து அரசியல் வட்டாரத்தில் தலைகாட்டவில்லை. தமிழர் திருநாளைக் கால் நூற்றாண்டுக்கு முன்பு தமிழரசுக் கழகந்தான் தொடங்கி வைத்ததென்ற உண்மையை மறைக்கும் வகையில் தவறான கருத்துகள் தமிழ் மக்களிடையே உலவ விடப்பட்டுள்ளன.

பேராசிரியர் நமச்சிவாய முதலியார் தமிழரசுக் கழகம் தோன்றுவதற்கு முன்பு தைத் திங்கள் முதல் நாளிலே ''தமிழ்த் திருநாள்'' கொண்டாடி வந்தார். சென்னை நகரில் மட்டும் தமது பதிப்பகத்துக்குப் பாடநூல்கள் எழுதித் தரும் தமிழாசிரியர் களுக்குச் சிறப்புச் செய்யும் வகையில்தான் அவ்விழாவினை அவர் நடத்தி வந்தார். தமிழ்நாடு தழுவிய முறையிலோ, தமிழினத்தை ஒன்றுபடுத்தி, தமிழகத்தின் உரிமைக்குக் குரல் கொடுக்கும் அரசியல் நோக்கிலோ அவர் தமிழர் திருநாள் கொண்டாடவில்லை.

தி.க. வட்டாரத்தினர் ''திராவிடர்'' என்ற மாற்றுப் பெயராலேனும் தமிழினத்திற்கு உயர்வு தேடும் வகையில்

1947-இல் செயலாற்றினர் என்பதனை ஒப்புக் கொள்வதில் எனக்கொன்றும் சங்கடமில்லை. அந்தத் தி.க.. கூட, 1946-ஆம் ஆண்டுவரை தைத் திங்கள் முதல் நாளை அதன் கண்ணோட்டப்படி திராவிடப் பெருங்குடி மக்களை ஒன்றுபடுத்தி, அவர்தம் அரசியல் — பொருளாதார உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் பொதுத் திருநாளாகக் கொண்டாடியதில்லை.

தமிழினத்தாரை ஒன்றுபடுத்தி அவர்தம் அரசியல் - பொருளாதார உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் தேசியத் திருநாளாகப் பொங்கல் திருநாள் கொண்டாடப்பட்டது. 1946 ஜனவரி 14-இல்தான். அதுவும், எனது முயற்சியால்தான் நடந்தது. அதன் பின்னர், 1947 ஜனவரி 14-இல் தமிழரசுக் கழகமே பொறுப்பேற்றுத் தமிழர் திருநாளைக் கொண்டாடியது. இப்போது 'தமிழர் திருநாள்' தமிழினத்தின் தேசியத் திருநாளாகிவிட்டது.

தமிழர் திருநாள் தமிழரசுக் கழகத்தின் பெயரால் கொண்டாடப்படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு ''தமிழ் முரசு'' மாதப் புத்தகமானது மாதம் இருமுறைப் பத்திரிகையாக மாறுதல் பெற்றது. அதன் முதல் இதழ் 1947 ஜனவரி முதல் தேதியன்று வெளிவந்தது.

'தமிழ் முரசு'ப் பதிப்பகம்

தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளைப் பரப்ப ஒரு ஏடு தேவைப்படுவதனை உணர்ந்துதான் மாதப் புத்தகமாக வெளிவந்து கொண்டிருந்த 'தமிழ் முரசை' மாதம் இருமுறைப் பத்திரிகையாக மாற்றினேன்.

இத்துடன், தமிழரசு இயக்கப் பிரச்சாரத்திற்காக சிறு பிரசுரங்களும், பெரிய அளவில் நூல்களும் வெளியிடத் திட்டமிட்டேன். இதற்காக அப்போது எனக்கு உறுதுணையாக இருந்து வந்த நண்பர்களின் உதவியால் 'தமிழ் முரசுப் பதிப்பகம்' தொடங்கினேன். அந்தப் பதிப்பகம் சட்டப்படி பதிவு செய்யப்பெற்றது. அதன் பங்குதாரர்கள் பெயர்களும், அவர்கள் பங்கு போட்ட தொகைகளும் வருமாறு:

ரூ.

ப.க.இராசு கிராமணி 1000
பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் 500
டாக்டர் மு.வரதராசனார் 250
பேராசிரியர் அன்பு கணபதி 250 திருமதி விசயலட்சுமி 250 (திரு.வேங்கடசாமி எம்.ஏ. அவர்களின் மனைவி)
ம.பொ.சிவஞானம் 250 ''தமிழ் முரசுப் பதிப்பகம்''

என்னும் நிறுவனத்தின் தலைமை நிர்வாகியாக அதன் பங்குதாரர்களால் நான் தேர்ந் தெடுக்கப் பட்டேன். அந்நாளில் பத்திரிகைக் காகிதம் கிடைப்பது அரிதாக இருந்தது. அதனால், மத்திய அரசிடம் பத்திரிகைக் காகிதத்துக்கு முன் அனுமதி பெற்றபின்னரே புதிதாகப் பத்திரிகை நடத்த அப்போதைய சென்னை அரசு அனுமதி தருவது வழக்கமாக இருந்தது.

''முரசு'' மாதப் புத்தகமாக வந்து கொண்டிருந்தபோது சென்னையில் பத்திரிகைக் காகிதத் துறையில் துணைக் கண்காணிப்பாளராக இருந்து வந்த திரு.சி.கே. சிவராமகிருஷ்ணன் சட்டரீதியாகத் தமக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு பெருமளவுக்கு உதவி புரிந்து வந்தார். மாதப் புத்தகம் மாதமிருமுறை பத்திரிகையாக மாறிவிட்டதால், அரசினரின் காகிதக் கோட்டா தேவைப்பட்டது.

ராஜாஜி செய்த உதவி

பத்திரிகைக் காகிதத்திற்கு அனுமதி பெறுவதற்காக 1946 செப்டம்பர் இறுதியில் நான் புதுடில்லி சென்றேன். அங்கு வர்த்தகத் துறை அமைச்சராக இருந்த என் பெருமதிப்புக்குரிய ராஜாஜி அவர்களைச் சந்தித்துப் பத்திரிகைக் காகிதத்துக்கு அவரிடம் அனுமதி பெற்றேன். நான் பத்திரிகை நடத்துவதை தாம் விரும்பவில்லை என்பதை ராஜாஜி என்னிடம் நேரில் கூறினார். காரணம், பத்திரிகைத் தொழிலை லாபகரமாக நடத்துவது என் போன்றவர்களால் இயலாதென்பதுதான். அனுபவ சாலியான அவருடைய அறிவுரையை நான் புறக்கணிக்கவில்லை. என்றாலும், தமிழரசு இயக்கத்திற்குப்

பிரச்சார பேரிகை ஒன்று தேவைப்படுவதனைப் புறக்கணிக்க இயலாதவனாக இருந்தேன்.

ராஜாஜியைக் காண டில்லி சென்றபோதுதான் என் வாழ்நாளில் கடைசி முறையாகப் புதுடில்லியில் காந்திஜியை அவர் நடத்திய பிரார்த்தனைக் கூட்டத்தில் பார்த்தேன். அதுதான் கடைசி தரிசனமென்று அப்போது நான் நினைக்கவில்லை.

தற்போது கோவை பூ.சா.கோ. கலைக் கல்லூரியில் பேராசிரியராக இருந்த ம.ரா.போ. குருசாமி அவர்கள் ''தமிழ் முரசி''ன் துணையாசிரியராக இருந்து தொண்டாற்ற முன்வந்தார். அப்போது எனக்கிருந்த தமிழறிவு சொற்பந்தான். பேராசிரியரான அவர் என்னை ஆசிரியராகக் கொண்டு துணையாசிரியர் பொறுப்பிலிருக்க இசைந்தது என் பேரிலும், நான் தொடங்கிய இயக்கத்தின் பேரிலும் அவருக்கிருந்த பாசத்தையும், பற்றுதலையும் காட்டியது. தமிழரசுக் கழகத்தின் செயலாளர் திரு.கொ.மோ. ஜனார்த்தனம், தமிழ் முரசு பதிப்பகத்திற்கு ஊதியம் எதையும் எதிர்பாராமல் பகுதிநேர ஊழியராக இருந்து உதவி புரிந்து வந்தார்.

'தமிழ் முரசு' (மாதமிரு முறை) வெளியீட்டு விழா திரு.வி.க. தலைமையில் நடந்தது. திரு.கு. காமராசர், பத்திரிகையின் முதல் இதழை வெளியிட்டு அதற்கு வாழ்த்துக் கூறினார். இந்த நேரத்தில் காங்கிரசுக்குள் எங்கள் இருவரிடையே நிலவி வந்த பகைமை உணர்ச்சி அநேகமாக மறைந்து விட்டதென்றே சொல்ல வேண்டும். அதனாற்றான், தமிழரசு கோரும் அறிக்கையிலே கையொப்பமிடவும், தமிழரசுக் கழகத் தொடக்க விழாவைத் தொடங்கி வைக்கவும், 'தமிழ் முரசு'ப் பத்திரிகையை வெளியிடவும் திரு. காமராசர் மனமுவந்து முன்வந்தார். அவர் எனக்குத் தந்த ஒத்துழைப்புக்கு உள்நோக்கம் கற்பித்தவர்களும் உண்டு.

அப்போது ஆந்திரரான திரு. பிரகாசம் சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தார். அவரது

அமைச்சரவையின் மீது ஆதிக்கம் பெற திரு. காமராசரால் இயலவில்லை. அதனால் தமிழரசுக் கழகத்தை ஊக்குவித்து ஆந்திர எதிர்ப்புணர்ச்சியை வளர்ப்பதன் வாயிலாக திரு. பிரகாசம் அமைச்சரவையைக் கவிழ்த்துவிட திரு. காமராசர் முயலுகிறார் என்ற பேச்சும் அரசியல் வட்டாரத்தில் அடிபட்டது. நான் அப்படி நினைக்கவில்லை.

தேசீயப் பாசறை - 2

தமிழரசுக் கழகம் தோன்றிய நாளிலே — பிரிட்டிஷ் அமைச்சரவைத் திட்டம் காங்கிரஸ் கட்சியால் ஏற்கப்பட்டிருந்த தால் தேச சுதந்திரம் நெருங்கிக் கொண்டிருக்கிறதென்ற உணர்ச்சி பொதுவாக மக்களிடையே நிலவி வந்தது. ஆனால், பிரிட்டிஷ் திட்டத்தை ஏற்று இடைக்கால அமைச்சரவையில் பங்குபெற முஸ்லிம் லீக் மறுத்துவிட்டதால், எந்த நேரமும் நேரு தலைமையிலிருந்த அமைச்சரவையின் ஆயுள் முடிவு பெறலாம் என்ற எச்சரிக்கை உணர்ச்சியும் இருக்கத்தான் செய்தது. அப்படி நேருமாயின், விடுதலைப் புரட்சி ஆகஸ்டுக் கிளர்ச்சியை விடவும் தீவிரமானதாகத் தோன்றக் கூடுமென்ற எண்ணம் காங்கிரஸ் பெருந்தலைவர்களுக்கு இருந்து வந்தது.

இந்தச் சூழ்நிலை காரணமாக, புதிய தமிழகம் படைப்பதற் காக மட்டுமின்றி, சுதந்திர பாரதத்தைப் படைப்பதற்கான குறிக்கோளுடனும், தமிழரசுக் கழகத்தை நான் தோற்றுவித்தேன். சுருங்கச் சொன்னால், இந்திய விடுதலை வீரர்களின் மற்றொரு பாசறையாகவும் தமிழரசுக் கழகம் அமைந்தது.

அந்நாளில் தமிழ் மாநிலத்தில் மட்டும் இயங்கும் அமைப்பாக இருந்து வந்த திராவிடர் கழகம் ''தமிழ்நாடு தமிழருக்கே'' என்று முழங்கி வந்ததையும் இங்கு நான் கூறவேண்டும். ஆனால், இந்தியா இந்தியருக்கு என்ற நிலை ஏற்படாதபோதே — இந்தியா முழுவதன் மீதும் இங்கிலாந்து வெள்ளையர் ஏகாதிபத்தியம் செலுத்திய போதே — ''தமிழ்நாடு தமிழருக்கே' என்று திராவிடர் கழகம் குரல் கொடுத்தது. வட இந்தியரின் ஆதிக்கத்திலிருந்து தென்னகத்தை அல்லது

திராவிடத்தை விடுவிக்கப் போவதாகக் கூறி வந்த திராவிடர் கழகம், ஆங்கிலேயர் ஆதிக்கத்தைத் தமிழகத்திலிருந்து வெறியேற்றுவதுதான் தமது அவசரக் கடமை என்பதனை உணரத் தவறிவிட்டது.

'முரசு' முழங்கியது!

இந்தக் குறைபாட்டுக்கு விலக்காகத் தமிழரசுக் கழகத்தை நடத்த விரும்பினேன். பிற இனத்தவர் ஆதிக்கத்திலிருந்து தமிழ் இனத்துக்குச் சுதந்திரம் தேடுவதுபோலவே, பிரிட்டிஷாரின் ஆதிக்கத்திலிருந்தும் தமிழகம் உள்ளிட்ட இந்தியா முழுவதற்கும் சுதந்திரம் தேடும் விடுதலை வீரர்களின் பாசறையாகவும் தமிழரசுக் கழகத்தை அமைத்தேன். இதனைத் தெளிவுபடுத்தி 'தமிழ் முரசு' மாதமிருமுறைப் பத்திரிகையின் முதல் இதழில் (1.1.47-இல்) நான் எழுதிய தலையங்கத்தின் சில பகுதிகள் வருமாறு:

''தமிழ்நாடு முற்றுகையிடப்பட்டுள்ளது. இன்றல்ல; நேற்றல்ல; பல நூற்றாண்டுகளாக.

''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தமிழரின் அரியாசனத்தைப் பிடித்து ஆட்சி செலுத்துகிறது. ஆங்கிலத் துருப்புகள் அந்த ஆட்சியை அரண் செய்து காக்கின்றன.

''பொளாதாரத் துறையில் ஏகாதிபத்தியச் சுரண்டல் ஆயுத பலங்கொண்ட ஆட்சியின் துணையால் தங்கு தடையின்றித் தாராளமாக நடைபெறுகின்றது தமிழ்நாட்டில்! போதாக்குறைக்குப் பிற இனத்தவரின் மூலதனங்கள் வேறு தமிழ்நாட்டின் மீது படையெடுத்துப் பாழ் செய்கின்றன.

''வளமான நிலமிருந்தும், பொன் கொழிக்கும் பலமிருந்தும், தமிழர் வாழ வழியின்றி உழைப்புக்கு அழைப்பு வந்த இடமெல்லாம் ஓடி ஓடி அல்லல்படும் நிலைமை நம் உள்ளத்தை உறுத்துகின்றது.

''மொழித் துறையிலும் முற்றுகை நிலைதான்! இசையரங்கில் தெலுங்கு; இறைவன் கோவிலில் வடமொழி; அரசியலில் ஆங்கிலம்! பிற மொழிகள் தமிழ்நாட்டை முற்றுகையிட்டுத் தமிழ் மொழியை அடுப்பங்கரையளவில் சிறைப்படுத்தி விட்டன. தமிழன் தமிழை மறந்ததோடு தமிழ்த் தெய்வமும் தமிழை மறந்தது!

''தமிழ் நிலம் — தமிழ் இனத்தவரின் தாயகம் — பிற இனத்தவரால் முற்றுகையிடப்பட்டுள்ளது. தெற்கே திருவிதாங்கூரில், வடக்கே திருப்பதியில்! சென்னை நகர் மீதும் ஆதிக்கவாதிகளின் ஆசை அரும்பெடுத்திருக்கிறது. ஆகவே, தமிழ் நிலத்தின் மீது — தமிழ்நாட்டு வளத்தின் மீது — தமிழ் மொழியின் மீது போடப்பட்டுள்ள முற்றுகையை முறியடிக்க வேண்டுமென்றே 'முரசு' கிளம்புகிறது.

''இந்த முற்றுகை நிலையை முறியடித்துத் தமிழ்நாட்டில் தமிழரசு கண்டு, அதுவும் முடியரசன்றிக் குடியரசாக, அதுவும் சோஷலிசக் குடியரசாக இருக்க வேண்டும் என்பதற்காகவே 'தமிழ் முரசு' முழங்குகிறது.

''தமிழ் மக்களே! அடங்கிக் கிடந்த நாள் அடிமாண்டு போகட்டும்! ஒடுங்கிக் கிடந்த நாள் ஒழிந்து தீரட்டும்! இனியேனும் முரசொலி கேட்டு முன்னணியில் சேருங்கள்!''

கழகம் தோன்றிய காரணம்!

தமிழரசுக் கழகத்தை நான் தோற்றுவித்தபோது சென்னை ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவனாகவும், காங்கிரசிலே செல்வாக்கு மிக்க பிரச்சார பீரங்கியாகவும் இருந்து வந்தேன். அகில இந்தியக் கட்சியொன்றில் செல்வாக்குடன் இருந்த நிலையிலே இன்னொரு அரசியல் இயக்கத்தை ஒருவர் தோற்றுவிப்பதென்பது சாதாரணமாக நிகழக் கூடியதன்று. தான் சார்ந்திருந்த கட்சியிலிருந்து வெளியேற நேர்ந்தபோதோ, வெளியேற்றப்பட்ட நிலையிலோ யாரும் புதிய கட்சியைத் தோற்றுவிப்பதுதான் வழக்கம் - வரலாறு! அப்படிப்பட்ட

நிலையில் நான் தமிழரசுக் கழகத்தைத் தொடங்கவில்லை. அந்தத் துரதிர்ஷ்டம் எனக்கு ஏற்படவுமில்லை. விசால ஆந்திரம் காண ஆந்திர மாகாண காங்கிரசும், ஐக்கிய கேரளம் படைக்கக் கேரள மாகாண காங்கிரசும் முயன்று கொண்டிருந்த நேரத்திலே, தமிழ்நாடு காங்கிரசும் புதிய தமிழகம் படைக்கும் முயற்சியை மேற்கொண்டிருந்திருக்குமானால் தமிழரசுக் கழகத்தைத் தோற்றுவிக்கும் முயற்சியில் நான் ஈடுபடாமலிருந்திருக்கக் கூடும்.

எனக்குப் பதவி தேடுவதற்காகவோ, எனது செல்வாக்கை வளர்த்துக் கொள்வதற்காகவோ நான் தமிழரசுக் கழகத்தைத் தொடங்கவில்லை. காங்கிரசுக்குள் தோன்றிய கோஷ்டிப் பூசலில் நான் ஈடுபட்டிருந்த நிலையிலும் காங்கிரஸ் வட்டாரத்தில் என் செல்வாக்கு வளர்ந்து வந்ததன்றி, தேய்ந்து விடவில்லை. தமிழரசுக் கழகத்தைத் தொடங்கிய பின்னரும் காங்கிரசின் பெயரால் சென்னை மாநகராட்சியில் 'ஆல்டர்மேன்' பதவியும், சட்டமன்ற மேலவையில் அங்கத்தினர் பதவியும் பெற்றே னென்பதை இங்கு முன்கூட்டியே நினைப்பூட்ட வேண்டியது அவசியமாகும்.

தமிழ்நாடு காங்கிரஸ் புதிய தமிழகம் படைக்கும் முயற்சியை மேற்கொள்ளாததன் பயனாக, தமிழ்நாட்டின் எல்லைகள் சுருங்கிவிடக் கூடுமோ, தலைநகரான சென்னை பறிபோய் விடுமோ, தமிழகத்தின் உரிமை பறிக்கப்பட்டு விடுமோ என்றஞ்சி, இந்தக் கேடுகளிலிருந்தெல்லாம் தமிழகத்தைக் காக்கத்தான் காங்கிரசிலிருந்து கொண்டே தமிழரசுக் கழகத்தைத் தொடங்கினேன்.

இந்தக் கழகத்தைத் தொடங்குவதனால் நான் காங்கிரசி லிருந்து வெளியேறவோ, வெளியேற்றப்படவோ நேருமென் பதனை அன்று நான் கற்பனை செய்துகூடப் பார்த்ததில்லை. தமிழ்நாடு காங்கிரசின் — குறிப்பாக, முன்னணியிலிருந்த காங்கிரஸ் தலைவர்களின் ஒத்துழைப்புடன் தமிழரசுக் கழகத்தை நடத்திச் செல்ல முடியுமென்றே அப்போது நான் நம்பினேன்.

அதனால்தான் நான் நடத்திய தமிழர் திருநாள் கூட்டத்துக்கும், தமிழரசுக் கழகத் தொடக்க விழாவுக்கும், 'தமிழ் முரசு' பத்திரிகையின் ஆரம்ப விழாவுக்கும் அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த திரு. காமராசரையும் அழைத்துப் பங்கு கொள்ளச் செய்தேன். ஆம்; தமிழினத்தின் தனி நலன்களுக்குத் துரோகம் செய்யும் வகையில் தமிழ்நாடு காங்கிரஸ் பிற்காலத்தில் திசைமாறிச் செல்லுமென்று நான் அப்போது நினைக்கவில்லை.

காங்கிரசாருக்கு அழைப்பு

தமிழரசுக் கழகத்தைத் தொடங்கியதும், அத்துடன் ஒத்துழைக்குமாறு தமிழ்நாடு காங்கிரசுக்கும், காங்கிரஸ்காரர் களுக்கும் வேண்டுகோள் விடுத்தேன். அது வருமாறு:

''தென்னிந்தியாவிலும் மொழிவழி மாநிலக் கோரிக்கை வலுத்து வருகிறது. நான்கு மொழி பேசும் இனத்தவரும் தங்கள் தங்கள் தாயகத்தில் தனியாக நிறுவத் துடிக்கின்றனர். தமிழகத்தைப் பொறுத்த வரையில் 'தமிழருக்கும் தனியரசு வேண்டும்' என்ற கோரிக்கை நாளுக்குநாள் வலுத்து வருகிறது. ஆனால்... தமிழ்நாட்டின் பெரும்பான்மை மக்களின் ஆதரவு பெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இவ்விஷயத்தில் அக்கறை கொள்ளவில்லை.

''தமிழ் மாநிலப் பிரிவினை, தமிழருக்குத் தனியரசு ஆகிய கோரிக்கைகள் காங்கிரசின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணானவை என்று தேசபக்தர் எவரும் சொல்ல முடியாது. மொழிவாரி மாகாணப் பிரிவினை காங்கிரஸ் ஏற்றுக் கொண்ட கொள்கை. இந்தக் கொள்கையை அமுலுக்குக் கொண்டு வருமாறு தமிழர்கள் கேட்பதில் தவறு என்ன இருக்கிறது?

''ஆந்திரமும் கேரளமும், கன்னடமும் பிரிந்துவிட் டால், தமிழ்நாடு தானாகவே தனிநாடாகிவிடும் என்று சிலர் கூறுகின்றனர். அவர்கள் விட்டுப் போகும் அந்தத்

தமிழ்நாட்டில் திருவிதாங்கூர் தமிழ்த் தாலுக்காக்களும் சித்தூர், சென்னை ஆகிய ஜில்லாக்களும் இரா என்பதை இந்த மேதாவிகள் உணருவதில்லை. தமிழ்நாடு தனியாவது மட்டும் போதாது. தமிழருக்கு உரிய நிலத்தில் ஒரு அங்குலம் கூட பிற இனத்தார் பறித்துப் போகவிடக் கூடாது.

''பிரிக்கப்படும் தமிழ்நாட்டில் பூரண சுயாட்சியுள்ள தமிழரசு நிறுவப்பட வேண்டுமென்பதும் காங்கிரஸ் கொள்கைக்கு முரண்பட்டதல்ல.

''நம்மைப் பொறுத்தவரையில் வடக்கே நிலைமை எதுவானாலும், அமையவிருக்கும் தமிழரசு ஒரு சுதந்திர அங்கமாக இந்திய சமஷ்டியில் இணைய வேண்டுமென்றே விரும்புகிறோம். எனவே, தமிழ்நாடு காங்கிரஸ்வாதிகள் தமிழரசுக் கிளர்ச்சியைக் கண்டு அஞ்சவோ, விலகி நிற்கவோ அவசியமில்லை.

''பிற மாகாணங்களில் இன உரிமைக் கிளர்ச்சி காங்கிரசுக்குள்ளேயே உருவெடுக்கிறது. காங்கிரசுக்கு வெளியேயுள்ள பிற கட்சியினரையும் இழுத்து ஒன்றாகப் பிணைக்கிறது. ஆந்திரமும் கேரளமுமே இதற்குத் தக்க சான்று. ஆனால், தமிழகத்தில் மட்டும் காங்கிரஸ் வாதிகளில் பெரும்பாலோர் இன உணர்ச்சி இல்லாதிருக்கக் காரணமென்ன? வஞ்சகமல்ல; வழக்கத்திற்கு அடிமை!

''கடந்த இருபது ஆண்டுகளாக மொழிப்பற்று, இனப்பற்றுகளுக்குப் புறம்பாகத் தமிழ்நாட்டில் தேசியம் வளர்ந்து வந்தது. அந்த வழக்கந்தான் இன்றும் நீடித்து வருகிறது. ஆனால், இனியும் நீடிக்கக் கூடாது; நீடிக்க விடவும் முடியாது.

''தமிழரசுக் கோரிக்கை காங்கிரசுக்கு வெளியே வலுப்பெற்ற பிறகுதான் காங்கிரஸ் கமிட்டி வாழ்த்துக் கூறுமென்றால், அந்த நாளும் வெகு தூரத்திலில்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆனால், அது காங்கிரசுக்கு நல்லதல்ல என்றும் எச்சரிக்கிறோம்.''

தமிழகத்திலே புதிய உணர்ச்சி!

சென்னை நகரில் தமிழரசுக் கழகம் தோன்றிய பின்னர் தமிழகமெங்கணும் கிளைக் கழகங்கள் தோன்றின. முதன் முதலில் கிளைக் கழகத்தைத் தோற்றுவித்த பெருமை, வடஆற்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் நகருக்கே உரிமையாகும். தமிழகத்துக்கு வெளியே ஆந்திர மாவட்டமாகக் கருதப்பட்ட சித்தூர் மாவட்டத்திலும், திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் தென் பகுதியிலும் கிளைக் கழகங்கள் தோன்றின. தமிழரசுக் கழகக் கிளைகளைத் தோற்றுவிப்பதிலே செட்டிநாட்டு இளைஞர்கள் அதிக அளவில் உற்சாகம் காட்டினர்.

தமிழரசுக் கழகம் தோன்றுவதற்கு முன்பு பல்வேறு பெயர்களில் இயங்கித் தமிழ்ப் பணிபுரிந்து வந்த மன்றங்களில் பல தமிழரசுக் கழகத்தின் கிளைகளாக மாறின. எஞ்சியவை தமிழரசுக் கழகத்துடன் தோழமை உணர்ச்சியோடு ஒத்துழைத்தன. முழுநேர ஊழியர்களை நியமித்து அவர்களை மாவட்டந்தோறும் அனுப்பி, கழகக் கிளைகளைப் பெருக்குவதற் கான பணவசதி என் கழகத்துக்கு இல்லையென்றாலும், தமிழின இளைஞர்கள் தாங்களாகவே முன்வந்து கிளைகளைத் தோற்றுவித்தனர். அது எனக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்தது.

1946 நவம்பர் கடைசி வாரம் தொடங்கி, 1947 ஆகஸ்டு முதல் வாரம் வரையுள்ள ஒரு காலகட்டத்திலே தமிழ்நாடு முழுவதிலும் அடிக்கடி சுற்றுலா செய்தேன். ''தமிழரசு'க் கொள்கை பற்றிப் பேசுமாறு என்னை அழைக்காத கல்லூரியோ, தமிழ் மன்றமோ இல்லையென்று சொல்லலாம். இந்தக் கால கட்டத்தில்தான் அப்போது மிகுந்த வலுவோடு இயங்கி வந்த திராவிடர் கழகத்தின் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களையும், பொதுச் செயலாளர் திரு.சி.என். அண்ணா துரையவர்களையும் தற்செயலாகச் சந்தித்து உரையாடும் வாய்ப்பினைப் பெற்றேன்.

சிலப்பதிகாரப் பிரச்சாரத்தில் நான் ஈடுபடத் தொடங்கிய தும் இந்தக் கால கட்டத்தில்தான். தில்லை இளங்கோ மன்றத்தின் அழைப்புக்கிணங்கி அம் மன்றத்தில் 'சிலப்பதிகாரம்' பற்றிப் பேசினேன். சேரமுனி தந்த சிலம்பு பற்றிப் பொதுமக்கள்

மத்தியில் அப்போதுதான் நான் முதன் முதலாகப் பேசினேன். அந்தப் பேச்சு 'தமிழரும் சிலப்பதிகாரமும்' என்னும் பெயரில் நூல் வடிவம் பெற்றுள்ளது. இதுதான் எனது முதல் இலக்கிய வெளியீடாகும். இன்று செல்வாக்குடன் விளங்கும் பதிப்பகமான இன்ப நிலையத்தார் வெளியிட்ட முதல் நூலும் இதுதான்.

அந்நாளில் தமிழகக் கல்லூரிகளிலே எனது கற்பனையிலிருந்த புதிய தமிழகம் பற்றி நான் பேசிக் கேட்பதிலே மாணவர்கள் எல்லையற்ற ஆர்வம் காட்டினர். கலைக் கல்லூரிகள், தொழிற் கல்லூரிகளேயன்றி, தமிழ்க் கல்லூரிகளும் என்னை அழைப்பதில் போட்டியிட்டன. திருவையாறு அரசர் கல்லூரி, கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றாலும் அழைக்கப்பட்டு அங்கெல்லாம் தமிழரசுக் கொள்கைபற்றிப் பேசினேன்.

1946 டிசம்பர் 14,15 தேதிகளில் சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் தமிழ் எழுத்தாளர் மாநாடு நடைபெற்றது. திரு. பெரியசாமித் தூரன் தலைமை வகித்தார். பிரபல எழுத்தாளர் வ.ரா. அவர்கள் வரவேற்புக் குழுத் தலைவராயிருந்து மாநாட்டைச் சிறப்பாக நடத்தி வைத்தார். திரு.டி.எஸ். சொக்கலிங்கம் பிள்ளை, திரு.ஏ.ஜி. வேங்கடாச்சாரி போன்ற காங்கிரஸ்காரர்கள் இம் மாநாட்டின் வரவேற்புக் குழுவிலே இடம் பெற்றிருந்தனர். நானும் அந்தக் குழுவில் அங்கம் பெற்றிருந்தேன். அப்போதுதான் தோன்றியிருந்த தமிழரசுக் கழகம் 'தமிழினமே ஒன்று படு' என்னும் கோஷத்தைத் தனது உயிர்க் கொள்கையாகக் கொண்டிருந்தது. இதனைச் செயல்படுத்த தமிழ் எழுத்தாளர் மாநாட்டை யான் பயன்படுத்த முயன்றேன்.

கவிஞரும் கைகொடுத்தார்!

அப்போது காங்கிரஸ்காரர்களால் வெறுக்கப்பட்டு வந்த தி.க. பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களையும் எழுத்தாளர் மாநாட்டில் பேச வைப்பதற்கு முயற்சி எடுத்தேன். வரவேற்புக் குழுவிலிருந்த காங்கிரஸ் வைதிகர்கள் எனது முயற்சியைக் கடுமையாக எதிர்த்தனர். ஆயினும், கட்சி

வெறுப்புக்கும் அப்பாற்பட்டு இன உணர்ச்சி பெற்றிருந்த எழுத்தாளர் பலர் எனது முயற்சிக்கு ஆதரவு தந்தனர். அண்ணாதுரை அவர்களை நானே நேரில் சென்று அழைத்து வந்து பேசச் செய்தேன். அவர் தமக்கே உரிய பாணியில் நான் விரும்பியபடி தமிழினத்தாரை ஒன்றுபடுத்தும் வகையில் மிகவும் அருமையாகப் பேசினார்.

நான் எழுத்தாளர் மாநாட்டில் கலந்து கொண்டதோடு அதிலே என் கழகத்தின் தமிழரசுக் கொள்கையை ஆதரிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றி வைப்பதிலும் மிகுந்த ஆர்வம் காட்டினேன். கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட எழுத்தாளர் மாநாட்டையும் எனது கொள்கைப் பிரச்சார மேடையாகப் பயன்படுத்த நான் தவறவில்லை. நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளையவர்கள் தமிழ் எழுத்தாளர் மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசினார். அவரது பேச்சிலும் தமிழரசுக் கழகத்தின் புதிய தமிழகக் கொள்கை எதிரொலிக்கும்படி செய்தேன். அதனை இங்கு அப்படியே தருகிறேன்:

''தமிழ்நாடு ஒரு தனி மாகாணமாக வேண்டும். அதில் தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்குமே ஆதிக்கமிருக்க வேண்டும். அன்றியும் திருவிதாங்கூரின் தெற்கிலும் தென் கிழக்கிலும் தமிழர்களே பெருந்தொகையினராக இருக்கிற பகுதிகளையும் தமிழ் மாகாணத்தோடு சேர்க்க வேண்டும்.... தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் மிகுதியாக உள்ள பகுதிகளையெல்லாம் தமிழ் மாகாணத்தோடு சேர்க்க வேண்டுமென்பதுதான் சரியான நியாயமாகும். அந்த முறையில் ஒரு தமிழ் மாகாணத்தை நிறுவி தமிழர்களின் தனி முறையில் கலைகளையும் கல்வியையும் பெருக்கி, தமிழ் அரசு நடத்தி, தமிழர்களுடைய பெருமை களுக்குக் காவல் புரிவோம்.

''தமிழ்நாட்டில் நடக்கப் போகிற தமிழ் மாகாண அரசாட்சி, தமிழை அரசாங்க மொழியாகக் கொண்டு தமிழ் மரபும் தமிழ்ப் பண்பும் தவறாத முறையில் நடத்தப்படுகிற ஒரு ஜனநாயகப் பஞ்சாயத்தாகத்தான் இருக்க வேண்டும்.

''தமிழ்நாடு தனி மாகாணமாகி, தமிழ் மக்கள் தனி அரசு கொண்டு தமிழ் மொழி ஆட்சி புரிய வேண்டுமானால் சேரனும் சோழனும் பாண்டியனும் காட்டிய செந்நெறியில் செல்ல வேண்டும். அப்போதுதான் சேரன் செய்ததுபோல வடநாட்டையும் வணங்க வைக்க முடியும்.''

'தமிழ்ஸ்தான்!'

நாமக்கல் கவிஞரின் தமிழ் எழுத்தாளர் மாநாட்டுத் தொடக்கவுரை தனி நூலாக வெளிவந்துள்ளது. இம் மாநாட்டிலே நான் சிறப்புரையாற்றினேன். அத்துடனன்றி தமிழரசுக் கோரிக்கையை வலியுறுத்தும் தீர்மானம் ஒன்றையும் நான் முன் மொழிந்தேன். திரு. கொ.மோ. ஜனார்த்தனம், பி.ஏ., பி.காம். அவர்கள் என் தீர்மானத்தை வழிமொழிந்தார். ''தமிழ்'' என்றாலே வேப்பங்காயெனக் கருதும் எழுத்தாளர் சிலர், ''எழுத்தாளர் மாநாட்டை அரசியல் மாநாடாக்குவதா?'' என்று ஆட்சேபணை எழுப்பினர். சிலர் சலசலப்பும் செய்தனர். 'தினமணி' துணையாசிரியர் ஏ.ஜி. வேங்கடாச்சாரியார், எனது தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார். ஆயினும், மாநாட்டில் மிகப் பெரும்பாலோர் தீரமானத்துக்கு ஆதரவாக ஆரவாரம் செய்தனர். மாநாட்டுத் தலைவர் பெரியசாமித் தூரன், ஆட்சேபணைகளை நிராகரித்துத் தீர்மானத்தின் மீது வாக்கெடுத்தார். மிகப் பெரும்பாலான வாக்குகளைப் பெற்று என் தீர்மானம் நிறைவேறியது.

எனது தீர்மானத்தில் தமிழகத்தின் அரசியலைத் தயாரிக்கத் தமிழ் இனத்துக்குச் சுய நிர்ணய உரிமை கோரப்பட்டிருந்தது. அதனால், ''தமிழ் ஸ்தான்'' என்னும் விஷமத்தனமான தலைப்பு கொடுத்து எனது தீர்மானத்தை வெளியிட்டது ''தினமணி'' பத்திரிகை. ஆயினும், தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் என் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, தமிழரசுக் கழகத்துக்குப் பெரிதும் வலுத் தருவதாக இருந்தது. இன்று பிரபல கவிஞராக இருக்கும் கண்ணதாசன் அவர்கள் அன்று தமிழ் எழுத்தாளர் மாநாட்டிலே அதிக விளம்பரமில்லாத இளம் எழுத்தாளராகக் கலந்து கொண்டார். மாநாடு முடிந்தபின், புதுக்கோட்டை திரு.க.

நாராயணன் நடத்தி வந்த ''தாய்நாடு'' என்னும் பத்திரிகையில், ''பேனா மன்னர் மாநாடு'' என்னும் தலைப்பிட்டுத் தொடர் கட்டுரை எழுதினார். அக் கட்டுரையிலே தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் நான் பெற்றிருந்த சிறப்பான இடத்தை நன்கு வருணித்து எழுதியிருந்தார். நான் அந்த மாநாட்டிற்குள் நுழைந்தபோதும், சிறப்புரையாற்ற எழுந்தபோதும், தமிழரசுத் தீர்மானத்தை எதிர்த்தவர்களுக்குப் பதிலளித்து வாதத் திறமையுடன் பேசியபோதும் மாநாட்டரங்கில் ஏற்பட்ட மகிழ்ச்சி ஆரவாரங்களை மிகுந்த ஆர்வத்துடன் வருணித்தெழுதினார் கண்ணதாசன்.

தமிழ்நாட்டுக்குத் தகுந்த தலைவன் கிடைத்துவிட்டான் என்ற மனநிறைவோடு தமிழ் எழுத்தாளர் மாநாட்டிலிருந்து தாம் வீடு திரும்பியதாகக் கூட அவர் எழுதியிருந்தார். கவிஞர் கண்ணதாசன் திராவிடர் கழகத்தில் சேருவதற்கு முன்பு தமிழரசுக் கழக வளர்ச்சிக்கு உதவிகரமாக இருந்து வந்தாரென்பதனை இங்கு நன்றியறிதலுடன் குறிப்பிட வேண்டும். அவரது அரசியல் தமிழரசுக் கழகத்தில்தான் ஆரம்பமானது என்பது என் நினைவு.

ஒருமைப்பாட்டில் உறுதி

தமிழரசுக் கழகம் இந்திய விடுதலைப் போரின் பாசறையாகவும் அமையுமென்று நான் கருதியதற்கு மாறாக, கழகம் தொட்டிலில் தவழும் குழவியாக இருந்த பருவத்திலேயே பாரதப் பெருநாடு சுதந்திரத்தை நெருங்கிவிட்டது. ஆம்; பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவிலிருந்து வெளியேறுவதற்குத் தேதியை நிச்சயித்துவிட்டது!

முதலில், பிரிட்டிஷ் அமைச்சரவை வழங்கிய திட்டப்படி முஸ்லிம் லீகின் பாகிஸ்தான் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, ஒன்றுபட்ட இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து வழங்கப்படுவதாக இருந்தது. இந்திய மாநிலங்களுக்கு முழு அளவில் சுயாட்சி வழங்கவும் வழி வகுக்கப்பட்டிருந்தது. பின்னர், முஸ்லிம் லீகின் பாகிஸ்தான் கோரிக்கை பிரிட்டிஷ் ஆட்சியால் ஏற்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக, காங்கிரஸ்

மகாசபையும் நாட்டைப் பிளப்பதற்கு உடன்பட்டு விட்டது. 1947 ஆகஸ்டு 15இல் முழு அளவு சுதந்திரத்தை பாகிஸ்தானுக்கும் எஞ்சிய இந்தியாவுக்கும் வழங்கிவிட்டு, பிரிட்டிஷார் வெளியேறிவிடுவார்கள் என்று அப்போது பிரிட்டிஷ் பிரதமராக இருந்த ஆட்லி அறிக்கை விடுத்தார்.

தேசம் துண்டாடப்பட்டு பாகிஸ்தான் அமைக்கப்படுவதை நான் ஆதரிக்கவில்லை. எனது 'தமிழ் முரசு' பத்திரிகையில் எதிர்ப்புகாட்டி எழுதியிருந்தேன். மாநிலங்களுக்குப் பூரண சுயாட்சி கோரி வருகிறேன் என்றாலும், இந்திய உபகண்டம் பல கூறுகளாகத் துண்டாடப்படுவதை நான் என்றுமே ஆதரித்த தில்லை; இன்றும் ஆதரிக்கவில்லை. மத அடிப்படையில் பாரதம் துண்டாடப்பட்டதனை மகத்தான விபத்தாகவே நான் கருதினேன்.

மாநிலங்களின் உரிமையை வற்புறுத்தும் அதே நேரத்தில், அவை ஒருங்கிணைந்து இந்திய ஒருமைப்பாட்டினைக் காத்து வரவேண்டுமென்பதும் எனது உறுதியான கொள்கை. இந்தக் கொள்கையின் அடிப்படையிலே ''உரிமைக்கு எல்லை வேங்கடம்; உறவுக்கு எல்லை இமயம்'' என்னும் கோஷத்தையும் படைத்து, அதனைத் தமிழரசுக் கழகத்தின் கொள்கையாகவும் செய்தேன்.

இந்தியப் பெருநாட்டின் விடுதலை நாள் நெருங்கிக் கொண்டிருந்தபோது திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள், விடுதலை நாளைத் துக்கநாளாகக் கொண்டாடுமாறு தன் கட்சியினருக்கு அறிக்கை விடுத்தார்.

துக்கநாள் அறிக்கை!

பெரியாரின் அரசியல் — சமூகக் கொள்கைகளில் பல வற்றை நான் ஏற்கவில்லையென்றாலும், அவருடைய புரட்சிகர மான போக்கிலே நான் கவர்ச்சியுடையவன். அது காரணமாக, அவரிடம் பெரு மதிப்பும் வைத்திருப்பவன். ஆயினும், விடுதலை நாளைத் துக்க நாளாகக் கொண்டாடுமாறு தன் கட்சியினருக்கு ஆணையிட்ட அவரது அறிக்கை என் மனத்துக்குப் பெரும் வேதனையளித்தது. எப்படியேனும்

பெரியாரை எனது தமிழரசுக் கொள்கைக்கு ஈர்த்து, தமிழரசுக் கழகத்தையும் திராவிடர் கழகத்தையும் ஒன்றுபடுத்திப் புதியதொரு இயக்கத்தைத் தோற்றுவிக்க முடியுமென்ற ஒரு நப்பாசை அப்பாவித் தனமாக அன்று என் மனத்துள் இருந்து வந்தது. விடுதலை நாள் பற்றிய பெரியாரின் அறிக்கை எனது நம்பிக்கையைத் தகர்த்துவிட்டதாகவே நான் கருதினேன்.

பெரியாரின் அறிக்கை குறித்து அன்று காங்கிரஸ்காரர்கள் கவலைப்படவில்லை. விடுதலை விழாவைக் கொண்டாடு வதற்கான வேலைத் திட்டங்களை வகுப்பதிலே அவர்கள் முனைந்திருந்தனர். சுதந்திர இந்தியாவில் தமிழ்நாட்டு நிலை எத்தகையதாக இருக்குமென்பது பற்றி அவர்கள் சிந்திக்கக்கூட இல்லை.

காங்கிரஸ்காரர்களின் தடிப்பேறிய தேசிய உணர்ச்சி எனக்குப் பிடிக்கவில்லை. இதனால், இருதலைக் கொள்ளியிடை அகப்பட்ட எறும்பு போலானேன். புதிய தமிழகத்தைக் காண்பதென்ற எனது கனவு நனவாகாமற் போகுமோ என்ற அச்சமும் எனக்கேற்பட்டது. நான் விரும்பியிருந்தால், என்னுடைய காங்கிரஸ் சகோதரர்களுடன் சேர்ந்து கொண்டு சுதந்திர இந்தியாவிலே எனது அந்தஸ்தை உயர்த்திக் கொண்டு அதிகாரப் பதவிகளைப் பெறுவதற்கு நானும் முயன்றிருக்கலாம். திரு. காமராசர் இந்த நிலையில்தான் இருந்தார். அவர் அடைந்த முன்னேற்றத்தை நான் அடைவதற்கு, அவருக்கில்லாத தடை எதுவும் எனக்கிருக்கவில்லை. சுதந்திரப் போரில் ஈடுபட்டு 6 முறை சிறை சென்று மரணப் படுக்கையில் சிறையிலிருந்து வெளியேறித் தியாக முத்திரை பெற்றிருந்தேனென்றாலும், எனது மனம் வேறு திசையை நாடியது. திராவிடர் கழகத்தினரையும் வெறுத்து, தமிழ்நாடு காங்கிரசோடும் போக மறுத்து, மூன்றாவது ஒரு முனையில் நான் நிற்கவேண்டியவனானேன். நான் பெற்றிருந்த இலக்கிய அறிவும், இன உணர்ச்சியும் தமிழ்நாடு காங்கிரஸ் வட்டாரத்திலிருந்து பிரித்து என்னைத் தனிமைப்படுத்தி விட்டது. அப்படியே, எனக்கிருந்த தேச பக்தியும் காந்தி பக்தியும் திராவிடர் கழகத்தின் போக்கை முற்றிலும் வெறுக்கும்படி செய்தன.

துக்க நாளுக்கு எதிர்ப்பு!

இப்படிப்பட்ட ஒரு நிலையிலே, ''ஆகஸ்டு 15'' பற்றிய என்னுடைய — யான் படைத்த தமிழரசுக் கழகத்தினுடைய நிலையைத் தெளிவுபடுத்தி, ''தமிழ் முரசு'' (1.8.47) இதழிலே ஒரு தலையங்கம் எழுதினேன். பெரியார் விடுத்த அறிக்கைக்கு மறுப்பாகவே அந்தத் தலையங்கம் அமைந்தது. அதன் சில பகுதிகளை இங்குத் தருகிறேன்:

> *''ஆகஸ்டு 15ந் தேதி தமிழருக்கு துக்க நாள் என்கின்றனர் சிலர். இது தவறு. இரண்டு முனையில் போரிடும் படையினருக்கு ஒரு முனையில் போர் முடியுமானால், அது எப்படித் துக்க நாளாகும்? பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பு முனை, வட இந்தியப் பாசிஸ எதிர்ப்பு முனை ஆகிய இரண்டிலும் தமிழர் வெற்றி கண்டாலொழியத் தமிழகத்துக்குப் பூரண விடுதலை யில்லை. தமிழ் இனத்துக்குப் புது வாழ்வு இல்லை. இது உண்மைதான் என்றாலும், ஏகாதிபத்தியத்தை வெளி யேற்றாத நிலையில் வட இந்திய ஆதிக்கத்தை மட்டும் எதிர்த்துத் தமிழர் போராட்டம் நடத்தினால், அது ஏகாதிபத்தியத்துக்குத் துணை செய்யும். உள்நாட்டுக் குழப்பமாக இருக்குமேயன்றி, தமிழருக்குப் பூரண விடுதலையளிக்கும் சுதந்திர இயக்கமாக இருக்க முடியாது. ஆகவே, தமிழர் பிற இந்திய இனங்களுடன் இணைந்து நின்று முதலில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போர் புரிந்ததோ, அந்தப் போர் முடிந்து வெற்றி கண்ட நாளை விழாக் கொண்டாடுவதோ எப்படித் தவறாயிருக்க முடியும்? ஆகஸ்டு 15ந் தேதி துக்கங் கொண்டாட வேண்டியது இங்கிலாந்தேயொழிய, இந்தியா அல்ல; தமிழகமும் அல்ல என்பதை இந்த நண்பர்களுக்கு நினைவூட்டுகிறோம்!*
>
> *''ஆகஸ்டு 15ந் தேதி கொண்டாட்டத்தில் பங்கு கொண்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போர் புரிந்த தமிழ் வீரர்களுக்கு வாழ்த்துக் கூறி, அவர்களை வணங்குவது தனிப்பட்ட ஒரு கட்சிக்கோ அல்லது மனிதர்களுக்கோ செய்யும் வணக்கமல்ல; தமிழ் இனத்தின் வீரத்துக்குச் செய்யும் வணக்கமாகும்.*

''ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஈடுபட்ட ஒவ்வொரு வீரரும் இனி நாம் நடத்தவிருக்கும் தமிழகத்து விடுதலைப் போருக்கும் பயன்படக் கூடியவர்களே. அவர்கள் தமிழகத்தின் விடுதலையை விரும்பாத வட இந்திய பக்தர்கள் என்று கூறுவதெல்லாம் வெறும் கற்பனை வாதம். காலம் வரும்போது ஏகாதிபத்தியத்தை எதிர்த்த ஒவ்வொரு வீரத் தமிழனும் வட இந்திய ஆதிக்கத்தை எதிர்த்துத் தமிழகத்தில் தமிழரசு நிறுவப் போவதைக் காணலாம்.

''ஆகஸ்டு 15ந் தேதி துக்க நாள் என்போர் விடுதலைக்குப் போரிட்ட தமிழ் வீரர்களின் உணர்ச்சியைப் புண்படுத்துகிறார்கள் என்பது நினைவிலிருக்கட்டும். இந்த விபரீதச் செயலால் தமிழகத்தின் விடுதலையை விரும்பாத விரோதிகளின் முகாமுக்கு அவர்களை விரட்டுகின்றனர் என்றும் எச்சரிக்கிறோம். நேற்றுவரை நிலைமை எதுவானாலும், இனி, தேச பக்தியுள்ள எந்தத் தமிழனையும் தமிழர் இயக்கத்துக்கு விரோதமாகச் செல்லும்படி விட்டுவிடக் கூடாது. அப்படிச் செய்வது தற்கொலைக்கொப்பான தாகும்.

''கடமையைச் செய்த — இனியும் செய்யவிருக்கின்ற வீரர்களின் உணர்ச்சியைப் புண்படுத்தும் விவாதங்களைக் கிளப்பிக் கொண்டிருப்பது தமிழகத்தில் மேலும் மேலும் பிளவுக்கும் சச்சரவுக்கும் வழி செய்வதாகும்.

''சுதந்திரப் போராட்டக் காலத்தில் பிரிட்டிஷாரோடு ஒத்துழைத்தவர்கள் - அவர்களிடம் பட்டங்கள் பெற்றவர் கள் - இன்னும் பட்டங்களைத் துறக்காதவர்கள் ஆகஸ்டு 15-ஐ துக்கநாள் என்று கூறும்போது அதற்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் மதிப்பு தருவதற்கில்லை!''

விடுதலை வீரர்களுக்கு வேண்டுகோள்

விடுதலை நாளைத் துக்க நாளாகக் கொண்டாடுமாறு பெரியார் விடுத்த அறிக்கையின் தவறுகளைத் தயவு தாட்சண்யமின்றிக் கண்டித்தெழுதப்பட்ட அந்தத் தலையங்கத் தில், தமிழ் இன உணர்ச்சியற்றவர்களாய் — தமிழகத்தின் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையற்றவர்களாய் விடுதலை விழாக் கொண்டாட்டத்தில் கருத்து செலுத்திய என் காங்கிரஸ் சகாக்களையும் கடுமையாகக் கண்டித்திருந்தேன். அந்தப் பகுதிகள் வருமாறு:

''ஆகஸ்டு 15ந் தேதியை தமிழர் கொண்டாடுவதன் பொருள் எதுவாக இருக்க வேண்டும்? சுதந்திர இந்தியா வில் சுதந்திரத் தமிழகம் அமைந்து விட்டதென்பதா? இல்லவே இல்லை! பாட்டாளி மக்களின் பசி தீர்க்கும் சோசலிச ஆட்சி கிடைத்துவிட்டதென்பதா? அதுவு மில்லை! பின் எதற்காக நாம் அந்த நாளைக் கொண்டாட வேண்டும்? அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

''முதலாவது, நமது முதற் பகையான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வெளியேற்றி வெற்றி கண்ட நாள்.

''இரண்டாவது, இந்திய சுதந்திரப் போரில் ஈடுபட்டுச் சொல்லொணா இன்னலுற்ற எல்லா வீரர்களுக்கும் தமிழ்நாட்டினர் தலைவணங்கி நன்றி செலுத்த வேண்டிய நன்னாள்!

''தமிழரசுக் கழகத்தைப் பொறுத்தவரையில் நிலைமை இதுதான்; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வெற்றி கண்ட நாள் என்ற வகையிலே ஆகஸ்டு 15-ஐக் கொண்டாடு கிறோம். போர்க்களத்தில் நின்றுதான் கொண்டாடுகிறோம். ஏனெனில், ஆகஸ்டு 15-க்குப் பிறகு, வட இந்தியப் பாசிசத்தை எதிர்த்து நாம் போரிட வேண்டியிருக்கிறது. ஒரு முனையில் முடிந்த போர் மறுமுனையில் துவங்குகிறது. ஆகவே, ஆகஸ்டு 15ந் தேதி நமக்குப் போர் நிறுத்த நாளல்ல; போர்முனையும் போர் முறையும் மாறும் நாள்!

''எனவே, தமிழ் இனத்தவரை — தமிழரசுவாதிகளை வேண்டுகிறேன். ஆகஸ்டு 15ந் தேதி விழாவில் பங்கு கொண்டு வ.உ.சி., திருப்பூர் குமரன் போன்ற வீரத்தியாகிகளுக்கு வணக்கம் செலுத்துங்கள். இன்று நம்மிடையே வாழும் விடுதலை வீரர்களுக்கும் வாழ்த்துக் கூறுங்கள்.

''அதே நேரத்தில் சுதந்திரத் தமிழகத்தை — சோசலிசக் குடியரசை அடைந்தே தீருவோம். அதை எதிர்ப்பவர்கள் எவரானாலும், அவர்களின் எதிர்ப்பை முறியடித்துத் தமிழகத்தில் தமிழரசைக் கண்டே தீருவோம் என்று உறுதி மேற்கொள்ளுங்கள். சுதந்திர இந்தியா வாழ்க!''

''தமிழினமே! ஒன்றுபடு!''

தமிழரசுக் கழகம் பிறந்த நாளிலே ''தமிழினமே ஒன்று படு!'' என்ற ஒற்றுமைக் கோஷத்தையும் எழுப்பினேன். அதைத் தொடர்ந்து சாதி — சமய — கட்சி வேறுபாடின்றித் தமிழ் மக்களையெல்லாம் ஒன்றுபடுத்தும் முயற்சியில் ஈடுபட லானேன்.

1947 ஜனவரித் திங்களில் திருவள்ளுவர் திருநாள் தமிழ் நாடெங்கணும் — குறிப்பாக, அரசு — ஸ்தல ஸ்தாபன — தனியார் கல்வி நிறுவனங்களிலே கொண்டாடப்பட்டது. அப்போதைய காங்கிரஸ் ஆட்சியில் கல்வி அமைச்சராக இருந்த திரு.டி.எஸ். அவினாசிலிங்கம் அவர்களது ஆணையின் பேரிலேயே இந்த விழா கொண்டாடப்பட்டது.

பெரியாரைச் சந்தித்தேன்!

ஜனவரி 26இல் விருதுநகரில் நகரமன்றத்தின் சார்பில் நடைபெறவிருந்த விழாவிற்கு அம்மன்றத் தலைவர் திரு.வி.வி. இராமசாமி அவர்களால் அழைக்கப்பட்டேன். அதற்காகச் சென்னையிலிருந்து திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் நான் சென்று கொண்டிருந்தபோது, அதே வண்டியில் பெரியார் ஈ.வெ.ரா.வும் கோயில்பட்டியில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுவதற்காகச் சென்று கொண்டிருந்தார்.

காலை சுமார் 7 மணிக்கு ரயில் கொடைக்கானல் ரோடில் நின்றபோது நான் எதிர்பாராத வண்ணம் திடீரென்று திருமதி மணியம்மையாருடன் பெரியார் எனது பெட்டிக்கு வந்தார்.

நான்கு இட்டலி, அதற்குத் தேவைப்படும் நெய், சர்க்கரை ஆகியவற்றை ஒரு தட்டில் வைத்துக் கொண்டுவந்து என்னிடம் கொடுத்து, அதை உண்ணுமாறு இனிய வார்த்தைகள் கூறி உபசரித்தார்.

அதுவரை நான் பெரியாரை நேரில் சந்தித்துப் பேசிய தில்லை. என்னைவிட வயதில் பெரியவரான அவர், தாமாகவே வலிய வந்து என்னை உபசரித்தது எனக்கு வியப்பைத் தந்தது. இருவரும் இரண்டு நிமிடம் உரையாடினோம். அவர்,

''ஐயா, 'தமிழ் முரசு'ப் பத்திரிகையில் தாங்கள் எழுதி வருவதையெல்லாம் நான் தொடர்ந்து படித்து வருகிறேன். எங்களைப் போலவே எழுதுகிறீர்கள். அப்படியே பேசுகிறீர் என்றும் கேள்விப்பட்டேன். காங்கிரஸ்காரர்களும் பார்ப்பனர்களும் ஐயாவுக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடும். எங்கள் ஆதரவு தங்களுக்கு எப்போதும் இருக்கும். தாங்கள் தொடர்ந்து அப்படியே எழுதி வாருங்கள்.''

என்று கனிவான குரலில் பணிவன்போடு கூறினார். இது முதல் சந்திப்பாதலால், பெரியாரின் பணிவும் கனிவும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. தனி நபர்களோடு — குறிப்பாக, கருத்து வேறுபாடும் கட்சி வேறுபாடும் உடையவர்களோடு தனிப்பட்ட முறையில் அன்போடு பழகுவதில் அவரைப் போன்றவரை அதுவரை நான் காங்கிரசில் கண்டதேயில்லை. அதனாலும், அவரிடம் நான் கவர்ச்சியடைந்தேன்.

''எங்களைப் போன்றே தாங்கள் எழுதுகிறீர்கள்; பேசுகிறீர்கள்'' என்று அவர் என்னை விமர்சித்தது அவ்வளவு சரியல்ல என்றாலும், அவரை மறுத்துப் பேச மனமின்றி, அவரது உபசாரத்திலே மயங்கிக் கிடந்தேன். ரெயில் கொடை ரோடை விட்டுப் புறப்படத் தொடங்கியதும், பெரியார் என்னிடம் விடைபெற்றுக் கொண்டு தன் பெட்டிக்குப் போய்விட்டார்.

திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் விருதுநகரையடைந்தபோது அங்கு நகரமன்றத் தலைவர் திரு.வி.வி. இராமசாமி அவர்கள் தலைமையில் கூடியிருந்த தமிழன்பர்களால் நான் சிறப்பாக வரவேற்கப்பட்டேன்.

திரு.வி.வி. ராமசாமி, பெரியார் பக்தர் என்பதை நான் அறிவேனாதலால், நான் வந்த ரயிலிலேயே பெரியாரும் வருவதை அவரிடம் கூறினேன். அவர் ஓடோடிச் சென்று

பெரியாருக்கும் மாலையணிவித்து, அவரை ரயிலிலிருந்து இறக்கினார். எல்லோருமாகச் சிறிது நேரம் பிளாட்பாரத்தில் நின்ற வண்ணம் உரையாடினோம்.

அப்போது வி.வி.ஆர்., ''நீங்கள் இருவரும் ஒன்றுபட்டு விட்டால் தமிழ்நாட்டுக்கு நல்ல காலம் வந்துவிடும்'' என்று மிகுந்த உணர்ச்சியோடு கூறினார். பெரியார், ''நாங்கள் ஒன்றாகத்தான் இருக்கிறோம். எங்களுக்குள் கருத்து வேற்றுமையே இல்லை'' என்று கூறினார்.

நான் மிகுந்த பணிவுடன் ''ஐயா கோருவது ஆரியர் — திராவிடர் என்ற நிறவழி அடிப்படையிலான தனித் திராவிட நாடு; நான் கோருவது, மொழிவழி இன அடிப்படையிலான தமிழ் மாநிலம். நமக்குள் கருத்து வேற்றுமை இருக்கத்தானே செய்கிறது?'' என்றேன். பெரியாரை மறுத்துப் பேசவேண்டும் என்ற உணர்வோடு நான் அப்படிக் கூறவில்லை. எனது மாநிலச் சுயாட்சிக் கொள்கையை அவர் ஏற்கும்படி செய்துவிட வேண்டுமென்ற ஆர்வத்தால் கூறினேன்.

பெரியார், சட்டென்று எனக்குப் பதிலளிக்கத் தொடங்கி, ''நமக்குள் கருத்து வேற்றுமையே இல்லை ஐயா. அப்படி இருந்தாலும், அது காலப் போக்கில் சரியாகிவிடும். நாம் ஒன்று சேரத்தான் போகிறோம்'' என்று நம்பிக்கை தோய்ந்த குரலில் கூறினார்.

வள்ளுவர் விழாவில் பிரதிக்கினை

விருதுநகரில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாப் பொதுக்கூட்டத்தில் பதினாயிரத்துக்கும் மேற்பட்ட அளவில் தமிழ் மக்கள் கூடினர். விழா அரசியல் சார்பற்றது என்றாலும், எனது பேச்சில் தமிழரசுக் கொள்கையை விமர்சித்தேன். அன்றும் சரி; இன்றும் சரி; சுயாட்சித் தமிழகம் கோருவதனைக் கட்சிப் பிரச்சினையாக நான் கருதவில்லை. தமிழினத்தின் — ஏன், இந்தியா முழுவதன் தேசியப் பிரச்சினையாகவே கருதுகிறேன். அதனால், விருதுநகரில் நகரமன்றச் சார்பில் நடந்த வள்ளுவர் விழாக் கூட்டத்திலேயும் தமிழகத்தில் தமிழரசு காண்பதில்

எனக்குள்ள உறுதியை வெளிப்படுத்திப் பேசினேன். அந்நாளில் இந்தியா விடுதலை பெற்றிருக்கவில்லை. நான் விருதுநகரில் பேசிய ஜனவரி 26-ஆம் நாள், தேச சுதந்திரக் கோரிக்கையை வலியுறுத்தும் நாளாகவே இந்தியா முழுவதிலும் கொண்டாடப் பட்டது. விருதுநகரில் நான் பேசியதன் ஒரு பகுதி வருமாறு:

''இன்று இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கைத் திருநாள். (திருக்குறளைக் கையிலேந்தி) இந்த நன்னாளில் நான் மேற்கொள்ளும் சபதம் இது:

''ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் இத்தனை நாளும் போல இனியும் இந்திய மக்களுடன் இணைந்து நின்று செயலாற்றுவேன். ஏகாதிபத்தியம் வெளியேறிய பின்னர் சுதந்திர இந்தியாவில் சுயாட்சித் தமிழகத்தைக் காணவே நான் விரும்புகிறேன். இதை எனது பிறப்புரிமையாகவும் நான் கருதுகிறேன்.

''ஒரு வங்காளியோ அல்லது குஜராத்தியோ ஆங்கி லேயனுக்குத்தான் அடிமை. அதுவும், அரசியலில்தான். ஆனால், என் தமிழினத்தவரோ, அரசியல் — மொழி — கலை — பொருளாதாரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் ஆங்கிலயருக்கு மட்டும் அல்லாமல், பிற இந்திய இனங்கள் எல்லாவற்றிற்கும் கூட அடிமைப்பட்டு வாழ்கின்றனர்.

''சரித்திர ரீதியாக ஆராயுமிடத்து, தமிழர் அரசியலில் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டு இரண்டு நூற்றாண்டுகள் ஆயிற்றென்றால், மொழி — நாகரிகம் ஆகியவற்றில் பிற இனத்தவருக்கு அடிமைப்பட்டு பத்து நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. எனவே, தமிழன் என்ற முறையில் தமிழ் நாட்டை வெள்ளை, கறுப்பு ஆகிய எல்லா நிறத்தவரிட மிருந்தும் விடுதலை செய்து சுதந்திரமுள்ள சோசலிசக் குடியரசைத் தமிழகத்திலே அமைத்தே தீருவதென்ற சபதத்தை மேற்கொள்ளுகிறேன்.

''உரிமைபெற்ற தமிழகம் பிற இந்திய இனங்களுடன் சம அந்தஸ்தில் இணைந்து நின்று ஐக்கிய இந்தியாவைக் காண உதவி புரியுமென்று இந்திய மக்களுக்கு உறுதி கூறுகின்றேன்.

''உரிமை பெற்ற தமிழகத்தின் அரசியல் வள்ளுவர் வகுத்த பொருட்பால் வழியிலேயே அமைய வேண்டுமென்று நான் ஆவல் கொள்கிறேன். இதற்காக எவ்விதத் தியாகமும் செய்யப் பின் வாங்கமாட்டேன் என்று திருக்குறளின் மீது ஆணையிட்டுத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.''

(15.2.47 ''தமிழ் முரசு''வில் வெளியானபடி இங்குத் தரப்பட்டுள்ளது)

எனது பேச்சு பொது மக்களால் நன்கு வரவேற்கப்பட்டது. அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த திரு. காமராசர் ஊரான விருதுநகரில் எனது கொள்கை வரவேற்கப் பட்டதிலே யான் பெருமகிழ்ச்சியடைந்தேன்.

மறுநாள் (ஜன.27) விருதுநகர் சன்மார்க்க சங்கத்தார் எனக்கென்றே நடத்திய சிறப்புக் கூட்டத்திலே, ''திருவருட்பா'' பற்றிப் பேசினேன். விருதுநகர் சன்மார்க்க சங்கம் நன்கு வேரூன்றியுள்ள விருட்சம் போன்றதாகும். நகரப் பொது மக்களும் இராமலிங்க சுவாமிகளின் புரட்சிகரமான சீர்திருத்தக் கருத்துகளை ஆதரிப்போராக இருக்கின்றனர். திருவருட்பா விலுள்ள சீர்திருத்தக் கருத்துகளையே விருதுநகர் சன்மார்க்க சங்கக் கூட்டத்தில் விளக்கிப் பேசினேன்.

விருதுநகரிலிருந்து தஞ்சைக்குத் திரும்பினேன். அங்கு ஜனவரி 29-இல் தி.க. பொதுச் செயலாளர் அண்ணாதுரை எழுதிய ''ஓர் இரவு'' நாடகத்துக்குத் தலைமை தாங்கினேன். அண்ணாவின் நாடகத்தை அன்றுதான் முதன் முறையாகப் பார்த்தேன். இதன்மூலம் அண்ணாவுக்கும் எனக்கும் அப்போது தான் உருவாகி வந்த உறவு மேலும் உறுதிப்பட்டது.

நாவலரின் ஆதரவு

மறுநாள் திருவையாறு அரசர் கல்லூரியில் ''மொழியும் வழியும்'' என்பதுபற்றிப் பேசினேன். கல்லூரி மாணவர்கள் அப்போதுதான் யான் தொடங்கியிருந்த தமிழரசு இயக்கத்தில் சேருவதில் தங்களுக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

பிப்ரவரி 9-ஆம் தேதியன்று சென்னை புரசையில் திருவள்ளுவர் திருநாள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. இந்தக் கொண்டாட்டத்திற்கென அமைக்கப்பட்ட விழாக் குழுவுக்கு நான்தான் தலைவனாக இருந்தேன். புரசை எம்.சிடி. சிதம்பரம் செட்டியார் உயர்நிலைப் பள்ளித் திடலில் அமைக்கப்பட்ட அழகிய கொட்டகையிலே விழாவை நடத்தினேன். இந்த விழாவிலும் தமிழரசுக் கொள்கையை வலியுறுத்தும் வகையிலேயே வரவேற்புரை நிகழ்த்தினேன். இங்குதான் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களுடன் எனக்கு நட்பு ஏற்பட்டது. இதற்கு முன்பு இருமுறை எட்டயபுரம் பாரதி விழாவில் அவரைச் சந்தித்திருக்கிறேன். என்றாலும், அவருடன் பேசிப் பழக வாய்ப்புப் பெற்றேனில்லை. புரசை வள்ளுவர் விழாவில் பேசிய நாவலர் பாரதியார், யான் தொடங்கியிருந்த தமிழரசு இயக்கத்துக்கு வெளிப்படையாகவே ஆதரவு காட்டிப் பேசினார். எனது தலைமையைத் தமிழினத்தார் ஏற்க வேண்டுமென்றும் முது பெரும் புலவரான அவர் வேண்டுகோள் விடுத்தார். உணர்ச்சிப் பெருமிதத்தோடு அவர் காட்டிய ஆதரவு எனக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்தது.

இந்த விழாவிலே சுதந்திர இந்தியாவில் சுயாட்சித் தமிழகம் படைக்க வேண்டுமென்ற தமிழரசுக் கழகத்தின் கொள்கையை ஆதரிக்கும் தீர்மானம் ஒருமனதுடன் நிறைவேற்றப்பட்டது.

தமிழரசு இயக்கத்துக்குச் சரியான பின்பலமாக அமைந்த மற்றொரு மாநாட்டையும், நன்றியுணர்வோடு இங்கு நான் குறிப்பிட வேண்டும். அது, சென்னை மாகாணத் தமிழாசிரியர் மாநாடாகும்.

அண்ணாவுடன் ஒரே மேடையில்...

1947 மார்ச்ச 1,2 தேதிகளில் சென்னை செயிண்ட் மேரிஸ் மண்டபத்தில் அந்த மாநாடு நடைபெற்றது. பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை மாநாட்டின் தலைவராக இருந்தார். வரவேற்புக் குழுத் தலைவர் மு.வரதராசனாரும், செயலாளர் பேராசிரியர் அன்பு கணபதியும், என்னையும் அண்ணாவையும் அந்த மாநாட்டில் பேச வைக்க வேண்டுமென்று விரும்பினர். மாநாட்டின் 2வது நாள் நடவடிக்கைகளின் இறுதி நிகழ்ச்சியாக எங்கள் பேச்சு அமைக்கப்பட்டது.

இதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பே நானும் அண்ணாவும் ஒற்றைவாடை தியேட்டரில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டிலே வெவ்வேறு நேரத்தில் விரிவுரையாற்றினோம். என்றாலும், தமிழினத்தின் வருங்கால அரசியல் பற்றி ஒரே மேடையில் பேசுவதற்கான வாய்ப்பு தமிழாசிரியர் மாநாட்டில் தான் எங்களுக்கு முதன் முதலாகக் கிடைத்தது. அதனால், செயிண்ட் மேரீஸ் மண்டபம் கொள்ளாத அளவில் தமிழாசிரியர்களும் பொதுமக்களும் வெள்ளம்போல் குழுமியிருந்தனர். எங்கள் பேச்சைக் கேட்பதற்கென்றே வெளி மாவட்டங்களிலிருந்தெல்லாம் த.அ.க. — தி.க. தோழர்கள் வந்திருந்தனர். நாங்களிருவரும் ஒரே மேடையில் பேசுவது தமிழ் மக்களுக்குப் புதுமையாகத் தோன்றியது.

அப்போது அண்ணா அவர்களும் நானும் பரஸ்பரம் நல்லெண்ணம் காட்டி ஒருவரையொருவர் நெருங்கிக் கொண்டிருந்தது பெரியார் ஈ.வெ.ரா. அவர்களுக்குப் பிடிக்கவில்லை. எங்கள் உறவால் எனது தமிழரசுக் கழகம் வலுப்பெறவும் அவரது திராவிடர் கழகம் வலுவிழக்கவும் நேருமென்று அவர் அஞ்சினார். அவரது அச்சம் நியாயமானதே! தமிழினத்தை ஆக்கவழியில் செலுத்தித் தமிழகத்துக்குப் புது வாழ்வு தரவேண்டுமென்பதிலே தமக்கிருந்த விருப்பம் காரணமாக, பெரியாரின் வெறுப்புக்கும் ஆளாகி, அண்ணா எனக்கு ஆதரவு காட்டி வந்தார்.

''ஓரணாவில் காலணா!''

தமிழாசிரியர் மாநாட்டில் அண்ணாவுக்குப் பின் நான் பேசுவதற்கு ஏற்றவகையில் நிகழ்ச்சி நிரல் அமைக்கப்பட்டிருந் தது. அதனால், முதலில் அண்ணா பேசினார். தாம் சார்ந்திருந்த தி.க.வின் திராவிட நாட்டுக் கொள்கைக்கும் யான் வலியுறுத்தி வந்த தமிழரசுக் கொள்கைக்கும் ஒற்றுமை காணும் வகையில் அவர் பேச்சு அமைந்திருந்தது. உண்மையில் திராவிட நாட்டுக் கோரிக்கைக்கும் எனது தமிழரசுக் கோரிக்கைக்கும் அடிப்படையில் வேற்றுமை இருந்தது. ஆனால், தமது பேச்சுத் திறமை காரணமாக வேற்றுமைகளை மறைத்து ஒற்றுமைக்கான வற்றைக் கற்பித்துப் பேசினார். திராவிட நாட்டுக் கொள்கை யிலே தமிழரசுக் கொள்கையும் அடங்கியிருப்பதாகவும், தமிழரசுக் கொள்கையிலே திராவிட நாட்டுக் கோரிக்கை அடங்குவது சாத்தியமல்ல என்றும் கூறி, அதற்குப் பொருந்தும் வகையில் ஒரு உவமானத்தையும் காட்டினார்! ''ஓரணாவுக்குள் காலணா இருக்கிறது! காலணாவுக்குள் ஓரணா இல்லை; திராவிடத் தனி நாடு கோரிக்கை ஓரணா போன்றது. ம.பொ.சி.யின் தமிழரசுக் கோரிக்கை காலணா போன்றது!'' என்று அண்ணா கூறினார்.

அவரது உவமானம் என்னையும் கவர்ந்தது. ஆனால், உவமேயத்தோடு அது பொருந்தவில்லை என்பதனைப் பின் னால் நான் பேசியபோது எடுத்துக் காட்டினேன். அண்ணாவின் உவமானம், உவமேயத்தோடு மட்டுமின்றி, திராவிடர் கழகத் தோழர்களின் உள்ளத்தோடும் பொருந்தவில்லை என்பதனை அவருக்கு உணர்த்தி வைக்க, அந்த மேடையில் நான் ஒரு யுக்தியைக் கையாண்டேன். பேசுவதற்காக நான் ஒலிபெருக்கி முன் வந்து நின்றதுமே, ''தமிழ்நாடு'' என்று நான் கூற, கூட்டத்திலிருந்தவர்களில் ஒரு சாரார் ''வாழ்க'' என்று ஒலி எழுப்பினர். ''தமிழ் இனம்'' என்று நான் கூற, அதே சாரார் ''வாழ்க'' என்று ஒலி எழுப்பினர். இந்த நேரத்தில் இன்னொரு சாரார், எனக்குப் போட்டியாக ''திராவிட நாடு வாழ்க! திராவிட இனம் வாழ்க!'' என்று ஒலித்தனர். உடனே நான் மேடையில் என் அருகிலிருந்த அண்ணாவைப் பார்த்து ''ஓரணாவில் காலணா

அடங்கவில்லையே!'' என்று சிரித்துக் கொண்டே கூறினேன். அவரும் புன்முறுவல் பூத்தார். பின்னர் திராவிடத் தனி நாட்டுக் கோரிக்கை அனுபவ சாத்தியமற்றது என்பதனைத் தக்க சான்றுகளுடன் விளக்கிக் காட்டி, சுதந்திர இந்தியாவில் மத்தியில் சமஷ்டியும், மாநிலத்தில் சுயாட்சியும் காணத் தமிழரசுக் கழகத்துடன் ஒத்துழைக்குமாறு அண்ணாவுக்கும் திராவிடர் கழகத்தாருக்கும் அழைப்பு விடுத்தேன்.

அண்ணாவும் நானும் பேசத் தொடங்குமுன்பே, தமிழாசிரியர்கள் மாநாடு பல தீர்மானங்களை நிறைவேற்றியது. அவற்றுள் ஒன்று எனது தமிழரசுக் கழகத்தின் சுயாட்சித் தமிழகக் கோரிக்கையை ஆதரிக்கும் தீர்மானமாகும். ஆம்; தமிழாசிரியர் மாநாடு, தனித் திராவிட நாடு கோரும் தி.க. தளபதி அண்ணாவும் பேசுவதற்கு அனுமதித்ததென்றாலும், அவரது கோரிக்கையை அங்கீகரிக்கவில்லை.

அண்ணாவும் நானும் பேசியதோடு தமிழாசிரியர் மாநாடு முடிவுற்றதால், நாங்களிருவரும் மாநாட்டு மேடையிலேயே சிறிது நேரம் உரையாடி மகிழ்வதற்கான வாய்ப்பினைப் பெற்றோம். மேடைப் பேச்சிலே எங்களிடையே ஆழமான கருத்து வேற்றுமை வெளிப்பட்டதென்றாலும், தனிப்பட்ட உரையாடலிலே நாங்கள் பரஸ்பரம் அன்பை வெளிப்படுத்தினோம். இந்தச் சந்திப்பின் விளைவாக எங்களுடைய நட்பு மேலும் வலுப்பெற்றது.

'முரசு' பாதையில் 'திராவிட நாடு'

சுதந்திர நாளைக் கொண்டாடுவது பற்றி எனக்கும் தி.க. தலைவர் பெரியாருக்கும் ஏற்பட்ட கருத்துப் போரிலே, தி.க. பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் என் கருத்தையே ஆதரித்து நின்றார். அதற்காகப் பெரியாரின் பகையையும், பெரியார் பக்தர்களின் கடுமையான எதிர்ப்பையும் தாங்கிக் கொள்ள வேண்டியவரானார். நான் அறிந்து அண்ணா அவர்கள் முதன் முதலாகப் பெரியாரின் கருத்தை வெளிப்படையாக எதிர்த்து எழுதத் தொடங்கியது இந்த நேரத்தில்தான் — அதாவது, பாரதம் சுதந்திரம் பெற்றதைக் கொண்டாடுவது பற்றிய விஷயத்திலேதான்!

சுதந்திர நாள் பற்றித் 'தமிழ் முரசி'ல் நான் என்ன எழுதப் போகிறேன் என்பதை முன்கூட்டியே தெரிந்து கொள்வதற்காகத் தமது நெருங்கிய நண்பரான திரு.சி.வி.எம். அண்ணாமலை அவர்களை என்னிடம் அனுப்பினார் அண்ணா. அந்த நேரத்தில் ''ஆகஸ்டு 15உ'' என்னும் தலைப்பிட்டுத் 'தமிழ் முரசு' 1.8.47 இதழுக்கு நான் எழுதியிருந்த தலையங்கம் அச்சுக் கோக்க அனுப்பப்பட்டிருந்தது. அச்சகத்திலிருந்து அதன் 'புரூப்' ஒன்றை வாங்கி, திரு.சி.வி.எம். அண்ணாமலை அவர்களிடம் கொடுத்தனுப்பினேன்.

'தமிழ் முரசு'த் தலையங்கத்தை ஆதரித்து விரிவான விமர்சனம் எழுதுவது போன்று 'இன்பத் திருநாள்' என்னும் தலைப்பிட்டு சுதந்திர நாளைத் தி.க.வினரும் கொண்டாட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தித் தமது ''திராவிட நாடு'' இதழில் நீண்ட தலையங்கமொன்றை அண்ணா எழுதினார். துக்க நாளாகக் கொண்டாடுமாறு பெரியார் வெளியிட்ட அறிக்கையை வெளிப்படையாகவே வெறுத்தும் மறுத்தும் — ஏன், ஓரளவு கண்டித்தும்கூட கருத்து வெளியிட்டார். அதனை நான் முதன் முதலாகப் படித்தபோது பூரித்துப் போனேன். பெரியாரின் திராவிடர் கழகத்தின் அடித்தளத் தொண்டர்களின் பகைமை வருமென்று தெரிந்தே — வரட்டுமென்று துணிந்தே சுதந்திரத் திருநாள் கொண்டாடுவதை ஆதரித்து அண்ணா எழுதினாரென்று சொல்ல வேண்டும்.

இது காலங்கடந்து ஏற்பட்ட மனமாற்றந்தான் என்றாலும், உண்மை தேசபக்தர்கள் — உத்தமமான தேசியவாதிகள் வரவேற்கத்தக்கதுதானே! ஆனால், என்னைத் தவிர காங்கிரஸ் வட்டாரத்திலே வேறு யாரும் அண்ணாவின் துணிவான மனமாற்றத்தை நல்லெண்ணங் காட்டி வரவேற்கவில்லை. காங்கிரஸ் வட்டாரத்துப் பத்திரிகைகளிலே ஒன்றுகூட அவருக்கு ஆதரவு காட்டி எழுதவில்லை. அவரது மனமாற்றத்தைத் தமிழ்நாடு காங்கிரஸ் அன்று வரவேற்றிருந்தால், அந்த நாளிலேயே திராவிடர் கழகத்தின் போக்கிலும் மகத்தான மாறுதலை ஏற்படுத்தியிருக்கலாம். சுதந்திரம் கிடைத்த வெற்றியிலே மூழ்கிக் கிடந்த காங்கிரஸ்காரர்கள் இதைப்பற்றிச்

சிந்திக்கக் கூட இல்லை. அவரைப் புறக்கணிக்கத்தக்க ஒரு சாதாரண மனிதராகவே அவர்கள் கருதினார்கள். அவர்களுடைய மதிப்பீடு தவறானதென்பதனைக் காலம் காட்டி விட்டது. காங்கிரஸ்காரர்களிடமிருந்து கற்ற இந்த அனுபவத்தின் காரணமாகத் தான் ''மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு'' என்னும் பழமொழி அன்பர் அண்ணாத்துரையைக் கவர்ந்தது போலும்!

பெரியாரின் சந்தேகம்!

சுதந்திர நாளான ஆகஸ்டு 15-ஆம் தேதியன்று காஞ்சிபுரத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்தி அதிலே என்னையும் அண்ணாவையும் பேசவைக்க வேண்டுமென்று அண்ணாவைப் பின்பற்றுவோரில் சிலர் முயன்றனர். நானும் இசைவு தெரிவித் திருந்தேன். ஆனால், திராவிடர் கழகத்தில் அவருக்கு ஏற்பட்ட கடுமையான எதிர்ப்பு காரணமாகவோ என்னவோ, அந்த முயற்சி கைவிடப்பட்டதாகப் பிறகு தெரிந்தது.

நானும் அண்ணாவும் அந்தரங்கத்தில் சதி செய்து திராவிடர் கழகத்தை அழிப்பதற்கு முயற்சிப்பதாகக்கூட அந்தக் கழக வட்டாரத்தில் பலர் ஐயுற்றனர். பெரியாரின் பேச்சிலும் எழுத்திலுங்கூட இந்த ஐயம் எதிரொலித்தது. எனது மனநிலை திராவிடர் கழகத்தைப் பொறுத்தவரையில் எதுவாக இருப்பினும், நான் அறிந்தவரையில் அண்ணா அவர்கள் தாம் சார்ந்திருந்த இயக்கத்திடமும், தாம் ஏற்றிருந்த தலைவரான பெரியாரிடமும் பரிபூரண விசுவாசமுள்ளவராகவே இருந்தாரென்று நான் உறுதியாகச் சொல்லுவேன். ஆம்; எனக்கு அந்த நாளில் காங்கிரசிடமும் காந்தியடிகளிடமும் எத்தகைய விசுவாசமும் பற்றுதலும் இருந்தனவோ, அத்தகைய விசுவாசமும் பற்றுதலும் திராவிடர் கழகத்திடமும் பெரியாரிடமும் அவருக்கு இருந்தன.

ஆயினும், தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு திராவிடர் கழகமும் தமிழரசுக்

கழகமும் ஒன்றுபட்ட ஒரு புதிய இயக்கம் தோன்ற வேண்டும்; அந்த இயக்கம் புதிய தமிழகத்தைப் படைக்க வேண்டும் என்ற சீரிய உணர்வுக்கு அண்ணா அவர்கள் வந்து கொண்டிருந்தார். ''திராவிட நாடு'' இதழில் ''கேள்வி - பதில்'' பகுதியிலே இந்த உணர்வை அடிக்கடி வெளியிடவும் செய்தார். ஒரு வினாவுக்கு விடையளிக்கையில், ''தமிழரசுக் கழகம், தமிழரின் அரசியல் இயக்கம். திராவிடர் கழகம், தமிழரின் சீர்திருத்த இயக்கம்'' என்றுகூடக் கூறியிருந்தார்.

சுதந்திர நாள் கொண்டாடுவது பற்றிப் பெரியாருக்கும் அண்ணாவுக்கும் கருத்து வேற்றுமை ஏற்படுவதற்கு முன்பு, நானும் அண்ணாவும் பலமுறை தனியாகச் சந்தித்து உரையாடி இருக்கிறோம். நாங்கள் சந்திப்பதற்கான வாய்ப்புகளைக் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அடிக்கடி தந்து கொண்டிருந்தார். ஆம்; தமது வீட்டில் அடிக்கடி நடந்த திருமணங்களுக்கும், தன் குழந்தைக்குப் பெயரிடும் சடங்குக்குமாகத் தம் குடும்ப நிகழ்ச்சிகள் பலவற்றுக்குக் கலைவாணர் எங்களிருவரையும் சேர்த்தே அழைத்திருக்கிறார். அப்போதெல்லாம் தமிழ்நாட்டின் அரசியல் நிலைபற்றி நாங்கள் உரையாடியிருக்கிறோம். அப்போதுகூட, பெரியாருக்கும் திராவிடர் கழகத்துக்கும் விசுவாசமற்ற முறையில் அவர் எதையும் சொல்லி என் காதுகள் கேட்டதில்லை.

திராவிடத் தனிநாடு கோரிக்கையை விட்டுவிடுமளவுக்கு அப்போதே அவர் மனம் பக்குப்பட்டிருந்ததென்றாலும், அந்தக் கருத்துக்குப் பெரியாரைக் கொண்டுவரும் வரையில் அவர் காத்திருக்கவே விரும்பினார். நான் சிறிது பொறுமை காட்டினால், பெரியாரிடமும் அத்தகைய மாறுதலைக் காண முடியும் என்றுகூட அவர் நம்பினார்.

1947 ஆகஸ்டு 15இல் சுதந்திரத் திருநாள் பாரதமெங்கணும் கோலாகலமாகக் கொண்டாடப் பெற்றது. பெரியாரைப் போன்று அந்த நாளைத் துக்க நாளாக நான் கருதவில்லை என்றாலும், இந்தியாவின் சுதந்திரத்திலே தமிழகத்தின் சுதந்திரமும் அடங்கி

யிருக்காத நிலைகண்டு உள்ளூர என் மனம் வருந்தத்தான் செய்தது. ஆயினும், சுதந்திர இந்தியாவில் சுயாட்சித் தமிழகத்தைப் படைக்க முடியுமென்ற நம்பிக்கையிருந்ததால் — படைப்பதற்கான இயக்கத்தையும் நான் தோற்றுவித்திருந்ததால் சென்னை நகரிலுள்ள காங்கிரஸ் சகாக்களுடன் சேர்ந்துகொண்டு ஆக.15 சுதந்திர நாளைக் கொண்டாடினேன்.

திரு.வி.க. நிலை!

''தமிழ் முரசு'' 15.8.47-ஆம் தேதி இதழை சுதந்திர நாள் மலராகக் கூடுதலான பக்கங்களுடனும், சிறப்புக் கட்டுரைகளுடனும் வெளியிட்டேன்.

பெரியார் திரு.வி.க. அவர்கள் நாட்டு விடுதலைப் போரில் நீண்ட நெடுங்காலம் பங்கு கொண்டிருந்தார். வாழ்நாள் முழு வதும் இந்திய தேச பக்தராக — அப்பழுக்கற்ற தேசியவாதியாக — காந்தியத் தத்துவத்தின் வியாக்கியான கர்த்தாவாக விளங்கினார். அவர்கூட எனக்கிருந்த மனோநிலையில்தான் சுதந்திர நாளைக் கொண்டாடினார். ''தமிழ் முரசு'' சுதந்திர நாள் மலரிலே ''விடுதலை நாள்'' என்னும் தலைப்பிட்டு திரு.வி.க. எழுதிய கட்டுரையைப் படித்தால், நாடு சுதந்திரம் பெற்ற நாளிலே அந்த மகான் எத்தகைய மனநிலையைக் கொண்டிருந் தாரென்பது புலனாகும். திரு.வி.க.வின் கட்டுரையில் சில பகுதிகள் வருமாறு:

> *''இந்திய விடுதலை நாள் இந்நாள் (15.8.47). இந்நாள் எங்கணும் கொண்டாடப்படுகிறது. விடுதலைக் கொண்டாட்டம் வேண்டாற்பாலதே. கொண்டாட்டத்தின் குறிக்கோள் முழு விடுதலையாயிருத்தல் வேண்டும்.*
>
> *''இந்தியா இப்பொழுது பெற்றது முழு விடுதலையன்று. அஃது ஒருவித விடுதலையே பெற்றது. இதனால் கொண்டாட்டம் முழு விடுதலையைக் குறிக்கொண்டதாயிருத்தல் வேண்டுமென்று கூறுகிறேன்.*
>
> *''பிரிட்டிஷ் ஆட்சியின் அடிப்படை சாம்ராஜ்ஜியம் இப்பொழுது நம்மை விடுத்து அகன்றது. பிரிட்டிஷ் ஆட்சி*

சாம்ராஜ்ஜியம் இன்னும் நம்மை விடுத்து அகலவில்லை. இது சிந்திக்கத்தக்கது.

''இந்தியா ஏறக்குறைய இருநூறு ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இன்றவ்வாட்சி நம்மை விடுத் தகன்றது. நாட்டை எந்த நிலையில் விடுத்து அவ்வாட்சி அகன்றது? நாட்டை நோக்குவோம். யாண்டாயினும் மகிழ்ச்சியுண்டோ?

''உணவுக்கும், உடைக்கும், உறைவிடத்துக்கும் மக்கள் படும்பாடு என்னே! என்னே! அப்பாடு உரைகடந்த நிலையை எய்தியுள்ளது. வகுப்புப் பூசலோ, அந்தோ, சொல்லலும் வேண்டுமோ? கொலையும், கொள்ளையும் கேளாத நாளும் உண்டோ? இவை பாரத மாதாவை இரு கூறிட்டன. அந்தக் கோரக் காட்சி என்று... தொலையுமோ? இன்னோரன்ன கொடுமைகள் யாவும் சாம்ராஜ்ஜியப் பேயின் சேய்கள்.

''சாம்ராஜ்ஜியப் பேயைத் துரத்த வடநாடு முனைதல் ஐயம். அதற்குக் கால்கொண்ட இடம் அந்நாடே. இன்னும் அஃது அப்பேயாட்டத்தைப் பெருக்கவே முனைந்து நிற்கிறது. நாட்டை அரிக்கும் அப்பேயை ஓட்டத் தென்னாடே முனைதல் வேண்டும்.

''தென்னாட்டின் இயற்கை அமைப்பும், அதனால் முகிழ்த்த பண்பும் சாம்ராஜ்ஜியத்துக்கு மாறுபட்டவை; சம தர்மத்துக்கு இயைந்தவை. வடநாட்டு ஆதிக்கத்தால் தென்னாடு தனக்குரிய பண்பையும் மறந்தது. இப்போது அடைந்துள்ள ஒருவித விடுதலை தென்னாட்டின் மறப்பைப் போக்குவதாகும். ஆதலின் தென்னாடு விழித்தெழுந்து தனது கடமையை உணர்ந்து நடப்பதாக.

''இப்போது பெற்ற விடுதலை காரணமாகக் காங்கிரஸ் மறைந்து விடுமென்று எதிர்பார்க்கப்பட்டது. காங்கிரஸ் இப்போது மறையாது என்று தெரிகிறது. வடநாடு

காங்கிரசைச் சாம்ராஜ்ஜிய வழியே ஈர்க்க இயலும். தென்னாடு அதைச் சமதர்ம வழியில் ஈர்க்க முயலல் வேண்டும்.

''தென்னாடு தனித்து நிற்க முயலுகிறதென்று எவரும் கருதலாகாது. அது தன்னைக் காத்து, நாட்டையும் காக்கும். இஃது உண்மை; உறுதி; ஒருதலை.

''முன்னொருகால் வடநாடு சிதறுண்டு வருந்திய போது அதையும் முழு நாட்டையும் பண்படுத்தும் முயற்சி தென்னாட்டிலிருந்து எழுந்தது. அம்முயற்சி மீண்டும் காலத்துக்கேற்ற முறையில் எழுவதாக!

''இதற்குத் தமிழரசுக் கழகமும், 'தமிழ் முரசு'ம் நல்வழி காட்டுமென்னும் உறுதி எனக்குண்டு.

ஆந்திரர் ஆட்சி கவிழ்ந்தது!

விடுதலை நாள் நெருங்கிக் கொண்டிருந்த நேரத்திலே சென்னை மாநிலத்தில் பிரகாசம் அமைச்சரவை கவிழ்க்கப்பட்டது. ஆம்; காங்கிரஸ் அமைச்சரவையைக் காங்கிரஸ்காரர்களே கவிழ்த்தனர். அதனைக் கவிழ்த்த 'பெருமை' அமராவதிச் சிறையில் பிறந்து, திருமலைப் பிள்ளை தெருவில் வளர்ந்து கொண்டிருந்த 'கிளிக்' கோஷ்டியினுடையதாகும். இந்தக் கோஷ்டியால் கவிழ்க்கப்பட்ட முதல் அமைச்சரவை இதுதான். இதனைத் தொடர்ந்து அடுத்தடுத்து இரண்டு அமைச்சரவைகள் கவிழ்க்கப்பட்டன.

ஆந்திரரான பிரகாசம் தமிழினத்துக்கும் சேர்த்து முதலமைச்சரானதை நான் விரும்பவில்லை என்பதனை ஏற்கெனவே கூறியிருக்கிறேன். பிரகாசம் அமைச்சரவை தோன்றுவதற்கு விரும்பியோ விரும்பாமலோ வழிவிட்டது, திரு.காமராசர் தலைமையிலிருந்த தமிழ்நாடு காங்கிரஸ்தான். அதுவே, அந்த அமைச்சரவையைக் கவிழ்ப்பதற்கும் பொறுப்பேற்றது எனக்குப் பிடிக்கவில்லை. 'கிளிக்' கோஷ்டியின் இந்தப் போக்கானது நாடு முழுவதற்கும் கேடு செய்யக்கூடிய நிலையையும் நாளடைவில் தோற்றுவித்துவிடக் கூடுமென்று அன்றே நான் அஞ்சினேன். பிற்கால அனுபவமும் எனது அச்சத்தை மெய்ப்பித்து விட்டது.

தமிழரிலே ஒரு சாராரும், ஆந்திரரிலே பெரும்பாலோரும் பிரகாசம் தலைமை நீடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். அவர்கள் என்னுடையவும் என் தமிழரசுக் கழகத்தினுடையவும் உதவியை எதிர்பார்த்ததனர். ஆனால், இந்தக் கோஷ்டிப் பூசலில் ஈடுபடவோ, எனது கழகத்தை ஈடுபடுத்தவோ விரும் பாதவனாகி, நான் ஒதுங்கிவிட்டேன்.

பிரகாசத்துக்குப் பிறகு திரு. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சென்னை மாநில அரசின் முதல் அமைச்சரானார். 'ஆனார்' என்பதைவிட 'கிளிக்' கோஷ்டியாரால் 'ஆக்கப்பட்டார்' என்பதே பொருந்தும். திரு. ஓமந்தூர் ரெட்டியார், அப்பழுக்கற்ற காந்தியவாதி! ஒழுக்க சீலர்; தாம் ஒழுக்கத்துடன் வாழ்ந்ததோடு ஒழுக்கங்கெட்டவர்களை அரசியலிலிருந்து ஒதுக்குவதற்குப் பாடுபடக் கூடியவராகவும் இருந்தார்.

திரு. பிரகாசம் அப்பட்டமான ஆந்திரர். திரு. ரெட்டியார், தமிழ்நாட்டுத் தெலுங்கர். ஆந்திரரை எதிர்த்த காமராசர் குழுவினரால், சுத்தத் தமிழரை முதல்வராகக் கொண்டு வரமுடியவில்லை. ஏனெனில், தமிழ்நாட்டு எம்.எல்.ஏ.க்களில் தெலுங்கர்கள் கணிசமான அளவில் இருந்தனர். சுத்தத் தமிழரைத் தமிழ்நாட்டு காங்கிரஸ் நிறுத்தினால், தெலுங்கர்களான தமிழ் நாட்டு எம்.எல்.ஏ.க்கள் ஆந்திரரை ஆதரித்துவிடக் கூடுமென்று திரு. காமராசர் குழுவினர் அஞ்சினர். முன்னொருமுறை திரு. பிரகாசத்திற்கெதிராக சுத்தத் தமிழரான திரு.சி.என். முத்துரங்க முதலியாரை நிறுத்தி, தோல்வி கண்டனரல்லவா! ஆம்; தமிழகம் தமிழினத்தார் கையில் இல்லை.

திரு. பிரகாசம் அவர்களிடம் தனிப்பட்ட முறையில் நான் பெருமதிப்பு வைத்திருந்தேன். 'கிளிக்' கோஷ்டியினரால் மிக்க கேவலமான முறையில் அவர் வெளியேற்றப்பட்டதால், அவரிடம் எனக்கு மிகுந்த அனுதாபம் ஏற்பட்டது. ஆயினும், ''மதறாஸ் மனதே'' என்ற கொள்கையுடையவர் என்பதற்காக, அவர் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டதை நானும் வரவேற்க வேண்டியவனானேன். எனது ''தமிழ் முரசு''ப் பத்திரிகையில் வரவேற்றும் எழுதினேன்.

திரு. ஓமந்தூர் ரெட்டியார் முதல்வரானதை நான் ஆதரித்து எழுதினேன். அவரோடு மிக நெருங்கிய முறையில் எனக்குத் தொடர்பு இருந்தது. ஆகஸ்டுக் கிளர்ச்சியின்போது நானும் அவரும் ஒரே சிறையில் இருந்தோம். என்னிடம் அவர் பேரன்பு வைத்திருந்தார். தமது வீட்டு மொழி தெலுங்காயினும் சென்னை நகரம் தமிழகத்துக்கே உரியதென்பதில் உறுதிப்பாடு உடைய வராயிருந்தார். தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கடமலைதான் என்பதிலும் அவர் உறுதியாயிருந்தார். ஆயினும், அப்போதைய சென்னை மாகாணத்தை மொழி அடிப்படையில் திருத்தி யமைக்க வேண்டுமென்ற எனது கோரிக்கையை அவசரப் பிரச்சினையாக அவர் கருதவில்லை. இந்தக் குறையிருப்பினும், அவர் முதலமைச்சரானதை அவருடைய ஒழுக்க வாழ்வு கருதி நான் மிகுந்த மிகழ்ச்சியுடன் வரவேற்றேன்.

சுதந்திர விழாவைக் கொண்டாடுவதிலே ஓமந்தூரார் ஆட்சி மிகுந்த ஆர்வம் காட்டியது. ஆம்; சுதந்திரம் உதயமான போது மாநிலத்தின் முதலமைச்சராக இருக்கும் பெருமை ஓமந்தூராருக் குத்தானே கிட்டியது. அப்போது, மாநில அமைச்சரவைத் தலைவர் 'பிரதமர்' என்ற பெயராலேயே அழைக்கப் பெற்றார். பின்னர்தான் 'பிரதமர்' மறைந்து, 'முதல்வர்' பிறந்தது.

விடுதலை விழா நாளிலே...

சுதந்திரம் நெருங்கிக் கொண்டிருந்த நேரத்திலே சென்னை மாநிலத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி தடைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. அக்கட்சியின் பெருந் தலைவர்கள், மாநிலத்தின் பல்வேறு சிறைச்சாலைகளில் அடைக்கப் பெற்றிருந்தனர். காங்கிரசுக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் அடிப்படைக் கொள்கைகளில் வேற்றுமை இருப்பினும், விடுதலைப் போரின்போது கம்யூனிஸ்டுத் தலைவர்கள் மகத்தான தியாகங்கள் புரிந்துள்ளனர். கொடுந் துன்பங்களை அனுபவித்துள்ளனர். காங்கிரஸ்காரர்களிலே கம்யூனிஸ்டுகளாக இருந்தவர்களை பிரிட்டிஷ் அரசு குறி வைத்துப் பழி வாங்கியது. கம்யூனிஸ்டுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்ச்சியிலோ, சுதந்திர ஆர்வத்திலோ காங்கிரஸ்காரர்களில் எவரும் ஐயம்கொள்ள முடியாது. அப்படிப்பட்டவர்களை காங்கிரஸ் ஆட்சியிலும் சிறைச்சாலைகளில் அடைத்து வைத்து விடுதலை விழாவைக் கொண்டாடுவதென்பது எனக்கு மிகுந்த வருத்தம் தருவதாக இருந்தது. அவர்கள்மீது எத்தகைய குற்றங்கள் இருப்பினும், அவற்றையெல்லாம் மறந்து, சுதந்திர விழாவில் கலந்து இன்புறும் வகையில் அவர்களனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமென்று நான் விரும்பினேன். நான் செல்வாக்குப் பெற்றிருந்த சென்னை மாவட்டக் காங்கிரசிலும் கம்யூனிஸ்டுகளின் விடுதலையைக் கோரும் தீர்மானம் ஒன்றை நானே கொடுத்து, அது நிறைவேறச் செய்தேன்.

சென்னை கடற்கரையில் கம்யூனிஸ்டுகளின் விடுதலையைக் கோரும் பொதுக் கூட்டமொன்று நடைபெறுவதற்கும் ஒத்துழைப்பு தந்தேன். அக்கூட்டத்தில் நானும் பேசினேன். திரு. மோகன் குமாரமங்கலம் அவர்களும் அந்தக் கூட்டத்தில் பேசினார். கம்யூனிஸ்டுப் பிரமுகரான கே.முத்தையா அவர்கள் எனது நெருங்கிய நண்பராவார். அவரது திருமணத்தின் பொருட்டு சிறையிலிருந்து பரோலில் அவரை வெளியே

கொண்டுவர நான் பெரு முயற்சி எடுத்துக் கொண்டேன். அதில் வெற்றியும் கண்டேன். கம்யூனிஸ்டுகளை விடுதலை செய்ய வேண்டுமென்ற முயற்சியில் நான் ஈடுபட்டதற்கு இவரது தூண்டுதலும் ஒரு காரணமாகும்.

ஓமந்தூரார் ஆட்சியில் உள்துறை அமைச்சராக இருந்த டாக்டர் ப.சுப்பராயன் என்பால் மிகுந்த அன்பு கொண்டவர். கம்யூனிஸ்டுகளை விடுதலை செய்ய வேண்டுமென்ற எனது கோரிக்கைக்கு அவர் ஆதரவாகவே இருந்தார். ஆயினும், முதலமைச்சர் ஓமந்தூரார் அவ்வளவு எளிதில் இணங்குபவராக இல்லை. பின்னர், பொதுமக்களின் கருத்துக்கிணங்கி கம்யூனிஸ்டுகளை விடுதலை செய்தார்.

கம்யூனிஸ்டுகளின் விடுதலைக்குப் பின்னர் கடற்கரையில் அவர்களுக்கு நடத்தப்பெற்ற வரவேற்புக் கூட்டத்திலே, தமிழரசுக் கழகம் இனவெறியை வளர்க்கும் இயக்கமென்றும், அதனை அழித்தொழிப்பது கம்யூனிஸ்டுகளின் கடமையென்றும் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் ஒருவர் பேசினார்.

விடுதலை விழாவில் திரு.வி.க., டாக்டர் பி. வரதராசுலு நாயுடு, தோழர் வி. சக்கரை செட்டியார் போன்ற பழம்பெரும் விடுதலை வீரர்களும் கலந்து கொள்ளும்படி செய்ய நான் பெருமுயற்சி எடுத்துக் கொண்டேன். ஆனால், தமிழ்நாடு காங்கிரசின் முன்னணித் தலைவர்கள் எனது முயற்சியை முழுமூச்சுடன் எதிர்த்தனர். அதனால், காங்கிரஸ் கட்சியின் சொந்த விழாவாகவே சுதந்திர விழா நடைபெற்றது. கருத்து வேற்றுமை காரணமாகவோ, முதுமை காரணமாகவோ, காங்கிரசுக்கு வெளியே இருந்த பழம்பெரும் தேசபக்தர்கள் நாடு விடுதலை பெற்ற நாளிலே சரியானபடி போற்றப்படவில்லை. அடியோடு புறக்கணிக்கப்பட்டனர்.

நாடு சுதந்திரம் பெற்ற நன்னாளிலே நான் தமிழ் மாநில காங்கிரசின் பொதுக்குழு உறுப்பினனாகவும், சென்னை மாவட்ட காங்கிரசின் துணைத் தலைவனாகவும் இருந்து வந்தேன். சென்னை நகர அளவில் அமைக்கப்பட்ட சுதந்திர விழாக்

குழுவிலும் இருந்தேன். ஓமந்தூர் ரெட்டியார் தலைமையிலிருந்த காங்கிரஸ் ஆட்சி வகுத்த திட்டத்தைத் தழுவித் தமிழ்நாட்டில் விடுதலை விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நான் பேசாத விழா!

நகர வீதிகளிலே முன்னிரவு நேரத்தில் விழாவின் சிறப்பைப் பார்க்க மக்கள் நெருக்கியடித்துக் கொண்டு சென்ற காட்சியை இன்னமும் என் அகக் கண்களால் காண முடிகின்றது. விடுதலை விழாக் கொண்டாட்டத்திற்கு ஏற்பாடு செய்த காங்கிரஸ் காரர்களோ, வேடிக்கை பார்த்த பொதுமக்களோ விடுதலை பெற்ற இந்தியாவின் வருங்காலம் எப்படியிருக்குமென்பது பற்றியோ, எப்படியிருக்க வேண்டுமென்பது பற்றியோ சிந்திக்க வில்லை.

திருவல்லிக்கேணி கடற்கரையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அப்போது, பெருந்தலைவரான ராஜாஜி மேற்கு வங்கத்தில் ஆளுநர் பொறுப்பிலிருந்தார். சென்னை விழாவில் சென்னை மாநில முதலமைச்சர் ஓமந்தூர் ரெட்டியார், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.காமராசர் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

நான் விழாவில் கலந்துகொண்டு மேடையிலிருந்தேனென் றாலும், பேசவில்லை. பேசக் கூடாதென்பதல்ல. வெள்ளையர் வெளியேறியதோடு, விடுதலைப் போர் முடிந்துவிட்டதென்று நான் நினைக்கவில்லை. போர் முனையும் போர் முறையும் மாறி, விடுதலைப் போர் தொடர்வதாகவே நான் நினைத்தேன். இந்த நினைப்பைத் 'தமிழ் முரசு' வாயிலாகவும் வெளியிட்டிருந்தேன். ஆனால், கடற்கரைக் கூட்டத்தில் எனது கருத்தை வெளியிடும் துணிவு எனக்கு ஏற்படவில்லை. மக்களெல்லாம் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கி மிதக்கும் நேரத்திலே, அவர்கள் விரும்பாத வகையில் என் கருத்தை வெளியிட்டால், அது அபசுரமாகக் கருதப்படுமென்று அஞ்சினேன். ஆனால், மனச்சாட்சிக்கு விரோதமாகக் கும்பலில் கோவிந்தா போடவும் நான் விரும்ப வில்லை. ஆகவே, விடுதலை விழா மேடையிலிருந்த தலைவர்

கள் கேட்டுக் கொண்டும் சாக்கு போக்குச் சொல்லிப் பேச மறுத்துவிட்டேன். சுதந்திர இந்தியாவின் தந்தையான காந்தியடிகளே சுதந்திர விழாவில் கலந்து கொள்ளவில்லை. அதற்குக் காரணம், அவர், நாடு முழு விடுதலை பெறவில்லையென்று கருதியதே என்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

திருவல்லிக்கேணிக் கடற்கரையில் அன்று கூடியது போன்ற மாபெரும் கூட்டத்தை அதற்கு முன்னும் பின்னும் நான் கண்டதே இல்லை. அவ்வளவு பெருங்கூட்டத்தில் — புனிதமான ஒரு தினத்தில் — பேசுவதற்கு உரிமை படைத்த நான் பேசாமல் இருந்தது எனக்கே வருத்தமளித்தது. என்ன செய்வது 'பேச்சு மேடை' என்பது மனச்சாட்சியைப் பலியிடும் பலிபீடமல்லவே!

'தமிழ் முரசு' விடுதலை மலர்

விடுதலை விழாவையொட்டித் தமிழ்நாட்டின் செய்தி இதழ்களும், வார, திங்கள் ஏடுகளும் சிறப்பு மலர்கள் வெளியிட்டன. அவற்றிலே பாஞ்சைப் புரட்சியும், சிவகங்கைப் பாளையக்காரர்கள் போராட்டமும் இடம் பெறவில்லை. தென்பாண்டிச் சீமையிலே கப்பலோட்டிய தமிழர் சிதம்பரம் பிள்ளை நடத்திய ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சி போற்றப் படவில்லை. தேசபக்தி காரணமாக இரண்டு ஆயுள் தண்டனை பெற்ற அந்த மாவீரரின் தியாக வரலாறு திரையிட்டு மறைக்கப்பட்டது.

வழக்கம்போல வேங்கடத்துக்கு வடக்கேயுள்ள பெருந் தலைவர்களின் வரலாறுகள் மட்டும் வரம்பு கடந்த வருணனைகளோடு வெளியிடப் பெற்றன. விடுதலை விழா மேடைகளிலேயும் தமிழ்நாட்டுப் பழம்பெரும் தேச பக்தர்கள் வரலாறு பேசப்படவில்லை. இதையெல்லாம் கண்டும் கேட்டும் என் மனம் வேதனையடைந்தது. என்ன செய்வது? நான் ''இந்தியனா''க மட்டுமல்லாமல், ''தமிழனா''கவும் இருக்கிறேனே!

இந்தப் போக்கு பிற மாநிலங்களிலுள்ள காங்கிரஸ்காரர்களிடம் காணப்படவில்லை. தமிழ்ப் பற்றுக்கும் தமிழர் என்ற

இனவுணர்ச்சிக்கும் புறம்பான போக்கிலே தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் நெடுங்காலமாகத் திட்டமிட்டு வளர்க்கப் பட்டு வந்துள்ளனர்.

சுதந்திர விழாவையொட்டித் ''தமிழ் முரசு'' சிறப்பு மலர் ஒன்றை நானும் வெளியிட்டேன். அதிலே ''சுதந்திரப் போரில் தமிழகம்'' — ''தமிழகத் தலைவர்கள்'' என்னும் தலைப்புகளில் யான் எழுதிய சிறப்புக் கட்டுரைகள் வெளிவந்தன.

''தமிழ் முரசு'' மலரிலே, அமரர்களாகிவிட்ட வ.உ.சி., திருப்பூர் குமரன் ஆகிய தேசபக்தர்களின் உருவப் படங்களை முழுப் பக்க அளவிலே வெளியிட்டேன். கவியரசர் பாரதியார், நாமக்கல் கவிஞர் போன்ற போர்க்களப் புலவர்களின் முகவுருவங்களும், அவர்களுடைய பணிகளைப் பாராட்டும் குறிப்பு களும் 'முரசு' மலரில் இடம் பெற்றன. ராஜாஜி, டாக்டர் வரதர்ாசுலு நாயுடு ஆகிய முதுபெருந் தலைவர்களும் 'முரசு' மலரிலே சிறப்பிக்கப்பட்டனர். முதல்வர் ஓமந்தூர் ரெட்டியார், தமிழ் மாகாண காங்கிரஸ் தலைவர் திரு. காமராசர் ஆகியோரும் சிறப்பிக்கப்பட்டனர்.

விடுதலை நாளைத் துக்க நாளாகக் கொண்டாடுமாறு அறிக்கையிட்ட பெரியார் ஈ.வெ.ரா. ஒரு காலத்தில் விடுதலைப் போரில் பங்கு கொண்டு பாடுபட்ட வரலாற்றையும் எனது கட்டுரையில் விரிவாக விமர்சித்தேன்.

பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் சகோதரர்கள், சிவகங்கைச் சீமையில் மருது சகோதரர்கள் ஆகிய பாளையக்காரர்கள் நடத்திய விடுதலைப் போராட்டங்கள் 'தமிழ் முரசு' மலரில் நன்கு விமர்சிக்கப்பட்டன. சுருங்கச் சொன்னால், 'தமிழ் முரசு' விடுதலை மலரானது இந்திய விடுதலைப் போரிலே தமிழகம் ஆற்றியுள்ள தொண்டை விவரிக்கும் வரலாற்றுச் சாசனமாக அமைந்தது.

இந்திய மக்கள் — ஏன், தமிழக மக்களும் அடியோடு மறந்து விட்ட அன்னிபெசன்ட் அம்மையார், குத்தி கேசவப் பிள்ளை, ஜி. சுப்பிரமணிய ஐயர், வ.வே.சு. ஐயர், தோழர்

சிங்காரவேலு செட்டியார், சுப்பிரமணிய சிவா, பண்டிதை அசலாம்பிகை அம்மையார், சாத்தூர் சுப்பிரமணிய நயினார், சதாவதானம் தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் ஆகியோ ரெல்லாம் ''தமிழ் முரசு'' மலர் ஒன்றில்தான் இடம் பெற முடிந்தது. காங்கிரஸ் வட்டாரத்திலிருந்து பொலிவோடும் வண்ணப் படங்களோடு அதிகப் பக்கங்களோடும் வெளியான சுதந்திர தின மலர்களிலே இவர்களெல்லாம் புறக்கணிக்கப் பட்டனர்.

''தமிழ் முரசு'' மலரிலே காந்தியடிகள், நேதாஜி போன்ற தமிழரல்லாத பெருந்தலைவர்களும் போற்றப்பட்டனர்.

'முரசு' தலையங்கம்

அந்த மலரிலே நான் எழுதிய தலையங்கத்தின் ஒரு பகுதியை இங்குத் தருகிறேன்:

''ஏகாதிபத்திய மென்னும் சிறைக் கோட்டத்திலிருந்து இந்திய மக்கள் இன்று விடுதலை பெறுகின்றனர்.

''இன்று கோடானு கோடி வாய்கள் ''சுதந்திர இந்தியா வாழ்க!'' என்று வாழ்த்துகின்றன. கோடானு கோடிக் கரங்கள் தேசியக் கொடியை ஏந்துகின்றன.

''என்று தணியுமெங்கள் சுதந்திர தாகம்'' என்று ஆண்டாண்டுதோறும் அழுதுவந்த கோடானு கோடிக் கண்களில் இன்று இன்ப ஒளி பிரகாசிக்கக் காண்கிறோம்.

''எந்தப் போலீஸ்காரரின் கரங்கள் வீரத் தொண்டர் களைத் தடிகொண்டு தாக்கினவோ, அந்தக் கரங்களில் இன்று மூவர்ணக் கொடி காட்சியளிக்கக் காண்கிறோம்.

''யூனியன் ஜாக்'' கொடி இறங்கவிடாமல் பார்த்துக் கொள்ள ஏகாதிபத்தியத்தின் காவலராயிருந்த கவர்னர் நை பிரபுவின் கரங்கள் தேசியக் கொடியை ஏற்றிவைக்கக் காண்கின்றோம்.

''யூனியன் ஜாக் கொடி ஏற்றப்பட்டிருந்த சென்னை கோட்டைக் கொடி மரத்தில் நமது தாயின் மணிக்கொடி — இந்திய உபகண்டத்தின் இன்பக் கொடி — சுதந்திரக் காற்றால் ஆடி, பட்டொளி வீசிப் பறக்கக் காண்கிறோம்.

''அந்தோ! இந்தக் காட்சிகளைக் காணும் அதே நேரத்தில் — அதே தேசியக் கொடியின் பட்டொளியில் கடந்த காலத் துன்பக் காட்சிகளும் நம் அகக் கண்களுக்குத் தோன்றத்தான் செய்கின்றன. அருமைத் தமிழ் மக்களே! உங்கள் அகக் கண்களால் காணுங்கள்.

''அதோ, செக்கு இழுக்கின்றாரே அவர் யார்? வீரச் சிதம்பரமன்றோ!

''அதோ இரத்த வெள்ளத்தில் கையில் தேசியக் கொடியுடன் வீழ்ந்து கிடக்கின்றானே இன்னொரு வீரன், அவன் யார்? வீரத்தியாகி திருப்பூர் குமரனன்றோ?

''அதோ தூக்குமேடையில் தொங்குவது பகவத்சிங், சுகதேவர், ராஜகுரு ஆகிய மூன்று இளஞ் சிங்கங்களின் உருவங்களன்றோ?

''அதோ! நம் கண்போன்ற நேத்தாஜி கண்களில் நீர் ததும்பக் காட்சியளிக்கின்றார்! பிறந்த நாட்டுத் தலைவர்களோடு பிணக்கு கொண்டு பிறநாடு சென்றபோதும், தாய்நாட்டு விடுதலைக்குப் போரிட்ட எம் தலைவா! நீவிர் மண்ணில் வாழ்ந்தாலும், அல்லது விண்ணில் கலந்தாலும் எம் கண்ணிலிருந்தும் கவனத்திலிருந்தும் மறைந்ததில்லை.

''வீரத் தியாகிகளே! பாரத அன்னையின் விழுமிய புதல்வர்களே! அடிமை இந்தியாவின் நிலைகண்டு அன்று நீங்கள் அழுதீர்கள்! இன்று உங்களின் பிரிவாற்றாமல் சுதந்திர இந்தியா அழுகின்றது. உங்கள் சேவைக்காக சிரமேல் கரம் கூப்பி வணங்குகிறோம்.

''இனி கடந்தகாலக் கவலையை மறப்போம்! கண்ணீரைத் துடைப்போம்! ஏனெனில், நாம் அழப் பிறந்தவர்களல்ல; ஆளப் பிறந்தவர்கள்! எனவே, வாழ்பவர்களுக்கும் வாழ்த்துக் கூறுவோம்.

''சுதந்திரக் கதிரவனின் ஒளியில் காட்சி தரும் தனித் தலைவர் காந்தியடிகளைக் கைகூப்பித் தொழுவோம்.

''அச்சமிக்க இருட்டறையில் அடைபட்டுக் கிடந்த கோடிக்கணக்கான மக்களுக்குத் தலைமை தாங்கி, சுதந்திரம் என்னும் ஆனந்தப் பெரு வெளிக்கு அழைத்து வந்த அப்பெருமானைத் தலையார வணங்குகின்றோம்; வாயார வாழ்த்துகின்றோம்.

''இன்றைய விடுதலை நாளில் பங்கு கொள்ளும் பேறு பெற்ற தேசிய வீரர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றோம். அவர்கள் அனைவருக்கும் இம்மலரைக் காணிக்கையாக்குகின்றோம்.

''சுதந்திர இந்தியா வாழ்க!

''சுயாட்சித் தமிழகம் தோன்றுக!

''சோசலித் தமிழ்க் குடியரசு மலர்க!''

தமிழரசுக் கழகம், சாதிப் பாகுபாட்டையோ, இன வேறுபாட்டையோ வேலியாக்கிக் கொண்டு சாதிப் பூசலையும் இன வெறியையும் வளர்க்க விரும்பாத அமைப்பாகும். ஆகவே, கழகத்தின் ஏடான ''தமிழ் முரசு'' விடுதலை விழா மலரிலே உண்மையான தேசிய மணம் வீசியது; தமிழ் இன உணர்வும் ஒளிவிட்டது.

''சுதந்திரப் போரில் தமிழகம்'' என்னும் கட்டுரையின் இறுதியிலே, சுதந்திர இந்தியாவிலே, சுயாட்சியுள்ள தமிழகத்தைப் படைக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியிருந்தேன். அது வருமாறு:

''தமிழக மக்களே! ஏகாதிபத்தியச் சிங்கத்தை எதிர்த்தும் போர் புரிந்த மாணவ இளஞ்சிங்கங்களே! சிந்தியுங்கள்! சுதந்திரப் போரில் நாம் காட்டிய வீரமானது வடநாட்டுச் சந்தையில் வாங்கிய சரக்கல்ல. நமது சொந்த நாடாம் தமிழ்நாட்டின் — தமிழ் இனத்தின் பண்டை வீரத்தைக் கொண்டே பாரத நாட்டின் விடுதலையில் பங்கு கொண்டோம். ஏன்? பாரத நாட்டின் விடுதலையில் தமிழ்நாட்டின் விடுதலையும் அடங்கியிருக்கிறதென்று நம்பிய காரணத்தால்!

''வங்கப் பிரிவினையால் வாய்விட்டலறிய வங்காளியர்க்குத் துணை புரிந்தோம்!

''பஞ்சாப் படுகொலையால் பதறியழுத பஞ்சாபியரிடம் பரிவு காட்டினோம். நாகபுரியில் கொடிப் போர் என்றால், நமது தலைவர் ஜார்ஜ் ஜோசப் படை திரட்டிச் சென்றார்.

''அண்ணல் காந்தி சிறைப்பட்டாரென்றால், 'எங்கள் தலைவரைச் சிறைபிடித்த ஏகாதிபத்தியத்தை அழித்தே தீருவோம்!' என்று கொதித்தெழுந்து புரட்சி செய்தோம். காஷ்மீரில் நேரு கைதியானால், கடைகளை அடைத்துக் கண்டனம் தெரிவித்தோம். திலகருக்கும், லஜபதிக்கும் திருநாள் கொண்டாடி வருகிறோம். கஸ்தூரிபாய் காந்தி நினைவு நிதிக்கு லட்சக்கணக்கில் பொருள் கொடுத்தோம்.

''இவற்றில் எந்த நிகழ்ச்சியிலும், எந்தக் காரணத்தைக் கொண்டு நாம் வடநாடு தமிழ்நாடு என்று வேற்றுமை காட்டி விலகி நிற்கவில்லை. ஏன்? நம்மை எந்த ஏகாதிபத்தியம் அடிமை கொண்டதோ — அல்லற்படுத்தியதோ, அதே ஏகாதிபத்தியந்தான் வடநாட்டையும் அடிமை கொண்டது. ஆகவே, அவர்களுக்குற்ற துன்பம் நமக்குற்றதென்றே எண்ணினோம். அதில் தவறில்லை. அதற்காகப் பெருமைப்படுகிறோம். உலக நாடுகளின் சுதந்திரப் பேராட்ட வரலாற்று வழியில்தான் நாமும் சென்றிருக் கிறோம்.

''ஆனால், ஆகஸ்டு 15-ஆம் தேதிக்குப் பின் நிலைமை என்ன? நாம் எந்தத் தமிழகத்தின் விடுதலைக் காகப் போராடினோமோ, அந்தத் தமிழகத்தைத் தனி மாநிலமாக்க வேண்டும். அதில் தனியரசு காணவேண்டும். அந்த அரசு தனியுடைமையற்ற சோஷலிசக் குடியரசாகத் திகழ வேண்டும். இந்த ஆவல் நிறைவேறவில்லையானால், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் நம்மோடு சேர்ந்துழைத்த பிற இனங்கள் நம் உரிமையை அங்கீகரிக்க மறுக்குமானால், அப்போது நமது கடமை என்ன? காங்கிரஸ் கற்றுத் தந்த தாரக மந்திரத்தை — காந்தியடிகள் உபதேசித்த சாத்வீகப் போர் முறையை மேற்கொண்டு நமது உரிமைப் போரைத் தொடர்ந்து நடத்துவோம்.''

('தமிழ் முரசு', 15.8.47)

திருப்பதி மீது 'படையெடுப்பு'!

ஆகஸ்டுப் பதினைந்தாம் நாளன்று சென்னை மாநகரில் விடுதலை விழாக் கொண்டாடி முடிந்ததும், மறுநாள் காலை 12 தோழர்களுடன் வடக்கெல்லையில் சுற்றுலா செய்யப் புறப்பட்டேன். இதுவே வடக்கெல்லை மீட்சிக்கான முதல் முயற்சியாக அமைந்தது. என்னுடன் புறப்பட்ட தமிழரசுக் கழகத் தோழர்களின் பெயர்கள் வருமாறு:

திரு. கொ.மோ. ஜனார்த்தனம், பி.ஏ., பி.காம்.,
'' சோம. சுவாமிநாதன்
'' ஆ. தாமோதரம்
'' சி. வேங்கடசாமி, எம்.ஏ.
'' அ.வை. கிருஷ்ணமூர்த்தி
'' அம்மையப்பன்
'' விசுவநாதன்
'' அ. லூயிஸ்
'' மு. வேணுகோபால்
'' தங்கவேலு
'' டி. ஆறுமுகம்
'' ஜி. சுப்பிரமணியம்

இந்தத் தோழர்களைத் தமிழினத்தார் மறத்தல் கூடாது. இவர்களில் ஒவ்வொருவருடைய பெயரும் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டும். திரு.கொ.மோ. ஜனார்த்தனம் தமிழரசுக் கழகத்தின் செயலாளர் என்ற முறையில் என் பின்வந்த ''தமிழர் படை''யின் தளபதியாக இருந்தார்.

ஆசிரியர் மங்கலங் கிழார்

ஆசிரியர் மங்கலங் கிழார் என்ற சுமார் 55 வயதுடைய பெரியாரின் அழைப்பின் மீதே நாங்கள் வடக்கெல்லையில் சுற்றுலா செய்யப் புறப்பட்டோம். அவர், சிறந்த தமிழறிஞர்.

மனைவியும், மக்களும் உண்டென்றாலும், எனக்கு அவர் அறிமுகமான நாளிலே சொந்த நலன்கள் அனைத்தையும் துறந்து துறவி போன்று வாழ்ந்தார். தமிழர் மறந்துவிட்ட வடக்கெல்லைத் தாலுக்காக்களைத் திரும்பவும் தமிழகத்தோடு இணைக்க வேண்டுமென்பதிலே அவர் மிகவும் உறுதிகொண்டிருந்தார். அதிலே அவர் எனக்கு வழிகாட்டியாகவும் விளங்கினார். தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்கள் தம் இல்லத்திலே ஆசிரியர் கிழாரை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

கிழாரைச் சந்திக்குமுன்பே எனது ‘தமிழ் முரசு’ மாதப் புத்தகத்தில் ‘புதிய தமிழகம்'' எனும் தலைப்பில் நான் எழுதி யிருந்த சிறப்புக் கட்டுரையை — அதிலே தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கடமாகத்தான் அமைய வேண்டும் என்று நான் வலியுறுத்தியிருந்ததை அவர் படித்திருந்தார். அந்தக் கட்டுரை காரணமாகத் தெற்கெல்லைத் தமிழர்களோடு முன்பு எனக்குத் தொடர்பு ஏற்பட்டதுபோல, வடக்கெல்லைத் தமிழர்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த ஆசிரியர் மங்கலங்கிழாரோடும் தொடர்பு ஏற்பட்டது. கிழாரும் நானும் முன்கூட்டியே சந்தித்துப் பேசி, நன்கு சிந்தித்துத் திட்டமிட்டிருந்த படி எனது வடக்கெல்லைச் சுற்றுலா அமைந்தது.

ஆகஸ்டு 16ஆம் தேதி காலை சென்னையிலிருந்து ரெயிலில் புறப்பட்டோம். திருவாலங்காடு ரெயில்வே நிலையத்தில் மங்கலங்கிழாரும், அவ்வூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.டி.எம். திருமலைப் பிள்ளையவர்களும் பெருங் கூட்டத்துடன் பிளாட்பாரத்தில் காத்திருந்து மிகுந்த உற்சாகத்துடன் எங்களை வரவேற்றனர். சைவ சமயப் புலவர்களால் பக்திப் பெருக்குடன் பாடப்பெற்ற திருவாலங்காடும் அந்நாளில் ஆந்திர மாநிலத்தின் பகுதியாகவே இருந்து வந்ததென்பதனை இங்கு நினைவூட்ட வேண்டும். திருவாலங் காட்டில் அரக்கோணத்திலிருந்து தமிழறிஞர் சங்கரன் அவர்கள் தலைமையில் வந்திருந்த மற்றொரு படையும் எங்களுடன் சுற்றுலாவில் கலந்து கொண்டது. இப்படையினர் தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்களாவர்.

திருவாலங்காடு சென்ற நாளன்று மாலை அந்தச் சின்னஞ்சிறு கிராமத்தில் எல்லைக் கிளர்ச்சியின் ஆரம்பக் கூட்டத்தை நடத்தினோம். இவ்வூர் நூற்றுக்கு நூறு தமிழ் மக்களே வாழும் பகுதியாதலால், எங்கள் பிரச்சாரத்துக்கு இடையூறு செய்வார் எவருமில்லை. முதல் கூட்டம் வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

மறுநாள் காலை திருவாலங்காட்டிலிருந்து புறப்பட்டு 6 கல் தொலைவிலுள்ள கனகம்ம சத்திரம் நோக்கிப் பயணமானோம். ஆலங்காடு தொடங்கி கனகம்ம சத்திரம்வரை வழி படுமோசமாக இருந்தது. வண்டிப் பாதையே இல்லையென்று சொல்லத்தக்க நிலையில் இருந்தது. என்னை ஒரு மாட்டு வண்டியில் அமர்த்திவிட்டு, என் படையிலிருந்த மற்றவரெல்லாம் பின் தொடர்ந்து வந்தனர். கூழாங்கற்கள் நிறைந்த படுமோசமான பாதையிலே மாட்டு வண்டியில் போவதைவிட, நடந்து செல்வதே என் உடல்நலத்துக்கு ஏற்றதாக இருந்தது. ஆனால், அந்நாளில் சில பர்லாங்கு தூரம்கூட நடப்பதற்குச் சக்தியற்ற நிலையில் என் உடல் பலவீனமாயிருந்தது. வேறு வழியின்றிச் சிறிது தூரத்தை மாட்டு வண்டியிலும், மற்ற தூரத்தை நடந்தும் கடந்து கனகம்ம சத்திரத்தையடைந்தேன்.

அங்கே ஒரு சத்திரத்துக்குள் முற்பகலில் கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. கூட்டம் தொடங்கி இரண்டொருவர் பேசி முடித்த பிறகு நான் பேசுவதற்கு முன் சத்திரத்துக்கு வெளியே ஒரு பெருங்கூட்டம் திரண்டு எங்களுக்கு எதிராகக் கோஷமிட்டது! சத்திரத்தை விட்டு நான் வெளியே வந்தவுடன் என்னை அடித்துக் கொல்லப் போவதாகவும் அந்தக் கூட்டத்தில் சிலர் பயமுறுத்திக் கொண்டிருந்தனர். இப்படி எதிர்ப்புக் கூச்சலிட்டவர்கள் ஆந்திரர்களல்லர், தெலுங்கர்கள்! ஆனால், நீண்ட நெடுங்காலமாக ஆந்திரப் பிரதேசத்துடன் தொடர்பு கொண்டிருந்தமையால், நாட்டால் ஆந்திரராக உள்ளவர்களுக்கும், வீட்டு மொழியால் தெலுங்கர்களாக உள்ளவர்களுக்கும் இடையே வேற்றுமை உண்டென்பதனை அவர்கள் மறந்தே விட்டனர்!

கூட்டம் முடிந்து நாங்கள் வெளியே வந்து திருத்தணி செல்வதற்கு பஸ்ஸில் ஏற முயன்றோம். அதில் ஏறவிடாமல் ஒரு சில கயவர்கள் எங்களிடம் போக்கிரித்தனம் செய்தனர். ஆனால், உள்ளூர் தமிழர் உதவியுடன் அவர்களை ஒருவிதமாகச் சமாளித்துக் கொண்டு பஸ்ஸில் ஏறித் தணிகை போய்ச் சேர்ந்தோம்.

தணிகையில் கலவரம்

திருத்தணிகையை அடைந்து தெருக்களில் நடைபோட்ட போது, அங்கே நாங்கள் கண்டதும் கேட்டதும் எங்களுக்கு உற்சாகம் தருபவையாக இல்லை. நூற்றுக்கணக்கான கடைகள் தணிகையிலே இருந்தும் ஒரு கடையில்கூடப் பெயர் பலகை தமிழிலே எழுதப்பட்டிருக்கவில்லை. எல்லாம் தெலுங்கு மயமாக இருந்தன.

தணிகை மக்களில் அநேகமாக எல்லோருமே தெலுங்கு மொழியே பேசக் கேட்டேன். தணிகையில் தமிழ்த் தெய்வம் முருகன் கோயில் இருப்பதால் அந்த ஊரில் தமிழே மிகுதியாக வழங்கப்படும் என்று நம்பிச் சென்ற எனக்கு, காண்பதெல்லாம் — கேட்பதெல்லாம் தெலுங்காக இருந்ததால் மிகுந்த ஏமாற்றம் ஏற்பட்டது. இதற்கு முன்னர் இருமுறை ஆடிக் கிருத்திகையின் போது நான் முருக பக்தனாக தணிகை சென்றதுண்டு. ஒன்றிரு நாட்கள் அங்கு தங்கியிருந்ததும் உண்டு. அப்பொழுதெல்லாம் கிருத்திகை விழா காரணமாகத் தமிழ்நாட்டு மக்கள் திரண்டிருந் தனராதலால், தணிகைப் பதி மக்களைத் தனியாகப் பிரித்துப் பார்க்க எனக்கு வாய்ப்பில்லை.

தமிழ் இலக்கியங்களிலே தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கட மலைதான் என்று நான் படித்திருந்ததால் வேங்கடத் துக்குத் தெற்கேயுள்ள ஊர்களில் தமிழே வழங்கி வருவதாக நம்பியிருந்தேன். அந்த நம்பிக்கை தணிகைக்குள் புகுந்த ஒரு மணி நேரத்திலேயே தகர்ந்து போய்விட்டது.

மாலையில் பொதுக்கூட்டத்தில் பேசுவதற்கு முன்னர் ஆசிரியர் மங்கலங்கிழாருடன் சிறிது விரிவாக உரையாடி,

தணிகையம்பதி வாழ் மக்களின் நிலைபற்றி அறிய முயன்றேன். சித்தூர் நகரவாசியும் வழக்கறிஞருமான திரு.எஸ். அரங்கநாத முதலியார் அவர்களும் தணிகையில் என்னைச் சந்தித்துப் பேசவும் சுற்றுலாவில் என்னுடன் கலந்துகொள்ளவும் வந்திருந்தார்.

வடக்கெல்லையில் வாழும் மக்கள் நிலைபற்றி நான் அறிந்து கொள்ள அவரும் எனக்கு உதவி புரிந்தார். அவர்களிடம் பேசிய பிறகும் ஓரளவுதான் வடக்கெல்லை மக்களைப் பற்றி என்னால் அறிய முடிந்தது. அதைக் கொண்டு திருத்தணித் தாலுக்காவையேனும் மீட்க முடியுமென்ற நம்பிக்கை எனக்கேற் படவில்லை. எப்படியோ ஒருவிதமாக மனதைச் சரிப்படுத்திக் கொண்டு மாலையில் பொதுக் கூட்டத்தில் பேசினேன். நான் பேசிய கூட்டத்தில் தெலுங்கரில் சிலர் குழப்பம் செய்தனர்.

விநாயகத்தைக் கண்டேன்

குழப்பவாதிகளால் கலைக்க முடியாத கூட்டத்தை மழை வந்து கலைத்தது. தணிகையில் சத்திரங்கள் நிறைய உண்டு. ஆதலால், ஏதேனுமொரு சத்திரத்துக்குக் கூட்டத்தை மாற்ற முயன்றேன். தணிகை மக்களை நன்கு அறிந்து வைத்திருந்த ஆசிரியர் மலங்கிழார் ஒரு சத்திரத்தைப் பெற முயன்றார். ஆனால், தெலுங்கர்களுக்குப் பயந்து தமிழிரில் எவரும் எங்களுக்குச் சத்திரம் தர அஞ்சினர். அச்சமயத்தில் ஒரு இளைஞர் என்முன் தோன்றி, எதிரிலிருந்த சத்திரத்தைக் காட்டி, ''இது வன்னியர் சத்திரம். என்னுடைய சாதியாருடையது. இங்கே கூட்டம் நடத்துங்கள். இங்கும் தெலுங்கர் வந்து குழப்பம் செய்தால், அவர்களை நான் பார்த்துக் கொள்கிறேன்!'' என்றார்.

அந்த இளைஞரின் கம்பீரத் தோற்றமும் துணிவான மொழியும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. அவர் பட்டதாரி என்று அறிந்ததும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர் பெயர் திரு.கே. விநாயகம், எம்.ஏ., வியப்பென்னவென்றால், அவரும் என்னுடன் தெலுங்கில் பேசியதுதான்! 'நாயகர்' என்னும் சாதிப் பெயருடைய சுத்தத் தமிழரான அவர், ''விநாயக ரெட்டி'' என்றுதான் எனக்கு அறிமுகப்படுத்தப் பட்டார்.

வடக்கெல்லையிலே நாயகர், முதலியார் ஆகிய சாதியா ரெல்லாம் 'ரெட்டி'களாக மாற்றப்பட்டிருந்தனர்.

வன்னியர் சத்திரத்தில் மிகச் சிறப்பாகக் கூட்டம் நடந்தது. தெலுங்கர் சிலர் என்னை அவமதிக்க முயன்றதால் தணிகை யிலுள்ள தமிழர்களுக்கு இன உணர்ச்சி கிளர்ந்தது. அந்த உணர்ச்சியால் சத்திரம் கொள்ளாத அளவுக்கு மக்கள் திரண்டு விட்டனர் — குறிப்பாக, இளைஞர்கள் உணர்ச்சியின் வடிவங் களாகத் திகழ்ந்தனர்.

கலகத்தின் மத்தியிலே எனக்கு நண்பரான திரு. கே. விநாயகம், கூட்டத்தில் பேசத் தனக்கும் வாய்ப்பு தருமாறு என்னைக் கேட்டுக் கொண்டார். நானும் அனுமதித்தேன். ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகிய மும்மொழிகளும் கலந்த பன்மொழியில் அவர் பேசினார். ஆனாலும், உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார். இறுதியில் சுமார் ஒரு மணி நேரம் நான் பேசினேன்.

எனது பேச்சில் தணிகைத் தமிழர்கள் தங்களுக்குள் தெலுங்கில் பேசுவதை விட்டு, தாய் மொழியான தமிழிலேயே பேசவேண்டும் என்றும், கடைகளின் பெயர்ப் பலகைகளைத் தமிழில் எழுத வேண்டுமென்றும், பள்ளிகளில் தமிழில் கல்வி தருமாறு அரசினரை வற்புறுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன். பின்னர், கூட்டத்திலிருந்த இளைஞர்களின் கோரிக்கைக் கிணங்க, வன்னியர் சத்திரத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு, தணிகைத் தெருக்களைச் சுற்றினோம். ''தணிகை தமிழருக்கே'' என்று ஊர்வலத்தினரைக் கோஷிக்கச் செய்தேன்.

தணிகைத் தெலுங்கரில் சிலர் அறியாமையால் செய்த கலவரத்தால் சுத்தத் தமிழர்களுக்குத் 'தமிழர்' என்ற இன உணர்ச்சி பிறந்து, எல்லைக் கிளர்ச்சி சூடுபிடித்தது. தெலுங்கு பேசி வந்த தமிழர் நாவுகளிலே தமிழ் குடிபுகுந்தது.

மறுநாள் காலை என் படையினரும் நானும் தணிகையி லிருந்து பஸ்ஸில் புறப்பட்டு நகரி (புதுப்பேட்டை) அடைந்தோம். அங்கு, திரு. வரதப்ப முதலியார் எங்களுக்கு

மிகச் சிறப்பான முறையில் வரவேற்பு தந்தார். திரு. சுவாமிநாத முதலியார் என்பவர் அளித்த சுவைமிக்க பகல் விருந்தை அருந்தியபின், உண்ட களைப்பு ஆறுவதற்கு முன்பே ஊர்வலம் சென்றோம். நகரியில் தமிழ் பேசும் மக்களே மிகுதி என்றாலும், ஆந்திர உணர்வுடைய தெலுங்கர்கள் கட்டுப்பாடுடைய சிறுபான்மையினராகக் காணப்பட்டனர்.

அப்போதைய சென்னை மாநிலச் சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு.கே. வரதாச்சாரியார் என்ற தெலுங்கரின் சகோதரியார் ஒரு சிறு கூட்டத்தினரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு எங்கள் ஊர்வலத்தைத் தொடர்ந்து ஒரு போட்டி ஊர்வலம் நடத்தினார்.

அந்தக் கலக ஊர்வலத்தினர், 'எங்களுக்குத் தமிழ் நாடும் வேண்டாம்; ஆந்திராவும் வேண்டாம். ''சித்தூர் சித்தூர்க்காரர் களுக்கே'' என்று தமிழில் கோஷித்தனர். தமிழ் மக்களை மயக்குவதற்கே இவ்வாறு கோஷமிட்டனர்.

மாயமான் மங்கை!

எங்கள் ஊர்வலம் சிவ சக்திவேல் கொட்டகையை அடைந்து பொதுக் கூட்டமாக மாறியது. 40 வயதுடைய பெண்ணின் தலைமையில் வந்த போட்டி ஊர்வலத்தினர், அந்தக் கொட்டகைக்குள்ளும் புகுந்து, குழப்பம் செய்து கூட்டத்தைக் கலைக்க முயன்றனர். புத்துணர்ச்சி பெற்றுவிட்ட புதுப்பேட்டைத் தமிழர்கள், அவர்களுக்குத் தக்க புத்தி புகட்டிக் கூட்டம் வெற்றிகரமாக நடைபெற உதவி புரிந்தனர். கொட்டகைக்குள்ளும் கலகக்காரர்கள் ''சித்தூர் சித்தூர்க்காரர் களுக்கே'' என்று கோஷித்தனர். அவர்களுக்கு எனது பேச்சில் நான் அளித்த பதில் வருமாறு:

''சித்தூர் மாவட்டம் சித்தூர்க்காரர்களுக்குத்தான் ஆகும். அதை யாரும் அபகரிக்க முடியாது. ஆனால், அந்தப் பகுதியை எந்த நாட்டோடு சேர்த்துப் பட்டா செய்வது என்பதுதான் இன்றைய பிரச்சினை. தமிழ்நாட்டுடன் சேர்க்கப்பட்டால் இங்குள்ள யாரும்

வெளியேற்றப்பட மாட்டார்கள். ஆந்திரர்கள் கூட இங்கே இருந்து வாழவும், அவர்கள் தங்கள் தாய் மொழியான தெலுங்கைக் கற்கவும் தடை இருக்காது. சித்தூர் தமிழர்கள் — தெலுங்கு பேசும் தமிழர்களுட்பட — தமிழகத்தோடு சேர உறுதி கொண்டு விட்டனர். இதை எத்தனை கூனிகள் தோன்றினாலும் தடுக்க முடியாது. சித்தூர் ஜில்லா தமிழ்த் தாலுக்காக்களை ஆந்திரர்களுக்கு அடிமைப்படுத்த விரும்புபவர்கள்தான் ''சித்தூர் சித்தூர்க் காரர்களுக்கே'' என்று கூச்சலிடுகின்றனர். தமிழரைத் தமிழ்நாட்டின் பாதுகாப்பிலிருந்து பிரிப்பதற்காகச் செய்யும் இந்த பொய்மான் போன்றவர்களின் கோஷங்களில் ஏமாறாமல் வடக்கெல்லைத் தமிழர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.''

('தமிழ் முரசு', 15.9.47 இதழில் வெளியானது)

நகரிக் கூட்டத்தை முடித்துக் கொண்டு புத்தூர் சென்றோம். அவ்வூரின் எல்லையிலேயே திரு. துரைசாமி முதலியார் தலைமையில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் காத்திருந்து என்னையும் என்னுடன் வந்த ஆயுதமில்லாத படை வீரர்களையும் உற்சாகத்துடன் வரவேற்று, மேள தாளத்துடன் வாழ்த்தொலி யெழுப்பி, ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

மனமொடிந்து வந்தேன்!

ஊர்வலத்தின் முடிவில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் கீழ்வருமாறு பேசினேன்:

''புத்தூருக்குத் தனிப் புகழ் உண்டு. ஒடிந்த எலும்பை ஒன்றுகூடச் செய்யும் ஒப்பற்ற வைத்தியரைப் படைத்ததே அப்பெருமை. பெரிய பெரிய சர்ஜன்களும் கைவிட்டவர் களையெல்லாம் கைகொடுத்துக் காப்பாற்றி வருபவர் இங்குள்ள பச்சிலை மருத்துவர்.

''நான் கையொடிந்து வரவில்லை. மனமொடிந்து ஓடிவந்தேன். திருப்பதி மலை திரும்பாது என்று தமிழகத் தின் அரசியல் சர்ஜன்கள் பலர் கைவிட்டு விட்டனர். புத்தூர்

மக்களே! உங்கள் ஒத்துழைப்பு என்ற பச்சிலை மருத்துவத்தால் ஒடிந்த என் உள்ளத்தை உருவாக்குங்கள். தமிழகத்திலிருந்து சிதைக்கப்பட்ட சித்தூர் ஜில்லாவின் தமிழ்த் தாலுக்காக்களைச் சேர்த்து ஒரு புதிய தமிழகத்தை உருவாக்க உதவி புரியுங்கள்.

''ஆந்திரர்கள், தெலுங்கு பேசும் தமிழரைக் கொண்டு திருப்பதியைப் பறிக்கத் திட்டமிட்டு விட்டனர். குரங்கொன்று கடலைக்காய் தின்ன விரும்பியது. பச்சைக் காய்களை நெருப்பிலிட்டு வேக வைத்தது. ஆனால், எடுக்கப் பயந்தது, கை சுடுமென்ற காரணத்தால்! அருகே சென்ற பூனையைக் கூப்பிட்டுக் காய்களை எடுக்கும்படி கனிவுடன் வேண்டியது. 'கை சுடுமே' என்றது பூனை. 'நானும் உன் கையைப் பிடித்துத் துணை செய்கிறேன். சுட்ட காயை எடுத்ததும் பங்கிட்டுக் கொள்ளலாம்' என்றது குரங்கு. பூனை காய்களை எடுக்க முயன்றது. கை சுட்டபோதும் குரங்கு விடாது அழுத்த கடலைக்காய்கள் அனைத்தையும் பூனை வெளியே எடுத்தது. ஆனால், அத்தனை காய்களையும் குரங்கே அபகரித்துச் சென்று விட்டது. பூனைக்கோ ஏமாற்றம்தான். ்கைகள் கூடுபட்டதைத் தவிர காய்கள் கிடைக்கவில்லை.

''ஆந்திரர் கதையும் அப்படித்தான் இருக்கிறது. சென்னையும் சித்தூரும் ஆந்திரருக்கே என்ற கோரிக்கையை ஆராய்ச்சியின்றிக் கிளப்பிவிட்டனர். பின்னர் கோரிக்கை வெற்றி பெறத் தெலுங்கரின் துணையைக் கோருகின்றனர். ''நீங்களும் ஆந்திரர்களே'' என்று ஆசை மொழி கூறுகின்றனர். இதெல்லாம் கோரிக்கை நிறைவேறும் வரைதான். குரங்கு காயைப் பெற்ற பின்னர் பூனையை ஏமாற்றியது போன்று, நமது ஆந்திர ஆதிக்கவாதிகள் தமிழ் நிலத்தைக் கொள்ளை கொண்ட பிறகு, ஆந்திரர் வேறு, தெலுங்கர் வேறு — அதாவது, அரவ ஆந்திரவாடு, அசல் ஆந்திரவாடு என்று பேதம் பிரித்துப் பேசி பங்கு கொடுக்க மறுப்பார்கள். இதைச் சென்னையிலுள்ள தெலுங்கர்களிடம் செய்து காட்டியும் இருக்கிறார்கள்.

''எனவே, வீட்டில் தெலுங்கு பேசினாலும் இங்குள்ள தெலுங்கர் இதர தமிழருடன் சேர்ந்து தங்கள் தாயகமாம் தமிழகத்தின் எல்லையைக் காக்க முயலவேண்டும்.''

('தமிழ் முரசு' 15.9.47 இதழில் வெளியானது)

ஆகஸ்டுப் பத்தொன்பதாம் நாளில் புத்தூரிலிருந்து ரெயிலில் திருப்பதி போய்ச் சேர்ந்தோம். அங்கு ரெயிலடியில் திருப்பதிக் கீழ்த்திசை வேங்கடேசுவரர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் நாராயணசாமி நாயுடுவும், மற்றும் அக் கல்லூரியில் தமிழ் பயிலும் மாணவர் சிலரும் எங்களை வரவேற்றனர். வியப்பென்னவென்றால், எங்களை வரவேற்ற பேராசிரியர வர்கள் ஊருக்குள் நுழைய வேண்டாம் என்று எனக்கு ஆலோசனை கூறியதாகும். ''ரெயில் நிலையத்திலேயே தங்கி, அடுத்த ரயிலில் சென்னைக்குத் திரும்பி விடுங்கள்'' என்று பேராசிரியர் நாயுடு என்னை வேண்டிக் கொண்டார். இதனை அவர் வெறுப்போடு அல்லாமல், மிகுந்த வேதனையோடுதான் கூறினார்.

'திரும்பிப் போ!'

ஒரு தமிழ்ப் படையுடன் நான் திருப்பதி வருவதறிந்த தெலுங்கு இளைஞர் சிலர், எனக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திக் கலகம் செய்யத் திட்டமிட்டிருந்தனர். திருப்பதி வீதிகளின் சுவர்களிலே, ''மீசைக்கார கிராமணியே, திரும்பிப் போ!'' ''திருப்பதி ஆந்திரருக்கே சொந்தம்' என்றெல்லாம் தெலுங்கில் எழுதி வைத்திருந்தனர். பல இடங்களில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. நான் பொதுக் கூட்டத்திற்குச் செல்லும்போது, எனக்குக் கறுப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்யவும் காத்திருந்தனர்.

இவற்றையெல்லாம் அறிந்துதான் ஊருக்குள் நுழைய வேண்டாமென்று பேராசிரியர் நாராயணசாமி நாயுடு எனக்கு ஆலோசனை கூறினார். அவரது வீட்டு மொழி தெலுங்காயினும், தமிழிலே பெரும்புலமை பெற்றிருந்ததால், ''தமிழர்'' என்ற இன உணர்ச்சியுடையவராக இருந்தார். வடக்கத்திவாடை அவருக்குப் பிடிக்காது. ஆயினும், எனக்கும் என்னுடன் வந்துள்ளவர்

களுக்கும் கேடு எதுவும் நேர்ந்து விடுமோ என்ற அச்சத்தாலும், அதிலிருந்து எங்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஆர்வத்தாலும் ஊருக்குள் நுழைய வேண்டாம் என்று என்னை வேண்டிக் கொண்டார். ஒரு சத்திரத்தில் ஒரு மணி நேரம் ஆலோசித்தோம். நல்லவேளையாக, என்னை விரட்டுவதற்குத் திட்டமிட்டிருந்த தெலுங்கு இளைஞர்கள் திருப்பதி ரெயில் நிலையத்திற்கு வரவில்லை.

வடக்கெல்லைப் படையெடுப்பில் எனது மெய்க் காவலராக இருந்த ஆசிரியர் மங்கலங்கிழார், ஊருக்குள் நுழையாமல் திரும்பி விடுவதையே ஆதரித்தார். அவர் பரமசாது. அடிதடிக் கலகம் என்றாலே அவருக்குப் பிடிக்காது. அதனால், களத்தில் கால் வைக்காமலே திரும்பி விடுவதை விரும்பினார். ஆனால், எங்களை வரவேற்க வந்த தமிழ் மாணவர்கள் என் முகத்தை மிகவும் பரிதாபத்துடன் பார்த்தனர். ஊருக்குள் வந்து, பொதுக் கூட்டத்தில் நான் பேச வேண்டுமென்று என்னை வற்புறுத்தினர். இளங்கன்று பயமறியாதல்லவா!

திருப்பதியில் தமிழ் பேசும் மக்கள் தொகை குறைவுதான். அவர்களிடம் கட்டுப்பாடும் இல்லை. கலகம் ஏதேனும் நிகழ்ந்தால் சிறுபான்மையினரான தமிழர் தெலுங்கரால் துன்புறுத்தப்படுவர் என்று பேராசிரியர் நாயுடு மிகுந்த கவலையோடு என்னிடம் கூறினார். ஆயினும், முன் வைத்த காலைப் பின் வைப்பது எனக்குப் பிடிக்கவில்லை. அதை அவமானமாகவும் கருதினேன். இளைஞர்களான மாணவர் களின் துடிப்பைப் பயன்படுத்திக் கொண்டு கூட்டத்தை நடத்தித் தான் ஆகவேண்டுமென்று பிடிவாதமாகக் கூறினேன். பேராசிரியர் நாயுடுவும் ஆசிரியர் கிழாரும் எனது பிடிவாதத்தின் முன்பு பணிந்துவிட்டனர்.

குளக்கரையில் கூட்டம்!

கீழ்த் திருப்பதியிலுள்ள கோயில் குளக்கரையில் கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. தற்காப்பைக் கருதி, கூட்டம் தொடங்க வேண்டிய நேரத்திற்குச் சத்திரத்திலிருந்து புறப்பட்டு, ஊர்வல மாகச் சென்று குளக்கரையை அடைந்தோம். எங்களை

எதிர்பார்த்து தமிழ் மக்கள் குழுமியிருந்தனர். அவர்கள் பார்வையில் நாங்கள் பட்டதுமே, என் பெயரைச் சொல்லி வாழ்த்தொலி எழுப்பினர். ஒரு இடத்தில் கும்பலாகத் திரண்டிருந்த 100 இளைஞர்கள், ''கிராமணி ஒழிக'' என்றும், ''இது ஆந்திர தேசம்; தமிழ்நாட்டுக்குத் திரும்பிப் போ'' என்றும் ஆங்கிலத்திலும், தெலுங்கிலும் கூச்சலிட்டனர். அதற்குப் போட்டியாகப் பொதுக் கூட்டத்தில் குழுமியிருந்த தமிழர்கள் வாழ்த்தொலி யெழுப்பினர். இப்படி, ஆதரித்தும் எதிர்த்தும் எழுப்பப்பட்ட கோஷங்களுக்கிடையே பொதுக்கூட்டம் தொடங் கப்பட்டது.

கூட்டத்திற்குத் தலைமை வகிப்பதற்கு இசைந்திருந்த உள்ளூர் அச்சகமொன்றின் உரிமையாளரான தமிழரொருவர், கலவர நிலைமை உருவாவது கண்டு அன்று முற்பகலே நகரை விட்டுப் போய்விட்டார். அதனால், கிழார் தலைமை வகித்தார்.

ஆசிரியர் கிழார், திரு.கொ.மோ. ஜனார்த்தனம் இருவரும் பேசினர். அவர்களைப் பேசவிடாதபடி ஆர்ப்பாட்டக்காரர்கள் கூச்சலிட்டனர். சிலர், குளக்கரையிலிருந்து மரங்களில் ஏறி அமர்ந்து கொண்டு, கிளைகளை ஒடித்து எங்கள் மீது எறிந்து மகிழ்ந்தனர். பேச்சாளர்களில் ஒவ்வொருவரையும் தெலுங்கில் பேசுமாறு வற்புறுத்தினர்.

பேராசிரியர் நாராயணசாமி நாயுடுவும் கூட்டத்திற்கு வந்திருந்தார். அவரும், என்னுடைய சிறை வாழ்க்கை நண்பரும், திருப்பதி முன்னாள் நகரமன்றத் தலைவருமான திரு.எம். சீனிவாச ஐயங்கார் அவர்களும் திருப்பதித் தெலுங்கரிடம் தங்களுக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி ஆர்ப்பாட்டக் காரர்கள் என்னை அணுகாதபடி தடுத்து நிறுத்தினர். நகர போலீசாரும் கூட்டத்தில் இருந்தனர். அவர்கள் அனுதாபம் ஆர்ப்பாட்டக்காரர் பக்கமே இருந்தது. என்றாலும், பலாத்காரம் நிகழாதபடி பார்த்துக் கொண்டனர். ஆயினும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு இனவெறி பிடித்திருந்ததால், எந்த நேரத்திலும் அவர்கள் எங்களைத் தாக்கித் துன்புறுத்தக் கூடுமென்று எதிர்பார்த்தேன்.

இறுதியில் நான் பேசத் தொடங்கியதும், ஆர்ப்பாட்டக் காரர்களின் கூச்சல் அதிகரித்தது. அவர்கள் வாயில் என் பெயரைவிட, எனது கனத்த மீசையே அதிகம் அடிபட்டது! தொடக்கத்தில் சுமார் 10 மணித் துளிகள்வரை கூச்சல் நீடித்ததென்றாலும், பின்னர் எனது பேச்சு ஆர்ப்பாட்டக்காரர் களையும் கவர்ந்ததால், அமைதி பெற்றனர். சரியாக ஒரு மணி நேரம் பேசினேன். அடுத்து திருப்பதி கல்லூரித் தமிழ் மாணவர் நன்றி கூறிய பின்னர், மக்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

வேங்கடத்தை விடமாட்டோம்!

எனது பேச்சில், தெலுங்கர் வேறு. ஆந்திரர் வேறு — என்பதனை விளக்கினேன். திருப்பதியில் வாழ்வோர் மொழியால் தெலுங்கராயினும், நாட்டால் தமிழரே என்பதனைத் தெளிவுபடுத்தினேன். எனது பேச்சின் சில பகுதிகள் வருமாறு:

''வேங்கடத்துக்கு வரவேண்டுமென்ற 'பிரார்த்தனை' நெடுநாளாக உண்டு. கைவிட்டுப் போனதாகக் கருதப் படும் திருப்பதி மலையை — தமிழகத்தின் வடக்கெல்லையைத் திரும்பவும் கைப்பற்றித் தீருவதென்பதே அப்பிரார்த்தனை. அது நிறைவேறும் காலம் நெருங்கிவிட்டதனாலேயே நான் இங்கு வந்துள்ளேன். நான் மட்டும் வரவில்லை. தமிழரசுக் கழகப் படையொன்றும் என்னுடன் வந்துள்ளது. அப்படை ஆயுதங் கொண்டு வரவில்லை. அன்பு கொண்டே வந்திருக்கிறது. வம்புச் சண்டைக்கு வரவில்லை. வரலாற்றின் வாய்மையை உணர்த்தவே வந்துள்ளது. அதுவும் ஆந்திரத் தோழர்களுக்கல்ல; தமிழர்களுக்கு — சூழ்நிலையால் தெலுங்கு படிக்கும் தமிழர்களுக்கு — அவர்களது தாயகத்தின் எல்லை இதுவென எடுத்துக்காட்டி, அதைக் காப்பாற்றும் கடமையை உணர்த்துவதற்காகவே வந்துள்ளது.

''பந்தாடும் விஜயநகர ராசா முதல் பண்ணை ஜமீந்தார் பர்லா கிமிடிவரை — சட்ட நிபுணர் அல்லாடி முதல் சமய வேதாந்தி ராதாகிருஷ்ணன் வரை — பார்ப்பன எதிரி பொப்பிலி அரசர் முதல் பார்ப்பனப் பெரியார் பட்டாபி சீதாராமய்யா வரை எல்லோரும் ஆந்திர மகா சபையின்

நிழலில் ஐக்கிய முன்னணி வகுத்து ''சென்னையோடு சித்தூரையும் சேர்த்து ஆந்திர மாகாணத்தை அமைத்தே தீருவோம்'' என்று போர் முரசு கொட்டுகின்றனர். இதன் எதிரொலியே தமிழரின் விழிப்பு.

''இனியும் கேட்பாரற்ற நிலையில் ஆந்திரர்கள் தமிழரைக் கேவலப்படுத்த — தமிழரின் நிலத்தைப் பறிக்க தமிழரசுக் கழகத்தார் விட்டு வைக்கப் போவதில்லை.

''சென்னை நகரில் ஆந்திரர்களின் பிரச்சாரம் வரவர அதிகரித்து விட்டது. ஆட்களை இறக்குமதி செய்து ஆந்திரர் எண்ணிக்கையைப் பெருக்குவதும், அன்றாடக் காட்சியாகி விட்டது. காந்தியடிகள் பெயரால் — காங்கிரசின் பெயரால் — சுதந்திரத் திருநாளின் பெயரால் சென்னை நகரில் கூட்டம் போட்டு, மூவர்ணக் கொடியின் கீழ்நின்று தமிழரைப் பழித்தும் தமிழ் நிலத்தைப் பறிக்கவும் பேசுவதை இனியும் அனுமதிக்க முடியாது.

''தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கடமலை என்பது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பனம்பாரனார் கண்ணால் கண்ட காட்சி. அன்று முதல் பாரதியார் காலம்வரை தோன்றிய இலக்கியங்களில் இதை வழிவழியாகப் புலவர் பெருமக்கள் பலர் வற்புறுத்தி வந்திருப்பது வரலாறு.

''என்னருமைத் தமிழ் மக்களே! நம் முன்னோர் மண்ணை வைத்து மனை கோலவில்லை; கல்லை நட்டு எல்லை கோலவில்லை. ஏனெனில், அவை நாட்டின் எல்லையைக் காக்கும் நல்ல அரண்களாக இருக்க மாட்டா. பக்கத்து நாட்டார் — பகை நாட்டார் மண்ணைக் கடந்து மனையைத் திருடலாம். கல்லைப் பிடுங்கி எறிந்து எல்லைக் காவலை அழிக்கலாம். ஆகவே, தமிழகத்தின் வடக்கெல்லையில் இயற்கை வழங்கிய மலையை வைத்து மனமகிழ்ந்தனர்.

''மலை போன்ற உண்மை என்பது தமிழ்ப் பழமொழி. தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கடம்தான் என்ற உண்மை மலையாகவே நின்று காட்டும் மாபெரும்

உண்மையாகும். ஆனால், ஆந்திரத் தலைவர்கள் மலை விழுங்கி மகாதேவன்கள் ஆகப் பார்க்கின்றனர்.

'வேங்கடத்தை விடமாட்டோம்'' என்று முழங்குங்கள்! உங்கள் பண்டைத் தமிழகத்தின் எல்லையைப் பறிகொடுக்காதீர்கள். இன்று வாழும் நம்முடைய சொந்த நலத்துக்காக அல்ல உங்களை நான் வேண்டுவது, இனி நமக்குப் பின்னேயும் என்றென்றும் வாழ்க்கூடிய தமிழகத்தின் — தமிழினத்தின் நலத்துக்காக உங்களை வேண்டுகிறேன். வேங்கடத்தை விடாதீர்கள்! குமரி முதல் வேங்கடம் வரை புதிய தமிழகத்தை உருவாக்கி, அதில் சோசலிசத் தமிழ்க் குடியரசை அமைத்து, பண்டைப் பெருமையையும் வருங்காலத் தமிழினத்தின் உரிமையையும் காப்போமாக.''

('தமிழ் முரசு' 1.9.47 இதழில் வெளியானபடி)

''வேங்கடத்த்தை விடமாட்டோம்'' என்ற எழுச்சியூட்டும் முழக்கம் மேலே தந்துள்ள பேச்சின் போதுதான் என் வாயிலிருந்து முதன் முதலாக வெளிப்பட்டது. பின்னர் அதனை, தமிழரசுக் கழகத் தோழர்கள் பட்டி தொட்டிகளிலெல்லாம் எதிரொலிக்கச் செய்தனர். பத்திரிகைகளிலும் பிரபலமானது.

தோழர்களின் தொண்டு!

திருப்பதிப் பொதுக்கூட்டத்தோடு எனது வடக்கெல்லைச் சுற்றுலா வெற்றிகரமாக முடிவுற்றது. திருவாலங்காடு தவிர மற்ற ஊர்களிலெல்லாம் நான் பேசிய கூட்டங்களில் குழப்பம் செய்யப்பட்டதென்றாலும், அதனை வெற்றிகரமாகச் சமாளித்தேன். திருப்பதியைப் பிடித்துவிட முடியும் என்ற நம்பிக்கையோடு நாங்கள் சென்னை திரும்பினோம்.

என்னுடன் வந்த பன்னிருவரில் ஒன்றிருவர் தவிர மற்றவர்களெல்லாம் திருமணமாகாத காளையர். அவர்களில் நால்வர் பட்டதாரிகள்.

திரு.கொ.மோ. ஜனார்த்தனம், பி.ஏ., பி.காம். அவர்கள் கூட்டந்தோறும் பேசி, எனது பொறுப்பில் பங்கு கொண்டார்.

இவரது உணர்ச்சித் துடிப்புள்ள பேச்சு, தமிழருக்கு இன்பமூட்டியது. ஆந்திரருக்கு ஆத்திரத்தைத் தந்தது. அதனால், இவர் பேசும்போது கூட்டத்திலுள்ள தெலுங்கர் கூக்குரலிடுவது வழக்கமாக இருந்தது.

திரு.ஆ. தாமோதரம் என்பவர் இப்போது சென்னையில் அஞ்சல் அலுவலகமொன்றில் அதிகாரியாக இருந்து வருகிறார். இவர் நன்றாகப் பாடக்கூடியவர். அதனால், வடக்கெல்லையில் நடந்த கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் பாரதியார் பாடல்களை மிகுந்த உணர்ச்சியோடு பாடி, கேட்போருக்குத் தமிழ் உணர்ச்சியூட்டினார். திருப்பதிக் கூட்டத்தில் இவர் பாடியபோது, ''தமிழில் பாடாதே! தெலுங்கில் பாடு'' என்று கலகக் காரர்கள் கூச்சலிட்டனர். அதற்கு அஞ்சாது தமிழிலேயே பாடினார்.

மற்றொரு பேச்சாளர் திரு.சி. வேங்கடசாமி, எம்.ஏ., தற்போது தமிழக அரசின் செய்தித் துறையில் பதிவு பெற்ற அலுவலராக இருந்து வருகிறார். திரு.சோம. சாமிநாதன், தற்போது 'இன்ப நிலையம்' என்ற பதிப்பகத்தை நடத்தி, என்னுடைய நூல்களை வெளியிட்டு வருகிறார்.

எனது வடக்கெல்லை, சுற்றுலாபற்றிச் சென்னை நாளிதழ்களில் — குறிப்பாக, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'தினமணி' ஏடுகளில் விரிவாகச் செய்திகள் — பெரிய தலைப்புகளுடன் வெளியிடப்பட்டன. கடுமையான எதிர்ப்புக்கிடையே எனது சுற்றுலாவை நான் வெற்றிகரமாக முடித்தது தமிழ்நாட்டினருக்கு வியப்பைத் தந்தது. சிலர் எனது துணிகரமான முயற்சியைப் பாராட்டினர். வேறு சிலர் பொறாமையால் என்னை வீழ்த்துவதற்குத் திட்டமிட்டனர்.

எனது வடக்கெல்லைச் சுற்றுலா ஆந்திர நாட்டிலும் எதிரொலித்தது. அப்போது, ஆந்திர மாகாண காங்கிரஸ் தலைவராக இருந்த திரு.என்.ஜி. ரங்கா அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், எனது சுற்றுலாவை ஆந்திர நாட்டு எல்லைப் பிரதேசத்தின் மீது தமிழர் நடத்திய படையெடுப்பு என்று வருணித்தார். பதிலுக்குப் பாடம் கற்பிக்கப் போவதாகவும் மிரட்டினார்.

மிரட்டியபடி, ஒரு மாதத்திற்குள் சென்னை நகரில் ஆந்திர மாகாண காங்கிரஸ் மாநாட்டைக் கூட்டினார். அதையொட்டி நடந்த ஆந்திரர் ஊர்வலத்திலே, ''சலோ மதராஸ்'' - ''குவிட் மதராஸ்'' - ''மதராஸ் மனதே'' என்றெல்லாம் வெறிபிடித்துக் குரல் கொடுத்தனர். ஆந்திரர் மாநாட்டில் பேசிய பிரகாசம், புலுசு சாம்பமூர்த்தி போன்ற பெருந்தலைவர்கள் எனது வடக்கெல்லைச் சுற்றுலா பற்றிக் குறிப்பிட்டனர். என்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து என்னைக் காங்கிரசிலிருந்து வெளியேற்று மாறு தாம் சார்ந்திருந்த கிளிக் கோஷ்டியின் தலைவரான திரு.கு. காமராசருக்கு அறிவுரை கூறினார் திரு.என். சஞ்சீவி ரெட்டி.

திரு.வி.க.வின் மனமாற்றம்!

தமிழரசுக் கழகத்தின் வளர்ச்சியை விரும்பாத திராவிடர் கழகத் தலைவர் ஈ.வெ.ரா. அவர்கள், கடலூரில் செப்டம்பரில் நடந்த திராவிடர் கழகச் சிறப்பு மாநாட்டில், யான் நடத்தும் தமிழரசு இயக்கத்தை திராவிட (தமிழர் — ஆந்திரர் — கேரளர் — கன்னடர்) சமுதாய ஒற்றுமையைக் குலைக்க ஆரியர்களால் (தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களால்) தூண்டிவிடப்பட்ட ஐந்தாம் படை இயக்கம் என்று வருணித்ததோடு, ''பார்ப்பன அடிமை யான ம.பொ.சி.யை நம்பாதீர்கள்'' என்றும் தமிழ்நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டார். கடலூர் மாநாடு தமிழரசு இயக்க எதிர்ப்பு மாநாடு போலவே நடந்தது.

தமிழ்ச் சான்றோர் திரு.வி.க.வையும் என்னிடமிருந்து பிரித்தெடுத்து கடலூர் மாநாட்டில் அவர் பேசும்படி செய்து விட்டார் பெரியார் ஈ.வெ.ரா.

திரு.வி.க.வும், ஈ.வெ.ராவும் காங்கிரசிலிருந்த காலத்தில் நெருங்கிய நண்பர்களாக இருந்தனரென்றாலும், பெரியார் காங்கிரசிலிருந்து விலகிச் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றவித்த பின்னர், அரசியலில் மட்டுமின்றி சமய — சமுதாயக் கொள்கைகளிலும் கருத்துப் போர் நடத்துவோ ராயினர். காங்கிரஸ்காரர்கள் அரசியலில் மட்டும்தான் பெரியாரை வெறுத்தனர்; சமயத்தைப்பற்றி அவர்களுக்குக்

கவலையில்லை. திரு.வி.க. சமயப் பிரச்சாரகராகவும் இருந்த வராதலால், ஈ.வெ.ரா.வின் நாத்திகப் பிரச்சாரத்தைத் தயவு தாட்சண்யமின்றி எதிர்க்கலானார். அந்த வகையில் இந்த இரு பெரியார்களுக்குமிடையே நடந்த கருத்துப்போரை திரு.வி.க. வின் 'தமிழ்த் தென்றல்' என்ற நூலின் வாயிலாக அறியலாம்.

தி.க.வின் சமய — தேசிய விரோதப் பிரச்சாரத்தை முறியடிக்க வேண்டுமென்ற நோக்குடனுந்தான் தமிழரசுக் கழகத்தைத் துவக்க தமிழ்ப் பெரியார் எனக்குத் துணை புரிந்தார். இதனை அவரே பலமுறை என்னிடம் ஒளிவு மறைவின்றிக் கூறினார். அப்படிப்பட்டவர் எதிர் இயக்கங்களின் போட்டி களைச் சமாளிப்பதிலே வல்லவரான பெரியார் ஈ.வெ.ரா. நீண்ட காலத்திற்குப் பிறகு தம்மை அணுகி, தமக்கு அழைப்பு விடுத்தவுடனே நட்புக்குக் கட்டுப்பட்டு கடலூர் மாநாட்டில் கலந்து கொண்டார்.

தமிழ்நாடு காங்கிரஸ் வட்டாரத்திலும் எனது எல்லைக் கிளர்ச்சிக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. நான் மாகாண வெறியை வளர்ப்பதாக, திரு. காமராசர் என்மீது குறைபட்டுக் கொண்டார்.

அப்போதுதான் சிறையிலிருந்து விடுதலையாகியிருந்த தமிழ்நாடு கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்கள், சென்னை திருவல்லிக்கேணிக் கடற்கரையில் தங்களை வரவேற்கக் கட்சியின் சார்பில் நடத்தப்பெற்ற பொதுக்கூட்டத்திலே எனது வடக்கெல்லைச் சுற்றுலாவைத் தாக்கிப் பேசியதோடு, ''தமிழ்நாட்டு நிலப் பிரபுக்களின் கையாள்'' என்றும் என்னைப் பழித்தனர்.

வெளுத்ததெல்லாம் பால் என்று நான் நம்பிய காலம் அது. ஆந்திரர்களின் எதிர்ப்பை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால், தமிழ்நாட்டுத் தலைவர்களின் எதிர்ப்பு எனக்கு வியப்பைத் தந்தது. 'பொறாமை' என்பதனை நான் முழு வடிவத்தில் சந்தித்தது அப்போதுதான். 'சாண் ஏற முழம் சறுக்கும்' என்பார்களே, அதுபோல, வடக்கெல்லைச் சுற்றுலாவினால் என் கழகம் ஒரு சாண் வளர்ந்ததென்றால், தமிழ்நாட்டில் தோன்றிய எதிர்ப்புகளால் ஒரு முழம் சறுக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டது.

எதிர்ப்பு கண்டு வேதனையடைந்தேனென்றாலும், சோர்ந்து விடவில்லை. சென்னையில் நடைபெற்ற ஆந்திர காங்கிரஸ் மாநாட்டிற்குப் பதிலளிக்க நகரில் பேட்டைக்குப் பேட்டைப் பொதுக்கூட்டம் நடத்தினேன். ''கடலூர் மாநாடு'' என்று தலைப்பிட்டு, 'தமிழ் முரசு' 1.10.47 இதழில் தலையங்கம் எழுதினேன்.

தமிழின மாணவர் மாநாடு

கடலூர் திராவிடர் கழக மாநாட்டின் எதிரொலிதான் என்னைப் பயமுறுத்துவதாக இருந்தது. அதனைச் சமாளிக்க, மாநிலத் தமிழரசுக் கழக முதலாவது மாநாட்டைச் சென்னையில் கூட்ட முயன்றேன்.

1947 செப்டம்பர் திங்களிலே தமிழரசுக் கழக முதலாவது மாநில மாநாட்டை நடத்த ஏற்பாடுகள் செய்தேன். அதனோடு தமிழ் இன மாணவர் மாநாட்டையும் நடத்தத் திட்டமிட்டேன் எதிர்பாராத காரணங்களால் மாநில மாநாடு இரண்டு மாதங்கள் தாமதப்பட்டு விட்டது. மாணவர் மாநாட்டை மட்டும் திட்ட மிட்டபடி 6.9.47இல் சென்னை அரசினர் விருந்து மாளிகையின் மண்டபத்தில் (பின்னாளில் இராஜாஜி மண்டபம் எனப் பெயர் மாற்றப்பட்டது) நடத்தச் செய்தேன். அப்போது மருத்துவக் கல்லூரி மாணவராக இருந்த செட்டிநாட்டு இளைஞர் திரு. மு.சிதம்பரம் அந்த மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

தமிழின மாணவர் மாநாட்டிலே திரு. கு.காமராசரும், அப்போது சென்னை மாநில அரசின் சட்ட — உள்துறை அமைச்சராக இருந்த டாக்டர் ப.சுப்பராயனும் கலந்துகொண்டு தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளை ஆதரித்துப் பேசினர். மாணவர் உலக வரலாற்றிலேயே ''தமிழின மாணவர்'' என்னும் பெயரால் முதன் முதலாக தமிழக மட்டத்தில் நடைபெற்ற முதல் மாநாடு இதுதான். நாளேடுகள் இந்த மாநாட்டின் நடவடிக்கைகளை நல்ல முறையில் பிரசுரித்தன.

முதலாவது மாநில மாநாடு

இரண்டு திங்கள் கழித்து நவம்பர் 9-ஆம் நாளன்று தமிழரசுக் கழக முதலாவது மாநில மாநாடு சென்னை செயின்ட்

மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்றது. டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரவர்கள் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து மாநாட்டைச் சிறப்பாக நடத்தி வைத்தார். திரு.சி. வேங்கடசாமி, எம்.ஏ. செயலாளராக இருந்து திறம்பட உழைத்தார். இதிலே திரு. கு.காமராசரும் கலந்து கொண்டார்.

மாநாடு செப்டம்பரில் நடப்பதாக விருந்தபோது, அதில் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைப்பதற்காகத் தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அழைக்கப்பட்டிருந்தார். மாநாடு தள்ளிப் போடப்பட்டதால், இடைக்காலத்தில் அப்பெரியார் சிறிது மனமாற்றமடைந்து, தமிழரசுக் கழகத்தின் வளர்ச்சியை விரும்பாத — அதன் அடிப்படைக் கொள்கைகளில் வேறுபாடுடைய — திராவிடர் கழக மாநாட்டில் கலந்து கொண்டார். ஒன்றிரு மாதங்களிலே ஏறுமாறான கொள்கைகளையுடைய இரு வேறு கட்சிகளின் மாநாடுகளில் ஒரு பெரியவர் கலந்து கொள்வதென்பது சாத்தியமில்லை தான். ஆனால், திரு.வி.க. அவர்கள், தமது வாழ்க்கையிலே முரண்பட்ட சக்திகளோடு உறவு கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அதனால், கடலூரில் நடந்த தி.க. மாநாட்டில் கலந்து கொண்ட இரண்டு மாதங்களுக்குள் தமிழரசுக் கழக மாநாட்டிலும் கலந்து கொள்ள இசைந்தார்.

மாநாட்டின் துவக்கத்திலே நான் தமிழ்க் கொடியை ஏற்றி வைத்துப் பின்வருமாறு பேசினேன்:

> *''எந்தக் கை இத்தனை நாளும் மூவர்ணக் கொடியைத் தாங்கியதோ, அதே கைதான் இன்று தமிழ்க் கொடியை ஏற்றுகின்றது. எந்த வாய் ''தாயின் மணிக்கொடி (மூவர்ணக் கொடி) வாழ்க!'' என்று வாழ்த்தியதோ, அதே வாய்தான் இன்று ''தமிழ்க் கொடி வாழ்க!'' என்று வாழ்த்துகிறது. இதில் முரண்பாடொன்றுமில்லை. மூவர்ணக் கொடி, இன்று காங்கிரஸ் கட்சியின் கொடியல்ல, இந்திய உபகண்டத்திலுள்ள பல்வேறு இனங்களையும் இணைக்கும் உறவுக் கொடி. தமிழ்க் கொடியோ, வரலாற்று வழியே தமிழகத்தில் தமிழரசை நிலைநாட்டும் உரிமைக் கொடி. உறவுக்குச் சின்னம் தேசீயக் கொடி; உரிமைக்குச் சின்னம் தமிழ்க் கொடி. இதை மறத்தல் கூடாது.''*

('தமிழ் முரசு', 15.11.47)

மதுரை, 'தமிழ்நாடு' வார இதழ் ஆசிரியர் 'மாஜினி' என்பவர் மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசினார். வரவேற்புரை நிகழ்த்திய தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்,

''தமிழ்நாடு பிரிந்தாலன்றி வாழ முடியாத நிலை ஏற்படுமாயின், வருத்தத்துடன் பிரிந்து வாழ்வதில் தடையில்லை. ஆனால், அந்தப் பெருங்கேடு பிறர் தீமையால் விளையுமே அன்றித் தமிழருடைய முயற்சியால் விளையாதென்பது உறுதி.

''குழப்பத்தினிடையே வாழ்தலின் பயனாக நடுவிட அமைப்பு (மத்திய ஆட்சி) மாகாணங்களின் உரிமையையும் பறிக்க முயலுவது வருந்தத்தக்கது.''

('தமிழ் முரசு', 15.11.47)

என்று குறிப்பிட்டார்.

'திராவிட பாணி'ப் பேச்சு!

மாநாட்டில் வ.உ.சி. படத்தைத் திறந்து வைத்துப் பேசிய திரு.வி.க., திராவிடர் கழகத்தாரை உற்சாகப்படுத்தும் உள்நோக்குடன் ஒன்றிரு கருத்துகளைத் தெரிவித்தார். அவரது பேச்சை மாநாட்டில் கலந்து கொண்ட திரு. காமராசர் உள்ளிட்ட காங்கிரஸ்காரர்கள் வெறுத்தனர். இந்த நிலைக்குக் காங்கிரஸ் காரனான நானே காரணமாக இருந்ததால், என்மீது அவர்கள் கோபம் கொண்டனர்.

மாநாட்டுத் தலைமைக்கு எனது பெயரைத் திரு. காமராசர் தான் முன்மொழிந்து பேசினார். திரு.த.செங்கல்வராயன், சென்னை மாநகராட்சி மேயர் திரு.சி. தாதுலிங்க முதலியார் இருவரும் வழிமொழிந்து பேசினர்.

திரு. காமராசர், திரு.வி.க.வின் 'திராவிட பாணி'ப் பேச்சைக் கேட்டு சினமுற்றிருந்தாராதலால், ''மொழிவாரி மாநிலக் கோரிக்கையை காங்கிரஸ் மகாசபையே நிறைவேற்றி வைக்கும். அதற்காக கிராமணியார் தனி இயக்கம் நடத்தத் தேவை யில்லை'' என்றார். மொழி வழி இயக்கத்தைப் பிரிவினை இயக்கமென்றும் வருணித்துப் பேசினார்.

திரு.வி.க.வின் 'திராவிட பாணி'ப் பேச்சும், அதற்கு எதிரான திரு. காமராசரின் 'தேசிய பாணி' அறிவுரையும் மாநாட்டுப் பிரதிநிதிகளிடையில் சிறு சலசலப்பை ஏற்படுத்தின. எனது தலைமையுரையிலே இதனை நான் சமாளித்தாக வேண்டியிருந்தது.

திரு.வி.க.வைக் கண்டித்துப் பேசுவதென்பது என் மன துக்கு வேதனை தருவதாகும். அவரிடம் நான் எல்லையற்ற மரியாதை வைத்திருப்பவன். எனது வாழ்க்கையில் என் மரியா தைக்குரிய எத்தனையோ பெரியவர்களோடு நான் கருத்துப் போர் நடத்தியிருக்கிறேன். ஆனால், திரு.வி.க. அவர்களோடு கருத்துப் போர் நடத்தும்படி ஏற்பட்ட நேரங்களிலெல்லாம் சகிப்புத் தன்மை காட்டி அதைத் தவிர்த்திருக்கிறேன்.

இந்த மாநில மாநாட்டிலே திரு.வி.க.வின் பேச்சு பிரதிநிதி களுக்கு வேதனையளித்ததால், அவர்கள் ஆறுதலடைவதற்காக, அவரைப் பற்றிப் பின்வருமாறு கூறினேன்:

''திரு.வி.க. பெரும் புலவர், திருவாசகத்தை உள்ளத்திலே வைத்துப் போற்றும் உத்தமர், அவரைக் கட்சிக் கண் கொண்டு பார்ப்பது கூடாது. ஊனினைச் சுருக்கி, உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய்த் தமிழ்த் தேனினைப் பருகும் வண்டு நம் திரு.வி.க. வண்டானது மலரின் வேற்றுமைகளைப் பார்ப்பதில்லை தேனிருக்கும் மலர்களிலே அமர்ந்துவிடும். அதுபோன்று திரு.வி.க. தமிழர் கூடுமிடங்களுக்கெல்லாம் — அவர்கள் எந்தக் கட்சியினரானாலும் — சென்று விடுகிறார். கடலூர் சென்றாலும் அவர் சட்டை கறுப்பு நிறமாகவில்லை! எனவே, அவர் எங்குப் போகிறார்; எந்தக் கட்சியை ஆதரிக்கிறார் என்பது பற்றித் தமிழரசுக் கழகத்தார் கவலை கொள்ளவில்லை.''

('தமிழ் முரசு', 15.11.47)

இந்த அளவோடு திரு.வி.க.வை விட்டு, திரு. காமராசர் எனக்குக் கூறிய 'அறிவுரை'களுக்கு — அவரை அருகில் வைத்துக் கொண்டே பதிலளித்தேன். சிறிது கடுமையாகவே பதில் அளித்ததாக இப்போது நான் கருதுகிறேன். இந்த உணர்வு

அப்போது எனக்கு ஏற்படவில்லை. மனச்சாட்சிப்படி பேசி விட்டேன். கண்டிப்பாகப் பேசுவது வேறு; கடுமையாகப் பேசுவது வேறு. இந்த வேற்றுமை அப்போது எனக்கு விளங்கவில்லை.

புதுவையின் பிரதிநிதியாக வந்திருந்த வித்வான் சிவ. கண்ணப்பர் பிரெஞ்சுப் பேரரசின் பிடியிலிருந்து புதுவை, காரைக்கால் பகுதிகளை மீட்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்.

தெற்கெல்லைத் தமிழர்களின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட திரு.பி.எஸ். மணி (''கன்னியாகுமரி'' ஆசிரியர்) திருவிதாங்கூர் சமஸ்தானத்திலிருந்து தமிழ் வழங்கும் பிரதேசத்தைப் பிரித்தெடுக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

வடக்கெல்லைத் தமிழர்களின் பிரதிநிதியாக வந்திருந்த சித்தூர் வழக்கறிஞர் எஸ். ரங்கநாத முதலியாரவர்கள். தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கடமாக வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம், சைவப் பெரியார் ச. சச்சிதானந்தம் பிள்ளை, பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் அன்பு கணபதி, திரு.கொ.மோ. ஜனார்த்தனம் ஆகியோர் உள்படப் பலர் பல்வேறு தீர்மானங்களை முன்மொழிந்தும் வழிமொழிந்தும் உரையாற்றினர்.

மொத்தம் பதினேழு தீர்மானங்கள் இம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

(1) தமிழகத்தைத் தனியரசு நாடாக்குவதில் மத்திய அரசு தயக்கம் காட்டி வருவதை இம் மாநாடு கண்டிப்பதுடன், இனியேனும் விரைவில் அதைச் செய்யுமாறு வற்புறுத்துகிறது. மற்றும், ஆறு மாதத்திற்குள் 'தமிழ் மாநிலம்' ஏற்படுத்துவதற்காக எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுபட வேண்டுமென்றும் இம் மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

(2) இந்தியாவை மொழிவழி நாடுகளாகப் பிரித்து, அந்த நாடுகளில் ஒவ்வொன்றிலும் சுதந்திர சோசலிசக் குடியரசை மக்களுக்குத் தந்து, அந்தக் குடியரசுகள் கொண்ட இந்திய சோசலிசக் கூட்டரசை அமைக்கத் தவறிவிட்டதற்காக இம் மாநாடு அரசியல் நிர்ணய மன்றத்தாரை வன்மையாகக் கண்டிக்கிறது. மற்றும், ''பலம் வாய்ந்த மத்திய சர்க்கார்'' என்ற பெயரால் தமிழகத்தின் அரசியல், பொருளாதார உரிமைகளுக்கு இடையூறு விளைவித்திருப்பதால், உடனடியாகத் தமிழ் மாநிலம் ஏற்படவும், அதன் அரசியலைத் தமிழரே வகுக்கச் சுயநிர்ணய உரிமை பெறவும் பாடுபட வேண்டுமென்று அ.நி. மன்றத்தின் தமிழ்நாட்டு உறுப்பினர்களை இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

(3) தமிழ்நாட்டின் தொடக்கப்பள்ளி முதல் கல்லூரி முடிய தமிழை முதன் மொழியாக்கி, அதனை வருகிற ஆண்டிலேயே செயலில் கொண்டுவர வேண்டுமென்றும், இரண்டாவது மொழியாக ஆங்கிலத்தை ஆக்க வேண்டுமென்றும், மாநிலங்கள் மொழிவழித் திருத்தியமைக்கப்படும் வரை இந்தி முதலிய பிற மொழிகளுக்குப் பாடத் திட்டத்தில் இடமளிப்பதோ அம் மொழிகளுக்காக அரசாங்கத்தின் பொருளையும் காலத்தையும் செலவிடுவதோ கூடாது என்றும் இம் மாநாடு அரசாங்கத்தாருக்கு அழுத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறது.

(4) கோவில்களிலும், இதர வழிபாடுகளிலும், பாடப் புத்தகங்களிலும், அரசியல் முதலிய எல்லாத் துறைகளிலும் தமிழே வழங்க வேண்டுமென்றும், தெரு, புகைவண்டி நிலையம் முதலியவற்றின் பெயர்கள் திருத்தமான தமிழ்ப் பெயர்களாக அமைய வேண்டுமென்றும் இம் மாநாடு தமிழ் மக்களையும், அரசாங்கத்தாரையும், நகராண்மைக் கழகங்களையும் கேட்டுக் கொள்கிறது.

(5) சென்னை 'ஜார்ஜ் டவுனை' வ.உ.சிதம்பரம் நகர் எனப் பெயர் மாற்றுமாறு சென்னை அரசாங்கத்தாரையும் நகராண்மைக் கழகத்தாரையும் இம் மாநாடு வற்புறுத்துகிறது.

இவற்றுடன், அப்போதுதான் தொடங்கப்பட்டிருந்த வடக்கெல்லை — தெற்கெல்லைக் கிளர்ச்சிகளை ஆதரித்தும் சென்னை மாநகரம் தமிழகத்திற்கே உரியதென வலியுறுத்தியும்,

புதுக்கோட்டை சமஸ்தானத்தையும், பிரெஞ்சுப் பிடிப்பிலிருந்த புதுவை — காரைக்கால் பகுதிகளையும் தமிழகத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய அரசைக் கோரியும், நஷ்டஈடு இன்றி ஜமீன்களையும் இனாம்களையும் ஒழிக்குமாறு சென்னை மாகாண அரசைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வரலாற்றுச் சிறப்புமிக்க இம் மாநாட்டில் யான் நிகழ்த்திய தலைமையுரையின் சில பகுதிகளை இங்குத் தருகிறேன்:

''கடந்த 20 ஆண்டுகளாக இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்டு ஓயாமல் உழைத்து உடல்நலம் குறைந்ததால் யான் ஓய்வு கொள்ள வேண்டிய நிலையை எய்தியுள்ளேன். என்றாலும் அந்நியன் அகன்ற பின்னும் என் அன்னை நாடாம் தமிழ்நாடு தனியரசு மாநிலமாகவில்லை; தமிழர் நல்வாழ்வு வாழ வழியில்லை; தமிழ் மொழி வளர வகையில்லை என்பதை நினைக்குந்தோறும் ஏமாற்றத்தால் பெருமூச்செறிகிறேன். ''சுதந்திரம்'' என்பதன் பொருளை நான் வாழும் இடத்திலிருந்து — நான் பேசும் மொழியிலிருந்து புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் சுதந்திரப் போர் முடிந்துவிடவில்லை. இனியும் அது தொடர்ந்து நடைபெற வேண்டியிருக்கிறது. போர் முறை மாறலாம்; போர் முனையும் மாறலாம்; ஆனால், போர் முடியவில்லை.

''ஏகாதிபத்திய எதிர்ப்புப் பேரில் தமிழினத்தார் பங்கு கொண்டது எதற்காக? தமிழகத்தின் விடுதலைக்காக அன்றோ! எங்கே அந்த விடுதலை? தமிழர் வரலாற்று வழித் தமிழகம் தனி நாடானதா? இல்லை! சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களால் வழிவழி ஆளப்பட்டு வந்த நம் தாய்நாடு — அசோக சாம்ராஜ்யத்துக்கும் அடிவணங்கிக் கைகட்டிக் கப்பம் செலுத்தியறியாத கன்னித் தமிழ்நாடு தனியரசு பெற்றதா? அசோகனது அறவாழி இன்று ஆட்சியின் சின்னமாகியிருக்கக் காண்கின்றோம். ஆனால், அந்த அசோக சாம்ராஜ்யம் அழிந்த பல நூற்றாண்டுகளுக்குப் பின்னும் நிலைத்திருந்த தமிழ் அரசின்

சின்னங்களாகிய வில், புலி, கயல் ஆகியவை சிறப்புப் பெற்றனவா? இல்லை, இல்லை, இல்லை!

''என்னருமைத் தமிழர்களே! விடுதலைக்குப் பாடு பட்ட வீரர்களே! கடமையைச் செய்த நாம் உரிமையைப் பெற முடியாது முணுமுணுத்து நிற்கக் காரணமென்ன? ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் நமக்குத் தலைமை தாங்கி யவர்கள் — 'செய்யுங்கள் அல்லது செத்து மடியுங்கள்' என்று ஆணையிட்டவர்கள் இன்று நம் உரிமைகளை வழங்கத் தயங்குவது ஏன்? நம்மிடை விழிப்பில்லை; உரிமையைப் பெற ஒன்றுபட்ட கிளர்ச்சியில்லை.

''நம் உரிமைகள் யாவை? இந்தியாவுக்குப் புது வாழ்வு என்றால், அது இந்திய வரலாற்றின் வழியான வாழ்வேயாம். இந்திய வரலாறு என்பது ஒரே மாதிரியான தல்ல. மொழிவழியே வரலாறு பல உண்டு. அவற்றுள், தமிழ் வழங்கும் நிலத்தின் வரலாறு தனிப்பட்டதாகும். அந்த வரலாற்றுப்படி தமிழினத்தவராகிய நமது உரிமைத் தாயகம் — பிறப்பின் பெட்டகம் — நாம் தவழ்ந்து வளர்ந்த தொட்டில் — நமது வாழ்க்கைப் பூங்கா எது? தமிழ்நாடு! தமிழ்நாடு! தமிழ்நாடு!

''என்னருமைத் தமிழ் மக்களே! இயற்கை அரண்களை எல்லைகளாகக் கொண்ட தாயகம் நம்போலும் இன்னொரு இனத்துக்கு உண்டோ? பெண்மையும் ஆண்மையும் கலந்த இடத்தே மக்கள் சமூகம் உருவாகிறது. இதில் ஒன்றின்றி மற்றொன்றில்லை என்பதை நினைவூட்டத்தான் நம் முன்னோர் தெற்கெல்லையில் 'குமரி' எனும் பெண் தெய்வத்தையும், வடக்கெல்லையில் 'வேங்கடவன்' என்ற ஆண் தெய்வத்தையும் வைத்தனர் போலும்!

''தமிழகம் பண்டை வரலாற்றின்படி சுதந்திர நாடாக வேண்டும்; அதன் அரசியலை வகுக்கத் தமிழ் இனத்தாருக் குச் சுய நிர்ணய உரிமை வேண்டும் என்பதே தமிழரசுக் கழகத்தின் அரசியல் கொள்கை.

''இப்படிச் செய்தால் இந்தியாவின் ஒற்றுமைக்குப் பங்கம் நேருமென்று அஞ்சுகின்றனர் சிலர். தமிழரசுக் கழகத்தார் தமிழகத்தைச் சுற்றி வேலிகட்டி வாழ விரும்பவில்லை. ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்று பண்டைப் புலவன் காட்டிய உலக சகோதரப் பண்பாட்டை ஒட்டியே நாம் சோஷலிசத் தமிழரசு கோருகிறோம். நாம் படைக்கவிருக்கும் புதிய தமிழகத்தின் சோஷலிசக் குடியரசு பிற இந்திய தேசிய இனங்களின் குடியரசுகளடங்கிய கூட்டரசில் இணைந்திருக்க வேண்டுமென்பதே நமது விருப்பம். ஆனால், அந்த இணைப்பு இஷ்டப்பட்டதாக இருக்க வேண்டுமேயன்றி, கட்டாயத்தின் பேரில் இணைக்கப்படும் அடிமைச் சேர்க்கையாக இருக்கக் கூடாதென்பதே கழகத்தின் கருத்து. எனவே, பூகோளத்தைக் காட்டி இந்தியாவின் ஒற்றுமையை விரும்புவோருக்கு நான் கூறுவது இதுதான்; ஒன்றுபட்ட இந்தியாவா? ஏற்றுக் கொள்ளுகிறோம். முதலில் மொழிவழியே நாடுகளைப் பிரித்து, அரசுகளை அமைக்க வழி செய்யுங்கள். அதன்பின் உரிமை பெற்ற தமிழினம் பிற இனங்களோடு உறவு கொண்டு வாழ்வதைத் தடுக்கும் சக்தி இந்த உலகத்திலில்லை. உரிமையை வழங்காத நிலையில், உறவைப் பற்றி அதிகமாகப் பேசுவது ஏமாற்றுட பேச்சாகும்!''

('தமிழ் முரசு', 15.11.47)

சுயநிர்ணயம் வேண்டும்

கழக முதலாவது மாநில மாநாடு கூடிய காலத்திலே புது டில்லியில் இந்திய அரசியல் நிர்ணய மன்றம் கூடிச் சுதந்திர இந்தியாவின் அரசியலை உருவாக்கிக் கொண்டிருந்தது. அதனால், மாநிலங்களுக்குச் சுயாட்சி கோரியதோடு, அந்தச் சுயாட்சி அரசியலை வகுக்க ஒவ்வொரு மாநிலத்துக்கும் சுய நிர்ணய உரிமையும் வேண்டும் என்று கோரியது தமிழரசுக் கழகம். ஆம்; ஒவ்வொரு மாநிலத்துக்கும் தனித்தனியே அரசியல் அமைப்பைத் தயாரித்துக் கொள்ள உரிமை இருக்க வேண்டுமென்று கோரப்பட்டது.

அமெரிக்கா, சோவியத் யூனியன் போன்ற சமஷ்டி நாடுகளில் ஒவ்வொரு மாநிலமும் தன் தனக்கெனத் தனித்தனி அரசியல் அமைப்பைப் பெற்றுள்ளன. பிரிட்டிஷ் அமைச்சு வழங்கிய திட்டத்திலேயும் ஒவ்வொரு மாநிலத்துக்கும் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டிருந்தது. ஆனால், பாரதம் விடுதலை பெற்று பாகிஸ்தான் பிரிந்துபோன பின்னர் பிரிட்டிஷ் அமைச்சரவை தந்த அரசியல் திட்டம் கைவிடப்பட்டதால் மாநிலங்கள் சுயநிர்ணய உரிமையை இழந்தன. பறிக்கப்பட்ட அந்த உரிமையைத் திரும்பவும் வழங்கவேண்டுமென்றும் வற்புறுத்தினேன். அது வருமாறு:

''ஆங்கிலேயர் இந்தியாவுக்கேயன்றி, மாநிலங்களுக்கும் சுயநிர்ணயம் வழங்கினர். ஆனால், இந்திய தேசிய காங்கிரசின் தலைமைப் பீடத்தார் அந்தச் சுயநிர்ணய உரிமையைப் பறித்துவிட்டனர்.

''இந்திய அரசியல் நிர்ணய மன்றத்தில் தமிழகத்தின் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், அவர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்? தமிழ் இனத்தைப் பற்றி — தமிழர் பண்பாட்டைப் பற்றி — தமிழக வரலாற்றைப் பற்றி அவர்களில் பெரும்பாலோருக்குள்ள ஞானம் எவ்வளவு? அவர்கள் அங்குச் சென்று பேசினார்களா? பேசினால் யாருக்காகப் பேசினார்கள்? — என்பதையெல்லாம் நீங்கள் நன்கு அறிவீர்கள்.

''அ.நி. மன்றம் தயாரித்துள்ள புதிய அரசியல் நகலில் தமிழகம் தனி அரசுரிமை கொண்ட ஒரு மாநிலமாக அல்லாமல், அடிமை மாகாணமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் பொருளாதாரம் — கைத்தொழில் — வாணிபம் ஆகிய ஜீவாதாரமான உரிமைகள் பலம் வாய்ந்த மத்திய சர்க்கார் என்ற பெயரால் பறிக்கப்பட்டுள்ளன.

''மாநாட்டுப் பிரதிநிதிகளே! கொஞ்சம் கருத்தூன்றிச் சிந்தியுங்கள்! பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியில் இருந்ததைவிட இன்றைய சுதந்திர ஆட்சியில் நாம் பெறவிருக்கும் சுகவாழ்வு என்ன? தேச பக்தர்களை

வேண்டுகிறேன்; தமிழர்களாகிய நாம் சிறை சென்று சீரழிந்ததெல்லாம் இன்றுள்ள பிற்போக்கு நிலையை நீடிக்க வைப்பதற்குத் தானா? இல்லை! இல்லை!

''அன்பார்ந்த பிரதிநிதிகளே! உங்களது இனப்பற்று — மொழிப்பற்று மென்மேலும் வளர்வதாக. நமது உரிமைகளைப் பற்றிச் சிந்திக்கத் துவங்கியிருக்கிறோம். சிந்தனை நம்மைச் செயலில் செலுத்தும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. குமரி முதல் வேங்கடம் வரையிலுள்ள புதிய தமிழகத்தை உருவாக்க — அந்தத் தமிழகத்தில் சோஷலிசக் குடியரசை அமைக்கக் கிளர்ச்சி செய்வோம். கிளர்ச்சியால் முடயாவிடில், புரட்சி செய்வோம்.''

('தமிழ் முரசு', 15.11.47)

சமயச் சார்பற்ற அரசு

அடுத்தபடியாக, எனது தலைமையுரையில் தமிழரசுக் கழகத்தின் சமூக பொருளாதார கொள்கைகளையும் விளக்கினேன். அது வருமாறு:

''தமிழரசுக் கழகம் தமிழ்வழிப்பட்ட கலைகளை வளர்ப்பதில் திட்டவட்டமான கொள்கைகளைக் கொண்டிருக்கிறது. தமிழினத்தைச் சீர்குலைத்த தீய சக்திகள் இரண்டு. ஒன்று சாதிப் பிரிவினை. மற்றொன்று, சமயத்தில் புகுந்த பொய்மை. இந்த இரண்டையும் ஒழித்துக் கட்டாதவரை தமிழர் ஒரே இனமாக வாழ்வது ஒருநாளும் இயலாது.

''கழகத்தைப் பொறுத்தவரையில் அதற்குச் சாதி கிடையாது. சமயக் கொள்கை தனிமனிதனின் நம்பிக்கையைப் பொறுத்தது. அதற்கும் தமிழக அரசுக்கும் எவ்விதத் தொடர்பும் இருக்கக் கூடாது. எனவே, சமயச் சார்பற்ற எம்மதத்தவரும் சம்மதம் என்று கொள்ளத்தக்க தமிழினத்தின் பொது இலக்கியங்களைப் போற்றி வளர்த்து, அவற்றின் மூலம் தமிழ் மக்கள் புதுவாழ்வு பெறச் செய்ய வேண்டும் என்பது கழகத்தின் கொள்கை.

''தமிழரசுக் கழகம் வெறும் அரசுரிமையை வற்புறுத்துவதோடு நின்றுவிடப் போவதில்லை. கழகம் விரும்புவது சுதந்திரத் தமிழகத்தில் சோஷலிசக் குடியரசு ''சுதந்தரம்'' — ''சுயநிர்ணயம்'' — ''சோஷலிசம்'' ஆகிய மூன்றும் பிரிக்க முடியாதவாறு ஒன்றோடொன்று பிணைந்திருக்கின்றனவென்றே கழகம் கருதுகிறது. சுதந்தரத் தமிழகம் என்ற சொற்றொடரைக் காட்டிச் சுரண்டல் கூட்டத்தின் தலைமையில் தமிழ் மக்களைத் திரட்ட நாங்கள் விரும்பவில்லை. அந்த வகையில் சோஷலிசக் கொள்கையைத் தாங்கியுள்ள எந்த இடதுசாரிக் கட்சியினரோடும் ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட்ட பாட்டாளி வர்க்கத்தின் உரிமைக்காகப் பாடுபட நாம் தயாராக இருக்கிறோம்.''

('தமிழ் முரசு', 15.11.47)

தமிழகத்தின் வரலாற்றிலேயே தமிழ் இனத்தின் அரசியல் — பொருளாதார — மொழி — சமூக உரிமைகளுக்குக் குரல் கொடுப்பதற்காகத் தமிழினத்தார் சார்பில் கூடிய முதல் மாநாடு இதுவாதலால், இந்த மாநாட்டில் யான் நிகழ்த்திய தலைமை யுரையும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் செய்தி இதழ்களில் விரிவாகப் பிரசுரிக்கப் பெற்றன.

ஆடம்பரம் எதற்கு?

மாநாட்டு ஏற்பாடுகளைக் கவனித்த இளைஞர்கள், மாநாட்டு மேடையில் நான் அமர்வதற்கென்று பல வண்ண மலர்களால் பெருஞ் செலவில் அரியாசனம் ஒன்று அமைத்தனர். ஆம்; எனக்குத் தகவல் தராமலேயே! மாநாட்டன்று காலையில் தான் அதுபற்றி எனக்குத் தகவல் கிடைத்தது. திரு.வி.க., திரு. காமராசர், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் போன்ற என் மதிப்பிற்குரிய பெரியவர்கள் கலந்து கொள்கிற மாநாட்டிலே, ஆடம்பரமான அரியாசனமொன்றில் நான் அமர்வதென்பது என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாததாகும். சாதாரணப் பொதுமக்களுக்குப் பணிபுரிவதற்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுவிட்ட அரசியல்வாதிகள், இம்மாதிரி ஆடம்பரங்களை

அனுபவிக்க ஆசைப்படுவது மிகப் பெரிய குற்றமாகும். ஆனால், பின்பற்றுவோரின் அன்புக் கட்டளைக்கு இணங்கி இத்தகைய விரும்பத்தகாத ஆடம்பரங்களைத் தலைவர்கள் சில சமயங் களில், ''அனுபவிக்க'' வேண்டியிருக்கிறது. ஆயினும், அப்போது தான் உருவாகிக் கொண்டிருந்த ஒரு மாபெரும் இயக்கம் பொறாமையால் பாதிக்கப்பட்டுவிடக் கூடாதென்பதற் காக, நான் அமர்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரியாசனத்தைக் கடைசி நேரத்தில் பிய்த்தெறியும்படி செய்துவிட்டேன்.

மாநாட்டுத் தலைவர் ஊர்வலம் என்பது மாநாடுதோறும் நடைபெறும் சடங்காகும். அந்தச் சடங்கையும் கடைசி நேரத்தில் கைவிடச் செய்தேன். ஆம்; அந்த நாளில் என்னுடைய - எனது தமிழரசுக் கழகத்தினுடைய வளர்ச்சி கண்டு நல்லவர்களிலேயும் சிலர் ''பொறாமை'' கொண்டிருந்தனர். அந்தப் பொறாமையை அதிகப்படுத்த விரும்பாமையாலும் மாநாடு சம்பந்தப்பட்ட ஆடம்பரங்களைக் கைவிடச் செய்தேன்.

மாநாட்டில் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் 202 பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்டனர் — குறிப்பாக, தமிழகத் தின் வடக்கெல்லை, தெற்கெல்லை, புதுவை, புதுக்கோட்டை ஆகிய தகராறுக்கிடமான பகுதிகளிலிருந்தெல்லாம் — தமிழரசுக் கழகம் ஒன்றையே தங்கள் நம்பிக்கையின் சின்னமாகக் கருதி — பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

தமிழரசுக் கொடி

இம் மாநில மாநாட்டிலே, 'தமிழ்க்கொடி' என்னும் பெயரில் தமிழ்ப் புலவர்கள் பயன்படுத்தி வந்த — வெள்ளைத் துணியில் வில், புலி, மீன் பொறித்த — கொடியே என்னால் உயர்த்தப் பெற்றது. ஆனால், மாநாட்டிலே கழகத்திற்கெனத் தனிக்கொடி தேவைப்படுவதன் அவசியம் பற்றி விவாதிக்கப்பட்டு, அந்தக் கொடியை உருவாக்கும் பொறுப்பு கழகத்தின் தலைவன் என்ற முறையில் என்னிடம் விடப்பட்டது.

மாநாடு முடிந்த இரண்டு திங்களுக்கள் தமிழரசுக் கொடி ஒன்று என்னால் தயாரிக்கப்பட்டு, கழகத்தின், செயற்குழுவால் ஏற்கப்பட்டது.

இந்தக் கொடி முதல் முதலாக 'தமிழ் முரசு' 15.1.48 இதழில் அட்டைப் பக்கத்தில் வெளியானது. அதே இதழில் இக்கொடி பற்றி விளக்கும் நீண்ட கட்டுரையொன்றும் பிரசுரிக்கப்பட்டது.

14.1.48 சென்னை நகரில் நடைபெற்ற தமிழர் (பொங்கல்) திருநாள் கூட்டத்திலே இந்தக் கொடி முதன் முதலில் என்னால் உயர்த்தி வைக்கப்பட்டது.

மாநில மாநாட்டிலே, வடக்கெல்லைக் கிளர்ச்சியை நடத்துவதற்கெனக் கட்சிச் சார்பற்ற முறையில் ''வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு'' ஒன்று அமைக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி, எனது தலைமையில் அந்தக் குழு அமைக்கப்பட்டு, வடக்கெல்லைக் கிளர்ச்சி வெற்றி பெறும்வரை அது இயங்கி வந்தது.

செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக் கழக மாநாடு பற்றி — குறிப்பாக, அம் மாநாட்டில் நான் நிகழ்த்திய தலைமை உரைபற்றித் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் ''முரசு ஒலித்தது'' என்னும் தலைப்பிட்டுத் தனது ''திராவிட நாடு'' இதழில் எழுதியிருந்தார். அதிலே, தமிழரசுக் கழகந்தான் தமிழினத்தின் விடிவெள்ளி என்ற கருத்தை அவர் வெளியிட்டிருந்தார்.

இந்த மாநில மாநாட்டின் காரணமாகப் பல நல்ல விளைவுகள் ஏற்பட்டனவென்றாலும், நான் எதிர்பாராத வகையில் மாநாட்டு மேடையில் எனக்கும் திரு.கு. காமராசருக்கும் ஏற்பட்ட கருத்து மோதலின் விளைவாகத் தனிப்பட்ட முறையில் பிற்காலத்தில் எனக்குப் பெருந்தீமைகள் ஏற்பட்டன. திரு. காமராசரின் நெஞ்சத்திலே என்னைப்பற்றி வஞ்சம் உருவாகி வளர்வதற்கு இந்த மாநாடும் ஒரு காரணமாகி விட்டது.

தமிழ் மாநில காங்கிரஸ் மாநாடு!

தமிழ் மாகாண அரசியல் மாநாடு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் ஆண்டுதோறும் நடைபெறுவது விடுதலைப் போராட்ட காலத்தில் வழக்கமாக இருந்து வந்தது. நாடு விடுதலை பெற்றபின் 43ஆவது மாகாண அரசியல் மாநாடு 1948 ஜனவரி 18,19 தேதிகளில் கோவை மாநகரில் நடைபெற்றது.

இந்த மாநாட்டின் தலைவர் தேர்தலிலே எனக்கும் திரு.கு. காமராசருக்கும் கடுமையான போட்டி ஏற்பட்டது. இந்தப் போட்டி காரணமாகத் தமிழ்நாட்டு அரசியலில் எனக்குள்ள முக்கியத்துவம் அதிகரித்ததென்றாலும், திரு. காமராசருக்கும் எனக்குமிடையே பகை வளர்வதற்கு இந்தப் போட்டியும் மற்றொரு காரணமாக அமைந்தது. எனது அரசியல் வாழ்வில் இந்த நிகழ்ச்சி ஒரு மகத்தான மாற்றத்தை ஏற்படுத்தியதென்று சொல்லலாம்.

'தமிழ்க் குடியரசு கோருக!'

கோவை மாநாடு எடுக்க வேண்டிய முடிவு பற்றி எனது ''தமிழ் முரசு'' இதழில் நான் ஒரு தலையங்கம் எழுதினேன். அதில் ஒரு பகுதி வருமாறு:

''.... கோவையில் தமிழ்நாடு காங்கிரஸ் மாநாடு கூடப் போகிறது. அந்நிய ஆட்சியை வெளியேற்றிய பிறகு கூடும் மாகாண காங்கிரஸ் மாநாடு இதுவே முதலாவதாகும். எனவே, இதில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளின் பொறுப்பு மகத்தானது.

''கோவை மாநாட்டினர் தமிழ் வழிப்பட்ட — தமிழ் இனத்திற்கு வாழ்வளிக்கக்கூடிய வேலைத் திட்டங்களை உருவாக்குவார்களென்று நம்புகிறோம்.

''அத்தகைய வேலைத் திட்டம் எதுவாயிருக்க முடியும்? ஏகாதிபத்தியம் வெளியேறிய அதே கணத்தில் நடந்திருக்க வேண்டியதும், ஆனால், மேலிடத்தார் நடத்தவும் மனமின்றி மறுக்கவும் மார்க்கமின்றிக் காலம் கடத்தி வருவதுமான தமிழ் மாநிலப் பிரிவினை, சுயநிர்ணய வழி தமிழ்க் குடியரசு அமைத்தல் ஆகியவையாகும்.

''தமிழ்நாடு தனி மாநிலமாகும் அதே நேரத்தில் சுதந்திர சோஷலிசத் தமிழ்க் குடியரசு அமைத்துக்கொள் ளும் சுய நிர்ணய உரிமை தமிழினத்துக்கு உண்டென்று கோவை மாநாட்டினர் வற்புறுத்த வேண்டும். இந்தியாவின் பூகோள அமைப்புக் காரணமாக மத்தியில் ஒரே அரசு அமையவேண்டும் என்பதே காங்கிரசின் கொள்கை. இதற் குத்தான் காங்கிரஸ்வாதிகள் கட்டுப்பட்டிருக்கின்றனர். இதை எப்படி அமைப்பது என்ற விஷயத்தில் அபிப்பிரா யம் கூற மாகாண காங்கிரசுக்கு உரிமை உண்டு.

''அந்நிய நாட்டு அரசியல் உறவு, இந்தியாவில் பாதுகாப்பு, போக்குவரத்து ஆகிய பொறுப்புகளை மட்டும் மாகாணங்கள் தம் விருப்பத்தின் பேரில் விட்டுக் கொடுத்து இந்திய சமஷ்டியை அமைப்பதே நியாயமான முறை.

''இன்று நடப்பதென்ன? 'பலம் வாய்ந்த மத்திய சர்க்கார்' என்ற பெயரால் மாகாணங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. ''தமிழ்நாடு ஒரு தனி நாடு, தமிழர் ஒரு தனித் தேசிய இனத்தவர் என்ற வரலாற்று உண்மை களைக்கூட அரசியல் நிர்ணய மன்றத்தார் மறந்துவிட்டனர். அதில் கலந்துகொண்ட தமிழகத்துப் பிரதிநிதிகள் கூட வற்புறுத்தவில்லை. தமிழ் இனத்துக்கு இழைக்கப்பட்டுள்ள இந்த அநீதியைத் தவிர்ப்பதற்கான ஒரே வழி தமிழ் மாநிலப் பிரிவினையை வற்புறுத்துவதும், சுதந்திர சோஷலிசத் தமிழ்க் குடியரசை அமைத்துக் கொள்ள தமிழினத்துக்கு உரிமை உண்டென்று பிரகடனம் செய்வதுமாகும். இது காங்கிரசின் அடிப்படைக் கொள்கைக்கு முரண்பட்டதன்று.

காங்கிரஸ் வேண்டுவது ஏதேனும் ஒருவகையில் ஐக்கிய இந்தியா. அதை நாம் ஏற்போம். அதே சமயத்தில் மொழி, கல்வி, தொழில், வர்த்தகம், இவை போன்ற தமிழ்நாட்டின் உயிர் நாடியான உரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாதென மறுப்போம். இதுதான் தேசபக்தி மார்க்கம். இதற்கு மாறுபட்ட ஏகாதிபத்திய — முதலாளித்துவ — பாசிஸப் பாதைகளில் அடியெடுத்து வைக்க முடியாதென்று அழுத்தந் திருத்தமாகத் தீர்மானிக்கும்படி கோவை மாநாட்டினரைக் கோருகிறோம்.''

('தமிழ் முரசு', 15.12.47)

திரு. காமராசரின் போட்டி!

'தமிழ் முரசு' தலையங்கத்தில் யான் வலியுறுத்திய மாநிலச் சுயாட்சிக் கோரிக்கைக்குக் கோவை மாநாட்டின் ஆதரவைப் பெறுவதற்காக அம் மாநாட்டுத் தலைவர் தேர்தலில் ஒரு காங்கிரஸ்காரன் என்ற முறையில் எனக்குள்ள உரிமைப்படி போட்டியிடத் தமிழரசுக் கழக மத்திய செயற்குழு என்னை அனுமதித்தது.

மாநாட்டுத் தலைவர் தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்தேன். திருவாளர்கள் என். அண்ணாமலைப் பிள்ளை, பண்ருட்டி தேவநாயக ஐயர், திருச்சி டி.எஸ். அருணாசலம், மதுரை சிதம்பர பாரதி ஆகிய நால்வரும் எனக்கு முன்னரே வேட்புமனு தாக்கல் செய்தனர். மனு கொடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நேரம் முடியும்வரை தமிழ்நாடு காங்கிரஸ் அலுவலகத்தில் நான் இருந்தேன். ஆனால், மறுநாள் காலை செய்தித் தாள்களைப் படித்தபோது திரு.கு.காமராசரும் மனு தாக்கல் செய்துள்ளார் என்ற செய்தி கண்டு வியப்படைந்தேன்.

வேட்புமனு தாக்கல் செய்யவேண்டிய நேரம் கடந்து போன பின்னர் திரு.காமராசர் வேட்புமனு கொடுத்திருப்பது எனக்குத் தெரியவந்தது. அப்போது அவர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்ததால், காங்கிரஸ் அலுவலகம் தலைவர் தேர்தலுக்கான விதிகளுக்கு மாறாக, காலங்கடந்து

கொடுக்கப்பட்ட அவரது வேட்பு மனுவை ஏற்றுக் கொண்டு விட்டது. திரு. காமராசர் தமிழ்நாடு காங்கிரசின் தலைவரான பின்னர், இப்படி எல்லாம் நடப்பது வழக்கமாக இருந்தது. இந்தத் தவறுகளுந்தான் திரு. காமராசரை அகில இந்தியப் பெருந்தலைவராக ஆக்கின.

தேர்தல் விதிகளுக்குப் புறம்பாக திரு. காமராசர் வேட்பு மனு தாக்கல் செய்ததற்குக் காரணமுண்டு. என்னைத் தவிர, வேட்புமனு கொடுத்திருந்த மற்ற நால்வரும் திரு. காமராசரின் கோஷ்டியைச் சேர்ந்தவர்களே. அவர்களில் ஒருவரை மாகாண மாநாட்டின் தலைவராகக் கொண்டுவரத்தான் திரு. காமராசர் விரும்பினார். நான் வேட்புமனு கொடுப்பேன் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. நான் போட்டியிட முன் வந்தது தெரிந்த பின்னரே, போட்டியிலிருந்து என்னை வெளியேற்றுவதற் காகவே அவர் மனு கொடுத்தார். நான் மாகாண மாநாட்டின் தலைவனாவது அவருக்குப் பிடிக்கவில்லை. என்னுடைய அரசியல் வளர்ச்சியை அவர் விரும்பவில்லை என்பதனை வேறு எப்போதையும்விட இந்தச் சந்தர்ப்பத்தில்தான் நான் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிந்தது.

வேட்புமனு தாக்கல் செய்து முடிந்த பின்னர் திரு. காமராசர் எனது இல்லத்திற்கு வலிய வந்து, தமக்காக விட்டுக் கொடுத்து போட்டியிலிருந்து விலகுமாறு என்னைக் கேட்டுக் கொண்டார். மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக உள்ள அவர் மாகாண மாநாட்டின் தலைவராகவும் வர விரும்பியது எனக்கு வியப்பாக இருந்தது. ''ஒருநாள் கூத்துக்கு மீசையை எடுத்துவிட்டான்'' என்றொரு பழமொழி உண்டு. அதுபோல, ஒரு நாள் மாநாட்டில் தலைமை உரை நிகழ்த்துவதற்காகக் கடுமையான ஒரு போட்டியில், திரு. காமராசர் இறங்கினார். நான் விலகியிருந்தால், அவரும் விலகிக் கொண்டு வேட்புமனு தந்துள்ள தன் கோஷ்டியினரில் ஒருவரைப் போட்டியில்லாமல் கொண்டுவரவிருந்த நிலை மாறியது.

நான் மாகாண மாநாட்டுத் தலைமைப் பதவிக்குப் போட்டியிட விரும்பியது அதில் கொண்ட மோகத்தால் அன்று. அந்த மாநாட்டைத் தொடங்கி வைக்க அப்போது மத்திய அரசின்

உணவு அமைச்சராக இருந்த பாபு ராசேந்திரப் பிரசாத் அழைக்கப்பட்டிருந்தார். தமிழ்நாட்டில் ஒரு தாலுகா மாநாடு நடந்தாலும் வட இந்தியத் தலைவர் ஒருவரை அழைத்து அதனைத் திறந்து வைக்கச் செய்வது அந்நாளில் வழக்கமாக இருந்தது. அதுபோல, பிற மாநிலங்களில் நடைபெறும் காங்கிரஸ் மாநாட்டுக்குத் தமிழகத் தலைவர்கள் அழைக்கப்படுவதில்லை. ஆம்; ''தேசியம்'' ஒருவழிப் பாதையாக இருந்தது.

பாபு ராசேந்திரப் பிரசாதரின் காதுகள் கேட்கத் தமிழரசுக் கழகத்தின் புதிய தமிழகக் குறிக்கோளை — குறிப்பாக, மாநிலச் சுயாட்சிக் கோரிக்கையை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று என் மனம் விரும்பியது. அதனால் மாகாண மாநாட்டுத் தலைவர் தேர்தலில் கலந்து கொண்டேன்.

விலக மறுத்தேன்!

திரு. காமராசர் வேறுவிதமாக நினைத்தார். நான் மாகாண மாநாட்டுத் தலைவராவதால் எனது செல்வாக்கு வளர்ந்துவிடக் கூடுமென்று அவர் அஞ்சினார். அவர் என்னைத் தனக்கு ஏற்பட்டுவிட்ட ஒரு போட்டி நபராகவே கருதினார். எனது வளர்ச்சி அவரது வளர்ச்சிக்குக் கேடாக அமையுமென்ற அச்சம் அந்த நாளில் அவருக்கு எப்படியோ ஏற்பட்டிருந்தது. பிறர் வளர்ச்சியைத் தடுப்பதில்தான் தனது வளர்ச்சி இருக்கிறதென்பது அவரது சித்தாந்தம்.

தொடர்ந்து மூன்றுநாள் எனது இல்லத்துக்கு வந்து போட்டியிலிருந்து விலகுமாறு என்னை வற்புறுத்தினார். எனது வளர்ச்சிக்கு வேறு வகையில் உதவுவதாகவும், ஆசை காட்டினார். நான் விலக மறுத்துவிட்டேன். பின்னர், தனது கோஷ்டியைச் சார்ந்த மற்ற நான்கு வேட்பாளர்களையும் விலகச் செய்து, அவருக்கும் எனக்கும் நேரடிப் போட்டியை ஏற்படுத்தினார். தானே எதிர்த்தாலன்றி, மற்றவர்களைக் கொண்டு என்னைத் தோற்கடிக்க முடியாதென்று கருதினார். நேரடிப் போட்டியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அவரது துணிச்சல் என்னால் பாராட்டத்தக்கதாக இருந்தது.

மாகாண மாநாட்டுத் தலைவர் தேர்தலில் வட்டக் காங்கிரஸ் கமிட்டிகளின் உறுப்பினர்களே வாக்காளர்களாக இருந்தனர். எல்லா மாவட்டங்களிலுமாக சுமார் ஐந்நூறுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் இருந்தனர். அப்போதிருந்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அமைச்சரவை திரு. காமராசருக்கு ஆதரவாக இருந்தது. அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று ஐந்நூறுக்கும் மேற்பட்ட வாக்காளர்களையும் நேரில் சந்திக்கத் திரு. காமராசருக்கு வாய்ப்பும் வசதிகளும் இருந்தன. அவர் சார்பில் அமைச்சர்களும் தீவிரமாக வேலை செய்தனர். அமைச்சர் களிலே ஒவ்வொருவரும் தத்தம் மாவட்டத்தில் சுற்றுலா செய்து திரு. காமராசருக்கு ஆதரவு தேடினர்.

இந்தத் தேர்தலில் நான் போட்டியிட நேர்ந்ததற்கான காரணங்களை விளக்கி ஒரு அறிக்கை தயாரித்து, அதன் பிரதிகளை வாக்காளர்களுக்கு அஞ்சல் மூலமாக அனுப்பி வைத்தேன். பத்திரிகைகளிலும் வெளியிட்டேன். இதைத் தவிர வேறு எதையும் செய்வதற்கான வசதி எனக்கில்லை.

ராஜாஜி கோஷ்டியாரின் 'நன்றியுணர்வு!'

ராஜாஜி கோஷ்டியினரின் ஆதரவு எனக்குக் கிடைக்கு மென்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், அப்போது மத்திய அரசில் அமைச்சராக இருந்த ராஜாஜி அவர்கள், திரு. காமராசருக்கு ஆதரவளிக்குமாறு தன் கோஷ்டியினருக்கு ''ஆணை'' அனுப்பி வைத்தார். அவரது போக்கு எனக்கு வியப்பையும் வேதனையையும் தந்தது. நான் பெருமதிப்பு வைத்திருந்த 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் என்னைக் கைவிட்டுவிட்டார். அத்துடன் தம்முடைய 'கல்கி' பத்திரிகை யிலே, ''நாடாரும் கிராமணியும் போட்டியிடுகிறார்கள். இருவரில் எவர் ஜெயித்தால் என்ன?'' என்று எனக்கும் காமராசருக்குமுள்ள சாதி வழி உறவைக் குறிப்பிட்டு எழுதியிருந்தார். எழுதியதுடன் அமையாது, திரு. காமராசருக்கு ஆதரவாக வேலையும் செய்தார்.

அந்நாளில், திருநெல்வேலி, கோயமுத்தூர், சேலம், தஞ்சாவூர், சென்னை, வடாற்காடு, நீலகிரி ஆகிய மாவட்டங்களிலே ராஜாஜி கோஷ்டியினருக்குத்தான் அதிக செல்வாக்கிருந்தது. இந்தச் செல்வாக்கு எனக்குப் பயன்பட்டிருந்தால், தமிழ்நாட்டின் தலை எழுத்து — ஏன், இந்தியாவின் தலைவிதியே வேறுவிதமாக அமைந்திருக்கக் கூடும். ஆனால், ராஜாஜி அவர்கள் எப்பொழுதுமே நாடு எதிர்பார்க்கக் கூடியதைச் செய்வது வழக்கமில்லையல்லவா!

திரு. காமராசருக்கு எதிராக ராஜாஜி கோஷ்டியைச் சாராத வேறொரு கோஷ்டியார் காங்கிரசிலிருந்தனர். ராஜாஜிக்கும் காமராசருக்குமிடையே கோஷ்டிப் பூசல் ஏற்பட்ட காலத்திலே இவர்கள் காமராசரின் ஆதரவாளர்களாக இருந்தவர்களே. ஆனால், திரு. காமராசரைச் சரியாகப் புரிந்து கொண்டபின், அவரை வெறுப்போராயினர். அவர்கள் காங்கிரஸ் ஊழியர் சங்கம் ஒன்றை மாநில ரீதியில் அமைத்து, அதன் பெயரால் திரு. காமராசரை எதிர்த்து வந்தனர். இந்த மூன்றாவது குழுவினர் என்னை ஆதரிக்க வலுவில் முன்வந்தனர். எனக்காக அவர்களில் சிலர் மாவட்டங்களில் சுற்றுலா செய்தனர்.

போட்டிபற்றிப் 'புயல்' வருணனை!

சிறந்த தேசபக்தரும், பெருந்தியாகியுமான திரு.எஸ்.ஏ. ரகீம் அவர்கள் ''புயல்'' என்ற பெயரில் ஒரு வார இதழ் நடத்தினார். அதிலே மாகாண மாநாட்டுத் தலைவர் தேர்தல் பற்றி அவரால் எழுதப்பட்ட ஒரு கட்டுரையின் சில பகுதிகளை இங்குத் தருகிறேன்:

> *''அரசியல் மாநாட்டுத் தலைமைப் பதவிக்கு ஏன் இவ்வளவு போட்டி. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலுக்குப் போட்டி போட்டாலும் அதில் அர்த்த மிருக்கிறது. மாநாட்டுத் தலைமைக்கு ஏன் இவ்வளவு மும்முரம்? சட்டசபை மெம்பர்கள் ஊர் ஊராக ஓடுகிறார்கள். மந்திரிகள் பறக்கிறார்கள். மர்ம மனிதர்கள் பம்பரமாக ஆடுகிறார்கள். இதன் ரகசியம் என்ன என்று பலர் ஆச்சரியப்படலாம்.*

''ஸ்ரீ காமராஜ் நாடார் இன்று பதவியிலிருப்பது பணக்காரர்கள், பிற்போக்காளர்கள், வகுப்புவாதிகள் பக்க பலத்தினால்தான். அவருடன் சேர்ந்து நின்று உழைத்த ஊழியர்கள் அவரைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. அவருடைய வண்டியின் கடை ஆணி கழண்டுவிட்டது. இந்த நிலைமையில் தனக்கு உண்மையில் பலமிருக்கிறதா என்று வெள்ளோட்டம் விட்டுப் பார்க்கிறார்!

''ஸ்ரீ காமராஜ் அடுத்த வருஷம் த.நா.கா. கமிட்டித் தலைவர் தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை. ஆகவே, அவர் விலகுவதற்கு முன்பு மாநாட்டுத் தலைவர் பதவியையாவது கொடுப்பதுதான் கவுரவம் என்று சிலரிடம் பிரச்சாம் செய்கிறார்கள். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதமான காரணம் சொல்லப்படுகிறது. அதிருப்தி அடைந்த ஊழியர்களுக்குப் 'பங்கு' தருவதாக ஆசை காட்டப்படுகிறது. மந்திரிகள், ஜில்லாக் கமிட்டி மெம்பர்களுக்குக் கடிதம் எழுதுகிறார்கள். இன்னும் என்னவெல்லாமோ நடக்கிறது. ஏதாவது ஒரு தலைமைப் பதவி இருந்தால்தான் ஸ்ரீ காமராஜுக்கு அரசியல் வாழ்க்கை உண்டு. ஆகவே, இது அவருடைய அரசியல் வாழ்க்கைக்கான போராட்டம். எந்த உபாயங்களையும் அவர் கையாள்வது இயற்கையே. பணம், செல்வாக்கு, அதிகாரம் ஆகியவை உள்ளவர்களின் பக்கபலம் இருக்கிறது. அவரை எதிர்த்து நிற்கும் ஸ்ரீ சிவஞான கிராமணியாரிடம் என்ன இருக்கிறது? ஆள்தான் இருக்கிறார். அவருடைய 'புஸ்தி' மீசை இருக்கிறது — அவ்வளவுதான்.''

நண்பர் எஸ்.ஏ.ரகீம் தமது பத்திரிகையில் எழுதியதை இங்கு நான் எடுத்துக்காட்டுவது, எத்தகைய பலம் படைத்த சக்தியை நான் எதிர்த்தேன் என்பதை வாசகர்கள் புரிந்து கொள்வதற்காகத்தான்!

திரைமறைவில் சூழ்ச்சி!

என்னை விரும்பாதவர்கள் — திடீரென்று காமராஜ் பக்தர்களாக மாறிய ராஜாஜி கோஷ்டியினர் — நான் தமிழரசு கோருவது தேசிய விரோதமான செயலென்று பிரச்சாரம் செய்தனர். அதனாற்றான், ராஜாஜி எனக்கு எதிராக திரு. காமராசரை ஆதரிப்பதாகக் காரணம் காட்டினர். இதற்கு என்னை ஆதரித்த ஒரே பத்திரிகையான ''புயல்'' இதழிலே சொல்லப்பட்ட சமாதானம் வருமாறு:

''ஸ்ரீ கிராமணியார், தமிழரசுக் கழகத்துக்காரரல்லவா என்று குசுகுசுப் பிரச்சாரம் செய்கிறார்கள். அதில் என்ன தவறு இருக்கிறது? தமிழ்நாட்டில், தமிழ் மக்களுக்குத்தான் உரிமை உண்டு என்று கேட்பது தவறா? இவ்வளவு காலமாக வேறு கட்சிக்காரர்கள் அந்த மேடையை உபயோகித்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பழைய பாவத்தைத்தான் ஸ்ரீ கிராமணி யார் சுமக்கிறார். கிராமணியார் நிரட்சர குட்சி அல்ல. பரந்த அனுபவமுடையவர். தமிழில் நல்ல ஆராய்ச்சியுள்ளவர். ஸ்ரீ சிவஞான கிராமணியாரின் வெற்றி உண்மை ஊழியரின் வெற்றி.''

மாகாண மாநாட்டுத் தலைவர் தேர்தலில் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, எனது மனு அங்கீகரிக்கப்பட்ட பின்னரும், அது செல்லத் தக்கதல்லவென்ற ஆட்சேபணை எழுப்பப்பட்டது. நான் தனியாக ஒரு கட்சி நடத்துவதால், தமிழ்நாடு காங்கிரசில் இருக்கத் தகுதியற்றவன் என்று ஆட்சேபணையாளர் காரணங் காட்டினர். இதுபற்றியும் 'புயல்' பத்திரிகை தெரிவித்த கருத்து வருமாறு:

''ஸ்ரீ கிராமணியாரின் நியமனப் பத்திரம் செல்லுபடியாகாதென்று தள்ளுவதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால், அந்த முயற்சிதான் செல்லுபடியாகாது. எப்போது நியமனப் பத்திர ஜாபிதா பிரசுரமாயிற்றோ, அப்போதே அது செல்லுபடியானதுதான். ஏனென்றால், நியமனப் பத்திரங்களைப் பரிசீலனை செய்வதற்கென்று தேதி குறிப்பிடப்

படவில்லை. ஆகவே, தனி பரிசீலனை எதுவும் இருக்க முடியாது. சட்ட நுணுக்கங்களில் புகுந்து கொண்டு யாரும் தப்ப முடியாது. வெற்றியானாலும், தோல்வியானாலும் நேருக்கு நேர் நிற்கட்டும்.''

7.1.48 அன்று தமிழ்நாடு முழுவதிலுமுள்ள மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகள், அந்தந்த மாவட்டத்தின் தலைநகரிலே கூட்டப்பட வேண்டுமென்றும், அக்கூட்டத்தில் மாவட்ட காங்கிரஸ் உறுப்பினர்கள் மறைமுகமாக வாக்களித்து மாகாண மாநாட்டுத் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது.

எதிர்பார்த்தபடி தோற்றேன்!

மாவட்டத் தலைநகரங்களுக்கு என் சார்பில் யாரும் அனுப்பப்படவில்லை. காரணம், பொருள் வசதியின்மைதான். ஆயினும், ஒவ்வொரு நகரிலும் ஸ்தல காங்கிரஸ்காரர்களிலே ஒன்றிருவர் எனக்காக வேலை செய்தனர். அவர்களில், வேலூர் திரு. பெருமாள்சாமி ரெட்டியார் எம்.எல்.சி.யும், விருதுநகர் திரு.ரெ.தே.பெ. சுப்பிரமணிய நாடாரும், சேலம் திரு. கொ.ப. பச்சையப்பனும், திருச்சி திரு.ச. இராமசாமியும் குறிப்பிடத் தக்கவர்களாவர். மற்ற மாவட்டங்களின் தலைநகரங்களிலும் எனக்காக வேலை செய்தவர்களுண்டு. ஆனால், அவர்கள் பெயர்கள் எனது நினைவிலில்லை. சென்னை நகரை நானே கவனித்துக் கொண்டேன்.

எதிர்தரப்பில் மந்திரிகள், எம்.எல்.ஏ.க்கள், பெரும் பணக்காரர்கள் ஆகியோர் மாவட்டத் தலைநகரங்களில் முகாம் போட்டு வேலை செய்தனர். சில நகரங்களில் மறைமுக வாக்களிப்பு புறக்கணிக்கப்பட்டு, வாக்குகள் பகிரங்கமாகப் பறிக்கப்பட்டன. திருச்சியில் எனக்காக வேலை செய்த மாவட்ட காங்கிரஸ் ஊழியர் சங்கச் செயலாளர் திரு.ச.இராமசாமி தாக்கப்பட்டுப் படுகாயமடைந்தார்.

சென்னை, சேலம், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் எனக்குப் பெரும்பாலான வாக்குகள் கிடைத்தன. மற்ற

மாவட்டங்களில் திரு. காமராசர் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றதால், வெற்றி மகள் அவரையே மணந்தாள். மொத்தம் பதிவான வாக்குகளில் சரியாக மூன்றில் ஒரு பங்கு வாக்குகள் எனக்குக் கிடைத்தன.

தமிழ்நாடு காங்கிரசில் கோஷ்டிப் பூசல் ஏற்பட்டபோது யாருடைய தலைமை வெற்றி பெறுவதற்கு நான் என்னையே அர்ப்பணித்துக் கொண்டு பாடுபட்டேனோ, அந்த ராஜாஜியும் — அவரது கோஷ்டியாரும் கைவிட்டதால், கோவை மாகாண மாநாட்டுத் தலைவர் தேர்தலில் நான் தோல்வியுற்றேன்.

இந்தத் தோல்வியால் நான் அதிர்ச்சியடையவில்லை. மாறாக, மகிழ்ச்சியடைந்தேன். அப்போதுதான் தோன்றியிருந்த தமிழரசுக் கழகத்துக்கும், தமிழரசுக் கொள்கைக்கும் இந்தத் தேர்தலில் நல்ல விளம்பரம் கிடைத்ததால், தோல்வியைக்கூட ஒரு வகையில் வெற்றியாகவே நான் கருதினேன்.

திரு.கு. காமராசரின் வாழ்க்கை வரலாறு சுருக்கமாகவும் விரிவாகவும் சில எழுத்தாளர்களால் எழுதப்பட்டுள்ளது. அவற்றுள், மாகாண மாநாட்டத் தலைவர் தேர்தலில் அவர் என்னோடு போட்டியிட்ட நிகழ்ச்சி ஒரு நூலில்கூடக் கூறப்படவில்லை. வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டிருக்கிறது. ஒருகால், என்னை மிகவும் சாதாரணமானவனாகக் கருதி, எனக்கு விளம்பரந் தந்து என்னைப் பெரிய மனிதனாக்கிவிடக் கூடாதென்று அந்த எழுத்தாளர்கள் எங்களிடையே நடந்த போட்டியை எழுதாமல் விட்டிருக்கலாம். மேட்டுக் குடியினர்க்குரிய ''உயர்வு மனப்பான்மை'' என்பது, தாழ் குடியில் பிறந்து, சுயமுயற்சியால் தலைவரானவர்களையும் விடாது போலும்! திரு. காமராசருடன் ஒப்பிடுங்கால், நான் சாதாரண மனிதனாக இருக்கலாம். ஆனால், எங்களிடையே நிகழ்ந்த போட்டியும் போராட்டமும் தமிழ்நாட்டின் வரலாற்று நிகழ்ச்சிகளாயிற்றே!

தமிழ் மாகாண 43ஆவது அரசியல் மாநாட்டுத் தலைவர் தேர்தலில் எனக்குத் தோல்வியும், திரு. காமராசருக்கு வெற்றியும் ஏற்பட்டு பின்னர், 'தமிழ் முரசு'வில் ஒரு தலையங்கம் எழுதினேன். அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:

''இரண்டு நாள் பதவிக்கான தேர்தலில், அதுவும் ஒரே கட்சிக்குள், அதிகார பீடத்தில் அமர்ந்துள்ள அமைச்சர் குழுவினரின் செல்வாக்குப் பெற்ற ஒருவருடன் போட்டி யிடுவதென்பது எனக்கு மகிழ்ச்சி தரும் விஷயமல்ல. பின் எதற்காக நான் இறுதி வரையில் உறுதியுடன் போட்டியிட்டேன் என்பதுதான் இங்குக் கவனிக்கத்தக்க விஷயம்.

''இந்தியா சுதந்திரம் பெற்றால், தமிழகம் சுயாட்சி நாடாகும். தமிழருக்குச் சுயநிர்ணய உரிமை வழங்கப்படும் என்ற உறுதியான நம்பிக்கையுடனேயே தமிழர் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் ஈடுபட்டனர். ஆனால், ஆங்கிலேயரை விரட்டிய பின்னர், காங்கிரஸ் மேலிடத்தார் ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியப் போக்கிலேயே தாங்களும் செல்வதென்ற முடிவுக்கு வந்துவிட்டனர். அசோகரது அறவாழிச் சின்னத்தைத் தேசியக் கொடியில் பொறித்துக் கொண்டு, தமிழர் விஷயத்தில் அசோகரும் செய்ய இயலாததைச் செய்யத் துணிந்துவிட்டனர்.

''மேலிடத்துத் தலைவர்கள், தமிழ்நாட்டிற்குப் 'பிரதேசம்' எனப் பெயரிட்டு, தமிழ் இனத்தவரை 'இந்துக்கள்' என்ற பட்டியலில் சேர்த்து, மத்திய சர்க்காரில் இணைத்து விட்டனர். தமிழகத்தின் வயது வந்த வாக்காளரின் கருத்தையறியாது செய்யப்பட்ட இச்செயல் ஜனநாயகமல்ல.

''மாட்டை வண்டியில் பூட்டும்போது எசமான் மாட்டின் கருத்தைக் கேட்பதில்லை. அதுபோன்றே, காங்கிரஸ் மேலிடத்தார் தமிழகத்தின் கருத்தை அறியாமலே அதை மத்திய அரசில் பிணைத்து விட்டனர்.

''இந்தக் கட்டாய அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு, தமிழகம் தனி மாநிலம் ஆகவேண்டும். தமிழர் தனியரசு செலுத்த வேண்டும். அந்த அரசு தனதிஷ்டத்தின் மீது

இந்தியக் கூட்டரசில் இணைய வேண்டுமென்பதே தமிழரசுக் கழகத்தின் கொள்கை.

ஆகஸ்டு பதினைந்தாம் தேதிக்குப் பிறகு மேற்சொன்ன தமிழரசுக் கோரிக்கைக்குத் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்வாதி களிடையே எவ்வளவு ஆதரவிருக்கிறதென்பதை அறிய விரும்பி, சந்தர்ப்பத்தை எதிர்பார்திருந்தேன். கோவை மாநாடு அத்தகைய சந்தர்ப்பத்தை எனக்கு அளித்தது.

''இது தமிழகத்தின் வருங்கால வாழ்வை நிர்ணயிக்கும் காலம். இச்சமயத்தில் அரசாளும் காங்கிரசின் தலைவராகிய காமராசர் தமிழகத்தின் உரிமைகளைக் காக்கத் தவறிவிட்டார். அரசியல் நிர்ணய மன்றத்தில் அவர் இடம் பெற்றிருந்தும், தமிழ் இனத்தின் எண்ணத்தை அங்கு எதிரொலி செய்யவில்லை; தமிழகத்தின் வரலாற்றுவழித் தமிழரசு காணப் போராடவில்லை.

''திரு. காமராசரைத் தோற்கடிப்பதால் அவரது கடந்த காலத் தவறுகளிலிருந்து அவர் திருந்தச் செய்யலாமென்றும் நம்பினேன்... ஆனால், வாக்காளர்களில் பெரும்பாலோர் தமிழகத்திற்குச் செய்ய வேண்டிய கடமையை விட தனிப்பட்டவர்கள் மீது கொண்ட விருப்பு வெறுப்புக்கே முதலிடந் தந்தனர். இதனால் காமராசர் வெற்றி பெறுவது எளிதாயிற்று.

''இந்தத் தேர்தலின் முடிவைக் கொண்டு தமிழரசுக் கோரிக்கையைத் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்வாதிகள் நிரா கரித்து விட்டனர் என்று சொல்வதற்கில்லை. அப்படிச் சொல்வது காங்கிரஸ் மீது பழி சுமத்துவதாகும்.

''கோவை மாநாட்டில் சுதந்திர சோசலிசத் தமிழ்க் குடியரசுத் தீர்மானத்தைப் பிரேரேபித்து மூவாயிரத்துக்கு மேற்பட்ட பிரதிநிதிகளின் தீர்ப்பைக் கோரப் போகிறேன். அப்போதுதான் பிரதிநிதிகள் தனிப்பட்டவர்களை மறந்து தமிழ்நாட்டின் வருங்காலத்தைப் பற்றித் தெளிவாகத் தீர்ப் பளிக்க முடியும்.

''இந்தச் சந்தர்ப்பத்தில் கோவை மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

''பிரதிநிதிகளே! நீங்கள் கோவையில் கொடுக்கவிருக்கும் தீர்ப்பைக் கொண்டுதான் தமிழ்நாட்டுக்கு இனி காங்கிரஸ் வேண்டுமா, வேண்டாமா? — என்பதைப் பற்றி இன உணர்ச்சியுள்ள காங்கிரஸ் தமிழரும், காங்கிரஸ் அனுதாபமுள்ள தமிழரும் முடிவு செய்யப் போகின்றனர். எனவே, சூழ்நிலைக்கு அடிமையாகாது ஆழ்ந்து சிந்தித்துப் பின்னர் முடிவு செய்யுங்கள். நீங்கள் செய்யும் முடிவு பிற்காலத் தமிழகம் உங்களைப் பாராட்டுவதாக இருக்கட்டும்.

''கோவை மாநாடு இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் நடந்த காஞ்சிபுரம் மாநாடாக ஆகவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.''

('தமிழ் முரசு', 15.1.48)

(1923-இல் காஞ்சிபுரத்தில் திரு. வி.கலியாணசுந்தரனார் தலைமையில் கூடிய தமிழ் மாகாண அரசியல் மாநாட்டில்தான் பெரியார் ஈ.வெ.ரா. காங்கிரசிலிருந்து வெளியேறினார். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கோரித் தாம் கொடுத்த தீர்மானத்தைக் காஞ்சி மாநாடு ஏற்றுக் கொள்ளாததாலேயே பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறினார்)

பொள்ளாச்சியில் ஒத்திகை!

கோவை அரசியல் மாநாட்டுத் தலைவர் தேர்தலில் நான் தோற்றது குறித்து உண்மைக் காங்கிரஸ்காரர்கள் — உணர்ச்சியுள்ள ஊழியர்கள் பெரிதும் வருந்தினர். தலைவர் தேர்தலில் அதிகாரம், அதட்டல் மிரட்டல் காரணமாக திரு. காமராசர் வெற்றி பெற்றதால், அவர் மீது அதிருப்தியும் என்மீது அனுதாபமும் கொண்ட காங்கிரஸ் ஊழியர்கள், ''தமிழ்நாடு காங்கிரஸ் ஊழியர் மாநாடு'' என்னும் பெயரில் பொள்ளாச்சியில் ஜனவரி 17-இல் ஒரு மாநாடு நடத்தினார்கள். கோவையில் மாகாண அரசியல் மாநாடு கூடுவதற்கு முதல் நாள்

நடந்த இந்த மாநாட்டுக்குத் தமிழ்நாடு முழுவதிலுமிருந்து காங்கிரஸ் ஊழியர்கள் வந்திருந்தனர். திரு.சி.பா. ஆதித்தனார், புதுக்கோட்டை கே.எம். வல்லத்தரசு, எல். சட்டநாதக் கரையாளர் ஆகியோரும் மற்றும் பல காங்கிரஸ் பிரமுகர்களும் பொள்ளாச்சி மாநாட்டில் பங்கு பெற்றனர். அழைப்பின் பேரில் நானும் கலந்து கொண்டேன்.

இந்த ஊழியர் மாநாட்டிலே உற்சாகம் கரை புரண்டோடி யது. கோவை மாநாட்டில் முற்போக்குப் புயல் வீசுமென்பதற் கான அறிகுறிகள் இந்த மாநாட்டில் காணப்பட்டன. எனது பேச்சு கோவை மாநாட்டுப் பேச்சுக்கு ஒத்திகையாக அமைந்தது. மாநாட்டிலே, சுயாட்சித் தன்மையுடைய சோசலிசத் தமிழரசு கோரும் தீர்மானம் ஒருமனதுடன் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தை நான்தான் முன்மொழிந்தேன்.

பொள்ளாச்சி மாநாடு முடிந்ததும் கோவை சென்றேன். அங்குத் தமிழ் மாநிலத்தின் பல ஊர்களிலிருந்தும் தமிழரசுக் கழகத் தோழர்கள் வந்திருந்தனர். அப்போது டி.கே.எஸ். சகோதரர்கள் கோவையில் முகாம் செய்து நாடகம் நடத்திக் கொண்டிருந்தனர். நான் அவர்களின் விருந்தாளியாக இருந்தேன். நாடகக் கம்பெனி வீட்டிலேயே தமிழரசுக் கழகத்தைச் சார்ந்த முக்கிய ஊழியர்களைச் சந்தித்து கோவை மாநாட்டில் நடந்துகொள்ள வேண்டிய விதம்பற்றி விளக்கினேன்.

மாகாண மாநாடு கூடவிருந்த நாளுக்கு முதல் நாள் மாலை கோவை நகரில் மாணவர் தமிழரசுக் கழகச் சார்பில் பொதுக் கூட்டம் நடத்த அதன் செயலாளர் திரு. ரசிதாசலம் அவர்கள் முயன்றார். போலீசார் அனுமதி தர மறுத்துவிட்டனர். கோவை மாநாட்டில் பிரதிநிதிகளும், பார்வையாளர்களான பொது மக்களும் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதனை விளக்குவதற்காகவே நகரில் பொதுக்கூட்டம் நடத்த விரும்பினேன். ''மாகாண மாநாட்டையொட்டி நகரில் பதட்ட நிலை இருந்து வருவதால் தமிழரசுக் கழகக் கூட்டத்திற்கு அனுமதி தர முடி யாது'' என்று அதிகார வர்க்கம் கூறிவிட்டது.

என்ன நேருமோ என்று அஞ்சிய போலீஸ் அதிகாரிகள் நகர் முழுவதும் பலமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருந்தனர். மாநாட்டுப் பந்தலைச் சுற்றிலும் ரிசர்வ் போலீசார் நிறுத்தப் பட்டிருந்தனர்.

கோவை மாநாடு

ஜனவரி மாதம் 18-ஆம் தேதி பிற்பகல் மிகவும் அழகுற அமைக்கப்பட்ட மிகப் பெரிய கொட்டகையின் 43ஆவது தமிழ் மாகாண அரசியல் மாநாடு ஆரம்பமானது. மாநாட்டுத் தலைவர் திரு. கு.காமராசர், முதலமைச்சர் ஓமந்தூர் ரெட்டியார், அமைச்சர்களான மீ. பக்தவத்சலம், டி.எஸ். அவினாசிலிங்கம், டி. கோபால ரெட்டி, டி. காளா வெங்கடராவ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி. சுப்பிரமணியம், ஓ.வி. அளகேசன் ஆகியோர் மேடையில் இருந்தனர். காங்கிரசைச் சாராத தொழிலறிஞர் ஜி.டி. நாயுடு, கலைஞர் தி.க. சண்முகம், கலைஞர் தி.க. பகவதி, தொழிலதிபர் சி.எஸ். இரத்தினசபாபதி முதலியார் ஆகிய நகரப் பிரமுகர்களும் பார்வையாளராக மேடையில் இருந்தனர். மூவாயிரத்துக்கு மேற்பட்ட பிரதிநிதிகளும், பதினாயிரக் கணக்கான பொதுமக்களும் குழுமியிருந்தனர்.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் கூடும் முதல் மாநாடாதலாலும், தலைவர் தேர்தலில் எனக்கும் திரு. காமராசருக்கும் ஏற்பட்ட கடும் போட்டியால் பரபரப்பு ஏற்பட்டிருந்ததாலும் தமிழ்நாட்டு மக்களுடைய கவனம் கோவை மாநாட்டின் மீதிருந்ததெனலாம்.

இறை வாழ்த்துப் பாடி முடித்திருந்த நேரத்தில் நான் மாநாட்டுப் பந்தலில் பிரவேசித்தேன். நானே வியப்புறும் வகையில் பிரதிநிதிகளும், பார்வையாளர்களும் வாழ்த்தொலி எழுப்பியும், கைதட்டி ஆரவாரம் செய்தும் என்னை வரவேற்றனர். நான் மேடைக்குச் செல்லாமல், மேடையின் எதிரில் பிரதிநிதி களோடு பிரதிநிதியாக அமர்ந்தேன்.

1946-இல் தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு திரு. காமராசருடன் போட்டியிட்டவரும், கோவை மாநாட்டு

வரவேற்புக் குழுத் தலைவருமான திரு.சி.பி. சுப்பையா அவர்கள் என்னைக் கண்டதும், மேடையை விட்டிறங்கி வந்து, என்னைக் கட்டியணைத்துக் கொண்டு, மேடைக்கு அழைத்துச் சென்று திரு.கு.காமராசரின் அருகில் அமர்த்தி வைத்தார். அந்த நேரத்தில் மாநாட்டில் குழுமியிருந்த மக்கள் செய்த மகிழ்ச்சி ஆரவாரம் என்றும் என்னால் மறக்க முடியாததாகும்.

திரு.சி.பி. சுப்பையா அவர்கள் என்னிடம் காட்டிய மரியாதையும், பிரதிநிதிகளிடத்தும் பார்வையாளர்களிடத்தும் வெளிப்பட்ட அன்பும் மனச்சாட்சிப்படி நடந்து கொள்வதற்கான உற்சாகத்தை எனக்களித்தன.

தமது தலைமையுரைக்குப் பின்னர், நான்கு தீர்மானங்களை மட்டும் நிறைவேற்றிவிட்டு மாநாடு மறுநாளைக்கு ஒத்தி வைக்கப்படும் என்று திரு. காமராசர் அறிவித்தார். அத்தீர்மானங்கள் அச்சடிக்கப்பட்டு பிரதிநிதிகளுக்கு வழங்கப் பட்டன. அவை வருமாறு:

(1) மறைந்த தேச பக்தர்களுக்கு அனுதாபம் தெரிவித்தல், (2) விடுதலைப் போரில் உயிர்நீத்த தியாகிகளுக்கு வணக்கம், (3) காந்தியடிகள் உண்ணாவிரதம் வெற்றி பெற்றதற்குப் பாராட்டு, (4) மொழிவழி மாகாணப் பிரிவினைக் கோரிக்கை.

இந்த நான்கும் விவாதத்திற்கிடமில்லாத விஷயங்களாத லால், தலைமைப் பீடத்திலுள்ள தாமே அவற்றைப் பிரேரேபித்து விடுவதாகத் திரு. காமராசர் அறிவித்தார். நான்காவதான மொழிவழி மாநிலக் கோரிக்கை தீர்மானத்திற்கு நான் திருத்தம் கொடுக்கவிருப்பதால், அதன்மீது விவாதம் எழக்கூடுமென்றும், ஆகவே, அதனை மற்ற தீர்மானங்களுடன் சேர்த்து மறுநாள் மாநாட்டில் கொண்டு வரலாமென்றும் கூறினேன். மாநாட்டுத் தலைவர் காமராசரும் என் கருத்துக்கு இசைந்தார்.

தமிழரசு கோரும் தீர்மானத்தைத் திரு. காமராசருக்கு முன் கூட்டியே அனுப்பி, அதனைக் கோவை மாநாட்டில் முன்மொழிய என்னை அனுமதிக்க வேண்டுமென்றும் கடிதம் எழுதி யிருந்தேன். அந்தத் தீர்மானம் வருமாறு:

"இந்தியாவைத் தாமதமின்றி மொழிவழி மாநிலங்களாகப் பிரிக்க வேண்டுமென்றும், அப்படிப் பிரிக்கப்படும் மாநிலங்களில் வாழும் மக்கள் இந்திய ஐக்கியத்திற்குப் பாதகமில்லாமல் தங்கள் தங்கள் தாயகங்களில் சுதந்திர சோசலிசக் குடியரசு அமைத்துக் கொள்ள உரிமை வழங்க வேண்டுமென்றும் இம் மாநாடு மத்திய அரசாங்கத்தாரை வற்புறுத்துகிறது.

"இதன்படி, தமிழ்நாட்டைத் தனி மாநிலமாக்கி அதில் சுயாட்சி அந்தஸ்துடைய சோசலிசத் தமிழ்க் குடியரசை அமைக்கும் வகையில் திட்டமிட்டு வேலை செய்யுமாறு தமிழ்நாடு காங்கிரசுக்கு இம் மாநாடு கட்டளையிடுகிறது."

நான் அனுப்பிய இந்தத் தீர்மானத்தை முறைப்படி விஷயாலோசனைக் கமிட்டியின் பரிசீலனைக்கு மாநாட்டுத் தலைவர் வைத்திருக்க வேண்டும். அவர் அப்படிச் செய்ய வில்லை. ஆனால், எனது முயற்சியை முறியடிக்கும் சூழ்ச்சியாக, எனது தீர்மானத்தின் ஒரு பகுதியான மொழிவழி மாகாண அமைப்புக் கோரிக்கையை மட்டும் தாமே தலைமைப் பீடத்திலிருந்து கொண்டு பிரேரேபித்து — அதன்மீது பேசுவதற்கும் எனக்கு வாய்ப்பளிக்காமல் — விவாதமின்றி நிறைவேற்றி வைத்துவிட முயன்றார். இந்தச் சூழ்ச்சியைப் புறங்காண அவரது தீர்மானத்திற்குத் திருத்தம் கொடுத்து தமிழரசுக் கழகத்தின் இதய கீதமான சுயாட்சிக் கோரிக்கைக்கு மாநாட்டுப் பிரதிநிதிகளுடைய ஆதரவைப் பெற முயன்றேன்.

சோஷலிசத் தீர்மானம்

மறுநாள் (ஜனவரி 19) காலை மாநாடு திரு.காமராசர் தலைமையில் கூடியது. அப்போது இந்தியாவை சோசலிச நாடாகச் செய்ய வேண்டுமென்று காங்கிரஸ் மேலிடத்தவரைக் கோரும் தீர்மானமொன்றை திரு.டி.எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் முன்மொழிந்தார். மாநாட்டுத் தலைவருக்கு நான் அனுப்பியிருந்த தீர்மானத்தில் சோசலிசமும் வற்புறுத்தப்பட்டிருந்ததால், என் பெயரில் அந்தத் தீர்மானம் வருவதற்கு இடம் தராமல் செய்துவிடும் பொருட்டு, திரு. அவினாசிலிங்கம்

செட்டியாரைக் கொண்டு சோசலிசத் தீர்மானத்தை நிறைவேற்றி விட முனைந்தார் திரு. காமராசர்.

இந்தத் தீர்மானத்தின் மீது பேச நான் அனுமதி கோரினேன். காமராசர் பெருமனது வைத்து என்னை அனுமதித்தார். எனது பேச்சின் முக்கிய பகுதிகள் வருமாறு:

''இந்தியாவைச் சோசலிச நாடாகச் செய்ய வேண்டுமென்ற ஆவலை இத்தீர்மானம் வெளியிடுகிறது. பெருஞ்செல்வந்தரான அமைச்சர் அவினாசிலிங்கம் தீர்மானத்தை வெகு உற்சாகத்துடன் முன்மொழிந்தார். இதனால் தீர்மானத்தையே நாம் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது (கைதட்டல்). பணக்காரராக இருப்பதால் அவர் சோசலிசத்தை ஆதரிக்கவே கூடாது என்பது என் கருத்தல்ல. அவரது ஆதரவு தேய்பிறையாகக் குறுகாமல் வளர்பிறையாகப் பெருகுமானால் — தனிவுடைமையைக் கைவிட்டு சோசலிச அணிவகுப்பில் அவர் கலப்பாரானால் எனது ஐயம் அகலும்; ஆனந்தம் பெருகும். திரு. அவினாசிலிங்கம் கோவை முதலாளிகள் சார்பாக அல்லாமல் அமைச்சர் குழுவின் சார்பாகத்தான் இத்தீர்மானத்தை முன்மொழிந் திருப்பார் (பெருத்த கைதட்டல்). எனவே, இத்தீர்மானத்தை அமுல் நடத்த அவரது அரசாங்கம் கடமைப் பட்டிருக்கிறது.

''ஜனநாயக சோசலிசம் வேண்டும் என்று கோஷமிடுவதோடு தீர்மானம் திருப்தி அடைந்துவிடுகிறது. இது, பிள்ளையார் பிடிப்பதற்காகக் களிமண்ணை மொத்தமாக வைத்தது போலாகும். ஆனால், வெறும் களி மண் உருண்டை பிள்ளையாராகி விடுமா? அதற்குக் கண், காது, மூக்கு முதலிய அங்கங்கள் அமைந்த பிறகுதான் அது வணங்குவதற்குரிய பிள்ளையாராகும். அதேபோல் இந்தத் தீர்மானத்திற்கும் செயல்முறைக்கான கண், காது, மூக்கு முதலியவற்றை வைக்க வேண்டும். 'வர்க்க உணர்ச்சி' என்ற உயிர்த் துடிப்பு காணவேண்டும். சோசலிசத்தில் இந்த மாநாட்டுக்குள்ள ஆவலைத் தெரிவிப்பதால் மட்டும் பலனில்லை.

''ஆனால், உருவம் தருவது யார் என்பதே முக்கிய பிரச்சினை. பிள்ளையார் பிடித்துப் பழக்கமில்லாதவர் அல்லது பிள்ளையார் பிடிக்க மனமில்லாதவர் கையில் மண்ணைத் தந்தால் அவர்கள் பிடிப்பது பிள்ளையாராக இருக்காது. குரங்காகத்தான் இருக்கும்.

''காக்கையும் குயிலும் கறுப்பு நிறமானதால் சாதாரண காலத்தில், எது குயில் எது காக்கை என்று பிரித்துப் பார்ப்பது கடினம். என்றாலும், வசந்த காலத்தில் வாய் திறந்து கூவுவது அவற்றின் இயற்கை. அப்போது குரலின் வேற்றுமையைக் கொண்டு, எது காக்கை, எது குயில் என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். அதுபோலவே, அதிகார பீடத்தில் காங்கிரஸ் ஏறியுள்ள இந்நாள் வசந்த காலம் போன்றது. அமைச்சர்களின் குரலைக் கொண்டு, அவர்தம் கொள்கையைக் கொண்டு அவர்களைப் பாராட்டவும், குறை கூறவும் நமக்கு உரிமையுண்டு. விடுதலைப் பேராட்ட காலத்திய தலைமை இன்று பொருந்தாது.

''இன்று நீங்கள் நிறைவேற்ற விருக்கும் தீர்மானம் காங்கிரஸ் மேலிடத்தார் மூலம்தான் அமுல் நடத்தப்பட வேண்டும். ஆனால், மேலிடத்தில் பிரதான பதவிகளை வகிப்பவர்கள் சோசலிசத்திற்கு மாறுபட்ட, சோசலிசத்தை விரும்பாத சொத்துரிமையுடையவர்களாவர். முதலாளித் துவக் குரங்கு பிடித்துப் பழக்கப்பட்ட அவர்கள், வணங்க விரும்பும் பிள்ளையார் பிடிப்பார்களென்று நம்பினால் இறுதியில் ஏமாற்றமே அடைவீர்கள். காங்கிரசின் மூலம் சோசலிச இந்தியா உருவாக வேண்டுமானால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் சொத்துரிமை உடையவர்கள் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டிகளில் இடம் பெறாத வகையில் காங்கிரஸ் விதிகளைத் திருத்த வேண்டும் (கைதட்டல்). திறமை, தேசபக்தி, தியாகம் என்று தங்களைப் பற்றித் தாங்களே தீர்ப்பு கூறிக் கொண்டு பணக்காரக் கூட்டம் காங்கிரசை முற்றுகையிட்டுள்ள இன்றைய நிலைமையை மாற்றி அமைப்பதுதான் இந்தத் தீர்மானத்திற்கு உருவமும் உயிரும் அளிப்பதற்கான ஒரே வழி (பலத்த கைதட்டல்).

('தமிழ் முரசு', 15.2.48)

தமிழ்நாடு காங்கிரசின் வரலாற்றிலே சோசலிசத் தீர்மானம் ஒன்று முதன் முதலாக நிறைவேற்றப்பட்டது கோவை மாநாட்டின் போதுதான்.

இரண்டாம் நாள் முற்பகலில் சோசலிசத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றிய பின்னர் இடைவேளைக்குத் தள்ளி வைக்கப்பட்டு, திரும்பவும் பிற்பகலில் மாநாடு கூடியபோது தான் மாநிலச் சுயாட்சிப் புயல் வீசியது.

'சி.வே.' கட்டுரை

தமிழ் மாகாண அரசியல் மாநாட்டின் நடவடிக்கைகளை விமர்சித்து ''கோவையில் நடந்ததென்ன?'' என்னுந் தலைப்பில் ''சி.வே.'' (திரு.சி.வேங்கடசாமி எம்.ஏ.) அவர்கள் 'தமிழ் முரசு' 15.2.48 இதழில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் இரண்டாம் நாள் மாநாட்டின் பிற்பகல் நடவடிக்கை பற்றி அவர் விமர்சித்ததை இங்கு அப்படியே தருகிறேன். ஆம்; தனிப்பட்ட முறையில் — ஆனால், கொள்கைக்காக — திரு. காமராசருடன் பதினாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் சுமார் ஒரு மணி நேரம் நான் நடத்திய போராட்டத்தை வருணித்தெழுத தன்னடக்கத்தால் எனது எழுதுகோல் தயங்குகிறது. அதனால், சிறிது நேரம் 'சி.வே.'யின் முதுகில் மறைந்து கொள்கிறேன்!

☆ ★ ☆ ★ ☆

ஜனவரி 19-ஆந் தேதி பிற்பகல் மாநாடு கூடியதும் இரண்டொரு சாதாரணத் தீர்மானங்கள் நிறைவேறிய பின்னர், மொழிவழி மாகாணப் பிரிவினைத் தீர்மானத்தை திரு.எம். பக்தவத்சலம் பிரேரேபித்தார். தீர்மானத்தில், ''தமிழர் பெருவாரியாகவுள்ள பிரதேசங்களை ஒன்றுபடுத்தித் தமிழ் மாகாணம் அமைக்கப்பட வேண்டும்'' என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. தீர்மானத்தின் மீது திரு. பக்தவத்சலம் பேசுகையில், ஆந்திரர்கள் சென்னை தமதென்று கூறுவதை அழுத்தமாகக் கண்டித்ததுடன், 'திராவிடஸ்தான்' கோரிக்கை மேலும் நாட்டைத் துண்டாடுவதாகும் என்றார்.

முறைப்படி தீர்மானம் ஆமோதிக்கப்பட்ட பிறகு அத்தீர்மானத்திற்கு திரு.ம.பொ.சி. பின்வரும் திருத்தத்தைப் பிரேரேபித்தார்.

''குமரி முதல் வேங்கடம் வரையுள்ள தமிழகத்தைத் தனி மாகாணமாகச் செய்வதுடன், அதில் சோஷலிசத் தமிழ்க் குடியரசு அமைக்க வேண்டும்.''

இந்தத் திருத்தத்தைப் பிரேரேபித்து ம.பொ.சி. பேசியதாவது:

''இங்கு வந்துள்ள அசல் தீர்மானம் தமிழர் பெருவாரியாக உள்ள பிரதேசங்கள் கொண்ட தமிழ் மாகாணம் வேண்டுமென்கிறது. இது, சேலத்தில் ஹோசூரும், செங்கற்பட்டில் பொன்னேரியும், வடாற் காட்டில் குடியாத்தமும் தமிழர் பெருவாரியாக இல்லாத பிரதேசங்களென்று காரணங்காட்டி ஆந்திரர்கள் அபகரிக்கப் பார்க்கிறார்களே, அதை ஆதரிப்பது போலாகும். இப்படியே பறிகொடுத்துக் கொண்டு போனால் தமிழருக்கென்று ஒரு தாயகமே இல்லாமற் போகும் காலமும் வந்துவிடுமென்பதில் ஐயமில்லை. இமயத்தை இழந்து வேங்கடத்திடம் வந்தோம். மெள்ள மெள்ள அங்கிருந்தும் தெற்கு நோக்கிப் பின்வாங்கி வந்தால் தமிழினத்தைக் குமரியில் நீராட்டி இறுதிச் சடங்கு செய்ய வேண்டியதுதான்.

''வெறும் மாகாணப் பிரிவினையோடு தீர்மானத் தைக் கொண்டு வந்தவர்கள் திருப்தியடைகின்றனர். என்னால் அது முடியாது. வரலாற்றுப்படி, தமிழருக்குத் தாயகம் உண்டானால், அதே வரலாற்றுப்படி அந்தத் தாயகத்தில் தன்னரசு நிறுவவும் உரிமையுண்டு.''

இந்த நிலையில் தலைவர் காமராசர் குறுக்கிட்டு, ''கிராமணியார் திருத்தத்திலுள்ள 'குமரி முதல் வேங்கடம் வரையிலுள்ள தமிழகம் அமையவேண்டும்' என்பதை ஏற்றுக் கொள்கிறேன். 'தமிழகத்தில் சோஷலிசக் குடியரசு

அமைய வேண்டும்' என்ற பின் பகுதி காங்கிரஸ் காரிய கமிட்டியின் தீர்மானங்களுக்கு விரோதமாகையால் அதை நான் நிராகரிக்கிறேன்'' என்றார்.

பின்னர் ம.பொ.சி. மேலும் பேசியதாவது:

''தலைவர் அவசரப்பட்டுத் தீர்ப்பளித்திருக்கிறார். இது ஒரு ஜனநாயக ஸ்தாபத்தின் அரசியல் மாநாடு. இதை நடத்துவதற்குச் சில விதிகள் உண்டு. அந்த விதிகளின்படி நான் எனது திருத்தத்திற்கா காரணங் களை விளக்கிக் கூறிய பின்னர்தான் தலைவர் தீர்ப்பளிக் கலாம். திருத்தத்தின் கருத்தை நான் விளக்கினால் தலை வரின் தீர்ப்பே தேவையிருக்காது. எனது திருத்தம் காங்கிரசின் அடிப்படைக் கொள்கைகளுக்கும் காரியக் கமிட்டியின் தீர்மானங்களுக்கும் பொருத்தமானதே யொழிய, புறம்பானதோ, முரண்பட்டதோ அல்ல. இதை விளக்கிக் கூற தலைவர் அவகாசமளிக்க வேண்டும்.''

தலைவர்: (ம.பொ.சி.யை நோக்கி) நான் மாநாட்டின் தலைவர்; எனது தீர்ப்புக்குப் பிறகு நீங்கள் பேசக்கூடாது. உட்காருங்கள்.

தலைவரின் இச்செயலைக் கண்டு பிரதிநிதிகள் ஆத்திரமடைந்தனர். ''கிராமணியார் பேசட்டும்!'' என்ற குரல்கள் மாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஒலித்தன.

தலைவர், தமது தீர்ப்புக்கான காரணங்களை விளக்குகையில், ''கிராமணியார் தனி ஸ்டேட் கேட்கிறார். இதனால் காங்கிரஸ் அமைக்க விரும்பும் ஐக்கிய இந்தியா சீர்குலைந்துவிடும். அதனால்தான் அவரது தீர்மானத்தை நான் நிராகரித்தேன்'' என்றார்.

ம.பொ.சி.: ''நீங்கள் சொல்வது தவறு. எனது திருத்தம் ஐக்கிய இந்தியாவுக்கு விரோதமல்ல. என்னைப் பேசவிடுங்கள். விளக்குகிறேன்'' என்றார்.

திரு.காமராசர்: ''திருத்தத்தை நிராகரித்த பிறகு உங்களைப் பேசவிட முடியாது'' என்று கூறி, மேலும் பேச முயன்றார்.

அதற்குள் பந்தலின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ''நீ உட்கார். கிராமணியார் பேசட்டும்! ஹிட்லரிஸம் செய்யாதே! பாசிஸம் ஒழிக! தமிழ்க் குடியரசு வேண்டும்'' என்ற கோஷங்கள் எழுந்தன. தலைவர் காமராசர் எவ்வளவு வேண்டிக் கொண்டும் அமைதி நிலவவில்லை. சில நிமிஷங்கள் அவர் ஒலிபெருக்கி முன்னே ஸ்தம்பித்து நின்றார். தம்மால் அமைதியை உண்டாக்க முடியாதென்பதை அறிந்ததும், திரு. சி.பி. சுப்பையாவை அழைத்து, அமைதி நிலவச் செய்யுமாறு வேண்டிக் கொண்டு தமது இருப்பிடத்தில் அமர்ந்தார்.

திரு. சுப்பையாவின் வேண்டுகோளுக்குப் பிறகு மாநாட்டில் அமைதி நிலவியது. பின்னர் ம.பொ.சி. மீண்டும் பேசியதாவது:

> *''விடுதலைப் போரில் நான் தலைவருடன் ஒத்துழைத்தவன். ஒரு நாளல்ல, ஓராண்டல்ல; இருபதாண்டுகளாக! தேசத்திற்கு அவர் எவ்வளவு இன்னல்கள் ஏற்றாரோ அவ்வளவு நானும் ஏற்றதுண்டு. அப்படியிருந்தும், எனது கருத்தை விளக்கும் வரையில் கூட அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஒரு சகோதர தேசபக்தனிடம் சகிப்புத் தன்மை காட்டக்கூட அவரால் முடியவில்லை.*
>
> *''ஆகஸ்டுப் பதினைந்துக்குப் பிறகு நமது போராட்டம் முடிந்து புது வாழ்வு துவங்குகிறது. இந்த மாறுதல் கட்டத்தில் இப்போதுதான் நாம் முதன் முதலாகக் கூடுகிறோம். இந்த அரிய நேரத்தில் தமிழ்நாட்டின் வருங்கால அரசியல் எப்படி அமைய வேண்டும் என்று சிந்திக்கத் தூண்டுவது தவறா? நான் கேட்கும் குடியரசு, தமிழ்நாட்டில் வேறெங்கும் நுழையாமல் வேலிகட்டி வாழ்வதல்ல; தமிழ்நாட்டைப் பிற நாட்டார் சுரண்டுவது — அரசியலில் ஆதிக்கம்*

செலுத்துவது கூடாது; தமிழகம் தமிழரால் ஆளப்பட வேண்டும் என்பதே. இதைக் கண்டு காமராசரோ, பிறரோ கோபம் கொள்வானேன்? தமிழ்நாட்டைப் பிற இனத்தார் சுரண்டுவதை எதிர்க்க அவர்கள் கடமைப்படவில்லையா...?''

தலைவர்: நான் நிராகரித்த விஷயத்தின் மீதே நீங்கள் பேசுகிறீர்கள். இதை அனுமதிக்க முடியாது. உட்காருங்கள்.

மீண்டும், ''கிராமணியார் பேசட்டும்'' என்ற குரல்கள் ஒலித்தன. 'தலைவர் தீர்ப்புக்குக் கட்டுப்படுங்கள்' என்றும் மேடையின் வலப்புறமிருந்த ஒரு சிலர் ம.பொ.சி.யைப் பார்த்து கோஷித்தனர். இந்நிலையில் காமராசர் மீண்டும் ஒலிபெருக்கியின் முன் வந்து பேச முயன்றார். ஆனால், முடியவில்லை. பிரதிநிதிகளும் பார்வையாளரும் கிராமணியார் பேசித்தான் தீரவேண்டுமென்று பிடிவாதமாகக் கோஷித்தனர். அச்சமயம் மாநாட்டுத் தலைவர் பிரஸ்தாப தீர்மானத்தையும், அதன் மீது ம.பொ.சி. கொண்டு வந்த திருத்தத்தையும் மறுநாள் காலை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதாகவும், அதற்காகச் சண்முகா தியேட்டரில் மாநாட்டுப் பிரதிநிதிகளின் விசேஷக் கூட்டத்தைக் கூட்டுவதாகவும், அதில் பார்வையாளரும் பத்திரிகை நிருபர்களும் அனுமதிக்கப்பட மாட்டார்களென்றும் தெரிவித்தார்.

தலைவரின் இந்த அறிவிப்பும் பிரநிதிகளுக்குத் திருப்தி தரவில்லை. ''மாநாட்டைத் தள்ளி வைத்துச் சூழ்ச்சி செய்யாதே'' என்ற குரல்கள் கிளம்பின. மாநாட்டுத் தலைவரின் முடிவை ஆதரித்தும் எதிர்த்தும் ஓயாமல் கோஷங்கள் கிளம்பிய வண்ணமிருந்தன. தொண்டர் படைத் தலைவரும் தொண்டர்களும் அமைதியை நிலைநாட்ட முயன்றும் முடியவில்லை. மேடை மீதிருந்த சில தலைவர்களும் பிரதிநிதிகளிடையே வந்து அமைதியாக இருக்குமாறு வேண்டிக் கொண்டனர். அதுவும் பயனற்றுப் போயிற்று. ஆரம்ப முதல் சுமார் முக்கால் மணி நேரம் மாநாட்டில் தொடர்ந்து அமைதியின்மை நிலவியது. இதன் பிறகு தலைவர் காமராசர், ம.பொ.சி., திரு.சி.பி. சுப்பையா ஆகிய

மூவரும் சில நிமிஷங்கள் கலந்து பேசிய பின்னர், ம.பொ.சி. ஒலிபெருக்கியின் முன் வந்து மீண்டும் பேசியதாவது:

''இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்த உதவி புரிய நான் கடமைப்பட்டவன். பிரதிநிதிகளாகிய நீங்களும் அப்படித்தான். ஆனால், தலைவரின் கண்மூடித் தனமான தீர்ப்பால் நிலைமை சீர்குலைந்து விட்டது. இதைக் கண்டு மகிழவில்லை; வருத்தப்படு கிறேன். ''பிரதிநிதிகளோடு பார்வையாளர்களும் கலந்திருப்பதால் இன்று திருத்தத்தின் மீது வாக்கெடுப்பது சிரமமாக இருக்கும்'' என்கிறார் தலைவர். பிரதிநிதிகளையும், பார்வையாளர்களையும் பிரித்து வைக்கவேண்டிய பொறுப்பு தலைவரையும், வரவேற்புக் கமிட்டியினரையும் சார்ந்தது. அவர்கள் கடமையில் தவறியதற்கு எனக்குத் தண்டனை விதிப்பதா? இப்போதும் தலைவருக்கு மனமிருந்தால் பிரதிநிதிகளிடமிருந்து பார்வையாளரைப் பிரிப்பது கஷ்டமல்ல. ஆனால், தலைவரே ஒரு தீர்மானத்திற்காக, அதையொட்டிய திருத்தத்திற்காக மட்டும் நாளைக்கு மாநாட்டின் விசேஷக் கூட்டத்தைக் கூட்டுவதாகக் கூறுகிறார். அதுவும் மாநாடு தியேட்டரில் கூடப் போகிறதாம். பார்வையாளரோ, பத்திரிகைப் பிரதிநிதி களோ அனுமதிக்கப்பட மாட்டார்களாம்! அப்படி யானால் மாநாட்டின் போக்கு எப்படியிருக்குமென்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. தலைவரைப் போன்ற தோழர்களிடம் இருபது ஆண்டுகள் பழகியதிலிருந்து இதைச் சொல்கிறேன்; பிரதிநிதிகள் ரேஷன் செய்யப்பட்டு தியேட்டருக்குள் அனுமதிக்கப் படுவார்கள். என்னை ஆதரிப்பவர்கள் அங்கே இடம் பெறுவார்களா என்பதே ஐயத்திற்குரியது. பயனற்ற ஒரு நாடகத்திற்காக உங்கள் அனைவரையும் ஒருநாள் அதிகமாக கோவையில் நிறுத்திக் கஷ்டப்படுத்த நான் விரும்பவில்லை.

''தமிழ்க் குடியரசுக் கோரிக்கைக்கு நீங்கள் தரும் பேராதரவை நான் தெரிந்து கொண்டுவிட்டேன். காமராசரும் கண்ணெதிரே காணுகிறார். அவர் அவசரப்பட்டுநி ராகரித்ததே உங்கள் பேராதரவைக்

கண்டு அஞ்சித்தான் என்பது தெரிந்துவிட்டது. எனது திருத்தத்தின் மீது இப்போதே வாக்கெடுத்தால் வெற்றி என்னுடையதே. ஆனால், அதை வற்புறுத்துவதன் மூலம் மாநாட்டின் அமைதியின்மை அதிகப்படுவதை நான் விரும்பவில்லை. எனவே, தலைவர் எனது திருத்தத்தின் பிற்பகுதியை நிராகரித்துக் கொடுத்த தீர்ப்புக்கு நான் கட்டுப்படுகிறேன்.

''ஆனால், ''தமிழ்க் குடியரசு'' என்ற வார்த்தையை இன்று வெறுக்கும் இதே காமராசர், ஓராண்டுக்கு முன்னர் பொங்கல் திருவிழாவைத் தமிழர் திருவிழாவாகக் கொண்டாடுமாறு தமிழ்த் தலைவர்கள் வெளியிட்ட வேண்டுகோளில் கையொப்பமிட்டுள்ளார் என்பதனை அவருக்கு நினைப்பூட்டி எனது பேச்சை முடிக்கிறேன்!''

திரு.ம.பொ.சி. அந்த அறிக்கையை மாநாட்டில் படித்துக் காட்டினார். அதில் தமிழகத்தைத் தனி மாநிலமாக்கி, அதன் அரசியலை சுயநிர்ணய வழியே அமைக்க தமிழருக்கு உரிமை உண்டு என்றும், அந்த உரிமையை வற்புறுத்திப் பொங்கல் விழாவன்று தமிழ் மக்கள் கூட்டங்கள் கூட்டித் தீர்மானம் நிறைவேற்றுமாறும் கூறப்பட்டிருந்தது.

இதைக் கேட்டதும் அதுவரை தலைவரின் எதேச்சாதிகாரப் போக்கை ஆதரித்துக் கோஷமிட்ட ஒரு சிலரும் சிந்திக்கத் துவங்கினர். காமராசர், ம.பொ.சி.யிடமிருந்து அந்த அறிக்கையை வாங்கிப் படித்துப் பார்த்து மௌனம் சா த்தார்.

பழிசி.யின் பேச்சுக்குப் பின்னர் மாநாட்டில் அமைதி நிலவியது. தலைவர் காமராசர், ம.பொ.சி.யைப் பாராட்டிப் பேசுகையில், காங்கிரஸ் ஸ்தாபனத்தின் உயிர்நாடி கட்டுப்பாடே என்றும், கிராமணியார் அத்தகைய கட்டுப்பாட்டை ஏற்றுக் கொண்டதன் மூலம் இதர காங்கிரஸ் ஊழியர்களுக்கு வழிகாட்டியாக இருந்ததற்கும், மாநாட்டின் எஞ்சிய நடவடிக்கைகளை அமைதியோடு நடத்தத் துணை புரிந்ததற்கும் அவரைத் தாம் பாராட்டுவதாகவும் கூறினார்.

★ ☆ ★ ☆ ★

இதுவரை கோவை மாநாட்டில் நிகழ்ந்த போராட்டம் பற்றி 'சி.வே.'. வருணிக்கக் கேட்டோம்.

வெற்றிபெற்றும் வேதனை

மாகாண அரசியல் மாநாடு முடிவு பெற்றபோது என் மனதில் அமைதி நிலவவில்லை. திரு. காமராசர் தமிழ்நாட்டின் தனி நலன்களில் சிறிதளவேனும் அக்கறை காட்டியிருந்தால், நான் கொடுத்த திருத்தத்தை அவர் ஏற்றுக் கொண்டிருக்க முடியும். மாநாட்டில் குழுமிய பிரதிநிதிகளில், பார்வையாளர் களில் மிகப் பெரும்பாலோர் எனக்கு ஆதரவாக இருந்தனரென் றாலும், திரு. காமராசர் ஆதரவு தரத் தவறியமையால் என் மனம் வேதனை அடைந்தது. பிற மாநிலங்களில் மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர்கள் மொழி — இனம் — மாநிலம் ஆகியவை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளிலே பிரதேசப் பற்றுடன் நடந்து கொள்ளுகின்றனர். அதனை, தேசிய விரோதமான செயலென்று அவர்கள் கருதவில்லை. ஏன்? தமிழ்நாட்டின் தேசியத் தலைவர்களான வ.உ.சிதம்பரனார், சி. சுப்பிரமணிய பாரதியார், திரு.வி.கலியாணசுந்தரனார், நாவலர் எஸ். சத்தியமூர்த்தி ஆகியோரும் தாய் மொழியான தமிழிடத்தும், தாய் வீடான தமிழ்நாட்டிடத்தும் பற்றுடையவர்களாகவே இருந்தனர். துரதிருஷ்டவசமாக திரு.கு. காமராசர் தனக்கெனத் தனி வழி வகுத்துக் கொண்டார். தமிழின் தனி வாழ்வுக்கும், தமிழினத்தின் தனி நலன்களுக்கும் விரோதமாகச் செயல்படுவது தான் உண்மையான தேசியம் என்று அவர் எண்ணுகிறார்.

மாகாண மாநாடு முடிந்ததும் ஜனரி 21-ஆம் நாளன்று மாலை கோவை நகர மண்டபத் திடலில் மாவட்டத் தமிழரசுக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேசினேன். கோவை மாநாட்டில் நான் பிரேரேபித்திருந்த திருத்தத்தின் மீது ஏற்பட்ட குழப்பத்தைப் பற்றி விளக்கிப் பேசி, நகரப் பொதுமக்களுக்குத் தமிழரசுக் கழகத்தின் நிலையைத் தெளிவுபடுத்தினேன்.

திருமலைசாமியின் விமர்சனம்

மாகாண அரசியல் மாநாட்டில் ஏற்பட்ட கருத்துப் போராட்டம் வரலாற்றில் பதியத்தக்க நிகழ்ச்சியாகும். மாகாண காங்கிரஸ் மாநாடொன்றிலே நாட்டை சோசலிச மயமாக்க

வேண்டுமென்று முதன் முதலாகத் தீர்மானம் கொடுத்த பெருமை எனக்கே உரிமை என்பதைச் சிறிது அடக்கத்தோடு இங்குக் கூறிக் கொள்ளுகிறேன். (இதன் பின்னர் ஏழு ஆண்டுகள் கழித்து — 1955 ஜனவரியிலே — ஆவடி காங்கிரஸ் மகாசபையில் சோசலிசத் தீர்மானம் அதிகாரபூர்வமாக நிறைவேற்றப்பட்டது. அதுகூட, சோசலிச பாணிதான்; அசல் சோசலிசமல்ல!)

மத்திய அரசு உண்மையான சமஷ்டி அரசாகத் திகழவேண்டும்; மாநிலங்கள் முழு சுயாட்சி பெற்ற குடியரசுகளாக அமையவேண்டும் என்று மாகாண காங்கிரஸ் மாநாட்டிலே முதன் முதலாகத் தீர்மானம் கொடுத்தவன் நான்தான்! (சரியாகக் கால் நூற்றாண்டுக்குப் பின்னர்) இன்று ''மத்தியிலே கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி'' என்று நமது மாகாண முதல்வரே குரல் கொடுக்கக் கேட்கிறோம். 'அறம் வெல்லும்' என்னும் ஆன்றோர் சொல் பொய்க்குமா!

கோவை மாநாட்டில் நான் நடத்திய கருத்துப் போராட்டம் செய்தி இதழ்களிலே மிகவும் சுருக்கமாகவே பிரசுரிக்கப்பட்டது. திராவிடர் வட்டாரத்தின் ஏடுகளிலே அடியோடு இருட்டடிப்புச் செய்யப்பட்டது. தமிழரசுக் கழகம் தொடங்கிய நாள்தொட்டு, என்னை ஊக்கி உற்சாகப்படுத்தி எழுதிவந்த அண்ணாதுரை அவர்கள் கூடத் தமது ''திராவிட நாடு'' வார இதழில் கோவை மாநாட்டிலே தமிழரசுப் புயல் வீசியதுபற்றி ஒரு குறிப்புகூட எழுதவில்லை.

எனக்கு அறிமுகமில்லாத திருச்சி திருமலைசாமி அவர்கள், தமது 'நகரதூதன்' வார இதழிலே, 'பேனா நர்த்தனம்' என்னும் புனைபெயரில ா ாண மாநாட்டுத் தலைவர் தேர்தலில் திரு. காமராசருடன் நான் போட்டியிட்டதிலிருந்து கோவை மாநாடு முடியும்வரை நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி அவ்வப்போது விமர்சித்து எழுதி வந்தார். தொடர்ந்து நான்கைந்து இதழ்களில் அவரது விமர்சனக் கட்டுரை வெளியானது. ஆற்றல் மிக்க எழுத்தாளரான அவர் எழுதிய அந்தத் தொடர் கட்டுரை இப்போது என் கைவசத்தில் இல்லை. அது கிடைத்தால் தமிழரசு இயக்கம் பற்றிய சரித்திரச் சிறப்பு மிக்க சாசனங்களில் ஒன்றாக அமையும்.

கோவை மாநாட்டில் என்னைச் சிறுமைப்படுத்தும் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. ஆம்; தமிழ்நாடு காங்கிரஸ் தலைவருக்கு எதிராக — தமிழகத்தில் தமிழரசு அமைக்கக் கோரி நான் நடத்திய கருத்துப் போராட்டம் அந்தத் தலைவரைச் சார்ந்த கோஷ்டியினருக்கு எல்லையற்ற எரிச்சல் ஏற படுத்தியது. அதனால், மாநாட்டு மேடையில் என் அருகில் அமர்ந்து கொண்டே இடைவிடாமல் வசைமாரி பொழிந்து கொண்டிருந் தனர். அவற்றை மிகுந்த பொறுமையோடு தாங்கிக் கொண்டேன். அப்படித் தாங்கிக் கொள்வதற்கான பண்பாட்டினை என் அன்னை மொழி எனக்கு அளித்திருக்கிறது. வியப்பென்ன வென்றால், அவர்கள் அவ்வளவு பேரும் பிற்காலத்தில் திரு. காமராசரை வசை பாடுவோராக மாறியதுதான்.

மாகாண அரசியல் மாநாட்டுத் தலைவர் தேர்தலிலே ராஜாஜியும், அவரது குழுவினரில் பலரும் என்னைக் கைவிட்டு திரு. காமராசரை ஆதரித்தனரென்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதைவிடவும் 'அருமையான' செயல் ஒன்றை ராஜாஜி செய்தார். கோவை மாநாடு நடந்து கொண்டிருந்தபோது டில்லியிலிருந்து ராஜாஜியால் வாழ்த்துத் தந்தி ஒன்று திரு. காமராசர் பெயருக்கு அனுப்பப்பட்டது. தந்தியின் வாசகம் வருமாறு:

''மாகாண அரசியல் மாநாட்டுத் தலைவர் தேர்தலில் தாங்கள் வெற்றியடைந்த செய்தியை தாங்கள் எனக்கு அறிவிக்கு முன்பே நான் அறிந்து கொண்டேன். தமிழ்நாட்டார் புத்திசாலிகள். தங்கள் தலைமையை இழந்துவிட மாட்டார்கள். மாநாட்டிற்கு என் வாழ்த்துக்கள். இந்தச் செய்தியை நல்ல தமிழில் மொழி பெயர்த்து மாநாட்டிலே படிக்கச் செய்யுங்கள்.''

இந்தத் தந்திச் செய்தி கண்டு நான் வியப்போ, வேதனையோ அடையவில்லை. என் தலைவருடைய போக்கு எனக்குத் தெரியும். தன் தலைமைக்கு எதிராக இல்லாமல் திரு. காமராசர் தமிழ்நாடு காங்கிரசிலே மட்டும் ஆதிக்கம் பெற்றிருப்பதை ராஜாஜி எப்போதுமே விரும்பி வந்தார். இந்த விருப்பத்தைத்தான் தமது தந்தியிலே ராஜாஜி வெளிப்படுத்

தினார். அவர் கோரியபடி திரு.சி. சுப்பிரமணியம் தந்தியின் வாசகத்தைத் தமிழிலே மொழி பெயர்த்து மாநாட்டில் படித்தார். அப்போது நான் சிரித்தேன். நான் மட்டுமல்ல; மாநாட்டிலே குழுமியிருந்த பதினாயிரக்கணக்கான மக்களும் சிரித்தனர். சிரிக்க வேண்டிய இடத்தில் அழ முடியாதல்லவா!

அதனை இங்குக் கூறாமலே நான் விட்டிருக்கலாம். ஆனால், எனது வாழ்க்கைப் போராட்டத்திலே எத்தகைய சக்திகளை எல்லாம் நான் சந்திக்க வேண்டியிருந்தது என்பதனை விளக்குவதற்காகவே ராஜாஜியின் தந்திச் செய்தியினை இங்குக் குறிப்பிட வேண்டி வந்தது:

கோவை மாநாட்டிலே தாம் கண்டதை ஔவை தி.க. சண்முகம் அவர்கள், 'எனது நாடக வாழ்க்கை' என்ற தமது நூலில் கீழ்வருமாறு வருணிக்கிறார்:

''... ம.பொ.சி. ஒலிபெருக்கியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இடத்தைவிட்டு நகராமல் சிங்கம்போல் நின்றார்.

''அன்று ம.பொ.சி. அவர்கள் காட்டிய உறுதியும், கொள்கைப் பற்றும், நாட்டுப் பற்றும் எனக்கு அவர்பால் இருந்த மதிப்பை மேலும் உயர்த்தின. மறுநாள் ஜி.டி.நாயுடு அவர்கள் இல்லத்திற்கு நாங்கள் சென்றிருந்த போது, ''நீங்கள் ஒலிபெருக்கியைப் பிடித்துக்கொண்டு அஞ்சாநெஞ்சுடன் சிங்கம்போல் நின்ற நிலையைக் கண்டு நான் உங்களைக் காதலித்துவிட்டேன்'' என்று கூறினார் நாயுடு.''

(பக்கம் 503 - 504)

கோவை மாநாடு, என்னைப் பொறுத்தவரையில் ஒரு போர்க்களமாகவே இருந்தது.

கண்ணீரால் எழுதிய கட்டுரை

எனது வாழ்நாளில் தாங்க இயலாத மனவேதனையில் என்னை ஆழ்த்திய நிகழ்ச்சி ஒன்று உண்டென்றால், அது காந்தியடிகள் கொலையுண்டதாகும். கோவை மாநாடு முடிந்த பத்தே நாட்களில் இந்தக் கொடுமை நிகழ்ந்தது. காந்தியடிகள் கொல்லப்பட்டார் என்ற கொடுஞ்செய்தியை முதன் முதலாக நான் கேட்டபோது, என் தலையில் இடி விழுந்தது போன்ற ஒரு உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. எழுத்தறிவற்ற ஏழைத் தொழிலாளியின் மகனாகப் பிறந்து, எழுத்தெண்ணிக் கோக்கும் எளிய அச்சுத் தொழிலாளியாக வளர்ந்த என்னை அரசியல் வாதியாக மாற்றிய பெருமை காந்தியடிகளுக்கே உரிமை.

அடிகளைத் தலைவராக ஏற்று அவரது காந்தியத் தத்துவத்தில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்து இந்திய விடுதலைப் போரில் நான் ஈடுபட்டில்லையானால், நான் யார்? எனக்கென ஓர் சரித்திரமேது? மக்கள் மத்தியிலே எனக்கேது இடம்? — என்றெல்லாம் எண்ணியெண்ணிப் பார்த்து நன்றியுணர்வோடு அழுதேன்; அரற்றினேன்!

எனக்கு அன்னையாய், அப்பனாய், அறிவுதரும் ஆசானாய், அருள்பாலித்த தெய்வமாய் நான் கருதிவந்த அடிகளார் இயற்கை மரணம் எய்தியிருந்தால், அதனால் ஏற்படும் வேதனை என்னால் தாங்கிக் கொள்ளக் கூடியதாகவே இருந்திருக்கும். ஆனால், அடிகள், எந்த நாட்டுக்கு விடுதலை தேடித் தந்தாரோ, அந்த நாட்டு மகன் ஒருவனால் கொல்லப்பட்டார்! விடுதலை விழாக் கொண்டாடிய ஆரவாரம் அடங்குவதற்கு முன்பே விடுதலை தேடித்தந்த தலைவர் கொலையானார்! இந்தியாவுக்குச் சுதந்திரம் தேடித் தந்த அடிகள், சுதந்திர இந்தியாவிலே பதவி எதுவும் பெற நினைத்தாரில்லை. பாடு முழுவதையும் தாமே பட்டு, பலன்களையெல்லாம் பிறருக்காக்கிய துறவியை — கைம்மாறு வேண்டாத கண்ணி

யரைக் கொன்ற கொடுமையை நினைந்து நினைந்து நெருப்பில் விழுந்த புழுப்போலத் துடித்தேன்.

அடிகளார் கொலையுண்ட செய்தி கேட்டவுடன் அழுது கொண்டே நான் எழுதிய அனுதாபக் குறிப்பு ''தமிழ் முரசு'' (1.2.48) இதழில் வெளியானது. அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:

''காந்தியடிகள் கொல்லப்பட்டார்!'' என்ற திடுக்கிட வைக்கும் செய்தி 'முரசு' அச்சாகி முடிந்த பின்னர் கிடைத்தது.

''இந்திய சமுதாயத்தின் வரலாற்றிலேயே இம்மாதிரி வேதனை தரும் செய்தி வேறொன்றில்லை. அதிலும் காந்தியடிகள் எந்த நாட்டினர் சுதந்திரமடையவும் சுகவாழ்வு பெறவும் உழைத்தாரோ, அதே நாட்டின் சதிகாரக் கூட்டம் ஒன்றின் தூண்டுதலால் அவர் கொல்லப்பட்டது உலகத்தின் முன்னர் இந்தியாவைத் தலைகுனியச் செய்துவிட்டது.

''கடந்த இருநூறு ஆண்டு அடிமைத்தனத்தால் நாம் அடைந்த வெட்கத்தையும் துக்கத்தையும் காந்தியடிகள் தோன்றிப் போக்கிவிட்டார். ஆனால், காந்தியடிகளைக் கொன்ற பாதகத்தால் நேர்ந்துள்ள வெட்கத்தையும் துக்கத்தையும் போக்குவார் யார்?

''அண்ணல் காந்தியடிகள் கதிரவன் மறையும் அந்தி நேரத்தில் தமது கடிகாரத்தைப் பார்த்து, ''பொழுது போகிறது; போய் வருகிறேன்'' என்று படேலிடம் கூறினார். ஆம்; வாழ்க்கைப் பொழுது சாய்ந்துவிட்டது! அடிகளின் கடிகாரம் காட்டிய நேரம் அவரது மண்ணுலக வாழ்விற்கு இறுதி நேரமாகிவிட்டது.

'நாடு வாழ்வதற்குப் பிரார்த்தனை செய்ய மேடையை நாடிச் சென்றார் அடிகளார். ஆனால், அந்த மேடையின் அருகில் அவர் வாழ்வைப் பறிக்கக் கொலை பாதகன்

ஒருவன் கூற்றுவன் வடிவில் நின்று அவர் உயிரை உண்டான். ''தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்'' என்றார் வள்ளுவர். ஆம்; அந்தக் கூற்றுவன் அடிகளை நோக்கிக் கும்பிட்ட கரமே கொலைக்கரமானது!

''டெல்லியில் வந்து குவியும் அகதிகளுக்கு ஆறுதல் கூற, அவர்கள் கண்ணீரைத் துடைத்துக் கவலையைப் போக்க, அந்த அகதிகளை மதவெறியால் பழிவாங்கக் காத்திருக்கும் கூட்டத்திடமிருந்து பாதுகாக்க அண்ணல் காந்தி டெல்லியில் தங்கினார். ஆனால், அகதிகளின் காவலர் கொல்லப்பட்டதன் விளைவாக இந்தியா முழுவதுமே அதிகள் முகாம் ஆகிவிட்டது. நமக்கு ஆறுதல் கூறுவார் யார்? இழக்க விரும்பாத, இழக்கக் கூடாத, இழந்தால் மீண்டும் பெற முடியாத பெருஞ் செல்வத்தை இழந்துவிட்டோம்.''

காந்தியடிகள் அஸ்தி கரைப்பு ஊர்வலம் சென்னையில் நடைபெற்றபோது, அதிலே கலந்துகொண்டேன். அப்போது சென்னை மாநில ஆளுநராக இருந்த ஆங்கிலேயரான நை பிரபு ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கினார். ஊர்வலத்தில் கொண்டு செல்லப்பட்ட அஸ்திக் கலசத்தைக் கண்ட மக்கள் ஆறாத் துயருற்று அழுதனர். மயிலாப்பூர் பகுதியின் கடலில் அடிகளாரின் அஸ்தி கரைக்கப்பட்டபோது, மக்களிலே பலர் வேதனை தாங்கமாட்டாமல் விம்மியழுதனர். இந்தத் துயரக் காட்சிகளைக் கண்டுவிட்டு வீடு திரும்பியதும், 'தமிழ் முரசு'க்குத் தலை யங்கம் எழுதினேன். ஆம்; அழுதழுது எழுதினால் ஆறுதல் கிடைக்குமென்பதற்காக! அந்தத் தலையங்கத்தின் சில பகுதிகள் வருமாறு:

''காந்தியடிகளின் பொன்னுடல் செந்தீயில் வெந்துவிட்டது! இந்திய மக்களின் — ஏன் — மனித வர்க்கத்தின் ஆஸ்தி எனத் திகழ்ந்த ஐயனின் உடல் 'அஸ்தி' எனப் பெயர் பெற்றது. அதுவும் பல கூறாகப் பங்கிடப் பெற்றுக் கடலில், காவிரியில், கங்கையில் கரைக்கப்பட்டு விட்டது.

''கேட்டதைத் தரும் கற்பகத் தருவைக் கதையில் படித்தோம். கருணை பொழியும் காமதேனுவைக் காவியத்தில் பார்த்தோம். ஆனால், அரசியலிலே அற்புதம் செய்யும் கற்பகத் தருவாய், ஹரிஜன மக்களுக்கு அபயம் அளிக்கும் காமதேனுவாய், அண்ணல் காந்தி நம்மிடையே வாழ்ந்து வந்தார். 'வாழ்கின்றார்' எனக் களிப்படைந்தது உலகம். 'வாழவேண்டும்' எனத் தவம் செய்தது இந்தியா. 125 ஆண்டுகள் வாழ்ந்தே தீருவேன் என்று வாக்குறுதி தந்தார் மகாத்மா. ஆனால், மாபாதகன் ஒருவன் எல்லோரது நம்பிக்கையையும் தகர்த்துத் தவிடுபொடியாக்கி விட்டான்.

''ஏசுவைக் கொன்றதை ஏட்டில்தான் படித்தோம்; சாக்ரடீஸ் மடிந்ததை சரித்திரத்தில்தான் பார்த்தோம். அந்தோ! 'காந்தியடிகள் கொல்லப்பட்டார்', 'கொளுத்தப்பட்டார்' என்ற கொடுமைமிக்க செய்திகளை, அவை நிகழ்ந்த மறுகணத்திலேயே நம் காதுகளால் கேட்டோம். அவர் பிரேதத்தை, அது எரிந்து கரிந்த அஸ்தியைக் கண்களால் பார்த்தோம். ஜன சமுத்திரத்தின் மத்தியில் நடமாடிக் கொண்டிருந்த உத்தமரின் உருவத்தை ஒரு பிடி சாம்பலாக்கி ஜல சமுத்திரத்தில் கரைத்துவிட்டோம். நம்மைவிட துரதிர்ஷ்டசாலிகள் வேறு யாரிருப்பர்! மறக்க முயலுகிறோம்; முடியவில்லை. ஐயனின் திருமேனி கணத்திற்குக் கணம் நம் அகக்கண் முன் தோன்றுகிறது.

''உப்பு வரியை உடைத்தே தீருவேன்'' என்று தண்டி நோக்கி ஓடிய கால்கள்;

''கதியற்ற ஹரிஜன மக்களுக்கு நிதி தேடிய கைகள்;

''படைக்கஞ்சாப் பகைவனும் பார்த்தவுடனே நடுங்கும் வீரத்திரு மார்பு.

''பாட்டாளி மக்களுக்காகப் பரிந்து பேசிய வாய்;

''அறிவு — கருணை — அன்பு — அறம் அத்தனை நல்லியல்புகளும் கைகோத்துக் களி கூத்தாடும் திருமுகம்; இவற்றை நாம் மறந்தாலும் நம் மனம் மறக்கமாட்டேனென்கிறது.

''காந்தியடிகளை மறக்க முடியாது; மறக்கவும் கூடாது. என்றாலும், அவரது மறைவைப் பற்றிய கவலையை நாம் மறந்தே ஆகவேண்டும். அவர் நாட்டுக்கு விடுதலை தேடித் தந்தது நாம் வாழ்வதற்கேயொழிய வருந்துவதற்கல்ல. கவலைக்கு எவ்வளவுதான் காரணங்களிருப்பினும் அவற்றால் நாம் கடமையிலிருந்து தவறக்கூடாது.''

(**'தமிழ் முரசு', 15.2.48**)

என் வீட்டில் நான் அப்போது வானொலிப் பெட்டி வைத்திருக்கவில்லை. வானொலியில் பாடல்களையோ, செய்திகளையோ பிற நிகழ்ச்சிகளையோ கேட்கும் ஆர்வம் அப்போதும் எனக்கு இருக்கவில்லை. என் மனைவி இந்த விஷயத்தில் எனக்கு நேர் பிரதிநிதி! என் மகன் திருநாவுக்கு அப்போது வயது ஆறு. கண்ணகியும் மாதவியும் அப்போது பிறந்திருக்கவில்லை. அதனால் பிள்ளைகள் விருப்பத்திற்காக வானொலிப் பெட்டி வாங்கும் நிர்ப்பந்தமும் எனக்கு ஏற்படவில்லை.

வானொலிப் பேச்சு

காந்தியடிகள் மறைந்த மறுநாளிலே சிறிய அளவிலான வானொலிப் பெட்டி ஒன்றை வாங்கினேன். ஆம்; கடன்பட்டுத் தான் வாங்கினேன்! கடன் வாங்கி வாழ்க்கை நடத்தும் வழக்கமே எனக்குப் பிடிக்காது. அதுவும், அத்தியாவசியத் தேவையாக அல்லாத வானொலிப் பெட்டி வாங்கக் கடன்படுவதென்பது என்னால் நினைத்துப் பார்க்கவும் முடியாததாகும். ஆயினும், காந்தியடிகளைப் பற்றி உலக மேதைகள் தெரிவித்த அனுதாபச் செய்திகள், பிரேத ஊர்வல வருணனை, சோககீதம் ஆகியவற்றைக் கேட்டு மனஆறுதல் பெறுவதற்காகக் கடன்பட்டு வானொலிப் பெட்டி வாங்கினேன். வாங்கியபின், பத்து நாட்கள் வானொலிப் பெட்டியே கதி என இருந்தேன்.

காந்தியடிகள் மறைந்த ஆறாவது நாளில் 4.2.48-இல் சென்னை வானொலியில் பேசினேன். அதன் சில பகுதிகள் வருமாறு:

''காந்தியடிகள் வாழும் காலத்தில் நாமும் வாழ்கிறோம். அவர் இட்ட கட்டளைப்படி கடமையைச் செய்கிறோம் — என்ற பெருமை நமக்கு இத்தனை நாளும் இருந்தது. சென்ற காலத் தலைமுறையினருக்குக் கிடைக்காத, வருங்காலத் தலைமுறையினருக்குக் கிடைக்க முடியாத அந்தப் பெருவாய்ப்பை, இந்தத் தலைமுறையினராகிய நாம் பெற்றிருந்தோம். ஆனால், ஒரு கொடியவனின் செயலால் அந்தப் பெருமையெலாம் கணநேரத்தில், கண்மூடித் திறப்பதற்குள் மண்மூடிப் போயிற்று. நாம் காந்தி வாழ்ந்த தலைமுறையினர் மட்டுமல்ல; காந்தியைக் கொன்ற தலைமுறையினருமாவோம்.

''நாள்தோறும் வந்து குவியும் அகதிகளுக்கு ஆறுதல் கூற, அவர்களின் கண்ணீரைத் துடைத்துக் கவலையைப் போக்க, பழிவாங்கும் கொடியவரிடமிருந்து அவர்களைப் பாதுகாக்க அண்ணல் காந்தி டெல்லியில் தங்கினார். ஆனால், அகதிகளின் காவலர் கொல்லப்பட்டார். அந்தோ! அக்கொடுஞ் செயலால் இந்தியா முழுவதுமே அகதிகளின் முகாமாகிவிட்டது. நமக்கு ஆறுதல் கூறுவார் யார்?

''பொழுது சாயும் அந்தி நேரத்தில் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, போய்வருகிறேன் என்று கூறிப் புறப்பட்ட வீரர், வாராமலே போய்விட்டார். ஐயனின் கடிகாரம் காட்டிய நேரம் அவரது மண்ணுலக வாழ்விற்கே இறுதி நேரமாகிவிட்டது.

''சாக்ரடீசை விஷமூட்டிக் கொன்றது, ஏசுநாதரைச் சிலுவையில் அடித்துச் சித்திரவதை செய்தது எந்த மத வெறியோ, அதே மதவெறிதான் காந்தியடிகளையும் சுட்டுக் கொன்றது.

''ஏ, மதவெறியே! மகான்களைக் கொல்லும் மத வெறியே! மக்கள் குலத்திற்கு நாசத்தை விளைவிக்கும் மத வெறியே! நீ, உனது கொலைக் கரங்களை மாற்றிக்

கொண்டாய்; கொலைக் கருவிகளையும் மாற்றிக் கொண்டாய்; ஆனால், கொலைக் குணத்தை மட்டும் மாற்றிக் கொண்டாய் இல்லை.

''உலகம் போற்றும் உத்தமர் — ஏழை பங்காளர் — அகதிகளின் காவலர் — காந்தியடிகள் பிறந்த நாள், பலாத்காரத்தின் பகைவர் தோன்றிய நாள்; மதவெறியின் எதிரி தோன்றிய நாள். அதுபோலவே, அவர் மறைந்த நாள் மதவெறியைக் குழியிலிட்டு மண்மூடும் நாளாக வேண்டும்.

''காவிரி, கங்கை, யமுனை ஆகிய ஆறுகளின் பெருமையைத் தலைமுறை தலைமுறையாகப் போற்றி வந்தோம். அந்த ஆறுகள் பாயும் காரணத்தால், இந்திய மண்ணும், மகிமை பெற்றதாக நம் முன்னோர் நம்பினர். ஆனால், நாடு விடுதலை பெற்ற ஆறே மாதங்களுக்குள் விடுதலையைத் தேடித் தந்த வீரத் தலைவரைக் கொன்றதால், அவரது ரத்தம் மண்ணில் பாய்ந்தோடிய காரணத்தால் நமது பழம் பெருமை பழிப்புக்கிடமாகி விட்டது.

''ஒடுக்கப்பட்ட மக்களே! உங்கள் உரிமைக்காகப் போராடிய — அதற்காகத் தன் உயிரையும் அர்ப்பணிக்கத் துணிந்த அண்ணல் காந்தியடிகள் மறைந்துவிட்டார்.

''பாட்டாளி மக்களே! தேசியக் கோட்டையிலே உங்களுக்காகப் பரிந்து பேசிய குரல் அடங்கிவிட்டது.

''தமிழினமே! பிறந்த பொன்னாட்டில், பெருமைமிக்க தமிழ் நாட்டில் பிழைக்க வழியற்று, தென்னாப்பிரிக்கா சென்று அல்லலுற்ற தமிழ் மக்களுக்கு ஆதரவாக நின்ற — அவர்களுக்காகப் பரிந்து ஆளுவோர் மீது அறப்போர் தொடுத்த நண்பரை இழந்துவிட்டோம்.

''தென்னாப்பிரிக்கத் தமிழ் மக்களுக்கு அவர் செய்த சேவையை நாம் என்றென்றும் மறவோம். புகழுடம்பு பெற்றுவிட்ட அப்புண்ணியனுக்கு நமது நன்றியை அஞ்சலி செய்து அர்ப்பணிப்போம்.''

காந்தியமும் மார்க்சியமும்

என்னைக் 'காந்தியவாதி' என்று சொல்லிக் கொள்வதிலே நான் பெருமையடைகிறேன். விஞ்ஞான வழிப்பட்ட சோஷலிசத்தில் — குறிப்பாக மார்க்சியத்தில், எனக்கு அழுத்தமான பற்றுதலுண்டு. காந்தியத்திற்கும் மார்க்சியத்திற்கும் தத்துவ ரீதியில் நெருங்கிய தொடர்புண்டாதலால், காந்தியவாதியான நான் மார்க்சியத்தில் நம்பிக்கை கொ:ண்டிருப்பதில் முரண்பாடு ஏதுமில்லை — ஏன், காந்தியடிகளுக்கே மார்க்சியத்தில் பற்றுண்டு. ஆனால், நடைமுறையில் — அதாவது, சோஷலிச சமுதாயத்தைப் படைப்பதற்கான போர் முறைகளிலே மார்க்சியத்திலிருந்து வேறுபடுகிறது காந்தியம். இதனை நான் மிகத் தெளிவாக உணர்கிறேன். எனக்குக் காந்தியடிகளின் போர் முறைதான் பிடித்திருக்கிறது. தமிழினத்தின் பாரம்பரியத்திற்கும் பண்பாட்டிற்கும் ஏற்றதாகவும் காந்தியடிகள் போர் முறை இருந்து வருகிறது.

காந்தியத்திற்கும் மார்க்சியத்திற்குமிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ''காந்தியடிகளும் சோஷலிசமும்'' என்ற எனது நூலில் விவரித்துள்ளேன். துரோணரிடம் மானசீகமாக பக்தி செலுத்தி ஏகலைவன் வில் வித்தை கற்றான். அதுபோல, அடிகளாரிடம் எனக்கிருந்த பக்தியாலேயே நான் காந்தியநெறியில் பயிற்சி பெறலானேன்.

அரசியலில் மட்டுமல்லாமல் சமயம் — சமூகம் — மொழி — கலை — கலாச்சாரம் — ஆன்மீகம் ஆகியவற்றிலேயும் காந்தியம் எனக்குத் தெளிவாக வழிகாட்டி என்னை நடத்திச் செல்கின்றது. சோதனைமிக்க நேரங்களில் என் மனத்துள் குழப்ப மேற்படும் போதெல்லாம் நான் காந்தியத்திடம் சரண் புகுந்து தெளிவு பெறுகிறேன். காந்தியத் தத்துவத்தை ஐயந்திரிபற அறிவிக்கும் சரித்திர நூல் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும், வள்ளுவர் தந்த திருக்குறள் எனக்கு வேதம். அதற்கு, காந்தியடிகள் எழுதிய ''சத்திய சோதனை'' வியாக்கியானம். ஆம்; வள்ளுவர் தந்த குறளுக்கு வியாக்கியானமாக அமைந்துள்ளது காந்தியடிகளின் சத்திய சோதனை. அடிகள்,

குறள் நெறிப்படி வாழ்க்கை நடத்தியவர். அதனால், 'தமிழன்' என்னும் இன உணர்வு படைத்த எனக்கு அடிகளைப் பின்பற்றுவது எளிதாகிறது.

நான் நடத்திய போராட்டங்களிலெல்லாம் எனக்கு வெற்றி கிடைத்ததற்குக் காரணம், காந்தியடிகள் போர் முறையை வழுவின்றி நான் பின்பற்றி வந்ததுதான். என் சொந்த வாழ்க்கையிலேயும் காந்திய நெறியையே என்னால் இயன்றவரை நான் கடைப்பிடித்து வருகிறேன்.

எனது தமிழரசு இயக்கமும் காந்தியப் பாதையிலே நடை போடுகிறது. நாடு சுதந்திரம் பெற்ற பின்னும் நீண்டகாலம் காந்தியடிகள் வாழ்வார்; மாநிலச் சுயாட்சிக் கிளர்ச்சி, ஆங்கில ஆதிக்க ஒழிப்பு, சோஷலிச சமுதாயப் படைப்பு ஆகியவற்றிலே அவர் எனக்கு வழிகாட்டுவார் என்ற நம்பிக்கையிலேயே நான் தமிழரசு இயக்கத்தைத் தொடங்கினேன். உண்மையில், இன்னும் பத்தாண்டுக் காலம் காந்தியடிகள் வாழ்ந்திருந்தால் அவர் ஆங்கில ஆதிக்கத்தை அழித்து முடித்திருப்பார். மாநிலங்கள் பூரண சுயாட்சி பெற வழி வகுத்திருப்பார்.

அடிகளாரின் மரணத்தால் நான் என் வழிகாட்டியை இழந்தேன். காந்தியடிகளில்லாத பாரதம் சந்திரனில்லாத வானம் போலவே எனக்குத் தோன்றியது.

காந்தியடிகள் மறைந்த நாளிலே இமயம் சாய்ந்தது போன்ற விபத்து இந்தியாவிற்கு ஏற்பட்டு விட்டதாகவே நான் கருதினேன்.

சோஷலிசப் பிரச்சாரம்

காந்தியத்தில் அழுத்தமான பற்றுடையவனானதால், சோஷலிசத்திலும் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டது. விஞ்ஞான ரீதியான சோசலிசம் பற்றிய — குறிப்பாக, வர்க்க வேற்றுமை — வர்க்கப் புரட்சி பற்றிய நூல்கள் ஏராளமாக ஆங்கில மொழியில் வெளியாகியுள்ளன. அவற்றை நான் படித்ததில்லை. எனது இளமைப் பருவக் காலத்திலே 'சோஷலிசம்'' என்றால் என்னவென்று விளக்கும் நூல்கள் தமிழில் வெளியாகியிருக்க வில்லை. ஆகவே, சித்தாந்த ரீதியாக சோஷலிசத்தைப் பற்றி ஓரளவேனும் நான் அறிந்து கொண்டது பிற்காலத்தில்தான். ராஜாஜி எழுதிய 'அபேதவாதம் அல்லது பொதுவுடைமை'' என்பதுதான் நான் படித்த முதல் நூல்.

வறுமைமிக்க குடியில் — ஏழைத் தொழிலாளியின் மகனாகப் பிறந்த காரணத்தால், பிள்ளைப் பருவத்திலும், பின்னர் காளைப் பருவத்திலும் பட்டினியின் கொடுமையை நான் அளவுக்கு அதிகமாகவே அனுபவித்தேன். எனது குடும்பம் முழுவதுமே பட்டினித் துன்பத்தை அனுபவித்த நாட்கள் இன்னும் எனது நினைவிலிருக்கின்றன. குடும்பத்திலுள்ள எல்லோருமாகச் சேர்ந்து பசியால் விம்மி விம்மி அழுதிருக்கிறோம். அப்படி அழுதபோதெல்லாம் எங்களைப் போன்ற பட்டினியால் பரிதவித்தழும் குடும்பங்கள் நாட்டில் இருக்கின்றன என்பது எனது நினைவுக்கு வரும்.

நாட்டின் விடுதலையை விரும்பி நான் பாடுபட்ட காலமாதலால், நானும் என் குடும்பத்தினரும் வறுமையின் கொடுமை தாங்காது வருந்திய ஒவ்வொரு நேரத்திலும் நாட்டிலுள்ள ஏழை மக்கள் எல்லோருடைய இன்னல்களையும் நினைந்துருகும் அளவுக்கு என் மனம் பக்குவப்பட்டிருந்தது.

நடைபாதையில் வாழும் குடும்பங்களைப் பார்த்து என் மனம் வேதனைப்பட்டதுண்டு. எனது முப்பத்தைந்தாவது வயதுவரை நான் கையுழைத்துப் பிழைக்கும் தொழிலாளியாகவே வாழ்ந்தேனாதலால், முதலாளித்துவத்தின் கொடுமைகளை அனுபவ ரீதியாக அறிந்துகொள்ள முடிந்தது.

நான் பிறந்த கிராமணி சாதிக்கே உரியதாகக் கருதப்பட்ட கள் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பங்களும் அனுபவித்த கொடுமைகளை நான் அன்றாடம் கண்டு வந்தேன். கிராமணி சாதியாரிலே கள்ளுக்கடை நடத்துவோர் முதலாளிகள், கள் இறக்குவோர் தொழிலாளிகள்; ஆம், ஒரே சாதியினர் முதலாளிகளாகவும், தொழில ளிளாகவும் இருந்தனர். அப்படி இருந்தும் சாதிப்பற்று காரணமாகக் கூடக் கள்ளுக்கடை முதலாளிகளான கிராமணிகள் கள்ளிறக்கும் தொழிலாளர்களான தங்கள் சாதியினரைக் கண்ணியமாக நடத்தியதில்லை. அந்தத் தொழிலாளிகளால்தான் பணம் படைத்த முதலாளிகளாக வாழ்கிறோம் என்பதனை மறந்து, அவர்களை இழிவாக நடத்தினர். உறவுமுறைத் தொழிலாளர்கள்கூட இந்தக் கொடுமைக்கு விதிவிலக்கல்ல.

என் சாதியில் முதலாளிகளாக விளங்கிய கள்ளுக்கடைக் காரர்களிடத்தும், நானே தொழில் செய்த முதலாளிகளிடத்தும் எனக்கேற்பட்ட கசப்பான அனுபவத்தால் எனது இளமைப் பருவத்திலேயே முதலாளித்துவத்தின் மீது எனக்குத் துவேஷம் ஏற்பட்டுவிட்டது. இளமையில் என் மனத்தைப் பிடித்த அந்தத் துவேஷம் இன்றளவும் என்னிடம் இருந்து கொண்டுதான் இருக்கின்றது.

இப்படி, அனுபவம் காரணமாகத்தான் நான் வர்க்க உணர்ச்சி பெற்றேன். முதலாளித்துவத்தின் மீது எனக்கேற்பட்ட துவேஷம் என்னை அறியாமலே என் மனத்துள் வர்க்க உணர்ச்சியை வளர்த்து வந்திருக்கிறது என்பதனைப் பிற்காலத்தில்தான் உணர்ந்தேன். என் திப் பணக்காரரிடத்தும், பிற முதலாளிகளிடத்தும் நான் கண்ட கொடுமை சமுதாயத்தில் அமைதியாக நிகழ்ந்துவரும் வர்க்கப் போராட்டம் என்பதனையும் காலப்போக்கில் அறிந்து கொண்டேன்.

நான் அச்சுத் தொழிலாளியாக இருந்த நாட்களிலே கம்யூனிஸ்டுகளோடு எனக்குத் தொடர்பேற்பட்டதென்றாலும், அவர்கள் நடத்திய அரசியல் வகுப்பு எதற்கும் நான் சென்றதில்லை. தொழிற்சங்க அளவிலேயே அவர்கள் தொடர்பு நின்றுவிட்டது. அதனால், சோசலிசத்தைப் பற்றி முறையான பயிற்சி எதையும் யாரிடத்தும் நான் பெறவில்லை.

வக்கீல்கள்!

வள்ளுவர், வள்ளலார், கம்பர், பாரதியார் ஆகிய மகாகவிகளின் இலக்கியங்களைப் படிக்க நேர்ந்தபோது, ஏழை — பணக்காரர் என்ற ஏற்றத் தாழ்வற்ற புதிய சமுதாயத்தைக் காணவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. அந்த ஆவலுக்குப் பெயர்தான் சோசலிச உணர்ச்சி என்பதனை நாளடைவில் அறிந்தேன்.

இந்திய சோசலிஸ்டுகளிலே பெரும்பாலோர் முதலாளி வர்க்கத்தின் கொடுமைகளைத் தங்கள் வாழ்க்கை அனுபவத்தின் மூலம் அறிந்து கொண்டவர்களல்லர். சோசலிச சாத்திரத்தையும் வர்க்கப் போராட்ட சரித்திரத்தையும் படித்தே அவர்கள் சோசலிசத்தை விரும்புவோராக உள்ளனர். அப்படிப்பட்டவர்களைத் தொழிலாளி வர்க்கத்தின் ''வக்கீல்''களாகத்தான் நான் கருதுகிறேன். பிழை அவர்களுடையதன்று. ஆங்கில மொழி இந்த நாட்டில் இருநூறு ஆண்டுகாலமாக ஆதிக்கம் செலுத்தி வருவதால், அந்த மொழியிலே புலமை பெறாத தொழிலாளிகள் தொழிற்சங்கத் தலைவர்களாக வருவதற்கு வாய்ப்பில்லை. விதிவிலக்காக ஒன்றிருவர் வந்தாலும் அகில இந்தியத் தலைவர்களாக வளர்வதற்கு முடிவதில்லை. சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரண மக்களிடமிருந்து தொழிலாளர் தலைவர்கள் தோன்றாதவரை வர்க்கப் புரட்சி தோன்றுவதற்கு வழியில்லை.

துவிதம், அத்துவிதம், விசிட்டாத்துவிதம் என்ற சாதாரண மக்கள் புரிந்துகொள்ள முடியாத தத்துவங்களைப் பற்றிச் சமயப் பண்டிதர்கள் வாதம் நடத்துகிறார்கள். அதுபோல, வர்க்கப் புரட்சி பற்றியும் மேல் மட்டத்திலுள்ள பட்டதாரித் தலைவர்கள் விவாதிக்கிறார்கள்.

இடதுசாரிகளான அரசியல்வாதிகளை உழைத்துப் பிழைக்கும் தொழிலாளர்கள் தொழிற்சங்க இயக்கத் தலைவர்களாகத் தான் கருதுகிறார்கள். சோசலிச சமுதாயம் படைக்க உழைக்கும் புரட்சித் தலைவர்களாகப் பார்க்கின்ற பார்வையைப் பாட்டாளி மக்கள் இன்னும் பெறவில்லை. தேர்தல் காலங்களிலே இடதுசாரிக் கட்சிகள் மதுரை, கோவை, குடியாத்தம், போன்ற ஆலைகள் நிறைந்த தீவுத் தொகுதிகளிலே சில தொகுதிகளைத்தான் பிடிக்க முடிகின்றது. இந்த அவல நிலை மாறவேண்டுமானால், தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெறவேண்டும். பிறமொழிகளைப் பேசும் பாட்டாளி மக்களுக்கும் இது பொருந்தும்.

நான் தமிழரசுக் கழகத்தைத் தொடங்கியபோது அதனை அப்பட்டமான ஒரு சோசலிச இயக்கமாக நடத்தத் திட்டமிட்டேன். என்னால் நடத்தப்பட்ட 'தமிழ் முரசு' இதழ்களிலே வர்க்க வேற்றுமையுடைய இன்றைய சமுதாயத் திலுள்ள கொடுமைகள் பற்றி 'பாமரன்' என்னும் புனைபெயரிலே எழுதி வந்தேன்.

'பாமரன்' குமுறல்!

விஞ்ஞான ரீதியிலான சோசலிசத்தை, அது சம்பந்தமான சாத்திர — சரித்திர நூல்களின் வாயிலாக அறிந்திராத ஒரு பாமரன் வர்க்கக் கொடுமைகளைக் கண்டு எப்படிக் குமுறு கிறான் என்பதனை எடுத்துக்காட்டவே முயன்றேன். அதனாற்றான், 'பாமரன்' என்னும் புனைபெயரில் எழுதத் தொடங்கினேன். முதல் கட்டுரையை இங்கு அப்படியே தருகிறேன்:

''பஞ்சம்; கள்ள மார்க்கெட்; கொள்ளை லாபம். இன்றைய அரசியல் உலகிலும், பத்திரிகை உலகிலும் நடமாடும் சொற்களிவை. இன்று மட்டுமா இத்தீமைகள் நடம்புரிகின்றன? தனியுடைமை தோன்றிய காலந் தொட்டே தாண்டவமாடுகின்றன. அப்படியானால், இன்று மட்டும் ஏன் இவ்வளவு ஆரவாரம்!

''கொள்ளை இலாபத்தை — கள்ள மார்க்கெட்டை ஒழித்தே தீருவோம்'' என்று அதிகார வர்க்கம் ஆர்ப்பரிக்கின்றது. உண்மைதான். மக்களுக்குத் தேவையான பொருள்களைப் பதுக்கி வைப்பது கள்ள மார்க்கெட்; நிர்ணயித்த விலைக்கு அதிகமாக விற்பது கொள்ளை லாபம்.

''அதிகார வர்க்கமே! இதுமட்டுமா கள்ள மார்க்கெட் — கொள்ளை லாபம்? இன்னுமுண்டு. ஒருவன் உணவின்றிக் குடும்பத்துடன் குமுறி அழ, இன்னொருவன் ஐந்து தலைமுறைக்கும் வருகின்ற அளவுக்குப் பொருளைச் சேமித்து வாழ்கின்றானே, அது கள்ளச் சந்தையல்லவா?

''ஏழைத் தொழிலாளி உடலுருக உழைத்தபின் உழைப்புக்கும் தேவைக்கும் ஏற்ற ஊதியம் தராமல், அவனது உழைப்பைக் கவர்ந்து வாழும் முதலாளி — ஜமீந்தார் அடைவது கொள்ளை லாபமல்லவா? இந்தக் கள்ளச் சிந்தையும், கொள்ளைச் சந்தையும் மட்டும் சட்டச் சம்மதம் — தெய்வத்தின் திருவருள் போலும்!

''பாட்டாளி — பஞ்சமன் பாடுபட்டும் உணவின்றி, உடையின்றித் தலைமுறை தலைமுறையாக உள்ளங் குமுறிய போதெல்லாம் அவனை வாழவைக்க சர்க்காரிட மிருந்து சட்டம் புறப்படவில்லை. தனியுடைமையாளரின் தயவு தோன்றவில்லை; கட்சிகளுக்கும் கருணை பிறக்கவில்லை. ஏழை துன்புற்றால், அது அவன் தலைவிதி; முன் ஜென்ம பாவம்; தெய்வத்தின் கோபம். பாட்டாளி மகன் பண்டம் வாங்கப் பணமில்லாமல் பசித்திருந்தபோது — பருத்தி ஆடைக்குப் பரிதவித்தபோது, பார்த்திருந்த உலகம் இன்று படித்தவனுக்குப் பாலன்னமில்லையென்றால் — பணக்காரனுக்குப் பட்டாடை இல்லையென்றால், பஞ்சமெனக் கூறிப் பரிவு காட்டுகிறது.

''உண்மையென்ன? அறிவை முதலாகக் கொண்டவன் பொதுமக்களின் தலைவனாக விளங்குகின்றான். இவ்வளவு நாள் பாமரனை வாட்டிய பஞ்சம்

படிப்பாளியையும், பணக்காரனையும் பதம் பார்க்கத் துணிந்துவிட்டது. ஆகவே தான், 'தலைவிதி' தன் முயற்சியாக மாறிவிட்டது. பாவம் 'பஞ்சமென'ப் பெயர் கொண்டுவிட்டது! பொல்லாத உலகம்!

''இனியேனும், 'தலைவிதி' மாய்ந்து தன் முயற்சி வாழுமா? படித்தவன் — பணக்காரன் பஞ்சத்தோடு, பாமரனின் வறுமையும் தொலையுமா?''

('தமிழ் முரசு', சூன், 1946)

பாமரன் சிரிக்கிறான்!

வீட்டுப் பஞ்சம்பற்றி 'பாமரன்' என்னும் புனைபெயரில் யான் எழுதிய கட்டுரை வருமாறு:

''சென்னையில் இன்று நண்பர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க நேர்ந்தால், முதலில் கேட்கும் கேள்வி, ''ஐயா எங்காவது வீடு கிடைக்குமா?'' என்பதேயாகும். ஆம்; இன்று சென்னையில் உணவுப் பஞ்சம், உடைப் பஞ்சத்தை விட வீட்டுப் பஞ்சமே பெரிதாக இருக்கின்றது. அமைச்சர்களும், அதிகாரிகளும்கூட இந்த வீட்டுப் பஞ்சத்திற்கு விலக்கல்ல.

''வாணிபத்திற்காகச் சென்னை வந்துள்ள வெளியூர்ப் பணக்காரர்கள் பங்களாவைத் தேடி அலைகின்றனர். படித்துவிட்டுப் பதவி பெற்ற பட்டதாரிகளும் மாடி வீடு தேடி அலைகின்றனர். எங்குச் சென்றாலும் 'இல்லை' என்ற பதில்தான்.

''பணக்காரர்களுக்கு — பட்டதாரிகளுக்கு வீட்டுப் பஞ்சம் என்றவுடனே, பத்திரிகைகள் பரிவு காட்டுகின்றன. பேச்சாளிகள் மேடையேறி, 'இது கொடுமை; கொடுமை!' எனக் கூக்குரலிடுகின்றனர். அதிகார வர்க்கமும் இந்தக் 'கொடுமை'யைக் குறைக்க ஆலோசனை செய்து வருகின்றதாம்.

''இதையெல்லாம் பார்த்துப் பாமரன் சிரிக்கிறான். பட்டினியால் குடல் சுருங்கினாலும், 'கொழுப்பு' சுருங்காமல் சிரிக்கிறான். ஏன்?

''வீடில்லாத எந்தப் பெரிய மனிதரும் வீதியில் உறங்கக் கண்டதில்லை. 'காஸ்மாபாலிடன் கிளப்' அவர்களை கைகூப்பி வரவேற்கின்றது. 'எவரெஸ்டு ஓட்டல்' அவர்களை எதிர்கொண்டு அழைக்கின்றது. அங்கு மின்சார விசிறி அவர்கள் மேனி குளிர வீசுகின்றது. 'ஏய்' என்ற குரலுக்கு 'எசமான்' என்ற பதிலுடன் பணி செய்ய ஏவலாளர் காத்திருக்கின்றனர். இந்த நிலையில்தான் அவர்கள் வீட்டுப் பஞ்சமெல்லாம்! இதற்குத்தான் இவ்வளவு ஆர வாரம்!

''பாமரனுக்கும் வீட்டுப் பஞ்சம் உண்டு. பாடுபட்டும் பலனறியாத பாட்டாளி மக்கள் நகரத் தெருக்களில் வானத்தைக் கூரையாகவும் மானத்தைச் சுவராகவும் வைத்து வாழ்கின்றனர் — வாழாமல் வாழ்கின்றனர்! சாக மனமின்றி, சாக்கடையோரத்தில் வாழ்கின்றனர். உண்பதும் அங்கே! உறங்குவதும் அங்கே! மங்கல விழாவாகட்டும், மரணச் சடங்காகட்டும், எல்லாம் அந்தச் சாக்கடையோரத் தில்தான்!

''அடிக்கும் காற்றாலும் பெய்யும் மழையாலும் நடுக்கும் குளிராலும், தகிக்கும் வெயிலாலும் அவர்கள் படும் கொடுமை சொல்லி முடியாது. இன்றல்ல, நேற்றல்ல; எத்தனையோ தலைமுறையாக இந்தக் கோர வாழ்வு! முன்னே வாழ்ந்து முடிந்த அப்பனுக்கும் இந்த வாழ்வுதான். இன்றுள்ள மகனுக்கும் இந்த வாழ்வுதான். இனிவரும் பேரனுக்கும்...? வீடில்லாத் தொல்லையால் பாமரன் படும் வேதனை இது.

''அதிகார வர்க்கமும் இவர்களது அவல நிலையை அறிந்ததுண்டு. பணமிருந்தும் மனமில்லாப் பணக்காரர் களும் இவர்களது கதியைக் கண்டதுண்டு. பகுத்தறி விருந்தும் சிந்தனை செய்யாப் படிப்பாளிகளும் இவர்களது

பரிதாப நிலையைப் பார்த்ததுண்டு. கவிஞர்களின் காவியங்களிலும், எழுத்தாளர்களின் கதைகளிலும்கூட இவர்கள் காட்சியளித்ததுண்டு. என்றாலும், அந்தப் பாமர மக்களின் வீடில்லாத் தொல்லைக்கு விமோசனமில்லை.

''பணக்காரர்களுக்கும், படிப்பாளிகளுக்கும் கையில் பணமுண்டு. கேட்ட குடிக்கூலியைக் கொடுக்க மனமுமுண்டு. என்றாலும், இப்போது வீடில்லை. பாமரனுக்கோ கையிலே காசில்லை. ஆகவே, குடிக்கூலிக் கொடுக்க மனமிருந்தும் மார்க்கமில்லை. அதனால் அவனுக்கு எப்போதுமே வீடில்லை.

''அறிவாளிகளே! நாகரிகம் வாய்ந்த நகரத்தின் நடுவில் பாமரன் நடத்தும் நரக வாழ்க்கை உங்கள் பகுத்தறிவைப் பழிக்கவில்லையா?

''அதிகார வர்க்கமே! இருக்க இடமில்லாத ஏழை மக்களின் இன்னல் உன் இறைமாட்சியைச் சபிக்க வில்லையா?

''இனியேனும், பணக்காரர்களுக்குப் பங்களாவும், படித்தவர்களுக்கு மாடி வீடும் தேடித் தருவதுடன் நில்லாது, பாதையோரத்தில் வாழும் பாமரனுக்கும் கூரை வீடேனும் கட்டித்தர முன் வருவாயா?''

('தமிழ் முரசு', ஜூலை 1946)

மதம் கொடுத்த மயக்கம்!

இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்த காலத்திலேயே வர்க்கப் புரட்சி பற்றிய எண்ணமும் எனது அடி மனத்துள் இருந்து கொண்டுதான் இருந்தது. காங்கிரஸ் தலைவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரிகளாக இருப்பதுபோல, இந்திய முதலாளித்துவத்திற்கும் நிலப் பிரபுத்துவத்திற்கும் எதிரிகளாக இருக்கவில்லை — இருக்கவும் மாட்டார்கள் என்பதனை என் மனம் தெளிவாக உணர்ந்திருந்தது. இதனை வெளிப்படையாக எடுத்துச் சொல்லவும் அன்று நான் அஞ்சவில்லை.

''தமிழ் முரசு'' நான்காவது புத்தகத்தில் நான் எழுதிய கட்டுரை ஒன்றின் முக்கிய பகுதிகள் வருமாறு:

''அன்று மக்களின் தலைவர்களாக விளங்கிய சமயவாதிகள் பாட்டாளியின் பட்டினிக்கு முற்பிறப்பில் அவன் செய்த கர்மமே காரணமென்றனர். அந்தக் கர்மம் தொலைய கடவுளையும் கைகாட்டினர். எனவே, ஏழைத் தொழிலாளி தன் பட்டினி அகல ஆலயம் கண்ட இடங்களில் எல்லாம்

''என்செய லாவது யாதொன்றுமில்லை இனித் தெய்வமே
உன் செயலே என்று உணரப்பெற்றேன் இந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ இங்கனேபசி மூண்டதுவே''

என்று முறையிட்டான்.

''பூணும் பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையற் கல்லநற் காட்சிக்கல்ல
சேணும் கடந்த சிவனடிக் கல்லஎன் சிந்தைகெட்டுச்
சாணும் வளர்க்க அடியேன் படுந்துயர் சற்றல்லவே''

என்று வாய்விட்டலறினான். அலறியும் பலனில்லை. பட்டினியானது அப்பனுக்குப் பின் மகன், மகனுக்குப் பின் பேரன் என்று தொத்து நோய்போலத் தொடர்ந்து வந்ததன்றி, தொலைந்தபாடில்லை.

''இந்த நிலையில்தான் இந்தியாவில் சுதந்திர எழுச்சி தோன்றியது. மக்களின் தலைமை மதவாதிகளிடமிருந்து அரசியல்வாதிகளின் கைக்கு மாறியது. தலைமை மாறவே தனது தலைவிதியும் மாறுமென்று பாட்டாளி மகன் நம்பினான்.

''புதிய தலைமையோ, ''ஏழையின் வறுமைக்கு ஏகாதிபத்திய ஆட்சியே காரணம்'' என்றது. ''சுதந்திரம் வந்தால்தானப்பா சோறு வரும்'' என்றும் கூறியது. ஏழைத் தொழிலாளி இதையும் நம்பினான். ஏகாதிபத்தியத்தை

ஒழிக்க சட்டத்தை மீறினான்; சவுக்கடி பட்டான்; சிறை புகுந்தான். செக்கு வலித்தான். இவ்வளவும் எதற்காக? ''சுதந்திரத்திலிருக்கிறது சோறு'' என்ற நம்பிக்கையால் தான்.

''எழுபது வருடங்களாக, நடத்தப்பட்டு வரும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரின் மத்தியில் பாட்டாளியின் பகுத்தறிவு வளர்பிறைபோல் வளர்ந்துகொண்டே வந்தது. இதன் விளைவாக, தனது பட்டினிக்குக் காரணம் தலைவிதியல்ல, தனி உடைமை! தனக்கு வேண்டியது சொர்க்கமல்ல, சுக வாழ்வு! — என்பதைத் தொழிலாளி தெள்ளத் தெளிய உணர்ந்தான்.

''ஆகவே ஏகாதிபத்தியத்தை வைக்கும் குழியில் முதலாளித்துவத்தையும் வைத்து மூடிவிட வேண்டுமென்று அவன் துடியாய்த் துடிக்கிறான்.

''தேச பக்தர்களே! உங்களது தேச பக்திக்குச் சோதனைக்காலம் ஏற்பட்டுள்ளது. ''சுதந்திரம்தான் சோறு போடும்'' என்று ஏழைக்குக் கற்றுத் தந்த நீங்கள், ஏகாதிபத்தியத்துடன் முதலாளித்துவமும் ஒழிந்த சுதந்திர சோஷலிச நாட்டில்தான் ஏற்றத் தாழ்வின்றி எல்லோரும் இன்புற்று வாழ முடியும் என்று தொழிலாளி வர்க்கம் கூறினால், அதை ஏற்கத் தயங்குவது எதற்காக? வெள்ளை முதலாளி களோடு கருப்பு முதலாளிகளுக்கும் விடை கொடுத்து விடுவோம்; வீறிட்டெழுங்கள்.''

('தமிழ் முரசு', ஆகஸ்டு, 1946)

நிலப்பிரபுத்துவம் பற்றியும் எனது மனத்தில் தெளிவான — திட்டவட்டமான கொள்கை உருவாகியிருந்தது. எனது பார்வை மங்கலாக இல்லை. சற்று தெளிவாகவே இருந்தது. ஆயுதப் புரட்சியை நான் அறவே வெறுத்தேனென்றாலும், அகிம்சை வழியிலாயினும் வர்க்கப் புரட்சி தோன்றத்தான் செய்யுமென் பதனை நான் அன்றே உணர்ந்திருந்தேன்.

ஆத்திரப் பொங்கல்!

நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தின் கீழ் அல்லலுற்றுவரும் உழவர்களைப் பற்றித் 'தமிழ் முரசு' (15.1.47) இதழிலே 'ஆத்திரப் பொங்கல்' என்னும் தலைப்பில் பொங்கல் திருநாள் பற்றி யான் எழுதிய தலையங்கத்தின் சில பகுதிகள் வருமாறு:

''இன்றும் பொங்கல் விழா வருகின்றது. என்ன பொங்குகிறது? 'பால்' என்பீர்கள். ஆனால், பாலுக்கழும் பச்சிளங் குழந்தைகளின் கோரக் குரலை எங்ஙனம் மறப்பது?

''இன்று பொங்கல் நன்னாள்! தமிழா, உன் வீட்டில் உலை பொங்காமலிருக்கலாம். அதற்காகக் கவலைப் படாதே! உன் உள்ளமாவது பொங்கட்டும்!

''உன் அறிவை அழித்து அறியாமையைத் தந்த எழுத்தின் தலை எழுத்து இன்றோடு தீர்ந்தது. இன்று — பொங்கல் திருநாளில் புது எழுத்து பிறந்துவிட்டது. அதுதான் உன்னை வாழ்விக்க வகைகாணும் வாய்மையுள்ள எழுத்து!

''இன்றைய பொங்கல் நன்னாளில் உன் வீட்டு அடுப்பில் தீ மூளவில்லையே என்று தேம்பி அழாதே! உன் உழைப்பைப் பறித்து உள்ளத்தில் தீ மூட்டிய அந்த முதலாளித்துவக் கோட்டையிலே இன்றைய பொங்கல் நன்னாளிலே மூண்டது தீயென்று மூன்றுலகமும் கேட்க முழக்கமிடு!

''விவசாய மக்களே! உங்கள் நிலத்தில் புகுந்த முதலைக் கூட்டங்களின் கடைசி மூச்சுக்குக் காலம் வந்துவிட்டது. உழவர் மக்கள் உள்ளம் பொங்கினால் இந்த உலகம் பொங்குமென்ற உண்மையை ஓங்கி முழங்குங்கள். ''படை திரண்டோம்; பாடுபடும் நிலத்தைப் பறிகொடுக்க மாட்டோம்'' என்று இந்தப் பொங்கல் நன்னாளிலே பாரதிரக் கூறுங்கள்.

''தமிழா! பொங்குது பொங்கல்! உலை பொங்கா வீட்டில் உள்ளம் பொங்குது. தமிழனுக்கு இந்த ஆண்டு ஆத்திரப் பொங்கல். அடுத்த ஆண்டு ஆனந்தப் பொங்கல்!''

இந்தத் தலையங்கம் சிறு பிரசுரமாக வெளியிடப்பட்டது. அதன் பிரதிகள் பல்லாயிரக்கணக்கில் செலவாயின.

தமிழினத்துக்கு நான் தனியரசு கோரியது சோஷலிச சமுதாயம் படைப்பதற்கு அது வழியென்று நம்பியதால்தான். ஆகவே, தமிழரசுப் பிரச்சாரத்தில் அன்று சோசலிச உணர்ச்சியே தலை தூக்கி நின்றது. அந்த வகையில் விஞ்ஞான ரீதியான சோஷலிஸ்டு என்று தன்னைக் கூறிக்கொள்ளும் எவருக்கும் நான் பின் தங்கியவனாக இருந்ததில்லை. இன்றுங்கூட அந்த உணர்ச்சி கடுகளவும் குறைந்துவிடவில்லை. மாநிலங்களுக்குச் சுயாட்சியளித்து அயல் நாட்டுறவு — பாதுகாப்பு — போக்குவரத்து ஆகிய மூன்று அதிகாரங்களை மட்டுமே மத்தியில் வைத்து, மத்திய அரசை உண்மையான சமஷ்டி அரசாகச் செய்வதன் மூலம்தான் இந்தியாவை சோசலிச நாடாக்க முடியும் என்று நான் நம்புகின்றேன். இந்த நம்பிக்கைதான் மாநிலச் சுயாட்சிக் கிளர்ச்சியிலே நான் உறுதியாகக் காலூன்றி நிற்பதற்குக் காரணமாகும்.

நான் உழைத்துப் பிழைக்கும் தொழிலாளியாக இருந்துகொண்டு அரசியலில் புகுந்ததால், எதிலும் உணர்ச்சி பூர்வமாகச் செயல்படுபவனாகவே இருந்து வந்திருக்கிறேன். சொல் வேறு; செயல் வேறு என்ற பிழை என் வாழ்க்கையில் இது வரையில் ஏற்பட்டதில்லையென்று நான் உறுதியாகக் கூறுவேன்.

உணர்ச்சி காரணமாக நான் பல சந்தர்ப்பங்களில் கடுமை யான சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறேன். முதலாளித்துவத் திடம் எனக்குக் கொஞ்சங்கூட நல்லெண்ணம் கிடையாது. அதனைக் கடுமையாகத் தாக்குவதற்கு வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் வன்மையான சொற்களைப் பயன் படுத்த நான் தயங்கியதே இல்லை.

தருமகர்த்தாப் பொதுவுடைமை!

காந்தியடிகளைத் தெய்வத்துக்குச் சமமாகக் கருதி இன்றளவும் என் இதயக் கோயிலில் அவரை வைத்து வழிபட்டு வருகிறேன். ஆயினும், அவர் போதித்த தருமகர்த்தாப் பொது வுடைமை தத்துவத்தை நான் ஏற்றுக் கொண்டதே இல்லை. வாய்ப்பு நேர்ந்தபோதெல்லாம் குறைகூறி வந்திருக்கின்றேன். இதோ சான்று:

''தருமகர்த்தாப் பொதுவுடைமை, முதலாளித்து வத்தை ஒழிப்பதற்குப் பதிலாக முதலாளியின் சுயநலப் புத்தியை ஒழிக்க முயலுகிறது.

''காந்தியடிகள் இதை நம்பிச் சொன்னார்; நல்லெண்ணத்துடன் சொன்னார். எனவே, அவரது கருத்தை நடை முறைக்கு அனுமதிக்க மறுப்பவர்கள்கூட அவரது நல்லெண்ணத்தை மட்டும் சந்தேகிப்பதில்லை.

''இந்தத் தத்துவம் தமிழ்நாட்டுக்குப் புதிதன்று. பழைய இலக்கியங்களிலும் புராணங்களிலும் 'தானம்' என்ற பெயரால் வற்புறுத்தப்பட்டதுதான். அதே கொள்கைதான் 'தருமகர்த்தாப் பொதுவுடைமை' என்னும் புதிய பெயரில் புகுந்துள்ளது. 'செல்வத்துப் பயனே ஈதல்' — அதாவது ஒருவன் பொருள் சேர்ப்பது பிறருக்குக் கொடுப்பதற் காகவே என்ற புறநானூற்றுப் பாடல் முதற்கொண்டு ''அறஞ் செய விரும்பு'' என்ற ஔவையார் மொழிவரை எல்லாம் ஏழையின்பால் கருணை காட்டும்படி பணக்காரர்களுக்குப் போட்ட மனுக்களே அல்லவா?

இந்த அற உபதேசங்களின் பயனாக நாட்டில் இங்கு மங்குமாகக் கோவில்களும் கல்விச் சாலைகளும் அன்னச் சத்திரங்களும் ஏற்பட்டன. ஆனால், சுரண்டல் கொடுமையிலிருந்து விடுபட்டு பாட்டாளி மக்கள்

சுகவாழ்வு வாழ வழி தோன்றவில்லை. அற நிலையங்களைக் கட்டியதன் பயனாய் பணக்காரர்களுக்குப் பொருளோடு புகழும் சேர்ந்தது. 'தரும தாதா' - 'அன்ன தாதா' என்றெல்லாம் பணக்காரர்கள் பாராட்டப் பெற்றனர்.

''பிறரது உழைப்பைத் திருடி லட்சக்கணக்கில் பணம் சேர்ப்பவனுக்குப் பட்டம் லட்சாதிபதி!

''அந்தத் திருட்டையே இன்னும் திறமையாக நடத்திக் கோடிக் கணக்கில் பணம் சேர்ப்பவனுக்குப் பட்டம் கோடீசுவரன்!

''பல கோடி மக்களின் உழைப்பைத் திருடி எல்லையற்ற பொருள் சேர்ப்பவனுக்குப் பட்டம் பிரபு!

''பொருளோடு புகழையும் விரும்பி அற்பக் காசு களைத் 'தானம்' என்ற பெயரில் திருடு கொடுத்தவர் களுக்கே திருப்பிக் கொடுப்பானாயின், அவன் பெயர் வள்ளல்!

''உழைப்பாளியின் அறிவை அழித்து ஆண்மையை நசுக்கி அவனை அடிமை கொள்ளும் கொடியவனுக்குப் பெயர் எசமான்!

''ஆம்; பணக்காரர்களின் சுரண்டல் புத்தியைப் பழிப்பதற்குப் பதிலாக அவர்களுக்குப் பட்டம் தந்து பாராட்டியது மூடச் சமூகம்.

''இந்த பட்டங்களாலும் பாராட்டுகளாலும் சுரண்டல்வாதிகளின் கொடுமையை உலகம் உணர முடியாதபடி திரையிடப்பட்டதே தவிர, வறுமை மறையவில்லை.

''தருமகர்த்தாப் பொதுவுடைமைத் தத்துவம் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே தோல்வியடைந்து விட்டது. மீண்டும் அதனை ஏற்றுக் கொள்வது தற்கொலைக்கு ஒப்பான செயலாகும்.''

('தமிழன் குரல்', 85-88)

'தமிழ் முரசு'' புத்தகத்தில் ''பாமரன்'' என்னும் புனைபெயரில் முதலாளித்துவ சமுதாயத்தின் கொடுமைகளை நான் வன்மையாகத் தாக்கி எழுதிய காலத்திலே பிரிட்டிஷ் ஆட்சி வெளியேறவில்லை. அதனால், 'பாமரன்' கட்டுரைகளுக்காக, 'முரசு' தடை செய்யப்படலாம் அல்லது ஜாமீன் தொகை கேட்கப்படலாம் என்ற வதந்தி கூட ஒருசமயத்தில் இருந்தது. இதுபற்றிய தகவல் திரு.வி.க. மூலம்தான் எனக்குக் கிடைத்தது. ஆனால், அப்படி எதுவும் நடைபெறவில்லை.

தொழிற்சங்கங்களுடன் தொடர்பு

சோசலிசத்தைப் பற்றிக் காரசாரமாக எழுதி விடுவதாலேயே முதலாளித்துவ சமுதாயம் மறைந்து சோசலிச சமுதாயம் பிறந்துவிடாதென்பது எனக்குத் தெரிந்தே இருந்தது. ஆயினும்; இளமையின் துடிப்பும் உணர்ச்சி வேகமும் எனது எழுதுகோலைக் கூராக்கிவிட்டன. அதே நேரத்தில் தொழிற்சங்க இயக்கத்தோடும் எனக்கிருந்த சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப நான் தொடர்பு கொள்ளலானேன். இத்துறையில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நான் முன்னணியில் இருந்தேனென்று சொல்வதற்கில்லை. அதற்காக நான் முயலவும் இல்லை. ஆயினும், அதிலிருந்து அடியோடு ஒதுங்கி நின்று சோசலிசத்துக்கு முரசு கொட்டும் தவறையும் நான் செய்யவில்லை.

நான் அச்சுத் தொழிலாளியாக இருந்த காலத்திலே சென்னை அச்சுத் தொழிலாளர் சங்கத்தின் துணைத் தலைவனாகவும்,

'தமிழ்நாடு' அச்சுத் தொழிலாளர் சங்கத்தின் தலைவனாகவும் இருந்தேனென்று ஏற்கனவே கூறியிருக்கிறேன். அதே நேரத்தில், சென்னை குஜராத்தி மண்டலில் நடைபெற்ற அகில இந்திய அச்சுத் தொழிலாளர் மாநாட்டைத் தொடங்கி வைக்கும் புனிதப் பணியை மேற்கொண்டதையும் முன்பே எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

முதலாளித்துவத்தை எதிர்க்க வேண்டுமென்பதில் எனக் கிருந்த முனைப்பு காரணமாகவே தமிழ்நாடு அச்சுக்கூடத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை நடத்தி, அதனால் வேலை யிழக்கும் விபத்துக்கும் ஆளானேன்.

தமிழரசுக் கழகத்தைத் தொடங்கிய பின்னர் ஸ்தாபன ரீதியில் தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபட வேண்டுமென்ற ஆர்வமும் எனக்கிருந்தது. ஆயினும், எனது கழகத்தை அப்பட்டமான ஒரு தொழிற்சங்க இயக்கமாக மாற்றிவிட நான் எப்போதுமே விரும்பியதில்லை. அதனால், ''புதிய தமிழகம்'' படைப்பதென்ற கழகத்தின் அரசியல் கொள்கை தடைப்பட்டு விடுமென்ற அச்சம் எனக்கிருந்தது. ஆயினும், பிற அரசியல் கட்சிகள் — தொழிற் சங்கங்கள் நடத்திய நியாயமான வேலை நிறுத்தங்கள் வெற்றி பெறுவதற்குத் தமிழரசுக் கழகத்தின் சார்பில் கைகொடுக்க நான் தவறியதே இல்லை.

இயக்கம் வளர்ந்தது, இமயம்போல!

கழகம் தொடங்கிய பின் முதல் இரண்டாண்டுகளில் — அதாவது, 1947, 48-ஆம் ஆண்டுகளில் அதனை மின்னல் வேகத்தில் வளர்க்க என்னால் முடிந்தது. அதற்குக் காரணம், கழகத்தின் மொழி — அரசியல் — பொருளாதார — சமூகக் கொள்கைகள் புரட்சிகரமானவை என்பதனைப் பொதுமக்கள் — குறிப்பாக, தமிழின இளைஞர்கள் உணர்ந்ததுதான். கட்சிச் சார்பற்று வெளி வந்து கொண்டிருக்கும் தமிழ், ஆங்கில நாளிதழ்களும் கழகப் பிரச்சாரத்திற்கு நல்ல முறையில் விளம்பரமளித்து வந்தன.

தமிழரசுக் கழகக் கொள்கைகளை விளக்கும் வேதப் புத்தகம் போன்று 'தமிழன் குரல்' என்னும் ஒரு நூலை எழுதி வெளியிட்டேன்.

டாக்டர் மு.வரதராசனார் அவர்களால் ''தமிழ் முரசு'' இதழில் ''அன்னைக்கு''— ''தம்பிக்கு'' என்னும் தலைப்புகளில் கழகக் கொள்கைகளை விளக்கும் வகையில் தொடர்ந்து எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்தும் நூல்கள் வெளியிடப் பட்டன.

கவிஞர்களான கு.சா. கிருஷ்ணமூர்த்தி, கா.மு.ஷெரீப், கு.மா. பாலசுப்பிரமணியம், 'வானம்பாடி' சுந்தரேசன் ஆகியோ ருட்பட கவிஞர் பலர் தமிழரசுக் கழகத்தில் சேர்ந்து முன்னணிப் பேச்சாளர்களாக மலர்ந்தனர்.

திருவாளர்கள் சி.வேங்கடசாமி, எம்.ஏ., திருப்பத்தூர் அ.ச.ரகுநாயகம், எம்.ஏ., மதுரை புலவர் மு.ராமலிங்கம், ம.ரா.போ. குருசாமி, எம்.ஏ., ஆகியோர் உட்பட ஏராளமான தமிழ்ப் புலவர்கள் தமிழரசுக் கழகத்தின் இலக்கிய வட்டத்திலே முன்னணியில் நின்றனர்.

திரு.கொ.மோ. ஜனார்த்தனம், பி.ஏ., பி.காம்., கோவை ரசிதாசலம், பி.ஏ. போன்ற பட்டதாரிகள் பலர் தமிழரசுக் கழகத்தின் நாவன்மை மிக்க பேச்சாளர்களாக விளங்கினர்.

தமிழ்ப் பெரியார் திரு.வி.க. டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை, டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் ஆகிய சான்றோர்கள் எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வந்தனர்.

நாஞ்சில் கவிமணி தேசிக விநாயகனார், நாமக்கல் வெ. இராமலிங்கம்பிள்ளை, சுத்தானந்த பாரதியார் போன்ற நாடறிந்த பெருங்கவிஞர்கள் நான் வேண்டும்போதெல்லாம் என் கொள்கைகளுக்கு வலுவூட்டும் கவிதைகளைத் ‘தமிழ் முரசு’க்கு வழங்கி வந்தனர். குயிலன், தமிழ் ஒளி, க.தங்கவேலனார் ஆகிய இளங்கவிஞர்கள் ‘தமிழ் முரசு’க்குக் கவிதை எழுதுவதைத் தங்கள் கடமையாகக் கொண்டனர்.

தமிழரசுக் கழகம் தோன்றிய பின்னுள்ள இரண்டாண்டு களில் அது வெகு வேகமாக வளர்ந்தது. ஆம்; நானே எதிர்பார்த்ததைவிடவும் அதிக அளவில் தமிழ் மக்கள் — குறிப்பாக, தமிழின இளைஞர்கள் — சிறப்பாக, கல்லூரிகளில் உயர்தரக் கல்வி பயின்ற மாணவர்கள் கழக வளர்ச்சிக்கு ஆதரவு தந்தனர். இந்த ஆதரவு என்பால் நல்லெண்ண மில்லாதவர்கள் பொறாமை கொள்ளக்கூடிய அளவிலும் இருந்ததென்று சொல்ல வேண்டும். தமிழ்நாடெங்கணும் கிளைக் கழகங்கள் பெருகின. பிற மாநிலங்களிலும் சிங்கப்பூர், மலாசியா போன்ற நாடுகளிலும்கூடக் கிளைக் கழகங்கள் தோன்றின.

மலாசியத் தலைநகரான கோலாலம்பூரிலிருந்து வெளி வரும் ‘தமிழ் நேசன்’ தினசரிப் பத்திரிகையின் 4.8.47 இதழிலும், சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் ‘தமிழ் முரசு’ 15.10.47 இதழிலும் தாய்த் தமிழகத்தில் தோன்றி வளர்ந்துவரும் தமிழரசுக் கழகத்திற்கு ஆதரவாகத் தலையங்கங்கள் எழுதப்பட்டன. அவற்றில் கடல் கடந்த தமிழர்களின் தனிப் பிரச்சினைகளிலும் தமிழரசுக் கழகம் கருத்து செலுத்த வேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டிருந்தது.

'இன்ப நிலையம்' பிறந்தது!

தமிழரசு இயக்கப் பிரசுரங்களையும், கொள்கை விளக்க நூல்களையும் வெளியிடுவதற்கெனத் தனியாகப் பதிப்பகங் களும் பிறந்தன. அவற்றுள், எனது முயற்சியாலேயே அமைக்கப்பட்ட 'தமிழ் முரசுப் பதிப்பகமு'ம் ஒன்றாகும். திரு.பா.க. இராசு கிராமணி என்ற கழகத் தோழர் ஒருவர் 'தமிழரசுப் பண்ணை' என்னும் பெயரில் பதிப்பகமொன்றைத் தொடங்கினார். அதன் சார்பில், எனது முக உருவப் படமொன்றை மூன்று வண்ணங்களில் வெளியிட்டு, தமிழரசு இயக்கத்தின்பால் ஆர்வமுள்ள தமிழர்களின் இல்லந்தோறும் என்னைக் காட்சிப்படுத்த முயன்றார்.

திரு. சோம. சுவாமிநாதன், என்னுடைய நூல்களை வெளியிடுவதற்கென்றே 'இன்ப நிலையம்' என்னும் பெயரில் பதிப்பகமொன்றைத் தொடங்கினார். அதன் முதல் வெளியீடாக ''சிலப் பதிகாரமும் தமிழரும்'' என்னும் எனது நூலை வெளியிட்டார். இன்ப நிலையத்தின் இரண்டாவது வெளியீடாகத் 'தமிழன் குரல்' என்னும் பெயரில் தமிழரசுக் கழகத்தின் அரசியல் — பொருளாதார — சமூக — மொழிக் கொள்கைகளை விளக்கி யான் எழுதிய நூல் வெளியிடப் பெற்றது. இந்த நூலுக்குத் தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் வாழும் தமிழர்களிடையே நல்ல ஆதரவிருந்தது. இரண்டே ஆண்டுகளில் மூன்று பதிப்புகள் வெளியாயின.

காந்தியடிகள், இந்திய விடுதலைப் போரில் தாம் நுழைந்த ஆரம்ப காலத்திலே, ''இந்திய சுயராஜ்யம்'' என்னும் பெயரில் ஒரு நூலை எழுதி வெளியிட்டார். அந்த நூல் பல்வேறு பிரச்சினைகள் பற்றி அடிகளார் கொண்டிருந்த கொள்கைகளைத் தெற்றென விளக்குவதாக இருந்தது. எனது 'தமிழன் குரல்' என்ற நூலும் அதே தன்மையில் அமைந்திருந்ததென்று அதனைப் படித்த அறிஞர்கள் பலர் அபிப்பிராயப்பட்டனர்.

கவிஞர் குயிலன் அவர்கள் ''குயிலன் பதிப்பகம்'' என்னும் பெயரில் புதிய பதிப்பகமொன்றைத் தொடங்கி, ''தமிழரும் பிரிட்டிஷ் திட்டமும்'' என்னும் பெயரில் யான் முதன் முதலாக எழுதிய அரசியல் நூலை வெளியிட்டார்.

கொடியும் பாடலும்

தமிழரசுக் கழகம் தோன்றிய பதினைந்து மாதங்களுக்குப் பின்னர் கழக முதலாவது மாநில மாநாடு எனக்குக் கட்டளையிட்டிருந்தபடி 'தமிழரசுக் கொடி' ஒன்றைத் தயாரித்து 'தமிழ் முரசு' இதழின் முகப்பிலே அதனை வெளியிட்டேன்.

கொடியின் மேல் பகுதி — மூன்றில் இரண்டு பங்கு — வெண்ணிறம்; அதிலே, நீல நிறத்தில் வில் — புலி — மீன் சின்னங்கள்; கீழ்ப்பகுதி செந்நிறம். கழகம் சோசலிசத்தைக் கொள்கையாகக் கொண்டிருப்பதனைக் குறிப்பதற்காகவே தமிழரசுக் கொடியில் செந்நிறத்தைச் சேர்த்தேன்.

தமிழரசுக் கழகத்திற்கென முற்றிலும் புதிதாக ஒரு கொடியைப் படைக்க நான் விரும்பவில்லை. கழகம் தமிழினத்தின் ஒரே தேசிய அமைப்பு என்பதனைப் புலப்படுத்துவான் வேண்டி, அற்றை நாள்வரை தமிழ்ப் புலவர்களும் — தமிழ் மன்றங்களும் பயன்படுத்தி வந்த மூவேந்தர் சின்னங்களைக் கழகம் ஏற்கும்படி செய்தேன்.

கவிஞர் கு.சா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தமிழரசுக் கொடி வணக்கப் பாடல் ஒன்றைப் புனைந்தளித்தார். இந்தப் பாடலை ஒரு தீர்மானத்தின் மூலம் தமிழரசுக் கழகச் செயற்குழு அதிகாரபூர்வமாக அங்கீகரித்தது.

சிறிய — பெரிய அளவுகளில் ஆயிரக்கணக்கில் தமிழரசுக் கொடிகள் தயாரிக்கப்பட்டு மக்கள் மத்தியில் விற்பனை செய்யப்பட்டன.

கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரின் புகழ் பரப்புவதைக் கழகம் தனது கடமையாகக் கொண்டது. 18.11.47

முதல் ஒரு வார காலம் முதன் முதலாக ''வ.உ.சிதம்பரனார் வாரம்'' எனது கழகத்தாரால் கொண்டாடப்பட்டது. அந்த வாரத்தில் நடந்த பொதுக் கூட்டங்களில், சென்னை ''ஜார்ஜ டவுன்'' பிரதேசத்திற்குச் ''சிதம்பரனார் நகர்'' என மாற்றுப் பெயரிடுமாறு அரசினரைக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வ.உ.சி. பெயரால் நாடெங்கும் துணை மன்றங்களும் படிப்பகங்களும் தோற்றுவிக்கப் பெற்றன.

'தமிழ்ப் பண்ணை'யால் வெளியிடப்பட்டு 2-ஆம் பதிப்போடு நின்று போயிருந்த 'கப்பலோட்டிய தமிழன்' நூலை மேலும் விரிவாக எழுதி, 'இன்ப நிலைய'த்தின் பதிப்பாக வெளிவரச் செய்தேன்.

தமிழரசுக் கழகச் சட்டதிட்டங்கள் தயாரிக்கப்பட்டு, கழகப் பொதுக் குழுவின் அங்கீகாரத்திற்குப் பின்னர் நூல் வடிவில் வெளியிடப்பட்டது.

''தமிழினமே ஒன்றுபடு'' என்ற கழகத்தின் ஒருமைப்பாடு கோஷத்தைச் செயல்படுத்த ஆண்டுதோறும் பொங்கல் திருநாளைத் 'தமிழர் திருநாளாக'க் கொண்டாடும் வழக்கத்தை 1947 ஜனவரி 14-இல் கழகம் தொடங்கி வைத்ததை இங்கு மீண்டும் நினைப்பூட்ட வேண்டும்.

தமிழ்நாட்டில் புகழ்மிக்க நாடகக் குழுவினராக விளங்கி வரும் டி.கே.எஸ். குழுவினர் தமிழரசுக் கழகத்தின்பால் நல்லெண்ணம் காட்டி, அதற்கு ஆதரவளிக்க முன் வந்தனர். அப்போது அவர்கள் நடத்திவந்த 'ஔவையார்', 'உயிரோவியம்', 'இமயத்தில் நாம்' ஆகிய நாடகங்களில் தமிழரசுக் கழகக் கொள்கைகள் எதிரொலி செய்தன.

நான் நடத்திவந்த 'தமிழ் முரசு'ப் பத்திரிகைக்கு நிதி உதவி நாடகம் நடத்தித் தர டி.கே.எஸ். சகோதரர்கள் தாங்களாகவே முன் வந்தனர். 9.8.48-இல் கோவை சண்முகா தியேட்டரில் 'வித்யாசாகர்' என்ற நாடகத்தை நடத்தி, அதில் வசூலான மூவாயிரம் ரூபாயை என்னிடம் தந்தனர்.

1948 ஆகஸ்டு மூன்றாம் வாரத்தில் டி.கே.எஸ். சகோதரர்கள் நாடகக் குழு கோவையைவிட்டு நீங்கிச் சென்னை

நகரில் முகாம் செய்தது. அவர்கள் வருகை எனக்கு உற்சாகம் தருவதாக அமைந்தது. அவர்களோடு என்கேற்பட்ட தொடர்பின் காரணமாகவே — அவர்களின் தமிழரசுக் கழக ஆதரவாளர் களாக மாறியதன் விளைவாகவே, பிற்காலத்தில் 'முதல் முழக்கம்' (கட்டபொம்மு), 'தேசபக்தர் சிதம்பரனார்' ஆகிய நாடகங்கள் அவர்களால் நடத்தப்பெற்றன எனலாம்.

தமிழரசுக் கழகத் தொண்டர் படையொன்றும் சென்னை நகரில் நிறுவப்பட்டது. திரு.ஏ.ரா. பக்தவத்சலம் அதன் தளபதியாக நியமிக்கப் பெற்றார். அந்தத் தொண்டர் படையின் அணிவகுப்பு வைபவம் முதன் முதலாகச் சென்னை சூளையில் நடைபெற்றது. அந்த அணிவகுப்பைப் பார்வையிட்டு, தொண்டர்களின் இராணுவ ரீதியான மரியாதையை நான் ஏற்றபோது, என் மனம் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தது.

கவிஞர் கு.மா. பாலசுப்பிரமணியம் சென்னைக்கு வந்து 'தமிழ் முரசு'ப் பத்திரிகையின் துணையாசிரியராகப் பொறுப்பேற்றார்.

நானும் வளர்ந்தேன்!

கழகம் வளர்ச்சி பெற்றுவந்த அதே நேரத்தில் தனிப்பட்ட முறையில் நானும் வளர்ச்சியடைந்து வந்தேன் என்பதையும் இங்குச் சொல்லியாக வேண்டும். தமிழரசு இயக்கத் தலைமைப் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டதற்குத் தமிழ் மக்களிடையே நல்ல ஆதரவு இருந்தது. நான் தமிழ்நாட்டில் சுற்றுலா செய்த காலங்களில் நகர மன்றங்களும் ஊராட்சி மன்றங்களும் எனக்கு வரவேற்பளித்து என்னைப் பெருமைப்படுத்தலாயின.

சென்னை மாநகராட்சி ஆல்டர்மேனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டேன். அப்போது, சென்னை மாநகராட்சியில் காங்கிரஸ் கட்சி இல்லாததால் சுயேச்சையாகப் போட்டியிட்டுத்தான் வெற்றி பெற்றேன்.

கழகம் வேறு, நான் வேறு என்ற நிலை இல்லாமல் அதனோடு என்னை இரண்டறப் பிணைத்துக்கொண்டு விட்டேனாதலால், கழகத்தின் வளர்ச்சி எனது வளர்ச்சியாகவும் இருந்ததெனலாம்.

கழகம் நாளொரு மேனியாக வளர்ந்து வந்த 1947, 1948-ஆம் ஆண்டுகளிலே, 'புதிய தமிழகம்' படைப்பதென்ற கழகத்தின் கொள்கைகள் வெற்றி பெறுவதற்கான சூழ்நிலையும் உருவாகி வந்தது.

திரு. தார் என்பார் தலைமையில் மொழிவழி மாகாணம் அமைப்பது பற்றி ஆராய்ந்து அறிக்கை தர மத்திய அரசு ஒரு கமிஷனை நியமித்தது. இந்தக் கமிஷன் முன்பு நான் கழகத்தின் சார்பில் சாட்சியம் தந்தேன்.

சென்னை மாகாண சட்டமன்றத்தில் மொழிவாரி மாநிலம் கோரும் தீர்மானம் ஒருமனதுடன் நிறைவேற்றப்பட்டது. இது, தமிழரசுக் கழகம் நடத்திவந்த கிளர்ச்சியின் நல்ல விளைவாகும்.

தமிழகத்தின் வடக்கு — தெற்கு எல்லைகளிலே தமிழரசுக் கழகத்தின் ஆதரவோடு எல்லைக் கிளர்ச்சிகள் வலுப்பெற்று வந்தன. தெற்கெல்லையான தென் திருவிதாங்கூர் போர்க்கள மாகவே விளங்கியது.

தமிழாசிரியர் மாநாடு, தமிழ் எழுத்தாளர் மாநாடு ஆகியவற்றில் கழகத்தின் மொழிவாரி மாநிலக் கோரிக்கையை ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. காங்கிரஸ் சார்பில் நடைபெற்ற கிராம, தாலுகா, மாவட்ட, மாநாடுகளிலும் தமிழ் மாகாணக் கோரிக்கையை ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சுருங்கச் சொன்னால், கழகம் வேறு, காங்கிரஸ் வேறு என்று சொல்ல முடியாதபடி, இரண்டும் கலந்துவிட்டன. இந்த நிலை அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த திரு. காமராசருக்குக் கவலை தருவதாக இருந்தது.

தமிழரசுக் கழகம் தனது பிள்ளைப் பருவத்திலேயே சில போராட்டங்களையும் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. 1948-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டு உயர்நிலைப் பள்ளிகளில் முதல் மூன்று படிவங்களில் இந்தி மொழி கட்டாய பாடமாக்கப்பட்டது. இதனால் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தோன்றியது. 17.7.48-இல் சென்னை செயிண்ட் மேரிஸ் மண்டபத்தில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது.

பெரியார் ஈ.வெ.ரா., மறைமலையடிகள், திரு.வி.க., பாரதிதாசன், திரு.சி.என். அண்ணாதுரை, நாரண துரைக்கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழரசுக் கழகத்தின் சார்பில் நானும் கலந்து கொண்டேன். ஆனால், மாநாடு நடத்தப்பட்ட போக்கு எனக்குப் பிடிக்கவில்லை.

இந்தியை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

தமிழர் வாழ்வில் தமிழ் மொழிக்கு முதலிடம் ஏற்படாத நேரத்தில் — தமிழகத்திலே எங்கும் எதிலும் ஆங்கிலமே ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில், இந்தி மொழியும், தமிழர் மீது திணிக்கப்பட்டதால், அதனை எதிர்ப்பது தமிழரசுக் கழகத்தின் கடமையென்று நான் கருதினேன். அதிலே எனக்கு ஐயப்பாடு இருக்கவில்லை. ஆனால், இந்தி எதிர்ப்பு மாநாடானது வழக்கம்போல காங்கிரசையும் இந்திய ஒருமைப்பாட்டையும் எதிர்க்கும் போக்கில் அமைந்திருந்தது. அதனால், தமிழரசுக் கழகம் தனித்து நின்றே இந்தித் திணிப்புக்கு எதிர்ப்புக் காட்ட வேண்டி ஏற்பட்டது.

தமது தலைமையில் அமைந்த இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் என்னையும் எனது கழகத்தையும் இணைத்துக் கொள்ள பெரியார் ஈ.வெ.ரா. பெரிதும் முயன்றார். தமது மனைவி மணியம்மையார், 'குத்தூசி' எஸ்.குருசாமியார் ஆகியோருடன் அடிக்கடி எனது இல்லத்திற்கு வந்து, என்னுடன் மிகுந்த அன்போடு உரையாடி, என் மனதை மாற்ற முயன்றார். அவரது முயற்சி பலன் தரத் தவறிவிட்டது.

தமிழரசுக் கழகச் செயற்குழு கூடி, இந்தித் திணிப்பை எதிர்ப்பதில் தனி வழி செல்ல முடிவெடுத்தது. அதன்படி, கழகத்தின் பெயரால் நாடெங்கும் இந்தி எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அத்துடனன்றி, கழகம் நேரடி நடவடிக்கையிலும் ஈடுபட்டது.

20.8.48-இல் கழகச் செயலாளர் திரு.கொ.மோ. ஜனார்த்தனம் தலைமையில் 21 பேர் கொண்ட தொண்டர் குழாத்தினர் சென்னைக் கோட்டைக்குள் சென்று இந்தித் திணிப்பைக் கைவிடுமாறு அரசினரைக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர். தமிழகம் தழுவிய முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கியமான

வர்களே இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப் பட்டனர். சென்னை, சேலம், கள்ளக்குறிச்சி, திருவள்ளூர், மதுரை, புதுக்கோட்டை, திருப்பத்தூர் ஆகிய நகரங்களின் தோழர்கள் இதில் பங்கு பெற்றனர். அவர்களில், புதுக்கோட்டை நகர த.அ.க. தலைவர் கவிஞர் கு.சா. கிருஷ்ணமூர்த்தி, புதுக்கோட்டை 'தாய்நாடு' ஆசிரியர் திரு.க.நாராயணன், கள்ளக்குறிச்சி திரு.கி. ஜனார்த்தனம், திருப்பத்தூர் மு.வேணுகோபால் ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

கல்வியமைச்சர் திரு.டி.எஸ். அவினாசிலிங்கம் செட்டியார், ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி, இந்தியை விருப்பப் பாடமாக மாற்றுவதுபற்றி ஆலோசிப்பதாகக் கூறினார். பின்னர், அதனை நிறைவேற்றவும் செய்தார்.

1948 அக்டோபர் 2-ஆம் தேதியன்று பூரண மதுவிலக்கு தமிழ்நாடு முழுவதிலும் காங்கிரஸ் அரசால் அமுல் நடத்தப் பட்டது. இதனால் வேலையிழந்த கள் தொழிலாளர்களுக்கு மாற்று வேலையோ, கஷ்ட நிவாரணமோ தர அரசு திட்டமிடவில்லை.

தமிழரசுக் கழகம் தொழிலாளர் நலனில் நாட்டமுடைய சோஷலிச இயக்கமாதலால், மதுவிலக்கால் வேலையிழந்த கள் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை தருமாறும், அதற்கிடையில், உணவு, உடை போன்ற அத்தியாவசியத் தேவைகளை இலவசமாக வழங்குமாறும் அரசினரை வற்புறுத்திக் கழகம் கிளர்ச்சி தொடங்கியது. இதன் விளைவாக அரசு, சென்னை நகர கள் தொழிலாளர்களுக்கு மட்டும் ஒரு மாதத்திற்குத் தேவைப்படும் உணவு ரேஷனை இலவசமாக வழங்கியது. அரசு அலுவலகங்களிலும் தனியார் அலுவலகங்களிலும் வேலை யிழந்த கள் தொழிலாளர்களுக்கு மாற்று வேலைத் தேடி தரவும் அரசு அக்கறை எடுத்தது. அதற்கென சென்னை நகர மேயர் இராமசாமி நாயுடு தலைமையில் தனிக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் நானும் சேர்த்துக் கொள்ளப்பட்டேன்.

கள் தொழிலாளருக்குத் தொண்டு

சென்னையில் ''கள்ளிறக்கும் தொழிலாளர் கஷ்ட நிவாரண சங்கம்'' என்றொரு சங்கத்தையும் அமைத்தேன். கழகச் செயலாளர் திரு. கொ.மோ. ஜனார்த்தனம் இந்தச் சங்கத்திற்கும் செயலாளராக இருந்து கள் தொழிலாளர் கஷ்டங்களை அகற்ற அரும்பாடுபட்டார். சில நூற்றுக்கணக்கான கள் தொழிலாளர் களுக்கு மாற்று வேலைகள் வாங்கித் தந்தேன் அதற்கு மேல் எனது முயற்சி வெற்றி பெறவில்லை. வேலையிழந்த தொழி லாளர்கள் மாற்று வேலையை விரும்பவில்லை. பழக்கப்பட்டு விட்ட கள்ளிறக்கும் தொழிலையே அவர்கள் விரும்பினர். அதனால், மதுவிலக்கைக் கைவிட்டு திரும்பவும் கள்ளுக் கடைகளைத் திறக்குமாறு அரசை நான் வற்புறுத்த வேண்டுமென்று என்னை நிர்ப்பந்தித்தனர். அதற்கு இணங்க மறுத்து நான் கள் தொழிலாளர் கஷ்ட நிவாரண சங்கத்தையே கலைத்துவிட்டேன்.

தொழிற்சங்க இயக்கத்தைச் சார்ந்த அரசியல் கட்சி எதுவும் வேலையிழந்த கள் தொழிலாளர்களுக்கு நிவாரணம் கோரக்கூட முன் வராதது எனக்கு வியப்பைத் தந்தது. மாதா மாதம் சந்தா செலுத்தச் சக்திபடைத்த தொழிலாளர்களிடையில்தான் தொழிற் சங்கங்கள் இயங்குமென்ற உண்மையை நான் அப்போதுதான் புரிந்து கொண்டேன்.

உண்மையில் கள் தொழிலாளர்கள் கஷ்ட நிவாரணத்திற்குத் திட்டமிடாமல் பூரண மதுவிலக்கை அமுல் நடத்தியதும் அது தோல்வியடைந்ததற்குரிய காரணங்களில் ஒன்றாகும். வேலையிழந்த சென்னை நகர கள் தொழிலாளர்களுக்கு நிவாரணந் தேட நான் முயன்றபோது, தமிழ் — ஆங்கில பத்திரிகைகள் எனக்கு நல்லமுறையில் ஆதரவு தந்தன. 'இந்து' பத்திரிகை தலையங்கம் எழுதி எனக்கு ஆதரவளித்தது. ஆனால், வேலையிழந்த தொழிலாளர் மதுவிலக்குக்கு எதிராக இருந்ததால் அப்போது எனது முயற்சியில் நான் வெற்றி பெறவில்லை.

இப்படி, 1947, 1948 ஆகிய இரண்டாண்டுகளில் கழகம் அடைந்த வளர்ச்சியைத் தமிழக வரலாற்றிலே வேறு எந்த இயக்கமும் அடைந்திருக்குமென்று சொல்வதற்கில்லை. ஆம்; தமிழினத்தாரில் பல்வேறு தரப்பினரிடையிலும் கழகத்திற்கு ஆதரவு திரண்டு வந்தது. அதே நேரத்தில் கழகத்திற்கு எதிராகப் பொறாமையும் வளர்ந்து வந்தது.

போட்டி இயக்கங்கள்

எலும்புக் கூடு!

தமிழரசுக் கழகம் தொடங்கப்பட்ட பின்னுள்ள மூன்றாண்டுக் காலத்தில் அதனை வளர்க்க நான் பட்டபாடு வருணனையில் அடங்காததாகும். என் அரசியல் பகைவர்கள் இருசப்ப கிராமணி தெரு எலும்புக் கூடு என்று என்னை வருணித்த காலம் அது. அந்த எலும்புக்கூட்டை வைத்துக் கொண்டு பொருள் வசதியின்றி, பணக்காரர்கள் பக்கபலமின்றி, ஒரு பொது இயக்கத்தைக் கட்டி வளர்ப்பதில் உள்ள இன்னல்களை அனுபவித்தவர்கள்தான் அறிந்து கொள்ள முடியும்.

சென்னைக்கு வெளியே சுற்றுலா சென்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வீடு திரும்புங்கால் நோயுற்றுப் படுக்கையில் விழுவது வழக்கமாக இருந்தது. என் உடலைப் போஷித்துக் கொள்ளவோ, எனக்குத் தேவைப்படும் மருந்துகளை விலை கொடுத்து வாங்கி, நோயின் கொடுமையைத் தணித்துக் கொள்ளவோ இயலாதவனாக இருந்தேன். தமிழரசு இயக்கத்திற்குச் சாதாரணப் பொது மக்களிடையே — சிறப்பாக, மாணவமணிகளிடையே நல்ல ஆதரவிருந்ததென்றாலும், பணக்காரர்களுடைய நல்லெண்ணத்தைப் பெற என்னால் இயலவில்லை. அதனைப் பெறுவதற்காக நான் முயலவுமில்லை. என்னைச் சூழ்ந்திருந்த நடுத்தர வகுப்பைச் சார்ந்த இளைஞர்கள் கழகத்தின் தேவைகளை ஓரளவு கவனித்துக் கொண்டார்கள். ஆனால், அவர்களுடைய உதவிகள் போதுமானவையாக இல்லை.

ஒரு சமையம் கடுமையாக நோய்வாய்ப்பட்டு புதுவை முதலியார்பேட்டையில் உள்ள திரு. ஞானம் என்ற கம்யூனிஸ்டு இளைஞர் ஒருவரின் இல்லத்தில் தங்கி உடலைத் தேற்றிக் கொண்டேன். அந்த இளைஞருடைய அன்னையார் என்னைத் தன் மகன்போலக் கவனித்து என் உடல் தேற உதவிகள் புரிந்தார்.

இன்னொரு சமயம் கோவையில் முகாம் செய்திருந்த டி.கே.எஸ். சகோதரர்களோடு 10 நாட்கள் அவர்களுடைய கம்பெனி வீட்டில் தங்கி ஓய்வு பெற்றேன். ஆம்; உடலைத் தேற்றவோ, போதிய ஓய்வு பெறவோ எனது இல்லத்தின் சூழ்நிலை அந்நாளில் எனக்கு உதவி புரிவதாக இருக்கவில்லை. ஆயினும், என்னுடைய கஷ்டங்களை எல்லாம் அடியோடு மறந்து இன்னும் நூறாண்டுகளுக்கு வாழப் போகிறேன் என்ற மனஉறுதியோடு புதிய தமிழகத்தைப் படைக்கப் பாடுபட்டேன். அப்போதிருந்த எனது உடல்நிலையையும் என் மனஉறுதி யையும் பற்றித் திரு.கொ.மோ. ஜனார்த்தனம் செய்துள்ள வருணனை மிகவும் பொருத்தமானதாகும்.

''நானும் நண்பர் வேங்கடசாமியும் ம.பொ.சி.யிடம் ஒரு புதுமையைக் கண்டோம். அன்று அவருடைய உடல் நிலையைக் கண்ட எவரும் அவர் மேலும் நீண்ட நாட்கள் வாழ்வது அரிது என்ற முடிவுக்கே வருவர். ஆனால், ம.பொ.சி.க்கோ தமது நீடித்த வாழ்வைப் பற்றி ஐயம் இருந்ததாகத் தெரியவில்லை. இன்னும் நூறு ஆண்டுகள் வாழ்வோமென்ற திடச் சித்தம் அவரிடம் இருந்ததைக் கண்டு நாங்கள் அதிசயித்தோம்.''

(தலைவர் ம.பொ.சி., பக்.108)

தமிழரசுக் கழகம் தோன்றிய ஆரம்ப ஆண்டுகளிலே பல போட்டிகளைச் சமாளித்துக் கழகத்தை வளர்க்க வேண்டிய கடமை எனக்கிருந்தது. திராவிடர் கழகமும் அதன் தலைவரும் என்னிடம் தனிப்பட்ட முறையில் அன்பு காட்டினரென்றாலும், தமிழரசுக் கழகத்திடம் நல்லெண்ணம் காட்டவில்லை. தமிழரசுக் கழகத்தைத் திராவிடர் கழகத்திற்குப் போட்டியாக வந்த ஒரு இயக்கமென்று பெரியார் ஈ.வெ.ரா. கருதினார். திராவிடர் கழகத்தை எனது கொள்கை வழித் திருத்த வேண்டும் என்றுதான் கருதினேன். அதனை அழித்தொழிக்க நான் ஆசைப்படவில்லை. இந்தியாவிலிருந்து பிரிந்து வாழும் திராவிடத் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு, மொழிவழிப்பட்ட சுயாட்சித் தமிழகக் கோரிக்கையை தி.க. ஏற்றுக் கொள்ளுமானால், தி.க.வும், த.அ.க.வும் இரண்டறக் கலந்துவிடுவதைக்கூட நான்

விரும்பினேன். அப்படி ஒரு நாள் வரக்கூடுமென்றும் நான் கனவு கண்டு கொண்டிருந்தேன்.

தி.க.வின் எதிர்ப்பு

பெரியாரின் ஆரிய — திராவிட இன வேற்றுமைப் பிரச்சாரம் எனக்குப் பிடிக்கவில்லையென்றாலும், அது நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்க முடியாதென்று கருதியதால் அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. அப்படியே அவருடைய கடவுள் எதிர்ப்பு, மத எதிர்ப்புப் பிரச்சாரத்தைப் பற்றியும் நான் கவலைப்படவில்லை. அந்தப் பிரச்சாரம் மக்களிடையே எடுபடாது என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. ஆம்; நான் கவலைப்பட்டதெல்லாம் திராவிடத் தனி நாடு கோரிக்கை பற்றித்தான். திராவிடர் கழகத்தின் குறைபாடுகளை எடுத்துக்காட்டிப் பிரச்சாரம் செய்து வந்தேன். பெரியாருக்கோ, திராவிடர் கழகத் தோழர்களுக்கோ ஆத்திரமூட்டக்கூடிய வகையில் நான் பேசியதோ, எழுதியதோ இல்லை.

எனது நிலைமை இதுவாக இருந்தும் பெரியார், தமிழரசுக் கழகத்தை அடியோடு வெறுக்கும் வகையிலேயே பேசியும், எழுதியும் வந்தார். நாவன்மை மிக்க பேச்சாளர்களையும், எழுத்தாளர்களையும் கொண்டிருந்த திராவிடர் கழகத்தின் தாக்குதல்களைத் தாங்கிக் கொண்டு தமிழரசுக் கழகத்தைக் கட்டி வளர்ப்பதென்பது எனக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது.

நல்லவேளையாக, திராவிடர் கழகத்திலேயும் எனது தமிழரசுக் கொள்கைக்கு ஆதரவு காட்டுவோர் இருந்தனர். அத்தகையவர்களின் எண்ணிக்கை நாளடைவில் பெருகி வருமென்ற நம்பிக்கை எனக்கிருந்தது.

பெரியார் ஈ.வெ.ரா., தமிழ்ப் பெரியார் திரு.வி.க.வை என்னிடமிருந்து பிரித்தெடுப்பதில் வெற்றி கண்டுவிட்டார் என்று ஏற்கனவே நான் கூறியிருக்கிறேன். கடலூரில் திராவிடர் கழக மாநாட்டிலே திரு.வி.க. கலந்து கொண்டதால் எனது இயக்கம் சிறிது பலவீனப்பட்டதுபோலவே எனக்குத் தோன்றியது. ஆயினும், மனத்தளர்ச்சி அடையாமல், ''கடலூர் மாநாடு''

என்னும் தலைப்பிட்டு 'தமிழ் முரசு' பத்திரிகையில் தலையங்கம் எழுதினேன். அந்தத் தலையங்கத்தை திரு.வி.க.வே பாராட்டியதாக நண்பர்கள் எனக்குச் சொன்னார்கள்.

திரு.வி. கலியாணசுந்தரனார் திராவிடர் கழக ஆதரவாளராகி விட்ட பின்னர் அவரைக் குருவாகக் கருதிவரும் வேறு சில அறிஞர்களும் தமிழரசு இயக்கத்திலிருந்து ஒதுங்கலாயினர். இதன் விளைவாகவோ என்னவோ என் கழகத்தின் செயலாளராக இருந்த திரு.கொ.மோ. ஜனார்த்தனம் அவர்களும் குடும்பநலன் கருதி 1949-இல் தொழிலுக்குப் போய்விட்டார். ஏறக்குறைய அவர் தொடர்ந்து ஒன்பது ஆண்டுகாலம் கழகத்திலிருந்து ஒதுங்கி அரசாங்கத்தில் வேலை பார்த்து வந்தார். இதனாலும் தமிழரசுக் கழகம் சிறிது பலவீனப்பட்டது.

திராவிடர் கழகத்தின் ஆதரவாளராக இருந்த சென்னை மாநில முன்னாள் அமைச்சர் திரு. முத்தையா முதலியார் என்பவர்'எல்லாத் தமிழர் மாநாடு' ஒன்றைச் சென்னை பீப்பிள்ஸ் பார்க்கில் கூட்டினார். அந்த மாநாடு தமிழரசுக் கழகத்திற்குப் போட்டியாகத்தான் கூட்டப்பட்டது. ஆகவே, என்னிடமும் தமிழரசு இயக்கத்திடமும் நல்லெண்ணம் காட்ட இயலாத பெரிய மனிதர்கள் எல்லாம் எல்லாத் தமிழர் மாநாட்டிலே கலந்து கொண்டார்கள். அவர்களில் திரு.சி.என். முத்துரங்க முதலியார் போன்ற காங்கிரஸ் தலைவர்களு மிருந்தனர். பெரியார் ஈ.வெ.ரா. இந்த மாநாட்டின் முதுகெலும்பாகத் திகழ்ந்தார். அவருடைய தொண்டர் படையின் பலத்தை நம்பித்தான் இந்த மாநாடு கூட்டப்பட்டது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு நானும் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு.சி.என். அண்ணாதுரையவர் களும் அழைக்கப்பட்டோம். மாநாட்டைக் கூட்டியவர்களின் உள்நோக்கத்தை அறிந்து கொண்ட அண்ணா அவர்கள் அதில் கலந்துகொள்ள மறுத்துவிட்டார். ஒரு நண்பரை என்னிடம் தூதனுப்பி நானும் கலந்து கொள்ளாதபடி செய்து விட்டார். ஆம்; தமிழரசுக் கழகத்திடம் தனக்கிருந்த நல்லெண்ணத்தின் காரணமாகத்தான் அண்ணா அவர்கள் எல்லாத் தமிழர் மாநாட்டைப் பகிஷ்கரித்தார் எனலாம்.

சிறந்த தமிழறிஞரும், தமிழினத்தின் நல்வாழ்வில் அக்கறையுள்ளவருமான திரு.கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களும் என்னுடன் ஒத்துழையாமையைக் கடைப்பிடித்தார். அத்துடனன்றி, தமிழரசுக் கழகத்தை நான் தொடங்கிய பின்னர், 'தமிழர் கழகம்' என்ற வேறொரு அமைப்பை அவர் தொடங்கினார். அதன் பிரச்சார பேரிகையாக 'தமிழர் நாடு' என்னும் பெயரில் மாத இதழொன்றையும் நடத்தினார். தமிழர் கழகத்தின் தலைவர், நாவலர் சோமசுந்தர பாரதியார்; செயலர் திரு.கி.ஆ.பெ. விசுவநாதம்.

தமிழரசுக் கழகத்தின் பெயரால் என்னென்ன கொள்கைகளை எல்லாம் நான் பிரகடனப்படுத்தினேனோ அவற்றை எலாம் தமிழர் கழகத்தின் கொள்கைகளாகத் திரு.விசுவநாதம் அவர்கள் வெளியிட்டார். தமது தமிழர் கழகம் அமைக்கப் போகும் தமிழரசின் அமைச்சரவைப் பட்டியல் ஒன்றையும் திரு. விசுவநாதம் 'தமிழர் நாடு' இதழில் வெளியிட்டார். அந்த அமைச்சரவையிலே அண்ணாவுக்கும் எனக்கும்கூட இடம் தந்திருந்தார். நகைச்சுவையான விஷயம் இது.

வருங்காலத் தமிழகத்தின் அமைச்சரவைப் பட்டியலை வெளியிட்டு, எனது தமிழரசுக் கழகத்தைக் கலைத்துவிட்டு தமிழர் கழகத்தில் நான் கலந்துவிட வேண்டுமென்று திரு. விசுவநாதம் தனது பத்திரிகை மூலம் எனக்கு அழைப்பு விடுத்தார். என்னோடு விடாமல், அண்ணாவுக்கும் அழைப்பு விடுத்திருந்தார். அண்ணா அவர்கள் தமது ''திராவிட நாடு'' பத்திரிகையில் கொஞ்சம் காரமாகவே திரு.விசுவநாதம் அவர்களுக்குப் பதிலளித்தார். நான் பதிலளிக்காமலே புறக்கணித்து விட்டேன்.

தமிழர் கழகம் ஓராண்டுக் காலமே நீடித்தது. பின் 'கடை விரித்தேன், கொள்வாரில்லை; கட்டிக் கொள்கின்றேன்' என்று அறிக்கை விட்டு, கழகத்தைக் கலைத்துவிட்டார்.

திரு.கி.ஆ.பெ. விரும்பியது போல, அவரது கழகம் எனது கழகத்தைப் பின்னுக்குத் தள்ளி முன்னேறி வளர்ந்து தமிழினத்தின் உரிமைக்குப் பாடுபட்டு வெற்றிகாணும்

பேற்றினைப் பெற்றிருக்குமானால், அதற்காக நான் வருந்தியிருக்க மாட்டேன். புதிய தமிழகத்தைப் படைக்கும் புனிதப் பணி யார் மூலம் நடைபெற்றாலும் அதனை வரவேற்கும் மனப்பண்பு எனக்கிருந்தது. ஆனால், கால தேவன் அந்தப் பணியை என் தலைமீதே சுமத்தினான்.

எல்லைக் கமிட்டி

தமிழ்நாடு காங்கிரஸ் வட்டாரத்திலேயும், பொறாமை உணர்ச்சி தலைகாட்டியது. எல்லைக் கிளர்ச்சி ஒன்றினால்தான் தமிழின மக்களிடையே எனக்குச் செல்வாக்கு வளர்கிறதென்று தவறாக மதிப்பிட்ட காங்கிரஸ் தலைவர்கள் சிலர், அந்தப் பணியை என்னிடமிருந்து பறித்துவிட முயன்றனர். அதற்காக, ''தமிழ்நாடு எல்லைக் கமிட்டி'' என்ற பெயரில் ஒரு தனி அமைப்பையும் நிறுவினர். திரு.சி.என். முத்துரங்க முதலியார் இந்தக் கமிட்டியின் தலைவராக இருந்தார். அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த திரு.கு. காமராசரும், திரு. பக்தவத்சலனாரும் முதலியாருக்குப் பின்பலமாக இருந்தனர். இந்தக் கமிட்டியில் சேர்ந்து கொள்ளுமாறு எனக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது.

எல்லைப் பகுதிகளை மீட்பதொன்றே எனது குறிக்கோளாக இருந்திருப்பின், அந்தக் கமிட்டியிலே நானும் கலந்திருக்கக் கூடும். இதற்கு மாறாக, பூரண சுயாட்சியுடைய — தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெற்றிருக்கக் கூடிய தமிழகத்தைப் படைப்பது எனது குறிக்கோளாக இருந்ததால், திரு.முத்துரங்க முதலியாரின் அழைப்பை ஏற்க நான் மறுத்துவிட்டேன். அந்தக் கமிட்டி எல்லைக் கிளர்ச்சியில்கூட முழு மூச்சுடன் ஈடுபடாதென்ற ஐயம் எனக்கிருந்தது. நான் ஐயுற்றது போன்று தமிழ்நாடு எல்லைக் கமிட்டி வடக்கு — தெற்கு எல்லைகளுக்குப் போய் அங்குள்ள தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதற்குப் பதிலாக, சென்னை மாநகராட்சித் தேர்தலில் போட்டியிட்டது. அதுதான் கமிட்டியை அமைத்தவர்களின் உள்நோக்கமாகும். தமிழ்நாடு காங்கிரசின் பேரால் போட்டியிட்டு வெற்றி பெறக்கூடிய சூழ்நிலை அன்று இல்லாததால், தலைநகரான சென்னை பற்றிய தகராறையும், எல்லைப் பகுதி களைப் பற்றிய தாவாவையும் தேர்தல்

பிரச்சினையாக்கி, தமிழருக்குள்ளேயே போட்டியையும் போராட்டத்தையும் உருவாக்கியது தமிழ்நாடு எல்லைக் கமிட்டி. இதிலுள்ள பிழையை எடுத்துக்காட்டி ‘தமிழ் முரசு’ வார இதழில் ஒரு அறிக்கை வெளியிட்டேன். மாநகராட்சித் தேர்தலில் நான் எந்தத் தரப்பினரையும் ஆதரிக்கவில்லை. அதிலிருந்து முற்றிலும் ஒதுங்கியிருந்தேன். தமிழரசுக் கழகமும் நடுநிலையைக் கடைப்பிடித்தது.

நான் எதிர்பார்த்தது போலத் தமிழ்நாடு எல்லைக் கமிட்டி படுதோல்வி அடைந்தது. ஆம்; அறுபது இடங்களுக்குப் போட்டியிட்டுப் பதினெட்டு இடங்களையே கைப்பற்றியது. இதனால், ‘மதறாஸ் மனதே’ என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்த ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டிக்குக் கொஞ்சம் தெம்பு பிறந்தது.

தமிழ்நாடு சோசலிஸ்டுக் கட்சியாரும் என்னோடு கலந்து கொள்ளாமல், என் உதவியைக் கோராமல் ‘மொழிவாரி மாநிலக் கோரிக்கை வாரம்’ தமிழ்நாட்டில் கொண்டாடினர். ஆம்; இங்குமங்குமாக ஒன்றிரு ஊர்களில்!

கம்யூனிஸ்டுகளின் காழ்ப்பு

கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநிலக் கிளையினர் என்னோடு போட்டிக்கு வரவில்லை. ஆம்; தமிழர் கழகம், எல்லாத் தமிழர் மாநாடு, தமிழ்நாடு சோசலிஸ்டுக் கட்சி போன்று தமிழரசுக் கழகத்துடன் போட்டிக்கு வரவில்லை. மாறாக, எனது கழகத்திற்கு எதிராக ஒரு போராட்டத்தையே தொடங்கினர். தமிழரசுக் கழகத்தின் வளர்ச்சி தொழிலாளி வர்க்கத்திற்குத் துரோகம் செய்யக்கூடியதென்று ‘ஜனசக்தி’ வருணித்தது. தமிழ்நாட்டிலுள்ள நிலப்பிரபுக்களும் தொழில் முதலாளிகளும் என்னைத் தூண்டி விட்டிருப்பதாகவும் பழி சுமத்தியது.

கம்யூனிஸ்டு கட்சியின் தமிழக — ஆந்திர மாநிலக் கிளைகள் தமிழரசுக் கழகத்தின் வடக்கெல்லைக் கிளர்ச்சியை யும், தலைநகர் பாதுகாப்பு முயற்சியையும் வன்மையாகக் கண்டித்து ஒரு கூட்டறிக்கையே வெளியிட்டன. அறிக்கை மிகவும் நீளமானது. அப்போதுதான் தோன்றி வளர்ந்து கொண

டிருந்த சின்னஞ்சிறு இயக்கமான தமிழரசுக் கழகத்திற்கு எதிராக இரு பெரிய மாநிலங்களின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் கூட்டறிக்கை வெளியிட்டனவென்றால், அது சாதாரண விஷயமாக இருக்க முடியாதல்லவா! கூட்டறிக்கை வெளியிட்ட தோடு அவர்கள் நிற்கவில்லை. தமிழ்நாடு முழுவதிலும் கம்யூனிஸ்டுக் கட்சிக் கூட்டங்கள் நடத்தி, தமிழரசுக் கழகத்தைக் கடுமையாகத் தாக்கிப் பிரச்சாரம் செய்தனர்.

அந்த நாளிலும் கம்யூனிஸ்டுக் கட்சியிடமும், அதன் தலைவர்களிடமும் எனக்கு மிகுந்த நம்பிக்கையும் நல்லெண்ணமும் இருந்தன. நாடு சுதந்திரம் பெற்ற நாளிலே அதில் பங்கு கொண்டு மகிழ்வதற்காகச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட் டிருந்த கம்யூனிஸ்டுகள் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று அந்தரங்கத்திலும் பகிரங்கமாகவும் நான் பெருமுயற்சி எடுத்துக் கொண்டவனாக இருந்தும், கூட்டறிக்கையிலும் கூட்டங்களிலும் என்னை ஈவிரக்கமின்றித் தாக்கினர் கம்யூனிஸ்டுகள். அவர்களுடைய போக்கு உண்மையிலேயே எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. 'தமிழ் முரசு'ப் பத்திரிகையிலே கம்யூனிஸ்டுக் கட்சியினரின் போக்கை விமர்சித்து இரண்டு கட்டுரை எழுதினேன். அந்தக் கட்டுரைகளைத் தொகுத்து ''முடிவை மாற்ற முயல்வார்களா?'' என்னும் தலைப்பில் நூலாகவும் வெளியிட்டேன்.

'ஜனசக்தி' மூலம் தாக்குவது போதாதென்று 'ஜனநாயகம்' என்னும் பெயரில் என் பெருமதிப்பிற்குரிய நண்பர் தோழர் ப.ஜீவானந்தம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு ஒரு மாதப் பத்திரிகையும் வெளியிட்டனர். அதிலே இதழுக்கு இதழ் நான் தாக்கப்பட்டேன். ஆம்; தரக் குறைவான வார்த்தைகளால்! ஆனால், முறையற்ற இந்தத் தாக்குதல் சில மாதங்களுக்குமேல் நீடிக்கவில்லை. அப்புறம் என்னோடும் தமிழரசுக் கழகத்தோடும் உறவைப் புதுப்பித்துக் கொண்டனர் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள்.

ஒழுங்கு நடவடிக்கை மிரட்டல்!

தமிழ்நாடு காங்கிரசும் என்னைத் தன்னிலிருந்து வெளியேற்ற முயற்சி எடுத்தது. சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடந்த ''இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாட்''டிலே

நான் கலந்து கொண்டேனல்லவா! அது காங்கிரசின் கொள்கைக்கும் கட்டுப்பாட்டுக்கும் விரோதமான செயலென்று கூறி, ''உங்கள்மேல் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டுங்கள்'' என்பதாக எனக்கு அறிவிப்பு கொடுத்திருந்தார் திரு. கு.காமராசர். ஆம்; ''இந்தியில் டில்லி அரசு ஏதேனும் ஆணை அனுப்பினால், அதைக் கிழித்தெறிவேன்'' என்று 1965-இல் கூறிய திரு. காமராசர் 1948-இல் இந்தித் திணிப்பை எதிர்த்த பாவத்திற்காக என்னைக் காங்கிரசிலிருந்து வெளியேற்ற முயன்றார்.

காங்கிரசுக்குள்ளே தமிழரசுக் கழகம் வளர்ந்து வருவது அவருக்குக் கவலையைத் தந்தது. அதனால், நான் இந்தித் திணிப்பை எதிர்த்ததைக் காரணம் காட்டி, காங்கிரசிலிருந்து என்னை வெளியேற்றிவிட முயன்றார். ஆனால், இந்தித் திணிப்பு காங்கிரஸ் கொள்கையல்ல என்பதற்குக் காங்கிரஸ் மகா சபையின் தீர்மானங்களிலிருந்தும் காந்தியடிகள் கருத்துகளி லிருந்தும் சான்றுகள் காட்டி, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவருக்குப் பதிலளித்தேன். காங்கிரஸ் விதிமுறைப்படி என்மீது நடவடிக்கை எடுக்க முடியாதென்றும் எழுதியிருந்தேன். அதன்பின், அந்தப் பயமுறுத்தல் திரு. காமராசரால் கைவிடப்பட்டது. என்னைக் காங்கிரசிலிருந்து வெளியேற்ற திரு. காமராசர் முயன்றது இது மூன்றாவது முறையாகும்.

என்மீது நடவடிக்கை எடுப்பது சாத்தியமில்லாமற் போனதென்றாலும், என்னைத் தாக்குவதிலே தமிழ்நாடு காங்கிரஸ் வட்டாரம் அதிக ஆர்வங் காட்டியது. திரு.டி.எஸ். சொக்க லிங்கம் நடத்திய ''தினசரி'' என்ற நாளிதழும், திரு. எஸ்.எஸ். மாரிசாமி நடத்திய 'பேரிகை' என்ற வார இதழும் என்னைத் தாக்குவதை — என்மீது பொய்ப் புகார்கள் கிளப்புவதை வழக்கமாகக் கொண்டன.

1947 முதல் 49 வரை உள்ள மூன்று ஆண்டுகளில் தமிழரசுக் கழகத்திற்கு ஏற்பட்ட போட்டிகளையும் பொறாமை வழிப்பட்ட போராட்டங்களையும் தாங்கிக் கொண்டு, கழகத்தை வெற்றிகரமாக வளர்க்க என்னால் முடிந்தது. 'தமிழர்' என்னும்

இன உணர்ச்சி வளர்ந்து, தமிழரசுக் கழகத்திற்கு ஆதரவு பெருகியது. எதிர்ப்பு, சலசலப்பு கண்டு கவலைப்பட்டேன் என்றாலும், கண் கலங்கி நிற்கவில்லை. என்னை ஊக்கி உற்சாகப்படுத்தும் நிகழ்ச்சிகளும் நாட்டில் உருவாயின.

1948-இல் அப்போதைய சென்னை மாநிலச் சட்டமன்றத்திலே மொழிவாரி மாநிலப் பிரிவினையை வற்புறுத்தும் தீர்மானம் ஒருமனதுடன் நிறைவேற்றப் பெற்றதல்லவா! காங்கிரஸ் கட்சியும் அமைச்சரவையும் அந்தத் தீர்மானத்தை ஆதரித்தன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அமைச்சரவையிலும், சட்டமன்றத்திலும் அங்கம் பெற்றிருந்த தமிழ்நாட்டு காங்கிரஸ்காரர் களில் பெரும்பாலோர் அத்தீர்மானத்தை விரும்பாதவர்களாகவே இருந்தனர். ஆயினும், ஆந்திரர்களின் கட்டுப்பாடான முயற்சியின் முன்னே அவர்கள் பணிந்து விட்டனர்.

தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது, திரு.பி. கோபால ரெட்டியார் என்ற ஆந்திர அமைச்சர், ''தமிழ் நாட்டவரும் தங்கள் மாநிலத்தில் தனியரசு காணவே விரும்புகின்றனர். ஆந்திரம் தனி மாநிலமாக அமைவதை ஆதரிக்கின்றனர். இதற்கு, தமிழரசுக் கழகம் தோன்றி, நன்கு வளர்ந்து வருவதே சான்று'' என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டு அங்கத்தினரொருவர், ''அது பிரிவின இயக்கம்'' என்று குறுக்கிட்டுக் குரல் கொடுத்தார். திரு. கோபால ரெட்டி ''திரு. கிராமணியார் அப்பழுக்கற்ற தேசபக்தர் என்பதை உங்களைவிட நான் அறிவேன். அவர் ஒருநாளும் பிரிவினையை ஆதரிக்க மாட்டார்'' என்று உறுதி தோய்ந்த குரலில் திருப்பிக் கொடுத்தார்.

சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும், ஆந்திரத் தலைவர் ஒருவர் நல்லெண்ணத்தோடு கழகத்தைக் குறிப்பிட்டதும் எனக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்தன.

தார் கமிஷன் முன் சாட்சியம்

மொழிவாரி மாநிலப் பிரிவினைபற்றி ஆராய்ந்து அறிக்கை தர 1948-ஆம் ஆண்டின் தொடக்கத்திலே திரு. தார் என்பாரின் தலைமையில் மத்திய அரசு அமைத்த கமிஷன் சென்னைக்கு வந்தபோது, அதன் அழைப்புக்கிணங்க, 13.9.48 அன்று அதன்முன் சாட்சியம் கொடுத்தேனல்லவா! அதில், என்னால் வற்புறுத்தப்பட்ட முக்கிய விஷயங்களை இங்கு அப்படியே தருகிறேன்:

''சென்னை மாகாணத்தைத் தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம் என நான்கு நாடுகளாக உடனே ஏக காலத்தில் பிரித்தாக வேண்டும்.

''தமிழ்நாடு தனி மாநிலமாகப் பிரிய வேண்டியது அவசியமென்பதைத் தமிழர் உணர்கின்றனர். அந்தப் பிரிவினை அவசரமாக நிறைவேற்றப்பட வேண்டுமென் றும் ஆசைப்படுகின்றனர்.

''பிரிக்கப்படும் தமிழ் மாகாணத்தின் எல்லைகள் தெற்கே குமரி முனையாகவும் வடக்கே திருப்பதியாகவும் இருக்க வேண்டும்.

''சென்னை நகரம் தமிழ்நாட்டிலேயே இருக்க வேண்டும். அது தமிழ் நாட்டின் உள்பிரதேசம். அதைத் தனி மாகாணமாகவோ, ஆந்திர மாநிலத்தின் தற்காலிகத் தலை நகராகவோ செய்வது நியாயமல்ல. அப்படிச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கையையும் தமிழர் தங்கள் சக்தி முழுவதையும் பயன்படுத்தி எதிர்ப்பார்கள்.

''புதிய தமிழகம், சட்டசபை, மந்திரி சபையோடு கூடிய சுயாட்சியுள்ள மாகாணமாக இருக்க வேண்டும். அந்நிய நாட்டு உறவு, போக்குவரத்து, பாதுகாப்பு ஆகிய மூன்று அதிகாரங்களையும் மத்திய அரசுக்கு விட்டுக் கொடுத்து ஏனைய எல்லா அதிகாரங்களும் உள்ள சுதந்திர அரசுகளாக மாநிலங்கள் இருக்க வேண்டும்.''

('தமிழ் முரசு', 19.9.48 இதழில் வெளியானபடி)

தார் கமிஷன் முன்பு தமிழ்நாடு காங்கிரஸ் உள்பட அரசியல் கட்சிகள் பல சாட்சியம் கொடுத்தன. ஆனால், மாநிலங் களுக்குப் பூரண சுயாட்சி கோரி நான் மட்டுமே சாட்சியம் கொடுத்தேன் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

மாதமிருமுறையாக வெளிவந்து கொண்டிருந்த 'தமிழ் முரசு' 1.8.48 முதல், வார இதழாக மாற்றப்பெற்றது. இது, தமிழரசுக் கழகத்தின் வளர்ச்சியைக் குறிப்பதாகும்.

1948 அக்டோபரில் சென்னை மாநகராட்சித் தேர்தல் நடந்து முடிந்த பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் முதல் கூட்டத்திலே நான்கு ஆல்டர்மென்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அவர்களில் நானும் ஒருவனாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றேன்.

மாநகராட்சி ஆல்டர்மேனாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டது நானே எதிர்பாராததாகும். மாநகராட்சி உறுப்பினர்களான திரு.டி.எஸ். கோவிந்தசாமி, பெரம்பூர் திரு. குருசாமி கிராமணி யார் ஆகிய இருவரும் என்னை வற்புறுத்தி இசையச் செய்தனர்.

தமிழக எல்லை மாநாடு

1949-ஆம் ஆண்டின் இறுதியில் 'தமிழக எல்லை மாநாடு' என்னும் பெயரில் சென்னை மாநகராட்சி ஸ்டேடியம் திடலில் மாபெரும் மாநாடொன்றை நடத்தினேன். 1950 ஜனவரி 26-இல் அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வரவிருந்தது. அந்நாளிலேயே ஆந்திர மாநிலத்தையும் அமைத்துத் தருவதற்கு மத்திய அரசு திட்டமிட்டது. அதனால், சென்னை நகரம் பற்றிய ஆந்திரரின் ஆதிக்க வெறிக் கூச்சல் அதிகரித்தது. தமிழக வடக்கெல்லைப் பிரச்சினையும் முன்னணிக்கு வந்தது. இந்த இரு பிரச்சினைகளிலே தமிழினத்தின் ஒன்றுபட்ட கோரிக்கைகளை உருவாக்குவதற்காகத்தான் தமிழக எல்லை மாநாட்டை நடத்தும் முயற்சியில் ஈடுபட்டேன்.

இம் மாநாட்டிலே அப்போதுதான் மத்திய நிதி அமைச்சர் பதவியைத் துறந்திருந்த டாக்டர் ஆர்.கே.சண்முகம் அவர்கள்

தலைமை வகித்தார். அவரது தலைமை உரை சொல்லுக்குச் சொல் பொருளும் சுவையும் தருவதாக இருந்தது. அப்போது சென்னை மாநில முதல்வராக இருந்த திரு.பி.எஸ். குமாரசாமி ராசா அவர்களும் இம் மாநாட்டில் கலந்து கொண்டு பேசினார்.

தமிழகத்தின் எல்லைகள் வடவேங்கடமும் தென் குமரியுந்தான் என்ற தீர்மானத்தை நான் முன்மொழிந்து பேசினேன். தலைநகரைக் காக்க தமிழரசுக் கழகம் மேற்கொண்ட பெரு முயற்சிகளிலே இந்த மாநாடும் ஒன்றாகும்.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் இந்த மாநாட்டின் தொடக்கத்தில் கலை நிகழ்ச்சி நடத்தினார். அதிலே தலைநகரைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருந்த என்னைப் புகழ்ந்து அவர் பாடிய நகைச்சுவை மிக்க புதிய பாட்டொன்று மாநாட்டில் குழுமியிருந்த மக்களின் உள்ளங்களையெல்லாம் கவர்ந்தது. அதை இன்னொரு முறையும் கேட்டு மகிழ வேண்டுமென்ற ஆவல் எனக்கு உண்டு. பாடி மகிழ்விக்க, கலைவாணர் இன்று இல்லை. அந்தப் பாட்டும் போன இடம் தெரியவில்லை.

டி.கே.எஸ். சகோதரர்கள் தொடர்பு

தமிழரசுக் கழகம் தமிழகத்திலும் கடல் கடந்த நாடுகளிலும் வாழும் தமிழர்களிடையே நன்கு விளம்பரம் பெற்று விட்டதென்றாலும், கழகத்தின் அன்றாட நடவடிக்கைகளுக்குத் தேவைப் படும் பொருள் வசதியைப் பெற்றிருக்கவில்லை. இதனால் நான் அடைந்த துன்பம் கொஞ்சமன்று. பணத்தால் ஆகக் கூடியவற்றை எல்லாம் என்னுடைய — என்னைப் பின்பற்றிய இளைஞர்களுடைய பெரும் உழைப்பால் ஈடுகட்டினேன். ஆனால், எல்லா வகையிலும் கழகம் நன்கு வளர்ந்து வந்த நிலையிலே பண வசதியற்ற காரணத்தால் இயக்கம் படுத்து விடக் கூடிய அபாயம் ஏற்பட்டது. எனது சொந்த வாழ்க்கை இதை விடவும் பயங்கரமானதாக இருந்தது. பட்டினியோடும், பசியோடும் போராடிக் கொண்டுதான் கழகத்தை வளர்க்கும் கடமையைச் செய்ய வேண்டியிருந்தது. இந்த நிலையில்தான் ‘தமிழ் முரசு’ப் பத்திரிகைக்காக ஒரு

நாடகம் நடத்தி ரூபாய் மூவாயிரம் அளவில் உதவி புரிந்தனர் டி.கே.எஸ். சகோதரர்கள். அவர்களுடைய கோவை முகாமில் நான் தங்கியிருந்த பதினைந்து நாட்கள் என்னால் என்றும் மறக்க முடியாதவையாகும். என்னுடைய வாழ்க்கையிலே நான் தொடர்ந்து இரண்டு வார காலம் இன்னொருவர் வீட்டிலே தங்கியிருந்தது இதுதான் முதன் முறை. ஔவை டி.கே. சண்முகம் அவர்கள் கடிதப் போக்குவரத்தில் காட்டிய அன்பின் காரணமாக என்னைக் கவர்ந்துவிட்டார். அதனாற்றான் அவரோடு சேர்ந்து அவரது நாடகக் கம்பெனியின் விருந்தினனாக இருந்தேன். இதைப்பற்றி ''எனது நாடக வாழ்க்கை'' என்னும் நூலில் அவரே கூறுவதை இங்குத் தருகிறேன்.

''1947 நவம்பர் மூன்றாவது வாரத்தில் தலைவர் திரு.ம.பொ.சி.யிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. உடல் நலம் மிகவும் குன்றியிருப்பதாகவும், வயிற்று நோய் அதிகரித்திருப்பதாகவும், எங்காவது பத்து நாட்கள் சென்னையை விட்டு வெளியே போய் ஓய்வு பெற விரும்புவ தாகவும் எழுதியிருந்தார். கோவை இராமனாதபுரத்தில் படப்பிடிப்பை முன்னிட்டு ஒரு பெரிய வீட்டில் தங்கியிருப்பதாகவும், விரும்பினால் எங்கள் இல்லத்திலேயே தங்கிப் பூரண ஓய்வு பெறலாமென்றும் பதில் எழுதியிருந்தேன். தலைவரவர்கள் என் அழைப்பினை ஏற்றுக் கொண்டார். 1947 நவம்பர் கடைசி வாரத்தில் கோவைக்கு வந்து எங்களோடு தங்கினார். ஓய்வு பெறும் நோக்கத்தோடுதான் வந்தார். ஆனால், நண்பர்கள் அவரை ஓய்வு பெற விடவில்லை. தினமும் யாராவது வந்து அவருக்கு அன்புத் தொல்லை கொடுத்துக் கொண்டேயிருந் தார்கள். திங்கட் கிழமை எனக்கு ஓய்வு நாள். அன்று நானும் தலைவரும் திரைப்படம் பார்க்கச் செல்வோம். திரைப்படத்தில் அவருடைய கவனம் அதிகமாகச் செல்வதில்லை. வேறு ஏதாவது இலக்கியங்களைப் பற்றியே என்னுடன் பேசிக் கொண் டிருப்பார்.

''பகல் நேரங்களில் 'பில்ஹணன்' படப்பிடிப்பிற்குத் தலைவர் அடிக்கடி என்னோடு வந்தார். அங்கும்

இலக்கியப் பேச்சுதான். வந்த இடத்தில் வேடிக்கையாகப் படப்பிடிப்பைப் பார்த்துக் கொண்டிருக்கலாமல்லவா! ஸ்டூடியோவுக்குள் வந்தும் அங்கு நடைபெறும் வினோதங்களைப் பார்க்காமல் இலக்கியம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தது எல்லோருக்கும் வியப்பாக இருந்தது.

''தலைவர் எங்களோடு தங்கியிருந்த பதினைந்து நாட்களும் எங்களுக்கு உற்சாகமாக இருந்தன. எங்கள் பெரிய அண்ணா திரு. டி.கே. சங்கரன் ஒரு அதிசய மனிதர். ஒழுக்கத்தின் உறைவிடம் அவர். அதிகமாக யாரோடும் பேசமாட்டார். அவரை எப்படியோ கவர்ந்து விட்டார் தலைவர் ம.பொ.சி. ஓய்வு நேரங்களில் தலை வரும் பெரிய அண்ணாவும் தனியே நீண்ட நேரம் பேசிக் கொண்டிருப்பார்கள். 10.12.47-இல் எங்களிடம் விடைபெற்றுக் கொண்டு சிலம்புச் செல்வர் சென்னைக்குப் புறப்பட்ட போது எங்களுக்கெல்லாம் வருத்தமாக இருந்தது. அவர் தங்கியிருந்த நாட்களில் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வாய்ப்பேற்பட்டதால் எங்கள் நட்புறவு மேலும் வளர்ந்தது.''

உண்மையில் டி.கே.எஸ். சகோதரர்களோடு இரண்டு வாரகாலம் தங்கியிருந்த பின்னர் அவர்களிடம் விடைபெற்றுச் சென்னை திரும்பியபோது வருத்தமாகத்தான் இருந்தது.

கலைவாணர் பொருளுதவினார்

என்னை வாட்டிய வறுமைக்கு வருந்தி எனக்குப் பொருள் உதவி புரிந்த மற்றொரு கலைஞரை இங்கு நான் நன்றியுணர்வோடு குறிப்பிட வேண்டும். அவர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் ஆவார்.

1948 மே 14-இல் தமிழ் எழுத்தாளர் மூன்றாவது மாநாடு நாகர்கோவிலில் நடந்தது. அந்த மாநாட்டில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், ஔவை தி.க.சண்முகம் ஆகிய கலைஞர்களும் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டிற்கு ஔவை தி.க. சண்முகத்துடன் கோவையிலிருந்து விமானத்தில் சென்று நானும் கலந்து கொண்டேன்.

அப்போது தெற்கெல்லை மீட்சிக் கிளர்ச்சி வலுப்பெற்றிருந்ததால், நாகர்கோயிலில் நடந்த எழுத்தாளர் மாநாட்டில் நான் மிகுதியும் மதிக்கப் பெற்றேன். தமிழரசுக் கழகம் நடத்தி வந்த வடக்கு — தெற்கு எல்லைக் கிளர்ச்சிகளை ஆதரிக்கும் தீர்மானமொன்றும் எழுத்தாளர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

மாநாட்டில் கலந்து கொண்ட கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், தமிழரசுக் கழகத்திற்குத் தாம் ரூபாய் ஆயிரம் நன்கொடை அளிக்கப் போவதாகத் தமது செயலாளர் திரு.வெ. நாராயணனைக் கொண்டு அறிவித்தார். அறிவித்த அந்தத் தொகையை மூன்றாவது நாளில் என்னிடம் கொடுத்தார். டி.கே.எஸ். சகோதரர்களும் கலைவாணரும் தவிர வேறு யாரும் அந்நாளில் தமிழரசுக் கழகத்திற்கு நிதி உதவி புரிய முன்வரவில்லை.

எழுத்தாளர் மாநாடு முடிந்ததும் கலைவாணர் அவர்கள் தமது நாகர்கோயில் இல்லத்தில் என்னை இரண்டு நாட்கள் தங்க வைத்து நன்கு உபசரித்தார். பின்னர், நாகர்கோயிலிலிருந்து திருச்சிவரை தமது காரில் என்னை அழைத்து வந்து, திருவரங்கத்திலுள்ள திருமதி டி.ஏ. மதுரம்மாள் இல்லத்திலும் ஒருவேளை என்னை நிறுத்தி வைத்து, விருந்தளித்து உபசரித்தார். அந்த வீட்டில் வைத்துத்தான் கழகத்திற்கு நன்கொடை அளித்தார்.

கலைவாணர் சிரிப்பு நடிகர் என்றாலும், அவரது சிரிப்புக்குப் பிறரைச் சிந்திக்க வைக்கும் திறமை இருந்தது. அவர் ‘கோமாளி’ அல்ல; நகைச்சவை நடிப்பின் தரத்தை உயர்த்தினார். அவர், ஒரு ஸ்தாபனத்திற்குரிய சக்தியைப் பெற்றிருந்தார். நடிப்பைத் தொழிலாக மட்டுமல்லாமல், தொண்டாகவும் கொண்டிருந்தார். நகைச்சுவை நடிப்பில் அவர் இருந்த பீடம் இன்னும் வெற்றிடமாகவே இருக்கிறது.

இலங்கைத் தீவில் சுற்றுலா

தமிழரசுக் கழகத்தைத் தொடங்கிய பின்னர், தமிழர் குடியேறி வாழும் இலங்கை — பர்மா — சிங்கப்பூர் — மலேசியா ஆகிய அயல் நாடுகளுக்குச் சென்று அங்கு வாழும் தமிழர்களுடைய நிலைமையை அறிந்து வரவேண்டும் என்னும் ஆவல் என் மனத்துள் வளர்ந்து வந்தது. உலகில் எந்தக் கண்டத்தில் — எந்த நாட்டில் — எந்தத் தீவில் தமிழர் வாழ்ந்தாலும் — அவர்களுக்காகவும் பணிபுரியும் அமைப்பாக தமிழரசுக் கழகம் இயங்க வேண்டுமென்பதே என் விருப்பம்.

இந்த விருப்பம் நிறைவேற 1949-இல் எனக்கொரு வாய்ப்பு கிடைத்தது. இலங்கைத் தீவில் ஒருமாத காலம் சுற்றுலா செய்து காந்திய நெறிபற்றிப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று அகில இலங்கை காந்திய சேவா சங்கத்தார் என்னை அழைத்தனர். இந்தச் சங்கம் இலங்கையின் பூர்வகுடித் தமிழர்களால் நடத்தப்படுவதாகும்.

எனது உடல்நிலை காரணமாக ஒரு மாத காலம் இலங்கையில் சுற்றுலா செய்ய முதலில் அஞ்சினேன் என்றாலும், இலங்கைத் தமிழர்களோடு தொடர்புகொள்ள வேண்டுமென்ற பேராவலால் காந்தி சங்கத்தின் அழைப்பை ஏற்றுக் கொண்டேன்.

எனது 43-ஆவது வயதில் — 1949 ஏப்ரல் 4-ஆம் தேதி நான் இலங்கை சென்றேன். 'பிரசண்ட விகடன்' துணை ஆசிரியராக இருந்த திரு.ரா. இளங்கோவன் என்னுடன் வந்தார். என் தூர உறவினரும் நெருங்கிய நண்பருமான சேத்துப்பட்டு திரு.பா.க. பொன்னுசாமி கிராமணி அவர்களும் எனக்குத் துணையாக வந்தார். எனது உடல் நலத்தைக் கவனித்துக் கொள்வதற்காகத் தமது சொந்தச் செலவில் அவர் என்னுடன் வந்தார். அயல்நாடு செல்வது இதுதான் முதன் முறையாதலால், மிகுந்த மகிழ்ச்சியுடனேயே நான் இலங்கை சென்றேன்.

எனது சுற்றுலா வடஇலங்கையில் — தமிழ் மக்களே மிகுதியாக வாழும் யாழ்ப்பாண மாகாணத்தில் தொடங்கி, தென்னிலங்கையில் உள்ள இலங்கையின் தலைநகரான கொழும்புவில் முடியக்கூடிய வகையில் அமைக்கப் பெற்றிருந்தது. அதனால், நான் சென்னையிலிருந்து விமானத்தில் புறப்பட்டுக் காங்கேசன் துறை விமானத் திடலில் இறங்கினேன். அங்கு நடைபெற்ற சுங்கச் சோதனை எனக்குப் புதிய அனுபவமாக இருந்தது.

தமிழ்க் காங்கிரஸ்

நான் இலங்கை செல்வதற்கு முன்பே இந்தியத் தமிழகத்தில் இயங்கிவரும் எனது தமிழரசுக் கழகம் பற்றி இலங்கைவாழ் பூர்வகுடித் தமிழர்களும், இந்திய வம்சாவளித் தமிழர்களும் நன்கு அறிந்து வைத்திருந்தனர். அப்போது நான் நடத்தி வந்த 'தமிழ் முரசு' மாத ஏட்டின் பிரதிகள் இலங்கையில் ஆயிரக் கணக்கில் விற்பனையாகி வந்தன. தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளை விளக்கி நான் எழுதிய 'தமிழன் குரல்' என்னும் நூலின் பிரதிகளும் இலங்கையில் ஏராளமாக விற்பனையாகி யிருந்தன.

'தமிழ்க் காங்கிரஸ்' எனும் பெயரில் இலங்கை பூர்வகுடித் தமிழர்களுக்காக அப்போதுதான் புதிதாக ஒரு கட்சி தோன்றி, அதன் செல்வாக்கு வளர்ந்து கொண்டிருந்தது. பிரபல பாரிஸ்டர் ஜி.ஜி. பொன்னம்பலம் அதன் தலைவராக இருந்தார். திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம், திரு. வன்னியசிங்கம் ஆகிய இருவரும் இலங்கை தமிழ்க் காங்கிரசின் முன்னணித் தலைவர் களாக விளங்கினர். இந்த இயக்கம் தமிழரசுக் கழகத்தையே பிரதிபலிப்பதாக இருந்தது. இதன் முன்னணித் தலைவர்கள் எனது 'தமிழ் முரசு' பத்திரிகையைத் தவறாமல் படித்து வந்தனர். இந்தியத் தமிழகத்தில் என்னென்ன குறிக்கோள்களை மக்கள் மத்தியில் நான் வற்புறுத்தி வந்தேனோ அவற்றை எல்லாம் இலங்கைத் தமிழகத்திலும் பிரச்சாரம் செய்து வந்தனர். எனது 'தமிழன் குரல்' என்னும் நூலும் இவர்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வந்தது. மொழிவழிப்பட்ட தேசிய இனப் பிரச்

சினையிலே இந்தியத் தமிழர் நிலையும், இலங்கைத் தமிழர் நிலையும் ஒன்றாகவே இருந்தன. ''மத்தியில் சமஷ்டி; மாநிலத்தில் சுயாட்சி' 'என்ற எனது கோஷம் இலங்கைக்கும் பொருந்துவதாக இருந்தது. தமிழ்க் காங்கிரஸ், தமிழர் மிகுதியாக வாழும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பகுதிகள் அடங்கிய தமிழ் மாநிலத்திற்குப் பரிபூரண சுயாட்சி கோரியது.

நான் காந்தியப் பிரச்சாரத்திற்காகத்தான் இலங்கைக்கு அழைக்கப்பட்டேன் என்றாலும், தமிழ் காங்கிரஸ் இயக்கத்தைப்பற்றி அறிந்து கொள்ளவும், அதன் முன்னணித் தலைவர் களோடு தொடர்பு கொள்ளவும் விரும்பினேன். அத்துடனன்றி, இலங்கையின் மலைப் பிரதேசங்களில் வாழும் — தேயிலைத் தோட்டங்களில் தொழில் புரியும் — இந்திய வமிசாவளித் தமிழர்கள் நிலையை அறியவும், அவர்களுக்காக நடந்து வந்த இலங்கை இந்தியர் காங்கிரஸ் தலைவர்களோடு தொடர்பு கொள்ளவும் எனது இலங்கைப் பயணத்தைப் பயன்படுத்திக் கொள்வதென்ற எண்ணம் எனக்கிருந்தது.

யாழ்ப்பாணத் தமிழ்

ஏப்ரல் 4-ஆம் தேதி யாழ்ப்பாணம் சென்றபின், காந்தி சங்கத்தார் திட்டமிட்டிருந்தபடி யாழ் மாகாணத்தில் மட்டுமே பத்து நாட்கள் சுற்றுலா செய்தேன். பள்ளிகளிலும், கல்லூரிகளி லும் ஏற்பாடு செய்யப்பட்ட இலக்கியக் கூட்டங்களில் பேசி னேன். யாழ்ப்பாணம் சைவ சமயத்தின் கோட்டையாதலால், சமயக் கூட்டங்களிலும் பேச வேண்டியவனானேன்.

யாழ் மாநில மக்களின் அன்புமிக்க உபசாரம் என்னைப் பெரிதும் கவர்ந்தது. மதிப்புக்குரியவர் தங்கள் வீட்டிற்கு விருந்தினராக வந்தால் பூரணகும்பம் வைத்து வரவேற்பது அங்கு வழக்கமாக இருக்கிறது. நானும் அப்படித்தான் வரவேற்கப்பட்டேன். யாழ் மக்களின் தமிழ்ப் பற்று எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. ஆனால், இந்தியத் தமிழர்களால் புரிந்துகொள்ள முடியாத தமிழ்ச் சொற்கள் யாழ் மாநிலத்தில் புழக்கத்திலிருந்து வருகின்றன. ஒலி வேற்றுமையைகூடக் கேட்க

முடிந்தது. 'ஆம்' என்ற சொல்லை 'ஓம்' என்றே யாழ் தமிழர்கள் ஒலிக்கின்றனர். இப்படி, இன்னும் எத்தனையோ சொற்கள்!

நான் தங்கியிருந்த வீட்டில் முதல் நாள் பகலில் உணவுக்கான நேரம் வந்ததும் என்னை விருந்தினனாக ஏற்றிருந்த சகோதரர்கள், நாங்கள் சாப்பிடலாமே என்று என்னிடம் கூறினார். நான், 'சாப்பிடுங்கள்' என்றேன். நானும் அவர்களுடன் வருவேன் என்று நம்பி, அவர்கள் சாப்பிடுமிடத்துக்குச் சென்று விட்டார்கள். 'நாம் சாப்பிடலாமே' என்று அவர்கள் சொல்லியிருந்தால் நானும் அவர்களுடன் சென்றிருப்பேன். அவர்கள் அப்படிச் சொல்லாததால் நான் அவர்களை அனுப்பிவிட்டு என்னை அழைக்கவில்லையே என்ற ஏக்கத்துடன் அமர்ந்திருந்தேன். உள்ளே சென்றவர்கள் மீண்டும் என்னிடம் வந்து 'நீங்களும் வாருங்கள்' என்று அழைத்தனர். 'நாங்கள் என்றது உங்களையும் சேர்த்துத்தான்' என்று அவர்கள் கூறினர். இப்படி, தமிழ் மொழியைப் பயன்படுத்துவதிலே இலங்கைத் தமிழருக்கும் இந்தியத் தமிழருக்கும் உள்ள வேற்றுமை மறைய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இதற்காக முன்னொரு சமயம் முயற்சி எடுக்கப்பட்டு, பின்னர் கைவிடப்பட்டதாக அறிந்தேன்.

யாழ்ப்பாணத் தமிழர்களின் உணவு வகை எனக்கு அவ் வளவாகப் பிடிக்கவில்லை. உணவிலேயும், பழக்க வழக்கங்களிலேயும் குமரி மாவட்டத் தமிழர்களுக்கும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும் இடையே ஒற்றுமையிருக்கக் கண்டேன். யாழ் மாநிலத் தமிழர்கள் பயன்படுத்தும் அரிசியும், கறிவகைகளும் எனது புண்பட்ட குடலுக்குப் பொருந்துவனவாக இருக்கவில்லை. நல்லெண்ணெய்க்குப் பதிலாகத் தேங்காய் எண்ணெயையே அவர்கள் பயன்படுத்துகின்றனர். தேங்காய் எண்ணெயில் தயாரிக்கப்படும் பதார்த்த வகைகளை ஏற்கனவே நாஞ்சில் நாட்டில் உண்டு கடுமையாக நோயுற்று அனுபவம் பெற்றிருந்தேனாதலால், யாழ் மாநிலச் சுற்றுலாவில் எண்ணெயில் தயாரிக்கப்பட்ட பண்டங்கள் உண்பதை அடியோடு தவிர்த்தேன். யாழ் தமிழர்கள் பயன்படுத்தும் இடியாப்பமே எனக்குப் பிரதான உணவாக இருந்தது. பிற்காலத்தில் இலங்கைக்குச் சென்ற ஒவ்வொரு சமயத்திலும் இடியாப்பத்தை உண்டே உயிர் வாழ்ந்தேன்.

யாழ் மாநிலத்தில் எனது சுற்றுலா மிகவும் வெற்றிகரமாக அமைந்தது. காந்தி சங்கத்தைச் சேர்ந்த நீர்வேலி வேலாயுதம் பிள்ளை, திரு.வி.பி.எஸ். முத்துக்குமாரசாமி ஆகிய இருவரும் எனது சுற்றுலா ஏற்பாடுகளை மிகவும் சிறப்பாக அமைத்திருந்தனர். தமிழ் மாநிலமான யாழ்ப்பாணத்தில் சுற்றுலா முடிந்தபின், தமிழர் சிறுபான்மையினராக வாழும் அநுராதபுரம், கண்டி ஆகிய நகரங்களுக்கும் சென்றேன். அங்கெல்லாமுள்ள தமிழர்கள் மிகுந்த அன்போடும் ஆர்வத்தோடும் என்னை வரவேற்று என் சொற்பொழிவுகளைக் கேட்டனர்.

கிருபலானியின் நட்பு!

எனது சுற்றுலாவின் இறுதி நிகழ்ச்சியாக ஹட்டன் காங்கிரஸ் அமைந்தது. ஆச்சாரிய கிருபலானி, திரு.கு. காமராசர், ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம் பிள்ளை ஆகியோரும் மாநாட்டில் கலந்து கொண்டனர். ஹட்டனில் நானும் அவர்களும் ஒரே ஓட்டலில்தான் தங்கியிருந்தோம். இலங்கை இந்தியர் காங்கிரஸ் திருவிழாப்போல நடைபெற்றது. மாபெரும் ஊர்வலமும் நடைபெற்றது. ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான மோட்டார் கார்கள் அணிவகுத்துச் சென்றன.

இந்தியர் காங்கிரஸ் மகாசபையின் முதல் நாள் மாநாட்டில் நான் பேசினேன். இந்திய வம்சாவளியினரிடம் இலங்கை அரசு காட்டும் மாற்றாந்தாய் மனப்பான்மையைக் கடுமையாகக் கண்டித்தேன். நான் பேசுவதற்கு முன்பே ஆச்சாரிய கிருபலானியும், திரு. காமராசரும் பேசினர்.

திரு. கிருபலானி, இலங்கை இந்தியத் தமிழர்களின் பிரச்சினையை நன்கு விளக்கி பொறுப்புணர்ச்சியுடன் பேசினார். எனது பேச்சு அவரைப் பெரிதும் கவர்ந்தது. நான் அவருடன் ஹட்டனிலிருந்த இரண்டு நாட்களிலும் நெருங்கிப் பழகினேன். பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டோம். தனித்து உரையாடியபோது இந்தியர் காங்கிரசில் நான் வெளியிட்ட கருத்துகளை அவர் பெரிதும் பாராட்டினார். முதல்நாள் நான் பேசியதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்த தொழிலாளர்கள்

இரண்டாம் நாள் மாநாட்டிலும் பேசவேண்டுமென்று வற்புறுத்தி என்னைப் பேச வைத்தனர்.

இலங்கை இந்தியர் காங்கிரஸ் ஆண்டு விழாவோடு எனது இலங்கைச் சுற்றுலா முடிவுற்றது. சரியாக 24 நாட்கள் இலங்கையில் சுற்றுலா செய்தேன். தமிழரிலே பல்வேறு தரப்பினரையும் சந்தித்து அவர்களோடெல்லாம் பழகினேன். அவர்களுடைய பிரச்சினைகளை நன்கு கவனித்து அறிந்தேன். கொழும்பு நகரில் தமிழ்க் காங்கிரசின் முன்னணித் தலைவர்களான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் வன்னிய சிங்கம் ஆகியவர்களைச் சந்தித்துப் பேசினேன். தமிழ்க் காங்கிரசின் கோரிக்கையிலே பிரிவினை அபாயம் இருக்கிறதென்று இலங்கைத் தமிழர்களிலே ஒரு சாரார் கருதுவதை அவர்களுக்கு நினைப்பூட்டி எந்த நியாயத்தை முன்னிட்டும் பிரிவினையை வற்புறுத்த வேண்டாமென்று நட்பு முறையில் அவர்களிடம் கூறினேன். இலங்கையிலிருந்து தமிழ்ப் பகுதிகளைப் பிரித்துவிடும் நோக்கம் தங்களுக்குக் கிடையாதென்று அவர்கள் எனக்கு உறுதி கூறினர்.

அப்போது தமிழ்க் காங்கிரசின் தலைவராக இருந்த திரு.ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களை நான் சந்திக்கவில்லை. நான் கொழும்பு சென்றபோது அவர் அங்கு இருக்கவில்லை. இலங்கை இந்தியர் காங்கிரசின் அதிகாரபூர்வமான தலைவராக இருந்த திரு. ராஜலிங்கம், அதன் செயலாளர் திரு. சுப்பையா, மற்றும் இலங்கை இந்தியர் காங்கிரசில் செல்வாக்குமிக்க தலைவர்களாக இருந்த திரு. அஜீஸ், திரு. தொண்டைமான் ஆகியோர் இலங்கைப் பார்லிமெண்டு கட்டிடத்திலே எனக்குத் தேநீர் விருந்தளித்தனர். அந்த விருந்தின் முடிவிலே இலங்கை இந்தியர் பற்றி எனது கருத்தை வெளியிட வேண்டுமென்று அவர்கள் கோரினர்.

‘பெயரையும் கொடியையும் மாற்றுங்கள்!’

பொதுவாக, இலங்கை இந்தியர் காங்கிரசிடம் எனக்குள்ள நல்லெண்ணத்தை முதலில் தெரிவித்துவிட்டு, பின்னர் அதனிடம் நான் கண்ட குறைபாடுகளை எடுத்துக் கூறினேன். ‘இலங்கை

'இந்தியர் காங்கிரஸ்' என்ற பெயருடைய நிறுவனத்தை பண்டித ஜவஹர்லால் நேருதான் தொடங்கி வைத்தார். அந்தப் பெயரே அவர் தந்ததுதான். இந்தியா விடுதலைக்குப் போராடிக் கொண்டிருந்த காலத்திலே இது நிகழ்ந்தது. நான் இலங்கை சென்றது இந்தியாவைப் போன்றே இலங்கையும் விடுதலை பெற்றிருந்த காலத்திலாகும். ஆகவே, ''இந்தியர் காங்கிரஸ்'' என்னும் பெயரில் இலங்கையில் அரசியல் ரீதியில் ஒரு அமைப்பை நடத்துவது எதிர்காலத்தில் இலங்கை இந்தியர்களுக்கு நன்மை தராதென்று நான் கூறினேன். அந்த நாளில் இலங்கை இந்தியர் காங்கிரஸ் நடவடிக்கைகளிலே இந்திய தேசியக் கொடிதான் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்திய தேசிய கீதமே பாடப்பட்டது. இந்தப் போக்கு இலங்கைபால் இந்தியர் காட்டவேண்டிய விசுவாசத்திற்கு விரோதமானதாகும் என்று கூறினேன்.

இந்தியர் காங்கிரஸ் என்ற பெயர் மாற்றப்பட வேண்டும்; இந்திய தேசியக் கொடிக்குப் பதில் இலங்கை தேசியக் கொடியையோ அல்லது புதிதாக வேறொரு கொடியையோ பயன்படுத்தலாம் என்று நான் ஆலோசனை கூறினேன். எனது கருத்து களை இலங்கை இந்தியர் காங்கிரஸ் தலைவர்கள் எதிர்க்கவில்லையென்றாலும், உடனடியாகச் செயல்படுத்த அவர்கள் விரும்பவில்லை.

சுமார் 4 ஆண்டுகள் கழித்து 'இலங்கை இந்தியர் காங்கிரஸ்' என்பதனை 'இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ்' என மாற்றிக் கொண்டனர். இந்தியத் தேசியக் கொடிக்குப் பதிலாக வேறொரு கொடியைப் படைத்துக் கொண்டனர். இந்த மாற்றம் அமுலுக்கு வந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு நானும் அழைக்கப்பட்டேன். அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு, இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசுக்கு வாழ்த்து கூறினேன்.

இலங்கையிலிருந்து இந்தியர் வெளியேற்றப்படும் நாளே வராதென்று இலங்கை இந்தியர் காங்கிரஸ் தலைவர்கள் நம்பிக் கொண்டிருந்த காலம் அது. ஆனால், நான் அப்படி

நம்பவில்லை. இலங்கையில் உள்ள இந்தியர்களிடம் நான் கண்ட குறைகளே அவர்கள் விரைவில் அந்தத் தீவிலிருந்து வெளியேற்றப்படுவதற்குக் காரணமாகி விடுமென்று கருதினேன். இன்று அதுதானே நிலைமை!

பிற்காலத்தில் இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் பிளவுபட்டு, திரு.தொண்டைமான் தலைமையில் ஒரு கட்சியும், திரு. அஜீஸ் தலைமையில் மற்றொரு கட்சியுமாக இரண்டு கட்சிகள் தோன்றின. இன்றளவும் அவை நீடித்து வருகின்றன. இலங்கை பூர்வகுடித் தமிழர்களின் அமைப்பான தமிழ்க் காங்கிரசும் நான் இலங்கையிலிருந்து திரும்பிய சில மாதங்களுக்குப் பின் பிளவுபட்டு விட்டது. அந்தக் காங்கிரசின் செல்வாக்குமிக்க தலைவரான பாரிஸ்டர் திரு.ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் சிங்கள ஆதிக்கத்தோடு இணைந்து அமைச்சராகி விட்டதே அந்தப் பிளவுக்குக் காரணமாகும். அவரது போக்கு பிடிக்காமல் வெளியேறிய திரு.எஸ்.ஜே.வி. செல்வ நாயகம், திரு. வன்னிய சிங்கம் ஆகியோர் 'தமிழரசுக் கட்சி' என்ற பெயரில் புதிய கட்சி ஒன்று அமைத்தனர். அது 'பெடரல் கட்சி' என்றும் அழைக்கப்படுகிறது. இந்தக் கட்சி தொடங்கிய நாளிலிருந்து இற்றை நாள்வரை திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அதன் செல்வாக்கு மிக்க தலைவராக விளங்கி வருகிறார். அரசியலறிவும் உழைப்புத் திறனும் பெற்றிருந்த தமிழரசுக் கட்சியின் அமைப்புத் தலைவர்களில் ஒருவரான திரு. வன்னிய சிங்கம் சில ஆண்டுகள் கழித்து முன்பு அகால மரணமடைந்துவிட்டார். தாம் காலமாவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு அவர் சென்னைக்கு வந்திருந்தார். மயிலாப்பூர் உட்லண்ட்ஸ் ஓட்டலில் நானும் திரு.எச்.டி. ராசா, எம்.பி. அவர்களும் அவருக்கு ஒரு விருந்து நடத்தினோம். என்னிடமும் எனது தமிழரசுக் கழகத் திடமும் திரு. வன்னிய சிங்கம் பேரன்பு கொண்டிருந்தார்.

கணபதியைக் கண்டேன்!

நான் கொழும்பு நகரிலிருந்தபோதுதான் தற்போது 'செங்கோல்' நிர்வாகியாகவுள்ள திரு.வே. கணபதி அவர்கள்

எனக்கு அறிமுகமானார். அப்போது அவர் 'வீரகேசரி' நாளிதழில் தொழில் புரிந்து கொண்டிருந்தார். எனக்குத் தேவைப்படும் பத்திய உணவை வழங்க அவர் மிகுதியும் அக்கறை காட்டினார். அவரை நான் முதன் முதலாகச் சந்தித்தபோது அவரது அடக்கமும் சேவா உணர்ச்சியும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. தன்னலமின்றிப் பணிபுரிவ திலேயே பெரிதும் ஆர்வமுடையவர். இவர் தமிழகம் திரும்பிய பின்னர் அப்போது நான் நடத்திக் கொண்டிருந்த 'தமிழ் முரசு'வில் பணிபுரிந்தார். பின்னர் நான் 'செங்கோல்' தொடங்கியபோது அதனோடும் தொடர்புகொண்டு இன்றுவரை தொண்டாற்றி வருகிறார். இவரைப் போன்றவர்கள் ஒரு கட்சிக்குக் கிடைப்பது அரிது. நான் இலங்கை சென்றதனால் ஏற்பட்ட நற்பலன்கள் பல. அவற்றுள் ஒன்று, திரு.வே. கணபதி எனக்குக் கிடைத்தது.

இலங்கையில் எனது சுற்றுலா முடிந்து நான் தாயகம் திரும்பிய பின்னர், இலங்கை அரசின் ஜனாதிபதி இந்திய அரசின் கவர்னர் ஜெனரலுக்கு என்னைப்பற்றி ஒரு புகார்க் கடிதம் அனுப்பினார். அட்டனில் நடைபெற்ற இலங்கை இந்தியர் காங்கிரசிலே நான் வெளியிட்ட சில கருத்துகள் இலங்கை — இந்திய உறவுக்குக் கேடு பயப்பவை என்று இலங்கை ஜனாதிபதி தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அவர் ஆட்சேபித்த கருத்துகள் என் கவனத்தில் உள்ளபடி வருமாறு:

''நான் இலங்கைக்கு விமானத்தில் வந்தபோது கடற் பகுதியைக் கூர்ந்து கவனித்தேன். இந்தியத் தமிழகத்தையும், இலங்கைத் தமிழகத்தையும் பிரிக்கும் கடற்பரப்பு ஆழமானதுமல்ல; அகலமானதுமல்ல. ஒரு குரங்கு தாண்டியதுதான்!

''தென்னாப்பிரிக்க இந்தியர்களின் துயர் துடைக்க ஒரு காந்தியடிகள் தோன்றினார். அதுபோல, இலங்கை இந்தியர்களின் துயர் துடைக்க ஒரு காந்தி தேவைப்படு கிறார். இலங்கை சிறிய நாடாக இருக்கலாம். ஆனால், சிறிய நாட்டை ஆள்பவர்களுக்குப் பெரிய புத்தி இருக்கக் கூடாதென்ற நியதி எதுவுமில்லை.''

எனது பேச்சின் இன்னும் சில பகுதிகளும் ஆட்சேபிக்கப் பட்டன. இந்தியாவில் என் பெருமதிப்புக்குரிய ராஜாஜி அவர்கள் அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்தார். இலங்கை ஜனாதிபதி அனுப்பிய ஆட்சேபக் கடிதத்தின் நகலை எனக் கனுப்பி, என்னிடமிருந்து சமாதானம் கோரியது இந்திய அரசு. இப்படி ஒரு தாக்குதலை இலங்கை அரசு என் மீது தொடுக்குமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை.

கவர்னர் ஜெனரல் அறிவுரை!

இந்திய அரசுக்கு நான் அளிக்கும் பதிலானது இந்தியா — இலங்கை நட்புறவுக்கு உதவி புரிவதாக இருக்க வேண்டுமென்று டில்லி சென்றிருந்த டாக்டர் சுப்பராயன் மூலம் வாய்மொழியாக ராஜாஜி அவர்கள் எனக்கு அறிவுரை அனுப்பியிருந்தார். இலங்கை அரசின் போக்கு எனக்கு வியப்பைத் தந்தது. இலங்கை இந்தியர்களுக்கு ஒரு காந்தி தேவை என்று நான் குறிப்பிட்டது குற்றமாக எனக்குப் படவில்லை. உலக மகான் என்ற கருத்திலேயே — உலகப் பிரச்சினைகளுக்கெல்லாம் காந்தியமே பரிகாரம் என்ற நம்பிக்கையின் பேரிலேயே நான் காந்தியடிகள் பெயரைக் குறிப்பிட்டேன்.

உண்மையில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமுள்ள உறவைக் குலைக்கும் நோக்கம் எனக்கு இருக்கவில்லை. இலங்கை இந்தியர்களின் பிரச்சினை சமாதானமான முறையில் தீர்க்கப்பட்டு அவர்கள் எல்லாம் இலங்கையின் பூர்வகுடியினரான சிங்களவர்களோடு உறவு கொண்டு வாழவேண்டுமென்பதே என் விருப்பம். அன்று மட்டுமல்ல; இன்றுங்கூடத்தான்! ஆனால், இலங்கை அரசு என்னைத் தவறாகப் புரிந்து கொண்டுவிட்டது. சரியாகச் சொன்னால், ஒரு கலகக்கார னாகவே என்னைக் கருதியது. ஆகவே, அதனுடைய தப்பெண்ணத்தைப் போக்கும் வகையில் — இந்திய கவர்னர் ஜெனரல் ராஜாஜி நட்பு முறையில் என்னிடம் எதிர்பார்த்தபடி — எனது சமாதானத்தை இந்திய அரசுக்குக் கடித மூலம் அனுப்பினேன். சட்ட அறிஞர் என்ற முறையிலே என் அரிய நண்பர் திரு.த. செங்கல்வராயன் அவர்கள் அந்தக் கடிதத்தைத்

தயாரிப்பதிலே எனக்கு உதவி புரிந்தார். எனது சமாதானம் இந்திய — இலங்கை அரசுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.

இலங்கை சின்னஞ்சிறிய தீவு. இந்தியத் தாயின் சேய் போல அண்டையிலிருக்கும் நாடாதலால் அதன் நல்வாழ்வில் எனக்கு எப்போதுமே அக்கறையுண்டு. பெரும்பான்மையினரான சிங்களவரும் சிறுபான்மையினரான (இந்திய வம்சாவளியினர் உள்ளிட்ட) தமிழரும் பரஸ்பரம் நல்லெண்ணத்துடன் ''இலங்கையர்'' என்னும் தேசிய உணர்வால் ஒன்றுபடுவார்களானால், அதனை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்பேன். ஆயினும், சிங்களவர் போக்கு இதற்கு இடந்தருவதாக இல்லை. இந்திய வம்சா வளித் தமிழரும் சரி; இலங்கையின் பூர்வகுடித் தமிழர்களும் சரி, சிங்களவர்களின் செல்வாக்கில் சிக்கிவிட்ட இலங்கை அரசால் நல்லபடி நடத்தப்படவில்லை. சிங்களவர் ஆளும் சாதியினராகவும், தமிழர்கள் உரிமையற்ற அடிமைகளாகவும் இருந்து வரும் நிலையையே நான் காண்கின்றேன்.

கொழும்புவில் இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர்களை முதன் முதலாக நான் சந்தித்தபோது ஒரு விஷயத்தை அவர்களுக்குத் தெளிவுபடுத்தினேன். யாழ்ப்பாணம் — மட்டக் களப்பு மாநிலங்களில் வாழ்வோர் இலங்கையின் சிறுபான்மையினர் மட்டுமல்லர்; தொடர்ந்தாற்போலுள்ள ஒரே பிரதேசத்தில் வாழ்கின்ற — தங்களுக்கெனத் தனித்த மொழி, தனித்த வரலாறு, தனித்த பழக்க வழக்கங்களைக் கொண்டுள்ள தனித்த தேசிய இனத்தினர் என்பதை விளக்கினேன். இலங்கையானது இருவேறு (தமிழர் — சிங்களவர்) தேசிய இனங்களின் தனித் தனித் தாயகங்களைக் கொண்ட ஒரு தீவு என்றும் கூறினேன்.

இந்த அப்பட்டமான உண்மையை ஒப்புக் கொள்ள சிங்களத் தலைவர்கள் மறுக்கின்றனர். அவர்கள் பார்வையிலே இலங்கையின் பூர்வகுடித் தமிழர்கள் சிலபல சலுகைகளுக்குரிய சிறுபான்மையினராக மட்டுமே படுகின்றனர். அவர்களுடைய பிரச்சினையைப் பிரதேசப் பிரச்சினையாக அவர்கள் கருதவில்லை.

1949-இல் முதன் முதலாக இலங்கை சென்று திரும்பிய பின்னர், நான் எதிர்பாராத வகையில் சில மாதங்களுக்கெல்லாம் திரும்பவும் இலங்கைக்குச் சென்றேன். இந்தியத் தமிழகத்திலுள்ள தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் இலங்கையின் தமிழ் மாநிலமான யாழ்ப்பாணத்தில் தமிழ் விழா நடத்தப்பட்டது. விழா மிகவும் கோலாகலமாக நடந்தது. அதிலே ''நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்'' என்னும் பொருள் பற்றிப் பேசினேன். யாழ்ப்பாணத்தில் தமிழ் விழா முடிந்ததும் திரும்பவும், அனுராதபுரம், திருகோணமலை ஆகிய நகரங்களுக்குச் சென்றேன். இந்த இரண்டாவது பயணத்திற்குப் பின்னரும் எத்தனையோ முறை நான் இலங்கைக்குச் சென்றிருக்கிறேன். சுமார் இருபது முறைக்கதிகமாக இருக்கும் என்று சொல்லலாம்.

இலங்கையில் தமிழரசுக் கட்சியின் உரிமைப் போராட்டப் வலுப்பெற்ற பின்னர் நான் இலங்கை செல்வதை அங்குள்ள சிங்கள ஆதிக்கம் விரும்பவில்லை. ஒவ்வொரு முறையுப் இலக்கிய விழாக்களுக்காக அழைக்கப்பட்டுத்தான் நான் இலங்கை சென்றேன் என்றாலும், எனது வரவால் தமிழரசுக் கட்சியின் கிளர்ச்சி வலுப்பெற்றுவிடக் கூடுமென்று கருதி, ஒவ்வொரு முறையும் விசா கொடுப்பதற்குத் தயங்கியது இலங்கை அரசு. ஒருமுறை 'விசா' கொடுத்துவிட்டு நான் புறப்பட இருந்த நேரத்தில் அதனைப் பறித்துக் கொண்டு எனது பயணத்தைத் தடுத்துவிட்டது.

தமிழர் செய்த தவறு

இலங்கையில் வடக்கு — மேற்குப் பகுதிகளில் வாழும் பூர்வகுடித் தமிழர்கள் முயன்றிருந்தால் தமிழர் — சிங்களவர் உறவு பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே ஏற்பட்டிருக்க முடியுமென்பது எனது நம்பிக்கை. சிங்கள மொழியினும் வளமுடையது — வரலாற்றுச் சிறப்புடையது தமிழ் மொழி. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே இலங்கை அரசில் தமிழர்களுக்கு நல்ல செல்வாக்கிருந்தது. அரசாங்க உத்தியோகங்களில் மிகுதியானவற்றைத் தங்களுக்குள்ள அறிவு, திறமை

காரணமாகத் தமிழர்களே பெற்றிருந்தனர். தமிழரான சர். பொன்னம்பலம் இராமநாதன் என்ற அறிஞர் பெருமகனார் இலங்கைத் தீவு முழுவதிலும் செல்வாக்கு பெற்ற ஒரே தலைவராக விளங்கினார். அவருக்கு அடுத்தபடியான நிலையில் கூட சிங்களத் தலைவர் எவரும் அன்று இருக்கவில்லை. அந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி சிங்கள — தமிழ் இனங்களிடையே தேசிய அடிப்படையில் உறவு உருவாக்கப் படவில்லை. தமிழர்களிலே படித்தவர்கள், சிங்களவர் — தமிழர் உறவைவிடவும் தங்கள் உத்தியோக நலன்களையே பெரிதாகக் கருதினர். இதனால், உத்தியோகத் துறைகளில் தமிழர்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர் என்ற எண்ணம் சிங்களவர் களிடையே உள்ள படித்தவர்களுக்கு ஏற்பட்டது. விடுதலை பெற்ற இலங்கையிலே உத்தியோகத் துறை களில் தமிழர் ஆதிக்கத்தை அகற்றி, சிங்களருடைய செல்வாக்கை ஏற்படுத்தும் முயற்சியும் தலைஎடுத்தது. தமிழர் — சிங்களவர்களில் மேட்டுக் குடி மக்களாக உள்ள படித்தவர்களிடையே ஏற்பட்ட இந்தப் போட்டியும் போராட்டமும் இந்த இருவேறு இனங்களிடையே உள்ள சாதாரண மக்கள் மனங்களிலும் பகைமையை வளர்த்துவிட்டன.

இலங்கை பூர்வகுடித் தமிழர்கள் இயற்கையாகவே தமிழிடத்துப் பற்றுடையவர்கள். ஆயினும், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அவர்களிடையே ஆங்கில மோகம் மிகுந்திருந்தது. ஆட்சித் துறைகளில் — நவீன அறிவுத் துறைகளில் தமிழைப் பயன்படுத்த வேண்டுமென்ற ஆர்வம் அவர்களிடையே அப்போது இருக்கவில்லை. சிங்கள மொழி இலங்கையின் ஒரே ஆட்சி மொழியாக வரக்கூடிய நிலையைச் சிங்களத் தலைவர்கள் தோற்றுவித்த பின்னர்தான் இலங்கைத் தமிழர்கள் ஆங்கில மோகத்திலிருந்து விடுபட வேண்டிய நிர்ப்பந்தத்துக் காளாயினர். இலங்கையின் ஒரே ஆட்சி மொழியாக ஆங்கிலமே நீடிப்பதானால், படித்த தமிழர்களிலே சிலரோ பலரோ அதனை ஆதரிக்கக் கூடும் என்ற நிலை இன்னமும் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. தமிழரிலே படித்தவர்களுக்குள்ள ஆங்கில மோகத்தை இலங்கையில் முதன் முதலாகச் சுற்றுலா செய்தபோதே நன்கு அறிந்து கொண்டு வேதனைப்பட்டேன்.

தீண்டாமைக் கொடுமை!

இலங்கைப் பூர்வகுடித் தமிழர்களிடம் நான் மற்றொரு பெருங்குறையையும் கண்டேன். அது, தீண்டாமை என்னும் கொடுமையாகும். யாழ்ப்பாண மாநிலத்திலே தீண்டாமை மிகவும் கடுமையாக இருந்து வருகிறது. ஆங்கில மோகம் பிடித்த படித்தவர்களிலேயும் பலர் இந்த மூடநம்பிக்கைக்கு இரையாகி யுள்ளனர். இலங்கைத் தமிழர்களிலே ''தாழ்த்தப்பட்டவர்கள்'' என்போர் போர்க்குணம் படைத்தவர்கள். அப்படிப்பட்டவர் களை ஒதுக்குவதும், ஒடுக்குவதும் தமிழினத்தைப் பிளவு படுத்தி, சிங்கள ஆதிக்கத்துக்கு எதிரான தமிழினத்தின் உரிமைப் போரைப் பலவீனப்படுத்துவதாகும். கொடுமை என்ன வென்றால், யாழ்ப்பாணப் பகுதியிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கோயிலுக்குள் செல்லவும் உரிமை வழங்கப்படாத தாகும்.

எனது முதல் சுற்றுலாவின்போது, இந்திய வமிசாவளித் தமிழர்கள் மீது யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு வெறுப்பிருக்கக் கண்டேன். இந்திய வமிசாவளித் தமிழர்கள் தங்களுடைய வாழ்வுக்குப் போட்டியாக வந்தவர்கள் என்ற வெறுப்புணர்ச்சி யாழ்ப்பாணத் தமிழர்களிடையே நிலவியது. இதை எல்லாம் பார்த்துத்தான் — தமிழர்களிடமுள்ள குறைபாடுகளையும், போக்குவதற்காகத்தான் — இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு காந்தி தேவை என்று அட்டன் மாநாட்டிலே நான் கூறினேன்.

நல்ல வேளையாக, இலங்கையில் திரு.எஸ்.ஜே.வி. செல்வ நாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சி தோன்றிய பின்னர் இலங்கைப் பூர்வகுடித் தமிழர்களை ஒன்றுபடுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தீண்டாமை ஒழிப்பிலும் தமிழரசுக் கழட்சி கவனம் செலுத்தி வருகிறது. இந்திய வமிசாவளித் தமிழர்களுக்கும் பூர்வகுடித் தமிழர்களுக்கும் இடையில் கடந்த காலத்தில் வளர்ந்த கசப்பைப் போக்கவும் தமிழரசுக் கட்சி முயன்று வருகிறது.

இந்திய வமிசாவளித் தமிழர்களிடையேயும் ஒரு பெருங்குறை நிலவி வந்தது. ஸ்டீபன்சன் சேனநாயகா ஆட்சிக் காலத்தில் இந்திய வமிசாவளியினரின் குடியுரிமைப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். அந்நாளில் இலங்கையிலுள்ள இந்திய வமிசாவளியினர் குடியுரிமை பெறுவதில் போதிய அக்கறை காட்டவில்லை. இரட்டைக் குடியுரிமை வேண்டுமென்று கோரினர். ஆம்; இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளிலும் குடியுரிமை கோரினர்.

பரிசுப் பொருள் மோசம்!

இந்தியத் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளிடத்தும் குறையுண்டு. கடல் கடந்த நாடுகளில் குடியேறி வாழும் தமிழ் மக்களுக்குள்ள குறைகளைப் போக்குவதில் இங்குள்ள அரசியல் கட்சிகளில் எந்த ஒரு கட்சியும் அதிக அக்கறை காட்டுவதாக எனக்குத் தோன்றவில்லை. இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, பர்மா முதலிய நாடுகளுக்குச் சென்றுவரும் இந்தியத் தமிழகப் பிரமுகர்களும் அந்த நாடுகளில் வாழும் தமிழர்களுடைய அவலநிலையை அறிந்து கொள்வதிலே அக்கறை காட்டுவதில்லை. அவர்களிடமிருந்து பரிசுப் பொருள்களைத் திரட்டிக் கொண்டு வருவதிலேதான் அதிக அக்கறை காட்டுகின்றனர் என்ற குறைபாடு அந்த நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு இருந்து வருகிறது. இதனை அங்குத் தலைவர்களாகவுள்ள சிலர் சொல்லி என் காதுகளால் கேட்டேன்.

இலங்கையில் எனக்கு ஏராளமான நண்பர்கள் இருக்கின்றனர். பண்டித வித்வான் கா.பொ.இரத்தினம் அவர்கள் என்னுடைய நெடுநாளைய நண்பராவார். ''ஈழகேசரி'' ஆசிரியராக இருந்த இராச. அரியரத்தினம் அவர்களும் எனது நெருங்கிய நண்பராவார். ''வீரகேசரி'' ஆசிரியர் திரு. ஹரன் அவர்கள் இலங்கையரல்ல; இந்தியர். அவர் இந்தியாவில் ''தமிழ்நாடு'' அலுவலகத்தில் துணையாசிரியராக இருந்த போதே எனக்கு நன்கு அறிமுகமானார். அவர் இலங்கைக்குக் குடியேறிய பின்னரும் எங்களுடைய தோழமை நீடித்து வருகிறது. நான் இலங்கை

செல்லும் ஒவ்வொரு நேரத்திலும் அவர் என்னைச் சந்தித்து அளவளாவுவதுண்டு.

தமிழரசுக் கட்சி, இலங்கை இந்தியர் காங்கிரஸ் ஆகிய ஸ்தாபனங்களில் தலைவர்களுக்கும் எனக்கும் உள்ள நட்புறவு பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். அந்த நட்பு இன்னும் எங்களிடையே நீடித்து வருகிறது.

கொழும்பு நகரில் வாழும் வணிகரான திரு. சோமசுந்தரம் அவர்கள் எனக்கு வாய்த்த அரசியல் கலப்பற்ற இலங்கை நண்பர்களிலே முக்கியமானவராவார். அவரும், அவரது மனைவியாரும் நான் கொழும்பு செல்லும் சந்தர்ப்பங்களி லெல்லாம் தங்கள் விருந்தாளியாக என்னை ஏற்று உபசரிப்பது வழக்கம்.

இலங்கையின் மிகச் சிறந்த ராசதந்திரிகளில் ஒருவரான திரு.ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களை அடிக்கடி சந்தித்துப் பேச எனக்கு வாய்ப்பு நேரவில்லை. எனினும், 1968-இல் இலங்கை சென்றபோது நான் தங்கியிருந்த திரு. சோமசுந்தரம் அவர்கள் இல்லத்திற்கு வந்து என்னோடு அவர் அளவளாவினார். அந்த ஒரு சந்திப்பே எங்களைப் பிரியா நண்பர்களாக்கி விட்டது. தமது இல்லத்தில் ஏராளமான பிரமுகர்களைக் கூட்டி வைத்து மிகச் சிறந்த முறையில் எனக்குத் தேநீர் விருந்தளித்து என்னைக் கவுரவித்தார். சுருங்கச் சொன்னால், இலங்கை நாடு எனது நெருங்கிய உறவினருடைய வீடுபோல் ஆகிவிட்டது.

திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு

வடவேங்கடம் தென்குமரிக்கு இடைப்பட்ட புதிய தமிழகத்தைப் படைக்க — தமிழ் பேசும் மக்களை ஒன்றுபட்ட ஓரினமாக்க — தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழ் மொழிக்கே முதன்மை தேட — தமிழ் நிலத்தில் தன்னாட்சி காணத் தமிழரசுக் கழகத்தின் வாயிலாக நான் பாடுபட்டு வந்த நேரத்திலே தமிழகத்தில் புதிதாக ஒரு அரசியல் கட்சி தோன்றியது. அது, திராவிடர் முன்னேற்றக் கழகம் ஆகும்.

பெரியார் ஈ.வெ.ரா. தலைமையில் இயங்கி வந்த திராவிடர் கழகத்திலே பெரியார் — மணியம்மை திருமணம் காரணமாகப் பெரிய அளவில் பிளவு ஏற்பட்டது. திராவிடர் கழகத்தின் தளபதியாகவும் பொதுச் செயலாளராகவும் இருந்து வந்த திரு. சி.என்.அண்ணாதுரை அவர்கள், 72 வயதுடைய பெரியார் 28 வயதுடைய மணியம்மையாரை மணந்து கொண்டதனை விரும்பாதவரானார். அவரைப் போலவே தி.க.விலிருந்த முன்னணித் தலைவர்களில் பெரும்பாலோர் பெரியாரின் திருமணத்தை வெறுத்தனர். அதனால், 1949-ஆம் ஆண்டின் இறுதியில் தி.க.வில் பிளவு ஏற்பட்டது. அண்ணாவின் தலைமையில் ஒரு சாரார் திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறித் ''திராவிடர் முன்னேற்றக் கழகம்'' கண்டனர். இந்த நிறுவனம் பெரியாரின் பிறந்த நாளாகிய 17.9.49-இல் தோற்றுவிக்கப்பட்டது. அந்நாளில் பெரியார் — மணியம்மைத் திருமணத்தை ஆதரித்தோ, எதிர்த்தோ பேசாத அரசியல்வாதி இல்லை. எழுதாத பத்திரிகையாளர் இல்லை. பெரியார் திருமண எதிர்ப்பை ஒரு பேரியக்கமாகவே அண்ணா நடத்தினார்.

மௌனியானேன்!

தமிழ்நாடு காங்கிரஸ்காரர்களும் இதிலே அதிகப்படியாக ஆர்வங் காட்டினர். ஆம்; பெரியாருக்கும் அண்ணாதுரைக்கும்

ஏற்பட்டுவிட்ட பகையால் திராவிடர் இயக்கம் அழிந்து போய் விடுமென்று காங்கிரஸ்காரர்கள் கருதினர். அவர்கள் மதிப்பீடு தவறானதென்று அப்போதே நான் கருதினேன்.

பெரியார் திருமணம் பற்றி எனது பேச்சிலோ எழுத்திலோ நான் எதுவும் கூறவில்லை. முழு அளவில் மௌனம் சாதித்தேன். அந்தத் திருமணத்திற்கு அரசியல் வண்ணம் பூசப்பட்டது எனக்குப் பிடிக்கவில்லை. காங்கிரஸ் மனப்பான்மை கொண்டிருந்த தமிழ் — ஆங்கில நாளேடுகள் கூட, அந்தத் திருணத்திற்கு எதிராகத் தோன்றிய கிளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவமளித்துச் செய்திகளைப் பிரசுரித்தன. ''திராவிடர் இயக்கம் இதோடு முடிந்துவிட்டது'' என்றே காங்கிரஸ் வட்டாரத்தினர் கருதினர். இதற்கு விலக்காக இருந்த காங்கிரஸ்காரன் நான் ஒருவன்தான்.

தி.மு.கழகம் எனது தமிழரசுக் கழகத்திற்குப் போட்டியாகத் தோன்றவில்லை. ஆம்; அரசியல் — பொருளாதார — சமுதாயப் பிரச்சினைகளில் திராவிடர் கழகத்தின் கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் தி.மு.கழகம் அப்படியே பின்பற்றுமென்று அக்கழகத்தைத் தோற்றுவித்த நாளிலே அண்ணா பிரகடனம் செய்தார். ''காங்கிரசைப் பொறுத்த வரையில் தி.க.வும் தி.மு.க.வும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக இயங்கும்'' என்றும் விளக்கம் தந்தார்.

தி.க.வையும் பெரியார் தலைமையையும் துறந்து தன் தலைமையிலே தனி இயக்கம் கண்ட பின்னரும், திராவிடத் தனிநாட்டுக் கோரிக்கையை அண்ணா கைவிடாதது எனக்கு வியப்பைத் தந்தது. தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளை — குறிப்பாக, மொழிவாரி மாநிலங்களுக்குச் சுயாட்சி கோரும் கொள்கையைத் தி.மு.க. ஏற்றுக் கொள்வதற்கிருந்த முதல் வாய்ப்பை அண்ணா நழுவவிட்டது எனக்கு வருத்தத்தைத் தந்தது. ஆரிய — திராவிட இன அடிப்படையில் இந்தியாவை வடக்கு தெற்காகப் பிரிக்க வேண்டுமென்ற தி.க.வின் கொள்கையை அண்ணா கைவிட்டிருந்தால், த.அ.க. — தி.மு.க., உறவு அன்றே — 1949-இலேயே ஏற்பட்டிருக்கக் கூடும்.

அப்போது டில்லியில் அரசியல் நிர்ணய மன்றம் கூடி, இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிக் கொண்டிருந்ததால், த.அ.க.வும் தி.மு.க.வும் ஒன்றுபட்டு 1949லேயே மாநிலச் சுயாட்சிக்காகப் போராடியிருந்தால், அது கிடைத்திருக்கவும் கூடும். சுயாட்சி கிடைக்காவிடினும், மாநிலங்களுக்கு இப்போதுள்ளவற்றை விடவும் கூடுதலான அதிகாரங்களைத் தேடித் தந்திருக்க முடியும். இதிலே எனக்கு ஐயமில்லை. ஆனால், இந்தியா — குறிப்பாக, தமிழ்நாடு அந்த அரிய வாய்ப்பை இழந்துவிட்டது.

தி.க.வும், தி.மு.க.வும் ஒன்றோடொன்று போட்டியிட்டு வளர முயன்றன. அந்தப் போட்டி காங்கிரசுக்கு எதிரான இருமுனைப் போராட்டமாக உருவெடுத்தது.

காங்கிரஸ் செயலற்றுக் கிடந்தது!

இந்த நேரத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் செயலற்றுக் கிடந்தது. காங்கிரசுக்குள் தோன்றிய கோஷ்டிப் பூசலால் அடித்தளத்து ஊழியர்கள் சோர்வடைந்து விட்டனர். தனது எதிர்க் கோஷ்டியை ஒழித்துக் கட்டும் ஒரே வேலையில் திரு. காமராசர் திட்டமிட்டுச் செயல்பட்டுக் கொண்டு இருந்தார். ஆம்; காங்கிரஸ் கட்சிக்கு வெளியேயுள்ள எதிர்க்கட்சிகளுடன் போராடி காங்கிரசை வலுப்படுத்த முயலாமல், காங்கிரசுக் குள்ளே இருந்த எதிர்க் கோஷ்டியை ஒழித்துக் கட்டும் 'திருப்பணி'யைத் திரு. காமராசரும் அவரது கோஷ்டியினரும் உற்சாகமாகச் செய்து கொண்டிருந்தனர். நாட்டில் காங்கிரஸ் பெயரால் கூட்டங்களோ, ஊர்வலங்களோ, மாநாடுகளோ நடைபெறவில்லை. காந்தி பிறந்த நாள், சுதந்திர நாள் போன்ற தேசியத் திருநாட்கள்கூடக் கொண்டாடப்படவில்லை. இந்த நாட்களைத் தமிழரசுக் கழகம்தான் கொண்டாடி வந்தது.

காங்கிரஸ் செயலற்றுவிட்ட சந்தர்ப்பத்தைத் திராவிடர் கழகம் பயன்படுத்திக் கொண்டது. வடவர் கடை மறியல், ஆறவுன்ஸ் எதிர்ப்பு ஆகிய புதிய கிளர்ச்சிகளைத் தோற்றுவித்து வெகு தீவிரமாக நடத்தலானது. கதர் கட்டியவரை வீதியில்

கண்டால் ''அடே, ஆறவுன்ஸ்'' என்று அழைத்துக் கேலி செய்தனர் திராவிடர் கழகத் தோழர்கள். இது, தி.க. தலைவர்களால் தூண்டி விடப்பட்டே நடந்தது. இந்தக் கிளர்ச்சிகளில் தி.மு.கழகம் நேரடியாக ஈடுபடவில்லையென்றாலும், ஊழியர்கள் மட்டத்தில் தார்மீக ரீதியில் ஆதரவு காட்டப்பட்டது. இந்தப் போக்கு கண்டு நான் பெரிதும் வருந்தினேன். திராவிட இனத்தாரின் விடுதலை இயக்கங்களாகத் தோன்றிய தி.க.வும், தி.மு.க.வும் அந்த இனத்தாரைப் பிளவுபடுத்தும் போக்கில் செயல்பட்டு வருவது கண்டு வேதனையுற்றேன்.

துண்டுப் பிரசுரத்தால் வந்த தொல்லை!

''சென்னை இளைஞர் காங்கிரஸ்'' என்ற அமைப்பின் பெயரால் தி.க.வினரின் ஒழுங்கற்ற செயல்களை எதிர்த்து ஒரு பிரசுரம் வெளியிடப்பட்டது. அந்த அமைப்பில் நான் துணைத் தலைவனாக இருந்தேனாதலால், அந்தப் பிரசுரத்தில் தரப்பட்ட நிர்வாகிகள் பட்டியலிலே என் பெயருமிருந்தது. இந்தப் பிரசுரம் முன்னதாக என் பார்வைக்கு வரவில்லை. வந்திருந்தால், அது வெளிவராமல் நிச்சயமாக நான் தடுத்திருப்பேன் — இயலாவிடில், அதிலிருந்த சில வார்த்தைகளையேனும் அகற்றியிருப்பேன். அதுவும் சாத்தியமில்லாமற் போனால், என் பெயர் அந்தப் பிரசுரத்தில் வராமல் தடுத்திருப்பேன்.

பெரியார் ஈ.வெ.ரா. இந்தப் பிரசுரத்தைப் பார்த்ததும் எனது முழுப் பொறுப்பிலேயே அது வெளியிடப்பட்டது போன்று கற்பனை செய்துகொண்டு, ''கிராமணியார்'' என்ற தலைப்பில் 20.10.50-இல் வெளியான 'விடுதலை' நாளிதழில் துணைத் தலையங்கம் எழுதியிருந்தார். அதில், தமது ஆத்திரம் தீர என்னை வசைபாடியிருந்தார். நான் வெறுத்துவிட்ட — அவரும் வெறுத்து வருகின்ற சாதியைச் சொல்லி என்னைப் பழித்தார். எனது சுயசாதி தமிழனத்திற்கு வழிவழித் துரோகம் செய்து வருவதாக வருணித்திருந்தார். அதைப் பார்த்தபோது சாதி ஒழிப்பு மாநாடு நடத்தும் பெரியாரா எனது பிறப்புவழிச் சாதியை இழிவுபடுத்தி ஏசுவது? — என்று வியப்படைந்தேன்.

இதன் விளைவாக, ''திராவிட இயக்க எதிர்ப்பு'' என்ற பெயரில் ஒரு பெரிய இயக்கத்தையே தொடங்கி நடத்த வேண்டியவனானேன்.

காந்திய நெறியில் எனக்குள்ள நம்பிக்கை காரணமாக, மதம் — இனம் — சாதி — கட்சி வேறுபாடுகளால் மக்களைப் பிளவுபடுத்தி, பூசல்களையும் போராட்டங்களையும் வளர்ப்பதை இயற்கையாகவே என் மனம் விரும்புவதில்லை. மற்றும், புதிய தமிழகம் படைக்கும் புனிதப் பணிக்காகத் தமிழினத்தை ஒன்றுபடுத்த விரும்புகிறேன். அதற்காகவே, தனி இயக்கங் கண்டேன். ''தமிழினமே ஒன்றுபடு'' என்ற கோஷத்தைப் படைத்தேன். ஆதலால், தமிழினத்தைப் பிளவுபடுத்தக் கூடிய கட்சி வழிப் போராட்டத்தையும் நான் வெறுக்க வேண்டியிருக்கிறது. இந்தப் பண்பாடு காரணமாகவே தமிழரசுக் கழகத்தைப் பார்லிமெண்டரிக் கட்சியாக அல்லாமல், கலாச்சார வழிப்பட்ட அரசியல் இயக்கமாகத் தோற்றுவித்தேன் என்பதையும் நான் இங்கு நினைப்பூட்டியாக வேண்டும்.

இத்தகைய நெறிகளையும் நியதிகளையும் வகுத்துக் கொண்டு, அவற்றின் வழிப் பொதுவாழ்க்கை நடத்திவரும் நான் திராவிடர் இயக்க எதிர்ப்பில் ஈடுபட்டது எத்தகைய சந்தர்ப்ப சூழ்நிலையில் என்பதனை மக்களுக்கு விளக்கியாக வேண்டும்.

'விடுதலை'யில் என்னைப் பற்றி எழுதப்பட்ட துணைத் தலையங்கம் என் மனதுக்கு வேதனையைத் தந்தது. அந்த வேதனைக்குப் பரிகாரமாக, எனது 'தமிழ் முரசு' (1950 நவம்பர்) மாத இதழில் ஒரு துணைத் தலையங்கம் எழுதினேன்.

''கிராமணியார்'' பற்றி...

''தமிழ் முரசு''வில் ''விடுதலை''க்குப் பதிலளிப்பதற்கு முன்பே — அதாவது 'கிராமணியார்' என்ற தலைப்பில் 'விடுதலை'யில் துணைத் தலையங்கம் வெளியான மறுநாளே, அந்த நாளிதழில் அப்போதைய ஆசிரியையான திருமதி. மணியம்மையாருக்கு மிகுந்த பண்புடைய வார்த்தைகளால் மறுப்பு எழுதி, அதனை அப்படியே 'விடுதலை'யில் வெளியிட வேண்டு மென்றும் கோரியிருந்தேன். எனது கடிதம் — பல

வாசகங்கள் எடுக்கப்பட்டு — அரைகுறையாக 'விடுதலை'யில் வெளியிடப்பட்டது. அதையொட்டி எழுதப்பட்ட குறிப்பிலும் வழக்கமான வசைமொழிகள் இருந்தன. அதனால், இந்தப் போராட்டம் இத்துடன் முடிந்துவிடுவதற்கு மாறாக, மேலும் தொடர்ந்தது.

'விடுதலை'யில் நான் தாக்கப்பட்ட 20 நாட்களுக்குப் பின்னர் 14.11.49-இல் சென்னையிலுள்ள ராஜாஜி மண்டபத்தில் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி சார்பில் பிரதமர் நேருவின் பிறந்த நாள் விழாவையொட்டிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அழைப்பின் மீது நானும் அதில் கலந்து கொண்டு பேசினேன். எனது பேச்சு தி.க.வின் கொள்கைகளை விமர்சிக்கும் போக்கிலே அமைந்தது. ஆம்; திராவிடத் தனிநாட்டுக் கொள்கையை, ஆரியர் — திராவிடர் என்ற வகுப்பு வாதத்தைச் சரித்திரச் சான்றுகள் காட்டி மறுத்துப் பேசினேன். எனது பேச்சு மறுநாள் தமிழ் — ஆங்கில நாளேடுகள் அனைத்திலும் மிகவும் விரிவாகவும் பெரிய பெரிய தலைப்புகளுடனும் பிரிசுரிக்கப்பட்டது. ஆம்; அதுவரை திராவிடர் இயக்கத்தை அவ்வளவு விரிவாக நான் விமர்சித்ததில்லை. நான் கொடுத்த சரித்திரச் சான்றுகளுடனும் புள்ளி விவரங்களுடனும் காங்கிரஸ்காரர்களில் வேறு யாரும் விமர்சித்ததில்லை. அதனால், இயற்கையாகவே திராவிடர் இயக்கத்தின்பால் வெறுப்புடைய சென்னை நாளேடுகளுக்கு எனது பேச்சு புதிய விருந்தாக அமைந்தது.

அந்தக் கூட்டத்தில் திரு.கு.காமராசரும் பேசினார். கோவையில் நடந்த மாகாண அரசியல் மாநாட்டில் கருத்துப் போர் நடத்தியதால் பரஸ்பரம் வெறுத்து வந்த நாங்கள் தற்செயலாக நேரு பிறந்த நாள் விழா மேடையில்தான் மீண்டும் நண்பர்களாகச் சந்தித்தோம். எனது பேச்சு அவருக்கு எதிர்பாராததாக இருந்திருக்க வேண்டும். கூட்டம் முடிந்ததும், அவர் தமது காரில் என்னை ஏற்றிக் கொண்டு, எனது வீட்டில் கொண்டு வந்து சேர்த்துவிட்டுப் போனார். வழிநெடுக எனது பேச்சைப் பாராட்டிக் கொண்டு வந்தார். இது, அவரிடம் நான் எதிர்பார்த் ததுதான்!

'குத்தூசி'யாரின் அறைகூவல்!

நேரு பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் திராவிடர் கழகத்திற்கு எதிராக நான் பேசியது செய்தித் தாள்கள் அனைத்திலும் விரிவாகப் பிரசுரமானதால் 'விடுதலை'யின் நெற்றிக் கண் திறந்துவிட்டது! அந்நாளில் திருமதி மணியம்மை அவர்கள் பெயரளவில்தான் விடுதலையின் ஆசிரியராக இருந்தார். உண்மையான ஆசிரியர் திரு.எஸ். குருசாமிதான். இவர் 'விடுதலை'யில் தலையங்கம் வெளியாகும் பக்கத்தில் ''குத்தூசி'' என்ற புனைபெயரில் காரசாரமாக அன்றாடம் எழுதி வந்தார். திராவிடர் கழகத் தோழர்களுக்கு உணர்ச்சியூட்டும் பகுதி அதுதான். அதனால், ''குத்தூசி குருசாமி'' என்றே இவர் அழைக்கப்பட்டார்.

நவம்பர் 15-ஆம் தேதி 'விடுதலை'யில் 'குத்தூசி'யார் எனது தன்மானத்திற்கு அறைகூவல்விட்டு எழுதியிருந்தார். அதாவது,

> *''இராஜாஜி மண்டபத்தில் மறைந்து கொண்டு தி.க.வைத் தாக்கிப் பேசிவிட்டாய்' இராயபுரம் இராபின்சன் பூங்காவில் கூட்டம் போட்டுப் பேச உனக்குத் துணிவுண்டா? உண்டானால், போட்டுப் பேசிப் பார்!''*

என்று எழுதியிருந்தார்.

நான் சுயமரியாதை இயக்கத்தில் எந்த நாளிலும் இருந்ததில்லை. ஆயினும், நான் முழுக்க முழுக்க சுயமரியாதைக்காரன்! 'சுயமரியாதை' என்பதற்கு நான் கொண்ட பொருள், ''தனது மரியாதையைக் காத்துக் கொள்வது; பிறரை மரியாதையாக நடத்துவது'' — என்பதாகும். ''குத்தூசி''யார் எனது சுயமரியாதையைத் தாக்கி விடவே, அவரது அறைகூவலை ஏற்றுக் கொண்டு இராயபுரம் இராபின்சன் பூங்காவில் கூட்டம் நடத்தினேன்.

'ஒத்திகை'!

''குத்தூசி''யார் எனக்கு அறைகூவல் விட்டது, நவம்பர் 15-இல்; நான் இராபின்சன் பூங்காவில் கூட்டம் போட்டது நவம்பர் 18-இல். அன்று கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. நினைவு நாள் ஆதலால், அந்த நாளின் பெயராலேயே கூட்டம் போட்டேன். அந்தக் கூட்டத்தில் பேச நான் திரு. காமராசரையும் அழைத்தேன். அவர் ''இராயபுரத்தில் வேண்டாம்; இராயப்பேட்டை காங்கிரஸ் திடலில் கூட்டத்தை வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறினார். நான் பிடிவாதமாக இராயபுரத்தில்தான் நடத்த வேண்டும் என்றேன். திரு. காமராசர், இராயபுரத்தை விரும்பாததற்குக் காரணமுண்டு. அப்போது, இராயபுரமென்ன, வடசென்னை முழுவதும் திராவிட இயக்கத்தின் கோட்டையாக இருந்தது. உண்மையில் அங்குக் கூட்டம் போட்டு திராவிட இயக்கத்தைக் குறைகூறிப் பேசிவிடுவது சுலபமல்லதான்! ஆனால், நான் வடசென்னை வாசியாதலால் திராவிடர் கழகத்தின் செல்வாக்கை ஊடுருவ முடியுமென்ற துணிவு எனக்கிருந்தது.

இராபின்சன் பூங்கா பதினாயிரக்கணக்கான மக்கள் கொள்ளக்கூடிய மிகப் பெரிய திடல். சரியானபடி ஏற்பாடு செய்யப்பட்டதால், சுமார் இருபதாயிரம் மக்கள் குழுமினர். நாம எதிர்பார்த்ததைவிடவும் பெரிய கூட்டம்! கூட்டத்திற்கு முதல் நாளே 'விடுதலை'யில் 'குத்தூசி'யார் வடசென்னை தி.க. தோழர்களை உற்சாகப்படுத்தி எழுதியிருந்தார். அவர்கள் செய்ய வேண்டியவற்றையெல்லாம் எதிர்மறையில் — அவர்கள் மட்டுமே புரிந்து கொள்ளும் வகையில் — விளக்கியிருந்தார். என்ன நடக்குமோ என்று என்னுடைய நண்பர்களுக்கு அச்சந்தான்! ஆனால், கூட்டம் எத்தகைய சலசலப்புமின்றி அமைதியாக நடந்து முடிந்தது. திராவிட இயக்க எதிர்ப்புக்கு இந்தக் கூட்டம் ஒத்திகையாக அமைந்தது!

அன்று, அதற்கு முன் நான் கேட்டிராத வகையில் திரு. காமராசர் மிகுந்த கோபத்துடன் நேராகப் பெரியாரையே தாக்கிப் பேசினார். பெரியார் கண்ணெதிரே நிற்பது போன்று கற்பனை செய்து கொண்டு ''உன் முகமூடியைக் கிழித்தெறிந்து, நீயார்

என்பதை மக்கள் புரிந்து கொள்ளும்படி செய்வேன்'' என்று கூறினார். நான் திராவிடர் கழகத்தாரின் வன்முறைச் செயல்களைக் கண்டித்துப் பேசினேன். அன்றையக் கூட்டத்தில் நான் வேறு யாரையும் பேசவிடவில்லை.

"அதுபோலத்தான்..."

இராபின்சன் பூங்கா கூட்டம் முடிந்த மறுநாள் 'விடுதலை'யில் பக்கத்திற்குப் பக்கம் நானும் காமராசரும் தாக்கப்பட்டிருந்தோம். இராபின்சன் பூங்காக் கூட்டத்தில் பயங்கர அமளி நடந்ததாக — நான் பேச முடியாதபடி மக்கள் என்னை எதிர்த்துக் குழப்பம் செய்ததாக 'விடுதலை'யில் செய்தி வெளியானது. இப்படியெல்லாம் நடக்காததை நடந்ததாகப் புராண பாணியில் அரசியல் பிரச்சாரம் செய்வது அந்நாளில் தி.க.வின் வழக்கம்.

''அதுபோலத்தான்'' என்னுந் தலைப்பிட்டு, பெரியார் ஈ.வெ.ரா. திரும்பவும் 'விடுதலை'யில் ஒரு சிறப்புக் கட்டுரை எழுதியிருந்தார். அதில், தமக்கும் தாம் தோற்றுவித்த சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றிற்கும் ஏற்பட்டு வந்த எதிர்ப்புகளை விவரித்திருந்தார். அந்த எதிர்ப்புகளெல்லாம் ஒரே சாதியாரிடமிருந்துதான் ஏற்பட்டனவென்றும் குறிப்பிட்டிருந்தார். சான்றாக, பெரியாரின் நாத்திக இயக்கத்தை — அது தோன்றிய காலத்திலேயே — எதிர்த்த திரு.தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலரோடு திரு.கு. காமராசரையும் என்னையும் ஒப்பிட்டுக் காட்டியிருந்தார்.

எங்கள் மூவர் பெயரையும் குறிப்பிடுங்கால், தெ.பொ. கிருஷ்ணசாமி கிராமணி (நாடார்), திரு.கு. காமராச நாடார் (கிராமணி), திரு.ம.பொ.சிவஞான கிராமணி (நாடார்) என்று எழுதி எங்களிடையேயுள்ள சாதி ஒற்றுமையையும் 'விடுதலை' வாசகர்களுக்குப் பெரியார் நினைப்பூட்டியிருந்தார்.

திரு.தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் தலைசிறந்த தமிழ் நாடக ஆசிரியர். தமிழ் நாடகக் கலை வளர்ச்சிக்கு அவர் ஆற்றியுள்ள தொண்டினைத் தமிழர் மறந்தாலும் தமிழ் நாடகக்

கலை மறவாது. 'பாவலர் பாய்ஸ் கம்பெனி' என்ற தனது நாடகக் குழுவை லண்டன் மாநகருக்கு அழைத்துச் சென்று, அங்கு நடந்த வெம்பிளி கண்காட்சியிலே 'கதரின் வெற்றி' போன்ற தேசபக்த நாடகங்களை நடத்திக் காட்டினார். அப் பெரியார், சிறந்த கவிஞர்; தலை சிறந்த நாடகாசிரியர். பழுத்த காங்கிரஸ்காரர். தேசபக்தியோடு தெய்வ பக்தியும் கொண்டிருந் தவர். அதனால் தேச பக்தியையும், தெய்வ பக்தியையும் எதிர்த்து பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கத்தை அதன் ஆரம்பக் கட்டத்திலேயே கடுமையாக எதிர்த்தார். 'ஆத் திக சங்கம்' அமைத்து, தமிழ்நாடு முழுவதிலும் சுற்றுலா செய்து, சுயமரியாதை இயக்கத்திற்கு எதிர்ப்பியக்கம் நடத்தினார்.

அதனாற்றான், மறைந்துவிட்ட — மக்கள் மறந்துவிட்ட பாவலரோடு என்னையும் திரு. காமராசரையும் ஒப்பிட்டுக் காட்டி, அவர் செய்த 'இனத் துரோகம்' போலத்தான் நாங்களும் செய்வதாகக் கூறினார். பெரியார் நாங்கள் மூவரும் ஒரே சாதியினராதலால், எங்களுடைய எதிர்ப்புக்கு எங்கள் சாதி யையே பொறுப்பாக்கிப் பழித்தார்.

காங்கிரஸ் — தமிழரசுக் கழகம் — திராவிடர் கழகம் ஆகிய அமைப்புகளில் மேல் மட்டத்திலுள்ளவர்களிடம் தோன் றிய இந்தப் பூசல், கீழ் மட்டத்திலுள்ளவர்களிடமும் எதிரொலித் தது. போதாக் குறைக்கு அப்போதுதான் புதிதாகத் தோன்றி வேகமாக வளர்ந்து வந்த தி.மு.க.வும், தி.க.வுக்கு ஆதரவு காட்டியது. ''தி.க.வும், தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கி'' என்று அண்ணா வருணித்தது இங்கேதான் நடைமுறைக்கு வந்தது.

புதுமையான எழுச்சி

நாவன்மைமிக்க பேச்சாளர்களையும் எழுத்தாளர்களையும் செயல் வீரர்களையும் தின — வார — மாத ஏடுகளையும் கொண்டிருந்த இருவேறு (தி.க. — தி.மு.க.) இயக்கங்களின் தாக்குதல்களை நான் சமாளிக்க வேண்டியிருந்தது. ஏற்கனவே நான் எடுத்துக்காட்டியபடி, பொறாமையாளர் விஷக்கண் பார்வையால் தமிழரசுக் கழகம் செழித்து வளராமல் தளர்வுற்றி

ருந்த நேரமது. தமிழ்நாடு காங்கிரசும் செயலற்று அடியோடு ஸ்தம்பித்துக் கிடந்தது. ஆயினும், திராவிடர் இயக்கத்தாரின் தொடர் தாக்குதல்களால், காங்கிரஸ் — தமிழரசுக் கழக ஊழியர் களிடையில் புது வகையான எழுச்சி ஏற்பட்டது. கழகத்திற்கும் காங்கிரசுக்குமிடையே நிலவி வந்த இடைவெளி குறைந்து வந்தது. நானும் காமராசரும் கடந்தகாலப் பூசல்களை அடி யோடு மறந்து அடிக்கடி சந்தித்து, பழையபடி நெருங்கிப் பழகலானோம். மாறுபாடான இந்தப் புதிய சூழ்நிலை தமிழ் நாட்டின் அரசியலைத் திசை திருப்பிவிடக் கூடியதாக இருந்தது.

1951 ஜனவரியில் நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெறுவ தாக இருந்தது. தமிழ்நாட்டில் காங்கிரசுக்கு எதிராக வலுவான பார்லிமெண்டரி அரசியல் கட்சி எதுவும் அப்போது இல்லை யாதலால், புதிதாகத் தோன்றிய தி.மு.கழகம் காங்கிரசுக்கு எதிர்க்கட்சியாகக் கூடும் — 1951 பொதுத் தேர்தலிலும் போட்டியிடக் கூடும் என்ற நம்பிக்கை நிலவியது. திராவிடர் கழகம் தேர்தலில் போட்டியிடாதென்ற நம்பிக்கையிருப்பினும், தேர்தல் காலத்தில் காங்கிரசை எதிர்க்கும் கட்சிகளுக்கு அது உதவுவது வழக்கம். ஆகவே, தேர்தலில் காங்கிரசின் வெற்றிக்கு ஆதரவான சூழ்நிலையை உருவாக்கும் உள்நோக்குடன் திராவி டர் கழகங்களைப் பலவீனப்படுத்தக்கூடிய எதிர்ப்பியக்க மொன்றை உருவாக்கும் போக்கில் திரு. காமராசர் அப்போது சிந்தித்து வந்தார். என்னைப் பொறுத்தவரையில் தேர்தலைப் பற்றி அக்கறையற்றவனாக இருந்தேன். ஆகவே, திராவிடர் கழகத்தாரோடு தொடர் போராட்டம் ஏற்படுவதை நான் விரும்ப வில்லை. அதனால், புதிய தமிழகம் படைக்க நான் மேற்கொண் டுள்ள பணி தடைப்பட்டுவிடக் கூடுமென்றும் அஞ்சினேன். ஆனால், நிகழ்ச்சிகள் என் விருப்பத்திற்கு மாறான திசையில் என்னை இழுத்துச் சென்றன.

''செங்கோல்'' ஏந்தினேன்!

1950 டிசம்பர் 1-இல் நான் ''செங்கோல்'' வார இதழைத் தொடங்கி, திராவிடர் இயக்கங்களின் தாக்குதலைச் சமாளிக்கும் தற்காப்புக் கேடயமாக அதனைப் பயன்படுத்தினேன். தமிழரசுக்

கழகத்தினரான திரு. ஆ.கோ. வேங்கடராமாநுஜம் அவர்களைப் பெயரளவில் அதன் ஆசிரியராக்கினேன்.

''செங்கோல்'' வார இதழுக்கு நாட்டில் நல்ல வரவேற் பிருந்தது. காரசாரமான கட்டுரைகளும், துணுக்குகளும், கவர்ச்சிகரமான கார்ட்டூனும் வெளியாயின. கவிஞர் கு.மா. பாலசுப்பிரமணியம் 'செங்கோலின்' பிரதான எழுத்தாளராக இருந்தார். அவர் செல்வாக்குமிக்க திரைப்படக் கவிஞராக இருந்தார். ஆதலால், 'செங்கோலு'க்கு எழுத அவருக்கு நேரமி ருக்கவில்லை. ஆயினும், வாரந்தோறும் ஒரு இரவை ஒதுக்கி, அந்த இரவில் கண்விழித்து 'செங்கோலு'க்கு எழுதி வந்தார். அதற்காக எத்தகைய ஊதியத்தையும் அவர் என்னிடம் எதிர் பார்க்கவில்லை. விடுதலையில் வரும் ''குத்தூசி''க்குப் போட்டி யாகக் ''குத்தீட்டி'' என்னும் பெயரில் வாரந்தோறும் எழுதி வந்தார்.

''செங்கோல்'' பத்திரிகையின் தோற்றத்தால் தமிழரசுக் கழக — காங்கிரஸ் தோழர்கள் புத்துணர்வு பெற்றனர். அது வரை சோர்ந்து கிடந்த த.அ.க. — காங்கிரஸ் கிளைகள் புதிய உற்சாகத்துடன் வேலை செய்யத் தொடங்கின. நாடெங்கும் கூட்டங்கள் நடக்கலாயின. தமிழரசுக் கழகப் பேச்சாளர்களுக்கு காங்கிரஸ் வட்டாரத்திலே தனி மதிப்பு ஏற்பட்டது. அதனால், கழகப் பேச்சாளர் எண்ணிக்கை வளர்ந்தது. திரு. சின்ன அண்ணாமலை திராவிடர் இயக்க எதிர்ப்பில் அதிக உற்சாகங் காட்டினார். அவரது நகைச்சுவைமிக்க பேச்சுக்கு நல்ல கிராக்கி இருந்தது. ஒரு பெரிய பிரச்சாரப் படையே என் பின்னே திரண்டதெனலாம். கவிஞர் கு.சா.கிருஷ்ணமூர்த்தி ''சூட்டுக் கோல்'' என்னும் புனைபெயரில் ''செங்கோலி''ல் தொடர்ந்து கவிதைகளை எழுதி, திராவிடர் இயக்கத்தைத் தாக்கினார். திராவிடர் இயக்க வட்டாரத்திலும் புதுப்புது ஏடுகள் தோன்றின. இயற்கையாகவே எது எதற்கோ எதிர்ப்பியக்கமாக விளங்கிய திராவிடர் கழகம், உண்மையான ஒரு பாசறையாகவே மாறி விட்டது!

காமராசர் கைங்கர்யம்!

''பிரிவினை இயக்க எதிர்ப்பு மாநாடு'' என்பதாக ஒரு மாநாடு நடத்த காங்கிரஸ் — தமிழரசுக் கழகத் தோழர்களிலே சிலர் முன் வந்தனர். அதற்கான முதல் விளம்பரச் சுவரொட்டி யும் அச்சாகிவிட்டது. இதுபற்றித் தகவல் அறிந்ததும் ''பிரிவினை இயக்க எதிர்ப்பு'' என்பதனை ''திராவிட இயக்க எதிர்ப்பு'' என்று மாற்றுமாறு ஆலோசனை கூறினேன். ''பிரிவினை இயக்க எதிர்ப்பு'' என்ற பெயர் காமராசரின் கைங்கரியம்!

''மாநிலச் சுயாட்சி''க் கோரிக்கையையே பிரிவினை வாத மென்றுதான் காமராசர் கூட்டத்தார் அந்நாளில் கூறிவந்தனர். ஆகவே, அந்தப் பெயரில் காங்கிரஸ்காரர்கள் மாநாடு நடத்துவ தானால், அதில் நான் கலந்துகொள்ள முடியாதென்றும் உறுதியா கக் கூறிவிட்டேன். திரு. காமராசர் வலையில் விழ வேண்டா மென்றும் தமிழரசுக் கழகத் தோழர்களை எச்சரித்தேன். எனது அறிவுரை ஏற்கப்பட்டது.

''திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு'' ஒன்றை 1951 மார்ச்சு 24, 25 தேதிகளில் இராயப்பேட்டை காங்கிரஸ் திடலில் நடத்த முடிவானது. மாநாடு சம்பந்தமாக ஒவ்வொரு அம்சத்திலும் நான் கலந்து கொள்ளப்பட்டேன். இந்த மாநாட்டைத் தவிர்க்க நான் நினைத்திருந்தாலும், தவிர்த்திருக்க முடியாது. திராவிடர் கழகத்தினரின் வன்முறைப் போக்குக்கு எதிராக தேசியவாதிகள் அந்த அளவுக்கு எழுச்சி பெற்றிருந்தனர். எதிர்ப்பியக்க மொன்று இயற்கையாகவே தேவைப்பட்டது. திராவிடர் கழகத் தின் கொள்கைகளுக்காக அல்ல; அதன் நடைமுறைப் போக்கில் மாறுதல் காணத்தான்! ஆம்; இப்படித்தான் நான் கருதினேன்.

திராவிடர் இயக்க எதிர்ப்பு மாநாடு காங்கிரசின் தமிழ் விரோதப் போக்கிற்குத் துணைபுரிந்துவிடக் கூடுமோ என்ற கவலையும் எனக்கிருந்தது. திராவிட இயக்க எதிர்ப்புணர்ச்சி யால்தான் தமிழ் விரோத உணர்ச்சியைப் பெற்றுவிட்டது காங்கி ரஸ். அதனால், 'திராவிட இயக்க எதிர்ப்பு' காரணமாகத் தமிழ் விரோத உணர்ச்சி வளர்வதைத் தடுக்காவிட்டால் தமிழரசு

இயக்கத்தின் அடித்தளமே தகர்ந்து போய்விடக் கூடும். ஆகவே, திராவிட இயக்க எதிர்ப்பு மாநாட்டைத் தமிழ் உணர்ச் சியை வளர்க்கும் மேடையாகவும் செய்துவிட முனைந்தேன். அம் மாநாட்டின் தொடக்கத்தில் தமிழ்க் கொடியை உயர்த்தவும், முதல் நாளில் 'சிலப்பதிகார மாநாடு' நடத்தவும் ஏற்பாடு செய்தேன். இதையெல்லாம் திரு. காமராசர் விரும்பவில்லை. அதனை அவர் வெளிப்படையாகவே கூறினார். ''திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு மட்டுமே நடத்தினால் போதாதா? இலக்கிய மாநாடு தேவையா?'' என்று என்னைக் கேட்டார். ''தேவைதான்'' என்று பதிலளித்தேன். அதற்கு மேல் அவர் மௌனத்தில் மறைந்து கொண்டு விட்டார்.

சிலப்பதிகார மாநாடு

1951 மார்ச்சு 24-ஆம் நாளில் இராயப்பேட்டை காங்கிரஸ் திடலிலே திராவிட இயக்க எதிர்ப்பு மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியாக, சிலப்பதிகார மாநாடு நடந்தது. மாநாட்டுப் பந்தலுக்குக் 'கண்ணகிப் பந்தல்' என்று பெயர் வைக்கப்பட்டது. தமிழ் மொழியின் வரலாற்றிலேயே சிலப்பதிகாரத்தின் பெய ரால் கூட்டப்பட்ட முதல் மாநாடு இதுதான். காங்கிரஸ் பாரம்பர் யத்தைச் சார்ந்த தமிழரசுக் கழகத்தார் நடத்திய முதல் இலக்கிய மாநாடும் இதுதான். பண்டிதர்களின் பெட்டிகளிலே மறைந்து கிடந்த சிலபப்திகாரக் காப்பியத்தை இந்த நாளிலேதான் சாதார ணப் பொதுமக்கள் மத்தியிலே கொண்டு வந்த பெருமையை நான் அடைந்தேன். காங்கிரஸ்காரரும் என் அரிய நண்பருமான வடபாதிமங்கலம் திரு.வி.எஸ். தியாகராச முதலியார் வரவேற் புக் குழுத் தலைவராக இருந்து இம் மாநாட்டை தமிழுக்குப் புகழ் தேடித்தரும் வகையில் சிறப்பாக நடத்தி வைத்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராக இருந்த டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசினார். அவரது தொடக்க உரை சிலப்பதிகாரத்தை ஒட்டியதாக மட்டுமல்லமால், நான் நடத்திவரும் புதிய தமிழகம் படைக்கும் இயக்கத்திற்கே ஆக்கமும் ஊக்கமும் தருவதாக அமைந்தது.

அப்போது காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளராக இருந்த திரு.ந. சஞ்சீவியவர்கள் சிலப்பதி கார மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியாக வில், புலி, மீன், சின்னங்கள் பொறித்த தமிழரசுக் கொடியை உயர்த்தி வைத்துப் பேசினார். ஒரு இளம் புலவரைக் கொண்டு தமிழ் இலக்கிய இயக்கத்தைத் தொடங்கி வைக்க வேண்டுமென்ற கருத்துட னேயே நான் என்பால் பேரன்பு கொண்ட ந. சஞ்சீவியவர் களைக் கொண்டு தமிழரசுக் கொடியை உயர்த்தி வைக்கச் செய்தேன். அந்தக் கொடி இன்றளவும் இலக்கியவானில் பறந்து கொண்டிருப்பதனை என் அகக் கண்களால் காண்கின்றேன்.

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரிய ராக இருந்த டாக்டர் மு. வரதராசனார் இம் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

சிலம்பு ஒலிப்பது எதற்காக?

மாநாட்டுத் தலைவர் பெயரை முன்மொழிந்து நான் பேசி னேன். அதன் ஒரு பகுதியை இங்குத் தருகிறேன்:

''இந்தச் சிலப்பதிகார மாநாடு கூடுவதற்குக் காரண மாயிருந்தவன் என்ற முறையில் அதன் குறிக்கோள் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். இம் மாநாட்டில் கொடியேற்றவும் தலைமை வகிக்கவும் காங்கிரசைச் சாராத தமிழ் அறிஞர்களையே அழைத்திருக்கிறேன்.

''தமிழ் மொழியைக் கட்சி என்னும் வேலிக்குள் சிறைப்படுத்த நான் விரும்பவில்லை. சிலப்பதிகார மாநாடு கூட்டி காங்கிரசுக்கு ஆதரவு தேட வேண்டிய தொல்லையும் தமிழரசுக் கழகத்தானாகிய எனக்கு இல்லை. நாளை இதே 'கண்ணகி பந்தலி'ல் ஒரு அரசியல் மாநாடு, கூட இருக் கின்றது. அம் மாநாட்டிற்கும் சிலப்பதிகார மாநாட்டிற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது.

''நெடு நாட்களாகவே இப்படி ஒரு மாநாட்டைக் கூட்ட வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இருந்து வந்தது.

இந்தச் சந்தர்ப்பம் அதற்குச் சாதகமாக இருந்தது. கூட்டி விட்டேன். நானும் பன்மொழிப் புலவர் மீனாட்சி சுந்தரனாரும், திரு. காமராசரும் காங்கிரசார் என்ற முறையிலல்லாமல், தமிழ் இனத்தினர் என்ற முறையிலேயே இந்த மாநாட்டில் பங்கு கொள்கின்றோம்.

''அரசியலில் எங்களோடு மாறுபட்ட கட்சியினரும் இலக்கிய மாநாடுகள் கூட்டுகின்றனர். ஆனால், நானறிந்த வரையில் கட்சி மாநாட்டிற்கும், இலக்கிய மாநாட்டிற்கும் அங்கே வேற்றுமை காண முடியவில்லை. கட்சிக் கருத்துக்களை வற்புறுத்துவது பிழையன்று. ஆயினும், பிடிக்காத சாதியினரை — கட்சியினரைப் பழித்துப் பேசுவதற்கென்றே இலக்கியங்களைப் பயன்படுத்துவது தவறு என்பதனைக் கூறித்தான் ஆகவேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கும் நல்வழி காட்டுவதற்காகவே தேசியவாதிகளாகிய நாங்கள் இந்த இலக்கிய மாநாட்டைக் கூட்டியிருக்கிறோம்.

''இந்தச் சிலப்பதிகார மாநாடே என்னைக் குறை கூறுபவர்களுக்குப் பதிலளிக்கும், தேசிய வாதியாகிய நான் இலக்கியத்தைச் 'சாதி வெறி' என்னும் எருப் போட்டு 'கட்சி' என்னும் வேலியிட்டு வளர்க்க விரும்பவில்லை. உலகெங்கும் பரந்து கிடக்கும் மக்கள் சமுதாயத்தின் நலன் ஒன்றை மட்டுமே கருதி இலக்கியப் பணியாற்ற விரும்புகின்றேன்.''

('தமிழ் முரசு', ஏப்.1951)

சிலப்பதிகார மாநாடு நான் எதிர்பார்த்ததைவிடவும் சிறப்பான முறையில் நடந்து முடிந்தது. மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட இலக்கியச் சொற்பொழிவுகள் நாளிதழ்களில் விரிவாகப் பிரசுரிக்கப்பட்டன. அதற்கு முன்பு வேறு எப்போதும் செய்தித்தாள்கள் இந்த அளவுக்கு ஒரு இலக்கிய மாநாட்டிற்கு விளம்பரம் தந்ததாக எனக்கு நினைவில்லை. தேசப் பற்றோடும் தெய்வப் பற்றோடும் கலந்த மொழிப் பற்று உடையவர்கள் நடத்திய இலக்கிய மாநாடு என்பதால் செய்தித் தாள்கள் தங்கள் வழக்கத்தை மாற்றிக் கொண்டிருக்கலாம்.

ஒருமைப்பாட்டுக் காப்பியம்

தமிழரசுக் கழகத்தின் சார்பில் காங்கிரஸ் பாரம்பரியத்தின் பிரதிநிதியாகவும் நின்று சிலப்பதிகாரக் காப்பியத்தை மக்கள் மத்தியிலே கொண்டுவர நான் விரும்பியதற்குக் காரணமுண்டு. திருக்குறளையோ, கம்ப ராமாயணத்தையோ நான் விரும்பாதவனல்லன். மனமார விரும்பக் கூடியவன். ஆயினும், இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடில்லாத வகையில் தமிழினத்தை ஒன்றுபடுத்த நான் எடுத்துக்கொண்ட முயற்சிக்குப் பயன்படக்கூடிய ஒரு இலக்கியம் தமிழில் உண்டென்றால், அது சிலப்பதிகாரம்தான்; வேறில்லை. இளங்கோ தந்த சிலம்பு தமிழினத்தின் பொதுச் சொத்து. இந்தியாவின் தேசிய இலக்கியம். அதனால்தான் சிலப்பதிகாரத்தை ஒரு கருவியாகக் கொண்டு பொதுமக்கள் நடுவில் இலக்கிய இயக்கத்தைத் தொடங்கி வைத்தேன்.

சென்னையில் சிலப்பதிகார மாநாடு நடந்ததன் பின்னுள்ள இருபதாண்டு காலத்திலே, தமிழ்நாட்டில் பட்டினங்களில் மட்டுமின்றி, பட்டிதொட்டிகளிலெல்லாம் சிலப்பதிகார மாநாடு நடத்தியிருக்கின்றனர் தமிழரசுக் கழகத்தார். தமிழரசுக் கழக அரசியல் மாநாடு நடத்தப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், முதல் நாளில் முழுநாள் அளவில் சிலப்பதிகார மாநாடோ — பொதுவாக, இலக்கிய மாநாடோ நடைபெறுவது வழக்கமாகி விட்டது. இந்த மாநாடுகளில் அரசியல் கட்சிச் சார்பற்ற புலவர்களை அழைப்பதும் வழக்கமாக இருந்து வருகிறது.

கலாச்சார தொடர்புடைய அரசியல் இயக்கமான தமிழரசுக் கழகம் எடுத்துக்கொண்ட இந்தப் புது முயற்சியை மற்ற அரசியல் கட்சிகள் பின்பற்றியிருக்குமானால், தமிழினம் இதற்குள் புதுவாழ்வு பெற்றிருக்கும். ஒன்றிரு சந்தர்ப்பங்களில் காங்கிரஸ் மாநாட்டோடு இலக்கிய விழாவும் நடத்தப்பட்டதுண்டு. ஆனால், அந்த முயற்சி நீர்மேல் குமிழிபோல் தோன்றி மறைந்து விட்டது.

எனது ''ஜாதகப்''படி போராட்ட சூழ்நிலையில்தான் 'கண்ணகி பந்தலி'ல் சிலப்பதிகார மாநாடு என்னால் நடத்தப் பட்டதென்றாலும், கடந்த ஒரு தலைமுறை காலத்திலே சிலப் பதிகாரப் பிரச்சாரம் தமிழரெல்லாம் கருத்தொருமித்து நடத்தும் ஒரு பேரியக்கமாக வளர்ந்துள்ளது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

'கண்ணகி பந்தலி'லே சிலப்பதிகார மாநாடு சிறப்புடன் நடந்து முடிந்த மறுநாள் அதே இடத்தில் அரசியல் மாநாடு — அதாவது, ''திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு'' நடைபெற்றது. தமிழகத்தின் அரசியல் வரலாற்றிலேயே ஒரு இயக்கத் திற்கு எதிர்ப்பு காட்டுவதற்கென்றே — அந்த இயக்கத்தின் பெயராலேயே நடத்தப்பட்ட முதல் மாநாடு இதுதான். தமிழ் நாடு முழுவதிலுமிருந்து வந்த தமிழரசுக் கழக — காங்கிரஸ் தோழர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். ஆம்; மாநில மாநாடாகவே நடைபெற்றதெனலாம்.

அப்போது காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றதென்றாலும், அமைச்சர்களில் யாரையும் இந்த மாநாட்டிற்கு நான் அழைக்க வில்லை. காங்கிரசைச் சார்ந்த 'கனதனவான்கள்'கூட அழைக் கப்படவில்லை. ஊழியர்களே அழைக்கப்பட்டு, கலந்து கொண் டனர். அவர்களில் மிகப் பெரும்பாலோர் இளைஞர்களாவர். ஆம்; அந்த அப்பாவித் தொண்டர்களைத் தெருவில் காணும் போதுதான், ''அடே ஆறவுன்ஸ்'', என்றனர் தி.க. தோழர்கள். அதனால் காங்கிரஸ் தொண்டர் குழாத்தினர், தாங்கள் ராணுவ ரீதியில் திரண்டாலொழிய, தங்கள் மானம் மரியாதையைக் காத்துக் கொள்ள வேறு வழியில்லையென்பதனை உணர்ந்தவர் களாகி, 'கண்ணகி பந்தலி'ல் குழுமினர்.

கவிஞர் கு.சா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள், இந்த மாநாட் டிற்கென்றே பாடித் தந்த ''எது வேண்டும் சொல், தமிழா?'' என்ற பாடல் முதலில் பாடப்பட்டது. அதில் ''தமிழருக்கு வேண்டியது தமிழரசா? திராவிடக் கூட்டாட்சியா?'' என்ற வினா எழுப்பி, ''எது வேண்டும் சொல் தமிழா?'' என்று கேட்கப்பட்டது.

திரு. சின்ன அண்ணாமலை வரவேற்புரையாற்றினார். இம் மாநாட்டை நடத்துவதிலே அதிக உற்சாகங் காட்டியவர் அவர் தானே! அந்த உற்சாகத்தைத் தமது வரவேற்புரையிலும் அவர் வெளிப்படுத்தினார். எதில் ஈடுபடுகிறாரோ, அதில் இரண்டறக் கலந்துவிடும் சுபாவமுடையவர் நண்பர் அண்ணாமலை. இந்த சுபாவத்தைத் திராவிட இயக்க எதிர்ப்பிலும் அவர் காட்டினார்.

டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசினார். அவரது பேச்சு திராவிட இயக்கத்தினரைப் பகைப்பதாக அல்லாமல், அவர்களைத் திருத் தக் கூடியதாக அமைந்தது. நான் எங்கிருக்கிறேனோ அங்கு தெ.பொ.மீ. இருந்த காலமது, திராவிட இயக்க எதிர்ப்பில் அவர் கலந்து கொண்டது, அதில் நான் ஈடுபட்டதனாற்றான்!

மாநாட்டுத் தலைவன் நான்தான்! சோதனைமிக்க நேரங்க ளில் — மாற்றாரின் தாக்குதலை எதிர்பார்த்து என்னால் கூட்டப் படும் மாநாடு அல்லது பொதுக் கூட்டத்தில் தலைமைப் பொறுப்பை நானே ஏற்றுக் கொள்வது வழக்கம். அதன்படி தான் கடுமையான எதிர்ப்பை எதிர்பார்த்துக் கூட்டப்பட்ட இம் மாநாட்டிலே தலைமைப் பொறுப்பை நான் ஏற்றேன்.

சுமார் ஒன்றரை மணி நேரம் தலைமையுரை நிகழ்த்தினேன். இயற்கையிலேயே உணர்ச்சிப் பெருக்குடன் பேசும் இயல்பு டைய நான் அன்று உணர்ச்சியின் முழு வடிவமாகி, எடுத்துக் கொண்ட பொருளிலே இரண்டறக் கலந்து பேசினேன். ஆம் பேசினேன்; யாரையும் ஏசவில்லை! அது என் இயல்புமல்ல!

பகைவரும் அமைதி பெற்றனர்!

திராவிட இயக்கத்தினரும் என் இனத்தவராதலால், அவர் களுக்குள்ள இனப் பற்றும் மொழிப் பற்றும் எனக்கு உடன் பாடாதலால், அவர்களைப் பகைவர்களாகக் கொள்ளாமல் நண் பர்களாகவே கருதி, அவர்கள் நடத்தும் இயக்கத்தின்பாலுள்ள குற்றங்குறைகளைச் சுட்டிக் காட்டினேன் — குறிப்பாக, தமிழ ரைத் 'திராவிடர்' என்றும், தமிழ்நாட்டைத் 'திராவிட நாடு' என்றும் அவர்கள் கூறிவருவதை வன்மையாகக் கண்டித்தேன். 'திராவிடர்' என்னுஞ் சொல் 'தமிழர்' என்னும் இன உணர்ச்சி

யைக் கொல்லும் 'நஞ்சு' என்றும் கூறினேன். அதுபோல, திராவிடத் தனிநாடு கோரிக்கையால் தமிழினத்தாருக்கு விளையக் கூடிய கேடுகளையும் விளக்கிக் கூறினேன். 'திராவிடர்' என்று சொல்வதனை விட்டு, 'தமிழர்' என்ற இன உணர்ச்சி பெற்று, மொழிவழி மாநிலக் கோரிக்கையையும், மாநிலச் சுயாட்சிக் கொள்கையையும் ஏற்றுக்கொள்ளுமாறு தி.க., தி.மு.க., அமைப்புகளுக்குச் சகோதர வாஞ்சையுடன் வேண்டுகோள் விடுத்தேன்.

எனது தலைமையுரையில் சரிபாதி காங்கிரசின் தவறுகளையும் சுட்டிக்காட்டுவதாக அமைந்தது. மொழிவாரி மாநிலப் பிரிவினையைக் காங்கிரஸ் தள்ளிப் போட்டு வருவதன் தீய விளைவுதான் திராவிடத் தனிநாட்டுக் கோரிக்கை என்று துணிவுடன் குறிப்பிட்டேன். தமிழ்நாடு காங்கிரஸ் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், தமிழ் இனத்தின் தனி நலன்களுக்கும் பாடுபட முன் வந்தாலொழிய, திராவிட இயக்கத்தை வெற்றி காண இயலாதென்பதையும் திட்டவட்டமாகத் தெரிவித்தேன்.

உண்மையில் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாட்டை மாநிலச் சுயாட்சி மாநாடாகவே நடத்தினேன். காங்கிரஸ்காரர்களைக் கூட்டி வைத்து மாநிலச் சுயாட்சிக்குக் குரல் கொடுக்க அந்நாளில் அதிக நெஞ்சுறுதி தேவைப்பட்டது. தமிழரசுக் கழக முன்னணிப் பேச்சாளர்களான வேலூர் வி.கே. குப்புசாமி, கவிஞர் வானம்பாடி, குடந்தை எஸ்.டி.பாலு, கள்ளக்குறிச்சி கி. ஜனார்த்தனம், மாயூரம் திரு. ஏ.எம். இஸ்மாயில் ஆகியோர் தமிழரசுக் கழகத்தின் கொள்கை வழித் திராவிட இயக்கத்தை விமர்சித்துப் பேசினர். காங்கிரஸ்காரர்களான திரு.கே.டி. கோசல்ராம், எம்.எல்.ஏ., சென்னை திரு.எம். கன்னியப்பன், எம்.எல்.ஏ., திரு. ஜி.உமாபதி, திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் ஆகியோர் காங்கிரஸ் பாணியிலே பேசினர்.

எனது தலைமையுரையில் நான் வற்புறுத்திய மொழிவாரி மாநிலக் கோரிக்கையைப் பிரகடனம் செய்யும் தீர்மானமொன்றையும் இம் மாநாட்டில் தலைமைப் பொறுப்பிலிருந்து கொண்டு நானே முன்மொழிந்தேன். தமிழரசுக் கழகப் பேச்சாளர்களால்

அத்தீர்மானம் வழிமொழியப்பட்டு, மாநாட்டினரால் ஒரு மனத் துடன் நிறைவேற்றி வைக்கப்பட்டது.

மாநாட்டிலே எந்த நேரத்திலும் குழப்பம் ஏற்படலாமென்று நான் எதிர்பார்த்தேன். அதனைச் சமாளிக்கத் தயாராக இருக்கும் படி என் கழக காங்கிரஸ் தோழர்களை எச்சரித்து வைத் திருந்தேன். ஆனால், அப்படியெதுவும் நேரவில்லை. ஒருகால், நான் எனது தலைமையுரையில் வெளிப்படுத்திய இன உணர்ச்சி யும் தமிழ்ப் பற்றும் குழப்பம் செய்ய விரும்பியவர்களையும் கவர்ந்திருக்கலாம். அதைவிடவும் காங்கிரஸ்காரர்களை வைத் துக் கொண்டே காங்கிரசையும் நான் கண்டித்துப் பேசியது அவர்களுக்கு மனமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம். எப்ப டியோ 'திராவிடர் இயக்க எதிர்ப்பு மாநாடு' ஒரு சிறு சலசலப்பு கூட இல்லாமல் வெற்றிகரமாக நடந்து முடிந்தது. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. காமராசர் கண்ணகி பந்தலில் நடை பெற்ற இரண்டு மாநாடுகளிலும் கலந்து கொண்டார்.

திரு. காமராசரின் 'ஒத்துழையாமை'!

அரசியல் மாநாட்டில் மட்டும் பேச்சாளர் பட்டியலிலே திரு. கு. காமராசர் பெயரும் சேர்த்து விளம்பரப் படுத்தப்பட் டிருந்தது, அவரது இசைவின் பேரில்தான்! ஆனால், அவரை நான் பேச அழைத்தபோது அவர் தனது விருப்பமின்மையைத் தெரிவித்தார். அவர்,

> *''காலை முதல் தாங்களும் மற்ற பேச்சாளர்களும் மொழிவழி மாநிலக் கோரிக்கையை வற்புறுத்திப் பேசி யிருக்கிறீர்கள். அது எனக்குப் பிடிக்கவில்லை. நான் பேசுவதானால், அதனை மறுத்துப் பேசவேண்டும்''*

என்றார். அதற்கு நான், ''தாங்கள் மறுத்துப் பேசவேண்டா மென்று நான் சொல்லவில்லை. தாராளமாகப் பேசுங்கள். ஆனால், தங்கள் மறுப்பிற்கு நானும் பதிலளிக்க வேண்டியிருக் கும்'' என்றேன். ''அதனைத் தவிர்க்கத்தான் நான் பேச விரும்ப வில்லை என்கிறேன். நமக்குள் எதற்காக வீண சர்ச்சை?'' என்றார் காமராசர்.

திரு. காமராசர் தி.க. — தி.மு.க. எதிர்ப்போடு நான் நிற்பேன் என்று எதிர்பார்த்தார். நான் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாட்டை தமிழரசுக் கழகக் கொள்கைகளுக்கான பிரச்சார மேடையாகவும் பயன்படுத்தியது அவருக்குக் கட்டோடு பிடிக்க வில்லை. தமிழ்ப்பற்றை வளர்க்க சிலப்பதிகார மாநாடு நடத்திய தும், அம் மாநாட்டில், காங்கிரசைச் சாராத புலவர்களுக்குப் பிரதான்யமளித்ததும் திரு. காமராசருக்குப் பிடிக்கவில்லை. நான் காங்கிரசைத் திசை திருப்பிவிட முயல்வதாக அவர் கருதினார்.

திராவிட இயக்க எதிர்ப்பு மாநாட்டு வரவேற்புக் குழுவின் சார்பில் மாநாடு கூடுவதற்கு இரண்டொரு வாரங்களுக்கு முன்பு வெளியிடப்பட்ட அறிக்கையிலே,

> *''மாநாடு, வெறும் திராவிட இயக்க எதிர்ப்பில் மட்டு மல்லாமல், தமிழகத்தைத் தனி மாகாணமாக்குவது, தமிழை அரசு மொழியாக்குவது போன்ற ஆக்கவழி வேலைகளிலும் கருத்து செலுத்தும்.''*
>
> **('தமிழ் முரசு', மார்ச்சு, 1951)**

என்பது தெளிவு படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, கண்ணகி பந்தலில் கூடிய அரசியல் மாநாட்டில் திரு. கு. காமராசர் அதிர்ச்சியடையும் வகையில் புதிதாக எதையும் நானோ, மாநாட்டில் பேசிய தமிழரசுக் கழகத் தோழர்களோ கூறிவிட வில்லை. ஆயினும் தமிழ் — தமிழர் — தமிழ்நாடு என்னும் உணர்ச்சிகளுக்குப் பகைவராகவே வளர்ந்துவிட்ட திரு. காமரா சர் என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டார். திரா விட இயக்கத்தை அழித்து அதன் சமாதியின் மேலே காங்கிரஸ் கொடியைப் பறக்க விடுவேன் என்று அவர் கருதினார். அந்தத் தவறான எண்ணத்தின் விளைவாக, நான் அவரால் புரிந்து கொள்ள முடியாத புதிராகிவிட்டேன். மாநாட்டு மேடையில் தான் அவர் என்னைப் புரிந்து கொண்டார். பிறகு அவர் என்னைச் சகித்துக் கொண்டார். காரணம், மாநிலச் சட்டமன்றத் திற்கும், இந்திய நாடாளுமன்றத்திற்கும் பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்தது. ஆம்; பொதுத் தேர்தல் முடியும் வரை என் போக்கிலேயே என்னைவிட்டு, என்னிடம் வேலை

வாங்குவதென்று முடிவு செய்து கொண்டிருந்தார் விருதுநகர் ராசதந்திரியார்! நானும் தேர்தல் களத்தில் காங்கிரஸ் வெற்றி பெறுவதையே விரும்பினேனாதலால், அவரது ராஜதந்திரத்தைப் புரிந்துகொண்டும், அது வெற்றிபெற அவருடன் ஒத்துழைத்தேன்.

திசை திருப்பத்தான் விரும்பினேன்!

காங்கிரசைத் திசை திருப்பிவிட வேண்டுமென்ற எண்ணம் எனக்கிருந்தது உண்மைதான். தேசியத் திசையிலிருந்து ''மா காண வெறி''த் திசைக்குத் திருப்பிவிட நான் விரும்பவில்லை. மாறாக, தமிழ் விரோதப் போக்கிலிருந்து தமிழ்ப் பற்றோடு கலந்த தேசியத் திசைக்குத் தமிழ்நாடு காங்கிரசைத் திருப்பவே நான் விரும்பினேன். அந்த முயற்சியில் நான் வெற்றி பெறத் திரு. காமராசர் என்னை அன்று அனுமதித்திருந்தால், 1966-க்குப் பிறகு அடுத்தடுத்து நேர்ந்த விபத்துகளிலிருந்து தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி காப்பாற்றப்பட்டிருக்கும். ஆனால், 'விதி' வேறுவிதமாக விளையாடிவிட்டது!

கண்ணகி பந்தலில் இலக்கிய — அரசியல் மாநாடுகள் நடைபெற்ற இரண்டு நாட்களிலும், இரவு நேரங்களில் டி.கே. எஸ். சகோதரர்கள் 'ஔவையார்', 'கட்டபொம்மன்' நாடகங்களை மிகச் சிறப்பாக நடத்தினர். மாநாடுகளுக்கேற்ற நாடகங்களை அவர்கள் தேர்ந்தெடுத்ததிலே எனக்கு மனநிறைவு ஏற்பட்டது. அந்த இரண்டு நாடகங்களையும் காமராசர் என்னோடு இருந்து கண்டு களித்தார். ஔவை தி.க.சண்முகமும், கலைஞர் தி.க. பகவதியும் இரண்டு நாள் மாநாடுகளிலும் மனநிறைவோடு கலந்து கொண்டனர்.

சென்னையில் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு நடந்து முடிந்த பின்னர் வெளி மாவட்டங்களிலும் மாநாடுகள் நடத்த காங்கிரஸ் நண்பர்களும், தமிழரசுக் கழகத் தோழர்களும் உற்சாகம் காட்டினர். நூற்றுக் கணக்கான ஊர்களில் 'திராவிட இயக்க எதிர்ப்பு முன்னணி'க்குக் கிளைகள் அமைக்கப்பட்டன. அந்தக் கிளைகளில் காங்கிரஸ்காரர்களும், தமிழரசுக் கழகத் தோழர்களும் கலந்தே இருந்தனர்.

தி.க. வட்டாரத்தில் மாறுதல்

சென்னைக்கு அடுத்தபடியாக வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர் நகரத்தில் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. தமிழரசுக் கழகத்திற்கு முதன் முதலாகக் கிளை அமைக்கப்பட்டதும் அந்த நகரில்தான் என்பதனை நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். திரு.மு. வேணுகோபால் என்ற தோழர் என்னிடமும் தமிழரசு இயக்கத்திடமும் எல்லையற்ற பற்று கொண்டிருந்தார். அவர்தான் தமிழரசு இயக்கத்தின் வரலாற்றில் திருப்பத்தூருக்கு எதிலும் முதலிடம் தேடித் தருவதற்குக் காரணமாக இருந்தார். திரு.மு. வேணுகோபால் சிறை சென்ற தேசபக்தராவார். திரு.அ.ச. ரகுநாயகம், எம்.ஏ அவர்கள் அந்நாளில் தமிழரசுக் கழகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் கழக மத்தியச் செயற்குழுவின் உறுப்பினராகவும் இருந்தார். அவரும் திருப்பத்தூரில் திராவிட இயக்க எதிர்ப்புக்கு வலுத்தேடப் பல வகையிலும் உதவி புரிந்தார்.

தொடர்ந்து ஓராண்டுக் காலம் திராவிட இயக்க எதிர்ப்புப் பிரச்சாரம் புயற்காற்று வேகத்தில் தமிழ்நாடெங்கும் பரவியது. தி.க.வுக்கு எதிராகத்தான் இயக்கம் தொடங்கப்பட்டது என்றாலும், தி.மு.க.வுக்கு விலக்காக இல்லை. தி.க.வுக்கும், தி.மு.க.வுக்கும் இருந்த கொள்கை உடன்பாடு காரணமாக, அந்த இரண்டையும் சேர்த்தே எதிர்ப்பு இயக்கம் நடத்தப்பட்டது.

'செங்கோல்' வார இதழில் வெளியான கேலிச் சித்திரங்கள் இயக்கத் தோழர்களுக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்து வந்தன.

இரு தரப்பிலும் பரஸ்பரம் ஏச்சுகளும் பழி சுமத்தல்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. அதைத் தவிர்ப்பது என்னாலும் இயலாததாக இருந்தது. தேர்தல் நெருங்கி வந்ததன் காரணமாகக் காங்கிரசில் இருந்த நிலப்பிரபுக்களும், தொழில் அதிபர்களும் சுயநலம் காரணமாக, திராவிட எதிர்ப்பு இயக்கத்தை ஊக்குவிப்பதில் அக்கறை காட்டலாயினர். ஆனால், தமிழரசு இயக்கக் கொள்கைகளில் பற்றில்லாதவர்களைக் கொண்டு, எதிர்ப்பு இயக்கம் தொடர்வதை நான் விரும்பவில்லை. ஆகவே, இயக்கத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டியவனானேன்.

எதிர்ப்பு இயக்கத்தின் விளைவாகத் திராவிட இயக்கத் தோழர்களிடையே எனக்கு மனநிறைவைத் தரத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டன. கதர் கட்டியவரைக் கண்டால் ''அடே ஆறவுன்ஸ்'' என்று கூறிக் கேலி செய்யும் நாகரிகமற்ற செயல் மறைந்துவிட்டது. பொது மக்கள் மத்தியிலே நடைபெறும் சமய — புராண நிகழ்ச்சிகளின்போது தி.க. தோழர்கள் காட்டி வந்த முரட்டுத்தனமான எதிர்ப்பு பெருமளவுக்குக் குறைந்தது.

திருமுருக கிருபானந்த வாரியார் நடத்தும் புராணச் சொற்பொழிவுக் கூட்டங்களிலே கேள்வி கேட்டுத் தொல்லைக் கொடுப்பது அந்நாளில் தி.க.வினரின் வழக்கமாக இருந்தது. இதன் காரணமாக நான் தொடங்கிய திராவிட இயக்க எதிர்ப்பிலே திருமுருக வாரியார் சுவாமிகளும் ஆர்வம் காட்டினார். அந்த நாள் தொட்டு அவருக்கும் எனக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது.

எதிர்ப்பியக்கத்தை நிறுத்தினேன்!

1951 நவம்பர் 18-இல் எதிர்ப்பியக்கம் சூடு பிடித்திருந்த நேரத்திலே அதை நான் நிறுத்தினேன். கடைசியாக ஈரோடில்தான் எதிர்ப்பு மாநாடு நடந்தது. ஈரோடு நகர மன்ற முன்னாள் தலைவரும் காங்கிரஸ்காரருமான திரு. வெங்கடசாமி நாயக்கர் அவர்கள்தான் அதனைச் சிறப்பாக நடத்தி வைத்தார்.

18.11.51-இல் ராயபுரம் ராபின்சன் பூங்கா திடலில் வ.உ.சி. நினைவுநாள் கூட்டம் தமிழரசுக் கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் கூட்டத்தில் பேசும்போது, 'திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு' என்ற பெயரால் இனி மாநாடுகள் நடைபெறா என்று அறிவித்தேன். திராவிட இயக்க எதிர்ப்புக் கூட்டணி கலைக்கப்படுவதாகவும் பிரகடனம் செய்தேன். இதுபற்றிக் கழகத்தின் முன்னணித் தோழர்களிடமோ, திரு.காமராசரிடமோ நான் முன்கூட்டியே கலந்து உரையாடவில்லை. திராவிட இயக்க எதிர்ப்பை முடிப்பதை அவர்கள் விரும்பமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால், ஒரு இயக்கத்திற்கு எதிர்ப்பு இயக்கம் என்றென்றும் நடத்திக் கொண்டிருப்பதென்பது ஆரோக்கியமான அரசியலாகாது. ஆகவே,

ஒரு சர்வாதிகாரியைப்போல நானே முடிவு செய்தேன். அந்த முடிவை ராயபுரம் கூட்டத்தில் அறிவித்தேன். தமிழரசுக் கழக முன்னணித் தோழர்களிலே சிலர் முணுமுணுத்தனர். என்றாலும் என் முடிவுக்குக் கட்டுப்பட்டனர்.

இப்போதும் சொல்கிறேன்; திராவிட இயக்கத்திற்கு நான் எதிர்ப்பு இயக்கம் நடத்தியது தருமசங்கடமான ஒரு நிலையில் தான். மனமார விரும்பி அதனை நான் நடத்தவில்லை. ஆனால், அதனை நடத்தியதற்காக நான் வருத்தப்படவும் இல்லை. சரி யான நேரத்தில் செய்ய வேண்டியதைச் செய்ததாகவே நான் கருதுகின்றேன். ஓராண்டுக் காலம் எதிர்ப்பியக்கம் நடத்திய தால், பட்டுப்போன மரமாகியிருந்த தமிழ்நாடு காங்கிரஸ் திரும்பவும் பச்சை மரமானது! தமிழரசுக் கழகம் முன்னைவிட வும் தழைத்து வளர்ந்தது. கலைக்கப்பட்ட திராவிட இயக்க எதிர்ப்பு முன்னணியின் கிளைகளெல்லாம் தமிழரசுக் கழகக் கிளைகளாக மாறின.

இராயப்பேட்டை காங்கிரஸ் திடலில் என்னுடைய ஆதர வோடு நடத்தப்பட்ட சிலப்பதிகார மாநாடு தமிழ் இலக்கியத் துறையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியதென்றால், அதனை அடுத்து நடத்தப்பட்ட அரசியல் மாநாடும் தமிழ்நாட்டு அரசியலில் நல்லவர்களெல்லாம் விரும்பி வரவேற்கத்தக்க மாறுதலைக் காண்பதற்குக் காரணமாக அமைந்ததென்று நான் கருதுகின் றேன்.

பொதுத் தேர்தல் வந்தது!

இந்திய நாடாளுமன்றத்திற்கும் மாநிலச் சட்டமன்றங் களுக்கும் 1951-இல் நடைபெற்றிருக்க வேண்டிய தேர்தல் ஏதோ காரணம் சொல்லப்பட்டு, ஓராண்டுக் காலம் தள்ளிப் போடப்பட்டது. பின்னர், 1952 ஜனவரியில் தேர்தல் நடைபெறு மென அறிவிக்கப்பட்டது. திராவிட இயக்க எதிர்ப்பு காரண மாக, தமிழரசுக் கழகத்திற்கும் காங்கிரசுக்கும் நெருங்கிய உறவு ஏற்பட்டது. அதுபோல, பழைய பூசல்களை மறந்து நானும் காமராசரும் நெருங்கிப் பழகலானோம். இதனால், பொதுத்

தேர்தலில் தமிழ்நாட்டில் காங்கிரசுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்யும் பொறுப்பு தமிழரசுக் கழகத்தின் மீது சுமந்து நின்றது. உண்மையில் எனது கழகமும் நானும் அந்தப் பொறுப்பை அன்று ஏற்காமலிருந்தால், தமிழ்நாட்டில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்திருக்கக் கூடும்.

அந்த அபாயத்திலிருந்து காங்கிரசைக் காப்பாற்றுவது எனது கடமையென்று நான் கருதினேன். தமிழ்நாட்டில் மாவட்ட, தாலுகா, நகர, கிராம காங்கிரஸ் கமிட்டிகளெல்லாம் பெயரளவிலேயே இருந்தன. தமிழரசுக் கழகக் கிளைகளே உயிர்த் துடிப்போடு இயங்கி வந்தன. காங்கிரசிலே, வேட்பாளர்களாக நின்று பதவி பிடிக்க செல்வந்தர்கள் ஏராளமாக இருந்தனர் மேடையேறிப் பேச பிரச்சாரகர்களோ, கொடி பிடித்துக் கோஷமிட்டு ஊர்வலம் செல்ல ஊழியர்களோ இல்லை. அவர்களெல்லாம் தமிழரசுக் கழகத்திலே இருந்தனர் சுருங்கச் சொன்னால், காங்கிரஸ் கட்சி தளபதிகளின் முகாமாக விளங்கியது; தமிழரசுக் கழகம், சோல்ஜர்களின் பாசறையாக இருந்தது. இந்த இரண்டுஞ் சேர்ந்தால்தான் தேர்தல் களத்திலே பகைவர்களை வெல்ல முடியும் என்ற நிலை இருந்தது.

நாடு சுதந்திரம் பெற்றபின் இந்தியாவானது தனக்காகத் தானே தயாரித்துக் கொண்ட புதிய அரசியல் அமைப்புச் சட்டப்படி நடைபெறவிருந்த முதல் பொதுத் தேர்தல் அது. அதிலே சுதந்திரத்தைத் தேடித் தந்த காங்கிரஸ் தமிழ்நாட்டில் தோற்றுப் போவதை நான் விரும்பவில்லை. தேர்தல் களத்திலே காங்கிரசை முறியடிக்க வலுவான எதிர்க்கட்சி எதுவும் அன்றிருக்கவில்லை. கம்யூனிஸ்டுக் கட்சி காங்கிரசுக்கு எதிர்க் கட்சியாக இருந்ததென்றாலும், தேர்தல் களத்திலே காங்கிரசை முறி யடிக்கும் வாய்ப்பும் வசதிகளும் அதற்கில்லை. காங்கிரசின் முதல் நெம்பர் விரோதியாக விளங்கிய திராவிடர் கழகம் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சியாக இயங்கவில்லை.

தோன்றி மூன்றாண்டுகளே ஆகியிருந்த திராவிடர் முன்னேற்றக் கழகம் தேர்தலில் போட்டியிடும் விருப்பமுடையதாக இருந்தது. நாகர்கோயிலில் கூடிய குமரி மாவட்ட திமு.க.

மாநாட்டில் தனது கட்சி 1952 பொதுத் தேர்தலில் போட்டியிடு வது சாத்தியமே என்று அதன் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் அறிவித்தாரெனினும், திராவிட இயக்க எதிர்ப்பு காரணமாக, அவர் தனது மனத்தை மாற்றிக் கொண்டு விட்டார். ஆம்; தேர்தலில் போட்டியிடுவதில்லையென்று கடைசி நேரத் தில் தி.மு.க. பொதுக்குழு முடிவெடுத்தது. ஆனால், காங்கிரசை எதிர்ப்போருக்கு ஆதரவளிக்க முடிவு செய்தது. அதற்கு தி.மு.க. விதித்த ஒரே நிபந்தனை, திராவிடத் தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிப்பதாக எழுத்துமூலம் உறுதி அளிக்க வேண்டும் என்பதாகும். ''உதவி தருவீர்; உதவி பெறுவீர்'' என்று கோஷம் எழுப்பியது தி.மு.க.

காமராசர் விருப்பம்

தேர்தலில் வடசென்னைத் தொகுதியில் நான் நிற்க வேண்டு மென்று திரு. காமராசர் என்னை வற்புறுத்தினார். நான் இணங்க வில்லை. நான் தேர்தலில் நின்றுவிட்டால் நானும் என் கழகத் தைச் சார்ந்த பேச்சாளர்களும் ஒரு தொகுதியிலேயே சிறைப் பட்டுவிட நேரிடும். அதனால் தமிழ்நாடு காங்கிரஸ் தேர்தல் களத்திலே பிரச்சாரகர்கள் இன்றித் தவிக்க நேரிடும். இந்தச் சங்கடத்தைத் தவிர்ப்பதற்காகவும் நான் தேர்தலில் போட்டியிட மறுத்தேன். ஆனால், காமராசர் நானும் என் கழகத்தோழர்களும் தேவைப்படாமலே, காங்கிரசின் பிரச்சார யந்திரம் திறமையாக இயங்குமென்று உறுதியாக நம்பினார். அதனால் வடசென்னை யில் நான் போட்டியிடத்தான் வேண்டுமென்று அவர் பிடிவாத மாக வற்புறுத்தினார். 1946-இல் நடந்த பொதுத் தேர்தலில் அதே வடசென்னைத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளனாகப் போட்டியிட நானே முன்வந்தபோது சதி செய்து என்னை ஒதுக்கினார். 1952 தேர்தலில் போட்டியிட நான் மறுத்தும், அவர் என்னை வற்புறுத்தினார். இது, அவர்மீது நான் அடைந்த தார்மீக வெற்றியாகும்.

வடசென்னைத் தொகுதியில் என்னை நிறுத்தி வைக்கத் திரு. காமராசர் விரும்பியது சட்டமன்றத்திற்கு என்னை அனுப்ப வேண்டும் என்ற ஆர்வத்தாலுந்தான்! அத்துடன், திராவிட எதிர்ப்பு இயக்கம் நடத்தியதால் காங்கிரஸ் வட்டாரத்

தில் எனக்கிருந்த செல்வாக்கு காரணமாகவும் அவர் என்னை நிறுத்தி வைக்க விரும்பினார். இதன்றி, வேறு ஒரு காரணமும் இருந்தது. அந்தத் தேர்தலில் வடசென்னைத் தொகுதியில் திரு. ப.ஜீவானந்தம் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் போட்டி யிட இருந்தார். அதனால், என்னை நிறுத்தி அவரைத் தோற்கடிக் கத் திரு. காமராசர் துடியாய்த் துடித்தார். வேறு யாரையும் நிறுத்தி ஜீவாவைத் தோற்கடிப்பது சாத்தியமில்லை என்ற நிலை யில் அந்நாளில் வடசென்னைத் தொகுதி இருந்தது.

தேர்தல் செலவுக்காகத் தேவைப்படும் பணம் முழுவதை யும் தமிழ்நாடு காங்கிரஸ் தேர்தல் நிதியிலிருந்து வழங்கவும் காமராசர் இசைந்தார். தேர்தல் பிரச்சாரத்திற்காகச் சென்னைக்கு வெளியே என்னை அழைப்பதில்லையென்றும் உறுதி கூறினார்.

சுயாட்சித் தமிழகம் படைப்பதென்ற எனது இலட்சியத்திற் குத் திராவிடத் தனிநாட்டுக் கோரிக்கை எதிரானதென்று நான் உறுதியாக நம்பினேன். அதனால், அந்தப் பிரிவினைக் கோரிக் கையால் தமிழினத்தாருக்கு விளையக்கூடிய கேடுகளை மக்கள் மத்தியில் விளக்குவதற்குத் தேர்தலைப் பயன்படுத்திக் கொள்ள நான் விரும்பினேன். அதன் மூலம் தி.க., தி.மு.க. அமைப்பு களைப் பலவீனப்படுத்தவும், தமிழரசுக் கழகத்தைப் பலப்படுத் தவும் விரும்பினேன். வடசென்னைத் தொகுதியில் நான் போட்டியிடுவதால் இந்தத் திட்டம் நிறைவேறாமற் போகுமல் லவா!

என் வாழ்நாளில் முதன் முதலாக நான் சட்டப்பேரவை செல்வதற்குக் கிடைத்த வாய்ப்பினை இழந்து விடுவதிலே எனக்கு மகிழ்ச்சி இருக்க முடியாது. அதுவும், 1946-இல் நானே எதிர்பார்த்துக் கிடைக்காமற்போன ஒரு பதவி இப்போது எளி தில் என்னைத் தேடிவந்து என் மடியில் விழுகிறதென்றால் அதனை ஏற்க மறுத்துவிடுவது எளிதல்லதானே! ஆயினும், தமிழரசு இயக்கத்தைக் கட்டி வளர்க்க இந்தத் தியாகத்தை நான் செய்ய வேண்டியிருந்தது. நானும் தமிழரசுக் கழகப் பிரச்சாரகர் களும் மாநில முழுவதிலும் சுற்றுலா செய்யவும், பல லட்சக்க ணக்கான மக்களோடு தொடர்பு கொள்ளவும் சிறப்பாக, தமிழர சுக் கொள்கைகளைப் பரப்பவும் இப்போது கிடைத்ததுபோல

அரிய வாய்ப்பு முன் எப்போதும் கிடைத்ததில்லை. கிடைத்தற்க ரிய இந்த வாய்ப்பினை ஒரு எம்.எல்.ஏ. பதவிக்காகத் துறந்து விட என் மனந்துணியவில்லை. அதனாற்றான், தேர்தலில் வேட்பாளனாக நிற்க மறுத்தேன். ஆயினும், தமிழ்நாடு காங்கி ரஸ் வேட்பாளர் பட்டியலை எடுத்துக்கொண்டு டில்லி புறப்பட விருந்த கடைசி நேரத்தில்கூட திரு. காமராசர் என்னைத் தமது இல்லத்திற்கு அழைத்து வற்புறுத்தினார். அப்போதும், உறுதி யாக மறுத்துவிட்டேன்.

பொதுத் தேர்தலில் தமிழரசுக் கழகம் மேற்கொள்ள வேண் டிய நிலை பற்றி ஆலோசித்து முடிவெடுக்க திருச்சி நகரில் தமிழரசுக் கழகப் பொதுக் குழுவைக் கூட்டினேன். அதிலே,

> *''தமிழரசுக் கழகத்தின் மொழி, அரசியல், பொருளா தார, சமூகக் கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியுமென்று கருதுவதால், 1952 பொதுத் தேர்தலில் காங்கிரசின் வெற்றிக்காக உழைப்பதென்று இக்குழு தீர்மா னிக்கிறது''*

என்று முடிவு செய்யப்பட்டது. பிற்காலத்தில் நான் ஆற்றிய அரும்பெருஞ் சாதனைகளுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்தது, 1952-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நான் கடைப்பிடித்த — தீர்க்க தரிசனத்தோடு கூடிய இந்த நடைமுறை யேயாகும்.

கைம்மாறு கருதாது உழைத்தேன்!

தேர்தல் களத்திலே கம்யூனிஸ்டுக் கட்சி, பிரஜா கட்சி, சோசலிஸ்டுக் கட்சி, தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன், உழைப் பாளர் கட்சி, காமன்வீல் கட்சி ஆகிய பார்லிமெண்டரி அரசியல் கட்சிகள் ஐக்கிய முன்னணி அமைத்து காங்கிரசை எதிர்த்தன. திராவிடர் கழகம், திராவிடர் முன்னேற்றக் கழகம் ஆகிய வலிமை மிக்க பிரச்சார அமைப்புகள் வேறு காங்கிரசை எதிர்ப் பவர்களுக்கு கைகொடுத்தன. இந்த அமைப்புகளையெல்லாம் தமிழரசுக் கழகம் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. பெரியார் ஈ.வெ.ரா., அண்ணா, தோழர் ஜீவானந்தம் போன்ற

நாவன்மைமிக்க தலைவர்களைத் தேர்தல் பிரச்சாரக் களத்திலே சந்திக்க வேண்டியவனாக இருந்தேன்.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், எம்.ஆர். இராதா, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி உள்ளிட்ட திரைப்படக் கலைஞர்கள் பலர் காங்கிரஸ் எதிர்ப்பணிக்கு ஆதரவாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்த முன் வந்தனர். அந்தப் பேரணிக்குப் போட்டியாகத் தமிழரசுக் கழகத்திலிருந்து கலைக் கோஷ்டிகள் காங்கிரசுக்கு ஆதரவளிக்க வேண்டியிருந்தது.

தேர்தல் பிரச்சாரப் போர் தொடங்கியதுமே நானும் தமிழரசுக் கழகப் பேச்சாளர்களும் ஊன் — உறக்கமின்றி, மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பட்டி தொட்டி களிலெல்லாம் ஒரு மாத காலம் சுற்றி அலைந்தோம். என்னைப் பின்பற்றி — எனது ஆணையைச் சிரமேற்கொண்டு காங்கிர சுக்கு ஆதரவாகப் பிரச்சார பேரிகை கொட்டிய பேச்சாளர்களில் முன்னணியிலிருந்தவர்களுடைய பெயர்களை மிகுந்த பெருமி தத்தோடு இங்கு நான் குறிப்பிட வேண்டும். அவர்கள், வேலூர் வி.கே. குப்புசாமி, கவி கா.மு.ஷெரிப், சின்ன அண்ணாமலை, ந. சஞ்சீவி, எம்.ஏ., கவிஞர் வானம்பாடி, கோவை ரசிதாசலம் பி.ஏ., கள்ளக்குறிச்சி கி.ஜனார்த்தனம், வவ்வாலடி ஷம்சுத்தீன், சீர்காழி ஜி. சுவாமிநாதன், மாயூரம் இஸ்மாயில் மற்றும் பலரா வர். தேர்தல் களத்திலே பல லட்சக்கணக்கான ரூபாய்களைக் காங்கிரசும் அதன் வேட்பாளர்களும் செலவழித்தனர். ஆனால், நான் ஒரு சிறிய அளவில் கூட காங்கிரசிடமோ, அதன் வேட்பாளரிடமோ பொருளுதவி பெற்றதில்லை. என் கழகத் தைச் சார்ந்த பேச்சாளர்களும் என்னைப் போன்றே ‘அப்பாவி களாக’க் கைம்மாறு கருதாமல் உழைத்தனர். அவர்களில் சிலர் இன்று என்னோடு இல்லையென்றாலும், எனது நெறியிலே நின்று பாடுபட்ட நேர்மைக்காக அவர்கள் என் மனத்தில் மதிப்பிற்குரிய இடத்தைப் பெற்றிருக்கின்றனர் என்று உறுதி யாகக் கூறுவேன்.

பூண்டி வாண்டையார், குன்னியூர் சாம்பசிவ ஐயர் போன்ற நிலப் பிரபுகளும், இராமநாதபுரம் ராஜா போன்ற ஜமீன்தார்

களும், இராமனாத் கோயங்கா போன்ற பாங்கர்களும் காங்கிரஸ் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டனர். சோஷலிசத்தில் உறுதியான நம்பிக்கை கொண்ட நானும் என் தோழர்களும் இந்தப் பணக்காரர்களுக்காகக் கைம்மாறு கருதாமல் உழைப்பதென்பது எங்களுக்கு வேதனை தருவதாகத்தான் இருந்தது. அதற்காக என் தோழர்களில் சிலர் என்னை நொந்து கொண்டதுமுண்டு. அந்தத் தோழர்களில் பலர் என்னைப் போன்று காங்கிரஸ் உறுப்பினர்களல்லர். ஆகவே, என்னைப் போன்று கட்சிக் கட்டுப்பாட்டுக்காக காங்கிரசுக்கு — அது நிறுத்தி வைத்த பணமூட்டைகளுக்கு உழைக்க அவர்கள் கடமைப்பட்டிருக்கவில்லை. ஆயினும், என் தலைமையில் அவர்களுக்கிருந்த நம்பிக்கை காரணமாக உழைத்தனர்.

தேர்தல் பிரச்சாரத்தின் போது பல ஊர்களில் நான் என் உயிருக்கே கேடு விளைவிக்கக் கூடிய அபாயங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. குறிப்பாக, கம்யூனிஸ்டுகளுக்கும் திராவிட கழகத்தினருக்கும் செல்வாக்குள்ள தஞ்சை மாவட்டத்தில்தான் எல்லையற்ற தொல்லைகளை நான் அனுபவிக்க வேண்டியிருந்தது.

அந்தத் தேர்தலில், நான் செல்லாத மாவட்டமே இல்லை எனலாம், இராமநாதபுரம் மாவட்டத்தில் — அங்கும், விருது நகர் நாடாளுமன்றத் தொகுதியில் கூடுதலான நாட்கள் தங்கி, பிரச்சாரப் பணிபுரிந்தேன். காரணம், அந்தத் தொகுதியில்தான் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. காமராசர் அவர்கள் திரு.ஜி.டி. நாயுடுவை எதிர்த்துப் போட்டியிட்டார். அதே தொகுதியில் இராசபாளையம் சட்டமன்றத் தொகுதியில் அப்போது முதலமைச்சராக இருந்த திரு.பி.எஸ். குமாரசாமி ராஜா போட்டியிட்டார். இந்த இரு பெருந்தலைவர்களுக்கு வெற்றி தேட நான் முழுப் பொறுப்பேற்றுப் பாடுபட்டேன்.

இதற்கடுத்தபடியாக, தஞ்சை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்ட திரு. ஆர். வேங்கடராமன் அவர்களுக்காக அதிகக் கூட்டங்களில் பேசினேன். ஒரே நாளில் அந்தத் தொகுதியில் 19 கூட்டங்களில் பேசினேன். மொத்தம் ஆறு மணி நேரப் பேச்சு! அன்றிரவு 1 மணிக்கு குடந்தை நகரில் கடைசிக்

கூட்டத்தில் பேசி முடித்ததும், நான் மயக்கமடைந்து விழுந்து விட்டேன். அப்போது மத்திய ரயில்வே அமைச்சராக இருந்த திரு.கே. சந்தானம் போட்டியிட்ட மாயூரம் நாடாளுமன்றத் தொகுதியிலும், திரு.த. செங்கல்வராயன் போட்டியிட்ட காஞ்சி புரம் நாடாளுமன்றத் தொகுதியிலும் நட்புணர்ச்சியால் மிகுதி யாகக் கவனம் செலுத்தினேன்.

சென்னை நகரில் ஒரு வார காலம் தங்கி, ஒவ்வொரு தொகுதியிலும் வாயே பறையாக, நாவே கோலாகக் கொண்டு பிரச்சார பேரிகை கொட்டினேன் — குறிப்பாக, துறைமுகத் தொகுதியில்தான் நான் அதிக அளவில் கருத்து செலுத்தினேன். அந்தத் தொகுதியில்தான் 'மதராஸ் மனதே' என்ற ஆதிக்க வெறிக் கோஷத்தின் தந்தையான திரு. பிரகாசம், பிரஜா கட்சியின் சார்பில் போட்டியிட்டார். அவரை எதிர்த்து தமிழ் நாடு காங்கிரஸ் சார்பில் டாக்டர் யூ. கிருஷ்ணா ராவ் போட்டி யிட்டார். அந்தத் தொகுதி தமிழரசுக் கழகத்தின் தலைநகர் பாதுகாப்புக் கொள்கைக்கு ஒரு சோதனையாக அமைந்தது.

துறைமுகத் தொகுதி, தமிழரல்லாதார் கணிசமாக வாழும் சௌகார்பேட்டை, மண்ணடி ஆகிய பேட்டைகளைக் கொண்ட தாகையாலும், திரு. பிரகாசம் அகில இந்தியப் புகழ்பெற்ற பெருந்தலைவராதலாலும், அவர் வெற்றி பெற்று விடக்கூடும் என்று பொதுவாக நம்பப்பட்டது. டாக்டர் யூ.கிருஷ்ணா ராவுக் கும் அந்தப் பயம் இருந்தது.

1952-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது பல கட்டங் களில் தேர்தல் நடந்தது. அதனால், ஒரு கட்டத் தேர்தல் முடிந்ததுமே — மறு கட்டத் தேர்தலுக்கு முன்பே — முடிவுகள் அறிவிக்கப்பட்டன. ஒருபுறம் தேர்தல் பிரசாரம் நடந்து கொண்டு இருக்கும். மற்றொருபுறம் தேர்தல் முடிவுகள் வெளி வந்து கொண்டிருக்கும். அந்த நேரத்தில், முதன் மந்திரியும் வேறு பல மந்திரிகளும் தோல்வியுற்ற செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன. அதைப் படித்துவிட்டு, சோர்வுற்ற மனத்துடன் தேர்தல் கூட்டங்களில் நான் பேச வேண்டியிருந்தது. முதல்வர் பி.எஸ்.குமாரசாமி ராஜா தோல்வியுற்ற செய்தி கிடைத்தபோது ''காங்கிரசின் தலையைத் தட்டி விட்டேன்'' என்று கூறி கொக்கரித்தார் ஆந்திர கேசரியார்.

சூளுரைத்தேன்!

காங்கிரஸ் அமைச்சர்களின் தோல்விக்குச் சமாதானம் கூறுவதற்கென்றே 6.1.52-இல் சென்னை திலகர் கட்டடத்தில் சென்னை மாவட்டக் காங்கிரஸ் சார்பில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் நான் கீழ்க்கண்டவாறு பேசினேன்:

''சென்னையை ஆந்திரர் கேட்பது அநீதி; அது தமிழகத்தையே சாரும்'' என்று கூறிய முதலமைச்சர் குமாரசாமி ராசாவைத் தாம் தோற்கடித்துவிட்டதாகப் பெருமை பேசுகிறார் பிரஜா கட்சித் தலைவர் பிரகாசம் பந்துலு. அதற்கு, துறைமுகத் தொகுதியில் (பிரகாசத்தைத் தோற்கடித்து) நான் பதில் கொடுக்கிறேன். ஆந்திரகேசரி காங்கிரசின் அடியைத் தட்டினார். நான் பிரஜா கட்சியின் முடியைத் தட்டிக் காட்டுகிறேன்.

''தமிழ் மக்களே! பிரகாசத்தைத் தோற்கடியுங்கள். சாதாரணமாகத் தோற்கடித்தால் போதாது; அவருடைய ஜாமீன் தொலைந்தால்தான் ''சென்னை தமிழருடையதே'' என்ற கட்சி உறுதிப்படும். ஆம்; ஜாமீன் தொலையும்படி தோற்கடியுங்கள்! ஜாமீன் தொலையும்படி தோற்கடியுங்கள்!! ஜாமீன் தொலையும்படி தோற்கடியுங்கள்!!!''

திரு. பிரகாசம் போட்டியிட்ட துறைமுகத் தொகுதியில் நான் பொதுக் கூட்டங்களில் பேசியதோடு நில்லாமல், தெருத் தெருவாக அலைந்தும், வீடு வீடாக ஏறியும் காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவளிக்குமாறு வாக்காளர்களை நேரில் வேண்டிக் கொண்டேன். தமிழகத்தின் தலைநகரிலே ''மதறாஸ் மனதே'' என்று கோஷிப்பவரை வெற்றிபெற விடுவது தமிழினத்தின் தன்மானத்திற்கு இழுக்கு என்று நான் கருதினேன்.

''சென்னைத் துறைமுகத் தொகுதியில் போட்டியிடும் ஆந்திர கேசரி பிரகாசம் பந்துலுவின் ஜாமீனைத் தொலைத்துக் காட்டுகிறேன்!'' என்று நான் கடற்கரைக் கூட்டத்திலே சூளுரைத்தது செய்தித் தாள்களில் பெரிய தலைப்புகளுடன் பிரசுரமானது.

எனது சபதம் காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் யூ.கிருஷ்ணா ராவுக்கு அச்சத்தைத் தந்தது. அவர் ''நானாவது பெருந்தலைவர் பிரகாசத்தின் ஜாமீனைத் தொலைப்பதாவது?'' என்று நேரில் என்னிடம் அங்கலாய்த்துக் கொண்டார். எனது சபதத்தால் தனக்கு ஆதரவாகவுள்ள ஆந்திரர், கன்னடர், குஜராத்தியர் களிலே பலர், எதிராக மாறிவிடக் கூடுமென்றும் அவர் மிகுந்த அச்சத்துடன் என்னிடம் கூறினார். துறைமுகத் தொகுதி பல மொழியினர் கலந்து வாழும் பகுதியாதலால், டாக்டர் கிருஷ்ணா ராவின் அச்சம் நியாயமானதுதான். ஆயினும், எனது சபதம் அவரது வெற்றிக்குத் துணைபுரியுமென்றே நான் உறுதியாக நம்பினேன்.

பிரகாசம் பந்துலு கொத்தவால்சாவடிப் பகுதியில் பேசுகை யில், எனது அறைகூவலை ஏற்றுக் கொள்வதாகக் கூறினார். தாம் வெற்றியடைவது உறுதியென்றும், அந்த வெற்றி சென்னை நகரின் மீது ஆந்திரருக்கும் உரிமையுண்டென்பதை அறிவிக்கு மென்றும் அவர் கூறினார்.

சென்னையிலிருந்து வெளிவரும் ''ஆந்திர பத்திரிகா'' என்ற தெலுங்கு தினசரியில் எனது சபதத்தைக் கண்டித்துத் துணைத் தலையங்கம் வெளியானது. அதில்,

> *''ஸ்ரீ. கிராமணியார் சென்னை நகரிலுள்ள ஆந்திரருக் கும் தமிழருக்குமிடையே இனப் பகையை வளர்க்கப் பார்க்கிறார். இது, தேர்தல் சட்டத்திற்கு விரோதமான செயலாகும்''*

என்று கூறி, காங்கிரஸ் வேட்பாளரை எச்சரித்தது.

கொலை முயற்சி!

பிரகாசத்தின் ஜாமீனைத் தொலைப்பதாக நான் பேசியது என் உயிருக்கே கேடு விளைவிப்பதாகிவிட்டது. பிரகாசத்தின் ஆதரவாளர்கள் என்னைக் கொன்றுவிட முயன்றனர். அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதனை இன்றளவும் நான் அறியேன்.

ஜனவரி 12-இல் துறைமுகத் தொகுதியைச் சார்ந்த ஏழு கிணறு ஆனைக்காரன் தெருவில் நடந்த தேர்தல் கூட்டத்தில் நான் பேசிக் கொண்டிருந்தபோது என்னைக் குறி பார்த்து திராவக பல்பு ஒன்று வீசப்பட்டது. எனது நல்வினைப் பயனாகக் குறி தவறி எனது அருகிலிருந்த வீட்டுக் கூரைமீது விழுந்து, பயங்கரமான சப்தத்துடன் வெடித்தது. கூட்டத்திலிருந்த மக்கள் நாலா திசையிலும் சிதறியோடினர். என்னுடன் மேடையிலிருந்தவர்களும் விழுந்தடித்துக் கொண்டு ஓடினர். மேடையில் நான் மட்டும் தனித்து நின்றேன் — இல்லை, ஒலிபெருக்கியும் என்னுடன் இருந்தது!

ஜன.15-ஆம் நாள் இரவு அதே தொகுதியில் மண்ணடி அங்கப்ப நாயக்கன் தெருவில் நடந்த தேர்தல் கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கையில், நான் நின்று கொண்டிருந்த மேடைக்கு எதிர் வரிசையிலுள்ள வீடு ஒன்றின் மேல் மாடியிலிருந்து முழு அளவு செங்கல் ஒன்று என் தலையைக் குறி பார்த்து வீசப்பட்டது. நான்கு மாடிகளையுடைய வீட்டின் மேல் மாடியிலிருந்து கீழ்நோக்கி அக் கல் வீசப்பட்டதால், பயங்கரமான வேகத்துடன் வந்தது. ஆனால், குறிதவறி, எனது இடது பக்க மீசையையும் தோளையும் உராய்ந்து செந்நிறமாக்கிவிட்டு', என் அருகிலிருந்த தூணில் மோதி சுக்குநூறாக உடைப்பட்டது. ஒரு வீட்டின் வாயிற்படியில் மேடை போடப்பட்டிருந்தது. மயிரிழையில் தப்பினேன் என்றால், அது மிகமிகப் பொருத்தம். ஏனெனில், என் தலையைக் குறிபார்த்து வீசப்பட்ட செங்கல் எனது மீசையை உராய்ந்து சென்றதல்லவா!

இந்த நிகழ்ச்சியின்போது மேடையில் என் அருகிலிருந்த காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் யூ. கிருஷ்ணாராவ், அவரை ஆதரித்துப் பேசிவிட்டு மேடையில் அமர்ந்திருந்த சென்னை மாநகராட்சி முன்னாள் மேயர் ஜனாப் அப்துல் அமீத்கான் இருவரும் அதிர்ச்சியடைந்தவர்களாகி மேடையை விட்டிறங்கி ஓடினர். மூன்று நாட்களுக்கு முன்னர் ஆனைக்காரன் தெருவில் என்மீது ஆசிட் பல்ப் வீசப்பட்டதால் அங்கப்ப நாயக்கன் தெரு கூட்டத்தில் முன் எச்சரிக்கையாகப் பலத்த போலீஸ் பந்தோ

பஸ்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நகர போலீஸ் துணைக் கமிஷனர் மேடைக்கருகில் இருந்தார். கல் வந்த திசை தெரிந்ததும் சந்தேகப்பட்ட வீட்டிற்குள் புகுந்து சோதனையிட போலீஸ் அதிகாரிகள் தயங்கினர். காரணம், அந்த வீதியில் கோஷா முறையைக் கடைப்பிடிக்கும் முஸ்லிம்கள் வாழ்ந்ததுதான்!

இந்தப் பயங்கர நிகழ்ச்சிக்குப்பின் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டாமென்று போலீஸ் அதிகாரிகள் ஆலோசனை கூறினர். ஆம், தொடர்ந்து கற்கள் எறியப்படலாமென்று அவர்கள் அஞ்சினர். நான் பிடிவாதமாக, மேலும் முக்கால் மணி நேரம் மிகுந்த உணர்ச்சியோடு பேசினேன். அந்தப் பேச்சின் ஒரு பகுதி வருமாறு:

''என் எதிரி சில கஜ தூரத்திலிருந்து என் மண்டையைக் குறிபார்த்து கல்லெறிந்திருக்கிறான். ஆனால், குறி தவறிவிட்டது. என்னைக் கல்லால் அடிப்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அதைக்கூடச் சரியாகக் குறிபார்த்து எறியத் திறமையில்லாத என் எதிரிக்காகவே நான் இரக்கப்படுகிறேன்.

''ஆஸிட் பல்ப்பு எறிவதாலோ, கல்லால் அடிப்பதாலோ, சொல்லால் பழிப்பதாலோ என்னைப் பயமுறுத்திவிட முடியாது என்பதை என் எதிரிகள் உணரட்டும். அதற்கு மாறாக, எனது நெஞ்சுறுதியை அதிகப்படுத்தத்தான் முடியும். இன்று நடந்த கல்லெறியிலிருந்தும், நேற்று முன்தினம் ஒருவன் எறிந்த 'ஆஸிட் பல்ப்'பிலிருந்தும் என்னைக் காப்பாற்றிய இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.''

('செங்கோல்', 20.1.52)

இங்கு வெற்றி; அங்குத் தோல்வி!

இப்படிப்பட்ட இன்னல்களுக்கிடையில் தொடர்ந்து இரண்டு மாத காலம் தமிழ்நாடு முழுவதிலும் சுற்றுலா சென்று தேர்தல் பிரச்சாரம் செய்தேன். 1951 நவம்பர் 23-இல் சென்னை

யில் தொடங்கிய தேர்தல் பிரசாரத்தை 1952 ஜனவரி 23-இல் ஈரோடு நகரில் முடித்தேன். நீலகிரி, நெல்லை மாவட்டங்கள் தவிர இதர எல்லா மாவட்டங்களிலும் சுற்றுலா செய்தேன். நாள்தோறும் காலை தொடங்கி நள்ளிரவுவரை தொடர்ந்து பல கூட்டங்களில் பேச வேண்டியிருந்தது. பல வேளைகளில் எனக்குத் தேவைப்படும் பத்திய உணவு கிடைக்காமல் பட்டினி கிடக்க வேண்டியிருந்தது. வயிற்று வலியுடன் போராடிக் கொண்டுதான் காங்கிரசின் வெற்றிக்காக உழைத்தேன். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பொறுப்பிலிருந்தால் எவ்வளவு உழைக்க வேண்டுமோ, அவ்வளவுக்கு அந்தப் பதவியில் இல்லாமலே நான் உழைத்தேன். தேர்தல் பிரச்சார காலம் முழுவதிலும் பயன்படுத்திக் கொள்ளத்தக்க வகையில் என்னிடம் ஒரு மோட்டாரைக்கூட தமிழ்நாடு காங்கிரஸ் தரவில்லை.

சென்னை மாகாணத்தில் பல கட்டங்களில் நடந்த பொதுத் தேர்தல் ஜனவரி 25-ஆம் தேதியோடு முடிந்தது. தேர்தல் முடிவுகள் காங்கிரசுக்கு எதிராக இருந்தன. முதலமைச்சர் மாண்புமிகு பி.எஸ். குமாரசாமி ராஜா உள்பட அமைச்சரவையே தோற்றுப் போய்விட்டது.

சென்னை மாநிலச் சட்டமன்றத்திற்குரிய மொத்த இடங்கள் 375. அதில் காங்கிரஸ் 152 இடங்களைத்தான் கைப்பற்ற முடிந்தது. கம்யூனிஸ்டுகள் 63 இடங்களைக் கைப்பற்றி காங்கிரஸ் கட்சிக்கு அடுத்த இடத்தைப் பிடித்தனர். ஆனால், சட்டமன்றத்திலே எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. சுதந்திரத்தைத் தேடித் தந்த காங்கிரஸ் கட்சி, சுதந்திர இந்தியாவில் நடந்த முதல் தேர்தலிலே தென்னிந்தியாவில் படுதோல்வியடைந்தது!

மொழிவாரிப் பிரதேசமாகப் பார்த்தால் ஆந்திராவில்தான் காங்கிரசுக்குப் படுதோல்வியும், கம்யூனிஸ்டுக் கட்சிக்கு எதிர்பாராத வெற்றியும் கிடைத்தன. தமிழ்நாட்டின் நிலைமை காங்கிரசுக்குப் பெருமை தரக்கூடியதாக இல்லையென்றாலும், ஆந்திராவுடன் ஒப்பிடும்போது ஆறுதலளிப்பதாகத்தான் இருந்தது. இங்குக் கட்சிகளின் நிலைமை வருமாறு:

கட்சி.	வெற்றி பெற்ற இடங்கள்
காங்கிரஸ்	96
சுயேச்சை	41
சோசலிஸ்டு	3
கம்யூனிஸ்டு	13
பிரஜா கட்சி	7
உழைப்பாளர் கட்சி	19
ஷெட்யூல்டு வகுப்புப் பெடரேஷன்	1
காமன்வீல்	6
பார்வர்டு பிளாக்	3
ஜஸ்டிஸ் கட்சி	1
	190

அப்போதைய சென்னை மாநிலச் சட்டப்பேரவையில் தமிழ்நாட்டுக்குரிய மொத்த இடங்கள் 190. அவற்றில் 185 இடங்களுக்குப் போட்டியிட்டு 96 இடங்களை மட்டுமே தமிழ் நாடு காங்கிரஸ் கைப்பற்றியது. தமிழரசுக் கழகம் முழு மூச்சோடு தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டில்லையானால், நான் தேர்தலில் போட்டியிட்டு எம்.எல்.ஏ.ஆக விரும்பாமல் தேர்தல் பிரச்சார யாத்திரை செய்தில்லையானால், தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியின் தோல்வி அது திரும்பவும் தலையெடுக்க முடியாதபடி இருந்திருக்கும் என்பதனைத் தேர்தல் முடிவைக் கொண்டே யாரும் தெரிந்து கொள்ளலாம்.

காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்காகத் தன்னலங் கருதாது உழைத்த எனக்கும் எனது கழகத் தோழர்களுக்கும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்குத் தேவைப்படும் பெரும்பான்மையை அந்தக் கட்சி அடையாமற் போனது பெருத்த அதிர்ச்சியைத் தந்தது. நாடாளுமன்றத் தொகுதிகளிலே என் அருமை நண்பர் திரு.த. செங்கல்வராயன், மதிப்பிற்குரிய திரு.க. சந்தானம் ஆகியோர் தோற்றுப் போனதற்கு நான் பெரிதும் வருந்தினேன்.

சூளுரை வென்றது!

தேர்தல் முடிவுகளிலே எனக்கு மகிழ்ச்சியைத் தந்தவை விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதியிலே கோவை ஜி.டி. நாயுடுவைத் தோற்கடித்து திரு.கு. காமராசரும், சென்னைத் துறைமுகத் தொகுதியில் திரு.டி. பிரகாசம் பந்துலுவைத் தோற்க டித்து டாக்டர் யூ. கிருஷ்ணாராவும், சேலம் நகரத் தொகுதியிலே திரு. மோகன் குமாரமங்கலத்தைத் தோற்கடித்து எனது முன் னாள் முதலாளி டாக்டர் வரதராசுலுவும் அடைந்த வெற்றிகளா கும். இவற்றில் தனிப்பட்ட முறையில் எனக்குப் பெருமை தந்தது ஆந்திரத் தலைவர் டி. பிரகாசம் ஜாமீன் தொகையை இழந்ததாகும். ஒரு லட்சம் மக்கள் குழுமியிருந்த திருவல்லிக் கேணிக் கடற்கரைக் கூட்டத்தில் நான் செய்த சபதம் நிறைவேறி யதில் எனக்குப் பெருமைதானே!

துறைமுகத் தொகுதி தேர்தல் முடிவு தெரிந்ததுமே வெற்றி பெற்ற டாக்டர் யூ.கிருஷ்ணாராவ், தன் கையில் ஒரு பெரிய மாலையுடன் என் வீட்டிற்கு ஓடோடி வந்து ''கிராமணியார் உங்கள் சபதம் ஜெயித்தது. பிரகாசம்காருவின் டெபாசிட் போயிடுத்து'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறி, எனக்கு மாலை அணிவித்தார். என்னைக் கட்டித் தழுவி, எனக்கு நன்றி தெரி வித்தார். ''இந்த வெற்றி தமிழரசுக் கழகத்திற்குக் கிடைத்த தனி வெற்றி'' என்றும் டாக்டர் ராவ் கூறினார்.

காங்கிரசுக்கு ஏற்பட்ட சரிவுக்கு முக்கிய காரணம் அப் போது மக்களை வாட்டி வந்த உணவுப் பஞ்சம்தான். அடுத்தபடி யான காரணம், காங்கிரசிலிருந்த கோஷ்டிப் பூசலாகும். அத னால், காங்கிரஸ் வேட்பாளர்களைத் தோற்கடிக்க காங்கிரஸ் காரர்களே வெளிப்படையாகவும் அந்தரங்கத்திலும் வேலை செய்தனர். தி.க., திமு.க. அமைப்புகள் பெரும்பாலும் சுயேச்சை வேட்பாளருக்கு ஆதரவாக வேலை செய்தன. அத னாற்றான், அவர்களில் 41 பேர் வெற்றி பெற முடிந்தது.

பொதுத் தேர்தலில் காங்கிரசுக்கு ஆதரவாகத் தமிழரசுக் கழகம் ஆற்றிய பெரும் பணி காங்கிரஸ் வட்டாரத்தில் நன்கு உணரப்பட்டது. வெற்றி பெற்ற காங்கிரஸ் வேட்பாளர்களிலே ஒவ்வொருவரும் ''கழகத்தாரின் உழைப்பால்தான் வெற்றி பெற்றேன்'' என்று வெளிப்படையாகக் கூறினர்.

டி.டி.கே.யின் பாராட்டு

தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டி யிட்டு வெற்றி பெற்ற திரு.டி.டி கிருஷ்ணமாச்சாரியார், தேர்தல் களத்தில் நான் ஆற்றிய பெரும்பணி பற்றிக் கூறியதாவது:

''சென்னையில் சில ஸ்தானங்களில் காங்கிரஸ் வெற் றியடைய முடியவில்லை. காரணம் ம.பொ.சி. அங்கெல் லாம் சரியானபடி பிரச்சாரம் செய்ய வாய்ப்பு இல்லாமல் போனதுதான். வெளியூர்களில் பிரச்சாரம் செய்ய நேர்ந்த தன் காரணமாகச் சென்னையில் அவரது பிரச்சார வேகம் கொஞ்சம் குறைந்திருந்தது. ம.பொ.சி. மட்டும் சென்னை யில் தொடர்ந்து பேசியிருப்பாரானால் சென்னையில் ஒரு இடத்தைக்கூட மற்ற கட்சிகள் பெற்றிருக்க முடியாது என்பது உறுதி.

''இந்தப் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்ச கர்கள் வெற்றி அடைந்ததற்கும் ம.பொ.சி.யின் பிரச்சார பலம் முக்கிய காரணமென்பதை யாரும் மறுக்க முடியாது. 1937-ஆம் ஆண்டில் தேர்தல் நடந்தபோது பிரசார பீரங்கி யாக சத்தியமூர்த்தி இருந்தார். இந்தத் தேர்தலில் அவர் இல்லாத குறையை திருவாளர் கிராமணியார் போக்கி விட்டார்.

''நான், திரு.கே. வெங்கடசாமி நாயுடு போன்றோர் வெற்றியடைந்ததற்கு ம.பொ.சி.யின் திறமை மிக்க பிரச்சாரம்தான் காரணம் என்பதை யாரும் மறுக்க முடி யாது.

''ம.பொ.சி., காந்திஜி — ஜவகர் வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டிய மகான்.''

(29.1.52-இல் சென்னை தேனாம்பேட்டை சர்வோதய சங்கத்தில் ம.பொ.சி.யின் படத்தைத் திறந்து வைத்துப் பேசியது. 'செங்கோல்' 8.2.52 இதழில் வெளியானது)

டாக்டர் யூ. கிருஷ்ணாராவ் கூறியதாவது:

''பொதுத் தேர்தலில் காங்கிரசின் வெற்றிக்காக என் போன்றவர்களை ஆதரித்து கிராமணியார் செய்துள்ள சேவை என்றும் மறக்க முடியாதது. அவருடைய பேச்சுத் திறமைதான் காங்கிரசின் வெற்றிக்குக் காரணம்.

('தமிழகம் தந்த ம.பொ.சி.', பக்.34)

கிருஷ்ணகிரி நாடாளமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற சி.ஆர். நரசிம்மன் (ராஜாஜியின் மகன்) 7.2.52-இல் நன்றி தெரிவித்து எனக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததாவது:

''எனது வெற்றிக்காக நான் அதிகமாகக் கடமைப்பட்டிருப்பது தங்களுக்கும், தமிழரசுக் கழகத்திற்குந்தான்.

''எனது தொகுதியில் எந்த ஊரில் சென்றாலும் அங்கெல்லாம் என்னை முதலில் வரவேற்றவர்கள் தமிழரசுக் கழகத் தோழர்கள்தான். எதிரிகளின் கோட்டை என்று சொல்லப்படும் அந்தத் தொகுதியில் 'தமிழரசுக் கழகம்' நன்கு வேரூன்றியிருக்கிறது. தமிழரசுக் கழகம் தமிழ் மக்களுக்காக அபாரமாக சேவை செய்து வருகிறது. ஆனால், போதிய விளம்பரமில்லை''.

மதுரை மாவட்டத் தேர்தல் கமிட்டித் தலைவர் திரு. டி.ஜி. கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது:

''மதுரை நகரில் தேர்தல் பிரச்சாரம் வெற்றிகரமாக நடந்ததென்றால், அதற்குத் தமிழரசுக் கழக இளைஞர்களின் உற்சாகந்தான் காரணம். இதை நான் எந்த இடத்திலும் கூறத் தயார்.''

பத்திரிகைகள் பாராட்டு

'சுதேசமித்திரன்' வார இதழிலே கழகத்தின் பணிபற்றி எழுதப்பட்ட குறிப்பின் ஒரு பகுதி வருமாறு:

''கடந்த ஐந்தாண்டுகளாக பொது மக்கள் பக்கம் தலைகாட்டத் தவறிவிட்டனர், காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களும்

காங்கிரஸ் அமைச்சர் பெருமான்களும். 'பொதுக்கூட்டம்' என்றால், காங்கிரஸ் எதிரிகள் கூட்டமாகத்தான் இருந்தது. கூட்டம் கூடும் உரிமை, எழுத்துரிமை, பேச்சுரிமை ஆகிய எல்லா உரிமைகளையும் தேடித் தந்தது காங்கிரஸ்தான். ஆனால், தான் தேடிய உரிமையைத் தானே பயன்படுத்திக் கொள்ளாததோடு, தனக்கு விரோதமாகப் பயன்படுத்திக் கொள்ள எதிர்க்கட்சிகளுக்கு ஏராளமான சந்தர்ப்பங் களைத் தந்தது. போதாக் குறைக்கு தமாஷா வரியை ரத்து செய்து நாடகங்கள் மூலம் காங்கிரஸ்காரர்களைத் திட்டுவ தற்கும் எதிரிகளுக்கு வசதி செய்து கொடுத்தார் அமைச்சர் கோபால் ரெட்டியார்.

''மாகாண மந்திரிகள் செல்லுமிடங்களிலெல்லாம் கறுப்புக் கொடி காட்டி அவமானப்படுத்தினார்கள் தி.க.வி னர். தங்கள் மானம் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளு வதற்காகக்கூட கறுப்புக் கொடிக்காரர்களுக்கு மறுப்புக் கூறத் துணியவில்லை காங்கிரஸ் மந்திரிகள்.

''இந்தக் கஷ்டமான சூழ்நிலையில்தான் காங்கிரசுக் காகப் பிரச்சாரம் செய்யும் பொறுப்பை தனது தமிழரசுக் கழகத்தின் சார்பில் மேற்கொண்டார் ஸ்ரீ கிராமணியார்.''

('சுதேசமித்திரன்' (வாரம்), 27.1.52)

தேசபக்தர் திருலோக சீதாராம் அவர்கள் தமது 'சிவாஜி' வார இதழில் எழுதியதாவது:

''தமிழ்நாட்டில் திரு. காமராசரை மூன்று பேர் (சி.பி. சுப்பையா, ஓமந்தூரார், ம.பொ.சி.) எதிர்த்தார்கள். இவர் களில் முதன் முதலாக இப்படி சல்லடம் வரிந்து கட்டியவர் சிவஞான கிராமணியார்.

''கோவை மாநாட்டில் காமராசரை எதிர்த்து வீரம் செறிந்த தோல்வியைப் புன்முறுவலுடன் ஏற்றுக் கொண் டார் ம.பொ.சி. தன்னைவிட ஸ்தாபனம் (காங்கிரஸ்)

பெருமையை அதிகம் மதிக்கும் நல்ல உள்ளமும் நயமும் படைத்த உயர்ந்த மனிதர். இல்லாவிட்டால், தானும் தன் சீடர்களும் தவிர இன்று காங்கிரஸ் பிரச்சாரத்திற்கு ஆள் இல்லை என்ற நிலையிலும் தானே வலிய ஓடி ஓடிச் சென்று காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு உழைத்திருக்க மாட்டார். புதிய முகங்களான அவர்கள் (அபேட்சகர்கள்) கிராமணி யாரை மதித்துப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாமல் நடந்து கொண்ட இடங்களிலும்கூட மனத்தாங்கல் கொள் ளாமல் கடமையைச் செய்து திரும்பினார்.''

('சிவாஜி', 23.3.52)

'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள், கழகத்தின் பணிக்கு வழங்கிய பாராட்டு வருமாறு:

''ஸ்ரீ சிவஞான கிராமணியார் சென்ற ஓராண்டுக் காலமாகத் தமிழரசுக் கழகம், திராவிடக் கழக எதிர்ப்பு முன்னணி என்ற பெயர்களில் தமது சகாக்கள் சிலருடன் திராவிடக் கழகப் பிரச்சாரத்தை எதிர்த்துப் போராடி வந்தார். மற்றபடி காங்கிரஸ் பிரச்சாரம் எதுவும் நடைபெற வில்லை.

''தேர்தல் நெருங்கிய சமயத்தில் திரு. கிராமணியா ருக்கு 'அங்கே ஓடுங்கள்! இங்கே வாருங்கள்!' என்று அழைப்புத் தந்திகள் வந்து குவிந்து கொண்டிருந்தன. என்ன பயன்? ஐந்து வருடங்களில் எதிரிகள் பரப்பிய பொய்ப் பிரச்சாரங்களை ஒரு மாதத்தில் எப்படிச் சமாளிக்க முடியும்? யார்தான் என்ன செய்ய முடியும்?''

('கல்கி', 27.1.52)

சென்னை நகரில் வெற்றி பெற்ற காங்கிரஸ் வேட்பாளர் களுக்கு 27.1.52-இல் திரு.ஜி. உமாபதி தேநீர் விருந்தளித்தார். அந்த விருந்தில் பேசிய 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி, ''ஆந்திரா விலும் ஒரு ம.பொ.சி. இல்லை. அதனாற்றான் அங்கு காங்கிரஸ் தோற்றது'' என்று கூறினார்.

பொதுத் தேர்தல் முடிந்த மூன்றே நாட்களுக்குள் நான் நோய்வாய்ப்பட்டேன். கடுமையான இருமல். இருமினால் இரத்தமும் வந்தது. இரண்டு மாத காலம் தேர்தல் பிரசாரம் செய்ததன் விளைவு இது. ஒருவார காலம் ஓய்வெடுத்தபின் பூரண நலம் பெற்றேன். ''மஞ்சள் பெட்டியில் ஓட்டு நிரம்ப மார்வலி பெற்றவர் சிவஞானம்'' என்று கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு பாடினார். அவர் நினைவிலிருப்பது காங்கிரசின் தேர்தல் சின்னம் மஞ்சள் நிறப் பெட்டியாக இருந்த காலத்தில் — 1936 முதல் 1946 வரை — நான் அக்கட்சியின் வெற்றிக்குப் பிரச்சார பேரிகை கொட்டியதாகும். காங்கிரஸ் சின்னம் காளை மாடாக மாறிய பின்னர்தான் — 1952 பொதுத் தேர்தலில்தான் நான் அதிகமாக உழைத்தேன். அதுதான் காங்கிரசுக்காக நான் உழைத்த கடைசி தேர்தல்!

மேலவையில் இடம் பெற்றேன்

சென்னை மாநிலச் சட்டப் பேரவைக்கான பொதுத் தேர்தல் முடிந்ததும் சட்டமேலவைத் தேர்தல் நடைபெற்றது. இந்தியா விடுதலை பெற்ற பின்னர் நடைமுறைக்கு வந்த அரசமைப்புச் சட்டப்படி முதன் முதலாக நிறுவப்படும் சட்டமேலவையாதலால் அதன் உறுப்பினர் அனைவரும் ஏக காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களாக இருந்தனர். அப்போதைய சட்டமேலவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 72. அவர்களில் சட்டப்பேரவையின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர் 24 பேர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. காமராசர் அவர்கள் ஒருநாள் எனது வீட்டிற்கு வந்து, சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர்களில் ஒருவனாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகக் கூறினார். நான் கேட்டுக் கொள்ளாமலே என்னைச் சட்டமேலவைக்கு அனுப்பத் திரு. காமராசர் தாமாகவே முன் வந்தார் என்பதனை நான் இங்கு நன்றியுணர்வோடு குறிப்பிட்டாக வேண்டும். பொதுத் தேர்தலிலே காங்கிரசின் வெற்றிக்காக நான் உழைத்ததற்குக்

கைம்மாறாக இந்த வாய்ப்பினை எனக்கு அளிக்க அவர் விரும்பியிருக்கலாம். காரணம் எதுவாயினும் சரி; 1946-இல் 'லோயர் ஹவுஸ்' எனப்படும் சட்டப்பேரவைக்கு நான் செல்வதைத் தடுத்த தமிழ்நாடு காங்கிரசே 'அப்பர் ஹவுஸ்' எனப்படும் மேலவைக்கு இப்போது என்னை அனுப்பிவைக்க வலுவில் முன்வந்தது எனது வாழ்க்கைப் போரில் நான் அடைந்த பல வகையான வெற்றிகளில் ஒன்றாகும்.

திரு. காமராசர் விருப்பப்படி நான் மேலவைக்குச் செல்ல வேண்டுமென்று தமிழரசுக் கழகச் செயற்குழுவினரும் விரும்பினர். மேலவையில் இடம் பெறுவதால், தமிழரசுக் கழகக் கொள்கைகளுக்கு — குறிப்பாக, புதிய தமிழகம் படைக்கும் குறிக்கோளுக்குச் சிறந்த வகையில் பணியாற்ற இயலும் என்று நானும் நம்பினேன்.

அசெம்பிளித் தொகுதியில் போட்டியிடுவதற்குப் பொருளும், மிகுதியான உழைப்பும் தேவைப்படவில்லை யாதலால் மேலவைத் தேர்தலில் கலந்து கொள்வதிலே எனக்கு இடையூறு எதுவும் இருக்கவில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் வேட்பாளனாக நியமனப் பத்திரம் தாக்கல் செய்தேன். அசெம்பிளித் தொகுதியிலிருந்து 24 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நானும் திரு. பிரகாசம் அவர்களும் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தோம். அவருக்கும் எனக்கும் சம அளவில் வாக்குகள் கிடைத்தன. சட்டப்பேரவைக்குத் துறைமுகத் தொகுதியில் போட்டியிட்டுத் தோற்ற திரு. பிரகாசம் என்னுடன் சேர்ந்து சட்டமேலவைக்கு வந்ததிலே நான் பெருமகிழ்ச்சியடைந்தேன். அவர் ஆந்திரராயினும், அரசியலிலிருந்து ஒதுக்கிவிட முடியாத பெருந்தலைவரல்லவா!

'ஆந்திரக் கூட்டணி'

சட்டமேலவையை 'முதியோர் அவை' (எல்டர்ஸ் அவுஸ்) என்றும் அழைப்பது உண்டு. அதற்கேற்ப புதிதாக உருவாக்கப்பட்ட மேலவையில் சரித்திர நாயகர்களான முதியோர் பலர் இடம் பெற்றனர். அவர்களில் முக்கியமானவர்கள் வருமாறு:

ராஜாஜி, ஆந்திர கேசரி டி.பிரகாசம், சர். முகம்மது உஸ்மான், டாக்டர் ஆர்.கே. சண்முகம், டாக்டர் ஏ.லட்சுமண சாமி முதலியார், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, திவான் பகதூர் வி.பாஷ்யம் அய்யங்கார், டாக்டர் பி.வி. செரியன், ஓ.பி.ராம சாமி ரெட்டியார், கே. பாலசுப்பிரமணிய ஐயர், வி. சக்கரை செட்டியார், டி.எம். நாராயணசாமிப் பிள்ளை.

இந்த முதியோர் மத்தியிலே கலந்திருந்த விரல்விட்டு எண்ணிவிடத்தக்க இளைஞர்களிலே நானும் ஒருவனாக இருக்க நேர்ந்ததை இன்று நினைத்தாலும் என் மனம் பூரிப்படைகிறது. அரசமைப்புச் சட்டப்படி முதன் முதலாக அமைந்த சட்ட மன்றத்திலே சான்றோர்களுடன் சேர்ந்திருப்பது என்பது எளிதில் கிடைத்துவிடக் கூடிய வாய்ப்பு இல்லை அல்லவா!

சட்டப்பேரவைத் தொகுதியிலே சட்டமேலவைக்குப் போட்டியிட நான் முனைந்தது தெரிந்ததுமே பெரியார் ஈ.வெ.ரா.வின் 'விடுதலை' பத்திரிகைகூட நான் வெற்றிபெற வேண்டுமென்று விரும்பியது. காங்கிரசில் இருந்த கோஷ்டிப் பூசல் காரணமாக ஒருகால் நான் தோற்கடிக்கப்பட்டு விடுவேனோ என்ற அச்சத்தையும் 'விடுதலை' வெளியிட்டது. ஆனால், எனக்கு எதிராக சதி எதுவும் அப்போது நடக்கவில்லை. சட்ட மேலவைக்கு முதன் முதலாக நான் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த நேரத்திலே சென்னை மாநகராட்சியில் ஆல்டர்மேனாகவும் இருந்தேன் என்பதனை இங்கு நினைவூட்ட வேண்டும். நான் ஏற்றுக் கொண்ட இந்த இரண்டு பதவிகளாலும் எனக்கு மட்டுமேயன்றி, தமிழரசுக் கழகத்திற்கும் வலிவும் பொலிவும் ஏற்பட்டன. மாநிலச் சுயாட்சி கோரிக் கிளர்ச்சி நடத்திவரும் தமிழரசுக் கழகத்தின் தலைவனாக இருந்து கொண்டுதான் காங்கிரஸ் கட்சியின் சார்பில் இந்தப் பதவிகளை நான் பெற்றேன். அப்போது மாநிலங்களுக்குச் சுயாட்சி கோருவது காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளுக்கு விரோதமானதென்றோ, கட்சிக் கட்டுப்பாட்டுக்கு எதிரானதென்றோ தமிழ்நாடு காங்கிரஸ் வட்டாரத்திலே யாரும் கருதவில்லை.

பொதுத் தேர்தலிலே சென்னை மாநிலச் சட்டப்பேரவையில் காங்கிரஸ் கட்சிக்கு நிகரப் பெரும்பான்மை கிடைக்காத

தால் காங்கிரஸ் அமைச்சரவை ஏற்படுவது எளிதான காரியமாக இருக்கவில்லை. பேரவையில் இடம்பெற்ற கட்சிகளிலே காங்கிரஸ் கட்சிதான் அதிகப்படியான இடங்களைப் பெற்றிருந்தது. ஆனால், அந்தப் பலத்தை மட்டுமே பெரிதாகக் கருதி காங்கிரஸ் அமைச்சரவை ஏற்பட ஆளுநர் இசைவு தரக்கூடாதென்று எதிர்க்கட்சிக்காரர்கள் வாதாடினர்.

கம்யூனிஸ்டு கட்சியும் வேறு சில உதிரிக் கட்சிகளும் ஒருங்கிணைந்து காங்கிரசுக்கு எதிராக ஐக்கிய முன்னணி அமைத்தன. அதன் தலைவராக திரு.டி. பிரகாசம் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இந்த முன்னணியில் கம்யூனிஸ்டுக் கட்சியினர் தான் செல்வாக்குப் பெற்றிருந்தனர். முன்னணி உறுப்பினர்களில் கிட்டடத்தட்ட சரிபாதிப் பேர் கம்யூனிஸ்டுகளாக இருந்தனர்.

ஐக்கிய முன்னணி வலுவான ஒரு கட்சி அல்லவென்றாலும் செல்வாக்குமிக்க பெருந்தலைவரான திரு.டி. பிரகாசத்தின் தலைமை அதற்குக் கிடைத்துவிட்டது. அன்றைய நிலையில் சட்டப்பேரவையின் ஆந்திர உறுப்பினர்களில் மிகப் பெரும்பாலோர் ஐக்கிய முன்னணியில்தான் இருந்தனர். அதனால், ஆந்திர மக்களின் உள்ளங்கவர்ந்த பெருந்தலைவரான திரு.டி. பிரகாசம் ஐக்கிய முன்னணியின் தலைவராகிவிட்டது கண்டு காங்கிரஸ் கட்சி பயந்தது.

சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியில் திரு.டி. பிரகாசத்திற்கு ஈடான ஒரு தலைவர் இல்லை. திரு. காமராசர், சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியிலே இல்லை. அவர் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அன்றைய நிலையில் திரு. காமராசர் மாநில முதல்வர் பதவிக்குத் தகுதியானவர் என்று யாரும் கருதவில்லை. அவரும் அதற்காக முயற்சிக்கவுமில்லை. முயன்றாலும் வெற்றி கிடைத்திருக்காது. தமிழ்நாட்டில் காங்கிரஸ் பெருமளவில் வெற்றி பெறாததற்கு திரு. காமராசரின் திறமையற்ற தலைமையே காரணமென்று காங்கிரஸ் வட்டாரத்திலேயே பெரும்பாலோர் கருதினர். இந்த நிலையில் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் தலைவரை அக்கட்சிக்கு வெளியே இருந்து தான் கொண்டு வர வேண்டியிருந்தது.

அப்போது, ராஜாஜி அவர்கள் ஒரு பதவியிலுமில்லாமல் பஸ்லுல்லா ரோடிலுள்ள தமது வீட்டில் ஓய்வு பெற்று வந்தார். பொதுத் தேர்தலுக்கு ஒன்றிரு மாதங்களுக்கு முன்பு மத்திய அரசில் தாம் வகித்த அமைச்சர் பதவியை ராஜினாமா செய்து விட்டு தமது வீட்டில் இருந்து கொண்டு சென்னை மாகாணத்தின் அரசியல் நிலையை மிகுந்த அக்கறையுடன் கண்காணித்து வந்தார். அவர் அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினராக இருந்தார் என்றாலும், தேர்தலிலே காங்கிரசின் வெற்றிக்காக அவர் உழைக்கவில்லை. காங்கிரஸ் வெற்றி பெறா தென்றும் அவர் கருதினார். தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட் டிருந்த நிலையில் அவரை நான் ஒருமுறை சந்தித்தேன். அப்போது காங்கிரசின் வெற்றிக்காக நான் விழுந்தடித்துக் கொண்டு வேலை செய்வதற்காக என்னைக் கேலி செய்தார். அவருடைய மனப்போக்கு கண்டு நான் வியப்படைந்தேன்.

தேர்தல் பிரசாரத்திற்காக நான் உடுமலைப்பேட்டை சென்றி ருந்தபோது தற்செயலாகத் தேர்தல் கூட்ட மேடையில் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களைச் சந்தித்தேன். பெரும்பா லான தொகுதிகளின் தேர்தல் முடிவு வெளியாகியிருந்த நேரம் அது. காங்கிரசுக்குப் பெரும்பான்மை கிடைக்காதென்பது தெளி வாகியிருந்தது. தேர்தல் கூட்ட மேடையில் என்னிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார் திரு. சி.சுப்பிரமணியம். அப் போது, ராஜாஜி அவர்களைச் சென்னை மாநிலத்தின் முதலமைச் சராகக் கொண்டுவர நான் அவருடன் ஒத்துழைக்க வேண்டு மென்று அவர் என்னைக் கேட்டுக் கொண்டார். நான் அறிந்த வரை ராஜாஜி அவர்களை முதலமைச்சராகக் கொண்டுவர முதன் முதலில் முயற்சி எடுத்தவர் திரு.சி.சு. அவர்கள்தான்.

தேர்தல் முடிவுகள் அனைத்தும் தெரிந்த பிறகு திரு.சி.சு. அவர்கள் என் வீட்டிற்கு வந்து ராஜாஜி அவர்களை முதல்வரா கக் கொண்டு வருவது பற்றி என்னுடன் ஆலோசித்தார். தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சியின் கட்டுக்கோப்பு கலகலத்துப் போயிருந்ததாலும், ராஜாஜி முதல்வராவதை திரு. காமராசர் மனமுவந்து ஏற்கமாட்டார் என்பது எனக்குத் தெரிந்திருந்ததால் திரு.சி.சுவின் முயற்சிக்கு உற்சாகத்துடன் உதவி புரிய என்னால்

இயலவில்லை. ஆனால், ஐக்கிய முன்னணியினர் அதிகாரத்திற்கு வருவதை நான் விரும்பவில்லை. பிரகாசத்தின் தலைமையில் ஐக்கிய முன்னணி ஆட்சி அமையுமானால், அது ஆந்திர இனத்தவரின் ஆதிக்கமாகவே இருக்கக் கூடுமென்று நான் அஞ்சினேன். சட்டப்பேரவை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களிலே மூன்றில் இரண்டு பங்கினர் தமிழ்நாட்டினரேயாதலால், எப்படியேனும் காங்கிரஸ் கட்சி அதிகாரத்திற்கு வந்தால்தான் ஆந்திரரின் ஆதிக்கத்தைத் தவிர்க்க முடியுமென்று நான் கருதினேன்.

கம்யூனிஸ்டுக் கட்சியினர் 1952 பொதுத் தேர்தலுக்கு முன்பு தெலிங்கானா புரட்சியில் ஈடுபட்டிருந்தனர். முதன் முதலாக அந்தக் கட்சியினரின் நாசகார வேலைத் திட்டத்தை அந்தப் புரட்சியின் போதுதான் நான் புரிந்து கொள்ள முடிந்தது. அதனால், காந்தியத்தில் அழுத்தமான பற்றுடைய நான் பயங்கரவாதிகள் என்று என்னால் கருதப்பட்ட கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கிலுள்ள ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வருவதை எப்படியும் தடுத்துவிட வேண்டுமென்று துடியாய்த் துடித்தேன். அதனால் அதற்காகக் கூட ராஜாஜியை கட்சி அரசியலுக்கு இழுப்பதனை நான் விரும்பவில்லை.

ராஜாஜிதான் சென்னை மாநிலத்தின் முதல்வராக வர வேண்டுமென்று 1945-இல் நான் அரும்பாடுபட்டவன். அதற்காக, ராஜாஜி கோஷ்டியில் சேர்ந்தும் அயராது உழைத்தவன். ராஜாஜியிடம் அப்போது எனக்கிருந்த பக்தி இப்போது குறைந்துவிடவில்லை என்றாலும், அவரது தலைமையை முணுமுணுப்பின்றி ஏற்கத்தக்க நிலையில் தமிழ்நாடு காங்கிரஸ் 1952-இலும் இருக்கவில்லை என்று நான் உறுதியாகக் கருதினேன். ராஜாஜி முதல்வரானால் தமிழ்நாடு காங்கிரஸ் வகுப்புவாதத்திற்கு எளிதில் இரையாகிவிடக் கூடுமென்ற ஐயமும் எனக்கேற்பட்டது. இவ்வளவிருப்பினும், திரு.சி.சு.வின் விருப்பம் நிறைவேறுவதற்கு அரைமனதுடன் ஒத்துழைத்தேன். மேலவை உறுப்பினன் என்ற வகையில் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியில் நான் அங்கம் பெற்றிருந்ததால் முதல்வரைத் தேர்ந்தெடுக்கும் பணியில் செல்வாக்கு பெற என்னால் முடிந்தது.

சி.சு.வுக்கு ஆந்திர மாகாண காங்கிரஸ் தலைவர் திரு. நீலம் சஞ்சீவி ரெட்டியார் துணை சேர்ந்தார். அப்போதும் அவர் திரு. காமராசரின் சீடர்தான் என்றாலும், திரு. பிரகாசத் திற்கும் அவருக்குமிருந்த உட்பூசல் காரணமாக, திரு. பிரகாசம் முதல்வராக வருவதை எப்படியும் தடுத்துவிட வேண்டுமென்று அவர் துடித்தார். ஆம்; அது பங்காளிக் காய்ச்சல்! அத்துட னன்றி, ஆந்திர நாட்டில் கம்யூனிஸ்டுக் கட்சி திரு. ரெட்டியார் அஞ்சத்தக்க வகையில் செல்வாக்குப் பெற்றுவிட்டது! அதன் வளர்ச்சியைக் கெடுத்தொழித்தாலொழிய தனக்கு எதிர்கால மில்லை என்று கருதினார். ஆகவே, திரு. காமராசரிடமிருந்த குரு பக்தியையும் ஒதுக்கி வைத்துவிட்டு ராஜாஜியை முதல்வ ராக்குவதிலே திரு.சி.சு.வுடன் தோளோடு தோள் சேர்த்துப் பாடுபட்டார்.

இவர்களிருவரும் சேர்ந்து பலமுறை ராஜாஜியைச் சந்தித் தனர். முதல்வர் பொறுப்பை ஏற்க அவர் முன்வர வேண்டு மென்று பணிவன்புடன் வேண்டிக் கொண்டனர். இவர்கள் சந்திப்பிலே ஒரே ஒருமுறை மட்டும் நானும் கலந்து கொண்டது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

தேர்தலில் தோற்றுவிட்டு இடைக்கால ஆட்சியின் முதல்வ ராக இருந்த திரு.பி.எஸ். குமாரசாமி ராசாவும், திரு.சி. சுப்பிர மணியம் குழுவினருடன் சேர்ந்து கொண்டு விட்டார். ராஜாஜி சென்னை மாநிலத்தின் முதல்வராக வருவது திரு. காமராசருக் குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் இருவரும் நாள்தோறும் சந்தித்துப் பேசி வந்தோம். ஆதலால், அவரது மனப்போக்கை நான் சரியாக மதிப்பிட முடிந்தது. அந்த மதிப்பீட்டுப்படி ராஜாஜியை முதல்வராக்க முயற்சி எடுத்துக்கொண்ட திரு.சி.சு., சஞ்சீவி ரெட்டி ஆகி யோர் மீது காமராசர் கடுங்கோபங் கொண்டிருந்தார் என்றுதான் கூறவேண்டும். ஆயினும், ராசதந்திர சாகசத்தில் வல்லவராத லால், தமது கோபத்தை அவர் வெளிக்காட்டிக் கொள்ள வில்லை. தனிப்பட என்னைச் சந்திக்கும்போது என்னிடம் கூறிக் குமுறுவார். ஒரு கட்டத்தில் திரு.என். சஞ்சீவி ரெட்டியுடன் சேர்ந்து கொண்டு திரு. காமராசரும் ராஜாஜியின் இல்லத்திற்குச் சென்று அவருக்கு அழைப்பு விடுத்தார்.

மாநில முதல்வர் பொறுப்பை ஏற்க ராஜாஜி இசையமாட்டார் என்றுதான் அவருக்கு அழைப்பு விடுத்த காமராசர் கருதினார். ராஜாஜியுடன் உறுதியாக மறுப்பு தெரிவித்து வந்தார். இந்த நிலையிலே புதிய சக்தி ஒன்று திரு.சி.சு.வுக்கு ஆதரவளிக்க முன்வந்தது. அந்தச் சக்திதான் 'தினமணி' — 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' வட்டாரம். திரு. ராம்நாத் கோயங்காவின் மூலதனமும் மூளையும் பத்திரிகைகளும் ராஜாஜியை முதல்வராக்க முயல்வோருக்கு ஆதரவளித்தன.

1950-இல் கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி ஜனாதிபதியாக வருவதற்கு பிரதமர் நேரு பெருமுயற்சி எடுத்தபோது அதனை முறியடித்த 'பெருமை'யிலே திரு. கோயங்காவுக்குப் பெரும் பங்கு உண்டு. அதற்கு முன்னர் 1945 - 46-இலும் ராஜாஜியின் தலைமையை விரும்பாத காமராசர் கோஷ்டியில் தான் திரு. கோயங்கா இருந்தார். திரு.பிரகாசம், தான் ஐக்கிய முன்னணியின் தலைவரானதுமே ஒரு அறிக்கை விடுத்தார். அதில், தமது முன்னணி அதிகாரத்திற்கு வந்ததும், காங்கிரஸ் ஆட்சியில் நடந்த ஊழல்களை — குறிப்பாக, திரு. கோயங்கா சம்பந்தப்பட்ட ஊழல்களை விசாரிக்க ஒரு கமிஷன் நியமிக்கப் போவதாகக் கூறியிருந்தார். அதனால், ஐ.முன்னணி ஆட்சி வராமல் தடுப்பதிலே கோயங்கா அதிக அக்கறை காட்டினார்.

ராஜாஜி இசைவு தெரிவிக்காத நிலையிலேயே சட்டமன்றக் காங்கிரஸ் கட்சி 27.3.52-இல் கூடி, தனது தலைவராக அவரை ஒருமனதுடன் தேர்ந்தெடுத்தது. இந்த முடிவு உடனடியாக ராஜாஜிக்கு அறிவிக்கப்பட்டது. அவர், அதனை ஏற்கவுமில்லை; மறுக்கவும் இல்லை. சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் முடிவுக்கு அப்போதைய காங்கிரஸ் தலைவர் பிரதமர் நேருவின் இசைவைப் பெற்றபின் தம்மிடம் வருமாறு கூறி விட்டார். ஆம்; மிகுந்த பிகுவு காட்டினார் ராஜாஜி. 1946-இல் தாம் பெற்ற அனுபவத்தை அவர் மறந்துவிடவில்லை! ஆனால், முதல்வர் பொறுப்பை ஏற்பதென்ற முடிவு அவரது மனத்தில் ஏற்பட்டிருந்தது. நெருங்கிப் பழகியவர்கள்கூட இதனை அறிந்திருக்கவில்லை. 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி, ''அகில இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி ஒரு மாநிலத்தின்

முதல்வராக வர விரும்புவாரா?'' என்று தமது ''கல்கி'' பத்திரிகையில் எழுதி யிருந்தார். முதல்வர் பதவிக்கு அவரை அழைப்பது முனிசிபல் கமிஷனர் வேலைக்கு மகான் ரமண ரிஷியை அழைப்பது போலத்தான் என்றும் உவமை காட்டினார்.

சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் தீர்மானத்திற்குப் பிரதமர் நேருவின் இசைவைப் பெற திரு.சி. சுப்பிரமணியம், திருமதி சௌந்தரா ராமச்சந்திரன் ஆகிய இருவரும் கல்கத்தா சென்றனர். அப்போது நேரு கல்கத்தாவிலிருந்தார். சென்னையிலிருந்து புறப்பட்ட 24 மணி நேரத்திற்குள் அவர்கள் திரும்பவும் சென்னை வந்து சேர்ந்தனர். இவ்விருவரும் நேருவிடம் தூது போவது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்த திரு. காமராசருக்குக்கூடத் தெரியாது. அவரும் எல்லோரையும் போல் அவர்கள் சென்றபின் பத்திரிகையில் பார்த்துத்தான் தெரிந்து கொண்டார். அப்போது அவர் அடைந்த கோபம் எழுத்தால் வருணித்துக் காட்ட இயலாதது.

காமராசரின் தந்திரம்

தூது சென்றவர்களை எதிர்பார்த்துக் காங்கிரஸ் கட்சி காத்துக் கொண்டிருந்தது. 28.5.52 இரவு 7 மணிக்குச் சென்னை திரும்பிய தூதுவர்கள் விமான நிலையத்திலிருந்து நேராக சட்டமன்றக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்துக்கு வந்தனர். முதலில் இடைக்கால முதல்வர் திரு. குமாரசாமி ராஜாவிடம் ராஜாஜி முதல்வராவதற்கு நேரு இசைவு தெரிவித்து விட்டதாகக் காதோடு காது வைத்துத் தூதுவர்கள் கூறினர். நேருவின் கடிதமொன்றையும் அவரிடம் கொடுத்தனர். திரு. ராஜா, கட்சிக் கூட்டத்திற்குச் சற்றுத் தொலைவில் ஊடல் கோலத்துடன் ஒதுங்கி அமர்ந்திருந்த திரு.காமராசரை அணுகி நேருவின் இசைவைத் தெரிவித்தார். அப்போது நான் காமராசர் அருகில் அமர்ந்திருந்தேன். ராஜாஜி முதல்வராவதற்கு நேரு இசைவு தெரிவிக்க மாட்டார் என்று திரு. காமராசர் உறுதியாக நம்பினார். அதை அவர் என்னிடமும் கூறினார். ஆகவே, நேருவின் இசைவுக் கடிதம் அவருக்கு அதிர்ச்சியைத் தந்தது. ஆயினும் சமாளித்துக் கொண்டார். நேருவின் இசைவுச் செய்தியைக்

கட்சிக் கூட்டத்தில் தாமே தெரிவிப்பதாக திரு. குமாரசாமி ராசாவிடம் காமராசர் கூறினார். அவரும் அதற்கு இசைந்தார். திரு.காமராசர், தம் அகத்தில் உள்ளதை முகத்தில் காட்டாமல் நேருவின் இசைவுச் செய்தியைக் கூட்டத்தினருக்குக் கூறி, ''சோதனைமிக்க இந்த நேரத்தில் தலைவர் ராஜாஜி முதல்வராக வருவதை நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்'' என்று கூறினார்.

கூட்டத்திலிருந்த எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து நேருவின் இசைவுச் செய்தியையும், திரு. காமராசரின் ஆதர வான பேச்சையும் வரவேற்றனர். எனக்கென்னவோ, பின்னால் விளையவிருக்கும் பெரிய கோஷ்டிப் பூசலுக்கு அந்த நிகழ்ச்சி ஒரு ஆரம்பக் காட்சியாகவே பட்டது.

ஓய்விலுள்ள ராஜாஜி மீது முதல்வர் பொறுப்பைச் சுமத்துவ தற்கு இசைவு தெரிவிக்க முதலில் நேருஜி மறுத்துவிட்டாராம். மாநில மக்களிடம் கெட்ட பேரெடுக்காத ஒரு இளைஞரைத் தேடிப் பிடித்து முதல்வராக்குவதையே தாம் விரும்புவதாகவும் அவர் கூறினாராம். பின்னர், தூதுவர்கள் இருவரும் அவரு டைய மனதை மாற்ற முயன்று அதிலே வெற்றி பெற்றதாகவும் திரு. குமாரசாமி ராஜாவிடமிருந்து நான் அறிந்து கொண்டேன்.

அதிர்ச்சி அடைந்தேன்

''ராஜாஜி சென்னை மாநில முதல்வராவதற்கு நேருஜி இசைந்துவிட்டார். ராஜாஜியும் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சி யின் அழைப்பை ஏற்றுக் கொண்டுவிட்டார்'' என்ற தகவலைச் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் அறிவித்த பின்னர், மற்றொரு செய்தியையும் திரு.பி.எஸ். குமாரசாமி ராஜா அவர் கள் கூறினார். அந்தச் செய்தி ''ராஜாஜி சட்டமன்ற மேலவை உறுப்பினராக ஆளுநர் ஸ்ரீபிரகாசாவால் நியமிக்கப்பட்டிருக் கிறார்'' என்பதாகும்.

இந்த அறிவிப்போடு சட்டமன்றக் காங்கிரஸ் கட்சிக் கூட் டத்தை முடித்துவிட்டு, ராஜாஜி மண்டபத்திலிருந்து வெளியேறி னார் ராஜா.

மேலவைக்கு ராஜாஜி ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ள செய்தி எனக்கே அதிர்ச்சியைத் தந்ததென்றால், திரு.காமராசர் நிலையைக் கூற வேண்டுமா? அவர் தூருவாச முனிவராக மாறிவிட்டார். ''சட்டமன்றத்தில் காங்கிரஸ் கட்சிக்குப் பெரும்பான்மையில்லாத நிலையில் நியமன உறுப்பினரை மாநிலத்தின் முதல்வராக்குவதா? அதையும் த.நா.கா.க. தலைமைப் பொறுப்பிலுள்ள என் அனுமதியைப் பெறாமலே செய்வதா?'' என்றெல்லாம் காமராசர் என்னிடம் அங்கலாய்த்துக் கொண்டார். இதனை, அரசியல் வாழ்வில் தனக்கு ஏற்பட்ட ஒரு பயங்கர விபத்தாகவும் அவர் கருதியிருக்க வேண்டும்.

ஜனநாயக அரசியலில் மிகவும் மோசமான ஒரு முன்மாதிரி ஏற்படுவதற்கு ராஜாஜி காரணமாகிவிட்டது எனக்கும் மிகுந்த வேதனையைத் தந்தது என்றாலும், அதனைச் சகித்துக் கொள்ளத் தயாராகிவிட்டேன்.

ஆறு மாத காலம் சட்டப்பேரவையிலோ, மேலவையிலோ அங்கம் வகிக்காமலே முதல்வர் பொறுப்பில் நீடித்திருக்க அரசமைப்புச் சட்டம் அவருக்கு வாய்ப்பளிக்கிறது. அதன் பின்னரும் அவர் விரும்பினால் வேறு வகையில் — ஆளுநரால் நியமிக்கப் பெறாமலே — மேலவையில் அங்கம் பெற்றுவிட முடியும். இந்த நேர்வழிகளிருந்தும் குறுக்கு வழியில் மேலவையில் நியமன உறுப்பினர் பதவி பெற இராஜாஜி இசைந்தது, அவரது பெருமைக்குக் களங்கம் ஏற்படுத்துவதாக இருந்தது. இந்த 'விபத்து'க்குப் பின்னரும் சகிப்புத் தன்மையுடன் ராஜாஜி அமைச்சரவை தோன்றுவதற்கு ஆதரவளித்தார் காமராசர்.

சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அன்றையக் கூட்டம் முடிந்ததும், திருவல்லிக்கேணி கங்கை கொண்டான் மண்டபத்தில் நடந்த தமிழரசுக் கழகப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினேன். ராஜாஜி சென்னை மாநிலத்தின் முதல்வர் பொறுப்பை ஏற்க நேருஜியின் ஆதரவோடு இசைந்துவிட்டார் என்ற செய்தியைப் பொதுக் கூட்டத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நான் அறிவித்தபோது, ''ராஜாஜி வாழ்க'' என்ற வாழ்த்தொலி எழுந்

தது. திருவல்லிக்கேணி மக்கள் மகிழ்ச்சி வெறி பிடித்தவர்களா யினர். இந்த அறிவிப்புக்குப் பின்னர் நான் பேசியபோது,

''இராஜாஜி சென்னை மாநிலத்தின் முதல்வராக வேண்டுமென்று 1946-இல் நான் விரும்பினேன். அதற் காக கோஷ்டி சேர்ந்து பாடுபட்டேன். சகோதர காங்கிரஸ் காரர்களிடம் கல்லடியும் சொல்லடியும் பட்டேன். அன்று ராஜாஜியிடம் எனக்கிருந்த பக்தி இன்றும் உண்டு. ஆயி னும், அவர் முதல்வர் பதவியை ஏற்பதற்காக உங்களைப் போன்று நான் மகிழ்ச்சியடையவில்லை. அவர் அமைதி யாக ஆட்சி நடத்தக் கூடிய சூழ்நிலை தமிழ்நாட்டிலிருப்ப தாக நான் நினைக்கவில்லை''

என்று கூறினேன். எனது பேச்சு கூட்டத்திலிருந்த ராஜாஜி பக்தர்களுக்கு வியப்பைத் தந்தது, ஆயினும், ராஜாஜியிடம் எனக்குள்ள பக்தியை அவர்கள் சந்தேகிக்கவில்லையாதலால் எனது பேச்சை அமைதியுடன் கேட்டனர்.

இந்தப் பேச்சு, மறுநாள் காலை 'தினமணி', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடுகளில் கட்டங்கட்டிப் பிரசுரிக்கப்பட்டது. அதைப் படித்த ராஜாஜி வியப்படைந்தவராகி என்னைத் தமது இல்லத்திற்கு அழைத்து என் மனதிலுள்ளதை அறிந்து கொள்ள முயன்றார்.

ராஜாஜியை எச்சரித்தேன்!

சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவியை ராஜாஜி ஏற்பதற்கு முன்னர் — அவரது அழைப்பிற்கிணங்கி — நான் அவரைச் சந்தித்துப் பேசினேன். அப்போது, ராஜாஜி, முதல்வ ராவதால் ஏற்படக்கூடிய பின் விளைவுகளை ஒளிவு மறைவின்றி நான் அவரிடம் எடுத்துக் கூறினேன்.

ராஜாஜி சென்னை மாநில முதல்வராவதை திரு. காமராசர் வெளிப்படையாக வரவேற்றிருப்பது சந்தர்ப்ப நிர்ப்பந்தம் கார ணமாகத்தான் என்றும், எந்த நேரத்திலும் அவர் ராஜாஜி அமைச்சரவைக்கு எதிராகப் போர்க்கோலம் கொள்ளக்

கூடுமென்றும் ராஜாஜியிடம் கூறினேன். மீண்டும் ராஜாஜியின் தலைமைக்கு காங்கிரஸ் வட்டாரத்திலே எதிர்ப்பு ஏற்படக் கூடுமானால், அது தமிழ்நாடு காங்கிரசைத் திராவிடர் கழகமாக மாற்றிவிடக் கூடுமென்றும் அவரிடம் கூறினேன். த.நா. காங்கிர சின் நிலைமையை ராஜாஜிக்கு உணர்த்த வேண்டுமென்பதற்காக வன்றி, முதல்வர் பதவியை ஏற்பதென்ற அவரது முடிவை மாற்ற வேண்டுமென்பதற்காக நான் இப்படிக் கூறவில்லை.

ராஜாஜி எனது கருத்தை ஏற்கவில்லை. திரு. காமராசரின் மீது எனக்குள்ள பகைமையால் நான் அவரைப் பற்றித் தவறான முடிவுக்கு வந்துவிட்டதாகவும், அவர் தனது ஆட்சிக்கு எதிரி யாக மாறச் சந்தர்ப்பமே இல்லையென்றும், மாறினாலும் தனது அமைச்சரவையைக் கவிழ்த்துவிட அவரால் இயலாதென்றும் உறுதி தோய்ந்த குரலில் கூறினார். பொதுத் தேர்தலில் காங்கிர சுக்கு ஏற்பட்ட சரிவு காரணமாக திரு. காமராசர் அடியோடு செல்வாக்கிழந்து விட்டார் என்று அவர் கருதினார். 1946-இல் தனது தலைமையை எதிர்த்தவர்களே இப்போது தன்னிடம் சரணடைந்ததிலே ராஜாஜி வெற்றிப் பெருமிதம் கொண்டிருந் தார்.

ராஜாஜி தமது அமைச்சரவையை நிறுவுவதற்கு அதிக நாட்கள் எடுத்துக் கொண்டார். அவர் எனக்கும் அமைச்சர் பதவி தருவாரென்று பலர் கருதினர். அவரிடம் நானே சென்று அமைச்சர் பதவி கேட்க வேண்டுமென்று 'கல்கி' கிருஷ்ண மூர்த்தி, திரு. காசா சுப்பாராவ் போன்ற என்பால் நல்லெண்ண முள்ள நண்பர்கள் என்னை வற்புறுத்தினர். என் மனம் பதவியை விரும்பவில்லை. ராஜாஜி தாமாக எனக்குப் பதவி தருவா ரென்று எந்த நாளிலுமே நான் எதிர்பார்த்ததில்லை.

இராஜாஜி அமைச்சரவையின் பெயர்ப் பட்டியல் வெளி யான போது அதனை மனநிறைவுடன் வரவேற்றுப் பத்திரிகைக ளில் அறிக்கை விட்டேன். காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட காமன்வீல் கட்சியை காங்கிரஸ் சட்டமன்றக் கட்சியில் ராஜாஜி சேர்த்துக் கொண்டார். அதன் தலைவர் திரு.எம்.ஏ. மாணிக்க வேலு நாயகரையும் அமைச்சராக்கினார்.

மீண்டும் கோஷ்டிப் பூசல்!

புதிய அமைச்சரவையை வரவேற்று ஏப்ரல் 14-ஆம் நாள் திருவல்லிக்கேணி கடற்கரையில் சென்னை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி சார்பில் மாபெரும் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் 3 லட்சம் மக்கள் திரண்டனர். அந்த நாள் தேசிய வாரத்தின் கடைசி நாளாகவும், தமிழ்ப் புத்தாண்டு பிறந்த நாளாகவும் இருந்ததால், கூட்டத்திலே தேசியமும் தமிழும் கலந்து மணந்தன. சரித்திரச் சிறப்புமிக்க அந்தக் கூட்டத்தில் நான்தான் தலைமை தாங்கினேன்.

கூட்டத்தில் பேசுமாறு திரு. காமராசரை அழைத்தும், அவர் சாக்குப் போக்குச் சொல்லி வர மறுத்துவிட்டார். அன்று நான் ராஜாஜியை வாயாரப் புகழ்ந்தேன்; அவரும் என்னைப் புகழ்ந்தார். ஆனால், நான் அவரைப் புகழ்ந்ததைவிட அவர் என்னைப் புகழ்ந்ததுதான் அதிகம்.

நான் பேசியபோது, ராஜாஜியைப் பற்றி எதிர்க்கட்சியினர் — குறிப்பாக, திரு. பிரகாசமும், திரு. பி. இராமமூர்த்தியும் சொன்ன குற்றச்சாட்டு ஒவ்வொன்றுக்கும் பதிலளித்தேன். எனது பேச்சின் முக்கிய பகுதிகள் வருமாறு:

''இன்று தமிழ்ப் புத்தாண்டு பிறந்திருக்கிறது. தமிழ் நாட்டு வணிகர்களிலே சிலர் இன்று புதுக்கணக்கு எழுதுவர். வாழத் தெரிந்த வணிகன் — வாணிபத் திறமையுள்ள கடைக்காரன் கணக்கு எழுதத் தொடங்கினால், வரவு பெருகும்; செலவு சுருங்கும். அதுபோல, நாமும் ராஜாஜியின் தலைமையில் புதிதாகக் கடை திறந்து கணக்கு எழுதத் துவங்கியிருக்கிறோம். நமது கணக்கும் லாபத்தில் செல்லுமேயொழிய, நஷ்டத்தில் முடியாது. ஏனென்றால், நமது கடை முதலாளி (ராஜாஜி) மிக்க சாமர்த்தியக்காரர்; கைராசி உள்ளவருங்கூட.

''தேர்தலில் நிற்காத — தேர்ந்தெடுக்கப்படாத ராஜாஜி சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக — ஆட்சியின் முதல்வராக வந்தது குற்றம் என்கின்றனர். இது குற்றமானால், தேர்தலில் நின்று ஜாமீனையும் பறி கொடுத்து, பரிதாபகரமாகத் தோல்வியுற்ற பிரகாசம் ஐக்கிய முன்னணியின் தலைவரானதேன்? ஆட்சியின் முதல்வராக வர ஆசைப்பட்டதேன்? தேர்ந்தெடுக்கப்படாத ராஜாஜி மந்திரி சபை அமைத்தது ஜனநாயக விரோதமென்றால், தேர்தலில் தோல்வியுற்ற பிரகாசம் மந்திரி சபை அமைக்க முன்வந்தது எப்படி ஜனநாயகம் ஆகும்? ஒரு வேளை அது 'மாஸ்கோ மாடல் ஜனநாயகமோ?'

''ஜனநாயக ஐக்கிய முன்னணியே காங்கிரசைவிடப் பெரும்பான்மைக் கட்சி'' என்கிறார் பிரகாசம். ராஜாஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியில் காங்கிரசின் பலம் 155. ஐக்கிய முன்னணியின் பலம் 166. தையற் கடையில் பொறுக்கியெடுக்கப்பட்ட பல துண்டுத் துணிகள் ஒட்டுப்போடப்பட்ட துணி மாதிரி ஐக்கிய முன்னணி. காங்கிரஸ் கட்சியோ ஒழுங்காக நெய்யப்பட்ட ஒரே துணி. அகல, நீளத்தில் ஒட்டுத் துணி கொஞ்சம் பெரிதாக இருக்கின்ற காரணத்தால் அதை யாரும் வாங்கி விடுவதில்லை. பல கட்சிகள் ஒட்டுப்போட்ட முன்னணியிடம் ஆட்சியை ஒப்புவிக்காமல், உறுதி வாய்ந்த ஒரே கட்சியான காங்கிரசிடம் ஒப்படைத்தது கிண்டி கவர்னர் மாளிகை. இது, ஜனநாயகப்படி தவறல்ல.

''கவர்னர் ஜெனரல் பதவி வகித்த ராஜாஜி ஒரு மாகாணத்தின் முதலமைச்சராக வருவதா? இது அவருடைய அரசியல் அந்தஸ்தைத் தாழ்த்தி விடவில்லையா?'' — என எதிர்க்கட்சியினர் அங்கலாய்க்கின்றனர். ராஜ்யம் பறி போவதானாலும் எனது ராஜ நடையை விடமாட்டேன், என்று யாரோ சொன்னதாகக் கேள்வி. அதுபோல, ''ராஜ்யம் பாழானாலும் எனது ராஜிய அந்தஸ்தைக் குறைத்துக் கொள்ள மாட்டேன்'' என்று ராஜாஜி கூற வேண்டுமா?

''ராஜாஜியைப் போல பேராற்றல் படைத்த ராஜீயத் தலைவர்கள் இந்தியா முழுவதிலும் இரண்டொருவரே இருக்கின்றனர். அவர்களையும் 'அந்தஸ்து' என்னும் திரை போட்டு மறைத்துவிட்டால் அப்புறம் சுதந்திர இந்தியாவை ஆள்வது யார்? ராஜாஜியின் அறிவும் ஆற்றலும் அவரு டைய சொந்தச் சொத்தல்ல; பாரத நாட்டின் பொதுச் சொத்து. அதனாற்றான் நம்முடைய அழைப்பைத் தட்டா மல் அதிகாரத்தை ஏற்றார்.''

('தினமணி' 15.4.52 இதழில் வெளியானது)

எனது கடற்கரைப் பேச்சு செய்தித் தாள்களில் நானே வியக்கும் வண்ணம் பெரிதாகப் பிரசுரிக்கப்பட்டது. 'தினமணி' யும், 'இந்தியன் எக்ஸ்பிரசும்' ராஜாஜியின் பேச்சைப் பிரசுரித்த அளவுக்குச் சமமாக எனது பேச்சையும் பிரசுரித்தன. எனது பேச்சில் நான் வெளிப்படுத்திய கண்டனங்களுக்காகவும், அவற் றுக்குக் கிடைத்த விளம்பரத்திற்காகவும் எதிர்க்கட்சியாளர்கள் என்மீது ஆத்திரமடைந்தனர் — குறிப்பாக, நான் கூறிய ஒட்டுத் துணி உவமானமும், 'மாஸ்கோ மாடல் ஜனநாயகம்' என்று நான் பயன்படுத்திய வாசகமும் கம்யூனிஸ்டு வட்டாரத்தில் சீற்றத்தைக் கிளப்பி விட்டன. தொடர்ந்து பல வாரம் 'ஜனசக்தி' யின் 'ஈட்டிமுனை' என்மீது பாய்ச்சப்பட்டு வந்தது. இதைவிட வும் எனக்கு வியப்பளித்த நிகழ்ச்சி ஒன்று உண்டு. அது, எனது கடற்கரைப் பேச்சு காரணமாக திரு.காமராசரும், அவருடைய கோஷ்டியினரும் என்மீது ஆத்திரப்பட்டதாகும்.

கடற்கரைக் கூட்டத்தில் ராஜாஜி நிகழ்த்திய சொற்பொழி வில் ஏதோ ஒரு கருத்தை (எனக்குச் சரியாக நினைவில்லை) ஆட்சேபித்து காமராசர் கோஷ்டியைச் சேர்ந்த திரு. டி.ஜி. கிருஷ் ணமூர்த்தி பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டார். அதை மறுத்து அறிக்கை வெளியிட வேண்டிய கஷ்டம் எனக்கு ஏற்பட்டது. ஆம்; நான் எதிர்பார்த்ததை விடவும் முன்னதாகவே திரு.காமராசர் கோஷ்டி ராஜாஜி ஆட்சிமீது தாக்குதலைத் தொடங்கிவிட்டது.

கடற்கரைக் கூட்டத்தைத் தொடர்ந்து நாள்தோறும் தமிழரசுக் கழகச் சார்பில் சென்னை நகரில் தொடர்ந்து ஒரு வார காலம் பொதுக் கூட்டங்கள் நடத்தினேன். ராஜாஜி அமைச்சரவையை ஆதரித்து நானும் தமிழரசுக் கழகத்தின் முன்னணிப் பேச்சாளர்களும் பேசி வந்தோம்.

த.நா.கா. தலைவர் பதவி

பொதுத் தேர்தலிலே காங்கிரஸ் கட்சிக்குச் சரிவு ஏற்பட்ட மாநிலங்களில் மாநிலக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர்கள் பதவி துறக்க வேண்டுமென்று காங்கிரஸ் மேலிடம் கட்டளையிட்டது. சரிவு ஏற்பட்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. ஆதலால், திரு.கு.காமராசரும், தலைமைப் பதவியைத் துறக்க வேண்டியவரானார். ஆம்; தொடர்ந்து பதின்மூன்று ஆண்டுக் காலம் அவர்தான் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியில் அமர்ந்திருந்தாராதலால், கட்சிக்கு ஏற்பட்ட சரிவுக்கு அவரையே பொறுப்பாக்கியது காங்கிரஸ் மேலிடம். திரு. காமராசரும் முணுமுணுக்காமல் பதவி துறக்க முன் வந்தார். அதனால், அவருக்குப் பதிலாக யாரைத் தலைவராக்குவதென்பது பெரிய பிரச்சினையாகி விட்டது.

முதலமைச்சர் ராஜாஜி, தலைமைப் பதவியில் திரு.கு. காமராசரே நீடிக்க வேண்டுமென்று விரும்பினார். அவரும் அழைத்துத் தாம் முதலமைச்சர் பதவிக்கு வந்ததால், தாமே கேட்டுக் கொண்டு அவரைத் தலைமைப் பதவியில் நீட்டிக்க வைப்பதால் தங்கள் இருவருக்குமிடையே நட்பு உறுதிப்படுமென்று ராஜாஜி நம்பினார். தாம் முதல்வர் பதவியில் நிலைபெற வேண்டுமானால் திரு. காமராசரின் தயவு இன்றியமையாது தேவைப்படுவதனை அவர் உணர்ந்திருந்தார். திரு. காமராசர் முதல் அமைச்சர் பதவியைக் கனவிலும் நினைக்காதவரென்று ராஜாஜி அப்போது தவறாக எண்ணினார். நினைத்தாலும் அதை அடைவதற்கான ஆதரவைப் பெறுவதற்குத் தேவைப்படும் தகுதி அவருக்கில்லை என்பது ராஜாஜியின் முடிவு. அதனால், தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பதவியை அவருக்கு ஏகபோகமாக்கி விட்டால், அவர் தமக்குத் தொந்தரவு கொடுக்க மாட்டார்

என்று அந்த ராசதந்திரி எண்ணினார். ஆனால், காங்கிரஸ் மேலிடத்தின் கட்டளைப்படி பதவி துறப்பதில் திரு.காமராசர் உறுதி காட்டினார்.

தாம் முதல்வர் பதவிக்கு வருவதற்குப் பெருந்துணை புரிந்த முன்னாள் முதல்வர் திரு.பி.எஸ். குமாரசாமி ராசாவை யேனும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக்கிவிட வேண்டு மென்று ராஜாஜி முயன்றார். ராஜா மறுத்துவிட்டார். ராஜாஜியின் தயவோடு ஏதேனும் ஒரு மாநிலத்தின் ஆளுநராகிவிட வேண்டு மென்று திரு. குமாரசாமி ராஜா ஆசைப்பட்டார். அப்படியே சில திங்களில் ஒரிசா மாநிலத்தின் ஆளுநரானார். ராஜாஜியின் கடைசி விருப்பம் திரு. காமராசர் யாரை விரும்புகிறாரோ அவரைத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகக் கொண்டு வர வேண்டுமென்பதாகும். ஆனால், திரு. காமராசர், தமது விருப் பத்தைத் தெரிவிக்காமலே நாட்களைக் கடத்தி வந்தார்.

ராஜாஜியின் நிலை

இதற்கிடையில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக நான் வரக்கூடுமென்று ஒன்றிரு பத்திரிகைகளில் ஹேஷ்யம் வெளியா னது. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியை ஏற்க வேண்டு மென்று காங்கிரஸ் ஊழியர்களிலே மிகப் பெரும்பாலோர் என்னை வற்புறுத்தி வந்தனர். வடபாதிமங்கலம் வி.எஸ். தியாகராச முதலியார், பட்டுக்கோட்டை நாடிமுத்துப் பிள்ளை, பொள்ளாச்சி நா.மகாலிங்கம் போன்றவர்கள் எனக்காக வரிந்து கட்டிக் கொண்டு ஆதரவு திரட்டவும் முன் வந்தனர். ஆனால், ராஜாஜியின் போக்கு வேறுவிதமாக இருந்தது. நான் த.நா.கா. தலைவராக வருவதை திரு. காமராசர் விரும்ப மாட்டார் என்று ராஜாஜி கருதினார். இந்த நிலையில் என்னைத் தலைவர் பதவியில் அமர்த்துவது காமராசரின் பகையை விலை கொடுத்து வாங்குவதாகுமென்று அவர் அஞ்சினார். அவருடைய மதிப்பீடு சரியானதே.

மாகாண காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினனாக நான் இல்லை. தேர்தல் ட்ரிபியூனல் தீர்ப்பு காரணமாக நான் தேர்ந்

தெடுக்கப்பட்ட தொகுதியில் மறுதேர்தல் நடைபெற வேண்டி யிருந்தது. காமராசர் மறு தேர்தல் நடத்துவதை மிகவும் தந்திர மாகத் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தார். ஆனால், மாகாணக் காங்கிரஸ் அங்கத்தினராக இல்லாதவரும் மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படலாமென்றும், அப்ப டித் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு மாத காலத்திற்குள் அவர் மாகாணக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராக ஆகிவிட வேண்டு மென்றும் காங்கிரஸ் மேலிடம் மாகாணக் காங்கிரஸ் கமிட்டி களுக்குச் சுற்றறிக்கை அனுப்பியிருந்தது. அது, செய்தித் தாள்க ளிலும் வெளியாகியிருந்தது. ஆனால், அப்படிப்பட்ட சுற்ற றிக்கை எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என்று திரு. காமரா சர் கூறிக் கொண்டிருந்தார். நான் மாகாணக் காங்கிரஸ் தலைவ னாக வருவதைத் தடுப்பதற்காகத்தான் அவர் இந்த முட்டுக் கட்டை முயற்சியை மேற்கொண்டார். அதே நேரத்தில் காமராசர் கோஷ்டியின் முன்னணித் தோழர்களாக விளங்கிய திரு.ஆர். வெங்கட்ராமன் (பின்னாளில் மாநில அமைச்சராகப் பதவி வகித்தவர்), திரு.கே.டி.கோசல்ராம் ஆகிய இருவரும் என் இல்லத்திற்கு வந்து நான் போட்டியிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அவர்களுடைய அழைப்பு எனக்கு வியப்பைத் தந்தது. அதற்கு ஏதேனும் உள்நோக்கம் இருக்கக் கூடுமென்று நான் ஐயுற்றேன்.

சுப்பராயன் தலைவரனார்!

தமிழ்நாடு காங்கிரசின் தலைமைப் பதவியை ஏற்க நான் விரும்பவில்லை. ஆளுங்கட்சியின் மாநிலத் தலைமையை ஏற்பது தனிப்பட்ட முறையில் எனக்குப் பெருமை தருவதுதான். ஆட்சியாளர் மீது செல்வாக்குப் பெறவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கும். ஆனால், வேறு காரணங்களால் அதை நான் தியாகம் செய்ய வேண்டியவனாக இருந்தேன். திராவிட இயக் கத்திற்கு எதிர்ப்பு நடத்தியதனாலும், பொதுத் தேர்தலிலே காங்கிரசுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்ததனாலும் காங்கிரஸ் வட்டாரத்திலே தமிழரசுக் கழகம் மிகுந்த செல்வாக்கு பெற்று விளங்கியது. பத்திரிகை வட்டாரத்திலும் அந்தச் செல்வாக்கு எதிரொலித்தது. பொதுமக்களிடத்திலும் நல்ல மதிப்பைப் பெற்

றிருந்தது. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தித் தமிழரசுக் கழகத்தை வலுப்படுத்துவதன் மூலம் அதன் கொள்கைகளுக்கு வெற்றி தேட வேண்டுமென்ற ஆசை என் மனத்தை நிறைத்துக் கொண்டிருந்தது.

புதிய தமிழகம் காணும் பணியிலே வெற்றி பெறுவதைவிட வேறு எந்தப் பதவியும் எனக்குப் பெரிதாகப்படவில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியை ஏற்பதால் நாளடைவில் தமிழரசுக் கழகத்தைக் கலைத்துவிட வேண்டிய நிர்ப்பந்த சூழ்நிலை ஏற்படக் கூடுமென்றும் நான் அஞ்சினேன். ஆகவே, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலில் கலந்து கொள்ள இயலாதென்று என்னை வற்புறுத்திய அன்பர்களிடம் நான் உறுதியாகக் கூறிவிட்டேன். அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. எந்த நேரத்திலும் தமிழ்நாடு காங்கிரசிலே திரும்பவும் கோஷ்டிப் பூசல் முன்னைவிடவும் மோசமாகத் தோன்றக் கூடுமென்று நான் உறுதியாக நம்பினேன். அத்தகைய ஒரு கோஷ்டிப் பூசலில், திரும்பவும் சிக்கிக் கொள்ள நான் விரும்பவில்லை. அதனால், தமிழரசுக் கழகம் செயலற்றுப் போய்விடக் கூடுமென்று நான் அஞ்சினேன். ஆகவே, மனத்தில் கொஞ்சமும் சலனமில்லாமல், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவித் தேர்தலிலிருந்து ஒதுங்கி நிற்க முடிவெடுத்தேன். இறுதியாக டாக்டர் சுப்பராயன் அவர்களைத் தலைவர் பதவியில் அமர்த்த திரு. காமராசர் விரும்பினார். திரும்பவும் த.நா.கா. தலைவர் பதவியைத் தான் கைப்பற்ற அதுதான் வழி என்று அவர் கருதினார். இந்த விஷயத்தில் திரு. காமராசரின் முடிவே தமது முடிவென்று ராஜாஜி கூறி வந்தாராதலால், திரு. சுப்பராயன் தலைவராக வருவதை அவரும் ஆதரித்தார். ஏகமனதாக திரு. சுப்பராயன் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

தலைவர் பதவியை ஏற்ற இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் டாக்டர் ப.சுப்பராயன் எனது இல்லத்திற்கு வந்து தமிழ்நாடு காங்கிரஸ் செயலாளர் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று என்னைக் கட்டாயப்படுத்தினார். ராஜாஜியும் இதனை விரும்புவதாகக் கூறினார். நான் உறுதியாக மறுத்துவிட்டேன். ஆயினும், டாக்டர் ப.சுப்பராயன் வேண்டிக் கொண்டதற்கிணங்க, அவருடன் தமிழ்நாடு முழுவதும் சுற்றுலா செய்து காங்கிரசை வலுப்படுத்த உதவி புரிவதாக உறுதி கூறினேன்.

மாநகராட்சித் தேர்தல்

ராஜாஜி ஆட்சி தோன்றிய ஆறே மாதங்களுக்குள் சென்னை மாநகராட்சிக்கும் வேறு சில நகரமன்றங்களுக்கும் தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலை நடத்துவதா, ஓராண்டுக்கு ஒத்திப் போடுவதா? — என்பது பற்றி முதல்வர் ராஜாஜி என்னுடைய ஆலோசனையைக் கேட்டார். ஒத்திப் போடுவதை விட நடத்தி முடிப்பதே நல்லதென்று நான் கூறினேன். ராஜாஜிக்கும் காமராசருக்கும் இடையே உறவு இருக்கையிலேயே மாநகராட்சித் தேர்தலை நடத்திவிடுவதுதான் நல்லதென்று நான் கருதினேன். தாமதித்தால் கோஷ்டிப் பூசல் தோன்றி மாநகராட்சித் தேர்தலிலும் காங்கிரஸ் கட்சி மண்ணைக் கவ்வ நேருமென்று அஞ்சினேன். கட்சி வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பது உள்பட சென்னை மாநகராட்சித் தேர்தல் பணிகள் அனைத்துக்கும் காங்கிரஸ் சார்பில் நானே பொறுப்பேற்க வேண்டுமென்று முதலமைச்சரும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரும் என்னை வற்புறுத்தினர்.

சென்னை நகரில் நடைபெறும் தேர்தல் எதுவானாலும் அதில் ஆந்திர மாகாண காங்கிரசையும் கூட்டாளியாகக் கொண்டு செயல்படுவது தமிழ்நாடு காங்கிரசின் வழக்கமாக இருந்து வந்தது. இதன்மூலம் சென்னை நகரத்தின் மீது ஆந்திரர் கொண்டாடி வந்த உரிமையைத் தமிழ்நாடு காங்கிரஸ் மறைமுகமாக அங்கீகரித்துக் கொண்டு வந்தது. இது எனக்குப் பிடிக்கவில்லை. மாநகராட்சித் தேர்தலிலே காங்கிரசின் வெற்றிக்கு நான் பொறுப்பேற்க வேண்டுமென்றால் ஆந்திர மாகாணக் காங்கிரசை அதிலே தொடர்புபடுத்தக் கூடாதென்று நான் கூறினேன். தமிழரசுக் கழகத்தின் தலைவன் என்ற முறையில் நான் இதனைச் சொல்லியாக வேண்டியிருந்தது. டாக்டர் ப.சுப்பராயனும் ராஜாஜியும் இதற்கு இசைவு தெரிவித்தனர். இந்தச் செய்தி பத்திரிகைகளிலும் வெளியானது. ஆந்திர மாகாணக் காங்கிரஸ் தலைவர் திரு.என். சஞ்சீவி ரெட்டியாருக்கு இது பிடிக்கவில்லை. திரு. காமராசரின் அந்தரங்க ஆதரவைப் பெற்றபின்,

மாநகராட்சித் தேர்தலில் ஆந்திர மாகாணக் காங்கிரஸ் கமிட்டியைச் சம பங்காளியாக நடத்த வேண்டுமென்று அவர் அறிக்கை விட்டார். ஒரு சந்தர்ப்பத்தில் திரு. காமராசர் இல்லத்தில் நானும் அமராவதி சிறைக் கூடத் தோழரான திரு. சஞ்சீவி ரெட்டியும் சந்தித்து இதைப் பற்றி விவாதித்தோம். அவர் மிகுந்த கோபத்துடன் பேசியதால் நாங்கள் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. திரு. காமராசர் திரு. ரெட்டியாரின் கட்சியையே ஆதரித்தார். த.நா.கா. தலைவர் டாக்டர் ப.சுப்பராயன் முடிவெடுக்க முடியாமல் ஊசலாடினார். இதிலே ராஜாஜி தலையிட்டு சமரச முடிவு கண்டார்.

சென்னையில் தெலுங்கர்கள் கணிசமாக வாழும் தொகுதிகளில் — அவர்கள் சிறுபான்மையினர் என்ற வகையில் — வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் திரு. சஞ்சீவி ரெட்டியார் கலந்து கொள்ளப்பட வேண்டுமென்பது ராஜாஜியின் சமரசத் தீர்ப்பு. வேட்பாளர் பட்டியல் — சிறுபான்மையினரான தெலுங்கு வேட்பாளர்களையும் சேர்த்து — தமிழ்நாடு காங்கிரசின் பெயரால்தான் வெளியிடப்பட வேண்டும். தெலுங்கர்களும் தமிழ்நாடு காங்கிரஸ் வேட்பாளர்களாகத்தான் நிற்க வேண்டும். இதில் ஆந்திர மாகாண காங்கிரசைக் கூட்டுச் சேர்த்துக் கொள்வது கைவிடப்பட வேண்டும். இதுதான் சமரசத் தீர்வு. இது ஒருவகையில் நான் தெரிவித்த யோசனைதான். இதனால், தமிழரசுக் கழகத்தின் ஆந்திர எதிர்ப்புக் கொள்கைக்கு வெற்றி தேடி விட்டதற்காக நான் மகிழ்ச்சி அடைந்தேன்.

தமிழ்நாடு காங்கிரஸ் செயற்குழுவைக் கூட்டி சமரச முடிவுக்கு அதன் அங்கீகாரம் பெறப்பட்டது. அக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பினர்களாக நானும் திரு. சஞ்சீவி ரெட்டியாரும் கலந்து கொண்டோம். மாநகராட்சித் தேர்தலிலே தமிழரசுக் கழகத்தின் உதவியில்லாமல் தமிழ்நாடு காங்கிரஸ் வேட்பாளர்கள் வெற்றி பெறுவது சாத்தியமில்லையாதலால் என்னைத் திருப்தி செய்ய இந்த ஏற்பாட்டைத் தமிழ்நாடு காங்கிரஸ் ஏற்க வேண்டியிருந்தது.

காங்கிரசுக்கு வெற்றி!

மாநகராட்சித் தேர்தலிலே காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு வெற்றி தேடுவது அவ்வளவு சுலபமானதாக இருக்கவில்லை. 1952 அக்டோபரில் தேர்தல் நடைபெற்றது. எட்டு மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலே சென்னை நகரில் நான்கு எம்.எல்.ஏ. தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்திருந்தது. மற்ற தொகுதிகளிலும் சொற்ப வாக்கு வித்தியாசத்தில்தான் காங்கிரஸ் வேட்பாளர்கள் வெற்றி பெற முடிந்தது. இந்தச் சூழ்நிலையில்தான் சென்னை மாநகராட்சித் தேர்தலிலே காங்கிரசுக்கு வெற்றி தேடித்தரும் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன். வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் 'அட்ஹாக்' கமிட்டிக்கும் நான் தலைவனாக்கப்பட்டேன். த.நா.கா. தலைவர் டாக்டர் ப.சுப்பராயன் எல்லாவற்றையும் என் பொறுப்பில் விட்டு அவர் என்னுடன் ஒத்துழைத்தார்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களுக்கு திரு. காமராசர் என்னுடன் தாமே விரும்பி வருவார். நானும் விரும்பி அவரை அழைத்துச் செல்வேன். அப்போதுதான் காமராசர் கோஷ்டியிலிருந்து விலகி ராஜாஜியின் பக்தராகி சென்னை மாநில அரசின் நிதி அமைச்சர் பொறுப்பை வகித்து வந்த திரு.சி. சுப்பிரமணியம் மாநகராட்சித் தேர்தல் கூட்டங்களுக்கு திரு. காமராசரை நான் அழைத்துச் செல்வதை விரும்பாதவரானார். ''ஒரு பொறுப்புமில்லாத அவரைக் கூட்டத்திற்குக் கூட்டம் ஏன் அழைத்துச் செல்கிறீர்கள்?'' என்று ஒரு சமயம் மிகக் கடுமையான குரலில் என்னைக் கேட்டார். ஆனால், திரு.காமராசர் அவ்வளவு எளிதில் புறக்கணித்துவிடக் கூடிய மனிதரல்ல என்பதை நான் உணர்ந்திருந்தேன். திரு.சி.எஸ். உணர்ந்திருக்கவில்லை.

நானும் தமிழரசுக் கழகத்தின் முன்னணிப் பேச்சாளர்களும், இதர ஊழியர்களும் மற்ற காங்கிரஸ்காரர்களோடு கைகோத்து நின்று உழைத்ததன் காரணமாகச் சென்னை மாநகராட்சித் தேர்தலிலே காங்கிரஸ் கட்சிக்குப் பெரும்பான்மை கிடைத்தது.

வெளி மாவட்டங்களிலுள்ள நகர மன்றங்கள் சிலவற்றிற் கும் தேர்தல் நடைபெற்றது. அங்கெல்லாமும் சென்று காங்கிர சுக்கு ஆதரவாகப் பிரச்சார பேரிகை முழக்கினேன். பெரும்பா லான நகரங்களில் காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி கிடைத்தது. ஆம்; பத்து மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட சரிவானது அடுத்து நடைபெற்ற நகர மன்றங்களுக்கான தேர்தல்களிலே வெற்றிகரமாகச் சமாளிக்கப்பட்டது. ராஜாஜி முதல்வராக வந்த தும், டாக்டர் ப.சுப்பராயன் தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பொறுப்பை ஏற்றதும் காங்கிரசுக்குத் தமிழ்நாட்டில் புத்துயிர் தந்தன என்று சொல்ல வேண்டும்.

1952-ஆம் ஆண்டின் இறுதியில் சென்னையிலும் வேறு பல நகரங்களிலும் நடைபெற்ற நகராட்சித் தேர்தல்களில்தான் கடைசி முறையாக நான் காங்கிரசுக்காக உழைத்தேன். இத்துடன், பார்லிமெண்டரி துறையிலே என்னைப் பொறுத்தவரை முதல் அத்தியாயம் முடிந்ததெனலாம்.

ராஜாஜியுடன் சுற்றுலா

முதல்வர் ராஜாஜி, பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தார். இந்தச் சட்டத்திற்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்யும் பொருட்டுத் தஞ்சை மாவட்டத்தில் சுற்றுலா செய்யப் புறப்பட்டார். ராஜாஜி, அவசரச் சட்டங்கள் போடுவ தில் நிபுணர். ஆக்க வழிப்பட்ட முற்போக்குத் திட்டங்களைக் கூட அவசரச் சட்டங்களின் மூலமே அறிமுகப் படுத்துவார்.

ராஜாஜியின் இந்த அவசரச் சட்ட பாணி ஆட்சி முறை ஒருவகையில் அவசியமானதென்றே நான் கருதுகிறேன். கொண்டுவரப்படும் சீர்திருத்தச் சட்டத்தின் பலனை மக்கள் முழுமையாக அனுபவிக்க வேண்டுமென்றால், முதலில் ஒரு அவசரச் சட்டத்தின் மூலம்தான் அதனை அறிமுகப்படுத்த வேண்டும். பின்னரே அது சம்பந்தமான மசோதாவைச் சட்ட மன்றத்தின் முன்பு வைக்கவேண்டும். இல்லையேல், ஆதிக்க

சக்திகள் எந்தச் சட்டத்தையும் அதனைக் கொண்டு வருவோர் எதிர்பார்க்கும் பலன்களை மக்கள் அனுபவிக்க முடியாமல் செய்துவிடும். இந்த வகையில்தான் முதல்வர் ராஜாஜி அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கெனப் பண்ணையாள் பாதுகாப்பு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தார். அதற்கு ஆதரவு தேடத் தமது முதுமையையும் மறந்து தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்திற்குச் சுற்றுலா சென்றார்.

அந்நாளில் தஞ்சை மாவட்டம் கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கில் இருந்தது. அறுவடைக் காலம் வந்தால் அம் மாவட்டம் முழுவதற்கும் போலீஸ் படையே அனுப்ப வேண்டி யிருந்தது. ஆம்; அறுவடை செய்வோருக்குப் பாதுகாப்பளிக்க! இம்மாதிரி அறுவடைப் பருவந்தோறும் போலீசைக் கொண்டு நிலைமையைச் சமாளிப்பதை ராஜாஜி விரும்பவில்லை. மாறாக, விவசாயிகளின் தேவையை நிறைவு செய்வதன் மூலம் சமாதானத்தை உருவாக்க விரும்பினார். தானிய உற்பத்தியைப் பிரித்துக் கொள்வதில் உடைமையாளர்களுக்கும் உழவர்களுக்கு மிடையே நீதி வழங்குவதே பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத் தின் குறிக்கோள்.

நானும் தம்முடன் வர வேண்டுமென்று ராஜாஜி விரும்பி னார். அவரது அமைச்சரவையின் பாதுகாவலனாக என்னைப் பணித்துக் கொள்வதிலே எனக்கும் மகிழ்ச்சிதான். ஆனால், காலத்தை எதிர்பார்த்துக் கொண்டு காத்திருந்த காமராசரின் — அவரது கோஷ்டியின் வெறுப்பைத் தேடிக்கொள்ள நான் விரும்ப வில்லை. ஆகவே, ஏதேதோ சாக்கு போக்குச் சொல்லி ராஜாஜியின் அழைப்பை ஏற்கப் பணிவோடு மறுத்தேன். ஆனால், அவர் என்னை விடவில்லை. அன்பிற்கும் மரியாதைக் கும் கட்டுப்பட்டு அவருடன் தஞ்சை மாவட்டம் சென்றேன். தஞ்சை, திருவாரூர், சீர்காழி, மாயவரம் ஆகிய நகரங்களுக் கெல்லாம் சென்று பொதுக் கூட்டங்களில் பேசினேன். அக் கூட்டங்களுக்குக் கிராமப்புறங்களிலிருந்தும் மக்கள் பல்லாயி ரக் கணக்கில் வந்து குழுமினர். 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்களும் எங்களுடன் வந்திருந்தார். வடபாதிமங்கலம் வி.எஸ். தியாகராச முதலியார் ராஜாஜியின் சுற்றுலாவை

வெற்றிகரமாக்க ஏற்பாடு செய்தார். முதல் நாள் காலை தஞ்சை ராமனாதன் செட்டியார் மண்டபத்தில் மிராசுதார்கள் கூட்டம் நடைபெற்றது. ராஜாஜி வற்புறுத்தியும் அதில் பேச நான் மறுத்துவிட்டேன். பொருளாதார — சமூகக் கொள்கையில் மிராசுதார்களுக்கும் எனக்கும் நடுவே இடைவெளி அதிகம். அதுதான் நான் பேச மறுத்ததற்குக் காரணம்.

வக்கீல் ம.பொ.சி.!

முதல்வர் ராஜாஜி அந்தக் கூட்டத்தில் பேசியதைக் கேட்ட போது அவரை ஒரு கம்யூனிஸ்டாகவே நான் எண்ண வேண்டி யிருந்தது. அவ்வளவு தீவிரமாகப் பேசினார். நிலப்பிரபுக்கள் மீது நிலமற்ற உழவர்கள் கொண்டுள்ள வெறுப்புக்கான நியாயங் களை அவர் வர்ணித்தபோது கேட்டுக் கொண்டிருந்த மிராசுதார் கள் முகத்திலே ஈயாடவில்லை. பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைத் தாக்கி 'இந்து'வில் எழுதப்பட்டிருந்த தலையங்கத் திற்கும் சுடச்சுடப் பதிலளித்தார். 'இந்து'வை அன்று அவர் தாக்கியதைப் போல கம்யூனிஸ்டு — தி.மு.க. தலைவர்கள்கூட தாக்கியதில்லை. ''உழவர்களுக்கு நியாயம் வழங்க உடைமை யாளர்கள் முன்வரவில்லையானால், நிலப்பிரபுத்துவம் அடியோடு அழிவதை நானே என் கண்களால் பார்க்க நேரிடும்'' என்று உணர்ச்சியோடு கூறினார்.

''உழவர்களின் உரிமைகளைக் காக்க அரசு பொறுப்பேற்க வேண்டியதுதான் என்றாலும், அதனை அவசரச் சட்டத்தின் மூலம்தான் செய்ய வேண்டுமா? 'ஆம்' என்றால், பிரிட்டிஷ் ஆட்சிக்கும் காங்கிரஸ் ஆட்சிக்கும் என்ன வேற்றுமை?'' என்று மிராசுதார்கள் எழுப்பிய வினாவுக்குக் கூட்டத்துக்குக் கூட்டம் விடையளித்து வந்தேன். அது வருமாறு:

''பிரிட்டிஷ் ஆட்சியிலே அந்நியருடைய ஆதிக் கத்தை உறுதிப்படுத்தும் பொருட்டே ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அது, அதிகார பலம் கொண்டு அமுல்நடத்தப்பட்டது. ராஜாஜி ஆட்சியிலே சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரண

உழவர்களின் நலம் கருதி அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்தச் சட்டம் பிறந்த செய்தி பத்திரிகை வாயிலாக மக்கள் பார்வைக்கு வருமுன்பே அதனைப் பிறப்பித்த முதலமைச்சர் மக்கள் மத்தியில் வந்துவிட்டார். நிலப் பிரபுக்கள், உழவர்கள் ஆகிய பரஸ்பரம் பூசலுடைய இருவேறு வர்க்கங்களையும் தனித்தனியே சந்தித்தும், ஒரே இடத்தில் அவர்களைக் கூட்டி வைத்தும் தான் அவசரச் சட்டம் பிறப்பித்ததற்கான காரணங்களை அன்பு மொழிகளிலே கூறுகிறார். இதுதான் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் அவசரச் சட்டம் பிறந்ததற்கும் ராஜாஜி ஆட்சி காலத்தில் அவசரச் சட்டம் பிறந்ததற்குமுள்ள வேற்றுமை.''

இந்தச் சுற்றுலாவில் இறுதியாக அமைந்த மாயூரம் பொதுக் கூட்டத்தில் உணர்ச்சி ததும்பப் பேசினேன். நான் நம்புகின்ற சோஷலிசக் கொள்கையின் அடிப்படையில்தான் ராஜாஜியின் பண்ணையாள் பாதுகாப்பு அவசரச் சட்டத்தை ஆதரித்துப் பேசினேன். அதற்காக ராஜாஜி முணுமுணுக்கவில்லை. மாறாக, என்னைப் பாராட்டிப் பேசினார். அந்நாளில் அவரே சோஷலிசத்தில் நம்பிக்கை கொண்டிருந்தவர்தானே! மாயூரம் கூட்டத்தில் எனக்குப் பின் அவர் பேசுகையில்,

''நான்கூட நல்ல ஒரு கொள்கையை மசோதாவின் மூலமாக அல்லாமல் அவசரச் சட்டத்தின் மூலம் அமுலுக்குக் கொண்டு வந்ததைத் தவறென்றே கருதிக் கொண்டிருந்தேன். ஆனால், கிராமணியாரின் வியாக்யானத்தைக் கேட்ட பின்னர் எனது செயல் சரியானதென்றே இப்போது நினைக்கிறேன். அவரது வாதத் திறமையைக் கேட்கும் போது அவர் வக்கீலாக வந்திருக்க வேண்டியவர் என்றே நினைக்கத் தோன்றுகிறது''

என்றெல்லாம் என்னைப் புகழ்ந்து பேசினார். இந்தப் புகழுரை 'தினமணி' — 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடுகளிலே, தனியாகக் கட்டம் கட்டிப் பிரசுரிக்கப்பட்டது.

ராஜாஜி காட்டிய மரியாதை

நாங்கள் சுற்றுலா சென்ற இடமெல்லாம் தமிழரசுக் கழகத் தோழர்கள் ராஜோபசாரம் செய்து எங்களை வரவேற்றனர். காங்கிரஸ் ஊழியர்களிலே ஒரு சாரார் (காமராஜர் கோஷ்டியினர்) ஒத்துழையாமையைக் கடைப்பிடித்தனர்.

திருவாரூர் கூட்டத்திலே மாணவர் தமிழரசுக் கழகத்தார் ராணுவத்தாரைப் போன்று அணிவகுத்து எங்களுக்கு வரவேற்பளித்தனர். அதைக் கண்டு ராஜாஜியே பூரித்துப் போனார். மாணவர் தமிழரசுக் கழகத் தலைவர் வீ.கி.சிவஞானம் என்பவரைக் கூட்டத்திலேயே ராஜாஜி புகழ்ந்து பேசினார். 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி அந்த மாணவரைப் பற்றிய சிறப்புக் குறிப்பு ஒன்றைக் 'கல்கி'யில் எழுதினார்.

முதலமைச்சர் ராஜாஜியின் தஞ்சை மாவட்டச் சுற்றுலா வெற்றிகரமாக முடிந்தது. அந்த வெற்றியிலே மாவட்டத் தமிழரசுக் கழகக் கிளைகளுக்கும் கழகத் தோழர்களுக்கும் சரிபாதி பங்குண்டு.

1945-46-ஆம் ஆண்டுகளிலே ஒரு பதவியிலும் இல்லாமலிருந்த ராஜாஜியோடு தொடர்ந்து தமிழ்நாட்டில் காமராசர் குழுவினரின் எதிர்ப்புக்கிடையே சுற்றுலா செய்திருக்கிறேன். அவர் முதலமைச்சர் பதவியிலிருந்த நிலையில் அவருடன் நான் சுற்றுலா செய்ய நேர்ந்தது இது முதன் முறையாகும். இதுவே முடிவானதாகவும் போய்விட்டது. ஆனால், தாம் பதவியில் இல்லாதபோது என்னை எவ்வளவு அன்போடும் மரியாதையோடும் நடத்தினாரோ அதற்குக் கொஞ்சமும் குறையாமல் தாம் முதலமைச்சர் பதவியிலிருந்த இப்போதும் ராஜாஜி என்னை நடத்தினார்.

விடுதலைப் போரில் ஈடுபட்டு இன்னலுற்றவர்கள் தியாகிகள் என்று போற்றப்படுகின்றனர். உண்மையில் விடுதலைப் போரில் உயிர் நீத்தவர்களுக்கே 'தியாகி' என்ற புனிதமான சொல் பூர்ணமாகப் பொருந்தும். உயிரைக் கொல்லும் நஞ்சையுண்டதனாற்றான் இறைவனும் 'தியாகேசன்' என்று அழைக்கப்

படுகிறான். சிறை புகுந்து இன்னலுற்றவர்களைத் தியாகிகள் என்று அழைப்பதிலேயும் தவறில்லை. அதைவிட, 'விடுதலை வீரர்' என்பது பொருத்தமாக இருக்கும்.

இந்திய விடுதலைப் போர் ஆயுதப் புரட்சியாக அல்லாமல் அறவழிப்பட்ட கிளர்ச்சியாக நடந்ததால் செல்வம் படைத்த சீமான்களும் அதிலே ஈடுபட்டுத் 'தியாக' முத்திரை பெற முடிந்தது. அவர்களில், ஆண்டுக்கணக்கில் சிறை சென்றவர்க ளேயன்றி, நாள்கணக்கில் சிறை சென்றவர்களும் 'தியாகிகள்' ஆக முடிந்திருக்கிறது. இந்தத் தியாக சீலர்களும் காங்கிரசில் முன்னணித் தலைவர்களாக இருந்துள்ளனர். விடுதலைப் போரின்போது, 1940-41-இல் நடந்த தனிநபர் சத்தியாக்கிரக மானது மிட்டா மிராசுதார்களுக்குக்கூட எளிதில் 'தியாகி' முத்திரை தேடித் தந்துவிட்டது! நாடு விடுதலை பெற்று, காங்கி ரஸ் கட்சி அதிகார பீடத்திலேறியபின், ஏழைத் தியாகிகள் புறக்கணிக்கப்பட்டனர். மிட்டாமிராசுதார்களான 'தியாகி'கள் செல்வாக்கு பெற்றனர்.

தியாகிகள் பிரச்சினை

இந்தியாவில் அன்னிய நாட்டினர் ஆதிக்கம் செலுத்திய காலத்திலே அவர்கள் மொழியான ஆங்கிலமும் அங்கிங் கெனாதபடி இந்தியா எங்கணும் ஆதிக்கம் பெற்றிருந்தது. அதனால் அவ்வன்னிய மொழியில் புலமை பெற்ற மேட்டுக்குடி மக்களே விடுதலைப் போரில் முன்னணியில் இடம் பிடித்துவிட வாய்ப்பு பெற்றனர். ஆங்கில மொழியில் புலமை பெறாதவர்கள் — அவர்கள் ஆண்டுக் கணக்கில் சிறைவாசம் அனுபவித்திருப் பினும் — பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டனர். அவர்களிலே பெரும்பாலோர் அன்றாட வாழ்க்கைக்கே வழியின்றி வருந்து வோராக இருக்கின்றனர். அதனால், பட்டம் — பதவிகளுக்காக வன்றி, வாழ்க்கைத் தேவைகளுக்காக சுதந்திர நாட்டில் அரசின் தயவுக்குக் கையேந்தி நிற்கின்றனர். ஆம்; 'தியாகிகள் பிரச்சி னை' என்பதாகவும் ஒரு பிரச்சினை புதிதாகத் தோன்றி யிருக்கிறது.

நாடு சுதந்திரம் பெற்றதுமே ''தியாகிகள் பிரச்சினை'' காங்கிரஸ் அரசு தீர்த்து வைக்க வேண்டிய அவசரப் பிரச்சினை யாக உருவெடுத்தது. பிற மாநிலங்களில் எப்படியோ நானறி யேன்; தமிழ்நாட்டில் தியாகிகள் பிரச்சினை ஒரு இயக்கத் தையே தோற்றுவித்துவிட்டது.

ஆயுதப் புரட்சி நடத்தி விடுதலை பெற்ற நாடுகளிலே விடுதலை வீரர்களில் கடைத்தரமானவர்களும் சுதந்தர அரசில் ஏதேனும் ஒரு அலுவலைப் பெற்றனர். தியாகிகளுக்கு உத்தி யோகம் தருவதைத் தங்கள் கொள்கையாகவே கொண்டனர் ஆட்சி பீடத்திலேறியவர்கள். அதுவும், அன்னிய மொழி ஆதிக்க மில்லாத அமெரிக்காவிலே மிகவும் எளிதாக நிகழ்ந் தது. ருஷ்யாவில் நடந்த வர்க்கப் புரட்சியின் — பிரான்சில் நடந்த குடியரசுப் புரட்சியின் இறுதியிலேயும் இப்படித்தான் நடந்தது. இந்தியாவிலே நிலைமை வேறுவிதமாக உருவானது. இங்கு அன்னிய ஆதிக்கத்துக்கும் தேசிய காங்கிரசுக்கும் ஏற்பட்ட ஒப்பந்த அடிப்படையில் சுதந்திரம் பிறந்தது. ஆம்; இந்தியா பெற்ற சுதந்திரம் புரட்சியிலே பூத்ததன்று! அதனால், சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரண மக்கள்மீது ஆதிக் கம் செலுத்திவந்த மேட்டுக்குடி மக்கள் சுதந்தர இந்தியாவிலும் ஆதிக்கம் பெற்றுவிட்டனர். விடுதலைப் போருக்கு எதிராக பிரிட்டிஷ் ஆதிக்கத்தைத் தாங்கி நிற்கும் தூண்களாக இருந்தவர் களெல்லாம் நாடு சுதந்தரம் பெற்றதுமே மத்தியிலும் மாநிலங் களிலும் அமைச்சர்களான அதிசயத்தைக் கண்டோம். இந்த அதிசயம் விடுதலை பெற்ற வேறு எந்த நாட்டிலும் நடந்த தில்லை. அமைதியான முறையில் பிரிட்டிஷார் அதிகாரத்தை மாற்றியதன் விளைவு இது.

விடுதலை வீரர்களின் பாசறையிலே அன்னிய மொழியான ஆங்கிலமே பெரிதும் பயன்படுத்தப்பட்டதால், அம்மொழியில் புலமை பெற்றவர்களே அகில இந்தியத் தலைவர்களாக மலர முடிந்தது. சாதாரண மக்களிலிருந்து தோன்றிய தியாகிகளுக்கு அந்தப் பேறு கிடைக்கவில்லை. இந்திய மொழிகளிலே எதுவும் நாடு முழுவதும் வழங்கும் பொது மொழியாக இல்லாமற் போனதும் இதற்கு ஒரு காரணமாகும்.

தியாகிகள் அல்லல்!

ஆங்கிலத்தில் புலமை பெறாத தியாகிகளின் வாழ்க்கைப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது ஆரம்பத்தில் காங்கிரஸ் அரசுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. அதனைச் சமாளிக்க, 'நிலமானியம்' ஒரு சரியான நிவாரணமாகக் கண்டுபிடிக்கப்பட்டது. சிறை சென்ற தியாகிகளுக்குத் தலைக்கு 10 ஏக்கர் வீதம் நிலம் வழங்க சென்னை மாநிலக் காங்கிரஸ் அரசு முடிவெடுத்தது. இது, பிரகாசம் முதல்வராக இருந்தபோது எடுக்கப்பட்ட முடிவென்று நினைவிருக்கிறது. வாழ வழியின்றி வாடும் தியாகிகளுக்கு கஷ்ட நிவாரணமளிக்கத்தான் நில மானியத் திட்டம் பிறந்தது. ஆனால், 'தியாகிகள்' அனைவருக்குமே பொதுவான திட்டமாக இருந்ததால், சிறை சென்ற நிலச்சுவான்தார்கள் கூட நில மானியம் பெற்றனர்.

தியாகிகளுக்கு நில மானியம் அளிப்பது திட்டமிடப்பட்ட முறையில் நடக்கவில்லை. 'அழுகிற பிள்ளைக்கு வாழைப்பழம் கொடுப்பது' என்பார்களே, அதுபோன்றுதானிருந்தது. ஒவ்வொரு தியாகியும் தான் சிறை சென்றதற்கான சான்றை அவர்தான் தேடிக் கொடுக்க வேண்டும். நிலத்தையும் அவர்தான் காட்டவேண்டும். அதன்பின்னர் — அவர் காட்டும் நிலத்தில் தகராறு எதுவும் இல்லாமலிருந்தால் — மானியம் தரப்படும் இதுதான் நிலமானியத் திட்டம்.

தியாகிகள் தாங்கள் சிறை சென்றதற்கான சான்றை கலெக்டரிடமோ, மாஜிஸ்திரேட்டிடமோ, தாங்கள் அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலை சூப்பிரன்டெண்டிடமோதான் பெற வேண்டும். ஆனால், இது அவ்வளவு எளிதில் கிடைப்பதில்லை.

சான்று கிடைத்தாலும், அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தைக் கண்டுபிடிப்பது எளிதல்ல. தியாகி காட்டும் நிலம் மேய்ச்சலுக்கென ஒதுக்கப்பட்டதாகவோ, யுத்த சேவையிலிருந்து திரும்பிய மாஜி ராணுவத்தாருக்கு விடப்பட்டதாகவோ இருந்துவிடக் கூடாது.

தியாகி மானியம் பெற்ற பின்னரும் பிரச்சனைகள் தோன்றுவதுண்டு. 'மேய்ச்சல் தரை' என்றோ, போக்குவரத்துக்காக ஒதுக்கப்பட்ட இடைநிலம் என்றோ காரணம் காட்டி ஊரார் தியாகியோடு சண்டைக்கு வருவதுண்டு. இப்படிப்பட்ட தகராறு எதுவும் இல்லாதவிடத்தும், தியாகி பெற்ற நிலம் பாசன வசதியற்றதாகவோ, பயிர் செய்யத் தகுதியற்ற பாலையாகவோ இருந்து விடுவதும் உண்டு. இப்படியெல்லாம் மோசமான நிலையில் ஏழைத் தியாகிகள் காங்கிரஸ் ஆட்சியிலே நடத்தப்பட்டனர்.

ராஜாஜி முதலமைச்சராக வந்ததும் தியாகிகள் பிரச்சினை சூடு பிடித்தது. மதுரைக்கு அவர் சென்றிருந்தபோது நில மானியம் கோரி தியாகிகள் அவரெதிரே ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்களில் பலர் காமராசர் கோஷ்டியினர். ஆம்; இந்த ஆர்ப்பாட்டத்திற்குக் கோஷ்டி மனப்பான்மையும் காரணமாக இருந்தது.

ராஜாஜி கொஞ்சம் கோபம் அடைந்து, ''தியாகத்திற்குப் பரிசு கேட்பது அவமானம்'' என்று கடுகடுத்துக் கூறிவிட்டார். 'நிலமானியம் இனி வழங்கப்பட மாட்டாது; ஏற்கனவே நிலமானியம் பெற்றவர்கள் திருப்பிக் கொடுத்துவிடுவது நல்லது'' என்றும் ராஜாஜி கூறினார்.

ராஜாஜியின் கருத்து ஒருவகையில் எனக்குப் பிடித்திருந்தது. வசதி படைத்தவர்களெல்லாம் நிலமானியம் பெற்றிருந்தார்களாதலால், அப்படிப்பட்டவர்கள் தாங்கள் பெற்ற நிலத்தைத் திருப்பிக் கொடுத்துவிட ராஜாஜியின் அறிவிப்பு பயன்படுமென்று நான் நம்பினேன். ஆனால், அப்படி யாரும் கொடுத்ததாக எனக்குத் தகவலில்லை. ஒரே ஒரு நபர்தான் ராஜாஜியின் கருத்துக்கு மதிப்பளித்துத் தான் பெற்ற தியாகி நிலத்தைத் திருப்பிக் கொடுத்தார். அந்த நபர் வேறு யாருமல்ல; நானே தான்!

தியாகி மானியத்தை திருப்பிக் கொடுத்தேன்!

தியாகிகளுக்கு நில மானியம் தரப்படுமென்றும், அதனைப் பெற விரும்புவோர் மாவட்ட ஆட்சியாளருக்கு மனுபோட வேண்டுமென்றும் மாநில அரசு அறிவித்தபோது நான் மனுப் போடவில்லை. நிலத்தை விரும்பாததால் அல்ல; தியாகத்திற்கு விலையாகவோ, பரிசாகவோ அல்லாமல், தியாகியின் மனு தேவைப்படாமலே, அரசு தானாகவே முன்வந்து நில மானியம் தந்தால், தியாகிக்கு சுதந்திர அரசு செய்யும் மரியாதையாகக் கருதி பெற்றுக் கொள்ளலாமென்பது என் கருத்து. அதனாற் றான், கலெக்டருக்கு மனு போடுமாறு நண்பர்கள் சிலர் வற்புறுத் தியும் நான் போட மறுத்துவிட்டேன்.

தியாகிகளுக்கு நிலமானியந் தரும் வேலையைக் கவனிக் கத் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் மாவட்டத்திறகொரு காங்கி ரஸ் பிரமுகர் நியமிக்கப்பட்டிருந்தார். சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களுக்கு ஆதம்பாக்கம் திரு. இராமகிருஷ்ண ஐயர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் ஒருநாள் தற்செயலாக வேறு ஏதோ ஒரு அலுவல் காரணமாக எனது இல்லத்திற்கு வந்த போது, தியாகி மானியம் பற்றிப் பேச்சு வந்தது. மானியம் கோரி நான் மனு போடாததை அறிந்த அவர்,

> *''நீங்களாக மனுபோடத் தேவயையில்லை. நீங்கள் பல முறை சிறை சென்றவர்கள். ஒருமுறை சிறை சென்ற தேதியைச் சொல்லுங்கள். மற்றவற்றை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்''*

என்றார். 1942 ஆகஸ்டு 13-ஆம் தேதியை — ஆகஸ்டுக் கிளர்ச்சி காரணமாக போலீசார் என்னைக் கைது செய்த நாளை — அவருக்கு நினைப்பூட்டினேன். ஆகஸ்டு கிளர்ச்சியின்போது நான் சிறைப்படுத்தப்பட்டது, அவருக்கே தெரியுமாதலால், தேதியை மட்டும் நினைப்பூட்டினேன்.

பின்னர், ஐயரவர்களின் பெருமுயற்சியால் செங்கற்பட் டுக்கு எட்டு மைல் வடக்கே உள்ள பாலூர் கிராமத்தில் 5.71 ஏக்கர் நிலம் என் பெயருக்கு மானியமாக ஒதுக்கப்பட்டு,

பட்டாவும் செய்யப்பட்டு முடிந்தது. இன்னும் 4.29 ஏக்கர் நிலம் பின்னர் தரப்படுமென்றும் எனக்கு அறிவிக்கப்பட்டது.

பட்டா செய்யப்பட்ட நிலத்திலுள்ள மரங்களுக்காக விலை கொடுக்க வேண்டுமென்று அரசின் சார்பில் கேட்கப்பட்டது. அதற்காகவும், பட்டா செய்வதற்கான செலவிற்காகவும் ரூ.150 வரை கைப்பணம் செலவாயிற்று. இந்தத் தொகையைத் திரட்டுவ தற்கு நான் அரும்பாடு பட்டேன். நான் தியாகி மான்யம் பெற்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பின்தான் ராஜாஜி மதுரையில் ஏற் கெனவே நான் எடுத்துக் காட்டியவாறு தியாகிகள் தாங்கள் பெற்ற நில மானியங்களைத் திருப்பி விட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

கைப்பணம் போயிற்று

ஒருநாள் காலை பத்திரிகையில் ராஜாஜியின் மதுரைப் பேச்சைப் படித்ததுமே, நான் பெற்ற தியாகி மானியத்தைத் திருப்பித் தந்து விடுவதாகச் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாள ருக்குக் கடிதம் எழுதிவிட்டேன். ராஜாஜியிடம் கொண்ட பக்தி காரணமாகவும் நான் இதைச் செய்தேன். மனத்துள் போராட்டம் எதுவுமின்றி மிகுந்த மகிழ்ச்சியுடனேயே நிலமான்யத்தைத் திருப்பினேன். அரசால் எனக்குத் தரப்பட்டது நல்ல விளை நிலம்தான்; கரம்பு நிலமல்ல. அதன்மீது யாரும் எந்தவிதமான வழக்கும் எழுப்பவில்லை.

ராஜாஜி மதுரையில் என்னை நினைவில் வைத்துப் பேசி யிருக்க மாட்டார் என்பது எனக்குத் தெரியும். நான் தியாகி நிலம் பெற்றிருப்பது அவருக்குத் தெரியவும் தெரியாது. தியாகி நிலத்தைத் திருப்பிக் கொடுத்து விடுமளவுக்கு எனது வாழ்க்கை வளமுடையதுமல்ல; வறுமையுடையதுதான். ஆயினும், ராஜாஜியிடம் தனிப்பட்ட முறையில் நான் மிகுந்த பக்தியுடைய வன். அன்றுமட்டுமல்ல; இன்றுங்கூடத்தான்! இலட்சியங்க ளிலே கருத்து வேற்றுமை ஏற்படுமிடத்து, அவரை எதிர்த்துப் பேசவும் எழுதவும் நான் தயங்கியதேயில்லை. ஆயினும், என்

சொந்த வாழ்க்கையில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதில் அவரையே வழிகாட்டியாகக் கொண்டுள்ளேன். இந்த உணர்வுதான் — உறவுதான் பதினாயிரக் கணக்கான ரூபாய் மதிப்புடைய தியாகி நிலத்தைத் திருப்பிக் கொடுத்துவிடக் கூடிய தியாக உணர்வை எனக்குத் தந்தது. அப்படிச் செய்வதற்காக ராஜாஜியோடு எத்தனையோ விஷயங்களில் கருத்து வேற்றுமை ஏற்பட்ட காலத்தில்கூட நான் வருத்தப்பட்டதில்லை.

ராஜாஜியின் வாக்குக்குக் கட்டுப்பட்டு தியாகி நிலத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டதனை நான் அவரிடம் கூறியதேயில்லை. நிலத்தைத் திருப்பிக் கொடுத்த ஓராண்டுக்குப் பின்னர் ஒருமுறை இதுபற்றிக் 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தியிடம் தற்செயலாகப் பிரஸ்தாபிக்க நேர்ந்தபோது, அவர், ''இது, ராஜாஜிக்குத் தெரியுமா?'' என்று கேட்டார். ''அவரிடம் நான் சொல்லவில்லை'' என்றேன். ''அப்படியா?'' என்று 'கல்கி' வியப்புற்றார்.

தியாகி மானிய நிலத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டதாக நான் கலெக்டருக்குக் கடிதம் எழுதிய பின்னரும் 'வினை' என்னை விடவில்லை. சில மாதங்களுக்குப் பின்னர் கலெக்டரிடமிருந்து எனக்கு வந்த கடிதத்தில், நில மானியத்தைத் திருப்பி விடுவதென்ற எனது முடிவை மீண்டுமொருமுறை உறுதிப் படுத்தி எழுதுமாறு கேட்கப்பட்டிருந்தேன். எனது முடிவை மாற்றிக் கொள்வதானால், நிலத்திற்கு அந்தப் பசலிக்குரிய தீர்வையைச் செலுத்துமாறும் கலெக்டர் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆம்; நான் கைவிட்ட தியாகி நிலத்தைத் திரும்பவும் அடைவதற்கு நானே எதிர்பாராத வகையில் எனக்கு ஒரு வாய்ப்புத் தரப்பட்டது. ஆனால், தியாகி நிலத்தைத் திருப்பி விடுவதென்ற எனது முடிவை உறுதிப்படுத்துவதாக கலெக்டருக்குப் பதில் எழுதி விட்டேன். அத்துடன், தியாகி நிலப் பிரச்சினையிலிருந்து என்னை நான் விடுவித்துக் கொண்டேன். இதிலே, 150 ரூபாயை இழந்ததுதான் நான் அடைந்த 'லாபம்!'

ஆந்திர மாநிலப் பிரிவினை

ராஜாஜி அமைச்சரவைக்கு ஆதரவு காட்டி வந்த அதே நேரத்தில், சென்னை மாநிலத்தை மொழிவாரி நாடுகளாகப் பிரிக்க வேண்டுமென்றும் கிளர்ச்சி செய்து வந்தேன். அந்தக் கிளர்ச்சியில் தமிழரசுக் கழகத்தை முழு அளவில் ஈடுபடுத்தினேன். ராஜாஜி பதவியேற்றதும் சென்னைக் கடற்கரையில் நடந்த முதல் பொதுக் கூட்டத்திலேயே — ராஜாஜியின் முன்னிலையிலேயே கீழ்வருமாறு கூறினேன்:

''ராஜாஜி பதவி வகிக்கும் காலத்திலேயே ஐக்கிய இந்தியாவில் தமிழகம் தனியரசாக — தமிழ் அரசாங்க மொழியாக ஆக்கப்பட வேண்டுமென்று தமிழ் மக்களாகிய நாம் விரும்புகிறோம். இந்தக் கோரிக்கையை இராஜாஜி நிறைவேற்றி வைப்பார் என்ற நம்பிக்கையோடுதான் தமிழரசுக் கழகம் அவரது அமைச்சரவைக்கு மனமுவந்து ஆதரவளித்து வருகிறது.

''தமிழரசுக் கழகம் காங்கிரசிடம் எதிர்பார்ப்பதெல்லாம் தமிழகத்தைத் தனி மாகாணமாக்க வேண்டும் என்பதாகும். காங்கிரஸ் கற்றுத் தந்ததும் நான் கனவு காண்பதுமான இன்பத் தமிழரசை விரைவில் அமைக்க வேண்டும் என்ற ஒரே கருத்துடன்தான் தேர்தல் களத்தில் காங்கிரசின் வெற்றிக்காகத் தமிழரசுக் கழகம் பாடுபட்டது.''

('தினமணி', 15.4.52, இதழில் வெளியானது)

தமிழரசுக் கழகத்தவர் செல்வாக்குப் பெற்றிருந்த காங்கிரஸ் கமிட்டிகள், நகர மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் ஆகியவற்றில் தமிழ் மாநிலம் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றி முதல்வர் ராஜாஜிக்கு அனுப்பி வைக்கும்படி செய்தேன்.

ஆந்திர மாநிலத் தலைவர்களும் தனி ஆந்திர மாநிலம் கோரும் கிளர்ச்சியைத் தீவிரப்படுத்தினர். டி.பிரகாசம் மிகுந்த ஆர்வம் காட்டினார். சுவாமி சீதாராம் என்ற ஆந்திர சந்நியாசி, சென்னைக் கோட்டை முன்பு ஆந்திர மாநிலம் கோரித் தாமும் தம்முடைய தொண்டர் குழாத்தினரும் மறியல் நடத்தப் போவதாக அறிவித்தார்.

ஆந்திரருக்கு ஆதரவு

ஆந்திரரின் தனி மாநிலக் கோரிக்கைக்கு எதிராகத் தமிழரசுக் கழகம் ராஜாஜி அமைச்சரவைக்கு ஆதரவு தராதென்பதைத் தெளிவுபடுத்தி நான் அறிக்கை விடுத்தேன். அதன் ஒரு பகுதி வருமாறு:

''மொழிவாரி மாகாணப் பிரிவினை சம்பந்தமாகத் தமிழர்களின் உணர்ச்சி ஆந்திரர்களுக்கு எந்த வகையிலும் குறைந்ததல்ல.

''எனது தலைமையிலுள்ள தமிழரசுக் கழகம் பொதுத் தேர்தலில் காங்கிரசின் வெற்றிக்கு உழைத்ததென்றால், தேர்தலுக்குப் பின்னர் காங்கிரஸ் ஆட்சி மொழிவாரி மாகாணப் பிரிவினையை அமுல் நடத்துமென்று நம்பியது தான் காரணம். இதில் ராஜாஜி அரசு தயங்கினால், ஒரு போராட்டத்தில் ஈடுபடவும் தமிழரசுக் கழகம் தயங்காது.''

('தினத்தந்தி', 16.4.52)

தமிழ்நாட்டில் தமிழரசுக் கழகம் நடத்திய மொழிவாரி மாநிலப் பிரிவினைக் கிளர்ச்சி வடக்கேயும் எதிரொலித்தது. பம்பாயிலிருந்து வெளிவரும் பிரபல ஆங்கில நாளேடான 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' தமிழரசுக் கழகக் கிளர்ச்சியை ஆதரித்து 23.4.52-இல் எழுதிய தலையங்கத்தில் ஒரு பகுதி வருமாறு:

''ஆந்திர மாகாணப் பிரிவினையை இன்னமும் தள்ளிப் போட்டுக் கொண்டே போனால் வடநாட்டுத் தொடர்பிலிருந்து பிரித்துவிட வேண்டுமென்று திராவிட இயக்கத்தார் கூறிவருகின்ற கோமாளித்தனமான கோரிக்கைக்குத்

தான் அதிக பலம் ஏற்பட்டு விடுமென்று தமிழரசுக் கழகத் தலைவர் ஸ்ரீ. கிராமணியார் கூறுவதில் பொருளுண்டு.''

''லண்டன் டைம்ஸ்'' என்ற பிரிட்டிஷ் பத்திரிகை எழுதிய தாவது:

''பொதுத் தேர்தலில் மேற்கு வங்காளம், சென்னை மாகாணம், ஐதராபாத்தில் ஒரு பகுதி, திருவிதாங்கூர் — கொச்சின் முதலிய இடங்களில் கம்யூனிஸ்டுகள் பெரும் அளவுக்கு வெற்றி பெற்றுள்ளனர். இதற்கு மூல காரணங் கள் பல இருப்பினும் மொழிவாரி மாகாணப் பிரிவினை நிறைவேற்றப்படாமலிருப்பது பற்றி மக்களிடையே உள்ள மனக்குறையும் ஒரு காரணமாகும். இந்தக் குறையைக் கம்யூனிஸ்டுகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். புதிதாக அமைந்துள்ள இந்திய அமைச்சர வைக்கு இது ஒரு அறைகூவலாகும்.''

ஒருபுறம் காங்கிரஸ் அமைச்சரவையின் காவலனாக இருந்து கொண்டு, இன்னொருபுறம் அந்த அமைச்சரவை விரும்பாத மாநிலப் பிரிவினைக் கிளர்ச்சியிலும் நான் ஆர்வங் காட்டி வந்தது, முதலமைச்சர் ராஜாஜிக்கு தருமசங்கடமாகத் தான் இருந்தது. ஆயினும், சகித்துக் கொண்டார். வெளியில் மாநிலப் பிரிவினையை விரும்பாதவர்போல ராஜாஜி காட்டிக் கொண்டாரென்றாலும், உள்ளூர ஆந்திர மாநிலத்தை மட்டும் உடனடியாகப் பிரித்து விடுவதனை அவர் விரும்பினார்.

ஆந்திரம் பிரிந்து போனால், தமது ஆட்சி கம்யூனிஸ்டு களின் தாக்குதலிலிருந்து தப்ப முடியுமென்று அவர் நம்பினார். மற்றும் ஆந்திரமில்லாத எஞ்சிய சென்னை ராஜ்யத்தில் காமராச ரின் கோஷ்டி அரசியலுக்கும் முற்றுப்புள்ளி விழுந்துவிடும் என்றும் அவர் தவறாக மதிப்பிட்டார். இந்த இரண்டு காரணங்க ளால்தான் முதல்வர் ராஜாஜி ஆந்திரத்தைப் பிரித்து விடுவதில் — தமது கொள்கைக்கும் எதிராக — ஆர்வமுடையவராக இருந்தார். ஆனால், பிரதமர் நேரு ஆந்திரப் பிரிவினைக்கு அது நேரமல்ல என்று கருதினார்.

திரு. காமராசர் ஆந்திரப் பிரிவினைக் கிளர்ச்சி விஷயத்திலே மதில்மேல் பூனைபோல் இருந்தார் — அதாவது, எந்தப் பக்கமும் அவர் சேரவில்லை. ஆந்திரப் பிரிவினையானது தமது கோஷ்டி அரசியலை வளர்க்குமா, அழிக்குமா? — என்பதில் அவருக்குத் தெளிவு ஏற்படவில்லை. அதனாற்றான், மவுனம் சாதித்தார்.

ஆந்திர உறுப்பினர்களில் சிலருடைய முயற்சியால் ஆந்திர மாநிலப் பிரிவினை கோரும் தீர்மானம் சட்டமன்றப் பேரவையில் கொண்டு வரப்பட்டது. ராஜாஜி, கொள்கை ரீதியில் அதனைத் தாம் விரும்பவில்லை என்று கூறிவிட்டு, ஆயினும், ஆந்திரரின் விருப்பத்திற்குத் தாம் தடையாக இருக்கப் போவதில்லையென்று கூறினார். தீர்மானம் ஒரு மனதுடன் நிறைவேற்றப்பட்டது. சட்டமன்ற முடிவை வரவேற்று நான் சென்னை கோகலே மன்றத்தில் கழகத்தின் சார்பில் பொதுக் கூட்டம் நடத்தினேன்.

சட்ட மேலவையில் முதன் முதலாக நான் நிகழ்த்திய சொற்பொழிவிலே தமிழ் மாகாணப் பிரிவினையை வற்புறுத்தி மிகுந்த உணர்ச்சியோடு பேசினேன். எனக்குப் பதிலளித்து பேசிய நிதியமைச்சர் சி.சுப்பிரமணியம்,

> *''கிராமணியாரின் உணர்ச்சி மிக்க பேச்சும், அவர் தம்முடைய கோரிக்கைக்கு ஆதரவாக எடுத்துக் காட்டிய ஆதாரங்களும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. ஆனால், நான் அவரைக் கேட்டுக் கொள்வதெல்லாம் கொஞ்சம் பொறுமை காட்டுங்கள் என்பதுதான்''*

என்று கூறினார். இப்படி அவர் கூறியபோது முதல்வர் ராஜாஜி அவருடைய அருகில்தான் இருந்தார். அவர் சொல்லித்தான் சி.சு. எனக்குப் 'பொறுமை'யைப் போதித்தார்.

இப்படி ஒரு புறம் ராஜாஜி அரசை ஆதரிப்பதும், இன்னொரு புறம் கொள்கை வெற்றிக்காக அதனோடு போராடுவதுமாக இருந்தேன். லட்சியத்தை விலைக்கு விற்று நான் யாரிடமும் எதற்காகவும் எந்தக் காலத்திலும் சரணடைந்ததே இல்லை.

கடந்த காலத்தில் மட்டுமல்ல; நிகழ்காலத்திலுந்தான்! வருங்காலத்திலும் இந்தக் 'கற்பை'க் கடைப்பிடிப்பேனென்ற உறுதி எனக்குண்டு.

பொட்டி சீராமுலு பட்டினி!

நான் எதிர்பாராத வகையில் ஆந்திர மாநிலப் பிரிவினையைத் துரிதப்படுத்தும் நிகழ்ச்சி ஒன்று ஏற்பட்டது. ஆம்; பொட்டி சீராமுலு என்ற ஆந்திர காங்கிரஸ் ஊழியர் ஒருவர், சென்னையில் ஆந்திர் மாநிலப் பிரிவினையை உடனடியாக அமுல் நடத்தக் கோரி சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினார். இந்தத் தொண்டரை நான் நன்கு அறிவேன். சிறந்த சத்தியாக்கிரகி! காங்கிரஸ் பணிகளிலே இவர் என்னுடன் தோழமை பூண்டு உழைத்திருக்கிறார். ஆனால், அப்பாவித் தொண்டர்! உண்மை ஊழியன் இந்த உலகத்தில் அப்பாவியாகத் தானே இருக்க முடியும்!

ஆந்திரத் தலைவர்களின் தூண்டுதல் பேரில்தான் சீராமுலு உண்ணாவிரதம் தொடங்கினாரென்று பேசப்பட்டது. பிரகாசம், புலுசு சாம்பமூர்த்தி போன்ற பெருந்தலைவர்கள் நாள் முழுவதும் உண்ணாவிரதியின் அருகிலிருந்து அவரை உற்சாகப் படுத்தி வந்தனர். உண்ணாவிரதத்தை நிறுத்த அல்ல; தொடர்ந்து கடைப்பிடிக்க. சத்தியாக்கிரகியானவன், சூழ்ச்சியாளனல்ல. ஆனால், சூழ்ச்சியாளரைப் புரிந்து கொள்ளும் திறமையுடையனாக இருக்க வேண்டும்; அப்பாவியாக இருந்துவிடக் கூடாது. இதனை முன் எப்போதையும் விட இப்போது நான் அதிகத் தெளிவாக உணர்ந்தேன்.

சென்னை மாநகராட்சியில் என் சகாக்களாக இருந்த ஆந்திர காங்கிரஸ் கவுன்சிலர்கள் வற்புறுத்தலுக்கிணங்க நான் ஒருமுறை பட்டினி கிடந்த பொட்டி சீராமுலுவைப் பார்த்தேன். அந்த வீரத்தியாகி என்னைக் கண்டதும் கைகூப்பி வணங்கி வரவேற்றார். அப்போது அங்கு ஆந்திரகேசரி பிரகாசம் அவர்களும் இருந்தார். அப்பெரியவர், பொட்டியின் உயிரைக் காப்பாற்ற நான் உதவி புரிய வேண்டும் என்றார். அதற்கு நான்

''சென்னை நகர்மீது உரிமை கொண்டாடுவதைவிட்டு ஆந்திர மாநிலம் கோரினால், தமிழரசுக் கழகம் ஆந்திரர்களுடன் பூரண மாக ஒத்துழைக்கும்'' என்றேன்.

பிரகாசம் சிறிது சினங்கொண்டவராகி, ''தமிழ்நாட்டி லுள்ள ஒவ்வொரு தாலுகாத் தலைநகரும் மாநிலத் தலைநகராக இருக்குமளவுக்கு வளர்ந்துள்ளன. ஈரோடின் நிலையிலுள்ள ஒரு நகரம்கூட ஆந்திராவில் இல்லை. இந்த நிலையில் சென்னை இல்லாத ஆந்திராவைக் கொடுத்தால் தலைநகருக்கு நாங்கள் எங்கே போவது?'' என்று படபடப்புடன் பேசினார். அவருடன் மேலும் விவாதம் நடத்த நான் விரும்பாமல், ''ஆந்திரத்திற்குத் தலைநகர் கொடுப்பது என் கையிலில்லை; டில்லி அரசின் கையில் இருக்கிறது'' என்று சொல்லிவிட்டு எழுந்திருக்க முயன்றேன்.

இந்த நிலையில், தலைவர் பிரகாசம் என் கைகளைப் பற்றிக் கொண்டு, ''ஆந்திர அரசு தற்காலிகமாகச் சென்னை யிலிருக்க அனுமதித்தாலும் போதும். விசால ஆந்திரம் அமை யுங்கால், எங்களுக்கு ஐதராபாத் நகரம் கிடைத்துவிடும்; நாங் கள் போய் விடுவோம். இதற்கு நீங்கள் இசைந்துவிட்டால் மற்றவர்கள் எதிர்க்கமாட்டார்கள்'' என்று அன்பு ததும்பக் கூறினார். அதற்கு, ''ஆந்திர அரசுக்குத் தற்காலிகமாகச் சென் னையில் இடமளிக்க மற்றவர்கள் இசைந்தாலும், நான் இசைய மாட்டேன்'' என்று உறுதியாகக் கூறிவிட்டுத் திரும்பினேன்.

உண்மையில், பொட்டி சீராமுலுவிடம் எனக்கு அனுதாபம் இருந்தது. தலைவர் பிரகாசம் அவர்களிடம் நான் பெருமதிப்பு வைத்திருந்தேன். ஆகவே, ஆந்திர மாநில அரசு சென்னை நகரில் தற்காலிகமாக விசால ஆந்திரம் அமையும்வரை இருப்ப தனை நான் ஏற்றிருக்க முடியும். ஆனால், ஆந்திரர்களிடம் எனக்கு நம்பிக்கையில்லை. தற்காலிகமாக இடம் தந்தால், பின்னர் அவர்கள் அதனை நிரந்தரமாக்கிக் கொள்ளப் போராடு வார்கள் என்ற அச்சம் எனக்கிருந்தது. இன உணர்ச்சியற்ற தமிழர்கள் ஆந்திர அரசைச் சென்னையிலிருந்து வெளியேற்று

வது அவ்வளவு சுலபமில்லை என்பதனை நான் உணர்ந்திருந் தேன். ஆந்திரர்கள் இன உணர்ச்சியை இனவெறியாகவே வளர்த்துக் கொண்டிருந்த நேரம் அது.

தலைவர் பிரகாசத்திடம் பேசியபோது, சென்னையை ஆக்கிரமிப்பதில் அவர் கொண்டிருந்த உறுதியைக் கண்டு வியந்தேன். அந்த உறுதி நியாயமற்றது என்பதனை எடுத்துக் காட்டி அவர் ஏற்கும்படி செய்துவிட முடியுமென்ற நம்பிக்கை யுடன்தான் அவரைப் பார்க்கச் சென்றேன். ஆனால், அதிலே நான் வெற்றியடையவில்லை. ஆயினும், பிரகாசமும் அவருட னிருந்த மற்ற ஆந்திரர்களும் என்னை மிகுந்த மரியாதையுடன் நடத்தினர்.

பிரகாசம் அவர்களைச் சந்தித்துப் பேசிய இரு நாட்களுக் குப் பின், சட்டமேலவையில் அவசர கால வினா ஒன்றின் மீது துணை வினா ஒன்றை எழுப்பினேன். அது வருமாறு:

''ஆந்திரரான பொட்டி சீராமுலு சென்னை மீது உரிமை கொண்டாடி, தமிழ் மக்கள் மத்தியிலே பட்டினி கிடப்பதால், நகரிலுள்ள தமிழர் — ஆந்திரரிடையே துவேஷம் வளர்கிறதென்பதனை அரசு உணர்கிறதா? உணர்கிறதென்றால், அவரைக் கைது செய்து, தமிழர் — ஆந்திரர் உறவைக் காப்பாற்ற அரசு முன் வருமா?''

எனது கேள்விக்கு, ''உண்ணாவிரதியின் உயிர் அபாய நிலையிலிருப்பதால், கனம் அங்கத்தினர் தனது வினாவுக்கு என்னிடம் விடையை எதிர்பார்க்க வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்று ராஜாஜி பதிலளித்தார்.

சீராமுலு அமரரானார்!

முதல்வர் பதிலை வரவேற்ற தோழர் வி.சர்க்கரை செட்டி யார், ''ஆந்திரர் விஷயத்தில் நண்பர் கிராமணியார் கடுமையாக நடந்து கொள்வது நல்லதல்ல'' என்று கூறினார். ஆந்திர சகோதரர்கள் விஷயத்தில் — குறிப்பாக, உண்ணாவிரதியான

பொட்டி சீராமுலு விஷயத்தில் நான் கடுமையாக நடந்து கொள்கிறேன் என்பது எனக்கே தெரிந்திருந்தது. ஆயினும், தமிழகத்தின் — என் தாயகத்தின் தலைநகரைக் காப்பாற்ற நான் கடுமையாக நடந்துகொள்ள வேண்டியிருந்தது.

ஒருநாள் பொட்டி சீராமுலு இறந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு, உண்மையிலே நான் கண் கலங்கினேன். வேலூர் சிறையில் நாங்கள் ஒன்றாக இருந்த காலத்தில் ஏற்பட்ட நட்பு அவரது மறைவுக்காக நான் கண்ணீர் சிந்தும்படி செய்தது. உண்மையில், பொட்டி சீராமுலுவுக்கிருந்த ஆந்திர இன உணர்ச்சி பாராட்டத் தக்கதுதானே! பழிக்க வேண்டியது மத்திய அரசைத்தான். ஆம்; 1919 முதலே மொழி வாரி மாநிலத்திற்கு ஆதரவு தந்து வந்த காங்கிரசும், அதன் செல்வாக்கிலிருந்த மத்திய அரசும் ஆந்திர மாநிலத்தைக் காலத்தோடு அமைத்துத் தந்திருந்தால், சென்னை பற்றிய பிரச்சினையே எழுந்திருக்காது. பொட்டி சீராமுலு உயிர்ப்பலியாகி இருக்கமாட்டார்! பொட்டி யின் உயிரை உண்டது காங்கிரசின் தடம் புரண்ட போக்குதான்!

ஆந்திரர்கள் இந்த உண்மையை உணரவில்லை. ஆந்திரப் பிரிவினைக்குத் தமிழ் நாட்டார்தான் தடையாக இருப்பதாகக் கருதி அவர்கள் தமிழினத்தாரையே துவேஷித்தார்கள். பொட்டி சீராமுலு உயிர் நீத்த செய்தி பரவியதும், ஆந்திர நாட்டிலே அராஜகம் தலைவிரித்தாடியது. அரசு அலுவலகங்கள் ஒன்று விடாமல் நாசமாக்கப்பட்டன. ஆந்திர நாட்டின் வழியாகச் செல்லும் ரயில்கள் நிறுத்தப்பட்டன. அந்த ரயில்களில் பயணம் செய்த தமிழர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். ஆந்திராவி லுள்ள சிறுபான்மையினரான தமிழர்கள், போலீசாரின் பாது காப்பை நாடவேண்டி ஏற்பட்டது. சீராமுலு உயிர்நீத்தபின் சில நாட்கள் வரை ஆந்திராவில் அரசு இல்லை என்று சொல்லும்படி யாக வெறியாட்டம் நடந்தது. சொத்து நாசங்களைப் பொருட் படுத்த வேண்டாமென்றும் உயிர்ச்சேதம் ஏற்படாமல் பார்த்துக் கொண்டால் போதுமென்றும் முதல்வர் ராஜாஜி ஆந்திராவி லுள்ள அதிகாரிகளுக்கு அவசர ஆணை அனுப்பியதாக அறிந்தேன்.

அனுதாபத் தீர்மானத்தை எதிர்தேன்!

சீராமுலுவின் மரணம் தமிழ்நாட்டில் எந்தவிதமான பரபரப்பையும் ஏற்படுத்தவில்லை. ஆனால், சென்னையில் இங்குமங்குமாகச் சிறிது சலசலப்பு இருந்தது. ஆந்திராவில் தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள் என்ற செய்தியை வானொலி வாயிலாக அறிந்த சென்னை நகர மக்கள் ஆத்திரமடைந்தனர். அதனால், நகரில் ஆந்திரர் வாழுமிடங்களுக்குப் போலீஸ் பாதுகாப்பு தரப்பட்டது. பொட்டி சீராமுலு ஆரிய வைசியர். அதனால் நகரிலுள்ள ஆரிய வைசியர் கடைகள் மறைந்தவருக்கு அனுதாபம் காட்டும் வகையில் மூடப்பட்டன. அன்று, சென்னை கார்ப்பொரேஷன் கவுன்சில் கூடவிருந்தது. சீராமுலுவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் கவுன்சில் கூட்டத்தை ஒத்தி வைக்க வேண்டுமென்று ஆந்திர காங்கிரஸ் உறுப்பினர்கள் மாநகராட்சியின் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் பிரேரணை கொண்டு வந்தனர். நான் அதனை எதிர்த்தேன். பொட்டி சீராமுலுவின் மரணத்திற்கு அனுதாபம் காட்டுவதை நான் எதிர்க்கவில்லை. ஆயினும், தகராறுக்குரியதாகிவிட்ட சென்னையின் மாநகராட்சியில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றுவது, சென்னை மீது அவர் உரிமை கொண்டாடியதற்கும் அனுதாபம் காட்டியதாகத் தமிழ்நாட்டுக்கு வெளியேயிருப்பவர்கள் நினைத்துவிடக் கூடும் என்று ஐயுற்றேன். அதனாற்றான், அனுதாபத் தீர்மானத்தை எதிர்த்தேன். காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களில் பெரும்பாலோர் என் கருத்தை ஆதரித்தனராதலால், அது கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப் படவில்லை. ஆந்திரர்களின் ஒத்திவைப்புத் தீர்மானத்தை கவுன்சில் கூட்டத்தில் கொண்டு வரவில்லை. உண்மையில் யான் மேற்கொண்ட இந்த நடவடிக்கை என் மனதுக்கே வேதனையளித்ததென்பதனை இங்கு நான் ஒளிக்காமல் சொல்லியாக வேண்டும்.

மறுநாள் நான் ராஜாஜியைச் சந்தித்தபோது, 'அனுதாபத் தீர்மானத்தை எதிர்த்திருக்க வேண்டாமே!' என்றார். அத்துடன் நில்லாமல், 'ஆமாம்; நமது அனுதாபத்தை ஆந்திரர்கள் தவறாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடும்' என்றும் கூறினார்.

நேருவின் பிரகடனம்

ஆந்திராவில் ஏற்பட்ட கலவரம் மூன்று நாட்கள் நீடித்தது. பொட்டி சீராமுலு சாதாரணத் தொண்டர்தான்; பெருந்தலைவரல்ல! அப்படியிருந்தும், ஆந்திராவில் பெருங்கலவரமே உருவாகி விட்டது! நல்ல வேளையாக, ராஜாஜி அமைச்சரவையிலிருந்த ஆந்திர அமைச்சர்கள் நிதானமிழக்கவில்லை. அதனால், ராஜாஜி ஆட்சி பிழைத்தது!

நிலைமை மேலும் மோசமாகக் கூடுமென்ற அச்சத்தால், ''ஆந்திர மாநிலம் 2.10.53-இல் பிரிக்கப்படும்'' என்று பிரதமர் நேரு 19.12.52-இல் நாடாளுமன்றத்தில் அவசரம் அவசரமாக அறிக்கை விட்டார். அந்த அறிக்கைக்குப் பின் ஆந்திராவில் அமைதி ஏற்பட்டது.

சென்னை நகரம் அல்லாத ''தகராறுக்கு இடமில்லா'' தெலுங்கு வழங்கும் மாவட்டங்களைக் கொண்டு — சித்தூர் மாவட்டம் முழுவதையும் சேர்த்து — ஆந்திர மாநிலம் அமைக்கப்படும் என்றும், ஆந்திரத் தலைநகர் பற்றிப் பின்னால் அறிவிக்கப்படும் என்றும் நேருஜி தமது அறிவிப்பில் விளக்கியிருந்தார். ஆந்திராவில் தோன்றிய அராசகத்தால் கலக்கமடைந்த நேருஜி, சென்னை மாநில முதல்வர் ராஜாஜியிடம் கூடக் கலந்து ஆலோசிக்காமல் ஆந்திர மாநிலப் பிரிவினைப் பிரகடனத்தை வெளியிட்டார்.

ஆந்திர மாநிலம் விரைவில் அமைக்கப்படுமென்ற அறிவிப்பு எனக்கு மகிழ்ச்சியைத் தந்ததென்றாலும், ஆந்திரத் தலைநகர் பற்றி அறிவிக்காமல் விட்டது எனக்குப் பயத்தைத் தந்தது. அத்துடன், தகராறுக்கிடமில்லாத தெலுங்கு மாவட்டங்களின் பட்டியலில் சித்தூர் மாவட்டத்தையும் சேர்த்தது எனக்கு மிகுந்த ஆத்திரத்தைத் தந்தது. சித்தூர் மாவட்டத்தில் வடவேங்கட மலைக்குத் தெற்கேயுள்ள தாலுகாக்கள் தமிழகத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்று தமிழரசுக் கழகம் கோரி வந்ததை நேருஜி மறைமுகமாக நிராகரித்துவிட்டதாகவே நான் கருதினேன். அதனால், நேருஜியின் அறிவிப்பை எதிர்த்துப் போராடத் தயாரானேன்!

எனது வாழ்நாளில் தமிழினத்தின் நல்வாழ்வுக்கான எத்தனையோ பிரச்சினைகளில் ஈடுபட்டு நான் உழைத்திருக்கிறேன். ஆனால், மிகுந்த கவலையோடும் தோற்றுவிடுவோமோ என்ற அச்சத்தோடும், நான் ஊண் உறக்கமின்றிப் பாடுபட்ட ஒரு பிரச்சினை உண்டென்றால், அது தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை பற்றிய பிரச்சினைதான். ஆம்; தணிகை வட்டத்தையும், குமரி மாவட்டத்தையும் மீட்கும் கிளர்ச்சிகளிலே கூட நான் இவ்வளவு கவலை உணர்ச்சியுடன் பாடுபட்டதில்லை. சென்னை விஷயத்தில் மட்டும் ஆழ்ந்த கவலையுடனும் தோல்வி மனப்பான்மையுடனும் ஈடுபடக் காரணம், ஆந்திர இனத்தவர் காட்டிய தளரா உறுதியும், தமிழினத்தவரிடையே அந்தரங்கத்திலே சிலர் செய்து வந்த துரோகமும் ஆகும். மத்திய அரசும் ஓரளவு ஆந்திரர் பக்கத்திலேயே அனுதாபம் காட்டி வந்தது. ஆந்திரத் தலைவர்களிலே ஒருவர் விடாமல் — தத்துவ வித்தகரான டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் உட்பட — அத்தனை பேரும் சென்னை நகரைப் பறித்தே தீருவதென்ற உறுதியுடன் பாடுபட்டனர்.

மீண்டும் சென்னைப் பிரச்சினை

''தகராறுக் கிடமில்லாத தெலுங்கு மாவட்டங்களைக் கொண்ட ஆந்திர மாநிலம் அமைக்கப்படும்'' என்று பிரதமர் நேரு நாடாளுமன்றத்தில் அறிக்கைவிட்ட பின்னர், சென்னை பற்றிய பிரச்சினை திரும்பவும் முன்னணிக்கு வந்தது. ''அமைக்கப்படும் ஆந்திர மாநிலத்தில் சென்னை நகரம் இருக்காது'' என்று நேருஜி தமது அறிக்கையில் திட்டவட்டமாகக் கூறியிருந்தாரென்றாலும், ''ஆந்திர மாநிலத்தின் தலைநகர் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்'' என்று அவர் கூறியதால் சென்னை பற்றிய ஆந்திரர் நப்பாசை வலுத்தது. ஆனால், ''மதறாஸ் மனதே'' என்று இப்போது அவர்கள் கூச்சலிடவில்லை. அதில் மாறுதலிருந்தது.

திரு. பிரகாசம், சென்னை நகர் பற்றிக் கீழ்வருமாறு அறிக்கை விட்டார்:

''சென்னை நகரம் முழுவதையும் ஆந்திரத்தோடு சேர்க்காவிடில், கூவத்தை நடுவே வைத்து, தென் சென்னையைத் தமிழ்நாட்டுக்கும், வடசென்னையை ஆந்திரத்துக்குமாகப் பங்கு போட வேண்டும். அதுவும் இயலாதென்றால், சென்னை நகரை ஆந்திரம், தமிழ்நாடு ஆகிய இரண்டு மாநிலங்களுக்கும் பொதுநகராகச் செய்ய வேண்டும். அதுவும் இயலாதென்றால், சென்னை நகரைப் பிரதம கமிஷனர் மாகாணமாக்க வேண்டும்.''

ஆந்திர மாநிலம் கிடைக்கக் காரணமாக இருந்த பொட்டி சீராமுலுவைத் தமது அறிக்கையில் பிரகாசம் பாராட்டினார். ஆம்; ''காந்திஜியை விடவும் பொட்டி சீராமுலு சிறந்தவர்'' என்றார். ''ஆந்திரர்'' என்ற இனவெறி அவரது காந்தி பக்தியைக்கூடப் புறங்கண்டு விட்டது!

ஆந்திர மாகாண காங்கிரசின் அவசரக் கூட்டம் சென்னையிலே நடைபெற்றது. அக்கூட்டம், சென்னை நகரம் பற்றித் திரு.டி. பிரகாசம் விடுத்த அறிக்கைக்கு ஆதரவளித்தது. ஆந்திர மாநிலப் பிரிவினை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை — குறிப்பாக, ஆந்திரத் தலைநகர் பிரச்சினையை ஆய்ந்து பரிந்துரை தர இராஜஸ்தான் மாநில நீதிபதி திரு. வாஞ்சு என்பவர் மத்திய அரசால் நியமிக்கப்பட்டார்.

திரு. வாஞ்சு சென்னை வருங்கால், சென்னை நகர்மீது ஆந்திரர் கோரிக்கையை வற்புறுத்தி அவருக்கெதிரே பெரிய ஆர்ப்பாட்டம் நடத்த ஆந்திரர்கள் ஆயத்தமாயினர். சென்னை நகரிலுள்ள தங்கம் — வெள்ளி நகை வணிகர்களான ஆரிய வைசியர்கள் ஆந்திர மாகாண காங்கிரசுடன் ஒத்துழைத்தனர். வட இந்தியர்களான குஜராத்தியரும் மார்வாரிகளும் ஆந்திரருக்கே ஆதரவளித்தனர். இதற்கென்று ''சென்னை ஆந்திர பரிஷத்' என்ற புதிய அமைப்பொன்றையும் நிறுவினர். திரு. பிரகாசம் சென்னையிலே முகாம் அமைத்தார். நகரில் அடிக்கடி பொதுக் கூட்டங்களில் பேசி தமிழரல்லாதார் அனைவரையும் ஒன்றுதிரட்ட முயன்று வந்தார்.

சென்னை பற்றிய பிரச்சினையிலே தமிழினத்தார் நிலை ஆரம்பத்தில் பரிதாபகரமானதாக இருந்தது தி.க. தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. ''சென்னை ஆந்திரத்தில் இருந்தாலென்ன தமிழகத்தில் இருந்தாலென்ன! எங்கிருந்தாலும் திராவிடத்தில் தானே இருக்கப் போகிறது'' என்று அறிவித்துவிட்டார். திராவிடர் முன்னேற்றக் கழகம் பெரியார் அளவுக்குச் செல்லவில்லையென்றாலும், இந்தப் பிரச்சினையில் தானே பொறுப்பேற்றுத் தமிழகத்தின் தலைநகரைக் காப்பதற்கு அது முன்வரவில்லை. அதுவும், அப்போது தி.க.வைப் போலத் திராவிட நாடு கொள்கையைக் கொண்டிருந்ததல்லவா!

இந்த நேரத்தில் திரு. காமராசர்தான் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்தார். ஆம்; 1952 பொதுத் தேர்தலில் காங்கிரசுக்குத் தோல்வியேற்பட்டதையொட்டி — மேலிடத்து ஆணைப்படி — தலைமைப் பொறுப்பிலிருந்து விலகியவர், திரும்பவும் முதல்வர் ராஜாஜியின் ஆதரவோடு அதைப் பிடித்துவிட்டார் என்பதனை இங்குக் குறிப்பிட வேண்டும்.

திரு. காமராசர், ஆந்திர மாநிலம் பிரிந்து செல்வதை விரும்பவில்லை. அது, தனது கோஷ்டி அரசியலுக்கு உதவிகரமாக இருக்காதென்று அவர் கருதினார். ஆயினும், பிரிவினை தவிர்க்க முடியாததாகி விட்டதனை உணர்ந்து, மௌனத்தில் மறைந்து கொண்டு விட்டார்! ஆம்; சென்னை நகர் பற்றிக்கூட எதுவும் கூறாமல் அவர் மௌனம் சாதித்தார். அவரைப் பற்றிப் பலவிதமான வதந்திகள் உலவின. அவருடைய ஆப்த நண்பரும் அரசியல் சீடருமான திரு. என்.சஞ்சீவி ரெட்டியார்,

> *''திரு. காமராசரின் மௌனம் புத்திசாலித்தனமானது. பொருள் நிறைந்தது. மற்ற தமிழ்த் தலைவர்களும் அவரைப் பின்பற்ற வேண்டும்''*

என்று அறிக்கை விட்டார். ஆந்திரத் தலைவர்களிலொருவரான திரு. தென்னேட்டி விசுவநாதன் என்பவர்,

> *''ஆந்திரர்களின் கோரிக்கைகளில் சிலவற்றைத் தமிழ்த் தலைவர்களில் சிலரே ஒப்புக் கொண்டுள்ளனர்''*

என்று, செய்தி நிருபர்களுக்களித்த பேட்டியில் கூறினார். அவரும் திரு. காமராசரை நினைவில் கொண்டுதான் அப்படிக் கூறினார்.

இந்த நேரத்தில் தமிழகத்து அரசியல் அமைப்புகளிலே தமிழரசுக் கழகம் ஒன்றுதான் தமிழினத்தின் சார்பில் உறுதியாகப் பணியாற்ற முன் வந்தது. ஆந்திரர்களுக்குப் போட்டியாக சென்னையில் பேட்டைக்குப் பேட்டை பொதுக் கூட்டங்கள் நடத்தித் தமிழ் மக்களுக்கு விழிப்பூட்டியது.

மேயரின் ஒத்துழைப்பு

நல்லவேளையாக, அப்போது என் அரிய நண்பர் திரு.த. செங்கல்வராயன் சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்தார். நான் ஆல்டர்மேனாக இருந்தேன். அதனால், சென்னை நகரைக் காக்கும் பணிக்கு மேயரைப் பயன்படுத்தினேன். நகரில் கழகம் நடத்திய கூட்டந்தோறும் சென்னை மேயர் பேசினார். ஒரு கூட்டத்திலே,

> *''சென்னையில் வாழும் சிறுபான்மையினரான ஆந்திரர்கள் சென்னை பற்றிய கிளர்ச்சியிலே ஆந்திர காங்கிரசுடன் ஒத்துழைத்தால், அவர்களுக்குக் குடிதண்ணீர் வழங்க மாட்டேன். பிணம் புதைக்கவும் சுடுகாட்டில் அவர்களுக்கு இடம் கிடைக்காது''*

என்று முழங்கினார். அவரது பேச்சு பிரத்யட்ச நிலைக்குப் பொருந்தாதென்றாலும், தமிழ் மக்களுக்கு உணர்ச்சியூட்ட அப்படியும் பேச வேண்டியிருந்தது. மேயரின் இந்தக் கருத்து பத்திரிகைகளில் வெளியானதால், ஆந்திரர்கள் அவருக்கு எதிராகச் சலசலப்பு செய்தனர். ஆனால், அவர் அஞ்சவில்லை.

இந்நிலையில் திரு. வாஞ்சு என்ற ஒருநபர் கமிஷன் முதலில் ஆந்திர நாட்டுக்குச் சென்றார். அங்கு அவர் சென்றவிடமெல்லாம் மாபெரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி சென்னை நகரில் ஆந்திர அரசுக்கு இடம் தருமாறு சிபாரிசு செய்யுங்கள் என்று கோஷித்தனர் ஆந்திர மக்கள். அவர்கள் நடத்திய

ஆர்ப்பாட்டங்களால் நீதிபதி வாஞ்சி பெரிதும் கவர்ச்சியடைந்தார் என்பது, அந்த ஆர்ப்பாட்டங்களுக்குப் பிறகு அவர் பத்திரிகை நிருபர்களிடம் பேசியதிலிருந்து தெரிந்தது. அது கண்டு நான் பெரிதும் கவலை அடைந்தேன்.

வாஞ்சு சென்னை நகருக்கு வந்தபோது தமிழரசுக் கழகத்தின் சார்பில் என் தலைமையில் ஒரு தூதுக்குழு கிண்டி ராசபவனத்தில் அவரைப் பேட்டி கண்டது. சென்னை நகரம் தமிழகத்தின் தலைநகராகத்தான் இருக்க வேண்டுமென்பதனை நான் வாஞ்சுவிடம் உறுதியாகக் கூறினேன். ஆந்திர அரசு ஒரு இடைக்காலத்திற்குக் கூட சென்னையில் இருக்கக் கூடாது என்றும் கூறினேன். திரு. வாஞ்சுவைச் சந்தித்த பின்னர், சென்னையைத் தமிழகத்திற்கு மட்டுமே உரிய தலைநகராக்குவதென்பது அவ்வளவு சுலபமானதாக இருக்காது என்பதனை நான் உணர்ந்து கொண்டேன். ஆந்திர நாட்டிலும் சரி, சென்னையிலும் சரி, ஆந்திரர்கள் காட்டிய ஆவேசமும், இன வழிப்பட்ட கட்டுப்பாடும் தமிழரிடத்தில் வெளிப்படவில்லை. ஆந்திரத்திலே கடைசி ஒரு ஆந்திரர்கூட சென்னை நகரைப் பறிக்கும் முயற்சிக்கு ஆவேசத்துடன் ஆதரவு காட்டினார். தமிழகத்திலே பொதுஜன உணர்ச்சி உறங்கிக் கொண்டிருந்தது. தலைவர்களிடையேயும் உண்மையான ஆர்வமில்லை. சந்தர்ப்பம் நிர்ப்பந்தித்ததால் ஒரு சிலர் உள்ளுணர்வின்றி வெளிப்பார்வைக்கு எனக்கு ஆதரவு காட்டினர்.

தமிழரிலே படித்த வகுப்பாரின் மனப்பான்மை எனக்கு வியப்பைத் தந்தது. அவர்கள் சென்னையில் ஆந்திரர் ஆதிக்கம் பெறுவதை விரும்பவில்லை. அந்த அளவு அவர்களுக்கு 'டமிலர்' உணர்வு இருந்தது. ஆனால், சென்னை நகரை கமிஷனர் பிரதேசமாக — அதாவது, மத்திய அரசின் நிர்வாகப் பிரதேசமாகச் செய்வதை மனமார விரும்பினர். இதற்குக் காரணம், வகுப்புவாரி பிரதிநிதித்துவமற்ற வகையில் உத்தியோகங்களும், மத்திய அரசு அளவுப்படியான உயர் சம்பளச் சலுகையும் கிடைக்குமென்று அவர்கள் கருதியதுதான்.

முதல்வர் ராஜாஜியின் பிரகடனம்

இந்த நிலையில் கடுமையான முயற்சியை மேற்கொண்டால் தான் சென்னையைக் காப்பாற்ற முடியுமென்பதனை உணர்ந்தேன். சென்னை மாநிலச் சட்டமன்ற ஆந்திரரல்லாத உறுப்பினர்களில் ஒவ்வொருவரிடமாக அணுகி நானும் சென்னை மேயரும் சென்னை நகரைக் காக்கும் புனிதப் பணிக்கு ஆதரவான கூட்டறிக்கையில் கையொப்பம் பெற்றோம். சுமார் 200 பேர் அவ்வறிக்கையில் கையொப்பமிட்டனர். அதனைப் பிரதம மந்திரிக்கு அனுப்பினேன். சென்னை மாநில நாடாளுமன்ற உறுப்பினரிலே ஆந்திரரல்லாதார் 32 பேர் டில்லியிலிருந்தபடி கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

ராஜாஜியின் நிலைமை தெளிவாக இருந்தது. இயற்கையிலேயே அவர் மொழிவாரிப் பிரிவினைக்கு எதிரானவர்தான் என்றாலும், இந்த நேரத்தில் அவர் ஆந்திர மாநிலத்திற்கு விடை கொடுத்தனுப்பவும், சென்னை நகரைக் காக்கவும் மிகுந்த உறுதி காட்டினார். அவசியம் நேரிட்டபோதெல்லாம் என்னை அழைத்து சென்னையைக் காக்கும் கிளர்ச்சியைத் தீவிரப்படுத்தும்படியும் தூண்டி வந்தார்.

சென்னை மாநிலச் சட்டமேலவையில் 9.12.52-இல் யான் கேட்ட குறுகியகால கேள்விக்கு ராஜாஜி அளித்த பதில் வருமாறு:

''சென்னை நகரம் தமிழ்நாட்டுடன் சேர்ந்த பகுதி. சென்னை நகர மக்களும், அந்நகருக்கு வடக்கே வெகு தூரம் வரை வசிப்பவர்களும் தமிழர்களே. ஆகவே, சென்னை நகரைத் தமிழ்நாட்டிலிருந்து பிரித்துத் தனி நிர்வாகத்தின் கீழ் வைக்க முடியாது. சென்னையைத் தனி ஆந்திர ராஜ்யத்தின் தலைநகராகவும் செய்ய முடியாது. சென்னை நகர நிர்வாகம் பற்றிப் பேசவும் நிபந்தனைகள் விதிக்கவும் ஆந்திரர்களுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது. சென்னை நகரத்தின் ஜனத் தொகையில் நூற்றுக்கு அறுபத்தெட்டு பேர் தமிழர். பதினான்கு சதவிகிதம்

பேர்தான் தெலுங்கர். சென்னை நகரம் பற்றிய கோரிக்கை யையும் அதன் எதிர்காலம் பற்றி எழுப்பப்பட்டுள்ள நிபந்தனைகளையும் கைவிடும் பட்சத்தில் தனி ஆந்திர அரசை நிறுவ ஆந்திர நண்பர்களுடன் சேர்ந்து நானும் பாடுபடத் தயார்.''

ராஜாஜியின் இந்த அறிவிப்பு எனக்கு மகிழ்ச்சியைத் தந்ததென்றாலும், ஒரு மனக் குறையையும் ஏற்படுத்திவிட்டது. ஆந்திர அரசு சென்னை நகரில் இடைக்காலத்திற்குக்கூட இருக்கக் கூடாதென்று அவர் கூறவில்லை. அவருடைய எண்ணம் அதுதான் என்பதனை நான் அறிவேன். ஆனால், ராச தந்திரி யான அவர் அதற்குத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள விரும்பாதவரானார்.

இருமுனைகளில் போராட்டம்!

நீதிபதி வாஞ்சுவிடம் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பிலும் ஒரு மனு கொடுக்கப்பட்டது. அதிலே ஒரு குறையும் இருக்க வில்லை. தமிழினத்தின் எண்ணத்தைச் சரியாகவே பிரதிபலித் திருந்தது. தமிழ்நாடு காங்கிரஸ். சென்னை நகரைக் காக்க அது செய்த அதிகபட்சமான சேவை இது ஒன்றுதான்.

ஆந்திரப் பிரிவினைப் பிரகடனம் வெளியானதும் நான் இருவேறு முனைகளில் கிளர்ச்சியைத் தொடங்க வேண்டியவ னானேன். ஒரு முனை, தமிழகத்தின் வடக்கெல்லை; மற்றொரு முனை, தலைநகர். என்னுடைய சக்தியை நான் அறிவேன். அதனை அதிகப்படியாக என்றுமே நான் மதித்ததில்லை; எனது தமிழரசுக் கழகத்தின் ஆற்றலையும் ஆள் பலத்தையும் நான் கூடுதலாக மதிப்பிட்டதில்லை. ஆயினும், துரதிர்ஷ்டவசமாக, வடக்கெல்லையை மீட்பதிலும், தலைநகரைக் காப்பதிலும் நானும் தமிழரசுக் கழகமும்தான் அதிகப்படியாகப் பொறுப் பேற்க வேண்டியிருந்தது.

சென்னை மேயர் திரு.த. செங்கல்வராயனும், ஆல்டர் மேனான நானும் சென்னை நகரைக் காக்கும் பணியிலே ஒருமன துடன் பாடுபட்டோம். நான் சொன்னதை எல்லாம் செய்து

வந்தார் மாநகராட்சி மேயர். ரிப்பன் கட்டிடத்திலுள்ள மேயர் அறையிலே 13.2.53 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டமொன்றைக் கூட்டினார். அதற்கு முன்பே மேயரும் நானும் எடுத்துக் கொண்ட முயற்சியால்தான் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கையொப்பத்தைப் பெற்ற கூட்டறிக்கை 3.2.53-இல் வெளியானது. மேயர் அறையில் கூடிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டமும் ஏற்கனவே வெளியான கூட்டறிக்கையின் கருத்தை உறுதிப்படுத்தும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

கடற்கரைக் கூட்டம்

சென்னை மேயர் தமது சொந்தப் பொறுப்பில் 16.3.53 அன்று திருவல்லிக்கேணிக் கடற்கரையில் கட்சிச் சார்பற்ற வகையில் ஒரு பொதுக் கூட்டத்தை நடத்தினார். அதற்கு அவரே தலைமை வகித்தார். அந்தக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான உழைப்பு முழுவதும் என்னுடையதாகும். முதல்வர் ராஜாஜியின் ஆலோசனையின் பேரிலேயே நானும் மேயரும் இந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தோம். பெரியார் ஈ.வெ.ரா.வையும் இந்தக் கூட்டத்திற்கு அழைக்குமாறு ராஜாஜி கூறினார். நான்,

> *''அவர்தான் சென்னை ஆந்திராவுக்குப் போனாலும், தமிழ்நாட்டிலிருந்தாலும் திராவிடத்தில்தானே இருக்கப் போகிறது என்று சொல்லிவிட்டாரே! தமிழ்நாட்டில்தான் இருக்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு அவர் வருவாரா?''*

என்றேன். ''இந்தக் கூட்டத்தில் நாயகர் பேசுவதை நான் விரும்புகிறேன் என்று அவரிடம் சொல்லுங்கள்; அவர் வருவார்'' என்று சொன்னார். நானும் மேயரும் சென்று பெரியாரை அழைத்தோம். ராஜாஜி எதிர்பார்த்தபடி பெரியாரும் எங்கள் அழைப்பை ஏற்றுக் கொண்டார். கடற்கரைக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஈ.வெ.ரா. நான், எஸ்.எஸ். கரையாளர் (த.நா.கா. துணைத் தலைவர்), திரு.மீனாம்பாள் சிவராஜ், திரு. எஸ். முத்தையா முதலியார், திரு. எம். பக்தவத்சலனார் ஆகியோர் பேசினோம்.

சென்னை நகரைக் காப்பதற்காக அனைத்துக் கட்சியினரும் ஒன்று திரண்டு கூட்டம் நடத்திய நாளிலே தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு.கு. காமராசர் சென்னையிலில்லை. மதுரையி லிருந்தார். சென்னையை மீட்கும் கிளர்ச்சியிலே இன்னமும் தாம் ஒதுங்கி நிற்பதோ, ஒதுக்கப்பட அனுமதிப்பதோ தனக்கு நன்மை தராது என்பதை உணர்ந்தவர்போல, தமது மவுனத்தைக் கலைத்து திடீரென ஒரு அறிக்கை விட்டார். அதிலே,

> *''சென்னை நகரிலே ஆந்திரருக்கு எந்தவிதமான பங்கு தந்தாலும் சரி; இதுவரை கண்டிராத அளவுக்குப் பெருங் கிளர்ச்சி மூண்டெழும்''*

என்று குறிப்பிட்டிருந்தார். இதைப்பற்றி ராஜாஜியிடம் நான் பேசியபோது, ''காமராசர் மிகுந்த புத்திசாலி'' என்று சுருக்க மாகக் கூறினார்.

த.அ.க. மாநில மாநாடு

மாநிலச் சட்டமன்ற - நாடாளுமன்றத் தமிழக உறுப்பினர் களின் கூட்டறிக்கைகளும் தமிழக அனைத்துக் கட்சித் தலைவர் களின் பொதுக் கூட்டமும் மட்டுமே சென்னை நகரைக் காக்கப் போதுமானவை அல்ல' என்பதனை உணர்ந்தேன். அதனால், இந்த முயற்சிகளை எல்லாம் புறக்கணித்து, மத்திய அரசு ஆந்திர அரசுக்குச் சென்னை நகரில் ஒரு இடைக்காலத்திற்கு இடந்தருவதென முடிவெடுத்தால், அதனை எதிர்த்துப் போராடு வதற்கான முன்னேற்பாடுகளிலும் ஈடுபட்டேன். தமிழரசுக் கழக இரண்டாவது மாநில மாநாட்டை சென்னை திருவல்லிக்கேணி பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலே கூட்டினேன். தமிழினத்தார் அனைவருடைய கண்ணும் கருத்தும் இந்த மாநாட்டின் மீது இருந்தன. இந்த மாநாட்டிற்கு முதல்வர் ராஜாஜியை அழைத் தேன். அவருக்கும் வர விருப்பந்தான். ஆனால், போர்க்குரல் கொடுப்பதற்ககக் கூட்டப்பட்டிருக்கும் இந்த மாநாட்டிலே முதல் வரான தாம் கலந்து கொள்வது கூடாதென அவர் என்னிடம் கூறினார். நானும் அதனை உணர்ந்தேன்.

1953 ஜனவரி 24,25 தேதிகளில் த.அ.க. 2ஆவது மாநில மாநாடு கூடியது. முதல் நாளில் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை

தலைமையில் இலக்கிய மாநாடு நடைபெற்றது. டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தார். செட்டி நாட்டரசர் எம்.ஏ. முத்தையா செட்டியார் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

இந்த இலக்கிய மாநாட்டிலும் சென்னைப் பிரச்சினை பற்றியே அதிகமாகப் பேசப்பட்டது. டாக்டர் ரா.பி. சேதுப் பிள்ளை, ''தமிழரசுக் கழகத்தைத்தான் தமிழ்நாடு நம்பியிருக் கிறது. சென்னையைக் காக்க ம.பொ.சி. காலாலிடும் கட்டளை யைத் தலையால் நிறைவேற்ற நான் தயார்'' என்று முழங்கினார். அவரது குரல் இன்னமும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக் கிறது.

மத்திய அரசின் முன்னாள் நிதியமைச்சர் டாக்டர் ஆர்.கே. சண்முகம் அவர்கள், கடுமையாக நோயுற்றிருந்த நிலையில் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கென்றே கோவையி லிருந்து சென்னை வந்தார். நாற்காலியில் அமர்ந்த நிலையில் மாநாட்டில் குழுமியிருந்த மக்களைப் பார்த்து அவர் கூறிய வார்த்தைகள் இவை:

''சென்னை, தமிழகத்தின் உட்பகுதி; தமிழருக்குச் சொந்தமானது. சிவஞானம் சென்னையைக் காப்பார்; தமிழக எல்லைகளையும் மீட்பார் — நம்புங்கள்.''

இதைச் சொன்னபின், என் இரு கைகளை இறுகப் பற்றிக் கொண்டு உணர்ச்சிப் பெருமிதத்துடன் என்னை வாழ்த்தினார். இந்த மாநாடுதான் டாக்டர் ஆர்.கே.எஸ். கலந்து கொண்ட கடைசி நிகழ்ச்சி. இதற்கு 3 மாதங்களுக்குப் பின் அவர் இயற்கை எய்தினார். ஆம்; தமிழரசுக் கழகம் சென்னையைக் காத்ததை, எல்லைகள் மீட்டதை அவர் கண்கள் காணவில்லை.

மறுநாள் நடந்த அரசியல் மாநாட்டில் நான் தலைமை வகித்தேன். ஔவை தி.க. சண்முகம் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து மாநாட்டைச் சிறப்பாக நடத்தி வைத்தார். பேராசிரியர் ந.சஞ்சீவி மாநாட்டைத் தொடங்கி வைத்தார். எனது தலைமையுரையிலே சென்னை நகரைக் காப்பதிலே தமிழரசுக் கழகத்துக்குள்ள உறுதியை ஐயத்திற்கிடமின்றி

வெளிப்படுத்தினேன். தமிழ்ப் பெரியார் திரு.வி.கலியாண சுந்தரனார் அரசியல் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். அவர் ''தமிழ் நாடே நண்பர் சிவஞானத்தை நம்பியிருக்கிறது'' என்று பேசினார்.

சீர்காழி திரு.ஜி. சுவாமிநாதன் அவர்கள் முயற்சியால் மாணவர் மாநில மாநாடொன்றும் டாக்டர் மு.வ. தலைமையில் நடத்தப்பட்டது. அம் மாநாட்டிலே நாஞ்சில் மணிவர்மன், கோவை பி.எஸ். ரசிதாசலம் பி.ஏ., ஆர். கந்தசாமி, ஆர். தட்சிணாமூர்த்தி முதலியோருட்பட மாணவர் பலர் போர் முரசு கொட்டினர்.

எம். பக்தவத்சலனார், எம்.ஏ சிதம்பரம் செட்டியார், கோவை சி.எஸ். இரத்தினசபாபதி முதலியார், ஜனாப் அப்துல் அமீத்கான், நாரண- துரைக்கண்ணன் ஆகியோர் மாநாட்டில் கலந்து கொண்டனர். சென்னை நகரைக் காப்பது பற்றியே எல்லோரும் பேசினர். மாநாடு கோலாகலமாக நடைபெற்றது. 'சென்னை தமிழருடையதே' என்னும் வாசகம் பொறிக்கப்பட்ட பாட்சுகளை ஒவ்வொருவரும் விலை கொடுத்து வாங்கி, தத்தம் மார்புகளில் அணிந்து கொண்டனர். தமிழர் என்னும் இன உணர்ச்சி வெள்ளப் பெருக்கெடுத்தோடியது!

நாமக்கல் கவிஞர், தவத்திரு குன்றக்குடி அடிகளார், தொழிலதிபர் ஜி.டி. நாயுடு, அமைச்சர் சி.சுப்பிரமணியம், மரகதம் சந்திரசேகரன் ஆகியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர். ஆம்; தமிழ்நாடே தமிழரசுக் கழக மாநாட்டைக் கண்ணிமைக்காமல் கண்டு களித்தது.

மாநாட்டிலே, சென்னை நகரை ஆந்திரத்துடன் சேர்ப்பதோ, நகரைப் பிளந்து ஆந்திரத்துக்குப் பங்களிப்பதோ, தமிழக — ஆந்திர அரசுகளின் கூட்டுத் தலைநகராக்குவதோ, மத்திய அரசின் நிர்வாகப் பிரதேசமாக செய்வதோ கூடாதென்றும்; தமிழகத்திற்கே உரிய தலைநகராக நீடிக்க வேண்டுமென்றும், இதற்கு மாறாக, மத்திய அரசு நடவடிக்கை எடுத்தால், தமிழரசுக் கழகம் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அமைக்கப்படவிருக்கும் ஆந்திர மாநிலத்தில் தகராறுக்கிட மான சித்தூர் மாவட்டத்தைச் சேர்க்கக் கூடாதென்றும், அதனை எஞ்சிய சென்னை ராஜ்ஜியத்திலேயே விட்டு வைக்க வேண்டு மென்றும் கோரும் தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டது.

இம் மாநாட்டில், ஆந்திரம் அமையும் நாளிலேயே ''தமிழ் நாடு'' என்னும் பெயரில் தமிழ் வழங்கும் மாவட்டங்களைக் கொண்ட தமிழ் மாநிலம் அமைத்தாக வேண்டும் என்று கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

தமிழக — ஆந்திர எல்லைப் பகுதியிலிருந்து திருவாளர் கள் ஆசிரியர் மங்கலங்கிழார், வழக்கறிஞர் எஸ்.அரங்கநாத முதலியார், திரு.கே. விநாயகம் ஆகியோரும் இம் மாநாட்டிற்கு வந்திருந்து வடக்கெல்லைப் பிரச்சினை பற்றிப் பேசினர்.

தமிழக — கேரள எல்லைப் பகுதியிலிருந்து திரு. நாஞ்சில் மணிவர்மன், திரு.இரா. சுப்பிரமணியம் பி.ஏ. ஆகியோர் வந்திருந்து தெற்கெல்லை மீட்சி பற்றிப் பேசினர்.

அப்போது பிரெஞ்சுப் பிடியிலிருந்த புதுவையிலிருந்து வித்வான் சிவ. கண்ணப்பர் சென்னை மாநாட்டில் கலந்து கொண்டு புதுவை — காரைக்கால் பகுதிகளை விடுவிப்பது பற்றிப் பேசினார்.

பத்திரிகைகளின் ஆதரவு

இம் மாநாட்டின் நடவடிக்கைகளைச் செய்திப் பத்திரிகை கள் சிறந்த முறையில் பிரசுரித்தன. மாநாடு முடிந்தபின் ஒவ்வொரு பத்திரிகையும் தலையங்கம் எழுதி மாநாட்டின் தீர்மானங்களை ஆதரித்தன. 'சுதேச மித்திரன்' தலையங்கத்தின் ஒரு பகுதி வருமாறு:

''ஆந்திரருக்கும் நமக்கும் தகராறின்றி நியாயமாகப் பாகப்பிரிவினை நடந்தேற வேண்டுமென்பதே தமிழரின் ஆவல். அத்தகைய ஆவல் உண்மையில் ஆந்திரருக்கும் உண்டானால், அவர்கள், அசட்டுத்தனம், அக்கிரமம்

இரண்டும் மலிந்த தங்கள் கோரிக்கைகளை உடனடியாகக் கைவிட வேண்டும். இதுதான் அன்று மாநிலத் தமிழரசுக் கழக மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்கள் பலவற்றின் முக்கிய கருத்து.

''சென்னை நகரம் தங்களுக்குக் கிடைக்காதென்று தெரிந்தபின் அதில் தற்காலிகமாகத் தங்கள் தலைமை ஸ்தானத்துக்கு இடங்கொடுக்கும்படி ஆந்திரர்கள் கேட்கின்றனர். மேற்குறித்த மாநாட்டிற்குத் தலைமை வகித்த ஸ்ரீ. சிவஞான கிராமணி இடித்துக் காட்டியதுபோல், தன்மானமுள்ளவர்கள் வெளியிடக் கூடிய கோரிக்கை அல்ல அது.

''ஆந்திரருக்குத் தனி ராஜ்யம் தோன்றும்போதே தமிழ் ராஜ்யமும் ஸ்தாபிதமாகிவிட்டதென்ற பிரகடனம் வெளியாக வேண்டுமென்று தமிழரசுக் கழகம் கோருவது இயற்கையே.''

('சுதேசமித்திரன்', 27.1.53)

'தினமணி'யில் வெளியான தலையங்கத்தின் ஒரு பகுதி வருமாறு:

''சித்தூர் ஜில்லாவில் தமிழர் பெரும்பான்மையோராக வசிக்கும் பிரதேசங்கள் ஆந்திராவிலிருப்பது நியாயமல்ல. அம்மாதிரி இருக்கும் பகுதிகளைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து ஆவன செய்வது அவசியமென்றே கருது கிறோம். இதில் அனாவசியமான காலதாமதம் கூடாது. ஏற்கனவே இத்தகைய பிரதேசங்களில் சூழ்நிலை கெட்டு தாபங்கள் அதிகரித்து வருகின்றன. எனவே, தமிழரசுக் கழக மாநாடு கோரியது போன்று நியாயந் தவறாத விதத்தில் எல்லைப் பகுதிகள் பிரச்சினையிலும் தாமதமின்றி ஸ்ரீ. வாஞ்சு கவனம் செலுத்துவாரென்று நம்பு கிறோம்.''

('தினமணி', 26.1.53)

கம்யூனிஸ்டு வார ஏடான 'ஜனசக்தி' எழுதியதன் ஒரு பகுதி வருமாறு:

''தலைகொடுத்தேனும் தலைநகர் காப்போம்! கடைசி தமிழன் உயிருள்ளவரை எமது உரிமைகளை விடோம்! வீரப்பரம்பரையை மறவோம்! வீறுகொண்டு எழுவோம்! தமிழ்த் தாயைப் பாதுகாப்போம்'' என்ற வீரமிக்க கோஷங்கள் தமிழரசுக் கழக மாநாட்டில் விண்ணைப் பிளந்தன. தமிழ் ஆர்வமும் ஆவேசமும் கரைபுரண்டோடின. உரிமைக்காகத் தலைநிமிர்ந்து மார்பு காட்டி நிற்கும் தமிழனைக் கண்டு பூரிப்படையாதவர் யாரிருக்க முடியும்.''

('**ஜனசக்தி**', 1.2.53)

'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'கல்கி' வார இதழில் எழுதப்பட்ட நீண்ட தலையங்கத்தின் ஒரு பகுதி வருமாறு:

''தமிழரசுக் கழகம் ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய நாளிலிருந்து தமிழ்நாட்டின் எல்லைப் பாதுகாப்பில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இராஜ்யங்கள் பிரியும் கட்டம் நெருங்கியிருக்கும் இச்சமயத்தில் அக்கழகத்தாரும் கழகத் தலைவர் ஸ்ரீ கிராமணியாரும் விழிப்புடனிருந்து பணியாற்றி வருவது இயற்கையேயாகும்.

''கழகத்தின் மாநில மாநாட்டில் குமரி முனையிலிருந்து திருவேங்கடம் வரையில் தமிழ் ராஜ்யத்தில் சேரவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. ஆந்திர ராஜ்யம் பிரிந்த பிறகு மிச்சமுள்ள சென்னை ராஜ்யப் பகுதிக்குத் 'தமிழ் இராஜ்யம்' எனப் பெயர் தரவேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது. வெளியூர்களிலிருந்து நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் வந்து கலந்துகொண்ட இந்த தமிழரசு மாநில மாநாடு சென்னை நகர மக்களிடையே பெருமிதமான உற்சாகத்தை உண்டு பண்ணியிருக்கிறது.''

('**கல்கி**', 15.2.53)

பொதுவாக, தமிழரசுக் கழக மாநில மாநாடு நான் எதிர்பார்த்ததைவிடவும் தமிழின மக்களிடையே உற்சாகத்தை உண

டாக்கியது. ஆனால், வேதனைமிக்க ஒரு செய்தியை இங்கு நான் சொல்லியாக வேண்டும் — அதாவது, தமிழரசுக் கழகத் தைத் தவிர, தமிழ்நாட்டிலுள்ள வேறெந்த அரசியல் கட்சியும் சோதனைமிக்க அந்த நேரத்திலே, சென்னையைக் காப்பது பற்றி — எல்லைகளை மீட்பது பற்றி — தமிழ் மாநிலம் காண்பது பற்றி ஆலோசிக்கப் பொதுக் குழுவையோ, மாநில மாநாட் டையோ கூட்டியதில்லை. அதே நேரத்தில், ஆந்திர மாநில காங்கிரஸ் மாநாடு, அதன் மாநில எல்லைக்கு வெளியே சென்னை நகரிலுள்ள நேரு ஸ்டேடியத்தில் நடைபெற்றதை இந்தக் கட்சிகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன. அவை பார்லிமெண்டரிக் கட்சிகள். தமிழகத்தை — அதன் தலைநகரை ஆள விரும்பாத — பார்லிமெண்டரி கட்சியல்லாத தமிழரசுக் கழகம் ஒன்றுதான் அன்று தமிழினத்தார் சார்பில் செயல்பட்டது என்பதனை வருங்காலத் தலைமுறைகளுக்கு வரலாறு கூறுமல்லவா!

திடுக்கிட வைத்த தகவல்!

பிப்ரவரி முதல் வாரத்தில் என்னைப் பெரும் துயரத்தில் ஆழ்த்தக்கூடிய செய்தி ஒன்று சென்னை 'மெயில்' பத்தரிகையில் வெளி வந்தது. நீதிபதி வாஞ்சு தனது பரிந்துரையை மத்திய அரசிடம் தந்துவிட்டதாகவும், அதிலே,

(1) ஆந்திராவின் தலைநகர் இடைக்கால ஏற்பாடாக சென்னையில் இருக்க வேண்டும்;

(2) தமிழ் — ஆந்திர மாநிலங்களுக்கு ஒரே கவர்னர் இருக்க வேண்டும்;

(3) இரண்டு மாநிலங்களுக்கும் ஒரே நீதிமன்றம் இருக்க வேண்டும்

என்று அவர் பரிந்துரைத்திருப்பதாக 'மெயில்' பத்திரிகையின் 'டெல்லி நிருபர்' தகவல் தந்திருந்தார். இந்தச் செய்தி எனக்கு மட்டுமல்லாமல், தமிழகத்தின் தனி நலன்களில் அக்கறையுள்ள அனைவருக்குமே அதிர்ச்சியைத் தந்தது. 'மெயில்' பத்திரிகை படித்த பின்னர் அன்றிரவு உண்ணவோ, உறங்கவோ இயலாதவ னானேன். இழக்கக்கூடாத ஒன்றை இழந்துவிடும் நேரம் வந்து

விட்டது போன்ற ஒரு துக்க உணர்ச்சி என் மனத்துள் ஏற்பட்டது. ஆறுதல் பெறுவதற்காகவும், அடுத்து செய்ய வேண்டியவைபற்றி ஆலோசனை பெறுவதற்காகவும், மறுநாள் காலை ராஜாஜி இல்லத்திற்குச் சென்றேன். அவர், 'மெயில்' பத்திரிகையின் டில்லி நிருபர் தந்துள்ள செய்தி உண்மையாக இருக்கக் கூடும் என்று உறுதியாகக் கூறினார்.

'நான் என்ன செய்ய வேண்டும்?' என்று அவரைக் கேட்டேன். அதற்கு அவர், ''இதுவரை செய்தவை போதா; இன்னும் கொஞ்சம் கடுமையாக உழையுங்கள். இதைத் தவிர வேறு எதையும் சொல்லக்கூடிய நிலையில் இப்போதைக்கு நான் இல்லை'' என்று கூறினார்.

ராஜாஜியின் தியாக உணர்வு!

இந்தச் சந்திப்புக்கு மூன்று நாட்களுக்குப் பின்னர், ராஜாஜி புதுடெல்லி சென்று பிரதமர் நேருவைச் சந்தித்துப் பேசினார். நேருஜி அழைக்காமல் தாமாகவே வலுவில் சென்றார் என்று தான் நினைப்பு இருக்கிறது. இந்தச் சந்திப்பிலே சென்னை விஷயத்தில் நேருஜி வெளியிட்ட கருத்தும், அவர் நடந்து கொண்ட முறையும் ராஜாஜிக்கு நம்பிக்கையின்மையை விளைவித்தது. அதனால், நேருவைச் சந்தித்த பின்னர்,

> *''சென்னை நகரத்தில் ஆந்திரருக்கு இடம் தருவதென்று மத்திய அரசு முடிவெடுப்பதானால், அதனை அமுல் நடத்துவதற்கு ஒத்துழைப்பு தரும் சக்தி எனக்கு இல்லை. அந்த நிலையில் வேறு முதலமைச்சரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் என்று நான் பிரதமரிடம் கூறி விட்டேன்''*

என்று டெல்லியில் செய்தி நிருபர்களிடம் ராஜாஜி கூறினார்.

ராஜாஜி சென்னை திரும்பியதும் ஒரு மணி நேரம்கூட தாமதிக்காமல் என்னை அழைத்துப் பேசினார். அப்போது, அவர் கூறியது:

> *''நேருஜியும் மத்திய அரசும் சென்னை நகரில் ஆந்திர அரசுக்கு இடம் தர முடிவெடுத்து விட்டார்கள் என்றே*

தெரிகிறது. இதுபற்றி என்னிடம் விவாதிக்கவும் விரும்ப வில்லையென்பதை நேரு வெளிப்படுத்தினார். எனது நிலையைத் தெளிவுபடுத்திவிட்டுத் திரும்பி வந்து விட்டேன். நான் அங்கு சொன்னதைப் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். சென்னையைக் காப்பது இனி உங்கள் கையில் தான் இருக்கிறது. என்ன செய்வீர்களோ? செய்ய வேண்டியவற்றையெல்லாம் செய்யுங்கள்''

என்று சோகம் நிறைந்த குரலில் கூறினார். அவரது குரலில் தோல்வி மனப்பான்மை தொனிக்கக் கண்டேன். ஆனால், சென்னையைக் காப்பாற்ற ராஜாஜி காட்டிய உறுதியும், அதற்காகப் பதவியைத் துறக்கவும் அவர் தயாராக இருந்ததும் எனக்கு எல்லையற்ற ஆற்றலைத் தந்தது. அவர் கையை வலுப்படுத்துவதற்குச் செய்ய வேண்டியவற்றையெல்லாம் செய்தே தீருவது என்ற முடிவுடன் அவரது இல்லத்திலிருந்து திரும்பினேன்.

அங்கிருந்து நேராக செட்டிநாட்டாரசர் ராஜா சர்.எம்.ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் அரண்மனைக்குச் சென்றேன். அவருடன் சிறிது நேரம் உரையாடி சென்னையைக் காக்க நான் வகுத்திருந்த திட்டத்திற்கு அவருடைய ஒத்துழைப்பைக் கோரினேன். அவரும் மிகுந்த மகிழ்ச்சியோடு உதவி புரிந்தார். அன்று மட்டும் இரண்டாயிரம் தந்திகள் மத்திய உள்துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரிக்குத் தமிழ்நாடு முழுவதிலுமிருந்து கிடைக்க ஏற்பாடு செய்தேன். தமிழரசுக் கழகக் கிளைகள், நகர மன்றங்கள், வணிக நிறுவனங்கள், பெரும்பாலான காங்கிரஸ் கமிட்டிகள், இலக்கிய மன்றங்கள் ஆகியவற்றின் சார்பில் தந்திகள் அனுப்பப்பட்டன. நாடறிந்த பிரமுகர்கள் பலரும் தத்தம் பெயரால் தந்திகள் அனுப்பினர்.

'தந்திகளால் புதைத்துவிட்டார்களே!'

ஒருநாள் முழுவதும் வேறு நினைப்பின்றி இந்த ஒன்றையே நினைத்து உழைத்தேன். செட்டி நாட்டரசர் மாளிகையின் தொலைபேசிக்கு அன்று ஓய்வே இல்லை. அனுப்பப்பட்ட தந்திகளில் கடுமையான வாசகங்கள் பயன்படுத்தப்பட்டன. சென்னையில் ஆந்திர அரசுக்கு இடம் கொடுத்தால் உள்நாட்டுக்

கலகம் கிளம்பும், இரத்த ஆறு ஓடும் என்றுகூடத் தந்திகள் அனுப்பப்பட்டன.

இப்படி, தந்தி அனுப்பப்பட்ட சில நாட்களுக்குப் பின்னர் திரு. காமராசரை நான் தற்செயலாகச் சந்தித்துப்பேச நேர்ந்த போது,

''உங்கள் தமிழ்நாட்டுக்காரர்கள் என்னைத் தந்திகளா லேயே புதைத்துவிட்டார்களே! அவ்வளவு தந்திகளா? இந்தத் தந்திகள் கிடைத்த பின்னர் நானும் மறுபரிசீலனை செய்து வருகிறேன்''

என்று உள்துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி தம்மிடம் கூறியதாகக் காமராசர் எனக்குத் தகவல் தந்தார்.

தந்திகளை அனுப்பியதோடு நான் அமைதி பெற்றுவிட வில்லை. சென்னை மாநகராட்சி உறுப்பினர்கள் பதினைந்து பேர்களுடைய கையெழுத்தைப் பெற்று மாநகராட்சியின் சிறப் புக் கூட்டத்தைக் கூட்டுமாறு சென்னை மேயருக்கு வேண்டு கோள் அனுப்பினேன். அந்தச் சிறப்புக் கூட்டத்தில்,

''சென்னை நகரை இரண்டாகப் பிரிப்பதோ, ஆந்திர — தமிழக அரசுகளின் பொதுநகர் ஆக்குவதோ, கமிஷன் பிரதேசமாகச் செய்வதோ, ஆந்திர அரசு இடைக்காலத்திற் குச் சென்னையில் இருக்க அனுமதிப்பதோ கூடாது — என்று இந்த சென்னை மாநகராட்சி, சென்னை மாநில அரசுக்கும் இந்திய அரசுக்கும் தெரிவித்துக் கொள்கிறது''

என்ற தீர்மானத்தைக் கொண்டுவரப் போவதாகவும் எழுத்து மூலம் மேயருக்கு அறிவித்தேன்.

இந்தக் கூட்டத்தைக் கூட்டச் செய்வதற்கான முயற்சியை மேற்கொள்ளுமுன்பு முதல்வர் ராஜாஜி அவர்களையோ, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரையோ நான் கலந்துகொள்ள வில்லை. எனது தீர்மானத்தில் ஓர் இடைக்காலத்திற்குக்கூட சென்னை நகரில் ஆந்திர அரசுக்கு இடமளிக்கக் கூடாது என்றுள்ள பகுதியை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்ப திலே எனக்கு ஐயம் இருந்ததுதான் நான் அவர்களைக் கலக்காத தற்குக் காரணமாகும்.

ராஜாஜியின் ஊசலாட்டம்!

மாநகராட்சியின் சிறப்புக் கூட்டம் நடைபெறவிருக்கும் செய்தியைப் பத்திரிகைகளில் பார்த்ததும் மேயரையும் என்னையும் ராஜாஜி தமது இல்லத்திற்கு அழைத்துப் பேசினார்: ''ஆந்திர அரசுக்குத் தற்காலிகமாகக் கூட சென்னையில் இடம் தரக்கூடாது'' என்ற வாசகத்தைத் தீர்மானத்திலிருந்து நீக்கி விடும்படி மேயரையும் என்னையும் ராஜாஜி கேட்டுக் கொண்டார். மேயர் அவர்கள் வெகு சுலபத்தில் அதற்கு இணங்கிவிட்டார். நான் பிடிவாதமாக மறுத்துவிட்டேன். ஆந்திர அரசுக்குச் சென்னையில் தற்காலிகமாகவும் இடந்தரக்கூடாது என்பதுதான் ராஜாஜியினுடைய எண்ணமாக இருந்தது. ஆயினும், சென்னை நகரத்திற்கு பிரதிநிதித்துவம் வாய்ந்த மாநகராட்சியே அப்படி ஒரு முடிவெடுப்பதால், பின்னால் அதிலிருந்து பின்வாங்க முடியாமல் போகக்கூடும் என்று அவர் அஞ்சினார். கர்நூல் நகரை ஆந்திரத்தின் தலைநகராகப் பிரகடனம் செய்யவும், ஆந்திர அரசின் கெஜட்டையும் அந்த நகரிலிருந்தே வெளியிடவும் ஆந்திரர்கள் ஒப்புக் கொண்டால், சட்டமன்றம், செக்ரடேரியட் ஆகியவற்றை ஓர் இடைக்காலத்திற்குச் சென்னையில் வைத்துக் கொள்ள அனுமதிக்கலாம் என்று ராஜாஜி கருதினார். இதனை ஒளிவு மறைவின்றி என்னிடமும் கூறினார். இதற்குத் தடையாகவுள்ள மாநகராட்சியின் தீர்மானத்தில் சொன்ன வாசகத்தை நீக்கிடக் கோரும் திருத்தம் வந்தால் அதை ஏற்குமாறு என்னைக் கேட்டுக் கொண்டார்.

சென்னை நகரைக் காப்பாற்ற முதல்வர் பதவியையும் துறக்கத் தயாராக இருந்த ராஜாஜியின் தியாக உணர்வு என்னை மிகவும் கவர்ந்தது. இயற்கையாகவே நான் அவரிடம் பெரு மதிப்பு வைத்திருப்பவன். இருந்தும், அவசியம் ஏற்படுமானால், சில நிபந்தனைகளோடு ஆந்திர அரசுக்குச் சென்னையில் இடம் தர நாம் தயாராக இருக்க வேண்டுமென்று ராஜாஜி கூறியது எனக்கு வேதனையைத் தந்தது. வியப்புகூட அடைந்தேன். இந்த விஷயத்தில் மேயரும் என்னைக் கைவிட்டுவிட்டார். நிபந்தனை எதுவும் இல்லாமலே ஆந்திர அரசுக்குச் சென்னையில் இடம் தரத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரும் தயாராக இருப்பதை நான் அறிவேன். ஆகவே, நான் தனிமைப்

படுத்தப்பட்டு விட்டது போன்ற தோல்வி உணர்ச்சியை அடைந் தேன்.

சென்னை மாநகராட்சியின் உறுப்பினர்களிலே அப்பட்ட மான ஆந்திரர் நால்வருக்குமேலில்லை. அவர்களிலே, கர்நூல் வாசியும் முன்னாள் மேயருமான ஜனாப் அப்துல் அமீத்கான் எனது முயற்சிக்கு ஆதரவாக இருந்தார். மற்றுள்ள மூவர் கடுமையாக எதிர்த்தனர். தெலுங்கை வீட்டு மொழியாகக் கொண்ட இரு மொழியாளர்கள் மாநகராட்சியில் ஏராளமாக இருந்தனர். அவர்களில் சிலர் இப்படியும் அப்படியுமாக ஊசலா டிக் கொண்டிருந்தனர். ஊசலாட்டத்தில் இருந்தவர்களை என் சார்பில் இழுத்துக் கொள்ள முயற்சி எடுத்தேன்.

மாநகராட்சிக் கூட்டம் நடைபெற இருந்த முதல் நாளிலே கோகலே மன்றத்தில் த.அ.க. சார்பில் ஒரு பொதுக்கூட்டத்தை நடத்தினேன். அதிலே,

> *''நாளை நடைபெறும் மாநகராட்சிக் கூட்டத்தின் நடவடிக்கைகளைக் காணப் பொதுமக்கள் பெரும் திரளாக வரவேண்டும். பார்வையாளர் காலரியில் இருக்க இடம் கிடைக்காவிட்டாலும், ரிப்பன் கட்டிடத்துக்கு வெளியே தமிழர்கள் வெள்ளம் போல் கூடவேண்டும். தமிழர் தீர்மா னத்திற்கு எதிராக வாக்களிப்பவர்களை நகர மக்கள் இனம் தெரிந்துகொள்ள வேண்டும்''*

என்று பேசி மக்களுக்கு உணர்ச்சியூட்டினேன்.

இந்தப் பேச்சு பத்திரிகைகளில் வெளியானதால் ஊசலாட் டத்தில் இருந்தவர்களில் சிலர் என்னுடன் சேர்ந்து கொண்டனர். சிலர் கூட்டத்திற்கே வராமல் தலைமறைவாகி விட்டனர்.

''தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்பேன்''

மேயர் அறிவித்திருந்தபடியே மாநகராட்சியின் சிறப்புக் கூட்டம் கூடியது. சென்னை பற்றிய தீர்மானத்தை நான் முன் மொழிந்தேன். முன்னாள் மேயர் திரு.எம். இராதாகிருஷ்ணப் பிள்ளை வழிமொழிந்தார்.

தீர்மானத்திலுள்ள 'ஆந்திர அரசுக்கு ஓர் இடைக்காலத்திற்கும் இடம் தரக்கூடாது' என்ற வாசகத்தை நீக்க வேண்டுமென்ற திருத்தத்தை ஆந்திரரான திரு. குண்டூர் நரசிம்மராவ் முன்மொழிந்தார். டாக்டர் கே.வி.சாமி என்ற ஆரிய வைசிய ஆந்திரர் அதனை ஆதரித்தார்.

தீர்மானத்தை முன்மொழிந்து நான் பேசியபோது, ஒரு கட்டத்தில், ''தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்பேன்'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் கோஷித்தேன்.

''கடைசி ஒரு தமிழன் உயிருடன் இருக்கும்வரை ஆந்திரர்கள் சென்னையை அடைய விடமாட்டோம் — தற்காலிகமாகவும் ஆந்திர அரசுக்கு இடம் தரமாட்டோம். தமிழ்நாட்டிலிருந்து அதைத் துண்டிக்கவும் விடமாட்டோம்''

என்று உறுதியுடன் கூறி, என் பேச்சை முடித்தேன்.

மாநகராட்சியின் நடைமுறை விதியை மீறி, பார்வையாளர்கள் காலரியில் இருந்த மக்கள், நான் பேசிக் கொண்டிருந்த போது இடையிடையே கைதட்டி ஆரவாரம் செய்தனர். விதிமுறையின்படி, அப்படி ஆரவாரம் செய்தவர்களை மேயர் எச்சரிக்க வேண்டி ஏற்பட்டது.

நீண்ட விவாதத்திற்குப் பின்னர், ஆந்திரர் கொண்டுவந்த திருத்தத்தின்மீது வாக்கெடுக்கப்பட்டது. ஆதரவான வாக்குகள் 3; எதிரான வாக்குகள் 51. அதனால் திருத்தம் தோற்றது. எனது அசல் தீர்மானம் நிறைவேறியது.

சென்னை மாநகராட்சியில் எனது தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடனே, அன்றிரவே, அதன் நகல் நீண்ட தந்தி வடிவத்தில் குடியரசுத் தலைவர், பிரதமர், உள்துறை அமைச்சர், சென்னை மாநில முதல்வர் ஆகியோருக்கு மேயரால் அனுப்பப்பட்டது.

சென்னை நகரில் ஆந்திரர் ஒரு கணிசமான அளவில் வாழ்வதாகச் சென்னைக்கு வெளியேயுள்ள மக்களுக்கு — குறிப்பாக, மத்திய அரசிலுள்ள, தமிழரல்லாதாருக்கு ஒரு மயக்கமிருந்தது. ஆந்திரத் தலைவர்கள், சென்னையிலுள்ள இரு மொழி (தமிழ் — தெலுங்கு) பேசுவோரையும் சேர்த்துக்

குழப்பியதே இதற்குக் காரணம். ஆனால், சென்னை மாநகராட்சியில் நிறைவேற்றப்பட்ட எனது தீர்மானத்திற்குக் கிடைத்த வாக்குகள் நகரின் நிலைமையை தெளிவுபடுத்திவிட்டன. இதனால், சென்னை நகர்பற்றி வடக்கிலுள்ளவர்களுக்கிருந்த மயக்கம் தீர்ந்தது. சென்னை தமிழருடையதே என்பது தெளிவாகிவிட்டது.

என் தாயகத்தின் — தமிழகத்தின் தலைநகரம் காப்பாற்றப் பட்டு விட்டதென்றே நான் கருதினேன். சென்னை மாநகராட்சியின் தீர்மானத்திற்கு எதிராகச் செல்ல மத்திய அரசுக்கும் பிரதமருக்கும் துணிவு இராதென்றே நான் நம்பினேன். ஆம்; நேருவின் ஜனநாயக உணர்வில் எனக்கு நம்பிக்கை இருந்தது.

சென்னை மாநகராட்சிக் கூட்டம் முடிந்தபோது உறுப்பினர்களிலே முதியோர் பலர், என்னைக் கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்தனர். நகர மன்றத்தைவிட்டு நான் வெளியே வந்தபோது, ரிப்பன் கட்டிடத்திற்கு வெளியே குழுமியிருந்த பொதுமக்கள், என் பெயரைச் சொல்லி பலமுறை வாழ்த்தொலி எழுப்பினர். ''தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்'' என்று குரல் கொடுத்தனர். தமிழரசுக் கழகத் தோழர்கள், தங்கள் தலைவன் சரித்திரச் சிறப்புமிக்க சாதனையைப் புரிந்து விட்டதாகக் கருதிப் பெருமிதமுற்றனர்.

பிரதமரின் மனமாற்றம்

மறுநாள் காலை தமிழக முதல்வர் ராஜாஜியைச் சந்தித்தேன். அவர் எனது தீர்மானத்தில், 'ஆந்திர அரசுக்குத் தற்காலிகமாகவும் இடந்தரக்கூடாது' என்றுள்ள பகுதியை எடுத்துவிடும்படிக் கூறினாரென்றாலும், அந்தப் பகுதியோடு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்காக அவர் வருத்தப்பட்டதாகத் தெரியவில்லை. பொதுவாக யான் எடுத்துக்கொண்ட முயற்சியை அவர் பாராட்டினார்.

இது நடந்து ஒரு வாரத்திற்குப் பின் மத்திய அமைச்சர் திரு.டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரை நான் சந்தித்தபோது, அவர் ''மாநகராட்சியின் தீர்மானத்திற்குப் பிறகு, நேரு மனமாற்றம் அடைந்திருக்கிறார்'' என்று கூறினார்.

''சென்னை நகர மக்கள் அனைவருக்கும் பிரதிநிதித்துவ ஸ்தாபனமான சென்னை மாநகராட்சி பெரும்பாலான உறுப்பினர் ஆதரவோடு நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைப் புறக்கணிப்பது என்னால் சாத்தியமில்லை''

என்று நேரு தம்மிடம் சொன்னதாகவும் திரு.டி.டி.கே. என்னிடம் கூறினார்.

கடைசியாக 25.3.53 அன்று டில்லி நாடாளுமன்றத்தில் பிரதமர் நேரு மத்திய அரசின் சார்பில் அதிகாரபூர்வமான பிரகடனமொன்றை வெளியிட்டார். அது வருமாறு:

''1953 அக்டோபர் 1-இல் ஆந்திர மாநிலம் அமையும்.

''ஆந்திர அரசின் தலைநகரம் ஆந்திர நாட்டின் எல்லைக்குள்ளேயே இருக்கும்.

''வேறு ஏற்பாடுகள் செய்யப்படும் வரை ஆந்திர அரசின் சில அலுவலகங்கள் சென்னை நகரில் நீடித்திருக்கலாம்.

''ஆனால், ஆந்திர அமைச்சர்களின் அலுவலகங்கள், ஆளுநர் (கவர்னர்) அலுவலகம், சட்டமன்றம் ஆகியவை ஆந்திர மாநில எல்லைக்குள்ளேயே இருக்க வேண்டும்.

''ஆந்திர அரசு அமைந்த பின்னர் எல்லைக் கமிஷன் அல்லது கமிஷன்கள் நியமிக்கப்படும். ஆந்திர அரசின் எல்லையில் செய்யப்பட வேண்டிய மாறுதல்களை அவை பரிந்துரை செய்யும்.

''ஆந்திர அரசின் தற்காலிகத் தலைநகர் எது என்பதை ஆந்திர மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் கூடி முடிவு செய்ய வேண்டும். 1953 சூலை தொடக்கத்திற்குள் அந்த முடிவு இந்திய அரசுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

''ஆந்திர மாநிலத்தின் உயர்நீதிமன்றம் அம் மாநில எல்லைக்குள் எங்கே அமைவது என்பது பற்றி ஆந்திர அரசு அமைந்த பின்னர் அதன் சட்டமன்றமே முடிவு

செய்ய வேண்டும். அதுவரை இப்போதுள்ள சென்னை உயர்நீதிமன்றமே ஆந்திர அரசின் நீதிமன்றமாகவும் செயல்பட்டு வரும்.''

நேருவின் விளக்கம்

பிரதமர் நேரு, மத்திய அரசின் பிரகடனத்தையொட்டி, தமது பொறுப்பில் தந்த விளக்கம் வருமாறு:

''ஆந்திர அரசின் தலைநகர் தற்காலிகமாகச் சென்னை யிலேயே இருக்கலாம் என்றும், இப்படிச் செய்வதால் இடவசதியும் வேறுபல வசதிகளும் கிடைக்கும் என்றும் முதலில் கருதப்பட்டது உண்மை.

''ஆயினும், இதற்கு எதிராகவுள்ள காரணங்கள் புறக் கணிக்க முடியாதவை. புதிய அரசு எந்தவித கலவரமுமின் றித் தொடங்கப்பட வேண்டும். அந்த அரசு நன்கு உறுதிப் படுவதற்கும் அது தேவைப்படுகிறது. தொடக்க முதற் கொண்டே ஆந்திர அரசின் தலைநகர் ஆந்திர மாநிலத்துக் குள்ளேயே இருந்தால்தான் புதிய ஆந்திர அரசுக்கும் எஞ்சிய சென்னை அரசுக்கும் நல்லுறவு வளர்வது சாத்திய மாகும்.

''ஆகவே, ஆந்திர அரசின் தற்காலிகத் தலைநகர் ஆந்திரப் பகுதிக்குள்ளேயே இருக்க வேண்டுமென்ற முடி வுக்கு மத்திய அரசு வரவேண்டியிருந்தது.

''ஆந்திர அரசு சென்னை நகரின் கலாசார வாழ்வில் குறுக்கிடக் கூடாது — குறுக்கிடாது.''

மத்திய அரசின் பிரகடனமும், அதற்கு விளக்கமாகப் பிரதமர் நேரு வெளியிட்ட அறிக்கையும் எனக்குப் பெருமகிழ்ச் சியைத் தந்தன. தமிழரசுக் கழகத் தோழர்கள் இதனைத் தங்கள் உழைப்புக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதினர். ஆனால், அவர்கள் தேதி நிச்சயித்து வெற்றி விழாக் கொண்டாடவில்லை. இந்த வெற்றிக்குத் தாங்கள் மட்டுமே — தங்கள் தலைவன் மட்டுமே காரணம் என்று கருதாமல், சென்னை மாநகராட்சி

— அப்போதைய சென்னை மாநில அரசு — தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் — தமிழின மக்கள் ஆகியோரும் காரணமென்று தமிழரசுக் கழகத்தார் கருதினர். அதனால் ''பெருக்கத்து வேண்டும் பணிவு'' என்ற குறள் நெறியைக் கழகம் கடைப்பிடித்தது.

''ஒரு அரசியல் கட்சிக்கு இந்தப் பண்பாடு தேவைதானா?'' என்று கேட்கலாம். இதற்கு நான் தரும் விடை, 'தேவை' என்பதுதான்! ஒரு இனத்தின் அல்லது நாட்டின் தேசியப் பிரச்சினைகளுக்கு வெற்றி காண உழைப்போர், கட்சி வெறிக்கு இடங்கொடாமல் கடமையாற்ற வேண்டுமென்பது என் கருத்து. இதற்கு மாறாக நடப்பதால், கட்சி வளரலாம். ஆனால், லட்சியம் வெற்றி பெறாது. இந்த உண்மையை உணர்ந்ததனாலேயே, தமிழரசுக் கழகம், கட்சி வெறிக்கு அப்பாற்பட்டு வாழ்ந்து, தன் லட்சியங்களுக்கு வெற்றி தேடி வந்திருக்கிறது.

தலை கொடுக்காமல் தலைநகர் காத்தோம்!

சென்னையிலே ஆந்திர அரசுக்கு ஒரு இடைக்காலத்திற்கு இடமளித்துவிட்டால், அதன் விளைவாக ராஜாஜி தாம் டில்லியில் சூளுரைத்தபடி பதவி துறந்தால், வேறொரு இளைஞரை முதல்வராக்கி, கோஷ்டி அரசியலுக்கு வெற்றி தேடவும் சென்னை மாநில காங்கிரஸ்காரர்களிலே ஒரு சாரார் முன்னேற்பாடுகள் செய்து வந்தனர். அந்த இளைஞர் திரு.ஆர். வேங்கடராமன் என்றும் சொல்லப்பட்டது. பாவம்! நேருவின் மனமாற்றத்தால் அவர்கள் ஏமாற்றமடைந்தனர். ராஜாஜி அமைச்சரவையும் தற்காலிகமாகப் பிழைத்தது.

''தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்பேன்'' என்று நான் சூளுரைத்து, அது பத்திரிகைகளில் ஏழு கலந்தலைப் புகளுடன் வெளியானபோது, ஒரு கட்சியின் தலைவர் ''ம.பொ.சி. தலையைத் தலைநகருக்காகக் கொடுத்தால், காலை எதற்குக் கொடுப்பார்?'' என்று ஒரு பொதுக் கூட்டத்தில் கேலி பேசினார். நல்லவேளையாக, என் தலை தேவைப்படாமலே தலைநகர் காப்பாற்றப்பட்டு விட்டது!

தமிழ் மாநிலத்திற்கு எதிர்ப்பு!

மத்திய அரசின் பிரகடனத்தால் சென்னை காக்கப்பட்ட தென்றாலும், தென் கன்னடமும் மலபார் மாவட்டமும் நீங்கிய 'தமிழ் மாநிலம்' அமைய வழி பிறக்கவில்லை. அப்போது ஐதராபாத்தில் கூடிய காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திலே, ''இன்னும் ஐந்தாண்டுக் காலத்திற்கு மேற்கொண்டு மொழிவழி மாநிலம் எதையும் அமைக்கத் தேவையில்லை'' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தெலுங்கு மொழி மாநிலம் அமைவதை ஆதரித்த முதல்வர் ராஜாஜி அவர்கள், தமிழ் மாநிலம் அமைவதை விரும்பாதவ ரானார். அதனை அவர் ஐதராபாத் காங்கிரசில் வெளிப்படையா கவும் கூறினார். ஆம்; ''மொழிவாரி மாநிலக் கோரிக்கை காட்டு மிராண்டிக் கொள்கை'' என்று ஒரு புதிய ஜனநாயக விரோத சித்தாந்தத்தை ஐதராபாத் காங்கிரசில் வெளியிட்டார்.

''கல்கி'' பத்திரிகை, ராஜாஜியின் தமிழின விரோதக் கொள்கைக்குப் பரிந்து வாதாடியது. ஆனால், ''ராஜாஜி கூறியது தமிழரசுக் கழகத்தாருக்குப் பொருந்தாது'' என்று சப்பை கட்டி சமாதானம் கூறிக் கழகத்தாரைத் திருப்திப்படுத்த முயன்றது.

திரு. காமராசரும் வேறுவிதமாக நடந்து கொள்ளவில்லை. ஆனால், அவர் தமிழ் மாநிலக் கோரிக்கையைத் தாமே எதிர்க்க வில்லை. தமது சீடர் திரு. ஆர்.வேங்கடராமன் (அப்போது நாடாளுமன்ற உறுப்பினர்) அவர்களைத் தூண்டிவிட்டு எதிர்ப் பிரச்சாரம் செய்ய வைத்தார்.

> *''சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் காங்கிரஸ் மகா சபை மொழி வாரி மாநிலப் பிரிவினையை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றிய போதிலும், இப்போது அவ்விதம் செய்வதால் மக்கள் பெரிதும் புறக்கணிக்கப்படுவார்கள். ஆந்திர மாநிலத்திற்கு ரூ.5 கோடி துண்டு விழுகிறது. தமிழ்நாடு பிரிக்கப்பட்டாலும் அதே கதிதான் ஏற்படும்.''*

இந்தக் கருத்து, திரு. ஆர். வேங்கடராமன் அவர்கள் நாகைப் பொதுக் கூட்டமொன்றில் பேசி, 14.2.53 'தினமணி' யில் வெளியானதாகும்.

தி.மு.க.வின் நிலையும் இதுதான். ஆந்திர மாநிலம் பிரிந்து போகவிருந்த நேரத்திலும் நான்கு மொழிப் பிரதேசங்கள் கொண்ட திராவிடத் தனிநாட்டுக் கொள்கையிலுள்ள தவறை தி.க.வோ, தி.மு.க.வோ கொஞ்சங்கூட உணரவில்லை. சுருங்கச் சொன்னால், ராஜாஜியின் தலைமையில் இயங்கிய எஞ்சிய சென்னை மாநில அரசு, தமிழ்நாடு காங்கிரஸ், தி.க., தி.மு.க. ஆகிய வலிமைமிக்க அமைப்புகள் தமிழ் மாநிலப் பிரிவினைக்கு எதிராக இருந்தன. இந்தக் கடுமையான சூழ்நிலையில், தன்னந்தனியாக நின்று தமிழ் மாநிலக் கோரிக்கையிலே தமிழரசுக் கழகத்திற்கு வழிகாட்டி, அதனை நடத்திச் செல்ல வேண்டியவனானேன்.

எல்லைப் பகுதிகள் என்னாவது?

ஆந்திர — கன்னட எல்லைப் பிரச்சினை தீர மத்திய அரசின் பிரகடனத்திலே வழிசெய்யப்பட்டது — குறிப்பாக, இரு மொழி (தெலுங்கு - கன்னட)ப் பிரதேசமான பெல்லாரி மாவட்டத்திலிருந்து தெலுங்கு மொழியினர் பெரும்பாலோராகவுள்ள 3 தாலுக்காக்களைப் பிரித்து ஆந்திரத்தில் சேர்க்கவும், எஞ்சிய தாலுக்காக்களைக் கன்னடத்தில் இணைக்கவும் ஏற்பாடு செய்யப்படுமென மத்திய அரசு அறிவித்திருந்தது. அதுபோல, தமிழக — ஆந்திர எல்லையில் இருமொழி (தமிழ் — தெலுங்கு)ப் பிரதேசமான சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்த் தாலுக்காக்களைத் தமிழகத்தோடும், தெலுங்கு தாலுக்காக்களை ஆந்திரத்தோடும் சேர்க்க மத்திய அரசு முன்வரவில்லை. காரணம், எஞ்சிய சென்னை மாநில அரசும், ஆளுங்கட்சியான தமிழ்நாடு காங்கிரசும் அப்படிச் செய்யவேண்டுமென்று வற்புறுத்தாததுதான்; காங்கிரஸ் அல்லாத கட்சிகளும் கழகங்களும் கிளர்ச்சி செய்யாததுதான்.

வடக்கெல்லைப் போராட்டம்

பாரதநாடு விடுதலையான மறுநாளிலேயே — அதாவது, 1947 ஆகஸ்டுப் பதினாறாம் தேதியன்றே தமிழரசுக் கழகம் தமிழக வடக்கெல்லை மீட்சிக் கிளர்ச்சியைத் தொடங்கி வைத்த தென்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். அப்போது திருவாலங்காடு தொடங்கி திருப்பதிவரை நான் தமிழ் இளைஞர் சிலருடன் யாத்திரை செய்து, ''வேங்கடத்தை விடமாட்டோம்'' — ''தணிகை தமிழருடையதே'' — என்று குரல் கொடுத்து மீண்டதையும், இங்கு நினைப்பூட்ட வேண்டும். அந்தச் சுற்றுலா வையடுத்து, ''வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு'' ஒன்றை நிறுவி, அதன் தலைமை அலுவலகத்தைத் தணிகையில் அமைத் தேன்.

வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு!

1947 ஆகஸ்டு பதினாறாம் நாள் தொடங்கி, 1953 மார்ச்சு 25-ஆம் நாள் வரை — அதாவது, ஆந்திர மாநில அமைப்பு பற்றிப் பிரதமர் நேருவின் பிரகடனம் வெளியான நாள்வரை - தொடர்ந்து ஐந்தரை ஆண்டுக்காலம் — தமிழக வடக்கெல்லை யிலே நான் கவனம் செலுத்தி வந்திருக்கிறேன். இப்போது, ''சித்தூர் மாவட்டம் தகராறுக்கிடமில்லாத தெலுங்கு மொழிப் பிரதேசம்'' என்று அறிவித்து, அதனை ஆந்திர மாநிலத்தில் சேர்த்துவிட மத்திய அரசு முடிவெடுத்துவிட்டதால், எனது முழுக் கவனத்தையும் வடக்கெல்லையில் ஈடுபடுத்த வேண்டி யவ னானேன்.

வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவைக் கூட்டி அதன் தலைமையை நானே ஏற்றுக்கொண்டு விட்டேன். திரு.கே. விநாயகம் அவர்களை அக்குழுவின் செயலாளர் ஆக்கினேன். வடக்கெல்லைப் போரின் ''தளபதி'' என்றும் என்னால் அவர் அழைக்கப்பட்டார். வடக்கெல்லை மீட்சியில் அப்போது அவர்

காட்டிய ஆர்வம் என்னைப் பெரிதும் கவர்ந்தது. அவர் தணிகை வாசியாதலால், தமிழக — ஆந்திர எல்லைப் பிரச்சினை அவரது வாழ்க்கைப் பிரச்சினையாக இருந்தது. அப்போது அவர் சென்னை மாநிலச் சட்டமன்றப் பேரவையின் உறுப்பின ராகவும் இருந்ததால் வடக்கெல்லைக் கிளர்ச்சிக்கு ஆதரவாக சட்டமன்றத்தைப் பயன்படுத்திக் கொள்ள அவரது உதவி எனக் குத் தேவைப்பட்டது.

வடக்கெல்லைக் கிளர்ச்சியில் என்னை ஈடுபடுத்திய ஆசிரி யர் மங்கலங்கிழார், சித்தூர் நகரமன்ற முன்னாள் தலைவரும் பிரபல காங்கிரஸ்காரருமான சித்தூர் சி.வி.சீனிவாசன், கோல்டன் டிரான்ஸ்போர்ட் உரிமையாளர் தணிகை என். சுப்பிர மணியம், பொதட்டூர்பேட்டை சகோதரர்களான ஏ.ச. தியாகரா சன், ஏ.ச. சுப்பிரமணிய முதலியார், சித்தூர் வழக்கறிஞர் திரு.என். அரங்கநாத முதலியார், திருவாலங்காடு ஊராட்சி மன்றத் தலைவர் திரு.திருமலைப் பிள்ளை, தணிகை காந்தி, சோதிடர் சடகோபாச்சாரியார் ஆகியோர் துணையுடன் சித்தூர் மாவட்டத்தின் தமிழ்த் தாலுக்காக்களில் திரும்பவும் சுற்றுலா செய்து, ஒரு பெருங்கிளர்ச்சிக்கு மக்களைத் தயார்ப்படுத்தி னேன்.

தமிழ்க் கிராமங்களின் — ஊராட்சி மன்றங்களின் தலைவர் களெல்லாம் எனக்கு முழு அளவில் ஒத்துழைப்பு தர முன்வந்த னர். ஆம்; வடக்கெல்லையிலே தமிழ் மக்கள் மிகப் பெரிய அளவுக்கு எழுச்சியுற்றனர். திருத்தணி, சித்தூர் நகரம், நகரி ஆகிய ஊர்களில் வடக்கெல்லைப் பாதுகாப்பு மாநாடுகள் நடத்தி, ஆந்திரப் பிரிவினையின்போதே சித்தூர் மாவட்டத் தமிழ்ப் பகுதிகளைத் தாய்த் தமிழகத்தோடு சேர்த்துவிட வேண் டுமென்று தீர்மானங்கள் நிறைவேற்றச் செய்தேன்.

தமிழ் மாநிலக் கோரிக்கை நாள்!

இந்த நேரத்தில், தமிழ் மாநிலக் கோரிக்கைக் கிளர்ச்சியை யும் தீவிரப்படுத்தினேன். 1953 ஏப்ரல் 8-இல் ''தமிழ் ராஜ்யக் கோரிக்கை நாள்'' கொண்டாடியது தமிழரசுக் கழகம். அந்த

நாளில் நடந்த கூட்டங்களிலே, ''ஆந்திரம் பிரியும்போதே, எஞ்சிய சென்னை மாநிலத்திலிருந்து தென் கன்னட, மலபார் மாவட்டங்களைப் பிரித்துவிட்டு, ''தமிழ் மாநிலம்'' அமைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனது வாழ்க்கையில் முன் எப்போதையும்விட இப்போது நான் முழு அளவுக்குப் போராட்டவாதியானேன். அதைத் தவிர எனக்கு வேறு சிந்தனையே இருக்கவில்லை. ஆம்; போராட்டம் என் கையிலில்லை; நான் அதன் கையில் இருந்தேன்!

முதல்வர் ராஜாஜியும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராசரும், தமிழ் மாநிலக் கிளர்ச்சியையும் தமிழக வடக்கெல்லைக் கிளர்ச்சியையும் விரும்பவில்லை. வெறுக்கவும் செய்தனர். ஆம்; இதிலே அவர்களிடையே கருத்து ஒற்றுமை காணப்பட்டது. இது தெரிந்திருந்தும், தமிழ்நாடு காங்கிரஸ்காரர்களிலே பெரும்பாலோர் நான் நடத்திய கிளர்ச்சிகளுக்கு மனமுவந்து ஆதரவளித்தனர். காங்கிரஸ் கமிட்டிகளும், காங்கிரசின் செல்வாக்கு மிகுந்த நகரமன்றங்களும், ஊராட்சி மன்றங்களும், ''தமிழ் மாநிலம்'' கோரியும், வேங்கடமே தமிழகத்தின் வடக்கெல்லையாக வேண்டும் என்று வற்புறுத்தியும் தீர்மானங்கள நிறைவேற்றின. இதெல்லாம் எனக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்தன. உண்மையில், காங்கிரஸ்காரர்களில் பெரும்பாலோர், தங்களைத் தமிழரசுக் கழகத்தாராகவே கருதி, என்னைப் பின்பற்றினர். திரு.த. செங்கல்வராயன், திருமதி சரசுவதி பாண்டுரங்கம், முன்னாள் அமைச்சர் டாக்டர் குருபாதம் ஆகிய காங்கிரஸ் பிரமுகர்கள் வடக்கெல்லைப் பகுதியில் நடந்த மாநாடுகளிலெல்லாம் கலந்துகொண்டு எனது கழகம் மேற்கொண்ட கிளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர்.

வடக்கெல்லைத் தமிழர்களை ஒரு கிளர்ச்சிக்கு நான் தயாரித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில், பிரதமர் நேருவுக்கு வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவின் சார்பில் ஒரு கடிதம் எழுதப்பட்டது. அதிலே, ''25.3.53-இல் டில்லி நாடாளுமன்றத்தில் பிரதமர் விடுத்த பிரகடனத்திலே குறிப்பிட்டிருந்த எல்லைக் கமிஷன், சித்தூர் மாவட்டம் பற்றியும் விசாரணை நடத்துமா?'' என்று கேட்டும், ''விசாரணை நடத்தும்'' என்று உறுதி கூற

வேண்டுமென்று வற்புறுத்தியும் கடிதம் எழுதப்பட்டது. இந்தக் கடிதத்திற்குப் பிரதமரிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. பதில் எதிர்பார்க்கப்படுவதாக வாரத்திற்கொரு கடிதம் எழுதியும் ஒரு கடிதத்திற்கும் பதிலில்லை.

நேருஜியின் மௌனம்

நேருஜியின் மௌனம் எனது ஐயத்தை மெய்ப்பித்துவிட்டது. புதிய ஆந்திர மாநில எல்லைப் பிரச்சினைபற்றி விசாரணை நடத்த நியமிக்கப்படவிருக்கும் எல்லைக் கமிஷன் சித்தூர் பற்றியும் விசாரணை நடத்தும் என்று நம்பிய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்களுக்கும் நேருவின் மௌனம் உண்மை நிலையை உணர்த்தியது. போதாக்குறைக்கு, திரு. டி. பிரகாசம், திரு. என்.சஞ்சீவி ரெட்டி ஆகிய ஆந்திரத் தலைவர்கள், மத்திய அரசின் மார்ச்சு 25-ஆம் தேதிப் பிரகடனப்படி, சித்தூர் மாவட்டம் பற்றி விசாரணை நடத்த எல்லைக் கமிஷனுக்கு அதிகாரமில்லையென்று ஆளுக்கு ஆள் நாளுக்கு நாள் அறிக்கை விட்டனர்.

அப்போது, இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராகயிருந்த டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள்கூட, சித்தூர் மாவட்டம் முழுவதையுமே ஆந்திரத்தில் இணைத்து விடுவதனை வெளிப்படையாக ஆதரித்தார். திருத்தணி வாசியாதலால், வடக்கெல்லைச் சிக்கலில் இவரது கருத்துக்கு மதிப்பு இருந்தது.

டில்லி நாடாளுமன்றத்தின் துணை சபாநாயகராகவிருந்த திரு. அனந்தசயனம் ஐயங்காரும் வரிந்து கட்டிக்கொண்டு ஆந்திரருக்கு ஆதரவாக வேலை செய்தார். ''சித்தூர் தமிழ் ஐயங்காரான இவர் அசல் ஆந்திரரைவிடவும், தீவிரமாக இருந்தார். இப்படி, ஆந்திரரெல்லாம் — டாக்டர் இராதாகிருஷ்ணன், அனந்தசயனம் போன்ற இருமொழி (தமிழ் — தெலுங்கு) பேசுவோருட்பட — ஒரே அணியிலிருந்ததுபோல, தமிழர் இருக்கவில்லை.

திரு. ஆர். வேங்கடராமன் எம்.பி., சித்தூர் மாவட்டம் ஆந்திரத்திலே சேர்க்கப்பட்டுவிட்டது. அதன் எந்தப் பகுதி மீதும் தமிழர் உரிமை கொண்டாடுவதற்கில்லை என்று அறிக்கை விட்டார்.

முதல்வர் ராஜாஜி வடக்கெல்லைக் கிளர்ச்சி பற்றிச் சட்டப் பேரவையில் பேசுகையில்,

> *''திருப்பதி, கலாசாரத் துறையில் இன்னமும் தமிழ்ப் பிரதேசம்தான். அதை ஆந்திரர் மறுக்க முடியுமா? ஆயினும், அரசியல் துறையில் நாம் (தமிழர்) அதை இழந்து விட்டோம். திருப்பதி நமக்குத் திரும்பாது. அதைக் கண்ணெடுத்தும் பார்க்க வேண்டாம். திருப்பதி ஆந்திராவில் இருக்கிறது — இருக்கும்''*

என்று கூறி, என்னைக் கைவிட்டுவிட்டார். ராஜாஜி என்னைக் கைவிட்டது, திருப்பதி விஷயத்தில்தான்! சித்தூர் மாவட்டத்திலுள்ள பிற தமிழ்ப் பகுதிகளைப்பற்றி அவர் ஒன்றும் கூறவில்லை. ஆயினும், சித்தூர் மாவட்ட முழுவதுமே ஆந்திரத்துக் குரியது என்று தமிழக முதல்வர் கூறிவிட்டார் என்று ஆந்திரத் தலைவர்கள் வியாக்கியானஞ் செய்துகொண்டு வெற்றி முரசு கொட்டினர்.

தமிழ்நாடு கம்யூனிஸ்டுக் கட்சியின் அதிகாரபூர்வமான வார ஏடாகிய ''ஜனசக்தி'' ராஜாஜியின் அறிக்கையை வரவேற்று, அவருக்கு ''சபாஷ்'' கூறியது. அத்துடன், ''இதை ராஜாஜி இப்பேதுதான் சொல்லுகிறார். நாங்கள் முன்பே சொல்லி விட்டோமே!'' என்றும் தற்பெருமை பேசியது!

இதே நேரத்தில் பெரியார் ஈ.வெ.ரா.வும், 'தினத்தந்தி' நிருபருக்களித்த பேட்டியொன்றில் எல்லைக் கிளர்ச்சிபற்றித் தனது நிலையை விளக்கினார். அதிலே,

> *''தமிழரசுக் கழகத்தாரோடு திராவிடர் கழகத்தாருக்கு கருத்து வேற்றுமை இருப்பதால்தான் சித்தூர் கிளர்ச்சியில் எனது கழகம் கலந்துகொள்ளவில்லை.*
>
> *''மேலும், கடவுள் சிலை உடைப்பு இயக்கத்தை நான் துவக்கி இருப்பதால், எல்லைக் கிளர்ச்சியில் கவனஞ் செலுத்த என்னால் இயலவில்லை. அவரவர்கள் போராட்டம் தான் அவரவர்களுக்குப் பெரிது''*

என்று கூறினார்.

ராஜாஜி, பெரியார் ஈ.வெ.ரா., ஆர். வேங்கடராமன், 'ஜனசக்தி' ஆகியோரின் போக்கு சித்தூர் மாவட்டம் முழுவதையும் தங்களுடையதாக்கிக் கொள்ள விரும்பிய ஆந்திரர்களுக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்தது. தமிழ் மக்களிலே பலர், ''இவ்வளவு பெரியவர்களெல்லாம் கைவிட்ட பின்னர் சிவஞானமாவது, வடக்கெல்லையை மீட்பதாவது?'' என்று கருதினர். வடக்கெல்லைக் கிளர்ச்சியைக் கைவிடுமாறு என்பால் நல்லெண்ணங் கொண்ட 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி போன்ற நண்பர்களும் எனக்கு அறிவுரை கூறினர்.

எனது நிலைமை பரிதாபகரமானதாகத்தான் இருந்தது. ஆயினும், நான் மனந் தளரவில்லை. நான் எந்த ஒரு தனி மனிதரையோ, தனியொரு அரசியல் கட்சியையோ நம்பி எல்லைக் கிளர்ச்சியில் ஈடுபடவில்லை. சென்னையைக் காப்பதிலே எனக்குக் கை கொடுத்த தமிழினப் பொதுமக்கள், வடக்கெல்லையை மீட்பதிலே என்னைக் கைவிட மாட்டார்கள் என்று நான் உறுதியாக நம்பினேன்.

திருப்பதியைக் கோரக் காரணங்கள்

சித்தூர் மாவட்டத்தில் திருப்பதி, திருக்காளத்தி, சித்தூர், திருத்தணி, பல்லவனேரி, கங்குந்திக் குப்பம் ஆகிய ஆறு தாலுக்காக்களைத் தமிழகத்தில் சேர்க்க வேண்டுமென்று தமிழரசுக் கழகமும், அதன் அரவணைப்பில் வளர்ந்து வந்த வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டியும் கோரினாலும், சித்தூர், புத்தூர், திருத்தணி ஆகிய மூன்று தாலுக்காக்களில்தான் தமிழர் மிகுதியாக வாழ்கின்றனர் என்பதனை நான் அறிந்திருந்தேன். மொழி அடிப்படையில் பார்த்தால், திருப்பதியைக் கேட்க நியாயமில்லைதான். இலக்கிய ஏடுகளிலுள்ள சான்றுகள் தமிழினத்தாருக்குச் சாதகமாகவிருப்பினும், அவற்றை மட்டும் காட்டி நான் திருப்பதியைக் கோரவில்லை. தமிழர் மிகுதியாக வாழாத திருப்பதி, காளத்தி, பல்லவனேரி, கங்குந்திக்குப்பம் ஆகிய தாலுக்காக்களை நான் கோரியதற்குக் காரணங்கள் உண்டு. அவை வருமாறு:

அந்தத் தாலுக்காக்களில் வாழ்வோர் சுத்தத் தமிழர் அல்லரென்றால், அப்படியே அவர்கள் சுத்தமான ஆந்திரர் களுமல்லர்; அவர்களில் பெரும்பாலோர் இருமொழி (தமிழ், தெலுங்கு) பேசுவோர்;

அவர்களுடைய குடும்பத் தொடர்புகள் ஆந்திரத் தோடு இருப்பதைவிடத் தமிழகத்தோடுதான் அதிகம் உள்ளன;

இத்துடன், இயற்கை அரணாகிய திருப்பதி மலை தமிழகத்திற்கும் ஆந்திரத்திற்குமிடையே நிலையான இயற்கை எல்லையாக அமைந்திருக்கிறது.

தார் கமிஷன் கூட, மாநிலங்களை மொழிவாரிப் பிரிக்குங்கால், அவற்றினிடையே மலை அல்லது ஆறு போன்ற இயற்கை அரண் இருக்க வேண்டும்; இதிலே, மொழி வரம்பு வேறுபட்டாலும் அதற்கு முக்கியத்துவ மளிக்கக் கூடாது' என்று கூறியிருந்தது.

மற்று, திருப்பதி, சித்தூர் ஆகிய நகரங்களிலுள்ள தெலுங்கு மொழி பேசும் வழக்கறிஞர்களை நான் அணுகிப் பேசியபோது, ''விசால ஆந்திரம் அமையுங்கால், அதன் தலைநகரம் ஐதராபாத்தாகத்தான் இருக்கும். அந்நகரம் சித்தூர் மாவட்டத்திலுள்ள எங்களுக்கு 500 கல் தொலைவி லிருக்கிறது. அங்குச் செல்ல மூன்று ரயில்கள் மாறவேண் டும். சென்னையோ, 90 கல் தொலைவிலிருக்கிறது. ஆகவே, சென்னை நகரம் எந்த ராஜ்யத்தோடு சேருகி றதோ அந்த ராஜ்யத்தில்தான் சித்தூர் மாவட்டத்தைச் சேர்க்க வேண்டும்'' என்று என்னிடம் கூறினர்.

சென்னை எந்த மாநிலத்தோடு சேருகிறதோ அந்த மாநிலத்தோடு சித்தூர் மாவட்டத்தைச் சேர்க்க வேண்டு மென சித்தூர் — திருப்பதி வக்கீல் சங்கங்கள், திருப்பதி — திருமலை தேவஸ்தான போர்டு ஆகியவை தீர்மானங்

கள் நிறைவேற்றின. திருப்பதி, சித்தூர் நகரமன்றங்கள் கூட இதேபோலத் தீர்மானங்கள் நிறைவேற்றியதாக நினைவிருக்கிறது.

இவ்வளவு வலுவான சான்றுகளையும் சூழ்நிலையையும் வைத்துக் கொண்டுதான் நான் வடவேங்கட மலையே தமிழகத்திற்கும் ஆந்திரத்திற்கும் எல்லையாக இருக்க வேண்டுமென்று உறுதியாக வற்புறுத்தினேன். சித்தூர் மாவட்டத் தெலுங்கர்கள் — குறிப்பாக, சித்தூர், திருப்பதி நகரங்களின் வழக்கறிஞர்கள் எனக்கு ஆதரவாக இருந்தது கண்டு ஆந்திரத் தலைவர்கள் கூட அஞ்சினர். சித்தூர்வாசிகளான திரு.அனந்தசயனம் ஐயங்கார், திரு.கே.வரதாச்சாரியார் இருவரும் சித்தூர் மாவட்டம் முழுவதும் சுற்றுலா செய்து ஆந்திரரின் ஆதிக்க வெறிக்கு ஆதரவு திரட்டினர். தமிழ்நாட்டிலிருந்து என்னையும் வினாயகத்தையும் தவிர வேறு அரசியல் பிரமுகர் எவரும் வடக்கெல்லைக்கு வரவில்லை.

பொதுவாக, தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் — அவற்றின் தலைவர்களின் — போக்கு எனக்கு உதவிகரமாக இல்லையென்றாலும், தமிழரசுக் கழகத்தின் முன்னணி வீரர்களும் ஊழியர்களும் வடக்கெல்லையை மீட்கக் கடுமையான போராட்டத்தில் கழகம் ஈடுபட வேண்டுமென்பதிலே மிகுந்த உறுதி காட்டினர். நான் காங்கிரசில் நீடிப்பதற்காகத்தான் — கட்சிக் கட்டுப்பாட்டுக்கு அஞ்சித்தான் — எல்லைப் போரைத் தொடங்குவதற்குத் தயங்குகிறேன் என்றும் சிலர் முணுமுணுத்துக் கொண்டிருந்தனர்.

போராட முடியும்

முதல்வர் ராஜாஜியிடம் எனக்குள்ள நட்பு காரணமாகவே அவருடைய அமைச்சரவைக்கு எதிராகப் போராட்டத்தைத் தொடங்க நான் தயங்குகிறேன் என்று காமராஜ் கோஷ்டி காங்கிரஸ் ஏடுகள் என்னைக் கேலி செய்தன. நான் போராட்டத்தைத் தொடங்கி வடக்கெல்லைப் பகுதிகளை மீட்கவேண்டு

மென்ற அக்கறையால் அந்த ஏடுகள் அப்படி எழுதவில்லை. நான் 'ராஜாஜியின் அடிமை' என்ற தவறான எண்ணத்தைத் தமிழரசுக் கழகத் தோழர்களுக்கு ஏற்படுத்திக் கழகத்தைப் பிளவுபடுத்த வேண்டுமென்பதுதான் அந்த ஏடுகளின் எண்ணம்.

காங்கிரசிலிருந்த நாள்வரை கட்சிக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதிலே நான் மிகுந்த உறுதி காட்டி வந்தேன் என்பதில் ஐயமில்லை. அதனை அரசியல் ஒழுக்கமாகவும் நான் கருதினேன். ஆனால், கட்சிக் கட்டுப்பாடோ, கட்சித் தலைமை யிடம் காட்ட வேண்டிய விசுவாசமோ தமிழினத்திற்கு நான் ஆற்றவேண்டிய கடமைகளுக்குத் தடைகளாக இருக்க என்றுமே நான் அனுமதித்ததில்லை. என்னுடைய அரசியல் ஒழுக்கத்தைப் புரிந்து கொண்டவர்களுக்கு இதிலே ஐயமிருக்கவில்லை.

சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ் மக்களும் எல்லைப் போராட்டத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். சுருங்கச் சொன்னால், போராட்டத்தை நான் விரும்பினாலும் தவிர்க்க முடியாத ஒரு கட்டாய சூழ்நிலை உருவானது. உண்மையில் போராட்டத்தைத் தவிர்க்க நான் முயலவுமில்லை.

தமிழரசுக் கழகப் பொதுக் குழுவைச் சென்னையிலே கூட்டி வடக்கெல்லைப் போரை 9.4.53-இல் தொடங்குவதென்ற தீர்மா னத்தை அதிலே நிறைவேற்றச் செய்தேன். போராட்டத்தை முதலில் சித்தூர் மாவட்ட எல்லைக்குள்ளேயே நடத்துவதென் றும், அரசின் அடக்குமுறை வலுக்குமானால், தமிழ்நாடு முழுவ திலும் போராட்டத்தை விரிவுபடுத்துவதென்றும் பொதுக்குழு தீர்மானித்தது.

போராட்டம் நடத்தும் பொறுப்பு முழுவதும் எனது தலை மையில் அமைந்திருந்த ஸ்தல அமைப்பான வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவிடம் விடப்பட்டது. இப்போராட்டத்திற்குத் தமிழின மக்களுடைய ஆதரவைத் திரட்டும் பொருட்டு, தமிழ் நாடு முழுவதிலும், ஏப்.5-ஆம் தேதியன்று ''சித்தூர் தினம்'' கொண்டாடப்பட்டது. ஆயிரக்கணக்கான ஊர்களில் தமிழரசுக் கழகக் கிளைகளின் சார்பில் ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்

களும் நடைபெற்றன. தமிழ்நாடு எங்கணுமே வடக்கெல்லைத் தமிழ்ப் பகுதிகளை ஆந்திரத்திலிருந்து மீட்க வேண்டுமென்ற உணர்ச்சி தேசிய எழுச்சிபோல உருவானது.

சித்தூர் மாவட்டத்திலுள்ள ஊராட்சி மன்றங்களைக் கூட்டி, தமிழர் மிகுதியாகவுள்ள கிராமங்களை ஆந்திரம் பிரிகிற நாளி லேயே, தமிழகத்தோடு இணைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றி, நேருவுக்கும், ராஜாஜிக்கும் அனுப்பும்படி செய்தேன்.

வடக்கெல்லைத் தமிழர் நிலை

இப்படி, வலுவான ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு 9.4.1953-இல் சித்தூர் மாவட்டத் தமிழ்த் தாலுக்காக்க ளில் கடையடைப்பும், பொது வேலை நிறுத்தமும் நடைபெறச் செய்தேன். இந்திய விடுதலைப் போராட்டம் இந்தப் பகுதியிலே நடைபெற்றதில்லை. படித்தவர்கள் மிகுதியாக இல்லாத பகுதியு மாகும். தாழ்த்தப்பட்டவர்களும், மிகவும் பிற்பட்டவர்களாக வுள்ள சாதிகளைச் சேர்ந்தவர்களுமே சித்தூர் மாவட்டத் தமிழ்த் தாலுக்காக்களிலே உள்ளனர். போக்குவரத்து வசதிகளும் மிகுதி யாக இருக்கவில்லை. இந்தக் குறைபாடுகளின் காரணமாக பூரண சாத்விகமான முறையில் ஒரு போராட்டத்தை நடத்தி வெற்றிகரமாக முடிப்பதென்பது அவ்வளவு எளிதான காரிய மல்ல என்பதை உணர்ந்தேன். ஆசிரியர் மங்கலங்கிழார் காந்தி யத்தில் மிகவும் அழுத்தமான நம்பிக்கையுள்ள வெள்ளை வேட்டித் துறவி! ஆந்திரருக்கும் தமிழருக்குமிடையே இனப் பூசல் ஏற்படாமலிருக்க வேண்டுமென்பதிலே என்னைப் போலவே அவரும் மிக்க உறுதி காட்டினார். திரு. விநாயகம் உட்பட மற்றவர்கள் எல்லாம் இளைஞர்கள்; ஆயினும், எனது தலைமையில் அவர்களுக்கிருந்த அழுத்தமான பற்றுதலின் காரணமாக அவர்களுக்குக் கட்டுப்படுத்தி வேலை வாங்க முடியுமென்ற நம்பிக்கை எனக்கு இருந்தது.

கடையடைப்பும், வேலை நிறுத்தமும் மிக வெற்றிகரமாக நடைபெற்ற மறுநாளே வடக்கெல்லைப் போரைத் தொடங்கி

வைத்தேன். திருத்தணிகை, சித்தூர், புத்தூர் உட்பட சில முக்கியமான ஊர்களில் மாநில — மத்திய அரசுகளின் அலுவலகங்கள் முன்னே மறியல் நடத்தப் பெற்றது. ''சித்தூர் மாவட்டத் தமிழ்ப் பகுதிகளைத் தமிழ்நாட்டோடு சேர்ப்பதாக மாநில — மத்திய அரசுகள் உறுதி கூறும்வரை அவற்றுடன் ஒத்துழைக்காதீர்'' என்பது மறியலில் ஈடுபட்ட தொண்டர்களின் கோரிக்கையாக இருந்தது.

தொடர்ந்து 15 நாட்கள் மறியல் போராட்டம் நடைபெற்றது. சாத்விகம் முழு அளவில் கடைப்பிடிக்கப்பட்டது. போராட்டம் நடந்த நாட்களில் நான் தணிகையிலேயே முகாம் செய்து, மறியல் நடைபெற்ற இடங்களை நாள்தோறும் பார்வையிட்டு வந்தேன். ராஜாஜி அரசு மறியல் தொண்டர்களைக் கைது செய்யாக் கொள்கையைக் கடைப்பிடித்தது. மறியல் பேராட்டத்தைப் பூரண சாத்வீக முறையில் ஒரு அடையாளப் போராட்டமாக மட்டுமே நான் நடத்தியதால் அரசுக்கோ, போலீசாருக்கோ எவ்விதத் தொல்லையும் இருக்கவில்லை. அதனால், மறியலை நடத்தவிட்டுப் போலீஸ் அதிகாரிகள் வேடிக்கை பார்த்தனர்.

இந்த நிலையில், மறியல் போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதென என் சகாக்களுடன் கலந்து ஆலோசித்த பின் முடிவெடுத்தேன். 9.4.53-இல் தொடங்கிய போராட்டத்தை 25.4.53-இல் நிறுத்தினேன். திருத்தணிகையில் ஊராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்றதும் நான் போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டி ஏற்பட்டதற்கு ஒரு காரணமாகும். திருத்தணி ஊராட்சி மன்றம் நீண்ட நெடுங்காலமாக, தெலுங்கர்களின் ஆதிக்கத்திலேயே இருந்தது. எல்லைப் பிரச்சினையைத் தேர்தல் பிரச்சினையாக்கி, அனைத்துத் தொகுதிகளிலும் வடக்கெல்லைக் குழுவின் சார்பில் வேட்பாளர்கள் நிறுத்தி வைக்கப்பட்டனர். திருவாளர்கள் கே.விநாயகம், சரவணய்யா, ந. சுப்பிரமணியம், ந.ரஷீத் ஆகியோர் தேர்தல் வேலைகளைக் கவனித்துக் கொண்டனர். நான் அவ்வப்போது ஆலோசனை கூறியதன்றி, தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடவில்லை. போட்டியிட்ட பத்து இடங்களில் 9 இடங்களிலே பாதுகாப்புக் குழுவினர் வெற்றி பெற்று ஊராட்சிமன்றத்தைக் கைப்பற்றினர். தணிகை தமிழர்களுடையதே என்பதை இந்தத் தேர்தல் முடிவும் உறுதிப்படுத்தி எங்களுக்கு உற்சாகத்தை உண்டாக்கியது.

போராட்டத்தின் முதல் கட்டம் முடிந்த பின்னர், முதல்வர் ராஜாஜியை அணுகி, சித்தூர் மாவட்டப் பிரச்சினையைத் தீர்க்க எல்லைக் கமிஷன் அனுப்ப வேண்டுமென்று பிரதமர் நேருவுக்கு எழுதுமாறு வற்புறுத்தினேன். அவர் இணங்கவில்லை. தம்மைப் பற்றி நேரு தவறாகக் கருதக் கூடுமென்று என்னிடம் கூறினார். ஆம்; எல்லைச் சிக்கலில் தனக்கு அக்கறை இல்லை என்று நேருஜி கருதும்படி ராஜாஜி முன்பே தம் கருத்தை வெளியிட்டுவிட்டார். அதிலிருந்து பின்வாங்கி எல்லைக் கிளர்ச் சிக்கு ஆதரவாக நேருவிடம் பேச அவர் விரும்பவில்லை.

ராஜாஜியின் நிலையைத் தெரிந்து கொண்ட பின்னர் நிறுத்தி வைத்த போராட்டத்தைத் திரும்பவும் தொடங்குவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லாமற் போய்விட்டது. ஆகவே, 12.5.53-இல் திரும்பவும் மறியல் போராட்டத்தைத் தொடங்கி னேன். இரண்டாவது கட்டப் போர் தொடங்கிய முதலிரண்டு நாட்களில் வழக்கம்போலப் போலீசார் கைது செய்யாக் கொள் கையைக் கடைப்பிடித்தனர். ஆயினும், இந்த முறை மறியல் நடந்த ஊர்களில் போலீஸ் பாதுகாப்பு பலமாகப் போடப்பட்டி ருந்தது. ரிசர்வ் போலீஸ் படையினரும் தருவிக்கப்பட்டிருந்த னர். அரக்கோணம் தொடங்கி ரேணுகுண்டாவரையுள்ள ரயில்வே லைன் போலீசாரால் பாதுகாக்கப்பட்டது.

புத்தூரில் ஆந்திரர் கைவரிசை!

மறியலை அமைதியாக நடத்திக் கொண்டிருப்பதால் அரசு அலட்சியம் செய்கிறதென்று என் சகாக்கள் கருதினர். அதனால் எனக்குத் தகவல் தராமலே திடீரென்று ஒரு நாள் தணிகை சப்—மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்குள்ளே புகுந்து நடவடிக்கை களைத் தடுக்கும் வகையில் ஆர்ப்பாட்டம் செய்தனர். அன்று நான் தணிகையில் இல்லை; சென்னையிலிருந்தேன். நிலைமை யைச் சமாளிக்கப் போலீசார் தடியடி தர்பார் நடத்தியதால் பலர் படுகாயமடைந்தனர். தகவல் தெரிந்ததும் தணிகைக்கு ஓடி னேன். மறுநாள் முதல் வன்முறை எதுவும் நிகழாமல் கவனித்து வந்தேன். போலீசாரின் கைது செய்யாக் கொள்கை நீடித்தது.

மே மாதம் 18-ஆம் தேதி புத்தூரில் எல்லைப் பாதுகாப்புக் குழுப் பொதுக் கூட்டமொன்றில் நான் பேசுவதாக இருந்தது. அன்று மாலை 5 மணிக்குப் புத்தூர் போய்ச் சேர்ந்தேன். திரு. சிவய்யா என்ற கம்யூனிஸ்டுப் பிரமுகரொருவர், தெலுங்கு இளைஞர்களைச் சேர்த்துக் கொண்டு — தமிழர் கிளர்ச்சிக்கு எதிரான கோஷங்களை எழுப்பிய வண்ணம் தெருத் தெருவாக ஊர்வலம் நடத்தினார். ஆந்திர மாநிலம் இன்னமும் பிரிக்கப் படாததால், சித்தூர் மாவட்டம் ராஜாஜியின் ஆட்சியில்தான் இருந்தது. ஆயினும் மாவட்ட போலீஸ் அதிகாரிகள் ஆந்திரர் களாகவோ, தெலுங்கர்களாகவோ இருந்தனர். அவர்கள் அவ்வளவு பேரும் தமிழர் நடத்திவரும் கிளர்ச்சிக்கு முதல் நம்பர் எதிரிகளாகச் செயல் புரிந்தனர்.

கம்யூனிஸ்டுகளுக்குப் போலீஸ் அதிகாரிகளின் பின்பல மிருப்பதாக எனக்குத் தகவல் தரப்பட்டது. தெலுங்கருக்கும் தமிழருக்குமிடையே ஒரு பெருங்கலவரம் மூளக்கூடிய அறிகுறிகளைக் கண்டேன். அத்தகைய ஒரு கலவரத்தை நான் விரும்பவில்லை. எல்லைக் கிளர்ச்சி இனச் சண்டையாக மாறு வதை நான் அடியோடு வெறுத்தேன். ஆயினும், வலுச் சண் டைக்குத் தயாராகிக் கொண்டிருந்தவர்களிடம் பணிந்து போக வும் நான் விரும்பவில்லை. அன்று நான் பேசவிருந்த பொதுக் கூட்டத்தை ரத்து செய்து விடலாமென்று நண்பர்கள் சிலர் எனக்கு ஆலோசனை கூறினர். உள்ளூர் பிரமுகரும் எல்லைக் கிளர்ச்சியில் எனக்குப் பக்க பலமாக இருந்தவருமான திரு. முத்துவேல் முதலியார் என்பவர் கூட்டத்தை நடத்தியே தீர வேண்டுமென்று உறுதியாகக் கூறினார்.

இரவு 7 மணிக்குத் தருமராசர் கோவில் முன்பு கூட்டம் ஆரம்பமானது. ஆசிரியர் மங்கலங்கிழார் பேசிக் கொண்டிருந்த போது திரு. சிவய்யா தலைமையிலிருந்த இளைஞர் குழாத்தினர் கூட்டம் நடந்த இடத்திற்கு எதிரே குழுமி நின்று 'கிராமணி கும்பல் ஒழிக' — 'புத்தூர் ஆந்திரத்துக்கே சொந்தம்' — 'கிராமணி கும்பலே வெளியேறு' என்ற பொருள் தரும் கோஷங் களைத் தெலுங்கிலே கோஷித்தனர்.

சிறிது நேரத்திற்குள் அருகிலிருந்த ரயில்வே நிலையத்துக்குப் பக்கத்தில் கொட்டி வைக்கப்பட்டிருந்த கருங்கற் குவியல்களை அணுகி, பொதுக் கூட்டத்தின் மீது சரமாரியாகக் கற்களை வீசினர். கல்வீச்சு பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்தது. கல்லடி பட்டுக் காயமுற்றவர்கள் நான் இருந்த மேடையை நோக்கி வந்து அலறி அழுத காட்சி பரிதாபகரமாக இருந்தது. சுமார் 60 பேர் வரை படுகாயமுற்றனர். நானும் மற்ற பேச்சாளர்களும் அமர்ந்திருந்த மேடை ஒரு மண்டபத்துக்கு உள்ளே இருந்ததால் கல்வீச்சினால் நாங்கள் பாதிக்கப்படவில்லை. கலகக் கூட்டத்தினர், கல் வீசுவதை நிறுத்தி, சவுக்குக் கட்டைகளைக் கைகளில் எடுத்துக் கொண்டு நான் இருந்த மேடையை நோக்கி வெறிக் கூச்சலிட்டுக் கொண்டு வந்தனர்.

புத்தூர் தமிழர்களிலே 200க்கும் மேற்பட்டவர்கள் நாங்கள் இருந்த மேடையைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டு கலகக்காரர்களிடமிருந்து எங்களைக் காக்க முயன்றனர். இவ்வளவையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர் போலீஸ் அதிகாரிகள். இதற்குள் ஒரு முரடன் மேடையின் இரு புறங்களிலிருந்த கியாஸ் லைட்டுகளை உடைத்து நொறுக்கினான்.

எந்த நேரத்திலும் எனக்கும் என் நண்பர்களுக்கும் அபாயம் நேரலாம் என்ற நிலை ஏற்பட்ட பின்னர், ஒரு போலீஸ் அதிகாரி நண்பர் வினாயகத்தை அணுகி, 144 தடையுத்தரவை வழங்கினார். உடனடியாகக் கூட்டத்தைக் கலைக்க வேண்டும் என்றார். நாங்கள் மறுத்தோம். குழுமியிருந்த தமிழர்களைப் போலீசார் தடியாலடித்து நாலாபுறமும் ஓடும்படியாக அவர்களை விரட்டினர். இதனால், எங்களைத் தாக்கும் நோக்குடன் நெருங்கிக் கொண்டிருந்த கலகக் கும்பலுக்குப் போலீஸ் அதிகாரிகள் வேண்டுமென்றே எங்களைக் காட்டிக் கொடுத்தனர். ''உடனடியாக ஊரைவிட்டு ஓடிவிட்டால் உங்களுக்கு அபாயம் நேராதென்று'' ஒரு போலீஸ் அதிகாரி கூறினார். அதுவரை அமைதியாக ஒருபுறத்தில் நின்று கொண்டு இவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்த ரிசர்வ் போலீஸ் படை சர்க்கிள் இன்ஸ்பெக்டர், உள்ளூர் போலீஸ் அதிகாரியின் உத்தரவின்படி கலைந்து போகுமாறு எங்களுக்குக் கட்டளை இடுவதுபோல

எங்களை அணுகினார். அப்பேது அந்த அதிகாரி என் காதண் டைத் தன் வாயை வைத்து, ''நான் திருநெல்வேலித் தமிழன். இங்குள்ள ஆந்திர அதிகாரிகள் கலகக்காரர்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். நீங்கள் கலைந்து சென்றாலன்றி உயிர் தப்ப முடியாது'' என்று இரகசியமாகக் கூறினார். ஆம்; என்னையும் என் நண்பர்களையும் அதட்டி விரட்டுவது போன்று பாசாங்கு செய்தவண்ணம் என்னிடம் இரகசியமாகப் பேசினார் அந்த அதிகாரி. நாங்கள் கலைந்து சென்றாலும் வழியில் கலகக்காரர் களால் தாக்கப்படுவோம் என்று அஞ்சினேன். ஆகவே, ''கூட் டத்தைக் கலைத்துவிட்டு ஊரைவிட்டு வெளியேற நான் விரும்ப வில்லை. வேண்டுமானால் எங்களைக் கைது செய்யுங்கள்'' என்று சர்க்கிளிடம் — இன உணர்ச்சியால் எங்களைக் காக்க வந்த தமிழரிடம் — கூறினேன். அவர் எனது கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, என்னையும், விநாயகம், ஈ.எஸ். தியாக ராசன், சித்தூர் சீனிவாசன் ஆசிரியர் மங்கலங்கிழார் ஆகியோ ரையும் கைது செய்திருப்பதாகக் கூறி ரிசர்வ் போலீஸ் வானில் ஏற்றிக் கொண்டார். நாங்கள் ஏறியிருந்த ரிசர்வ் போலீஸ் வான் புத்தூரை விட்டுப் புறப்பட இயலாதபடி அந்த வானை மறித்து எங்களைத் தாக்கக் கலகக்காரர்கள் முயன்றனர். ஆனால், மற்றொரு வானிலிருந்த ரிசர்வ் போலீசார் உதவிக்கு வந்து கலகக் கூட்டத்தை அடித்துக் கலைத்து எங்கள் வானுக்கு வழி வாங்கி விட்டனர்.

புத்தூரிலிருந்து தணிகைக்கு வந்து கொண்டிருக்கும் வழி யிலே சித்தூர் மாவட்ட சூப்பிரண்டெண்டு தமது காரிலே புத்தூரை நோக்கி வந்து கொண்டிருந்தார். கலகம் பற்றிய செய்தி அறிந்துதான் அவர் வந்து கொண்டிருந்தார். எதிரில் ரிசர்வ் போலீஸ் வேனைக் கண்டதும் அவர் தமது காரை நிறுத்தி, 'நெல்லைத் தமிழனு'டன் உரையாடி, புத்தூர் நிகழ்ச்சி பற்றிய விவரங்களை அறிந்தார். எங்களைக் காப்பாற்றிக் கொண்டு வந்ததில் தவறில்லை என்று கூறி நெல்லைத் தமிழனுக்குத் தைரியமூட்டினார். அவர், கன்னடர்; அதனால், நடுவுநிலை யுடன் நடந்துகொள்ள முடிந்தது போலும்! அப்போது நான் சட்டமேலவை உறுப்பினன், நண்பர் விநாயகம் சட்டப்பேரவை

உறுப்பினர். அதனாலும் 'நெல்லைத் தமிழன்' எங்களைக் காப்பாற்றியதால் ஜில்லா போலீஸ் சூப்பிரண்டெண்ட் ஆறுதல் அடைந்திருக்க வேண்டும். என் வாழ்நாளில் புத்தூரில் நான் பெற்ற பயங்கர அனுபவத்தை வேறு எங்கும் பெற்றதேயில்லை.

புத்தூர் கலரவத்தின்போது தோன்றாத் துணையாக இருந்து என்னையும் என் சகாக்களையும் காப்பாற்றிய 'நெல்லைத் தமிழன்' என் மனத்தை விட்டு இதுவரை நீங்கியதே இல்லை. உண்மையில் ஒரு அதிகாரிக்குரிய கடமையைத் துறந்துதான் அவர் எங்களைக் காப்பாற்றினாரா? கடமைக்கு உட்பட்டுத்தான் காப்பாற்றினாரா? — என்பது எனக்குத் தெரியாது. ஆனால், புத்தூர் தெலுங்கு அதிகாரிகள் தன்மீது புகார் கூறக் கூடுமென்று அவர் பயந்தார். அந்த பயத்திலும் வருவது வரட்டுமென்று துணிந்து எங்களைக் காப்பாற்றினார்.

நெல்லைத் தமிழனால் காப்பாற்றப்பட்டு தணிகை வந்து சேர்ந்த நான் அன்றிரவே விநாயகம், தியாகராசன் ஆகியவர்களோடு சென்னைக்கு வந்து விட்டேன்.

ராஜாஜி அறிக்கை

புத்தூர் கலவரம்பற்றி அன்றிரவே முதல்வர் ராஜாஜிக்கு ஸ்தல போலீஸ் அதிகாரிகள் மூலம் தகவல் கிடைத்துவிட்டது. மறுநாள் காலை 6 மணிக்கு எனக்கு என்ன நேர்ந்ததென்று அறிந்து வருமாறு சென்னை நகர போலீஸ் துணைக் கமிஷனர் ஒருவரை என்னிடம் அனுப்பி வைத்தார் ராஜாஜி. ''எனக்கு ஒன்றும் நேரவில்லை. நான் உடல்நலத்துடனேயே இருக்கிறேன்'' என்று அவருக்குச் சொல்லி அனுப்பினேன்.

வடக்கெல்லைக் கிளர்ச்சியானது 'காந்தியப் பாதை'யிலிருந்து கலகப் பாதைக்குத் திரும்பிவிட்டது என்று எண்ணியோ என்னவோ, புத்தூர் கலகம் பற்றி முதல்வர் ராஜாஜி கீழ்வரும் அறிக்கையை பத்திரிகைகளில் வெளியிட்டார்:

''தனி ஆந்திர ராஜ்யம் பிரிந்த பிறகு அந்த ராஜ்யத்தின் எல்லையைச் சரியாக வரையறுக்க எல்லைக் கமிஷன்

நிறுவப்படும் என்று இந்தியப் பிரதம மந்திரி நேரு மார்ச்சு 26-இல் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். சித்தூர் மாவட்டத்தில் தமிழர்கள் கோரும் பிரதேசங்கள் பற்றி அச்சமயத்தில் பூரணமாகவும், அமைதியாகவும் ஆராயலாம். தற்போது கிளர்ச்சி செய்ய வேண்டிய அவசியமே இல்லை. ஏற்கனவே இந்தக் கிளர்ச்சி அருவருக்கத் தக்க நிலையை அடைந்துவிட்டது. இந்தக் கிளர்ச்சி இதுகாறும் அமைதியும் நல்லெண்ணமும் நிலவிவரும் பகுதிகளில் வீண் மனக்கசப்பை உண்டு பண்ணக் கூடியது. நான் கூறுவதை எல்லா மக்களும் ஒப்புக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அமைதியான சூழ்நிலை ஏற்படுமென்று நம்புகிறேன்.''

('இந்து', 21.5.53)

வடக்கெல்லைப் பகுதியில் தமிழருக்கும் ஆந்திருக்குமிடையே இனச் சண்டை மூண்டால், அது தன் அமைச்சரவையைப் பிளவுபடுத்திவிடக் கூடும் என்று ராஜாஜி அஞ்சினார். ஆம்; ராஜாஜி அமைச்சரவையில் அப்போது ஆந்திரப் பிரதேசத்தவர்களும் அமைச்சர்களாக இருந்தனர். தமது அறிக்கையின் நகல் ஒன்றைச் சென்னை நகர போலீஸ் அதிகாரி ஒருவர் மூலம் ராஜாஜி அதிகாரபூர்வமாக எனக்கு அனுப்பி வைத்தார். எனது பதில் எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த அதிகாரி சொன்னார்.

என்னை நேரில் அழைத்து, ''வடக்கெல்லைக் கிளர்ச்சி இனியும் நீடிக்குமானால், அது இனச் சண்டையிலே கொண்டு போய் விடக்கூடும். தயவு செய்து கிளர்ச்சியைக் கைவிடுமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று ராஜாஜி மிகுந்த உருக்கத்துடன் நட்பு முறையில் என்னைக் கேட்டுக் கொண்டார்.

வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவைக் கூட்டி ஆலோசித்து முடிவெடுப்பதாக அவரிடம் கூறினேன்.

களத்தை மாற்ற முடிவு

22.5.53 அன்று வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு தணிகையில் கூடியது. அதில் முதல்வர் ராஜாஜியின் அறிக்கையில் மனநிறைவு கொள்ளுவதற்கில்லை என்றும், போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. தீர்மானத்தின் நகல் ராஜாஜிக்கு அனுப்பப்பட்டது.

வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு போராட்டத்தை அடியோடு நிறுத்த முன்வரவில்லை என்றாலும், சித்தூர் மாவட்டத்தில் நிறுத்தி சென்னையில் தொடங்குவதென முடிவு செய்தது. இம்முடிவைக் 'கல்கி' (31.5.53) ஆதரித்தது.

நாட்டிலும் நல்ல வரவேற்பிருந்தது. தெலுங்கருக்கும் தமிழருக்குமிடையே இனச்சண்டை ஏற்படுவதைத் தவிர்ப்பதிலே தமிழினத்தாருக்கிருந்த ஆர்வமே இதற்குக் காரணமாகும். புத்தூரில் நடந்த கலகம் எனக்கும் சரியான எச்சரிக்கையாக இருந்தது. ஆந்திரக் கம்யூனிஸ்டுகள் சித்தூர் மாவட்டத்திலிருந்த திரு. சிவப்பா மூலம் தெலுங்கர் — தமிழர் சண்டையைக் கிளப்பி, தமிழர் நடத்தும் எல்லைக் கிளர்ச்சியை முறியடிக்கத் திட்டமிட்டிருந்தனர். அதற்கு வெற்றி தந்துவிடக் கூடாதென்பதற்காகவும் வடக்கெல்லைப் பிரதேசத்தில் போராட்டம் நிறுத்தப்பட்டது.

வன்முறை ஆர்ப்பாட்டம்!

எல்லைப் போராட்டத்தைச் சென்னையில் நடத்துவதானால் அதற்குத் தமிழரசுக் கழகமே நேரில் பொறுப்பேற்க வேண்டியிருந்தது. அதுபற்றி யோசிக்க, 20.6.53-இல் தமிழரசுக் கழகச் செயற்குழு, வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு ஆகியவற்றின் கூட்டுக் கூட்டம் சென்னையில் நடந்தது. இந்தக் கூட்டத்திற்குத் திருத்தணிகை வட்டத்தைச் சார்ந்த வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் வரவில்லை. அவர்களை நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில், 'இந்து' பத்திரிகையின் நிருபர் தொலைபேசி மூலம் என்னுடன் தொடர்புகொண்டு, திருத்தணிகையிலிருந்து தமக்குக் கிடைத்துள்ள செய்தியை எனக்குத் தெரிவித்தார். அது வருமாறு:

''சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்ற பம்பாய் எக்ஸ்பிரஸ் திருத்தணிகையில் தடுத்து நிறுத்தப்பட்டு விட்டது. 1000 பேர் தண்டவாளத்தில் அமர்ந்து கொண்டு ரயில் மேலே செல்லவொட்டாமல் மறித்தனர். ரயில் நிறுத்தப்பட்டு ஒரு மணி நேரமாகிறது. ரயிலை மறிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தணிகையில் ஒரே பதட்ட நிலை. எந்த நேரத்தில் என்ன ஆகுமோ என்று அதிகாரிகள் கவலைப்படுகின்றனர்.

''இச்சிப்புத்தூருக்கும் பொன்பாடிக்குமிடையே தந்திக் கம்பிகள் துண்டிக்கப்பட்டு விட்டமையால் செய்திப் போக்குவரத்தும் தடைப்பட்டிருக்கிறது.''

இந்தத் தகவலைத் தந்த 'இந்து' நிருபர், 'இது தங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டார். ''தெரியாது'' என்றேன். மேலும் 'இதுபற்றி தாங்கள் ஏதேனும் கூறுகிறீர்களா?' என்று அவர் கேட்க, நான்,

''இன்று தணிகையில் நடப்பதற்குத் தமிழரசுக் கழகமோ, வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவோ பொறுப்பேற்பதற்கில்லை. நான் உடனே தணிகை செல்கிறேன். இதற்குமேல் எதுவும் சொல்வதற்கில்லை''

என்று கூறினேன்.

தணிகையில் பம்பாய் எக்ஸ்பிரஸ் நிறுத்தப்பட்ட நிகழ்ச்சி வன்முறைச் செயலுக்கான தூண்டுதலென்றே நான் கருதினேன். ஆம்; நூற்றுக்கணக்கான மக்கள் முன்னறிவிப்பின்றித் தண்டவாளத்தில் அமர்ந்துகொண்டு ரயிலை மறிப்பது வன்முறை தோன்றத் தூண்டுதலாகவே அமையும். செய்தியறிந்ததும், அப்போது என்னுடன் சென்னையிலிருந்த திரு.ஏ.ச. தியாகராசன் அவர்களுடன் காரில் தணிகை புறப்பட்டேன். எங்களுடன் திருவாளர்கள் கே.விநாயகம் எம்.எல்.ஏ., மங்கலங்கிழார் ஆகியோரும் வந்தனர்.

போலீசாருடன் தெருச் சண்டை!

சரியாக இரவு 7 மணிக்கு நாங்கள் தணிகை சேர்ந்தோம். அந்த நேரத்தில் கடைகளெல்லாம் மூடப்பட்டிருந்தன. தெருக்க ளிலே மக்கள் நடமாட்டமில்லை. ஊர் வெறிச்சோடிக் கிடந்தது. மக்கள் வீட்டை விட்டு வெளியே வர அஞ்சி வீட்டிற்குள் அடைபட்டுக் கிடப்பது தெரிந்தது. நாங்கள் ஊருக்குள் புகுந்த உடனே ரயில் நிறுத்தத்தை அடுத்து போலீஸ் அடக்குமுறை நடந்திருக்கிறதென்பதை எங்களால் புரிந்து கொள்ள முடிந்தது. உள்ளூர் தோழர்களைத் தேடினோம். ஒருவரும் கிடைக்க வில்லை. ஒன்று, அவர்களெல்லாம் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும் இல்லையேல், போலீசாரின் அடக்குமுறையிலிருந்து தப்புவதற்காகத் தலைமறைவாகியிருக்க வேண்டுமென்று யூகித் தோம். தணிகை மக்களில் சிலர் தகவல்கள் வருமாறு:

''பம்பாய் எக்ஸ்பிரஸ் சுமார் இரண்டரை மணி நேரம் வரை வெற்றிகரமாக நிறுத்தப்பட்டது. சுமார் 1000 பேர் வரை ரயில்வே தண்டவாளத்தில் அமர்ந்துவிட்டனர். பின்னர் ஊரிலுள்ள பெரியோர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் ரயில் மேலே செல்ல அனுமதிக்கப்பட்டது.

''ரயில் நிலையத்தில் ஈடுபட்டவர்கள் தணிகைத் தெருக்களில் ஊர்வலமாகச் சென்றனர். வழியில் ஊராட்சி மன்றத்தைத் தாக்கினர். அங்கிருந்த வானொலிப் பெட் டியை நொறுக்கினர். கடைகளிலும், பிற இடங்களிலும் தெலுங்கில் காணப்பட்ட பெயர்ப் பலகைகளுக்கெல்லாம் தார் அடித்தனர்.

''மாலை 5 மணிக்கு ரிசர்வ் போலீஸ் படையினர் வந்து ஊர்வலத்தைக் கலைக்க முயன்றனர். ஊர்வலக்காரர் கள் போலீசார் மீது கற்களை வீசினர். தணிகைத் தெருக்க ளிலே போலீசாருக்கும் எல்லைக் கிளர்ச்சியினருக் கிடையே ஒரு மணி நேரம் கடும்போர் நடைபெற்றது.

''போலீசார் தடியடி தர்பார் நடத்தி பலரைப் படுகா யப்படுத்தினர். ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்ற னர். ஊரில் அமைதி ஏற்பட்டது.

''அதன் பின்னர், போலீஸ்காரர்கள் வீடுதோறும் புகுந்து, வீட்டிலுள்ளவர்களை ''தமிழரா, தெலுங்கரா?'' என்று கேட்டறிந்து, 'தமிழர்' என்று கூறியவர்களை நையப் புடைத்தனர்.

''ஊரில் இன்று தொடங்கி 15 நாட்களுக்கு 144 தடையுத்தரவு போடப்பட்டிருப்பதாகத் தண்டோரா மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

''மற்றும் திருவாளர்கள் கே.விநாயகம், எம்.எல்.ஏ., பொதட்டூர்பேட்டை ஊராட்சித் தலைவர் ஏ.ச. தியாக ராசன், தணிகை ஊராட்சிமன்றத் தலைவர் சரவணய்யா, தணிகை நண்பர்கள் என்.சுப்பிரமணியம், என்.ஏ. ரஷீத், பி.முனுசாமி ஆகிய அறுவர்மீது 144 தடையுத்தரவு பிறப் பிக்கப்பட்டிருப்பதாகவும் தண்டோரா மூலம் அறிவிக்கப் பட்டுள்ளது.''

வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவைச் சார்ந்த இளைஞர் சிலர் தோல்வி உணர்ச்சிக்கிரையாகி, வன்முறையில் ஈடுபடத் திட்டமிட்டு, இந்த ''ஒரு நாள் ஆர்ப்பாட்டத்'தை நடத்தினர். அவர்களுடைய உணர்ச்சியை நான் மதிப்பவனென்றாலும், வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவிலிருந்து கொண்டு, அதன் வேலைத் திட்டத்திற்கு மாறாக வன்முறைகளில் ஈடுபட்டதனைப் பாராட்ட என்னால் இயலவில்லை. இந்த நிகழ்ச்சியை எனது தலைமைக்கு விடப்பட்ட அறைகூவலாக நான் கருதவில்லை யென்றாலும், எனது சாத்விகப் போர் முறைக்கு விடப்பட்ட அறைகூவலாக நான் கருதினேன்.

வன்முறையாளருடன் பேச்சு!

''வன்முறை வீரர்கள்'' தலைமறைவாக இருக்குமிடத்தை அறிந்து அவர்கள் என்னைச் சந்திக்கும்படி செய்தேன். இரவு 12 மணி வரை அவர்களோடு கலந்து பேசினேன். அவர்களு டைய போக்கை அனுமதித்தால், வடக்கெல்லைப் போர் படுதோல்வியுறும் என்பதனையும் அவர்களுக்கு நினைப்பூட்டி னேன். அவர்களிடம் பேசியதில் ஒரு நாள் ஆர்ப்பாட்டத்திற்கு

அதிகமாக அவர்களிடம் திட்டம் எதுவும் இல்லையென்பதனை அறிந்து ஆறுதல் அடைந்தேன்.

எனது நிலைமை தருமசங்கடமானதாக இருந்தது. வன்முறையாளர் போக்கிலே வடக்கெல்லைக் கிளர்ச்சியை நடத்த நான் விரும்பவில்லை. காந்தியத்திலே நம்பிக்கையுடைய என்னால் அது கொஞ்சங்கூடச் சாத்தியமில்லை. ஆயினும் அந்த இளைஞர்களின் உண்மை உணர்ச்சியை — வடக்கெல்லையை மீட்பதிலே அவர்களுக்கிருந்த தன்னலமற்ற ஆர்வத்தை நான் மதிக்க வேண்டியிருந்தது. மாறாக, அவர்கள் மீது கோபித்துக் கொண்டு, அவர்கள் போக்கிலேயே போக அவர்களை அனுமதித்துவிட்டு நான் சென்னை திரும்பியிருந்தால், அதிகார வர்க்கம் அந்த இளைஞர்களைக் கைது செய்து கொடுமைப்படுத்தியிருக்கும். அதனால், வடக்கெல்லைத் தமிழர்களிடையே ஏற்படக்கூடிய சோர்வும், அச்சமும் அந்தக் கிளர்ச்சியையே கொன்றுவிட்டிருக்கும். இந்தக் கேடுகளிலிருந்து வடக்கெல்லைத் தமிழர்களை மீட்க வேண்டுமானால், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போராட்டத்தைத் திரும்பவும் தணிகைக் களத்திலேயே நடத்தியாக வேண்டுமென்பதனை உணர்ந்தேன். நல்ல வேளையாக, சித்தூர் மாவட்ட கலெக்டர் தணிகை வட்டம் முழுவதிலும் 144 தடையுத்தரவை அமல் நடத்தியதால் போராட்டத்தைத் தொடங்குவது எனக்கு எளிதாகிவிட்டது.

ஆயினும் வன்முறைச் செயல்களுக்குப் பொறுப்பானவர்களை என்னுடன் வைத்துக் கொண்டு எதையும் செய்ய நான் தயாராக இல்லையென்பதைத் தெளிவுபடுத்தினேன். அவர்கள், தாங்கள் உணர்ச்சி வயப்பட்டு நடத்திய வன்முறை ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளுக்காக என்னிடம் வருத்தம் தெரிவித்தனர். அவர்கள் மறுநாளே ரயில் நிறுத்த சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறைபுக வேண்டுமென்றும், அதற்குப் பின்னர்தான் மேலே நடக்க வேண்டியவைபற்றி மற்றவர்களுடன் கலந்து யோசித்து முடிவு செய்ய இயலுமென்றும் கண்டிபாகக் கூறினேன். அவர்கள் எனது தலைமையில் மிகுந்த நம்பிக்கையுடையவர்களாதலால், எனது ஆணையை — இல்லை, யான் விதித்த 'தண்டனை'யை ஏற்று, மறுநாள் காலையில் பம்பாய் எக்ஸ்பிரஸ் சென்னை

யிலிருந்து தணிகைக்கு வந்து கொண்டிருந்தபோது சங்கிலியைப் பிடித்திழுத்து அதனை நிறுத்திக் கைதாயினர்.

பின்னர் நண்பர்களுடன் ஆலோசனை நடத்தி 144 தடையுத்தரவை எதிர்த்துப் போராடுவதென்ற முடிவுக்கு வந்தேன். ஒருநாள் அவகாசத்திற்குப் பின்னர் 22.6.53 முதல் தடையுத்தரவு நடைமுறையிலுள்ள திருத்தணி தாலுகா முழுவதிலும் தடையை மீறிப் பொதுக்கூட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தத் திட்டமிட்டேன்.

திரும்பவும் சத்தியாக்கிரகம்!

இந்த முறை வடக்கெல்லைப் பிரச்சினையில் வெற்றி கிடைக்கும் வரை தணிகையிலிருந்து வெளியேறுவதில்லை என்ற முடிவுடன் அங்குள்ள ஒரு சத்திரத்தில் முகாமிட்டேன். தமிழரசுக் கழகத் தோழர்களான வேலூர் வி.கே. குப்புசாமியும், கவிஞர் வானம்பாடியும் அங்கு என்னுடன் தங்கினர்.

ஜூன் 22-ஆம் தேதி தணிகைத் தாலுகா முழுவதிலும் தடையுத்தரவை மீறும் சத்தியாக்கிரகம் ஆரம்பமானது. ஆம்; இந்த முறை மிகுந்த எச்சரிக்கையுடன் போராட்டம் என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் ‘சத்தியாக்கிரகம்’ என்ற சொல்லைப் பயன்படுத்தினேன். நன்கு பரிசீலனை செய்து நபர்களைத் தேர்ந்தெடுத்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுத்தினேன். 1940-41-ஆம் ஆண்டுகளில் காந்தியடிகள் நடத்திய தனிநபர் சத்தியாக்கிரக ரீதியில் நடத்தினேன். இந்த முறையும் சத்தியாக்கிரகத்தைச் சித்தூர் மாவட்ட அளவிலேயே நடத்துவதென்று முடிவு செய்தேன். ஆனால், வெளிமாவட்டங்களிலிருந்து வருபவர்களை நன்கு பரிசீலனை செய்து தேர்ந்தெடுத்து சத்தியாக்கிரகத்தில் சேர்த்துக் கொள்ள அனுமதி கொடுத்தேன்.

22.6.53-இல் முதல் சத்தியாக்கிரகியாக ஏ.ச. தியாகராசன் அவர்கள் தலைமை தாங்கி தணிகையிலே 144 தடையுத்தரவை மீறி ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடத்தினார். ஜூன் 23-இல் திருவாலங்காடு ஊராட்சி மன்றத் தலைவர் திரு.டி.எம். திருமலைப் பிள்ளை அவர்களும், 24-இல் தமிழரசுக் கழக மத்திய செயற்குழு உறுப்பினர் திரு.வே.கி. குப்புசாமி அவர்

களும் தலைமையேற்று சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். இவர்கள் கைது செய்யப்படவில்லை.

திருத்தணிகை வட்டமெங்கணும் தடையை மீறி நடத்தப் பெறும் ஊர்வலம் பொதுக்கூட்டங்கள் பற்றி முன்கூட்டி விளம்பரம் செய்ய அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. அதனால், வி.கே. குப்புசாமி தான் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட நாளிலே தண்டோராவைத் தன் கழுத்தில் கட்டிக் கொண்டு தெருத் தெருவாகச் சென்று தனது பொதுக்கூட்டச் செய்தியை அறிவித்தார். போலீசார் அவரிடம் இருந்த தண்டோராவைப் பறித்துக் கொண்டு, அவரைக் கைது செய்தனர். திரு.எஸ். சிவஞானம் என்ற சென்னை கிருஷ்ணாம்பேட்டைத் தோழர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

திரு.வே.கி. குப்புசாமி முன் கூட்டியே கைது செய்யப்பட்டு விட்டதால் தமிழரசுக் கழக மாணவர் பகுதிச் செயலாளராக இருந்த திரு. வானம்பாடி அன்று சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார். அவரும் கைது செய்யப்பட்டார். இப்படி, தொடர்ந்து ஐந்து நாட்கள் தணிகை வட்டத்தில் சத்தியாக்கிரகம் நடைபெற்றது.

தொடக்கத்தில் முதலிரண்டு நாட்களில் போலீசார் கைது செய்யாக் கொள்கையைக் கடைப்பிடித்தனர். மூன்றாவது நாளிலிருந்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுவோர் அனைவரையும் கைது செய்து அவர்கள் மீது வழக்கு தொடுத்தனர். சத்தியாக்கிரகிகள் பலவிதமான தண்டனைகளுக்கு உள்ளாயினர். எல்லா ஊர்களிலும் தனிநபர் சத்தியாக்கிரகம் நடைபெற்றது என்றாலும், ஒன்றிரண்டு ஊர்களில் பொதுஜனப் போராட்டமாகவும் மாறியது — குறிப்பாக, அம்மையார் குப்பத்தில் திரு.எஸ். கண்ணப்ப முதலியார் தலைமையில் சுமார் ஐந்நூறுக்கு மேற்பட்டவர்களைக் கொண்ட ஊர்வலம் ஆர்ப்பாட்ட ரீதியில் நடைபெற்றது. ஆனால், போலீசார் தலையிடவில்லை. ஆர்.கே. பேட்டை என்னும் ஊரில் ஐந்நூறுக்கு மேற்பட்ட மக்களடங்கிய ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. ஊர்வலம் சென்ற வழியில் உள்ள கடைகளில் காணப்பட்ட தெலுங்குப் பெயர்ப் பலகைகள் எல்லாம் கழற்றப்பட்டு உடைத்தெறியப்பட்டன. ஊர்வலத்தினர்

போலீஸ் காவல் நிலையத்தை முற்றுகையிடத் தொடங்கினர். அதனைச் சமாளிக்க காவல் நிலையத்திலிருந்த போலீசார் துப்பாக்கியால் ஆகாயத்தை நோக்கிச் சுட்டு ஊர்வலத்தைக் கலைத்தனர்.

முதல்வரைச் சந்தித்தேன்!

எல்லைக் கிளர்ச்சி திரும்பவும் எந்த நேரத்திலும் பலாத்காரப் பாதைக்குத் திரும்பக் கூடுமென்ற அச்சம் எனக்கேற்பட்டது. அதனால், நானே சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுவதென்ற முடிவுக்கு வந்தேன். அதற்கு முன்னர் முதலமைச்சர் ராஜாஜியைச் சந்தித்துப் பேசி, சித்தூர் மாவட்டத்தைத் ''தகராறுக்கிடமான பிரதேசம்'' என்றறிவிக்குமாறு பிரதமர் நேருவிடம் தமக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்துமாறு மீண்டும் ஒருமுறை அவரை வற்புறுத்திக் கேட்க விரும்பினேன். அதன்படி, 26.6.53-இல் முதல்வர் ராஜாஜியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினேன். அந்நாள் நான் பிறந்த நாள் என்பதனை முதல்வருக்கு நினைப்பூட்டினேன். பிறந்த நாள் பரிசாக எனக்கு உறுதிமொழி தருமாறு அவரை வேண்டினேன்.

இப்பிரச்சினையில் தமக்குள்ள சங்கடத்தை மற்றொரு முறையும் அவர் எனக்கு விளக்கினார். தமது அமைச்சரவையில் சரிபாதிப் பேர் ஆந்திரராயிருப்பதாலும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சிக்குள்ளேயும் சரிபாதிப் பேர் தமிழரல்லாதாராக இருப்பதாலும், ஆந்திரர் நிலைக்கு எதிராக தமிழர் மட்டுமே நடத்தும் எல்லைக் கிளர்ச்சிக்கு ஆதரவாக முதல்வர் என்ற முறையில் தாம் எதையும் செய்ய இயலாமலிருப்பதை எனக்கு உணர்த்தினார்.

அவரது சங்கடமான நிலையை உணர்ந்தேன். ஆயினும், அன்றைய நிலையில் அவரிடம் எனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, பிரதமர் நேருவிடம் தொலைபேசியில் பேசி எல்லைக் கமிஷன் அனுப்புவதாக உறுதிமொழி வாங்கித் தருமாறு அவரைக் கட்டாயப்படுத்தினேன். அவர் அதற்கு இணங்கவில்லை என்றாலும், மாற்று யோசனை ஒன்றை எனக்குத் தெரிவித்தார்.

விரைவில் சென்னை மாநிலச் சட்டமன்றத்தில் ஆந்திரப் பிரிவினை மசோதா விவாதத்திற்கு வரவிருப்பதால், அந்த மசோதாவிலேயே, ''சித்தூர் மாவட்டத்தைத் தகராறுக்குரிய பிரதேசமாகக் கருதி, ஆந்திரம் பிரிந்த ஓராண்டிற்குள் எல்லைக் கமிஷன் அனுப்பப்பட வேண்டும்'' என்ற விதியைச் சேர்த்து விடலாம் என்பது ராஜாஜி கூறிய மாற்று யோசனை. இதற்கு அமைச்சரவையிலும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியிலுமுள்ள ஆந்திரர்களுடைய ஆதரவைப் பெற்றுவிட முடியும் என்று ராஜாஜி நம்பினார். எனக்கு அந்த நம்பிக்கை இல்லை என்பதோடு அப்படியே சென்னை மாநிலச் சட்டமன்றம் இசைந்தாலும், மத்திய அரசு அதனை ஏற்குமென்ற நம்பிக்கை எனக்கு ஏற்படவில்லை. அதனால் ராஜாஜியின் மாற்று யோசனையால் நான் மனநிறைவு பெறவில்லை. ஆயினும், இந்தச் சந்திப்பில் ராஜாஜி என்னிடம் காட்டிய அன்பும், எப்படியேனும் எனக்கு மனநிறைவு ஏற்படுத்த வேண்டுமென்பதில் அவர் காட்டிய ஆர்வமும் என்னைக் கவர்ந்தன. அதனால், சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுவதென்று நான் செய்து வைத்திருந்த முடிவை அவரிடம் சொல்லத் துணியாமல் விடைபெற்றுக் கொண்டேன்.

சூலை மாதம் 3-ஆம் தேதி நான் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுவதென முடிவு செய்தேன். எனது முடிவை சூலை 2-ஆம் தேதியன்றே ஒரு கடிதத்தின் மூலம் ராஜாஜிக்கு அறிவித்தேன். சத்தியாக்கிரகி கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைப்படி சூலை 3-ஆம் தேதி காலை 10 மணிக்குத் திருத்தணிகை மார்க்கெட் பகுதியில் உள்ள காந்தியடிகள் சிலை முன்பு தடையைமீறி நான் சொற்பொழிவாற்றப் போவதாக சித்தூர் மாவட்டக் கலெக்டருக்கு எழுத்து மூலம் முன்னறிவிப்பு கொடுத்தேன். நான் கைது செய்யப்பட்டால் சித்தூர் மாவட்டத் தமிழ்ப் பகுதிகளிலே வன்முறையிலான கலவரங்கள் ஏற்படக் கூடுமென்று அஞ்சினேன். அதனைத் தவிர்ப்பதற்கான முன்னேற்பாடுகள் செய்து கொள்ள அரசுக்கு உதவி புரிவது காந்தியவாதி என்ற முறையில் எனது கடமை என்று கருதியும் முன்னறிவிப்புக் கொடுத்தேன். இப்படி நான் முன்னறிவிப்பு கொடுத்தது தவறு என்று என்னுடைய நண்பர்கள் என்னைக் குறைகூறும் முறையில் சித்தூர்

மாவட்டப் போலீஸ் அதிகாரிகள் நான் சத்தியாகிரகம் செய்வதற்கு முன்னரே அடக்குமுறைக் கொடுமைகளிலீடுபட்டனர். தணிகை வட்டம் முழுவதிலும் ஆயுதப் போலீஸ் படையினர் பரவலாக நிறுத்தப்பட்டனர். தணிகை பிரயாணிகள் பங்களாவில் அப்போது உதவி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்த திரு. ராசரத்தின முதலியார் முகாம் செய்தார். தணிகைத் தெருக்களிலே சூன் 2ந் தேதியன்றே ஒரு அடிக்கொரு போலீசார் நிறுத்தப்பட்டனர். வியப்பென்னவென்றால், அவர்கள் கைகளிலே தடிகள் இல்லாததாகும். தடிகளுக்குப் பதிலாக புளியம் விளாறுகளை வைத்துக் கொண்டிருந்தார்கள். புளியம் விளாறுகளைப் போலீசார் கையில் நான் முதன் முதலாக அப்போதுதான் பார்த்தேன். விடுதலைப் போராட்டக் காலத்தில்கூட இந்தக் 'காட்சி'யை நான் கண்டதில்லை. தடியடியைவிட புளியம் விளாறால் அடிபடுவது தாங்கிக் கொள்ள முடியாததாக இருக்கும். இந்தக் கொடுமையான ஏற்பாட்டிற்கு யார் காரணமென்பது எனக்கு இதுவரை தெரியாது. ஆயினும், புளியம் விளாறுகளுடன் போலீசாரைக் கண்டபோது எனக்கே ஆத்திரமேற்பட்டது. நான் முன்னறிவிப்பு தந்ததின் விளைவு இது.

முதல்வரின் தந்தி

நான் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுவதற்கு முந்திய நாளன்று இரவிலே என்னைத் தருமசங்கடத்திலாழ்த்தும் தந்தியொன்று எனக்குக் கிடைத்தது. முதல் அமைச்சர் ராஜாஜி, தணிகையில் முகாம் செய்திருந்த சித்தூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டெண்டின் முகவரியிட்டு, எனக்கு அனுப்பிய தந்தி அது. தந்தியின் வாசகம் வருமாறு:

''தாங்கள் தடையை மீறிச் சிறை புகுவதற்கு முடிவு செய்து விட்டதாக அறிகிறேன். அது தேவையற்ற முயற்சி. அந்த முயற்சியைக் கைவிட்டு, உடனே சென்னைக்கு வந்து என்னைப் பார்க்க கோருகிறேன்''.

— சி. இராசகோபாலாச்சாரி.

இந்தத் தந்தி கிடைத்ததும் என்னைச் சூழ்ந்திருந்த நண்பர் கள் என்னைப் பற்றித் தாங்களாகவே ஒரு முடிவு செய்து கொண்டு மிகுந்த கவலையடைந்தார்கள். ஆம்; தந்தியில் இரா ஜாஜி கேட்டுக் கொண்டுள்ளபடி சத்தியாக்கிரகத்தைக் கைவிட்டு விடுவேன் என்று அவர்கள் கருதினார்கள். ஒருவகையில் அவர் கள் கருதியது சரிதான். இராஜாஜியின் அன்புக் கட்டளையைப் புறக்கணிப்பது என் மனத்துக்குத் துன்பம் தருவதுதான். 26.6.53-இல் நான் இராஜாஜியைச் சந்தித்ததில்லையானால், ''உடனே சென்னை திரும்பி என்னைச் சந்தியுங்கள்'' என்று ராஜாஜி கூறியதிலே ஏதேனும் பொருள் இருக்கக்கூடும் என்று கருதி அவரது கட்டளைக்குப் பணிந்திருப்பேன். ஆனால், அவர் வடக்கெல்லைப் பிரச்சினையில் நல்ல திருப்பத்தை ஏற்படுத்தும் நிலையில் இல்லையென்பதனைக் கடைசியாக அவருடன் பேசியபோது அறிந்து கொண்டேன். அதனால், அவருடைய தந்தி எனது மனத்தை மாற்றவில்லை.

தந்தியைக் கொண்டு வந்து கொடுத்த போலீஸ் இன்ஸ்பெக் டர், எனது பதிலை ராஜாஜி எதிர்பார்ப்பதாக என்னிடம் கூறினார். 'நாளை சத்தியாக்கிரகத்தில் நான் ஈடுபடுவது உறுதி' என்று முதலமைச்சருக்கு அறிவித்து விடுமாறு கூறினேன். ஆனால், என் மனம் மிகுந்த வேதனைப்பட்டது. முதலமைச்சர் பொறுப்பிலுள்ள மதிப்பிற்குரிய தலைவரின் அன்புக் கட்ட ளையை மீறுவதிலே என் மனம் மகிழ்ச்சியடைய முடியாது தானே!

பதில் கடிதம்

அன்றிரவே இராஜாஜிக்கு ஒரு கடிதம் எழுதினேன். அது வருமாறு:

தலைவர் ராஜாஜி அவர்களுக்கு, அன்புடையீர்! வணக்கம். தங்கள் தந்தி கிடைப்பதற்கு முன்பு சித்தூர் மாவட்ட கலெக்டரின் ஆணையை மீறிச் சிறை புகுவதென் றுதான் முடிவு செய்திருந்தேன். தங்கள் தந்தி கிடைத்தபின், என் அன்புத் தலைவரின் ஆணையையும் மீறவேண்டிய நிலையில் நான் இருப்பதற்காகப் பெரிதும் வருந்து கின்றேன்.

சென்னை மாநில காங்கிரஸ் ஆட்சியிடமோ, அதன் முதல்வராகிய தங்களிடமோ எனக்கு எந்தவிதமான மனத் தாங்கலும் இல்லை. மத்திய அரசின் நீதியற்ற போக்குதான் என்னைப் போராட்டத்தில் ஈடுபடுத்தியுள்ளது.

இப்போதுகூட, சித்தூர் மாவட்டம் தகராறுக்குரிய பிரதேசம் என்பதனை ஒப்புக்கொண்டு, அதற்காக எல்லைக் கமிஷன் அனுப்ப மத்திய அரசு உறுதி கூறுமானால் நான் போராட்டத்தை அடியோடு கைவிட்டு விடுவேன்.

தாங்கள் என் தலைவர். அந்த வகையில் தங்கள் ஆணைக்குக் கட்டுப்பட நான் கடமைப்பட்டவன். ஆனால், தலைவர்கள் வருவார்கள்; போவார்கள். தமிழ் நாடு அப்படி வந்துபோகும் பொருளல்ல. என்றென்றும் நிலைத்திருக்கும் புனிதபூமி. தலைவருக்குக் காட்டவேண்டிய மரியாதைக்காக, தமிழகத்தின் எல்லைகளைப் பறி கொடுக்க என்னால் இயலாது.

சிறை வாழ்க்கை எனக்குப் புதிதல்ல. ஆகவே, தாங்கள், நான் சிறைபுக நேர்ந்ததற்காக வருந்த வேண்டாம். சிறையில் எனது உடல் நலத்தை மிகுந்த எச்சரிக்கையுடன் கவனித்துக் கொள்ளுகிறேன்.

தங்களுடைய நண்பனாகிய என்னைச் சிறையில் அடைத்துவிட்டீர்கள் என்ற கெட்ட பெயர் தங்களுக்கு ஏற்பட்டு விடுமோ என்றுதான் நான் அஞ்சுகின்றேன். உறுதியாகச் சொல்லுகிறேன். நான் சிறைப்படுவதற்குக் காரணம் தாங்களல்ல, டில்லி அரசுதான்.

அன்புள்ள
ம.பொ.சிவஞானம்

இந்தக் கடிதம் மறுநாள் காலையே — நான் கைது செய்யப்படுவதற்கு முன்பே — ராஜாஜியின் கைக்குக் கிடைக்கக் கூடிய வகையில் நண்பர் ஒருவர் மூலம் அனுப்பி வைத்தேன்.

சட்டத்தை மீறிக் கைதியானேன்!

இந்த நிலையில் ஜூலை 3-ஆம் தேதி வெள்ளிக்கிழமை யன்று காலை 9 மணிக்கு நான் தங்கியிருந்த சத்திரத்திலிருந்து புறப்பட்டேன். தணிகை ஊராட்சிமன்றத் துணைத் தலைவர் வேங்கடேசன் என்னைப் பின்பற்றினார். மார்க்கெட் பகுதியி லுள்ள காந்தி சிலை முன்பு போடப்பட்டிருந்த மேஜை மீதேறி நின்று வடக்கெல்லைப் பகுதிகளை மீட்கும் போராட்டத்தில் ஈடுபடுமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துப் பேசினேன். பேசத் தொடங்கி, இரண்டு மணித்துளி ஆவதற்குள் அதிகாரிகள் என்னைக் கைது செய்து சப் ஜெயிலுக்குக் கொண்டு சென்றனர்.

ஒன்றரையாண்டுக்கு முன்பு — 1952-இல் நடந்த பொதுத் தேர்தலிலே, எந்தக் காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்காக இரவு பகல் பாராமல், சரியான ஊண் உறக்கமில்லாமல் நாடு சுற்றிப் பிரசாரம் செய்தேனோ, அதே கட்சியின் ஆட்சி என்னைச் சிறையில் அடைத்தது!

எந்தத் தலைவர் சென்னை மாநிலத்தின் முதல்வராக வரவேண்டுமென்று கோஷ்டி சேர்ந்து சண்டை போட்டேனோ அதே தலைவர் முதல்வராக இருந்த நேரத்தில்தான் நான் சிறைபிடிக்கப்பட்டேன்.

தமிழ்நாட்டின் எல்லைப் பகுதிகள் பறிபோகாமல் காக்கப் பாடுபட்டதற்காக, தமிழர் ஒருவர் முதல்வராக இருந்த ஆட்சி யால் சிறைபிடிக்கப்பட்டேன்.

இன்று எது எதற்காகவெல்லாமோ, மாணவர் உலகம் பொங்கியெழுந்து 'புரட்சி' செய்கிறது. அந்தப் 'புரட்சி'க்கு தமிழ்நாட்டுப் பத்திரிகைகளெல்லாம் உடன்பாட்டு முறையில் விளம்பரம் தருகின்றன. ஆட்சிக்கு வெளியேயுள்ள கட்சிக ளெல்லாம் மாணவர்களைத் தூண்டி விடுகின்றன. அன்று தமிழ கத்தின் தலைநகர் பறிபோக இருந்தபோது, வடக்கெல்லை — தெற்கெல்லைப் பகுதிகள் கொள்ளை போக இருந்தபோது மாணவர்கள் பொங்கியெழவில்லை. தமிழரசுக் கழகத்தைத் தவிர, மற்ற கட்சிகளும் கழகங்களும் கவலைப்படவில்லை

எனது தமிழரசுக் கழகந்தான் களம் புகுந்தது. அதன் விளைவு தான் தணிகையில் எனக்குக் கிடைத்த சிறைவாசம்!

நான் சப் ஜெயிலில் வைக்கப்பட்ட ஒரு மணி நேரத்திற்குள் என்னைத் திடுக்கிட வைக்கும் செய்தியொன்று கிடைத்தது. நான் கைதியானபின் சத்தியாக்கிரகத்திலீடுபட்ட தொண்டர்கள் போலீசாரால் புளியம் விளாரால் அடிக்கப்பட்டும் பூட்ஸ் கால்களால் உதைக்கப்பட்டும் கொடுமைப்படுத்தப்பட்டனர் என்று கேள்விப் பட்டேன். அடி, உதைபட்ட தொண்டர்கள் அவ்வளவு பேரும் சீர்காழிவாசிகள்! இவ்வளவு கொடுமையாக இதற்கு முன்பு தணிகையில் போலீசார் நடந்துகொண்டதே இல்லை.

இந்த நேரத்தில், போலீஸ் சூப்பரின்டெண்ட், டெபுடி சூபரின்டெண்ட், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆகியோர் சப் ஜெயிலில் என்னைச் சூழ்ந்துகொண்டு, என்னிடம் காட்டிய மரியாதை வருணனைக்கும் எட்டாததாகும். தொண்டர்களை மறியலில் ஈடுபடுத்திய என்னிடம் மரியாதை! என் பேச்சைக் கேட்டு மறியலில் ஈடுபட்டவர்களுக்கு அடி, உதை! ஏனெனில், நான் தலைவன்; அவர்கள் தொண்டர்கள்! இதுதான் இன்றைய அரசியல் 'நியதி' — 'நீதி!'

இப்போது பொதுச் சொத்துக்களுக்குத் தீயிடும் சமூக விரோதிகளை போலீசார் அடித்துக் கலைத்தாலும், அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டன அறிக்கை வெளியிட முன்வந்து விடுகிறார்கள்! ஆனால், அன்று தமிழினத்தார் சார்பில் வடக் கெல்லைப் பகுதிகளை மீட்க சாத்வீக முறையில் போராடிய தமிழர்களை ஆந்திரப் போலீசார் புளியம் விளாரினால், அடித் தும், பூட்ஸ் காலினால் உதைத்தும் துன்புறுத்தியபோது, அவர்களிடம் அனுதாபம் காட்ட — அரசைக் கண்டித்து அறிக்கைவிட ஒரு தலைவரும் முன்வரவில்லை காரணம், தமிழ்நாட்டுத் தலைவர்களுக்குத் ''தமிழன்'' என்ற இன உணர்ச்சி இல்லாதது தான்!

எஸ்.பி.யுடன் உரையாடல்

நான் சப்ஜெயிலில் வைக்கப்பட்ட பின்னர், என்னைப் பார்க்க வந்த போலீஸ் சூபரின்டெண்டுக்கும் எனக்கும் நடந்த உரையாடல் வருமாறு:

சூப்பிரின்டெண்ட்: இப்போது நாங்கள் உங்களை விடுதலை செய்துவிட்டால், நீங்கள் நேரே சென்னை சென்று, முதல்வரைக் காணலாமே!

நான்: முதல்வரைப் பார்த்துப் பேசிவிட்டு, அவரிடம் நம்பிக்கை இழந்துதானே, நான் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டேன். திரும்பவும் அவரைப் பார்ப்பதால் பயன் என்ன? என்னை விடுதலை செய்தால், மீண்டும் ஊர்வலஞ் செல்வேன்.

சூபரின்: நீங்கள் அறிவித்தபடி தடையை மீறிச் சத்தியாக்கிரகம் செய்துவிட்டீர்கள். நாங்கள் விடுதலை செய்தால் திரும்பவும் சட்டத்தை மீறுவானேன்?

நான்: இது எனது பெருமைக்காக நான் நடத்தும் போராட்டமல்ல; என் தமிழகத்தின் உரிமைக்காக நடத்தும் போராட்டம். ஆகவே, எல்லைக் கமிஷன் அனுப்புவதாக மத்திய அரசு உறுதி கூறும்வரை நான் சென்னை திரும்பப் போவதில்லை. இங்கிருந்தே போராடுவேன்.

போலீஸ் அதிகாரி எனது நிலையை அறிய முயன்றது முதல்வருக்கு அறிவிக்கத்தான்! சப்ஜெயிலில் வழக்கமாகக் கைதிகளை அடைக்கும் காற்றோட்டமற்ற ஒரு இருட்டறையில் என்னை அடைக்காமல், சப் இன்ஸ்பெக்டர் அலுவலகத்தைக் காலி செய்து, அங்கு என்னை வைத்தனர். கட்டில், நாற்காலி, மின்சார விசிறி முதலியவற்றையும் கொண்டு வந்து வைத்தார்கள்.

''சட்டத்திற்குட்பட்டு ம.பொ.சி.க்கு எவ்வளவு வசதிகளைச் செய்து தரமுடியுமோ, அவ்வளவையும் செய்து கொடுங்கள்'' என்று முதலமைச்சர் தங்களுக்குக் கட்டளையிட்டிருப்பதாகப் போலீஸ் அதிகாரிகள் என்னிடம் கூறினர். ராஜாஜி என்னிடம் வைத்துள்ள அன்பை அறிந்துகொள்ள இந்த நேரம் எனக்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது.

ஆறு வார சிறைத் தண்டனை

என்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, மாலையில் திருத் தணிகை சப் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணை நடந்தது. வழக்கத்திற்கு மாறாக எனது வழக்கு விசாரணை இரவு 7 மணிக்கு ஆரம்பமானது. ஆம்! எனது வழக்குக்காக கோர்ட் விசேஷமாகக் கூடியது. முதல்வர் ராஜாஜி, ''சப் மாஜிஸ்திரேட் ம.பொ.சி.யை விடுதலை செய்வதானால், போலீஸ் தரப்பில் ஆட்சேபணை எழுப்ப வேண்டாம்'' என்று சூபரின்டெண்டுக் குத் தந்தி அனுப்பினார். அதன் நகல் சப் மாஜிஸ்திரேட்டுக்கும் அனுப்பப்பட்டதாக அறிந்தேன்.

விசாரணை ஆரம்பமானதும் நீதிபதியவர்கள் என்னைப் பார்த்து ''தேசியத் தலைவர்களில் ஒருவரான தங்களை விசாரித் துத் தண்டிக்கும் பெருமை எனக்குக் கிடைத்ததற்காக நான் ஒருவகையில் மகிழ்ச்சியடைந்தாலும், தங்களைச் சிறைக்கு அனுப்ப நேர்ந்ததற்காகப் பெரிதும் வருந்துகின்றேன்'' என்றார்.

நான் ''தாங்கள் என்னிடம் காட்டும் மரியாதைக்கு நன்றி. ஆயினும், தங்கள் கடமையை வருத்தமின்றிச் செய்யலாம்'' என்றேன்.

நான் குற்றத்தை ஒப்புக் கொண்டதால், நீதிபதி ''144 தடையை மீறிய குற்றத்திற்காக 6 வாரக் கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன். சிறையில் 'ஏ' வகுப்பு தரப்பட வேண்டும்'' என்று தீர்ப்பளித்தார். வடக்கெல்லைக் கிளர்ச்சியில் அதுவரை 2 வாரத்திற்கதிகமாகத் தணிகையில் யாருக்கும் தண்டனை தரப்படவில்லை. எனக்குத் தான் அதிக தண்டனை! ஆனால், ஆறு வாரம் என்பது, ''கொடுந்தண்டனை' அன்று! சட்டத்தை மீறுவது சிறைத் தண்டனைக்குரிய குற்றமென்றால், அந்தக் குற்றத்தைச் செய்யுமாறு மக்களைத் தூண்டிவிடும் தலைவனுக் குத்தானே நீண்டகால சிறைத் தண்டனை விதிக்க வேண்டும்!

என்னுடன் சேர்ந்து சட்டத்தை மீறிய திரு. வெங்கடேசனுக் கும் 6 வாரக் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. ஆனால், அவருக்கு 'சி' வகுப்பு தரப்பட்டது. அதனை எதிர்த்து,

''நானும் திரு. வெங்கடேசனும் ஒரே குற்றத்தைத்தான் செய்தோம். எனக்கு 'ஏ' வகுப்பு தந்த தாங்கள், அவருக்கு மட்டும் 'சி' வகுப்பு தருவானேன்?''

என்று நீதிபதியைக் கேட்டேன். அதற்கவர், ''தங்கள் நிலைக்கு அவரைக் கொண்டுவருவது சாத்தியமில்லை'' என்றார். அப்படி யானால், தயவு செய்து அவர் நிலையில் ('சி' வகுப்பில்) என்னை வைத்துவிடுங்கள் என்றேன். சிறிது நேரம் நீதிபதி யோசித்துவிட்டு, திரு. வெங்கடேசனுக்கும் 'ஏ' வகுப்பு கொடுத் தார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியிலே நாட்டின் விடுதலைப் போரில் ஈடுபட்டு ஆறு முறை சிறைத் தண்டனை பெற்றேன். இப்போது நானும் பாடுபட்டு அமைந்த சுதந்திர ஆட்சியிலே 7ஆவது முறையாக எனக்குச் சிறைத் தண்டனை கிடைத்தது!

கேட்டது கிடைத்தது!

விசாரணை முடிய இரவு 8 மணி ஆனது. அதன் பின்னர், வேலூரிலுள்ள பெரிய சிறைச்சாலைக்கு என்னைக் கொண்டு செல்ல போலீஸ் 'வேன்' வந்தது. வேலூருக்குப் புறப்படுவதற்கு முன்பு தணிகை பிரயாணிகள் பங்களாவில் முகாம் செய்திருந்த போலீஸ் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் வி.ஆர். இராச ரத்தினம் அவர்களிடம் அழைத்துச் செல்லப்பட்டேன். இரவு உணவை அங்கு உண்டபின், அவர் நல்லுரை கூறி, என்னை வழியனுப்பி வைத்தார். போலீஸ் மோட்டார் புறப்பட்ட நேரத் தில், ஒரு உயர்தரப் போலீஸ் அதிகாரி அவசர அவசரமாக ஓடிவந்து, ஏதோ ஒரு செய்தியை டி.ஐ.ஜி.யிடம் கூறினார். அவர் அதைக் கேட்டுவிட்டு, போலீஸ் மோட்டாரிலிருந்து என்னை இறக்குமாறு ஆணையிட்டார். பின்னர் அவர் என் னைப் பார்த்து, ''தாங்கள் இன்று வேலூர் சிறைக்குப் போகத் தேவையில்லை. தணிகை சப் ஜெயிலிலேயே இருக்கலாம்'' என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஒருகால், மறுநாள் காலை சென்னைச் சிறைக்குக் கொண்டுபோகக் கூடுமென்று யூகித்தேன்.

அதற்குள், திரு.வி.ஆர். இராசரத்தின முதலியார் மகிழ்ச்சிப் பெருமிதத்தோடு கீழ்வருமாறு கூறினார்:

''பிரதமர் நேரு அவர்கள் சித்தூர் மாவட்டம் தகராறுக்குரிய பிரதேசம் என்பதனை ஒப்புக் கொண்டு, அதற்காக விரைவில் எல்லைக் கமிஷன் அனுப்பப்படும் என்று இன்று பகல் செய்தி நிருபர்களிடம் கூறியுள்ளார். இதைத் தங்களிடம் தெரிவித்து தங்கள் கருத்தை அறிந்து உடனே தமக்குத் தகவல் தருமாறு முதலமைச்சர் ராஜாஜி கேட்டுள்ளார்.''

எதை விரும்பித் தமிழ் மக்கள் போராட்டம் நடத்தினார்களோ, எதற்காக நான் சிறைத் தண்டனை பெற்றேனோ அது கிடைத்து விட்டதென்ற மனநிறைவும் மகிழ்ச்சியும் எனக்கு ஏற்பட்டன என்றாலும் நேரு அறிக்கையின் முழு வாசகம் என் கைக்குக் கிடைக்கும்வரை எனது கருத்தை முதல்வருக்கு அறிவிக்க நான் விரும்பவில்லை.

மறுநாள் (சூலை 4) காலை செய்தி இதழ்களைப் படித்துப் பிரதமர் நேருவின் பிரகடனம் முழுவதையும் அறிந்தேன். அதிலே அவர் அப்போது பெல்லாரியில் வன்முறை ரீதியில் நடந்து கொண்டிருந்த எல்லைக் கிளர்ச்சி பற்றியும் குறிப்பிட்டிருந்தார். தமிழக வடக்கெல்லைக் கிளர்ச்சி பற்றி அவர் குறிப்பிட்டிருந்த பகுதி வருமாறு:

''சித்தூர் மாவட்டத்தில் தமிழ்ப் பகுதிகள் என உரிமை கொண்டாடப்படும் பிரதேசங்கள் சிலவற்றைக் குறித்து விசாரிக்க, ஆந்திர ராஜ்யம் அமைக்கப்பட்டபின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எல்லைக் கமிஷன் அமைக்கப்படும்.''

பிரதமர் நேருவின் அறிக்கை எனக்கு மனநிறைவைத் தந்தது. மூன்று திங்களுக்கு முன் ஆந்திர மாநிலம் பற்றி அவர் விடுத்த அறிக்கையையும் இங்கு பார்ப்பது அவசியமாகிறது. அது வருமாறு:

''தற்போதைய சென்னை மாநிலத்திலுள்ள தகராறுக்கு இடமில்லாத தெலுங்கு மாவட்டங்களைக் கொண்டு

ஆந்திர ராஜ்யம் அமைக்கப்படும். அந்த மாவட்டங்கள் வருமாறு: (1) ஸ்ரீகாகுளம், (2) விசாகப்பட்டினம், (3) கிழக்கு கோதாவரி, (4) மேற்கு கோதாவரி, (5) கிருஷ்ணா, (6) குண்டூர், (7) நெல்லூர், (8) கர்நூல், (9) அனந்தப்பூர், (10) படப்பை, (11) சித்தூர்.

நேரு அறிக்கைக்கு வரவேற்பு

இந்த அறிக்கையில் தகராறுக்கிடமில்லாத தெலுங்கு மாவட்டங்கள் பட்டியலிலே சித்தூர் மாவட்டமும் சேர்க்கப் பட்டிருப்பதனை அறியலாம். 3 திங்களுக்கு முன்பு தாமே வெளியிட்ட இவ்வறிக்கையிலிருந்து நேரு பின்வாங்கியது எனக்கு மன நிறைவைத் தந்தது. அதனால், தணிகை சப் ஜெயிலுக்கு வந்த நிருபர்களுக்குப் பேட்டியளித்து கீழ்வரும் அறிக்கையை வெளியிட்டேன்.

''பிரதமர் நேருவின் அறிக்கையிலே, சித்தூர் மாவட்டம் தகராறுக்கிடமான பிரதேசம் என்பது தெளிவாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் சித்தூர் மாவட்டத் தமிழ்ப் பகுதிகள் பற்றி விசாரணை நடத்த எல்லைக் கமிஷன் அனுப்பப்படும் என்றும் உறுதி கூறியுள்ளார். ஆகவே, நேருவின் அறிக்கையை மனநிறைவுடன் ஏற்கிறேன்.

''எந்தக் கோரிக்கைக்காக வடக்கெல்லைப் போராட்டம் நடத்தப்பட்டதோ, அந்தக் கோரிக்கையைப் பிரதமர் நேரு ஏற்றுக் கொண்டு விட்டதால், அவருக்கு நன்றி தெரிவிப்பதோடு, போராட்டத்தை நிபந்தனையின்றி நிறுத்தி வைக்கிறேன். சென்னை மாநில அரசும், எல்லைக் கிளர்ச்சி காரணமாக சிறைப்பட்டுள்ளவர்களை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்வதோடு, விசாரணையிலுள்ள வழக்குகளை வாபஸ் பெறுமென்றும் நம்புகின்றேன்.

''வடக்கெல்லைக் கிளர்ச்சிக்கு உதவிபுரிந்த தமிழ் நாட்டு மக்களுக்கும் பத்திரிகைகளுக்கும் தமிழரசுக்

கழகம், வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு ஆகியவற்றின் தலைவன் என்ற முறையில் நன்றி தெரிவித்துக் கொள் கிறேன்.

''வடக்கெல்லைப் போராட்டம் இரத்தம் சிந்தாம லேயே வெற்றி பெற வேண்டுமென்று நான் விரும்பினேன். என் விருப்பத்திற்கு மாறாக, திருத்தணி வீதிகளில் சீர்காழி வீரத் தொண்டர்கள் செந்நீர் சிந்திவிட்டனர்!

''போலீசார் புளியம் விளாறுகளாலும் தடிகளாலும் அடித்து சீர்காழித் தொண்டர்களின் உடல் முழுவதையும் புண்படுத்தி விட்டனர். புண்பட்ட உடல்மீது ஒரு போலீஸ் அதிகாரி பூட்ஸ் காலால் உதைத்த கொடுமையைக் கேட்டு எனது நெஞ்சம் பதறியது.

''வடக்கெல்லைப் போர் தமிழரசுக் கழகம் நடத்திய முதற்போர்! இலக்கிய பாஷையில் சொல்வதானால் கன்னிப் போர்! இதில் முதன் முதலாக இரத்தம் சிந்திய இளைஞர்களைப் பாராட்டுகிறேன்.''

எனது அறிக்கையின் நகல் ஒன்றைப் போலீஸ் அதிகாரி மூலம் முதலமைச்சருக்கும் அனுப்பி வைத்தேன். சென்னை மாநில அரசு வெளியிட்ட அறிக்கையிலே, வடக்கெல்லைக் கிளர்ச்சி காரணமாகச் சிறை வைக்கப்பட்டவர்கள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்கள் என்றும், வழக்கு கள் வாபஸ் பெறப்படுமென்றும், தணிகைத் தாலுகாவில் அமுலி லுள்ள தடையுத்தரவு ரத்து செய்யப்படுமென்றும் அறிவிக்கப் பட்டது. ஆனால், கைதிகளை விடுதலை செய்வதை அதிகாரி கள் தாமதப்படுத்தினர். ஐந்து நாட்கள் நான் தணிகை சப் ஜெயிலில் இருந்த பின்னர், விடுதலை செய்யப்பட்டு, சென்னை வந்து சேர்ந்தேன்.

ராஜாஜியைச் சந்தித்தேன்!

நான் தணிகையில் கைதியான செய்தி அன்று நடுப்பகலில் வானொலியில் அறிவிக்கப்பட்டதும், என்னைக் கைது செய்த

தைக் கண்டிக்கும் பொருட்டு, தமிழ்நாட்டின் பலவிடங்களில் தமிழரசுக் கழகத் தோழர்கள் ரயில்களை நிறுத்தினர். அதற்காக சுமார் 200 பேர் வரை கைதாயினர். இவர்களெல்லோரும் கூட விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்விதமாக, தணிகையில் ஜூன் 21-இல் தொடங்கிய வடக்கெல்லைப் போராட்டம், ஜூலை 3-இல் நான் கைது செய்யப்பட்ட நாளிலே மாநிலம் முழுவதிலும் பரவி பிரதமர் நேரு விடுத்த அறிக்கை காரணமாக அன்றோடு நிறுத்தப்பட்டது. இரண்டு வார காலம் நடைபெற்ற இப் போராட்டத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிறை புகுந்தனர். எனது தலைமையில் முதன் முதலாக நடந்த மிகப் பெரிய போராட்டம் இதுதான்! இந்த முதற் போரிலேயே எனக்கு வெற்றி கிடைத்தது.

பிரதமர் நேரு ஜூலை 6-ஆம் தேதி நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் பேசியபோதும், தமிழக — ஆந்திர எல்லைச் சிக்கலைத் தீர்த்துவைக்க எல்லைக் கமிஷன் அனுப்பி வைக்கப்படுமென்று இரண்டாவது முறையாகவும் அறிவித்தார்.

சென்னை மாநில அசெம்பிளியில், ''சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்த் தாலுக்காக்கள் சம்பந்தமாக எல்லைக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தும் திருத்தம் ஒன்றை ஆந்திரப் பிரிவினை மசோதாவில் சேர்க்க அரசு உத்தேசித்திருக்கிறது'' என்றார் ராஜாஜி.

சென்னை வந்த சில மணி நேரத்திற்குள்ளேயே முதலமைச்சர் ராஜாஜி அவர்களைச் சந்தித்துப் பேசினேன். ''தாங்கள் தந்தி மூலம் கேட்டுக் கொண்டும் அதைப் புறக்கணித்து நான் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டதில் தங்களுக்கு வருத்தமில்லையே?'' என்று கேட்டேன். அவர்,

> *''நீங்கள் தமிழ்நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்தீர்கள். நான் அரசுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்தேன். இதில் வருத்தப்படுவதற்கு என்ன இருக்கிறது?''*

என்றார். உண்மையில் இந்தச் சந்திப்பிலே நாங்கள் எப்போதும் போல பரஸ்பரம் அன்போடு பழகினோம்.

பத்திரிகைகளின் பாராட்டு

வடக்கெல்லைப் போராட்டத்தில் எனக்குக் கிடைத்த வெற்றியைப் பாராட்டிப் பத்திரிகைகளில் தலையங்கங்கள் வெளியாயின. திரு. கு. காமராசர் கோஷ்டியைச் சார்ந்த திரு. டி.எஸ். சொக்கலிங்கம் அவர்கள், அப்போது தாம் நடத்தி வந்த ''ஜன நாயகம்'' (4.7.53) என்ற நாள் இதழிலே, ''கிராமணியார் நடத்திய போராட்டம் சந்தேகமில்லாமல் வெற்றி பெற்றுவிட்டது. அவருக்கு நமது பாராட்டு'' என்று எழுதியிருந்தார்.

''சித்தூர் போராட்டத்தில் தமிழரசுக் கழகம் முதல் வெற்றியைக் கண்டுவிட்டது'' என்று 'சுதேசமித்திரன்' (4.7.53) இதழில் எழுதப்பட்டிருந்தது.

'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தமது 'கல்கி' (12.7.53) இதழில், ''முதல் வெற்றி'' என்னுந் தலைப்பிட்டு எழுதிய தலையங்கத்தில் ''நேருவின் பிரகடனம் வடக்கெல்லைக் கிளர்ச்சிக்குக் கிடைத்த வெற்றி'' என்று குறிப்பிட்டிருந்தது.

''இந்து'' (8.7.53) இதழில் எழுதப்பட்ட தலையங்கத்திலே, நேருஜி கொடுத்த உறுதி மொழியை ஏற்று வடக்கெல்லைக் களிர்ச்சியை நிறுத்தியதற்காக நான் பாராட்டப்பட்டிருந்தேன்.

திரு. நாரண. துரைக்கண்ணன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த ''பிரசண்ட விகடன்'' (15.7.53) இதழிலேயும் வடக்கெல்லைப் போரின் வெற்றி பாராட்டப்பட்டிருந்தது.

ஆந்திரப் பெருந்தலைவர்களான திரு.ஏ. காளேசுவரராவ், திரு.என்.ஜி. ரங்கா இருவரும் நேருவின் அறிக்கையை ஏற்றுக் கொண்டதற்காக என்னைப் பாராட்டி அறிக்கை விட்டிருந்தனர்.

மற்றும் தவத்திரு குன்றக்குடி அடிகளார், நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை, காரைக்குடி சா.கணேசன், நெல்லை சோமயாசுலு முதலிய தேசபக்தர்களும் வடக்கெல்லைப் போரின் வெற்றியைப் பாராட்டி எனக்குக் கடிதங்கள் எழுதினர்.

'ஒழுங்கு நடவடிக்கை!'

தணிகைச் சிறையிலிருந்து விடுதலை பெற்று வீடு திரும்பியதும் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் திரு. என்.இராமகிருஷ்ணய்யர் அனுப்பியிருந்த ''ஒழுங்கு நடவடிக்கை நோட்டீஸ்'' என்னை வரவேற்றது. அந்த நோட்டீசில்,

> *''காங்கிரஸ்காரராகிய தாங்கள், காங்கிரஸ் ஆட்சியில் போடப்பட்ட 144 தடையுத்தரவை மீறியது கட்சிக் கட்டுப் பாட்டை மீறிய செயலாகுமாதலால், தங்களைச் சட்ட மன்றக் காங்கிரஸ் கட்சியிலிருந்து ஏன் விலக்கக் கூடா தென்பதற்கு 15 நாட்களுக்குள் தாங்கள் காரணங்காட்ட வேண்டும்.''*

என்று குறிப்பிடப்பட்டிருந்தது. சட்டமன்றக் காங்கிரஸ் கட்சிக்கு முதலமைச்சர் ராஜாஜிதான் தலைவர். ஆனால், அவர் விருப்பப்படி எனக்கு நோட்டீஸ் அனுப்பப்படவில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு.கு. காமராசர் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சிச் செயலாளரைத் தூண்ட, செயலாளர் அவர்கள் கட்சித் தலைவர் ராஜாஜியின் அனுமதியைக் கோர, அவர் மறுக்கத் துணிவின்றி அனுமதி தந்ததன் பேரில் எனக்கு ஒழுங்கு நடவடிக் கைக் கடிதம் அனுப்பப்பட்டதாக அறிந்தேன். அதனை வாங்கிப் படித்தபோது என் மனம் நொந்தது.

என்ன இருந்தாலும் தனிநபரைவிட, கட்சிதானே பெரிது! கட்சியின் கட்டுப்பாட்டுக்குத் தனி நபர் அடங்கத்தானே வேண் டும்! ''நீயார் என்னை சமாதானங் கேட்க? நான் மக்களை அணுகி நீதி கேட்கிறேன்.'' என்று நான் கட்சிக் காரியதரிசிக்கு எழுதியிருக்கலாம். உண்மையில் எல்லைப் பிரச்சினையில் மக்க ளின் ஆதரவு என் பக்கத்தில்தான் இருந்தது. ஆயினும், நான் கட்சிச் செயலாளருக்கு மிகுந்த பணிவோடு சமாதானம் கூறிப் பதில் எழுதினேன்.

''தமிழக எல்லைப் பிரச்சினை கட்சிப் பிரச்சினையல்ல; அதனை, கட்சிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக் கூடாது. அது தமிழ்நாட்டின் தேசியப் பிரச்சினை. காங்கிரஸ்காரன் என்ற முறையில் அல்லாமல் தமிழினத்தாரிலே ஒருவன் என்ற உணர்வோடுதான் தணிகையில் தடையை மீறினேன். ஆகவே, அதனை, கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய செயலாகக் கருதவேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

''என்னைப் போன்றே சென்னை மாநிலச் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியிலுள்ள முன்னாள் அமைச்சர் கோடி ரெட்டி போன்ற பலர் பெல்லாரிப் பிரச்சினைக்காக நடந்த போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை புகுந்துள்ளனர். அவர்கள் விஷயத்தில் கட்சி என்ன நடவடிக்கை எடுக்கிறதோ, அதனை நானும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். கட்சியின் கட்டுப்பாட்டை மீறும் எண்ணம் எனக்குக் கொஞ்சங்கூட இல்லை என்பதனை உறுதியாகக் கூறுகிறேன்.''

சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கூடி எனது கடிதத்தைப் பரிசீலனை செய்தது. தமிழக வடக்கெல்லைக் கிளர்ச்சி பிரதமர் நேருவின் அறிவுரைப்படி நிறுத்தப்பட்டு விட்டதால், நடவடிக்கை அவசியப்படவில்லையென்று கட்சியின் செயற்குழு ஒருமனதாக முடிவு செய்தது! அப்போதைக்குத் தண்டனையிலிருந்து தப்பினேன்!

ஆந்திரப் பிரிவினை மசோதா சூலை 14-ஆம் நாளில் சென்னை மாநிலச் சட்டப் பேரவையிலும், 20-இல் மேலவையிலும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த மசோதாவில் சித்தூர் மாவட்டத்திற்கு எல்லைக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டுமெனக் கூறும் விதியொன்றையும் சேர்க்க மாநில அரசு திருத்தம் கொண்டு வருமென்று முதல்வர் ராஜாஜி முன்னரே அறிவித்திருந்தாரென்றாலும், கடைசி நேரத்தில் அந்தத் திருத்தத்தைத் திருத்திவிட்டார். ஆம்; சென்னை — ஆந்திரம் — மைசூர் ஆகிய மாநிலங்களின் எல்லைகளைச் சரியானபடி வரையறுக்க எல்லைக் கமிஷன் அனுப்பப்பட வேண்டும்''

என்று அரசின் திருத்தம் கூறியது. எனக்கு இது பிடிக்கவில்லை. ஆகவே, ''சித்தூர் மாவட்டத் தமிழ்த் தாலுக்காக்களுக்காக மட்டும் தனியாக எல்லைக் கமிஷன் அமைக்கப்பட வேண்டும்'' என்ற திருத்தத்தைத் திரு.கே. விநாயகம் அவர்களைக் கொண்டு கொடுக்கச் செய்தேன்.

கம்யூனிஸ்டுத் தமிழர் நிலை

ஆந்திரப் பிரிவினை மசோதா சட்டப்பேரவையில் விவாதிக்கப்பட்ட நாட்களிலே நான் பேரவையில் பார்வையாளர் காலரியில் இருந்து கவனித்து வந்தேன். முதல்வர் ராஜாஜியையும், சட்டப் பேரவையின் தமிழின உறுப்பினர்களையும் சந்தித்து, திரு. விநாயகத்தின் திருத்தத்தை ஆதரிக்குமாறு வற்புறுத்தினேன். எனது முயற்சி பயன் தந்தது. முதல்வர் ராஜாஜி கடைசி நேரத்தில் மனமாற்றம் அடைந்தார். அரசின் திருத்தத்தை ஆந்திரர் ஆதரிக்க மறுக்கவே, அதை வாபஸ் பெற்றுக் கொண்டு, திரு. விநாயகத்தின் திருத்தத்தை ஆதரிக்கும்படி காங்கிரஸ் கட்சியின் தமிழ் உறுப்பினர்களுக்கு ஆணையிட்டார். ஆம்; காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இனவழி பிரிந்து வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர்.

எல்லைக் கமிஷன் கோரும் திருத்தத்தை ஆந்திரர்கள் ஆதரிக்கவில்லை. ஆந்திர கம்யூனிஸ்டுகள்கூட இதற்கு விலக்காக இல்லை. தமிழகக் கம்யூனிஸ்டு உறுப்பினர்களும் இதில் ஆந்திரர்களுடன் சேர்ந்துகொண்டு விட்டனர். இதுபற்றி 26.7.53 'செங்கோல்' இதழில் எழுதப்பட்டது. அதனை இங்கு அப்படியே தருகிறேன்.

''ஆந்திரப் பிரிவினை மசோதா ஷரத்துவாரி விவாதிக்கப்பட்டு ஓட்டெடுக்கப்பட்டபோது அசெம்பிளி அங்கத்தினர்கள் மொழிவாரி முகாம்களாகப் பிரிந்தனர். ஆனால், கம்யூனிஸ்டுக் கட்சியினர் மட்டும் இதற்கு விலக்கு! அவர்கள் ஏகத் திராவிடம் போன்று இருந்தனர்.

''சூலை 17,18 தேதிகளில் எல்லைக் கமிஷன் கோரிக்கை பற்றிய பல்வேறு திருத்தங்கள் மீது வாக்குவாதமும் வாக்கெடுப்பும் நடந்தன.

''சித்தூர் தமிழ்ப் பகுதிகளுக்கு எல்லைக் கமிஷன் அனுப்ப வேண்டும் என்று தளபதி விநாயகம் கொண்டு வந்த திருத்தத்தை ராஜாஜியின் அனுமதிமீது காங்கிரஸ் கட்சித் தமிழர்கள் கட்டுப்பாடாக ஆதரித்தனர்.

''உழைப்பாளர் கட்சியினர் காமன்வீல் கட்சியினர், பிரஜா கட்சித் தமிழர்கள் ஆகியவர்களும் காங்கிரஸ் தமிழர்களோடு ஒற்றுமையாக இருந்து ஓட்டளித்தனர்.

''தமிழ்நாடு கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களான பி.இராமமூர்த்தியும், ப.ஜீவானந்தமும் இந்த இரண்டு நாட்களிலும் அசெம்பிளியில் ஆஜராகவில்லை. மற்ற கம்யூனிஸ்டுத் தமிழர்கள் ஆந்திர நாகி ரெட்டியிடம் அடைக்கலம் புகுந்து விட்டனர்.

''சித்தூர் தமிழ்ப் பகுதிகள் சம்பந்தமான திருத்தத்தை ஓட்டுக்கு விடாமல் ஒழித்துக்கட்ட நாகி ரெட்டி சில தந்திரங்களைக் கையாண்டார். சட்டப் புத்தகத்தைக் கேடய மாக்கிக் கொண்டு சபாநாயகரோடு சமர் புரிந்தார். ஆனால், அவர் எழுப்பிய ஆட்சேபணைகளையெல்லாம் அடித்துத் தள்ளிவிட்டு விநாயகத்தின் திருத்தத்தை சபாநாயகர் ஓட்டுக்கு விட்டார். அசெம்பிளி வழக்கப்படி திருத்தத்தை ஆதரிப்போர் 'ஆம்' என்றும், எதிர்ப்போர் 'இல்லை' என்றும் குரல் கொடுத்தனர். அந்தச் சமயத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியினர் அவ்வளவு பேரும் கட்டுப்பாடாக 'இல்லை' என்று தொண்டை பலம் கொண்டமட்டும் கூச்சலிட்டனர். அதாவது, 'சித்தூர் தமிழ்ப் பகுதிகளுக்கு எல்லைக் கமிஷன் அனுப்ப வேண்டும்' என்ற திருத்தத்திற்கு விரோதமாகக் குரல் கொடுத்தனர். ஆனால், திருத்தத்திற்கு ஆதரவாக 'ஆம்' என்று குரல் கொடுத்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால், சபாநாயகர் திருத்தம் நிறைவேறியதாகக் கூறினார். ஆனால், கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட ஆந்திரர்கள் எல்லோரும் 'போல்' (பெயர் களைக் கூப்பிட்டு வாக்குகளை எண்ண வேண்டுமென, கேட்டனர். சபாநாயகரும் அதற்குச் சம்மதித்தார். ஆனால், திடீரென்று கம்யூனிஸ்டுகள் பின் வாங்கி விட்டனர்.

தமிழருக்கு விரோதமாக — வெளிப்படையாக ஆளும் பெயரும் அம்பலமாகும்படி — ஓட்டளிக்க தமிழகக் கம்யூனிஸ்டுகள் அஞ்சியதே காரணம்.

''ஆகவே, வினாயகத்தின் திருத்தத்தை முறியடிக்கப் பாடுபட்ட பிரகாசம் — நாகிரெட்டி கூட்டணி 'போல்' கோரிக்கையை வாபஸ் பெற்றுக் கொண்டு விட்டதால், திருத்தம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.''

நஷ்ட ஈட்டுக்கு எதிர்ப்பு

ஆந்திரப் பிரிவினை மசோதாவில் எல்லைக் கமிஷன் கோரும் விதியைச் சேர்க்க முயன்று அதில் வெற்றியடைந்தது போல், மசோதாவிலிருந்து மற்றொரு விதியை நீக்கிவிடுவதற்காகவும் முயற்சி எடுத்தேன். அந்த விதி ஆந்திர மாநிலத்திற்கு எஞ்சிய சென்னை மாநிலம் நஷ்டஈடு தருவது பற்றியதாகும்.

ஆந்திரப் பிரிவினை பற்றிய விஷயங்களை ஆய்ந்து பரிந்துரை தர ராஜஸ்தான் நீதிபதி வாஞ்சு என்பவர் நியமிக்கப்பட்டார் என்பதனை முன்பே கூறினேன். தனக்கும் உரிமையுள்ள சென்னை நகரை ஆந்திரம் தமிழகத்திற்கே விட்டுக் கொடுக்க நேர்ந்ததால், அதற்கு ஈடாக இழப்புத் தொகை ரூ 2 கோடி 30 லட்சம் தரவேண்டுமென்று நீதிபதி வாஞ்சு சிபாரிசு செய்திருந்தார். அது பிரிவினை மசோதாவிலும் சேர்க்கப்பட்டது.

இந்த விதியை மசோதாவிலிருந்தே அகற்றிவிட முயற்சி எடுத்தேன். ஆனால், ராஜாஜி அமைச்சரவை இழப்புத் தொகை தர மறுக்கவில்லை. அதனால், சட்டமன்றத்திலிருந்து காங்கிரசல்லாத தமிழர்களும் அரசின் முடிவை ஆதரிக்கலாயினர். ஆனால், ஆந்திரர்கள் 2 1/2 கோடியோடு திருப்தியடையவில்லை. 4 1/2 கோடி தரவேண்டுமென்றும், 10 கோடி தரவேண்டுமென்றும் இரண்டு திருத்தங்கள் தந்து, அதற்கு வெற்றி தேடக் கட்டுப்பாடாகப் பாடுபட்டனர். இதிலும் கம்யூனிஸ்டுகள் — தமிழ்நாட்டாருட்பட — 'ஒற்றுமையாக இருந்து இழப்புத் தொகை நாலரை கோடி தர வேண்டுமென்ற கோரிக்கையை ஆதரித்தனர் — ஏன், அப்படிக் கோரும் திருத்தத்தை அவர்களே கொண்டு வந்தனர்.

கடைசி நேரத்தில் நஷ்டாஈடுபற்றிய விதியையே மசோதாவி லிருந்து நீக்கிவிட வேண்டுமென்றும், சொத்து — கடன் பிரிவி னைபற்றி விசாரணை நடத்த ஒரு கமிஷன் நியமிக்கக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதால், அந்தக் கமிஷனே 'நஷ்டாஈடு' பற்றியும் ஆலோசிக்கலாம் என்றும் தமிழர் சார்பில் பிரேரணை தரப்பட்டது. இதனை, ஆந்திரர் ஏற்கவில்லை. அப்பிரேரணையை ஓட்டுக்கு விடும் தருணத்தில் சட்டப் பேரவையிலிருந்து ஆந்திரர் அனைவரும் வெளியேறினர்.

ஆந்திரப் பிரிவினை மசோதா இறுதியில் ஆந்திரர் இல்லாத அசெம்பிளியால் — ஆந்திரரல்லாதார் வாக்களித்ததால் நிறை வேற்றப்பட்டது. ''நஷ்டு ஈடு'' விஷயத்திலும் என் விருப்பம் ஓரளவு நிறைவேறியதெனலாம்.

ஆந்திரப் பிரிவினை மசோதாவின் மீது சட்ட மேலவையில் நான் பேசினேன். மாநிலங்களை மொழிவாரித் திருத்தியமைக்க வேண்டுமென்ற கொள்கையுடையவனாதலால் பொதுவாக, ஆந்திரப் பிரிவினை மசோதாவை ஆதரிப்பதில் எனக்கு சங்கட மிருக்கவில்லை. மற்றும், ஆந்திரம் பிரிந்து போவதால் தமிழகம் தனியரசு மாநிலமாக அமைய வாய்ப்பிருந்ததால் பிரிவினை மசோதாவை மகிழ்ச்சியோடு ஆதரித்துப் பேசினேன்.

மேலவையில் எனது குரல்

சென்னை நகரை இழப்பதற்காக ஆந்திர மாநிலத்திற்கு எஞ்சிய சென்னை மாநிலம் நஷ்ட ஈடு தர வேண்டுமென்ற விதியை நான் மேலவையில் எதிர்த்துப் பேசினேன். அந்தப் பேச்சு வருமாறு:

''ஆந்திர ராஜ்ய அமைப்பையொட்டி சொத்துப் பிரி வினை, பொக்கிஷப் பிரிவினை, கடன் பிரிவினை எல்லாம் பேசப்படுகின்றன. இந்த மசோதாவின் ஷரத்துக்களைப் படித்துப் பார்த்தால், இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந் தபோது நடந்த ஏற்பாடுகளெல்லாம் இதிலும் காணப்பட்டு கின்றன. நம்மிடமிருந்து ஆந்திரர் பிரிந்தாலும், அவர்க ளும் நாமும் இந்தியா என்ற ஒரு பெரிய குடும்பத்தில் சேர்ந்தே இருக்கப் போகின்றோம். அப்படியிருக்க, ஏன்

இவ்வளவு விரிவான பிரிவினைகள்? ஆந்திர ராஜ்யத்துக்கு எஞ்சிய சென்னை ராஜ்யம் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமாம்! வடக்கே மொழிவழி ராஜ்யங்கள் அமைக்கப்பட்ட போதெல்லாம் பிரிந்து போகும் ராஜ்யத்திற்கு எஞ்சிய ராஜ்யம் நஷ்டஈடு கொடுத்ததா? இல்லையே! கல்கத்தாவிலிருந்து அஸ்ஸாமும் ஒரிஸாவும் பிரிந்தபோது எஞ்சிய கல்கத்தா மாகாணம் நஷ்டஈடு கொடுக்கவில்லை. பம்பாயிலிருந்து சிந்துவும், பஞ்சாபும் பிரிந்தபோது எஞ்சிய பம்பாய் மாகாணம் நஷ்ட ஈடு கொடுக்கவில்லை!

''பிரிந்து போகும் மாநிலங்கள் புதிய தலைநகர் அமைத்துக் கொள்வதற்கு மத்திய அரசுதான் அங்கெல்லாம் பொருளுதவி புரிந்தது.

''இங்கு மட்டும் எதற்காக ஒரு புதிய தவறான சம்பிரதாயத்தை ஆரம்பித்து வைக்க வேண்டும்? வேண்டுமானால், ஆந்திரம் நமது சகோதர மாகாணம் என்பதற்காக, ''நஷ்ட ஈடு'' என்ற பெயரால் அல்லாமல் ''உதவி'' என்ற பெயரால் பணம் கொடுக்கலாமே! ''நஷ்ட ஈடு'' என்ற சொல்லையே நான் ஆட்சேபிக்கிறேன். நஷ்ட ஈடு கொடுக்க எந்த நியாயமும் கிடையாது.

''அந்த நஷ்டஈடும், 1947-இல் ஒரு கோடி என்று வரையறுத்தது, ஆந்திரப் பிரிவினைக் கமிட்டி. ஆந்திரப் பிரிவினை மசோதாவில் அது இரண்டு கோடி முப்பது லட்சம் என்று உயர்த்தப்பட்டுள்ளது. அதுவும் போதாதென்று, ஆந்திரரில் ஒரு சாரார் நாலரை கோடி ரூபாய் நஷ்டஈடு கேட்கிறார்கள். மற்றொரு சாரார், அதைப் பத்து கோடியாக உயர்த்த வேண்டுமென்கிறார்கள். அந்த மட்டிலேனும் நிறுத்திக் கொண்டார்களே, அதற்காக ஆந்திர சகோதரர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

''தற்போதைய முதலமைச்சர் ஒரு தமிழர். ஆயினும் அவர் ஆந்திரருக்கும் தமிழருக்கும் பொதுவானவர். ஆகவே, முதலமைச்சர் ஆந்திரருக்கும் நீதி வழங்கக் கடமைப்பட்டிருக்கிறார். அதுபோல, அவரும் அவரது மந்திரி சபையும் தமிழருக்கும் நீதி வழங்கவேண்டும்.

நஷ்ட ஈடு விஷயத்தில் எஞ்சிய சென்னை ராஜ்யத்தின் நிதி நிலையைக் கவனிக்க வேண்டும். நஷ்டஈடு கொடுப்ப தன் மூலம் பொக்கிஷத் துறையில் எஞ்சிய சென்னை ராஜ்ஜியம் திருவோடு எடுக்கக்கூடிய நிலையில் வைக்கப் படுமோ என்று அஞ்சுகின்றேன்.''

(21.7.53-இல் மேலவையில் பேசியது)

மேலவையிலும் சித்தூர் மாவட்டத் தமிழ்ப் பகுதிகளுக்கு எல்லைக் கமிஷன் அனுப்பக் கோரும் திருத்தமும், ஆந்திர மாநிலத்திற்கு எஞ்சிய சென்னை மாநிலம் நஷ்ட ஈடு தர வேண்டுமென்ற விதியை அகற்ற வேண்டுமென்ற திருத்தமும் நிறைவேறின. இந்தத் திருத்தங்களுக்கு ஆதரவு தேடுவதிலே மேலவையில் எனக்கு அதிக கஷ்டம் இருக்கவில்லை. காரணம், அங்கு ஆந்திரர் அதிகமில்லாததுதான். கம்யூனிஸ்டு உறுப்பினர் ஒருவருக்கு மேல் அங்கில்லாததும் மற்றொரு காரணமாகும்.

அக்டோபர் 1-இல் கர்நூல் நகரைத் தலைநகராகக் கொண்டு புதிய ஆந்திரா அமைந்தது. 1912-இல் குண்டூரில் கூடிய ஆந்திர மகா சபையிலேதான் முதன் முதலாக ஆந்திர மாநிலக் கோரிக்கை பிறந்தது. அது முதற்கொண்டு தொடர்ந்து நாற்ப தாண்டுக் காலம் ஆந்திர மகாசபையும், ஆந்திர மாகாண காங்கிரசும் ஆந்திரப் பிரிவினையை இடைவிடாது வற்புறுத்தி வந்தன. பொட்டி சீராமுலுவின் உயிர்த் தியாகம் ஆந்திரப் பிரிவினையைத் துரிதப்படுத்தியது. அதற்காக ஆந்திர அரசு ஆண்டு தோறும் 'பொட்டி சீராமுலு நாள்' கொண்டாடி வருகின் றது. அத்துடனன்றி அக்டோபர் முதல் தேதிதோறும் 'ஆந்திர மாநிலம் அமைந்த நாள்' அரசு விடுமுறையோடும் கொண்டா டப்பட்டு வருகிறது.

''புதிய ஆந்திர மாநிலத்தின் தந்தை''யென்று 'ஆந்திர கேசரி' டி. பிரகாசம் போற்றப்பட்டார். அவரை ஆந்திரர் அனைவரும் ஒருமனப்பட்டு, புதிய ஆந்திரத்தின் முதன் மந்திரி யாக்கி, தங்கள் புது வாழ்வைத் தொடங்கினர்.

மாயூரத்தில் பெற்ற விழுப்புண்

வடக்கு தெற்கு எல்லைப் பகுதிகளை மீட்கும் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கும்போதே மற்றொரு போராட்டத்திலும் பங்கு பெற, காலம் என்னைக் கட்டாயப்படுத்தியது. அது ராஜாஜி அரசு கொண்டு வந்த 'ஆரம்பக் கல்வி சீர்திருத்தத் திட்டத்'திற்கு ஏற்பட்ட எதிர்ப்பை முறியடிக்கும் போராட்டமாகும்.

காங்கிரஸ்காரனாகவும் இருந்த நான் காங்கிரஸ் அரசு கொண்டுவரும் எந்தத் திட்டத்தையும் ஆதரிக்கக் கடமைப்பட்டிருந்தேன். ஆதரிக்க மறுப்பதோ, எதிர்ப்பதோ கட்சிக் கட்டுப்பாட்டைக் குலைக்கும் துரோகச் செயலாகும். முதல்வர் ராஜாஜியிடம் தமிழ்நாடு காங்கிரசுக்கு — அதன் தலைவர் காமராசருக்கு நல்லெண்ணமிருக்கவில்லை. அதனால், ஆரம்பக் கல்வி சீர்திருத்தத் திட்டத்திற்கு ஏற்பட்ட எதிர்ப்பை முறியடித்து காங்கிரஸ் ஆட்சியைக் காப்பாற்ற த.நா.கா. முன் வரவில்லை. அதற்குத் தமிழரசுக் கழகமே பொறுப்பேற்க வேண்டியிருந்தது. ராஜாஜிக்கும் எனக்கும் இருந்த நெருங்கிய நட்பும் இந்தப் பணியிலீடுபட என்னைத் தூண்டியது.

ஒரு வேளை படிப்பு!

ராஜாஜி கல்வித் திட்டம் 1953-54ஆம் கல்வியாண்டில் நடைமுறைக்கு வந்தது. சட்டமன்றத்தின் — சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் — நாட்டிலுள்ள கல்வி நிபுணர்களின் கருத்தையறியாமலே தமது திட்டத்தைச் செயல்படுத்த முயன்றார் ராஜாஜி. இது, எதேச்சதிகாரப் போக்காக காங்கிரசுக்கு உள்ளேயும் வெளியேயுமிருந்த அவருடைய எதிரிகளால் கருதப்பட்டது.

ராஜாஜியின் திட்டத்தில் புதுமையோ, புரட்சியோ ஒன்று மில்லை. வெறும் 'ஷிப்டு முறை' — அவ்வளவுதான்! ஆரம்பப் பள்ளிகளில் கல்வி பயிற்றுவிக்கும் நேரம் 6 மணியாக இருந் ததை 3 மணியாகக் குறைத்தார். மிச்சமுள்ள 3 மணி நேரத்தில் குழந்தைகள் பெற்றோர் செய்யும் தொழிலில் பங்கு கொள்ளவும் அதிலே பயிற்சி பெறவும் வாய்ப்பு தரப்படுவதாக முதல்வரால் சொல்லப்பட்டது.

''ஒருவேளை பள்ளிப் படிப்பு'' என்ற ராஜாஜி திட்டத்தால் அதிகப்படியாக 45 லட்சம் குழந்தைகள் கல்வி பயில வசதி கிடைக்குமென்றும் அறிவிக்கப்பட்டது. அது உண்மைதான்.

அரசியல் சட்டத்தில் 1960-ஆம் ஆண்டுக்குள் — அதா வது, சட்டம் நடைமுறைக்கு வந்து பத்து ஆண்டு நிறைவு பெறுவதற்குள் 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் அனைவரை யும் பள்ளிகளுக்குக் கொண்டு வந்துவிட வேண்டுமென்று கூறப்பட்டிருந்தது. இதை நிறைவேற்றும் பொறுப்பு அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்த இரண்டாண்டுகளுக்குள் முதல்வர் பதவி ஏற்ற ராஜாஜியுடையதாக இருந்தது என்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

பள்ளிக்கு வரவேண்டிய பருவத்திலுள்ள அவ்வளவு பிள்ளைகளுக்கும் கட்டாயமாகவும் இலவசமாகவும் கல்வி தரு வதென்பது சாதாரண விஷயமல்ல. பெரும் செலவுக்குரிய பொறுப்பாகும். முழுநேரக் கல்வி முறைப்படி இதனை நிறை வேற்றுவதானால், ஆயிரக்கணக்கில் புதிய பள்ளிகள் நிறுவி, பதினாயிரக்கணக்கில் புதிதாக ஆசிரியர்களை நியமித்தாக வேண்டும். ஏழ்மை மிகுந்த நம் நாட்டில் அது சாத்தியமன்று. அதனால், ''அரை நாள் கல்வி'' மூலமாகத்தான் அனைவருக் கும் கட்டாயக் கல்வி தர முடியும் என்று அரசு கருதியது.

ராஜாஜி புகுத்திய கல்வித் திட்டத்தில் அதுவரை போதிக்கப் பட்டு வந்த பாடங்களில் எதுவும் குறைக்கப்படவோ, கைவிடப் படவோ இல்லையென்பது நினைவில் கொள்ளத்தக்கதாகும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, தமது திட்டத்தில் இல்லாத ஒன்றை, தமது பேச்சிலே ராஜாஜி வற்புறுத்தி வந்தார். ஆம்;

''அப்பன் தொழிலை மகன் செய்ய எனது திட்டம் வழி செய்கிறது'' என்று பேசி வந்தார். இதைப் பயன்படுத்தி ராஜாஜி திட்டத்திற்குக் 'குலக் கல்வித் திட்டம்' என்று பெயர் தந்தது தி.மு.க.

உண்மையிலேயே, சலவைத் தொழிலாளி மகன் சலவைத் தொழில்தான் செய்யவேண்டும்; க்ஷவரத் தொழிலாளி மகன் க்ஷவரத் தொழில்தான் செய்ய வேண்டும்; தோட்டியின் மகன் தோட்டித் தொழில்தான் செய்ய வேண்டும் என்ற கருத்தை இந்த இருபதாம் நூற்றாண்டில் ஏற்க முடியாதுதானே! அதையும் பிராமணர் ஒருவர் சொன்னதால், சாதிப் போர் மூண்டது!

''அரைவேளைக் கல்வி'' என்பது மலாசியா முழுவதிலும் நடைமுறையிலிருப்பதனை நான் 1964-இல் அந்த நாட்டில் சுற்றுலா செய்தபோது நேரில் கண்டேன். கேரளத்திலும் அரை நாள் கல்வி முறை அமுலிலிருக்கிறது. தமிழ்நாட்டிலும் தனியார் பள்ளிகள் சிலவற்றில் இது கடைப்பிடிக்கப்படுகின்றது.

என்ன செய்யப்படுகிறது என்பதைவிட, யாரால் செய்யப்படுகிறது என்பதற்கே முதன்மை தரப்பட்டது. அதனால், வகுப்புவாத அரசியல் நோக்குடன் ராஜாஜியின் கல்வித் திட்டம் தி.மு.க.வால் எதிர்க்கப்பட்டது. கொஞ்சம் தாமதித்து தி.க.வும் புதிய கல்வித் திட்டத்தை எதிர்க்கத் தொடங்கியது. தி.மு.க. சூலை 14-இல் நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டது. அதனால், மாநில முழுவதிலும் ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டனர். தூத்துக்குடியிலும், டால்மியா புரத்திலும் ரயில் நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்கெதிராக போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டின் விளைவாக 9 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் கல்வித் திட்ட எதிர்ப்பானது பிராமண எதிர்ப்பாக, காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியாக மாறியது. ஆரம்ப கட்டத்தில் இவ்வளவையும் கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்தது தமிழ்நாடு காங்கிரஸ். ஒரு கட்டத்தில் கல்வித் திட்டத்தை எதிர்த்துப் பேசவும் முற்பட்டார் திரு. கு. காமராசர். தூத்துக்குடி — டால்மியாபுரம் துப்பாக்கிச் சூடுகளினால் பொதுமக்கள் அனுதாபம் தி.மு.க.

பக்கம் திரும்பியது. அந்த நேரம் பார்த்துப் புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்துப் பேசினார் காமராசர். கல்வித் திட்டம் சரியா தவறா என்பதில் அவருக்குக் கவலையில்லை. ராஜாஜி ஆட்சியை வெளியேற்றி, தான் அதிகாரத்திற்கு வர அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

ராஜாஜியின் கல்வித் திட்டத்தை ஆதரித்துத் தமிழரசுக் கழகச் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியது. மாநிலமெங் கணும் மாநாடுகளும் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடத்திக் கல்வித் திட்டத்திற்கு ஆதரவளித்துப் பிரச்சாரப் போர் நிகழ்த்தி யது.

மாயூரத்திலே 6.9.57-இல் தாலுகா தமிழரசு மாநாடு நடந்தது. அந்த மாநாட்டின் முடிவிலே ராஜாஜியின் கல்வித் திட்டத்தை ஆதரித்துத் தனிச் சொற்பொழிவு நிகழ்த்தினேன். மாநாட்டிலே, ஒரு சாரார் திட்டமிட்ட முறையில் எனக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர். அதனைச் சமாளித்து, மாநாட்டை வெற்றிகரமாக முடித்துவிட்டு, மாநாட்டுப் பந்தலிலி ருந்து வெளியேறினேன்.

நான் தங்கியிருந்த இடத்திற்குக் கழக முன்னணித் தோழர்க ளுடன் நடந்து சென்று கொண்டிருந்தேன். கூட்டம் அதிகரிக் கவே ஊர்வலம் போலாகி விட்டது! வழியில் இருள் சூழ்ந்த ஒரு சாலை வழியாகச் சென்றபோது ஒரு கும்பல் என் கண்ணில் மண்ணை வாரிக் கொட்டியது. அந்த நேரத்தில் யாரோ ஒருவன் கூர்பொருந்திய இரும்புக் கத்தியொன்றால், எனது நெற்றியின் வலப்புறத்தில் வெட்டினான். உடனே, காயம்பட்ட இடத்தி லிருந்து இரத்தம் கொட்டியது. பின்னர், பெரிய கலவரம் நடந்தது. நான் விரைவாக டாக்டரிடம் அழைத்துச் செல்லப்பட் டேன். அங்கு வெட்டுக் காயத்திற்குக் கட்டுப் போட்டுக் கொண்டு, ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி அன்றிரவே ரயிலேறிச் சென்னை திரும்பினேன்.

மறுநாள் காலை சென்னை போலீஸ் டெபுடி கமிஷனர் ஒருவர் என்னை அணுகி, ''தாங்கள் மாயூரத்தில் தாக்கப்பட்டது இரவே முதலமைச்சருக்குத் தெரிந்துவிட்டது. தங்களை விசாரித் துவிட்டு தகவல் தரச் சொன்னார்'' என்றார். நான் ''நல்ல

வேளையாக, காயம் சொற்பந்தான், அபாயமொன்றுமில்லை யென்று முதலமைச்சருக்குச் சொல்லுங்கள்'' என்றேன்.

அவர் போன சிறிது நேரத்திற்குள் மற்றொரு போலீஸ் சி.ஐ.டி. அதிகாரி வந்து, என்னை அழைத்துப்போய் இராயப் பேட்டை மருத்துவமனையில் சேர்த்தார். அங்கு 6 நாட்கள் தங்கிச் சிகிச்சை பெற்றேன். காயம் ஆழமானதுதான்! டாக்டர் ஏ.எஸ்.இராமகிருஷ்ணன், காயம்பட்ட இடத்தில் தையல் போட்டார்.

''கிராமணியாருக்கு வயது நூறு'' என்னுந் தலைப்பிட்டு, 'கல்கி' 20.9.53 இதழில் எழுதப்பட்ட நீண்ட தலையங்கத்தின் முக்கிய பகுதிகள் வருமாறு:

''தமிழ் மொழி சொல் வளம் மிகுந்த ஆற்றல் நிறைந்த மொழி. ஆயினும் ஸ்ரீ.ம.பொ. சிவஞான கிராமணியாரைத் தாக்கிக் காயப்படுத்திய கயவர்களின் செயலைக் கண்டிப்ப தற்கு வேண்டிய ஆற்றல் உள்ள சொற்கள் தமிழிலேகூட இல்லையென்றே சொல்ல வேண்டும்.

''திரு.ம.பொ.சிவஞானம் பாட்டாளி வர்க்கத்தில் பிறந்து பாட்டாளியாக இருந்து பாடுபட்டு வாழ்ந்தவர். தமது அறிவினாலும் ஆற்றலினாலும் ஒழுக்கத்தினாலும் உறுதியுள்ள உழைப்பினாலும் அரசியல் தலைவராக உயர்ந்தவர். தெய்வத் தமிழ் மொழியை தமது சொந்த முயற்சியினால் கற்று வளர்ந்து, பழந்தமிழ் இலக்கியங் களை ஆராய்ச்சி அறிவுடன் கற்றுத் தேர்ந்து, புலவர்களும் பாராட்டக் கூடிய தமிழ்ப் புலமை பெற்றவர். பிரசங்க மேடைகளில் இணையற்ற வன்மையுடன் தமிழைக் கையா ளும் திறமை பெற்றவர். அரசியல் வாழ்க்கையில் புகுந்தது முதல் தமக்கென எதையும் வேண்டாது பொதுமக்களுக்கே ஓயாது உழைத்துப் பாடுபட்டு வருகிறவர்.

''உழைப்பினாலும், ஊக்கத்தினாலும், தொண்டினா லும் தியாகத்தினாலும் உயர்ந்த ம.பொ.சி.யைப் பற்றித்

தமிழ் நாட்டில் தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் பெருமை கொண்டு தோள்கள் பூரிக்க வேண்டும்.

''அதற்கு மாறாக, அவரைக் கூட்டத்திலேயிருந்து கோழைத்தனமாகத் தாக்க முற்பட்டவர்களைப் பற்றித் தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

''இத்தகைய கொடிய தாக்குதலுக்கு உள்ளாகிப் பிழைத்தெழுந்த திரு. ம.பொ.சிவஞான கிராமணியார் இறைவன் அருளினால் நூறு ஆண்டுகள் நோய் நொடி இன்றி வாழ்ந்து தமிழகத்துக்குப் பணி செய்வார் என்று நம்புகிறோம்.

''திரு.ம.பொ.சி.யின் நெற்றிக் காயத்திலிருந்து கொட்டிய ஒவ்வொரு இரத்தத் துளியிலிருந்தும் நூறு நூறு இளம் சிவஞானங்கள் தோன்றுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

''மாயூரம் நகரமும் அதன் சுற்றுப்புறங்களிலுள்ள கிராமங்களும் தேசபக்திக்கும் தமிழ்ப் பற்றுக்கும் பெயர் போனவை. ஒரு சில கயவர்களின் செயலால் மாயூரத்தின் நற்பெயருக்கு இப்போது மாசு நேர்ந்திருக்கிறது.

''மறுமுறை திரு.ம.பொ.சிவஞான கிராமணியார் மாயவரத்திற்கு விஜயம் செய்யும்போது மாயவரம் நகரிலும் சுற்றுப்புறக் கிராமங்களிலுமுள்ள தமிழ்ப் பெருமக்கள் திரண்டு வந்து அவருக்கு மகத்தான மாபெரும் வரவேற்பு அளித்து மாயவரத்துக்கு நேர்ந்த மாசினைத் துடைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.''

மாயூரத்தில் நான் தாக்கப்பட்ட செய்தி மறுநாள் தமிழ் — ஆங்கில நாளிதழ்களிலே பிரதான இடத்தில் — பெரிய பெரிய தலைப்புகளுடன் பிரசுரிக்கப்பட்டது. அந்த வாரத்திலே தமிழ் நாடு முழுவதும் த.அ.க. காங்கிரஸ் சார்பில் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. சென்னைக் கடற்கரையிலும் மாபெரும் கூட்டம் நடைபெற்றது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் மதுரையில் மாணவர் கூட்டம் ஒன்றில் விம்மியழுத வண்ணம் தமது வேதனையை வெளிப்படுத்திப் பேசியது வருமாறு:

''தமிழகத்தின் தந்தை தாக்கப்பட்டிருக்கிறார்; தமிழர் தலைவர் தாக்கப்பட்டிருக்கிறார். ஆம்; தமிழ் மொழியே தாக்கப்பட்டிருக்கிறது. சொல்லால் ம.பொ.சி.யை வெல்ல முடியாதவர்கள் கல்லால் வெல்லக் கனவு காண்கிறார்கள்''

'பிரசண்ட விகடன்' (1.10.53) இதழிலே — அதன் ஆசிரியர் நாராாண. துரைக்கண்ணன் அவர்கள் எழுதிய் கண்டனக் குறிப்பில் சில பகுதிகள் வருமாறு:

''மாற்றுக் கட்சிக்காரர்களுக்கிடையே கைகலப்பு நடந்திருந்தாலும், தொண்டர்கள்தான் அடிபட்டிருப்பார்களே ஒழிய, கட்சித் தலைவர்கள் யாரும் அடிபட்டதாக நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. அதுவும் கூட்டத்தில் பேசிவிட்டு வருகையில் வழிமறித்துக் கண்களில் மண்ணை வாரிப் போட்டுவிட்டுக் கல்லாலோ — இரும்பாலோ கோழைத்தனமாக அடித்ததாக நான் கேள்விப்பட்டதுகூட இல்லை. ஆனால், சமீபத்தில் மாயவரத்தில் அவ்விதமான சம்பவம் ஒன்று நடைபெற்றிருக்கிறது.

''தங்களுக்குப் பிடிக்காத கொள்கையை வேறொருவர் ஆதரிக்கிறார் என்பதற்காக ஆத்திரங் கொண்டு பலாத்காரத்திலிறங்குவது எவ்விதத்திலும் முறையே அல்ல. இவர்களுக்குப் புதுக் கல்வித் திட்டம் பிடிக்கவில்லை என்று சொல்வதற்குக் கருத்து உரிமையிருக்கும்போது ஆதரித்துப் பேசுவதற்கு மற்றவர்களுக்கு உரிமையில்லாமல் போய் விடுமா?''

தி.க. நாளிதழான 'விடுதலை'யிலேயும் மாயூரம் நிகழ்ச்சி பற்றித் தலையங்கம் எழுதப்பட்டது. 'ம.பொ.சி.யைத் தாக்கியவர்கள் காங்கிரசிலுள்ள திரு. காமராசர் குழுவினர்தான்' என்று திட்டவட்டமாகக் கூறியது 'விடுதலை'.

திரு.காமராசர் கோஷ்டியிலிருந்த திரு.எஸ்.எஸ். மாரிசாமியை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'பேரிகை' வார இதழிலேயும் 'விடுதலை'யின் கருத்தை உறுதிப்படுத்தும் போக்கில் எழுதப்பட்டது.

மாயூரத்தில் நான் தாக்கப்பட்ட ஒரு திங்களுக்குப் பின்பு 11.10.53 அன்று — மீண்டும் அதே நகரில் தமிழரசுக் கழகச் சார்பில் கூட்டப்பட்ட மாபெரும் பொதுக் கூட்டமொன்றில் பேசினேன். இந்தக் கூட்டத்திற்குச் செல்ல வேண்டாமென்று முதல்வர் ராஜாஜி அறிவுரை கூறினார். ஆம்; திரும்பவும் நான் தாக்கப்பட்டு விடுவேனோ என்ற அச்சம் அவருக்கு! அப்படி ஒன்று நடைபெறவில்லை. மாயூரம் நகரமன்ற உறுப்பினர் திரு.ஏ.எம். இஸ்மாயில் இந்தக் கூட்டம் வெற்றிகரமாகவும் சிறப்பாகவும் நடைபெற ஏற்பாடு செய்தார். தலையில் ஏற்பட்ட காயம் மருத்துவர் சிகிச்சையால் ஆறிவிட்டதென்றாலும், மான உணர்ச்சி காரணமாக என் மனத்துள் ஏற்பட்டிருந்த புண் திரும்பவும் நான் மாயூரத்தில் பேசிய பின்தான் ஆறியது.

'கல்கி' கிருஷ்ணமூர்த்தி எழுதியதுபோல, மாயூரத்தில் மக்கள் வெள்ளம் போல் கூடி என்னை வரவேற்றுச் சிறப்பித்தனர்.

மாயூரம் திராவிடர் இயக்கத் தோழர்கள் ஐவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது என்னைக் காயப்படுத்தியதாக மாயூரம் சப் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் போலீசார் வழக்குத் தொடர்ந்தனர். அந்த வழக்கில் நான் சாட்சியாக விசாரிக்கப்பட்டேன். ''குற்றவாளிகளை மன்னித்து விடுதலை செய்வதையே நான் விரும்புகிறேன்'' என்று சப் மாஜிஸ்திரேட்டிடம் கூறினேன். அவரும், குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டால் தாம் யோசிப்பதாகக் கூறினார். ஆனால், குற்றவாளிகள் மன்னிப்புக் கேட்க மறுத்து, எதிர் வழக்காடினர். விசாரணையின் முடிவில் அவர்களில் மூவருக்கு 6 வாரக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இருவர் விடுதலை பெற்றனர்.

ராஜாஜியின் கல்வித் திட்டத்திற்குச் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சிக்குள் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. திட்டத்தைக் கைவிடுமாறு அவர் வற்புறுத்தப்பட்டார். அப்படி வற்புறுத்தியவர்களிலே நானும் ஒருவன். ராஜாஜி ஆட்சி நீடிக்க வேண்டுமென்ற ஆர்வத்தாலேயே நான் அப்படிச் செய்தேன். ஆனால், ராஜாஜி, கல்வித் திட்டத்தைக் கைவிட மறுத்து முதல்வர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். உண்மையில் அது பெரிய தியாகந்தான்!

கழக - காங்கிரஸ் தகராறு!

ராஜாஜி முதல்வராக வருவதற்கு ஒரு திங்களுக்கு முன்பே, திரு. காமராசர் விருப்பப்படி, அவரது ஆதரவோடு நான் சட்டமேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேனல்லவா! அதன்பின், அசெம்பிளித் தொகுதியில் மேலவைக்கு நடைபெற்ற தேர்தல் முழுவதுமே செல்லாதென்று வேட்பாளர் ஒருவர் உயர்நீதி மன்றத்தில் போட்ட வழக்கில் அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பு தரப்பட்டது. அதனால், அசெம்பிளித் தொகுதிக்குரிய இடங்களுக்கு மறுதேர்தல் நடைபெற்றது.

சதியை முறியடித்தேன்!

இப்போது நான் காமராசருக்கு வேண்டாதவனாகி விட்டேன். ஆம்; ராஜாஜியின் காங்கிரஸ் ஆட்சிக்கு ஆதரவு காட்டிய பாவத்திற்காகத்தான்! இந்தத் தேர்தலிலும் நான் காங்கிரஸ் வேட்பாளனாக நிறுத்தப்பட்டேன். எனக்காக வாக்களிக்க காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களில் 14 பேர் ஒதுக்கப்பட்டனர். ஆனால், இந்தத் தேர்தலில் என்னைத் தோற்கடிக்கத் திரைமறைவில் வேலை நடந்தது. காங்கிரஸ் வேட்பாளனாகிய என்னைத் தோற்கடிக்க காங்கிரஸ்காரர்களே முயன்றனர். அதனால் எனக்கு வாக்களிக்க கட்சியிடம் ஆணை பெற்றவர்களில் 5 பேர் அந்தரங்கத்தில் என்னைக் காலைவாரி விட்டுவிட்டனர். எனக்கு 14 வாக்குகள் கிடைத்திருக்க வேண்டும். மாறாக, 9 வாக்குகளே கிடைத்தன. எனக்கு எதிராகச் சதி நடப்பதறிந்ததும் முன் எச்சரிக்கையாக திரு.எஸ்.எஸ். இராமசாமி படையாச்சியாரை அணுகி, அவரது உழைப்பாளர் கட்சி உறுப்பினர்களில் சிலருடைய இரண்டாவது வாக்குகள் கிடைக்க வழி செய்திருந்தேன். அதனால், முதல் எண்ணிக்கையில் தோற்றுப்போன நான், இரண்டாவது எண்ணிக்கையில் வெற்றி பெற்றேன். பாவம், என் எதிரிகள் ஏமாந்தனர்!

எனது வாழ்நாளில் எனக்கு மிகவும் வேதனை தந்த நிகழ்ச்சி நான் காங்கிரசிலிருந்து வெளியேறியதுதான். என்னை ஈன்ற தாய்க்கும் தாய்நாட்டிற்கும் தாய் மொழிக்கும அடுத்தபடி யாக ஒன்றை நான் இதயபூர்வமாக நேசித்தேனென்றால், அது காங்கிரஸ் மகாசபையேயாகும். அச்சுத் தொழிலாளியாக காங்கி ரசில் புகுந்த என்னை அரசியல்வாதியாக்கிவிட்ட பெருமையும் உரிமையும் காங்கிரசுக்கே உண்டு.

கொள்கை வேறுபாடு காரணமாக காங்கிரசிலிருந்து வெளி யேற நேர்ந்திருக்குமானால் அதற்காக நான் வருந்தியிருக்க மாட்டேன். கொள்கையில் உடன்பாடு இருந்த நிலையிலே வெளியேறியாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதனாற்றான் என் மனம் வருந்தியது.

காங்கிரஸ் கட்சிக்கும் எனக்கும் அல்லது காங்கிரசுக்கும் தமிழரசுக் கழகத்திற்கும் ஏற்பட்ட போராட்டமானது மிகப் பெரிய நூலுக்குரிய அளவுக்கு விரிவானதாகும். அகில இந்தி யப் பெருந்தலைவர்களான ராஜாஜி, நேருஜி, காமராசர் போன்ற வர்கள் இந்தப் பிரச்சினையிலே தொடர்புடையவர்களாக இருக் கின்றனர். இவர்களோடு நான் நடத்திய கடிதப் போக்குவரத்து கள் அவ்வளவையும் இந்நூலில் வெளியிடுவது சாத்தியமென்றா லும், இன்று நினைத்தாலும் எனக்கு வேதனைதரும் அந்த வரலாற்றை அவ்வளவு விரிவாக எழுத நான் விரும்பவில்லை. சுருக்கமாகக் கூறவே விரும்புகிறேன்.

தமிழுலகெங்கும் வரவேற்பு!

1953-ஆம் ஆண்டு நான் பயங்கரமான சோதனைகளைச் சந்தித்த ஆண்டாகும். இந்த ஆண்டிலேதான் தமிழகத்தின் தலைநகரைக் காக்கவும், வடக்கெல்லையை மீட்கவும் ஆதிக்க வெறிபிடித்த ஆந்திரத் தலைவர்களோடும், மத்திய அரசோடும் போராட வேண்டியிருந்ததென்பதனை ஏற்கனவே சற்று விளக்க மாகவே கூறியிருக்கிறேன். இந்தப் போராட்டங்கள் காரணமா கத் தமிழ் மக்களிடையே எனக்கு ஓரளவு செல்வாக்கு ஏற்படலா னது. இந்தப் போராட்டங்களின் மத்தியிலேதான் மூன்றாவது

முறையாக நான் இலங்கைக்குச் சென்று திரும்பினேன். புதிய தமிழகம் படைக்கப் போராடி வருகிறவன் என்ற காரணத்தால் இலங்கைத் தமிழர்கள் என்பால் பேரன்புகாட்டி, பெருமதிப்பு வைத்து வரவேற்றுச் சிறப்புச் செய்தனர். அங்கு பத்திரிகை நிருபர்களுக்கு நான் அளித்த பேட்டியும், கொழும்பு — அனுரா தபுரம் — மட்டக்களப்பு ஆகிய நகரங்களில் நான் நிகழ்த்திய சொற்பொழிவுகளும் இலங்கை நாளேடுகளில் மட்டுமின்றி, இந்தியத் தமிழகத்தில் உள்ள நாளேடுகளிலும் சற்று விரிவா கவே பிரசுரிக்கப்பட்டன.

புதிய தமிழகம் படைக்கப் பாடுபட்டுக் கொண்டிருந்த நிலையிலே இந்தியத் தலைநகரான புதுடில்லிக்கும் சென்று திரும்பினேன். அங்கும் தமிழ் மக்கள் என்னை அன்புடன் வரவேற்று உபசரித்தனர். 'பிளிட்ஸ்', 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி' ஆகிய ஆங்கிலப் பத்திரிகைகளின் நிருபர்களுக்கு விசேஷப் பேட்டியளித்து தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளை விளக்கி னேன். இந்தப் பேட்டிகள் என்னைப் பற்றிய வருணனையோடு விரிவாகப் பிரசுரிக்கப்பட்டன.

டில்லித் தமிழ்ச் சங்கத்தில் அப்போதைய மத்திய அமைச்சர் திரு.டி.டி.கே. தலைமையில் நடந்த வரவேற்புக் கூட்டத்தில் நான் நிகழத்திய சிறப்புச் சொற்பொழிவு டில்லி ஆங்கில செய்தி இதழ்களில் பிரசுரிக்கப்பெற்றன. காந்தியடிகள் மகன் தேவதாஸ் காந்தி ஆசிரியராக இருந்த 'இந்துஸ்தான் டைம்ஸ்', 'ஈவினிங் நியூஸ்' ஆகிய பத்திரிகைகளிலும் சிறப்பாகப் பிரசுரிக்கப்பட் டது. 'ஈவினிங் நியூஸ்' பத்திரிகையில் எனது பேச்சு பற்றி விமர்சித்துத் தலையங்கமும் எழுதப்பட்டது. அதிலே, நாவன் மையில் எஸ். சத்தியமூர்த்தியோடு ஒப்பிட்டு என்னைப் புகழந் திருந்தது 'ஈவினிங் நியூஸ்'

பம்பாய்க்கும் சென்று திரும்பினேன். அங்கு மாதுங்காவி லுள்ள தமிழ்ச் சங்கத்தாரும், தாராவித் தமிழர்களும் தனித் தனியே என்னை வரவேற்றுச் சிறப்புச் செய்தனர். அங்கும் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளித்தேன். அந்தப் பேட்டி பம்பாய்ப் பத்திரிகையில் சிறப்பாகப் பிரசுரிக்கப்பட்டது.

தமிழ்நாட்டிலும் தமிழரசுக் கழகக் கிளைகள் நூற்றுக்கணக்கில் பெருகி வந்தன. வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி எதுவானாலும் அதற்கு என்னை அழைக்கும் அளவுக்குத் தமிழ் மக்கள் என்னிடம் மதிப்பு காட்டத் தொடங்கினர்.

இதெல்லாம் தமிழ்நாடு காங்கிரஸ் வட்டாரத்தினருக்குப் பிடிக்கவில்லை. என்னுடைய — எனது தமிழரசுக் கழகத்தினுடைய வளர்ச்சி திரு.காமராசருக்கும் தமிழ்நாடு காங்கிரசுக்கும் அறைகூவலாகுமென்று அவர்கள் கருதினர். அறியாமையும் பொறாமையும் தவிர இப்படிக் கருதியதற்கு வேறு நியாயமான காரணம் எதுவும் இருக்கவில்லை. எனினும் பொறாமை கொண்ட கூட்டத்தார் என்னைக் காங்கிரசிலிருந்து வெளியேற்றத் திட்டமிட்டுச் செயல்படத் தொடங்கினர்.

சிப்பந்தி வர்க்கத்தின் சேட்டை!

1953-ஆம் ஆண்டு ஜனவரியில் ஐதராபாத் நகரிலே காங்கிரஸ் மகாசபை கூடுவதாக இருந்தது. அதற்கான பிரதிநிதித் தேர்தல் சென்னையில் 1952 நவம்பரில் நடைபெற்றது. இந்தத் தேர்தலிலே நானும் தமிழரசுக் கழகத்தின் முன்னணித் தோழர்களிலே சிலரும் போட்டியிட நியமனப் பத்திரம் தாக்கல் செய்திருந்தோம். நான் இராயப்பேட்டை (தேனாம்பேட்டை, ஆழ்வார்பேட்டை, தியாகராயநகர் ஆகிய வட்டங்களைக் கொண்ட) தொகுதியில் நியமனப் பத்திரம் தாக்கல் செய்தேன். காங்கிரஸ் மகாசபையின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர், இரண்டாண்டு காலத்திற்குத் தமிழ் மாகாணக் கமிட்டி அங்கத்தினராக இருக்கவும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலில் போட்டியிடவும் உரிமை பெற்றவராவார்.

ஐதராபாத் காங்கிரஸ் பிரதிநிதிகள் தேர்தல் நடைபெற்ற நேரத்திலே டாக்டர் ப.சுப்பராயன் தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக இருந்தார். திரு.கு. காமராசர், தமிழ்நாடு காங்கிரசிலே நிர்வாகப் பதவி எதையும் வகிக்கவில்லை. அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியிலும் அப்போது அவர் இல்லை. ஆகவே, காங்கிரசிலிருந்து என்னை வெளியேற்றுவதற்கான

முயற்சி தொடங்கியதற்கு நேரடியாக அவரைப் பொறுப்பாக்கு வதற்கில்லை. ஆயினும், அவர் காலாலிட்டதைத் தலையால் செய்து முடிக்குமளவுக்குத் தமிழ்நாடு காங்கிரஸ் சிப்பந்தி வர்க்கம் அவரிடம் பக்தி கொண்டிருந்தது. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக டாக்டர் சுப்பராயன் இருந்தது பெயரளவில்தான். உண்மையான தலைவர் திரு. காமராசராகத்தான் இருந்தார். டாக்டர் சுப்பராயனும், திரு. காமராசர் சொல்கிறபடி தமிழ்நாடு காங்கிரசை நடத்திச் செல்வதுதான் தமது கடமை எனக் கருதிச் செயல்பட்டு வந்தார். ஆகவே, காங்கிரசிலிருந்து என்னை வெளியேற்றுவதற்குச் சிப்பந்தி வர்க்கம் எடுத்துக் கொண்ட பெருமுயற்சிக்கு திரு. காமராசர் பின்னணியிலிருந்து உதவி புரிந்து வந்தார் என்று கருத இடமிருந்தது.

சென்னை மாவட்ட காங்கிரஸ் தேர்தல் அதிகாரியாக தமிழ்நாடு காங்கிரசால் நியமிக்கப்பட்டிருந்தவர் நான் தாக்கல் செய்த நியமனப் பத்திரம் செல்லுபடியாகாதென்று கூறித் தள்ளு படி செய்தார். அதற்கு அவர் கூறிய காரணம், தமிழரசுக் கழகம் என்னும் அரசியல் கட்சியில் நான் அங்கத்தினராகவும் தலைவ ராகவும் இருக்கிறேன் என்பதுதான். அவர் பெயரளவில் 'தேர் தல் அதிகாரி' என்றாலும், நடைமுறையில் திரு. காமராசர் கோஷ்டியில்தான் இருந்தார். அந்தத் தகுதி காரணமாகவே அவர் தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

கழகமா, கட்சியா?

காங்கிரஸ் அங்கத்தினர் எவரும் வேறொரு அரசியல் கட்சியில் அங்கத்தினராக இருக்கக் கூடாதென்பது அகில இந் திய காங்கிரஸ் அமைப்பு விதியாகும். இதனை, தமிழரசுக் கழகத்தைத் தொடங்கும்போதே நான் அறிந்திருந்தேன். எனது கழகம் திரு. காமராசரால்தான் தொடங்கி வைக்கப் பெற்றது. தொடர்ந்து ஆறாண்டுக் காலம் நடந்து வந்திருக்கிறது. திருவா ளர்கள் காமராசர், சுப்பராயன், பக்தவத்சலனார் போன்ற த.நா.கா. முன்னணித் தலைவர்கள் பலர் கழகப் பொதுக் கூட்டங்களில் அடிக்கடி கலந்துகொண்டு பேசியிருக்கின்றனர்.

தமிழரசுக் கழகத்தின் தலைவனாக இருந்த நிலையிலே தான் சட்டமேலவையிலும், சென்னை மாநகராட்சியிலும் காங்கிரஸ் சார்பில் நான் உறுப்பினனாக்கப்பட்டேன். கழகத்தைத் தொடங்கிய பின் எனது நியமனப் பத்திரம் நிராகரிக்கப்படும் வரை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, சென்னை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி ஆகியவற்றில் நிர்வாகப் பதவிகளும் வகித்து வந்திருக்கிறேன். அப்போதெல்லாம் தமிழரசுக் கழகம் காங்கிரசிலிருந்து வேறுபட்ட தனிக் கட்சி என்று திரு. காமராசர் குழாம் சொல்லவில்லை. உண்மையில் தமிழரசுக் கழகம் தனித்த அரசியல் கட்சியாக அப்போது இயங்கவும் இல்லை. காங்கிரஸ் கொள்கைகளைச் செயல்படுத்தும் துணை நிறுவனமாகவே இயங்கி வந்தது.

எனது நியமனப் பத்திரம் நிராகரிக்கப்பட்டது காங்கிரஸ் அமைப்பு விதிகளுக்கு முரண்பட்டதென்று நான் கருதினேன். கோஷ்டிப் பூசலின் விளைவு என்று கருதுவதற்கும் இடமிருந்தது. நான் ஐதராபாத் காங்கிரஸ் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அதனை அடுத்து நடைபெறும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலிலும் போட்டியிடக் கூடுமென்று திரு. காமராசர் குழுவினருக்கு அச்சமிருந்திருக்கக் கூடும். மற்றும் ராஜாஜி அமைச்சரவையைக் கவிழ்த்து முதலமைச்சர் பீடத்தில் தான் ஏறுவதற்கு திரு. காமராசர் அந்தரங்கத்தில் முயன்று கொண்டிருந்தபோது, அந்த அமைச்சரவையை நிலைநிறுத்துகின்ற பணியிலே நான் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தேன். தமிழரசுக் கழகத்தையும் ஈடுபடுத்தியிருந்தேன். இந்தக் காரணங்களாலும் தங்கள் கோஷ்டி அரசியலுக்கு நான் தடையாக இருப்பதாகக் கருதி காங்கிரசிலிருந்து என்னை வெளியேற்றிவிட முயன்றனர் திரு. காமராசர் குழாத்தினர்.

கழகத்தின் அங்கத்தினராக இருப்பதால் காங்கிரசிலும் இருக்க முடியாதென்றே வைத்துக் கொண்டாலும் அதுபற்றி முடிவெடுக்க வேண்டிய உரிமையும் கடமையும் அ.இ.காங்கிரசினுடையதாகும். ஒருவகையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கும், அந்த உரிமையும் கடமையும் உண்டு. ஆனால், திரு. காமாசர் குழாத்தினர் ஒரு தேர்தல் அதிகாரியைக் கொண்டு

காங்கிரசோடு எனக்குள்ள தொடர்பைத் துண்டித்துவிட முயன்றனர். அதற்கு மேலான அந்தஸ்தை எனக்குக் கொடுக்க அவர்கள் தயாராக இல்லை. என்னைமட்டுமின்றி, காங்கிரஸ் பிரதிநிதித் தேர்தலுக்கு நியமனப் பத்திரம் தாக்கல் செய்திருந்த தமிழரசுக் கழகத் தோழர்கள் அனைவரையுமே என்னுடைய நிலைக்குக் கொண்டு வந்தனர்.

ஐதராபாத் காங்கிரஸ் பிரதிநிதிகள் தேர்தலில் என்னுடைய நியமனப் பத்திரத்தை காங்கிரஸ் தேர்தல் அதிகாரி நிராகரித்தது தமிழ்நாடு காங்கிரஸ் எவ்வளவு மோசமான முறையில் நடந்து வந்தது என்பதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தமிழ்நாடு காங்கிரஸ் சிப்பந்தி ஒருவர் (அலுவலகச் செயலாளர்) காங்கிரஸ் மேலிடத்துச் சிப்பந்திக்கு (அலுவலகச் செயலாளருக்கு) கடிதம் எழுதி,

''வேறொரு அரசியல் கட்சியில் அங்கத்தினராக இருப்பவர் காங்கிரசிலும் அங்கத்தினராக இருக்க முடியுமா? ஐதராபாத் காங்கிரஸ் பிரதிநிதிகள் தேர்தலில் போட்டியிட இயலுமா?''

என்று கேட்டதற்கு, மேலிடத்துச் சிப்பந்தியார், ''முடியாது — இயலாது'' என்று கடிதம் மூலம் பதிலளித்தாராம். சிப்பந்தி எழுதிய அந்தக் கடிதத்தையே மேலிடத்தின் ஆணையாக வைத்துக் கொண்டு என்னுடைய நியமனப் பத்திரத்தை நிராகரித்தார் காங்கிரஸ் தேர்தல் அதிகாரி. இதுபற்றித் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் டாக்டர் சுப்பராயன் அவர்களின் கருத்தை அறிந்து கொள்ளவும் அவர் முயலவில்லை.

கவிஞரின் பரிவு

எனது நியமனப் பத்திரம் நிராகரிக்கப்பட்டு, மேற்கொண்டு நான் காங்கிரசில் இருக்க இயலாத நிலை உருவாக்கப்பட்ட செய்தி பத்திரிகைகளில் வெளியானதுமே தமிழ்நாட்டிலுள்ள நியாய புத்தி படைத்த காங்கிரஸ்காரர்கள் அதிர்ச்சியடைந்தனர். சில காங்கிரஸ் கமிட்டிகளின் தலைவர்களும் செயலாளர்களும்

சிப்பந்தி வர்க்கத்தின் சேட்டையைக் கண்டித்துப் பத்திரிகை களில் அறிக்கை வெளியிட்டனர். மேலிடத்திற்கு அப்பீல் செய்ய வேண்டுமென்று எனக்கு ஆலோசனை கூறிக் கடிதங்களும், தந்திகளும் அனுப்பினர்.

நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளையவர்கள், சிப்பந்தி வர்க்கத்தினரின் சேட்டை கண்டு அதிர்ச்சியடைந்தார். என்னிடம் பரிவு காட்டி, எனக்கு நீதி வழங்குமாறு த.நா.கா. தலைவருக்குத் தாமாகவே கடிதம் எழுதினார். அந்தக் கடிதம் வருமாறு:

17.11.52

தமிழ்நாடு மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர் டாக்டர் பி.சுப்பராயன் அவர்கள் சமூகத்திற்கு வணக்கம்.

தலைவர் திரு. சிவஞான கிராமணி அவர்கள் தமிழர சுக் கழகத்திற்குத் தலைவராக இருக்கிறார் என்று அவர் காங்கிரஸ் பிரதிநிதிகள் தேர்தலுக்குப் போட்டியிடக் கூடா தென்று தடுக்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகைகளின் மூல மாக அறிந்து மிகவும் வருத்தமடைந்தேன்.

நான் 'தமிழரசு'க் கட்சியைச் சேர்ந்தவனல்ல; அந்தக் கட்சியின்மேல் வெறுப்புள்ளவனும் அல்ல; தமிழரசுக் கட்சி காங்கிரசுக்கு முரண்பட்டதென்றோ, இடையூறு செய் யக் கூடியதென்றோ நான் கருதவில்லை. இதுவரையிலும் அது காங்கிரசுக்கு ஆக்கம் தந்து வந்திருக்கிறது. இனியும் அந்தக் கட்சியை காங்கிரசின் செல்வாக்கை அதிகப்படுத்த பயன்படுத்திக் கொள்ளலாம்.

அது எப்படியானாலும், திரு. சிவஞானம் அவர்க ளைப் பொறுத்தமட்டிலும், அவர், காங்கிரஸ் கொள்கை களை விட்டு ஒருநாளும் விலகினவரல்ல.

காங்கிரசிலிருந்து விலகி காங்கிரசையே அழித்துவிட வேண்டுமென்று வேலை செய்துவிட்டவர்களையும் கூட மீண்டும் காங்கிரசில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று

மேலிடத்தார் ஆணையிட்டுள்ள இந்தச் சமயத்தில் கால மெல்லாம் காங்கிரசுக்கே உண்மையாக உழைத்திருக்கிற திரு. சிவஞானம் அவர்களையும் அவருடன் சேர்ந்த மற்றவர்களையும் காங்கிரசை விட்டு விலக்க நினைப்பது மிக்க பாதகச் செயலாகும். அது நேர்ந்தால் தமிழ்நாட்டில் காங்கிரசின் செல்வாக்கு மிகவும் குறைந்துபோகும். அப்படி நேர்ந்து விடாதபடி தாங்கள் தங்களுடைய செல் வாக்கால் தடுத்துவிடுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன்.

அன்புள்ள,
வெ.இராமலிங்கன்

நாமக்கல் கவிஞர் அவர்கள், சிப்பந்தி வர்க்கம் செய்த சேட்டையால் நான் மிகவும் வேதனையடையக் கூடுமென்று கருதி எனக்கு ஆறுதல் கூறிக் கடிதம் எழுதினார். அது வருமாறு:

24.11.52

அன்புமிக்க திரு. சிவஞானம் அவர்களுக்கு வணக்கம்.

கடந்த முப்பது ஆண்டுகளாக தாங்கள் எந்தவிதமான தியாகத்துக்கும் தயங்காமல் காங்கிரசுக்கும், காந்தியத்துக் கும் செய்திருக்கிற அரும் பெரும் சேவைகளை அறிந்திருக் கிற என்போன்ற எல்லா கிழட்டுக் காங்கிரஸ்காரர்களும் தங்களைக் காங்கிரசிலிருந்து விலக்க விரும்பும் பாதகத் தைச் சகிக்க மாட்டார்கள். தங்களை விழுங்க நினைக்கும் தீமைகள் விரைவில் விலகிவிடும் என்றே நம்புகிறேன் எது எப்படியானாலும் துரும்பு போன்ற உங்கள் சிறு உடலுக் குள்ளிருக்கும் இரும்பு போன்ற நெஞ்சம் நிலை குலையாது.

இன்றைய சூழ்நிலையில், தமிழ்நாட்டுக் காங்கிரஸ் ஸ்தாபனங்களுக்குள் பொய்களும் பொறாமைகளும் பதவி மோக சுயநலங்களும் தலையெடுப்பு காட்டுகின்றன என் றாலும் டாக்டர் சுப்பராயன் அவர்களைப் போன்ற பழங் காங்கிரஸ் வாதிகள் அவற்றை அடக்கித் தங்களைப்

போன்ற தன்னலங் கருதா உழைப்பாளிகளைத் தாங்கி நிற்பார்கள் என்றே எதிர்பார்க்கிறேன்.

தங்களுடைய உள்ளத்தைக் கலக்கிவிட்ட இது போன்ற நிகழ்ச்சிகள் பலப்பல தங்களை அண்டி அசைத் தசைத்துப் பார்த்துவிட்டுப் போய்விட்டன. தாங்கள் அசை யவில்லை. இதுவும் அப்படித்தான் ஆகும்.

வாழ்க நலம்.

அன்பு,
வெ.இராமலிங்கன்

இன்று அமரராகிவிட்ட கவிஞர் பெருமானின் கடிதம் உண்மையிலேயே என் மனத்திற்கு ஆறுதல் தருவதாக இருந் தது. எனக்கு ஏதேனும் துன்பம் நேரும்போதெல்லாம் எனக்கு ஆறுதல் கூறிக் கடிதம் எழுத கவிஞர் தவறியதில்லை.

நேருவின் கண்ணியம்!

எனது தேர்தல் மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து த.நா.கா. தலைவர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களுக்கு நான் 'அப்பீல்' செய்து கொண்டேன். ஆனால், சிப்பந்தி வர்க்கம் செய்தது தவறு என்பதை உணர்ந்திருந்தும், அதற்கெதிராகத் தீர்ப்பளிக்க முடியாத நிலையில் அவர் இருந்தார். ஆம்; சேட்டை செய்யும் சிப்பந்தி வர்க்கத்தின் பின்னே ஒரு பலவான் மறைந்து கொண்டிருக்கிறார் என்பது அவருக்கும் தெரிந்திருந் தது. அதனால், காங்கிரஸ் மேலிடத்திற்கு அப்பீல் செய்யுமாறு அவர் எனக்கு ஆலோசனை கூறினார். தாமும் எனக்கு ஆதர வாக மேலிடத்திற்கு எழுதுவதாக உறுதி கூறினார்.

அப்போது பிரதமர் ஜவகர்லால் நேரு அகில இந்தியக் காங்கிரசின் தலைவராகவும் இருந்தார். அவருக்கு 'அப்பீல்' செய்து கொண்டேன். என் அப்பீல் மனு கிடைத்த 24 மணி நேரத்திற்குள் அ.இ.கா.க. அலுவலகத்திடமிருந்து கீழ்க்கண்ட தந்தி எனக்குக் கிடைத்தது.

புதுடில்லி,
16.11.52

தாங்கள் காங்கிரஸ் தலைவருக்குச் செய்து கொண்ட அப்பீல் மனு கிடைத்தது. காங்கிரஸ் மேலிடம் தமிழரசுக் கழக அங்கத்தினர்கள் பற்றி விசாரணை நடத்தி இறுதி முடிவு எடுக்கப்படும் வரையிலும், அந்தக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் காங்கிரஸ் தேர்தல்களில் ஈடுபட அனு மதிக்கப்படுவார்கள்.

'காங்கிரஸ்'

தலைவர் நேருவின் ஆணைப்படி அகில இந்தியக் காங்கி ரஸ் அனுப்பிய தந்தியின் வாசகம் எனக்கு மறு வாழ்வைத் தந்தது. நேருவின் நேர்மையில் எனக்கிருந்த நம்பிக்கையையும் உறுதிப்படுத்தியது. ஆயினும், 'தமிழரசுக் கழகத்தார் பற்றி மேலிடத்தார் விசாரணை நடத்தும் வரையில்...'' என்ற வாசகம் எனக்கு வருத்தத்தைக் கொடுத்தது. ''விசாரணையில் இருக்கும் குற்றவாளிகளா''கத்தான் காங்கிரஸ் பிரதிநிதித் தேர்தலில் நானும் என் கழகத்தைச் சேர்ந்தவர்களும் கலந்துகொள்ள நேருஜி அனுமதி தந்தார். அவருடைய நிலையில் அவர் செய்தது சரிதான். ஆயினும், என் மனம் அதில் ஆறுதல் அடையவில்லை. ஆகவே, நானும் என் கழகத் தோழர்களும் காங்கிரஸ் தேர்தலிலிருந்து விலகிக் கொள்வதாகப் பத்திரிகைக ளுக்கு அறிக்கை அனுப்பினேன். அதிலே ''தமிழரசுக் கழகத்தார் இனியும் காங்கிரசில் இருக்க வேண்டுமா? — என்பதுபற்றி விவாதித்து முடிவெடுப்பதற்காகக் கழகத்தின் பொதுக் குழு விரைவில் கூட்டப்படும்'' என்றும் குறிப்பிட்டிருந்தேன். 'தினமணி' நிருபர், எனது அறிக்கை பற்றித் த.நா.கா.க. தலைவருக்குத் தகவல் தந்து அவருடைய கருத்தை அறிய முயன்றார். எனது அறிக்கையின் வாசகம் த.நா.கா. தலைவ ருக்கு அதிர்ச்சி தருவதாக இருந்தது.

''தினமணி'' நிருபருக்குத் தன் கருத்தைக் கூற மறுத்து விட்டு அந்த கணமே தொலைபேசியின் மூலமாக என்னுடன் தொடர்பு கொண்டு ''காங்கிரஸ் தலைவர் நேருவின் நல்லெண்

ணத்தோடு கூடிய அனுமதியைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். முதலமைச்சர் இராஜாஜி அவர்களும் இதையே விரும்புவாரென்றும் கூறினார். எனது நிலைமை தருமசங்கடமாக இருந்தது. ஆயினும், என்பால் நல்லெண்ணமுள்ளவரான த.நா.கா.க. தலைவரின் அன்புக் கட்டளையை மீற என்னால் முடியவில்லை. ஆகவே, பத்திரிகைகளுக்கு அனுப்பிய அறிக்கையை — அது வெளியாவதற்கு முன்பே — திரும்பப் பெற்றுக் கொண்டேன்.

பிரதிநிதித் தேர்தலில் வெற்றி!

23.11.52-இல் இராயப்பேட்டைத் தொகுதியில் காங்கிரஸ் பிரதிநிதிகள் தேர்தல் நடைபெற்றது. என்னுடன் மூன்று பேர் போட்டியிட்டனர். அவர்களுள் ஒருவரைத் தமிழ்நாடு காங்கிரசின் 'சிப்பந்தி வர்க்கம்' ஆதரித்தது. அவருக்கு எல்லா வகையிலும் உதவி புரிந்தது. போட்டி பலமாக இருந்தது. ஆனால், தேர்தல் முடிவில் எனக்குத்தான் வெற்றி! பதிவான 699 வாக்குளில் 622 வாக்குகள் எனக்குக் கிடைத்தன. காங்கிரஸ் அங்கத்தினர்களிடையில் எனக்கிருந்த செல்வாக்குக்கு இது ஒரு எடுத்துக் காட்டு.

காங்கிரஸ் பிரதிநிதித் தேர்தலில் என்னைத் தோற்கடித்து விட முடியுமென்று த.நா.கா. சிப்பந்தி வர்க்கம் நம்பியது. மாறாக, அபரிமிதமான வாக்குகளால் நான் வெற்றி பெற்றதால், அந்தக் கும்பல் அதிர்ச்சியடைந்தது. அதன் காரணமாக வெறி கொண்டு, என்னைக் காங்கிரசிலிருந்து வெளியேற்ற முன்னை விட வேகமாகச் சதிபுரியத் தொடங்கியது.

காங்கிரஸ் பிரதிநிதித் தேர்தல் நடந்து முடிந்த சில வாரங்களுக்குள் த.நா.கா. தலைவர் தேர்தல் நடைபெற்றது. அதிலே முதல்வர் ராஜாஜியின் ஆதரவோடு திரு. காமராசர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைவர் பதவிக்கு வந்தபின் திரு. காமராசர் காங்கிரசிலிருந்து என்னை வெளியேற்றும் திருத்தொண்டில் தானே நேரடியாகப் பொறுப்பேற்றார். தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளையும், அமைப்பு விதிகளையும்

உறுப்பினர்களைச் சேர்க்கும் தாள்களையும் அனுப்பி வைக்குமாறு அ.இ.கா. கமிட்டியிடமிருந்து எனக்கு 'ஆணை' வந்தது. அதன்படியே நான் அனுப்பி வைத்தேன். அந்தத் தகவல்கள் தனக்கும் தேவையென்று த.நா.கா. கேட்டது. அதற்கும் அனுப்பி வைத்தேன்.

சுதந்தரமா, சுயாட்சியா?

கழகத்தின் அமைப்பு விதிகளில் — கொள்கை பற்றிய பகுதியில் 3,5ஆவது விதிகள் அரசியல் கொள்கையைக் குறிப்பனவாகும். அவை வருமாறு:

''தமிழகத்தைச் சுதந்திர நாடாகச் செய்வதுடன் உழைப்பாளி வர்க்கத்தின் சோசலிசக் குடியரசை நிறுவ்வது;

தமிழகத்தின் நலத்திற்குத் தீங்கற்ற வகையில் பிற இனத்தவருடன் உறவு கொள்ளவும், இந்தியாவின் பூகோள ரீதியான ஒற்றுமையைப் பாதுகாக்கவும், தமிழ் சோசலிசக் குடியரசு இந்தியக் கூட்டாட்சியில் இணைய வேண்டுமென்பதும் கழகத்தின் நோக்கம்.''

கழகத்தின் கொள்கைகள் வகுக்கப்பட்ட காலத்தில் இந்திய நாடு சுதந்திரம் பெற்றிருக்கவில்லை. இப்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்புச் சட்டம் உருவாகவில்லை. ஆகவே, பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக் குழுவினர் வழங்கியிருந்த திட்டத்தை அடிப்படையாக வைத்துத்தான் தமிழரசுக் கழகம் தன் கொள்கைகளை வகுத்தது. பிரிட்டிஷ் அமைச்சரவைத் திட்டத்தைக் காங்கிரஸ் மகாசபை ஏற்றுக் கொண்டிருந்ததென்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். பிரிட்டிஷ் திட்டத்திலே மாநிலங்கள் சுதந்திர உறுப்புகளாக அங்கீகரிக்கப்பட்டு, அவை தாமே விரும்பிக் கலந்த மத்திய சமஷ்டியே பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அதனாற்றான், கழகத்தின் கொள்கைகளிலே 'தமிழகத்தைச் சுதந்திர நாடாகச் செய்வது' என்னும் வாசகம் இடம் பெற்றது. 'இந்தியாவிலிருந்து பிரிந்துவிட்ட தமிழகம்' என்னும் பொருளில் அல்ல.

பிரிட்டிஷ் திட்டமானது அப்போதிருந்த நான்கு மொழிப் பிரதேசங்கள் கலந்த சென்னை மாநிலத்திற்குச் சுதந்திரம் வழங்கியது. இதற்கு மாறாக, மொழிவழி மாநிலங்களுக்குச் சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென்று கழகம் கோரியது. அதையே கொள்கையாகவும் கொண்டது. 'சுயாட்சி' என்ற பொருளிலேயே சுதந்தரம் என்ற சொல்லைக் கழகம் பயன்படுத்தியது.

கழகத்தின் கொள்கைகள் தயாரிக்கப்பட்டபோது, அவை நாளிதழ்களிலும் வெளியாயின. அதன்பின் ஆறாண்டுக் காலம் காங்கிரசும் கழகமும் இணைந்து செயலாற்றின. அப்பொழுதெல்லாம் கழகத்தின் அமைப்பு விதியிலுள்ள ''சுதந்திரத் தமிழகம்'' என்னும் வாசகம் த.நா.கா. கமிட்டியால் ஆட்சேபிக்கப் படவில்லை. இப்போது காங்கிரசிலிருந்து என்னை வெளியேற்ற முடிவெடுத்துவிட்டதால், கழகக் கொள்கைகளிலுள்ள 'சுதந்திரத் தமிழகம்' என்ற சொற்றொடரை அடிக்கோடிட்டுக் காட்டி, கழகத்தின் கொள்கை தமிழகத்தை இந்தியாவிலிருந்து பிரித்து விடுவதுதான்' என்று காங்கிரஸ் மேலிடத்திடம் த.நா.கா. புகார் செய்தது.

நேருஜியின் ஆதரவு

தமிழ்நாடு காங்கிரசின் புகாரும் என்னால் அனுப்பப்பட்ட தகவல்களும் தமக்குக் கிடைத்த பின்னர், காங்கிரஸ் தலைவர் ஜவகர்லால் நேரு, செய்தி இதழ்களில் ஒரு அறிக்கை வெளியிட்டார். அது வருமாறு:

''தமிழரசுக் கழகத்தார் காங்கிரசில் நீடிப்பதையே நான் விரும்புகிறேன். ஆனால், அந்தக் கழகத்தின் அமைப்பு விதிகள் காங்கிரஸ் அமைப்பு விதிகளுக்கு முரணில்லாத வகையில் திருத்தியமைக்கப்பட வேண்டும். அவர்கள் காங்கிரசில் நீடித்திருப்பதற்குக் கழகத்தின் விதி முறையிலுள்ள முரண்பாடு தடையாக இருக்கக் கூடாது!''

இந்த அறிக்கையின் வாசகத்தையே கடித வடிவில் 27.11.52 தேதியிட்டு தலைவர் நேரு எனக்கு அனுப்பி வைத்தார். அதன்பின் தமிழ்நாடு காங்கிரஸ் பிரமுகர் ஒருவருக்கு

நேரு எழுதிய கடிதம் ஒன்று செய்தி இதழ்களில் வெளியானது. அது வருமாறு:

''... இந்தத் தமிழரசுக் கழகமானது அரசியல் நோக்குடையது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். இதனால் ஏற்படும் முரண்பாட்டை இந்தக் கழகத்தின் தலைவருக்கு த.நா.கா. தலைவர் தெரிவிக்க வேண்டும்.

''இந்தக் கழகமானது நடைமுறையில் கலாசாரத் துறையில் வேலை செய்து கொண்டு வருவதாலும், இதன் அங்கத்தினர்கள் காங்கிரஸ் கட்சியிலும் தொண்டாற்றி வருவதாலும் உடனடியாக எந்த நடவடிக்கையும் நான் எடுக்கப் போவதில்லை. ஐதராபாத் காங்கிரஸ் பொறுத்த வரைகூட எந்த நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை. ஆனால், இதுபற்றி ஒரு முடிவு செய்யப்பட்டாக வேண்டுமென்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன்.''

இந்தக் கடிதத்தை நேருவிடமிருந்து பெற்ற பிரமுகரின் பெயர் செய்தி இதழ்களில் வெளியிடப்படவில்லை. நேருவின் இந்தத் திட்டவட்டமான அறிவிப்பு, மிக எளிதாக காங்கிரசிலிருந்து என்னை வெளியேற்றிவிடலாம் என்று எண்ணியிருந்தவர்களுக்குப் பெரிய ஏமாற்றத்தைத் தந்தது. ஆயினும், அவர்கள் சோர்ந்துவிடவில்லை. 1946 முதற்கொண்டு 1952 வரை நான் நடத்தி வந்த 'தமிழ் முரசு' பத்திரிகையில் அவ்வப்போது நான் எழுதிய தலையங்கங்கள் — கட்டுரைகளிலிருந்து தங்களுக்கு வேண்டியவற்றை மட்டும் துண்டித்து எடுத்துக் கொண்டு, அவையெல்லாம் பிரிவினையில் எனக்குள்ள விருப்பத்தைச் காட்டுவனவென்ற வியாக்கியானத்துடன் காங்கிரஸ் மேலிடத்திற்குத் த.நா.கா. அனுப்பி வைத்தது.

கழக விதி முறைகளைக் காங்கிரஸ் கொள்கைக்கு முரணில்லாத வகையில் திருத்திக் கொள்ளுமாறு பிரதமர் நேரு எனக்கு ஆலோசனை கூறியிருந்ததை நான் ஏற்றுக் கொண்டேன். கழகப் பொதுக் குழுவைக் கூட்டி, ஆவன செய்வதாகவும் உறுதி கூறி அவருக்குக் கடிதம் எழுதினேன்.

தமிழரசுக் கழக இரண்டாவது மாநில மாநாடு சென்னை திருவல்லிக்கேணி கலா மண்டபத்தில் 1953 சனவரி 25-ஆம் நாளில் கூடியது. இந்த மாநாட்டில்தான் சென்னை நகரைப் பாதுகாப்பதற்கான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன என்று முன்பே கூறியிருக்கிறேன். கழக — காங்கிரஸ் உறவு பற்றியும் இந்த மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது. கழக விதிமுறைகளைத் திருத்தியமைப்பதற்குச் செயற்குழுவிலும், ஏன், மாநாட்டிலும் பொதுவாக ஆதரவு இருந்தது என்றாலும், மாநாட்டுச் சந்தடியோடு சேர்த்து அதைச் செய்ய நான் விரும்பவில்லை. அதனால், கழகப் பொதுக்குழுவைத் தனியாகக் கூட்டி அதிலே ஆலோசிக்கப்படுமென்று மாநாட்டில் அறிவித்தேன்.

மாநில மாநாட்டிலே...

இந்த மாநாட்டிலே, எனது தலைமையுரையில் கழக — காங்கிரஸ் உறவு நீடிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் விரிவாகப் பேசினேன். அதன் ஒரு பகுதி வருமாறு:

''தமிழரசுக் கழக — காங்கிரஸ் உறவு பற்றிச் சர்ச்சையும் சந்தேகமும் கிளம்பியிருக்கின்றன. இது விரும்பத் தகாத நிலைதான். காங்கிரசுக்கும், கழகத்திற்குமுள்ள தொடர்பு தாய்க்கும் சேய்க்கும் உள்ள உறவு போன்றதாகும். இந்த உறவைக் கெடுக்க வேண்டாமென்று சம்பந்தப்பட்ட எல்லோரையும் மிகுந்த பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

''திலகர், வ.உ.சி. போன்ற மாவீரர்கள் ஊன்றிய வித்திலிருந்து முளைத்தெழுந்து வளர்ந்தது 'காங்கிரஸ்' என்ற மரம். அந்த மரத்தின் நிழலிலே இருப்பதனை நான் மிகுந்த பெருமையாகக் கருதுகிறேன்.

''தமிழரசுக் கழகத்தார் காங்கிரசில் இருப்பது பதவிகளில் பங்கு பெறுவதற்காக அல்ல. அவை மற்றவர்களுக்கே உரிமையாகட்டும். நாங்கள் காங்கிரஸ் பாதையில் சென்று பணிபுரிவதற்கே வாய்ப்பு கோருகின்றோம்.

"என்னைப் பொறுத்தவரையில் காங்கிரசுக்கு வெளியே இருப்பதென்பது மகிழ்ச்சி தருவதல்ல. காங்கிர சோடு எனக்குள்ள தொடர்பு ஒரு தலைமுறைக்கும் மேற் பட்டதாகும். காங்கிரசின் பெயரால் நான் அடைந்து வந் துள்ள துன்பங்களையுந் தொல்லைகளையும் நினைத்து விட்டு, அதே நேரத்தில் காங்கிரசிலிருந்து என்னை வெளி யேற்றுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்படுவதையும் நினைத்துப் பார்த்தால் எனது நெஞ்சம் வேதனைப்படு கிறது. இப்படி என்னை வேதனைப்படுத்தும் நண்பர்களோ டும் சேர்ந்து தொடர்ந்து காங்கிரசில் இருப்பதற்கே நான் விரும்புகின்றேன். என் விருப்பத்திற்கு மாறாக, காங்கிர சோடு எனக்குள்ள உறவு துண்டித்துப் போகக்கூடிய கட்டா யம் ஏற்பட்டால் அதனைத் தவிர்ப்பதற்காக யாரிடமும் பணிந்துவிட மாட்டேன். கழகப் பணிகளிலேயே என் முழுக் கவனத்தையும் செலுத்த வாய்ப்புக் கிடைப்பதாக நினைத்து வெளியேறி விடுவேன்."

"சுதந்திரம்" பிறந்த விதம்

பிரிட்டிஷ் அமைச்சரவை வழங்கிய திட்டத்திலே மத்திய சமஷ்டியிலிருந்து மாநிலங்கள் பிரிந்து போகவும் உரிமை வழங்கப்பட்டிருந்தது. ஆம்; சில நிபந்தனைகளோடு! காங்கி ரஸ் மகாசபையும் அதனை ஏற்றுக் கொண்டிருந்தது. இன்னுஞ் சொன்னால், பிரிட்டிஷ் திட்டம் வருவதற்கு முன்பே 1938-ஆம் ஆண்டில் கூடிய அரிபுரா காங்கிரசிலேயே "மாநிலங்கள் விரும் பினால் மத்திய அரசிலிருந்து பிரிந்து வாழலாம்" என்று தீர்மானம் நிறைவேற்றப் பெற்றிருந்தது.

இப்படி காங்கிரசே ஒப்புக் கொண்டிருந்த ஒரு கொள்கை யைத்தான் தமிழரசுக் கழகம் தொடங்கிய ஆரம்ப ஆண்டு களிலே நான் வற்புறுத்தி வந்தேன். ஆனால், அதனைத் தமிழர சுக் கழகத்தின் கொள்கைப் பட்டியலிலே சேர்க்கவில்லை. எனது சொந்தக் கருத்தாகவே எழுத்திலும் பேச்சிலும் வெளியிட்டு வந்தேன்.

அமெரிக்க சமஷ்டி அமைந்தபோது, சமஷ்டியில் சேர்ந்த ஒரு மாநிலம் விரும்பாதபோது அதிலிருந்து பிரிந்து போக உரிமை வழங்கப்பட்டது. ஆனால், நாளடைவில் அந்த உரிமையை மாநிலங்கள் தாமே கைவிட்டுவிட்டன.

சோவியத் யூனியனிலேகூட மாநிலங்களுக்குப் பிரிந்து வாழும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. 1 கோடி மக்களையும் 11 மாநிலங்களையும் கொண்ட சின்னஞ்சிறு மலேசியச் சமஷ்டி யில் கூட, ஏதேனும் ஒரு மாநிலம் சமஷ்டியிலிருந்து பிரிய விரும்பினால் உபசாரத்தோடு வழியனுப்புகிறது மலேசிய அரசு. அப்படித்தான் சிங்கப்பூர் சந்தடியின்றி பிரிந்துவிட்டது.

திரும்பவும் சொல்லுகிறேன், மத்திய சமஷ்டியிலிருந்து பிரிந்து வாழ மாநிலங்களுக்கு உரிமை இருக்க வேண்டுமென்று நான் வற்புறுத்தியது இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு — இந்திய அரசியல் சட்டம் உருவாவதற்கு முன்புதான்; காங்கிரஸ் மகாசபையும் அதனை ஒப்புக் கொண்டிருந்தபோதுதான். ஆனால், சுதந்தர இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் நிலைமை மாறிவிட்டது. அதனால், பிரிந்து வாழும் உரிமையை நான் வற்புறுத்தவில்லை.

அப்படியிருந்தும், எனது பழைய எழுத்துகளிலிருந்தும், பேச்சுகளிலிருந்தும் வார்த்தைகளைப் பெயர்த்தெடுத்து 1952-இலும் மாநிலங்களுக்குப் பிரிந்து வாழும் உரிமை வேண் டுமென்று நான் கோரியதாகத் திரு. காமராஜ் குழுவினர் காங்கி ரஸ் மேலிடத்தில் எனக்கெதிராகப் புகார் செய்தனர்.

கழக — காங்கிரஸ் தகராறிலே செய்திப் பத்திரிகைகளும் அக்கறை காட்டின. 'இந்து' பத்திரிகையின் ஆசிரியர் கடிதப் பகுதியிலே கழகத்தின் நிலையை ஆதரித்தும் எதிர்த்தும் அடிக் கடி கடிதங்கள் வெளியாயின. 31.1.53-இல் திரு.வி.கே. ஐயர் என்பவர் எழுதிய நீண்ட கடிதத்திலே, 25.1.53-இல் சென்னை யில் நடந்த த.அ.க. இரண்டாவது மாநில மாநாட்டில் இந்தியா விலிருந்து பிரிக்கப்பட்ட சுதந்திரத் தமிழ்நாடு பெறுவதுதான் தமிழரசுக் கழகத்தின் கொள்கை என்று நான் பேசியதாகப் பழி கூறப்பட்டிருந்தது. நான் அப்படிப் பேசவே இல்லை. இந்தக்

கடிதம் காங்கிரஸ் வட்டாரத்திலே மிகுந்த பரபரப்பை உண்டாக்கியது. என்பால் பகைகொண்ட குழாத்தின் கட்சியை வலுப்படுத்தியது. இந்தக் கடிதத்தில் தரப்பட்டிருந்த பொய்த் தகவலை மறுத்து நான் எழுதிய கடிதமும் 'இந்து'வில் பிரசுரிக்கப்பட்டது.

திரு.மீ. பக்தவத்சலனாரை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்து கொண்டிருந்த 'பாரத தேவி' செய்தி இதழிலே தமிழரசுக் கழகத்தாரை காங்கிரசிலிருந்து வெளியேற்றுவதற்கு ஆதரவாக அடிக்கடி தலையங்கம் எழுதப்பட்டது. இது எனக்கு வியப்பைத் தரவில்லை. கோஷ்டி அரசியலிலே திரு. பக்தவத்சலனார் திரு.காமராசரின் அந்தரங்க ஆலோசகர்! மதுரை ''தமிழ்நாடு'' நாளிதழிலே தமிழரசுக் கழகத்துக்கு ஆதரவாக என்னை உற்சாகப்படுத்தும் வகையில் அடிக்கடி தலையங்கம் எழுதப்பட்டது.

'கல்கி' கை கொடுத்தது!

வார, மாத இதழ்களும் காங்கிரஸ் — கழக தகராறு பற்றித் தலையங்கங்கள் எழுதின. அவற்றுள், திரு.ரா. கிருஷ்ணமூர்த்தி தமது 'கல்கி' பத்திரிகையில் எழுதிய தலையங்கம் குறிப்பிடத் தக்கதாகும். அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:

''தமிழரசுக் கழகம் தோன்றிய நாளிலிருந்து அக் கழகத்தார் காங்கிரஸ் மகாசபையின் துணை ஸ்தாபனமாகக் கருதிப் பணியாற்றி வந்திருக்கிறார்கள். சென்ற பொதுத் தேர்தலின்போது இக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் செய்த அரும்பெரும் பணிகள் தமிழகம் நன்கு அறிந்தவை. காங்கிரசின் எதிரிகள் கையாண்ட அனாச்சாரப் பிரச்சார முறைகளைத் தகர்த்தெறிந்து காங்கிரசுக்காகப் போராடி வந்தார்கள்.

''அப்படிப்பட்ட தொண்டு செய்து வந்தவர்களுக்குத் தமிழகத்தில் ஓரளவு செல்வாக்கு உண்டாகி வருவது சிலருக்குப் பொறுக்கவில்லை. அதனால், அக்கழகத்துக்கு ஏதேனும் ஒரு வகையில் கெட்ட பெயர் சூட்டி அதைத் தொலைத்துவிட முயற்சி தொடங்கியிருக்கிறார்கள். தமிழரசுக் கழகத்தின் இலட்சியம் சுதந்திரத் தமிழ்க் குடியரசு

என்று ஆறாண்டுகளுக்கு முன் சொல்லப்பட்டதை இப்போது கிளப்பிவிட்டுக் கொண்டு, ''ஆகா! இவர்கள் பாரத நாட்டைத் துண்டாட விரும்புகிறவர்கள்'' என்று குற்றம் சாட்டுகிறார்கள். உண்மை என்னவென்றால், தமிழரசுக் கழகம் ஏற்பட்ட காலத்தில் இந்தியா சுதந்திரம் அடைந்திருக்கவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழேயே இருந்தது. ஆகையால், பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபட்ட சுதந்தரத் தமிழ்க் குடியரசு இலட்சியம் வகுக்கப்பட்டது. ''சுதந்திர இந்தியாவிலிருந்து பிரிந்த சுதந்திரத் தமிழ்க் குடியரசை நாங்கள் கோரவில்லை'' என்று தமிழரசுக் கழகத்தார் பலமுறை சொல்லியிருந்த போதிலும் பழைய பல்லவியை மீண்டும் மீண்டும் பாடி வருகிறார்கள் அக்கழகத்தை விரும்பாத பிரமுகர்கள்.

''தமிழரசுக் கழகம் தற்கால நிலைமையை ஒட்டி அதன் இலட்சியத்தை எதிரிகளும் திரித்துக் கூற இயலாத படி தெளிவாக அமைத்துக் கொள்ளுமென்று நம்புகிறோம்.

''அருமையான தொண்டு செய்துவரும் தமிழரசுக் கழகத்தை அமுக்க வழி தேடாமல் அக்கழகம் செய்த பணிகளைப் பாராட்டி மேலும் ஊக்கமளிக்கும் முறையில் மற்ற தமிழ்நாட்டுத் தேசிய வாதிகள் நடந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றோம்.''

('கல்கி', 15.2.53)

இந்த நேரத்தில் திராவிடர் கழக நாளேடான 'விடுதலை' சும்மாயிருக்கவில்லை. அதுவும் தனது பங்கைச் செய்ய முன் வந்தது. எனக்கு ஆதரவாக அல்ல; என்னை ஒழித்துக்கட்ட விரும்புபவர்களுக்கு உதவியாக!

அந்நாளில், திராவிடர் கழகத்துக்கும் எனது தமிழரசுக் கழகத்திற்கும் மோதல் இருந்து வந்தது. ஆகவே, விடுதலை பத்திரிகைக்கு என்பால் நல்லெண்ணம் இருக்குமென்று நான் எதிர்பார்க்க இயலாதுதானே! சுதந்திரத் திராவிடம் கோரிவந்த 'விடுதலை'யார், அதன் குறைந்தபட்ச உருவகமான சுயாட்சித் தமிழகம் கோரிய எனக்கு தார்மீக ரீதியிலேனும் ஆதரவு

காட்டியிருக்க வேண்டும். அது சாத்தியமில்லாவிட்டாலும் என்னை அடியோடு அழித்து முடிக்கப் பாடுபட்ட காங்கிரஸ் காரர்களுக்குக் கை கொடுக்காமலேனும் இருந்திருக்கலாம். அதற்கு மாறாக, தமிழரசுக் கழகத்தின் கொள்கை சுதந்திரத் தமிழகம்தான் என்று சாதித்து, பிரிவினை கோரும் என்னை காங்கிரசில் வைத்திருக்கக் கூடாதென்று உபதேசம் செய்தது. 'விடுதலை' ஆசிரியர் 'தமிழ் முரசி'ன் பழைய இதழ்களிலே நான் எழுதியவற்றிலிருந்து சான்றுகள் காட்டி, காமராசர் குழுவி னருக்குத் தகவல் அளித்தார். சுருங்கச் சொன்னால் 'விடுதலை' என் முதுகில் குத்தியது. விடுதலையின் தலையங்கப் பகுதிகள் மிகுந்த உற்சாகத்துடன் காங்கிரஸ் ஏடுகளிலே எடுத்தாளப்பட் டன.

மேட்டுப்பாளையம் மாநாடு

கழக — காங்கிரஸ் தகராறு உச்சக் கட்டத்திலிருந்த நேரத்திலே கோவை — நீலகிரி மாவட்டங்களின் தமிழரசுக் கழக மாநாடு 18,19.4.53 தேதிகளில் மேட்டுப்பாளையத்தில் நடைபெற்றது. கோவை மாவட்டத்தின் பிரபல காங்கிரஸ் காரரும், தொழிலதிபருமான திரு.எஸ்.ஆர்.பி. பொன்னுசாமி செட்டியார் இம் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தார். திரு. கருத்திருமன், எம்.எல்.ஏ. அவர்களும் இம் மாநாட்டில் கலந்து கொண்டு பேசினார்.

இந்த மாநாட்டில் ''தமிழரசுக் கழகம் அரசியல் கட்சியா, கலாச்சார இயக்கமா?'' என்ற சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக் கும் வகையில் பேசினேன்.

மேட்டுப்பாளையம் மாநாடு மிகுந்த சிறப்புடன் நடத்தப் பட்டது. கோவை மாவட்ட காங்கிரஸ் பிரமுகர்கள் எல்லோ ருமே அதில் கலந்து கொண்டனர். மாநாட்டுத் தலைமை உரையில் கழக காங்கிரஸ் தகராறு பற்றி நான் தெரிவித்த கருத்துகள் நாளிதழ்களில் பெரிய தலைப்புகள் தந்து பிரசுரிக்கப் பட்டன. வட இந்திய நாளேடுகளிலும் வெளியாயின. தமிழரசுக் கழகத்தின் கோரிக்கை தமிழகத்தை இந்தியாவிலிருந்து

பிரிப்பதல்ல என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் கழக அமைப்பு விதியை மாற்றுவதைத் தவிர, கொள்கை ரீதியான மாறுதல் எதையும் நான் செய்யப் போவதில்லை என்பதனை மேட்டுப் பாளையம் மாநாட்டில் தெளிவாகத் தெரிவித்து விட்டேன்.

இந்த மாநாட்டு மேடையில்தான் திரைப்படத் தயாரிப் பாளர்களான கலைக்காவலர் எம்.ஏ. வேணு, அருட்செல்வர் ஏ.பி. நாகராசன் இருவரும் என்னை முதன் முதலாகச் சந்தித்து, தமிழரசுக் கழகத்தில் சேர்ந்தனர்.

காங்கிரஸ் மேலிடத்தார் தமிழரசுக் கழகத்தாரிடம் சிறிது அனுதாபத்துடன் நடந்து கொண்டனரென்றாலும், அவர்கள் போக்கிலும் குறை இருந்தது. தமிழரசுக் கழகத்தின் அமைப்பு விதிகளைத் திருத்தியமைக்குமாறு காங்கிரஸ் தலைவர் நேருஜி யும், பொதுச் செயலாளர்களான பலவந்த்ராய் மேதா, அகர்வால் ஆகியோரும் அடிக்கடி எனக்குக் கடிதமூலம் கட்டளையிட்ட னர். ஆனால், கழக அமைப்பு விதிகளில் எதை, எப்படித் திருத்த வேண்டுமென்பதனை அவர்கள் தெளிவாகக் கூற வில்லை. தெளிவுபடுத்துமாறு நான் வற்புறுத்தியும் அவர்களில் எவரும் தெளிவுபடுத்தவில்லை.

கழகக் கொள்கைகள்

இந்தத் தரும சங்கடமான நிலைமையில் 12.4.53-இல் கழகப் பொதுக்குழு சென்னையில் கூடி, கழக அமைப்பு விதி களை ஒழுங்கு செய்வதற்காக, திரு.தெ.பொ. மீனாட்சி சுந்தர னார் தலைமையில் தனிக்குழு ஒன்றை அமைத்தது. அந்தக் குழு ஒழுங்குபடுத்திய அமைப்பு விதிகள் 11.6.53-இல் சென்னை யில் கூடிய கழக மத்திய செயற்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட் டது.

திருத்தப்பட்ட கழகக் கொள்கைகளும் வேலைத் திட்டங்க ளும் வருமாறு:

தமிழ் மக்கள் எல்லோருடைய தேசிய நலன்களைக் காந்திய நெறிவழிப் பாதுகாத்தல்.

இந்தியக் குடியரசின் அமைப்பில் — தேசிய ஒற்றுமைக்குக் குறைவு வராமல் — சுயாட்சியுடைய தமிழ் மாகாணம் ஏற்படுத்த உழைத்தல்

தமிழ், கலை, பண்பாடு முதலியவற்றை வளர்த்தல்.

பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை ஒழித்து, சோஷியலிசம் என்று வழங்கிவரும் கொள்கைக்கு ஏற்ப சமத்துவ சமுதாயத்தை நிலைநாட்டல்.

சாதி வேறுபாடுகளையும், மதப் போராட்டங்களையும் நீக்கி மக்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டல்.

இந்தக் கழகம் அரசியல் கட்சியாக அன்றி, மேற்கண்ட நோக்கங்களுக்காக, பிரச்சாரம் ஆராய்ச்சி மாநாடுகள், நாடகங்கள், பத்திரிகைகள் ஆகியவற்றின் மூலமாகவும், சட்டத்திற்குட்பட்ட வேறு முறைகளாலும் உழைத்து அக் கொள்கைகளை மக்களிடையே பரப்பப் பாடுபடும்.

தமிழரசுக் கழகப் பொதுக்குழு நியமித்த தனிக் குழுவால் திருத்தப்பட்டுக் கழக மத்திய செயற்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கழக அமைப்பு விதி காங்கிரஸ் மேலிடத்தாருக்கு என்னால் அனுப்பி வைக்கப்பட்டது. அதனை ஏற்றுக் கொண்டதாக மேலிடம் எனக்குத் தெரிவிக்கவில்லையென்றாலும், ஏற்க முடியாது என்றும் பதில் எழுதவில்லை. அதனால் மேலிடத்தின் மௌனம் இசைவுக்கு அறிகுறி என்று நான் கருதினேன்.

எப்படியும் என்னைக் காங்கிரசிலிருந்து வெளியேற்றியே தீருவதென்று முடிவு கட்டிக் கொண்டுவிட்ட திரு.கு. காமராசரும், அவரது குழுவினரும் கழக அமைப்பு விதி மாற்றப்பட்டதில் மனநிறைவு பெறவில்லை.

25.7.53-இல் கூடிய த.நா. காங்கிரஸ் செயற்குழு கீழ்க் கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது:

''தமிழரசுக் கழகத்தாரிடமிருந்து கிடைத்த பதில்களையும் கழகத்தார் செய்யும் பிரசங்கங்களையும், வியாக்கியானங்களையும் இக்கமிட்டி பரிசீலனை செய்ததில் கழகத்தார்

நடவடிக்கைகள் திருப்திகரமாய் இல்லையென்றும், காங்கிரஸ் ஸ்தாபன விதி 4-ஏ-க்கு முரணாக இருக்கிறதென்றும் இக்கமிட்டி முடிவு செய்கிறது. ஆகவே, தமிழரசுக் கழகத்திலிருந்து 15 நாட்களுக்குள் ராஜினாமா செய்யாத காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்து விலக்கப்பட வேண்டுமென்று இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

இந்தத் தீர்மானத்தின் நகல் த.நா.கா. செயலாளர் திரு.ஆர். வேங்கடராமனால் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

த.நா.கா.வின் கொடுவாள்!

கழக அமைப்பு விதிகளைத் திருத்தியமைத்த பிறகும் என்னையும் என் கழகத் தோழர்களையும் காங்கிரசிலிருந்து வெளியேற்ற த.நா.கா. எடுத்த முடிவானது காங்கிரஸ் வட்டாரத்திலுள்ள நல்லவர்களால் வெறுக்கப்பட்டது. வியப்பென்னவென்றால், அப்போது ராஜாஜி அமைச்சரவையில் அங்கம் வகித்த திரு.சி. சுப்பிரமணியம் அவர்களும் கலந்து கொண்ட த.நா.கா. செயற்குழுவில் — அவரது எதிர்ப்பு இல்லாத நிலையில் — என்னைக் காங்கிரசிலிருந்து வெளியேற்ற முடிவு செய்யப்பட்டதாகும்.

உண்மையில் ராஜாஜியும், திரு.சி.சு. அவர்களும் என்னைக் காங்கிரசிலிருந்து வெளியேற்ற திரு.கு. காமராசர் எடுத்து வந்த முயற்சிகளுக்கு எதிராகத்தான் இருந்தார்கள். காங்கிரஸ் மேலிடத்தார் தமிழரசுக் கழகத்தாரிடம் சிறிது அனுதாபத்துடன் நடந்து கொண்டதற்கு ராஜாஜியும் காரணமாவார். அப்போது அவர் மேலிட காங்கிரஸ் காரியக் கமிட்டியின் உறுப்பினராக இருந்தார். அக்கமிட்டியில் தமிழரசுக் கழகம் பற்றிய பிரச்சினை விவாதிக்கப்பட்ட போதெல்லாம் ராஜாஜி கழகத்திற்கு ஆதரவாக இருந்து வந்தார். ஆனால், த.நா.கா. செயற்குழுவில் திரு. காமராசர் முன்னிலையில் அவர் எனக்கு எதிராக மேற்கொண்ட முயற்சிகளுக்கு எதிர்ப்பு காட்ட, திரு.சி.சு.வுக்குத் துணிவு இருக்கவில்லை. காரணம், வெளிப்படையாக எனக்கு ஆதரவு காட்டினால், ராஜாஜி

அமைச்சரவைக்கு திரு. காமராசர் எதிரியாகிவிடக் கூடுமென்ற அச்சம்தான்! அதனால், காமராசர் தீட்டிய கொடுவாளுக்கு என்னைப் பலி கொடுத்துவிட அவர்கள் தயாராகி விட்டனர்.

த.நா.கா. செயற்குழுவின் தீர்மானம் எனக்கு அனுப்பப் பட்ட பின்னர், என்னிடம் தனித்துப் பேச விரும்புவதாக திரு.ஜி. உமாபதி மூலம் திரு.கு. காமராசர் எனக்குச் செய்தி அனுப்பினார். அதன்படி நான் அவரைச் சந்தித்துப் பேசிய போது கழகம் பற்றிய தீர்மானத்தை ராஜாஜியிடம் காட்டி, அவரது ஆதரவைப் பெற்ற பின்னரே த.நா.கா. செயற்குழுவில் அதை நிறைவேற்றியதாகத் தகவல் தந்தார். இந்தச் சந்திப்பின் போது கோஷ்டி அரசியலில் நான் காமராசருடன் சேர்ந்து கொண்டால், த.நா.கா. தீர்மானம் செயல்படுத்தப்பட மாட்டாது என்றும் சூசகமாக அவர் என்னிடம் சொன்னார். அவர் என்னிடம் மிகுந்த அனுதாபம் காட்டிப் பேசினார். ஆயினும், அவரது விருப்பத்திற்கு நான் இணங்கவில்லை. ராஜாஜி பற்றி திரு.கு. காமராசர் தந்த தகவல் எனக்கு வியப்பைத் தரவில்லை. ராஜாஜி, திரு. காமராசரின் பகையை விரும்பாததால், என் விஷயத்தில் அவர் போக்கில் செயல்பட அவரை அனுமதித் திருக்கக் கூடும் என்று கருதி ஆறுதல் அடைந்தேன்.

வெளியேற அனுமதி

த.நா.கா. செயற்குழுவின் தீர்மானத்திற்குப் பின்னர் காங்கிரஸ் மேலிடத்திடம் எனக்கிருந்த நம்பிக்கை குறைந்துவிட்டது. எப்படியும் மேலிடத்தார் இறுதியில் த.நா. காங்கிரசின் பழிவாங்கும் போக்குக்கு இணங்கிவிடக் கூடுமென்று நான் கருதினேன். அதனால், தமிழரசுக் கழக மத்திய செயற்குழுவின் சிறப்புக் கூட்டத்தை 30.7.53-இல் சென்னையில் கூட்டினேன். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கட்டத்தில் தாங்கள் கூடியிருப்பதைச் செயற்குழு உறுப்பினரில் ஒவ்வொருவரும் உணர்ந்தனர். உண்மையில் கழக — காங்கிரஸ் உறவு முறிவது குறித்து என்னைப் போன்றே செயற்குழு உறுப்பினர்களும் மிகுந்த வேதனையுற்றனர்.

காலை 10 மணிக்குக் கூடிய செயற்குழு — இடைவேளை நேரம் தவிர — மாலை 6 மணி வரை நடைபெற்றது. இறுதியில் கழகத்தாரை காங்கிரசிலிருந்து வெளியேற அனுமதிப்பதென்று செயற்குழு ஒருமனதுடன் தீர்மானித்தது. அத்தீர்மானம் வருமாறு:

''தமிழரசுக் கழகத்தார் காங்கிரசிலும் இருப்பதுபற்றி சூலை 25-ஆம் தேதி தமிழ்நாடு காங்கிரஸ் நிறைவேற்றி யுள்ள தீர்மானத்தை இந்தச் செயற்குழு மிகுந்த கவனத்து டன் பரிசீலனை செய்தது.

''காங்கிரஸ் விதி 4-ஏ பிரிவு காங்கிரஸ்காரர்கள் வேறு எந்த அரசியல் வகுப்புவாதக் கட்சிகளிலும் அங்கத் தினர்களாக இருக்கக் கூடாதென்று கூறுகின்றது.

''தமிழரசுக் கழகத்தின் குறிக்கோள்கள் இந்தியாவின் ஒருமைப்பட்டிற்கு முரணின்றித் தமிழ் மொழி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றை வளர்ப்பதும் தமிழருடைய நலன்களுக்காகப் பாடுபடுவதுமாகும்.

''ஆகவே, இக்கழகம் தமிழ் இனத்தவரின் தேசிய கலாச்சார அமைப்பாகவன்றி, அரசியல் கட்சியாக இயங்க வில்லை. இது கழகத்தின் அமைப்பு விதிகளிலே தெளிவு படுத்தப் பட்டிருக்கின்றது. எனவே, தமிழரசுக் கழகத்தார் காங்கிரசிலும் அங்கத்தினராயிருப்பதற்கு காங்கிரஸ் அமைப்பு விதி (4-ஏ பிரிவு) தடையாக இல்லை என்பது வெளிப்படை.

''ஆந்திர மகாணத்தில் ஆந்திர மகாசபையிலும், கேரள மாநிலத்தில் கேரள சமாஜத்திலும் அங்கத்தினர் களாக இருக்க காங்கிரஸ்காரர்கள் அனுமதிக்கப்பட்டிருக் கின்றனர். அப்படியிருக்க, தமிழருடைய தேசிய கலாச்சார அமைப்பான தமிழரசுக் கழகத்தில் காங்கிரஸ்காரர் இருக் கக் கூடாதென்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தீர்மா.னித்தி ருப்பதைக் கண்டு செயற்குழு வியப்படைகின்றது.

''ஆகவே, காங்கிரஸ்காரர்கள் தமிழரசுக் கழகத்திலிருந்து வெளியேற வேண்டுமென்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்டாயப்படுத்துவது காங்கிரஸ் விதிகளுக்கே முரணானதென்று இச்செயற்குழு கருதுகின்றது. ஆயினும், தமிழரசுக் கழகத்தார் காங்கிரசிலிருந்து வெளியேறியே தீரவேண்டுமென்ற கட்டாயச் சூழ்நிலையைத் தமிழ்நாடு காங்கிரஸ் உருவாக்கி விட்டதால் தவிர்க்க முடியாத நிலையில், காங்கிரஸ் — தமிழரசுக் கழகம் ஆகிய இரு அமைப்புகளிடையேயுள்ள நல்லுறவு கெடாதிருப்பதற்காக இந்தக் கழகத்திலுள்ள காங்கிரஸ்காரர்கள் காங்கிரசிலிருந்து விலகிவிடுவது நல்லதென்று இந்தச் செயற்குழு அவர்களுக்கு ஆலோசனை கூறுகின்றது.

''தமிழரசுக் கழகத்தார் காங்கிரசிலிருந்து விலகினாலும், எப்போதும்போல் காந்திய நெறிகளையே கடைப்பிடித்து நிற்பார்களென்று இச்செயற்குழு உறுதி கூறுகின்றது.''

தீர்மானத்தின் நகலை நேருவுக்கு அனுப்பியதோடு த.நா.கா. தீர்மானத்திற்கு எதிராகத் தனிப்பட்ட முறையில் ஒரு அப்பீலும் அனுப்பியிருந்தேன். அந்த அப்பீலுக்கு நேருவிடமிருந்து பதில் கிடைக்கும் வரை — அதாவது, நான் காங்கிரசிலிருந்து விலகும் வரை கழகத் தோழர்களில் யாரும் விலக வேண்டாமென்றும் அறிக்கை விடுத்திருந்தேன்.

த.நா.கா. தீர்மானத்தைக் கண்டித்து மதுரை 'தமிழ்நாடு' நாளிதழில் தலையங்கம் எழுதப்பட்டது.

'சர்ச் லைட்' கண்டனம்

வட இந்திய ஆங்கில நாளேடுகள் சிலவற்றிலும் கண்டனங்கள் வெளியாயின. பீகார் தலைநகரான பாட்னாவிலிருந்து 1894 முதல் வந்து கொண்டிருக்கும் 'சர்ச் லைட்' என்ற ஆங்கில நாளேடும் த.நா.கா. குழுவின் முடிவைக் கண்டித்தது. அதன் ஒரு பகுதி வருமாறு:

''தமிழ்நாடு காங்கிரஸ் அகில இந்திய காங்கிரசின் கருத்துப்படி கழகத்திலிருந்து காங்கிரஸ்காரர்கள் ராஜி னாமா செய்ய வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது. பெருவாரியான உறுப்பினர்களைக் கொண்ட தமிழரசுக் கழகத்தில் அதிகமான காங்கிரஸ்காரர்களும் அங்கம் வகிக்கின்றனர். அண்மையில், கோவை மாவட்டத் தைச் சேர்ந்த மேட்டுப்பாளையம் நகரத்தில் பேசுகையில், கழகத்தையும் தன்னையும் களங்கப்படுத்திக் கொள்வதை விட, காங்கிரசிலிருந்து ராஜினாமா செய்துவிடுவது நல்ல தென்று திரு. கிராமணியார் கூறியிருக்கிறார். எனவே, காங்கிரசிலிருந்து தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த காங்கிரஸ் காரர்கள் பலர் விலகி விடுவார்கள். இதனால் தேசிய அமைப்பான காங்கிரஸ் பலங்குன்றுவது உறுதி.

''திரு. கிராமணியார் காமராசருடைய அரசியல் எதிரி என்பதையும், அவர் காங்கிரசுக்குள்ளேயே காமராசருக்கு எதிராக ஒரு குழுவைப் படைக்க முயல்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கவை. ஆகவே, இத் தீர்மானத்தின் மூலம் தனது பலம் வாய்ந்த அரசியல் எதிரியை ஒழிக்க காம ராசர் சூழ்ச்சி செய்துவிட்டார் என்று சென்னை அரசியல் வட்டாரத்தில் பலர் கருதுகின்றனர்.

''எது எப்படியானாலும் இத்தீர்மானம் காங்கிரசை பலவீனப்படுத்தி விடுமென்பதை யாரும் மறுக்க முடியாது.''

('சர்ச் லைட்', 29.7.53)

''இல்லஸ்ட்ரேடெட் வீக்லி'' என்ற ஆங்கில வார இதழி லும் த.நா.கா. கமிட்டியின் தீர்மானத்தைக் கண்டித்து விமர்சனக் கட்டுரை வெளியானது.

மேலிடத்தார் தலையீடு!

நாமக்கல் கவிஞர், இந்த முறையும் த.நா.கா. தீர்மானம் நடைமுறைக்கு வருவதைத் தடைசெய்யக் கோரி தலைவர் நேருவுக்குத் தனிப்பட்ட கடிதம் எழுதினார். டாக்டர் ப.சுப்பரா யன் அவர்கள், ''தமிழ்நாடு காங்கிரஸ் தீர்மானம், அவசரப்

பட்ட செய்கை'' என்று பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார். முதல்வர் ராஜாஜி, நிருபர்கள் கேட்டதற்கு எதுவும் கூற மறுத்து விட்டார். ஆனால், அவர் வற்புறுத்தியதன் பேரில்தான் நான் த.நா.கா தீர்மானத்திற்கு எதிராக மேலிடத்தாருக்கு அப்பீல் செய்து கொண்டேன்.

காங்கிரஸ் மேலிடம் எனது அப்பீலை ஏற்றுக் கொண்டு காங்கிரசிலிருந்து வெளியேற தமிழரசுக் கழகத்தாருக்கு அனு மதி தந்து 30.7.53-இல் கழகச் செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத்தை செயல்படுத்த வேண்டாமென்று ஒரு கடிதத்தின் மூலம் என்னைக் கேட்டுக் கொண்டது.

இதுபோன்று, காங்கிரஸ்காரர்கள் 15 நாட்களுக்குள் தமிழரசுக் கழகத்திலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்று 25.7.53-இல் த.நா.கா. செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத் தைச் செயல்படுத்த வேண்டாமென்று த.நா.கா. தலைவர் திரு. காமராசருக்கும் காங்கிரஸ் மேலிடம் ஆணை அனுப்பி யது. இதனால், காங்கிரசோடு எனக்கிருந்த உறவு அறுந்து போவது மீண்டு மொருமுறை தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தப் பட்டது.

கழக — காங்கிரஸ் உறவு நீடிக்க காங்கிரஸ் மேலிடம் உதவி புரிய வேண்டுமென்று நாமக்கல் கவிஞர் எழுதியிருந்த கடிதத்திற்குத் தலைவர் நேருவிடமிருந்து கவிஞருக்கு ஆறுதல் தரும் வகையில் பதில் கிடைத்தது. அதிலே, ''தமிழரசுக் கழகம் பற்றிய சிக்கல் அதன் அமைப்பு விதியைப் பற்றியதுதான். அதைச் சரி செய்துகொள்ள முடியுமென்று நான் உறுதியாக நம்புகிறேன்'' என்று நேருஜி குறிப்பிட்டிருந்தார்.

புதுடில்லியில் 19.9.53-இல் கூடவிருந்த காங்கிரஸ் காரி யக் கமிட்டியின் நிகழ்ச்சி நிரலிலே எனது அப்பீலும் சேர்க்கப் பட் டிருந்தது. இந்தக் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொண்டு தமக்கு உதவி புரியுமாறு காரியக் கமிட்டியின் மூத்த உறுப்பின ரான ராஜாஜிக்கு நேருஜி கடிதம் எழுதியிருந்தார். வர இயலாதா யின், தமக்கு ஆலோசனை கூறி உதவுமாறும் கேட்டுக் கொண் டிருந்தார். அந்த வாசகம் வருமாறு:

''இவர்கள் (தமிழரசுக் கழகத்தார்) போன்ற சக்திகளைக் காங்கிரசிலிருந்து வெளியேற்றுவதில் நான் உற்சாகம் காட்ட முடியாது. இதைத் தவிர்க்கக் கூடிய வகையில் தாங்கள் ஆலோசனை சொல்லக் கூடுமானால், நான் மகிழ்ச்சியுடன் வரவேற்பேன்.''

கவிஞருக்கும் ராஜாஜிக்கும் நேருஜி எழுதிய கடிதங்களிலிருந்து என்னைக் காங்கிரசில் நிறுத்தி வைப்பதிலே அந்தப் பெருந்தலைவர் எவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தார் என்பது எனக்குப் புலனானது. உலகப் புகழ்மிக்க அப்பெருந் தலைவர் தமக்குள்ள எவ்வளவோ பணிகளிலே எனது பிரச்சினையிலும் அக்கறை காட்டியதானது அவரது ஜனநாயகப் பண்புக்குச் சான்றாகும். அவரது பண்பு, என் மனத்துள் வளர்ந்து வந்த வேதனையைக் குறைப்பதாக இருந்தது.

செப்டம்பர் 19-இல் புதுடில்லியில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டியில் த.நா.கா. தலைவர் திரு. கு.காமராசரும் காங்கிரஸ் தலைவர் நேருவின் விசேஷ அழைப்பின் மீது கலந்து கொண்டார். ஆம்; கழக — காங்கிரஸ் உறவு பற்றி பிரச்சினைக் காகவே அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

திரு.காமராசர், தமிழரசுக் கழகம் பிரிவினை கோரும் அரசியல் கட்சி என்றும், இந்தி மொழி இந்தியாவின் 'பொது மொழியாவதைக் கழகம் எதிர்ப்பதாகவும், பொதுவாக, காங்கிரஸ்காரர்கள் கழகத்திலும் அங்கத்தினர்களாக இருப்பதனை, த.நா.கா. அனுமதிப்பதற்கில்லையென்றும் கூறியதாக அறிந்தேன். காமராசரின் ஒருதலைப் பட்சமான கருத்தை மட்டுமே வைத்துக் கொண்டு கழகத்தார் பற்றி இறுதி முடிவு செய்வது சாத்தியமில்லையென்றும், விசாரணை அவசியமென்றும் காரியக் கமிட்டி முடிவு செய்து, அதற்கான இறுதி முடிவு ஒத்திப் போடப்பட்டதாகவும் பத்திரிகைகளில் செய்தி வெளியானது.

'கழகம்' செய்த குழப்பம்!

இதற்குப்பின் ஓராண்டுக் காலம்வரை காரியக் கமிட்டி இறுதி முடிவு எதுவும் எடுக்கவில்லை. அந்தக் காலத்தில் கூடிய

காரியக் கமிட்டியின் ஒவ்வொரு கூட்டத்திலும் இந்த விஷயம் பரிசீலிக்கப்பட்டு ஒத்திப் போடப்பட்டு வந்தது.

இதற்கிடையில் அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர்களான திரு. ஸ்ரீமந் நாராயணன், திரு. பலவந்த ராய் மேதா, திரு. அகர்வால் ஆகியோர் என்னுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருந்தனர். எது எதைப் பற்றியோ என்னிடமிருந்து விளக்கங்கள் கேட்டுப் பெற்றனர். அவர்கள் கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருந்த விஷயங்கள் மிகவும் சுவையானவை.

திராவிடர் கழகங்களிலிருந்து தமிழரசுக் கழகம் வேறுபட்ட தனி அமைப்பு என்பதனை அவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை. அதனால், திராவிடர் கழகங்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களுக்கும் போராட்டங்களுக்கும் தமிழரசுக் கழகத்தைப் பொறுப்பாக்கி அதன்மீது குற்றம் சாட்டினர் — குறிப்பாக, அப்போது தி.மு.க. நடத்திய மும்முனைப் போராட்டத்தையும் தி.க. நடத்திய இந்திப் பெயர் அழிப்புப் போராட்டத்தையும் தமிழரசுக் கழகம் நடத்தியதாகக் கருதிக் கொண்டு, அவற்றிற்காக என்னிடம் சமாதானம் கோரினர். ஆம்; 'கழகம்' என்ற சொல் தி.க. — தி.மு.க. — த.அ.க. ஆகிய மூன்றுக்கும் பொதுவாக இருப்பதனை வைத்துக் கொண்டு த.நா.கா. தலைமை மிகவும் திறமையாக காங்கிரஸ் பொதுச் செயலாளர்களைக் குழப்பி வைத்திருந்தது. இந்தக் குழப்பத்தைப் போக்க விரும்பி திரு. காசா சுப்பாராவ் அவர்கள் தமது ''சுயராஜ்யா'' என்ற ஆங்கில வாரப் பத்திரிகையில் எழுதியிருந்ததனை இங்குப் பார்ப்போம்:

''தற்சமயம் அரசியல் அரங்கில் மூன்று கழகங்கள் உள்ளன. கொலைவழிப் பிரசாரமும், பிராம்மண எதிர்ப்பும் திராவிடர் கழகத்திற்கு உரித்தானவை என்பது வெட்ட வெளிச்சம். திராவிடர் கழகத்தின் ''நாகரிகமான'' பதிப்பு திராவிடர் முன்னேற்றக் கழகம். துவேஷ அரசியலுக்கு அப்பாற்பட்டு, கழகம் எனப் பெயரிட்டுள்ள ஒரே அமைப்பு திரு.ம.பொ.சிவஞானம் (கிராமணியாரின்)

தலைமையிலுள்ள ஸ்தாபனமாகும். ஒருங்கு திரண்ட தமிழ்ப் பண்பே அவரது போக்கு. பிராம்மண எதிர்ப்பையோ அல்லது ஆரிய எதிர்ப்பையோ அவர் சேர்ந்தவரல்லர்.

"ஸ்ரீ ம.பொ.சி.யின் கலாச்சாரம் திரண்ட கழகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றகரமான அறிகுறியாகும்."

காங்கிரஸ் மேலிடத்தின் வற்புறுத்தலுக்கிணங்க கழகத்தின் அமைப்பு விதிகள் திருத்தப்பட்டபோது, 'கழகம்' என்ற சொல்லை அகற்றி, 'சங்கம்' — 'சபை' — 'மன்றம்' என்ற சொற்களிலொன்றைப் பொருத்துமாறு ராஜாஜி, நாமக்கல் கவிஞர், டாக்டர் ப.சுப்பராயன் ஆகியோர் என்னை வற்புறுத்தினர். அதற்கு இணங்க மறுத்துவிட்டேன்.

தொல்லையோ தொல்லை!

கழக — காங்கிரஸ் உறவுப் பிரச்சினை மேலிடத்தின் பரிசீலனையில் இருந்த காலத்திலே தமிழ்நாடு காங்கிரஸ்காரர்கள் என்னைச் சும்மா விட்டு வைக்கவில்லை. திரு. காமராசரின் சகாக்கள் எனது மானம், மரியாதையைக் கெடுக்கும் வகையில், பத்திரிகைகளில் எழுதியும், மேடைகளில் பேசியும் வந்தனர். அவர்கள் முன்னணித் தலைவர்கள் அல்ல; மூன்றாந்தரப் பேர்வழிகள்! ஆனால், அவர்களுக்கெல்லாம் காமராசர் ஊக்கமளித்து வந்தார்.

பொது வாழ்வில் எவ்வளவோ இன்னல்களுக்கிடையே நான் கடைப்பிடித்துவரும் ஒழுக்கத்தை மக்கள் ஐயுறும் வகையிலும் என்மீது பழி சுமத்தி பிரசாரம் செய்தனர். அந்தப் பொய்க் குற்றச்சாட்டுகள் 'தினத்தந்தி'யில் முழுப் பக்க அளவில் பெரிய தலைப்புகளுடன் அவ்வப்போது பிரசுரிக்கப்பட்டு வந்தன. ஆம்; என்ன காரணத்தாலோ, என்னை காங்கிரசிலிருந்து வெளியேற்றுவதிலே திரு. காமராசருக்கு ஆதரவாக இருந்தது அந்நாளில் திரு. சி.பா. ஆதித்தனாரின் நேர் பார்வையில் நடத்தப்பட்டு வந்த 'தினத்தந்தி'. அப்போதும் நானும் திரு. சி.பா. ஆதித்தனாரும் நண்பர்களாகத்தான் இருந்தோம். ஆயினும் அவருக்கு என்னிடமிருந்த நட்பைவிட திரு. காமராசரிடமதிருந்த 'பக்தி(?)'யே விஞ்சியிருந்தது.

வடக்கெல்லை — தெற்கெல்லைப் பிரச்சினைகள் பற்றி நான் பொதுக் கூட்டத்திலோ, நிருபர்களுக்களிக்கும் பேட்டி களிலோ மத்திய அரசைக் குறைகூறி ஏதேனும் சொல்லிவிட் டால் போதும்; அவை ''நேருவுக்கு ம.பொ.சி. எச்சரிக்கை'' — ''இன்னும் 15 நாட்களில் போராட்டம்'' — ''பிரதமருக்கு ம.பொ.சி. இறுதி நோட்டீஸ்'' என்றெல்லாம் தலைப்புகள் தந்து 'தினத்தந்தி''யில் பிரசுரிக்கப்படும். அந்த விஷயங்கள் — அவற்றிற்குத் தரப்பட்ட தலைப்புகளோடு த.நா.கா.வினரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு காங்கிரஸ் தலைவர் நேரு வுக்கு அனுப்பப்பட்டு வந்தன. ஆனால், அதனாலெல்லாம் நேரு மனமாற்றம் அடையவில்லையென்றாலும், மேலிடத்து காங்கிரஸ் செயலாளர்கள் 'தினத்தந்தி'ச் செய்திகளை நம்புவது போல் நடித்தனர்.

திரு.டி.எஸ். சொக்கலிங்கம் நடத்தி வந்த 'ஜனயுகம்' (நாளேடு), திரு.எஸ்.எஸ். மாரிசாமி நடத்திய 'இமயம்' (மாதம்), 'பேரிகை' (வாரம்), த.நா.கா.வின் அதிகாரபூர்மான வெளியீடாக வந்து கொண்டிருந்த 'காங்கிரஸ் செய்தி' ஆகிய ஏடுகளெல்லாம் என் மீதும் தமிழரசுக் கழகத்தின்மீதும் தொடர்ந்து வசைமாரி பொழிந்து வந்தன. இதனாலெல்லாம் மனம் உடைந்து நானாகவே காங்கிரசிலிருந்து வெளியேறி விடுவேன் என்று திரு. காமராசரும் அவரது குழுவினரும் கருதியிருக்க வேண்டும். காங்கிரஸ் கூட்டங்களுக்கோ, மாநாடு களுக்கோ, மற்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்கோ காங்கிரஸ் கமிட்டி கள் என்னை அழைப்பதில்லை. அநேகமாக, சாதிப் பிரதிஷ்ட னைப் போல நான் நடத்தப்பட்டேன். இவ்வளவையும் சகித்துக் கொள்ள இறைவன் எனக்குத் தந்துள்ள மனத்திண்மை பயன் பட்டது.

அளிக்காத 'பேட்டி'

இந்த நிலையில் அப்போதைய திருவிதாங்கூர் சமஸ்தானத் தில் இடைத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்தது. அந்தத் தேர்தலில் திருவிதாங்கூர் - தமிழ்நாடு காங்கிரசானது தெற்கெல் லைப் பிரச்சினை மீது சமஸ்தான (கேரள) காங்கிரசை எதிர்த் துப் போட்டியிடப் போவதாக அறிவித்திருந்தது. எல்லைச்

கிளர்ச்சியில் தி.த.நா. காங்கிரசுக்கு நான் வழிகாட்டியாக இருந்தேனென்றாலும், தேர்தல் நேரங்களில் சமஸ்தான (கேரள) காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு எதிராகத் தமிழ்நாடு காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்ட நான் தெற்கெல்லைக்குச் சென்றதேயில்லை. இதனை, கட்சிக் கட்டுப்பாடாக மட்டுமல்லாமல், அரசியல் ஒழுக்கமாகவும் நான் கடைப்பிடித்தேன்.

அப்படியிருந்தும் உசிலம்பட்டியில் மதுரை 'தமிழ்நாடு' பத்திரிகை நிருபருக்கு நான் பேட்டியளித்து, ''திருவிதாங்கூர் சமஸ்தானத் தேர்தலில் கேரள காங்கிரசுக்கு எதிராகத் தமிழர் காங்கிரசுக்கு ஆதரவு அளித்துப் பிரசாரம் செய்யப் போகிறேன்'' என்று கூறியதாக ஒரு செய்தி பெரிய தலைப்புகளுடன் பிரமாதமாக பிரசுரிக்கப்பட்டிருந்தது.

உண்மையில், உசிலையில் 'தமிழ்நாடு' நிருபர் என்ற பெயரில் என்னை யாரும் அணுகவுமில்லை; நான் பேட்டியளித்து எதுவும் கூறவுமில்லை. மதுரையிலுள்ள காமராசர் கோஷ்டி காங்கிரசார் செய்த சதி இது.

''தமிழ்நாடு'' இதழில் வெளியான பொய்ச் செய்தி. இந்தச் சதிக்கு யார் காரணமானவர்களோ அவர்களால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, தலைவர் நேருவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் தலைவர் நேரு, என் மீதும் எனது கழகத்தின் மீதும் முதன் முதலாக மனஞ்சலித்தவராய் — சிறிது வருத்தத்துடன் ராஜாஜிக்குக் கடிதம் எழுதினார்.

''தமிழ்நாடு''வில் வெளியான பொய்ச் செய்தியை மறுத்து அதன் ஆசிரியருக்குக் கடிதம் எழுதினேன். எனது கடிதம் அந்தப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, தவறு நேர்ந்ததற்காக வருத்தந் தெரிவிக்கும் ஆசிரியர் குறிப்பும் வெளியிடப்பட்டிருந்தது.

நேருஜி மனவருத்தத்துடன் எழுதிய கடிதத்தை ராஜாஜி என்னிடம் காட்டி, அதற்குச் சமாதானம் எழுதுமாறு கூறினார். நானும் சமாதானம் கூறிக் கடிதம் எழுதினேன். அத்துடன் ''தமிழ்நாடு''வில் வெளியான எனது மறுப்பையும், ஆசிரியர்

குறிப்பையும் அனுப்பியிருந்தேன். இதற்குப் பின் ஒருவகையாக நேரு ஆறுதலடைந்தாரென்றே கருதினேன்.

இந்த நேரத்தில்தான் ஏற்கெனவே நான் கூறியதுபோல தமிழ்நாட்டிலும் ஆந்திரத்திலும் முதல்வர்கள் மாறினர். 'கிளிக் கோஷ்டி'யின் நாயகர்களே இந்த இரண்டு மாநிலங்களிலும் முதல்வர்களாக வந்தனர். ஆம்; தமிழ்நாட்டில் ராஜாஜி வெளியேறி, திரு. காமராசர் முதல்வர் பீடத்தில் ஏறினார். ஆந்திராவில் டி. பிரகாசம் வெளியேற்றப்பட்டு திரு.என். சஞ்சீவிரெட்டியார் முதல்வராக வந்தார். திரு. காமராசர் முதல்வராகி விட்டதால், திரு.எல்.எஸ். கரையாளர் த.நா.கா. தலைவர் பதவியை அடைந்தார். இவர் என் விஷயத்தில் திரு. காமராசரை விடவும் கடுமையாக நடந்து கொண்டார்.

எல்லைக் கமிஷன் கோரிக்கை நாள்

ஆந்திர — தமிழக முதல்வர்கள் வடக்கெல்லைப் பிரச்சினையில் ஒரே குரலில் பேசினர் — அதாவது ''வடக்கெல்லைப் பிரச்சினைக்காக எல்லைக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டிய அவசரம் எதுவும் இல்லை'' என்று இருவரும் பேசி வந்தனர். ஆந்திர முதல்வர் பேசியது சரிதான்; அதனால், ஆந்திர நாட்டுக்கு லாபம்! ஆனால், தமிழக முதல்வரும் அப்படிப் பேசியது எனக்கு வியப்பைத் தந்தது.

இவர்கள் போக்கு காரணமாக வடக்கெல்லைத் தமிழர்களிடையே ஆத்திரம் வளர்ந்தது. நான் ஏதாவது நடவடிக்கை மேற்கொண்டாலொழிய, திரும்பவும் சித்தூர் மாவட்டத் தமிழ்த் தாலுகாக்களில் வன்முறை தலைகாட்டும் போல் இருந்தது. அதனைத் தவிர்க்க, சூலை 4-ஆம் தேதி எல்லைக் கமிஷன் கோரிக்கை நாள் கொண்டாடத் தமிழரசுக் கழகம் தீர்மானித்தது. கழகத்தின் தலைவன் என்ற முறையில் அந்த நாளை இன எழுச்சியோடு கொண்டாடுமாறு தமிழின மக்களுக்குப் பத்திரிகைகளில் வேண்டுகோள் விடுத்தேன். எல்லைக் கமிஷன் கோரிக்கை நாளைச் சட்டத்திற்குட்பட்ட முறையிலேதான் — அமைதி காக்கும் வகையிலேதான் கொண்டாடத் தமிழரசுக் கழகம் திட்டமிட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, புதிதாக முதல்வர் பீடத்திலேறிய திரு.கு. காமராசர் எதிர் அறிக்கை விட்டார்! கழகம் நடத்தும் எல்லைக் கமிஷன் கோரிக்கை நாளில் காங்கிரஸ்காரர்கள் கலந்து கொள்ளக் கூடாதென்றும், மீறி யாரேனும் கலந்து கொண்டால், அது கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய செயலாகக் கருதப்பட்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் திரு. காமராசர் எச்சரித்தார்.

முதலமைச்சர் காமராசரின் எதிர் அறிக்கையை நான் எதிர் பார்க்கவில்லை. ஆந்திர, கன்னட, மகாராஷ்டிர மாநிலங்களில் மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவர்களும், முதல்வர் களுமே எல்லைக் கிளர்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்தனர். தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டி, தமிழக எல்லைப் பகுதிகளை மீட்கத் தன் சுட்டுவிரலைக்கூட அசைக்காததால்தான் நான் பொறுப்பேற்றேன். காமராசர் எனக்கு உதவி புரியாவிட்டாலும் தொல்லை கொடுக்காமலிருந்திருக்கலாம். ஏனோ, தொல்லை கொடுக்கத் துணிந்தார். திரு. காமராசருடனோ, அவரது அரசு டனோ, அல்லது மாகாண காங்கிரஸ் கமிட்டியுடனோ சண்டை பிடிக்க நான் விரும்பவில்லை. அதிலே எனக்கோ, கழகத் திற்கோ எந்தவிதமான பயனுமில்லை. ஆயினும் முன் வைத்த காலைப் பின்வாங்க முடியாதவனாக இருந்தேன். அதனால், த.நா.கா. தலைவரின் ''ஆணை''யை மீறி, சூலை 4-இல் எல்லைக் கமிஷன் கோரிக்கை நாள் கூட்டங்களிலும் கலந்து கொண்டேன். சென்னை திருவல்லிக்கேணி திலகர் கட்டத்தில் சென்னை மாவட்ட த.அ.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான ஊர்களில் கோரிக்கை நாள் கூட்டங்கள் நடைபெற்றன. சென்னைக் கூட்டத் தில், திரு.தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், திரு. சின்ன அண்ணா மலை ஆகிய காங்கிரஸ்காரர்களும் பேசினர்.

தடை தகர்க்கப்பட்டது!

சென்னையிலும் வெளியூர்களிலும் நடந்த கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் த.நா.கா.விலுள்ள பல்லாயிரக்கணக்கான காங்கிரஸ்காரர்கள் த.நா.கா.வின் தடையை மீறி கலந்து கொண் டனர்.

சென்னைக் கூட்டத்தில் நான் பேசியதன் ஒரு பகுதி ('செங்கோல்', 11.7.54 இதழில் வெளியானது) வருமாறு:

''நான் காங்கிரசுக்கு விசுவாசமுடையவன். ஆனால், காங்கிரசின் பேரால் ஒரு சிலர் செய்யும் மிரட்டல்களுக் காகத் தமிழ் இனத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளை நான் கைவிட்டுவிட முடியாது (பெருத்த கைதட்டல்) காங்கிரசிலிருந்து மட்டுமல்ல; உலகத்திலிருந்தே வெளி யேற்றப்படுவதானாலும் இந்த ம.பொ.சி. யாருக்கும் மண் டியிட மாட்டான் (பெருத்த கைதட்டல்).

''எல்லைக் கிளர்ச்சியில் காங்கிரஸ்காரர்கள் கலந்து கொள்ள வேண்டுமென்று முதலமைச்சர் காமராசர் அறிக்கை விடுத்திருக்கிறார். அவருடைய தூண்டுதல் பேரில் தமிழ்நாடு காங்கிரசும் எல்லைக் கமிஷன் தினத்தில் கலந்து கொள்ளக் கூடாதென்று காங்கிரஸ் அங்கத்தினர் களுக்கு தனித்தனியே கட்டளை அனுப்பியிருக்கிறது. போதாக் குறைக்குத் தமிழ்நாடு காங்கிரஸ் காரியதரிசி, சென்னை ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டி தலைவர், செய லாளர் ஆகியோரும் பகிரங்கமாக எங்களுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். ஆம்; காங்கிரஸ் அலுவலக பியூன் ஒருவர் தான் இது விஷயத்தில் எனக்கு எதிராக அறிக்கை விடவில்லை. (பெருத்த கைதட்டலும் சிரிப்பும்).

''தமிழரசுக் கழகம், காங்கிரசுக்கு எதிராகவோ, காமராசரின் ஆட்சிக்கு விரோதமாகவோ கிளர்ச்சி நடத்த வில்லை. தமிழினத்தின் எல்லைகளை ஆக்ரமிப்பவர் யாரா யிருந்தாலும் அப்படிப்பட்டவர்களை எதிர்த்துப் போராடத் தமிழரசுக் கழகம் தயங்காது.

''நான் காங்கிரஸ்காரன் என்பதனாலேயே தமிழ கத்தின் எல்லைகள் பறிக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா? அந்த அநீதியை எதிர்த் துக் கிளர்ச்சி செய்வது காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்கு விரோதமா? 'ஆம்' என்றால், அப்படிப்பட்ட ஒரு கட்சி தங்களுக்கு வேண்டுமா என்பதைப் பற்றித்

தமிழ் மக்கள் முடிவு கட்டவேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும். மகத்தான காங்கிரசுக்கு அந்த அபாய நிலையைத் தேடிவிட வேண்டாமென்று தமிழ்நாடு காங்கிரசை நிர்வகிக்கும் என் சகாக்களைக் கேட்டுக் கொள்ளுங்கள்.

''இன்றைய கட்டத்தில் காங்கிரஸ்காரன் என்ற முறையில் அல்லாமல் ஒரு தமிழன் என்ற முறையில்தான் நான் கலந்து கொள்ளுகிறேன். ஏன் என்றால், எல்லைப் பிரச்சினை அரசியல் கட்சி சார்பற்ற விஷயம். ஆகவே, அதில் ஈடுபடுவதைத் தடுக்க எந்தக் கட்சிக்கும் உரிமை இல்லை.''

எல்லைக் கமிஷன் கோரிக்கை நாளைத் தமிழரசுக் கழகம் கொண்டாடியது பற்றியும், அதிலே நான் கலந்துகொண்டது பற்றியும் காங்கிரஸ் மேலிடத்திற்கு த.நா.கா. கமிட்டியால் தகவல் தரப்பட்டது. இயற்கையாகவே வடக்கெல்லைக் கிளர்ச்சியை விரும்பாத காங்கிரஸ் மேலிடம் அதிலே மிகுந்த அக்கறை காட்டிவரும் என்மீது வெறுப்புக் கொள்வது இயற்கைதானே!

முதலமைச்சர் பதவியிலிருந்து விலகிய பின்னர், கழக — காங்கிரஸ் உறவு விஷயத்தில் ராஜாஜி அக்கறையற்றவரானார். பதவிப் பொறுப்பிலிருந்து விலகி விட்டதால், காங்கிரஸ் மேலிடத்திடம் அவருக்குத் தொடர்பு குறைந்ததும் இதற்கு ஒரு காரணமாகும். காரணம் எதுவாயினும், ராஜாஜி மிகவும் பரிதாபகரமான முறையில் என்னைக் கைவிட்டு விட்டது மட்டும் உண்மை.

திரு. காமராசர் சென்னை மாநிலத்தின் முதல்வரான பின்னர், காங்கிரஸ் மேலிடத்தில் அவரது மதிப்பு உயர்ந்து விட்டது. அவரது கருத்தைப் புறக்கணித்துவிட்டுச் செயலாற்றும் துணிவு காங்கிரஸ் தலைவர் நேருவுக்கே இல்லாமற் போய்விட்டது. மிகவும் சாதாரண மனிதனாகிய எனக்காக அவர் ஒரு மாநிலத்தின் முதல்வரைப் பகைத்துக் கொள்வாரென்று நான் தான் எப்படி எதிர்பார்க்க முடியும்!

கதையை வளர்ப்பானேன்; காங்கிரஸ்காரர்கள் தமிழரசுக் கழகத்திலிருந்து 15 நாட்களுக்குள் வெளியேறிவிட வேண்டுமென்று த.நா.கா. செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத்தை அமுல்படுத்திக் கொள்ள காங்கிரஸ் மேலிடம் அனுமதி தந்து விட்டது. அதனையடுத்து, த.நா.காங்கிரஸ் செயலாளர் திரு. ஆர்.வெங்கடராமன் அவர்கள் எனக்கு அனுப்பிய கடிதம் வருமாறு:

20.7.1954

திரு. எம்.பி. சிவஞான கிராமணி,
1/29, இருசப்ப கிராமணி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

அன்புமிக்க நண்பருக்கு,

வணக்கம். 26.7.53-ஆம் தேதியிட்ட எனது கடிதத்தைத் தங்கள் நினைவுக்குக் கொண்டு வருகிறேன். மேற்படி கடிதத்தில் 25.7.53-இல் தமிழரசுக் கழகத்தாரின் நடவடிக்கைகள் காங்கிரஸ் ஸ்தாபன விதி 4-க்கு முரணாக இருக்கிறதென்ற தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானம் தங்களுக்கு அனுப்பபட்டிருக்கிறது.

அதன் பின்பு இந்த விஷயம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியாரின் பரிசீலனையில் இருந்த வந்தது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் தங்களது ஜூலை 14-ஆம் தேதியிட்ட கடிதத்தின்படி தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியார் 25.7.53-இல் நிறைவேற்றிய தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஜவகர்லால் நேரு அங்கீகரித்திருப்பதாக எழுதி இருக்கிறார்கள்.

தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி, எல்லைக் கமிஷன் சம்பந்தமாக நடத்தும் கிளர்ச்சிகளில் காங்கிரஸ்காரர்கள் கலந்து கொள்ளக் கூடாதென்று 18.6.54-இல் நிறைவேற்றிய தீர்மானத்தையும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அங்கீகரித்துள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அந்தத் தீர்மானத்துக்கு மாறாகத் தமிழரசுக் கழகம் பல விடங்களில் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தியதாகப் பத்திரிகைகளிலிருந்து தெரிய வந்தது.

மேற்கண்ட 2 தீர்மானங்களின் அடிப்படையில் காங்கிரசிலுள்ள தமிழரசுக் கழக அங்கத்தினர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமாறு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தெரிவித்திருக்கிறது.

ஆகவே, 25.7.53 தீர்மானப்படி இந்தக் கடிதம் கிடைத்த 15 நாட்களுக்குள் தமிழரசுக் கழகத்திலிருந்து தாங்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்றும், தவறினால் காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்து தாங்கள் விலக்கப்படுவீர்கள் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புள்ள,
(ஒப்பம்) ஆர். வெங்கடராமன்,
காரியதரிசி.

த.நா.கா. செயலாளரின் கடிதம் கிடைத்த பின்னர் நானும் தமிழரசுக் கழக முன்னணித் தோழர்களும் கழக — காங்கிரஸ் உறவு பற்றிய சிக்கலை ஒரு முடிவுக்குக் கொண்டுவர விரும்பினோம். அந்த முடிவு, காங்கிரசிலிருந்து வெளியேறுவதாகத்தான் இருக்க வேண்டுமென்பதிலே நாங்கள் ஒருமனப்பட்டவர்களாக இருந்தோம். கழகத்தைக் கலைத்துவிட்டோ, அதிலிருந்து வெளியேறியோ காங்கிரசில் இருப்பதற்கு எங்களில் யாரும் விரும்பவில்லை.

காமராசருடன் பேச்சு

தமிழரசுக் கழகச் செயற்குழுவைக் கூட்டி, கழக — காங்கிரஸ் உறவு பற்றிய சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினோம். ஆனால், செயற்குழு ஒரு முடிவுக்கு வருமுன்னர் திரு.கு. காமராசரைச் சந்தித்துப் பேசுவது அவசியமென்று நான் கருதினேன். அதனால் பலன் ஏற்படுமென்ற நம்பிக்கை எனக்கில்லையென்றாலும், கழகத்தார் காங்கிரசிலிருந்து வெளியேறு

வது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த — குறிப்பாக, காங்கிர சைப் பலவீனப்படுத்தக் கூடிய ஒரு நிகழ்ச்சியென்று நான் கருதினேன். அதனால், 'நாம் சரியாகத்தான் நடந்து கொண் டோம்' என்ற ஆறுதலைப் பெற விரும்பினேன். செயற்குழு கூடுவதற்கு முதல் நாள் இரவு நான் மட்டும் தனித்துச் சென்று திரு. காமராசரை அவரது இல்லத்தில் சந்தித்தேன். அவர், என்னை நட்புணர்ச்சியுடனேயே வரவேற்று, மனந்திறந்த முறை யில் என்னுடன் உரையாடினார். நான் அவரைச் சந்தித்ததும், அவர் முதலில் என்னைக் கேட்ட கேள்வி, ''நாளைக்கு உங்கள் கழகத்தின் செயற்குழு கூடுகிறதே, அதிலே என்ன முடிவு எடுக்கப் போகிறீர்கள்?'' என்பதுதான்.

நான் ''என்ன முடிவு எடுக்கவேண்டுமென்று விரும்புகிறீர் கள்; சொல்லுங்கள்'' என்றேன்.

அவர், ஒரு கணமும் தாமதியாமல், ''கழகத்தைக் கலைத்து விட்டு, காங்கிரசிலே இருந்து விடுங்கள்'' என்றார். ''கழகத் தைக் கலைத்து விடுங்கள்'' என்ற வாசகம் என் காதில் நாராசம் போல் பாய்ந்ததென்றாலும் சகித்துக் கொண்டேன்.

''நானும் என்னுடைய நண்பர்களும் காங்கிரஸ் கட்சியி லிருந்து கொண்டே கழகத்தை நடத்துவதால், உங்களுக்கோ, காங்கிரசுக்கோ என்ன நஷ்டம்?'' என்று கேட்டேன்.

அதற்கவர், ''தமிழரசுக் கழகத்தின் பலத்தைக் கொண்டு நீங்கள் காங்கிரசைக் கைப்பற்றி விடலாமல்லவா?'' என்றார்.

நான், ''இதுவரை அப்படி எத்தனை கமிட்டிகளைப் பிடித்தி ருப்பதாகத் தாங்கள் நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

அவர், ''இதுவரை பிடிக்காமலிருக்கலாம். இனிமேல் பிடிக்கலாமல்லவா?'' என்றார்.

நான் ''தங்களுக்கு அந்த அச்சம் இருக்குமானால், கழகத்தி லுள்ளவர்கள் காங்கிரசில் நான்கணா அங்கத்தினராக மட்டுமே இருக்கலாம்; தீவிர அங்கத்தினர்களாக இருக்கக் கூடாது என்று நாளை கூடும் செயற்குழுவிலேயே தீர்மானம் போட்டு விடுகிறேன். போதுமா?'' என்றேன்.

(அந்நாளைய காங்கிரசில், நான்கணா செலுத்து பவர்கள் சாதாரண உறுப்பினர்களாகவும், 11 ரூபாய் செலுத்துபவர்கள் தீவிர உறுப்பினர்களாகவும் கருதப்பட்ட னர். தீவிர உறுப்பினர்கள்தான் காங்கிரஸ் கமிட்டிகளுக் கான தேர்தல்களிலும், சட்டமன்றம், நகரமன்றம், நாடாளு மன்றம் ஆகியவற்றிற்கான தேர்தல்களிலும் நிற்க முடியும்.)

திரு.கு. காமராசர், ''அப்படியானால், இப்போது நீங்கள் காங்கிரசின் பெயரால் வகிக்கும் பதவிகளையெல்லாம் விட்டு விட வேண்டியிருக்குமே. அதற்கப்புறமும் பதவிகளெதையும் அடைய முடியாதே'' என்றார்.

நான், 'அதற்குத் தயாராக இருக்கிறேன்'' என்றேன்.

அவர் ''அதற்கப்புறம் காங்கிரசில் இருப்பதால் உங்க ளுக்கு என்ன லாபம்?'' என்றார்.

நான், ''காங்கிரஸ்காரனாகத்தான் பொது வாழ்க்கையில் ஈடுபட்டேன். சாகும்போதும் காங்கிரஸ்காரனாகவே சாக விரும்புகிறேன். அதுதான் நான் விரும்பும் லாபம்'' என்றேன்.

இப்படிச் சொல்லும்போது என்னை அறியாமலே எனது நா தழுதழுத்தது; கண்களில் நீர் மல்கியது. திரு. காமராசர் சட்டென்று பதில் கூறாமல், மௌனம் சாதித்தார். ஏன், இருவருமே சில நிமிடங்கள் மௌனமானோம்.

பின்னர் பேசத் தொடங்கிய காமராசர், ''அதென்னவோ, காங்கிரசில் இருந்துகொண்டே கட்சிக்குள் கட்சியாக இன் னொரு கட்சியை நீங்கள் நடத்துவது எனக்குச் சரியாகப் படவில்லை. அதற்கு நான் சம்மதிக்க முடியாது'' என்று கண்டிப் பாகக் கூறினார்.

நான், ''அப்படியானால் காங்கிரசிலிருந்து வெளியேறுவ தைத் தவிர எனக்கு வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை'' என்றேன்.

காமராசர், ''உங்கள் விருப்பம் அதுவானால், அப்படியே செய்யுங்கள். ஆனால், வீணாகக் கெட்டுவிடுவீர்கள். குளத்தி லிருக்கும் வரைதான் மீன்; அதை வெளியே எடுத்துப் போட் டால் கருவாடுதான்! அதுபோல, உங்களுக்கு ஜனங்களிடத்தில் இன்றிருக்கும் செல்வாக்கு நீங்கள் காங்கிரஸ்காரர் என்பதனால் தான். காங்கிரசை விட்டால், செல்வாக்கு போய்விடும். புரியா மல் பேசுகிறீர்கள்'' என்றார்.

வெளியேறிவிட முடிவு

இதற்குமேல் உரையாடலை நீட்ட விரும்பாமல் காமராசரி டம் விடைபெற்றுக் கொண்டேன். புறப்படும்போது, ''காங்கிரஸ் காரர்களாக நாம் சந்திப்பது இது கடைசி முறையாக இருக்கும். ஆயினும், நாம் இனிமேலும் நண்பர்களாகச் சந்திப்போம்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பினேன்.

மறுநாள் (3.8.54) மாலையில் எனது இல்லத்தில் தமிழரசுக் கழகச் செயற்குழு கூடி, கழகத் தோழர்களைக் காங்கிரசிலிருந்து வெளியேறுவதற்கு அனுமதிக்கும் தீர்மானத்தை ஒருமனதுடன் நிறைவேற்றியது. அதன் முக்கிய பகுதி வருமாறு:

''தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூறும் காரணங்களுக் காகத் தமிழரசுக் கழகத்தார் காங்கிரசிலிருந்து வெளியேற வேண்டிய அவசியமில்லையென்றும், மாறாக, இனியும் காங்கிரசில் நீடித்திருக்க அவர்களுக்கு உரிமை உண்டென் றும் இந்தச் செயற்குழு கருதுகிறது.

''ஆயினும் மொழிவழி மாநிலப் பிரிவினை, எல்லைப் பிரச்சினை, தாய் மொழியை ஆட்சி மொழியாக் குதல் ஆகிய அகில இந்திய காங்கிரசின் அடிப்படைக் கொள்கைகளைச் செயல்படுத்த மற்ற மாநிலங்களில் அந்தந்த மாகாண காங்கிரஸ் கமிட்டிகளே பொறுப்பேற்றுச் செயலாற்றுவது போல, தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகிகள் தங்கள் கடமையைச் செய்யாததோடு, தமிழர் சம்பந்தப் பட்ட வரையில் இந்த நலன்களைப் பாதிக்கக்கூடிய வகை யிலும் நடந்து கொள்ளுவதால், இவர்களுடைய நிர்வாகத்

தின் கீழ் இனியும் காங்கிரசில் நீடித்திருப்பதன் மூலம் தமிழ் இனத்தின் உரிமைகளைப் பாதுகாக்க முடியாது என்று இச்செயற்குழு நம்புவதால், தமிழரசுக் கழக அங்கத்தினர் கள் காங்கிரசிலிருந்து விலகிவிட அனுமதிப்பதென்று தீர் மானிக்கிறது.''

உறவு முறிந்தது!

1923-இல் காங்கிரசோடு எனக்கேற்பட்ட தொடர்பு 1954-இல் — சரியாக முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் — முறிந்துவிட்டது. 1954 ஆகஸ்டு 8-ஆம் தேதியன்று காங்கிரசி லிருந்து விலகுவதாகத் த.நா.கா. கமிட்டிக்குக் கடிதம் எழுதி னேன். சாதாரண நான்கணா அங்கத்தினர், 11 ரூபாய் செலுத்தும் தீவிர அங்கத்தினர் ஆகிய பொறுப்புகளிலிருந்து விலகிக் கொண்டேன். இதனால் சென்னை 10ஆவது சர்க்கிள் காங்கிரஸ் கமிட்டி, சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி, தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டி ஆகியவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத் தினர் பொறுப்புகளையும் துறந்தேன்.

பதவிகளைத் துறந்தேன்!

காங்கிரசிலிருந்து விலகிய பின்னர் அந்தக் கட்சியின் பெயரால் பெற்ற பதவிகளில் இருப்பது முறையல்ல என்பதனை உணர்ந்தேன். அதனால், கழக முன்னணித் தோழர்கள் தடுத்தும் கேளாமல், காங்கிரசின் பெயரால் சென்னை மாநகராட்சியில் யான் வகித்து வந்த ஆல்டர்மேன் பதவியிலிருந்தும் விலகிக் கொள்வதாக த.நா.கா. கமிட்டித் தலைவருக்கு எழுதிவிட்டேன். இதற்குச் சில நாட்களுக்கு முன்னதாகச் சட்டமேலவை உறுப்பி னர் பதவியையும் துறந்தேன்.

காங்கிரசின் பெயரால் வகித்த எல்லாப் பொறுப்புகளிலிருந் தும் விலகிக் கொண்டு தமிழரசுக் கழகத் தலைவன் என்ற பொறுப்பில் மட்டும் என்னை வைத்துக் கொண்டேன். கழகத் தலைமையை மிகப் பெரிய பதவியாகவும், புனிதமான பெரும் பேறாகவும் நான் கருதினேன். அதைத் துறக்க விரும்பாமல்

மிகுந்த வருத்தத்தோடு காங்கிரசுடன் எனக்கிருந்த முப்ப தாண்டுக் கால உறவை முறித்துக் கொண்டேன்.

நான் காங்கிரசிலிருந்து அன்று விலகாமலிருந்திருந்தால் — காங்கிரசோடு இருந்த உறவைக் காத்துக் கொள்வதற்காகத் தமிழரசுக் கழகத்தைக் கலைத்து விட்டிருந்தால் தனிப்பட்ட முறையில் எனக்கொன்றும் இழப்பு ஏற்பட்டிருக்காது. அப்போது சட்டமேலவையிலும், மாநகராட்சியிலும் நான் வகித் திருந்த பதவிகளை இழக்காமலிருந்திருப்பேன். அவற்றிற்கு மேலும் சென்னை மாநகராட்சி மேயர், சென்னை மாநில ஆட்சியிலே அமைச்சர் போன்ற பதவிகளை நாளடைவில் நான் அடைந்திருக்கக் கூடும். ஆனால், தமிழ் இனத்துக்கு — தமிழ் நாட்டுக்கு — தமிழ் மொழிக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு பல ஏற்பட்டிருக்கும்.

திருத்தணித் தாலுக்கா ஆந்திரத்துக்கே சொந்தமாகி யிருக்கும்.

நான்கு தாலுக்காக்கள் கொண்ட குமரி மாவட்டமும், செங்கோட்டை தாலுக்காவும் கேரளத்துக்கே உரிமையாகி யிருக்கும்.

மொழி அடிப்படையிலே தமிழ் வழங்கும் நிலப்பரப்பு தனியரசு மாநிலமாக 1956-இல் அமைந்ததே, அந்தப் புனித மான வாய்ப்பு தவறிப் போயிருக்கும்.

மெள்ள மெள்ளவேனும் கடந்த பதினைந்தாண்டு காலமா கத் தமிழ் மொழி எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி அடைந்து வருகிறதே, அதனை நம் தாய் மொழி அடியோடு இழந்து விட்டிருக்கும்.

இவற்றிற்கு மாறாக, நான்கு மொழி மாநிலங்கள் கொண்ட 'தட்சிணப் பிரதேசம்' நடைமுறைக்கு வந்திருக்கும்.

அந்தக் கதம்பப் பிரதேசத்திலே தமிழினத்தார் மீது தங்கள் பெரும்பான்மை பலம் காரணமாக ஆந்திர இனத்தார் ஆதிக்கம் செலுத்தியிருப்பர்.

ஆங்கில மொழியின் ஆதிக்கம் ஆங்கிலேயரின் ஆட்சி காலத்திலிருந்தது போலவே நீடித்திருக்கும்.

நான் ஒருவன் காங்கிரசிலிருந்து வெளியேறியதால் இத்தனை கேடுகளிலிருந்தும் தமிழினமும் தமிழ்நாடும் தமிழ் மொழியும் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. ஆம்; அடக்க உணர்ச்சியையும் துறந்துதான் இந்த உண்மைகளைக் கூறுகிறேன். ஆனால், ஆணவத்தோடு கூறவில்லை. சுதந்திரப் போரிலே நானும் பங்கு கொண்டேன் என்றாலும், நான் பங்கு கொள்ளத் தவறியிருந்தாலும் நாடு சுதந்திரம் பெற்றிருக்கும். ஆனால் நான் தமிழரசுக் கழகத்தைத் தொடங்கவில்லையானால், அந்தக் கழகத்தைக் கலைக்க மறுத்து காங்கிரசிலிருந்து வெளியேறியில்லையானால், குமரிக் கோயிலைத் தெற்கெல்லையாகவும், குமரன் மலையை வடக்கெல்லையாகவும், சென்னையம்பதியைத் தலைநகராகவும் கொண்டுள்ள — இன்று நாம் காணுகின்ற 'புதிய தமிழகம்' அமைந்திருக்காது. இதனை, ஆயிரம் கோயில்களுக்குச் சென்று சத்தியம் செய்து சொல்லவும் நான் தயங்கமாட்டேன். என்போன்ற எளியவர்களின் சரித்திரச் சிறப்பு மிக்க சாதனைகளை எல்லாம் இருட்டடிப்புச் செய்கின்ற ஆதிக்கக் கூட்டங்களும், பிறருடைய சாதனைகளைத் தங்களுடையதாகத் திரித்துக் கூறும் சரித்திரப் புரட்டர்களும் இருப்பதால்தான் என்னுடைய — எனது தமிழரசுக் கழகத்தினுடைய சாதனைகளை இவ்வளவு உறுதியோடு நானே எடுத்துச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

எனக்குத் திருமணமான பின்னர் நான் காங்கிரஸ் உறுப்பினராகப் பதிவு செய்து கொண்ட ஒவ்வொரு ஆண்டிலும் என்னுடைய மனைவி திருமதி. இராசேசுவரியும் காங்கிரசில் சேருவது வழக்கம். ஆகவே, நான் காங்கிரசிலிருந்து விலகிய நாளிலே அவளும் என்னைப் பின்பற்றி விலகினாள். ஆம்; நாங்கள் தம்பதிகளாக காங்கிரசிலிருந்து வெளியேறினோம்.

என்னைப் பின்பற்றி கழகத் தோழர்களில் பல்லாயிரக்கணக்கானவர்கள் காங்கிரசிலிருந்து வெளியேறினர். சட்டமன்றம், நகரமன்றம், சென்னை மாநகராட்சி போன்றவற்றில் பதவிகள்

வகித்த காங்கிரஸ்காரர்களிலே பலரோ, சிலரோ கழகத்திலும் இருந்தனர். அவர்களில் திருவள்ளூர் நகரமன்றத் துணைத் தலைவராக இருந்த திரு. பக்கிரிசங்கர் மட்டும் தமது பதவியைத் துறந்து காங்கிரசிலிருந்து வெளியேறினார். மற்றவர்களெல்லாம் தங்கள் பதவிகளைக் காத்துக் கொள்வதற்காக காங்கிரசில் இருந்து வெளியேறத் தவறிவிட்டனர். நானோ, தமிழரசுக் கழகமோ அவர்களை எலாம் காங்கிரசிலிருந்து வெளியேற வேண்டுமென்று கட்டாயப்படுத்தவில்லை. மாவட்டந்தோறும் ஏஜெண்டுகளை அனுப்பி காங்கிரசிலிருந்து வெளியேறுவோர் எண்ணிக்கையைப் பெருக்கிக் காட்ட நான் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. காங்கிரசைப் பலவீனப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணம் எனக்கோ, என்னுடைய கழகத் தோழர் களுக்கோ இருக்கவில்லை. நான் காங்கிரசிலிருந்து வெளியே றிய பின்னரும், கழகத்தை ஆட்சியைக் கைப்பற்ற விரும்பும் அரசியல் கட்சியாக அல்லாமல், கலாச்சாரத் தொடர்புடைய அரசியல் பிரச்சார இயக்கமாகவே நடத்துவதென்ற முடிவுடன் இருந்தோம். அதனால், காங்கிரசிலும் கழகத்திலும் அங்கம் வகித்தவர்களில் இந்த இரண்டில் எதிலிருந்து விலகுவதென்ப தனை அவரவர்கள் விருப்பத்துக்கே விட்டுவிட்டேன்.

கழகச் செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத்திலே கூடக் காங்கிரசிலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கும் வாசகமில்லை. வெளியேற அனுமதிதரும் வகையி லேதான் தீர்மானத்தின் வாசகம் அமைக்கப்பட்டது என்பதனை இங்கு நினைப்பூட்ட விரும்புகிறேன். காங்கிரசிலிருந்த தமிழர சுக் கழகத்தினரில் பெரும்பாலோர் அதிலிருந்து வெளியேறிவிட் டார்கள் என்றாலும், காங்கிரஸ் பிளவுபட்டு விட்டது என்ற நிலை ஏற்படவில்லை. ஆயினும், கழகத்தார் காங்கிரசிலிருந்து வெளியேறியதால் வலிமைமிக்க ஒரு பிரச்சார யந்திரத்தை தமிழ்நாடு காங்கிரஸ் இழந்துவிட்டது என்பதை மட்டும் இங்கு அழுத்தந் திருத்தமாகச் சொல்ல விரும்புகின்றேன்.

திறமைமிக்க பேச்சாளர்களாகவும், ஆற்றல் மிக்க எழுத்தா ளர்களாகவும், கதாசிரியர்களாகவும், நாடகாசிரியர்களாகவும், கவிஞர்களாகவும், திரைப்படத் தயாரிப்பாளர்களாகவும், புகழ் மிக்க நடிகர்களாகவும் இருந்த பலருடைய சேவையைத் தமிழ்

நாடு காங்கிரஸ் இழந்துவிட்டது. இதனால், தமிழ்நாட்டிலே காங்கிரஸ் கட்சி திராவிட முன்னேற்றக் கழக பிரச்சார யந்திரத்தின் தாக்குதலைச் சமாளிக்கும் திறனை இழந்துவிட்டது.

மிராசுதார்கள், தொழிலதிபர்கள், பாங்கர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பாலேயே காங்கிரஸ் ஆட்சி காருள்ளளவும் கடல் நீருள்ளளவும் நீடிக்க முடியுமென்று திரு.கு. காமராசர் நம்பினார். ஆனால், அவர் நம்பியது நடக்கவில்லை. சக்திமிக்க பிரச்சார யந்திரமான தமிழரசுக் கழகத்தை இழந்த பின்னர் காங்கிரஸ் பலவீனப்பட்டு விட்டது. கழகத்தார் வெளியேறியதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வதற்காக, திராவிடர் கழகத்தைத் தனது பிரச்சார யந்திரமாகப் பயன்படுத்தியது தமிழ்நாடு காங்கிரஸ். தி.மு.க.விலிருந்து பிரிந்த சில எழுத்தாளர்களையும் பேச்சாளர்களையும் காங்கிரசில் சேர்த்துக் கொண்டது. ஆம்; சொந்தப் பிள்ளைகளை வெளியேற்றிவிட்டு சுவீகாரப் பிள்ளைகளை நம்பி வாழும் தாயின் நிலைக்குத் தமிழ்நாடு காங்கிரஸ் வந்துவிட்டது.

என்னைப் பின்பற்றி திருவாளர்கள் வேலூர் வி.கே. குப்புசாமி, பேராசிரியர் ந.சஞ்சீவி, கவிஞர். கு.சா. கிருஷ்ணமூர்த்தி, கவிஞர் கு.மா.பாலசுப்பிரமணியம், கவிஞர் வானம்பாடி, கவிஞர் கா.மு.ஷெரீப், கோவை பி.எஸ். ரசிதாசலம், பி.ஏ., குடந்தை எஸ்.டி. பாலு, ஔவை தி.க. சண்முகம், திருப்பத்தூர் கா.அ.ச. ரகுநாயகம் எம்.ஏ., சின்ன அண்ணாமலை, ஜி.உமாபதி, சீர்காழி ஜி.சுவாமிநாதன், வழக்கறிஞர் எஸ்.கே. பாலசுப்பிரமணியம், வவ்வாலடி சம்சுதீன் ஆகியோர் காங்கிரசிலிருந்து வெளியேறினர்.

திரைப்படத் தயாரிப்பாளரான கலைக்காவலர் எம்.ஏ. வேணு, அருட்செல்வர் ஏ.பி.நாகராசன் ஆகியோர்களின் ஆற்றல்மிக்க பணியைக் காங்கிரஸ் இழந்தது.

இன்னும் எத்தனையோ தோழர்களுடைய பெயர்களை இங்கு நான் குறிப்பிட வேண்டும். அந்நாளில் அவர்களெல்லாம் இங்குக் குறிப்பிடக்கூடிய வகையில் விளம்பரம் பெற்றிருக்கவில்லை என்றாலும், ஈடு இணையற்ற செயல்வீரர்களாக

விளங்கினர் என்பதில் ஐயமில்லை. தமிழரசுக் கழகத்தின் வரலாறு தனியாக எழுதப்படும்போது அவர்களுடைய பெயர்களும் அதிலே இடம் பெறுவது உறுதி.

பத்திரிகைகளின் பரிவு!

நானும் என்னைப் பின்பற்றித் தமிழரசுக் கழகத்தாரும் காங்கிரசிலிருந்து வெளியேறியதைப்பற்றி 'விடுதலை', 'சுதேசமித்திரன்', 'பாரததேவி', மதுரை 'தமிழ்நாடு', திருவனந்தபுரம் 'தினமலர்' ஆகிய தமிழ் நாளேடுகளிலும் தலையங்கங்கள் எழுதப்பட்டன. சிலவற்றில் 'கார்ட்டூன்'களும் வெளியாயின.

'தினமணி கதிர்', 'சுதேசமித்திரன்' வார இதழ், 'அமுதசுரபி', 'சிவாஜி', 'கோவைக் குரல்', 'பிரசண்ட விகடன்' ஆகிய வார ஏடுகளிலேயும் தலையங்கங்கள் எழுதப்பட்டன.

கழக — காங்கிரஸ் தகராறு எழுந்த நாளிலிருந்து அவசிய மேற்பட்ட போதெல்லாம் என்னை ஆதரித்து எழுதி வந்த 'கல்கி' பத்திரிகை மட்டும் நான் காங்கிரசிலிருந்து வெளியேறிய போது மவுனம் சாதித்தது. ராஜாஜி முதலமைச்சர் பதவியைத் துறந்ததோடு, காங்கிரசையும் துறந்துவிடக் கூடிய மனோ நிலையில் இருந்தாராதலால், நான் காங்கிரசிலிருந்து வெளியேறியதைப் பற்றி என் அரிய நண்பர் 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி மௌனம் சாதித்தார் போலும்! நான் காங்கிரசில் நீடிப்பது ராஜாஜிக்கும் 'கல்கி'க்கும் மகிழ்ச்சி தருவதாக இருக்கவில்லை. ஆனால், நான் வெளியேறியதைப் பாராட்டி காங்கிரஸ் வட்டாரத்தின் பகையைத் தேடிக் கொள்ளவும் அவர்கள் விரும்பவில்லை.

என்பால் போலித்தனமாக அனுதாபம் காட்டி 'விடுதலை' 20.7.54 இதழிலே ஒரு தலையங்கம் எழுதப்பட்டது. அதிலே ''கழகத்தை கலைத்துவிட்டு ம.பொ.சி. காங்கிரசிலே தங்கிப் பதவிகள் பெறலாம்'' என்று மிகுந்த தயவோடு எனக்கு ஆலோசனை கூறப்பட்டிருந்தது. தமிழரசுக் கழகம் தோன்றிய நாள் தொட்டே அதனை தனக்குப் போட்டியாக வந்துள்ள ஒரு அமைப்பு என்று பெரியாரின் திராவிடர் கழகம் கருதி, அந்தக் கழகத்தின் அழிவை விரும்பி வந்தது. அதனால் கழகத்தைக்

கலைத்துவிட வேண்டுமென்று தி.க.வின் ஏடான 'விடுதலை' ஆலோசனை கூறியது பற்றி நான் வியப்போ, வேதனையோ அடையவில்லை.

'தினமணி'யில் 'வருந்தத்தக்க முடிவு' என்ற தலைப்பிட்டு எழுதப்பட்ட துணைத் தலையங்கத்திலே, என்னுடைய நாட்டுப் பற்றும் காங்கிரஸ் பக்தியும் வகுப்புவாத எதிர்ப்புணர்ச்சியும் பெரிதும் பாராட்டப்பட்டிருந்தன.

கழகத்தார் காங்கிரசிலிருந்து வெளியேறியாக வேண்டிய கட்டாயச் சூழ்நிலையை உருவாக்கிய த.நா.கா. தலைமையைத் 'தினமணி' குறை கூறியதோடு, இதனால், தமிழ்நாட்டில் காங்கிர சின் பலம் குறையக் கூடுமென்றும் எச்சரித்திருந்தது.

'தினமணி'யிலே கார்ட்டூன் ஒன்றும் வெளியிடப்பட்டிருந் தது. ஒரு மாளிகையிலே திரு.கு. காமராசர் நாற்காலி ஒன்றில் கம்பீரமாக அமர்ந்திருப்பது போலவும், அவரைப் பார்த்து மிகுந்த கோபத்தோடு மீசையை முறுக்கிக் காட்டி, ''வெளியே போகிறேன்'' என்று நான் கூறுவது போலவும் கார்ட்டூன் வரையப்பட்டிருந்தது.

'சுதேசமித்திரன்' காங்கிரசிலிருந்து வெளியேறும்படி என்னை நிர்ப்பந்தித்ததற்காக தமிழ்நாடு காங்கிரசைக் குறை கூறியிருந்தது.

மதுரை 'தமிழ்நாடு' காங்கிரசிலிருந்து நான் வெளியேறி யதனைத் தமிழ் இனத்தின் நலத்துக்காக நான் செய்த தியாகம் என்று கூறி என்னைப் பாராட்டியிருந்தது.

திரு. காமராசர் கோஷ்டியைச் சார்ந்த நாளிதழான 'பாரத தேவி', காங்கிரசிலிருந்து கழகத்தாரை வெளியேற்றியதானது தவிர்க்க முடியாத நிகழ்ச்சி என்று கூறியதென்றாலும், காங்கிர சுக்கு நான் ஆற்றிய அரும்பணிகளை நல்லெண்ணத்துடன் பாராட்டியிருந்தது.

''தினமலர்'' பாராட்டியது

அப்போது திருவனந்தபுரத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ''தினமலர்'' பத்திரிகையிலே எழுதப்பட்ட தலையங்கமானது மிகச் சிறந்த விமர்சனமாக அமைந்திருந்தது. அதனை இங்கு அப்படியே தருகிறேன்:

''தமிழரசுக் கழகத்தார் காங்கிரசிலிருந்து பிரிந்து தனி வழி வகுத்துச் செயல் புரியத் தீர்மானித்துவிட்டனர்.

''சுதந்திரப் போரில் எந்தவித வேறுபாடும் கருதாமல், ரத்தத்தை ஆறாகச் சிந்தித் தியாகம் செய்தவர்கள் தமிழரசுக் கழகத்தில் இருக்கிறார்கள்.

''பிற கட்சியினர் காங்கிரஸ் மீது கூறிய வசவுகளையெல்லாம் தமிழரசுக் கழகக்காரர்கள் வாங்கிச் சுமந்து வந்தார்கள்.

''தமிழரசுக் கழகம் பிரிவதால் காங்கிரஸ் பலவீனம் அடையும். தமிழரசுக் கழகம் அவ்வளவு தூரத்திற்குப் பெரியதொன்றுமில்லை என்று கூறினாலும், தமிழரசுக் கழகம் இல்லாமலிருப்பதன் அருமையை இனிதான் உணர முடியும்.

''பிற்போக்கு ராஜீயக் கட்சிகளுக்கு இதுவரையிலும் தமிழரசுக் கழகம் எதிர்வாதம் செய்து வந்திருக்கிறது. அதுமட்டிற்குக் காங்கிரஸ் கவலைப்படாமலிருந்து வந்தது. இனி காங்கிரசுக்கு அந்த ஒரு வேலையும் புதிதாக வந்திருக்கிறது.

''தமிழரசுக் கழகம் இல்லாமலிருந்திருக்குமானால், சித்தூர் பிரதேசத்தைத் தமிழர்கள் கனவுகூடக் கண்டிருக்க முடியாது. இப்பொழுது அந்தப் பிரதேசம் மீது எல்லைக் கமிஷன் ஸ்தாபிக்கும் அளவு நேருஜியின் கவனத்தைக் கவர்ந்தவர்களும் கழகத்தார்தான்.

''தமிழகத்தின் விலாசம் நிரந்தரமாக இருக்க வேண்டுமானால், தமிழரசுக் கழகம் இருந்தாக வேண்டும்.

தமிழரசுக் கழகத்தார் தங்கள் ஸ்தாபனத்தைக் கலைக்காமல், காங்கிரசை விட்டுப் பிரிந்தது பாராட்டுக்குரியது.''

('தினமலர்', 8.8.54)

வட இந்திய ஏடுகளான 'டைம்ஸ் ஆப் இந்தியா' 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஆகிய ஆங்கில நாளேடுகளிலும், ''இல்லஸ்ட்ரேடட் வீக்லி' என்ற ஆங்கில வார ஏட்டிலும் கழகத்தார் காங்கிரசிலிருந்து வெளியேறும்படி செய்ததற்காக த.நா.கா. கண்டிக்கப்பட்டிருந்தது.

நான் காங்கிரசிலிருந்து விலகிய நாளிலே நாஞ்சில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் மரணப் படுக்கையிலிருந்தார். நான் விலகியதைச் செய்தி நிருபர் வாயிலாக அவர் அறிந்தபோது ''ரொம்ப நல்ல காரியம். கிராமணியார் விடுதலை பெற்றுவிட்டார்'' என்று உணர்ச்சிப் பெருக்கோடு கூறினார்.

தமிழரசுக் கழகத்தாரில் கலையார்வம் உடைய தோழர்கள் ஐந்தாறு நாடகக் குழுக்களை அப்போது நடத்தி வந்தனர். அவர்களுடைய பிரச்சார நாடகங்கள் காங்கிரஸ் கட்சிக்கும் பலனளித்து வந்தது. அந்தப் பலனையும் இழந்துவிட்டது தமிழ்நாடு காங்கிரஸ். காங்கிரசிலிருந்து வெளியேறியதால் திரு.கு. காமராசர் என்னிடம் கூறியது போன்று நான் 'கருவாடு' ஆகிவிடவில்லை என்பதைக் காலம் காட்டிவிட்டது. உண்மையில் காங்கிரசிலிருந்து வெளியேறிய பின்னர்தான் செயற்கரிய செயல்கள் புரிந்து என் சுயசரிதையை எழுதும் தகுதியை நான் பெறுவதற்கு முடிந்திருக்கிறது. ஆயினும், என் தாய்க்கு அடுத்தபடியாக நான் கருதி வந்த தாய்ச் சபையை விட்டு வெளியேறியதை இன்று நினைத்தாலும் என் மனம் வருந்தத் தான் செய்கிறது.

1952 நவம்பரில் ஐதராபாத் காங்கிரஸ் பிரதிநிதித் தேர்தலில் எனது நியமனப் பத்திரத்தை ரத்து செய்ததில் துவங்கிய காங்கிரஸ் — கழகத் தகராறு, 1954 ஆகஸ்டு 8-இல் நான் காங்கிரசிலிருந்து வெளியேறியதோடு முடிவு பெற்றது. ஆம்; காங்கிரசிலிருந்து வெளியேற மறுத்து இரண்டாண்டுக் காலம் காமராசருடன் போராடினேன். எனக்கு முன்னும் பின்னும் காங்கிரசிலிருந்து வெளியேறியவர்களில் வேறு யாரும்

என்னைப்போல் இவ்வளவு நீண்டகாலம் போராட்டம் நடத்திய தாக எனக்கு நினைவில்லை. நான் மிகவும் சாதாரணமானவன் தான் என்றாலும், என் சம்பந்தமான தகராறிலே — நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க — பிரதமர் நேரு உள்ளிட்ட காங்கிரஸ் மேலிடத்தார் தொடர்ந்து இரண்டாண்டுக் காலம் கருத்து செலுத்தி வந்தனர். காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடுகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எனது பிரச்சினை ஆராயப்பட்டு வந்தது. இதனை எனக்குக் கிடைத்த ஒரு பெருமையாகவே நான் கருதுகிறேன்.

நானும் தமிழரசுக் கழகத் தோழர்களும் காங்கிரசிலிருந்து விலகிய பின்னர் காங்கிரஸ் மேலிடத்தார் தமிழ்நாடு காங்கிர சுக்கு ஒரு கட்டளை அனுப்பியதாக அறிந்தேன். அதில்,

> *''தமிழரசுக் கழகத்தாரின் விலகல் கடிதங்களை அதி காரபூர்வமாக அங்கீகரித்துப் பதில் எழுத வேண்டாம். மேற்கொண்டு அவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதனைக் கண்காணித்து, ஆவடி காங்கிரசின்போது அவர்களைப் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கவும்''*

என்று குறிப்பிட்டு இருந்ததாக அறிந்தேன். அதன்படி எங்கள் ராஜினாமாக்கள் ஏற்கப்பட்டதாக த.நா.கா. எங்களில் எவருக் கும் பதிலளிக்கவில்லை. மேலிடத்தார் நிலை எதுவாயினும் சரி; மீண்டும் காங்கிரசில் சேருவதில்லை என்ற முடிவோடுதான் அந்தக் கட்சியிலிருந்து நான் வெளியேறினேன்.

கழகம் சோஷலிசத்தைத் தன் கொள்கையாகக் கொண்டிருந் ததும் அதனைத் தனி அரசியல் கட்சியாக காங்கிரஸ் மேலிடம் கருதியதற்கான காரணங்களில் ஒன்றாகும். ஆனால், நான் வெளியேறிய 5 மாதங்களுக்குப் பின்னர் ஆவடியில் கூடிய காங்கிரஸ் மகாசபை ''சோஷலிச பாணி''யைத் தன் கொள்கை யாக ஏற்றுக் கொண்டது. ஆம்; தத்துவிகளை வெளியேற்றி விட்டு தத்துவத்தைத் தனதாக்கிக் கொண்டது காங்கிரஸ் மகாசபை.

தெற்கெல்லைப் போராட்டம்

1953, 54-ஆம் ஆண்டுகளில் நான் பட்டபாடு ''பஞ்சு தான் படுமோ, சொல்லத்தான் படுமோ?'' என்று வருணிக்கத் தக்கதாகும். இந்த இரு ஆண்டுகளிலே சென்னை நகரை ஆந்திரர் ஆக்கிரமிப்பினின்று காக்கவும், வடக்கெல்லைத் தமிழ்ப் பகுதிகளை ஆந்திரர் ஆதிக்கத்திலிருந்து மீட்கவும் போராடியதோடு, தெற்கெல்லைப் பகுதிகளைக் கேரள (திருவி தாங்கூர்) முடியாட்சியிலிருந்து மீட்கவும் போராடினேன். ஏக காலத்தில் இந்த மும்முனைப் போரில் நான் ஈடுபட்டிருந்தேன். 'மும்முனைப் போர்' என்பது, வெறுஞ் சொல் ஜாலமல்ல; உண்மையிலேயே மும் முனைப் போரில் ஈடுபட்டிருந்தேன்; இந்தப் போர்க்களம் குமரி முதல் வேங்கடம்வரை சுமார் 500 மைல் அளவில் விரிந்து கிடந்தது.

இதே நேரத்தில்தான் த.நா. காங்கிரஸ் என்னைத் தன்னி லிருந்து விரட்ட என் மீது வலுவில் போர் தொடுத்தது. இது, நான்காவது முனைப் போர்!

நேசமணியின் போக்கு!

1953-இல் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் தென் பகுதித் தாலுக்காக்களிலே தமிழரசுக் கழகத்தின் கிளைகள் தோன்றி யிருந்தன. 1945-லேயே தோன்றி தெற்கெல்லைப் பகுதிகளை மீட்கப் பாடுபட்டு வந்த திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிர சோடு தமிழரசுக் கழகக் கிளைகள் முழு அளவில் ஒத்துழைத்து வந்தன.

உண்மையில் தெற்கெல்லைத் தமிழ்ப் பகுதிகளை மீட்ப திலே தி.த.நா. காங்கிரசுக்கும் தமிழரசுக் கழகத்திற்கும் கொள்கை ரீதியான ஒற்றுமை இருந்து வந்ததால், அவற்றி டையே ஆரம்ப காலத்தில் போட்டியோ, போராட்டமோ ஏற்பட

வில்லை. தி.த.நா. காங்கிரசின் வாழ்வு தெற்கெல்லைப் பகுதி களைத் தாய்த் தமிழகத்துடன் இணைப்பதோடு முடிந்துவிடக் கூடியதாகும். தமிழரசுக் கழகத்தின் நிலை அதுவல்ல.

தமிழகத்தின் தலைநகரைக் காத்து, வடக்கு — கிழக்கு எல்லைப் பகுதிகளை மீட்டு மொழிவழித் தமிழ் மாநிலம் அமைத்த பின்னும், தமிழகத்திற்கு சுயாட்சி தேடவும், தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழே இடம் பெறச் செய்யவும், தமிழ் பேசும் மக்களிடையே 'தமிழர்' என்னும் இன உணர்ச் சியை வளர்க்கவும் தமிழரசுக் கழகம் தென் திருவிதாங்கூர் உள்படத் தமிழகம் முழுவதிலும் நீடித்து நிலைபெற வேண்டி இருந்தது. அதனாற்றான், தி.த.நா. காங்கிரசோடு தமிழரசுக் கழகமும் தென் திருவிதாங்கூரில் இயங்க வேண்டியிருந்தது. ஆனால், இந்த உண்மை தி.த.நா.கா. தலைவர்களில் சிலரால் உணரப்படவில்லை. தாய்த் தமிழகத்தில் காமராசர் தலைமை யில் இயங்கி வந்த த.நா. காங்கிரஸ் தமிழரசுக் கழகத்தைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்து, கழகத்தாரைக் காங்கிரசிலி ருந்து வெளியேற்ற முயன்றதுபோல, திரு. நேசமணியின் செல் வாக்கில் வளர்ந்து வந்த தி.த.நா. காங்கிரசும் தமிழரசுக் கழகத்தைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்து, அதன் வளர்ச்சி யைத் தடுக்க முயன்றது.

ஒரு நேரத்தில், இன்று கன்னியாகுமரி மாவட்டமாக விளங் கும் பகுதி முழுவதிலும் தமிழரசுக் கழகம் வளர்ந்து வலுப் பெற்று விளங்கியது. பொதுவாக, படித்த இளைஞர்கள் தி.த. நா.கா.வை விடவும் த.அ.க.விடத்து அதிகப் பற்றுடையவர்க ளாக இருந்தனர். தி.த.நா.கா., எல்லைக் கிளர்ச்சிக்கு மட்டும் தேவைப்படும் ஒரு இடைக்கால அமைப்பாக இருந்ததால் இளைஞர்களானோர் அதனிடம் அதிக அளவில் கவர்ச்சியடை யவில்லை. தமிழரசுக் கழகமானது அரசியல், பொருளாதாரம், மொழி, சமூகம் ஆகிய எல்லாத் துறைகளிலும் திட்டவட்டமான கொள்கைகளுடன் செயல்பட்டு வந்ததால், அதனிடம் தென் கோடித் தமிழக இளைஞர்கள் ஆழ்ந்த பற்று கொண்டனர். அது காரணமாக, எனது தலைமையிலும் நம்பிக்கை வைத்து, என் னைப் பின்பற்றலாயினர்.

அந்த இளைஞர்களில், திருவாளர்கள் பி.எஸ்.மணி, ம.சங்கரலிங்கம், நாஞ்சில் மணிவர்மன், ஏ.நாகலிங்கம், பி.ஜே. பொன்னையா ஆகியோர் முக்கியமானவர்களாவர். முதியவர்களான நதானியல், தாணுலிங்க நாடார், குஞ்சன் நாடார், காந்திராமன் போன்றவர்களும் தமிழரசுக் கழகத்திடம் முழு அளவில் நம்பிக்கை வைத்து, அது தென் திருவிதாங்கூரில் வளர்ச்சி பெறுவதற்கு உதவி புரிந்தனர். நாஞ்சில் தந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, என்னைப் பெரிதும் நேசித்ததோடு, எனது தலைமையிலுள்ள தமிழரசுக் கழகத்தின் மீதும் அதிக நம்பிக்கை வைத்திருந்தார்.

தென் திருவிதாங்கூரில் பிறந்து தமிழ்நாட்டிற்கு சுவீகாரமாகி விட்ட டி.கே.எஸ். சகோதரர்கள், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் ஆகிய கலைஞர்களும் தென் கோடித் தமிழகத்தில் தமிழரசுக் கழகம் வளர்வதற்கு உதவி புரிந்தனர்.

திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தோன்றிய காலத்திலிருந்தே அதனோடு எனக்கு நெருங்கிய — ஏன், ஆத்மார்த்தமான தொடர்பு ஏற்பட்டு, அது வளர்பிறை போல வளர்ந்து வந்தது. திரு. நேசமணி, தி.த.நா.கா.வுக்கு இடையில் வந்தவர்தான். ஆயினும், தென் திருவிதாங்கூரிலுள்ள நாடார் சாதியினரிடையே — அவர்களிலும், கிறித்துவ நாடார்களிடையே திரு. நேசமணிக்கு சாதி மத ரீதியில் நல்ல செல்வாக்கு இருந்தது — குறிப்பாக, கல்குளம், விளவங்கோடு ஆகிய இரு தாலுக்காக்களிலே வாழும் மக்களுக்கு நேசமணிதான் ''ராசா''வாக விளங்கினார். அவருக்கு அடுத்தபடிதான் திருவிதாங்கூர் ராசா!

'ஜீவா'வின் எச்சரிக்கை!

இவர், சர்.சி.பி. இராமசாமி ஐயர் திருவிதாங்கூர் திவானாக இருந்த வரையில் அரசாங்க ஆதரவாளராக இருந்து வந்தார். அந்தக் காலத்தில் தெற்கெல்லைக் கிளர்ச்சியை விரும்பாதவராகவும் இருந்தார். சர்.சி.பி. பதவி துறந்த பின்னர், கொழு கொம்பற்ற கொடி போலானார். அதன் தீய விளைவுகளிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள தி.த.நா.கா.வில் சேர முன்வந்தார்.

திரு. நேசமணி திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசில் சேர முன் வந்தபோது, அவர் மிகுந்த சந்தேகத்துடன் தான் வரவேற்கப்பட்டார். நேசமணியைச் சந்தேகித்தவர்கள் தனிக் கூட்டம் நடத்தி, அவரைச் சேர்த்துக் கொள்ளலாமா, வேண்டாமா? என்பது பற்றி ஆலோசித்தபோது, அந்தக் கூட்டத்தில் பேசிய தோழர் ப.ஜீவானந்தம் கீழ்வருமாறு கூறினார்:

''தனி நபர்கள் சிலர், சாதியினால், மதத்தினால் செல்வாக்கு பெற்று, அவற்றின் பெயரால் அரசியலில் பிரபலஸ்தர்களாக விளங்கிய அவர்கள் தங்களுடைய ஆதாரம் சர்.சி.பி. சென்று விட்ட பிறகு தங்களுடைய நிலையை முன்போல் வைத்துக் கொள்ள முயல்வர்; முயன்று வருகின்றனர். இனி, ஜனநாயக காலமானதால் அவர்கள் அரசியல் ஸ்தாபனங்களை ஆரம்பிப்பார்கள். அவ்வாறு இங்கு நடைபெறுவது திருவிதாங்கூர் தமிழர்களுக்குத் துர்ப்பாக்கியமாகும். அதனால் அப்பேர்ப்பட்ட புள்ளிகளை தி.த.நா.கா. தன்னிடத்தே இழுத்துக் கொள்ள வேண்டும்.

''ஒன்று ஞாபகம் இருக்கட்டும்; அவர்கள் கருங்கற்கள். நீங்கள் அவற்றை விழுங்கி சீரணித்துவிட வேண்டும். அவ்வளவுக்கு உங்கள் குடலை (ஸ்தாபனத்தை) பலப்படுத்த வேண்டும். இல்லையெனில், உங்கள் குடலை கற்கள் ஓட்டையிட்டு, உங்களை (தி.த.நா.கா.வை) அழித்து விடும்.''

(திரு.பி.எஸ்.மணி அவர்களால் எழுதப்பட்ட ''திரு — தமிழரியக்கம்'', பக்.81-82).

திரு. ஜீவானந்தம் எச்சரித்தது போன்று திரு. நேசமணியை தி.த.நா.கா. ஜீரணிக்கவில்லை; தி.த.நா.கா.வை திரு. நேசமணி ஜீரணித்துவிட்டார்! ஆம்; அந்த அமைப்பில் புகுந்த சில மாதங்களுக்குள்ளேயே அவர் அதன் தலைவராகி விட்டார்! அந்த நாள் தொடங்கி, எல்லைக் கிளர்ச்சி வெற்றிகரமாக முடிந்து, தி.த.நா.கா. கலைக்கப்படுகிறவரை அந்த அமைப்பு அவரது செல்வாக்கிலேயே சிக்கியிருந்தது. அவரிடமிருந்து

தி.த.நா. காங்கிரசை மீட்க முயன்றவர்கள் வெற்றி பெறவில்லை.

திருவிதாங்கூர் தமிழரிடையே எனக்கு செல்வாக்கு வளர்வது கண்டு திரு. நேசமணி ஒரு சமயத்தில் மிகுந்த கவலைப்பட்டார். என்னை, ''திருவிதாங்கூர் தமிழர்களுக்கு அன்னியன்'' என்று கூட வருணிக்குமளவுக்கு அவர் சென்றார். ஆனால், தெற்கெல்லைக் கிளர்ச்சி முடிகிறவரை தி.த.நா.கா.வோடு எனக்கிருந்த உறவை முறிக்க அவரால் முடியவில்லை.

இரணியல் எதிர்ப்பு?

திரு. நேசமணியின் போக்கு காரணமாக, தெற்கெல்லைக் கிளர்ச்சி உச்ச கட்டத்திலிருந்த சமயங்களிலெல்லாம் தி.த.நா. கா.விலே பிளவு தோன்றி, அது, அழிந்து போய்விடக் கூடுமோ என்ற அபாயமும் ஏற்பட்டது. அப்போதெல்லாம் நான் தெற்கெல்லைக்கு அவசர அவசரமாக அழைக்கப்பட்டேன். அழைப்பினை ஏற்றுச் சென்று, பூசலிட்ட கோஷ்டிகளிடையே சமரசம் ஏற்படுத்தி, தி.த.நா.கா.வை அழிவிலிருந்து காத்தேன்.

ஒரு சமயத்தில் எனது செல்வாக்கையும் புறங்கண்டு தி.த.நா.கா.வில் பிளவு ஏற்பட்டு, அந்த அமைப்பைத் தோற்றுவித்தவர்களிலே பலர் அதிலிருந்து வெளியேறி, ''திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ்'' என்ற பெயராலேயே போட்டி அமைப்பை நிறுவினர். இந்தப் போட்டிக்குச் சாதி வண்ணமும் ஏற்பட்டது. தவிர்க்க முடியாத வகையில் போட்டி அமைப்பு கண்டவர்களின் உண்மை உணர்ச்சியாலும், உழைப்புத் திறனாலும் கவரப்பட்டு, நான் அந்த அமைப்புக்கே ஆதரவளித்தேன். அந்த அமைப்பின் பெயரால் தென் திருவிதாங்கூர் தமிழ் தாலுக்காக்களில் சுற்றுலா செய்தேன். தோவாளை, அகத்தீசுவரம் தாலுக்காக்களில் திரு. தாணுலிங்கம் தலைமையில் தோன்றிய போட்டி காங்கிரசுக்கு நல்ல ஆதரவு இருந்தது. அதுபோல, திரு. நேசமணியின் செல்வாக்கிலிருந்த காங்கிரசுக்கு கல்குளம், விளவங்கோடு தாலுக்காக்களில் நல்ல செல்வாக்கு இருந்தது.

நான் கல்குளம் தாலுக்காவைச் சார்ந்த இரணியல் என்னும் ஊரில் பேசச் சென்றபோது, திரு. நேசமணி அவர்களின் கோஷ்டியார், என்னைப் பேச விடாமல் கூச்சலிட்டுத் தடுத்தனர். ஆனால், அவர்கள் என்னை மரியாதைக் குறைவாக நடத்தவில்லை. பிளவுபட்டுள்ள இரு கோஷ்டியாரிலே ஒரு கோஷ்டியாரை மட்டும் நான் ஆதரிப்பதிலுள்ள 'தவறை' எடுத்துக் காட்டும் வகையில் மரியாதை தோய்ந்த குரலில் கோஷங்கள் எழுப்பினர்.

கோஷங்களைப் புறக்கணித்து உரத்த குரலில் நான் பிடிவாதமாகப் பேசிக் கொண்டிருந்த நேரத்தில், போலீஸ் படை வந்து சேர்ந்தது. அந்தப் படையினரில் அவ்வளவு பேரும் மலையாளிகள். போலீஸ் வான்களிலிருந்து ஆயுதபாணிகளாக 'திமு திமு' வென இறங்கிய மலையாளப் போலீசார், எனக்கு எதிராகக் கோஷமிட்டவர்களைத் தடிகளால் அடித்துக் கலைக்க முற்பட்டனர். அது எனக்குப் பிடிக்கவில்லை. கேரளர் (மலையாளிகள்) ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடும், தமிழர் இயக்கத்தின் சார்பில் பேசப்போன நான், மலையாள போலீசாரால் தமிழர்கள் தாக்கப்படுவதை எப்படி அனுமதிக்க முடியும்?

போலீஸ் அதிகாரியை அழைத்து, ''உங்கள் தயவால் கூட்டத்தை நடத்த நான் விரும்பவில்லை. கூட்டத்தைக் கலைத்துவிட்டு, நான் போகிறேன். நீங்களும் போகலாம்'' என்றேன். அதுவரை எனக்கு எதிராக ஆவேசத்துடன் கோஷமிட்டுக் கொண்டிருந்த இளைஞர்கள், என்னைப் புரிந்து கொண்டு, மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

தெற்கெல்லைக் கிளர்ச்சியின் ஒரு கட்டத்திலே திரு. நேசமணி அவர்கள், அந்த இயக்கத்திற்கே முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, திருவிதாங்கூர் ஆட்சியோடு உடன்படிக்கை செய்து கொண்டார். அதன் பெயர் 'பாளையங்கோட்டை உடன்படிக்கை' ஆகும். ஆம்; பாளையங்கோட்டை பிரயாணிகள் பங்களாவில் தி.த.நா. காங்கிரஸ் சார்பில் திரு. நேசமணி அவர்களும், திருவிதாங்கூர் ஆட்சியின் சார்பில் முதலமைச்சர் நாராயணப் பிள்ளையும் அந்த உடன்படிக்கையைச் செய்து

கொண்டனர். இவர்களிடையே மத்தியஸ்தராக இருந்து, தெற்கெல்லை மீட்சிக் கிளர்ச்சியை ஆணி வேரோடு அழித்துவிட உதவி புரிந்தார், அப்போது சென்னை மாநில அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலனார்.

''தென் திருவிதாங்கூர் தமிழத் தாலுக்காக்கள் (அகத்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு) நான்கும் திருவிதாங்கூர் மன்னர் ஆட்சியில் ஸ்தல சுயாட்சியுடைய தனி மாவட்டமாக அங்கீகரிக்கப்படும்'' என்பதுதான் பாளையங்கோட்டை உடன்படிக்கையின் முக்கிய அம்சமாகும். இது நடைமுறைக்கு வந்தபின் தென் திருவிதாங்கூர் தமிழ்ப் பகுதிகளைத் தமிழ்நாட்டோடு சேர்க்க வேண்டும் என்ற கிளர்ச்சியை அடியோடு கைவிட தி.த.நா. சார்பில் திரு. நேசமணி ஒப்புக் கொண்டிருந்தார். இந்த உடன்படிக்கையின் மூலமாக, தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டை ஆகிய தாலுக்காக்களை ஜில்லா போர்டு சுயாட்சிகூட இல்லாதவாறு கேரளத்திற்குத் தத்தம் செய்துவிடத் தாம் தயார் என்பதைத் திரு. நேசமணி சொல்லாமல் சொல்லிவிட்டார்.

நல்லவேளையாக, திரு.காந்திராமன், திரு. நதானியல், திரு.பி.எஸ். மணி உள்பட தி.த.நா. தோன்றக் காரணமாக இருந்தவர்கள், பாளையங்கோட்டை உடன்படிக்கையைக் கடுமையாக எதிர்த்தனர். தி.த.நா.கா. பிளவுபட்டு, போட்டி தி.த.நா.கா. ஏற்படுவதற்கு பாளையங்கோட்டை உடன்படிக்கைதான் காரணமாகும்.

இந்த உடன்படிக்கையைத் தாக்கி எனது 'தமிழ் முரசு' ஏட்டிலே தலையங்கம் எழுதினேன். இந்தத் தலையங்கம் பாளையங்கோட்டை உடன்படிக்கையை எதிர்த்தவர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்தது. பாளையங்கோட்டை உடன்படிக்கையை தி.த.நா.கா. ஒருமனதுடன் ஏற்றுக் கொள்ளத் தவறியதால், அதனைச் செயல்படுத்த திருவிதாங்கூர் அரசு மறுத்துவிட்டது.

நாளடைவில், இரு தி.த.நா. காங்கிரசும் செயலற்று விட்டன. இந்த நேரத்தில், திரு. நேசமணியின் தவறு காரணமாக

குற்றுயிராகக் கிடந்த தெற்கெல்லைக் கிளர்ச்சிக்குப் புத்துயிர ளிக்க எனது முழு கவனத்தையும் தென்கோடித் தமிழகத்தின் பக்கம் செலுத்தினேன்.

நாகர்கோயிலில் த.அ.க. மாநாடு

தமிழக வடக்கு — தெற்கு எல்லைக் கிளர்ச்சிகளைத் தமிழகம் தழுவிய முறையில் தொடங்கி வைத்தது தமிழரசுக் கழகம்தான் என்றாலும், அதனை நடத்துகின்ற பொறுப்பை எல்லைப் பிரதேச மக்களிடமே விட்டு வைத்திருந்தேன். வடக் கெல்லையிலே 'வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு' என்னும் பெயரால் ஒரு தனி அமைப்பு ஏற்படுத்தியிருந்தது போல, தெற்கெல்லையிலே ''திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசை'' எனது தமிழரசுக் கழகத்தினுடைய முழு அளவு ஒத்துழைப் போடு தெற்கெல்லைக் கிளர்ச்சியை நடத்த அனுமதித்திருந் தேன். அது முற்றிலும் சுதந்திரமான — தமிழரசுக் கழகத்திற்குக் கட்டுப்படாத — ஒரு அமைப்பாகவே இயங்கி வந்தது. எல்லைச் சிக்கல்கள் தீரும்வரை தெற்கெல்லைக் கிளர்ச்சியை தி.த.நா.கா. பொறுப்பிலேயே விட்டு வைக்கத்தான் நான் விரும் பினேன். பாளையங்கோட்டை உடன்படிக்கை மூலம் தெற்கெல் லைக் கிளர்ச்சியை ஒரு முடிவுக்குக் கொண்டுவர நேசமணி முனைந்து விட்டதானது எனக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தந்தது. ஆயினும் தி.த.நா.கா.விலிருந்த தீவிரவாதிகள் — தமிழரசுக் கழக ஆதரவாளர்கள் — பாளையங்கோட்டை உடன்படிக்கை நடைமுறைக்கு வராதபடி செய்துவிட்டனராதலால், தி.த.நா.கா. வுக்குத் திரும்பவும் புத்துயிர் தரவும், அதன் தலைமையிலேயே தெற்கெல்லைக் கிளர்ச்சி தொடர்ந்து நடைபெறவுமான முயற்சி களை மேற்கொண்டேன். அதற்கான சூழ்நிலையை உருவாக்க நாகர்கோயிலில் ''தென் திருவிதாங்கூர் தமிழரசுக் கழக முதலா வது மாநாடு'' என்ற பெயரில் ஒரு மாநாட்டை 1954 ஜூன் 3,4 தேதிகளில் நடத்தத் திட்டமிட்டேன். கடுமையான ஒரு சோதனைக்கு மத்தியில் இந்த மாநாடு நடைபெற வேண்டியிருந் ததால், இதனை வெற்றிகரமாக நடத்துவதற்காக எனது முழுக் கவனத்தையும் செலுத்தினேன்.

ஏற்கெனவே திரு. நேசமணி தெற்கெல்லைக் கிளர்ச்சியை ஒரு முடிவுக்குக் கொண்டுவரத் திட்டமிட்டிருந்ததால், நாகர்கோயிலில் தமிழரசுக் கழக மாநாடு நடப்பதை அவர் விரும்பவில்லை. அதில் கலந்து கொள்ளக் கூடாதென்று தமது செல்வாக்கில் இயங்கிய தி.த.நா. காங்கிரஸ்காரர்களுக்குச் சுற்றறிக்கை அனுப்பச் செய்தார். ஆனால், அவரது முயற்சி பலன் தரவில்லை. அன்றைய நிலையில் தமிழரசுக் கழகம் தி.த.நா. காங்கிரசை நன்கு ஊடுருவி இருந்ததால், அந்த அமைப்பின் முன்னணித் தலைவர்களிலே பலர் தமிழரசுக் கழக மாநாட்டை வெற்றிகரமாக நடத்தப் பொறுப்பேற்றனர். அவர்களில் திரு.பி.எஸ். மணி மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தார். ''தினமலர்'' ஆசிரியர் திரு.டி.வி. இராமசுப்பையர் மாநாட்டு அரங்கிலே பத்திரிகைக் கண்காட்சியைத் தொடங்கி வைத்துப் பேசினார். திருவிதாங்கூர் சட்டமன்ற உறுப்பினர்களான திரு. தாணுலிங்க நாடாரும், திரு. குஞ்சன் நாடாரும் மாநாட்டிலே பேசினர்.

தெற்கெல்லைக் கிளர்ச்சியில் கேரள ஆட்சி நடத்திய துப்பாக்கிச் சூடு காரணமாக உயிர் நீத்த தமிழரசுக் கழகத் தோழர்களான தேவசகாயம், செல்லையா ஆகிய இரு தியாகிகளின் பெயர்கள் மாநாட்டுப் பந்தலுக்குச் சூட்டப்பட்டன. இந்திய விடுதலைப் போரிலும், தெற்கெல்லைக் கிளர்ச்சியிலும் கலந்து ஈடு இணையற்ற தியாகங்கள் புரிந்த திரு. காந்திராமன் அவர்கள் தியாகி நீலகண்டன் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார்.

தற்போது மாஸ்கோ வானொலி நிலையத்தில் அதிகாரியாகவுள்ள திரு. சி.ஜி.எஸ். மணிவர்மன் அவர்கள், தமிழரசுக் கழகக் கொடியை ஏற்றி வைத்துப் பேசினார்.

திரு. காமராசரின் செல்வாக்கிலுள்ள தமிழ்நாடு காங்கிரசும் நாகர்கோயில் மாநாட்டில் காங்கிரஸ்காரர்கள் கலந்து கொள்ளக் கூடாது என்று அந்தரங்க சுற்றறிக்கை விடுத்தது. ஆம்; திரு. நேசமணியும், திரு. காமராசரும் என்னைப் பொறுத்த வரையில் ஒத்த கருத்துடையவர்களாக இருந்தனர்.

தெற்கெல்லைத் தமிழ்த் தாலுக்காக்கள் கேரளத்துக்கே சொந்தமாகி விடுவதைக் கூட சகித்துக் கொள்ள அவர்கள் தயாராக இருந்தனர். ஆனால், தமிழின மக்களிடையே எனது செல்வாக்கு வளர்வதை அனுமதிக்க அவர்கள் தயாராக இல்லை. இதுதான் நாகர்கோயில் த.அ.க. மாநாட்டுக்கெதிராக அவர்கள் நடவடிக்கை எடுக்கக் காரணமாகும்.

தடை தகர்ந்தது!

த.நா.கா.வின் சுற்றறிக்கையைப் புறக்கணித்து அப்போதைய சட்டப்பேரவை உறுப்பினரான நெல்லை திரு.ந.சோமயாசுலு உட்பட பிரபல காங்கிரஸ்காரர்கள் பலர் நாகர்கோயில் மாநாட்டில் கலந்து கொண்டு வீரமுழக்கம் செய்தனர். திரு. சோமயாசுலு நிகழ்த்திய சொற்பொழிவுகள் ஒரு பகுதியை இங்குத் தருகிறேன்.

> *''தமிழ்நாடு காங்கிரஸ் தமிழரசுக் கழகத்தாரை நடத்தும் விதம் நமக்கெல்லாம் தெரியும். இந்த நிலையில் 'காங்கிரஸ் எம்.எல்.ஏ.வான சோமயாசுலு தமிழரசுக் கழக மாநாட்டிலாவது, கலந்து கொள்வதாவது?' என்ற வினா எழும்பியது எனக்குத் தெரியும். கலாசாரப் பணிபுரியும் எவரும் — எந்தக் கட்சியைச் சேர்ந்தவராயினும் தமிழரசுக் கழக மேடைக்கு வந்தேயாக வேண்டும். அதனால்தான் நானும் வந்தேன்.*
>
> *''இந்தியாவில் மொழிவழி மாகாணம் அமைத்தேயாக வேண்டும். தமிழர் தனி இனம். தமிழகம் தமிழினத்தவரின் தாயகம். ஐக்கிய இந்தியாவில் தமிழகமும் ஒரு அங்கமாக இருக்க வேண்டும். சித்தூரில் நமது தலைவர் ம.பொ.சி. நடத்தியது போன்று, தெற்கெல்லையான திருவிதாங்கூரிலும் அவர் எல்லைப் போர் துவக்க நேரிடலாம். அப்படித் தொடங்கினால், அந்தப் போராட்டத்தை நானே முன்னின்று நடத்துவேன்.''*

(13.6.54 'செங்கோலி'ல் வெளியானபடி)

பழம்பெரும் காங்கிரஸ்காரரும், தலைசிறந்த தேசபக்தரு மான சோமயாசுலுவின் பேச்சு, த.நா. காங்கிரசாலும் திரு. காமராசராலும் என் மனத்தில் ஏற்படுத்தப்பட்ட புண் ணுக்கு மருந்தாக அமைந்தது.

பசும்பொன் தேவர் ஆதரவு

தேசபக்தர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர் களும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு பேசினார். அவர் நாகர்கோயில் மாநாடு முடிந்த நாளிலே வேறு ஏதோ அலுவல் காரணமாகக் குமரி முனைக்கு வந்திருந்தார். எனது அழைப் புக்கு இணங்கி த.அ.க. மாநாட்டில் கலந்து கொண்டு வழக்கம் போல சிம்ம கர்ஜனை செய்தார்.

> *''தமிழரசு காணவும், தமிழகத்தின் எல்லைகளை மீட் கவும், தமிழை அரசு மொழியாக்கவும் பாடுபடுவதற்காக சரியான நேரத்தில் த.அ.கழகம் முன் வந்திருக்கிறது. அதனாற்றான், என் மதிப்பிற்குரிய ம.பொ.சி. அவர்களின் அழைப்பை ஏற்று, இந்த மேடையில் நான் பேச முடிகிறது.''*

என்ற முன்னுரையுடன் தேவர் தமது சொற்பொழிவைத் தொடங் கினார். உண்மையில் எவருக்கும் தலைவணங்காத மாவீரரான தேவர் திடீரென நான் கொடுத்த அழைப்பை ஏற்று கழக மேடையில் நின்று சொற்பொழிவாற்றியது எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைத் தந்தது.

முதல்நாள் நடந்த இலக்கிய மாநாட்டிலே திரு.ந. சஞ்சீவி, எம்.ஏ. அவர்கள் தலைமைதாங்கி அரசியலையும் இலக்கியத் தையும் கலந்து தென் திருவிதாங்கூர் தமிழர்களுக்கு விருந்தளித் தார். அந்த நாளிலே சஞ்சீவி பேசுவதைத் தொலைவிலிருந்து கேட்டவர்கள் நான் பேசுவதாகவே கருதி வந்தனர். அந்த வகையில் என்னுடன் இரண்டறக் கலந்திருந்தார் நண்பர் சஞ்சீவி.

அரசியல் மாநாடு எனது தலைமையில்தான் நடந்தது. நான் தி.த.நா. காங்கிரசுக்கு விரோதமாகப் பேசுவேன் என்று திரு. நேசமணியும் அவரது குழாத்தினரும் எதிர்பார்த்தனர். மாறாக, திரு. நேசமணியை வழிகாட்டியாகக் கொண்டு, தி.த.நா. காங்கிரஸ் தலைமையில் தெற்கெல்லைப் போர், திரும்பவும் தொடங்கப்பட வேண்டுமென்று நான் பேசினேன். தமிழினத்தின் நல்வாழ்வுக்காகத் தனி நபர்கள்பாலுள்ள விருப்பு வெறுப்புகளைப் பெரிதுபடுத்தக் கூடாதென்ற கொள்கையை நான் தமிழரசுக் கழகம் தொடங்கிய நாள்தொட்டே உறுதியாகக் கடைப்பிடித்து வருகிறேன். தமிழினத்தின் நலன்களுக்காக என்னுடைய தனி நலன்களை இழக்கவும் நான் தயங்கியதேயில்லை.

வ.உ.சி. மன்றத்தார் நடத்திய ''தமிழன் குரல்'' நாடகத்திலே, ஓரங்க நாடகமாக வீரபாண்டியக் கட்டபொம்மன் கைது செய்யப்படும் காட்சி நடிக்கப் பெற்றது. அப்போதுதான் தமிழரசுக் கழகத்தில் சேர்ந்திருந்த கலைஞர் ஏ.பி.நாகராசன் கட்டபொம்மனாக நடித்தார்.

கலைஞர் ஏ.பி.என். அவர்கள் தம் கலைக்குழுவுடன் தமிழரசுக் கழகம் நடத்திய பல மாநாடுகளில் 'கட்டபொம்மன்' ஓரங்க நாடகத்தை நடத்தியிருக்கிறார். ஆஜானுபாகுவான அவர் கட்டபொம்மன் வேடந் தாங்கி, வீர உரையாற்றி நடித்ததனை இன்னமும் என் அகக் கண்களால் காண முடிகிறது. ஆம்; மறக்க முடியாத காட்சி! பிற்காலத்தில் கட்டபொம்மன் வரலாறு டி.கே.எஸ். சகோதரர்களால் முழு அளவு நாடகமாக நடிக்கப் பெற்றதற்கும், பத்மினி பிக்சர்சாரால் திரைப்படமாக எடுக்கப் பட்டதற்கும் அந்நாளில் கலைஞர் ஏ.பி.என். நடித்த ஓரங்க நாடகமே முன்னோடியாக இருந்ததெனலாம். உசிலை நாடகக் குழுவினரின் நாடகமொன்றும் நாகர்கோயில் மாநாட்டில் நடைபெற்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இம் மாநாட்டிலே நாஞ்சில் தந்த நடிகமணியான ஔவை தி.க. சண்முகம் பங்கு பெற்றார். தெற்கெல்லைக் கிளர்ச்சி தொடங்கிய நாள்தொட்டு இன்றுவரை தமிழரசுக் கழக வளர்ச்சியில் ஆர்வங் காட்டிவரும்

செங்கோட்டை ஏ.ஆர். கரையாளர், தேவிகுளம் தாலுகா தோட்டத் தொழிலாளர் தலைவரான மூணார் திரு. குப்புசாமி ஆகியோரும் மாநாட்டில் பேசினர்.

நாகர்கோயில் மாநாட்டில் நான் நிகழ்த்திய தலைமையுரையும், தெற்கெல்லைப் போராட்டம்பற்றி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசாரில் சிலர் என்மீதும் தமிழரசுக் கழகத்தின் மீதும் கொண்டிருந்த காழ்ப்புணர்ச்சியைக் குறைப்பதாக அமைந்தன.

திரும்பவும் தெற்கெல்லைப் போர்!

மாநாட்டில் தெற்கெல்லைப் போராட்டத்தைத் தொடங்குமாறு தி.த.நா.கா.வுக்கு வேண்டுகோள் விடும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தைச் செயல்படுத்த தி.த.நா.கா. தவறுமானால், தெற்கெல்லைப் போரைத் தொடங்க தமிழரசுக் கழகமே பொறுப்பேற்குமென்றும் மாநாட்டின் முடிவுரையில் நான் எச்சரிக்கை விடுத்தேன். உண்மையில், இந்தத் தீர்மானத்தின்படி தெற்கெல்லைப் போரைத் தொடங்க நேசமணியின் செல்வாக்கிலிருந்த தி.த.நா.கா. தவறியிருக்குமானால், தமிழரசுக் கழகம் நேரடியாகப் பொறுப்பேற்றிருக்கும். இந்த எச்சரிக்கை நல்ல பலனைத் தந்தது.

நாகர்கோயில் மாநாடு முடிந்த இரண்டே மாதங்களுக்குள் தேவிகுளம் தாலுகா தோட்டத் தொழிலாளர் சம்பந்தமாகத் தோன்றிய ஒரு தகராறைக் காரணமாகக் கொண்டு மூணார் நகரில் தெற்கெல்லைப் போர் தொடங்கியது.

திரு. நேசமணி, மூணாரில் தோட்டத் தொழிலாளர் கூட்டமொன்றில் பேசுவதற்காகப் போனார். அவரே எதிர்பாராத வகையில் அதிகார வர்க்கம் அவரது கூட்டத்தை நடத்த விடாமல் 144 தடையுத்தரவைப் பிறப்பித்தது. தடையுத்தரவை மீறுமாறு தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர்களால் அவர் கட்டாயப்படுத்தப் பட்டார். இயற்கையாகவே போர்க்குணம் படைத்த திரு. நேசமணி, தடையை மீறி, தண்டனை பெற்றுச் சிறை புகுந்தார். அவரைப் பின்பற்றி மூணாரில் நாள்தோறும் தி.த.நா.கா.வினர் தடையை மீறிச் சிறைப்பட்டு வந்தனர்.

நேசமணி சிறைபுகுந்ததும், அவரது ஆலோசனைப்படி, நான் மூணார் நகருக்குத் தந்தி மூலம் அழைக்கப்பட்டேன். தந்தி கிடைத்த அன்றே நான் மதுரை வழியாக மூணாருக்கு விரைந்தேன்.

மதுரை நகர் சென்றதும், அங்கு என்னைச் சந்தித்த செய்தி நிருபர்கள், நான் மூணார் சென்றால் கைது செய்யப்படக் கூடுமென்று திருவிதாங்கூர் போலீஸ் அதிகாரிகளிடமிருந்து தங்களுக்குத் தகவல் கிடைத்திருப்பதாகத் தெரிவித்தார்கள்.

நான் மதுரையிலிருந்து நாஞ்சில் பி.எஸ். மணி அவர்களுடன் மூணார் சென்ற ரயிலிலே இரகசியப் போலீசார் ஏராளமாக என்னைப் பின் தொடர்ந்தனர். மூணார் சென்றதும் அந்த நகரம் முழுவதையும் போலீசார் முற்றுகையிட்டிருக்கக் கண்டேன். தேவிகுளம், பீருமேடு தாலுக்காக்களில் தமிழர்கள் 100-க்கு 80 சதவிகிதத்தினராக வாழ்கின்றனர் — குறிப்பாக, தோட்டத் தொழிலாளர்களெல்லாம் தமிழர்களேயாவர். அதனால், தொழிலாளர் வாழ்க்கைப் பிரச்சினையும் எல்லைக் கிளர்ச்சியோடு இணைந்து விட்டது.

தோட்டத் தொழிலாளர் துயரம்

தோட்டப் பிரதேசங்களில் தமிழர்களை மலையாளப் போலீசார் மிகவும் கொடுமைப்படுத்தினர் என்றும், அந்தப் பிரதேசங்களுக்குச் சென்று நிலைமையை அறிந்து, அதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்றும் சிறைக்கு வெளியிலிருந்த தி.த.நா.கா. தலைவர்கள் என்னைக் கேட்டுக் கொண்டனர். மூணாரில் 144 தடையை மீறுவதற்காகத் திரட்டப்பட்ட தொண்டர்கள் குழுமியிருந்த சத்தியாக்கிரக முகாமில் அவர்களுடனேயே நான் தங்கலானேன். நான் அந்த முகாமுக்குச் சென்ற போது, அதிகாலை 4.30 மணி இருக்கும். இருளகன்று கதிரவன் ஒளிதோன்றியதும் நான் இருந்த முகாமைப் போலீசார் ஆயுதபாணிகளாக சூழ்ந்திருக்கக் கண்டு வியந்தேன்.

நான் காலை 9 மணிக்குத் தோட்டப் பிரதேசங்களுக்குச் செல்ல விரும்பினேன். ஆனால், மூணார் நகர் முழுவதிலுமுள்ள மோட்டார் டாக்சிகளைப் போலீசார் கைப்பற்றிக் கொண்டு விட்டதாகவும், அதனால் எனது பயணத்துக்கு டாக்சி கிடைக்க

வில்லையென்றும், எனக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால், சத்தியாக்கிரக முகாம் நிர்வாகிகள் அரும்பாடுபட்டு ஒரு ஜீப் காரைக் கொண்டு வந்து, அதிலே என்னைத் தோட்டப் பிரதேசங்களுக்குக் கூட்டிச் சென்றனர். போலீஸ் அதிகாரிகளும் வேறு ஜீப் வண்டிகளில் அவசியமின்றியே என்னைப் பின்பற்றி வந்தனர். எனக்குத் துணைபுரிய அல்ல; தொல்லை கொடுப்பதற்காக!

போலீசாரின் கெடுபிடி நடவடிக்கைகளைப் பார்த்தும் நான் எந்த நேரமும் கைது செய்யப்பட்டு, ஏற்கனவே மூணார் சிறையிலிருக்கும் திரு. நேசமணியுடன் சேர்க்கப்படலாமென்று பேசப்பட்டது. நண்பர் நேசமணியுடன் சேர்ந்து சிறையிருக்க வாய்ப்பு கிடைப்பதாயின், அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள நான் தயாராக இருந்தேன்.

போலீசாரின் கெடுபிடிகளைச் சமாளித்துக் கொண்டு மூணார் தோட்டப் பிரதேசங்களைச் சுற்றிப் பார்த்தேன். தோட்டத் தொழிலாளர்களின் தலைவராக விளங்கிய திரு. குப்புசாமி என்பவரை போலீசாரும் அவர்கள் கையாள்களான ரௌடிகளும் அடித்துத் துன்புறுத்திய விவரங்களைக் கேட்டபோது, உண்மையிலேயே நான் கண் கலங்கினேன்.

தோட்டப் பிரதேசங்களில் என்னைக் கண்டதும் தொழிலாளர்கள் குடும்பங் குடும்பமாக என்னைச் சூழ்ந்து கொண்டு, எல்லைக் கிளர்ச்சியைத் தாங்கள் ஆதரிப்பதற்காகத் திருவிதாங்கூர் சமஸ்தான அரசின் மலையாள போலீசார், தங்களுக்கு இழைத்துவரும் இன்னல்களை அழுதழுது கூறி, என்னையும் அழ வைத்துவிட்டனர். 400 தமிழர்கள் மீது மலையாளப் போலீசார் இ.பி.கோ. 107-ஆவது விதிப்படி வழக்கு தொடர்ந்திருந்தனர். தோட்டப் பிரதேசங்களைப் பார்த்து முடிந்ததும், மூணார் சிறையிலிருந்த நண்பர்கள் நேசமணி, நாகர்கோயில் நகரமன்றத் தலைவர் திரு. அனந்தராமன் ஆகியோரைச் சந்திக்க சிறை அதிகாரிகளிடம் அனுமதி கோரினேன். ஆனால், நான் நேசமணியைச் சந்திக்க வாய்ப்பளிக்கக் கூடாதென்று போலீஸ் அதிகாரிகள் கூறியிருப்பதாகத் தெரிவித்தனர்.

வரலாறு காணாத கூட்டம்

மூணாரிலிருந்து நாகர்கோயில் சென்றேன். அங்கு உள்ளூர் த.அ.க. தோழர்களையும், தி.த.நா.கா. நண்பர்களையும் சந்தித்துப் பேசினேன். அப்போது கம்யூனிஸ்டு தலைவர் நண்பர் ஜீவானந்தம் அவர்களும் நாகர்கோயிலில் இருந்தார். தெற்கெல்லைப் போராட்டம் பற்றி அவருடனும் பேசினேன். 2ஆவது போர்முனையை நாஞ்சில் நாட்டில் ஏற்படுத்துமாறு தி.த.நா.கா. தலைவர்களுக்கு யோசனை கூறினேன். எனது யோசனை உடனடியாக ஏற்கப்பட்டதால், அந்தப் போர்முனையையும் நானே தொடங்கி வைத்தேன். அதாவது நாகர்கோயில் மாவட்ட நீதிமன்றத்தின் முன்பு — அதன் நடவடிக்கைகளைத் தமிழில் நடத்தக் கோரி — ஆர்ப்பாட்டம் செய்வதற்குப் புறப்பட்ட திரு. காந்திராமன், திரு. சுசீந்திரேசன், திரு. பகவதியப்பன் ஆகியோருக்கு மாலையணிவித்து, வாழ்த்தி வழியனுப்பினேன்.

நகரத் தமிழரசுக் கழகச் சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேசினேன். நாகர்கோயிலில் அவ்வளவு பெரிய கூட்டத்தில் அதற்கு முன்னும் பின்னும் நான் பேசியதே இல்லை. அழியவிருந்த தி.த.நா.கா.வையும் தெற்கெல்லைக் கிளர்ச்சியையும் காப்பதற்கு நான் முயற்சியெடுத்து, அதிலே வெற்றியும் கண்டதிலே நாஞ்சில் மக்களுக்கிருந்த மகிழ்ச்சி அன்றையக் கூட்டத்தில் வெளிப்பட்டது. அந்தக் கூட்டம் பற்றி 'தினமலர்' (25.7.54) நாளிதழில் வெளியான வருணனை வருமாறு:

'நேற்று நகர சபைத் திடலில் நடைபெற்ற தமிழரசுக் கழகக் கூட்டத்துக்கு ஜலப் பிரளயம் போல ஜனப் பிரளயம் வந்து குவிந்தது. சமீப காலத்தில் இதுபோன்ற பொதுக் கூட்டம் நகரசபைத் திடலில் நடந்ததில்லை.

''சரியாக ஒன்றே முக்கால் மணி நேரம் திரு. ம.பொ.சி. பேசினார். பொதுக்கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது. 7.40 மணிக்கு லேசாக மழை பெய்ய ஆரம்பித்தது. ஆயினும் மக்கள் கூட்டம் இருந்த இடத்தி

லேயே இருந்த காட்சி ஐக்கிய தமிழகம் பெறத் திருவிதாங்கூர் தமிழக மக்கள் எதற்கும் தயாரென்ற மனோ உறுதியைக் காட்டுவதாக இருந்தது.

''பொதுக் கூட்டம் முடிந்து மக்கள் கலைந்து போய்க் கொண்டிருந்தபோது நகர வீதிகளில் சுமார் 30 நிமிஷ நேரம் போக்குவரத்து ஸ்தம்பித்துவிட்டது.''

கடைசிச் சந்திப்பு!

சூலை 24-இல் நான் நாகர்கோயிலில் இருந்தபோது, புத்தேரிக்குச் சென்று, நோயுற்றுப் படுக்கையிலிருந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களைப் பார்த்து, உடல்நலம் விசாரித்தேன். கவிஞர் எப்போதும் என்னிடமும் தமிழரசுக் கழகத்திடமும் மிகுந்த நல்லெண்ணம் காட்டி வந்தார். தெற்கெல்லைக் கிளர்ச்சியிலே அவர் நேரடியாகக் கலந்து கொள்ளவில்லையென்றாலும், அதற்கு ஆதரவளித்து வந்தார். ''மாநிலங்கள் மொழிவாரி திருத்தியமைக்கப்பட வேண்டும்; தமிழ் வழங்கும் பிரதேசம் தனியரசு மாநிலமாக அமைய வேண்டும்'' — என்ற எனது கொள்கைக்கும் கவிமணியவர்கள் ஆதரவு காட்டி வந்தார்.

நாகர்கோயில் சென்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நான் கவிமணியைப் பார்த்து உரையாடத் தவறியதேயில்லை. அவர், மொழிப் புலமையுடைய கவிஞராக மட்டுமல்லாமல், உலகானுபவமுடைய பேரறிஞராகவும் விளங்கினார்.

இந்த முறை கவிமணியை நான் பார்த்தபோது, அவர் மிகவும் சோர்ந்து காணப்பட்டார். ''இன்னும் எத்தனை நாள்?'' என்ற வினாக்குறி என் மனத்துள் எழுந்தது. அந்த நிலையிலும், என்னைக் கண்டதும் கீழ்வருமாறு கூறினார்:

''ஐயா, மலையாளிகளின் ஆதிக்கத்தில் சிக்கி அல்லல் படும் எங்கள் மக்களுக்குத் தாங்கள் செய்துவரும் சேவையைத் தமிழ்நாடு மறக்காது.

''பண்டித நேரு ரொம்ப நல்லவர். ஆனால், அதிகாரத் திற்கு வருமுன் அவர் மருமகளாக இருந்தார். இப்போதோ மாமியாராகி விட்டார். ஆகவே, மொழிவாரி மாகாண அமைப்புக் கோரிக்கையை அவர் அலட்சியப்படுத்து கிறார்.

''திருவிதாங்கூர் தமிழ் மக்கள் நடத்திவரும் போர் வெற்றியடைய பிரார்த்திக்கிறேன். ஆனால், போராட்டம் அறவழியிலும் அன்பு முறையிலும் நடைபெறுமாறு நீங்கள் தான் பார்த்துக்கொள்ள வேண்டும்.''

இப்படிக் கூறிய கவிஞர், தமது உடல்நிலை நினைவுக்கு வரவே, என் இரு கைகளையும் தம் கைகளால் பற்றிக்கொண்டு, கண்களில் நீர்ததும்ப,

''ஐயா, நான் தங்களை மீண்டும் சந்திப்பேனா? அதற்கு ஆண்டவன் எனக்கு அருள்வானா?''

என்று விம்முதலுடன் கேட்டார். என் கண்களில் நீர் மல்கியது. என்னால் பேச முடியவில்லை. ஒருவிதமாகச் சமாளித்துக் கொண்டு,

''திருவிதாங்கூர் தமிழர் நடத்தும் அறப்போரின் வெற்றியைத் தாங்கள் காணப்போகிறீர்கள். நான் மீண்டும் தங்களைச் சந்திப்பேன்''

என்று ஆறுதல் கூறினேன். கவிமணி ஐயுற்றது போலவே இது எங்கள் கடைசிச் சந்திப்பாகிவிட்டது. இந்தச் சந்திப்பு நிகழ்ந்து இரண்டு மாதங்களுக்குள் கவிமணி காலமாகிவிட்டார்.

நான் சென்னை திரும்பியதும் தென் திருவிதாங்கூர் தமிழர் நடத்தும் எல்லைப் போருக்குத் தாய்த் தமிழகத்தின் ஆதரவைத் தெரிவிக்கும் பொருட்டு, தமிழரசுக் கழகத்தின் சார்பில் கவி. கா.மு. ஷெரிப் தலைமையில் ஒரு தொண்டர் படை அனுப்பப் பட்டது. பெரியமேட்டுப் பகுதியில் வழியனுப்புக் கூட்டம் மிகவும் சிறப்பாக நடத்தப் பெற்றது. எழும்பூர் ரெயில்வே நிலையத்திலும் பல்லாயிரக்கணக்கில் தமிழரசுக் கழகத் தோழர் களும் பொதுமக்களும் கூடி வாழ்த்துக் கூறி வழியனுப்பினர்.

ஜீவாவுடன் பேச்சு

நான் நாகர்கோயிலிலிருந்தபோது, தி.த.நா. காங்கிரஸ் தலைவர்களிலொருவரான திரு. குஞ்சன் நாடார், பி.ஏ., பி.எல். அவர்கள், தமது இல்லத்தில் எனக்கும் கம்யூனிஸ்டுத் தலைவர் ப.ஜீவானந்தம் அவர்களுக்கும் ஒரு நாள் பகல் விருந்தளித்தார்.

அப்போது தெற்கெல்லைக் கிளர்ச்சி பற்றி விவாதித்தோம். ஆகஸ்டு 11-இல் திருவிதாங்கூர் சமஸ்தானம் முழுவதும் கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கிலுள்ள தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தம் செய்யப் போவதாகவும், அதே நாளில் தென் திருவிதாங்கூரிலும் தமிழர்கள் அரசுக்கு எதிராக ஒரு பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தினால், காங்கிரஸ் கட்சியின் ஆதரவோடு பட்டம் தாணுப் பிள்ளையின் தலைமையில் நடை பெறும் பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியின் ஆட்சியைக் கவிழ்த்து விடலாமென்றும் ஜீவா கூறினார். கம்யூனிஸ்டுக் கட்சியின் திருவிதாங்கூர் சமஸ்தானக் கிளையால் அனுப்பப்பட்டே ஜீவா இந்த ஆலோசனையைச் சொன்னார். எனக்கு இந்த யோசனை பிடிக்கவில்லை. கம்யூனிஸ்டுகளின் தொழிற்சங்கப் போராட்டம் வர்க்கப் பிரச்சனை. தெற்கெல்லைக் கிளர்ச்சியோ, இனப் பிரச் சினை. இந்த இரண்டுக்குமிடையே முரண்பாடு இல்லையென்றா லும், திருவிதாங்கூரில் தொழிற்சங்க இயக்கத்தை நடத்தும் கம்யூனிஸ்டுகள் அவ்வளவு பேரும் மலையாளிகள்! அவர்கள், தெற்கெல்லைக் கிளர்ச்சி நடத்துவோரிடம் நல்லெண்ணமில்லாத வர்கள். அவர்களுக்கு ஆதரவு காட்டி பட்டம் தாணுப் பிள்ளை ஆட்சிக்கு எதிராக தமிழர் கிளர்ச்சி நடத்துவது சாத்தியமில்லை என்று நான் ஜீவாவிடம் கூறினேன்.

கம்யூனிஸ்டுகளை நம்பிப் போராட்டத்தில் ஈடுபடுவதும் எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால், நான் சென்னை திரும்பிய பின்னர் திரு. குஞ்சன் நாடார் ஜீவாவின் வலையில் விழுந்துவிட் டார். அப்போது, திரு. நேசமணி சிறையிலிருந்தார். திரு. குஞ்சன் நாடார்தான் போராட்ட சர்வாதிகாரியாக இருந் தார். நேசமணி வெளியில் இல்லாத நேரத்தில் தெற்கெல்லைக் கிளர்ச்சியில் புரட்சிகரமான மாறுதலைச் செய்துவிட வேண்டு

மென்று திரு. குஞ்சன் நாடார் கருதியிருக்கலாம். திரு. ஜீவானந்தம் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவராதலால், அவரிடம் திருவிதாங்கூர் தமிழர்கள் ஜில்லா பற்றுக் காரணமாகவும் பெரும் மதிப்பு வைத்திருந்தனர். அதனாலும், ஜீவாவின் யோசனை குஞ்சன் நாடாரிடம் எடுபட்டது.

கம்யூனிஸ்டுகளின் கை வரிசை!

ஆகஸ்டு 11-இல் ''விடுதலை நாள்'' கொண்டாடி, தென் திருவிதாங்கூரில் ஊர்தோறும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் நடத்த தி.த.நா.கா. முடிவு செய்தது. இதைச் செய்தித் தாள்களில் படித்தபோது, ஏதோ பெரிய விபரீதம் ஏற்படப் போகிறது என்று ஐயுற்றேன். என் ஐயம் பொய்யாகவில்லை. ஆகஸ்டு 11-இல் நடத்தவிருந்த பொது வேலை நிறுத்தத்தை ஒத்திப் போட்டுவிட்டதாக கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கிலிருந்த — கேரளர்களால் நடத்தப்பட்டு வந்த தொழிற் சங்கங்கள் கடைசி நேரத்தில் — அதாவது, ஆகஸ்டு 10-இல் அறிக்கை விட்டுவிட்டன. ஆனால், அந்தக் கடைசி நேரத்தில் 'விடுதலை நாள்' கொண்டாட்டத்தைக் கைவிடவோ, ஒத்திப் போடவோ தி.த.நா.கா.வால் இயலவில்லை.

திட்டமிட்டபடி ஆகஸ்டு 11-இல் தென் திருவிதாங்கூரில் ''விடுதலை நாள்'' ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இதில் திரு. ப.ஜீவானந்தம் உள்பட கம்யூனிஸ்டுத் தமிழர்களும் கலந்து கொண்டார்கள். கம்யூனிஸ்டுப் பாணியில் சொல்வதானால், இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்திலே அவர்கள்தான் ''புரட்சிச் சக்தி''யாகத் திகழ்ந்தார்கள். திருவிதாங்கூர் முழுவதும் நடைபெறவிருந்த பொது வேலை நிறுத்தம் ஒத்திப் போடப்பட்டு விட்டதால், சமஸ்தான போலீஸ் படை முழுவதையும் தென் திருவிதாங்கூருக்கு அனுப்புவது பட்டம் தாணுவின் ஆட்சிக்குச் சாத்தியமானது. தமிழர் நடத்தும் ஆர்ப்பாட்டத்தில் கம்யூனிஸ்டுகளும் கலந்து கொள்கிறார்கள் என்பதால், வன்முறையை எதிர்பார்த்து அடக்குமுறைக்கு சமஸ்தான அரசு தன்னை முன்கூட்டியே தயார்படுத்திக் கொண்டது.

கதையை வளர்ப்பானேன்! ஆகஸ்டு 11-இல் மார்த்தாண்டம் என்னும் நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் சென்ற வழி நெடுக வன்செயல்கள் நிகழ்ந்தன. அதையே காரணமாகக் கொண்டு ஊர்வலத்தின் மீது மலையாளப் போலீசார் சுட்டனர். அதனால் 11 தமிழர் உயிர் நீத்தனர். செத்தவர்களின் பிணங்களைக்கூட உறவினர்களிடம் கொடுக்க மறுத்து அவற்றை ஆற்றிலே குவித்து பெட்ரோல் ஊற்றிக் கொளுத்திவிட்டனர் மலையாள போலீசார்!

இந்த நிகழ்ச்சியின் விளைவாகத் தென் திருவிதாங்கூர் முழுவதிலும் அடக்குமுறைப் பேயாட்டம் நடைபெற்றது. எண்ணற்ற வீடுகளிலே மலையாளப் போலீசார் புகுந்து தமிழர்களை நையப் புடைத்தனர். மார்த்தாண்டத்தில் துப்பாக்கிச் சூடு நடந்த அன்று இரவே நூற்றுக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். தி.த.நா.கா. தலைவர்களிலே தீவிரவாதிகள் நையப் புடைக்கப்பட்டு, பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

விடுதலை நாளன்றே திரு. நேசமணி அவர்களை — தண்டனை காலம் முடியுமுன்பே — சிறையிலிருந்து விடுதலை செய்தது அரசு. அவர்பால் கருணையால் அல்ல; போராட்டத்தின் வேகத்தை அவர் தணிக்கை செய்வார் என்ற நம்பிக்கையின் பேரில்! அரசு எதிர்பார்த்தபடி, திரு. நேசமணியவர்கள் தாம் விடுதலையான ஒரு மணி நேரத்திற்குள் போராட்டத்தை நிறுத்தி விட்டதாக அறிக்கை விடுத்தார்.

திரு. நேசமணிக்கு மிகுந்த செல்வாக்குள்ள கல்குளம், விளவங்கோடு தாலூகாக்களில்தான் விடுதலை நாளிலே ஆர்ப்பாட்டம் தீவிரமாக இருந்தது. போலீசாரின் அடக்குமுறைக் கொடுமைகளும் அந்தத் தாலூகாக்களிலேதான் பயங்கரத் தன்மையில் தாண்டவமாடின! ஆகவே, நேசமணி போராட்டத்தை நிறுத்தியது குறித்து நான் வியப்புறவில்லை.

தென் திருவிதாங்கூர் நிலைமையை ஆகஸ்டு 12-ஆம் தேதி காலையில் செய்தித் தாள்களில் படித்து பதறிப்போனேன். நான் எதிர்பார்த்ததுதான் என்றாலும், அடக்குமுறைக் கொடுமை பற்றிய செய்திகள் எனக்கு ஆத்திரத்தைத் தந்தன.

'வருவது வரட்டும்' என்று துணிந்து அன்றிரவே திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் நாகர்கோயிலுக்குப் புறப்படுவதெனத் தீர்மானித்தேன். தெற்கு எல்லையிலுள்ள தமிழரசுக் கழகத் தலைவர்களிடமிருந்தும் ''உடனே புறப்பட்டு வரவேண்டும்'' என்று தந்தி கிடைத்தது.

தெற்கெல்லையில் நடக்கும் கிளர்ச்சியில் கலந்துகொள்ள தாயகத் தமிழரசுக் கழகச் சார்பில் அனுப்பப்பட்ட தொண்டர் குழாம் நாகர்கோயில் சென்ற சில மணி நேரத்திற்குள்ளாகத் தான் துப்பாக்கிச் சூடு நிகழ்ந்தது. அதனையடுத்து, போராட்டமும் நிறுத்தப்பட்டு விட்டதால், தமிழகத்திலிருந்து சென்ற போராட்ட வீரர்கள் செய்வதறியாது அங்கே திகைத்து நின்றனர்.

துப்பாக்கிச் சூடு நடந்த மூன்றாவது நாளில் — ஆகஸ்டு 13-ல் — நான் நாகர்கோயில் சென்றேன். வழியில் — நெல்லையிலிருந்து நாகர்கோயிலுக்கு பஸ்ஸில் சென்று கொண்டிருக்கையில் — ஆரல்வாய்மொழி என்னும் ஊரில் என்னை எதிர்பார்த்து போலீஸ் டி.எஸ்.பி. போலீஸ் படையுடன் காத்துக் கொண்டருந்தார். அவர் நாகர்கோயில் சென்ற ஒவ்வொரு பஸ்ஸையும் நிறுத்தி, நான் இருக்கிறேனா என்று சோதித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். நான் சென்று கொண்டிருந்த பஸ்ஸைக் கண்டதும், மேலே செல்லவொட்டாது அதனைத் தடுத்து நிறுத்தினார். மரியாதையற்ற மொழியில் பஸ்லிருந்து இறங்குமாறு எனக்கு ஆணையிட்டார். போலீசாரின் 'மரியாதை'யை விடுதலைப் போராட்டக் காலத்தில் நான் பலமுறை பெற்றிருக்கிறேனாதலால், டி.எஸ்.பி.யின் வசைமொழி கேட்டு நான் வருந்தவில்லை. அவர் இனத்தால் மலையாளி. தமிழரான நான் அவரிடம் மரியாதையை எதிர்பார்க்க முடியுமா? அந்த அதிகாரி என்னை விசாரித்துக் கொண்டிருக்கையில், வேறு ஒரு போலீஸ் அதிகாரி சைக்கிளில் அங்கு வந்து அவரிடம் ஓர் தந்தியைக் கொடுத்தார். அதைப் பிரித்துப் பார்த்து டி.எஸ்.பி. வியப்படைந்தார். பின், என்னைப் பார்த்து அதிகார தோரணையில், ''நீ போகலாம்'' என்றார். என்னைக் கைது செய்வதற்கான வாரண்டுடன் ஆரல்வாய்மொழி டி.எஸ்.பி. காத்திருந்ததாகவும், பின்னர் அவருக்கு வந்த தந்தியில், என்னைக் கைது செய்ய வேண்டாமென்று மறு ஆணை கிடைத்ததாகவும் மறுநாள் செய்தித் தாள்கள் வாயிலாக அறிந்தேன்.

டி.எஸ்.பி.யிடமிருந்து 'விடுதலை' பெற்ற பின்னர், நேரே நாகர்கோயில் சென்றேன். அந்த நேரத்தில் நகர் முழுவதும் வெறிச்சோடிக் கிடந்தது. வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைவாக இருந்தது. நடமாடியவர்களின் முகங்களிலே துக்கத்தின் அறிகுறியைக் கண்டேன். கண்டவிடந்தோறும் மலையாள போலீசார் ஆயுத பாணிகளாக நின்று கொண்டிருந்தனர்.

நாகர்கோயில் பேருந்துத் திடலில், நண்பர் பி.எஸ். மணியும், கவி.ஷெரிபும், வேறு சிலரும் என்னை வரவேற்றனர். அவர்கள் என்னைக் கண்டதும் விம்மியழவில்லையென்றாலும், துக்கம் தோய்ந்த முகத்துடன் காட்சியளித்தனர். முதலில் ஒரு ஓட்டலில் முகாம் செய்திருந்த ''தமிழகத் தொண்டர் படை'' யினரைக் கண்டு, அவர்களுக்கு தைரியமூட்டினேன். பின்னர், திரு. நேசமணியைக் கண்டு, ஏற்பட்டுள்ள நிலைமைக்குப் பரிகாரம் காண்பது பற்றி ஆலோசனை நடத்தினேன்.

''போராட்டத்தை அடியோடு நிறுத்திவிட்டால், மக்கள் சோர்ந்து விடுவார்கள்; ஆகவே, நாகர்கோயில் நகரிலேனும் அடையாளப் போராட்டம நடத்துவது நல்லதென்று அவரிடம் கூறினேன். அவர் அதற்கு இணங்கவில்லை. அன்பர் நேசமணி, மன அமைதியற்றவராகக் காணப்பட்டார். அவர் நிலையில் நான் இருந்தாலும் அப்படித்தான் காட்சியளித்திருப்பேனோ என்னவோ!

தமிழரசுக் கழகத்தின் பெயரால் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தலாமென்ற மாற்று யோசனையையும் அவரிடம் கூறினேன். அவர் அதற்கும் இணங்கவில்லை. தென் திருவிதாங்கூர் தமிழர்களுக்கு நேசமணிதான் தலைவர்! அவர் விரும்பாத நிலையில் அங்கு எதையும் செய்ய நான் விரும்பவில்லை. துப்பாக்கிப் பிரயோகம் நடந்த மார்த்தாண்டம் பகுதிக்கு நான் செல்வதையும் அவர் விரும்பவில்லை.

சமஸ்தானத்தில் நான் நீடித்திருந்தால் அரசு என்னைக் கைது செய்யக் கூடுமென்றும், அதனால், தென் திருவிதாங்கூரின் நிலைமை மேலும் மோசமாகிவிடக் கூடுமென்றும், அதனைத் தவிர்ப்பது நான் தெற்கெல்லைத் தமிழர்களுக்குச்

செய்யும் பேருதவியாக இருக்குமென்றும், 'மார்ஷல்' நேசமணி என்னிடம் ஒளிவு மறைவின்றிக் கூறினார். உடனடியாக நான் சமஸ்தான எல்லைக்கு வெளியே சென்று விடுவதையே தாம் விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

அன்பர் நேசமணியிடம் பேசுவதற்கு முன்பு நான் நாகர்கோயில் நகரமன்றத் திடலில் நகரத் தமிழரசுக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேசினேன். முதல்வர் பட்டம் தாணுப் பிள்ளை ஆட்சியின் கொடுங்கோன்மையைக் கண்டித்துப் பேசினேன். அடக்குமுறைகளால் தெற்கெல்லைப் போர் ஓயாது என்றும் அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தேன். எனது பேச்சின் விவரம் திரு. நேசமணிக்கு நான் அவரைச் சந்திக்கு முன்பே கிடைத்திருந்தது. அதனாற்றான், போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதென்ற உறுதியுடன்தான் நான் தெற்கெல்லைக்கு வந்திருக்கிறேன் என்பதை உணர்ந்து கொண்டு, என்னை உடனடியாக சமஸ்தானத்திற்கு வெளியே அனுப்பி விடுவதில் போலீசாரை விடவும் அவர் அதிக அவசரம் காட்டினார்.

நேசமணியைச் சந்தித்துப் பேசிய பின்னர், நாகர்கோயிலில் தங்கியிருந்த ''தமிழகத் தொண்டர் படை''யினரைச் சந்தித்து, சென்னை திரும்புமாறு அவர்களுக்கு ஆணையிட்டு, அதற்கான வசதிகளும் ஏற்பாடு செய்தேன். அவர்கள் தெற்கெல்லைப் போரில் கலந்து கொண்டு, திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் அடக்கு முறையையும் சுவை பார்க்கவே அங்குச் சென்றனர். அதற்கு வாய்ப்பின்றிச் சென்னை திரும்ப நேர்ந்ததில் அவர்களுக்கு ஏமாற்றந்தான்!

நாகர்கோயிலிலிருந்து புறப்படுமுன் திரு. ப. ஜீவானந்தம் அவர்களைச் சந்திக்க முயன்றேன். அவர் தலைமறைவாகி விட்டார் என்று சொல்லப்பட்டது. புரட்சிக்கு மக்களைத் தூண்டி விடும் தலைவர்கள் தலைமறைவாகி விடலாம். ஆனால், அவர்களை நம்பிப் புரட்சியில் ஈடுபட்ட மக்களெல்லாந் தலைமறைவாகி விடுவது சாத்தியமில்லையல்லவா!

நாகர்கோயில் சென்ற அன்றிரவே திரு. நேசமணி அவர்கள் ஒரு நண்பரிடம் இரவல் வாங்கித் தந்த மோட்டாரில் நெல்லை திரும்பினேன். அங்கிருந்தபடி, தென் திருவிதாங்கூரில் மலையாளிகள் ஆட்சி தமிழருக்கு எதிராக நடத்தும் அடக்குமுறைக் கொடுமைகளை நிறுத்த முயற்சி எடுக்குமாறும், நடந்துவிட்ட கொடுமைகள் குறித்து நீதி விசாரணை வேண்டுமென்றும் பிரதமர் நேருவுக்கு நீண்ட தந்தி கொடுத்தேன். அதன் நகலை அப்போதைய தமிழக முதல்வர் திரு. காமராசருக்கும் அனுப்பினேன்.

நெல்லையில் ஒரு நாள் தங்கிவிட்டுச் சென்னை திரும்பிய பின்னர், முதல்வர் காமராசரைச் சந்தித்து, தென் திருவிதாங்கூர் நிலைமையை விவரித்தேன். பிரதமருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பட்டம் தாணுவின் ஆட்சி நடத்தும் அடக்குமுறைக் கொடுமைகளை நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அவரை வற்புறுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன். திரு. காமராசர் எனக்கு நம்பிக்கை தரும் வகையில் பதிலளிக்கவில்லை. தெற்கெல்லைக் கிளர்ச்சி காரணமாகத்தான் இவ்வளவும் நேர்ந்ததென்றும், அது தேவையற்ற கிளர்ச்சியென்றும் அவர் கூறினார்.

தென் திருவிதாங்கூரில் 11 தமிழர்களைச் சுட்டுக் கொன்ற ஆட்சியின் முதல்வர் பட்டம் தாணுப்பிள்ளை, அந்தக் கொடுமை நிகழ்ந்த ஐந்து நாட்களுக்குள் திண்டுக்கல் நகருக்கு வருகை தந்தார். பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநில மாநாட்டைத் தொங்கி வைக்க தமிழர்களால் அவர் அழைக்கப் பட்டிருந்தார். இது எனக்கு மிகுந்த மன வேதனையைத் தந்தது. 'கேரளர்' என்ற இனவுணர்வால் தெற்கெல்லைக் கிளர்ச்சியை ஒடுக்க 11 தமிழர்களைச் சுட்டுக் கொன்ற — செத்தவர்களின் பிரேதங்களைக்கூட உறவினர்களிடம் தர மறுத்த — கொடுங்கோலனுக்கு, அந்தக் கொடுமைகள் நிகழ்ந்த ஒரு வாரத்திற்குள் தமிழ்நாட்டில் வரவேற்பு கிடைக்கிறதென்றால், தமிழர்களே வரவேற்கின்றனரென்றால், தமிழினத்துக்கு இதைவிட மானக் கேடு வேறு என்ன இருக்க முடியும்?

வியப்பென்னவென்றால் திண்டுக்கல்லில் பி.சோ. மாநாட்டில் வரவேற்கப்படும் பட்டம் தாணுப் பிள்ளைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகளில் ஒன்று கூட முன் வராததாகும். ஆனால், தமிழினத்தின் ஒரே தேசீய அமைப்பான தமிழரசுக் கழகம் பட்டம் தாணுப் பிள்ளைக்கு எதிராகக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தியது.

திண்டுக்கல்லுக்கு ரயிலில் வருவதாக இருந்த முதல்வர் பட்டம், கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடக்கப் போவதறிந்து, கடைசி நேரத்தில் தமது பயணத் திட்டத்தை மற்றிக் கொண்டு, பலத்த போலீஸ் பந்தோபஸ்துடன் மோட்டார் காரில் வந்தார். அதனால் மதுரை ரெயில் நிலையத்தில் கறுப்புக் கொடிகளுடன் அவரை ''வரவேற்க''க் காத்திருந்த தமிழரசுக் கழகத் தொண்டர்கள் ஏமாற்றம் அடைந்தனர். ஆனால், திண்டுக்கல் தோழர்களிடமிருந்து அவர் தப்ப முடியவில்லை. அங்கு பி.சோ. மாநாட்டுக்கெதிரே 200 தோழர்கள் கறுப்புக் கொடி காட்டி, ''தமிழர்களைக் கொன்ற கொலைகார பட்டம் தாணுவே, திரும்பிப் போ'' என்று கோஷித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தைக் கண்டு சினங்கொண்ட பட்டம் தாணுப் பிள்ளை, ''இந்தியாவிலேயே ஒரு இந்தியருக்கு எதிராக இந்தியர்களே கறுப்புக் கொடி காட்டுவது தகுமா?'' என்று கேட்டார். ஆம்; உள்ளத்தில் மலையாளி; உதட்டில் இந்தியர்! இப்படிப்பட்ட போலித் தேசியவாதிகள் நாட்டில் மலிந்து விட்டனர்!

பட்டம் தாணுப் பிள்ளையின் ஆட்சி தென் திருவிதாங்கூர் தமிழர்க்கிழைக்கும் கொடுமைகளையெல்லாம் விவாதித்து, பி.சோ. கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் ராம் மனோகர் லோகியாவுக்குக் கடிதம் எழுதினேன். எனது கடிதம் அவர் கைக்குச் சேருவதற்குள், அவர் உத்தரப்பிரதேச விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டுக் கைதாகி விட்டார். ஆயினும், கடிதம் அவரிடம் சேர்ப்பிக்கப்பட்டது. டாக்டர் லோகியா, சிறையிலிருந்தபடி பட்டத்தின் கொடுங்கோன்மையைக் கண்டித்து அறிக்கை விட்டிருந்தார். லோகியா விடுதலையான

பின்னர், அவரது முயற்சி காரணமாக, அகில இந்திய பி.சோ. கட்சியின் செயற்குழு கூடி, பட்டம் தாணு ஆட்சியின் அடக்குமுறைக் கொடுமையைக் கண்டித்துத் தீர்மானம் நிறை வேற்றியது.

த.நா.கா. போக்கு

''தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்'' என்பது பழமொழி. ஆனால், தமிழ்நாடு காங்கிரசுக்குச் சதை கிடை யாது. அதனால், தென் திருவிதாங்கூர்த் தமிழர்களுக்கிழைக்கப் பட்ட கொடுமைக்கு எதிராக அது ஆடவே இல்லை. திரு. காமராசரை நான் கேட்டுக் கொண்டதன் பேரில், அப் போது த.நா.கா. தலைவராக இருந்த திரு. எல்.எஸ். கரையாளர் தென் திருவிதாங்கூருக்கு அனுப்பப்பட்டார். அவர் அங்கு நடந்தவற்றை விசாரித்தறிந்து த.நா.கா. செயற்குழுவிற்கு அறிக்கை தந்தார். அதிலே, ''ஆகஸ்டு 11-ஆம் தேதி நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுக்கு எல்லைக் கிளர்ச்சிதான் காரணம்'' என் றும், ''அரசு அளவுக்கு மீறி அடக்குமுறையிலீடுபட்டதாக அங்குள்ள மக்கள் கருதுகிறார்கள்'' என்றும் கரையாளர் குறிப் பிட்டிருந்தார். ஆம்; அவர் கருதவில்லையாம்! தமிழகத்தின் முதல்வர்—தமிழினத்தின் ''பெருந்தலைவர்'' என்ற முறையில் திரு. காமராசர் தென் திருவிதாங்கூர் தமிழர்களுக்கு ஆறுதல் தரும் வகையில் ஒரு அனுதாப மொழிகூடக் கூறவில்லை.

தமிழரசுக் கழகத்தினரைத் தவிர வேறு நாதியற்றவர்களாகி விட்ட தென் திருவிதாங்கூர்த் தமிழர்களைத் தன் மனம் போன படியெல்லாம் பட்டம் தாணுப்பிள்ளை ஆட்சி வேட்டையாடி யது! திருவிதாங்கூர் சட்டமன்ற உறுப்பினர்களான திரு. குஞ்சன் நாடார், திரு. தாணுலிங்க நாடார் உள்பட சுமார் 161 தமிழர் மீது இ.பி.கோ. விதிகள்படி வழக்குகள் தொடுக்கப்பட்டன. பலர் மீது ஆயுள் தண்டனைக்குரிய செக்ஷன்களின்படி அரசு குற்றஞ்சாட்டியது.

இந்தக் குற்றவாளிகளிலே பலர் தமிழ்நாட்டில் அடைக் கலம் புகுந்து தலைமறைவாகிவிட்டனர். தி.த.நா.கா.வைச் சேர்ந்தவர்களில் சுமார் 2000 பேர்கள் தமிழ்நாட்டில் புகுந்து, இங்குப் பல மாதங்கள் தஞ்சம் அடைந்தனர்.

குற்றவாளிகள் பட்டியலிலே எனது பெயரும் இருப்பதாகவும், நான் விரைவில் சென்னையில் கைது செய்யப்பட்டு திருவிதாங்கூருக்கு அழைத்துச் செல்லப்படலாமென்றும் சென்னையில் வெளியாகும் எல்லா நாளேடுகளிலும் செய்தி வெளியானது. இதுபற்றி முதல்வர் காமராசரிடம் பேசிய போது, தலைமறைவாகி விடுமாறு அவர் எனக்கு ஆலோசனை கூறினார். அது எனக்குப் பழக்கமில்லாத — பிடிக்காத செயலாதலால், நான் அப்படிச் செய்யவில்லை. ஆனால், என்னைக் கைது செய்யும் முயற்சியை என்ன காரணத்தாலோ திருவிதாங்கூர் அரசு கைவிட்டுவிட்டது.

தலைவர் ராஜாஜியை அணுகி, தென் திருவிதாங்கூர்த் தமிழர் நிலையை விளக்கினேன். அவர் பிரதமர் நேருவுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதன் விளைவாக நேரு ஒரு அறிக்கை விட்டார். அதிலே, எல்லைக் கிளர்ச்சியை அடியோடு கைவிடுமாறு தெற்கெல்லைத் தமிழர்களுக்கு அறிவுரை கூறியதற்கதிகமாக அவர் எதுவும் சொல்லவில்லை.

பட்டம் ஆட்சி கவிழ்ந்தது!

தென் திருவிதாங்கூரில் 11 தமிழர் படுகொலை செய்யப்பட்ட 6 மாதங்களுக்குப் பின்னர் திருவிதாங்கூரில் காங்கிரஸ் கட்சியின் முயற்சியால் பட்டம் தாணுப் பிள்ளையின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அதன் பின்னர் வந்த காங்கிரஸ் ஆட்சி தென் திருவிதாங்கூர்த் தமிழர்களிடம் கொஞ்சம் நல்லபடியாக நடந்து கொள்ள முயன்றது. வழக்குகள் கைவிடப்பட்டன. சிறையில் அடைக்கப்பட்டவர்கள் விடுவிக்கப் பெற்றனர்.

'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பது பழமொழி அதுபோல திருவிதாங்கூர் சமஸ்தான சட்டமன்றத்தில் காங்கிரசுக்கு நிகர பெரும்பான்மை இல்லாததால், தி.த.நா.கா. உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதற்காகவே காங்கிரஸ் ஆட்சி பட்டம் தாணு ஆட்சி தமிழருக்கு இழைத்த கொடுமைகளுக்குப் பரிகாரம் காண முற்பட்டது. ஆம்; 'அவாளுக்கு இவாள் எழுந்திருந்து உண்பாள்' என்பது போலத்தான்! இரு கட்சியாரும் மலையாளிகள்தானே!

தட்சிணப் பிரதேசத் திட்ட எதிர்ப்பு

போராட்டங்கள் மலிந்த எனது பொது வாழ்க்கையிலே நான் சந்தித்த மிகப் பெரியதும் கடுமையாதுமான போராட்டம் தட்சிணப் பிரதேசத் திட்டத் திணிப்பு எதிர்ப்பேயாகும். தலை நகர் காத்தல், வடக்கு — தெற்கு எல்லைப் பகுதிகளை மீட்டல், திராவிடர் இயக்க எதிர்ப்பு ஆகிய போராட்டங்களிலே எனக்குத் துணை புரிந்த தமிழக நாளேடுகள் தட்சிணப் பிரதேசத் திட்ட எதிர்ப்பிலே என்னை அடியோடு கைவிட்டு விட்டன. இந்த நேரத்தில்தான் தி.க., தி.மு.க., கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டு அமைப்புகளின் உதவியை நாடினேன். அதை நான் அன்று செய்திராவிடில், இன்றுள்ள புதிய தமிழகம் தோன்றியிருக்க முடியாது. தமிழகம், ஆந்திரம், கன்னடம், கேரளம் ஆகிய நான்கும் கலந்த ''தட்சிணப் பிரதேசம்'' அமைந்திருக்கும். அது இற்றை நாள்வரை நீடித்திருக்குமா, நிலைத்திருக்குமா? — என்பது வேறு விஷயம். ஆனால், தட்சிணப் பிரதேசத் திட்டம் ஒரு இடைக்காலத்திற்கேனும் நடைமுறைக்கு வந்திருக்கும்.

தார் கமிஷன்

1948-ஆம் ஆண்டில் இந்திய மாநிலங்களை மொழி அடிப்படையில் திருத்தியமைப்பது பற்றி ஆலோசித்து அறிக்கை தர மத்திய அரசு கமிஷன் ஒன்றை நியமித்தது. நீதிபதி தார் என்பவர் அதன் தலைவராக இருந்தார். கோயமுத்தூர் வாசியும், அரசியல் நிர்ணய மன்ற உறுப்பினருமான திரு. டி.ஏ. இராமலிங்கம் செட்டியாரும் ஆந்திரரான திரு. இராமகிருஷ்ண ராசும் கமிஷனில் அங்கம் வகித்தனர் நாடு விடுதலை பெற்ற ஓராண்டிற்குள் — அதாவது, இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டம் தயாரித்து முடிவதற்கு முன்பு — தார் கமிஷன் நியமிக்கப்பட்டதென்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். ஆம்; இந்தியாவில் சுதந்திர அரசியல் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளிலேயே மொழிவாரி மாநிலங்களை அமைத்து

விடுவதென்ற நல்ல நோக்கத்துடனேயே நேரு ஆட்சி தார் கமிஷனை நியமித்தது.

இந்தக் கமிஷன் நாடு முழுவதையும் சுற்றி, மாநிலந்தோறும் சென்று ஏராளமான சாட்சியங்களைப் பெற்றது. கமிஷன் சென்னைக்கு வந்தபோது, 13.9.48-இல் தமிழரசுக் கழகத் தலைவன் என்ற முறையில் அதன் முன் சாட்சியமளித்தேன்.

தார் கமிஷன் தனது பரிந்துரையில் மாநிலங்களை மொழி வாரித் திருத்தி யமைப்பதே கூடாதென்றும், அப்படித் திருத்தி யமைப்பதானாலும், அதற்கு இது தருணமல்லவாதலால், அதைக் காலங்குறிப்பிடாமல் ஒத்திப்போட வேண்டுமென்றும் அறிக்கை தந்தது. கமிஷனின் அறிக்கை எனக்கு வியப்பையும் வேதனையையும் தந்தது. ஏன் பிரதமர் நேருவும் வியப்படைந்த தாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியானது.

பசல் அலி கமிஷன்

தெற்கெல்லைக் கிளர்ச்சி உச்ச கட்டத்திலிருந்த 1954-ஆம் ஆண்டின் பிற்பாதியிலே மொழிவாரி மாநிலம் பற்றி ஆராய்ந்து அறிக்கை தர உயர் அதிகாரம் பெற்ற இரண்டாவது கமிஷன் ஒன்று மத்திய அரசால் நியமிக்கப்பட்டது. இந்தக் கமிஷன், அப்போது ஒரிஸ்ஸாவில் கவர்னராக இருந்த பீகாரியான பஸல் அலியைத் தலைவராகவும், மலையாளியான சர்தார் கே.எம். பணிக்கரையும், இந்தி மொழியாளரான எச்.என். குன்ஸ்ருவையும் உறுப்பினர்களாகக் கொண்டிருந்தது.

ஆந்திரப் பிரிவினையின் போதே சென்னை நகரம் பற்றிய சிக்கல் தீர்ந்துவிட்டது, தமிழகத்திற்கு ஆதரவான வகையிலே! பின்னர் நடந்த வடக்கெல்லைக் கிளர்ச்சியின் போது அதுபற்றி விசாரணை நடத்தத் தனியாக எல்லைக் கமிஷன் நியமிப்பதாக பிரதமர் நேரு உறுதி கூறிவிட்டதால், அந்தப் பிரச்சினையும் பஸல் அலி கமிஷன் விசாரணைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. ஆகவே, அகில இந்திய ரீதியில் மொழிவாரி மாகாணங்கள் அமைப்பது பற்றியும், தமிழக அளவில் திருவிதாங்கூர் - கொச்சி சமஸ்தானங்களிலுள்ள தமிழ்த் தாலுக்காக்கள் பற்றியுமே பஸல் அலி கமிஷன் சென்னையில் விசாரணை நடத்தியது.

பஸல் அலி கமிஷன் சென்னைக்கு வந்தபோது — அதன் அழைப்பின் பேரில் 11.5.54-இல் செயின்ட் ஜார்ஜ் கோட்டைக் குச் சென்று தமிழரசுக் கழகத்தின் சார்பில் கோரிக்கை மனு ஒன்றைக் கொடுத்தேன். அதன் சுருக்கம் வருமாறு:

''அமையவிருக்கும் புதிய தமிழகம் இந்தியக் குடியர சில் சுயாட்சியுடைய அங்கமாக இருக்க வேண்டும் என்பதே தமிழரசுக் கழகத்தின் கொள்கை.

''குடியரசு இந்தியாவில் குழவிப் பருவத்திலிருக்கும் ஜனநாயகம் செழித்தோங்கி வளர வேண்டுமானால், கிடைத்த சுதந்திரத்தை மக்கள் எல்லோரும் சமமாக அனுப விக்க சந்தர்ப்பமளிக்க வேண்டுமானால், ஒவ்வொரு மாகா ணமும் அதனதன் மொழியாலேயே ஆளப்பட வேண்டும். அந்த வகையில் தமிழகம் தமிழ் மொழியிலேயே ஆளப் பட வேண்டும்; தமிழர் எல்லோரும் சமமாக முன்னேற சந்தர்ப்பம் ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் தமிழர சுக் கழகம் தமிழ் மாகாணம் கோருகின்றது.

''திருவிதாங்கூர் — கொச்சியை தமிழ்நாட்டோடு சேர்த்து ''தட்சிண ராஜ்யம்'' அமைக்க வேண்டுமென்று கேரளத் தலைவர்களில் சிலர் கூறி வருவதைத் தமிழரசுக் கழகம் பலமாக எதிர்க்கிறது. அப்படிச் செய்தால் தென் னிந்தியாவில் விபரீத விளைவுகள் ஏற்படக் கூடும்.

''மாகாணங்களை மொழிவாரித் திருத்தி அமைப்பதை இனியும் தள்ளிப் போடக் கூடாது. அப்படிச் செய்வது தேசத்தைத் துண்டாடக் கோரும் தீய சக்திகள் வெற்றி பெறுவதற்குச் சந்தர்ப்பமளிப்பதாகுமென்று எனது கழகம் எச்சரிக்கின்றது.''

கேரளரின் ஆக்கிரமிப்பு வெறி

கேரள இனத்தின் சார்பில் அப்போதைய திருவிதாங்கூர் — கொச்சி ராஜ்ய காங்கிரஸ் கமிட்டி, கமிஷனிடம் ஒரு கோரிக்கை மனு கொடுத்தது. அந்த மனுவின் முக்கிய பகுதிகள் வருமாறு:

''தென் கன்னடம், காசர்கோடு, குடகு, மலபார் மாவட்டம் (கொச்சி சித்தூர் உட்பட), கூடலூர், உதகமண்டலம், கோவை மாவட்டத்தின் மேற்குப் பகுதி, திருவிதாங்கூர் — கொச்சி ராஜ்யம் (தமிழ்த் தாலூக்காக்கள் உள்பட), லட்சத் தீவுகள், மாலத் தீவுகள் ஆகியவை அடங்கிய ஐக்கிய கேரள அரசை அமைக்க வேண்டும்.

''திருவிதாங்கூர் — கொச்சி ராஜ்யத்திலுள்ள கொச்சின் சித்தூர், தேவிகுளம், பீருமேடு, செங்கோட்டை, நெய்யாற்றின் கரை, விளவங்கோடு, கல்குளம், அகத்தீசுவரம், தோவாளை ஆகிய 9 தாலூக்காக்களைத் தமிழ் ராஜ்யத்தில் சேர்க்க வேண்டுமென்று திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரசும், தமிழரசுக் கழகமும், சென்னை ராஜ்ய அரசும் கோரியிருப்பதாகக் கூறப்படுகிறது. அம்மாதிரிச் செய்வது நேர்மையற்றதாகும். அதனால், கேரள ராஜ்யத்திற்கே பெரும் கேடு ஏற்படக் கூடும். அந்தத் தாலுக்காக்களில் வாழும் மக்களின் நலன்களுக்கும் தீங்கு விளையும். இதற்கு மொழி ஒரு ஆதாரமாக இருந்தாலும், அதையே ஒரே ஆதாரமாகக் கொள்ளக் கூடாது. பூகோள, சரித்திர, நிர்வாக, பொருளாதாரக் காரணங்களும் புதிய ராஜ்யங்களை அமைக்கும் விஷயத்தில் சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டும். இந்த நிலைகளைக் கொண்டு சிந்தித்துப் பார்த்தால், தமிழ்த் தாலூக்காக்களைத் திருவிதாங்கூர் — கொச்சி ராஜ்யத்திலிருந்து பிரிப்பதற்குக் காரணமே இராது. ஆகவே, அவை கேரள ராஜ்யத்திலேயே இருக்க வேண்டும்.

''தேவிகுளம், பீருமேடு தாலுக்காக்களில் தோட்டத் தொழிலே அதிகம். இந்தத் தாலுக்காக்களில் சுதேச மக்கள் (நிலையான குடிகள்) கிடையாது. தோட்டக் காடுகளை ஒரு வாரத்திற்கு மூடினால்கூட இந்தப் பிரதேசத்தில் 100க்கு ஒருவர் கூடத் தங்கியிருக்க மாட்டார்கள். பீருமேடு தாலுக்காவில் தமிழ் பேசுகிறவர்களும் மலையாளம் பேசுகிறவர்களும் சரிசமமான எண்ணிக்கையில் இருப்பார்கள். தேவிகுளம் பீருமேடும் தான் எதிர்கால கேரள

ராஜ்யத்திற்கு மலைவாசப் பகுதிகளை அளிக்க வல்லன. ராஜ்யத்தின் எல்லா முக்கிய (நதிகளும் நீர்ப்பாசனத்திற்கும் மின்சார சப்ளைக்கும் பயன்படுவன) இவ்விரு தாலுக்காக் களில்தான் உற்பத்தியாகின்றன. இவற்றில்தான் இந்த ராஜ்ய ஹைடிரோ மின்சார அலுவலகமும் பவர் ஸ்டேஷன் களும் இருக்கின்றன.

''தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங் கோடு ஆகிய 4 தமிழ்த் தாலுக்காக்களும் மிகுந்த செல்வம் பொருந்திய பிரதேசங்களாதலால், அவை கேரள ராஜ்யத் திற்குத் தேவைப்படுகின்றன. இவை சிறந்த மீன் பிடிக்கும் இடங்களைக் கொண்டிருக்கின்றன. இங்கே முக்கியமான உலோகங்களும் ஏராளமான நெல் வயல்களும் உள்ளன.''

ஆம்; கேரள காங்கிரஸ்காரர்கள் தமிழகத்திலிருந்து கோவை மாவட்டத்தின் மேற்குப் பகுதி, நீலகிரி மாவட்டத்தி லுள்ள கூடலூர், உதகமண்டலம் ஆகியவற்றைப் பிரித்தெடுத்து ஐக்கிய கேரளத்துடன் இணைக்க வேண்டுமென்று விண்ணப்பித் தனர். திரு - கொச்சி ராஜ்யத்திலுள்ள 9 தமிழ்த் தாலுக்காக்களை யும் ஐக்கிய கேரளத்திற்கே உரிமையாக்கிவிட வேண்டுமென் றும் கேட்டுக் கொண்டனர். இந்த ஆக்கிரமிப்பு வெறியை வெளிப்படுத்தியவர்கள் யாரோ அல்லர்; காங்கிரஸ்காரர்களே!

சுருங்கச் சொல்வதானால், ''மலையாள மொழி வழங்கும் பகுதிகளெல்லாம் — ஒரு அங்குலம் விடாமல் — மலையாளி களுக்கே! இது மொழி அடிப்படையில்! இத்துடன், மலையாள மொழி வழங்கும் கேரள நாட்டின் எல்லையிலுள்ள தமிழ்த் தாலுக்காக்களும் மலையாளிகளுக்கே! இது தேவையின் அடிப்ப டையில்!'' — என்பதே கேரள காங்கிரஸ்காரர்களின் கோரிக்கை யாக இருந்தது. இப்படிக் கேட்குமளவுக்கு அவர்கள் துணிவு பெறக் காரணம், பசல் அலி கமிஷனில் மலையாளியான சர்தார் கே.எம். பணிக்கர் அங்கம் வகித்ததாகும். மலையாளி எங்கிருந் தாலும் மலையாளிதானே!

எங்கெங்கும் மலையாளிகளே!

பஸல் அலி கமிஷன் தென்னிந்தியா வந்து விசாரணை நடத்திய போது, மலையாளிகளின் மனப்போக்கு எப்படி இருந்ததென்பதற்கு மலையாள அறிஞரொருவரின் பேச்சு சான்று பகரும்.

''இந்தியாவில் எங்கெங்கும் மலையாளிகள் செல்வாக்குப் பெற்றுள்ள காலம் இது.

''சர்தார் பணிக்கர் கூறுவது பிரதமர் நேருவுக்கு வேத வாக்காகும். பணிக்கரும், அவர் கூட்டத்தினரும் நினைத்தது போலவே காரியங்கள் முடிவாகின்றன.

''சர்வதேச நெருக்கடிகளுக்குப் பரிகாரம் காணும் அதிகாரப் பதவியில் அமர்த்தப் பட்டிருப்பவர் ஒரு மலையாளி!

''பிரதமர் நேருவின் வெளிநாட்டுக் கொள்கைகளை அமுலாக்குபவர் ஒரு மலையாளி.

''பீகிங்கிலும் மாஸ்கோவிலும் வாஷிங்டனிலும் இன்று பாரத நாட்டின் சார்பில் பிரதிநிதித்துவம் வகிப்பவர்கள் மலையாளிகளே!

''இந்திய ஜனாதிபதியின் மூன்று மெய்க்காப்பாளர்களில் இருவர் மலையாளிகளே!

''நேருஜியின் அந்தரங்கச் செயலாளரும் ஒரு மலையாளிதானே!''

('தினமலர்', 15.9.55 இதழில் வெளியானது)

இப்படிப் பேசியவர், திரு — கொச்சி ராஜ்யப் பிரமுகரும் பிரபல வழக்கறிஞருமான மள்ளூர் திரு. கோவிந்தப் பிள்ளை என்ற மலையாளியாவார். கொல்ல கொளத்தூர் என்ற ஊரிலே கூடிய நாயர் சமுதாய சங்கக் கூட்டத்தில்தான் அவர் இப்படிப் பேசினார்.

அந்தச் சமயத்தில், அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் களில் ஒருவர் மலையாளியாக இருந்தார். இந்தியப் பாராளு மன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியின் தலைவரும் மலையாளி தான்! இவர்களைச் சொல்ல மள்ளூர் கோவிந்தப் பிள்ளை மறந்து விட்டார்.

இந்தப் பின்னணி பலத்தால்தான் கேரள காங்கிரஸ்காரர்கள் 'ஐக்கிய கேரளம்' என்ற பெயரில் தமிழகத்தின் சில பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டு — 'ஆதிக்கக் கேரளம்' படைத்து விட முடியுமென்று நம்பினர்.

பணிக்கரின் வாய்ச் சண்டை

நான் பஸல் அலி கமிஷனைப் பேட்டி கண்டபோது, அக்கமிஷன் அங்கத்தினரான கே.எம். பணிக்கர் என்னிடம் சுமார் அரை மணி நேரம் உரையாடினார் — இல்லை; திரு — கொச்சி ராஜ்யத்திலுள்ள தமிழ்த் தாலுக்காக்கள் பற்றி என்னுடன் 'வாய்ச் சண்டை' நடத்தினார். தேவிகுளம், பீருமேடு தாலுக்காக்களைத் தமிழகத்துடன் இணைக்குமாறு தமிழரசுக் கழகம் கோருவது அநியாயமென்றும், கமிஷன் அதனை ஏற்க முடியாது என்றும் பணிக்கர் ஆவேசமாகக் கூறினார். அவரது போக்கு எனக்கு வியப்பைத் தந்தது. அதனால், நான், ''தாங்கள் மலையாளிகள் சார்பில் என்னுடன் வழக்காடுகிறீர்களா? அல்லது கமிஷன் உறுப்பினர் என்ற வகையில் என்னை விசாரணை நடத்துகிறீர்களா?'' என்று கேட்டேன். இதன் பின்னர், பணிக்கரின் ஆவேசம் தணிந்தது.

தமக்கு ஏற்பட்ட ஆவேசத்தில் தம்மை மறந்தவராகி, தேவிகுளம் — பீருமேடு பகுதியில் தமக்குச் சொந்தமான தோட்டங்கள் இருப்பதாகவும் பணிக்கர் கூறினார். ''அவற்றை நான் எப்படி தமிழ்நாட்டில் விட்டுவிட முடியும்?'' என்றும் கேட்டார். அத்துடன், நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் தாலுக்காவுக்காகவும் பணிக்கர் என்னுடன் வழக்காடினார்.

ஆதிக்க உணர்வை வெளிப்படுத்தியதற்காகக் கேரள காங்கிரசாரிடமோ, பணிக்கரிடமோ எனக்குக் கோபம் ஏற்பட

வில்லை. ஏனெனில், தங்கள் சொந்த இனத்தின் நலனுக்காகத் தான் போராடினார்கள்; சுயநலத்திற்காக அல்ல! அதே நேரத்தில் தமிழ்நாடு காங்கிரசும், தமிழரான திரு. காமராசரை முதல்வரா கக் கொண்டிருந்த சென்னை மாநில (தமிழக) அரசும் இன உணர்ச்சியற்ற முறையில் செயல்பட்டன. அவற்றின் மீதுதான் நான் கோபப்பட்டேன்!

சர்தார் பணிக்கரின் போக்கை அறிந்தபோதே தேவிகுளம், பீருமேடு தாலுக்காக்கள் தமிழகத்திற்குக் கிடைக்காவென்பது எனக்குப் புலனாகிவிட்டது. கூடலூரும் போய்விடக் கூடுமோ என்றும் அஞ்சினேன். நேருஜி மீது எல்லையற்ற செல்வாக்குப் பெற்றிருந்த வி.கே. மேனன் அவர்களும், குமரி முதல் கோகர் ணம் வரை ஐக்கிய கேரளம் அமைவதற்குத் திரை மறைவில் வேலை செய்தார்.

பசல் அலி கமிஷன் பரிந்துரை

பசல் அலி கமிஷன் மத்திய அரசுக்குத் தந்த பரிந்துரை 1955 அக்டோபர் 10-இல் அதிகாரபூர்வமாக வெளியிடப் பெற்றது. அந்தப் பரிந்துரையிலே மாநிலங்களை மொழிவாரி திருத்தி அமைக்கும் கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்டது. அதன் படி, அப்போதிருந்த இருபத்தேழு ராஜ்யங்களைப் பதினாறு ராஜ்யங்களாகக் குறைக்கலாமென்று கமிஷன் பரிந்துரை செய் தது. அப்போது ராஜ்யங்களிடையே நிலவி வந்த 'ஏ, பி,சி,' என்ற அந்தஸ்தில் ஏற்றத் தாழ்வான பாகுபாடு முற்றிலும் ரத்து செய்யப்பட்டு, ராஜ்யங்கள் அனைத்தும் சம அந்தஸ்தில் வைக் கப்பட வேண்டுமென்றும் கமிஷன் வற்புறுத்தியது.

''ஒரு மொழிக்கு ஒரு ராஜ்யம்'' என்ற கொள்கையின் அடிப்படையிலே ஆந்திரம், தமிழ்நாடு, கேரளம், கன்னடம், ஒரிசா, பீகார், அசாம், ராஜஸ்தான், காஷ்மீர், வங்காளம் ஆகிய ராஜ்யங்கள் ஏற்படுவதற்கு ஆதரவளித்தது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பசல் அலி கமிஷன் பரிந்துரை வருமாறு:

''சென்னை மாநிலத்தில் உள்ள மலபார் மாவட்டத்தைக் கேரளத்தோடும், தென் கன்னட மாவட்டத்தைக் கன்னடத்தோடும் சேர்த்துவிட வேண்டும்.

''திருவாங்கூர் — கொச்சி ராஜ்யத்திலுள்ள கல்குளம், விளவங்கோடு, தோவாளை, அகத்தீசுவரம், செங்கோட்டை ஆகிய தமிழ் வழங்கும் தாலுக்காக்களைத் தமிழ்நாட்டுடன் சேர்த்துத் தனி ராஜ்யம் அமைக்க வேண்டும். அதன் பெயர் ''சென்னை ராஜ்யம்'' என்றே இருக்க வேண்டும்.

''சென்னை நகரம் தமிழ் ராஜ்யத்திற்கே உரியதாய் – அதன் தலைநகரமாய் செய்யப்பட வேண்டும்.

''சென்னை மாநில — ஆந்திர ராஜ்ய எல்லைச் சிக்கலை அதற்கென நியமிக்கப்பட விருக்கும்''எல்லைக் கமிஷன்'' கிராம அடிப்படையில் திருத்தி அமைப்பதை கமிஷன் ஏற்றுக் கொள்கிறது.''

மகிழ்ச்சியும் அதிர்ச்சியும்

பசல் அலி கமிஷன் அறிக்கையை முதன் முதலாகப் படித்தபோது ஒருபுறம் மகிழ்ச்சியும் மற்றொருபுறம் அதிர்ச்சியும் அடைந்தேன். மகிழ்ச்சிக்குக் காரணம், மொழிவாரி ராஜ்யக் கொள்கையைக் கமிஷன் ஏற்றுக் கொண்டு, அதன்படி தமிழ் ராஜ்யம் அமைவதற்குப் பரிந்துரைத்ததாகும். அத்துடன், திரு — கொச்சி ராஜ்யத்திலிருந்து தமிழ வழங்கும் தாலுக்காக்கள் ஐந்தினைத் தமிழ்நாட்டோடு சேர்ப்பதற்குக் கமிஷன் பரிந்துரை செய்ததுமாகும். அதிர்ச்சிக்குக் காரணம், தேவிகுளம், பீருமேடு, நெய்யாற்றங்கரை, நெருமங்காடு, கொச்சின் சித்தூர், பாலக்காடு ஆகிய தமிழரே மிகுதியாக வாழும் பகுதிகளைத் தமிழ்நாட்டோடு சேர்க்க பசல் அலி கமிஷன் மறுத்துவிட்டதாகும். அத்துடன், 'தமிழ்நாடு' என்னும் பெயரை ஏற்க மறுத்துச் 'சென்னை ராஜ்யம்' என்ற பெயரிலேயே புதிய தமிழ் மாநிலம் அமைய கமிஷன் பரிந்துரைத்ததாகும்.

தட்சிணப் பிரதேச அபாயத்திலிருந்து தமிழ்நாடு தப்பியதானது எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைத் தந்தது. ஆயினும் தேவிகுளம் — பீருமேடு தாலுக்காக்கள் கிடைக்காததை நினைத்த போது எனது மகிழ்ச்சி மறைந்துவிட்டது. கல்குளம், விளவங்கோடு, அகத்தீசுவரம், தோவாளை, செங்கோட்டைத் தாலுக்காக்கள் கிடைக்கும் என்பது நான் ஏற்கனவே எதிர்பார்த்ததுதான். ஆகவே, அவற்றைப் பெற்றதோடு ஆறுதல் அடைந்து விட என்னால் முடியவில்லை. தேவிகுளம் — பீருமேடு தாலுக்காக்கள் வளமான தோட்டங்களைக் கொண்டவையாகும். மலைப் பிரதேசமும் கூட. அவற்றை மீட்பதற்கு இறுதிப் போர் ஒன்றை நடத்தியே ஆகவேண்டுமென்று நான் கருதினேன். தமிழரசுக் கழகத் தோழர்கள் அனைவரும் என்போன்றே கருதினர்.

தமிழக — கேரள எல்லைப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் மலையாளியான சர்தார் கே.எம். பணிக்கரின் ஒருதலைப்பட்சமான வாதத்தைக் கமிஷனின் மற்ற இரு உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டு விட்டனர். சர்தார் பணிக்கர் முதலும் முடிவுமாக மலையாளி என்ற உணர்வோடுதான் நடந்து கொண்டார். திரு. வி.கே. மேனனின் பக்கபலமும் பணிக்கருக்கு இருந்திருக்க வேண்டும். பசல் அலி கமிஷன் பரிந்துரை மீது காங்கிரஸ் மேலிடமும் மத்திய அரசும் எடுக்கும் முடிவைப் பார்த்து அதற்கப்புறம் தமிழரசுக் கழகச் செயற்குழுவைக் கூட்டி ஆவன செய்வதென்று எனக்குள் தீர்மானித்துக் கொண்டேன்.

தேவிகுளம் — பீருமேடு தாலுக்காக்களைத் தமிழகத்திற்குத் தர முடியாதென்பதற்குக் கமிஷன் கூறியிருந்த காரணங்கள் எல்லாம் போலித்தனமானவை; ஒருதலைப்பட்சமானவை; நடுவு நிலையிலிருந்து பிறழ்ந்தவை. மாநிலங்களை மொழி அடிப்படையில் திருத்தி அமைக்க ஒப்புக் கொண்ட பசல் அலி கமிஷன் தமிழக — கேரள எல்லைகளைத் திருத்தி அமைப்பதில் மொழி அடிப்படையை ஏற்க மறுத்துவிட்டது.

''தேவிகுளம் — பீருமேடு தாலுக்காக்கள் விஷயத்தில் மொழிவாரி கொள்கையைக் கமிஷன் முக்கியமாகக் கருத முடியாது.

''பல்வேறு பொருளாதாரக் காரணங்களையும் மற்ற காரணங்களையும் உத்தேசித்துத் தேவிகுளம், பீருமேடு தாலுக்காக்கள் திரு — கொச்சி ராஜ்யத்துக்கு மிகவும் தேவையானவை.''

என்பது கமிஷனின் வாதம்.

எங்கெங்கும் எதிர்ப்பு!

பசல் அலி கமிஷன் பரிந்துரை வெளியானதும் பாரதப் பெருநாடு முழுவதிலும் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. மொழி வழித் தேசிய இனங்களிலே ஒன்றுகூட பசல் அலி கமிஷனின் பரிந்துரையால் மனநிறைவு பெறவில்லை.

விசால ஆந்திரக் கோரிக்கையை நிராகரித்து, தெலுங்கு மொழி வழங்கும் பிரதேசத்தை 'ஆந்திரம்' — 'தெலிங்கானா' என இரண்டாகத் துண்டாடி விட்டதற்காக ஆந்திர இனத்தார் ஆத்திரமுற்றனர்.

தனித்த மகாராஷ்டிர ராஜ்யம் அமைத்துத் தர மறுத்து, குஜராத்தி — மராத்திப் பிரதேசங்கள் கலந்த கதம்ப மாநிலமாக பம்பாய் ராஜ்யம் நீடிக்க வேண்டுமென்று கமிஷன் பரிந்துரைத்த தால், மராத்தியரும் குஜராத்தியரும் கோபமுற்றனர்.

தாங்கள் கேட்டதெல்லாம் கிடைக்கவில்லை என்று கேரளர் களும் ஆத்திரப்பட்டனர்.

தமிழினத்தாரின் போக்கு ஒரு தனி ரகமாக இருந்தது இங்கே தேவிகுளம், பீருமேடு தாலுக்காக்கள் கிடைக்காததற் காக ஆத்திரப்பட்டது தமிழரசுக் கழகம் ஒன்றுதான். வேறு அரசியல் கட்சி எதுவும் இதைப்பற்றி கவலைப்படவில்லை — ஏன்? தமிழ் மாநிலம் அமையவும், திரு — கொச்சி ராஜ்யத்தின் தென்பகுதி தாலுக்காக்களைத் தமிழகத்தோடு இணைக்கவும் கமிஷன் பரிந்துரை செய்ததற்காகவும் தமிழகத்தின் கட்சிகள் மகிழ்ச்சியடைவில்லை. சுருங்கச் சொன்னால், பசல் அலி கமிஷன் பரிந்துரை குறித்து இந்தக் கட்சிகளுக்கு அக்கறையே

இல்லை. ஆயினும், பத்திரிகை நிருபர்களின் வற்புறுத்தலுக் கிணங்கி, சில தலைவர்கள் பசல் அலி கமிஷன் பரிந்துரை பற்றித் தத்தம் கருத்துகளைத் தெரிவித்தார்கள்.

செய்தி நிருபர்கள் கேட்டதற்கு, ''பசல் அலி கமிஷன் தமிழினத்திற்கு அநீதி இழைத்து விட்டது'' என்று நான் கூறி னேன். அத்துடன், ''தேவிகுளம், பீருமேடு தாலுக்காக்களைப் பெறுவதற்காகத் தமிழரசுக் கழகம் கிளர்ச்சி நடத்தும்'' என்றும் கூறினேன்.

கிளர்ச்சி என்ற சொல்லை நான் பயன்படுத்தியதற்காக அப்போது பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த திரு. மீ. பக்தவத்சலனார் என்னைக் கண்டித்து அறிக்கை விட்டார்.

> *''தமிழரசுக் கழகத்தாருக்கு ஏதேனும் கிளர்ச்சி வேண் டும். அதற்காகத்தான் பசல் அலி கமிஷன் அறிக்கையை எதிர்க்கிறார்கள். தமிழர் கேட்டதை எல்லாம் கமிஷன் கொடுத்திருக்க அதற்கெதிராகவும் கிளர்ச்சி செய்வதா?''*

என்றார் மந்திரி பக்தவத்சலனார். அப்போது முதலமைச்சர் பதவியிலிருந்த திரு. காமராசர், பொதுவாக பசல் அலி கமிஷன் பரிந்துரையை வரவேற்றார் என்றாலும், தென் திருவிதாங்கூரின் தமிழ்த் தாலுக்காக்கள் தமிழகத்தோடு சேர்க்கப்பட வேண்டு மென்று கமிஷன் பரிந்துரைத்தது குறித்து திரு. காமராசர் களிப்படையவில்லை.

> *''அங்குள்ள மக்கள் விரும்பினால், இனியும்*
> *அவர்கள் தமிழகத்தில் சேராமல் கேரளத்திலேயே இருந்து விடலாம்.''*

என்று செய்தி நிருபர்களிடம் கூறினார். ஆம்; தென் திருவிதாங் கூர் தமிழர்கள் நடத்திய கடுமையான போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியைத் தோல்வியாக்கி, அதனை அவர்கள் மீது திணிப்பதற்கு திரு. காமராசர் விரும்பினார்.

எப்போதும் போல...

பெரியார் ஈ.வெ.ரா. எப்போதும் எதிலும் ஒரு தனிப் போக்கோடு நடந்துகொள்ளக் கூடியவரல்லவா! பசல் அலி கமிஷன் பரிந்துரையிலும் தமது வழக்கப்படிதான் அவர் நடந்து கொண்டார். திருச்சியிலுள்ள தமது மாளிகையில் 'தினத்தந்தி' நிருபர்க்களித்த சிறப்புப் பேட்டியில் பெரியார் ஈ.வெ.ரா. கூறியது வருமாறு:

> *''தேவிகுளம், பீருமேடு, நெய்யாற்றின் கரை, கொச்சின் சித்தூர் ஆகிய பகுதிகள் பற்றி எனக்குக் கவலை இல்லை. மலையாளத்துடன் அவைகளைச் சேர்க்க வேண்டியதுதான். சமீபத்தில் சென்னைக்கு சர்தார் பணிக்கர் வந்திருந்தார். அவரை நான் சந்தித்துப் பேசினேன். 'தொழிலுக்காகத் தமிழர்கள் அங்கு (தேவிகுளம் - பீருமேடு) வந்தார்களே ஒழிய நிலம் மலையாளத்தைத்தான் சேர்ந்தது' என்று பணிக்கர் சொன்னார். நானும் 'சரி' என்று சொல்லிவிட்டேன்.''*

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்த திரு. கக்கன், ''பசல் அலி கமிஷன், பரிந்துரைகள் நியாயமானவையாயிருக்கின்றன. அவற்றை வரவேற்கலாம்'' ('தினமணி', 13.10.55) என்று அறிக்கை விட்டார்.

சென்னை மாநிலத்தின் நிதி அமைச்சராக இருந்த சி.சுப்பிரமணியம்,

> *''தேவிகுளம் பீருமேடு பகுதிகளைத் தமிழ்நாட்டோடு சேர்ப்பதற்கு இயன்றதெல்லாம் செய்வோம். அந்தப் பகுதிகள் சேராவிட்டாலும், தேவிகுளத்திலுள்ள பெரியாற்றுத் தண்ணீரைச் சென்னை ராஜ்யத்திற்குப் பயன்படும்படி செய்வது உறுதி''*

என்று கூறினார். வியப்பென்னவென்றால், பசல் அலி கமிஷன் பரிந்துரை அதிகாரபூர்வமாக மத்திய அரசுக்குக் கிடைப்பதற்கு முன்பே அதன் முடிவுகள் பட்டம் தாணுப் பிள்ளை போன்ற

கேரளத் தலைவர்களுக்குத் தெரிந்திருந்ததாகும். கமிஷன் பரிந்துரை வெளியாவதற்கு ஒரு திங்களுக்கு முன்பே 18.9.55-இல் திருவனந்தபுரம் பவழங்காடு மைதானத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் பட்டம் தாணுப் பிள்ளை பேசியது வருமாறு:

''தென் திருவிதாங்கூர்த் தமிழ்ப் பகுதிகளைச் சென்னை ராஜ்யத்துடன்ன சேர்க்க பசல் அலி கமிஷன் பரிந்துரை செய்யப் போவதாக திரு - கொச்சி முதல் அமைச்சர் பனம்பள்ளி கோவிந்த மேனன் எப்படியோ அறிந்து தெரிவித்துவிட்டார்.

''தென் திருவிதாங்கூர்த் தமிழ்த் தாலுக்காக்கள் பிரிந்து செல்வதை நான் எதிர்ப்பேன். தளவாய் வேலுத் தம்பி, ராஜகேசவ தாஸ் போன்ற சரித்திரப் புருஷர்கள் பிறந்த அந்தப் பகுதியைச் சென்னை ராஜ்யத்திற்குக் கொடுத்துவிட்டால், நமது சரித்திரப் பாரம்பர்யம் சிதைந்து விடும்.''

('தினமணி' பத்திரிகையில் வெளியானபடி)

நேசமணியின் போக்கு!

தென் திருவிதாங்கூர்த் தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு இணைக்க பசல் அலி கமிஷன் பரிந்துரைப்பினும், தமிழ்நாடு காங்கிரசோ, சென்னை மாநில அரசோ அதனை உற்சாகமாக வரவேற்கவில்லை. கேரளத்திலே அதற்குக் கடுமையான எதிர்ப் பிருந்தது. இங்குள்ள எதிர்க்கட்சிகளோ, உறுதியாக கருத்து தெரிவிக்கவில்லை. இந்த நிலையில் எனது பொறுப்பு மகத்தான தென்பதனை நான் உணர்ந்தேன்.

தேவிகுளம், பீருமேடு பகுதிகளை மீட்க எதுவும் செய்வ தற்கு முன்பு தி.த.நா.கா.வின் செல்வாக்குமிக்க தலைவர் திரு. நேசமணி அவர்களின் கருத்தறிய விரும்பினேன். உடனே புறப்பட்டு சென்னை வருமாறு அவருக்குத் தந்தி கொடுத்தேன். அவரும் வந்தார். அவர், தேவிகுளம் — பீருமேடு பகுதிகள் கிடைக்காமற் போனதற்காக மிகவும் வருந்தினாரென்றாலும்,

அவற்றை மீட்கப் போராட்டத்தில் ஈடுபட வேண்டுமென்ற எனது கருத்தை உற்சாகத்துடன் ஏற்கவில்லை. தென் திருவிதாங் கூரில் ஐந்து தாலுக்காக்கள் கிடைத்த அளவில் அவர் மனநிறைவு பெற்றிருந்தது தெரிந்தது. அவை தாய்த் தமிழகத் தோடு இணைவது உறுதியாகி விட்டதால், இங்குள்ள திரு. கு.காமராசர் விரும்பாததைச் செய்ய அவர் துணிவு பெற வில்லை. காமராசரோடு ஒத்துப் போவது ஒன்றே அவரது குறிக்கோளாக இருந்தது. ஆயினும் என்னைத் திருப்திப்படுத் தும் பொருட்டு, தாம் டில்லி செல்வதாகவும், சென்னை திரும்பி யதும் என்னைச் சந்திப்பதாகவும், அப்போது இறுதி முடிவு எடுக்கலாமென்றும் கூறினார்.

பசல் அலி கமிஷன் பரிந்துரை சில திருத்தங்களுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டதாக இந்திய அரசு விசேஷ பிரகடனம் வெளியிட்டது. அதிலே கமிஷன் தமிழ்நாட்டுக்கு வழங்கிய செங்கோட்டைத் தாலுக்காவின் மேற்குப் பகுதியை — அதாவது, ஆண்டுக்குப் பலகோடி ரூபாய் வருவாய் தரக் கூடிய வளமான காட்டுப் பகுதியைக் கேரளத்திடமே விட்டுவிட வேண்டும் என்பது கமிஷன் பரிந்துரையில் மத்திய அரசு செய்த திருத்தமாகும்.

''தமிழ்நாடு'' என்கிற தன்மானப் பெயர் கோரிக்கையை ஏற்க மறுத்து, ''சென்னை ராஜ்யம்'' என்று அன்னியர் வைத்த அவமானப் பெயரே நீடிக்க வேண்டுமென்று கமிஷன் தந்த பரிந்துரையை இந்திய அரசு தனது பிரகடனத்திலே உறுதிப்படுத் தியது.

இந்திய அரசின் முடிவு எனக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தந்தது. குறைந்த அளவு தேவிகுளம், பீருமேடு தாலுக்காக்களே னும் தமிழகத்திற்குத் தரப்படுமென்று நான் எதிர்பார்த்தேன். இந்தத் தாலுக்காக்களைக் கோருவதிலே தமிழினத்தின் ஏகோபித்த எண்ணத்தைச் 'சென்னை மாநில' அரசு பிரதிபலித்த தென்றாலும் அதற்காகப் போராடுவதற்கு அது தயாராக இல்லை யென்பதை நேரு புரிந்து கொள்ளக்கூடிய வகையில் முதல்வர் காமராசர் நடந்து கொண்டார். அதனாற்றான், கமிஷன் வழங் கிய செங்கோட்டைத் தாலுக்காவிலும் ஒரு பகுதியைப் பறித்துக் கொள்ளக்கூடிய துணிவு நேரு அரசுக்கு ஏற்பட்டது.

போர் தொடங்கினேன்

மத்திய அரசின் பிரகடனம் வெளியானதுமே சென்னையிலிருந்த தமிழரசுக் கழக மத்தியச் செயற்குழு உறுப்பினர்களுடன் கலந்து பேசி, அவர்களுடைய ஆதரவைப் பெற்று, போராட்டத்தைத் தொடங்கி விட்டேன். 19.1.56-இல் சென்னை கோகலே மன்றத்தில் கழகச் சார்பில் நடந்த பொதுக் கூட்டத்தில் போராட்டத் திட்டங்களை அறிவித்தேன். சங்கிலியைப் பிடித்து இழுத்து ரெயிலை நிறுத்தல், மத்திய அரசின் அலுவலகங்கள் முன்பு மறியல் செய்தல், அமைச்சர்கள் எதிரில் கறுப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்தல், தடையுத்தரவுகளை மீறி ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு தமிழினத்தாருக்கு — குறிப்பாக, தமிழரசுக் கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள் விடுத்தேன்.

நான் எதிர்பார்த்ததை விடவும் அதிக அளவில் தமிழரசுக் கழகத் தோழர்கள் — சுமார் மூவாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைவாசம், அபராதம், தடியடி போன்ற இன்னல்களை அனுபவித்தனர். தொடர்ந்து ஒரு வார காலம் நாடு தழுவிய முறையில் போராட்டம் தீவிரமாக நடைபெற்றது. வேறு எந்தக் கட்சியினரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. ஆதரவுகாட்டி அறிக்கை வெளியிடவுமில்லை. அவர்கள், தமிழகத்தின் எல்லைப் பகுதிகளை மீட்கத் தங்கள் கட்சிகளின் சார்பில் தனியாகப் போராட்டம் தொடங்கவும் முன் வரவில்லை. வேடிக்கை பார்த்தார்கள்!

தட்சிண பூதம் புறப்பட்டது!

இந்த நிலையில், பிரதமர் நேரு திடீர்ப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டார். அதாவது, பசல் அலி கமிஷன் பரிந்துரையில் கண்டபடி மொழிவாரி ராஜ்யங்கள் அமைப்பதற்கு மாறாக, இந்தியாவை இந்து ராஜ்யங்களாகச் செய்யும் திட்டமொன்றைத் திடீரென்று வெளியிட்டார். அவை — தட்சிண (தெற்கு) ராஜ்யம், உத்தர (வடக்கு) ராஜ்யம், மேற்கு ராஜ்யம், கிழக்கு ராஜ்யம், மத்திய ராஜ்யம் என்பனவாம்.

''தட்சிண ராஜ்யம்'' என்பது, பசல் அலி கமிஷன் பரிந்துரையில் கண்ட எல்லை மாறுதல்களுக்குட்பட்ட தமிழ்நாடு, கன்னடம், கேரளம், ஆந்திரம் ஆகிய நான்கு மொழி நாடுகளைக் கொண்டதாகும்.

நேருவின் திடீர்ப் பிரகடனத்தை ராஜாஜி அவர்கள் மன நிறைவோடு வரவேற்றார். அதற்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்யவும் முற்பட்டார். முதல் கூட்டம் மயிலை விவேகானந்தர் கல்லூரியில் நடைபெற்றது. அதில் ராஜாஜி, ''மொழிவாரி அரசு காண விழைவோர் காட்டு மிராண்டிகள்'' என்று கடுஞ்சொல் புகன்றார்.

இந்தக் கூட்டத்தில் பார்வையாளனாக நானும் கலந்து கொண்டேன். ஆனால், சிறிது நாழி கழித்துச் சென்றதால் மேடையிலிருந்த ராஜாஜியின் பார்வையில் படாத ஒரு இடத்தில் நான் அமர்ந்திருந்தேன். நான் அவையில் நுழைந்தபோது அங்குக் குழுமியிருந்த மக்களிடை சிறிது பரபரப்பு ஏற்பட்டதால், நான் அங்கு இருப்பதை ராஜாஜி தெரிந்து கொண்டுதான் பேசுகிறார் என்று தவறாக நினைத்துக் கொண்டேன். அதனால் ''மொழிவழி அரசு கோருவோர் காட்டுமிராண்டிகளின் பிரதிநிதிகள்'' என்று அவர் கூறியது எனக்கு மிகுந்த மனவேதனையைத் தந்தது. என்னையே நினைவில் வைத்துப் பேசியதாகவும் நினைத்தேன்.

எனது வேதனையை வெளிப்படுத்தி 5.2.56 'செங்கோல்' இதழில் ''தீயினால் சுட்டபுண் ஆறிவிடும்; ராஜாஜி நாவினால் சுட்ட புண் ஆறாதே!'' என்ற தலைப்புக் கொடுத்துச் சிறப்புக் கட்டுரை எழுதினேன். அதனைப் படித்த ராஜாஜி, எனக்கு நீண்ட கடிதம் எழுதினார். அதிலே,

''தாங்கள் மயிலைப் பொதுக் கூட்டத்தில் இருந்தது எனக்குத் தெரியாது. தங்களைப் பார்த்துவிட்டு, தங்கள் மனதைப் புண்படுத்தும் மனோபாவத்துடன் நான் பேசியதாக தாங்கள் 'செங்கோல்' தலையங்கம் எழுதியிருப்பது சரியல்ல. தாங்கள் இருப்பது தெரிந்திருந்தால், தேச ஒற்றுமைக்காக நான் எடுத்துள்ள புனித காரியத்துக்குத் தங்கள்

ஒத்துழைப்பையும் கேட்டிருப்பேன். இந்த சமாதானம் தங்க ளுக்குத் திருப்தியளிக்குமல்லவா?''

என்று குறிப்பிட்டிருந்தார்.

இரகசியத் தகவல்!

நேருஜியின் தட்சிணப் பிரதேசத் திட்டம் வெளியாகும் வரை தமிழரசுக் கழகமானது தேவிகுளம், பீருமேடு பகுதி களைக் கோரித்தான் போராட்டம் நடத்தியது. தட்சிணத் திட்டம் வெளியானபின், அதனையும் எதிர்த்துப் போராட்டம் நடத்துவ தாக அறிக்கை வெளியிட்டேன். போராட்டத் திட்டத்தில் ரெயில் நிறுத்தம் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது. அடுத்ததாக, அமைச்சர்களை ராஜினாமா செய்யக் கோரி, அவர்களுக்கெதி ரில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவதில் கழகத் தோழர் களேயன்றி, இன உணர்ச்சியுடைய பொதுமக்களும் அதிக ஆர்வம் காட்டினர். நான் தமிழரசுக் கழகத்தின் சார்பில் நடத்திய போராட்டங்களிலே இதுதான் மிகவும் பரவலான முறையில் — கூடுதலான நாட்கள் நடைபெற்றதும், அதிகமானவர்கள் சிறையில் அடைக்கப்பட்டதுமான கடுமையான போராட்ட மாகும்.

போராட்டம் தொடங்கியபின் சென்னையில் அதிகக் கொந் தளிப்பு காணப்பட்டது. நகரில் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டது. அதனை மீறிப் பல கல்லூரிகளின் மாணவர்கள் தனித்தனிக் கோஷ்டிகளாகவும், ஒன்று சேர்ந்தும் நாள்தோறும் ஊர்வலங்கள் நடத்தினர். தமிழரசுக் கழகத்தின் சார்பிலும் தடையை மீறி, மாபெரும் ஊர்வலங்கள் நடத்தப் பெற்றன. காமராசரின் அமைச்சரவை பதவி விலக வேண்டுமென்று ஊர்வலத்தினர் கோஷித்தனர்.

இந்த நிலையில் ஜனவரி 20-ஆம் நாள் அன்று மாலை எனக்கு சென்னை நகரப் போலீஸ் துறையின் உயர்தர அதிகாரி ஒருவரிடமிருந்து ஒரு ரகசியத் தகவல் கிடைத்தது. ஆம்; அன்று நள்ளிரவுக்குள் நான் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப் படப் போவதாகத் தகவல் கிடைத்தது. அப்போது,

திரு.எஸ். பார்த்தசாரதி ஐயங்கார் அவர்கள் சென்னை நகர போலீஸ் கமிஷனராக இருந்தார். முதல் அமைச்சர் காமராசர் புதுடில்லியில் இருந்தார். அவரிடமிருந்து அங்கீகாரம் எதிர் பார்க்கப் படுவதாகவும், அது கிடைத்ததும் நான் கைது செய்யப் படலாமென்றும் தகவல் தரப்பட்டது.

நானும் படுக்கை, பெட்டி முதலியவற்றைத் தயார்படுத்திக் கொண்டு, போலீஸ் அதிகாரிகளை எதிர்பார்த்துக் கொண்டிருந் தேன். கழக முன்னணித் தலைவர்கள் பலர் என்னை வழியனுப்ப என் வீட்டில் குழுமியிருந்தனர். இரவு 11 மணிக்கு என்னைக் கைது செய்யும் யோசனையைப் போலீசார் கைவிட்டதாகத் தொலைபேசி வாயிலாகச் செய்தி கிடைத்தது. முதலமைச்சர் காமராசர், பாதுகாப்புச் சட்டப்படி என்னைக் கைது செய்ய அங்கீகாரம் தருவதற்கு மறுத்துவிட்டாராம்! எனக்கு ஏமாற்றந் தான்!

தாம் அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் திரு.எஸ். பார்த்தசாரதி ஐயங்கார் இதைப்பற்றி என்னிடம் உரையாட நேர்ந்தபோது, ''தங்களைக் கைது செய்ய வேண்டுமென்று நான் தான் அரசுக்கு ஆலோசனை சொன்னேன்'' என்று கூறினார். திரு. ஐயங்கார், என்னைப் பெரிதும் மதிப்பவர். ஆயினும், கடமையைச் செய்வதில் அவர் மிகவும் கண்டிப்பானவர்! தயவு தாட்சண்யமற்றவர்!

ஜனவரி 26 குடியரசு நாளன்று கவர்னர் ஸ்ரீ பிரகாசா ஐலண்டு திடலில் போலீஸ் அணிவகுப்பைப் பார்வையிட வந்தபோதும், திரும்பிச் சென்றபோதும் நானே தலைமை தாங்கி அவருக்கு எதிராகக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினேன்.

'துக்க நாள்'

எனது தியாகத்தாலும் உருவான குடியரசின் விழாவைக் கொண்டாடும் நாளிலே, அந்தக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு மகிழும் கடமை எனக்கு உண்டு. ஆயினம், தமிழ்நாட் டின் எல்லைப் பகுதிகள் கொள்ளை போவதை மறந்து குடியரசு

நாளைக் கொண்டாடி மகிழ என்னால் முடியவில்லை. அதனாற் றான், குடியரசு நாளைத் துக்க நாளாகக் கொண்டாடுமாறு தமிழினத்தாரை — தமிழரசுக் கழகத்தாரை வேண்டிக் கொண் டேன். நானும் கையில் கறுப்புக் கொடி தாங்கி மவுண்ட் ரோடிலுள்ள 'இந்து' அலுவலகத்தினருகில் நின்று ஆர்ப்பாட்டம் நடத்தினேன். கழகத் தோழர்களில் என்னால் தேர்ந்தடுக்கப் பெற்ற ஐம்பது பேர் இதில் கலந்து கொண்டனர். என்னுடைய விருப்பத்திற்கு மாறாக நான் ஈடுபட்ட இந்த நிகழ்ச்சி இன்னமும் எனது நினைவில் இருந்து வருகிறது.

தேவிகுளம், பீருமேடு தாலுக்காக்களை மீட்பதோ, தட்சி ணப் பிரதேசத் திட்டத்தை முறியடித்துத் ''தமிழ் அரசு'' காண் பதோ தமிழரசுக் கழகத்தின் சொந்தப் பிரச்சினைகள் அல்ல. தமிழினம் முழுவதற்குமான தேசியப் பிரச்சினைகள். அப்படி யிருந்தும், மற்ற அரசியல் கட்சிகள் மத்திய அரசு தமிழினத் திற்கு இழைத்த கேடுகளை எதிர்த்துச் செயல்படத் தாமாகவே முன் வராத நிலை கண்டு நான் மிகவும் வேதனையடைந்தேன். ஆனால், தமிழரசுக் கழகத் தோழர்களிடம் வெளிப்பட்ட போராட்ட உணர்ச்சியும், தியாக மனப்பான்மையும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. மற்ற அரசியல் கட்சிகளையும் நானே அழைத்துக் கூட்டு சேர்த்துக் கொண்டு போராட்டத்தை விரிவு படுத்த வேண்டுமென்று விரும்பினேன்.

தி.க. மனமாற்றம்

நல்ல வேளையாக, தி.க. தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. வும், தி.மு.க. தலைவர் சி.என். அண்ணாதுரை அவர்களும் தட்சிணப் பிரதேசத் திட்டத்தை மிகவும் கடுமையாகக் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டனர். அதனை எதிர்ப்பதற்குத் தமிழ கத்து அரசியல் கட்சிகள் ஒன்றுபட வேண்டுமென்றும் வேண்டு கோள் விடுத்திருந்தனர். அவர்களுடைய அறிக்கைகளைப் படித் தபோது என் மனம் பூரிப்படைந்தது. 'திராவிட நாடு' கோரி வந்த அவர்கள் அதன் 'மாடலா'கக் கருதத் தக்க தட்சிண ராஜ்ய அமைப்பை எதிர்ப்பார்கள் என்று நான் கனவு கூடக் காண வில்லை. உண்மையில் அவர்களுடைய போக்கு எனக்கு

வியப்பைத் தந்ததென்றே நான் சொல்ல வேண்டும். தி.க.வும் சரி; தி.மு.க.வும் சரி; அந்த நாளில் சென்னை ராஜ்யத்தை மட்டுமே திராவிட நாடாகச் செய்ய விரும்பின. பிரதமர் நேரு முழு அளவு திராவிட நாட்டையே படைத்துக் கொடுக்க முன் வந்தார். ஆம்; சென்னை ராஜ்யம் மட்டுமேயன்றி, ஆந்திரம், திருவிதாங்கூர் — கொச்சி, மைசூர், ஐதராபாத் (மராத்தி மொழி மாவட்டங்கள் நீங்கலாக) ஆகியவற்றையும் சேர்த்து முழுத் திராவிடம் படைக்கப் போவதாக அறிவித்தார். அதை அப்ப டியே ஏற்றுக்கொண்டு, அதனை இந்திய யூனியனிலிருந்து பிரிக்கும் கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்தியிருக்கலாம். ஆனால், தி.க.வும், தி.மு.க.வும் தட்சிணப் பிரதேசத்தை ஏற்க மறுத்து, திராவிட ஒருமைப்பாட்டையே எதிர்த்தன.

பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்துச் செயல்பட்டு வந்த தி.மு.க.வின் தலைவர் அண்ணா அவர்கள், தமது கழகத்தின் பொதுக் குழுவையோ, குறைந்த அளவு செயற் குழுவையோ கூட்டி விவாதித்து முடிவெடுக்காமல் தமது சொந்தப் பொறுப்பிலேயே அக்கட்சியின் திராவிடக் கூட்டாட்சி லட்சியத்திற்கு எதிராகத் தட்சிணப் பிரதேசத் திட்டத்தை எதிர்த்து தமிழரசுக் கழகத்தின் மொழிவழி மாநிலக் கோரிக் கைக்கு ஆதரவு காட்டி அறிக்கை வெளியிட்டார். அதற்கு அவரது கழகத்தினரில் ஒருவர்கூட எதிர்ப்பு காட்டவில்லை. முணுமுணுக்கக்கூட இல்லை.

இதற்குக் காரணம் உண்டு. ஆந்திர, கன்னட, கேரள இனங்களால் ஆதரிக்கப்படாததால் தாங்கள் கோரிவரும் திராவி டத் தனியரசு அடைய முடியாத கானல் நீர்; அடைந்தாலும், அந்தத் திராவிட நாட்டிலே தங்கள் கழகம் அதிகாரத்திற்கு வரமுடியாது என்பது அறிஞர் அண்ணாவுக்கும், அவர் தம்பி மார்களுக்கும் தெளிவாகத் தெரிந்திருந்தது.

பெரியார் ஈ.வெ.ரா. அரசியல் கொள்கையிலே இவ்வளவு தலைகீழாக மாறுவாரென்று அதற்கு முன்பு நான் கற்பனை செய்துகூடப் பார்த்ததில்லை. நான்கு மொழிப் பிரதேசங்கள் கொண்ட அன்றைய 'சென்னை மாநிலம்' நீடிப்பதையோ,

தி.க.வும். தி.மு.க.வும் கோரிய திராவிட நாடு வருவதையோ நான் கொள்கை அடிப்படையில் எதிர்த்து வந்தபோது பெரியார் தம் வாயார என்னை வசை பாடினார். இதோ சான்று:

''சென்னை மாகாணத்தை நான்கு கூறுகளாக ஆக்க வேண்டுமென்பது கண்டிப்பாக அரசியல் வாழ்வையே தங்கள் ஜீவனமாக — வியாபாரமாக, பதவி — பட்டம் — பணம் சேர்த்தல் முதலிய காரியங்களுக்கு வழியாக வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தும் சிலர் தங்கள் நலனுக்காக இதை — இந்தப் பிரிவினையை வேண்டுவார்களானால், வலியுறுத்துவார்களானால், அதற்கு இடம் கொடுப்பது திராவிட கலாசாரத்துக்கும், திராவிட சமுதாயத்துக்கும், திராவிடத் தலை மொழியாகிய தமிழுக்கும் தேய்வு - அழிவு ஏற்பட்டு விடுமென்று எச்சரிக்க விரும்புகிறேன்.''

('விடுதலை' - 1.8.48)

தி.க.வும் சரி; தி.மு.க.வும் சரி; நான்கு மொழிப் பிரதேசங்கள் கொண்ட திராவிடத் தனிநாடு கிடைக்கும் என்று நம்பியிருந்தால், அதனை உண்மையாகவே அவர்கள் விரும்பியிருந்தால் நேரு வழங்க விரும்பிய தட்சிணப் பிரதேசத்தை அவர்கள் எதிர்த்திருக்கக் கூடாது. நன்றியுணர்வோடு ஏற்றிருக்கவும் வேண்டும். ஒரு அரசியல் கட்சி தனக்கு வரவிருந்த மகத்தான வெற்றியைத் தன் கையாலேயே அழித்துவிட்ட புதுமைக்கு தி.க.வும், தி.மு.க.வும் முன் மாதிரியாகி விட்டன. ஆயினும், அவற்றின் கொள்கை மாற்றம் தமிழினத்திற்கு நன்மைதரும் என்று கருதியதால், நான் அதனை வரவேற்றேன்.

மனமாற்றத்திற்குக் காரணம்

தி.க., தி.மு.க. தலைவர்களின் மனமாற்றத்திற்குக் காரணம் உண்டு. தட்சிண ராஜ்யம் அமைந்தால், திரு. காமராசர் முதலமைச்சர் பதவியில் நீடிக்க முடியாது — நீடிக்க விட மாட்டார்கள், ஆந்திரரும் கன்னடரும் கேரளரும். அதனால், நேருவின் திட்டத்தைத் திரு. காமராசர் விரும்பாதவரானார்.

புதுடில்லியில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டியிலே தட்சிண ராஜ்யம் பற்றித் திரு. காமராசரின் கருத்து என்ன வென்று கேட்கப்பட்டது. அவர், தமிழ்நாட்டிலுள்ள பொது மக்களின் கருத்தை அறிந்த பின் தமது கருத்தைச் சொல்வதாகக் கூறினாராம். பொது மக்களின் கருத்தைத் தட்சிண ராஜ்யத்திற்கு எதிராக உருவாக்கும் பொறுப்பை தி.க. தலைவர் பெரியாரிடம் காமராசர் விட்டிருந்தார்.

திரு. காமராசரைக் காப்பாற்றுவதற்காகத்தான் பெரியார் ஈ.வெ.ரா. தட்சிண ராஜ்யத் திட்டத்தை எதிர்க்க முன் வந்தார். ஆம்; தனி நபரின் தயவுக்காக லட்சியத்தைக் கைவிட்டார் பெரியார்! தட்சிண ராஜ்யத்தைத் தி.மு.க. எதிர்த்ததற்குக் கார ணம் வேறு.

நேரு தட்சிண ராஜ்யத் திட்டத்தை வெளியிட்ட நேரத்திலே, தேர்தல் களத்திலே குதிப்பதற்குத் தி.மு.கழகம் தன்னைத் தயார் படுத்திக் கொண்டிருந்தது. ஆம்; அக்கழகம் தன்னை ஒரு அரசியல் கட்சியாக மாற்றிக் கொள்ள முயன்று கொண்டிருந்தது. தமிழ்நாட்டளவில் காங்கிரஸ் கட்சிக்கு வலுவான ஒரு எதிர்க் கட்சி அந்த நாளில் இல்லை. அதனால், தி.மு.கழகம் அரசியல் கட்சியாக மாறுவதைக் காங்கிரசை விரும்பாதவர்களெல்லாம் வரவேற்க வேண்டியவர்களாக இருந்தனர். ''பஸல் அலி கமி ஷன்'' பரிந்துரை செய்தபடி, தமிழ் வழங்கும் மாவட்டங்கள் மட்டுமே கொண்ட தனி மாநிலம் அமையுமானால், தி.மு.கழகம் ஆட்சிப் பீடத்தில் ஏறுவதும் சாத்தியமாகக் கூடும் என்ற நம்பிக்கை அண்ணாவுக்கும் இருந்திருக்க வேண்டும். அதனால், தட்சிண ராஜ்யம் அமையுமானால் தி.மு.க.வின் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போகக் கூடுமென்று அவர் கருதினார் போலும்! உண்மையில் தட்சிண ராஜ்யம் அமைந்திருக்குமா னால், இன்றைய தமிழ்நாட்டின் அரசியல் போக்கு வேறுவித மாக அமைந்திருக்கக் கூடும். தட்சிண ராஜ்யத்தில் தி.மு.கழகம் ஆளும் கட்சியாக வருவதற்கு வாய்ப்பே கிடைத்திருக்காது. முதன்மையான எதிர்க்கட்சியாகவேனும் இருந்திருக்க முடியுமா என்பதும் ஐயப்பாடே. இதனையெல்லாம் நினைவில் கொண்டு தான் தி.மு.கழகம் தான் வற்புறுத்தி வந்த அரசியல் கொள்

கைக்கு மாறாக தட்சிண ராஜ்யத் திட்டத்தை எதிர்க்க முன் வந்தது. ஆம்; கட்சியின் வளர்ச்சிக்காக லட்சியம் கைவிடப்பட்டது. தி.க., தி.மு.க. தலைவர்களின் கொள்கை முரண்பாடுடைய மன மாற்றம் குறித்து நான் கவலைப்படவில்லை. அது எனது இயக்கத்திற்குக் கிடைத்த மகத்தான வெற்றியென்றே கருதினேன். ஆனால், வெற்றிவிழா கொண்டாடவில்லை.

பெரியாருடன் பேச்சு

தட்சிண ராஜ்யத் திட்டத்தை எதிர்க்கவும், தேவிகுளம் — பீருமேடு தாலுக்காக்களை மீட்கவும், 'தமிழ்நாடு' பெயர் கோரிக்கைக்கு வெற்றி தேடவும் அனைத்துக் கட்சிகளும் கலந்த கூட்டணி ஒன்று அமைக்க விரும்பினேன். அதற்காக முதலில் தி.க. தலைவர் பெரியாரைச் சந்தித்துப் பேசினேன். அவர் கூட்டணி அமைப்பதற்கு ஆதரவு தெரிவித்தார். அதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்றை நடத்தினால் அதில் கலந்து கொள்வதற்கும் விருப்பம் தெரிவித்தார். ஆனால், தி.மு.க.வும் சேர்ந்த கூட்டணியில் இணைவதற்கு அவர் தயங்கினார். சில தடைகளையும் எழுப்பினார்.

அந்நாளில் தி.மு.க.விடம் எனக்கு நெருங்கிய நட்பு இல்லை என்றாலும், வலிமைமிக்க அந்த அமைப்பை ஒதுக்கி விட்டுத் தமிழர் கூட்டணியை அமைப்பதால் எதிர்பார்க்கப்படும் பயன் விளையாதென்று நான் கருதினேன். எனினும், பெரியாரிடம் பேச்சை முறித்துக் கொள்ளாமல், திரும்பவும் அவரைச் சந்திப்பதாகக் கூறி விடைபெற்றுக் கொண்டேன். எங்கள் சந்திப்பு நுங்கம்பாக்கத்தில் உள்ள திரு. சுப்பையா பிள்ளை அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. வெளி ஜில்லாவில் சுற்றுலா செய்து கொண்டிருந்த பெரியாரை தந்தி மூலம் நான் சென்னைக்கு அழைத்தேன். அவரும் என் அழைப்புக்கு மதிப்புத் தந்து சுற்றுலாவைப் பாதியில் நிறுத்திவிட்டு, சென்னைக்கு வந்து என்னைச் சந்தித்து உரையாடினார். எப்படியும் பெரியாரைக் கூட்டணியில் இணைத்துவிட முடியுமென்று நான் நம்பினேன். அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை அவருடைய இல்லத்திலேயே நடத்தலாமென்று நான் ஆலோசனை கூறினேன். அப்போது அவர்,

''இந்தப் பிரச்சினையில் ஐயாவைவிட அக்கறையுள்ளவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது. அதனால், ஐயா வீட்டில் அந்தக் கூட்டத்தை நடத்துவதையே நான் விரும்புகின்றேன். அதுதான் நியாயமுங்கூட.''

என்று கூறி என்னைப் பெருமைப்படுத்தினார்.

அண்ணாவுடன் ஆலோசனை

பெரியாரைச் சந்தித்த பின்னர், தென்னாற்காடு மாவட்டத்திலோ, தஞ்சை மாவட்டத்திலோ (சரியாக நினைவில்லை) சுற்றுலா செய்து கொண்டிருந்த தி.மு.க. தலைவர் அண்ணா அவர்களுக்கும் தந்தி கொடுத்து உடனே சென்னை திரும்பும்படி வேண்டினேன். அவரும் சுற்றுலாவை நிறுத்தி வைத்துவிட்டுச் சென்னை திரும்பினார். இராயபுரத்திலுள்ள தி.மு.க. தலைமை அலுவலகமான 'அறிவக'த்தில் நாங்கள் இருவரும் சந்தித்தோம். அன்றுதான் தி.மு.க. அலுவலகத்திற்கு நான் முதன் முதலாகச் சென்றேன்.

நாங்கள் இதற்கு முன்னும் பலமுறை தனியாகச் சந்தித்து உரையாடியிருக்கிறோமென்றாலும், தேசம் முழுவதையும் பரபரப்பில் ஆழ்த்தியுள்ள மிகப் பெரிய பிரச்சினைகளில் கூட்டாகப் பொறுப்பேற்பது பற்றி நாங்கள் மனந்திறந்து உரையாடியது இதுதான் முதன் முறையாகும். நான் வரும் நேரத்தை முன்கூட்டியே தொலைபேசியில் அறிவித்திருந்தேன். அதனால், அறிவகத்தின் நுழைவாயிலிலே நின்று மிகுந்த மரியாதை காட்டி என்னை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார். அங்கு நாங்கள் இருவரும் சுமார் ஒரு மணி நேரம் தனித்து உரையாடினோம். தி.மு.க. விஷயத்தில் பெரியார் கொண்டுள்ள மனப்பான்மையை ஒளிவுமறைவின்றி அவரிடம் விளக்கினேன்.

பெரியார் இல்லாமலே தமிழர் கூட்டணி அமைக்க அவர் விரும்பக் கூடுமென்று நான் நினைத்தேன். அதற்கு மாறாக, எப்படியேனும் கூட்டணியில் சேருவதற்குப் பெரியாருடைய இசைவை நான் பெற வேண்டுமென்று என்னை அவர் வற்புறுத்தினார். இந்தப் போக்கு எனக்கு வியப்பைத் தந்தாலும்,

தமிழினத் தலைவர்கள் ஒன்றுபடுவதில் அவர் காட்டிய ஆர்வம் தனி நபர்கள்பாலுள்ள விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட தாக இருந்தது கண்டு நான் மகிழ்ச்சி அடைந்தேன். பொதுவாக, அனைத்துக் கட்சிகளின் கூட்டணி அமைக்கவும், தட்சிண ராஜ்யத் திட்டத்தை எதிர்த்து முறியடிக்கவும் அண்ணா இசைவு தெரிவித்தார். இந்த இசைவைப் பெறுவதிலே கஷ்டமொன்று மிருக்கவில்லை.

பேச்சு முறிந்தது!

அண்ணாவைச் சந்தித்த பின்னர் திரும்பவும் இருமுறை பெரியாரைச் சந்தித்துப் பேசினேன். முதல் சந்திப்பில் தாம் எழுப்பிய தடைகளை இந்தச் சந்திப்புகளிலும் அவர் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார். இந்தப் போக்கு எனக்குப் பிடிக்க வில்லை என்றாலும், அவர்பால் எனக்கு வெறுப்பேற்பட வில்லை. திரு. காமராசர் ஆட்சியைப் பலவீனப்படுத்தும் எந்த முயற்சியிலும் கலந்து கொள்ள அவர் விரும்பாதவராக இருந் தார். தோழமையைக் காப்பதிலே அவருக்கிருந்த உறுதி கண்டு நான் வியப்படைந்தேன். தமிழர் கூட்டணியில் காங்கிரசின் பகைச் சக்தியான தி.மு.க. கலந்து கொள்வதனால் காமராசர் ஆட்சி பலவீனப்படுமென்று பெரியார் கருதியிருக்க வேண்டும். அதனாற்றான், தி.மு.க. இல்லாத ஒரு கூட்டணியை அமைப்ப தில் அவர் கண்ணுங் கருத்துமாக இருந்தார். மும்முறை சந்தித் துப் பேசியும் பெரியாரைத் திருப்திப்படுத்த என்னால் முடிய வில்லை.

பெரியாரும் அண்ணாவும் தட்சிணப் பிரதேசத் திட்டத்தை எதிர்ப்பதிலேதான் அதிக அக்கறை காட்டினார்கள். தேவிகுளம், பீருமேடு பிரச்சினையில் அவர்கள் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை.

இதற்கிடையில் கம்யூனிஸ்டுத் தலைவர்களான திரு.பி. ராமமூர்த்தி, திரு ஜீவானந்தம் ஆகியவர்களையும் சந்தித்துப் பேசினேன். தேவிகுளம், பீருமேடு தாலுக்காக்களை மீட்பதிலே அவர்களுக்கு அதிக ஆர்வமிருந்ததென்றாலும்,

திருச்சூரில் கூடிய தமிழ்நாடு — கேரளம் — கன்னடம் — ஆந்திரம் ஆகிய நான்கு மாநிலங்களின் கம்யூனிஸ்டுத் தலைவர் கள் அடங்கிய கூட்டத்திலே, தேவிகுளம் — பீருமேடு தாலுகாக் கள் கேரளத்திலேயே விட்டு வைக்கப்பட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது, கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர்களை மிகுந்த சங்கடத்தில் ஆழ்த்தியது. ஆனால், தட்சிண ராஜ்யத் திட்டத்தை எதிர்ப்பதில் அவர்களுக் குச் சங்கடமெதுவும் இருக்கவில்லை. ஆகவே, அதற்காகத் தமிழர் கூட்டணி அமைப்பதற்கு அவர்களும் ஆதரவு தந்தனர். ஜீவாவைப் பொறுத்தவரையில் தேவிகுளம், பீருமேடு பகுதி களை மீட்பதிலேயும் ஆர்வமுடையவராக இருந்தார்.

கூட்டணி அமைந்தது

27.1.56-ஆம் நாளன்று சென்னை ஏழுகிணறு பகுதியில் உள்ள திரு.ஜி. உமாபதியின் இல்லத்தில் அனைத்துக் கட்சிக ளின் தலைவர்கள் கூட்டம் கூடியது. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவருக்கும் அழைப்பு அனுப்பியிருந்தேன். அவரிடமிருந்து பதில்கூடக் கிடைக்கவில்லை. இது நான் எதிர்பார்த்ததுதான். அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தி.க., காங்கிரஸ் கட்சிகளைத் தவிர, இதர எல்லாக் கட்சித் தலைவர்களும் எனது அழைப்புக்கு மதிப்பு தந்து, வந்து கலந்து கொண்டனர். அவர்க ளின் எண்ணிக்கை சுமார் 30 இருக்கும். முக்கியமானவர்கள் பெயர்கள் வருமாறு:

தி.மு.கழகம்: — அண்ணா, நாவலர் இரா.நெடுஞ்செழி யன், என்.வி.நடராசன்.

தமிழரசுக் கழகம்: — ம.பொ.சிவஞானம், தி.க. சண்மு கம், ஜி.உமாபதி, சின்ன அண்ணாமலை

கம்யூனிஸ்டுக் கட்சி: — ப. ஜீவானந்தம், மணலி கந்தசாமி.

சோஷலிஸ்டுக் கட்சி: — க.ரா. நல்லசிவம், எஸ்.சி.சி. அந்தோணிப் பிள்ளை, எம். சின்னசாமி.

பி.சோ. கட்சி: — ப.சு. சின்னதுரை, அ.சுப்பிரமணியம்.

தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன்: — ஏ. இரத்தினம்.

திராவிடர் பார்லிமெண்டரிக் கட்சி: — எஸ். சுயம்பிரகாசம்.

ஜஸ்டிஸ் கட்சி: — சர்.பி.டி. ராசன்.

வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு: கே. வினாயகம், சித்தூர் சீனிவாசன், பொதட்டூர்பேட்டை ஈ.எஸ். தியாகராாசன்.

மற்றும், பாவேந்தர் பாரதிதாசன், சி.பா.ஆதித்தனார், எச்.டி.ராஜா, நாரண துரைக்கண்ணன், எஸ். செல்லசாமி, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

எல்லோரும் 'தமிழர்' என்னும் இன உணர்ச்சியோடு கட்சி வேறுபாடுகளை மறந்து தமிழ் இனத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் பற்றி மனம் விட்டு விவாதித்தோம். நான் எதிர்பார்த்ததைவிடவும் திருப்திகரமாக விவாதம் நடைபெற்றது. விவாதத்தின் முடிவில் மூன்று தீர்மானங்கள் ஒருமனதுடன் நிறைவேற்றப்பட்டன. அவற்றின் சுருக்கம் வருமாறு:

''மத்திய அரசாங்கத்தார் மொழிவழி ராஜ்யக் கோரிக்கையைக் கொள்கை அளவிலும் ஏற்காததை எதிர்த்தும், எல்லைப் பிரச்சினைகளில் தமிழகத்திற்கு நியாயம் வழங்காததைக் கண்டித்தும், சென்னை ராஜ்யம் என்ற பெயரை நீக்கித் 'தமிழ்நாடு' என்று இந்நாட்டிற்குப் பெயர் வைக்கும் கோரிக்கையை ஏற்காததற்கு அதிருப்தி தெரிவித்தும் தமிழர் விரும்பாத தட்சிண ராஜ்ய யோசனையை நிராகரித்தும் பிப்ரவரி 20-ஆம் தேதி தமிழகம் முழுவதும் கடையடைப்பும் வேலை நிறுத்தமும் செய்யுமாறு பொதுமக்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.''

பிப்ரவரி 20-இல் அர்த்தாலை வெற்றிகரமாக நடத்துவதற்காகவும், அதன் பின்னும் மேற்கொள்ள வேண்டிய

வேலைகளைக் கவனிப்பதற்காகவும், 'நடவடிக்கைக் குழு' என்ற பெயரில் ஒரு தனிக்குழு அமைக்கப் பெற்றது. அந்தக் குழுவின் தலைவராக திரு.பி.டி. ராசன் அவர்களையும், கன்வீனராக என்னையும், பொருளாளராக திரு. ஜி.உமாபதியை யும் கூட்டத்தார் ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தனர். மற்றும் ப.ஜீவானந்தம், என்.வி.நடராசன், எஸ்.சி.சி. அந்தோணிப் பிள்ளை, ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

காலங் கடந்த பாராட்டு

நடவடிக்கைக் குழுவின் நிர்வாகிகள் தேர்வு பற்றிய சுவை யான செய்தியொன்றை இங்குச் சொல்லியாக வேண்டும். தி.மு.க. தலைவர் அண்ணா அவர்களும் அவருடைய கழகத் தோழர்களும் திரு.பி.டி. ராசன் அவர்களைத் தலைவராக்கி விடுவதென்று தங்களுக்குள்ளே முடிவு செய்து கொண்டு கூட்டத் திற்கு வந்திருந்தனர். எந்தப் பிரச்சினைகளுக்காக அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஒரு இடத்தில் கூட்டப்பட்டார்களோ, அந்தப் பிரச்சினைகளுக்கென்றே தோன்றிப் பாடுபட்டுவரும் ஒரே இயக்கம் தமிழரசுக் கழகமாகும். அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு முதல் முயற்சி எடுத்த பெருமையும் அந்தக் கழகத்தையே சாரும். அப்படியிருந்தும் தி.மு.க. தலை வர்கள் என்னிடம் முன்கூடி ஆலோசிக்காது திடீரென்று திரு. பி.டி. ராசன் பெயரைப் பிரரேபித்தனர். இது, கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழரசுக் கழகத் தோழர்களுக்கு மிகுந்த வருத்தத் தைத் தந்தது. பாவேந்தர் பாரதிதாசன்கூட இதை விரும்ப வில்லை. என் பெயரைப் பிரரேபிக்கவும் எனது கழகத்தவரல் லாத ஒன்றிருவர் முன் வந்தனர். அவர்கள் முயற்சியைத் தடுத்து பி.டி.ராசன் பெயரை தி.மு.க. தலைவர்களே வியக்கும் வண் ணம் நான் வழிமொழிந்தேன். அதிருப்தியடைந்த என் தோழர் களைத் திருப்திப்படுத்தவும் இரண்டொரு வார்த்தைகள் கூறி னேன்.

இது நிகழ்ந்த பத்தாண்டுகளுக்குப் பின்னர் எனது மணி விழாவில் இந்த நிகழ்ச்சி பற்றி அண்ணா பேசியதாவது:

''நான் அரசியலில் கொஞ்சம் ஏமாற்றத்துக்கு ஆளான வன் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். பல பேரை நம்பியிருந்தேன். பல பேருடைய நம்பிக்கைகள் எல்லாம் முறியடிக்கப்பட்டுப் போயிருக்கின்றன. ஆனால், ஒரே ஒருவரிடத்தில் நான் எந்தவிதமான காரணமும் கேட்கா மல், எந்தவிதமான பேரமும் பேசிக் கொள்ளாமல் தேவி குளம் — பீருமேடு பிரச்சினையின் போது ம.பொ.சி.யுடன் ஒன்றுபட்டுப் பணியாற்றினேன். அந்த நாள் என்னுடைய உள்ளத்திலே இன்றைய தினமும் பசுமையாக நிழலாடிக் கொண்டிருக்கிறது. நாங்கள் அதற்காகக் கூடிய நேரத்தில் யார் அந்தக் குழுவில் இருப்பது, யார் அதை நடத்திச் செல்வது என்பதில் அரசியலை விளையாட்டாகக் கருதிக் கொண்டிருந்த பல பேர் விவாதத்தைக் கிளப்பினார்கள். இறுதியிலே ம.பொ.சி. அவர்கள் பேசினார், ''நம்முடைய பிரச்சினை தேவிகுளம் — பீருமேடு தமிழ் நாட்டுக்கென அறிவிக்கப்பட வேண்டும்; நாட்டை ஆளுகின்றவர்கள் எடுத்திருக்கின்ற முடிவு தவறானது என்பதை உலகத்துக்கு அறிவிக்க வேண்டும் என்பதுதான். இதற்கென அமையும் குழுவிற்கு யார் தலைவராக இருந்தாலும் எனக்கு அதைப் பற்றி அக்கறையில்லை. குழு இருக்க வேண்டும்; பணி நடக்க வேண்டும்'' என்று கூறி அரசியல் பெருந்தன்மை யைக் காட்டினார். அந்த அரசியல் பெருந்தன்மையை அவர்கள் காட்டியதற்கு நான் இப்போது நன்றி சொல்லக் காரணம், அதே குழுவிலே தாம் விரும்பிய இடம் கிடைக்க வில்லை என்று வெளியேறியவர்களும் உண்டு. ஆகை யால்தான் ம.பொ.சி. காட்டிய அரசியல் பெருந்தன்மை எனது நினைவில் பசுமையாக இருக்கிறது.''

('ம.பொ.சி. பற்றி அறிஞர் அண்ணா', பக்கம்.15,16)

அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூட்ட நான் எடுத்துக் கொண்ட முயற்சி பத்திரிகைகளில் வெளியானதுமே அரசியல் தலைவர்களிடையே எனக்குள்ள செல்வாக்குபற்றிச் சிலர் ஐயுற் றார்கள். எனது அழைப்புக்கு மதிப்பளித்து அவர்கள் வர

மாட்டார்கள் என்றுகூடக் கருதினார்கள். அப்படி வந்தாலும் அந்தக் கூட்டம் ஒரு முடிவுக்கு வராமல் குழப்பத்திலே கலைந்து போகும் என்றுகூடக் கற்பனை செய்து கொண்டார்கள். அவர்கள் எல்லாம் ஏமாந்து போகும் வகையில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் வெற்றிகரமாக முடிந்தது.

போராட்டத்தை நிறுத்தினேன்

இந்தக் கூட்டம் ஆரம்பமாவதற்குச் சற்று முன்பு தமிழ்நாடு காங்கிரசின் முன்னாள் தலைவர் திரு.எஸ்.எஸ். கரையாளர் அவர்கள் வந்திருந்து தேவிகுளம் — பீருமேடு தாலுக்காக் களைக் காக்க வேண்டுமென்பதிலே என்னோடு தனக்குள்ள கருத்து ஒற்றுமையை எடுத்துச் சொல்லிவிட்டு, கட்சிக் கட்டுப் பாடு காரணமாகக் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாமையைத் தெரிவித்துச் சென்றார்.

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே மற்றொரு முடிவும் எடுக்கப்பட்டது. தமிழினத்தாருக்கு இந்திய அரசு இழைத்த அநீதிகளை எதிர்த்து நாடு முழுவதிலும் தமிழரசுக் கழகத்தார் சட்ட மறுப்பிலீடுபட்டுச் சிறைச்சாலைகளுக்குச் சென்ற வண்ணம் இருந்த நேரமாதலால், அந்தப் போராட்டத்தை உடனடியாக நிறுத்துமாறும் அனைத்துக் கட்சிகளின் நடவடிக் கைக் குழுவே தமிழக வடக்கு — தெற்கு எல்லைகளைக் காக்கவும் பொறுப்பேற்றுக் கொள்ளுமென்றும் தீர்மானிக்கப்பட் டது.

இதன்படி, தமிழரசுக் கழகம் தனித்து நடத்தி வந்த போராட் டத்தை நிறுத்தினேன். போராட்டத்தை நிறுத்திய பின்னரும் சிறையிலிருந்த தோழர்களை அரசு விடுதலை செய்யவில்லை. பல ஊர்களில் சதிக் குற்றங்களுக்காக சாத்விகத் தொண்டர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டிருந்தன — குறிப்பாக, சேலம் நகரில் திரு.ஆ. சின்னையன் உள்ளிட்ட பலர்மீது சதிவழக்கு போடப்பட்டது.

அமைச்சரவையில் பிளவு

தட்சிண ராஜ்யத் திட்டம் காரணமாக சென்னை ராஜ்ய அமைச்சரவையில் பிளவு ஏற்பட்டது. முதல்வர் காமராசரும், அவரது கோஷ்டி அமைச்சர்களான திரு. ஆர்.வெங்கட்ராமன், திரு.பி. கக்கன் ஆகியோரும் தட்சிண ராஜ்யத் திட்டத்தை எதிர்த்தனர். மந்திரி பதவிக்காக மட்டுமே காமராசரின் கோஷ்டி அரசியலில் கலந்திருந்த திரு. மீ. பக்தவத்சலனார், திரு. சி. சுப்பிரமணியம், திரு. ராமனாதபுரம் ராசா, திருமதி. ஜோதி அம்மாள் ஆகியோர் தட்சிண ராஜ்யத் திட்டத்தை மனமுவந்து ஆதரித்தனர். வெளிப்படையாக அறிக்கையும் விட்டனர்.

தட்சிண ராஜ்யத் திட்டத்தை ராஜாஜி ஆதரிப்பது திரு. காமராசரின் அமைச்சரவையைக் கவிழ்ப்பதற்காகவுந்தான் என்று அவருடைய கோஷ்டியினரால் கருதப்பட்டது. ஆனால், திரு. காமராசர் இந்தச் சமயத்தில் மிகுந்த ராஜதந்திரத்துடன் நடந்து கொண்டார். அவர் மொழிவாரி மாகாணப் பிரிவினைக் கோரிக்கையை முழு மூச்சுடன் எதிர்த்தவர். ஆனால், மொழி அடிப்படையில் ஆந்திர மாநிலம் பிரிந்து தமிழ்நாடு தனியரசு மாநிலம் ஆனதால்தான் ஆங்கில மொழியில் புலமை பெறாத காமராசர் முதலமைச்சர் பீடத்தில் ஏற முடிந்தது.

உண்மையைச் சிலர் தங்கள் தீர்க்க தரிசனத்தால் சந்திக்கின்றனர். வேறு சிலர், தாங்கள் பெறும் அனுபவத்தால் சந்திக்கிறார்கள். திரு. காமராசர், பிந்தியவர்களைச் சார்ந்தவர்.

தமது தற்காப்புக்காக அவர் தட்சிண ராஜ்யத் திட்டத்திற்கு எதிராக மொழிவழி மாகாணப் பிரிவினையை ஆதரித்தார். இது அவரிடம் ஏற்பட்ட கொள்கை மாறுதலாகும். இதை வெளிப்படையாகச் சொன்னால் காங்கிரஸ் மேலிடத்தின் — குறிப்பாக, பிரதமர் நேருவின் பகை நேருமென்று அஞ்சி மௌனத்தில் மறைந்து கொண்டார். ஆனால், தட்சிண ராஜ்யத் திட்டம் நடைமுறைக்கு வராமல் கெடுக்கத் திரைமறைவில் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவ்வளவையும் அவர் செய்து கொண்டிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் திரு. காமராசருக்கும் பெரியாருக்கும் அந்தரங்கத்தில் நட்பு வலுத்தது. பெரியாரைத் தூண்டிவிட்டுத் தட்சிண ராஜ்யத் திட்டத்தை முறியடிக்க

காமராசர் முயன்றார். ஆனால், பெரியாரின் எதிர்ப்பையும் சமாளித்து வெற்றி காணக்கூடிய வகையில் தட்சிண ராஜ்யத் திட்டத்திற்கு ஆதரவு அதிகரித்து வந்தது.

வர்த்தகர்கள், தொழிலதிபர்கள், உத்தியோக வர்க்கத்தினர் ஆகியோர் தட்சிண ராஜ்யத்தை ஆதரித்தனர். சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியிலேயும் பலர் திரு. காமராசருக்கு எதிராக தட்சண ராஜ்யத் திட்டத்தை ஆதரித்தனர்.

திரு.சி.சு.வுடன் பேச்சு

நான் அரும்பாடுபட்டு அமைத்த சர்வ கட்சிக் கூட்டணி ஒன்றினால்தான் தட்சிண ராஜ்யத் திட்டம் முறியடிக்கப்படலா மென்று ராஜாஜியும் சி. சுப்பிரமணியமும் அஞ்சினர். அதனால், என்னைத் தம் வழிக்கு இழுக்க ராஜாஜி திரு.சி.சு. மூலம் முயன்றார். திரு.சி.சு. முயற்சியால் முடியாதது இல்லை என்று நம்பி, தொழிலதிபர் நா. மகாலிங்கம் அவர்களை என்னிடம் தூது அனுப்பினார். திரு. மகாலிங்கம் அவர்களும் தட்சிண ராஜ்யத் திட்டத்திற்கு ஆதரவாக இருந்தார். எனினும், எங்களி டையே நிலவும் நட்பைப் பயன்படுத்தித் தம் வழிக்கு என்னை இழுக்க அவர் முயற்சி எடுக்கவில்லை ஆனால், திரு.சி.சு.வை யும் என்னையும் சந்திக்க வைப்பதில் அவர் வெற்றி பெற்றார்.

திரு. சி.சு., நான் தட்சிண ராஜ்யத் திட்டத்திற்குக் காட்டி வரும் எதிர்ப்பைக் கைவிட வேண்டுமென்று என்னைக் கேட்டுக் கொண்டார். ஆட்சியிலே தலைமை மாற வேண்டியதன் அவசி யத்தையும் அவர் என்னிடம் ஒளிவுமறைவின்றிக் கூறினார். தட்சிண ராஜ்ய எதிர்ப்பைக் கைவிட என்னால் இயலாவிடின், தி.மு.க.வுடன் கூட்டு சேருவதையேனும் தவிர்க்குமாறு வற்பு றுத்தினார். தி.மு.க. — த.அ.க. கூட்டு முறிந்தாலே தட்சிண ராஜ்யத் திட்டம் வெற்றி பெற்று விடுமென்பதை அவர் தெரிந்து வைத்திருந்தார்.

தட்சிணப் பிரதேச எதிர்ப்பைக் கைவிடுவதோ, தி.மு.க. கலந்துள்ள கூட்டணியிலிருந்து விலகுவதோ சாத்தியமில்லை யென்பதைத் தெளிவாக அவரிடம் தெரிவித்து விட்டேன்.

அர்த்தாலுக்கு ஏற்பாடு செய்யும் முழுப் பொறுப்பையும் கூட்டணியின் சார்பில் நானே ஏற்றுக்கொள்ள வேண்டியிருந் தது. ஒரு மாத காலம் த.அ.க. — தி.மு.க. பேச்சாளர்கள் தமிழ்நாட்டில் சுற்றுலா சென்று அர்த்தால் வெற்றிகரமாக நடை பெறுவதற்காகப் பிரச்சாரம் செய்து தமிழ் மக்களைத் தயார் செய்தனர். நானும் அண்ணாவும் தனித்தனியே பெரிய நகரங்க ளுக்குச் சென்று மாபெரும் பொதுக் கூட்டங்களில் பேசினோம்.

வெற்றிகரமான அர்த்தால்!

பிப்ரவரி 19-இல் — அர்த்தாலுக்கு முதல் நாளன்று — சென்னைக் கடற்கரையில் சர்வ கட்சிக் கூட்டணி சார்பில் மாபெரும் பொதுக் கூட்டம் நடத்தினோம். 3 லட்சம் மக்கள் திரண்டனர். நான் பேசுகையில், ''அர்த்தால் எவ்வளவு வெற்றி கரமாக நடந்தது என்பது முக்கியமல்ல; எவ்வளவு அமைதியாக நடந்தது என்பதுதான் முக்கியம்'' என்பதாக இருமுறை வற்பு றுத்திக் கூறினேன். எனக்குப் பின் பேசிய அண்ணா அவர்கள் ''ம.பொ.சி. சொன்னதை நான் மனநிறைவுடன் ஆதரிக்கிறேன்'' என்று கூறினார்.

பிப்ரவரி 20-ஆம் தேதி அர்த்தால் தமிழ்நாடெங்கணும் வெற்றிகரமாகவும் அமைதியாகவும் நடந்தது. கடையடைப் போடு பொது வேலை நிறுத்தமும் வெற்றிகரமாக நடந்தது. சென்னை, கோவை, மதுரை ஆகிய நகரங்களில் ஆலைத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தஞ் செய்தனர். பெரிய நகரங் களில் மட்டுமின்றி, குக்கிராமங்களில் கூடக் கடையடைப்பு முழு அளவில் நடைபெற்றது. விடுதலைப் போராட்டக் காலத்தில்கூட ஆட்சிக்கு எதிராக இவ்வளவு வெற்றிகரமான அர்த்தால் நடந்த தில்லை.

அர்த்தால் வெற்றிகரமாகவும் அமைதியாகவும் நடைபெற்ற தற்குத் தமிழர் கூட்டணியின் சார்பில் முன்னெச்சரிக்கையாக மேற்கொண்டிருந்த நடவடிக்கைகளே காரணமாகும். அர்த்தா லுக்கு முன்பிருந்த மூன்று வார அவகாசத்தில் நானும் அண்ணா அவர்களும் அடிக்கடி — பெரும்பாலும் என் இல்லத்திலேயே

— சந்தித்து ஆலோசனை நடத்தினோம். நடவடிக்கைக் குழுக் கூட்டங்களும் என் வீட்டில் நடந்தன. அர்த்தாலுக்கு முதல் நாள் மாலை மாநிலம் முழுவதிலும் — அனைத்துக் கட்சிக் கூட்டங் கள் நடத்தி, அர்த்தாலில் மக்கள் சாத்விகத்தைக் கடைப்பிடித்து அமைதி காக்க வேண்டியதன் அவசியத்தைப் போதிப்பதற்கு ஏற்பாடு செய்தோம்.

அர்த்தால் நாளன்று மாலை ஊர்தோறும் அனைத்துக் கட்சிகள் சார்பில் பொதுக் கூட்டம் போட்டு, அந்தக் கூட்டத்தில் பிரதிக்னை மேற்கொள்ள வேண்டுமென்றும் நடவடிக்கைக் குழு முடிவு செய்தது. அந்தப் பிரதிக்னை பத்திரத்தினையும் குழுவே தயாரித்துக் கொடுத்தது. ஊர்வலங்களிலேயும், பொதுக் கூட்ட மேடையிலேயும் கட்சிக் கொடிகள் பயன்படுத்தக் கூடாதென்று நடவடிக்கைக் குழு கண்டிப்பான ஆணை பிறப்பித்தது. கட்சித் தலைவர்களை வாழ்த்தியோ, கண்டித்தோ கோஷங்கள் எழுப் பக் கூடாதென்றும் ஆணையிட்டது. வலுவில் சிறைப்படக் கூடிய வகையில் யாரும் எக்காரணத்தை முன்னிட்டும் எங்கும் சட்டத்தையும் ஒழுங்கையும் மீறக் கூடாதென்றும் நடவடிக்கைக் குழுவின் சார்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

துப்பாக்கிச் சூடு

நடவடிக்கைக் குழுவின் கட்டளைகள் அனைத்துக் கட்சி களின் கிளைகளாலும் ஊழியர்களாலும் ஒழுங்காகக் கடைப்பி டிக்கப்பட்டன. எனது கவலையெல்லாம் அர்த்தால் காரணமாக நாட்டில் அமைதி குலையக் கூடாது என்பதிலேதான் இருந்தது. தி.மு.க. தலைவர் அண்ணா அவர்களும் இந்த விஷயத்தில் என்னை அப்படியே பிரதிபலித்தார். அவர் சுபாவத்திலேயே அமைதியை விரும்பக்கூடியவர்.

இவ்வளவு முன்னேற்பாடுகள் மிகுந்த எச்சரிக்கையோடு செய்யப்பட்டிருந்தும் இரண்டு இடங்களில் போலீசாரின் எச்ச ரிக்கையின்மை காரணமாகச் சிறிய அளவில் கலவரம் ஏற்பட்டு விட்டது. சேலம், மாவட்டத்தைச் சார்ந்த தம்மம்பட்டியிலும் தென்னாற்காடு மாவட்டத்தைச் சார்ந்த கள்ளக் குறிச்சியிலும்

துப்பாக்கிச் சூடு நடைபெற்று விட்டது. கள்ளக்குறிச்சியில் திரு. ஆறுமுகம் (த.அ.க.), என்பவரும், தம்மம்பட்டியில் திரு. கண்ணன் (தி.மு.க.) என்பவரும் காயமடைந்தனர். நல்ல வேளையாக, உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. துப்பாக்கிச் சூடு பற்றிய செய்தியை முதன் முதலில் கேட்டபோது அகிம்சையை மதமாகக் கொண்ட காந்தியவாதியாகிய நான் அளவற்ற வேதனையடைந்தேன்.

சென்னை நகரில் மாலை 4 மணிக்கு அண்ணா சாலையிலுள்ள ஐலண்டு திடலிலிருந்து அனைத்துக் கட்சி ஊர்வலம் புறப்பட்டு, திருவல்லிக்கேணி திலகர் கட்டடத்திற்குச் செல்லுமென்று முன் கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தது. போலீஸ் கமிஷனரிடமும் ஊர்வலத்திற்கு எழுத்து மூலமாக அனுமதி பெற்றிருந்தேன். சரியாக பிற்பகல் 3 மணிக்கே ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் ஐலண்டு திடலில் கூடிவிட்டனர். மக்களிலே ஒவ்வொருவரும் உணர்ச்சி வயப்பட்டிருந்த அந்த நேரத்திலே அரசாங்கப் பேருந்துகள் அண்ணாசாலை வழியாகப் போக்குவரத்து செய்து கொண்டிருந்தன. ஐலண்டு திடலில் பிரதமர் நேரு போன்ற பெருந்தலைவர்கள் பேசுவதற்காகப் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டதுண்டு. அந்த நாட்களிலே பேருந்துகள் அண்ணாசாலை வழிச் செல்லாமல் தடைப்படுத்தப்பட்டு வேறு சாலை வழியாகத் திருப்பிவிடப் படுவது வழக்கம். போலீசார் அந்தோல் நாளன்று அந்த வழக்கத்தைக் கடைப்பிடிக்கவில்லை. பேருந்து வண்டிகளை அண்ணாசாலை வழியாகப் போக அனுமதித்திருந்தனர்.

ஐலண்டுத் திடலில் கூடிய மக்களிலே உணர்ச்சி வயப்பட்ட சிலர், போக்குவரத்தைத் தடுக்க அமைதியான முறையில் முயன்றனர். அவர்கள் முயற்சியைப் போலீசார் தடுக்கவே கலவரம் ஏற்பட்டது. ஆத்திரமடைந்த மக்கள் பேருந்து வண்டிகள் மீது சரமாரியாகக் கற்களை எறிந்தனர். போலீசாரும் தடியடி, கண்ணீர்ப்புகை மூலம் மக்களை அடக்க முயன்றனர். மக்கள் நாலாபுறமும் விரட்டியடிக்கப்பட்டனர்.

இந்தக் கலவரச் செய்தி அறிந்ததும் கவிஞர் கு.சா. கிருஷ்ண மூர்த்தி அவர்களை என்னுடன் அழைத்துக் கொண்டு ஐலண்டுத் திடலை அடைந்தேன். எனக்கு முன்பாகவே அனைத் துக் கட்சி நடவடிக்கைக் குழுவின் தலைவர் திரு.பி.டி. ராசன் ஐலண்டுத் திடலுக்கு ஓடி அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டி ருந்தார். முதியவரான அவரிடம் அன்று வெளிப்பட்ட துணிச்ச லைக் கண்டு நான் வியப்படைந்தேன். ஆம்; கடுமையான கல்லெறியும் போலீஸ் அடக்குமுறையும் நடந்து கொண்டிருந்த நேரத்தில் கொஞ்சமும் அஞ்சாமல் அவர் கலகம் நடந்த களத்துக் குச் சென்றார்.

நான் ஐலண்டுத் திடல் சென்றதும் போலீஸ் கமிஷனர் திரு. பார்த்தசாரதி ஐயங்காரை அங்கு வரச் செய்து மேல் நடவடிக்கை பற்றி அவருடன் ஆலோசித்தேன். அவர் ஊர்வலம் நடத்தும் ஆலோசனையைக் கைவிடுமாறு என்னைக் கேட்டுக் கொண்டார். நான் அதற்கு இணங்க மறுத்துவிட்டேன். ஊர்வலத் துக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி ரத்து செய்யப்படாத நிலை யில் நானாக ஊர்வலத்தைக் கைவிடுவது கோழைத்தனமாகு மென்று அவரிடம் உறுதியாகக் கூறினேன். ஐலண்டுத் திடலுக்கு எதிரே அண்ணாசாலையில் மணற்பரப்பு போலக் கற்கள் பரவிக் கிடந்ததைக் கமிஷனர் எனக்குக் காட்டி, ''இதோ பாருங்கள்; உங்கள் மக்கள் பேருந்துகள் மீதும் போலீசார் மீதும் எறிந்த கற்களை...'' என்று கமிஷனர் கூறி முடிப்பதற்குள், ''நடைபெறு வது மக்கள் ஆட்சி. அதனால் நம்முடைய மக்கள் என்று கூறுங்கள்'' என்று அவரைக் கேட்டுக் கொண்டேன். அவர் சிரித்துவிட்டு, ''ஆம்; நம்முடைய மக்கள்'' என்று மிகுந்த பண்புடன் கூறினார்.

'தமிழர்' ஊர்வலம்

''ஊர்வலத்தை அமைதியுடன் நடத்தித் தருவதாகத் தாங் கள் எனக்கு உத்தரவாதம் தர முடியுமா?'' என்று கமிஷனர் என்னைக் கேட்டார். எனக்கு எப்போதுமே தமிழ் மக்களின் பண்பாட்டிலே மிகுந்த நம்பிக்கை உண்டு. அதனால், கமிஷனர் கோரிய உறுதி மொழியைச் சிறிதும் தயக்கமின்றித் தந்தேன்.

பின்னர், ஊர்வலம் நடத்த அவர் அனுமதித்ததோடு, ஐலண்டுத் திடலுக்குள் மக்கள் நுழைய முடியாதபடி முற்றுகையிட்டிருந்த போலீஸ் படையையும் அங்கிருந்து ஒதுங்கிக் கொள்ளும்படி செய்தார். இந்த நிலையில் நாவலர் இரா. நெடுஞ்செழியன், திரு. என்.வி. நடராசன் ஆகியோர் ஐலண்டுத் திடலுக்கு வந்தனர். அவர்கள் மூலம் அண்ணாவுக்குத் தகவல் அனுப்பி, அவரையும் வரச் செய்தேன். நாங்கள் எல்லோரும் முன்னணியில் சென்று ஊர்வலத்தை நடத்தினோம். அவ்வளவு பெரிய — உணர்ச்சி வயப்பட்ட — மக்கள் நிறைந்த ஊர்வலத்தில் அதற்கு முன் நான் தலைமை தாங்கிச் சென்றதே இல்லை. ஊர்வலத்தில் சென்ற மக்களின் எண்ணிக்கைப் பெருக்கத்தை மட்டும் வைத்து இதனை நான் சொல்லவில்லை. ஊர்வலத்தினரிடம் வெளிப்பட்ட 'தமிழன்' என்னும் இன உணர்ச்சியிருக்கிறதே. அதனையும் சேர்த்துத்தான் நான் குறிப்பிடுகிறேன். 'திராவிடர்'களாகவும், 'இந்தியர்'களாகவும் 'பிராம்மணர்' — 'பிராம்மணரல்லா'தாராகவும் இன்னும் சிறு சிறு சாதியாராகவும் நினைத்தே வாழ்ந்து வந்த மக்களைத் தமிழராக நினைக்கும்படி செய்த நாள் அது!

புதிய தமிழகத்தைப் படைக்க வேண்டுமென்ற ஒரே குறிக்கோளுக்காக நடந்த முதல் அனைத்துக் கட்சி ஊர்வலம் அது!

தமிழினத்தின் நலனுக்காக மட்டுமே அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒன்றுபட்டு — ஊர்வலத்தில் கலந்து — நடைபோட்ட நாள் அது!

கமிஷனரிடம் பிடிவாதமாக ஊர்வலத்தை நடத்த அனுமதி பெற்றுவிட்டேனென்றாலும், ஊர்வலத்தைத் திலகர் திடலுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்குள் வழியில் என்னென்ன நிகழுமோ என்ற கவலை எனக்கு! ஊர்வலத்தின் முன்னே சென்ற அண்ணாவும் நானும் இதைப்பற்றியே மிகுந்த கவலையுடன் பேசிக் கொண்டு சென்றோம்.

நான் பேசாத கூட்டம்

நாங்கள் இருவர் மட்டுமே முயன்று ஒழுங்கு என்னும் எல்லைக்குள் கட்டுப்படுத்தி நடத்திச் செல்ல முடியாத

நிலையில் ஊர்வலம் மிகவும் அகன்றும் நீண்டும் இருந்தது. நகர மக்களின் பண்பாட்டிலே நம்பிக்கை வைத்துத்தான் நடை போட்டோம். ஊர்வலத்தின் முடிவிலே திலகர் கட்டத்தில் மாபெரும் பொதுக் கூட்டத்தை நடத்தினோம். கதிரவன் ஒளி மறையாத மாலை நேரத்திலே சுமார் மூன்று லட்சம் மக்கள் திலகர் கட்டத்தில் திரண்டிருந்தனர். அன்றையக் கூட்டத்தை, பிரதிக்னையைப் படிப்பதோடு — வேறு யாரும் பேசாதபடி — இருட்டுவதற்கு முன்பே முடித்துவிட வேண்டும் என்று அண்ணாவும் நானும் பேசி முடிவு செய்தோம். உண்மையில் இந்த யோசனையை நான்தான் அண்ணாவிடம் தெரிவித்தேன். நடவடிக்கைக் குழுத் தலைவர் என்ற முறையில் திரு.பி.டி. ராசன் பிரதிக்னைப் பத்திரத்தை வரி வரியாகப் படிக்க, மக்கள் அனைவரும் அவரைப் பின்தொடர்ந்து சொல்ல வேண்டும் என்று கூட்டத்தினரைக் கேட்டுக் கொண்டோம். அப்படியே நடந்தது.

அண்ணாவைப் பார்த்து ''நீங்கள் நன்றியுரை கூறிக் கூட்டத்தை இத்துடன் முடித்து விடுங்கள்'' என்றேன். ''நீங்கள் பேசாமலா?'' என்றார். மேடையிலே தமிழர் கூட்டணியிலுள்ள மற்ற கட்சிகளின் தலைவர்களும் இருந்தனர். அவர்களெல்லாம் பேசாமல் அண்ணாவும் நானும் மட்டும் பேசிக் கூட்டத்தை முடிப்பதால் அவர்களுக்கெல்லாம் எங்கள் மீது மனத்தாங்கல் ஏற்படக்கூடுமென்று நினைத்து, அதைத் தவிர்ப்பதற்காகவே கூட்டணியின் சூத்திரதாரியான நான் பேசுவதைத் தவிர்க்க விரும்பினேன். அரைமனதுடன் அண்ணா எனது கருத்துக்கு இசைந்தார். அன்று அவர் அந்தக் கூட்டத்தை முடித்து வைத்த முறை அவருடைய ராஜ தந்திர சாகசத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக இருந்தது.

காமராசர் வருணனை

கட்சிக்கொருவர் பேசாமலே கூட்டத்தை முடித்துவிட நான் விரும்பியதற்குக் காரணம் உண்டு. எல்லோரும் பேசி நன்றாக இருட்டிய பின்பு கூட்டம் கலைந்து மூன்று லட்சம் மக்களும் நகரின் நான்கு திசைகளிலும் பரவினால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, சமூக விரோதிகள் அங்குமிங்குமாகக் கலவரம் செய்யக் கூடுமென்று அஞ்சினேன். ஆம்; அமைதியைக் காக்க

வேண்டுமென்பதிலே அன்று முதல்வர் பதவியிலிருந்த காமராசரை விடவும் நானும் அண்ணாவும் அதிக அக்கறை காட்டினோம். அர்த்தாலை முன்னின்று நடத்தியவர்களுக்குக் கெட்ட பெயர் ஏற்பட வேண்டுமென்று விரும்பியவர்கள் அமைதி குலைய வேண்டுமென்றே பிரார்த்தித்துக் கொண்டிருந் தார்கள். நல்ல பண்போடு நடந்துவரும் ''தினமணி'' பத்திரிகை கூட, ''அமைதியைக் காக்கும் சக்தி தமிழர் கூட்டணித் தலைவர் களுக்குக் கிடையாது. ஆகவே, அமைதி குலையப் போவது உறுதி'' என்று தலையங்கம் எழுதியிருந்தது.

முதல்வர் காமராசர், ''தகுதியில்லாத தலைவர்கள் அர்த் தால் நடத்த முற்பட்டிருக்கிறார்கள். அமைதி குலைந்தால், இவர்களைச் சும்மா விடமாட்டேன்'' என்று அறிக்கை விட்டிருந் தார். நல்ல வேளையாக, தமிழ்நாட்டு மக்களிடம் நான் வைத்த நம்பிக்கை பொய்த்துப் போகவில்லை.

''தெருச் சண்டைக்குத் தயார்!''

தமிழ்நாட்டில் தட்சிணப் பிரதேசத் திட்டத்திற்கு எதிராக அர்த்தால் நடைபெறப் போவதை அறிந்ததுமே பிரதமர் நேரு கூடப் பொறுமையிழந்தார். பண்பின் வடிவான அவர், ''மொழி வழி மாநிலம் கோருவோரோடு தெருச் சண்டைக்கு நிற்கவும் நான் தயார்'' என்று அறைகூவல் விட்டுப் பேசினார். அவர் இப்படிப் பேசியது பொதுக் கூட்டத்தில் அல்ல; தமிழகத்தில் அர்த்தால் நடைபெறவிருந்த ஒரு வாரத்திற்கு முன்பு அமிர்தசர ஸில் நடைபெற்ற அ.இ.கா. கூட்டத்தில்தான். அதே கூட்டத்தில் ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் பரிந்துரை செய்த மொழிவாரி மாநிலப் பிரிவினையை ஏற்பதில்லையென்று முடிவு செய்யப் பட்டது. எத்தகைய மோசமான ஒரு சூழ்நிலையில் தமிழ் மாகாணம் அமைக்கவும், தட்சணப் பிரதேசத் திட்டத்தை முறிய டிக்கவும், எல்லைப் பகுதிகளை மீட்கவும் தி.மு.க.வின் உதவியை நான் நாடினேன் என்பதைப் புலப்படுத்தவே அமிர்த சரஸ் நிகழ்ச்சிகளை நான் இங்கு எடுத்துக் காட்டினேன்.

நேசமணியின் போக்கு

வியக்கத்தக்க செய்தி என்னவென்றால், திரு. நேசமணியின் செல்வாக்கில் இயங்கிய திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அர்த்தாலிலே என்னோடும் நான் அமைத்த கூட்டணியோடும் ஒத்துழைக்க மறுத்துவிட்டதாகும். இதற்குக் காரணம் கூறித் திரு. காமராசரின் 'பாஷை'யிலே அறிக்கை விட்டிருந்தார் என் மதிப்பிற்குரிய நண்பர் திரு. நேசமணி. தேவிகுளம் தாலுகாவின் தலைநகரான மூணாறில் நண்பர் நேசமணி சிறைப்பட்டது பற்றி நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். தேவிகுளம், பீருமேடு தாலுக்காக்களைத் தமிழகத்தோடு இணைப்பதற்காகத்தான் திரு. நேசமணி மூணாறு நகரில் சிறைப்பட்டார். அவர் சோதனைக்காலம் வந்தபோது என்னை — இல்லை, தேவிகுளம் — பீருமேடு தாலுக்காக்களில் வாழும் தமிழர்களைக் கைவிட்டு விட்டார். குமரி மாவட்டம் கிடைத்ததோடு திருப்தியடைந்துவிட அவர் தயாராகி விட்டார்! அதற்கு மேலும் என்னோடு சேர்ந்து எல்லைப் போர் நடத்துவதால், திரு. காமராசரைப் பகைத்துக் கொள்ள வேண்டி நேரிடுமென்று அவர் அஞ்சினார். இப்படி எத்தனையோ துரோகங்களுக்கும் தொல்லைகளுக்குமிடையில் பிப்ரவரி 20-இல் தமிழ்நாடு முழுவதிலும் அர்த்தால் வெற்றிகரமாக நடந்து முடிந்தது கண்டு மகிழ்ந்தேன். ஆனால், மத்திய அரசையும், மாநில அரசையும், அங்கிங்கெனாதபடி இந்தியா எங்கணும் செல்வாக்கு பெற்றிருந்த காங்கிரஸ் கட்சியையும் புறங்காண்பதற்கு வெற்றிகரமான அர்த்தால் ஒன்று மட்டுமே போதாது என்பதை நான் உணர்ந்திருந்தேன். ஆதலால், அர்த்தாலுக்கு முந்திய நாட்களிலும், அர்த்தால் முடிந்த பிந்தைய நாட்களிலும் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டேன். ஆம்; மீட்கப்பட வேண்டிய — தகராறுக்குரிய — எல்லைப் பகுதிகளுக்கெல்லாம் சென்றேன்.

நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் தாலுக்காவைப் பறித்துக் கொண்டுவிடக் கேரளர் முயற்சித்ததால், அந்தத் தாலுக்காவைத் தமிழகத்திலே நிறுத்தி வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டேன். பசல் அலி கமிஷன் அறிக்கை வெளியானதும் குன்னூரிலே நீலகிரி மாவட்ட தமிழரசுக் கழக

மாநாட்டைக் கூட்டி, கூடலூரைக் காப்பதற்கு இளைஞர்களைத் தயார்படுத்தினேன். இந்த மாநாட்டை நடத்துவதற்குத் திரு. ஜேசுதாஸ் என்ற பெரியவர் முழு அளவில் பொறுப்பேற்றார்.

அன்றைய திருவிதாங்கூர் — கொச்சி ராஜ்யத்திலே திருச்சூர் மாவட்டத்திலிருந்த கொச்சின் சித்தூர் தாலுக்காவைத் தமிழகத்தோடு இணைப்பதற்காக ''சித்தூர் தாலுக்கா தமிழர் மாநாடு'' ஒன்றைக் கொழிஞ்சாம்பாறை என்னும் ஊரில் கூட்டும்படி செய்தேன்.

நேருஜி பணிந்தார்!

அன்றைய மலபார் மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த பாலக்காடு தாலுக்காவைத் தமிழகத்தோடு இணைக்க வேண்டுமென்பதற்கு ஆதரவு திரட்ட முதல்மடை என்னும் கிராமத்தில் ''பாலக்காடு தாலுக்கா தமிழர் மாநாடு'' ஒன்றைக் கூட்டுமாறு செய்தேன். இந்த மாநாடுகளில் நானும் கலந்து கொண்டேன். எளியவனாகிய நான் எனது சக்திக்கு மீறிச் செயல்புரிந்து பசல் அலி கமிஷன் பரிந்துரையால் தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பரிகாரம் காண முயன்றேன். ''மொழி வழி மாநிலக் கோரிக்கையாளர்களுடன் தெருச் சண்டைக்கும் நான் தயார்'' என்று நேருஜி பேசிய வீம்பு வெற்றி பெறவில்லை. தமிழகத்தில் அர்த்தால் நடந்து முடிந்த ஒரு மாதத்திற்குள் நேருஜியின் தட்சிணப் பிரதேசத் திட்டம் அவராலேயே திரும்பப் பெறப்பட்டது. ஆம்; தமிழகத்தைப் பொறுத்தவரையில் தட்சிண ராஜ்யத் திட்டம் தொலைந்தது! ''தமிழ் ராஜ்யம்'' அமைவது உறுதியாகி விட்டது. இந்த அறிவிப்பு வெளியான போது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. ''புதிய தமிழகம்'' படைப்பதென்ற எனது நெடுநாளையக் கனவு நனவானது.

என் மனத்திலுள்ள ஒரு குறையை மறைக்காமல் இங்கு வெளிப்படையாக நான் சொல்லியாக வேண்டும். பிப்ரவரி 20-இல் தமிழகம் முழுவதிலும் அர்த்தால் நடத்தத் தமிழரசுக் கழகத்தோடு ஒத்துழைத்த கட்சிகளில் ஒன்றுகூட அதற்கப்புறம்

எல்லைகளை மீட்பதிலே ஆர்வங் காட்டவில்லை. பொதுத் தேர்தலுக்குப் பத்து மாதங்களே இருந்ததால், வெற்றிகரமாக நடந்த அர்த்தால் காரணமாக ஆளுங்கட்சிக்கு ஏற்பட்ட பலவீனத்தையும் தங்களுக்கு ஏற்பட்ட பலத்தையும் பொதுத் தேர்தலுக்குப் பயன்படுத்திக் கொள்வதில் அந்தக் கட்சிகள் கருத்து செலுத்தின. தேர்தலைப் பற்றிக் கவலைப்படாமல் த.அ.க. மட்டுமே தனித்துச் செயல்படலானது. தமிழர் கூட்டணி நடத்திய அர்த்தால் காரணமாக அப்போதைக்குக் கிடைத்த ஒரே பலன் தட்சிணப் பிரதேசத் திட்டம் பிரதமர் நேருவால் கைவிடப்பட்டதாகும். நானும் அத்துடன் திருப்தியடைய வேண்டியவனானேன்.

அர்த்தாலுக்குப் பிறகும் தேவிகுளம் — பீருமேடு தாலுக்காக்களை மீட்பதிலே கூட்டணியிலிருந்த அரசியல் கட்சிகள் ஆர்வத்தோடு எனக்குக் கைகொடுத்திருந்தால் நிச்சயம் அந்தத் தாலுக்காக்களைத் தமிழகத்தோடு இணைத்திருக்க முடியும். வெளுத்ததெல்லாம் பாலாகிவிடுமா?

1946 முதல் 1956 வரை

சுய சரிதம் எழுதப் புகுந்த நான் என் குடும்பத்தை எங்கோ விட்டுவிட்டு நெடுந்தூரம் வந்து விட்டேன். ஆம்; குடும்ப வாழ்க்கை வேறு, பொது வாழ்க்கை வேறு என்றில்லாமல், பொது வாழ்க்கையிலே குடும்ப வாழ்க்கையை மறைத்து விட்டதன் விளைவு இது. ''மரத்தை மறைத்தது மாமத யானை'' என்பது போலத்தான்!

1946-க்குப் பின் — அதாவது தமிழரசுக் கழகம் தொடங்கிய பின்னர், என்னளவில் குடும்ப வாழ்க்கை என்பது இரண்டாந்தரமானதாக ஆகிவிட்டது. குடும்பக் கடமைகளும் பொதுக் கடமைகளும் போட்டியிடுங்கால் பின்னதற்கே முதன்மை தருவது எனக்கு வழக்கமாகி விட்டது. ஆயினும், தாய், தந்தை, தம்பி, தங்கை, மனைவி, மக்கள் ஆகியோரிடமிருந்து பிரிந்து நான் பொது வாழ்க்கை நடத்தவில்லை. அந்தத் 'துறவு' வாழ்க்கைக்கு எனது மனம் ஓரளவு பக்குவப்பட்டிருப்பினும், ஏனோ துணிவு பிறக்கவில்லை. குடும்பத்திலிருந்து கொண்டேதான் — மனைவி மக்களுடன் வாழ்ந்து கொண்டேதான் புதிய தமிழகம் படைக்கும் புனிதப் பணியிலும் ஈடுபட்டு வருகிறேன். ஆகவே, 1946-க்கும் 1956-க்கும் இடைப்பட்ட பத்தாண்டுக் காலத்தில் எனது குடும்ப வாழ்வு சம்பந்தப்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளைச் சுருக்கமாகவேனும் இங்குக் கூற வேண்டியது அவசியமாகிறது.

குடற்புண் கொடுமை

குடற்புண் காரணமாகத் தாங்க முடியாத வயிற்று வலியால் தினமும் கஷ்டப்பட்டுக் கொண்டேதான் நான் பொது வாழ்க்கை நடத்தி வருகிறேன். அதிக உணவு உண்டு விட்டாலும் வயிற்றுவலி தொல்லைப்படுத்தும். உணவே உண்ணாமல் வயிற்றைப் பட்டினி போட்டாலும் குடலிலே ஏற்பட்டுள்ள புண் அந்தக் குடலையே தின்னும். அந்த நேரத்திலே வயிற்று வலியைத் தாங்க முடியாமல் எனக்கு மயக்கமேற்படுவதுமுண்டு.

1946-க்கும் 1956-க்கும் இடையில் உள்ள பத்தாண்டுக் காலத்தில்தான் வயிற்று வலியால் நான் அதிகமாகத் தொல்லைப் பட்டேன். தற்கொலை மனப்பான்மை கூட ஏற்பட்டதுண்டு. அதிலிருந்து என்னைத் தடுத்துக் காத்தது தமிழ் மொழியிடத்து எனக்குள்ள அழுத்தமான பற்றுதலும், புதிய தமிழகம் படைப்ப தில் எனக்குள்ள ஆர்வமுமேயாகும். 'இருந்தமிழே உன்னால் இருந்தேன்' என்று ஒரு புலவர் பாடினாரே, அது எனக்கும் பொருந்தும்.

கண்ணகியும் மாதவியும்

1950-இல் என் மனைவி ஒரு பெண் மகவை ஈன்றாள். என் மகன் திருநாவுக்கரசு பிறந்த 9 ஆண்டுகளுக்குப் பின்னர் பெண் மகவு. பிறந்ததற்காக நான் பெருமகிழ்ச்சி அடைந்தேன். சிலப் பதிகாரத்தில் ஆழ்ந்த புலமையும் அழுத்தமான பற்றும் ஏற்பட்ட பின்னர் பிறந்த குழந்தையாதலால், ''கண்ணகி'' என்று பெயர் வைத்தேன். தமிழ் மொழிக்கு அடுத்தபடியாக நான் மிகுந்த பற்று வைத்திருப்பது என்னுடைய செல்வி கண்ணகி யிடம்தான்.

கண்ணகி பிறந்த ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் 1957 சித்திரைத் திங்கள் முதல் நாளிலே மற்றொரு பெண் மகவை என் மனைவி ஈன்றாள். அந்த மகவுக்கு ''மாதவி'' என்று பெயர் வைத்தேன்.

என்னுடைய பெண் குழந்தைகளுக்குப் பெயர் வைப்பதிலே என் மனைவிக்கும் எனக்கும் கருத்தொற்றுமை ஏற்படவில்லை. கண்ணகி என்று பெயர் வைக்க என் மனைவி அஞ்சினாள். ஆம்; சிலப்பதிகார கண்ணகிக்கு நேர்ந்துவிட்ட கொடுமைகள் தன் மகளுக்கும் நேரக் கூடாதென்பதிலே அவளுக்கு அக்கறை! மாதவி என்ற பெயரையும் என் மனைவி எளிதில் ஏற்றுக் கொள்ளவில்லை. மாதவியை ஒழுக்கங்கெட்ட பரத்தையாகக் கருதி, அவள் பெயரைத் தன் மகளுக்கு வைக்கத் தயங்கினாள். சிலப்பதிகார மாதவியை அவள் அறியமாட்டாள். அவள் அறிந்து வைத்திருந்தது நாடக மேடையில் அறிமுகப்படுத்தப்

பட்ட மாதவியைத்தான். தன்னுடைய பெண் குழந்தைகளுக்குப் பெயர் வைப்பதிலே என் மனைவி என்னுடன் மன வேறுபாடு காட்டினாலும் இறுதியில் என் கருத்தை ஏற்றுக் கொண்டாள்.

ஆந்திரப் புரோகிதர்கள்!

தமிழினத்தார் தங்கள் குழந்தைகளுக்குப் பெயர் வைப்ப திலே இனப்பற்றை வெளிப்படுத்துவதில்லை. தமிழ்நாட்டில் தோன்றிய சரித்திர நாயக — நாயகியருடைய பெயர்களைத் தங்கள் குழந்தைச் செல்வங்களுக்கு வைப்பதிலே தமிழ் மக்கள் ஆர்வங் காட்டாதது கண்டு என் மனம் அடிக்கடி வருந்துவ துண்டு. தூய தமிழிலே பெயர் வைப்பதனை நான் விரும்பி வரவேற்கிறேன். அதைவிட, தமிழினத்தின் வரலாற்று வழிப் பட்ட பெயர்களையே நான் அதிகம் விரும்புகிறேன். அத்தகைய பெயர்கள் வடமொழியில் இருப்பினும், அவற்றை என் மனம் வரவேற்கின்றது. சரித்திரச் சிறப்புகளைப் போற்றாத இனத் துக்கு எதிர்காலம் இருண்டு விடும். கண்ணகியையும் மாதவி யையும் காப்பியப் பாத்திரங்களாக மட்டுமல்லாமல் சரித்திர நாயகியராகவும் நான் கருதுகிறேன். அந்த வகையில்தான் என்னுடைய பெண் குழந்தைகளுக்கு அவர்களுடைய பெயர் களை வைக்கலானேன்.

பிராமணப் புரோகிதர்கள் சொல்லுகிறபடி குழந்தைகளுக் குப் பெயர் வைக்கும் வழக்கம் நாட்டில் இருந்து வருகிறது. நாம நட்சத்திரப்படி எழுத்துகளைத் தேர்ந்தெடுத்து, அந்த எழுத்துகள் தலைப்பில் வரும்படியாகப் பெயர்களைச் சொல்லு கின்றனர் புரோகிதர்கள். தமிழ்நாட்டிலே ''புரோகிதர்கள்'' என் போர் அநேகமாகத் தெலுங்கர்களாகவே இருக்கின்றனர். ஆம்; தமிழினத்தாருக்கு வேற்று மொழியினரான ஆந்திர இனத்தார் குருமார்களாகி விட்டனர். இந்தக் கொடுமை விஜயநகர சாம் ராஜ்யத்திற்குத் தமிழகம் அடிமைப்பட்டிருந்த காலத்தில் தோன் றியிருக்க வேண்டும். பழமையான மொழியையும் பண்பாட்டையும் பெற்றுள்ள தமிழினத்தாருக்கு வந்தேறிகளான தெலுங்கர்கள் குருமார்களாக அமைவதை நம்முடைய முன்னோர்கள் எப்படித்தான் ஏற்றுக் கொண்டார்களோ?

இதனை நினைத்தாலே எனது நெஞ்சு வேதனைப்படுகிறது. இந்தக் கலாச்சார அடிமைத் தனத்திலிருந்து விடுபடுவதற்காக வேனும் தமிழினத்தார் புரோகிதத்தைக் கைவிடலாமென்று கூறு வேன். தமிழினத்தாரின் பெயர்கள் கூடத் தூய தமிழிலே அமைய வில்லையானால், அது தமிழுக்குப் பெருமை தருவதா குமா?

தமிழர் இல்லங்களில் வரும் தெலுங்குப் புரோகிதர்களுக்கு சமஸ்கிருத ஞானமோ, சாத்திர ஞானமோ அறவே கிடையாது. அவர்கள் தெலுங்கு எழுத்துகளில் சமஸ்கிருத சுலோகங்களை எழுதி மனனம் செய்து கொண்டு பிழையாக உச்சரிக்கின்றனர். நம்முடைய அறியாமையால் அவர்களைச் சாத்திர ஞான முடைய சமஸ்கிருதப் பண்டிதர்களாக நினைத்து நாம் ஏமாறு கிறோம்.

கண்ணகி அச்சகம்

1950-இல் சொந்தத்தில் ஒரு அச்சகம் வைத்துத் தொழில் நடத்திப் பொருள் தேட வேண்டுமென்று விரும்பினேன். அதன் காரணமாக எனது வீட்டிலேயே பின்புறத்திலுள்ள காலியிடத் தில் ஒரு சிறு கட்டிடத்தை எழுப்பினேன். இதற்காக ரூபாய் இரண்டாயிரம் கடன்பட்டேன்.

அச்சகத்திற்குத் தேவைப்படும் அச்செழுத்துகளைச் சென்னையிலுள்ள நெல்சன் கம்பெனியாரிடமிருந்து கடனாகப் பெற்றேன். ''கண்ணகி அச்சகம்'' என்னும் பெயரில் தொழில் தொடங்கினேன். நாளடைவில் சிறிய அச்சு யந்திரம் (ட்ரெடில்) ஒன்றை வாங்கினேன். 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தம்முடைய நண்பர்கள் சிலரிடமிருந்து திரட்டித் தந்த பணத்தால் தான் இந்த யந்திரத்தை வாங்கினேன். மற்றொரு நண்பரிடம் கடனாக மூவாயிரம் ரூபாய் பெற்று வெட்டு யந்திரமும் (கட்டிங் மெஷினும்) வேறு சில சாமான்களும் வாங்கினேன். தேவைப் பட்ட சிப்பந்திகளை மாதச் சம்பளத்தில் தொழிலுக்கு அமர்த்தி னேன். இதெல்லாம் படிப்படியாகத்தான் நடந்தன. ஆனால், இந்த அச்சகத்தை ஏற்படுத்தியதால் நான் மனநிம்மதி பெற

வில்லை. என் வாழ்க்கையில் முன் எப்போதும் அனுபவித்திராத அல்லல்களையும் அவமானங்களையும் சந்தித்தேன்.

எனக்கு அச்சுக் கோக்கும் தொழிலில் பயிற்சி இருந்ததால் எனது அச்சகத்தில் பணிபுரிந்த தொழிலாளர்களோடு நானும் ஒரு தொழிலாளியாக இருந்து பாடுபட்டுப் பொருள் திரட்ட முயன்றேன். ஆனால், இரண்டாண்டுகள் கூட அச்சகம் நடைபெறவில்லை. அதற்குள்ளேயே 'மூடு விழா' நடத்திவிட்டேன். நான் யாரை நம்பி அச்சகத்தை ஒப்படைத்தேனோ அவர்கள் அந்த நம்பிக்கைக்கேற்ப நடந்து கொள்ளவில்லை. யந்திரங்களை நஷ்டத்திற்கு விற்று, அவற்றை வாங்குவதற்காகப் பெற்ற கடன்களில் ஒரு பகுதியைத் திருப்பிக் கொடுத்தேன்.

அமீனாவைக் கண்டு அழுதேன்!

கொடுக்கத் தவறிய கடன்களில் நெல்சன் கம்பெனியின் அச்செழுத்துகள் வாங்கிய கடனும் ஒன்றாகும். நெல்சன் கம்பெனி உரிமையாளர்களில் மூத்தவரான திரு.ஏ.எம். சம்பந்தம் அவர்களோடு எனக்கு நட்பு இருந்தது. அவர் கூறிய ஆலோசனையின் பேரில்தான் நான் அச்சகத்தைத் துவக்கும் துணிவைப் பெற்றேன்.

1952-இல் நடந்த பொதுத் தேர்தலுக்குப் பின் ராஜாஜி அமைச்சரவை ஏற்பட்டபோது காங்கிரசுக்குள்ளே கோஷ்டிப் பூசல் வலுத்ததல்லவா! அந்தப் பூசலிலே, ஏ.எம். சம்பந்தம் அவர்கள் காமராசர் கோஷ்டியின் முன்னணித் தளபதிகளில் ஒருவராக இருந்தார். நான் ராஜாஜி கோஷ்டியில் இருந்தேனாதலால், அவருக்கும் எனக்கும் இருந்த நட்பு நலிவுற்றது.

திடீரென்று ஒரு நாள் கோர்ட் அமீனா ஒருவர் என் வீட்டிற்கு ஜப்திக்காக வந்தார். அவரைக் கண்டதும் நான் அதிர்ச்சியுற்றேன். என் வீட்டில் அமீனா புகும் நாள் வரும் என்று நான் கனவு கூடக் கண்டதில்லை. அப்படிப்பட்ட தொல்லை வரக்கூடாதென்பதற்காகவே கடன்படும் வழக்கத்தையே தவிர்த்து வந்தேன். உண்மையில் அச்சகம் வைத்த

சந்தர்ப்பத்தில் தவிர அதற்கு முன்னும் பின்னும் நான் ஒரு பெருந்தொகை என்ற அளவில் யாரிடமும் கடன் பட்டதே கிடையாது.

வக்கீல் நோட்டீஸ் கிடைக்காமல், சம்மனும் கைக்கு வராமல், நீதிமன்றத்திற்கும் நான் போகாமல், என் வீட்டில் அமீனா நுழைய நேர்ந்ததென்றால், படிப்போருக்கு வியப்பாக இருக்கும். நானும் வியப்படைந்தேன். அரசியல் கோஷ்டிப் பூசல் என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கியது. சிவில் சட்டத்தில் உள்ள இடுக்குகளெல்லாம் எனக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டன. என் வீட்டில் புகுந்த அமீனா, சுமார் இரண்டாயிரம் ரூபாய் — வட்டி, கோர்ட் செலவு உள்பட — டிக்கிரிக்காக வீடு முழுவதையுமே பூட்டிவிட்டு, என்னையும் என் குடும்பத்தையும் நடுத்தெருவில் நிறுத்த முயன்றார்.

கோஷ்டிப் பூசலின் விளைவு

1952-இல் நடந்த பொதுத் தேர்தலிலே நெல்சன் சம்பந்தம் அவர்கள் திருவல்லிக்கேணித் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக நின்றார். நான் அக்ரகாரத்தின் பரிபூரண நம்பிக்கைக்குரியவனாக இருந்த காலம் அது. அதனால், எனது நாவன்மையையும், உடலுழைப்பையும், படித்த வகுப்பாரிடம் எனக்கிருந்த தனிப்பட்ட செல்வாக்கையும், தமிழரசுக் கழகத்தின் பலத்தையும் முழு அளவில் பயன்படுத்தி திரு. சம்பந்தம் அவர்களுக்கு வெற்றி தேடித் தந்தேன். இது நிகழ்ந்த பத்து மாதங்களுக்குள் தான் நெல்சன் கம்பெனியின் சார்பில் அமீனா என் வீட்டில் நுழைந்தார். அன்று அவமானந் தாங்காமல் கண்ணீர் விட்டே அழுதுவிட்டேன். தன் வீட்டில் அமீனா புகுந்த நேரத்தில்கூட ஒருவன்அழவில்லையென்றால், கண்ணீர் இருந்தும் பயனென்ன? ராஜாஜி கோஷ்டியில் இருந்த ஒரே பாவத்திற்காகத் தான் காமராஜ் கோஷ்டியினர் என்னை இப்படி எல்லாம் அவமானப்படுத்தினர். ஆயினும், அமீனாவிடமிருந்து மீள்வதற்கு நான் ராஜாஜியிடமோ, அவருடைய கோஷ்டியைச் சார்ந்த செல்வந்தரிடமோ பொருளுதவி கோரவில்லை. எனக்கு நேர்ந்த இந்த இன்னல் பற்றி ராஜாஜியிடம் சொன்னதுகூட இல்லை.

மிட்லண்ட் இன்சூரன்ஸ் கம்பெனியின் நிர்வாகிகளான திரு.ரவை. மாணிக்க முதலியாரும், திரு. தியாகராச செட்டியாரும் என்பால் அனுதாபம் காட்டி, எனக்கு உதவி செய்ய முன்வந்தனர். நெல்சன் கம்பெனி வழக்கறிஞரிடம் சமரசம் பேசி, ஒரு வாரத்திற்குள் எனது கடனைத் தாங்கள் கொடுத்து விடுவதாக உறுதி கூறினர். அதன் பேரில், காலையில் 8 மணிக்கு என் வீட்டில் புகுந்த அமீனா இரவு 7 மணிக்கு வெளியேறினார். இது நிகழ்ந்த ஒரு வாரத்திற்குப் பின்னர், என் மனைவி தனக்குச் சொந்தமான வீட்டை மிட்லண்ட் கம்பெனியாரிடம் அடகு வைத்து நெல்சன் கம்பெனிக்கு நான் பட்ட கடனைத் தீர்த்தாள்.

கண்ணகி அச்சகத்தில் பல மாதங்கள் ஓய்வின்றி வேலை நடந்தது. ஆனால், பலன் பூஜ்யம்! எனது திறமையின்மைக்குக் கிடைத்த தண்டனை அது. அச்சகத்தைக் கவனியாமல், அரசியல் நடத்திக் கொண்டிருந்த எனக்கு இந்தத் தண்டனை தேவைதானே!

அருமைத் தங்கையை இழந்தேன்!

என்னுடைய அன்னையார் பத்துப் பிள்ளைகளைப் பெற்றிருந்தாலும், எனக்குப் புத்தி தெரிந்த பின்னர் இரு தம்பியரையும் ஒரு தங்கையையுந்தான் நான் காண முடிந்தது. என் தங்கையை அதன் பிள்ளைப் பருவத்தில் நான் தூக்கி வளர்த்தேன்.

அன்பும் அறிவும் நிறைந்த தங்கையாதலால் அதனிடம் நான் மிகுந்த அன்பு கொண்டிருந்தேன். அந்த ஒரே தங்கையை — நான் தூக்கி வளர்த்த செல்வியை 1953-இல் பறிகொடுத்தேன். தங்கை பாலம்மாள், காலரா நோய் கண்டு, தண்டையார்ப் பேட்டை மருத்துவமனையில் காலமானார். தான் உயிர் துறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் என்னுடைய அருமைத் தங்கை என்னைச் சந்தித்து மாற்றுப் புடவையில்லாமல் தான் வருந்துவதாகக் கூறி, புடவை ஒன்று வாங்கித் தருமாறு விம்மியழுத வண்ணம் என்னைக் கேட்டாள். ஒரு தரித்திரம் இன்னொரு தரித்திரத்திற்கு விடுத்த வேண்டுகோள் இது. என் தங்கையின் வேண்டுகோள் எதுவானாலும் அதனை நிறைவேற்றி வைக்கும்

அளவுக்கு அதனிடம் அன்புடையவன் நான்.ஆனால், என் வறுமை காரணமாக, ஒரு வாரத்திற்குப் பிறகு புடவை வாங்கித் தருவதாக வாய்தா போட்டேன். சொன்னபடி ஒரு வாரத்திற்குப் பிறகு என் தங்கைக்காக நான் ஒரு புடவை வாங்கினேன். அது, அந்தச் செல்வியின் பிணத்தின் மீது போடுவதற்கான கூறைப் புடவை!

என் வாழ்க்கையில் என் தங்கை காலமான நாளிலே தான் அநேகமாக ஒரு பகல் முழுவதும் நான் தண்டையார்ப்பேட்டை தொத்து நோய் மருத்துவமனையில் இருக்க நேர்ந்தது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மருத்துவமனைக்கு வரும் நோயாளி கள் நிலையை அறிய முயன்றேன். அந்த ஆண்டிலேயே அன்றுதான் அதிகமானவர்கள் அந்த மருத்துவமனையில் மாண்டனர் என்றும், காலரா கண்டு அம்மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்கள் எண்ணிக்கையும் அன்றுதான் அதிகம் என்றும் அறிந்தேன்.

அவசரத் தேவைக்கான மருத்துவர்களும், நர்சுகளும், படுக்கைகளும், நோயாளிகளைக் கொண்டு வருவதற்கான மோட்டார்வான்களும் இல்லையென்றும், அதனால் பல உயிர்க ளைக் காக்க முடியாமல் போய்விடுகிறதென்றும் தொத்து நோய் மருத்துவமனை அதிகாரிகள் என்னிடம் கூறிக் குறைபட்டுக் கொண்டனர். நான் அப்போது மாநகராட்சியில் ஆல்டர்மேனா கப் பதவி வகித்தேன். ஆணையரிடமும் மேயரிடமும் எனக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. அதனால், நகரில் காலராக் கொடு மையைக் குறைக்க முழு முயற்சி எடுத்துக் கொண்டேன்.

தங்கையின் ஆன்மா சாந்தி பெற...

தண்டையார்ப்பேட்டை தொத்து நோய் மருத்துவமனை சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்திலிருக்கிறது. ஆயினும், நகரில் காலராவின் கொடுமை உச்சகட்டத்திலிருந்த நாளில் மாநகராட்சி ஆணையரோ, சுகாதார அதிகாரியோ, மேயரோ அதனை அறிந்திருக்கவில்லை.

என் தங்கை இறந்த மறுநாளே தற்செயலாகச் சென்னை மாநகராட்சியின் சாதாரணக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே தொத்து நோய் மருத்துவமனை பற்றி நான் அறிந்தவற்றை உருக்கமாக விளக்கினேன். எனது பேச்சு ஆணையரையும், மேயரையும், மாநகராட்சி உறுப்பினர்களை யும் பெரிதும் கவர்ந்தது. அதனால், நகரில் — குறிப்பாக, குடிசைப் பகுதிகளில் கோரத் தாண்டவமாடிய காலரா நோயை ஒழித்துக்கட்ட அவசர உதவியளிக்க ரூபாய் இருபதாயிரம் மாநகராட்சி நிதியிலிருந்து ஒதுக்குவதென உடனடியாக முடிவு செய்யப் பட்டது.

மறுநாளே மேயர், சுகாதார அதிகாரி, நான் ஆகிய மூவரும் தண்டையார்ப்பேட்டை தொத்து நோய் மருத்துவமனைக்கும், நகரில் காலரா நோய் பரவியிருந்த குடிசைப் பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டு நிலைமையை அறிந்தோம். அங்கெல் லாம் நான் கண்ட கோரக் காட்சிகள் என் மனதில் இன்னமும் நிழலாடுகின்றன. நாங்கள் காலராத் தடுப்பு ஊசிப் போட்டுக் கொண்டுதான் சென்றோம். காலராப் பகுதிகளுக்குச் செல்ல நான் பயப்படுபவன்தான். அதிகாரப் பொறுப்பு எதுவும் எனக்கு இல்லாததால், நான் ஒதுங்கிக் கொண்டிருக்க முடியும். ஆனால், என் தங்கையின் மரணம் காரணமாக நான் புதிய உணர்வு பெற்றிருந்தேன். அந்தச் செல்விக்கும், அவர்தம் குழந்தைகளுக் கும் நேர்ந்த கொடுமை வேறு குடும்பங்களுக்கு நேராமல் தடுப்பதற்குத் தொண்டாற்ற வேண்டுமென்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. இந்தத் தொண்டு காரணமாக, மறைந்த என் தங்கையின் ஆன்மாவுக்கு அமைதி தேட முடியுமென்று நான் நம்பினேன்.

எனது தூண்டுதலால் சென்னை மாநகராட்சி மேற்கொண்ட அவசர நடவடிக்கைகள் காரணமாக நகரில் காலரா நோய் மூன்றே நாட்களில் கட்டுப்படுத்தப்பட்டது. அதனால், பலர் மரணத்திலிருந்து காப்பாற்றப்பட்டனர். இது தங்கையை இழந்ததால் எனக்கேற்பட்டிருந்த துக்கத்தைச் சிறிது குறைத்த தெனலாம்.

என் பெற்றோரை வடசென்னையிலே விட்டுவிட்டு நான் என் மனைவியோடு தென்சென்னையில் குடியேறினேன் என்ப தனை ஏற்கனவே கூறியிருக்கிறேன். என் அன்னையார் தன் ஒரே மகளிடம் அதிகமான பாசம் கொண்டிருந்தார். பெண் களுக்கு இது இயற்கை.

தங்கையைப் பரம ஏழைக்கு நாங்கள் வாழ்க்கைப்படுத்தி னோம். அதனால், அவர் தன் வாழ்நாள் முழுவதும் கொடிய வறுமைக்கு இரையாக நேர்ந்தது. என் பெற்றோர் தங்களுடைய ஒரே மகளுடன் இருக்க விரும்பினர். அவர்களுக்காக மாதந் தோறும் நான் உதவி வந்த சொற்பப் பணம் என் தங்கையின் குடும்பத்துக்கும் பயன்பட்டது.

வறுமையிற் செம்மை

இலஞ்சலாவண்யமின்றி, பிரதிபலனை எதிர்பார்க்காமல் வாழ வேண்டுமென்று தான் பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள எல்லோருமே விரும்புகின்றனர். ஒரு சிலரே இதற்கு விலக்கான வர்களாக இருக்க முடியும். ஆனால், வறுமையோடு போராடிக் கொண்டு பொது வாழ்க்கை நடத்துவதென்பது எல்லையற்ற துன்பந்தருவதாகும். பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவருக் குச் செல்வாக்கு வளரவளர, அதனால் ஏற்படும் அந்தஸ்தைக் காத்துக் கொள்வதற்காகவும் அவருக்கு ஓரளவு நிரந்தரமான வருவாய் தேவைப்படுகிறது. அந்த வருவாய்க்கு வழியில்லாத போது பொது வாழ்க்கையே துன்பமயமாகி விடுகின்றது. இதனை அரை நூற்றாண்டு காலப் பொது வாழ்க்கையில் நான் அனுபவித்திருக்கிறேன். வறுமையிற் செம்மை காத்து வாழ்வ தென்பது எல்லோராலும் முடிவதில்லை. உண்மையான தெய்வப்பற்றும், பாவ புண்ணியங்களிலே நம்பிக்கையும் கொண்டு, ஆன்மிகத் துறையில் சிறிதளவேனும் தொடர்பு வைத்திருப்போருக்கே ஒழுக்கத்தோடு கூடிய வாழ்க்கை நடத்து வது ஓரளவேனும் சாத்தியமாகிறது. எப்படியும் வாழலாம் என்பதனைக் கொள்கையாகக் கொண்டு ஒழுக்க நெறியிலிருந்து பிறழ்வோரைப் பழிக்கின்றவர்கள், இப்படித்தான் வாழ வேண் டும் என்ற நியதியுடன் ஒழுக்க நெறியில் காலூன்றி நின்று வாழ்க்கை நடத்திக் கஷ்டப்படுகின்ற உயர் நெறியாளர்களைப்

போற்றுவதில்லை. அப்படிப்பட்டவர்கள் மீதும் பழிகூறித் தூற்று வதிலே இன்பங் காண்போர் சமுதாயத்தில் இருக்கின்றனர்.

பொது வாழ்க்கையில் எத்தனையோ தூற்றுதல்களை நான் அனுபவித்ததுண்டு. நமது நாட்டிலே இது ஒரு 'கலை'யாகி விட்டது. வறுமையோடு போராடிக் கொண்டு பொது வாழ்க்கை நடத்துவதிலே உள்ள துன்பங்களைக் கூடச் சகித்துக் கொள்ள முடிகிறது. ஆனால், அந்த நிலையிலும் ஒழுக்கங்கெட்ட சிலரால் தூற்றப்படுவதைத்தான் சகித்துக் கொள்ள முடிவ தில்லை. என்ன செய்வது? பொது வாழ்க்கையில் ஈடுபட்டவன் இதையும் சகித்துக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

அன்றாடத் தேவைகளுக்கு என் குடும்பம் கஷ்டப்பட்ட நாட்களிலே ஒழுக்க நெறியிலிருந்து வழுக்கும்படி செய்வதற் கான சந்தர்ப்ப நிர்ப்பந்தங்கள் எத்தனையோ முறை எனக்கும் ஏற்பட்டதுண்டு. ஆனால், காந்தியத்தில் எனக்குள்ள அழுத்த மான பற்றுதல் அந்த அபாயங்களிலிருந்து என்னைக் காத்து வந்திருக்கிறது என்பதனை நான் உறுதியாகக் கூற முடியும்.

'தாத்தா'வானது!

செட்டி நாட்டில் வேகுப்பட்டி என்னும் ஊரில் இலக்கிய விழா ஒன்றில் பேசுவதற்காகச் சென்றிருந்தேன். அந்த விழா விலே எனக்குப் படித்துக் கொடுப்பதற்காக கவிதை நடையில் பாராட்டிதழ் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதனைப் படிக்க வேண்டிய நேரத்திலே விழாவை நடத்திய மன்றத்தின் தலைவருக்கும் செயலாளருக்குமிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது. செயலாளர் பாராட்டிதழைப் படிக்க முன் வந்த போது, தலைவரானவர் அவரைத் தடுத்து நிறுத்தினார். நான் கூட, எனக்குப் பாராட்டிதழ் படித்துத் தருவதை அந்தத் தலைவர் விரும்பவில்லையோ என்று ஐயுற்றேன். அப்புறம்தான் உண்மை தெரிந்தது!

பாராட்டிதழைத் தயாரித்தபோது அந்த மன்றத்தார் என்னை வயதான கிழவனாகக் கருதினர். ஆம், பத்திரிகை களில் வெளியான எனது உருவப்படம் அவர்களை அப்படிக்

கருதும்படி செய்தது. அதனால், என்னைப் பாராட்டும் கவிதை யில் ''தாத்தா, தாத்தா'' என்ற வார்த்தை வரிக்கு வரி போடப்பட் டிருந்தது.

''வ.உ.சி. தாத்தாவை
மறவாத தாத்தா!
ம.பொ.சி. தாத்தாவே
வாழ்க நீர் வாழ்க!''

என்ற வரிகள் மட்டும் இன்னும் என் நினைவிலிருக்கின்றன. நாற்பது வயதுடைய நடுத்தரப் பருவத்தினனான என்னைத் தாத்தாவாக வருணிக்கும் பாராட்டிதழைப் படித்தளித்தால் என்னை அவமதித்ததாக நான் கோபித்துக் கொள்ளக் கூடு மென்று தமிழ் மன்றத் தலைவர் கருதினார். செயலாளரோ, பணம் செலவழித்துப் பாராட்டிதழை அச்சடித்து விட்டதால், படித்துத் தரத்தான் வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தார். விஷயமறிந்ததும், மன்றத் தலைவரைச் சமாதானப்படுத்தி, பாராட்டிதழைப் படிக்கச் செய்தேன். அதைப் படிக்கும்போது வரிக்கு வரி மக்கள் கைதட்டிச் சிரித்தனர். நானும் சிரித்தேன்.

1945-இல் திருச்சி பொன்மலையில் மாநிலந் தழுவிய அளவில் ரெயில்வே தொழிலாளர் மாநாடு நடத்தப் பெற்றது. இம் மாநாட்டிலே நானும் கேரளத்தின் ''பாரதியார்'' எனப் போற்றப் பெறும் கவி வள்ளத்தோல், 'கல்கி' ரா.கிருஷ்ண மூர்த்தி, கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டோம்.

கண்காட்சி ஒன்றைத் திறந்து வைத்து நான் பேசுகையில், ''இந்த மாநாட்டினரின் பார்வையிலே நானே ஒரு கண்காட்சிப் பொருள்'' என்று கூறினேன். அப்போது மாநாட்டின் பந்தல் அதிரும் வகையில் அவையில் சிரிப்பொலி எழுந்தது. எனக்குப் பின் பேசிய 'கல்கி'யார், நான் சொன்னதையே பொருளாக வைத்துக் கொண்டு, நகைச்சுவை ததும்ப எனது உடலை வருணித்துப் பேசினார். அந்த மாநாட்டை விமர்சித்துத் தமது 'கல்கி' பத்திரிகையில் அவர் எழுதிய சிறப்புக் கட்டுரை ஒன் றிலே, எனது எலும்புருவத்தைக் காட்டும் சித்திரம் ஒன்றைப்

போட்டு, அதன் கீழே ''நானே ஒரு கண்காட்சி'' என்று நான் சொன்ன வாக்கியத்தையும் போட்டிருந்தார்.

எலும்புருவம் மறைந்தது!

1951-ஆம் ஆண்டிலே திராவிட இயக்க எதிர்ப்பு நடத்திய போது உடல்நிறை நானே வியக்கத்தக்க வகையில் கூடுதலா னது. ஆம்; 90 பவுண்டிலிருந்து 130 பவுண்டாக அதிகரித்தது. காரணம் திராவிட இயக்க எதிர்ப்பு காரணமாக என் இதயத்தில் ஏற்பட்டிருந்த எழுச்சிதான்! சுபாவத்தில் நான் சண்டையை விரும்பாதவன். ஆம்; வலுச் சண்டைக்குப் போகாதவன். ஆனால், சண்டை வந்துவிட்டால், எனது உள்ளத்திலே புத்தம் புதிய ஊக்கமும் உற்சாகமும் ஏற்பட்டு விடுவது வழக்கம்.

திராவிட இயக்க எதிர்ப்பின் போது ஆற்றல் மிக்க இளை ஞர்களைக் கொண்டுள்ள தி.க., தி.மு.க. அமைப்புகளால் நான் கடுமையாக எதிர்க்கப்பட்டேன். நான் பேசிய ஒவ்வொரு கூட்டத்திலும் கூச்சலையும், குழப்பத்தையும் சந்திக்க வேண்டிய வனாக இருந்தேன். ஓராண்டுக் காலத்தில் அநேகமாக தமிழ் நாடு முழுவதிலும் சுற்றுலா செய்தேன். பொதுக் கூட்டம், ஊர்வலம், மாநாடு ஆகியவற்றில் ஈடுபட்டு இடைவெளியில்லா மல் மக்கள் மத்தியிலேயே இருந்து கொண்டிருந்தேன். இந்தக் கடுமையான உழைப்பின் காரணமாகத்தான் எனது உடல் நிறை யில் நாற்பது பவுண்டு அதிகரித்தது. 'இருசப்ப கிராமணித் தெரு எலும்புருவம்' என்று என்னை ஏளனமாக வருணித்தவர்கள்கூட அந்த வருணனையைக் கைவிட்டனர். ஆனால், எனது உடல் பருமன் இரண்டாண்டுகளுக்கு மேல் நீடிக்கவில்லை. திரும்ப வும் பழையபடி கிடுகிடுவென்று உடல் நிறை நானே அஞ்சக்கூ டிய அளவில் விழுந்துவிட்டது.

புதிய தமிழகம் அமைக்கும் முயற்சியிலே நான் ஈடுபட்டத னால் பல்வேறு முனைகளிலும் ஆதிக்கம் பெற்றுவிட்ட சக்தி களின் கடுமையான எதிர்ப்பை நான் சமாளிக்க வேண்டி ஏற்பட்டது. அந்த நேரத்திலே எனது குடும்ப வாழ்க்கையின் தேவைகளுக்காகவும் போராடி வந்தேன். இந்த நிலையை

அறிந்த என்பால் நல்லெண்ணமுள்ள நண்பர்கள் எனது குடும்ப நலன் கருதி எனக்கு நிதி திரட்டித் தர முன் வந்தனர்.

நிதி வாங்க மறுத்தேன்!

'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு நாள் தாமே வலுவில் எனது வீட்டிற்கு வந்து, 25 ஆயிரம் ரூபாய் அளவில் நிதி திரட்டித் தரத் தாம் உத்தேசித்திருப்பதை என்னிடம் கூறி, எனது அனுமதியைக் கோரினார். என்பால் அவர் காட்டிய நல்லெண்ணத்திற்காக அவருக்கு நன்றி கூறிவிட்டு, அனுமதி தர மறுத்தேன். மிகுந்த வருத்தத்துடன் தமது முயற்சியைக் கைவிட்டார் 'கல்கி'யார்.

மற்றொரு சமயம் கோவை 'சுப்ரி' எனப்படும் திரு. சுப்பிரமணியம் உள்ளிட்ட கோவை நகர காங்கிரஸ்காரர்கள் செல்வந்தர் சிலரிடம் எனக்கு நிதி திரட்டித் தர முன் வந்தனர். என் அனுமதியைப் பெறாமலே திரு. சுப்ரி தலைமையில் கோவை நகர அளவில் நிதிக் குழு ஒன்றையும் அமைத்து ஐந்நூறு ரூபாயும் வசூலித்து விட்டனர். இதற்கு அப்புறமே கோவை நகர நண்பர்கள் எனக்குத் தகவல் தந்தனர். இதுபற்றித் தகவல் தெரிந்ததும், நிதி திரட்டும் முயற்சியைக் கைவிடுமாறு கண்டிப்பாக 'ஆணை'யிட்டேன். சேர்க்கப்பட்டிருக்கிற ஐந்நூறு ரூபாயையும் அப்போது திரட்டப்பட்டு வந்த நாமக்கல் கவிஞர் நிதிக்கு கொடுத்து விடுமாறு செய்தேன்.

1954-இல் திரைப்படத் தயாரிப்பாளரான கலைக்காவலர் எம்.ஏ. வேணு அவர்கள், தம் சொந்தப் பொறுப்பில் எனக்கு ஒரு மோட்டார் கார் வாங்கித் தர முன் வந்தார். தமிழரசுக் கழகத்தில் சேர்ந்த நாள்தொட்டு இன்று வரை கலைக்காவலர் என்பால் வைத்துள்ள அன்பு கண்ணப்பர் காளத்தியப்பர் மீது கொண்ட பக்தி போன்றதாகும்.

திரு. வேணுவின் விருப்பத்தையும் நான் ஏற்கவில்லை. காரணம், தனி நபருடைய உதவியால் எனக்கு மோட்டார் கிடைத்தாலும், பார்க்கின்ற பொது மக்கள் தவறான வழியில் நான் பொருள் சேர்த்து அதனை வாங்கியதாகத்தான் கருது

வார்கள் என்று நான் அஞ்சியதுதான். ''பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஒருவன் தன்னளவில் ஒழுக்கமாக வாழ்ந்தால் மட்டும் போதாது; அந்த ஒழுக்கத்தைப் பொதுமக்கள் நம்பும்படியும் நடந்து கொள்ள வேண்டும்'' என்பது காந்தியடிகளின் போதனை. இது, எனது நெஞ்சில் நிலைத்து விட்ட பொன் மொழியாகும்.

செல்வந்தர் எவருக்கும் தன்னலங் காரணமாக கடமைப்பட்டவனாக ஆகிவிடக் கூடாதென்பது யான் எடுத்துக் கொண்டுள்ள விரதங்களில் ஒன்றாகும். செல்வந்தரென்ன, அதிகாரப் பொறுப்புகளில் உள்ளவர்களுக்கும் கடமைப்பட்டவனாகி விடக் கூடாதென்ற எச்சரிக்கையுடன்தான் நான் பொது வாழ்க்கை நடத்தி வருகின்றேன்.

பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஒருவர், பொது மக்களிடம் நிதி பெற்று — அதையும் வெளிப்படையாகப் பெற்று — தன் தேவைகளை நிறைவு செய்து கொள்வதே முறையாகும். அதையும் தவிர்த்துப் பொது வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்த முடியுமானால், அதை விடவும் புனித வாழ்க்கை வேறிருக்க முடியாது. ஆனால், குடும்ப பாரத்தையும் சுமந்து கொண்டு பொது வாழ்க்கை நடத்துபவர்களுக்கு அது சாத்திய மாவதில்லையே!

பொன் விழா கண்டேன்!

1956 சூன் 26-இல் எனது 51-ஆவது பிறந்த நாளைக் கொண்டாடத் தமிழரசுக் கழக முன்னணித் தோழர்கள் முயற்சி எடுத்தனர். முதலில் ''ம.பொ.சி. 51ஆவது பிறந்த நாள் விழா'' என்ற பெயரில் வேலையைத் தொடங்கினர். அந்த விழாவிலே எனக்கு ஒரு பெருந்தொகையை நிதியாக வழங்கவும் முடிவு செய்தனர்.

எனது 45-ஆவது வயது முதற்கொண்டே தமிழரசுக் கழகக் கிளைகள் சார்பில் தலைமைக் கழகத்தின் தூண்டுதலின்றியே ஆண்டுதோறும் எனது பிறந்த நாள் எளிய முறையில் கொண்டாடப்பட்டு வந்தது. ஆனால், தலைமைக் கழகச் சார்பில் கொண்டாட நான் அனுமதிக்கவில்லை. எனக்கு நிதி கொடுப்பதற்குத் தான் தலைமைக் கழகச் சார்பில் என் விழாவைக் கொண்டாட முதன் முதலாக முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதில் ஈடுபட்ட தோழர்கள் எனது அனுமதியைப் பெற முயன்றனர். எனக்கு நிதி கொடுப்பதற்காகத் திடீரென்று எனது பிறந்த நாள் விழாவைப் பெரிய அளவில் தலைமைக் கழகத்தின் பெயராலேயே கொண்டாடுவதென்பது எனக்குப் பிடிக்கவில்லை. இது, பொது வாழ்வில் ஒரு தவறான முன்மாதிரியாகிவிடக் கூடுமென்று நான் அஞ்சினேன்.

நிபந்தனைகள்

நல்ல மரபுகளைக் காப்பதிலே எனக்கு ஆர்வமுண்டு. அதுபோல, தவறான மரபுகளைப் படைக்கக் கூடாதென்பதிலும் எனக்கு அக்கறையுண்டு. ஆகவே, எனக்கு ஐம்பதாண்டு நிறைவு பெறுவதை ஒரு காரணமாகக் கொண்டு, ''பொன் விழா'' என்ற பெயரில் கொண்டாடுமாறு ஆலோசனை கூறினேன். அதையும் தமிழரசுக் கழகத்தின் பெயரால் அல்லாமல், கழகச் சார்பு — கட்சிச் சார்பு இல்லாத முறையில், பொது

மக்கள் சார்பில் கொண்டாடுவதையே நான் விரும்புவதாகக் கூறினேன். என் தலைமையில் இயங்கும் கழகமே எனக்கு நிதி திரட்டித் தருவதும் தவறான முன்மாதிரி ஆகிவிடக் கூடுமென்று நான் கருதினேன். அதனால், தமிழரசுக் கழகத்தின் பெயரால் எனக்காக நிதி திரட்டுவது கூடாதென்று அந்தக் கழகத்தின் தலைவன் என்ற முறையில் நான் கண்டிப்பாகக் கட்டளையிட்டேன். மற்றும், பொது மக்கள் பெயரால் எனக்கு நிதி வழங்கினாலும், அதற்காகப் பொருளுதவி கோரி அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களிடம் செல்லக்கூடாதென்றும் நிபந்தனை விதித்தேன். அரசியல் கட்சிகளிடமோ, அவற்றைச் சார்ந்த செல்வந்தர்களிடமோ பொருளுதவி பெற்று எனக்கு நிதி தருவதால் அவர்களுக்குக் கடமைப்பட்டவனாகிவிடக் கூடுமென்று நான் அஞ்சினேன். கடன் படாத வாழ்க்கையை எப்படி நடத்தி வருகிறேனோ, அதுபோலவே செல்வந்தர் எவருக்கும் கடமைப் படாத வாழ்க்கை நடத்தவும் முயன்று வந்திருக்கின்றேன்.

அரசியல் கட்சிக்காரர்களோடு கருத்துப்போர் நடத்திக் கொண்டிருக்கும் எனக்காக அவர்களிடமே நிதி உதவிக்குச் செல்வது விரும்பத்தகாத காரியந்தானே! இந்தக் கடைசி நிபந்தனை என் தோழர்களுக்குப் பிடிக்கவில்லை. கலைஞர் தி.க. சண்முகம், ''உங்கள் விழாவின் சிறப்பையும், பயனையும் எவ்வளவுக்குக் கெடுக்க வேண்டுமோ அவ்வளவுக்கு நீங்களே ஆலோசனை கூறியிருக்கிறீர்கள்'' என்று சிரித்துக் கொண்டே அன்று கூறியது இன்னமும் எனது நினைவில் இருக்கிறது. வாழ்க்கையின் இன்றியமையாத தேவைகளைப் புறக்கணித்து எனது பொது வாழ்க்கையில் துன்பச் சூழலை உருவாக்கிக் கொள்ள நான் விரும்பவில்லை. ஆனால் வாழ்க்கைத் தேவைகளை அடைவதற்காகத் தவறான வழிகளில் செல்லவும் எனது மனச்சாட்சி என்னை அனுமதிக்கவில்லை. எப்படியோ ஒரு வழியாகத் தங்கள் மனத்தைச் சரிப்படுத்திக் கொண்டு நான் விதித்த கடும் நிபந்தனைகளுக்கேற்ப நண்பர்கள் முயற்சி எடுத்தனர். கலைஞர் தி.க. சண்முகம் அவர்களைத் தலைவராகவும், கவிஞர் கு.சா. கிருஷ்ணமூர்த்தி அவர்களைச் செயலாளராகவும், பி.சோ. கட்சியினரான எஸ்.டி. சுந்தரம் அவர்களைத்

துணைச் செயலாளராகவும், காங்கிரஸ்காரரான திருமதி வி.கே. சீதாலட்சுமி அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு ''ம.பொ.சி. பொன் விழாக் குழு'' அமைந்தது. இக்குழுவின் துணைத் தலைவர்களாக இருக்க ஏ.வி. மெய்யப்ப செட்டியார், ஜெமினி அதிபர் எஸ்.எஸ். வாசன் முதலிய அரசியல் கட்சிச் சார்பற்ற தொழிலதிபர்கள் இசைவு தெரிவித்தனர். நான் விதித்த நிபந்தனைப்படியே பொன் விழாக் குழு அரசியல் கட்சிச் சார்பற்ற முறையில் — தமிழின மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வாய்ந்த முறையில் அமைக்கப் பெற்றது எனக்கு மனநிறைவைத் தந்தது.

கவிஞர் கு.சா.கி.யின் உழைப்பு

விழாக் குழுவினர் நிதி திரட்டும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்த நேரத்திலே, நான் அத்துறையில் சிறிது கூடக் கருத்து செலுத்தாமல் புதிய தமிழகம் படைக்கும் பணியில் எப்போதும்போல் தீவிரமாக ஈடுபட்டிருந்தேன். பொன்விழா பற்றிய எந்தச் செய்தியையும் அந்த விழா நடந்து முடியும் வரை கழக ஏடான 'செங்கோலி'ல் வெளியிட நான் அனுமதிக்க வில்லை. ஆம்; விழா முற்றிலும் கழகச் சார்பற்றதாக இருக்க வேண்டும் என்பதற்காகவே அதிலிருந்து 'செங்கோலை' விலக்கி வைத்தேன். ஆனால், 'குமுதம்' பத்திரிகையை விழாக் குழுவினர் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். அதன் ஆசிரியர் திரு.எஸ்.ஏ.பி. அண்ணாமலை என்னிடம் பெரிதும் அன்பும் மதிப்பும் வைத்திருப்பவராதலால், பொன் விழா நிதிக்குப் பொருளுதவி புரிந்தவர்களின் பெயர்ப் பட்டியலை 'குமுதத்' தில் இதழ்தோறும் வெளியிட்டார்.

நான் எதிர்பார்த்ததைவிடவும் அதிக அளவில் தமிழ் மக்களிடமிருந்து ஆதரவு கிடைத்தது. 'ஆனந்த விகடன்', 'கல்கி', 'கலைமகள்', 'குமுதம்', 'கல்கண்டு' ஆகிய ஏடுகள் முன் கூட்டியே தலையங்கம் எழுதிப் பொன்விழா நிதிக்கு உதவுமாறு தமிழின மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தன. விழாக் குழுவின் செயலாளர் கவிஞர் கு.சா.கிருஷ்ணமூர்த்தி தனது நேரம் முழுவதையும் பயன்படுத்தி விழாவை வெற்றிகர

மாக நடத்த முயன்றார். அவரது உழைப்பு விழாவின் வெற்றிக் குப் பெரிதும் பயன்பட்டதென்பதனை மிகுந்த நன்றியறிதலோடு இங்குக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு.ஏ.வி. மெய்யப்ப செட்டியார், திரு.எஸ்.எஸ். வாசன், கலைஞர் ஏ.பி. நாகராசன் ஆகியோர் விழாவின் சிறப்பிற்காக எல்லா வகையிலும் உதவி புரிந்தனர்.

புலவர் தலைமையிலே...

பொன் விழாவில் தலைமை தாங்க யாரை அழைப்பதென் பது குறித்து விழாக் குழுவின் நிர்வாகிகள் எனது ஆலோசனை யைக் கேட்டனர். அவர்கள், அப்போதிருந்த காங்கிரஸ் அமைச் சர்களில் என்பால் நல்லெண்ணமுடையவராக இருந்த ஒருவரை அழைக்க விரும்பினர். நான் அதனை ஏற்க மறுத்தேன். விழா, முற்றிலும் அரசியல் சார்பற்றதாக இருக்க வேண்டுமென்பது என் கருத்தல்லவா! பேராசிரியர் இளவழகனார் அவர்களை விழாவுக்குத் தலைமை தாங்க அழைக்கலாமென்று நான் ஆலோ சனை கூறினேன். விழாக் குழவின் நிர்வாகிகள் எனது ஆலோச னையைக் கேட்டு திகைப்படைந்தனர். ஆசிரியர் இளவழகனார் அரசியல் உலகுக்குச் சிறிதுகூட அறிமுகமில்லாதவர். சமுதாயத் தின் அடித்தளத்திலுள்ள சாதாரண மக்கள் அவரை அறிய மாட்டார்கள். .அப்படிப்பட்ட ஒருவரைத் தலைமை தாங்க வைப்பதால் விழாவுக்குச் சிறப்பு இல்லை என்று என்னுடைய நண்பர்கள் கருதியிருந்தால் அதில் தவறில்லைதானே! ஆயி னும், தெய்வப் பற்று, தேசப் பற்று, தாய்மொழிப் பற்று ஆகிய மூன்றும் ஒருங்கே பெற்ற ஒழுக்க சீலர் ஒருவர் என் விழாவில் தலைமை தாங்குவதைவிட அதற்குச் சிறப்பளிப்பது வேறு இருக்க முடியாதென்று நான் கருதினேன். விழாக் குழுவினரும் இறுதியில் எனது யோசனையை ஏற்றுக் கொண்டனர். மற்ற நிகழ்ச்சிகளுக்கு யார் யாரை அழைப்பதென்பதனை விழாக் குழுவினரின் விருப்பத்திற்கே விட்டுவிட்டேன்.

கலைக்காவலர் எம்.ஏ. வேணு அவர்கள் பொன்விழா அரங்கிலே எனக்கு மோட்டார் கார் ஒன்றை அன்பளிப்பாகத் தருவதற்குத் தனி முயற்சி எடுத்துக் கொண்டார். அப்போது

அவர் தயாரித்துக் கொண்டிருந்த 'சம்பூர்ண ராமாயணம்' படத்தில் தொழில் புரிந்தவர்களிடம் பொருள் திரட்டி, தாமும் பெரும் பொருள் போட்டு 'பியட்' கார் ஒன்றைப் புதிதாக வாங்கினார்.

புனித வெள்ளிக்கிழமை

1956 சூன் 26 என் வாழ்க்கையில் மிகவும் புனிதமான ஒரு நாளாகும். எதேச்சையாக அந்த நாள் இந்து — இஸ்லாம் — கிறித்துவ மதங்களைச் சார்ந்த மக்களெல்லாம் மிகவும் புனிதமானதாகக் கருதும் வெள்ளிக்கிழமையாக இருந்தது. ஆம்; இலக்குமியை வழிபடும் நாளான வெள்ளிக்கிழமையிலே தரித்திரப் பரம்பரையைச் சார்ந்த எனக்குத் தமிழினத்தின் சார்பில் செல்வமும் செல்வாக்கும் சேர்ந்தன.

ராஜா சர் அண்ணாமலை மன்றத்தில் எனது பொன் விழா நடைபெற்றது. நிறுவனங்களுக்குத்தான் வெள்ளி விழாவும் பொன் விழாவும் நடப்பதுண்டு. ஆனால், தனிநபர் வாழ்விலே முதன் முதலாக ஒருவருக்குப் பொன்விழா எடுக்கப்பட்டதென்றால், அது எனக்குத்தான். அதனை ஒரு முன் மாதிரியாகக் கொண்டு, பிற்காலத்தில் அறிஞர்களுக்குப் பொன் விழா நடைபெறுவது வழக்கமாகி விட்டது.

அண்ணாமலை மன்றம் உள்ளும் புறமுமாகத் தமிழின மக்களால் முற்றுகையிடப் பட்டிருந்தது. மன்றத்திற்குள் மக்கள் இருப்பதற்கு மாறாக, மக்கள் வெள்ளத்திலே மன்றம் மிதந்த காட்சியை அன்றுதான் கண்டேன். எனது விழாவின் சிறப்பை நானே வருணிக்க விரும்பினாலும், எனது எழுதுகோல் நாணத்தால் ஒத்துழைக்க மறுக்கிறது. அதனால் எனது பொன் விழா நிகழ்ச்சிகளை விரிவாக அறிய விரும்புவோர் திரு. முல்லை முத்தையா அவர்கள் தொகுத்து இன்ப நிலையத்தாரால் வெளியிடப்பட்டுள்ள ''தமிழகம் தந்த ம.பொ.சி.' என்ற நூலைப் படிக்க வேண்டுகிறேன்.

என் மனக் குறை

ஒரு குறையுமின்றி நடைபெற்ற எனது, பொன் விழாவிலே எனக்கு ஒரு மனக்குறையிருந்தது. சாதி, சமய, கட்சி வேற்றுமை யின்றித் தமிழின மக்கள் தந்த ஒத்துழைப்போடு சீரும் சிறப்பு டன் நடந்த பொன் விழாவிலே காங்கிரஸ் அமைச்சர்களில் எவரும் கலந்து கொள்ளவில்லை. அவர்களிடமிருந்து வாழ்த் துச் செய்திகூடக் கிடைக்கவில்லை. இதைவிடவும் வியப்புக்கு ரிய செய்தி என்னவென்றால், நான் பெரிதும் மதித்துப் போற்று கின்ற ராஜாஜியிடமிருந்தும் வாழ்த்துச் செய்தி கிடைக்காத தாகும். ஆனால், நாடே என்னை வாழ்த்தியதால் காங்கிரஸ் தலைவர்கள் வட்டாரம் என்னை வாழ்த்தத் தவறிய குறைபாடு மக்களுடைய கவனத்தில் படவில்லை.

எனக்கென்னவோ, அரசியலில் என் தாய்வீடு போன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் வராதது வேதனையாகத்தான் இருந்தது. நான் எதிர்பாராத வகையில் பெருந்தன்மையாக தி.மு.க. வட்டாரம் நடந்து கொண்டது. அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன் ஆகிய இருவரும் தி.மு.க. சார்பில் அதிகார பூர்வமாக மாலைகளும் வாழ்த்துச் செய்திகளும் அனுப்பியிருந் தனர்.

பொன் விழா நிதிக்கு ரூபாய் ஆயிரம் தி.மு.க. சார்பில் வழங்க அண்ணா விரும்புவதாகவும், விழாக் குழுவின் நிர்வாகி களை அவர் எதிர்பார்ப்பதாகவும் தகவல் கிடைத்தது. ஆயினும், அரசியல் கட்சி எதனிடமும் பொருளுதவி பெறக் கூடாதென்று நான் கூறியிருந்ததால், விழாக் குழுவினர் அண் ணாவிடம் செல்லவில்லை.

தொழிலாளிக் குடும்பத்தில் — மிகமிகப் பிற்பட்ட சாதியில் பிறந்து, ஏழ்மையிலேயே உழன்று, மிகவும் எளியவனாக வாழ்ந்து வரும் ஒருவனுக்குப் பொன் விழா நடத்தி, தமிழினத்

தின் வரலாற்றிலே ஒரு புதிய ஏட்டைத் தொடங்கி வைத்தனர், ம.பொ.சி. பொன் விழாக் குழுவினர்.

எனது பொன் விழாவிலே பேசுவதற்கென்று எனது முன்னாள் முதலாளியும், பிரபல தேசியத் தலைவருமான டாக்டர் பி.வரதராசுலு நாயுடு சற்று தாமதமாக விழா அரங்குக்கு வந்து சேர்ந்தார். அதற்குள் நன்றியுரை கூறத் தொடங்கி விட்டேன். எனது உரைக்குப் பின் அவரைப் பேச வைக்க வேண்டுமென்று எண்ணினேன். ஆனால், அது சாத்தியப்படவில்லை. பதினான்கு ரூபாய் சம்பளத்துக்கு மிகச் சாதாரணத் தொழிலாளியாக நான் பணிபுரிந்த தொழிலகத்தின் முதலாளியும் எனது பொன் விழாவில் கலந்து கொண்டு என்னை வாழ்த்துவதென்றால் அது எனக்குப் பெருமைதானே! மறுநாள், மயிலை புது உட்லண்ட்ஸ் ஓட்டலிலே இன்ப நிலைய உரிமையாளர் திரு. சோம. சாமிநாதன் அவர்கள் எனக்குத் தேநீர் விருந்தளித்தார். 'தினமணி' ஆசிரியர் திரு.ஏ.ஜி. வெங்கடாச்சாரியார் தலைமை வகித்தார்.

கலைவாணர் பெருமிதம்!

என்னுடைய பொன் விழாவின்போது என் தாயும் தந்தையும் இருந்து அதனைக் கண்ணாரக் கண்டு ஆனந்தப்பட்டனர். விழாக் குழுவினர் என் பெற்றோருக்கும் பெரிய மாலைகளை அணிவித்து, அவையில் வெள்ளம்போல் குழுமியிருந்த மக்களுக்கு அவர்களை அறிமுகப்படுத்திய போது, என் மனம் அடைந்த மகிழ்ச்சி எழுத்தால் வருணிக்க இயலாததாகும்.

விழாவிலே கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், தாம் குமரி முனைத் தமிழர் என்ற உணர்ச்சியோடு பேசினார். அப்போது குமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைவது உறுதியாகியிருந்ததால் அவர் என்பால் நன்றியுணர்வோடு பேசினார்.

''இந்த விழாவானது நியாயமாக எங்களூரிலே நடந்திருக்க வேண்டும். தவறிவிட்டோம். நமது சிவஞானம் அவர்களாலே மீட்கப்பட்ட தமிழர்களிலே நானும் ஒருவன்

என்பதைப் பெருமிதத்துடன் சொல்லிக் கொள்ளுகிறேன். அவரது உழைப்பால் சென்னை நமக்கென்று ஆகிப் போச்சு! இப்போது அவருக்குப் பொன் விழா நடக்குது! இனி வைர விழா எங்கே நடக்கும் தெரியுமா? திருப்பதியி லேயும், திருத்தணியிலேயும் நடக்கும்.''

அண்ணாமலை மன்றத்திலே விழா முடிந்து நான் வீடு திரும்பியதும், திரு.எஸ்.எஸ். வாசன் அவர்கள் என்னைத் தொலைபேசியில் அழைத்து,

''இன்று தங்களுக்கு நடந்தது போன்ற சிறப்புமிக்க விழாவை நான் என் வாழ்நாளில் பார்த்ததே இல்லை. தமிழ் மக்கள் தங்களிடம் வைத்துள்ள பேரன்பிற்கு இது அடையா ளம். தாங்கள் விரும்புகிற பணிக்கு என்னைப் பயன்படுத் திக் கொள்ளலாம். இதைச் சொல்லத்தான் தங்களை அழைத் தேன். தங்களுக்கு என் வாழ்த்துகள்.''

என்று உணர்ச்சிப் பெருக்கோடு கூறினார்.

பர்மா பயணம்

எனது பொன்விழா சீருஞ் சிறப்புமாக நடந்து முடிந்த ஒன்றரை மாதத்திற்கெல்லாம் பர்மா தமிழ்ச் சங்கத்தின் அழைப்பின் பேரில் நான் பர்மா செல்ல நேர்ந்தது. பல முறை நான் இலங்கை சென்றிருந்தேன். இலங்கைக்கு அடுத்தபடி நான் சென்ற அயல்நாடு பர்மாதான்.

பர்மா செல்லத் துணை தேவைப்பட்டது. என்னுடைய நூல்களை வெளியிடும் இன்ப நிலைய உரிமையாளர் திரு. சோம. சாமிநாதன் தமது செலவில் என்னுடன் வருவதற்கு இசைந்தார்.

சென்னையிலிருந்து ரெயிலில் கல்கத்தா சென்று, அங்கிருந்து விமானத்தில் பர்மாவின் தலைநகரான ரங்கூனுக்குச் செல்லும் வகையில் பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்திருந்தேன். ஆனால், சென்னையிலிருந்து பயணப்பட வேண்டிய நாளன்று காலை திரு. சோம.சாமிநாதன், தேவகோட்டையில் தனக்கு அவசர அலுவல் ஏற்பட்டுவிட்டதாகக் காரணங்கூறி, என்னுடன் வர இயலாமை குறித்து வருத்தம் தெரிவித்தார். இவர் நட்புக்கு மிகவும் நல்லவர். எனது நம்பிக்கைக்குரிய நண்பருமாவார். ஆனால், கொஞ்சம் பயந்தவர்.

நாங்களிருவரும் சென்னையிலிருந்து புறப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் பர்மாவில் ஒரு விமான விபத்து ஏற்பட்டு அது பற்றிய செய்தி சென்னை நாளேடுகளில் வெளியாகியிருந்தது. இரங்கூன் நகரிலிருந்து மோல்மேன் நகருக்குச் சென்ற விமானம் பருவக் கோளாறு காரணமாக ஒரு மலை மீது மோதி விபத்துக்குள்ளாகியது. அதிலிருந்தவர்களில் ஒருவர் தவிர எல்லோரும் இறந்து விட்டனர். இந்தச் செய்தியைப் படித்துப் பயந்துவிட்டார் சாமிநாதன்.

மரணம் என்றால் யாருக்குமே பயம்தான்! சுகஜீவிகள் பற்றிச் சொல்ல வேண்டியதேயில்லை. ஆனால், நான் அளவுக்கு

மீறி வற்புறுத்தியதன் பேரில்தான் என்னுடன் வரத் தயங்குவ தற்கு மோல்மேன் நகரில் ஏற்பட்ட விமான விபத்துதான் காரணமென்று ஒளிவு மறைவின்றிச் சொல்லிவிட்டார். அவருக் குத் தைரியம் கூறி, திட்டமிட்டபடி என்னுடன் அவரை அழைத் துச் சென்றேன். இருவரும் ரயிலில் புறப்பட்டுக் கல்கத்தா சேர்ந்தோம்.

வங்கத் தமிழர் வழி அனுப்பு

''அயல்நாட்டுப் பயணம்'' என்றாலே வழி அனுப்பு உப சாரம் உண்டுதானே! சென்னை மாவட்டத் தமிழரசுக் கழகத்தார் சென்டிரல் ஸ்டேஷனில் பிரமாதமாக உபசரித்து வழயினுப்பினர்.

கல்கத்தாவிலுள்ள பாரதி தமிழ்ச் சங்கத்தார் தாய்த் தமிழகத் திலிருந்து வங்கத் தலைநகருக்கு வரும் தமிழ்ப் பிரமுகர்களை வரவேற்று உபசரிப்பதிலே தனித்த ஆர்வமுள்ளவர்கள். தங்க ளுக்குள்ள தாய் மொழிப் பற்றுக் காரணமாக என்னை மிகவும் நேசிப்பவர்கள். கல்கத்தாவிலிருந்து இரங்கூனுக்குப் புறப்படுவ தற்கு முன்பு மிகப் பெரிய அளவில் பாராட்டுக் கூட்டம் நடத்தி வழியனுப்பினர்.

18.8.56 பகல் 12 மணிக்கு நான் சென்ற விமானம் ரங்கூன் விமான நிலையத்தை அடைந்தது. ஆண்களும் பெண்களுமாக இரங்கூன் மாநகரத் தமிழர்கள் ஏராளமாகக் குழுமியிருந்து வரவேற்றனர்.

பர்மா தமிழ்ச் சங்கத்தார் விமான நிலையத்திலிருந்து ஊர்வலமாக நகருக்குள் அழைத்துச் சென்றனர். வழி நெடுகப் பல இடங்களில் மரியாதைகள் செய்து மக்கள் என்னை உற்சாகப் படுத்தினர். விமான நிலையத்திலும் வேறு இடங்களிலும் தமிழி னத்துச் சாரணர்கள் அணிவகுத்து நின்று இராணுவ ரீதியில் எனக்கு மரியாதை செய்தனர். இந்த வரவேற்பு உபசரிப்பில் அகில பர்மா தமிழர் சங்கமேயன்றி, வட இந்தியர் போன்ற பிறமொழியினரும் கலந்து நடத்தும் அகில பர்மா இந்தியர் காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் பங்கு பெற்றன.

தமிழ்ச் சங்க ஆண்டு விழா

இரங்கூன் சென்ற நாளன்று மாலையில் அகில பர்மா தமிழர் சங்கத்தின் நான்காவது ஆண்டு விழா நகர மண்டபத்தில் நடைபெற்றது. அந்த விழாவுக்காகத்தான் நான் அழைக்கப்பட்டிருந்தேன். நகரிலுள்ள இந்தியப் பிரமுகர்கள் அனைவரும் இந்த விழாவில் கலந்து கொண்டனர். இந்தியத் தூதுவர் அலுவலக உதவி கான்சலர் திரு. சைகால் என்பவரும் விழாவில் கலந்து கொண்டு பெருமைப்படுத்தினார்.

விழாவிற்கு வந்திருந்த மக்கள் கூட்டத்தைக் கண்டபோது மொழி, மத, பூகோள வேறுபாடுடைய ஒரு அயல்நாட்டில் இருக்கிறேன் என்பதையே மறந்து சென்னை நகரில் இருப்பதாகவே மயங்கினேன். ஆம்; அவ்வளவு கூட்டம்! சென்னையில் காண முடியாத ஒரு புதுமை என்னவென்றால், அந்தக் கூட்டத்திற்குத் தமிழர்கள் குடும்பம் குடும்பமாக வந்திருந்ததுதான். நெடுந்தொலைவிலுள்ள அயல் நாட்டில் வாழ்ந்தாலும் பர்மா தமிழர்கள் தங்கள் தாய்நாட்டின் மீது கொண்டுள்ள பற்றுதலுக்கு இந்தக் கூட்டம் சான்று பகர்ந்தது.

சுமார் ஒன்றரை மணி நேரம் சொற்பொழிவாற்றினேன். விழாவில் சாதி சமய கட்சி வேறுபாடுகளை மறந்து பர்மாவிலுள்ள தமிழர்கள் இன உணர்ச்சியால் ஒன்றுபட வேண்டுமென்று கூறினேன். பர்மா நாட்டின் மீது பற்றும், பர்மிய சமுதாயத்திடம் பாசமும் கொண்டு வாழுமாறும் வற்புறுத்தினேன். எனது பேச்சு பர்மா வாழ் தமிழர்களுக்கேயன்றி, அந்த விழாவில் கலந்து கொண்ட குஜராத்தியர், வங்காளியர், பஞ்சாபியர் போன்ற வட இந்தியருக்கும் மிகவும் பிடித்திருந்ததாக அறிந்தேன்.

மோல்மேன் தமிழர்

பர்மாவில் ''மோல்மேன்'' என்னும் நகரந்தான் அந்த நாட்டில் முதன் முதலாகத் தமிழர் குடிபுகுந்த பதி என்று சொல்லப்படுகிறது. நல்லவேளையாக, மோல்மேன் தமிழர்கள் தமிழை மறந்துவிடவில்லை. தங்களுக்குள் தமிழிலேயேதான்

பேசுகிறார்கள். தாய் மொழியிலே கல்வி பயிலவும் வசதிகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்களா.

அந்த நகரில் தங்கியிருந்த இரண்டு நாட்களிலும் நான் மிகுந்த மகிழ்ச்சியோடிருந்தேன். எனக்காக நடத்தப் பெற்ற வரவேற்புக் கூட்டத்திலே சிலப்பதிகாரம் பற்றிப் பேசினேன். கண்ணகியின் வீரவாழ்வை நான் விளக்கக் கேட்டு மோல்மேன் தமிழர்கள் ரசித்ததைப்போல ரங்கூன் தமிழர்கூட ரசிக்கவில்லை என்று சொல்லலாம். மோல்மேன் விமானத் திடலிலே தமிழ்ப் பெண்கள் நீலநிறச் சின்னம் அணிந்து வரிசை வரிசையாக நின்று என்னை வரவேற்றனர்.

'பர்மா நாடு தேக்குமரக் காடு' என்று சொல்லுமளவுக்கு அந்த நாட்டில் தேக்குமரங்கள் மலிந்திருக்கின்றன. பர்மா தேக்குக்கு நம் தமிழகத்திலும் தனி மதிப்புண்டல்லவா! மோல் மேனில் உள்ள தேக்குமரத் தொட்டிகளிலே யானைகள் தொழில் புரிகின்றன. யானையானது தன் துதிக்கையால் மரத்துண்டு களைத் தூக்கிக் கொண்டு ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு போய்ப் போடும் காட்சி கவர்ச்சிகரமாக இருந்தது. கால்களால் மரத்துண்டுகளை உருட்டிக் கொண்டு போகும் திறமையும் என்னைக் கவர்ந்தது.

பழங்கால மன்னர்கள் தமிழ்ப் புலவர்களுக்கு யானை களைப் பரிசளித்ததனைச் சங்க இலக்கியங்களில் படிக்கும் போதெல்லாம் பரிசு பெற்ற புலவர்களிடம் எனக்கு அனுதாபம் ஏற்படுவதுண்டு. தரித்திரம் பிடித்த புலவர் யானையைக் கொண்டு போய் என்ன செய்ய முடியும்? அதற்குத் தீனி போட்டு வளர்க்க அவரால் எப்படி முடியும்? என்றெல்லாம் நான் எண்ணிப் பார்ப்பதுண்டு. அந்நாளில் தமிழ்நாட்டிலும் தொழில் புரிவதற்கு யானைகள் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டன போலும். மோல்மேன் நகர தேக்குமரத் தொட்டிகளில் யானை கள் பணிபுரிவதைப் பார்த்தபோது என் மனம் இப்படித்தான் எண்ணியது. பர்மா நாட்டின் அழகு மிகுந்த சால்வின் நதியை மோல்மேன் நகரில் கண்டு களிக்க முடிந்தது. நகரமே நதிக்கரை யில்தான் இருக்கிறது.

கரேன்கள் தொல்லை

நான் பர்மாவுக்குச் சென்ற காலத்திலே அந்த அழகிய நாட்டில் ''கரேன்கள்'' எனப்படும் பயங்கரவாதிகளின் தொல்லை அதிகமாக இருந்தது. அவர்கள் ஆயுதபாணிகளாக காட்டுப் பிரதேசங்களில் மறைந்துகொண்டு, நகரப் பகுதிகளிலுள்ள பெருஞ் செல்வந்தர்களை அடிக்கடி கடத்திக் கொண்டு போய், அவர்கள் தலைக்கு ஒரு பெருந்தொகையை விலையாகக் கோரி வந்தனர். அந்தத் தொகை அவர்கள் குறிக்கும் கால வரம்புக்குள் கொடுக்கப்படாவிட்டால், கடத்தப்பட்டவரைக் கொன்று விடுவார்களாம்!

அயல்நாடுகளிலிருந்து வரும் அதிகாரிகள், பிரமுகர்கள் ஆகியோரும் கடத்திச் செல்லப்பட்டதுண்டு. நான் செல்வதற்குச் சில வாரங்களுக்கு முன்பு பர்மா அரசு கோரியதன் பேரில் இந்திய அரசு அனுப்பி வைத்த இரண்டு என்ஜினீயர்களைக் கடத்திச் சென்றனர். பின்னர், பர்மிய அரசே கரேன்கள் கோரிய தொகையைக் கொடுத்து அந்த என்ஜினீயர்களை மீட்டு இந்தியாவுக்கு அனுப்பியதாக அறிந்தேன்.

நான் பர்மாவுக்குப் புறப்பட்டபோது, கரேன்களைப் பற்றிய அச்சம் எனக்கும் இருந்தது. விஷயமறிந்த சென்னை நண்பர்கள் கரேன்களுக்கு அஞ்சி பர்மா செல்வதைத் தவிர்க்குமாறு வேண்டினர். அவர்களுடைய வேண்டுதலையும் புறக்கணித்துத்தான் பர்மா சென்றேன்.

பர்மாவில் எனது சுற்றுப்பயணத் திட்டத்தை வகுத்தவர்கள் பெகு என்னும் நகரை அதில் சேர்க்காமல் வேண்டுமென்றே விட்டிருந்தனர். காரணம், கரேன்கள் பற்றிய அச்சந்தான். அப்போது பெகு பிரதேசத்தில்தான் கரேன்கள் செல்வாக்கு மிகுந்திருந்தது.

நான் பர்மா சென்ற மூன்றாம் நாள் பெகுவில் வாழும் தமிழர்களில் சிலர் ரங்கூன் வந்து என்னைச் சந்தித்தனர். நான் தங்கள் ஊருக்கும் வரவேண்டுமென்று வற்புறுத்தினர். ''தங்களுக்குமுன் பர்மாவுக்கு வருகை தந்த பெரியார் ஈ.வெ.ரா.,

முத்துராமலிங்கத் தேவர் ஆகியோரும் நாங்கள் எவ்வளவு வருந்தியழைத்தும் பெகுவிற்கு வராமல் சென்று விட்டனர். பெகுவில் வாழும் தமிழர்களாகிய நாங்கள் என்ன பாவம் செய்தோம்!'' என்று மிகுந்த வேதனையோடு கூறினர்.

அவர்கள்பால் இரக்கப்பட்டு, பெகுவிற்குச் செல்ல இசைவு தெரிவித்துவிட்டேன். ம.பொ.சி. வரவேற்புக் குழுவின் தலைவர் நண்பர் ஏ.எஸ்.ஏகாம்பரம், ஆஜானுபாகுவான மற வர். அவரைப் பார்த்தாலே கோழைத்தனம் பறந்தோடிவிடும். அந்த மறவர்கூட நான் பெகு செல்ல இசைந்ததற்காகப் பெரிதும் வருந்தினார்.

பெகுவில் வரவேற்பு

பெகு செல்லவேண்டிய நாள் வந்தது. மொத்தம் நான்கு கார்களில் ரங்கூன் பிரமுகர்களில் ஏராளமானவர்கள் என்னுடன் பெகுவிற்குப் புறப்பட்டனர். நண்பர்கள் ஆஸாத் ராமசாமி, ஏ.எஸ். ஏகாம்பரம் ஆகியோர் ஒரு ஏற்பாடு செய்தனர். நான்கு கார்களில் முதலில் சென்ற ஒரு சாதாரணமான சின்னஞ்சிறு காரில் என்னை உட்கார வைத்தனர். இரண்டாவதாகச் சென்ற பெரிய மோட்டாருக்கு மாலைகளைப் போட்டு, அதனை ஆடம் பரமாக அலங்கரித்திருந்தனர். கரேன்கள் முதலில் செல்லும் — நான் அமர்ந்திருக்கும் — காரை நிறுத்தி ''ம.பொ.சி. எங்கே?'' என்று கேட்டால், அதோ பின்னால் வரும் காரில் இருக்கிறார் என்று சொல்லி விடுமாறு என் காரிலுள்ளவர்களுக்குச் சொல்லி வைத்தார்கள். ஆம்; கரேன்களிடமிருந்து என்னைக் காப்பாற் றவே இந்த ஏற்பாடு.

இந்த முன்னேற்பாடுடன் பெகுவிற்கு அழைத்துச் செல்லப் பட்டேன். நான் பெகுவை நெருங்கியபோது அந்தப் பிரதேசத் தின் எல்லையிலே ஆங்கில மொழியில் பெரிய பெரிய எழுத்து களில், ''இது கரேன்கள் அபாயமுள்ள பிரதேசம். எச்சரிக்கை யாகச் செல்லவும்'' என்று விளம்பரம் போடப்பட்டிருந்தது. அதைப் படித்து நான் பயந்துவிட்டேனென்று சொல்வதற்கில்லை யென்றாலும், ஆனந்தமடைந்தேன் என்றும் சொல்ல முடியா தல்லவா!

எப்படியோ காலை 10 மணி சுமாருக்கு அபாயகரமான பெகுவிற்குள் பிரவேசித்தோம். அங்கு அழகிய சீனப் பள்ளி யொன்றில் வரவேற்புக் கூட்டம் முற்பகல் 11 மணிக்கு நடை பெற்றது. தமிழர்கள் ஏராளமாக வந்திருந்தனர். கூட்டம் சிறந்த முறையில் நடைபெற்றது. அறுசுவையுடன் பகல் விருந்து தரப் பட்டது. நான் பெகுவிற்கு வந்ததில் அங்குள்ள தமிழர்களுக்குப் பரம ஆனந்தம்! அழைத்துச் சென்ற இளைஞர்களின் வெற்றிக் களிப்பிற்கு அளவே இல்லை.

இராச இராச சோழன் மகன் இராசேந்திர சோழன், பர்மா வில் ஒரு பகுதியைச் சோழ சாம்ராஜ்யத்திற்குள் கொண்டு வந்தான். அதன் வெற்றிச் சின்னம் பெகுவில் இருக்கிறதென்று நான் ஏற்கனவே சில நூல்களில் படித்திருந்தேனாதலால், அதைப் பார்க்க விரும்பினேன். பெகு தமிழர்கள் என்னை ஒரு நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்று, அந்தச் சின்னத்தை எனக் குக் காட்டினர். அது, வானோக்கி நின்ற வண்ணமல்லாமல், தரையில் படுத்துக் கிடந்த வண்ணம் எனக்குக் காட்சியளித்தது. ஆம்; சுதந்திர ஆர்வமுள்ள பர்மிய இளைஞர்களில் சிலர், அன்னியனான தமிழ் மன்னன் தங்கள் தாயகத்தை அடிமைப் படுத்தியதை நினைவூட்டும் அவமானச் சின்னம் என்று கருதி, அதைப் பெயர்த்தெடுத்து நீதிமன்றத் திடலில் ஒரு ஓரத்தில் போட்டு விட்டார்களாம்.

தமிழ் வேந்தனின் வெற்றிச் சின்னம் மதிப்பற்று ஒரு குப்பையிலே கிடக்கக் கண்டபோது, என் மனம் வருந்திய தென்பதை ஒளிவு மறைவின்றி நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால், அந்தச் சின்னத்தைப் பெயர்த்தெறிந்த பர்மிய இளைஞர்களின் சுதந்திர ஆர்வத்தை — தேச பக்தியை — இனமான உணர்வை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

இற்றைத் தலைமுறையினராகிய நாம் சோழச் சக்கரவர்த்தி களின் வெற்றிச் செய்திகளை ஒரு பாடமாகப் படித்துப் பெருமித மடையலாம். ஆனால், அந்தச் சக்கரவர்த்திகள் நாட்டிய வெற் றிச் சின்னங்களை அவர்களால் அடிமைப்படுத்தப்பட்ட நாட்டி னரும் போற்றி வணங்க வேண்டுமென்று நாம் எதிர்பார்ப்பதற்

கில்லை. ஆந்திர, மகாராஷ்டிர, ஆங்கில சாம்ராஜ்யங்களுக்கு அடிமைப்பட்டு அல்லலுற்ற தமிழினத்தாராகிய நாம் ஏகாதிபத் திய உணர்வுகளுக்கு இனியும் இரையாகக் கூடாது. ''நாம் யாரையும் அடிமைப்படுத்தவும் விரும்பவில்லை; நம்மை யாரும் அடிமைப்படுத்தவும் அனுமதிக்க மாட்டோம்'' என்பதே இன்று ஒவ்வொரு தமிழரும் கொள்ள வேண்டிய விரதமாகும். பழைய சாம்ராஜ்யங்களைப் பற்றிய பெருமைகளெல்லாம் பொய்யாய், கனவாய், பழங்கதையாய்ப் போய்விட வேண்டும்.

பர்மா, ஒருமொழி நாடு. பர்மா நாட்டு மக்கள், பர்மிய மொழி பேசும் தனி இனத்தார். அந்த இனத்தவரின் தாயகம் பர்மா நாடு. ஆம்; தமிழினத்தாருக்கு எப்படித் தமிழகம் தாயகமோ, அதுபோலத்தான்! ஆனால், பர்மியர் அதிர்ஷ்டசாலி கள்! பர்மாவைப் பர்மியரே ஆளுகின்றனர். பர்மாவில் ஆங்கி லேயர் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் பர்மியர் வாழ்விலே எங்கும் எதிலும் ஆங்கில மொழி ஒன்றே ஆதிக்கம் செலுத்தி யது. பர்மா சுதந்திர நாடாகிவிட்ட பின்னர், அங்கு பர்மியர் வாழ்விலே எங்கும் எதிலும் பர்மிய மொழி ஒன்று மட்டுமே செல்வாக்கு செலுத்துகின்றது. பெகு நீதிமன்றம் பர்மிய மொழி யிலேயே நடைபெறக் கண்டேன். இரங்கூன் உயர்நீதிமன்றத்தி லும் பர்மிய மொழிதான் நடவடிக்கை மொழி!

பெகு நிகழ்ச்சிகளைப் பகல் பொழுதிலேயே முடித்துக் கொண்டு, பொழுது சாயுமுன்பே அந்த அபாயப் பிரதேசத்தை விட்டுப் புறப்பட்டு, இரவு 7 மணிக்கு ரங்கூன் வந்து சேர்ந் தோம். அன்று மாலை ரங்கூன் இராமகிருஷ்ணா மண்டபத்தில் வள்ளலார் பற்றிப் பேசுவதற்காகப் பொதுக்கூட்டம் ஏற்பாடாகி யிருந்தது. அந்தக் கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் குழுமி எனது வருகையை மிகுந்த கவலையோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். நான் வருவதற்கு நேரம் ஆகஆக அவர்க ளுக்குக் கவலை அதிகரித்தது. சிறிது நேரங்கழித்து நான் மண்டபத்திற்குள் நுழைந்தபோது, என்னைக் கண்ட மக்கள் பேராரவத்துடன் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வரவேற்றனர். ஆம்; கரேன்கள் என்னைக் கடத்திச் செல்லாததிலே அவர் களுக்கு அவ்வளவு மகிழ்ச்சி! அவர்களுக்கென்ன, எனக்குந் தான் புனர்ஜன்மம் எடுத்தாற்போன்ற புத்துணர்ச்சி ஏற்பட்டது.

புனித மாண்டலே

பர்மாவில் அரசியல் புரட்சி நோக்குடைய பயங்கரவாதி கள் தொல்லையும் இருந்தது. இவர்கள் கம்யூனிஸ்டுகள் என்று சொல்லப்பட்டனர். இவர்கள் அடிக்கடி ஏதேனும் ஒரு ஊரைக் கைப்பற்றிக் கொண்டு, அங்குச் சில நாட்கள் ஆட்சி நடத்தி, தங்களுக்குத் தேவையானவற்றைத் திரட்டிக் கொண்டு, பின் காட்டுப் பிரதேசங்களுக்குச் சென்று தலைமறைவாகி விடுவார் களாம்.

நான் மோல்மேன் நகரிலிருந்தபோது சால்வின் நதிக்கரை யின் ஒரு புறத்திலுள்ள காட்டிலே அரசியல் பயங்கரவாதிகளுக் கும், பர்மா இராணுவத்தாருக்கும் போர் நடக்கக் கண்டேன். அவர்கள் பரஸ்பரம் சுட்டுக் கொண்டனர். வேட்டு சத்தம்தான் எனக்குக் கேட்டது. நபர்களைப் பார்க்க முடியவில்லை; பார்க்க நான் முயலவுமில்லை.

பர்மா மிகவும் அழகிய நாடு. இயற்கை அன்னை அந்த நாட்டில் காணுமிடந்தோறும் களிக்கூத்தாடுகிறாள். பார்க்குமிடந் தோறும் பச்சைப் பசேலென்ற தோற்றம். அரிசி போன்ற உண வுப் பொருளுக்கும் பஞ்சமில்லை. தேக்கு, மண்ணெண்ணெய் போன்ற பொருள்கள் தேவைக்கதிகமாகவே கிடைப்பதால், அவற்றை அயல்நாடுகளுக்கு அனுப்பி, அன்னியச் செலாவணி யையும் பெற முடிகின்றது. ஆயினும், நிலையான ஆட்சி நிலவுவதற்கான அரசியல் சூழ்நிலை அங்கு இல்லை. நான் சென்றபோது ஊநூ என்பவர் பிரதமராக இருந்தார். அவர் சிறந்த காந்தியவாதி.

பர்மாவில் மாண்டலே என்பது ஒரு பகுதி. அங்குள்ள சிறையில்தான் திலகர் பெருமான் ஆறாண்டுத் தண்டனையை அனுபவித்தார். லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பட்ட போதும் மாண்டலே சிறையில்தான் வைக்கப்பட்டார். அச்சிறையில் அடைபட்டு புனிதம் பெற எனக்கு வாய்ப்பில்லையென்றாலும், மாண்டலே மண்ணையேனும் மிதிக்க வேண்டும் என்று விரும்பி னேன். ஆனால், சுற்றுலாத் திட்டத்திலேயே அந்த ஊர் சேர்க்கப் படவில்லை. அது என் மனதில் ஒரு குறையாகப்பட்டது.

சந்நியாசிகளுடன் உரையாடல்

இரங்கூனிலுள்ள புத்த சங்கத்திற்குச் சென்று, அங்கிருந்த புத்த சந்நியாசிகள் சிலருடன் புத்த இலக்கியங்கள் பற்றி உரையாடினேன். நான் சந்தித்த சந்நியாசிகள் பௌத்த சமய இலக்கிய ஆராய்ச்சியில் வல்லுநர்களென்று அறிந்தேன். வியப் பென்னவென்றால், தமிழிலுள்ள பௌத்த காப்பியமான ''மணி மேகலை'' பற்றி அவர்கள் அறியாததாகும். ''மணிமேகலை'' என்ற பெயரைக்கூட அவர்கள் அறிந்திருக்கவில்லை. இதற்கு பர்மிய பௌத்தர்களை மட்டும் குறைசொல்லிப் பயனில்லை. தமிழர்களிலே பௌத்தரானோர் — அப்படியுஞ் சிலர் இருக்கின் றனர் — தமிழ்நாட்டிற்கு வெளியேயுள்ள பௌத்தர்களோடு இலக்கிய ரீதியில்கூடத் தொடர்பு கொள்ளாததும் இதற்குக் காரணமாகும். தமிழரிலே சிலர் தமிழ் இலக்கியங்களின் சிறப்பு களை வெளியுலகிலுள்ள இலக்கியவாதிகளுக்கு எடுத்தியம்புவ தற்கென உலகஞ் சுற்ற வேண்டும் என்பது எனது அவா. ஆம்; 'தமிழ்ப் பாதிரி'கள் தோன்ற வேண்டும்.

பர்மியப் பெண்கள் எனது பார்வையிலே மிகவும் அழகிக ளாகவே தோன்றினர். நம் நாட்டில் பெண்களின் அழகுக்கு மூக்கும் விழியுமே எடுத்துக்காட்டாகக் கொள்ளப்படுகின்றன. காளையொருவனுக்கு மணம் பேசக் கன்னியைத் தேடுவோர், தாங்கள் பார்த்த பெண் அழகாயிருந்தால், ''பொண்ணு மூக்கும் முழியுமா லட்சணமாயிருக்கிறாள்'' என்று சொல்வதுண்டு. முக்கியமாக மூக்கு எடுப்பாயிருப்பது பெண்ணின் அழகுக்கு இலக்கணம்.

பர்மியப் பெண்கள் அவ்வளவு பெருக்கும் மூக்கு எடுப் பாக இருக்காது. நிறமும் முகப் பொலிவும் கவர்ச்சிகரமான வையே. இந்தியத் தந்தைக்கும் பர்மியத் தாய்க்கும் பிறந்த பெண்கள் அவ்வளவு பேரும் மூக்கும் முழியுமாக லட்சணமாக இருக்கிறார்கள். அவர்களில் பலரை இந்தியத் தமிழ் இளைஞர் கள் மணந்து கொண்டு அங்கேயே தங்கி வாழ்கின்றனர்.

ஆங்சான் சமாதி

இரங்கூனிலுள்ள புத்தரின் பொற்கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு புத்த வழிபாடும் நிகழ்த்தினேன். புத்தருடைய வாழ்க்கை வரலாற்றிலும் உபதேச மொழிகளிலும் எனக்குக் கவர்ச்சியுண்டு. தமிழிலுள்ள புத்தமத நூல்களை நான் நிறையப் படித்திருக்கிறேன். அதனால், வெறும் சடங்குக்காக அல்லாமல், உண்மையாகவே புத்தரிடம் ஈடுபாடு கொண்டு வழிபாடு நிகழ்த்தினேன்.

ஆங்ஸான் என்பவர் சுதந்தர பர்மாவின் முதல் பிரதமராக இருந்தார். அவர் தலைமையில் அமைச்சரவை கூடியிருந்த போது, அவரது அரசியல் எதிரிகளான பாஸிஸ்டுகள் அவரையும் அவருடைய சக அமைச்சர்கள் அவ்வளவு பேரையும் ஒரே நேரத்தில் சுழல் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டனர். இது, உலகில் வேறெங்கும் நிகழாத கொடுமையான நிகழ்ச்சி. பர்மா சுதந்திரம் பெற்ற சில ஆண்டுகளுக்குள்ளாகவே இந்தக் கொடுமை நிகழ்ந்தது.

ஆங்ஸானின் அரசியல் வாழ்க்கை வரலாறு காந்தியவாதியான என்னைக் கவரத்தக்கதல்ல. அந்த நாட்டிற்கிருந்த சூழ்நிலையில் அவரது வழிமுறைதான் பர்மாவுக்குச் சுதந்திரம் தேடித் தந்தது. ஆகவே, காந்தியக் கண்கொண்டு பார்த்து அவரை நான் குறை கூறுவதற்கில்லை. பர்மா தமிழ்ச் சங்கத்தார் விருப்பத்திற்கிணங்க நான் ஆங்சான் சமாதிக்குச் சென்று மலர் வளையம் வைத்து மரியாதை செய்தேன்.

பர்மா வாழ் இந்தியர்கள் — குறிப்பாக, தமிழர்கள் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸிடம் பேரன்பு கொண்டவர்களாக இருக்கக் கண்டு மகிழ்ந்தேன். நேதாஜி பர்மாவிலும் சிலகாலம் தங்கி இந்திய தேசிய இராணுவப் படையை அமைத்தார் என்று அறிந்தேன். அவரது ஐ.என்.ஏ. படை வீரர் பலரையும் பார்த்தேன். கடைசியாக அவர் பர்மாவிலிருந்து விமானத்தில் சென்ற போதுதான் விபத்து ஏற்பட்டு, வாழ்விழந்ததாக பர்மா வாழ் தமிழர்கள் என்னிடம் கூறினர்.

இரங்கூன் வாசியான பர்மிய செல்வந்தரொருவர் எனக்குத் தமது இல்லத்தில் விருந்தளித்தார். அவர் குடும்பத்தார் என்னிடம் காட்டிய அன்பு இன்னமும் என் கவனத்தில் இருக்கிறது.

தேவர் படத்திறப்பு

பர்மாவில் மறவர்குலத் தமிழர்கள் ஒரு கணிசமான எண்ணிக்கையில் வாழ்கின்றனர். அவர்களுள் சிலர் மிகுந்த செல்வந்தர்களாகவும் இருக்கின்றனர். பர்மா மீன் கடைத் தொழிலாளர்கள் அனைவரும் மறவர்களே! அவர்கள் சம்பந்தப்பட்ட சங்கத்தார் நான் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் படத்தைத் திறந்து வைக்க வேண்டுமென்று கோரினர். பர்மா தமிழ்ச் சங்க நிர்வாகிகள் தேவரின் படத்தைத் திறந்து வைக்க நான் இணங்க மாட்டேன் என்று தவறாக நினைத்து, அவர்களாக அந்த நிகழ்ச்சிக்கு இசைவு தெரிவிக்க விரும்பாமல், மிகுந்த தயக்கத்துடன் என்னிடம் தெரிவித்தனர். தேவரிடம் எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. அவரும் என்னைப் பெரிதும் மதித்து வந்தார். தமிழ்நாடு காங்கிரஸில் ராஜாஜி — காமராஜ் கோஷ்டிப் பிரிவு ஏற்பட்டு, பூசல் நிகழ்ந்தபோது, தேவர் காமராசர் கோஷ்டிக்கு ஆதரவாக இருந்தார். நான் ராஜாஜி கோஷ்டியில் இருந்தேன். அப்போது நாங்கள் பரஸ்பரம் கண்டனம் செய்து கொண்டதுண்டு. அதற்குப்பின் எங்களுக்குள் எந்தவிதமான பூசலும் ஏற்பட்டதில்லை. சந்திக்கும் போதெல்லாம் சகோதர பாசத்துடனேயே பழகி வந்தோம். அதனால், சிறிதும் தயக்கமின்றி பர்மாவாழ் மீன்கடைத் தொழிலாளர்களான மறவர்களின் அழைப்பை மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்று, தேவரின் படத்தைத் திறந்து வைத்துப் பேசினேன்.

ஐராவதி நதிக்கரையிலுள்ள சீரியம் என்னும் ஊருக்கு மிகச் சிறிய கப்பலொன்றின் மூலமாக சுமார் 100 பேர் சூழப் பயணம் செய்தேன். வழியில் கப்பலிலேயே ரங்கூன் நாடகக் கலை மன்றத்தின் சார்பில் வரவேற்பு உபசாரம் நடைபெற்றது. இசை நிகழ்ச்சியும் இருந்தது. நான் அதுவரை கப்பல் பயணம் செய்தறியாதவனாதலால், அந்தச் சிறிய கப்பல் பயணம் பெருமகிழ்ச்சியைத் தந்தது.

பர்மாவிலுள்ள நாடார் சமூகத்தினர் பெரும்பாலும் மரக் கடை வியாபாரிகளாக இருந்தனர். அவர்களும் எனக்குத் தனியாக விருந்தளித்து, விலையுயர்ந்த பரிசுப் பொருள்கள் தந்து உபசரித்தனர். சோளிய முஸ்லிம் சங்கத்தாரும் என்னுடன் தங்களுக்கு மத வேறுபாடு இருப்பினும் தமிழர் என்ற இன உணர்ச்சி காரணமாக என்னை வரவேற்றுத் தங்கள் சங்கத்தின் சார்பில் தனியாக உபசாரம் செய்தனர்.

'பர்மா' என்றால் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் இல்லாமலா? அவர்கள அங்கு பாங்கர்களாக இருந்தனர். இரங்கூனில் மட்டுமின்றி, நான் சென்ற ஒவ்வொரு ஊரிலுமே செட்டியார் சமூகத்தார் சிறந்த முறையில் எனக்கு வரவேற்பளித் தனர். அவர்கள் தமிழ் மொழியிடத்து மிகுந்த பற்றுள்ளவர் களல்லவா! என்னுடன் துணைக்கு வந்திருந்த திரு. சோம. சாமிநாதன் தேவக்கோட்டைச் செட்டியாராதலால், எங்கள் இரு வரையும் வரவேற்றுச் சிறப்புச் செய்தனர். பர்மாவில் — குறிப்பாக, ரங்கூனில் எவ்வளவு சங்கங்கள் உண்டோ அவ்வள வும் என்னைத் தனித்தனியே வரவேற்று உபசரித்தன.

ஆம்; 'தமிழர்' என்னும் இன உணர்ச்சியால் என்னை வரவேற்பதில் பர்மா தமிழர்கள் தங்கள் சாதி, சமய, வருண, வர்க்க வேறுபாடுகளை மறந்துவிட்டனர்.

எளிமை படும்பாடு!

பர்மாவை விட்டுப் புறப்படுவதற்கு முதல் நாளன்று அகில பர்மா இந்தியர் சங்கச் சார்பில் ரங்கூனில் ஐரோப்பிய பாணியில் அமைந்துள்ள மிகப் பெரிய ஓட்டலொன்றில் எனக்குப் பகல் விருந்து தரப்பட்டது. நம் நாட்டில் நடப்பதுபோல, விருந்து இலவசமல்ல. பிரதான விருந்தினருக்குத்தான் இலவசம். மற்ற படி விருந்தில் கலந்து கொள்ளுவோரில் ஒவ்வொருவரிடமும் கட்டணம் நிச்சயித்து வசூலிக்கப்படுகிறது. அங்கு, விருந்தில் பல தரமுண்டு. தரத்திற்கேற்ப கட்டணம் கூடுதலாகவும் குறை வாகவும் இருக்கும். எனக்கு நடத்தியது முதல்தரமான விருந்து என்று சொல்லப்பட்டது. அ.ப. இந்தியர் சங்கத்தில் தமிழர்

மட்டுமேயன்றி, குஜராத்தியர் — வங்காளியர் — பஞ்சாபியர் ஆகிய வட இந்தியர்களும் உள்ளனர். வடவர்கள் செல்வாக்கில் தான் சங்கம் இருக்கிறது. ஒரு இந்தியன் — தேசபக்தன் என்ற முறையில்தான் அந்தச் சங்கம் எனக்கு விருந்தளிக்க முன் வந்தது.

இந்த விருந்துக்குச் செல்லுமுன்னர், நகரில் வேறு சில இடங்களைப் பார்க்கச் சென்றேன். அவற்றைப் பார்த்து முடித்த பின்னர் எனக்காக விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்த — ஐரோப் பிய பாணியில் அமைந்திருந்த மிகப் பெரிய ஓட்டலுக்கு டாக்ஸியில் சென்றேன். அங்கு விருந்தில் கலந்து கொள்ள வந்திருந்த பிரமுகர்களின் கார்கள் வரிசை வரிசையாக நிறுத்தப் பட்டிருந்தன.

நான் டாக்ஸியை விட்டிறங்கி ஓட்டலுக்குள் நுழைந்தபோது விசேஷ உடையணிந்திருந்த வாயிற் காவலர் என்னைத் தடுத்து நிறுத்தினார். என்னுடன் இருந்தவர்கள் நான்தான் விருந்தின் நாயகன் என்று கூறியும் அந்த வாயிற் காவலர் நம்பாதவராகி என்னை உள்ளே விட பிடிவாதமாக மறுத்தார். வேட்டி, சட்டை, குட்டையணிந்து, மெலிந்த உருவத்துடன் வாடகைக் காரில் வந்து இறங்கும் ஒருவரை ஐரோப்பிய பாணி ஓட்டலில் நடக் கும் விருந்தின் நாயகனாக ஏற்றுக் கொள்ள பர்மா இந்தியர் தயாராகிவிட்ட பின்னரும், வாயிற் காவலர் தயாராக இல்லை என்பது சுவையான நிகழ்ச்சிதானே!

இரங்கூன் ஓட்டலின் நுழைவாயிலுக்கு வெளியே நான் தடுத்து நிறுத்தப்பட்டதை ஓட்டலுக்கு உள்ளிருந்தபடியே பார்த் துவிட்ட தமிழ்ப் பிரமுகரிருவர் விரைந்தோடி வந்து, வாயிற் காவலரைக் கடிந்து கொண்டு, அவரது தடையைத் தகர்த்து என்னை ஓட்டலுக்குள்ளே அழைத்துச் சென்றனர்.

விருந்திற்கு பர்மா இந்தியத் தூதுவரகத் தலைமை அதிகாரி யும் வந்திருந்து என்னைக் கௌரவப்படுத்தினார். பஞ்சாபி கனவான் ஒருவர் விருந்திற்குத் தலைமை தாங்கினார்.

நண்பர்கள்!

பர்மாவை விட்டுப் புறப்படுமுன் அங்கு எனக்கு அறிமுகமான புதிய நண்பர்களைப் பற்றிக் கூறியாக வேண்டும். டாக்டர் ஜே.வி. ராபர்ட்சும், அவரது மனைவியாரும் நான் ரங்கூனிலிருந்த நாட்களில் என்னைத் தங்கள் விருந்தினனாக ஏற்று இராமாயணத்தில் இராமனை உபசரித்த சபரி போல என் வயிற்றுக்கேற்ற உணவளித்து என்னை உபசரித்தனர்.

அசாத் புகைப்பட நிறுவன உரிமையாளர் கே. இராமசாமி, பர்மாவில் எனது நிழல் போல் என்னைப் பின்பற்றி நான் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளையெல்லாம் புகைப்படமெடுத்து நான் தாயகம் புறப்பட்டபோது, அவ்வளவு படங்களையும் தொகுத்து ஒரு பெரிய ஆல்பத்தையே என்னிடம் கொடுத்தார். அதை அவருடைய ஞாபகார்த்தமாகவும் பாதுகாத்து வருகிறேன்.

சாந்தா ஆர்ட்ஸ் உரிமையாளர் திரு. லெட்சுமணன், ஏ.எஸ். ஏகாம்பரம், மர வியாபாரி செல்லையா, 'பர்மா நாடு' ஆசிரியர் எச்.வி. டேவிட், முத்துக்குமாரசாமி நாடார், கே.ஏ. தியாகன், காந்தி அண்ணாமலை, கோல்டன் வாலி ஆகிய பலர் பர்மாவில் நண்பர்களாயினர். இவர்களில் ஒருவரைக்கூட பர்மா செல்வதற்கு முன்பு நான் அறியேன்.

நான் பர்மாவிலிருந்து திரும்பிய பின்னர், அங்குள்ள இளைஞர் சிலர், எனது வருகையின் நினைவாக, ''பர்மா தமிழ்க் கலாச்சாரக் கழகம்'' என்ற நிறுவனமொன்றை அமைத்து, அதனை, தாய்த் தமிழகத்திலுள்ள தமிழரசுக் கழகத்தின் கிளையாகப் பதிவு செய்து கொண்டனர். இந்தக் கழகத்தின் சார்பில் எனது 54, 56ஆவது பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடியதோடு, இரண்டு விழாக்களின் போதும் அழகிய மலர்களை வெளியிட்டும் எனது வாழ்க்கை வரலாற்றுக்கு மணமூட்டினர்.

பர்மாவிலிருந்து கல்கத்தா வழியாக சென்னை திரும்பிய போது, கல்கத்தா விமான நிலையத்திலும், சென்னை சென்டிரல் ஸ்டேஷனிலும் எனக்குச் சிறப்பான வரவேற்பு தரப்பட்டது. சென்னை திரும்பிய அன்று மாலை திருவல்லிக்கேணிக் கடற்கரையில் தமிழரசுக் கழகத்தின் சார்பில் மாபெரும் வரவேற்புக் கூட்டம் நடத்தப்பெற்றது.

மீண்டும் வடக்கெல்லைப் போர்

நான் பர்மாவிலிருந்து திரும்பதும் — நானே எதிர்பாராத வகையில் — வடக்கெல்லைப் போரில் ஈடுபட்டுச் சிறை புகவேண்டியவனானேன். நான் தணிகையில் 144 தடையுத்த ரவை மீறி 6 வாரக் கடுங்காவல் தண்டைன பெற்றதன் எதிரொலி யாக ''தமிழக — ஆந்திர எல்லைச் சிக்கலைத் தீர்த்து வைக்க எல்லைக் கமிஷன் நியமிக்கப்படும்'' என்று பிரதமர் நேரு உறுதி கூறினாரல்லவா! அதன் பின்னர் மீண்டும் ஒரு போராட்டத்தில் ஈடுபட வேண்டிய, தேவையில்லாமலே வடக்கெல்லைச் சிக்கல் தீர்க்கப்பட்டு விடுமென்று உண்மையிலேயே நான் நம்பினேன்.

முதல்வர்கள் மாறினர்!

நான் நம்பியது போல, நடக்கவில்லை. நேரு உறுதிமொழி தந்த பத்து திங்களுக்குள் ராஜாஜி முதல்வர் பதவியைத் துறந் தார். அதனையடுத்து, திரு. கு.காமராசர் அப்போதைய சென்னை மாநிலத்தின் முதல்வர் பீடத்தில் ஏறினார். இது நிகழ்ந்த சில திங்களுக்குள் திரு. காமராசரின் கோஷ்டியினரான திரு.பி. கோபால் ரெட்டியார் ஆந்திர மாநிலத்தில் முதல்வரா னார். இந்த இரு மாநிலங்களில் முதல்வர்கள் மாறியதால் எல்லைச் சிக்கலில் கைக்கெட்டிய வெற்றிக்கனி வாய்க்கெட்டா மற் போகக் கூடுமென்று நான் அஞ்சினேன்.

சூலை 4-இல் தணிகையில் எல்லைப் போர் நிறுத்தப்பட்ட தும் அம்மாதம் 26-ஆம் தேதி பிரதமர் நேரு எனக்கெழுதிய கடிதமொன்றில்,

> *''எல்லைச் சிக்கலைத் தீர்த்து வைப்பது பற்றி ஆராயப் பட்டு வருகின்றது. சில தகவல்கள் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் இதற்கு இசைந்துள்ளன. தகவல்கள் சேகரிக்கும் வேலை முடிந்த பின்னர் இரு முதன் மந்திரிகளும் சந்தித்து எல்லைக் கமிஷன் நியமிப்பது சம்பந்தப்பட்ட பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசி முடிவு செய்வார்கள்.''*

என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

சித்தூர் மாவட்டத்திலுள்ள தகராறுக்குரிய தாலுக்காக்கள் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும் — அதாவது, மொழி அடிப்படையில் கிராமவாரி மக்கள் தொகையைக் கணக்கிடவும் அதே அடிப்படையில் தமிழ் — தெலுங்கு கிராமங்களைத் தனித்தனியே காட்டும் நிலப்படங்களைத் தயாரிக்கவும் ராஜாஜி ஆட்சியின் போதே தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் தயாரித்துத் தந்த தகவல்களை வைத்துக் கொண்டு தாங்களே பேசித் தீர்த்து விடுவதாகவும், எல்லைக் கமிஷன் நியமனம் தேவையில்லையென்றும் தமிழக — ஆந்திர முதல்வர்களான திரு. காமராசரும், திரு. கோபால் ரெட்டியும் அறிக்கை விட்டனர். இதனால், எல்லைக் கமிஷன் நியமன முயற்சியை மத்திய அரசு கைவிட்டது. தமிழக — ஆந்திர முதல்வர்கள் எல்லைச் சிக்கலைத் தாங்கள் நடத்தி வந்த கோஷ்டி அரசியலுக்குப் பலி கொடுக்கத் திட்டமிட்டனர்.

ஓசூர் பிரச்சினை

அவர்களே அறிவித்திருந்தபடி சென்னை நகரில் முதல்வர்கள் சந்திப்பு நடைபெற்றது. ஆந்திர முதல்வருடன் அவரது சக அமைச்சர் திரு. காளா வெங்கடராவும், தமிழக முதல்வருடன் திரு. சி. சுப்பிரமணியமும் பேச்சு வார்த்தையில் பங்குபெற்றனர். ஆனால், பேச்சு வெற்றி பெறாமல் முறிந்துவிட்டது. சேலம் மாவட்டத்திலுள்ள ஓசூர் தாலுக்காவை ஆந்திரத்திற்குக் கொடுத்தாலன்றி, சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்க் கிராமங்களைத் தர இயலாதென்று ஆந்திர முதல்வரும் அமைச்சரும் திட்டவட்டமாகக் கூறிவிட்டதாலேயே பேச்சு முறிந்தது.

ஓசூர் தாலுக்கா ஆந்திர — தமிழக எல்லையிலிருப்பினும், அதில் தமிழரோ, ஆந்திரரோ பெரும்பான்மையினராக இல்லை. இந்த இரு தரப்பாரை விடவும், கன்னடர் கூடுதலாக உள்ளனர். ஆயினும், அவர்களும் 50 சதவிகிதத்திலோ, அதற்கும் அதிக அளவிலோ இருக்கவில்லை. அத்துடன், ஓசூருக்கும் கன்னட மாநிலத்திற்கும் நிலத் தொடர்பு இருக்கவில்லை. மற்றும், ஓசூரிலுள்ள கன்னடர்கள், அந்தப் பிரதேசம் தமிழகத்தில் நீடிப்பதையே விரும்புகின்றனர். இவற்றால், ஓசூரை ஆந்திரத்திற்குத் தரத் தமிழக அரசு மறுத்ததில் நியாயமுண்டு.

பேச்சுவார்த்தை முறிந்ததென்றாலும், ஒரு திங்களுக்குப் பின்னர் திரும்பவும் தாங்கள் சந்தித்துப் பேசுவதும் சாத்தியமே என்றனர் தமிழக — ஆந்திர முதல்வர்கள். இதனை, இந்திய அரசு எல்லைக் கமிஷன் நியமிக்காதவாறு செய்வதற்கான சூழ்ச்சி என்றே நான் கருதினேன். தமிழக — ஆந்திர முதல்வர் களின் சந்திப்பு திட்டமிட்டு நடத்தப்பட்ட நாடகமாகவே எனக்குத் தோன்றியது.

தமிழக — ஆந்திர முதல்வர்கள் நடத்திய சமரசப் பேச்சு முறிந்ததென்றாலும், ஒரு அநியாயத்திற்குத் தமிழக அரசு ஆந்திர அரசிடம் உடன்பட்டுவிட்டது — அதாவது, தமிழக — ஆந்திர எல்லைச் சிக்கலைக் கிராம அடிப்படையில்தான் தீர்க்க வேண்டும் என்பதே அந்த உடன்பாடு. பிர்க்கா அடிப் படையில் தீர்க்க வேண்டுமென்று தார் கமிஷன் பரிந்துரை செய்திருந்தது. அதை ஏற்றிருந்தால், திருத்தணி தாலுக்கா மட்டுமின்றி, சித்தூர் (நகரம் உட்பட) பிர்க்காவும், புத்தூர் தாலுக்காவில் ஒரு பிர்க்காவும் தமிழகத்திற்குக் கிடைக்கும். இதைத் தவிர்க்கும் தந்திரமாகவே பிர்க்கா அடிப்படையில் எல்லைச் சிக்கலைத் தீர்ப்பதற்கு மாறாக, கிராம அடிப்படையில் தீர்க்க வேண்டுமென்று ஆந்திர முதல்வர் கோரினார். தமிழக முதல்வரும் அதற்கு எளிதில் இணங்கிவிட்டார். ஆம்; முதல்வர் கள் சந்திப்பு ஆந்திரத்திற்கு லாபமாகவே முடிந்தது.

தமிழக — ஆந்திர முதல்வர்கள் சந்திப்பின்போது வடக் கெல்லைப் பாதுகாப்புக் குழுவின் தலைவன் என்ற முறையில் நானும் உடனிருக்க அனுமதி கோரினேன். ஆனால், அதற்குத் தமிழக முதல்வர் இணங்கவில்லை. அப்புறம் ஆந்திர முதல்வரா இணங்குவார்?

முதல்வர்கள் சந்திப்பு தோல்வியுற்ற பின்னர், நான் பிரதமர் நேருவுக்கு 'இறுதிக் கடிதம்' எழுதினேன். அதில் எல்லைக் கமிஷன் உடனடியாக — அதாவது, ஆகஸ்டு இறுதிக்குள் நியமிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தியிருந்தேன். பிரதமர் 1.8.56-இல் எனக்கெழுதிய பதில் கடிதத்திலே,

''இந்திய அரசினரைப் பொறுத்தமட்டில் இவ்விஷயத் தைத் துரிதப்படுத்த ஆவலுடன் இருக்கிறார்கள். ஆனால், சில தவிர்க்க முடியாத காரணங்களால் தாமதம் ஏற்படு கிறது. ஆந்திர — தமிழக முதல்வர்களின் சமரசப் பேச்சு பயன் தராவிடில் எல்லைக் கமிஷன் விரைவிலேயே நிய மிக்கப்பட முடியும் என்று நம்பப்படுகிறது''

என்று கூறியிருந்தார். பிரதமரின் பதில் எனக்கு மனநிறைவைத் தரவில்லை.

அரசுடன் சமரசம்

1955 ஆகஸ்டு 24-இல் சென்னை சட்டப்பேரவை முன்பு மறியல் போராட்டம் நடத்துவதென்று தமிழரசுக் கழகம் முடி வெடுத்தது. அதிலே கலந்து கொள்ள சித்தூர் மாவட்டத் தமிழ்த் தாலுக்காக்களிலிருந்து படை வீரர்கள் சரியாக 200 பேர் அணி அணியாக நடைபோட்டு சென்னை நோக்கி வந்தனர். ஆனால், மறியல் போர் தொடங்கவிருந்த முதல் நாள் (ஆக.23) அன்று மாலை தமிழக நிதியமைச்சர் சி.சுப்பிரமணியம் அவர்கள் செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு வந்து தம்மைச் சந்திக்குமாறு கடிதம் மூலம் என்னை அழைத்தார். அழைப்பை ஏற்று நிதிய மைச்சரைச் சந்தித்தேன். அந்த ஆண்டின் இறுதிக்குள் எல்லைச் சிக்கலைப் பேச்சு வார்த்தை மூலமாகவே தீர்த்துத் தருவதாக வும், அதுவரை போராட்டத்தை நிறுத்தி வைக்குமாறும் கேட்டுக் கொண்டார். இந்த உறுதிமொழி — அதாவது, எங்களிருவரிடை யில் ஏற்படும் உடன்பாடு அரசிதழில் (கெஜட்டில்) வெளியிடப் பட வேண்டுமென்று நான் கோரினேன். அதன்படியே செய்யப் பட்டது. ஆகவே, கடைசி நேரத்தில் போர் நிறுத்தப் பிரகடனம் வெளியிட்டேன். 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'தினமணி', 'சுதேச மித்திரன்' ஆகிய செய்திப் பத்திரிகைகள் தலையங்கங்கள் எழுதி என்னைப் பாராட்டின.

எதிர்பார்த்தபடி பிரச்சினை தீர்க்கப்படவில்லை. ஆம்; தமிழக ஆந்திர முதல்வர்களுக்கு எல்லைச் சிக்கலைத் தீர்த்து வைக்கும் எண்ணம் இல்லை. இரு ராஜ்யங்களுக்குமிடையே

அப்போதிருந்த எல்லை நிலைபெற வேண்டும், நீடிக்க வேண்டும் என்பதே அவர்கள் கருத்தென்பது தெரிந்தது. எல்லைப் பிரச்சினை பற்றிச் செய்தி நிருபர்கள் கேட்கும்போதெல்லாம், ''அதற்கென்ன இப்போது அவசரம்?'' என்று அலட்சியமாகப் பதிலளித்து வந்தார் முதல்வர் காமராசர்.

எட்டாவது சிறைவாசம்!

இதனால், நான் பர்மாவிலிருந்து சென்னை திரும்பிய இரண்டு வாரத்திற்கெல்லாம் எல்லைப் போர் தொடங்கினேன். 1956 செப்டம்பர் 24 முதல் 29 வரை சென்னையில் சட்டப் பேரவை முன்பு மறியல் நடத்தப்பட்டது. இம்முறையும் தமிழரசுக் கழகமே நேரடியாகப் பொறுப்பேற்றுப் போராட்டத்தை நடத்தியது.

நாள்தோறும் காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை மறியல் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் நானும் நேரடியாக ஈடுபட்டுக் கைதியாகி, சென்னை மத்திய சிறையில் 'ஏ' வகுப்பில் வைக்கப்பட்டேன்.

நான் 5 நாட்கள் சிறை வாழ்க்கையை அனுபவித்தேன். எனது வாழ்க்கையில் இது எட்டாவது சிறைவாசமாகும். தினமும் மறியலில் ஈடுபடுவோர் அனைவரும் தடுப்புக் காவல் சட்டப்படி கைது செய்யப்பட்டு, விசாரணையின்றிச் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். செப்டம்பர் 4-ஆம் தேதி தொடங்கிய மறியல் போராட்டம் 9-ஆம் தேதி வரை தொடர்ந்து 6 நாட்கள் நடைபெற்றது. சரியாக 500 பேர் சிறைப்பட்டனர். சட்டப்பேரவை முடிந்த அன்று மாலை நாங்கள் அனைவரும் நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்யப்பட்டுவிட்டோம்.

ஆம்; தமிழ்நாட்டின் எல்லைப் பகுதிகளை மீட்க முயன்றதற்காக, தமிழர் ஆட்சியிலே நான் என் தோழர்களோடு சிறை வைக்கப்பட்டேன். 6 முறை சிறைவாசம் பிரிட்டிஷ் ஆட்சியிலே! ஏழாவது சிறைவாசம் ராஜாஜி ஆட்சியிலே! எட்டாவது சிறைவாசம் திரு. காமராசர் ஆட்சியிலே! என்னைவிட, அதிர்ஷ்ட சாலி' வேறு யாரிருப்பர்!

பசும்பொன் தேவர் பாராட்டு

நான் சிறைப்பட்ட செய்தி அறிந்ததும் பசும்பொன் திரு. முத்துராமலிங்கத் தேவர் 7.9.56-ஆம் தேதியிட்டு எனக்கொரு கடிதம் எழுதினார். நான் விடுதலையானதும் அதனைப் பார்வையிட்டேன். அந்தக் கடிதத்தை இங்கு அப்படியே தருகிறேன்:

''தமிழ்நாடு — தமிழுக்கும் தமிழ்ப் பண்புக்கும் முரண்பட்ட முறையில் ஆங்கிலேய ஆட்சிக் காலத்திலிருந்தே அலக்கழிக்கப்பட்டு வருகிறது.

''அந்த அலக்கழிவு, முடிவில் 'தமிழ் மாகாண'மென்று கூடச் சொல்ல இயலாது — 'எஞ்சிய சென்னை' என்பதன் பெயராலேயே இழிவான முறையில் (தமிழ் மாகாணத்துக்கு) பெயரிடப்பட்டிருக்கிறது. சரித்திரச் சான்றான திருப்பதியையும் இழந்து நிற்கிறது. இந்நிலையில், சென்னையையொட்டி, ஜனத் தொகையிலும் சர்வ முறையிலும் தமிழ்நாட்டிற்குப் பாத்தியப்பட்ட சித்தூரையும், திருத்தணி போன்ற தேவாலயத்தையும் இழந்து நிற்கிறது.

''இதற்கென ஒரு போராட்டம் வரவேண்டிய அளவுக்கு காங்கிரசின் மந்தப் புத்தி, காலத்தை வீணாக்கிப் போராட்டம் வந்த பிறகும், ஆங்கிலேயன் முறையைப் பின்பற்றி அடக்குமுறையைக் கையாள நினைக்கிறதே தவிர அறிவு வந்ததாக இல்லை — மந்திரி சபைக்கு! அறிவு வராது. ஏனென்றால், காங்கிரசில் கை தூக்கிகள் மலிந்து விட்டதாலும், மானத்தை விட பதவியும் பணமும் பெரிது எனக் கருதுகிற நபர்கள் அதை ஒட்டிக் கொண்டிருப்பதாலுமே!

''எனினும், இந்த வடக்கெல்லைப் போராட்டம் நீடிக்குமானால் இதில் மந்திரி சபை வழக்கம்போல் அசட்டுத்தனத்தைக் கையாளுமானால் விபரீத விளைவுகளை எதிர் பார்க்க நேரும். அது பல பொட்டி ஸ்ரீராமுலுகளை தமிழ் நாட்டில் தயாரிக்கும். அப்பொழுது, மந்திரி சபை மிகப்

பெரிய — வேண்டாத பொறுப்புகளுக்கு இலக்காகி மரியாதையையும் பதவியையும் ஒருங்கே கைவிட வேண்டி வரும். எச்சரிக்கையாகவும், புத்திசாலித்தனமாகவும் நடந்து கொண்டால் நல்லது என்று மீண்டும் கேட்டுக் கொண்டு, தமிழ் எல்லைப் போராட்டத்திற்கு ஆசி கூறுகிறேன்.

''சிறை செல்லும் தியாகிகளுக்கும் என் வணக்கம் உரித்தாகுக!

''போராட்டம் நீடித்தால் உங்களோடு பங்கு கொள்ளும் காலமும் சமீபிக்கும்!''

திரு. தேவரின் கடிதம் எனக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்தது. அவருக்கு நன்றி தெரிவித்தும், அவரது ஒத்துழைப்பைக் கோரியும் பதில் எழுதினேன்.

சட்டப்பேரவை முன்பு நடைபெற்ற மறியல் சென்னை நகரில் வடக்கெல்லைப் போரின் முதல் கட்டந்தான் என்றும், 2ஆவது கட்டம் அக்டோபர் 15-இல் தொடங்குமென்றும், அது நாடு தழுவிய முறையில் நடைபெறுமென்றும் அறிவித்துவிட்டு, செப்டம்பர் 9-ஆம் தேதியன்று மறியல் போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தினேன்.

நாடு தழுவிய போர்!

தமிழரசுக் கழகத்தின் வேண்டுகோளின்படி 28.9.56 அன்று தமிழ்நாடு முழுவதும் ''எல்லைக் கமிஷன் கோரிக்கை நாள்'' கொண்டாடப்பட்டு, இரண்டாவது கட்டப் போருக்கு ஆதரவு திரட்டப்பட்டது. எல்லைக் கமிஷன் அனுப்புமாறு கோரி பிரதமர் நேருவுக்கு அஞ்சலட்டை எழுதுமாறு தமிழ் மக்களை நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க சுமார் 20,000 அஞ்சலட்டைகள் அனுப்பப்பட்டன. நாடு தழுவிய அளவில் போராட்டத்தைத் தொடங்குவதற்கு முன்பு நான் தமிழ்நாட்டில் ஒரு வார காலம் சுற்றுலா செய்து, போராட்டத்தின் அவசியத்தைப் பொது மக்களுக்கு உணர்த்தினேன்.

திட்டமிட்டபடி அக்.15-இல் இரண்டாவது கட்டப் போராட்டம் தமிழ்நாடெங்கும் தொடங்கியது. அரசு அலுவல கங்கள் முன்பு மறியல், ரெயில் நிறுத்தம், சட்டப்பேரவை முன்பு மறியல், அமைச்சர்கள் எதிரே கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் ஆகியவை போராட்ட நடவடிக்கைகளாக இருந்தன. கழகத் தோழர்கள் ஆயிரக்கணக்கில் ஈடுபட்டனர். அப்போது கழகப் பொதுச் செயலாளராக இருந்த வேலூர் வி.கே. குப்புசாமி அவர்கள், போராட்டம் தொடங்குமுன்பே தடுப்புக் காவல் சட்டப்படி கைது செய்யப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப் பட்டார்.

சங்கரலிங்கனார் உயிர்த்தியாகம்

போராட்டம் தொடங்குவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே அக்.13-இல் விருதுநகரில் 70 நாட்களுக்குமேல் உண்ணா நோன்பிருந்த முதியவர் சங்கரலிங்க நாடார் உயிர் துறந்தார். அவர் வடக்கெல்லைப் பிரச்சினைக்காகப் பட்டினி இருக்கவில்லை. 20-க்கு மேற்பட்ட கோரிக்கைகளைத் தமிழக அரசின் முன் வைத்து, அவற்றை நிறைவேற்றுவதாக முதல்வர் காமராசர் உறுதி கூற வேண்டுமென்று கோரிப் பட்டினி கிடந் தார். அவற்றுள், 'தமிழ்நாடு' பெயர் கோரிக்கையும் ஒன்றாக இருந்தது. மற்ற கோரிக்கைகள் நானோ, தமிழரசுக் கழகமோ ஏற்கக் கூடியனவாக இல்லை — குறிப்பாக, தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென்பத னையும் அவர் தம்முடைய கோரிக்கைப் பட்டியலில் சேர்த்திருந் தார். நாடார், சிறந்த தேசியவாதி.

தமிழரசுக் கழகம் வடக்கெல்லைப் பகுதிகளை மீட்கக் களம் புக இருந்த நேரத்தில் விருதை முதியவர் உயிர்த் தியாகம் புரிந்தது, எல்லைப் போருக்குக் களபலி கொடுத்தது போலிருந் தது. போராட்டத்தின் மத்தியிலேயே 21.10.56-இல் நாடெங் கும் 'தியாகி சங்கரலிங்கனார் நாள்' கொண்டாடி, அந்த மாவீரத் தியாகிக்குத் தமிழரசுக் கழகம் அஞ்சலி செலுத்தியது. சங்கரலிங் கனார்க்கு அஞ்சலி செலுத்தி நாள் கொண்டாட வேறு கட்சி எதுவும் முன்வரவில்லை.

'தமிழ்நாடு' கோரிக்கையை மட்டும் வலியுறுத்தி, மற்றவற்றைக் கைவிட்டால், அவருக்குத் தமிழரசுக் கழகம் முழு அளவில் ஆதரவளிக்குமென்று விருதுநகர் தமிழரசுக் கழக நிர்வாகிகள் மூலம் அவருக்குச் செய்தி அனுப்பினேன். சங்கரலிங்கனார், தம் கோரிக்கைகளில் ஒன்றைக்கூடக் கைவிட இயலாதென்று உறுதியாகக் கூறிவிட்டார். அவர் மனத்தை மாற்ற விரும்பி விருதுநகருக்கு நானே நேரில் சென்று அவரைப் பார்த்தேன். துரதிர்ஷ்டவசமாக நான் பார்த்த அன்று அவர் மரணத்தின் எல்லைக்குச் சென்றுவிட்டார். அதனால், அவரோடு நான் விவாதிக்கவில்லை. அவரது மனஉறுதி கண்டு நாடே வியந்தது. முதலமைச்சர் காமராசர், முதியவர் சங்கரலிங்கனாரை மதித்து, அவரது உண்ணா நோன்பினை முடிவுக்குக் கொண்டுவர முயற்சி எடுக்கவே இல்லை. முதல்வரின் கல்நெஞ்சப் போக்கு கண்டு மக்கள் வியப்பும் வேதனையும் அடைந்தனர்.

மாணிக்கங்களை இழந்தேன்!

எல்லைப்போர் நடந்து கொண்டிருந்தபோது என்னைத் திடுக்கிட வைக்கும் செய்திகள் இரண்டு கிடைத்தன. தமிழ்நாட்டில் பழனி சப் ஜெயிலில் கழகத் தோழர் மாணிக்கம் காலரா நோய் கண்டு உயிர் நீத்தார். அதற்கடுத்த நாளில் ஆந்திராவிலுள்ள ராசமகேந்திரம் சிறையில் திருவாலங்காடு கே.கோவிந்தசாமி உயிர் நீத்தார். இருவருமே திருமணமாகாத இளைஞர்கள்.

பழனி மாணிக்கம், 'ம.பொ.சி.', 'தமிழரசுக் கழகம்' என்று சொல்லிக் கொண்டே உலக வாழ்வை நீத்தார். ஏழைக் குடியைச் சேர்ந்தவர். பெற்றோரும், சகோதரரும் உண்டு. திருவாலங்காடு கோவிந்தசாமி பரம ஏழை. தந்தையை இழந்தவர். தாயால் வளர்க்கப்பட்டவர். அந்த அன்னையையும் நீத்து அமரரானார். தமிழகத்தின் எல்லை காக்க உயிர் நீத்த இந்த மாவீரர்களைக் கௌரவிக்க 18.11.56-இல் மாநிலம் முழுவதிலும் தமிழரசுக் கழகச் சார்பில் ''தியாகிகள் தினம்'' கொண்டாடச் செய்தேன். கழகத் தோழர்கள் தங்கள் உடன் பிறந்தார்போலக் கருதி மறைந்த தியாகிகளுக்கு உணர்ச்சிபூர்வமாக அஞ்சலி செலுத்தினர். சத்தியாக்கிரகிகளைப் பாராட்டி அறிக்கைவிட தமிழரால்

நடத்தப்படும் அரசியல் கட்சிகளிலே ஒன்றுகூட முன்வர வில்லை.

அப்போது ஆந்திரம் தனி மாநிலமாக இருந்ததால், சித்தூர் மாவட்டத் தமிழ்ப் பகுதிகளில் கைது செய்யப்பட்டு ஆந்திர அரசால் தண்டிக்கப்பட்ட 200-க்கு மேற்பட்டவர்கள் ஆந்திர மாநிலத்திலுள்ள பெல்லாரி, ராசமகேந்திரம் சிறைகளில் அடைக் கப்பட்னடர். திரு. கோவிந்தசாமியின் மரணச் செய்தி சில நாட்கள் தாமதித்தே எனக்குக் கிடைத்தது. ஆம்; ஆந்திர அரசின் 'கருணை' அப்படி இருந்தது!

ஆத்திரப்பட்டதன் விளைவு

விருதுநகர் சங்கரலிங்கனார், பழனி மாணிக்கம், திருவா லங்காடு கோவிந்தசாமி ஆகியோர் மறைவு என்னைக் கதிகலங் கச் செய்துவிட்டது. நாடு முழுவதிலும் போலீசார் எல்லைப் போராட்ட வீரர்களைக் கொடுமையாக நடத்திய செய்திகள் வேறு மணிக்கு மணி எனக்குக் கிடைத்து வந்தது. இவற்றால், நான் பொறுமையிழந்தேன். பிரதமர் நேருவிடம் எனக்கிருந்த நம்பிக்கையும் ஆட்டங் கண்டுவிட்டது. இந்த நிலையில், பிரத மர் நேருவின்பால் எனக்குள்ள வெறுப்பை வெளிப்படுத்த விரும்பி, அவர் சூலை 7-இல் எல்லைக் கமிஷன் நியமிப்பதாக உறுதி கூறி எனக்கெழுதியிருந்த கடிதத்தைப் பொதுமக்கள் மத்தியில் தீயிலிட்டுக் கொளுத்தத் தேதி நிர்ணயித்து பத்திரிகை களில் அறிக்கை விடுத்தேன். இது, அவசரப்பட்ட முடிவு அல்ல; ஆயினும், ஆத்திரப்பட்டதன் விளைவுதான்!

எனது இந்த முடிவைச செய்தி இதழ்களில் படித்து, ராஜாஜியும் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையும் அதிர்ச்சியடைந்தனர். நேருவின் கடிதத்தைக் கொளுத்துவ தென்ற முடிவைக் கைவிடுமாறு என்னைக் கேட்டுக் கொண்டு கவிஞர் எனக்கு நீண்ட கடிதம் எழுதினார். ராஜாஜி, எனது முடிவை நாசூக்காகக் கண்டித்தும், அதனை நிறைவேற்ற வேண டாமென்று எனக்கு அறிவுரை கூறியும் 'கல்கி' இதழில் ஒரு குறிப்பு எழுதியிருந்தார்.

உண்மையில் நேருவிடம் நான் மிகுந்த பக்தி பூண்டவன். கட்சி வேறுபாடு, கருத்து வேறுபாடுகளுக்கிடையிலும் அப் பெருந் தலைவரை நான் மனப்பூர்வமாக நேசித்து வந்தேன். ஆயினும், அந்தத் தலைவரை விடவும் அதிகமாக நான் நேசிக் கின்ற கழகக் கண்மணிகளிலே இருவரை இழந்ததால் ஏற்பட்ட ஆத்திரமானது என்னை நெறி தவறச் செய்துவிட்டது. 'கல்கி' யில் ராஜாஜி எழுதிய குறிப்பும், கவிஞர் எனக்கெழுதிய அன்புரைகள் கொண்ட கடிதமும் என்னை நெறிவழிப்படுத்தின. ஆம்; நேருவின் கடிதத்தை எரிப்பதென்ற முடிவைக் கைவிட் டேன்.

அக்டோபர் 15-இல் தொடங்கிய போராட்டம் அம்மாதம் 25-ஆம் தேதி வரை தொடர்ந்து 11 நாட்கள் நடைபெற்றது. சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சிறைப்பட்டனர். தஞ்சை, மதுரை, சேலம், சென்னை, வடாற்காடு, சித்தூர் மாவட்டங்களில் போராட்டம் தீவிரமாக நடைபெற்றது. பல ஊர்களில் இப்போராட்டத்தை ஒடுக்குவதற்கென்றே 144ஆவது சட்டப்படி தடையுத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. ஆனால், தடை மீறப்பட்டது தமிழரசுக் கழகத் தோழர்களால்!

பண்டித பந்த் யோசனை

போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, டில்லி நாடாளுமன்றத்திலே, ''சென்னை — ஆந்திர எல்லைப் பிரச் சினை தென் மண்டலக் கவுன்சிலின் பரிசீலனைக்கு விடப் படும்'' என்று உள்துறை அமைச்சர் பண்டித கோவிந்த வல்லப பந்த் அறிக்கை விடுத்தார். அதிலே, ''அந்த மண்டல கவுன்சில் கூட்டத்திற்கு நான்தான் தலைமை வகிப்பேனாதலால், நானே பொறுப்பேற்று அதைத் தீர்த்து வைக்கிறேன். எல்லைக் கிளர்ச்சி நடத்தும் நண்பர் இதனை யான் தரும் உறுதிமொழியாக எடுத் துக் கொண்டு, போராட்டத்தை நிறுத்த வேண்டும்'' என்று பண்டித பந்த் கனிவோடு கூறியிருந்தார்.

தமிழக முதல்வரும் தமிழரும் எனது அருமை நண்பரு மான திரு. காமராசரை விட, வடவரான பந்த் அவர்கள்

என்பால் நல்லெண்ணம் காட்டி எனக்கு வேண்டுகோள் விட்டது எனக்கு மிகுந்த ஆறுதலைத் தந்தது. பந்த் அவர்களின் உறுதி மொழி செய்தித் தாள்களில் வெளியானதும் தமிழக நிதியமைச் சர் திரு.சி. சுப்பிரமணியம் அதுபற்றி எனது கருத்தறிய என்னை அழைத்துப் பேசினார். அவரது ஆலோசனையின் பேரில் திரு. காமராசரையும் சந்தித்துப் பேசினேன்.

மண்டல கவுன்சிலில் சென்னை — ஆந்திர முதல்வர்கள் மட்டுமல்லாமல், மைசூர் — கேரள முதல்வர்களும் கலந்து கொள்வார்களாதலால், அந்த கவுன்சிலிடம் பிரச்சினையை விடுவதால் பலன் ஏற்படாதென்று யான் கருதினேன். ஆம்; தென் திருவிதாங்கூரை மீட்கக் கேரளத்தோடும் தமிழரசுக் கழகம் எல்லைப் போர் நடத்தியதால், அந்த மாநிலத்தின் முதல்வர் கழகத்தின் கோரிக்கைக்கு எதிராக ஆந்திரர் பக்கம் சேரக் கூடுமென்று ஐயுற்றேன். அதனால், பண்டித பந்த் யோச னையை ஏற்க இயலாதென்று முதல்வர் காமராசரிடமும் நிதியமைச்சர் சி.சு.விடமும் உறுதியாகக் கூறினேன்.

மாற்று யோசனை

எல்லைக் கமிஷன் வேண்டுமென்று கோராமல் வேறு மாற்று யோசனை கூறுமாறு அவர்கள் என்னிடம் கேட்டனர். எல்லைக் கமிஷனை ஆந்திர முதல்வர் விரும்பவில்லை. அதனால், தமிழக முதல்வரும் விரும்பவில்லை. ஆம்; திரு. காமராசர் அகில இந்திய மட்டத்தில் அப்போது நடத்தி வந்த கோஷ்டி அரசியலுக்கு ஆந்திர மாகாண காங்கிரசின் தயவு அவருக்குத் தேவைப்பட்டது. அதற்காகத் தமிழக எல்லைப் பிரச்சினையைப் பணயமாக்கி விட்டார்.

என்ன செய்வது? 'அழுதாலும் பிள்ளை அவள்தானே பெற வேண்டும்' என்ற பழமொழி போல, காமராசர் நல்லெண்ணத் தைப் பெற்றுத்தான் நான் தமிழக வடக்கெல்லைப் பகுதிகளை மீட்க வேண்டியிருந்தது. அதனால், அவர் விருப்பப்படி மாற்று யோசனை தெரிவித்தேன். அதாவது,

''தென்னிந்தியரல்லாத மத்திய அமைச்சர் ஒருவரை, மத்தியஸ்தராக நியமித்து, அவரது தீர்ப்புக்கு மத்திய அரசு சென்னை — ஆந்திர எல்லைப் பிரச்சினையை விடுமாயின் அதனை நான் ஏற்கிறேன். அவரது தீர்ப்பு இருசாராரையும் கட்டுப்படுத்தும் என்பது இப்போதே தெளிவுபடுத்தப்பட வேண்டும்''

என்று திரு. காமராசரிடம் கூறினேன். அவரும் எனது கருத்தை பிரதமர் நேருவுக்கு எழுதுவதாகக் கூறினார்.

போர் நிறுத்தப்பட்டது!

எனது மாற்று யோசனை திரு. சி. சு. வுக்கும் பிடித்திருந்தது. இருவரும் நேருவின் பதில் கிடைக்கும்வரை போராட்டத்தைத் தற்காலிகமாகவேனும் நிறுத்தி வையுங்கள் என்று என்னைக் கேட்டுக் கொண்டனர். மத்தியஸ்தர் வேண்டுமென்ற எனது யோசனையை பிரதமர் ஏற்பாரென்ற நம்பிக்கை எனக்கிருந்தது. அதனால், அக்டோபர் 25-இல் போராட்டத்தைத் தற்காகலிக மாக நிறுத்தி வைத்தேன்.

அரசும் வடக்கெல்லைப் போராட்டம் சம்பந்தமாகச் சிறைப் பட்டவர்கள் அனைவரையும் விடுதலை செய்யவும், அவர் களில் பலர் மீதிருந்த வழக்குகளை வாபஸ் பெறவும் ஆணை பிறப்பித்தது.

போராட்டம் நிறுத்தப்பட்ட மூன்று வாரங்களுக்குள் மத்திய அரசு தமிழக அரசின் வற்புறுத்தலை ஏற்று, மத்தியில் சட்டத் துறைத் துணையமைச்சராகப் பதவி வகித்த திரு. எச். வி. படாஸ்கர் என்பவரை சென்னை ஆந்திர எல்லைச் சிக்கலைத் தீர்த்து வைக்கும் மத்தியஸ்தராக நியமித்தது. அவரது தீர்ப்பு எதுவாயினும் சரி; அது எதிர்ப்பின்றி ஏற்கப்படுமென்று சென்னை — ஆந்திர முதல்வர்களிடம் எழுத்து மூலம் உறுதிமொழி பெறப் பட்டது.

வடக்கெல்லைக்காக நடைபெற்ற இறுதிப் போர் இதுதான்.

நான் சிறையிலிருந்து வீடு திரும்பியதும் மாபெரும் வெற்றி விழா ஒன்று என்னை எதிர்நோக்கியிருந்தது. ஆம்; ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் பரிந்துரைப்படி, 1956 நவம்பர் முதல் நாளன்று தமிழ் வழங்கும் பிரதேசம் தனியரசு மாநிலமாக அமைய இருந்தது. அதே நாளில், தெற்கே தோவாளை, அகத்தீசுவரம், விளவங்கோடு, செங்கோட்டை ஆகிய ஐந்து தாலுக்காக்கள் திருவிதாங்கூர் — கொச்சி ராஜ்யத்திலிருந்து பிரிக்கப்பட்டு, தாய்த் தமிழகத்தோடு சேர்க்கப்படுவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

வரலாறு காணாத விழா

நான் எதற்காகத் தமிழரசுக் கழகத்தைத் தொடங்கினேனோ, தொடர்ந்து பதினான்கு ஆண்டுகாலம் எதற்காக உழைத்தேனோ, காங்கிரசிலிருந்து விலகி எதற்காக என் எதிர்காலத்தை சோதனைக்கு உள்ளாக்கிக் கொள்ளத் துணிந்தேனோ, அது நிறைவேறுகிறதென்றால், என் மகிழ்ச்சிக்கு எல்லை இருக்க முடியுமா?

புதிய தமிழகம் அமையவிருந்த நவம்பர் முதல் நாள் தற்செயலாக தீபாவளி நாளாகவும் இருந்தது. ஆம்; இந்து சமுதாயத்தினருக்குப் புனிதமான ஒரு நாளிலே, பாரத மாநிலங்கள் அனைத்தும் மொழி வாரி திருத்தி அமைக்கப்பட இருந்தன.

உண்மையில், புதிய தமிழகம் அமைத்த சாதனைக்குத் தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகளில் ஏதேனுமொன்று பெருமைப்பட்டுக் கொள்ள உரிமை பெற்றிருக்குமானால், அது தமிழரசுக் கழகமாகத்தான் இருக்க முடியும். அதன் தலைவனாகவுள்ள நான் மட்டுமல்ல; கடைசித் தொண்டர் கூடப் பெருமைப்பட்டுக் கொள்ள உரிமை பெற்றிருக்கிறார். ஆம்; வரலாறு காணாத சாதனை! தமிழ்நாடு காங்கிரசின் — தமிழக அரசின் துரோகங்களையும் கடந்து அடைந்த சாதனை! தமிழினத்தின் தாயகமானது வரலாற்றுக் காலத்திலோ, அதற்கு முற்பட்ட காலத்திலோ ஒரே அரசின் கீழ் இருந்தது இல்லை. மூவேறு அரச மரபினரால் ஆளப்பட்டு வந்தது. தமிழர் பேரரசு கண்ட இராசராசன், இராசேந்திரன் காலத்திலேயும் அந்தப் பேரரசிலே சென்னை நகரையும் தன்னுள் கொண்ட தொண்டை மண்டலம் இருந்ததில்லை.

மொகலாய, பிரிட்டிஷ் சாம்ராஜ்யங்களிலேயும் தமிழகம் தனியரசு நாடாக இருந்ததில்லை. ஆகவே, படைப்புக் காலந் தொட்டு அரசியலில் பலவேறு அரசர்களால் ஆளப்பட்டு, பிளவுபட்டுக் கிடந்த தமிழகம், வேறு மொழிப் பிரதேசங்க ளோடு பிணைக்கப்பட்டு தனி வாழ்விழந்திருந்த நம் தாயகம் முதல் முதலாக 1956 நவம்பர் முதல் நாளன்றுதான் தனியரசு மாநிலம் ஆனது. அன்றுதான் கன்னட மொழிப் பிரதேசங்கள் ஒன்றுபடுத்தப்பட்டு, தனி கன்னட மாநிலம் அமைந்தது; தெலுங்கு மொழிப் பிரதேசங்கள் ஒன்றுபடுத்தப்பட்டு விசால ஆந்திர ராஜ்யம் அமைந்தது; மலையாள மொழிப் பகுதிகள் ஒன்றுபடுத்தப்பட்டு ஐக்கிய கேரள மாநிலம் அமைந்தது. எவ்வளவு புனிதமான நாள்.

நவம்பர் முதல் நாளிலே ''கன்னட ராஜ்ய'' அமைப்பு நாளைக் கொண்டாடக் கன்னடரும், ''ஆந்திர ராஜ்ய'' அமைப்பு நாளைக் கொண்டாட ஆந்திரரும் தயாராகிக் கொண் டிருந்தனர். கன்னட — ஆந்திர அரசுகளே அந்தக் கொண்டாட் டத்திற்குத் திட்டமிட்டன.

வேதனையென்னவென்றால், தமிழ்நாட்டிலே திரு.கு. காம ராசர் தலைமையில் இயங்கிய காங்கிரஸ் ஆட்சி தமிழ் மாநில அமைப்பு நாளைக் கொண்டாட முன் வராததாகும். அரசோ, ஆளுங்கட்சியோ பொறுப்பேற்றாலொழிய, மாநிலந் தழுவிய முறையில் நாடறிய — நானிலமறிய தமிழ் மாநில அமைப்பு விழாவைச் சிறப்பாக நடத்த வாய்ப்பேது?

தமிழ்நாடு காங்கிரசோ, அதன் செல்வாக்கிலிருந்த தமிழக அரசோ தமிழ்நாடு தனியரசு மாநிலம் ஆவதை விருப்பமில்லை. அவர்கள் விருப்பத்திற்கு மாறாக, அவர்கள் மீது தமிழரசைத் திணித்தது தமிழரசுக் கழகம். அதனால், த.நா.கா.வும் தமிழக அரசும் ''தமிழரசு'' நாளைக் கொண்டாடாதது என்னால் புரிந்து கொள்ளக் கூடியதுதான். அவர்கள், அன்று துக்க நாள் கொண் டாட நியாயமிருந்தது. ஆனால், அப்படி எதுவும் நடைபெறா தது தமிழினத்தின் அதிர்ஷ்டந்தான்!

வியப்பென்னவென்றால், தமிழகம் தனியரசு மாநிலம் ஆனதன் பலனை அனுபவிக்கத் தேர்தல் களத்தில் இறங்குவதற்குத் தயாராகிக் கொண்டிருந்த தி.மு.கழகமும் ''தமிழ் மாநிலம்'' அமைந்த நாளைக் கொண்டாட முன்வராததாகும்.

தமிழரசுக் கழகம் தனித்து நின்று ''தமிழரசுத் திருநாள்'' கொண்டாடியது. அன்று மயிலை ரசிக ரஞ்சனி சபாவிலே ஆடம்பரமற்ற முறையில் திருநாள் நடத்தியது. நானும், தமிழரசுக் கழகப் பேச்சாளர்களும் பேசினோம். விழாவின் வரலாற்று முக்கியத்துவத்தைக் கருதி, செய்தி இதழ்கள் அனைத்தும் விழா நிகழ்ச்சிகளைச் சிறப்பாகப் பிரசுரித்தன.

தமிழ் மாநிலம் அமையும் நவம்பர் முதல் நாளிலே திருவிதாங்கூர் — கொச்சி ராஜ்யத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட நான்கு தாலுக்காக்கள் கொண்ட குமரி மாவட்டம் ஒன்றும் அமைந்தது. இந்த மாவட்டம் தமிழகத்தோடு இணைக்கப்பட்டது. நியாயமாக இந்தத் தாலுக்காக்களை நெல்லை மாவட்டத்துடன் இணைத்திருக்க வேண்டும். அப்படிச் செய்யும்படிதான் பசல் அலி கமிஷன் பரிந்துரை தந்திருந்தது. ஆனால், நெல்லை மாவட்ட கனவான்களில் செல்வாக்குமிக்க ஒரு சாரார் அதனை விரும்பவில்லை. கடுமையாக எதிர்க்கவும் செய்தனர் — குறிப்பாக, நாடார் அல்லாத சாதியாரிடமிருந்துதான் இந்த எதிர்ப்பு தோன்றியது.

தமிழ்நாட்டுடன் இணைந்த ஐந்து தாலுக்காக்களிலே செங்கோட்டை தவிர ஏனைய நான்கு தாலுக்காக்களில் நாடார் சமூகத்தினர் கணிசமான எண்ணிக்கையில் உள்ளதால், இவர்களுடன் போட்டியிட்டு முன்னேறுவது பிற சாதியினருக்கு ஒரு பிரச்சினையாக இருந்து வருகிறதாம்!

இந்நிலையில், மீட்கப்பட்ட — நாடார்கள் மிகுதியாகவுள்ள தாலுக்காக்களும் நெல்லை மாவட்டத்தில் சேர்க்கப்பட்டால், அந்த மாவட்டத்தில் தங்கள் சமூகத்தின் செல்வாக்கு ஓங்கிவிடக் கூடுமென்று நாடார் அல்லாதாரில் ஒரு சாரார் அஞ்சினர். இப்படி அச்சம் ஏற்பட்டது, சாதாரண மக்களுக்கு அல்ல; பாவம்! அவர்களுக்கென்ன ஆதிக்கமிருக்கிறது அஞ்சு

வதற்கு! அச்சம், வசதிகளைப் பெற்று வாழ்வாங்கு வாழ்பவர் களுக்குத்தான்!

தெற்கெல்லைக் கிளர்ச்சி நடந்து கொண்டிருந்தபோது, அண்டையிலுள்ள நெல்லை மாவட்ட மக்களின் ஆதரவைத் திரட்ட ஒருமுறை நான் நண்பர் நேசமணியுடன் அந்த மாவட்டப் பிரமுகர்களை அணுகினேன். அவர்களில் இன உணர்ச்சியுள்ள வர்கள் ஆதரவளித்தனர். சாதி உணர்ச்சியுள்ளவர்கள் ஆதரவ ளிக்க மறுத்து, அதற்கு ஏதேதோ போலிக் காரணங்களைக் கூறினர்.

அவர்கள் ''ம.பொ.சி. நாடாராதலால், தென் திருவிதாங் கூரிலுள்ள நாடார்களுக்கு புதுவாழ்வு தேடப் பாடுபடுகிறார்'' என்று கூறினர். ''தென் திருவிதாங்கூர் நெல்லை மாவட்டத் துடன் இணைக்கப்பட்டால் நாடார்கள் ஆதிக்கம் வளர்ந்துவி டும். அது கேரளத்தில் இருப்பதே நல்லது'' என்று என் காதுகள் கேட்க வெளிப்படையாகச் சொன்னவர்களுமுண்டு.

நான், சாதியை மறந்தவன்!

தென் திருவிதாங்கூர் நாடார்களிடையே சாதி ரீதியில் செல்வாக்கு பெற நான் என்றுமே முயன்றதில்லை. அந்த நாளில் அவர்களில் பலருக்கு எனது சாதி இன்னதென்று தெரியாது. எனது சாதியை நான் அவர்களிடம் காட்டிக் கொண்டதே இல்லை. நான் சுய சாதியைத் துறந்தவன் என்பதைவிட, மறந்தவன் என்பது பொருந்தும். சாதியைப் பயன்படுத்தி அரசி யல் நடத்த நான் அதிகார வெறிபிடித்தவனல்லவே! அதிகார வேட்டையாடும் அரசியல்வாதிகளுக்குத்தான் சாதி தேவை!

உண்மையில், சாதி உணர்ச்சியுடன் அரசியல் நடத்துவ தென்ற முடிவுக்கு நான் வந்துவிட்டால், அதற்காக வெட்கப்படத் தேவையில்லை. ஏனெனில் அது இந்தத் தலைமுறையில் வெட் கப்படக் கூடிய விஷயமாக இல்லை. மூதறிஞர்களும் பெருந்த லைவர்களுமே வெளிப்படையாகச் சுய சாதியைக் கேடயமாகக் கொண்டு அரசியல் நடத்தத் துணிந்துவிட்ட காலத்தில்தானே நான் வாழ்கிறேன்.

நான் தமிழினத்தை ஒன்றுபடுத்தப் பாடுபடுகிறேன். அதற்காகக் கழகம் நடத்தி வருகிறேன். பிற சாதிப் பகைமையின்றிச் சுயசாதி நலனுக்குப் பாடுபடுவது குற்றமென்று நான் கருதவில்லை. ஆயினும், சுய சாதிப் பற்று பிறசாதிப் பகையில்தான் போய்முடியும். ''தமிழன்'' என்ற இன உணர்ச்சியை வளர்ப்பதற்காகத்தான் நான் சாதி உணர்ச்சியற்றவனாக வாழ்ந்து வருகிறேன். சாதி வெறி, இன உணர்ச்சியைக் கொல்லும் நஞ்சாகி விட்டது!

நவம்பர் முதல் நாளிலே குமரி மாவட்ட இணைப்பு நாள் — அதாவது, தெற்கெல்லைப் போரின் வெற்றித் திருநாள் கொண்டாடத் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் ஏற்பாடு செய்தது. அதன் தலைவர் திரு. நேசமணி, அந்த வெற்றி விழாவிலே கலந்து கொள்ளுமாறு புதிய தமிழகத்தின் முதல்வரான திரு. கு.காமராசரை அழைத்தார். அவரும் இசைவு தந்தார். கேரள அரசிடமிருந்து ஐந்து தாலுக்காக்களை அதிகார பூர்வமாகப் பெறும் சடங்கு குமரி முனையில் நடைபெற வேண்டியிருந்தது. அதிலே கலந்து கொள்ள தமிழக முதல்வர் என்ற முறையில் திரு. காமராசர் கடமைப்பட்டவர். அதே நேரத்தில் தி.த.நா.கா. நடத்தும் இணைப்புக் கொண்டாட்டத்திலும் கலந்து கொள்ள இசைந்தார்.

திரு. காமராசர், தெற்கெல்லைக் கிளர்ச்சி நடந்தபோது, அதற்கு எதிராக எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவையுஞ் செய்தவர். பச்சையாகச் சொல்வதானால், கேரள ஆதிக்கத்திற்குத் தமிழர் அடிமைப்பட்டிருக்கும் நிலை நீடிக்கச் செய்ய அவர் அரும்பாடுபட்டவர். ஆயினும், அதனை மறந்து மன்னித்து தெற்கெல்லை வெற்றி விழாவில் கலந்து கொள்ள குமரி மாவட்டத் தமிழர்கள் அவரை அழைத்ததிலே எனக்குக் கருத்து வேற்றுமையில்லை. அதனை நானும் விரும்பினேன்.

நன்றி மறந்தனர்!

இந்த விழாவில் கலந்துகொள்ள தி.த.நா. காங்கிரசிடமிருந்து எனக்கு அழைப்பு வரவில்லை. எனது உறவுக்குத் தலை

முழுக்குப் போட்டுவிடத் திரு.நேசமணி முடிவெடுத்துவிட்டார். தெற்கெல்லைப் போர் வெற்றிகரமாக முடிந்துவிட்டதால், அதற்குமேல் எனது தயவோ, தமிழரசுக் கழகத்தின் ஒத்துழைப்போ அவருக்கும் தி.த.நா.கா.வுக்கும் தேவைப்படவில்லையல்லவா! அவர்களுக்குத் தேவைப்பட்டது திரு. காமராசர் தயவுதான்! குமரி மாவட்டத்தின் சார்பில் யாரேனும் தமிழக அமைச்சரவையில் இடம் பிடிக்க வேண்டுமானால், அந்த மாவட்டத்தில் எம்.பி.யாகவோ, எம்.எல்.ஏ.யாகவோ வரவேண்டுமானால், அதற்குத் தேவைப்படுவது காமராசர் தயவுதான். தமிழ்நாட்டில் அன்றிருந்த அரசியல் சூழ்நிலையில் குமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைகிறதென்றால், திரு. காமராசரின் சர்வாதிகாரத் தலைமையின் கீழ் வருகிறது என்றுதான் பொருள் கொள்ள வேண்டியிருந்தது.

தெற்கெல்லை வெற்றி விழாவில் கலந்து கொள்ளுமாறு திரு. காமராசரை அழைத்தபோது, ''அந்த மீசைக்காரர் வராதிருந்தால் நான் வருகிறேன்'' என்று அவர் சொன்னதாகப் பின்னால் ஒரு சமயத்தில் திரு. நேசமணியே என்னிடம் கூறினார். இது என்னைத் திருப்திப்படுத்துவதற்காகச் சொன்ன போலி சமாதானமாகவும் இருக்கலாம்.

தெற்கெல்லை வெற்றி விழாவுக்கு நான் அழைக்கப்படுவேனென்று நம்பியிருந்தேன். நானில்லாமல் தெற்கெல்லை வெற்றி இல்லையல்லவா! விழாவுக்கான அழைப்பிதழ் அச்சடிக்கப்பட்டு யார் யாருக்கோ அனுப்பப்பட்டதுபோல எனக்கும் ஒன்று அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுக் கிடைத்தபோதுதான் நான் புறக்கணிக்கப்பட்டிருப்பது எனக்குத் தெரிந்தது.

கலைவாணரின் துடிப்பு

குமரி மாவட்டத் தமிழரசுக் கழகத் தோழர்கள் தி.த.நா.கா.வின் நன்றி கொன்ற செயல் கண்டு ஆத்திரமடைந்தனர். நவம்பர் முதல் நாளிலேயே போட்டி விழா நடத்தவும் துடித்தனர். போட்டி விழாவை நான் விரும்பவில்லை. ''மனமிருந்தால், தி.த.நா.கா. நடத்தும் விழாவிலே கலந்து கொள்ளுங்கள்;

முடியாதென்றால், ஒதுங்கி நில்லுங்கள். வேறொரு நாளிலே விழா வைத்துக் கொள்ளுங்கள். நான் வருகிறேன்'' என்று கூறினேன்.

திரு. நேசமணி, என்னைப் புறக்கணித்துத் தெற்கெல்லை வெற்றி விழாவை நடத்தப் போவதறிந்த கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள், என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு,

> *''எப்படியேனும் நவம்பர் முதல் நாளிலே நாகர்கோயிலில் நாம் விழா நடத்தியே ஆகவேண்டும். அது போட்டி விழா ஆகவே ஆகாது. அதற்காகும் செலவு முழுவதையும் நானே ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் கலந்து கொள்ளுங்கள்''*

என்று ஆவேசப்படும் வழக்கமில்லாத நகைச்சுவைக் கலைஞரான அவர் மிகுந்த ஆவேசத்துடன் கூறினார். அவருக்கு ஆறுதல் கூறி, போட்டி விழாவில் கலந்துகொள்ள மறுத்தேன். வியப்பென்னவென்றால், எதை எதிர்பார்த்து திரு. நேசமணியவர்கள் என்னைப் புறக்கணித்து திரு. காமராசரின் நல்லெண்ணத்தைப் பெற முயன்றாரோ அதை அவர் தமது வாழ்நாள் வரை பெற முடியாமற் போனதாகும்.

குமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைந்த ஒரு வாரத்திற்குப் பின்னர், அதன் பல ஊர்களில் தமிழரசுக் கழகச் சார்பில் தெற்கெல்லைப் போர் வெற்றி விழா கொண்டாடப்பட்டது. நண்பர்கள் கே.விநாயகம், ஈ.எஸ்.தியாகராசன் ஆகியோருடன் சென்று நானும் கலந்து கொண்டேன். மாவட்டம் முழுவதிலும் சுற்றுலா செய்து, குமரி மாவட்டத்திலுள்ள நன்றியறிதலுடைய இளைஞர்களின் — பொது மக்களின் அன்பு வெள்ளத்தில் மிதந்தேன்.

வாழ்க, குமரி மாவட்டம்!

திரு. படஸ்கர் தீர்ப்பு

தமிழக — ஆந்திர எல்லைச் சிக்கலைத் தீர்த்து வைக்கும் மத்தியஸ்தராக நியமிக்கப்பெற்ற மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு.எச்.வி. படஸ்கர் தாமதமின்றித் தமது பணியில் மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபட்டார். சென்னைக்கு வந்து தமிழக அரசையும், ஐதராபாத் சென்று ஆந்திர அரசையும் கலந்து ஆலோசித்தார். இரண்டு அரசுகளும் எல்லைப் பிரச்சினையில் தத்தம் கோரிக்கையை — நிலையை எழுத்து மூலம் படஸ்கருக்கு அறிவித்தன.

திரு. படஸ்கர் அழைப்பின்பேரில் 26.12.56-இல் நான் அவரை சென்னை கிண்டி ராஜ்பவனில் பேட்டி கண்டு, எல்லைப் பிரச்சினையில் தமிழினத்தின் கோரிக்கையையும், ஆந்திரர் விடுத்த எதிர் கோரிக்கை பற்றித் தமிழர் நிலையையும் எழுத்து மூலம் எடுத்துக் கூறினேன். படஸ்கரும் நானும் சுமார் அரை மணி நேரம் உரையாடி, பரஸ்பரம் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டோம். யான் எழுத்து மூலம் தந்த மனுவாலும், உரையாடலில் தந்த விளக்கத்தாலும் தாம் எடுத்துக்கொண்ட பிரச்சினையில் தமக்கு நல்லவிதமான தெளிவு ஏற்பட்டிருப்பதாகத் திரு. படஸ்கர் மிகுந்த மகிழ்ச்சியோடு என்னிடம் கூறி, தமிழருக்கு நீதி வழங்குவேன் என்பதைத் தாங்கள் நம்பலாம் என்று உறுதி கூறினார்.

திரும்பவும் தொல்லை

ஆந்திர அரசு திடீரென வக்கரித்துக் கொண்டது! படஸ்கருடன் ஒத்துழைக்க மறுத்து முட்டுக்கட்டை நிலையைச் சிருஷ்டித்தது. எட்டு மாத காலம் வீணடிக்கப்பட்டது. இதனால் நான் மனவேதனையடைந்து, மத்திய அரசின் தலையீட்டைக் கோரி மத்திய உள்துறையமைச்சர் பண்டித கோவிந்த வல்லப பந்த் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். அவர் தலையிட்டு, ஆந்திர

அரசை நல்வழிப்படுத்தினார். அதன் பேரில் திரு.எச்.வி. படாஸ்கர் தமது விசாரணையை முடித்து, தம்முடைய பரிந்துரையை மத்திய அரசுக்கு அனுப்பினார். அதன் நகல்கள் தமிழக முதல்வர் திரு. கு.காமராசருக்கும், ஆந்திர முதல்வர் திரு.என். சஞ்சீவி ரெட்டியாருக்கும் தரப்பட்டன. பத்திரிகைகளுக்கு அனுப்பப்படவில்லை. தமிழக — ஆந்திர அரசுகளின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்பே பொதுமக்கள் அறிய அதிகாரபூர்வமாகப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுமென்று தகவல் தரப்பட்டது. ஆனால் படாஸ்கரின் பரிந்துரை நிருபர்கள் சேகரித்த தகவலாக அதிகாரபூர்வமற்ற முறையில் செய்தி இதழ்களில் வெளியிடப்பட்டன. பத்திரிகைகளில் வெளியான தகவல்களின்படி, முழு அளவில் திருத்தணிகைத் தாலுக்காவும், புத்தூர் — சித்தூர் தாலுக்காக்களில் சில கிராமங்களும் ஆந்திரத்திலிருந்து பிரிக்கப்பட்டுத் தமிழ்நாட்டுடன் சேர்க்கப்படுமென்று தெரிந்தது. அது போல, தமிழ்நாட்டிலுள்ள பொன்னேரி, திருவள்ளூர் தாலுக்காக்களில் சில கிராமங்கள் பிரித்தெடுக்கப்பட்டு ஆந்திராவில் சேர்க்கப்படுமென்பதும் புலனானது.

இந்த நிலையில், படாஸ்கர் பரிந்துரைக்குத் தமிழ்நாடு காங்கிரஸ் வட்டாரத்திலிருந்து எதிர்ப்புக் கிளம்பியது. அமைச்சர் பக்தவத்சலனாரின் தூண்டுதல் பேரிலேயே இந்த எதிர்ப்பு தோன்றியது. அவரும் வெளிப்படையாக படாஸ்கர் பரிந்துரைக்கு எதிராகப் பேசலானார். படாஸ்கரின் பரிந்துரையை எதிர்ப்பவர்களுக்கு முதல்வர் காமராசரின் ஆதரவு மறைமுகமாக இருந்து வந்தது.

படாஸ்கர் பரிந்துரை நடைமுறைக்கு வந்தால் — அதாவது, தமிழ்நாட்டிலிருந்து சில கிராமங்கள் ஆந்திராவுக்கு மாற்றப்படுமானால், ஆரணியாறு அணைக்கட்டின் தலைப்பு ஆந்திராவுக்குப் போகக் கூடிய நிலை இருந்தது. இதனால் செங்கற்பட்டு நிலச்சுவான்தாரர்கள் சிலருடைய விளைநிலங்களுக்குப் பாசன வசதி பாதிக்கப்படுமென்று சொல்லப்பட்டது. அது காரணமாகவே, படாஸ்கர் பரிந்துரை தமிழர்களான நிலச்சுவான்தாரர்கள் சிலரால் எதிர்க்கப்பட்டது. ஆனால், உண்மைக் காரணம் இது வல்ல. தணிகைத் தாலுக்கா தமிழகத்திற்குக் கிடைக்குமானால்,

எனக்குச் சரித்திரப் புகழ் கிடைத்துவிடக் கூடுமென்ற பொறாமையினாலேயே என்பால் நல்லெண்ணமில்லாத தமிழ்நாடு காங்கிரஸ் வட்டாரம் படஸ்கர் பரிந்துரையை எதிர்த்துப் போர்க் கோலங் கொண்டது.

உண்மையில் படஸ்கர் பரிந்துரை எனக்கும் மனநிறைவைத் தரவில்லை என்பதனை இங்கு நான் சொல்லியாக வேண்டும். ஆம்; வடவேங்கடமே தமிழகத்தின் வடக்கெல்லையாக இருக்க வேண்டுமென்ற எனது கோரிக்கை நிறைவேறவில்லை. அத்துடனன்றி, சித்தூர், புத்தூர் தாலுக்காக்களில் தமிழர் மிகுதியாக வாழும் சில கிராமங்கள் தமிழகத்திற்குக் கிடைக்கவில்லை. வியப்பென்னவென்றால், படஸ்கருக்குக் கொடுத்த மனுவில் இந்தப் பகுதிகளைத் தமிழக அரசே கோரவில்லையென்பதாகும்.

பொறாமைப் பேய்!

தமிழக — கேரள எல்லைப் பிரச்சினையிலே பஸல் அலி கமிஷன் பரிந்துரைப்படி தமிழகத்திற்குக் கிடைத்த செங்கோட்டைத் தாலுக்காவின் வளமிக்க காட்டுப் பகுதிகளைக் கேரளத்திலேயே விட்டு வைக்க இசைந்த — தேவிகுளம், பீருமேடு தாலுக்காக்களைக்கூடக் கேரளத்திடம் பறிகொடுத்த - காமராசர் ஆட்சிதான் ஆரணியாறு அணைக்கட்டைக் காப்பாற்றப் போவதாகச் சொல்லிக் கொண்டு வடக்கெல்லைப் போரிலே தமிழருக்குக் கிடைத்த வெற்றியைத் தோல்வியாக்க முயன்றது.

அந்த நேரத்தில் என் மனம் அடைந்த வேதனை வருணனைக்கு எட்டாததாகும். பொறாமைப் பேயை எனது வாழ்நாளில் நான் பலமுறை சந்தித்திருக்கிறேன் என்றாலும் ஒரு மாநில அரசே சாதாரண மனிதனாகிய என்மீது பொறாமை கொண்டு எனக்கெதிராகத் தனது பேராற்றலைப் பயன்படுத்தியது இதற்கு முன்னும் பின்னும் நிகழ்ந்ததில்லை.

தமிழ்நாடு காங்கிரஸ் செயற்குழுவும் தமிழகச் சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் செயற்குழுவும் கூட்டாகக் கூடி, படஸ்கர் பரிந்துரையை அமுல்நடத்த வேண்டாமென்றும், தமிழக —

ஆந்திர எல்லைகள் அப்போதிருந்த நிலையிலேயே நீடிக்க அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றின. இந்தத் தீர்மானம் தமிழினத்தின் மானத்தையும் மரியாதையையும் தாக்குவதாக இருந்தது.

அதே நாளில் — காங்கிரஸ் கட்சியின் முடிவு தெரிந்த பின்னர் — எனது இல்லத்தில் தமிழரசுக் கழகச் செயற்குழு, வடக்கெல்லைப் பாதுகாப்புக்குழு ஆகியவற்றின் கூட்டுக் கூட்டம் எனது தலைமையில் கூடி, படஸ்கர் பரிந்துரையை நிபந்தனையின்றி ஏற்றுக் கொள்வதாகத் தீர்மானித்தது. இத்தீர்மானம் பிரதமர் நேரு, மத்திய உள்துறையமைச்சர் பண்டித பந்த் ஆகியோருக்குத் தந்தி வாயிலாக அனுப்பப்பட்டது.

படஸ்கர் பரிந்துரை பற்றி விவாதிக்கத் தமிழக — ஆந்திர முதல்வர்களை டில்லிக்கு அழைத்திருந்தார் பண்டித பந்த். அதற்கிணங்க, திரு. காமராசர் டில்லிக்குப் பறந்தார். செங்கற்பட்டு மாவட்டச் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பில் காங்கிரசைச் சார்ந்த ஒரு குழுவினர், படஸ்கர் பரிந்துரையை அமுல்நடத்த வேண்டாமென்று பிரதமர் நேருவைக் கேட்டுக் கொள்ள விமானத்தின் மூலம் டில்லிக்குப் பறந்தனர்.

வடக்கெல்லைத் தமிழர் சார்பிலும் ஒரு தூதுக்குழு எனது தலைமையில் டில்லிக்குச் சென்றது. டில்லிக்குப் புறப்படுவதற்குச் சில வாரங்களுக்கு முன்பு நான் எதிர்பாராதவிதமாக எனது வீட்டின் தெரு வாயிற்படியில் சறுக்கி விழுந்தேன். அதனால், முதுகெலும்பின் அடிப்பகுதி நசுங்கி அபாயகரமான நிலையில் எழுந்து நடமாடவும் இயலாமல் படுக்கையில் இருந்தேன். இந்தப் பரிதாப நிலையில்தான் நான் ரெயிலில் மூன்றாவது வகுப்பில் படுத்த வண்ணமே பயணம் செய்து டில்லி சென்றேன். ஆம்; தமிழக அரசின் துரோகத்திலிருந்து தணிகைத் தமிழர்களைக் காக்குமாறு டில்லி அரசிடம் முறையிட்டுக் கொள்ள! எனது இனத்தவரான தமிழர் நடத்தும் தமிழக அரசுக்கு எதிராக மத்திய அரசிடம் முறையிட்டுக் கொள்வதென்பது எனக்குப் பிடிக்காத செயலாகும். ஆயினும், தமிழர் நடத்தும் அரசே

தமிழினத்துக்குக் குறிப்பாக, வடக்கெல்லையில் வாழும் தமிழருக்குத் துரோகம் செய்யத் துணிந்துவிட்டதால், 'வைதிகத்'தை அடுத்து வடபுரம் சென்றேன்.

பந்த்தின் உறுதிமொழி

இரவு 7 மணிக்கு நான் பண்டித பந்த் மாளிகைக்கு எனது குழுவினருடன் சென்றேன். எனக்கு முன்பே தமிழக — ஆந்திர முதல்வர்கள் திரு. பந்த்தைப் பேட்டிகண்டு பேசிவிட்டுத் திரும்பி கொண்டிருந்தனர். நான் பந்த் மாளிகைக்குச் சென்றபோது அங்கு திரு.எச்.வி. படஸ்கர் அவர்களும் பந்த்தைப் பேட்டிக் காணக் காத்துக் கொண்டிருந்தார். தற்செயலாக அவரைச் சந்திக்க நேர்ந்ததனைப் பயன்படுத்தி, அவரது பரிந்துரை பற்றி உரையாடினேன் — குறிப்பாக, ஆரணியாறு அணைக்கட்டு பற்றிக் கேட்டேன். அதற்கு அவர்,

> *''சென்னை அரசு தந்துள்ள மனுவிலே ஆரணியாறு பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை. உங்கள் மாநில அரசு கோரியதைவிட அதிக கிராமங்களை நான் கொடுத்திருக்கிறேன். ஆரணியாறு அணைக்கட்டுப் பற்றி எழுப்பப்பட்டுள்ள ஆட்சேபணை உள்நோக்குடையது''*

என்று கூறினார். அதுவரை படஸ்கரின் பரிந்துரையை நான் பார்த்ததில்லையாதலால், அவர் தந்த தகவல்கள் என்னை வியப்பிலாழ்த்தின. எனக்குப் புகழ் வந்துவிடும் என்ற பொறாமை தவிர தமிழ்நாடு காங்கிரஸ் வட்டாரம் படஸ்கர் பரிந்துரையை எதிர்ப்பதற்கு வேறு காரணம் இல்லையென்பது படஸ்கர் சந்திப்பால் எனக்குத் தெளிவாகி விட்டது.

திரு. படஸ்கர், அப்போது ஏதோ ஒரு மாநிலத்தின் ஆளுநராக இருந்தார். தமிழக — ஆந்திர எல்லைச் சிக்கல் பற்றி — அவருடன் கலந்து பேசுவதற்காகவே பண்டித பந்த் அவரை டில்லிக்கு அழைத்திருந்தார். பந்தை சந்தித்துவிட்டு படஸ்கர் வெளியே வந்த பின்னர், நான் என்னுடன் வந்த குழுவினருடன் உள்ளே சென்றேன். என்னைக் கண்டதுமே பந்த் கீழ்வருமாறு கூறினார்:

''நீங்கள் ஏன் வந்தீர்கள்? படஸ்கர் பரிந்துரையை நிபந்தனையின்றி ஏற்பதாக உங்கள் கட்சி தீர்மானித்து விட்டதே. உங்கள் நிலைமை தெளிவாக இருக்கிறது. நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் வருவதற்குக் கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் காமராசரும், சஞ்சீவி ரெட்டியாரும் வந்து போனார்கள். படஸ்கர் பரிந்துரை பற்றித் தங்கள் முடிவைத் தெரிவிக்க ஒரு மாத கால அவகாசம் தரும்படி கேட்டிருக்கிறார்கள். நானும் தந்திருக் கிறேன். ஒரு மாதத்திற்குப் பின் அவர்கள் படஸ்கர் பரிந்துரையை ஏற்க மறுத்தால், நானே அதனைப் பிரகட னம் செய்து, அமுல் நடத்துகிறேன். படஸ்கர் பரிந்துரை எதுவாக இருப்பினும், அதை நிபந்தனையின்றி ஏற்றுக் கொள்வதாக தமிழக — ஆந்திர முதல்வர்கள் எனக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதிலிருந்து பின்வாங்க நான் அவர்களை அனுமதிக்கப் போவதில்லை.''

பந்த் கூறியது என் வயிற்றில் பால் வார்த்தது போலிருந் தது. அவர் என்னைப் பார்த்து ''காமராசர், படஸ்கர் பரிந்து ரையை ஏற்பதாக முன்னர் உறுதி கூறிவிட்டு, இப்போது எதிர்க் கிறாரே, ஏன்?'' என்று கேட்டார். நான் ''எனக்குப் புகழ் வந்துவிடுமோ என்ற கவலைதான். என்னை அவருக்குப் பிடிக் காது'' என்றேன். அவர் 'கடகட'வென்று சிரித்துவிட்டு, ''நீங் கள் நம்பிக்கையோடு ஊருக்குப் போங்கள்'' என்றார்.

'இருளில் வந்தேன்; ஒளியில் போகிறேன்!'

நான் பந்த் மாளிகையைவிட்டு வெளியே வந்ததும், செய்தி நிருபர்கள் என்னைச் சூழ்ந்துகொண்டு, பந்த் சந்திப்பு பற்றி விளக்குமாறு கேட்டனர். நான் ''அவநம்பிக்கை இருளோடு டில்லிக்கு வந்தேன். இப்போது, நம்பிக்கை ஒளியோடு சென்னை திரும்புகிறேன்'' என்றேன்.

நிருபர்கள் ''திரு. காமராசர், படஸ்கர் பரிந்துரையை சென்னை அரசு ஏற்கப்போவதில்லையென்று சற்று முன்தான் எங்களிடம் உறுதி தோய்ந்த குரலில் கூறினாரே?'' என்று கேட்டனர்.

நான் ''படஸ்கர் தீர்ப்பை திரு. காமராசர் ஏற்கத்தான் போகிறார் என்று நானும் உறுதியாகக் கூறுகிறேன்'' என்றேன்.

டில்லியில் நானும் முதல்வர் காமராசரும் ஒரே பிரதேசத்தில் வெவ்வேறு வீட்டில் தங்கியிருந்தோம். அந்நாளில் டில்லியில் தமிழக அரசின் ''தமிழ்நாடு'' மாளிகை அமைந்திருக்கவில்லை. செய்தி நிருபர்கள் மாறி மாறி எங்களிருவரையும் சந்தித்து எங்களுடைய கருத்துக்களைச் சேகரித்துப் பத்திரிகைகளுக்கு அனுப்பினர். எங்கள் பேட்டி டில்லியிலும் சென்னையிலும் பத்திரிகைகளில் விரிவாகப் பிரசுரிக்கப்பட்டது. நான் ''இருளில் வந்து ஒளியில் போகிறேன்'' என்று நிருபர்களிடம் கூறியதை அவர்கள் திரு. காமராசரிடம் சொன்னபோது ''திரும்பவும் இருள் சூழ்ந்துவிடும் என்று அவருக்குச் சொல்லுங்கள்'' என்று கேலியாகச் சொன்னாராம்!

நான் டில்லியில் இரண்டு நாட்கள் தங்கி, இந்தியாவிலுள்ள இரண்டு இராஜ்யங்களிடையிலான அணைக்கட்டுகள் பலவற்றைப் பற்றிய விவரங்களை அறிந்தேன். மற்றும், மலம்புழா, துங்கபத்திரா அணைக்கட்டுகளைப் பழைய சென்னை ராஜ்ய அரசு கட்டிய விவரங்களையும் அறிந்து கொண்டேன். இந்தத் தகவல்களைச் சேகரிப்பதிலே டாக்டர் ப.சுப்பராயன் எனக்கு உதவி புரிந்தார். எனக்குக் கிடைத்த தகவல்கள் படஸ்கர் அறிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற எனது நிலைக்கு ஆதரவாகவே இருந்தன.

நான் ரெயிலில் சென்னை திரும்பும் முன்னர் எனக்கு முன்பே வந்துவிட்ட திரு. காமராசரும் திரு.எம். பக்தவத்சலனாரும் இங்கு பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், படஸ்கர் பரிந்துரையை ஏற்பதில்லையென்ற சென்னை அரசின் முடிவுக்கு மத்திய அரசு ஆதரவாக இருக்கிறதென்ற கருத்தை வெளியிட்டனர். ''மத்திய அரசு, மாநில அரசின் முடிவுக்கு மாறாக ஒரு தனிநபரின் கருத்தை ஏற்காது'' என்றும் அழுத்தந் திருத்தமாகக் கூறியிருந்தனர். சுருங்கச் சொன்னால், நான் சென்னை திரும்புவதற்குமுன் எனக்கு எதிரான சூழ்நிலை தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டிருந்தது.

கோகலே மண்டபக் கூட்டம்!

உண்மையில் சூழ்நிலை கடுமையானதாகத்தான் இருந்தது. நான் தனித்து விடப்பட்டேன். படஸ்கர் பரிந்துரையை நிராகரிப்பதாயின், ஆரணியாறு அணைக்கட்டுடன் சேர்த்து திருத்தணி கைத் தாலுக்காவைப் பெறுவதற்காகத் தமிழக அரசும், தமிழ் நாடு காங்கிரசும், தி.மு.க. — கம்யூனிஸ்டு உள்ளிட்ட எதிர்க் கட்சிகளும் எனக்குக் கைக்கொடுக்கத் தயாராக இருந்திருந்தால், நானும் படஸ்கர் பரிந்துரையை ஏற்க மறுத்திருப்பேன். இதற்கு மாறாக, படஸ்கர் பரிந்துரையை ஏற்க மறுத்த காமராசர் ஆட்சி தமிழக — ஆந்திர எல்லைகளிலே மாறுதல் எதுவுமின்றி உள்ள நிலைமை நீடிக்க வேண்டுமென்று கோரின. எதிர்க்கட்சிகளின் நிலையும் இதுவாகவே இருந்தது. ஆம்; வடக்கெல்லைக் கிளர்ச்சிக்கே முற்றுப்புள்ளி வைத்துவிட அவர்கள் விரும்பினார்கள். இதிலே காங்கிரசும் எதிர்க்கட்சிகளும் ஒன்றுபட்ட கருத்துடனிருந்தன.

நான் சென்னை திரும்பிய அன்று மாலை கோகலே மன்றத்தில் தமிழரசுக் கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக் கூட்டத்தில் படஸ்கர் பரிந்துரை பற்றியும், டில்லியில் பந்த் அவர்களைப் பேட்டிக் கண்டது பற்றியும் விரிவாகப் பேசினேன். டில்லியில் எச்.வி. படஸ்கர், டாக்டர் சுப்பராயன் ஆகியோரிடமிருந்து பெற்ற தகவல்களையும் வெளியிட்டேன். திரு. காமராசர் அமைச்சரவை திரு. படஸ்கருக்குத் தந்த மனுவிலே ஆரணியாறு அணைக்கட்டு பற்றிய தாவா எழுப்பப் படவில்லையென்ற ரகசியத்தை நான் வெளியிட்டபோது, கோகலே மன்றத்தில் குழுமியிருந்த மக்கள் ''வெட்கம்; வெட்கம்'' என்று குரல் கொடுத்தனர்.

''சென்னை மாநில அமைச்சரவை படஸ்கருக்குக் கொடுத்த மனுவை மக்களறிய வெளியிடத் தயாரா?'' என்று திரு. காமராசருக்கு அறைகூவல் விட்டேன். வெளியிடாவிட்டால், நீதிமன்றத்திற்குச் சென்று அந்த மனுவை வெளிப்படுத்தப் போவதாகவும் சூளுரைத்தேன். திரு. காமராசராட்சி படஸ்கர் பரிந்துரையை ஏற்கத் தவறினால் போராட்டம் நடத்தப்

போவதாகவும் பிரகடனம் செய்தேன். கோகலே மன்றப் பேச்சு 'இந்து' உட்பட எல்லா நாளேடுகளிலும் விரிவாகப் பிரசுரிக்கப் பட்டது.

முதல்வர்களின் முடிவு

நான் கோகலே மன்றத்தில் நிகழ்த்திய சொற்பொழிவில் தந்த விவரங்களால் நிலைமை எனக்குச் சாதகமாக மாறியது. சட்டப்பேரவையில் திரு.வி.கே. இராமசாமி முதலியார் (திரு. மீ.பக்தவத்சல முதலியாரின் உறவினர்) தலைமையில் இயங்கிய ஜனநாயக காங்கிரஸ் கட்சி எனக்கு ஆதரவளித்தது. 'தினமணி', 'தினமலர்', 'தமிழ்நாடு' ஆகிய நாளிதழ்களிலும், 'குமுதம்', 'ஆனந்தவிகடன்', 'கல்கி' ஆகிய வார இதழ்களிலும் படஸ்கர் பரிந்துரை ஏற்கப்பட வேண்டுமெனத் தலையங்கங்கள் எழுதப்பட்டன. 'இந்து', 'மெயில்', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆகிய ஆங்கில நாளிதழ்களிலேயும் எனது கருத்துக்கு ஆதர வான செய்திகள் நல்லவிதமாகப் பிரசுரிக்கப்படலாயின.

சென்னை நகரிலும், தமிழகத்தின் பல நகரங்களிலும் கழகச் சார்பில் பொதுக் கூட்டங்கள் போட்டுத் திரு. படஸ்கர் பரிந்து ரையை ஏற்க வேண்டுமென்பதற்கான காரணங்களைப் பொது மக்களுக்கு எடுத்துரைத்தேன். தமிழக — ஆந்திர அரசுகள் படஸ்கர் பரிந்துரையை ஏற்கத் தவறினால், கடுமையானதொரு போராட்டத்தைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்து வந்தேன். அந்தப் போராட்டமும் பலன் தராமற் போகுமானால், உயிர் போகும் வரை உண்ணாவிரதத்தைக் கடைப்பிடிப்பதென்ற எண்ணமும் எனக்கு இருந்து வந்தது.

இந்த நிலையில், தமிழக — ஆந்திர முதல்வர்கள் ஐதரா பாத்தில் சந்தித்து, இரண்டு நாட்கள் ஆழ்ந்து ஆலோசித்த பின்னர், படஸ்கர் பரிந்துரையை நிபந்தனையின்றி ஏற்றுக் கொண்டு விட்டதாக அறிவித்தனர். அவர்கள் முடிவை அறிந்த துமே, தமிழரசுக் கழக சார்பில் இரண்டு முதல்வர்களையும் பாராட்டித் தந்திகள் அனுப்பினேன்.

ஆந்திர முதல்வரும் அமராவதி சிறைவாசத் தோழருமான திரு.என். சஞ்சீவி ரெட்டியாருக்கு எனது தந்தி மிகுந்த மகிழ்ச்சி யைத் தந்ததாக அறிந்தேன். செய்தி நிருபர்கள் அவரை அணுகி,

''தமிழக — ஆந்திர முதல்வர்கள் முடிவுக்கு எதிர்ப்பு ஏற்படா தென்று தாங்கள் நினைக்கிறீர்களா?'' என்று கேட்டபோது, அதற்கவர், ''எனது நண்பர் சிவஞான கிராமணியாரே முடிவை ஏற்று, எங்களைப் பாராட்டித் தந்தி அனுப்பிவிட்ட பின்னர், அவரை விடவும் இந்தப் பிரச்சினையில் அதிக அக்கறை உடையவர்கள் யார் இருக்கிறார்கள், எங்கள் முடிவை எதிர்க்க?'' என்று கூறி, என்னைப் பெருமைப்படுத்தினார்.

படஸ்கரின் பரிந்துரை

தமிழக — ஆந்திர முதல்வர்கள் படஸ்கர் பரிந்துரையை ஏற்பதாக முடிவெடுத்த பின்னர், அந்தப் பரிந்துரை அகில இந்தியாவிலும் பத்திரிகைகளில் முழு அளவில் அதிகாரபூர்வ மாகப் பிரசுரிக்கப்பட்டது. 16 பக்கங்கள் அடங்கிய அந்தப் பரிந்துரையின் சாரம் இதுதான்:

''திருத்தணித் தாலுக்கா முழுவதும் (ஒரே ஒரு கிராமம் நீங்கலாக) சித்தூர் தாலுக்காவில் 30 கிராமங்கள், புத்தூர் தாலுக்காவில் ஒரு கிராமம் — ஆக, 322 கிராமங்கள் ஆந்திராவிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுத் தமிழ்நாட்டுடன் சேர்க்கப்படும்.

இந்தக் கிராமங்களின் மொத்த மக்கள் தொகை — அதாவது, ஆந்திராவிலிருந்து தமிழகத்திற்கு வருபவர்கள் தொகை 2,39,502.

தமிழ்நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள திருவள்ளூர், பொன்னேரி தாலுக்காவிலிருந்து சில கிராமங்கள் (ஆரணியாறு அணைக்கட்டு பகுதி உட்பட) ஆந்திராவில் சேர்க்கப்படும்.

ஆந்திர சட்டப் பேரவையின் உறுப்பினர்களில் (எம்.எல்.ஏ.க்களில்) மூவர் தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு வருவார்கள். தமிழ்நாட்டு எம்.எல்.ஏ.க்களில் யாரும் ஆந்திரத்திற்குச் செல்ல மாட்டார்கள்.

டில்லி ராஜ்ய சபையில் ஆந்திராவுக்கு ஒரு இடம் குறையும்; தமிழ்நாட்டிற்கு ஒரு இடம் கூடுதலாகும்.

வள்ளிமலை, திருவாலங்காடு, திருத்தணி ஆகிய புண்ணியத் தலங்கள் தமிழ்நாட்டுடன் இணைக்கப்படும்.

ஓசூர் தாலுக்காவில் தெலுங்கு பேசுவோர் 38.4 சதவிகிதமும், கன்னடம் பேசுவோர் 31.5 சதவிகிதமும், தமிழ் பேசுவோர் 22.4 சதவிகிதமும் இருப்பதால் — அதாவது, எந்த ஒரு மொழியினரும் 50 சதவிகிதம் இல்லாததாலும், ஆந்திரத்தோடு அதற்கு நிலத்தொடர்பு இல்லாததாலும் அந்தத் தாலுக்கா எப்போதும் போல இனியும் தமிழ்நாட்டிலேயே நீடித்தும், நிலைத்தும் இருந்து வரும்.

ஆரணியாறு அணைக்கட்டுப் பிரதேசம் ஆந்திராவுக்குச் செல்லும் என்றாலும், அணைக்கட்டில் தேக்கப்படும் நீரிலிருந்து தமிழ்நாட்டின் விளைநிலங்களுக்குத் தரப்படும் நீர்வசதி இனியும் தொடர்ந்து கிடைப்பதற்கான வகையில் தமிழக — ஆந்திர அரசுகள் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும்.

இரண்டு ஆண்டு தாமதம்

படஸ்கர் பரிந்துரை பத்திரிகைகளில் வெளியானதும் தமிழரிடையே அதற்கு நல்ல வரவேற்பிருந்தது — குறிப்பாக, நாளேடுகள் அனைத்துமே வரவேற்றுத் தலையங்கங்கள் எழுதின. அவற்றில் நன்றியறியும் பண்புடைய ஏடுகள் என்னையும் தமிழரசுக் கழகத்தையும் வெளிப்படையாகப் பாராட்டி இருந்தன.

1957-ஆம் ஆண்டின் இறுதியில் திரு. படஸ்கரின் பரிந்துரை தமிழக ஆந்திர அரசுகளால் ஏற்கப்பட்டும், 1960 ஏப்ரல் 1-இல்தான் சட்ட ரீதியாக அது நடைமுறைக்கு வந்தது. தமிழக — ஆந்திர எல்லைத் திருத்த முன் வடிவு (மசோதா) மத்திய அரசால் தயாரிக்கப்பட்டு, அது, தமிழக — ஆந்திர ராஜ்யங்களின் சட்டமன்றங்களால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், டில்லி நாடாளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்டது. இதற்கு இரண்டரை ஆண்டு காலம் ஆனது.

இந்தத் தாமதத்திற்கு நியாயமான காரணம் எதுவும் இருக்கவில்லை. 'தான் தேடாத பொன்னுக்கு மாற்றுமில்லை; மதிப்புமில்லை' என்ற பழமொழிப்படி நடந்துகொண்டது தமிழகத்தில் அன்றிருந்த காங்கிரஸ் ஆட்சி. அதுதான் காரணம்.

சேலம் மாநாடு

மாநிலங்கள் மொழிவழி திருத்தியமைக்கப்பட்ட மூன்றே திங்களுக்குள் அதாவது, 1957-இல் நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றங்களுக்கும் பொதுத் தேர்தல் வந்துற்றது. ஆந்திரமும் மலபார் மாவட்டமும் பிரிந்து போனமையால், 'எஞ்சிய சென்னை ராஜ்யம்' கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கிலிருந்து விடுபட்டு விட்டது. சமூக சீர்திருத்த இயக்கமாக விளங்கி வந்த திராவிடர் முன்னேற்றக் கழகம் தன்னைப் பார்லிமெண்டரி அரசியல் கட்சியாகப் பிரகடனம் செய்துகொண்டு, பொதுத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடத் தயாராகிக் கொண்டிருந்தது. ஆனால், அதன் போட்டி குறித்துத் தமிழ்நாடு காங்கிரஸ் அச்சங் கொள்ளவில்லை. தெய்வப் பற்றும், தேசப்பற்றும் உடைய தமிழ் மக்கள் தி.மு.க. வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்க மாட்டார்களென்று காங்கிரஸ் நம்பியது.

நானும் என்னைப் பின்பற்றும் தோழர்களிலே பல்லாயிரக் கணக்கானவர்களும் காங்கிரசிலிருந்து விலகிய பின்னர் நடைபெறும் முதல் பொதுத் தேர்தலாதலால், ''தேர்தல் களத்திலே எந்தக் கட்சிக்கு ஆதரவளிப்பது?'' — என்ற வினாவிற்கு விடை காண வேண்டிய நிலையில் தமிழரசுக் கழகம் இருந்தது. அதற்கு வழிகாட்ட நான் கடமைப்பட்டிருந்தேன். ஆம்; 1957-ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் எனது தேசப்பற்றுக்கும் தேசியப் பண்புக்கும் ஒரு சோதனையாக அமைந்தது.

பொதுத் தேர்தலில் தமிழரசுக் கழகம் நேரடியாகக் கலந்து கொண்டு சில தொகுதிகளிலேனும் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட வேண்டும் — குறிப்பாக, வெற்றிக்கு வாய்ப்பான ஒரு தொகுதியைத் தேர்ந்தெடுத்து அங்கு நானே போட்டியிட வேண்டும் என்ற கருத்தும் தமிழரசுக் கழகத் தோழர்களிலே ஒரு சாராருக்கு இருந்து வந்தது.

தி.மு.க. தலைவர்களின் அழைப்பு

சில திங்களுக்கு முன் நடைபெற்ற தட்சணப் பிரதேச எதிர்ப்புக் கிளர்ச்சியிலே தி.மு.கழகமும் தமிழரசுக் கழகமும் ஒன்றுபட்டுக் கூட்டணி அமைத்துச் செயல்பட்டதால், இந்த இரண்டுக் கழகங்களுக்குமிடையே நீண்ட நெடுங்காலமாக நிலவி வந்த பகைமையுணர்வு மறைந்து பரஸ்பரம் நட்புணர்ச்சி நிலவி வந்தது. இதனால், அப்போது தி.மு.க. பொதுச் செயலாளராக இருந்த நாவலர் நெடுஞ்செழியன், திரு.என்.வி. நடராசன் ஆகிய இருவரும் எனது இல்லத்திற்கு வந்து பொதுத் தேர்தல் பற்றி என்னுடைய நிலையை அறிய விரும்பினர். தமிழரசுக் கழகம் தனக்கு வாய்ப்புள்ள தொகுதிகளில் போட்டியிடுமானால், அந்தத் தொகுதிகளில் தி.மு.க. வேட்பாளர்களை நிறுத்தாமலிருப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் எனக்கு உறுதி கூறினர். குறிப்பாக, எனக்கு வாய்ப்புள்ள ஒரு தொகுதியில் நான் போட்டியிட வேண்டுமென்று அண்ணா விரும்புவதாகவும், அந்தத் தொகுதியில் தி.மு.க. ஆதரவு எனக்குக் கிடைப்பது உறுதியென்றும் கூறினர்.

தி.மு.க. தலைவர்களுடன் மிகுந்த நல்லெண்ணமும் நட்புணர்ச்சியுங் காட்டி உரையாடினேன். என்றாலும், தமிழரசுக் கழகம் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதை நான் விரும்பவில்லையென்றும், கழகம் போட்டியிடாத நிலையில் அதன் தலைவனாகிய நான் சுயேச்சையாகப் போட்டியிடுவது அரசியலில் தவறான மரபைப் படைப்பதாகுமாதலால், அதனை நான் விரும்பவில்லையென்றும் அவர்களிடம் உறுதியாகக் கூறினேன்.

'இளங்கோ நகரி'ல் மாநாடு

இந்நிலையில் 1957 ஜனவரி 26-27 தேதிகளிலே, தமிழரசுக் கழக மூன்றாவது மாநில மாநாடு சேலம் நகரில் சிறப்பாக நடைபெற்றது. முதலிரண்டு மாநில மாநாடுகளை விடவும் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. தமிழ் மாநிலம் அமைந்த — தமிழகத்தின் தெற்கெல்லை மீட்கப்பட்ட — தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்ட மூன்றே திங்களில், இத்தனை சாதனைகளுக்கும் காரணமான கழகத்தின் மாநாடு கூடியது.

சேலம் நகரில் போஸ் திடலில் மிகச் சிறப்பாக அமைக்கப் பட்ட ''இளங்கோ நகரி''ல் புதிய தமிழகம் படைத்த வெற்றிப் பெருமிதத்தோடு தமிழினக் காவலர்கள் திரண்டனர்.

தமிழரசு இயக்க வளர்ச்சியிலும் சரி; புதிய தமிழகம் படைக்கக் கழகம் நடத்திய ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களி லும் சரி; சேலம் மாவட்டம் முதலிடம் பெற்று வந்தது. அந்த மாவட்டத்தைச் சார்ந்த நூற்றுக்கணக்கான தோழர்கள் மாநாட் டுக்கெனப் படை திரட்டப் பெற்றனர். சிறப்புடை அணிந்து ராணுவ ரீதியில் இளங்கோ நகரில் அணிவகுப்பு நடத்தி, மாநாட்டுத் தலைவன் என்ற முறையில எனக்கு மரியாதை செய்தனர்.

சேலம் ரத்னா ஸ்டுடியோவை நடத்திக் கொண்டு அரிய திரைப்படங்கள் பலவற்றைத் தயாரித்துப் புகழேணியில் ஏறிக் கொண்டிருந்த கலைக்காவலர் எம்.ஏ. வேணு அவர்கள், வரவேற்புக் குழுவின் தலைவராக இருந்தார்.

திரு.மெ. குப்புசாமி துணைத் தலைவராகவும், திரு.கொ.ப. பச்சையப்பன் செயலாளராகவும் இருந்து மாநாட்டைச் சிறப்புற நடத்தி வைத்தனர். கலைஞர் ஏ.பி. நாகராசன், மாநாட்டுத் தலைவர் ஊர்வலத்திலே தொண்டர் படைத் தளபதியாக இருந்து சிறப்பாக ஊர்வலத்தை நடத்தி வைத்தார்.

பேராசிரியர் ம.ரா.போ. குருசாமி முதல் நாள் நடந்த இலக்கிய மாநாட்டில் தலைமை வகித்தார். அதிலே கம்யூனிஸ் டுத் தலைவர் திரு.ப. ஜீவானந்தம், ''கலைமகள்'' ஆசிரியர் வித்வான் கி.வா. ஜகந்நாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இரண்டாவது நாள் இளங்கோ நகரில் கழகத்தின் அரசியல் மாநாடு தொடங்குமுன்பு திருமதி. சரோஜினி நாராயணசாமி தமிழரசுக் கழகத்தின் கொடியை வானளாவப் பறக்கவிட்டார். கலைஞர் ஏ.பி. நாகராசன் அரசியல் மாநாட்டைத் திறந்து

வைத்து உரையாற்றினார். திரு.எம்.ஏ. வேணு அவர்கள் தமது வரவேற்பு உரையிலே தமிழரசுக் கழகத்திடம் தமக்குள்ள ஆழ்ந்த பற்றுதலை வெளிப்படுத்தினார்.

இரண்டாம் நாள் நடந்த அரசியல் மாநாட்டிலே தமிழரசுக் கழக அமைப்பு விதிமுறைப்படி கழகத் தலைவன் என்ற முறையில் நான் தலைமை தாங்கினேன். மொத்தத்தில் சேலம் மாநாடு தமிழரசுக் கழகத் தோழர் ஒவ்வொருவரும் நெஞ்சை நிமிர்த்தி நடக்கும் விதத்திலே பெருமையோடு நடைபெற்றது.

இரண்டாவது பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த நேரம் ஆதலால், தேர்தல் களத்திலே குதிக்கத் தயாராகிக் கொண்டிருந்த அரசியல் கட்சிகளெல்லாம் சேலம் மாநாட்டின் முடிவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தன.

எனது மனம் காங்கிரசுக்கு ஆதரவளிப்பதையே விரும்பியது. தமிழரசுக் கழகத்தின் வளர்ச்சிக்கும் அதுவே சிறந்ததென்று உறுதியாக நம்பினேன். ஆனால், தமிழ்நாடு காங்கிரசைத் தன் செல்வாக்கில் வைத்திருந்த திரு.கு.காமராசர் என் மீது கொண்டிருந்த தவறான உணர்ச்சி காரணமாகத் தமிழரசுக் கழகத்தின் உதவியை கேட்டுப் பெற விரும்பாதவரானார். உண்மையில் கழகத்தின் ஆதரவை அவரது மனம் விரும்பியது என்றாலும், தாம் கேட்காமலே அது வலுவில் வந்து தன் காலடியில் விழ வேண்டுமென்று அவர் எதிர்பார்த்தார்.

ஆகவே, காங்கிரசுக்கு ஆதரவு தருவதென்ற முடிவைத் தானாகவே வலுவில் எடுக்க தமிழரசுக் கழகம் விரும்பவில்லை. அதனால் தி.மு.கழகம் அல்லாத தேசிய சக்திகளுக்குத் தன் ஆதரவைத் தருவதென்று சேலம் மாநாடு முடிவெடுத்தது.

இலக்கிய மாநாட்டில் பங்கு கொண்ட தோழர் ப.ஜீவானந்தம் என்னோடும் தமிழரசுக் கழக முன்னணித் தோழர்களோடும் தேர்தல் பற்றி ஒரு மணி நேரம் தனித்து உரையாடினார். கழகம்

தன் சார்பில் ஒரே ஒரு வேட்பாளரை நிறுத்தி, சட்டமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்று ஆலோசனை கூறினார். அந்த ஒரே வேட்பாளர் நானாக இருப்பது நல்லதென்றும் வற்புறுத்தினார்.

ஜீவாவிடம் தந்த உறுதிமொழி

இன்றைய ஜனநாயக சகாப்தத்திலே சட்டமன்றத்தில் இடம் பெறாத கட்சிக்கு, மக்கள் மத்தியில் மதிப்பிருக்காது என்பது தோழர் ஜீவானந்தத்தின் கருத்தாக இருந்தது. அவருடைய கருத்து எனக்கு உடன்பாடாக இருந்ததென்றாலும், கழகம் அடையாள பூர்வமாகத் தன் சார்பில் ஒருவரைச் சட்டமன்றத் திற்கு அனுப்புவதற்குக்கூட அது சரியான நேரமல்லவென்று நான் உறுதியாக நம்பினேன். காலம் வரும்போது தமிழகச் சட்டமன்றத்திலே தமிழரசுக் கழகத்தின் குரல் ஒலிப்பது திண்ணம் என்று தோழர் ஜீவா அவர்களுக்கு உறுதி கூறினேன்.

வடக்கெல்லை வெற்றி விழா!

1960 ஏப்ரல் 1-ஆம் தேதி தமிழக — ஆந்திர எல்லைத் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வருமென மத்திய அரசால் அறிவிக்கப்பட்டதுமே, தமிழரசுக் கழகத் தோழர்கள் வெற்றி விழா கொண்டாடத் தயாராயினர். பொதுவாக, வெற்றி விழாக்க ளில் எனக்கு எப்போதுமே ஆர்வம் இருந்ததில்லை. தமிழரசுக் கழகத்தின் வெற்றிகளை விழாக் கொண்டாட நான் விரும்பி யிருந்தால், ஒன்றா, இரண்டா? எத்தனையோ விழாக்களைக் கொண்டாடியிருக்க முடியும்.

கொண்டாடத் தவறிய விழாக்கள்

1956 நவம்பர் 1-இல் தமிழ் மாநிலம் அமைந்த போதே — தமிழகத் தெற்கல்லைக் கிளர்ச்சி வெற்றி கண்டு, குமரி மாவட்டம் தமிழகத்துடன் இணைக்கப்பட்டபோதே தமிழினத் தார் அனைவரும் ஒன்றுபட்டு, மாநிலம் முழுவதிலும் விழா கொண்டாடியிருக்க வேண்டும். 1956-இல் தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டதே, அப்போதும் தமிழரெல் லாம் வெற்றி விழா கொண்டாடியிருக்கலாம்.

''தமிழினமே ஒன்றுபடு'' என்பது தமிழரசுக் கழகத்தின் கோஷம் — இதுவே, குறிக்கோள். இதற்கு எதிராகத் தமிழினத் தைப் பிளவுபடுத்தக் கூடிய ''வெற்றி'' விழாக்களை நான் விரும்பியதே இல்லை. ஆயினும் வடக்கெல்லை வெற்றி விழா தமிழரிலே யாருக்கும் எதிரானதல்லவாகையால் அதனைக் கொண்டாட என் கழகத் தோழர்களை நான் அனுமதித்தேன்.

தமிழக முதல்வர் கு.காமராசர், ஆந்திர முதல்வர் என். சஞ்சீவி ரெட்டி ஆகியோரையும் அழைக்குமாறு நான் ஆலோ சனை கூறியிருந்தேன். அதன்படி அழைத்தும், அவர்கள் வர மறுத்துவிட்டனர். அவர்களுக்கு, ''வடக்கெல்லை வெற்றி விழா''

என்று சொல்வதே பிடிக்கவில்லை. ஆம்; வெற்றியை விரும்பாத வர்கள்தானே! ஆனால், படஸ்கர் பரிந்துரைக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்திய திரு.எம். பக்தவத்சலனார் மட்டும் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, தமிழகத்திற்குத் திரும்பும் பிரதேசத் தைத் தமிழக அரசின் சார்பில் பெற்றுக் கொள்ள வருமாறு செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் க.திரவியம் விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்டார்.

ஆந்திர முதல்வர் தணிகை விழாவில் கலந்துகொள்ள இசைந்திருந்தால் நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்திருப்பேன். அவரது வருகை தமிழகத்திற்குத் திரும்பும் தணிகைப் பகுதியில் வாழும் தமிழர் — தெலுங்கர் ஒற்றுமைக்குப் பயன்பட்டிருக்கும். அதற்காகவுந்தான் அவரை அழைக்கும்படி சொல்லியிருந்தேன். எனக்குள்ள 'தமிழன்' என்ற இன உணர்ச்சி, 'இந்தியன்' என்ற தேசிய உணர்ச்சிக்கு எதிரானதல்லவே! ஆனால், என் விருப்பம் நிறைவேறவில்லை.

ஏப்ரல் 1-ஆம் தேதியன்று காலை 7 மணிக்கு சென்னையி லிருந்து மோட்டார் ஊர்வலமொன்று 55 கல் தொலைவிலுள்ள திருத்தணிகையை நோக்கிப் புறப்பட்டது. இராயப்பேட்டை லாயிட்ஸ் சாலையிலுள்ள 'பரமசிவம் நிலையம்' (அப்போது கலைஞர் ஏ.பி.என். வாழ்ந்த) பங்களாவிலிருந்து சுமார் 50 மோட்டார்கள் வரிசையாகப் புறப்பட்டு, கிருஷ்ணாம்பேட்டை யிலுள்ள எனது இல்லத்திற்கு வந்தன. நன்கு அலங்கரிக்கப்பட் டிருந்த மோட்டாரில் என்னை ஏற்றிக் கொண்டு ஊர்வலம் தணிகையை நோக்கி ஊர்ந்தது.

வழிநெடுக உபசாரம்

புகழ்மிக்க நாடக — திரைப்பட நடிகர்கள், எழுத்தாளர்கள், தமிழரசுக் கழக முன்னணித் தோழர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்ட மோட்டார்களில் அமர்ந்திருந்தனர்.

ஊர்வலம் தணிகையை நெருங்கிக் கொண்டிருந்தபோது, எங்களில் யாரும் எதிர்பாராத வண்ணம் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தமது காரில் வந்து எங்களோடு கலந்து கொண்டு

தணிகைக்கு வந்தார். அவரது திடீர் வருகை எனக்கே பெரு மகிழ்ச்சியைத் தந்ததென்றால், பொதுமக்களின் மகிழ்ச்சிக்கு எல்லை ஏது?

செங்கற்பட்டு மாவட்டத்தின் எல்லையிலுள்ள இராமாவரம் என்ற கிராமத்தை ஊர்வலம் அடைந்தபோது, அதுகாறும் அங்கிருந்த ''ஆந்திர மாநில எல்லை'' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட எல்லைக்கல் அகற்றப்பட்டிருக்கக் கண்டு, நானும் த.அ. கழகத் தோழர்களும் எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தோம். ஆம்; கத்தியின்றி ரத்தமின்றி சாதித்த சரித்திரச் சிறப்புமிக்க சாதனையல்லவா! ஊர்வலம் தணிகை சேருவதற்குள் மோட்டார்களின் எண்ணிக்கை 80ஆக அதிகரித்துவிட்டது. தணிகை ஊராட்சியின் எல்லையிலே ஆந்திராவிலிருந்து 'விடுதலை'யான தமிழ் மக்கள் பல்லாயிரக்கணக்கில் கூடியிருந்து, எனக்குத் திருஷ்டி கழித்து, என்னை வாழ்த்தி வரவேற்றனர். அவர்களுடைய உற்சாகத்திற்கு எல்லையே இல்லை.

நான் தணிகை செல்வதற்குள் செங்கை — சித்தூர் மாவட்ட ஆட்சியாளர்கள் கூட்டாக ஏற்பாடு செய்திருந்த எல்லை மாற்றச் சடங்கு முடிந்துவிட்டது. அமைச்சர் மீ. பக்தவத்சலனார் தான் தமிழ் நாட்டரசின் சார்பில் ஆந்திரா அரசிடமிருந்து தணிகைத் தாலுக்காவைப் பெற்றுக் கொண்டார். அவர் பாக்கியசாலி! அந்தச் சடங்கில் கலந்து கொள்ளுமாறு அதிகாரபூர்வமாக செங்கை மாவட்ட கலெக்டர் என்னை அழைத்திருந்தாரென்றாலும், அவகாசமின்மையால் நான் கலந்துகொள்ளவில்லை. இந்த வடக்கெல்லைக் கிளர்ச்சியைத் தொடங்குவதற்கு எனக்குத் துணைபுரிந்த காலஞ்சென்ற ஆசிரியர் மங்கலங்கிழார் முக வுருவச் சிலையொன்றும் ஊராட்சி மன்றத்தில் திரு. பக்தவத்சலனாரால் திறந்து வைக்கப்பட்டது. தணிகை ஊராட்சி மன்றம் ஏற்பாடு செய்திருந்த வடக்கெல்லை வெற்றி விழா மாலையில் அதற்கென அமைக்கப்பட்டிருந்த அழகிய பந்தலில் நடைபெற்றது.

தமிழ் மாநில நிதியமைச்சராக இருந்த சி.சுப்பிரமணியம், விழாவில் கலந்து கொண்டு, ஊராட்சி மன்றத்தில் எனது

முகவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். நானும் அப்போது மேடையில் இருந்தேன் என்பது சுவையான செய்தி யல்லவா! அரசியல் வாழ்வில் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருப்பதுதான் நல்லது. என்றா லும், சில நேரங்களில் அது சாத்தியப்படுவதில்லை.

திரு.சி.சு. அவர்கள் என்னை வாயாரப் புகழ்ந்தார். நாட் டிற்கு நான் ஆற்றியுள்ள தொண்டுகளைக் கருமித்தனமின்றி விரித்துரைத்தார். ஆனால், தமது பேச்சுக்கிடையே ''திருத் தணிகை திரும்பியதோடு, வடக்கெல்லைக் கிளர்ச்சி முடிந்து விட்டது'' என்று அவர் கூறியபோது, விழாவில் குழுமியிருந்த தமிழரசுக் கழக வீரர்கள் ''இல்லை, இல்லை'' என்று கூறி அலையொலி போல் ஆரவாரித்தனர். ''வேங்கடத்தை விடமாட் டோம்'' என்று முழங்கினர். இதனால் சிறிது பரபரப்பு ஏற்பட் டது.

ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் தமது கருத் துக்கு எதிராக ஆரவாரம் செய்தது கண்டு நண்பர் சி.சு. திகைத்துப் போனார்! நான், என் வீரர்களின் ஆரவாரங்கண்டு, மகிழ்ச்சி வெள்ளத்திலே மிதந்தேன். ''இப்படை தோற்கின் வேறு எப்படை வெல்லும்'' என்ற ''மனோன்மணீயம்'' சுந்தர னாரின் வாக்கு எனது இதயத்தில் எதிரொலித்தது!

அன்பர் சி.சு.வுக்குப் பிறகு, திரு.கே. வினாயகம் படத் தைத் திறந்து வைத்து நான் பேசியபோது, அவருக்கு பணிவன் போடு பதிலளித்தேன். அது வருமாறு:

''அமைச்சர் சொன்னார், தமிழக — ஆந்திர எல்லைப் பிரச்சினை இன்றோடு தீர்ந்துவிட்டது'' என்று. எனக்குக் கஷ்டகாலம் ஏற்பட்டு, அவர் இருக்கும் இடத்தில் இன்று நான் இருந்தாலும், இப்படித்தான் சொல்லியிருப்பேனோ, என்னவோ?

''தமிழரசுக் கழகத்தின் சார்பில் சொல்லுகிறேன்; எல்லைக் கிளர்ச்சிக்குக் கமா போட்டு நிறுத்தித்தான் தணி கைத் தாலுக்காவைப் பெறுகிறேன். முற்றுப்புள்ளி வைத்து அல்ல.''

இந்த நேரத்தில் மக்கள் கூட்டத்தில் எல்லாப் பகுதிகளி லிருந்தும், ஆரவாரமும், கைதட்டலும், 'வேங்கடத்தை விட மாட்டோம்' என்ற குரல்களும் எழுந்தன. நான் மேலும் கூறிய தாவது:

''என் கருத்தை அமைச்சர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயமில்லை. எத்துணையோ விஷயங்களில் எங்களிடையே கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. அவற்றில் இதுவும் ஒன்றாக இருக்கலாம். காலம் சொல்லட் டும், தமிழகத்தின் வடக்கெல்லை எது என்று.''

திரு.சி. சுப்பிரமணியம் அவர்கள் தமது பேச்சின் இறுதி யிலே, காங்கிரசுக்கு வந்துவிடுமாறு மிகுந்த உருக்கத்துடன் எனக்கு அழைப்பு விடுத்தார். அப்போது, அவையில் பொருள் பொருந்திய வகையில் அமைதி நிலவியது. அவர் கூறியதாவது:

''இந்த நல்ல நேரத்தில், நமது தலைவர், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களுக்கு ஒன்றைத் தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன்.

''தமிழரசுக் கழகம் எந்தக் குறிக்கோள்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதோ, அவற்றில் பெரும்பாலானவை நிறைவேறி விட்டன. திருத்தணிகை இன்று இணைந்து விட்டது. இந்தச் சாதனைகளுக்குப் பிறகும் தமிழரசுக் கழகம் ஒரு அரசியல் கட்சியாக நீடிக்க வேண்டுமா? — என்பதை ம.பொ.சி. யோசித்துப் பார்க்க வேண்டும் என்று அவரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

''நாட்டில் பல கட்சிகள் ஏற்படுவதனால் மக்கள் முன்னேற்றமடைய முடியாது. இருக்கக் கூடிய கட்சிகள் ஒன்று சேர்வது நாட்டுக்கு நலம். ம.பொ.சி. எங்கள் கட்சியோடு சேரவேண்டும் என்று நான் கூறவில்லை. எந்தக் கட்சி முற்போக்கானது. எது ஆக்க வழியில் செல்லுகிறது, எதிலே உற்றார் உறவினர் அவருக்கு அதிக மிருக்கிறார்கள் என்பவற்றையெல்லாம் யோசித்துப் பார்த்து, எந்தக் கட்சியில் சேரலாம் என்பதை அவரே முடிவு செய்யலாம்.

''நான் சொன்னால் அவர் கேட்கமாடார். (தணிகை மலையைக் காட்டி) அதோ முருகன் கோயில் இருக்கிறது. அங்கு சென்று அமைதியாகத் தவஞ் செய்து, சிந்தித்துப் பார்க்கட்டும். நல்ல முடிவுக்கு வர, முருகப் பெருமான் அருள் அவருக்குக் கிட்டவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.''

'போ' என்று விரட்டினார்களே!

திரு.சி.சு. அவர்களின் உருக்கமான அழைப்பு, அந்த விழா அரங்கிலே என்னை மிகவும் தருமசங்கடத்தில் வைத்துவிட்டது. நான் அதே மேடையில் அவருக்குப் பதிலளித்துப் பேசினேன். அது வருமாறு:

''தணிகை மீட்சி விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், அமைச்சர் வேறு ஒரு பிரச்சினைக்கு என் கவனத்தை இழுத்துள்ளார்.

''அந்தப் பிரச்சினையில் புகுந்து ஆராய்ந்து, அபிப்பிராயம் சொல்லி, பல தரப்பினரும் கூடியுள்ள இந்த மேடையை ஒரு விவாத அரங்காக்கிவிட நான் விரும்பவில்லை. நல்லவேளையாக, அமைச்சரும் இங்கேயே, இப்போதே நான் பதிலளிக்க வேண்டுமென்று என்னை வற்புறுத்தவில்லை. ஆனால், முடிவான கருத்தாக அல்லாமல், பொதுவாக ஒரு விஷயத்தை மட்டும் இங்கு சொல்ல விரும்புகிறேன்.

''பகைவனை விரட்டும்போது கூட, 'போய் வா' என்று சொல்லுவதுதான் பண்பாடு. இராமனைக் காட்டுக்கனுப்பிய கொடுமனக் கைகேயிகூட, 'ஆண்டோர் ஏழினோடு ஏழு, அகன் கானிடை, மாண்ட மாதவத்தோருடன் வைகி, பின், மீண்டு நீ வரல் வேண்டும்' என்றாள். ஆனால், என்னைக் காங்கிரசிலிருந்து வெளியேற்றியவர்கள், ''போய் வா'' என்று சொல்லாமல் ''போ'' என்றுதான் சொன்னார்கள். நானும் ''போகிறேன்'' என்று சொல்லி வந்துவிட்டேன்.

''நான் கூறிய இவ்வளவும் அமைச்சர் விடுத்த அழைப்புக்கு முடிவான பதிலன்று. என் மனத்தின் அடித் தளத்தில் தேங்கியிருந்த உணர்ச்சியையே வெளிப்படுத்தி னேன். அமைச்சர் கூறியதைப் பற்றி நான் ஒரு முடிவுக்கு வருமுன் மலைமீது சென்று, அங்கு முருகன் கோயில் முன் தவஞ் செய்து, அப்புறம் முடிவெடுக்க வேண்டுமென்று அவரே கூறினார். இன்று இந்த விழா முடிந்ததும் நான் அவசரமாகச் சென்னைக்குப் போகிறேன். மீண்டும் அவகாசம் கிடைக்கும்போது, தணிகை மலைமீதேறி, முருகப் பெருமானைத் தியானித்து ஒரு முடிவுக்கு வருகி றேன்.''

திரு.சி.சு. எவ்வளவுதான் என்பால் நல்லெண்ணங் கொண் டவராயினும், அவரது செல்வாக்கில் அன்று தமிழ்நாடு காங்கி ரஸ் இருக்கவில்லை. என்னை விரும்பாத, என் கழகத்தின் இன வழிப்பட்ட கொள்கைகளை வெறுக்கின்ற திரு. காமராசரின் செல்வாக்கில் இருந்தது. இந்த நிலை திரு.சி.சு.வுக்குத் தெரியும். தெரிந்திருந்தும், என்பால் தமக்குள்ள நல்லெண்ணத்தைக் காட் டிக் கொள்வதற்காகவே அவர் எனக்கு அழைப்பு விடுத்தார். இதுபற்றித் திரு. காமராசர் மகிழ்ச்சியடையவில்லையென்று நண்பர்கள் மூலமாக அறிந்தேன். ''கிராமணியார் தனித்திருந்தே நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார். அதைக் கெடுக்க வேண்டாமே!'' என்றாராம். என்பால் அவருக்கு எவ்வளவு அன்பு!

ம.பொ.சி. சாலை

தமிழரசுக் கழகத்தை நான் தொடங்கியது, மொழிவழி தமிழ் மாநிலம் அமைப்பதற்காகவோ, தமிழக எல்லைகளை மீட்பதற்காகவோ, எங்கும் எதிலும் தமிழ் மொழிக்கு முதலிடந் தேடுவதற்காகவோ மட்டுமல்ல; இவற்றிற்கெல்லாம் மேலாகத் தமிழகத்தை முழு அளவு சுயாட்சியுடைய மாநிலமாக்கவுந்தான் தமிழரசுக் கழகத்தைத் தொடங்கினேன். அது முடியுமுன் கழகத் தைக் கலைத்துவிட்டு நான் காங்கிரசில் சேர்ந்து விடுவதற்கான சந்தர்ப்பமே இல்லாத நிலையில் திரு.சி.சு. எனக்கு அழைப்பு விடுத்தார். நான் அந்த மேடையிலேயே மறுப்பது மரியாதையா காது என்ற காரணத்தால், மழுப்பிப் பேசிச் சமாளித்தேன்.

ஆனால், திரு.சி.சு.வின் அழைப்பு என் கழகத் தோழரிலே, சிலருக்கு நாக்கில் தேன் தடவியது போலிருந்தது. அவர்கள், தணிகை விழா முடிந்ததும் கழகத்தைக் காங்கிரசோடு இணைத்து விட வேண்டுமென்ற முயற்சியை மேற்கொண்டனர். ஆனால், அவர்கள் அதிலே வெற்றி பெறவில்லை. பின்னர், அவர்கள் மட்டும் ஒருவர்பின் ஒருவராக ஓடிப் போனார்கள்!

நன்றியறியும் பண்புடைய வடக்கெல்லைத் தமிழ் மக்கள் தணிகையிலுள்ள நீண்டதொரு சாலைக்கு எனது பெயரை வைத்துள்ளனர். ஊராட்சி மன்றம், தணிகையின் நுழைவாயிலிலே என் பெயரால் ஒரு வளைவு அமைப்பதென்று தீர்மானம் செய்தது. ஆனால், அப்போதிருந்த காங்கிரஸ் ஆட்சி அந்த வளைவுக்காகும் செலவுக்கு ஊராட்சியின் நிதியிலிருந்து எடுக்கக் கூடாதென்று ஆணை பிறப்பித்ததால், அது தடைப் பட்டு விட்டது!

எம்.பி. பதவி

தணிகை மீண்டதால் டில்லி ராஜ்ய சபையில் தமிழகத்திற்கு ஒரு இடம் அதிகப்படியாகக் கிடைத்ததால், அதற்கு என்னைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று என்பால் நல்லெண்ணமுள்ள காங்கிரஸ்வாதிகள் அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த திரு.ஓ.வி. அளகேசன் அவர்களிடம் தூது சென்றனர். அவர் மகிழ்ச்சியோடு இசைந்தார். ஆனால், திரு.கு. காமராசர் ''ம.பொ.சி. காங்கிரசில் சேர்ந்தாலன்றி, அவரைத் தேர்ந்தெடுப்பது சாத்தியமில்லை'' என்று கூறிவிட்டார். நான் காங்கிரசில் சேர்ந்து எம்.பி.யாகிவிட வேண்டுமென்று காங்கிரசிலிருந்த நண்பர்களில் சிலர் என்னை வற்புறுத்தினர். நான் இணங்காததால் திரு.க.சந்தானம் தேர்ந்தெடுக்கப்பட்டார். எம்.பி. பதவி பெறுவதற்காக நான் கழகத்தைக் கலைத்துவிட்டு காங்கிரசில் சேருவதென்பது என்னால் நினைத்துப் பார்க்கவும் முடியாததாக இருந்தது.

வடக்கெல்லைப் போரின்போது நான் நிதி திரட்டிய தில்லை. பெருத்த பணக்காரர் எவரிடமும் பெரும் பொருள்

பெற்றதில்லை. பணத்தால் ஆகவேண்டிய காரியங்களை என்னுடைய — என் கழகத் தோழர்களுடைய உழைப்பால் ஈடு செய்தேன். அதன் பின்னும் தேவைப்பட்ட அற்பப் பொருளை வடக்கெல்லைத் தமிழர்களே தந்து உதவினர். அதைக்கூட நான் என் பொறுப்பில் வைத்துக் கொள்ளாமல், தணிகைத் தோழர்கள் பொறுப்பிலேயே விட்டு வைத்தேன்.

முருகனே காத்தான்!

பொதுவாக, தமிழகத்துடன் தணிகை இணைந்த நாளிலே தமிழினத்தார் அடைந்த பெருமகிழ்ச்சியை வருணிக்க மகாகவி கம்பர்தான் திரும்பவும் வந்து கவி புனையவேண்டும். நிலவளமும் இயற்கை அழகும் உடைய குமரி மாவட்டம் தமிழகத்துடன் இணைந்த நாளிலே கூட இவ்வளவு பெரும் உற்சாகத்தைத் தமிழ்நாடு முழுவதிலுமுள்ள மக்களிடையே நான் கண்டதில்லை. குமரி மாவட்டத்துடன் ஒப்பிடும்போது தணிகைத் தாலுகா அவ்வளவு முக்கியமானதல்ல. ஆயினும், தணிகை மலையில் திருமுருகன் கோயில் கொண்டுள்ள காரணத்தால் அதன் வருகையைத் தமிழ் மக்கள் தெய்வீக நிகழ்ச்சியாகக் கருதினர். முருகன் வாழும் அறுபடை வீடுகளில் தணிகை ஒன்றல்லவா!

தமிழ்நாட்டோடு தணிகை சேர்ந்ததனை நாளிதழ்களும் வார — மாத இதழ்களும் தலையங்கம் எழுதி மகிழ்ச்சியோடு வரவேற்றன. அவற்றுள் சில ஏடுகள் என்னையும் தமிழரசுக் கழகத்தையும் வெளிப்படையாகப் பாராட்டியிருந்தன. 'தணிகை கொண்டார்' — 'எல்லைக் காவலர்' என்ற பட்டப் பெயர்களை எனக்குத் தந்தன.

தலையங்கம் எழுதத் தவறிய 'இந்து' நாளேடு சென்னையிலிருந்து சென்ற ஊர்வலத்தின் சிறப்பை — தணிகை விழாவின் சீர்மையை வருணித்துச் செய்தி வெளியிட்டு, தனது மகிழ்ச்சியைப் புலப்படுத்தியது.

தி.மு.க. தலைவர் அண்ணா அவர்களையும் கவர்ந்தது தணிகை வெற்றி விழா. அன்றைய சூழ்நிலையில் அவரது பாராட்டுதலை நான் எதிர்பார்க்கவில்லையென்றாலும், அவரும் பாராட்டினார் — ஆம்; அவருடைய பாணியிலே!

''தமிழர்கள் முயன்றால் குன்றத்தை மட்டுமல்ல; திராவிட நாடு என்ற பெரிய நிலப் பரப்பையே மீட்க முடியும் என்பதை உணர்ந்து, அவர்கள் (தமிழரசுக் கழகத்தார்) ஏன் நம் பக்கம் வரவில்லை என்ற எண்ணமும் எனக்குப் பிறக்கிறது. சிறிய குன்றோடு நின்று விடாமல் மலை போன்ற அந்தக் கட்சி (தமிழரசுக் கழகம்) நம்மோடு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.'' **(3.4.60 அன்று சேப்பாக்கம் தி.மு.க. பொதுக் கூட்டத்தில் பேசி, 'தனியரசு' (5.4.60) நாளிதழில் வெளியானது).**

தணிகை விழா நடந்த இரண்டாவது நாளில் சென்னை திருவல்லிக்கேணிக் கடற்கரையிலே சென்னை மாவட்ட த.அ.க. வினரால் வெற்றி விழா கொண்டாடப்பட்டது. இந்த விழா விலே, கலைஞர் ஏ.பி. நாகராசன், தமது சொந்தப் பொறுப்பில் ஒரு சவரன் தங்க மோதிரத்தை தணிகையை மீட்டதற்கான பரிசுப் பொருளாகக் கலைக் காவலர் எம்.ஏ.வி. அவர்களைக் கொண்டு எனக்கு அணிவித்தார். அதிலே, தமிழரசுக் கழகக் கொடி பொறிக்கப்பட்டிருந்தது.

அண்ணாவின் ஏக்கம்!

கடற்கரை விழாவைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்த அண்ணா அவர்கள் அன்றே தி.மு.க. கூட்டமொன்றில் பேசியது வருமாறு:

''நான் இப்பொழுது கடற்கரை ஓரமாக வந்தேன்; அங்கு திருத்தணி வெற்றிவிழாக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கள் (தமிழரசுக் கழகத்தார்)

இன்றைய தினம் வேலவன் குன்றத்தைத் தமிழகத்தோடு இணைத்துவிட்டு, விழாக் கொண்டாடுகிறார்கள். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், அவர்கள் விழாக் கொண்டாடுகிறார்கள். அதைப் பார்க்கின்ற நேரத்தில் நாம் கொண்டாட வேண்டிய விழாவைப் பற்றி நீங்கள் ஒவ் வொருவரும் மனதில் எண்ணிப் பார்க்க வேண்டுமென்பதற் காகத்தான்.''

(3.4.60-இல் ஒரு பொதுக் கூட்டத்தில் அண்ணா தெரிவித்த இந்தக் கருத்து 20.4.60 'நம்நாடு' இதழில் வெளிவந்தது)

வடக்கெல்லை வெற்றி விழா தணிகையிலும் சென்னையிலும் மட்டுமின்றி, தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களிலும் நடைபெற்றது. தணிகை தாலுகாவில் கிராமந்தோறும் விடுதலை பெற்ற மக்களால் கொண்டாடப் பெற்றது. ஆம்; தமிழினத்தின் தேசிய விழாவாகச் செய்து விட்டனர் தமிழ் மக்கள்.

கவிஞரின் வாழ்த்து!

தேசியக் கவி நாமக்கல் வெ.இராமலிங்கம் பிள்ளையவர்கள், கவிதைகள் பல படைத்து, என்னையும் எனது கழகத்தையும் பெருமைப்படுத்தினார். அவற்றுள் ஒரு கவிதை வருமாறு:

''தமிழர்களின் தனித்தெய்வம் முருகன் கோயில்
தலமாகும் திருத்தணியைத் தமிழ்நாட் டாரின்
அமைதிகெட ஆந்திரத்தில் சேர்த்தார் என்ற
அநியாயம் அதையெதிர்த்து அறப்போர் செய்து
நமதுடைமை திருத்தணியை நமக்கே மீட்ட
நற்பணியால் பெரும்புகழுக் குரிய ராகும்
தமிழரசுக் கழகத்தின் தொண்ட ரோடும்
தலைவர்சிவ ஞானமவர் தழைத்து வாழ்க!''

தணிகையை மீட்பதற்கு யான் நடத்திய போராட்டங்களி லெல்லாம் கலந்து இன்னல்களையும் ஏச்சுகளையும் ஏற்று, எனக்கு வெற்றி தேடித் தந்த தமிழரசுக் கழகத் தோழர்களுக்கும் வடக்கெல்லைத் தமிழர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தணிகைமலை முருகன் கோயில் இன்று புதுவாழ்வு பெற்று வருகிறது. தமிழகத்தோடு சேர்ந்த பின்னர் தணிகைப் பொது மக்களும் பொருளாதாரத் துறையில் வியக்கத்தக்க வகையில் முன்னேறி வருகின்றனர். அதுதானே நான் விரும்பியது!

ஆக்கவழிப் பணிகள்

எனது வாழ்க்கைப் போராட்டமயமானதுதான் என்றாலும், அதற்கிடையே ஆக்கவழிப் பணிகளிலும் நான் பங்கு பெற்று வந்திருக்கிறேன். போராட்டங்களில் நான் ஈடுபட்டது என் விருப்பத்தால் அல்ல. சந்தர்ப்பம் நிர்ப்பந்தித்ததனால்தான். ஆனால், ஆக்கவழிப் பணிகளை நானே விரும்பி மேற்கொண்டேன். உண்மையான காந்தியாவதியொருவர் போராட்டங்களை விரும்பி ஏற்கமாட்டார். சந்தர்ப்பம் நிர்ப்பந்திக்கும் போதும், அதனைத் தவிர்க்க முயன்று முடியாதபோதுதான் போராட்டத்தில் ஈடுபடுவார். காந்தியவாதியான எனது நிலையும் அதுதான்!

கொடியை மாற்றினேன்!

நாடு சுதந்திரம் பெற்றதன் விளைவாக, சென்னை மாநகராட்சிக் கொடியிலிருந்த பிரிட்டிஷ் சின்னங்களான இரட்டைச் சிங்கங்களை அகற்றி, வேறு சின்னங்களைச் சேர்க்க ஆலோசனை கூறுமாறு அப்போதைய சென்னை மாநில அரசு சென்னை மாநகராட்சியைக் கேட்டுக் கொண்டது. இந்த மாற்றம் பற்றி ஆய்ந்து பரிந்துரை தர மாநகராட்சியிலிருந்த கட்சிகளின் தலைவர்கள், நிரந்தரக் குழுக்களின் தலைவர்கள் ஆகியவர்கள் கொண்ட தனிக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவில் மாநகராட்சிக் கல்வி நிரந்தரக் குழுவின் தலைவன் என்ற முறையில் நானும் இடம் பெற்றேன்.

மாநகராட்சியின் பழைய — பிரிட்டிஷ் காலத்து — கொடியில் சென்னை நகரம் மீனவர் நிறைந்த கடற்கரைப் பிரதேசம் என்பதைக் காட்டுவதற்காகப் பாய்மரப் படகும் மீனும் சேர்க்கப்பட்டிருந்தன. பாண்டி வேந்தர் சின்னமாகிய மீன் ஏற்கனவே மாநகராட்சிக் கொடியில் இடம்பெற்று விட்டதனால், சேர — சோழ மன்னர்களின் வில்லையும் புலியையும்

புதிதாகச் சேர்த்து தமிழரசுக் கொடியாக்கிவிட விரும்பினேன். இந்த மாறுதலை நானே ஒரு தீர்மான வடிவத்தில் முன்மொழிந் தேன். தனிக் குழுவில் உத்தியோக முறையில் அங்கம் பெற்றி ருந்த மாநகராட்சித் தலைமைப் பொறியாளர் திரு. மீரான் அவர்கள் எனது தீர்மானத்தை வழிமொழிந்தார். சிறு எதிர்ப்புக் குப்பின் அது ஒரு மனதுடன் நிறைவேற்றப்பட்டது.

தனிக்குழுவின் பரிந்துரைக்குச் சென்னை மாநில அரசின் உள்ளாட்சித் துறையும் அங்கீகாரமளித்தது. அதன் பின்னர், மாநகராட்சிக் கவுன்சில் கூட்டத்திலும் ஏற்கப்பட்டு, புதிய கொடி நடைமுறைக்கு வந்தது. தமிழ் மூவேந்தர் சின்னம் பொறித்த புதிய கொடி முதன் முதலாகச் சென்னை ரிப்பன் கட்டிடத்தில் பறக்கவிடப்பட்ட நேரத்திலே, அந்த அரிய சாதனைக்குக் காரணமானவன் என்ற முறையில் மாநகராட்சி மேயர், ஆணையர் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆகியோ ரால் நான் பாராட்டப்பட்டேன்.

ஆந்திரர்கள் அச்சம்!

சென்னை மாநகராட்சியில் 1952 முதல் 1955 வரை தொடர்ந்து மூன்றாண்டுக் காலம் கல்விக் குழுவின் அங்கத்தின ராகவும், அந்த மூன்றாண்டிலே முதலாண்டில் அக்குழுவின் தலைவனாகவும் இருந்து நகரக் குழந்தைகளின் கல்வி நலன் கருதித் தொண்டாற்றும் பேற்றினைப் பெற்றேன்.

நான் கல்விக் குழுவின் தலைவனானதும், மாநகராட்சி யிலிருந்த — தெலுங்கை வீட்டு மொழியாகக் கொண்ட — உறுப்பினரிலே 'ஆந்திர' மனப்பான்மையுடைய சிலர், நான் தெலுங்கு மொழிப் பயிற்சியையே அழித்துவிடுவேன் என்று அஞ்சி, அப்போது மாநில அரசின் முதல் அமைச்சராக இருந்த ராஜாஜி அவர்களை அணுகி, அபயக்குரல் கொடுத்தனர். அந்தத் தெலுங்கர்களின் பார்வையிலே நான் தமிழ் வெறியனாகக் காட்சியளித்தேன். அத்துடனன்றி, பிற மொழிகளை — குறிப் பாக, தெலுங்கு மொழியைத் துவேஷிப்பவனாகவும் அவர்கள் என்னைக் கருதினர். இது அவர்களுடைய அறியாமை! தனது

தாய் மொழியிடத்து உண்மையிலேயே பற்று செலுத்தும் ஒருவர் பிறருடைய தாய்மொழிப் பற்றையும் மதிப்பவராகவே இருப் பார் — இருக்கவும் வேண்டும். எனது நிலையும் அதுதான்.

என்னை நன்கு அறிந்த ராஜாஜி அவர்கள், தம்மிடம் அபயம் புகுந்த தெலுங்கர்களை நோக்கி,

''நீங்கள் கிராமணியாரைச் சரியாகப் புரிந்து கொள் ளாமல் அஞ்சுகிறீர்கள். என்னிடம் வந்திருக்கவே தேவை யில்லை. அவரையே அணுகி, தெலுங்கை வீட்டு மொழியா கக் கொண்ட குழந்தைகள் தெலுங்கு மொழியிலே கல்வி பயில்வதற்குள்ள வசதியைக் காப்பாற்றுமாறும், மேலும் வசதிகள் தேவைப்பட்டால் செய்து தருமாறும் கேளுங்கள். அவரே செய்து தருவார்!''

என்று உறுதியாகக் கூறினார். அப்போதைய கல்வி அமைச்சர் திரு.சி.சு. அவர்களும் இதேபோன்று அந்தத் தெலுங்கர்களிடம் கூறியதாக அறிந்தேன்.

உண்மையில் நான் கல்விக் குழுவின் தலைவராக இருந்த காலத்தில், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை செலுத்தியதோடு, பிற மொழிகளைப் பேசும் குழந்தைகள் தம்தம் தாய் மொழியிலே கல்வி பயிலவும் வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுத்தேன். தொடக்கத்தில் என்னை ஐயுற்ற தெலுங்கர்கள், நாளடைவில் அனுபவத்தில் என்னைப் புரிந்து கொண்டு மனமுவந்து பாராட்டினர்.

ஹையர்கிரேடை ஒழித்தேன்!

நான் கல்விக் குழுவின் தலைவனாக இருந்தபோது, மாநக ராட்சியின் கல்வி முறையில் பல மாறுதல்களைச் செய்தேன் — குறிப்பாக, ஹையர்கிரேடு ஆசிரியர்கள் நியமனத்தை அடியோடு நிறுத்திவிட்டு, செகண்டரி கிரேடு ஆசிரியர்களையே சென்னை மாநகராட்சியின் ஆரம்பப் பள்ளிகளுக்கு நியமிக்க ஏற்பாடு செய்தேன். வேலையிலுள்ள ஹையர் கிரேடு ஆசிரியர் களில் எவரையும் வீட்டுக்கு அனுப்பாதபடி இந்த மாறுதலைச்

செயல்படுத்த வேண்டுமென்றும் திட்டவட்டமாகக் கூறினேன். இந்த மாறுதலை அரசு அப்போது ஏற்றுக் கொண்டதோடு, பிற்காலத்தில் மாநில முழுவதிலுமுள்ள ஆரம்பப் பள்ளிகள் அனைத்திலுமே அமுல் நடத்தியது. இதனால், ஹையர் கிரேடு ஆசிரியப் பயிற்சியையே அரசு கைவிட்டுவிட்டது.

மாநகராட்சியின் ஆரம்பப் பள்ளிகளுக்கு ஆண்களைவிடவும் பெண்களையே அதிக அளவில் ஆசிரியர்களாக நியமிக்க ஏற்பாடு செய்தேன். இன்று சென்னை மாநகராட்சி ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கையில் நான்கில் மூன்று சதவிகிதத்தினர் பெண்களாகவே இருக்கின்றனர் என்று அறிகிறேன். ஆனால், இந்த மாறுதலுக்கு நான்தான் காரணமென்பது பலருக்குத் தெரியாது.

1953-ஆம் ஆண்டு வரை சென்னை மாநகராட்சியின் ஆரம்பப் பள்ளிகளிலே படித்த குழந்தைகளை அவரவர் வீடுகளிலிருந்து பள்ளிகளுக்கு அழைத்து வருவதற்கும், திரும்பவும் வீடுகளுக்குக் கொண்டு போய் விடுவதற்கும் ‘ஆயாக்கள்’ இருந்து வந்தனர். மாநகராட்சிக் கல்வித் துறைக்கென ஆண்டு தோறும் செலவிட்டு வந்த 32 லட்சத்திலே, ஒரு லட்ச ரூபாய் இந்த ‘ஆயாக்களு’க்குச் சம்பளமாக வழங்கப்பட்டு வந்தது.

‘ஆயாக்கள்’ பணி ரத்து!

நகரில் ஆரம்பப் பள்ளிகள் மிகவும் குறைவாக இருந்த காலத்திலே — வசதியான குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகளே கல்வி பயில முன் வந்த நாட்களிலே — தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றுவிப்பதில் பெற்றோர்கள் போதிய அக்கறை காட்டாத நிலையிலே இந்த ஆயாமார்கள் தேவைப்பட்டனர் போலும்! ஆனால், நான் கல்விக் குழுவின் தலைவனாக இருந்த காலத்தில் ஒவ்வொரு வட்டத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிகள் இருந்தன. அதனால், குழந்தைகள் வெகுதூரம் நடந்து செல்ல வேண்டிய நிலை இல்லை. மற்றும், அப்போது பணிபுரிந்து வந்த ஆயாக்கள், அவ்வளவு பிள்ளைகளையும் அழைத்து வருவதற்குத் தேவைப்படும் எண்ணிக்கை

யிலும் இருக்கவில்லை. அவ்வளவு பிள்ளைகளையும் அழைத்து வருவதற்குத் தேவைப்படும் எண்ணிக்கையில் ஆயாக்களை நியமிப்பதும் சாத்தியமாக இல்லை. இந்த நிலையில் 'ஆயாக் கள்' நியமனத்தையே அடியோடு கைவிட கல்விக் குழுவில் முடிவெடுக்கச் செய்தேன். அப்போது வேலையில் இருந்த ஆயாக்களில் எவரையும் வீட்டுக்கு அனுப்பாத படியும் பாது காத்தேன். இதனால் மாநகராட்சிக் கல்வித் துறையின் செலவில் ஆண்டுதோறும் ஒரு லட்ச ரூபாய் குறைக்கப்பட்டது.

காந்தியடிகள் வகுத்த ஆதாரக் கல்வி முறையில் எனக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. என் பெண் குழந்தைகளிரண்டையும் ஆதாரக் கல்வி பயிற்றுவிக்கும் பள்ளியில்தான் படிக்க வைத் தேன். கல்விக் குழுவின் தலைவனாக நான் வருவதற்கு முன்பு. மாநகராட்சியின் பள்ளிகளிலே நான்கில் மட்டுமே ஆதாரக் கல்விமுறை அமுலிலிருந்தது. ஆரம்பப் பள்ளிகளில் புத்தகம் இல்லாமலே மொழியும், கணக்கும் பயிற்றுவிப்பது; கல்விக் கான நேரத்தைக் குறைத்து, கையைப் பயன்படுத்தித் தொழில் செய்யும் — அதாவது நூல் நூற்பது போன்ற தொழிலைப் பயிற்றுவிப்பது ''ஆதாரக் கல்வி முறை'' எனப்பட்டது.

நாடு விடுதலை பெற்ற பின்னர் ஆரம்பப் பள்ளிகள் அனைத்திலுமே ஆதாரக் கல்விமுறை நடைமுறைக்கு வர வேண்டுமென்று காந்தியடிகள் விரும்பினார் — வருமென்றும் நம்பினார். ஆனால், நாடு விடுதலை பெற்ற ஆறு மாதங்களுக் குள்ளாகவே அடிகள் கொல்லப்பட்டு விட்டதால், அவரது ஆதாரக் கல்வி முறையை அமுல் நடத்த காங்கிரஸ் ஆட்சி ஆர்வங் காட்டவில்லை. ஆயினும், காந்தியடிகளின் ஆன்மா வுக்குத் துரோகஞ் செய்யத் துணிவில்லாமல், இங்குமங்குமாகச் சில பள்ளிகளில் மட்டும் அந்தத் திட்டம் அமுல் நடத்தப்பட்டு வந்தது. அந்த வகையில் மாநகராட்சியின் ஆரம்பப் பள்ளி களிலே நான்கில் மட்டுமே ஆதாரக் கல்வி முறை அமுலிலிருந் தது. அந்தப் பள்ளிகளின் எண்ணிக்கையை எட்டாக உயர்த்து மாறு 1956-இல் பள்ளிக் கல்வி இயக்குநர் அனுப்பியிருந்த ஆலோசனையை ஏற்க சென்னை மாநகராட்சிக் கவுன்சில் பெரும்பாலான வாக்குகளால் மறுத்துவிட்டது. இது, நான் கல்விக் குழுவின் தலைவனாக வருவதற்கு முன்பு நிகழ்ந்தது.

ஆதாரக் கல்வியில் மாறுதல்

நான் கல்விக் குழுவின் தலைவனான பின்னர் பள்ளிக் கல்வி இயக்குநர், தமது பழைய ஆலோசனையை — முன்னர் மாநகராட்சிக் கவுன்சில் ஏற்க மறுத்துவிட்ட திட்டத்தை — திரும்பவும் அனுப்பி வைத்தார். அதிலே ''காந்தியக் கல்வி முறையில் நம்பிக்கையுடையவரான திரு.ம.பொ.சிவஞானம் அவர்கள் கல்விக் குழுவின் தலைவராக வந்துள்ளதால், அரசின் ஆலோசனை ஏற்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது'' என இயக்குநர் குறிப்பிட்டிருந்தது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

மொழிப் பாடத்தை மட்டும் புத்தகத்தின் மூலம் போதிக்க அனுமதித்தால், ஆதாரப் பள்ளிகளின் எண்ணிக்கையைக் கூட்ட இசைவதாகக் கல்விக் குழுவின் மூலம் பள்ளி இயக்குநருக்கு அறிவித்தேன். அவர், ''தாங்கள் கோரும் மாறுதல் காந்தியடிகளின் ஆதாரக் கல்வி முறையையே திருத்தி விடுவதாகிறதே'' என்று பதிலளித்துத் தன் வழிக்கு என்னை இழுக்க முயன்றார்.

நான் ''காந்தியடிகள் திட்டம் சமுதாயம் முழுவதிலும் அமுல் நடத்தப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டது. ஆனால், அப்படி நடைபெறவில்லை. பல பள்ளிகளில் மெக்காலே கல்வி முறைப்படியும், மிகச் சில பள்ளிகளில் மட்டும் ஆதாரக் கல்வி முறைப்படியும், பிள்ளைகளுக்குக் கல்வி போதிப்பதும், இந்த இரட்டை முறைக்குக் காலவரம்பு காட்டாததும், காந்தியடிகள் கருத்துவழி ஆதாரக் கல்வித் திட்டத்தை அமுல் நடத்துவதாகாதே'' என்று பதிலளித்தேன்.

எனது வற்புறுத்தலின் விளைவாக, ஆதாரக் கல்வி முறைப் பள்ளிகளிலும் மொழிப் பாடத்தை மட்டும் புத்தகத்தின் மூலம் போதிக்க பள்ளிக் கல்வி இயக்குநர் இசைவு தெரிவித்தார். இதனைச் சென்னை நகரில் மட்டுமின்றி, மாநிலம் முழுவதிலும் அமுல் நடத்தினார். ஆனால், புத்தகத்தைப் பள்ளிக்கு வெளியே பயன்படுத்த பிள்ளைகள் அனுமதிக்கப்படவில்லை. என்னைப் பொறுத்தவரையில், காந்தியடிகள் வகுத்தபடி, பாரத நாட்டி

லுள்ள ஆரம்பப் பள்ளிகள் அனைத்திலுமே ஆதாரக் கல்வி முறை எவ்வித மாறுதலுமின்றி ஏககாலத்தில் அமுலுக்கு வருவதையே நான் விரும்புகிறேன்.

நூலகப் பணி

1953-ஆம் ஆண்டில் நான் சென்னை மாநகராட்சிக் கல்விக் குழுவின் தலைவனாக வந்ததையடுத்து, சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கும் தலைவனானேன். இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி, சென்னை மாநகராட்சியின் பொறுப்பிலிருந்த 73 நூலகங்களையும் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுவிடம் ஒப்புவிப்பதற்கான முயற்சிகளைக் கல்விக் குழுவின் சார்பில் மேற்கொண்டேன். கல்விக் குழுவிலும், நூலக ஆணைக் குழுவிலும் எனது முயற்சிக்கு ஒருமனதாக ஆதரவு கிடைத்தது. அப்போது மேயர் பதவியிலிருந்த திரு. எம்.ஏ. சிதம்பரம் அவர்கள் எனது முயற்சிக்கு மிகுந்த உற்சாகத்தோடு ஆதரவு தந்தார் என்பதனை நன்றி உணர்வோடு இங்கு நான் சொல்லியாக வேண்டும்.

நூலக ஆணைக் குழுவின் தலைவன் என்ற முறையில் எனக்கும், மாநகராட்சி ஆணையருக்குமிடையே ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அதிலே, எம்.ஏ. சிதம்பரம் அவர்களும் மேயர் என்ற வகையில் கையொப்பமிட்டார்.

இந்த உடன்படிக்கை மாநகராட்சிக் கவுன்சிலின் அங்கீகாரத்திற்குச் சென்றபோது, கவுன்சிலர்களிலே சிலர் கடுமையாக எதிர்த்தனர். அப்போது நானும் கடுமையான முறையில் அவர்களுக்குப் பதிலளித்துப் பேசினேன்.

''சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவுக்கு ஆண்டுதோறும் ரூ.4 இலட்சத்தை நூலக வரியாக மாநகராட்சியே வசூலித்துக் கொடுக்கிறது. அது செலவாக வழியில்லாமல் வங்கியில் தூங்குகிறது. அதே நேரத்தில் மாநகராட்சியின் பொது வருவாயிலிருந்து ரூ.80 ஆயிரத்தைக் கிளை நூலகங்களை நடத்துவதற்காகச் சென்னை மாநகராட்சி செலவழிக்கிறது. நகர மக்கள் நூலக நிர்வாகத்

திற்கெனத் தனி வரி செலுத்திவரும் நிலையில் அவர்கள் வேறு துறைகளின் நிர்வாகத்திற்கெனத் தரும் பொது வரியி லிருந்து ஒரு பெருந்தொகையை ஆண்டுதோறும் நூலகங்க ளுக்குச் செலவிடுவது சட்டவிரோதமானதாகும். எனது திட்டத்தை மாநகராட்சிக் கவுன்சில் ஏற்காவிட்டால், வரி கொடுப்பவன் என்ற முறையில் நான் நீதிமன்றத்திற்குப் போய் மாநகராட்சி மீது வழக்குத் தொடுக்கவும் தயார்''

என்று அறைகூவல் விட்டுப் பேசினேன். நீண்ட நேர விவாதத் திற்குப் பின்னர், மாநகராட்சிக் கவுன்சில் அங்கீகாரம் தந்தது. இதனால் மாநகராட்சியின் வருடாந்தர செலவில் ரூபாய் 80 ஆயிரம் மிச்சப்பட்டது.

அதன் பின்னரும் எனது முயற்சிக்கு ஒரு பெரிய தடை ஏற்பட்டது. அப்போது, பள்ளிக் கல்வியுள்ளிட்ட அரசு கல்வித் துறை முழுவதற்கும் ஒரே இயக்குநர் இருந்து வந்தார். அவரே நூலகத் துறைக்கும் இயக்குநராக இருந்தார். விதிமுறைப்படி, மாநகராட்சி ஆணையரும் நானும் செய்து கொண்ட உடன்படிக் கைக்கு அவரது அங்கீகாரம் தேவைப்பட்டது. அதனை விரை வில் பெறுவதற்கு நானே நேரில் சென்று அவரிடம் பேசினேன். என்ன காரணத்தாலோ, அவர் எனது முயற்சிக்கு ஆதரவாக இல்லை. அவர் தமது நிலையில் பிடிவாதம் காட்டினார். பின்னர், அப்போது கல்வித் துறையின் செயலாளராக இருந்த திரு. கிருஷ்ணசாமி அவர்களை அணுகினேன். அவர் எனது முயற்சியை மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றார். சென்னை நகரில் மட்டுமன்றி, சென்னை மாநிலம் முழுவதிலுமே நகராட்சி கள் நடத்திவரும் நூலகங்களை மாவட்ட நூலக ஆணைக் குழுக்களிடம் ஒப்புவித்து விடுமாறு ஆணை அனுப்புவதாகவும் கூறினார். அப்படியே செய்தார்.

அவருடைய உதவியினால் நூலகத் துறை இயக்குநரின் ஆதரவையும் ஒரே நாளில் பெற முடிந்தது. அதன்பின், மாநகராட்சியின் 73 கிளை நூலகங்கள் — அவற்றில் ஊழியம் புரிந்தவர்களோடு — சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவிடம் ஒப்புவிக்கப் பெற்றன. இதேபோன்று பிற மாவட்டங்

களிலும் நகரமன்றங்கள் நடத்தி வந்த நூலகங்கள் அந்தந்த மாவட்ட நூலக ஆணைக் குழுக்களிடம் ஒப்புவிக்கப்பட்டன.

நூலக இயக்கம் மாநிலம் முழுவதிலும் வளர்ச்சி பெற இந்தச் சாதனையைச் செய்ய முடிந்ததற்காக நான் பெருமிதம டைந்தேன். இந்த அரிய சாதனைக்காகச் சென்னை மாநகராட்சி, சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு ஆகியவற்றில் அங்கம் வகித்த என்னினும் மூத்தவர்களான சான்றோர் பலருடைய பாராட்டுதலைப் பெற்றேன்.

மாநகராட்சி நூலகங்களோடு சில கட்டிடங்களும் நூலக ஆணைக் குழுவிற்கு இலவசமாகக் கிடைத்தன. மாநகராட்சி யின் கிளை நூலகங்களைப் பெறாமல், புதிதாக நிலங்களை வாங்கி, பல லட்ச ரூபாய்களைச் செலவழித்துக் கட்டிடங்களைக் கட்டி, அவற்றில் கிளை நூலகங்களை நடத்தலாம் என்று எனக்கு யோசனை சொன்ன 'கனவான்களும்' உண்டு. அவர்களுடைய கருத்துக்கு நான் களங்கம் கற்பிக்கவில்லையென்றாலும், நூலகத் திற்கென மக்கள் தனியாக வரி கொடுக்கும்போது, பொது வரியிலிருந்தும் நூலகங்களை நகர மன்றங்கள் நடத்துவதனை நிர்வாக ஊழலாக, ஊதாரித்தனமாக நான் கருதினேன். அதனாற் றான், மாநகராட்சியிடமிருந்து நூலகங்களைப் பெறுவதிலே நான் பிடிவாதம் காட்டினேன்.

புறநகர் கனவு

1948-இல் நான் ஆல்டர்மேன் ஆனதும், சென்னை மாநக ராட்சியின் நிர்வாக அறிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் பங்கு கொண்டு முதன் முதலாகப் பேசியபோது, சென்னை நகரையடுத்தாற்போல் துணை நகரம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தி, அதற்கான காரணங்களையும் விளக்கமாகக் கூறினேன். எனது இந்தக் கருத்து, மாநகராட்சி யின் முதிய உறுப்பினர்களால் பெரிதும் பாராட்டப் பெற்றது. ஆனால், அப்போதிருந்த காங்கிரஸ் அரசு எனது கருத்தைச் செயல்படுத்த முன்வரவில்லை. தி.மு.க. அரசு சென்னை நகரைத் தென் திசையில் விரிவுபடுத்தி 'மறைமலைநகர்' என்ற பெயரில் புறநகர் அமைக்கப் போவதாக 1973-74-ஆம் ஆண் டுக்குரிய துணை பட்ஜெட்டில் அறிவித்தது.

கடற்கரை மேடை

சென்னை திருவல்லிக்கேணிக் கடற்கரையிலே பொதுக் கூட்டங்களும் கலை நிகழ்ச்சிகளும் நடத்துவதற்கான வசதி களுடன் ஒரு மேடை அமைக்க வேண்டுமென்று 1953-இல் சென்னை மாநகராட்சிக் கூட்டத்தில் ஆலோசனை கூறினேன். அப்போதைய மேயர் திரு.த. செங்கல்வராயனும், நிதி நிரந்தரக் குழுத் தலைவர் திரு.எம். இராதாகிருஷ்ணப் பிள்ளையும் எனது கருத்தை ஏற்றுக் கொண்டனர். அத்துடன், 1953-54-ஆம் ஆண்டின் மாநகராட்சி வரவு — செலவுத் திட்டத்திலே, கடற் கரை மேடைக்கென அடையாளத் தொகையாக ரூ.2,000 ஒதுக் கீடு செய்தனர். ரூ.20 ஆயிரம் செலவில் மேடை அமைக்கத் திட்டமிடப்பட்டதாக நினைவிருக்கிறது. ஆனால், அப்போ தைய முதல்வர் ராஜாஜியும், த.நா.கா. தலைவர் கு.காமராசரும் விரும்பாததால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

அப்போது, கடற்கரையிலே காங்கிரஸ் கட்சிக் கூட்டங் களைவிட, தி.க., தி.மு.க., கம்யூனிஸ்டு ஆகிய எதிர்க்கட்சி களின் கூட்டங்களே அதிகமாக நடந்து வந்தன. அதனால், காங்கிரஸ் தலைவர்கள் கடற்கரை மேடைத் திட்டத்தை எதிர்த் தனர். பின்னால் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் சீரணி மேடை கட்டப்பட்டது.

சென்னை மாநகராட்சிக் கல்விக் குழுவின் தலைவனாக நான் இருந்தபோது, மற்றொரு சிறந்த பணியையும் செய்தேன். திரு.நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் சென்னை மாநகராட்சி யில் கல்வி அதிகாரியாக இருந்தபோது, பள்ளிகளிலே ஏழைப் பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்திருந்தார். அதற்காக ஆண்டுதோறும் ரூ.2 லட்சம் செலவாகி வந்தது. அதனை 4 லட்சமாக உயர்த்த முயற்சி எடுத்தேன். ஆனால், நிதி நிரந்தரக் குழுவினர் எனது யோசனையை ஏற்கவில்லை. மாநகராட்சியின் நிதிப் பற்றாக்குறை ஒரு காரணமாகக் கூறப் பட்டது.

மாநகராட்சிக் கூட்டத்தில் 1953-54-ஆம் ஆண்டு பட் ஜெட் விவாதிக்கப்பட்டபோது, மதிய உணவுக்கான தொகையை

ரூ.2 லட்சத்திலிருந்து 4 லட்சமாக உயர்த்துமாறு திருத்தம் கொடுத்து, கடுமையாகப் போராடினேன். எனது திருத்தத்தைக் கவுன்சில் ஏற்றுக் கொண்டது.

சென்னைத் துறைமுகத்தைத் தெற்கு நோக்கி விரிவுபடுத்தத் திட்டமிட்டு, அதற்காக மத்திய அரசு முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே ரூ.4 கோடி ஒதுக்கியிருந்தது. ஆனால், தென் சென்னைக் கனவான்களில் சிலர் இந்தத் திட்டத்தை எதிர்த்தனர். அவர்கள் வடக்கு நோக்கி விரிவுபடுத்துவதை ஆதரித்தனர். துறைமுகம் தெற்கு நோக்கி விரிவுபடுத்தப்பட்டு வந்தால், தென் சென்னையின் அமைதியான சூழ்நிலை பாதிக்கப்பட்டுவிடக் கூடுமென்று அவர்கள் அஞ்சினர்.

வடக்கு நோக்கி விரிவுபடுத்தினால், இராயபுரம் வட்டத்தி லுள்ள ஆயிரக்கணக்கான வீடுகள் அகற்றப்பட வேண்டும்; அதற்காக, கோடிக்கணக்கான ரூபாய்கள் இழப்புத் தொகை தரவேண்டி வரும். அதனால் மத்திய அரசு, வடக்கு நோக்கி விரிவுபடுத்துவதை விரும்பவில்லை. தெற்கு நோக்கி விரிவு படுத்துவதை மாநகராட்சி விரும்பாவிட்டால், துறைமுக விஸ்த ரிப்புத் திட்டமே கைவிடப்படும் என்றும் மத்திய அரசு அறிவித்துவிட்டது.

இதுபற்றி சென்னை மாநில அரசு, மாநகராட்சியின் கருத் தறிய விரும்பியது. மாநகராட்சியில் விவாதம் நடந்தபோது, தெற்குத் திட்டத்தை எதிர்த்த கனவான்கள், தங்கள் விருப்பத் திற்கு வெற்றி தேடத் தீவிரமாக வேலை செய்தனர்.

நான், வடக்கு விஸ்தரிப்பை விரும்பவில்லை. அதனால், இராயபுரத்தில் வாழும் மக்களுக்கு நேரவிருக்கும் இன்னல் களை நினைத்துப் பார்த்தபோதெல்லாம் என் மனம் வேதனை யடைந்தது — குறிப்பாக, மீனவர் சமூகத்தினர்தான் அதிகமாகப் பாதிக்கப்படவிருந்தனராதலால், அவர்களைப் போல பிற்பட்ட சமூகத்தவன் என்ற முறையில் அவர்கள்பால் எனக்கு அனுதா பம் ஏற்பட்டது. நான், நீண்ட நெடுங்காலம் வட சென்னையில் வாழ்ந்தவனாதலால் அந்தப் பிரதேசத்து மக்களுக்கு நேரவி ருந்த இன்னலைக் களைவதனை எனது கடமையாகக்

கருதினேன். மற்றும், தெற்குத் திட்டம் ஏற்கப்படாவிட்டால், துறைமுக விஸ்தரிப்பே கைவிடப்படுமென்று மத்திய அரசு அறிவித்திருந்தது எனக்கு அச்சத்தைத் தந்தது. மத்திய அரசிட மிருந்து கிடைக்கும் 4 கோடி ரூபாயை நமது மாநிலம் இழப்ப தனை மாநிலச் சுயாட்சி கோரும் நான் எப்படி அனுமதிக்க முடியும்?

சென்னைத் துறைமுகத்தைத் தெற்கு நோக்கி விரிவு படுத் தும் மத்திய அரசின் திட்டத்தை நான் ஆதரித்தேன். வடக்கு நோக்கி விரிவுபடுத்த வேண்டுமென்ற மாற்றுத் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தேன். இதுபற்றி மாநகராட்சியில் விவாதிக் கப்பட்டபோது, நான் தெரிவித்த கருத்துகள் காரணமாக, தென் சென்னைக் கனவான்கள் சிலருடைய வெறுப்புக்கு ஆளானேன். மாநகராட்சி உறுப்பினர்களிலே நகர நலன் கருதும் பலர் எனக்குத் துணை நின்றனர். எங்கள் பெரு முயற்சி காரணமாக, தெற்கு நோக்கி விரிவுபடுத்தும் மத்திய அரசின் திட்டம் மாநகராட்சியால் ஏற்கப்பட்டது. பின்னர், அது நடைமுறைக்கும் வந்ததனை நாடறியும்.

பொதுவாக, சென்னை மாநகராட்சியிலே ஆல்டர்மேனாக வும் கல்விக் குழுவின் தலைவனாகவும் இருந்த காலத்திலே நகர மக்களின் நலனுக்கான ஆக்கவழிப் பணிகள் பலவற்றிலே பங்கு கொள்ள முடிந்ததை இன்று நினைத்தாலும் என் மனம் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர்

சென்னை மாநகராட்சிக்கு வெளியிலும் ஆக்கவழியில் நான் ஆற்றியுள்ள பணிகள் பலவாகும். அவற்றில், தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவனாக இருந்த காலம் எனது நினைவில் பசுமையாக இருக்கின்றது.

நான் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுமே சங்கத்தின் மாநாட்டைச் சென்னை நகரிலே நடத்தினேன். இதுபோன்ற மாநாடு எதிலும் கலந்து கொள்ளவோ, மாநாட்டை நடத்தும் நிர்வாகப் பொறுப்பினை ஏற்கவோ முன்வரும் வழக்கமில்லாதவர் என் அரிய நண்பர் 'குமுதம்' எஸ்.ஏ.பி. அண்ணாமலை. அவர் எனது வற்புறுத்தலுக்கிணங்க அந்த ஆண்டல் வரவேற்புக்குழுத் தலைவர் பொறுப்பை ஏற்று மாநாட்டை மிகவும் சிறப்பாக நடத்தி வைத்தார். இந்த மாநாடு முந்தைய மாநாடுகளை விடவும் அதிக அளவில் பொது மக்களுடைய கவனத்தைக் கவர்ந்தது. காரணம், இந்த மாநாட்டிலே ஆட்சிமொழி, பயிற்சி மொழிப் பிரச்சினைகளுக்கு நான் முக்கியத்துவம் தந்ததாகும்.

மாநாட்டுத் தலைமை உரையிலேயே மொழிப் பிரச்சினை பற்றி அழுத்தந்திருத்தமாக எனது கருத்தை வலியுறுத்தினேன்.

நான் எதிர்பாராத விதமாக அந்த நேரத்தில் சென்னை நகருக்கு வருகை தந்த சோவியத் யூனியன் கலாச்சாரக் குழுவும் எனது அழைப்புக்கிணங்க எழுத்தாளர் மாநாட்டில் கலந்து கொண்டது. அச்சுத் தொழிலாளியாக இருந்த நான் சுயமுயற்சியால் எழுத்தாளனாக வளர்ந்த செய்தியறிந்து சோவியத் யூனியன் கலாச்சாரக் குழுவின் தலைவர் எழுத்தாளர் மாநாட்டிலே என்னைப் பாராட்டிப் பேசினார். என்னைப் போன்றவர்களை வரவேற்று சிறப்புச் செய்ய சோவியத் யூனியன் விரும்புவதாகவும் மிகுந்த இதய எழுச்சியோடு அவர் குறிப்பிட்டார்.

ஆண்டுதோறும் முதுபெரும் எழுத்தாளர் இருவருக்குக் கேடயங்கள் வழங்குவது வழக்கம். நான் தலைமை வகித்த ஆண்டிலே கம்ப இராமாயணம் முழுவதற்கும் உரை எழுதி வெளியிட்ட திரு.வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியாருக்கும், சிறந்த ஆராய்ச்சியாளரான திரு.எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களுக்கும் கேடயங்கள் வழங்கப் பெற்றன.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவனாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டது மூதறிஞர் ராஜாஜிக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. அவராகவே வாழ்த்துச் செய்தி ஒன்றினை மாநாட்டிற்கு அனுப்பி வைத்தார். அது வருமாறு:

''தமிழ் எழுத்தாளர்களுக்குத் தலைவராக என்னுடைய நண்பர் சிவஞானம் அமைந்து இந்த ஆண்டு அலுவல்களை நடத்தப் போகிறார்கள். நல்ல எழுத்தும், நல்ல பண்பும் பெற்ற ஒருவர் தலைமை வகிக்க வருவது எழுத்தாளர்களுடைய அதிருஷ்டம். ஒரு மொழியின் இலக்கியம் நல்ல துறையை விட்டுத் தாழ்ந்த வழியில் சென்றால் மக்கள் கெட்டுப் போவது நிச்சயம். மக்களின் மனம் கெட்டால் வேறு எவ்வளவு இருந்தும் பயனில்லை. பத்திரிகை விளம்பரங்களும், சினிமாப் படங்களும், அரசியல் விஷயங்களும், எப்படி இருந்த போதிலும் தமிழில் வரும் கட்டுரைகளும், கவிதைகளும், பாட்டுகளும் தெய்வத்தை மனதில் வைத்து எழுதவேண்டும். உள்ளத்தில் தெய்வத்தை நிறுத்திக் கொண்டால்தான் நல்ல எழுத்து காகிதத்தின் மேல் ஏறும்.''

எனது தலைமையில் நடந்த தமிழ் எழுத்தாளர் மாநாடு ஆங்கில ஆதிக்கத்தினால் விளையும் கேடுகளைத் தமிழ் எழுத்தாளர்களை எலாம் உணரும்படி செய்தது. தமிழரசு இயக்கத்துக்கு வெளியே உள்ள எழுத்தாளர்களும் கழகத்தின் மொழிக் கொள்கையில் தங்களுக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கு எழுத்தாளர் மாநாடு பெரிதும் பயன்பட்டது.

கல்கத்தா மாநாடு

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் நடவடிக்கைகளில் தொடர்ந்து பங்கு கொள்ளலானேன். அந்த வகையில், 1957 டிசம்பர் கடைசி வாரத்தில் கல்கத்தா நகரில் நடைபெற்ற அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டிலே தமிழ் எழுத்தாளர் சங்கப் பிரதிநிதிக் குழுவோடு சென்று கலந்து கொண்டேன். மூன்று நாட்கள் நடைபெற்ற அந்த மாநாட்டிலே இறுதி நாளில் பிரதமர் ஜவகர்லால் நேரு கலந்து கொண்டு பேசினார். மத்திய கலாச் சாரத் துறை அமைச்சர் திரு. உமாயூன் கபீர் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து மாநாட்டை மிகவும் சிறப்பாக நடத்தி வைத்தார்.

முதல் நாள் மாநாட்டிலே மொழிப் பிரச்சினை பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. பிரபல நாவலாசிரியர் திரு. முல்க் ராஜ் ஆனந்த் என்பவர் தலைமை வகித்தார். பெரும்பாலும் இந்தியை இந்தியாவின் பொது மொழியாக்குவது பற்றித்தான் பேசப்பட்டது. தமிழ்நாட்டிலிருந்து சென்ற பிரதிநிதிகளின் சார்பாக முதல் நாள் கருத்தரங்கில் பேசுவதற்கு நான் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

வட இந்தியப் பிரதிநிதிகள் மிகப் பெரும்பாலோராக உள்ள — வடபுலத்திலேயே நடைபெறுகின்ற ஒரு மாநாட்டிலே இந்தித் திணிப்புக்கு எதிராகப் பேசவேண்டிய பொறுப்பை நான் மிகவும் துணிவோடுதான் ஏற்றுக் கொண்டேன். ஆயினும், உள்ளூர அச்சம் இருந்தது. எளிதில் உணர்ச்சி வயப்படக் கூடியவர்க ளான வட இந்தியப் பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் பேச விடாமல் என்னைத் தடுத்து விடுவார்களோ என்று கருதினேன்.

பத்து நிமிடப் பேச்சு

பத்து நிமிட நேரமே எனக்குத் தரப்பட்டது. அதிலேயே மொழி பெயர்ப்புக்கும் நான் நேரந் தரவேண்டியிருந்தது. டாக்டர் ந.சஞ்சீவியவர்கள் நான் தமிழில் பேசியதை வார்த் தைக்கு வார்த்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இந்திதான் இந்தியாவின் பொது மொழி என்பதைக் கொள்கை அளவில்

ஒப்புக் கொண்டுதான் பேசினேன். ஆனால், தமிழர் தாங்களா கவே விரும்பி இந்தி மொழியைப் படித்து, அதிலே பேசவும் எழுதவும் திறமை பெறும் வரை மத்தியில் ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டுமென்று அழுத்தந் திருத்தமாகக் கூறினேன்.

எனது பேச்சின்போது ஒரிசா, வங்கம், அசாம், ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்களின் பிரதிநிதிகள் நான் சொன்ன கருத்துகளை வரவேற்று அடிக்கடி கைத்தட்டி ஆரவாரித்தனர். இந்தி மொழி வழங்கும் பிரதிநிதிகள் இருந்த பகுதியிலிருந்து ஆரவாரம் எழவில்லை. ஆட்சேபணைக் குரலும் எழவில்லை.

அன்பர் ந.சஞ்சீவி, நான் எத்தகைய உணர்ச்சியுடன் பேசினேனோ அதே உணர்ச்சியுடன் மொழி பெயர்த்தார். பேசும் போது நான் காட்டும் அங்க பாவங்களைக்கூட அவர் அப்ப டியே பிரதிபலித்தார். மொழி பெயர்ப்பில் அவர் வெளிப்படுத் திய திறமையை மாநாட்டுப் பிரதிநிதிகளிலே பலர் பாராட்டினர்.

வட இந்தியப் பத்திரிகைகள் — குறிப்பாக, இந்திப் பத்திரிகைகள் நான் இந்தித் திணிப்புக்கு எதிராகப் பேசியிருந் தும் என் பேச்சை வருணனையோடு பிரசுரித்திருந்தன.

'யுகாந்தர்' என்னும் நாளேடு 'தென்னிந்தியாவின் குரல்' என்னும் தலைப்பிட்டு எனது பேச்சைப் பிரசுரித்திருந்தது. ''இந்துஸ்தான் ஸ்டாண்டர்ட்'' என்னும் ஆங்கில நாளேட்டில் மாநாடு பற்றி எழுதப்பட்ட விமர்சனத்திலே, நான் ஒருவன் மட்டுமே தாய் மொழியில் பேசி மாநாட்டினரைக் கவர்ந்தது மாநாட்டில் நிகழ்ந்த மிகப் பெரிய அற்புதமென்று குறிப்பிடப் பட்டிருந்தது.

'அமிர்த பஜார்' என்ற ஆங்கில நாளேடும் எனது பேச்சை மிகப் பெரிய தலைப்புகள் தந்து பிரசுரித்திருந்தது. ஆனால், தமிழ்நாட்டுப் பத்திரிகைகளிலே பூரண இருட்டடிப்பு!

''தமிழ்நாடு'' பெயர்ப் போராட்டம்

புதிய தமிழகம் படைக்கும் குறிக்கோளுடன் நான் நடத்திய போராட்டங்களிலே தலையாயது ''தமிழ்நாடு'' பெயர் கோரிக்கைப் போராட்டமேயாகும். தமிழ் வழங்கும் மாநிலத்திற்குத் ''தமிழ்நாடு'' என்று பெயரிடக் கோரி ஒரு போராட்டம் நடத்த வேண்டி நேர்ந்தது — அதையும், சுத்தத் தமிழரான திரு. காமராசர் ஆட்சிக்கு எதிராக நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இது எனக்கோ, தமிழினத்துக்கோ பெருமை தரக் கூடியதென்று நான் கருதவில்லை. உண்மையில், ஒரு போராட்டமின்றி அந்தக் கோரிக்கை வெற்றி பெறுவதையே நான் விரும்பினேன். அந்த நம்பிக்கையுடன் ஐந்தாண்டுக் காலம் பொறுமையைக் கடைப்பிடித்து வந்தேன். ஆனால், காங்கிரஸ் ஆட்சி காட்டிய தமிழுணர்ச்சியற்ற போக்கு எனக்கு வியப்பையும், வேதனையையும் அளித்தது. அதன் பின்னரே, போராட்டத்தைத் தொடங்குவதென்ற முடிவுக்கு வந்தேன்.

கோகலே மண்டபத்தில் மாநாடு

பெயர் மாற்றக் கோரிக்கைப் போராட்டத்திற்குத் தேதி நிர்ணயிக்கும் சிறப்பு மாநாட்டை 25.12.60-இல் சென்னை கோகலே மன்றத்தில் நடத்தினேன். அந்த மன்றத்திலே அன்று நான் கண்ட மக்கள் கூட்டத்தையும், போராட்ட உணர்ச்சியையும், அதற்கு முன்னும் பின்னும் கண்டதேயில்லை. காலை நேரத்தில் மாநாடு நடந்ததென்றாலும் தமிழர் கூட்டம் — இளந்தமிழர் படை வெள்ளம்போல் திரண்டிருந்தது.

மாநாட்டிலே 30.1.61-இல் காந்தியடிகள் அமரத்துவம் பெற்ற சர்வோதய நாளில் — சத்தியாக்கிரக ரீதியில் — 'தமிழ்நாடு' பெயர் போராட்டத்தைத் தொடங்குவதென்ற தீர்மானம் ஒரு மனதுடன் நிறைவேற்றப்பட்டது. அந்த நேரத்தில் கோகலே மன்றத்தில் எழுந்த ஆரவாரமும் வாழ்த்தொலியும்

அடங்க நெடுநேரம் ஆயிற்று. 55 வயதை அடைந்திருந்த நான் 25 வயது இளைஞனைப் போன்ற உணர்ச்சியைப் பெற்றேன்.

''தமிழ்நாடு'' பெயர் போராட்டத்திற்குத் தீர்மானம் நிறைவேறியதுமே போராட்டத்தின் முதல் நடவடிக்கையாக ஔவை தி.க. சண்முகம் அவர்கள் தமது சொந்தப் பொறுப்பில் போராட்ட நிதிக்கு ஆயிரம் ரூபாய் வழங்கினார். ஆம்; உணர்ச்சி வயப்பட்டிருந்த நிலையிலே தமது பொருளாதார சக்தியையும் மீறிய நிலையில் அவர் பொருளுதவி புரிந்தார்.

கோகலே மன்ற மாநாட்டிற்கும் போராட்டத் தேதிக்குமிடையே ஒரு மாத கால அவகாசம் இருந்தது. அந்தக் காலத்தில் போராட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வதிலே நான் ஈடுபட்டேன். தமிழ்நாட்டிலே தமிழரசுக் கழகம் வலுப்பெற்றிருந்த பகுதிகளுக்குச் சென்று சத்தியாக்கிரகப் படைக்கு ஆள் திரட்டினேன். நான் எதிர்பார்த்ததைவிடவும் அதிகமாக போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் மனப்பான்மை தமிழினத்தாரிடையே வளர்ந்தது. தமிழ்நாட்டிலுள்ள தமிழ் மன்றங்கள், சமூக சேவா ஸ்தாபனங்கள், ஸ்தல ஸ்தாபனங்கள் ஆகியவை 'தமிழ்நாடு' பெயர் கோரிக்கையை ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றின.

காங்கிரஸ் அரசும் சும்மா இருக்கவில்லை. சத்தியாக்கிரகத்தை ஒடுக்குவதற்கான முன்னேற்பாடுகளில் ஈடுபட்டது. 'தமிழ்நாடு' பெயர் கோரிக்கையை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றக் கூடாதென்றும், அப்படி நிறைவேற்றப்படும் ஊராட்சி மன்றம் அல்லது நகரமன்றம் கலைக்கப்படும் என்றும் ஸ்தல ஸ்தாபனங்களுக்குச் சுற்றறிக்கை அனுப்பியது. அந்தச் சுற்றிக்கைக்குப் பிறகும் ஊராட்சி மன்றங்களும், நகர மன்றங்களும் தமிழ்நாடு கோரிக்கையை ஆதரித்துத் தீர்மானம் போட்டன.

தமிழகக் கல்லூரி மாணவர்கள் மத்தியில் போராட்ட உணர்ச்சி அலைமோதியதென்று கூறுவேன். அநேக கல்லூரிகளில் தமிழ்நாடு பெயர்ப் போராட்டம் பற்றிப் பேச அழைக்கப்பட்டேன். போராட்டத்தின் அவசியத்தையும், நியாயத்தையும் தமிழின மக்களிடையே விளக்கிச் சொல்வதற்காகத் 'தமிழ்நாடு

பெயர் கோரிக்கை வாரம்' தமிழரசுக் கிளைக் கழகங்களால் மாநிலம் முழுவதிலும் கொண்டாடப்பட்டது. கழகப் பேச்சாளர் கள் கோஷ்டி கோஷ்டியாக நாடெங்கணும் சென்று கோரிக்கை வாரக் கூட்டங்களிலே போர் முரசு கொட்டினர்.

சோஷலிஸ்டுகளின் ஆதரவு

'தினமணி', 'மெயில்', 'இந்து' ஆகிய நாளேடுகள் பெயர் கோரிக்கைப் போராட்டத்தைக் கண்டனம் செய்து தலையங்கங் கள் தீட்டின. 'தினத்தந்தி', 'தமிழ்நாடு', 'ஆனந்தவிகடன்', 'குமுதம்', 'தினமலர்' ஆகிய ஏடுகள் போராட்டத்தை ஆதரித் துத் தலையங்கங்கள் எழுதின. கட்சி எதையும் சாராத முது பெரும் கலைஞரான பம்மல் சம்பந்த முதலியார் த.அ.க.வின் பெயர்ப் போராட்டத்தை ஆதரித்து அறிக்கை விட்டார்.

சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஸ்தாபன ரீதியில் ஆதரிக்க முன் வந்தது தமிழ்நாடு சோஷலிஸ்ட் கட்சி. அதன் செயற்குழுவில் த.அ.க.வுக்கு ஆதரவளிக்கும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. அகில இந்திய சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவர் டாக்டர் ராம்மனோகர் லோகியா பெயர்ப் போராட்டத்தை ஆதரிப்பதாகவும், அழைப்புக் கொடுத்தால் தாமும் சென்னை வந்து போராட்டத்தில் கலந்து கொள்வதாக வும் எனக்குத் தந்தி கொடுத்திருந்தார்.

'தமிழ்நாடு' பெயர் கோரிக்கைப் போராட்டத்தை ஒடுக்குவ தற்காக அவசியப்பட்டால் இராணுவத்தையும் கொடுத்து உதவத் தயார் என்று டில்லி அரசு சென்னை அரசுக்கு எழுதி யிருப்பதாக 'தினமலர்' டில்லி நிருபர் அனுப்பியிருந்த தகவல் அந்தப் பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

'தமிழ்நாடு' பெயர் கோரிக்கையைச் செயல்படுத்தும் பொறுப்பு அரசியல் சட்டம் 1ஆவது பாகம் விதி 3-2. பிரிவுப் படி மத்திய அரசினுடையதுதான். ஆனால், சம்பந்தப்பட்ட மாநில அரசின் சட்டப் பேரவை, மேலவையின் ஆதரவான கருத்து அறிந்த பின்னரே அத்தகைய பெயர் மாற்றத்திற்கு ஜனாதிபதி அனுமதி தரவேண்டும். தமிழ்நாடு பெயரைப்

பொறுத்தவரையில் மத்திய அரசு எதிராக எதையும் கூற வில்லை. பெயர் மாற்றத்திற்கு மாநில அரசு இசைவு தெரிவித் தால், மத்திய அரசு அதை நிறைவேற்றத் தயார் என்றும் மத்திய உள்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் கூறினார். தமிழக அரசுதான் அந்தக் கோரிக்கையை எதிர்த்தது. அதனால், தமிழரசுக் கழகம் மாநில அரசின் போக்கை எதிர்த்துத்தான் போராட் டத்திலீடுபட வேண்டியிருந்தது.

பிரஜா சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் திரு.பி.எஸ். சின்னதுரை அவர்கள், சரியாக ஐந்து மாதங்களுக்கு முன்பு 'தமிழ்நாடு' பெயர் கோரிக்கைத் தீர்மானம் ஒன்றைச் சட்டப் பேரவையில் பிரரேபித்திருந்தார். அந்தத் தீர்மானம் ஜனவரி 30-இல் சட்டப்பேரவையில் தற்செயலாக விவாதிக்கப்படவிருந் தது.

கோட்டையிலே...

ஜனவரி 30-ஆம் நாளன்று காலை 7.30 மணிக்கே அப்போது கழகப் பொதுச் செயலாளராக இருந்தவர் தலைமை யில் 23 பேர் கொண்ட தொண்டர் படையினர் கோட்டை நுழைவாயிலில் நின்று திட்டமிட்டபடி கோஷம் கொடுத்துக் கொண்டிருந்தனர். நான் கோட்டைக்கு எதிரேயுள்ள நடைபாதை யில் நின்ற வண்ணம் நிலைமையைக் கண்காணித்து வந்தேன். ஔவை தி.க. சண்முகம், கலைக்காவலர் எம்.ஏ. வேணு, திருவருட் செல்வர் ஏ.பி. நாகராசன் ஆகியோர் என்னுடன் இருந்தனர். எங்களைச் சூழ்ந்து கொண்டு ஆயிரக்கணக்கான பொது மக்கள் மிகுந்த எழுச்சியோடு ஆரவாரம் செய்த கொண் டிருந்தனர்.

போலீஸ் ஐ.ஜி. ஷெனாய், சென்னை போலீஸ் கமிஷனர் மகாதேவன் ஆகியோரும் கோட்டை வாயிலருகில் நின்ற வண் ணம் நிலைமையைக் கவனித்து வந்தனர். முன்னெச்சரிக்கை யுடன் ஆயுதந்தாங்கிய போலீஸ் படையினர் கோட்டைக்கு உள்ளேயும் வெளியேயும் வைக்கப்பட்டிருந்தனர். பத்திரிகை நிருபர்களும், காமிராக்காரர்களும் செய்திகளையும் காட்சி களையும் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்தனர். அரசு அலுவலர்

களும், ஆளுங்கட்சி உறுப்பினர்களில் பெரும்பாலோரும், அமைச்சர்களில் பலரும் பிரதான வாயில் வழியாகச் செல்லாமல் 'புறக்கடை' (பின்புறம்) வழியாகக் கோட்டைக்குள் நுழைந்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் கோட்டையின் பிரதான வாயில் வழியாகச் சென்றனர். அவர்கள், வழியில் இருபுறமும் நின்று கொண்டிருந்த தொண்டர்களுக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் போல, தங்கள் கைகளை ஆட்டி, அவர்களை உற்சாகப்படுத்திவிட்டுச் சென்றனர்.

சட்டமன்றம் கூடவிருந்த நேரத்திற்குச் சற்று முன்னர் முதலமைச்சர் திரு. கு. காமராசர் வந்தார். அவர் தாம் வழக்கமாக வரும் பெரிய மோட்டார் காரில் வராமல், அடையாளந் தெரியாமலிருப்பதற்காக, சின்னஞ்சிறிய பழைய கார் ஒன்றிலேறிக் கொண்டு வந்தார். அந்தக் கார் வழியிலுள்ள தொண்டர்களுக்கு விபத்தை விளைவிக்கும் வேகத்தில் கோட்டைக்குள் சென்றது.

கோட்டையின் கதவு மூடப்பட்டது

தொண்டர்கள் அந்தக் காரை அணுகி, முதல்வரைப் பார்த்துத் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தும் கோஷங்களை ஆவேசத்துடன் எழுப்பினர். அதுகண்டு ஆத்திரமுற்ற முதல்வர் காமராசர், தரக்குறைவான வார்த்தைகளைக் கூறி, தொண்டர்களை ஏசினார். ஆத்திரமடைந்த தொண்டர்கள் காரின் முன் படுத்து, அது கோட்டைக்குள் நுழைய முடியாதபடி ''சத்தியாக்கிரகம்'' செய்ய முயன்றனர். ஆனால், போலீசாரின் உதவியால் காமராசரின் கார் கோட்டைக்குள் சென்றுவிட்டது. உடனே கோட்டையின் தலைவாயில் கதவுகள் மூடப்பட்டன.

கோட்டையின் தலைவாயிற் கதவு மூடப்பட்டிருந்த நிலையில் உள்ளே சட்டமன்றத்தின் அன்றையக் கூட்டம் ஆரம்பமானது. கேள்வி நேரத்திற்குப் பின்னர், முறைப்படி உத்தியோகப் பற்றற்றவர் தீர்மானம் — அதாவது, பி.சோ. தலைவரின் 'தமிழ்நாடு' பெயர் கோரிக்கைத் தீர்மானம் விவாதத்திற்கு

எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால், முதல்வர் காமராசர், கோட்டை வாயிலில் நடந்த நிகழ்ச்சியால் — த.அ.க. தொண்டர்கள் தம்மை மறித்துக் கோஷங்கள் எழுப்பியதால் — ஆத்திரமடைந்தவராகி, 'தமிழ்நாடு' பெயர் தீர்மானத்தை விவா தத்திற்கு எடுத்துக் கொள்வதை விரும்பாதவரானார்.

சர்க்கார் கட்சித் தலைவர் சி.சுப்பிரமணியம் அவர்கள்,

> *''வெளியே தமிழரசுக் கழகம் சத்தியாக்கிரகம் நடத்து வதால், சூழ்நிலை சரியாக இல்லை. இந்த நிலையில் 'தமிழ்நாடு' பெயர் தீர்மானத்தின்மீது அரசு தனது நிலையை விளக்குவது சாத்தியமில்லை. மிரட்டலுக்கு அரசு பணிவதற்கில்லை. ஆகவே, பி.எஸ். சின்னதுரை யின் தீர்மானம், ஒன்று திரும்பப் பெறப்பட வேண்டும். இல்லையேல், அதுபற்றிய விவாதத்தை தேதி குறிப்பிடா மல் ஒத்திப் போட அவர் இணங்க வேண்டும்.''*

என்று பேசினார். திரு. சின்னதுரையும், மற்ற எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் சி.சு.வின் கருத்தை ஏற்காமல், எதிர்த்துப் பேசி னர். பின்னர், அமைச்சர் சி.சு. அவர்கள், தமது கருத்தை ஒரு தீர்மான வடிவில் பேரவையில் பிரரேபிக்க, அது பெரும்பா லான வாக்குகளால் நிறைவேற்றப் பெற்றது.

அரசின் போக்கு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு ஆத்திரத் தைத் தந்தது. அவர்கள், 'சட்டமன்றத்தில் இடம்பெறாத ஒரு கட்சி வெளியே நடத்தும் கிளர்ச்சிக்காக, சட்டமன்றத்தின் உரிமையைப் பறிப்பது ஜனநாயக விரோதமான செயல்' என்று கூட்டாக அறிக்கை வெளியிட்டுவிட்டு, சட்டமன்றத்திலிருந்து வெளியேறினர்.

சட்டமன்றமும் ஒத்தி வைக்கப்பட்டது

சட்டமன்றத்திலிருந்து வெளியேறிய எதிர்க்கட்சிகள், அன்று மட்டுமல்லாமல், தொடர்ந்து மூன்று நாட்கள் சட்டமன்றத் திற்குச் செல்லவில்லை. அதன்பின் சட்டமன்றக் கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்பட்டது. சட்டமன்ற அலுவல் ஆய்வுக் குழுவின்

முடிவை மதிக்க அரசு தவறிவிட்டதால், அந்தக் குழுவிலிருந்து எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவருமே விலகிவிட்டனர்.

சட்டமன்ற நிகழ்ச்சிகளால் 'தமிழ்நாடு' போராட்டம் அகில இந்திய ரீதியில் விளம்பரம் பெற்றது. தமிழ் மக்களிடையேயும் அதற்கு ஆதரவு அதிகரித்தது. சட்டமன்றம் ஒத்தி வைக்கப்பட்ட பின்னர், சத்தியாக்கிரகப் போர், சென்னைத் துறைமுகத்திற்கு எதிரிலுள்ள கலெக்டர் அலுவலகத்தின் முன்பு 9 நாட்கள் நடைபெற்றன. அதன் பின்னர், எழும்பூரிலுள்ள பிரதம மாகாண மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தின் முன் 4 நாட்கள் நடைபெற்றது.

''தமிழ்நாடு'' பெயர்ப் போராட்டத்தை மாவட்டங்களின் தலைநகரங்களில் மட்டுமே நடத்துவதென்று தமிழரசுக் கழகச் செயற்குழு முடிவு செய்தது. அதன்படி, சென்னை, காஞ்சி, வேலூர், கடலூர், திருச்சி, மதுரை, நெல்லை, நாகர்கோயில், சேலம், கோவை, நீலகிரி ஆகிய நகரங்களிலும்; தஞ்சை மாவட்டத்திற்காகக் குடந்தையிலும், இராமநாதபுரம் மாவட்டத் திற்காகக் காரைக்குடியிலும், செங்கற்பட்டிற்காகக் காஞ்சியிலும் போராட்டம் நடைபெற்றது.

உற்சாக மிகுதியால் கள்ளக்குறிச்சி, திருவரங்கம், சோழ வந்தான், திண்டுக்கல், திருவள்ளூர், விருத்தாசலம், வேதாரணி யம், பரமக்குடி, தூத்துக்குடி, திருவண்ணாமலை, பரமத்தி, திருப்பத்தூர் (வ.ஆ)., திருத்துறைப்பூண்டி, பழனி ஆகிய நகரங்களிலும் எனது அனுமதி பெற்றுச் சத்தியாக்கிரகம் நடத் தப் பெற்றது. இங்கெல்லாம் பல நூற்றுக்கணக்கானவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுக் கைதியாயினர்.

மதுரை நகரில் திருமதி வீரலட்சுமி உடையப்பா தமது கைக்குழந்தையுடன் போராட்டத்திலீடுபட்டுக் கைதியானார். சென்னை நகரில் வழக்கறிஞர் பட்சி. இராசகோபாலன், தாம் தொழில் புரியும் எழும்பூர் போலீஸ் நீதிமன்றத்தின் நீதிபதிகளை யும், வழக்கறிஞர்களையும் மறித்துச் சத்தியாக்கிரகம் செய்தார்.

கலைஞர்களும் கலந்தனர்

கலைஞர் ஔவை சண்முகம் அவர்கள், நாடக ஒப்பந்தங் களை ரத்து செய்துவிட்டு, சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார். நடிகர்கள் எம்.ஜி.ஆர்., எஸ்.எஸ். இராசேந்திரன் இருவரும் வந்திருந்து ஔவை தி.க.ச.வுக்கு மாலைகள் அணிவித்து, அவரை வழியனுப்பினர். கலைக்காவலர் எம்.ஏ. வேணு அவர் கள், படப்பிடிப்பைக் காலவரம்பின்றி நிறுத்தி வைத்துவிட்டு, அறப்போரில் ஈடுபட்டார். கலைஞர் ஏ.பி. நாகராசன், திரைப் படத் தொழிலுக்கு 'ஓய்வு' கொடுத்துவிட்டு, போராட்ட காலம் முழுவதிலும் என்னை நிழல்போல் பின்பற்றியதோடு, போராட் டத்திலும் ஈடுபட்டுக் கைதியானார்.

சென்னை நகரிலே நடந்த போரில் கு.சா. கிருஷ்ணமூர்த்தி, கு.மா. பாலசுப்பிரமணியம் ஆகிய புகழ்மிக்க திரைப்படக் கவிஞரிருவரும், 'அருட்பா அரசி' குருவாயூர் பொன்னம்மாள் என்ற பிரபல பாடகியாரும் பங்கு பெற்றனர்.

பதியிழக்கினும் பாலரையிழக்கினும் இனி தனக்குளதென நினைக்கும் கதியிழக்கினும் தமிழரசுக் கழகத்தை இழக்க விரும் பாத திருமதி. சரோஜினி நாராயணசாமி சென்னை நகரில் நடந்த சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறைப்பட்டார்.

வெளியூர்களில் கணவன் மனைவியராகப் பலர் அறப் போரில் கலந்தனர். 'தமிழ்நாடு' காணப் போராடுவதும் தாம்பத் திய வாழ்க்கையின் ஒரு பகுதிதான் என்பதைக் காட்டினர். அவர்களில் மதுரை உடையப்பா தம்பதிகள், குடந்தை நடராசன் தம்பதிகள் முக்கியமானவர்களாவர்.

சென்னை நகரில் 'தளபதிகளா'கப் பொறுப்பேற்றுக் கைதி யானவர்களிலே கவி கா.மு.ஷெரிப், புலவர் கீரன், கோ. கலிவரதன், உசிலை சோமநாதன், இ.வே. மணி, பி.ஏ., பி.எல்., காரைக்குடி மா. முத்தையா, பி.ஏ., பி.எல்., மதுரை சா. கலியாணசுந்தரம், பி.ஏ., பி.எல். ஆகியோர் முக்கியமான வர்களாவர்.

வியப்பென்னவென்றால் சென்னையிலும் சரி, நாடு முழுவதிலும் சரி, அரசு சத்தியாக்கிரகிகளைக் காலையில் கைது செய்து பகல் முழுவதும் காவல் நிலையத்தில் அடைத்து வைத்து, மாலையில் பொழுது சாய்ந்ததும் விடுதலை செய்து வந்ததாகும்.

இந்தக் கண்ணாமூச்சு விளையாட்டால் கிளர்ச்சி பிசுபிசுத்துப் போகும் என்று அரசு கருதியது.

அரசின் தந்திரத்தை முறியடிக்க எண்ணி, 'தமிழ்நாடு' பெயர்ப் போராட்டத்தின் இரண்டாவது முனையைத் தோற்றுவித்தேன். ஆம்; முதல் முனை, மாநில அரசு அலுவலகங்களின் முன்பு மறியல்; இரண்டாவது முனை மாநில அமைச்சர்கள் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுங்கால், அவர்கள் முன்பு கறுப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்துவது. முதல் முனை தொடங்கிய மூன்றாவது நாளிலேயே இரண்டாவது முனையைத் தொடங்கி வைத்தேன்.

தூத்துக்குடி, மதுரை முதலிய நகரங்களில் ஆர்ப்பாட்டம் செய்த தோழர்கள் சொல்லொணா இன்னல்களுக்காளாயினர். ஒரு ஊருக்கு அமைச்சர் வருமுன்னரே அவ்வூர் கழகத் தோழர்கள் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு, பல நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

தமிழ்நாடு முழுவதிலும் சுமார் 1700 பேர் வரை பெயர்ப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை புகுந்தனர். இந்நிலையில் பிரிட்டிஷ் அரசி எலிசபெத் அம்மையார் சென்னை நகருக்கு வருகை தர இருந்தார். அவருக்கு மகத்தான முறையில் வரவேற்பு ஊர்வலம் நடத்தப்படுமென்றும், அந்த ஊர்வலத்தில் அரசியாருடன் முதல்வர் காமராசரும் ஒரே காரில் செல்வாரென்றும் தமிழக அரசு அறிவித்தது.

தமிழரசுக் கழக மத்திய செயற்குழு கூடி, பிரிட்டிஷ் அரசியார் ஊர்வலத்தின்போதும் முதல்வர் காமராசருக்கெதிராகக் கறுப்புக் கொடி காட்டுவது பற்றி ஆலோசித்தது. உறுப்பினர்கள் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் விவாதித்தனர். இதுபற்றி இறுதி முடிவு செய்வதைச் செயற்குழு என் பொறுப்பில் விட்டது.

அரசியார் எதிரேயும் ஆர்ப்பாட்டமா?

கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தைத் தவிர்க்க அரசு சிறிய அளவில் சமரச சமிக்ஞை காட்டினாலும், அதனை ஏற்றுக் கொள்வதென்ற முடிவுடன் நான் இருந்தேன். காரணம், அயல் நாட்டு விருந்தினர் ஒருவர் முன்னே — பல லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் — நம்மவரான முதல்வர் காமராசரை அவமதிப்பதை நான் விரும்பாததேயாகும்.

இந்த நேரத்தில் தமிழக நிதியமைச்சர் மாண்புமிகு சி.சுப்பிரமணியம் அவர்கள், 10.2.61-இல் மதுரைப் பொதுக் கூட்டமொன்றில் சிறிது சமரச சமிக்ஞை காட்டும் வகையில் பேசியதாக 'தமிழ்நாடு' (10.2.61) பத்திரிகையில் செய்தி வெளியானது. அதன் ஒரு பகுதி வருமாறு:

> *''ராஜ்யத்தின் பெயரை எந்த நேரத்தில், எவ்வாறு மாற்றுவதென்பது அரசுக்குத் தெரியும். தகுந்த சமயத்தில் அரசு செய்ய வேண்டியதைச் செய்யும் என்று உறுதியளிக்கிறேன்.''*

திரு.சி.சு.வின் பேச்சில் கழகத்தின் கோரிக்கை தெளிவாக ஏற்கப்படவில்லையென்றாலும், ஏற்கப்பட்டுவிட்டது போன்ற எண்ணத்தை மக்களுக்கு ஏற்படுத்த முயன்று, அதிலே அவர் ஓரளவு வெற்றி பெற்றுவிட்டார்.

அதனால் 12.2.61-இல் சென்னை இராயப்பேட்டை இலக்குமிபுரத்தில் நடந்த கூட்டத்திலே, திரு.சி.சு.வுக்குப் பதிலளித்துப் பேசினேன். அது வருமாறு:

> *''ராஜ்யத்தின் பெயர் மாற்றத்தைக் கொள்கையளவில் அமைச்சரவை ஏற்றுக் கொண்டதாகத் தெளிவுபடுத்தினால், அறப்போரை நிறுத்திவிடத் தயார்.*
>
> *''நாளைக்கே பெயர் மாற்றம் வேண்டும் என்று நான் கேட்கவில்லை. பெயரை மாற்றக் காலமாகும் என்பதனை நான் அறிவேன். அரசு அலுவலகங்களின் நிர்வாகத்தில் 'சென்னை ராஜ்யம்' என்று வரும் இடங்களிலெல்லாம் 'தமிழ்நாடு' என்று குறிப்பிடுமாறு நான்கு வரிகளில்*

நாளையே நிதியமைச்சர் ஒரு சுற்றிக்கை விட்டால், அது 'தமிழ்நாடு' பெயர் கோரிக்கையைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டதாகும். பின் போராட்டத்தை நிறுத்துவது பற்றி யோசிக்கத் தயங்க மாட்டேன்.''

நிதியமைச்சரின் மதுரைப் பேச்சு பற்றிய எனது கருத்தை ஒரு கடிதம் மூலம் அவருக்கு அறிவித்தேன். அது வருமாறு:

அன்புடையீர், வணக்கம்.

10.2.61-இல் மதுரை நகர் திலகர் கட்டத் திடலில் — பொதுக் கூட்டத்தில் தாங்கள் நிகழ்த்திய சொற்பொழிவை நாளிதழிலே படித்தேன். அதில், ''தமிழ்நாடு'' பெயர்க் கிளர்ச்சியை நிறுத்திவிடுமாறு, தமிழரசுக் கழகத்திற்குத் தாங்கள் அன்பு கலந்த மொழிகளில் வேண்டுகோள் விடுத்திருப்பதை அதற்குரிய மதிப்புக் கொடுத்து பன்முறையும் கருத்தூன்றிப் படித்துப் பார்த்தேன்.

நல்லெண்ணத்துடனும், நட்புரிமையோடும் பிரச்சனையை அணுக முன் வந்ததற்காகத் தமிழரசுக் கழகத்தின் சார்பில் தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அதே நல்லெண்ணத்தோடும், நட்புணர்ச்சியோடும் நேற்று சென்னை இலக்குமிபுரம் இளைஞர் சங்கத்தில் தங்களுக்குப் பதிலளித்து நான் நிகழ்த்திய சொற்பொழிவின் பத்திரிகைக் குறிப்பை இத்துடன் இணைத்துள்ளேன். அதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் உறுதிப்படுத்துகிறேன். நன்றி.

சென்னை — ம.பொ.சிவஞானம்
13.2.61

திரு.சி.சு.வின் கடிதம்

நிதியமைச்சர் திரு.சி.சு. எனது கடிதத்திற்குத் தாமதமின்றிப் பதில் அனுப்பினார். அது, நீண்ட கடிதம். அதன் சில பகுதிகள் வருமாறு:

''தாங்கள் 13-ந் தேதியிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றேன். முதலமைச்சர் அவர்கள் சுற்றுப் பயணத்திலிருந்து நேற்றிரவுதான் திரும்பி வந்தார்கள். இன்று அவர்களிடமும் தங்கள் கடிதத்தைக் காண்பித்து, கலந்து ஆலோசித்த பின் இப்பதில் எழுதுகிறேன்.

''இவ்விஷயம் சட்டசபையில் இம்மாதக் கடைசியில் அநேகமாக 22, 23, 24 தேதிகளொன்றில் எடுத்துக் கொள்ளப்படலாம். இதைப் பற்றிய முடிவைச் சட்டசபையில் தெரிவிப்பதுதான் சரியான முறை. தனிப்பட்ட மந்திரிகளின் கருத்து ஒருபுறமிருக்க, சட்டசபைக்கு வெளியில் சர்க்காரின் முடிவைத் தெரிவிப்பது சட்டசபையை ஓரளவு அவமதிப்பதாகக் கூட இருக்கலாம். ஆகவே, சர்க்காரின் முடிவைத் தெரிந்து கொள்ள அடுத்த வாரம் வரை பொறுத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

''... இதற்கு மத்தியில் எவ்விதக் கிளர்ச்சிக்கும் அவசியமில்லை என்பதே எங்கள் கருத்து. சர்க்கார் தங்கள் கொள்கையை விளக்கிய பின் நிலைமையைப் பரிசீலனை செய்து பார்த்து, அக்கொள்கை தங்களுக்கோ, தமிழரசுக் கழகத்திற்கோ திருப்தி அளிக்கவில்லையென்றால், அதற்கு மேல் என்ன செய்வது என்பது பற்றி ஆராய்வதுதான் இச்சூழ்நிலையில் சரியான முடிவு என்பது எனது உறுதியான கருத்து.

''சர்க்காரும் தனது நிலையை நல்ல சூழ்நிலையில் விளக்குவதற்கும் இது உதவியாக இருக்கும். ஆகவே, கழகம் நடத்திவரும் கிளர்ச்சியை நிறுத்தி விடுவது நல்லது என்ற என் கருத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவ்வாறே தங்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

''நான் சொல்லுகின்ற யோசனையைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாதிருக்குமானால், இன்னொரு வேண்டுகோள் விடுப்பது அவசியமாகிறது.

''பிரிட்டிஷ் ராணி அம்மையார் நம் நகருக்கு 19, 20, 21 தேதிகளில் விஜயம் செய்கிறார்கள். அவர்கள் நம்

நகரில் இருக்கிற காலத்தில் எந்தவிதமான கிளர்ச்சி ஏற்பட்டாலும், அக்கிளர்ச்சி மந்திரிகளுக்கு எதிராகத்தான் செய்யப்படுகின்றது என்று சொல்லப்பட்டாலுங்கூட, நம் தமிழ் மரபிற்கே அது ஒரு இழுக்காகுமோ என நான் அஞ்சுகிறேன்.

''ஆகவே, எவ்வகையினும் மேலே கண்ட தேதிகளில் எந்தவிதமான கிளர்ச்சிகளும் இல்லாது பார்த்துக் கொள்வது தங்களுடைய பொறுப்பாக இருக்க வேண்டும். இதை நண்பன் என்ற முறையிலும் வலியுறுத்த விரும்புகிறேன்.

15.2.61

தங்கள்

(ஒப்பம்) **சி.சுப்பிரமணியம்**

அரசு பணிந்தது!

நிதியமைச்சரின் கடிதம், எனது கழகம் எதற்காகப் போராடியதோ அதனைக் கொள்கையளவில் ஏற்கிறது என்பதனை நான் உணர்ந்தேன். அதனால், பிரிட்டிஷ் அரசியார் வருகை தரும் நாட்களில் மட்டுமல்லாமல், சட்டப்பேரவையில் 'தமிழ்நாடு' பெயர்ப் பிரச்சினை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் வரை போராட்டத்தை நிறுத்தி வைக்க இசைந்து அறிக்கை வெளியிட்டேன்.

போராட்டம் நிறுத்தப்பட்ட 7 நாட்கள் கழித்து, நிதியமைச்சர் திரு.சி.சு. சட்டப்பேரவையில் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:

''தமிழ்நாடு'' என்று பெயர் வைப்பதில் எங்களுக்கு வெட்கமோ, அவமானமோ இல்லை. 'தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி' என்று முன்பே பெயர் வைத்தோம். அதை மாற்றவே இல்லை. தமிழின் வளர்ச்சி, தமிழ்நாட்டுப் பற்று ஆகிய விஷயத்தில் காங்கிரஸ்காரர்களுக்கு அக்கறைக் குறைவு எதுவும் கிடையாது.

''பல்வேறு பிரச்சினைகளைச் சிந்தித்துப் பார்த்து இவ்விஷயத்தில் அரசினர் ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

''மெட்ராஸ் ஸ்டேட்'' என்பதற்கு சென்னை ராஜ்யம் என்று தமிழில் எழுதி வருகிறோம். இனி தமிழில் எழுதும் போது ''சென்னை ராஜ்யம்'' என்பதற்குப் பதிலாக ''தமிழ் நாடு'' என்று எழுத வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

''அரசாங்க நிர்வாகக் கடிதப் போக்குவரத்தில் இனி 'தமிழ்நாடு' என்றுதான் எழுதப்படும்.

''நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் நம் ராஜ்யத்தின் பெயர் ''மெட்ராஸ்'' என்றுதான் இருக்கிறது. அதை மாற்ற வேண்டிய அவசியமில்லை. ராஜ்யத்துக்கு வெளியே உள்ளவர்களுக்கு எழுதும்போது மட்டுமே ''மெட்ராஸ்'' என்ற பெயர் உபயோகிக்கப்படும்.

''அரசினரின் இந்த முடிவை அசெம்பிளி ஏற்றுக் கொள்வது மட்டுமன்றி, தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். இனி, இது சம்பந்தமான கிளர்ச்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து நாடு செழிக்க எல்லோரும் பாடுபடுவார்கள் என்று நம்புகின்றேன்.''

அரசின் அறிக்கையும் அதன்மீது சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர்கள் வெளியிட்ட ஆதரவான கருத்துகளும், ஒருசேர செய்தி நிருபர்களால் என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. அப்போது நிருபர்களிடம் நான் தெரிவித்த கருத்து வருமாறு:

''அரசாங்கம் முழு அளவில் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்திருந்தால் என்னுடைய பாராட்டை அதற்குத் தெரிவித்திருப்பேன். என்றாலும், 'சென்னை ராஜ்யம்' என்பதை 'தமிழ்நாடு' என்று மாற்ற அரசாங்கம் ஒப்புக் கொண்டதைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். ஜனநாயக ரீதியில் மக்கள் நடத்தும் கிளர்ச்சி எப்போதும் தோல்வியடைவதில்லை. இந்த ராஜ்யத்தின் பெயரை மாற்ற வேண்டிய அவசியத்தை இப்போது அரசாங்கம் முதல் தடவையாக ஒப்புக் கொண்டிருக்கிறது. அதற்கு அடையாளமாக

இப்போது எடுத்திருக்கும் நடவடிக்கை என்னவென்றால், 'சென்னை ராஜ்யம்' என்ற பெயர் கைவிடப்பட்டிருக்கிறது.''

('தினமணி', 25.2.61 இதழில் வெளியானது)

பத்திரிகைகளின் பாராட்டு

தமிழக அரசின் பிரகடனமும், அதனை ஏற்று அறப்போரை நிறுத்துவதென்ற தமிழரசுக் கழகத்தின் முடிவும் பத்திரிகைகளால் பெரிதும் வரவேற்கப்பட்டன.

''தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கையை சென்னை அமைச்சரவை தீர்த்து வைத்த முறை பாராட்டத்தக்கதாகும். தமிழரசுக் கழகமும் தான் கோரியது கிடைத்து விட்டதெனத் திருப்தியடையலாம்.''

— 'மெயில்', 25.2.61

''தலைக்கு பாதி வெற்றி'' என்ற முறையில் உள்ளது இப்போது நமது சர்க்கார் செய்துள்ள முடிவு.

''சர்க்கார் செய்துள்ள முடிவு தமக்குக் கொள்கை அளவில் கிடைத்த வெற்றி என்று தமிழரசுக் கழகத் தலைவர் விடுத்துள்ள அறிக்கையும் பொருள் படைத்ததாகும்.''

— 'சு.மி', 25.2.61

''நிதி மந்திரியின் அறிக்கை பெயர்ப் போராட்டத்தில் தமிழரசுக் கழகத்திற்குக் கிடைத்த முதல் வெற்றியாகும். இதை ம.பொ.சி.யின் சொந்த வெற்றி என்றாலும் மிகையாகாது.

''தமிழரசுக் கழகத் தலைவர் திரு.ம.பொ.சிவஞானம் சர்க்கார் முடிவு பற்றித் தம் கருத்தை வெளியிடுகையில், ''இது 'வெற்றி' என்றால், ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிகளுக்கும், நமக்கு ஆதரவளித்த பத்திரிகைகளுக்கும், ஆர்வங்காட்டிய பொது மக்களுக்கும் அதிலே பங்கு உண்டு'' என்றார். அவர் அவையடக்கமாக இப்படிச் சொல்லியிருந்தாலும், இது தமிழரசுக் கழகத்தின் — அதன் தலைவர் ம.பொ.சி.யின் தனிப் பெரும் வெற்றி என்பதை யாரும் மறுக்க முடியாது.''

— 'நவமணி', 26.2.61

''தமிழ்நாடு பெயர் வைப்புப் போராட்டத்தை நடத்தி வருகிற தமிழரசுக் கழகத் தலைவர் திரு.ம.பொ.சிவஞானம் அவர்கள் மகத்தான வெற்றி பெற்றுவிட்டார். நிதி மந்திரி அவர்கள் திரு.ம.பொ.சியிடம் இன்று சரணாகதி அடைந்துள் ளார்.

''பிரிட்டிஷ் ராணியார் வருவதை முன்னிட்டாவது — பிப்ரவரி 19, 20, 21 தேதிகளில் மட்டுமாவது கிளர்ச்சியை நிறுத்துங்கள்' என்று நிதி மந்திரி சி.சுப்பிரமணியம் அவர்கள் திரு. ம.பொ.சி.யைக் கேட்டுக் கொண்டார்.

''திரு. ம.பொ.சி. கிளர்ச்சி ஆரம்பித்து விட்டதாலேயே விவாதிக்க முடியாது என்ற மந்திரியார், இன்று ம.பொ.சி. அவர்களையே கெஞ்சிக் கூத்தாட வேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டார்.''

— 'தனியரசு', 25.2.61

''கிளர்ச்சிக்குப் பணியமாட்டோம்'' என்று இறுமாப்போடு பேசிய மந்திரிகள் இன்று இறங்கி வந்து கோரிக்கையைப் பாதியளவுக்காவது ஒப்புக் கொள்ள நேர்ந்தது. அதிகாரமமதை தோற்றது! மக்களின் கிளர்ச்சி வென்றது! சட்டசபையில் எண் ணிக்கை பலத்தையும், வெளியே துப்பாக்கிப் பலத்தையுமே நம்பி ஆட்சி புரிய முடியாது. நியாயத்தை எதிர்த்து துப்பாக்கி வெற்றி பெற முடியாது என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.
''

— 'ஜனசக்தி', 26.2.61

மற்றும் தினமணி மதுரை 'தமிழ்நாடு', 'நம்நாடு', 'தினச் செய்தி' ஆகிய நாளேடுகளும்; 'ஆனந்தவிகடன்', 'குமுதம்' முதலிய வார ஏடுகளும் இப்பிரச்சினையில் அரசினரின் அறிவிப்பைத் தமிழரசுக் கழகத்தினருக்குக் கிடைத்த ஆரம்ப வெற்றியாக வருணித்து எழுதின.

சத்தியாக்கிரகம் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்திலே 'டைம்ஸ் ஆப் இந்தியா', 'பிரிபிரஸ் ஜர்னல்' ஆகிய வட இந்திய நாளேடுகள் போராட்டச் செய்திகளை நாள் தவறாமல் பிரசுரித்து வந்தன.

'டைம்ஸ் ஆப் இந்தியா' போராட்டத்தின் குறிக்கோளை மனநிறைவுடன் ஆதரித்துத் தலையங்கம் எழுதியிருந்தது. பிரீ பிரஸ் ஜர்னல் மட்டும என்னை 'கலகக்காரன்' என்று கண்டித் தது. ஆனால், என்னைப் பற்றிய அந்த ஏட்டின் கணேணோட்டம் தவறு என்று அதன் ஆசிரியப் பகுதியில் வாசகர்கள் எழுதிய கடிதங்களும் பிரசுரிக்கப் பெற்றன.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' (பம்பாய்) போராட்டச் செய்தி களை வெளியிட்டதென்றாலும், அதுபற்றித் தனது கருத்தை அது தெரிவிக்கவில்லை.

'லிங்க்' என்ற ஆங்கில வார ஏடு போராட்ட காலத்தில் வாரந்தோறும் போராட்டத்தை விமர்சித்து எழுதியும், 'கார்டூன் கள்' வெளியிட்டும் எனக்கு ஆதரவளித்தது.

நேருவுக்குத் தந்தியும் பதிலும்

''தமிழ்நாடு'' பெயர் கோரி அறப்போர் நடந்து கொண் டிருந்த போது — அதாவது 14.2.61-இல் பிரதமர் நேருவுக்கு நீண்ட அவசரத் தந்தியொன்றை அனுப்பினேன். அதிலே பெயர் மாற்றப் பிரச்சினையில் தலையிடுமாறு பிரதமரைக் கோரியிருந் தேன்.

நான் தந்தி கொடுத்த நாளிலேயே — அதாவது, எனது தந்தியைப் பார்த்ததுமே பண்புமிக்க பாரதப் பிரதமர் நேரு கடித மூலம் எனக்குப் பதில் அனுப்பினார். அந்த ஆங்கிலக் கடிதத் தின் மொழிபெயர்ப்பு வருமாறு:

புதுடில்லி

16 பிப்ரவரி — 1961

அன்பார்ந்த ஸ்ரீ. சிவஞானம்,

சென்னை ராஜ்யத்தின் பெயரை மாற்றக் கோரும் கிளர்ச்சி பற்றிய தங்கள் தந்தி இன்று கிடைத்தது.

கொள்கை அல்லது அவசரம் பற்றி அல்லாத ஒன்றின் மீது நடைபெறும் அத்தகைய கிளர்ச்சி குறித்து நான்

வியப்பும் திகைப்பும் அடைகிறேன். இப்பொருள் பற்றி எனக்கென்று ஒரு கருத்து இருந்தாலும் அதை நான் வெளிப்படுத்த விரும்பவில்லை. சென்னை ராஜ்யத்தின் மக்களும் அரசுமே பெயர் மாற்றம் பற்றி முடிவு செய்ய வேண்டும். அமைதியான ஒத்துழைப்பான வழியில் முடிவு செய்யப்பட வேண்டிய ஒரு பொருள் இது என்பது தெளிவு. இதற்காக ஒரு கிளர்ச்சி நடத்துவது என்பது தவறான வழியில் இப்பொருளை அணுகுவதும் மக்கள் மனதில் குழப்பத்தை உண்டு பண்ணுவதும் ஆகும்.

இத்தகைய ஒரு பிரச்சினையில் எவ்வாறு மத்திய அரசு தலையிடக் கூடும் என்பது எனக்கு முற்றிலும் தெளிவாகவில்லை.

நான் எப்போதும் மக்களைச் சந்தித்து எந்தப் பொருள் பற்றியும் விவாதிக்கத் தயார். ஆனால், வரும் சில நாட்களில் எனக்கு நாடாளுமன்ற வேலை ஏராளமாக உள்ளது. அதன்பின் காமன்வெல்த் நாடுகளின் தலைமை அமைச்சர்கள் மாநாடு ஒன்றில் கலந்துகொள்ள யான் இங்கிலாந்துக்குப் போக வேண்டி உள்ளது. ஆனால், இந்தப் பிரச்சினை என்னால் தீர்க்கப்பட வேண்டியது இல்லை — சென்னையிலேயே தீர்க்கப்பட வேண்டியது — என்பதைத் திரும்பவும் சொல்கிறேன். மேலும், ஒரு கிளர்ச்சி தேவைப்படும் வகையில் ஏன் இப்பொருள் ஒரு சர்ச்சைக்கு உரியதாய் மாற்றப் படுகிறது என்பதுதான் எனக்கு விளங்கவில்லை.

உங்கள் அன்புள்ள

ஜவகர்லால் நேரு

பிரதமர் கடிதத்தின் இறுதியிலுள்ள ''ஒரு கிளர்ச்சி தேவைப்படும் வகையில் ஏன் இந்தப் பொருள் ஒரு சர்ச்சைக்கு உரியதாக மாற்றப்படுகிறது என்பது எனக்கு விளங்கவில்லை'' என்ற வாசகம் தமிழக அரசின் பிடிவாதப் போக்கைச் சாடுவதாகும். பிரதமருடைய கடிதம் கிடைப்பதற்கு முந்திய நாளே தமிழக நிதியமைச்சருக்கும் எனக்குமிடையே ஒரு உடன்பாடு

ஏற்பட்டு விட்டதால், பிரதமர் நேரு காமன்வெல்த் மாநாட்டி லிருந்து திரும்பியதும் நான் அவரை அணுகவில்லை.

போரை நிறுத்தியதேன்?

சட்டமன்றத்திலே நிதியமைச்சர் பெயர் மாற்றம் பற்றி அரசின் சார்பில் விடுத்த அறிக்கையை ஏற்க மறுத்து அரசியல் சட்டத்தில் ''தமிழ்நாடு'' என்ற தமிழ்ப் பெயர் ஏறும்வரை நான் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியிருக்க முடியும். ஆயினும், நான் அதனை விரும்பவில்லை. 1962 பொதுத் தேர்தல் அப்போது நெருங்கிக் கொண்டிருந்தபடியால் ஆளுங்கட்சியான காங்கிரசைப் பலவீனப்படுத்த நான் விரும்பவில்லை. அதனால், பிரிவினை கோரிய தி.மு.க. வலுப்பெறக் கூடுமென்று அஞ்சி னேன்.

காங்கிரசிடம் இப்படி நான் பந்தபாசம் காட்டியது அந்நா ளில் என் கழகத் தோழர்களுக்கே பிடிக்கவில்லை. ஆயினும், நாட்டின் ஒருமைப்பாட்டிலே எனக்குள்ள உறுதிப்பாடு காரண மாக நான் 1962 பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெறுவதையே உள்ளூர விரும்பினேன்.

ஒரு கட்சியிலிருந்து ஒருவர் வெளியேற்றப்பட்டால், வெளியேற்றப்பட்டவர், வெளியேற்றிய கட்சியை அழித்தொ ழிக்க எதையும் செய்வதை — யாரோடும் சேருவதை நான் பார்த்து வருகிறனே. ஆயினும், அந்தப் பழிவாங்கும் மனப் பான்மையை என்னை வெளியேற்றிய காங்கிரஸ் விஷயத்தில் நான் காட்டியதேயில்லை. நானும் சாதாரண மனிதன்தான். எனக்கும் கோபதாபங்கள் உண்டு. ஆயினும், எனக்குள்ள நாட்டுப்பற்று அவ்வப்போது என் மனத்துள் எழும் கோபதாபங் களைத் தணிக்கை செய்து வருகிறது. அதனால், பெயர் மாற்றப் போராட்டத்தில் எனக்குக் கிடைத்த அரைகுறை வெற்றியோடு நான் ஆறுதல் அடைந்துவிட்டேன்.

அன்னையை இழந்தேன்

"தமிழ்நாடு" பெயர் கோரிப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த நேரத்திலே என்னை ஈன்றெடுத்த அன்னை சிவகாமியார் திடீரென்று நோயுற்றார். அவரைப் பெரிய மருத்து வமனையில் சேர்த்து, பல மணி நேரம் அவர் அருகிலிருந்து, அவரைப் பிழைக்க வைக்க முயன்றேன்.

மருத்துவர்கள் தங்கள் உத்தியோகக் கடமை — என்பால் தங்களுக்குள்ள நல்லெண்ணம் காரணமாக என் அன்னையைக் காப்பாற்றப் பெரிதும் முயன்றனர். அவர்கள் முயற்சி பயன்தரா மல் பிப்ரவரி 6ஆம் தேதியன்று அதிகாலையில் அன்னையார் காலமானார்.

அமைதியான மரணம்

அன்னையார் நோயுற்றுப் படுக்கையில் படுத்த 24 மணி நேரத்திற்குள் ஆவி துறந்தார். மரணாவஸ்தையின்றி அமைதி யாக அவரது வாழ்க்கை முடிந்தது. அவர், 10 மக்களைப் பெற்றும் வாழ்வாங்கு வாழக் கொடுத்து வைக்காத துரதிர்ஷ்ட சாலிதான் என்றாலும், மரணாவஸ்தையின்றி அமைதியாக ஆவி துறப்பதிலே அதிர்ஷ்டசாலியானார்!

மரணம் கொடியது; அதைவிடக் கொடியது, மரண அவஸ்தை! இதை உணர்ந்தே, "யானேதும் பிறப்பஞ்சேன்; இறப்பதனுக்கு என் கடவேன்" என்றார், மாணிக்கவாசகர்.

திருப்போரூர் சிதம்பர சுவாமிகள், தாம் பாடியுள்ள "திருப்போரூர் சந்நிதி முறை"யில்,

> *"நோயுற் றளராமல் நொந்துமனம் வாடாமல்*
> *பாயிற் கிடவாமல் பாவியேன் — காயத்தை*
> *ஓர்நொடிக்குள் நீக்கியெனை ஒண்போரூர் ஐயாநின்*
> *சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து"*

என்று முருகப் பெருமானை வேண்டினார்.

''மனிதன் இறைவனிடம் வேண்டிப் பெற வேண்டியது ஒன்று இருக்குமானால், அது, மரணமில்லாப் பெருவாழ்வு'' என்கிறார், வள்ளலார். அவர், அருளாளர், சாமான்யருக்கு அது சாத்தியமில்லையாதலால், நாம் வேண்டற்பாலது அமைதியான மரணத்தையே! நாள் கணக்கில் — வாரக் கணக்கில் — மாதக் கணக்கில் மரணப்படுக்கையில் கிடந்து அவதியுறுபவர்களைக் காணும்போதெல்லாம் எனக்கு சிதம்பர சுவாமிகளின் சந்நிதி முறைப் பாடல் நினைவுக்கு வருவதுண்டு.

அறிஞர் ராஜாஜி, அன்னையை இழந்த எனக்கு ஆறுதல் கூறி எழுதிய கடிதம் உண்மையிலேயே எனக்கு ஆறுதல் தருவதாக இருந்தது. அது வருமாறு:

அன்பும், வணக்கமும்.

பூஜைக்குரிய முதியவரும் அன்புக்குரிய தாயாரும் மறைந்துவிட்ட செய்தி பத்திரிகையில் பார்த்தேன்.

ஆறுதல் மொழிகள் என்ன எழுத முடியும்? சொல்ல வேண்டியதெல்லாம் சாஸ்திரங்களில் சொல்லியும் தினமும் படித்தும் வருகிறோம். ஆயினும், மனதில் ஏற்படும் துன்பம் பூவின் மணம்போல் அதைவிட்டு அகலாது. அகலவும் வேண்டியதில்லை.

எப்போதும் அன்புடன்
இராசகோபாலாச்சாரி

கண்ணீரால் எழுதிய கட்டுரை

என் அன்னையின் மறைவு குறித்து 'செங்கோல்' (12.2.61) இதழில் நான் எழுதிய இரங்கற் குறிப்பு வருமாறு:

''பிப்ரவரி 6-இல் இழக்கக் கூடாத — இழந்தால் திரும்பப் பெற முடியாத — ஒரு பொருளை என்னை ஈன்றெடுத்த அன்னையை இழந்துவிட்டேன்! இனி நான் தாயில்லாப் பிள்ளை! என்னை ''ஐயா'' என்று அழைத்துப் பெருமைப்படுத்த ஆயிரமாயிரம் இளைஞர்கள் காத்துக் கிடக்கிறார்கள். அது என்

பாக்கியம்! ஆனால், ''பையா'' என்று அழைத்துப் பெருமைப் படுத்தும் உரிமை என் அன்னை ஒருவருக்குத்தான் இருந்தது! அவரை இழந்துவிட்டேன்! இது என் துர்பாக்கியம்.

''எனக்கு என்ன வயதானாலும் அன்புடன் பாராட்டி வளர்த்த அன்னையின் பார்வையில நான் பையன்தானே! அன்னையின் பிரிவால் என் முதுமையை மறைத்திருந்த திரை விலகிவிட்டது!

''மறைந்த பெருமாட்டியார், எனக்கு அன்னை மட்டுமல்ல; அறிவூட்டிய ஆசிரியருமாவார்! இரண்டாவது வகுப்போடு பரங்கி மொழித் தொடர்புடைய பள்ளிப் படிப்புக்குக் ''கொள்ளி'' வைத்த ''நல்ல பிள்ளை'' நான்!

''பின்னர், அடுப்பங்கரையையே பள்ளியாகவும், அன்னையையே ஆசிரியராகவும் கொண்டு தாய்மொழியில் எழுத்தறிவு பயின்றேன். விரும்பிப் பயிலவில்லை. பால்நினைந் தூட்டும் தாயானதால் தம் எல்லையற்ற கருணையினால் தாமாகவே எனக்குத் தமிழ் அமுதூட்டினார் அன்னை. அதற்கு ''நன்றி'' செலுத்த வேண்டி பிப்ரவரி 6-இல் அவருக்கும் ''கொள்ளி'' வைத்துவிட்டேன்! குடியிருந்த வீட்டுக்குக் கொள்ளி வைத்துக் கொளுத்தும் கொடுமையைப் பல்லோர் முன்னிலையில் பயமின்றிச் செய்து முடித்துவிட்டு, வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என் மன வேதனையை யாரறிவார்!

''மணிமேகலையின் அட்சயப் பாத்திரத்தில் ஒரு பிடிச் சோற்றைத்தான் பிச்சையாகப் போட்டாள் ஆதிரை. அந்த ஒரு பிடிச் சோறு அள்ள அள்ளக் குறையாது பெருஞ் சோறாக வளர்ந்த அற்புதத்தை ''மணிமேகலை''க் காப்பியத்தில் படிக்கிறோம். அதுபோன்று, அன்னையிடம் நான் பெற்ற கல்விப் பிச்சை அற்பமாயினும், தாய் தந்த செல்வமாதலால், அது நாள்தோறும் வளர்ந்து கொண்டு வருகிறது. அதனை மேலும் மேலும் வளர்ப்பதுதான் என் அன்னையாருக்கு நான் செய்யும் சிறந்த ஞாபகார்த்தம்!

''தமிழைத் 'தாய் மொழி' என்பது என்னைப் பொறுத்த வரை உபசாரமல்ல; முழு உண்மை. யான் பெற்ற தமிழறிவு தாய் தந்த செல்வம்; அதனாலும் தமிழ் எனக்குத் தாய் மொழி! பிறந்தவர் இறப்பது உறுதி. 75 வயது வாழ்ந்து மறைந்த மூதாட்டியார் குறித்து வருந்துவதற்கு நியாயமில்லைதான்! ஆனால், அன்னையார் வாழ்வாங்கு வாழ நான் வாய்ப்பளிக்க வில்லையே என்பதை நினைந்து கண்ணீர் பெருக்குகின்றேன். அது, என் மனத்தில் ஆறாப் புண்ணாகிவிட்டது!

''பாரனைத்தும் பொய்யெனவே'' துறந்த பட்டினத்தார் தன் அன்னைக்கு ஈமக் கடன் செய்யத் தவறவில்லை. ஆனால், பிற கடன்களில் அவரும் தவறிழைத்திருக்க வேண்டும். அதனாற் றான், தன் குறையை நினைந்து ''அன்னை இட்ட தீ அடி வயிற்றிலே'' என்று பாடி, ஆற்றொணாப் பெருந்துயரால் அழு தார். அவர் வீடு பேற்றினைத் தேடியலைந்த 'வெறியர்'! அதனால் அன்னையின் நலனை ஆண்டவனிடமே ஒப்புவித்து விட்டார்! தேச விடுதலை வெறியனான எனது நிலையும் அதுதான்!

''ஏன்? இலட்சிய வெறியர்கள் எல்லோருமே இப்படித் தான்! அவர்கள் நாட்டிற்குத் தொண்டர்கள்! ஆனால், வீட் டிற்கு...! என் அன்னைக்கு நான் தேடி வைத்த ஒரே சிறப்பு அவருடைய இறுதி யாத்திரையில் நல்லோர் பலர் கலந்து கொண்டதுதான்! அவரது மறைவு குறித்துப் பல்லோர் அனு தாபம் தெரிவிப்பதுதான்!''

இலங்கையில் தமிழுரிமைப் போர்!

'**த**மிழ்நாடு' பெயர்ப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நேரத்திலே, இலங்கையில் தமிழ் மக்கள் எழுப்பிய அவலக் குரல்கள் என் காதுகளில் ஒலித்தன! அங்கு, 1947 முதற் கொண்டே தமிழுரிமைக் கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. அப்போது, திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம் எம்.பி., திரு. வன்னியசிங்கம் எம்.பி ஆகியோர் அந்தக் கிளர்ச்சியின் தளபதிகளாகத் திகழ்ந்தனர். இந்த இருவருமே என் மதிப்பிற் குரிய நண்பர்கள்!

இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னணித் தலைவர் திரு. வன்னிய சிங்கம் எம்.பி. அவர்கள், 1956-இல் சென்னை வந்திருந்த போது, அவருக்கு சென்னை புது உட்லண்ட்ஸ் ஓட்டலில் விருந்து நடத்தினேன். கம்யூனிஸ்டுத் தலைவர் தோழர் ப. ஜீவானந்தம், திரு.என்.வி. நடராசன், திரு.எச்.டி. ராஜா எம்.பி. ஆகியோர் அந்த விருந்தில் கலந்து கொண்டனர்.

1961 ஏப்ரல் தொடக்கத்தில் இலங்கையில் தமிழுரிமைப் போர் தொடங்கினர் தமிழ் மக்கள். இலங்கையில் தமிழும் சிங்களமும் சம அந்தஸ்தில் அரசு மொழிகளாக்கப்பட வேண்டுமென்பது தமிழினத்தாரின் கோரிக்கை. அத்துடன், தமிழர் மிகுதியாக வாழும் பகுதிகள் இணைந்த தமிழ் மாநிலம் வேண்டும் என்ற கோரிக்கைகளுக்காகவும் தமிழர்கள் போராடினர். இந்தக் கோரிக்கைகள் இலங்கை அரசால் ஏற்கக் கூடியன வென்றே எனது தமிழரசுக் கழகம் கருதுகிறது. அதனால், இலங்கைத் தமிழர்களின் போராட்டத்திற்கு என் கழகமும் நானும் ஆதரவு காட்டி வந்தோம்.

1961-இல் தொடங்கிய போராட்டம் மிகவும் கடுமையானதாக இருந்தது — குறிப்பாக, யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பகுதிகளில் அரசாங்க நிர்வாகம் ஸ்தம்பித்துப் போகக்கூடிய அளவில் போராட்டம் வலுவாக நடைபெற்றது.

சிங்கள இனத்தவர் செல்வாக்கிலுள்ள இலங்கை அரசு அங்குள்ள தமிழர்களின் மொழியுரிமைக் கோரிக்கையையோ, தமிழ் மாநிலக் கோரிக்கையையோ ஏற்காமல், தமிழர் மிகுதி யாக வாழும் பகுதிகளிலே போலீஸ் ராஜ்யம் நடத்தியது. அது பயனற்றுப் போனபின், தமிழர் மீது சிங்கள இராணுவத்தை ஏவி, தமிழ்ப் பகுதிகளை 'ஜாலியன்வாலா பாக்' ஆக்கியது. தமிழரசுக் கட்சி தடை செய்யப்பட்டது. அதன் தலைவர்களும் தொண்டர்களும் விசாரணையின்றிச் சிறையில் அடைக்கப் பட்ட னர். தமிழர் வாழும் பகுதிகளிலே 'அவசர நிலைமை' பிரகட னப்படுத்தப்பட்டது.

தலைவர்களுடன் ஆலோசனை

இலங்கைத் தமிழகத்தில் சிங்கள ராணுவம் நடத்திய பேயாட்டங்கள் பற்றிய செய்திகளைக் கேட்டபோதெல்லாம் என் மனம் பதறியது. கண்களில் நீர் மல்கியது. பத்திரிகைகளில் கண்டன அறிக்கை விடுத்தேன். சென்னையில் பொதுக் கூட்டங் கள் போட்டு, தமிழ் மக்களைத் தட்டியெழுப்பினேன். ஏப்ரல் மூன்றாவது வாரத்தில் ''இலங்கைத் தமிழர் தினம்'' தமிழ்நா டெங்கும் கொண்டாடி, இலங்கைத் தமிழர் மீது சிங்கள ராணு வம் நடத்திவரும் அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்க தமிழரசுக் கழகத்தைப் பயன்படுத்தினேன்.

ஏப்ரல் 25-இல் சென்னையிலுள்ள இலங்கைத் தூதுவரகத் தின் முன்பு தமிழரசுக் கழகத்தின் சார்பில் நானே முன்னின்று கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தி வைத்தேன். ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட இடத்திலேயே — அதாவது, இலங்கைத் தூதுவர் அலுவலகத்தின் வாயில் முன்பே நான் இலங்கைத் தமிழர்களுக் கெதிராக சிங்கள ராணுவம் நடத்திய வெறியாட்டத்தைக் கண் டித்துச் சொற்பொழிவாற்றினேன்.

இந்திய அரசு பரிவு காட்டினாலொழிய இலங்கைத் தமிழர் படும் அல்லல்களுக்குப் பரிகாரம் கிடைக்காதென்பதனை உணர்ந்தேன். இந்திய அரசின் கவனத்தைக் கவர எனது தனி முயற்சி மட்டும் போதாதென்பதனையும் அறிந்தேன். ஆகவே, அனைத்துக் கட்சித் தலைவர்களையும் என் வீட்டில் கூட்டி

அவர்களுடன் ஆலோசனை நடத்த விரும்பினேன். 28.4.61-இல் அந்தக் கூட்டம் எனது இல்லத்தில் நடந்தது. தி.மு.க., கம்யூனிஸ்டு, நாம் தமிழர், பிரஜா சோஷலிஸ்டு, தமிழ் தேசியக் கட்சி, சோஷலிஸ்டு ஆகிய கட்சிகளின் தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

இலங்கைத் தமிழரின் மொழியுரிமைக் கோரிக்கைக்குத் தார்மீக ரீதியில் ஆதரவு தெரிவித்தும், சிங்கள ஆதிக்கத்திலுள்ள இலங்கை அரசின் அடக்குமுறையைக் கண்டித்தும், இதில் இந்திய சர்க்கார் தலையிட்டு இலங்கை வாழ் தமிழருக்கு நீதி கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கோரியும் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

ராஜாஜியின் ஆதரவு

எனது முயற்சிக்கு அனைத்துக் கட்சிகளின் ஆதரவைப் பெற்றதோடு அமையாமல், இந்தியாவின் முன்னாள் கவர்னர் ஜெனரலும், பாரதப் பெருந்தலைவருமான ராஜாஜியின் ஆதரவையும் பெற முயன்றேன். முதலில் இந்தப் பிரச்சினையில் தலையிட அவர் சிறிது தயங்கினாரென்றாலும், பின்னர் எனது வற்புறுத்தலுக்கிணங்கி இசைந்தார்.

இராயப்பேட்டை இலக்குமிபுரம் இளைஞர் சங்கத்தில் ''இலங்கைத் தமிழர் பிரச்சினை'' பற்றி நான் பேசிய சிறப்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார் ராஜாஜி. அந்தக் கூட்டம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சென்னை நகரிலுள்ள இலங்கைத் தமிழர்களில் ஏராளமானவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் — மொழி சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் இரண்டையும் விமர்சித்தும் ஆதரித்தும் பேசினேன். எனக்குப் பின் தலைவர் முடிவுரை என்ற வகையில் பேசிய ராஜாஜி, என்னோடு உடன்பட்டு இலங்கைத் தமிழர்களின் மொழி — அரசியல் கோரிக்கைகளுக்கு ஆதரவு காட்டினார். ''இலங்கை ஒரு சமஷ்டி நாடாகத்தான் இருக்க முடியும்'' என்று தெளிவாகவும் திட்டவட்டமாகவும் அறிவித்தார். தமது

யோசனையை ஏற்று, இலங்கை வாழ் தமிழர் — சிங்களரிடையே உறவை வளர்க்க முன் வருமாறு இலங்கைப் பிரதமர் சிரிமாவோ பண்டார நாயகாவுக்கு ராஜாஜி வேண்டுகோள் விடுத்தார்.

உண்மையில் இலங்கைத் தமிழர் விஷயத்தில் ராஜாஜி எனது முயற்சிகளுக்கு ஆதரவு காட்டியதிலே யான் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். ராஜாஜியின் பேச்சு கொழும்புவிலும் புதுடில்லியிலும் எதிரொலித்தது. ஆம்; இலங்கைப் பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சியாரில் சிலர் சலசலப்பு செய்தனர். எனது தூண்டுதல் பேரில்தான் ராஜாஜி இலங்கைத் தமிழருக்கு ஆதரவு காட்டியதாகவும் பேசப்பட்டது.

பிரதமர் நேரு, தனது மௌனத்தைக் கலைத்து இலங்கைத் தமிழர் பற்றி டில்லி நாடாளுமன்றத்தில் கீழ்வருமாறு பேசினார்:

> *''இந்தப் பிரச்சினையில் தமிழ்நாட்டிலுள்ளவர்கள் வேதனை எனக்குத் தெரியும். ஆனால், இது, இலங்கையர்கள் ஒரு பிரிவினருடன் இன்னொரு பிரிவினர் வேற்றுமை கொள்ளும் பிரச்சினையாகும். இதில் நான் எப்படி தலையிடுவது என்பதுதான் எனக்குப் புரியவில்லை.''*

நேருவின் கூற்று அவருக்கிருந்த பலவீனத்தின் விளைவு. ''இலங்கையர் ஒரு பிரிவினருடன் இன்னொரு பிரிவினர்'' என்று நேரு கூறியது, நிலைமையைத் தவறாக உரைத்ததாகும். ''ஒரு இனத்தினர் இன்னொரு இனத்தினருடன் போராடும் பிரச்சினை'' என்று அவர் கூறியிருக்க வேண்டும். இன வேறுபாடுடைய மக்கள் வாழும் ஒரு நாட்டிற்குள்ளே, அதிகார பீடத்திலேறிவிட்ட ஒரு இனத்தார், இன்னொரு இனத்தாரை ஒழித்துக் கட்டுவதை ஐ.நா. விதிகள் அங்கீகரிக்கவில்லை. அதில் தலையிட ஐ.நா.வுக்கு உரிமை உண்டு. அதன்படி, இலங்கைத் தமிழினத்துக்கு எதிராக சிங்கள இன ராணுவத்தார் நடத்தும் அடக்குமுறையை இன ஒழிப்புப் பிரச்சினையாகக் கருதி, அதனை எதிர்க்க வேண்டுமென்றுதான் இந்தியத் தமிழகத்தார் நேருவைக் கோரினர். அவர், பிரச்சினைக்கு வேறு வடிவங் கொடுத்து, கடமையைத் தட்டிக் கழித்துவிட்டார்.

எனது இல்லத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடந்தபின் — இரண்டாவது நாளில் — தமிழ்நாடு கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்கள் தாங்கள் ஏற்கெனவே கையொப்பமிட்ட கூட்டறிக்கையிலிருந்து விலகிக் கொள்வதாக அறிக்கை விட்டனர். இதுபற்றி அவர்கள் என்னிடம் கலந்து உரையாடக்கூட இல்லை.

கம்யூனிஸ்டுகள் மனமாற்றம்!

தமிழக அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டறிக்கையைப் பத்திரிகைகளில் படித்த இலங்கை கம்யூனிஸ்டுக் கட்சியினர் தமிழ்நாடு கம்யூனிஸ்டுக் கட்சியைக் கண்டித்திருக்க வேண்டும். ஏனெனில், இலங்கையிலுள்ள கம்யூனிஸ்டுக் கட்சி சிரிமாவோ பண்டார நாயகா ஆட்சி அங்குள்ள தமிழருக்கு எதிராக நடத்திவந்த அடக்குமுறைக்கு ஆதரவு காட்டி வந்தது. அதனால், தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியும் தன் பாதையில் நடைபோட வேண்டுமென்று அது விரும்பியது. அதற்கிணங்கவே, தமிழ்நாடு கம்யூனிஸ்டுத் தலைவர்கள் மாற்றம் அடைந்தனர்.

இலங்கைத் தமிழ்ப் பகுதிகளில் சிங்கள இராணுவம் புகுந்த போதே நான் இலங்கை சென்று நிலைமையை அறிந்துவர விரும்பினேன். ஆனால், சென்னையிலுள்ள இலங்கைத் தூதுவரகம் எனக்கு 'விசா' வழங்க மறுத்துவிட்டது. தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சி சிரிமாவோ பண்டார நாயகாவுக்கு ஆதரவு காட்டத் தொடங்கிய பின்னர், அதன் தலைவர் திரு.பி. இராமமூர்த்தி இலங்கை சென்று நிலைமையை அறிந்துவர 'விசா' வழங்கியது.

அவர், கொழும்பு நகரில் தங்கி, பிரதமர் பண்டார நாயகாவையும் தமது கட்சியின் இலங்கைத் தலைவர்களான சிங்களவர்களையும் சந்தித்துப் பேசிவிட்டு, இலங்கைத் தமிழ்ப் பகுதிகளை நேரில் பார்த்தவர்போல பாவனை செய்து, தமிழர் இயக்கத்திற்கு எதிராக அறிக்கைவிட்டார். இதனை யான் வன்மையாகக் கண்டித்து இலங்கைப் பிரதமருக்குக் கடிதம் எழுதினேன்.

திரு.பி. இராமமூர்த்தியை ஒருதலைப் பட்சமாகப் பயன்படுத்துவதாகவும் — குறிப்பாக, தமிழருக்கு எதிராக ஒரு

தமிழரையே சிங்கள அரசு பயன்படுத்துவதாகவும், நானும் இலங்கை சென்று நிலைமையை அறிந்துவர அனுமதி வழங்க இலங்கைப் பிரதமருக்கு அறிவுரை கூறுமாறும் பிரதமர் நேருவுக்குக் கடிதம் எழுதினேன்.

அவர் இலங்கைப் பிரதமருக்கு எனக்கு ஆதரவாக அறிவுரை கூறினாரா, இல்லையா என்பதனை நான் அறியேன். ஆனால், ஒரு வாரத்திற்குப் பின்னர், நான் இலங்கை செல்ல 'விசா' வழங்குவதாக சென்னையிலுள்ள இலங்கைத் தூதுவர் வலுவில் தாமே முன்வந்து எனக்குத் தகவல் தந்தார்.

நான் இலங்கை செல்வதற்குத் தேதியை நிச்சயித்துப் பத்திரிகைகளுக்கு அறிவித்துவிட்டு, பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தேன். அந்த நிலையில் எதிர்பாராத விதமாக திடீரென நோயுற்று, நடமாடவும் சக்தியற்று விட்டேன். அதனால், எனது இலங்கைப் பயணம் தடைப்பட்டு விட்டது.

நோய் கடுமையாகி விட்டதால் குடற்புண்ணுக்கு அறுவைச் சிகிச்சை செய்தாக வேண்டுமென்று மருத்துவர்கள் ஆலோசனை கூறினர். நோயைத் தாங்கிக் கொள்ள இயலாமையால் நானும் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளச் சம்மதித்தேன். ஆம்; இலங்கைத் தமிழர்களின் மனப்புண் ஆற்றும் மருத்துவனாக இலங்கை செல்லவிருந்ததைத் தள்ளிப்போட்டு, எனது குடற்புண்ணுக்கு மருத்துவஞ் செய்து கொள்வதென்ற முடிவுக்கு வந்தேன்.

எனது குடும்ப மருத்துவரின் ஆலோசனைக்கிணங்க, டாக்டர் யூ.மோகன்ராவ் அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். அங்கு அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றது. என்னை வாட்டிவந்த குடல் அனுபந்தத்தை (அப்பெண்டிக்சை) அறுவை சிகிச்சை மூலம் அகற்றியதால், உயிரைப் பயமுறுத்தி வந்த அபாயத்திலிருந்து மீண்டேன்.

இலங்கையிலும் நிலைமை மாறியது. எனது முயற்சியால் பெரிய அளவில் பயன் எதுவும் ஏற்படவில்லையென்றாலும், இலங்கைத் தமிழர்களது கண்ணீரைத் துடைக்க இந்தியத் தமிழகத்திலும் மக்கள் இருக்கிறார்கள் என்பதனை இலங்கை அரசுக்கு உணர்த்த என்னால் முடிந்தது.

1962 பொதுத் தேர்தல்

1962-ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் எனக்கும், என் தலைமையில் இயங்கும் தமிழரசுக் கழகத்திற்கும் பெரிய சோதனையாக அமைந்தது. எனது கழகம் முழுக்க முழுக்க பார்லிமெண்டரித் துறையில் ஈடுபட்டுள்ள அரசியல் கட்சி அல்லவென்றாலும், பொதுத் தேர்தலிலிருந்து பூரணமாக ஒதுங்கி நிற்பதும் அதற்குச் சாத்தியமாக இல்லை. ஆயிரம் கிளைக் கழகங்களையும், அரசியல் ஆர்வமுள்ள பல்லாயிரக் கணக்கான ஊழியர்களையும் தேர்தல் களத்திற்கு வெளியே நிறுத்தி வைக்கும் ஆற்றல் எனக்கில்லை என்பதனை கழகத்தைத் தொடங்கியபின் வந்த இரண்டு பொதுத் தேர்தல்கள் உணர்த்தி வைத்தன.

பொதுத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளிலே எந்தக் கட்சியை அல்லது கட்சிகளை ஆதரிப்பது என்பதனைத் தமிழரசுக் கழகம் முடிவு செய்ய வேண்டியிருந்தது. அதிலே கழகத்திற்கு வழிகாட்ட வேண்டிய கடமை என்மீது சுமந்திருந்தது.

1957-இல் நடந்த பொதுத் தேர்தலின்போது, வெளிப்படையாகப் பிரகடனம் செய்துவிட்டு எனது கழகம் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கவில்லையென்றாலும், நடைமுறையில் பிரகடனம் எதுவுமின்றிக் காங்கிரஸ் கட்சிக்குத்தான் ஆதரவளித்தது. இங்குமங்குமாகச் சில தொகுதிகளில் மட்டும் தி.மு.க. அல்லாத தேசிய சக்திகளுக்கு உதவி புரிந்தது. அப்படி அல்லாமல், 1962 பொதுத் தேர்தலில் எனது கழகம் எல்லாத் தொகுதிகளிலுமே காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு தருவதுதான் நாட்டுக்கு நல்லது செய்வதாகுமென்று நான் கருதினேன். ஆனால், தமிழ்நாடு காங்கிரசின் சர்வாதிகாரியாக விளங்கிய திரு.கு. காமராசர் எனது கழகத்தின் உதவியைக் கேட்டுப் பெறுவதற்குத் தயாராக இல்லை. இந்த நிலையில், பொதுத்

தேர்தலில் தமிழரசுக் கழறகத்தின் நிலை என்ன என்பது பற்றி ஆலோசித்து முடிவு செய்ய கழகத்தின் நான்காவது மாநில மாநாடு வேலூரிலே கூடுவதற்கு ஏற்பாடாகி வந்தது.

சுதந்திராக் கட்சி உதயம்

சுதந்திராக் கட்சியை 1959 சூன் மாதத்தில் தோற்றுவித்தார் ராஜாஜி. மயிலை புது உட்லண்ட்ஸ் ஓட்டலிலே ராஜாஜியின் தலைமையில் நடைபெற்ற தென்னிந்திய அரசியல் பிரமுகர்கள் பலர் அடங்கிய கூட்டத்தில் அக்கட்சி தோற்றுவிக்கப் பெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு ராஜாஜி எனக்கு அழைப்பு அனுப்ப வில்லை. பத்திரிகைகளில் படித்துத்தான் சுதந்திராக் கட்சி பிறந் தது பற்றி அறிந்து கொண்டேன்.

அந்த நாளில், அரசியலைப் பொறுத்தவரையில் என்னிடம் கலந்து ஆலோசிக்காமல் ராஜாஜி எதையும் செய்ததில்லை. சுதந்திராக் கட்சி தொடங்குவது பற்றி முன்கூட்டி என்னிடம் கலந்து ஆலோசிக்காததோடு, அதன் தொடக்கக் கூட்டத்திற்கும் அழைப்பு அனுப்பவில்லை என்றால், புதிய கட்சி தோன்றுவதை நான் விரும்பவில்லை என்பதனை ராஜாஜி அறிந்திருந்ததுதான் அதற்குக் காரணமாகும். என்னுடன் கலந்து ஆலோசனை செய் யாமலே புதிய கட்சியைத் தொடங்கிவிட்டால் அதற்கப்புறம் அவரை நான் பின்பற்றி விடுவேன் என்று அவர் உறுதியாக நம்பினார்.

காங்கிரஸ் கட்சிக்கு எதிராக அகில இந்திய ரீதியில் 'கன்சர்வேடிவ் கட்சி' என்னும் பெயரில் புதிய கட்சி ஒன்றைத் தொடங்கும் உத்தேசம் தமக்கு இருப்பதாக முன்கூட்டியே ராஜாஜி பத்திரிகைகளில் அறிக்கை விட்டிருந்தார். 'கல்கி'யிலும் அது பற்றி விளக்கமாக அடிக்கடி அவர் எழுதி வந்தார். வறுமைமிக்க இந்தியாவுக்குக் கன்சர்வேடிவ் கட்சி தேவைப்படு வதாக எழுதியிருந்தார்.

ராஜாஜி புதிய கட்சி ஒன்று தொடங்குவதை நான் விரும்ப வில்லை என்பதை மறைமுகமாக 'செங்கோல்' தலையங்க

மொன்றில் வெளியிட்டிருந்தேன். அதிலும், பிரிட்டனில் முதலாளிகளாகவும் பழமை விரும்பிகளாகவும் உள்ளவர்களால் நடத்தப்பட்டு வரும் கன்சர்வேடிவ் போன்ற ஒரு கட்சி இந்தியாவுக்குத் தேவைப்படுவதாக அவர் எழுதியிருந்தார். வறுமை மிக்க இந்தியாவில் கன்சர்வேடிவ் கட்சி தேவைப்படவில்லை என்பதைத் தக்க சான்றுகள் காட்டி செங்கோலில் எழுதியிருந்தேன். ராஜாஜி வாரந்தோறும் தவறாமல் 'செங்கோல்' படித்து வந்தா ராதலால், புதிய கட்சி தொடங்கும் தனது முயற்சிக்கு நான் எதிராக இருப்பதைத் தெரிந்து கொண்டார். அதனாற்றான், என்னுடன் முன்கூட்டிக் கலந்து ஆலோசிக்காமலும், எனக்கு அழைப்பு விடாமலும் சுதந்திராக் கட்சியைத் தொடங்கினார்.

தியாகராய நகரிலுள்ள ''கல்யாண் ஸ்டோர்ஸ்'' என்ற மிகப் பெரிய ஜவுளிக் கடையின் உரிமையாளர் திரு.ப. கலியாண சுந்தரம் என்பவர் ராஜாஜியிடமும் என்னிடமும் அன்பு செலுத்தி வரும் நண்பராவார். ராஜாஜியும் நானும் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ளும் நேரங்களிலெல்லாம் அன்பர் கலியாண சுந்தரம் எங்களிடையே தூதுவராகப் பயன் படுவது வழக்கம்.

சுதந்திராக் கட்சி தொடங்கிய பின்னர் அதுபற்றி என்னிடம் பேசுவதற்காக திரு. கலியாணசுந்தரத்தின் மூலம் ராஜாஜி எனக்கு அழைப்பு விடுத்திருந்தார். நானும் அவரைச் சந்தித்துப் பேசினேன். ஆனால், சுதந்திராக் கட்சியின் கொள்கைகள் பற்றி அவர் கொடுத்த விளக்கம் எனக்கு மனநிறைவைத் தரவில்லை. அத்துடனன்றி, சுதந்திராக் கட்சியைத் தொடங்கிய ஆரம்பக் கட்டத்திலே, ராஜாஜி வெளியிட்டு வந்த அரசியல் — சமூக — பொருளாதாரக் கருத்துகள் நான் ஏற்கெனவே கடைப் பிடித்து வரும் கொள்கைகளுக்கு எதிரானவையாக இருந்து வந்தன. ஆம்; சோசலிசத்தில் மிக அழுத்தமான நம்பிக்கையுடையவன். ராஜாஜியோ ''நான் சோசலிசத்தின் முதல் நெம்பர் விரோதி'' என்று தம்மை வருணித்துக் கொண்டார். சமுதாயத்தில் இன்று நிலவிவரும் அரசியல் — சமூக — பொருளாதாரத் தன்மைகள் இனியும் நீடிக்க வேண்டும் என்றும் ராஜாஜி கூறியது என் மனதுக்கு அதிர்ச்சியைத் தருவதாக இருந்தது.

ஏ.டி.ஷராப், எச்.பி. மோடி போன்ற மிகப் பெரிய முதலாளிகள் ராஜாஜியின் சுதந்திராக் கட்சிக்கு ஆதரவளிக்க ஆர்வத்தோடு முன் வந்தனர். மற்றும், பாங்கர்கள், தொழிலதிபர்கள், வணிக முதலாளிகள் ஆகியோர் சுதந்திராக் கட்சியில் இணைய வேண்டுமென்று வெளிப்படையாகவே ராஜாஜி வேண்டுகோள் விடுத்தார்.

சுதந்திராக் கட்சியைத் தொடங்குவதற்கு முன்பு ராஜாஜி சோசலிசத்தில் முழு அளவில் நம்பிக்கையுடையவரென்றே நான் கருதியிருந்தேன். ''அபேதவாதம் அல்லது பொது உடைமை'' என்ற அவரது நூலை முதன் முதலாகப் படித்த போதுதான் ''சோசலிசம்'' என்றால் என்ன என்பதை நான் புரிந்து கொண்டேன். அதிலே நம்பிக்கையையும் கொண்டேன். ஆவடியில் கூடிய காங்கிரஸ் மகாசபையில் ''சோசலிச பாணி'' சமுதாயம் படைக்க விருப்பம் தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது ராஜாஜியும் அதற்கு ஆதரவாக இருந்தார். அப்போது அவர் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அங்கத்தினராகவுமிருந்தார். ராஜாஜி திடீரென சோசலிசத்திற்கு முதல் நெம்பர் எதிரியாக மாறியது பாரதப் பெரு நாட்டிற்கு ஏற்பட்ட மிகப் பெரிய துரதிர்ஷ்டமென்றே நான் கருதினேன்.

ராஜாஜியினுடைய அழைப்பின் பேரில் அவரைச் சந்தித்துப் பேசியபோது சுதந்திராக் கட்சிக்கும் தமிழரசுக் கழகத்திற்கும் அடிப்படைக் கொள்கைகளில் வேற்றுமை இருப்பதனை விளக்கினேன். ஆயினும், அகில இந்திய ரீதியில் காங்கிரசுக்கு வலுவான ஒரு எதிர்க்கட்சி இல்லாததால் அந்தக் காலியிடத்தை சுதந்திராக் கட்சி பிடித்துக் கொள்வது நல்லதென்றே நான் கருதினேன்.

பேச்சு முறிந்தது

அப்போது ஜவகர்லால் நேரு காங்கிரஸ் கட்சியின் தலைவராக விளங்கியதால் அவருக்கு ஈடு கொடுக்கக் கூடிய பெருந்தலைவரான ராஜாஜி அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக வருவது ஜனநாயக வளர்ச்சிக்கு நன்மை பயக்குமென்றும் நான்

நம்பினேன். ஆனால், முதலாளித்துவ — நிலப் பிரபுத்துவ வர்க்கங்களின் கூட்டு முகமாக சுதந்திராக் கட்சி செயல்படு வதனை நான் அடியோடு விரும்பவில்லை. ராஜாஜியிடம் எனக்கிருந்த செல்வாக்கை நான் கொஞ்சம் அதிகப்படியாக மதிப்பீடு செய்து விட்டேன். அதனால், சோசலிசத்திற்கு எதிரி யாக அல்லாத நிலையில் அவரது கருத்தை மாற்றிவிட முடியு மென்று நம்பியே நான் அவரைச் சந்தித்தேன். நாங்களிருவரும் தனியாகச் சந்தித்து சுமார் முக்கால் மணி நேரத்திற்கு மேல் மனம்விட்டுப் பேசினோம். ராஜாஜி எப்படியும் சுதந்திராக் கட்சிக்கு என்னை இழுத்துக் கொள்வதென்ற முடிவோடு என்னு டன் உரையாடினார். அதுபோல, சோசலிசத்திற்கு எதிரியல்லாத நிலைக்கு ராஜாஜியைக் கொண்டு வந்து அவரோடு ஒத்துழைக்க முடியுமென்ற நம்பிக்கையோடுதான் நானும் அவருடன் உரை யாடினேன். ஆனால், எங்கள் பேச்சின் முடிவிலே, அந்த நம்பிக்கையை இருவருமே இழந்துவிட்டோம். நாங்கள் விவாதித்துக் கொண்டிருந்த ஒரு கட்டத்திலே,

''சோசலிசத்தைப் பற்றி அதிகமாக விவாதிப்பதால் என் மனதைத் தாங்களோ, தங்கள் மனத்தை நானோ மாற்றிவிடப் போவதில்லை.

''தமிழ்நாட்டிலுள்ள படித்த வகுப்பார் என்னையும் தங்களையும் பொதுவாக நேசிப்பவர்கள். நான் புதிய கட்சி தொடங்கி விட்டதால் அவர்கள் இனி தங்களையோ, தங்கள் கழகத்தையோ ஆதரிக்கமாட்டார்கள். அதனால், தங்களுக்கு செல்வாக்குப் போய்விடும். பிடிவாதம் காட்டா மல் என்னோடு சேர்ந்து செயல்படுங்கள். நான் தங்களை சுதந்திராக் கட்சிக்கு அழைப்பது தங்களுடைய நன்மைக் காகவும்தான்''

என்று உறுதி தோய்ந்த குரலில் கூறினார். 'படித்த வகுப்பார்' என்று ராஜாஜி கூறியது என்னால் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

தமிழ் மக்களிலே எந்த ஒரு சாராரையும் சாதி ரீதியில் அணுக — அவர்களுடைய ஆதரவைத் திரட்ட நானோ,

தமிழரசுக் கழகமோ என்றைக்குமே முயன்றதில்லை. ஆகவே, படித்த வகுப்பார் என்று தேசியத் தலைவரான ராஜாஜி அவர்கள் யாரைக் குறிப்பிட்டாரோ அவர்களுடைய ஆதரவு அந்நாளில் தமிழரசுக் கழகத்திற்கு இருந்ததென்றாலும், அந்த ஆதரவைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சோசலிச முகாமின் விரோதிகளோடு நானோ, தமிழரசுக் கழகமோ செல்வது என்பது என்னால் நினைத்துப் பார்க்கவும் முடியாததாக இருந்தது.

தமிழரசுக் கழகத்தை நடத்திக் கொண்டே நான் கட்சி அரசியலில் சுதந்திராவின் தமிழ்நாட்டுத் தலைமையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதுதான் ராஜாஜியின் விருப்பமாக இருந்தது. ஆனால், நான் எனது நிலைமையைத் தெளிவாகக் கூறி சுதந்திராக் கட்சியில் சேர மறுத்துவிட்டேன். அதன் பின்னும் என் வீட்டுக்கு ஒரு முறை நேரில் வந்து நீண்டநேரம் பேசியும், இருமுறை கடிதங்கள் எழுதியும் சுதந்திராக் கட்சியில் சேருமாறு திரும்பத் திரும்ப ராஜாஜி என்னை வற்புறுத்தினார். நானும், பிடிவாதமாக மறுத்து வந்தேன். ஆனால், இதனால் நீண்ட நெடுங்காலமாக எங்களிடையே நிலவி வந்த புனிதமான நட்பு சிறிதுகூடப் பாதிக்கவில்லை.

ராஜாஜி கூறியதுபோல, சுதந்திராக் கட்சி தோன்றிய பின்னர் அதுவரை தமிழரசுக் கழகத்திலிருந்த படித்த வகுப்பாரில் பெரும்பாலோர் சுதந்திராக் கட்சிக்குத் தாவினர். இது நான் எதிர்பார்த்ததுதான். ஆனால், படித்த வகுப்பார் அனைவருமே என்னையோ, தமிழரசுக் கழகத்தையோ வெறுத்துவிட்டனர் என்ற நிலை ஏற்படவில்லை. அந்த வகுப்பைச் சார்ந்த இளைஞர்களில் ஏராளமானவர்கள் — குறிப்பாக, பட்டதாரிகள் தமிழரசுக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். அவர்களில் திரு. ம.சீ. கிருஷ்ணமூர்த்தி, பி.ஏ., திரு.எஸ்.கே. பாலசுப்பிரமணியம், எம்.ஏ., பி.எல்., திரு. பட்சி ராசகோபாலன், பி.ஏ.பி.எல்., ஆகியோரைப் போன்ற பலரை மிகுந்த மகிழ்ச்சியோடு இங்குக் குறிப்பிட நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

படித்த வகுப்பார் மிகுதியாகவுள்ள திருவல்லிக்கேணி வட்டத்தில் சுதந்திரா — காங்கிரஸ் வேட்பாளர்களைத் தோற்கடித்து இரண்டு முறை தமிழரசுக் கழக வேட்பாளராக திரு. பட்சி ராசகோபாலன் அவர்களே வெற்றி பெற்று வந்ததும் இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

1962 பொதுத் தேர்தலில் சுதந்திராக் கட்சியை ஆதரிக்கக் கூடிய நிலையில் தமிழரசுக் கழகம் இல்லை என்பது தெளிவாகி விட்டது.

இந்தச் சூழ்நிலையிலே தமிழரசுக் கழக நான்காவது மாநில மாநாடு 1962 ஜனவரி 24, 25, 26 தேதிகளில் வடாற்காடு மாவட்டத்தின் தலைநகரான வேலூரிலே கூட ஏற்பாடாகி, அந்த மாநாட்டின் வேலைகளைக் கவனிக்க நான் வேலூரில் தங்கியிருந்தேன். அப்போது தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக இருந்த திரு.ஓ.வி. அளகேசன் அவர்கள் நான் தங்கியிருந்த இடத்திற்கு வந்து என்னைச் சந்தித்தார்.

ஒரு திங்களுக்கு முன்புதான் குடல்புண்ணுக்கு நான் அறுவை சிகிச்சை செய்து கொண்டிருந்தேனாதலால், எனது உடல்நலம் விசாரிப்பதற்காகவும், அப்போதுதான் அன்னையை இழந்திருந்தேனாதலால், அதற்காக அனுதாபம் தெரிவிப்பதற்காகவும் அவர் என்னைச் சந்தித்தார். உடல்நலம் விசாரித்து, அனுதாபமும் தெரிவித்த பின்னர், பொதுத் தேர்தலில் தமிழரசுக் கழகத்தின் நிலை என்ன என்பதையும் அறிந்துகொள்ள முயன்று என்னிடம் அரசியல் பேசினார்.

தமிழரசுக் கழகம் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு தரவேண்டுமென்று வெளிப்படையாகவே என்னை அவர் கேட்டுக் கொண்டார். அவரது எண்ணத்திற்குத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மீது எல்லையற்ற செல்வாக்குப் பெற்றுள்ளவரும், தமிழக முதல்வருமான திரு.கு. காமராசர் இசைவு தெரிவிப்பாரானால், காங்கிரசுக்கு ஆதரவளிப்பது பற்றி நான் யோசிப்பதாக திரு. அளகேசனிடம் கூறினேன். தமிழரசுக் கழகத்தின் ஆதர

எனக்குத் தெரியுமாயினும், அனுபவத்தின் மூலம் அவரே அறிந்து கொள்வார் என்று நம்பி, நான் அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. எங்கள் சந்திப்பால் தமிழ்நாடு காங்கிரசுக்கும் தமிழரசுக் கழகத்திற்கும் ஏற்கனவே முறிந்து போய்விட்ட உறவு திரும்பவும் ஒட்டிக் கொண்டு விட்டதாகவே திரு. அளகேசன் நம்பினார். திரு. காமராசரைச் சந்தித்து அவரது இசைவையும் பெற்றுவிட்ட பின்னர் வேலூர் மாநாட்டிற்கு முன்னதாகவே என்னைச் சந்திப்பதாகச் சொல்லிவிட்டுப் போனார். ஆனால், அவர் திரும்பவும் வரவில்லை. ஆம்; காமராசரின் மனப்பான்மை தமிழரசுக் கழகத்தின் உதவியைப் பெறுவதற்கு ஆதரவான நிலையில் இல்லை என்பதனை அவர் அறிந்து கொண்டிருப்பார்.

1962 பொதுத் தேர்தலிலே தமிழரசுக் கழகத்தின் ஆதரவை சுதந்தரா, தி.மு.க., நாம் தமிழர், பிரஜா சோசலிஸ்டு, சோச லிஸ்டு, கம்யூனிஸ்டு, த.தே.க. ஆகிய கட்சிகளெல்லாம் கோரின. அந்தக் கட்சிகளின் முன்னணித் தலைவர்கள் என்னைச் சந்தித்துப் பேசினர். வேலூர் மாநாட்டிற்குப் பின்னர் என்னைச் சந்திக்குமாறு அவர்களுக்கெல்லாம் கூறினேன்.

இந்தச் சூழ்நிலையில்தான் 1962 ஜனவரி 19, 20, 21 ஆகிய தேதிகளில் தமிழரசுக் கழக மாநில மாநாடு கூடியது. உண்மையில் சில வகையில் சேலத்தில் கூடிய 3ஆவது மநாட்டை விடவுஞ் சிறப்பாக நடந்தது வேலூரில் கூடிய நான்காவது மாநில மாநாடு.

மாநில மாநாடு மூன்று நாட்கள் நடைபெற்றதே வேலூரில் தான். ஜனவரி 19-இல் சுயாட்சி மாநில மாநாடு நடைபெற்றது. வழக்கறிஞர் எஸ்.கே. பாலசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கம்யூனிஸ்டு, பி.சோ., த.தே.க. ஆகிய தோழமைக் கட்சி கள் சார்பில் திருவாளர்கள் ப.ஜீவானந்தம், ஈ.வெ.கி. சம்பத், டாக்டர் விசயலட்சுமி பேசினர். மாநிலச் சுயாட்சி கோரி முதன் முதலில் மாநில மட்டத்தில் 1955-இல் திருச்சி உறையூரில் மாநாடு நடத்தியது தமிழரசுக் கழகம். அதிலேயும் கம்யூனிஸ் டுத் தலைவர் திரு. கலியாணசுந்தரம் போன்ற தோழமைக்

கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டு பேசினார்கள். அந்த மாநாட்டில் நான் நிகழ்த்திய தலைமையுரை, ''சுயாட்சியா, பிரிவினையா?'' என்ற பெயரில் நூலாக வெளிவந்துள்ளது. உறையூருக்கடுத்த படியாக எனது கழகம் மாநிலச் சுயாட்சி மாநாடு நடத்தியது 1962-இல் வேலூரில்தான். அந்த மாநாடு, பொதுத் தேர்தல் நெருங்கியிருந்த நேரத்தில் நடைபெற்றதால், அங்குப் பேசியவர்கள் பிரிவினை கோரும் தி.மு.க., 'நாம் தமிழர்' ஆகிய கட்சிகளுக்கு எதிரான போக்கிலேயே முழக்கம் செய்தனர்.

இலக்கிய மாநாடு ஔவை தி.க. சண்முகம் தலைமையில் நடைபெற்றது. மறைமலையடிகள் மகனார் மறை. திருநாவுக்கரசு அம் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். வழக்கம்போல, எந்த அரசியல் கட்சியையும் சாராத புலவர் பலர் இலக்கிய மாநாட்டில் கலந்துகொண்டு பேசினர்.

மூன்றாவது நாளில் அரசியல் மாநாடு நடைபெற்றது. வெள்ளம்போல தமிழர் கூட்டம் வேலூர் நகர வீதிகளிலே உலா சென்றது. திரு. பட்சி ராசகோபாலன் தொண்டர் படைத் தலைவராக இருந்து ஊர்வலத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தார்.

மாநாட்டிலே நான்தான் தலைமை வகித்தேன். எனது உரையிலே, மாநாட்டுப் பிரதிநிதிகளும் மக்களும் என்னிடமிருந்து எதிர்பார்த்தது, பொதுத் தேர்தலிலே தமிழரசுக் கழகம் யாரை ஆதரிக்கும் என்பது பற்றித்தான். ஆளுங்கட்சியான காங்கிரசும், எதிர்க்கட்சிகளும் என் கழகத்தின் ஆதரவை விரும்பிக் கோரியதால் அதுபற்றி முடிவெடுப்பது எனக்கு மிகவும் கஷ்டமாகத்தான் இருந்தது. கழகம் தமிழினத்தின் தேசிய அமைப்பானதால், அது எந்தக் கட்சிக்கும் எதிர்க்கட்சியாக இயங்கவில்லை. நானும் சரி; என் கழகத்தவரும் சரி; கட்சி விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட முறையில் அரசியல் பணிபுரிந்து வந்தோமாதலால், அனைத்துக் கட்சிகளும் எங்களிடம் நல்லெண்ணம் காட்டி வந்தன. ஆனால், தேர்தல் களத்திலே போட்டியிடும் கட்சிகள் அனைத்தையுமே எனது கழகம் ஆதரிப்பது சாத்தியமில்லையல்லவா!

‘ம.பொ.சி. ஆற்றுப்படை’ ‘வேலை வீரர்’ குப்புசாமி

கோவை வாசியான புலவர் புவியரசு, தனது பிள்ளைப் பருவந்தொட்டே தமிழரசுக் கழகத்தோடு தொடர்புடையவர். சிறந்த முற்போக்குக் கவிஞர். அவருடைய கவிதைகளிலே எனக்கு மயக்கமுண்டு. அவர், வருவாய்க்குரிய அலுவல் காரணமாகப் பல கட்டுப்பாடுகளுக்கிடையே வாழ்க்கை நடத்து பவர். கவிஞன் கட்டுப்பாடு ஏதுமின்றிச் சுதந்தரமாக வாழ வேண்டும். புவியரசு அப்படி வாழ்வாரானால், வருங்காலச் சரித்திரத்தில் இடம் பெறத்தக்க பெருங் கவிஞராக மலர முடியும். ஆனால், அதிலேயும் துன்பங்களிருக்கின்றன. புலவர் புவியரசு வேலூர் இலக்கிய மாநாட்டிலே என்மீது ‘ஆற்றுப் படை’ பாடி அரங்கேற்றினார். இலக்கிய மாநாட்டில் அதுதான் தலைசிறந்த நிகழ்ச்சியாக அமைந்தது. ஆம்; ‘முருகாற்றுப் படை’, ‘புலவராற்றுப் படை’ ஆகிய சிறந்த இலக்கியங்களோடு சேர்த்து எண்ணத்தக்க சிறப்புடையதாக ‘ம.பொ.சி. ஆற்றுப் படை’யைப் படைத்தார்.

தமிழரசுக் கழகம் தனது அரசியல் மாநாட்டோடு இலக்கிய மாநாட்டையும் சேர்த்து நடத்துவதைப் பார்த்த பின்னர், தமிழ் நாடு காங்கிரஸ், சுதந்தரா, ‘நாம் தமிழர்’ ஆகிய அரசியல் கட்சிகளும் கழகத்தைப் பின்பற்றி அரசியல் மாநாட்டோடு இலக்கிய மாநாடும் நடத்த முன்வந்தன. ஆனால், ஒன்றிரு மாநாட்டோடு அம்முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டன. கம்யூனிஸ்ட்டுக் கட்சி, கலை — இலக்கியப் பெருமன்றங் கண்டு, அதன் பெயரால் இலக்கியத் தொண்டு புரிய முன்வந் தது. அது நடத்திய ஒன்றிரு இலக்கிய மாநாடுகளிலே நான் கூட கலந்துகொண்டு பேசியிருக்கிறேன். தமிழரசுக் கழகத்தை நான் தோற்றுவித்த பின்னர், இலக்கியத்திற்கும் பொது அரசிய லுக்கும் நல்லபடியான உறவு ஏற்பட்டதெனலாம். இந்த அருந் தொண்டைத் தொடங்கி வைக்கும் பேறு கிடைத்ததற்காக நான் பெருமைப்பட்டுக் கொள்ளலாந்தானே!

வேலூர் ''பாரதி பந்தலி''லே மூன்றாம் நாள் நிகழ்ச்சியாக மாநாடு நடைபெற்றது. முன்னாள் நடந்த இலக்கிய மாநாட்டின் மணம் அரசியல் மாநாட்டில் வீசியதால் பேச்சுகளெல்லாம் தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலித்தன.

'வேலை வீரர்' என்ற சிறப்புப் பெயர் இந்தத் தமிழ்நாட்டில் ஒருவரைத்தான் குறிக்கும். அவர் தாமிர பத்திரம் பெற்ற தியாகியும் விடுதலை வீரருமான வேலூர் வி.கே. குப்புசாமி ஆவார். வேலூரில் நடந்த மாநில மாநாட்டின் வரவேற்புத் தலைவரே அவர்தான். இரவு பகலாகக் கண்விழித்து மாநாட்டை வெற்றிகரமாக நடத்தித் தந்தார். வேலூருக்குப் பல 'சிறப்புகள்' உண்டு. ஆம்; தண்ணீரில்லாத ஆறு; விக்கிரகமில்லாத கோயில்; அதிகாரமில்லாத போலீஸ்; அரசு இல்லாத கோட்டை — இவை, வேலை மாநகரின் தனிச் சிறப்புகள்; ஆனால், நண்பர் வி.கே. குப்புசாமி, பின்பற்றுவோரில்லாத தலைவராக இருக்கவில்லை.

திருவாளர்கள் வழக்கறிஞர் இரத்தினவேலு, ஜீ.ஜனகராஜ், கோ. கணேசன், மு.சு. கிருஷ்ணமூர்த்தி, அனந்தகிருஷ்ணன், கு.சாமிநாதன், கே.வி.எம். குப்புசாமி, நா.எத்திராசு ஆகியோர் தோளோடு தோள் சேர்த்துப் பாடுபட்டு, தங்கள் தலைவர் வேலை வீரருக்குப் பெருமை தேடினர். வி.கே. குப்புசாமியின் வரவேற்புரை, கழகத்தின்பால் அவருக்குள்ள ஆழ்ந்த விசுவாசத்தை வெளிப்படுத்துவதாக இருந்தது. கலைக்காவலர் எம்.ஏ. வேணு அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்து, உள்ளத்தைத் திறந்து காட்டும் வகையில் உரையாற்றினார். அவரைப்போல அவர்தான் பேச முடியும். ஆம்; மொழியிலே பாமரர்; பொருளிலே, பண்டிதர்! எனது தலைமையுரையின் பெரும்பகுதி அப்போது நெருங்கிக் கொண்டிருந்த பொதுத் தேர்தல் பற்றியதாகவே இருந்தது.

தேர்தலை வெறுத்தேன்!

காந்தியத்தில் பற்று மிகுந்திருப்பதனாலோ என்னவோ பார்லிமெண்டரி அரசியலில் எனக்கு அதிகமாகப் பற்றுதல் ஏற்படவில்லை. அது, வழுக்கல் நிறைந்த இடமாகவும் எனக்

குப் படுகிறது. அந்தப் பொதுத் தேர்தலில் நான் சென்னை திருவல்லிக்கேணித் தொகுதியில் போட்டியிட வேண்டுமென்று தி.மு.க. உள்ளிட்ட காங்கிரசல்லாத கட்சியினர் அனைவரும் என்னை வற்புறுத்தினர்.

காங்கிரசில் சேர்ந்துவிட்டால் வெற்றிக்கு உத்தரவாதத் தோடு என்னை நான் விரும்பும் தொகுதியில் நிறுத்தி வைக்க மாநில நிதியமைச்சர் திரு.சி.சுப்பிரமணியம், மத்திய அமைச்சர் கள் டி.டி.கிருஷ்ணமாச்சாரி, ஓ.வி.அளகேசன் ஆகியோர் விருப்பங் கொண்டிருந்தனர்.

என் மனம் பார்லிமெண்டரி அரசியலில் புக விரும்பாத தால் பொதுத் தேர்தலில் கழகத்தின் சார்பில் வேட்பாளர்களை நிறுத்துவதோ, நான் மட்டும் சுயேச்சையாகப் போட்டியிடு வதோ சாத்தியமில்லையென்பதனை எனது தலைமையுரையில் தெளிவுபடுத்தினேன்.

சுருங்கச் சொன்னால், காங்கிரசல்லாத தேசிய சக்திகளுக்கு — குறிப்பாக, நாட்டுப் பிரிவினைக்கு எதிரான கட்சிகளுக்குத் தமிழரசுக் கழகம் ஆதரவளிக்குமென்று கூறினேன். மற்று, எங்கெல்லாம் பிரிவினைச் சக்தியின் போட்டி வலுவாக இருக்கி றதோ, அங்கெல்லாம் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கே ஆதரவ ளிக்கப் போவதாகவும் அறிவித்தேன். எனது தலைமையுரையில் நான் வெளியிட்ட முடிவுகளை உறுதிப்படுத்தும் வகையில் வேலூர் மாநாட்டில் பொதுத் தேர்தல் பற்றித் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

வேலூர் மாநாடு ஒரு திருவிழா போன்று மூன்று நாட்கள் நடைபெற்று முடிந்தது. வேலூர் நகர கிளைக் கழகமும் கழகத் தோழர்களுமேயன்றி, வடாற்காடு மாவட்ட முழுவதிலுமுள்ள கிளைக் கழகங்களும் கழகத் தோழர்களும் 4ஆவது மாநில மாநாட்டின் வெற்றிக்காக அயராது உழைத்தனர். இம் மாநாட் டில் மாநிலச் சுயாட்சி கோரியும், ஆங்கில ஆதிக்கத்தை அகற்று மாறு வற்புறுத்தியும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் படித்த வட்டாரத்தின் மத்தியிலே மிகுந்த பரபரப்பை உண்டாக்கிய தெனலாம்.

மதுரை வழக்கறிஞர் மு.மாரியப்பன், திருப்பூர் வழக்கறிஞர் வி.அங்கப்பன் ஆகியோர் வேலூர் மாநாட்டில் முதன் முதலாகப் பேசி, மாநிலம் முழுவதிலுமுள்ள கழகத் தோழர்களுக்கு நன்கு அறிமுகமாயினர். இவ்விருவரும், என்னுடைய கழகத்தவராக மட்டுமல்லாமல், என் இதயத்தில் இடம்பெற்ற நண்பர்களாகவும் இருந்து வருகின்றனர்.

காங்கிரசுக்கு ஆதரவு

1962-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலே நான் எதிர்பார்த்ததுபோலத் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சிக்குப் பெரும்பான்மை கிடைத்தது. தேர்தல் களத்திலே வேலூர் மாநாட்டுத் தீர்மானத்தின்படி தமிழரசுக் கழகம் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு ஆதரவளித்தது. தார்மிக ரீதியில் காங்கிரசுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்பதுதான் வேலூர் மாநாட்டின் தீர்மானம். ஆனால், தி.மு.க. எதிர்ப்புணர்ச்சியால் உந்தப்பட்டு, தேர்தல் களத்திலே காங்கிரஸ்காரர்களோடு தோளோடு தோள் சேர்த்துப் பாடுபட்டனர், தமிழரசுக் கழகத் தோழர்கள். பல தொகுதிகளிலே காங்கிரசின் வெற்றிக்குத் தமிழரசுக் கழக ஊழியர்களின் உழைப்பே காரணமென்று சொல்லத்தக்க வகையில் தன்னலமின்றிப் பாடுபட்டனர்.

தமிழரசுக் கழகத்தின் கிளைகளும், பேச்சாளர்களும், ஊழியர்களும் காங்கிரசின் வெற்றிக்காக முழு மூச்சுடன் உழைத்து வந்த நேரத்திலே, நான் மட்டும் காங்கிரசுடன் 'ஒத்துழையாமை'யைக் கடைப்பிடித்தேன். வேலூர் தீர்மானப்படி தார்மிக ரீதியில் காங்கிரசின் வெற்றிக்கு உதவுபவனானேன். நட்புக்காக திரு. சி.சுப்பிரமணியம் போட்டியிட்ட பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதியிலும் — திரு. நா.மகாலிங்கம் போட்டியிட்ட பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியுள்பட — திரு.ஈ.எஸ். தியாகராசன் போட்டியிட்ட தணிகைத் தொகுதியிலும் பேசினேன். தி.மு.கழகத்தின் போட்டி வலுவாக உள்ள தொகுதிகளிலே காங்கிரசுக்கே வாக்களிக்குமாறு பொதுமக்களை வேண்டிக் கொண்டு பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டேன். எனது அறிக்கை பெருமளவுக்குப் பலன் தந்ததாக திரு.சி. சுப்பிரமணியம் என்னிடம் நேறில் கூறினார்.

இந்தப் பொதுத் தேர்தலிலே தமிழகம் முழுவதிலும் காங்கிரசுக்கும், தி.மு.கழகத்திற்கும்தான் வலுவான போட்டியிருந்தது. 1957 பொதுத் தேர்தலிலே 15 இடங்களை மட்டுமே கைப்பற்றிய தி.மு.கழகம் இந்தப் பொதுத் தேர்தலிலே 50 இடங்களைப் பெற்றது. இதுவும் நான் எதிர்பார்த்ததுதான். தேர்தல் முடிவு தெரிவதற்கு முன்பே 30-க்கு மேற்பட்ட தொகுதிகளில் தி.மு.கழகம் வெற்றி பெறக் கூடுமென்று எனது 'செங்கோல்' இதழில் எழுதியிருந்தேன். அது 'மாலை முரசு' இதழில் 7 கலம் தலைப்பில் வெளியிடப்பட்டது. எனது கருத்து காங்கிரஸ் வட்டாரத்திலே அதிர்ச்சியைத் தந்தது. பொது நிகழ்ச்சி ஒன்றிலே என்னைச் சந்தித்த திரு.சி.சுப்பிரமணியம், நான் தி.மு.க.வின் பலத்தை அதிகப்படியாக மதிப்பிட்டு விட்டதாக என்னிடம் குறைபட்டுக் கொண்டார். நான் அதிகப்படியாக மதிப்பிட்டதைவிட, அதைப் பத்திரிகைகள் வாயிலாக வாக்காளர் அறிய வெளியிட்டதற்காகத்தான் அவர் மிகவும் வருத்தப்பட்டார். திரு. காமராசரும், பெரியார் ஈ.வெ.ரா.வும், நண்பர் திரு.சி.சு.வும், தி.மு.க.வுக்கு 6 அல்லது 7 இடங்களுக்கு அதிகமாகக் கிடைக்காதென்று தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கூறிவந்த நேரத்திலே காங்கிரசுக்கு தார்மிக ஆதரவளித்து வந்த நான் அந்தக் கழகம் 30-க்கு மேற்பட்ட தொகுதிகளில் வெற்றியடையக் கூடுமென்று சொன்னது காங்கிரஸ் வட்டாரத்தால் சகித்துக் கொள்ள முடியாத கருத்துதானே!

தி.மு.க. வெற்றி கண்டு கவலை

தி.மு.கழகம் 50 இடங்களைக் கைப்பற்றியது கண்டு நான் வியப்படையவில்லை என்றாலும், பயந்தேன் என்பதை இங்குச் சொல்லியாக வேண்டும். 'திராவிட நாடு' கோரிக்கையை மிகவும் தெளிவாகத் தனது தேர்தல் பிரகடனத்திலே வலியுறுத்தியிருந்தது. அந்த நிலையில், அந்தக் கழகத்திற்கு 50 தொகுதிகளை வாக்காளர்கள் அளித்ததற்காகத்தான் அஞ்சினேன்.

1957 பொதுத் தேர்தலின்போது வெளியிட்ட தேர்தல் பிரகடனத்திலே தி.மு.க. அவ்வளவு தெளிவாக பிரிவினை கோரிக்கையை வலியுறுத்தவில்லை. இலைமறை காயாகத்தான் சேர்த்து வைத்திருந்தது. 1962 பொதுத் தேர்தலிலே வெளிப்

படையாகவே பிரிவினையை வற்புறுத்துவதற்கான துணிச்சலைப் பெற்றிருந்தது.

தி.மு.கழகத்தின் வெற்றி கண்டு திரு. காமராசர் மிகுந்த கவலைப்பட்டார். அவரை விடவும் அதிகமாகக் கவலைப்பட்டார் பிரதமர் நேரு. தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சியின் அஸ்தமனம் நெருங்கிவிட்டதென்ற நினைப்பு பரவலாக ஏற்பட்டது. காங்கிரஸ் ஆட்சி அஸ்தமிப்பதற்காக நான் கவலைப்படவில்லை. தி.மு.க. ஆட்சி தோன்றிவிடக் கூடுமோ என்றுதான் நான் கவலைப்பட்டேன். காரணம் தி.மு.க. மீது கொண்ட துவேஷம் அல்ல; அந்தக் கழகத்தின் மீதோ, அதன் தலைவர் மீதோ எந்த நாளிலுமே நான் துவேஷம் கொண்டதில்லை. இந்தியாவிலிருந்து 'திராவிட'த்தைத் துண்டாட வேண்டுமென்ற தி.மு.க.வின் கோரிக்கையை நான் வெறுத்தாலும், அதற்காகவும் அந்தக் கழகம் ஆட்சிக்கு வருவது குறித்து நான் அஞ்சவில்லை. ஆட்சி பீடத்திலேறிவிட்ட பின் திராவிட நாட்டுப் பிரிவினையை அணுகுவது அனுபவ சாத்தியமற்றது என்பதனை அன்றே நான் அறிந்து வைத்திருந்தேன். ஆனால், தமிழர் தனி இனத்தவர் என்ற உண்மைக்கு எதிராக நான்கு மொழியினரும் கலந்த ''திராவிடர்'' என்ற போலி இன உணர்ச்சியை வளர்க்க தி.மு.க. முயன்று வந்ததே, அதைக் கண்டுதான் நான் அஞ்சினேன். அதனால், ''தமிழர்'' என்னும் இனவுணர்ச்சி செத்துவிடக் கூடுமோ என நான் கவலைப்பட்டேன்.

மற்றும், எனது தமிழரசுக் கழகம் வற்புறுத்தி வந்த மொழி வாரி மாநிலக் கோரிக்கைக்கு மாறாக நான்கு மொழியினர் கலந்த சென்னை ராஜ்யத்தையே நிலைநிறுத்திவிட தி.மு.க. விரும்பியதே, அதற்காகவும் அந்தக் கழகத்தின் மீது நான் ஆத்திரப்பட்டேன்.

அதைவிடவும் பாதுகாப்பு, போக்குவரவு, அயல்நாட்டுறவு ஆகிய மூன்று பொறுப்புகளையும் மத்தியிலே விட்டு வைத்து, மற்ற பொறுப்புகளை மாநிலங்களுக்கே உரிமையாக்கு'' சுயாட்சிக் கோரிக்கைக்கு எதிராக ''சுதந்திரத் திராவிடம் கோரியதே, அது காரணமாகவும் தி.மு.கழகம் ஆட்சிக்கு வருவதை நான் விரும்பாதவனானேன். ஆனால், காலம் தி.மு.க.வின் கருத்தை

மாற்றி, அதற்கும் தமிழரசுக் கழகத்திற்கும் அரசியல் ரீதியில் உறவை ஏற்படுத்துவது சாத்தியமே என்ற நம்பிக்கையும் எனக்கு இருந்து கொண்டுதான் இருந்தது.

அஸ்தமனம் ஆரம்பம்

1962-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 60-க்கு மேற்பட்ட இடங்களில் போட்டியிட்டு 6 இடங்களை மட்டுமே கைப்பற்றியது ராஜாஜியின் சுதந்திராக் கட்சி. இதனால், அந்தக் கட்சிக்கு தமிழகத்தில் எதிர்காலம் இல்லையென்பது அப்போதே தெளிவாகப் புலனாகிவிட்டது. ''எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்'' என்ற எனது மொழிக் கொள்கைக்கு முற்றிலும் எதிரியான சுதந்திராக் கட்சியின் வீழ்ச்சி எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

பொதுவாக, நாடு முழுவதிலும் நடந்த 3ஆவது பொதுத் தேர்தலிலே வேங்கடத்திற்கு வடக்கே தனது வருங்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்ளத்தக்க வகையில் காங்கிரஸ் கட்சி வெற்றியடைந்ததென்றாலும், தமிழ்நாட்டிலே அதன் அஸ்தமனம் ஆரம்பமாகி விட்டது என்பதனை ஊகித்துணர என்னால் முடிந்தது. நாடு முழுவதிலும் காங்கிரசின் செல்வாக்கு கொடி கட்டிப் பறக்கும்போது, தமிழ்நாட்டில் மட்டும் அதன் அஸ்தமனம் ஆரம்பமானதற்குக் காரணம், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு — தமிழினத்தின் தனி உரிமைகளுக்குப் பாடுபட அது தவறியதுதான்.

தி.மு.க. மீது தமிழ்நாடு காங்கிரசுக்கிருந்த வெறுப்புணர்ச்சியானது, தமிழ் இயக்க எதிர்ப்பாகவும் மாறியிருந்தது. தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பாடுபடாத ஒரு கட்சியைத் தமிழர் விரும்பாததில் தவறில்லைதானே!

பயிற்சிமொழிப் போர்

எப்படியோ, தோல்வியிலேயும் வெற்றி கண்ட பெருமிதத்தோடு, பொதுத் தேர்தலுக்குப் பின் தமிழ்நாட்டிலும் காங்கிரஸ் ஆட்சி சிறிது மங்கலாக பிரகாசிக்கத் தொடங்கியது. தொடர்ந்து திரு.காமராசர் அமைச்சரவையே நீடித்தது. ஆனால், பொதுத் தேர்தலுக்கு முன்புவரை கல்வி அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டு மத்தியில் அமைச்சராகி விட்டதால், திரு.எம். பக்தவத்சல னார் தமிழகத்தின் கல்வியமைச்சராக வந்தார். இது தமிழைப் பிடித்த துரதிர்ஷடமாகி விட்டது. போராட்டச் சூழ்நிலையிலே வாழுகின்ற துரதிர்ஷ்டசாலியான என்மீது மற்றொரு போராட் டத்தைச் சுமத்திவிட்டார், கல்வித் துறைக்குப் புதிதாகப் பொறுப் பேற்ற திரு. பக்தவத்சலனார்.

சி.சு.வின் திட்டம்

திரு.சி.சுப்பிரமணியம் கல்வியமைச்சராக இருந்தபோது, தமிழரசுக் கழகத்தின் கிளர்ச்சிக்கு மதிப்பளித்து தமிழகக் கல்லூரிகளிலே பி.ஏ. வகுப்புகளில் தமிழைப் பயிற்சி மொழி யாக்க முயற்சி எடுத்தார். அனைத்துக் கல்லூரிகளிலேயும், எல்லாப் பாடங்களுக்கும் தமிழை மட்டுமே பயிற்சி மொழியாக் கும் கொள்கையின் அடிப்படையிலேதான் அதற்கு முன்னோடித் திட்டமாக பி.ஏ. வகுப்புகளில் தமிழைப் பயிற்று மொழியாக்க முனைந்தார். அந்தத் திட்டத்தை அறிவிக்கும் வெள்ளை அறிக்கை ஒன்றையும் சட்டமன்றத்தின் முன் வைத்தார். அந்த முயற்சிக்கு எதிர்ப்பு கடுமையாக இருந்ததென்றாலும், அவர் உற்சாகப்படக்கூடிய வகையில் வலுவான ஆதரவும் இருந்தது. எதிர்ப்புக்கு எதிர்ப்புக் காட்டவும், ஆதரவைப் பெருக்கி வளர்க் கவும் நான் பொறுப்பேற்றேன். அதிலே தமிழரசுக் கழகத்தையும் முழு அளவில் ஈடுபடுத்தினேன். திரு.சி.சு. அவர்களும் தமிழ் பயிற்சி மொழித் திட்டத்திற்கு ஆதரவாகவும், அதனை எதிர்ப்

போருக்கு எதிராகவும் பிரச்சாரப் போர் நடத்தினார். அந்நாளில் தமிழகம் முழுவதற்கும் ஒரே பல்கலைக் கழகமாக விளங்கிய சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் இலட்சுமணசாமி முதலியாரோடு மோதவும் செய்தார். தனது முன்னோடித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர மறுக்கும் தனியார் கல்லூரிகளுக்கு அரசிடமிருந்து மானியம் கிடைக்கா தென்றும் அறிவித்தார்.

காங்கிரஸ் ஆட்சியிலேதான் திரு.சி.சு. கல்வியமைச்சராக இருந்தாரென்றாலும், அவரது பயிற்சி மொழித் திட்டத்திற்கு ஆதரவளிக்க தமிழ்நாடு காங்கிரசோ, தமிழக முதல்வர் திரு. காமராசரோ முன்வரவில்லை. காரணம், தனது தலைமை யின் கீழ் உள்ள கல்வி அமைச்சர் எனது பாதையிலே நடைபோ டத் தொடங்கி விட்டார் என்ற எரிச்சல்தான். எனது கழகத்தின் ஆதரவைப் பெற்று, தமிழைப் பயிற்சி மொழியாக்குவதிலே மிகுந்த துணிச்சலுடன் திரு.சி.சு. செயல்பட்டார்.

எங்கும் எதிலும் தமிழுக்கே முதலிடம் தேட வேண்டு மென்று முடிவு கட்டிக் கொண்டு, அதனை நிறைவேற்றுவதற் காகத் ''தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் கழகம்'' என்ற அமைப் பினை நிறுவினார்.

''தமிழ் நூல் வெளியீட்டுக் கழகம்'' ஒன்றையும் தோற்று வித்தார். இந்த அமைப்புகளிலெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியோடு என்னையும் அங்கமாக்கினார்.

பயிற்சி மொழித் திட்டம் செயல்படுத்தப் படுவதால் ஏற்ப டும் விளைவுகளை மதிப்பிட்டு ஆண்டுதோறும் அறிக்கை தர சென்னை, மைசூர், திருவனந்தபுரம் பல்கலைக் கழகங்களைச் சார்ந்த கல்வி நிபுணர் கொண்ட குழு ஒன்றையும் திரு.சி.சு. நிறுவினார். ஆங்கிலத்தின் ஆதிக்கத்தை அகற்றித் தமிழுக்குப் புதுவாழ்வு தேடும் திட்டத்துக்காகும் செலவுக்காக அடையாளத் தொகையாக முப்பது லட்சம் ரூபாயை அரசு நிதியிலிருந்து ஒதுக்கினார்.

'ஆபட்ஸ்பரி' நிகழ்ச்சி

அப்போது மத்திய அமைச்சராக இருந்த டாக்டர் ப.சுப்பராயன் தமிழகக் கல்வியமைச்சரின் தமிழ்ப் பயிற்று மொழித் திட்டத்தைக் கடுமையாகத் தாக்கிப் பிரச்சாரம் செய்து வந்தார். ஆம்; தமிழகம் வரும்போதெல்லாம்!

11.9.60-இல் சென்னை ஆபட்ஸ்பரித் தோட்டத்தில் தமிழரசுக் கழகத்தாரின் ஆதரவோடு நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நடத்திய பாரதி விழாவிலே, ''கிராமணியார் தமிழைப் படிக்கச் சொல்லுகிறார். தமிழன் சிலப்பதிகாரத்தையும் புறநானூற்றையும் படித்துவிட்டால் அவனுக்கு உத்தியோகம் கிடைத்து விடுமா?'' என்று என்னை மேடையில் வைத்துக் கொண்டே பேசினார். ஆம்; தமிழைப் படிப்பதற்கும், தமிழிலே மற்றப் பாடங்களைப் படிப்பதற்கும் உள்ள வேற்றுமையைப் புரிந்து கொள்ளாமல் பேசினார்.

அவரது பேச்சு, பாரதி விழா அரங்கில் குழுமியிருந்த தமிழரசுக் கழகத் தோழர்களுக்கு ஆத்திரமூட்டியதால், அவருக்கு எதிராகக் குரல்கள் ஒலித்தன. ''தமிழ் வளர்த்த பாரதி விழாவில் தமிழுக்கு எதிராகப் பேசாதே!'' என்றும், ''ஆங்கில ஆதிக்கத்தை முறியடிப்போம்'' என்றும் திரு. ஜி.உமாபதி உள்ளிட்ட இளைஞர் பலர் ஆவேசத்துடன் குரல் கொடுத்தனர். டாக்டர் சுப்பராயன் மேலே பேச முடியாமல் வாயடைத்து நின்றார். நான் ஒலிபெருக்கி முன் வந்து பேசி அமைதி ஏற்படுத்த வேண்டியதாயிற்று.

அதே மேடையில் டாக்டர் சுப்பராயனுக்குப் பின் பேசிய நான் அவருக்குப் பதிலளித்தேன். அவர் காங்கிரஸ்காரர் என்ற முறையில் அல்லாமல், மேட்டுக்குடி மக்கள் சார்பில் — அவர்கள் மக்கள் மீது பெற்றுள்ள ஆதிக்கத்தை நிலைநிறுத்தப் பேசுகிறார் என்று கூறினேன். இதுபோன்ற நேரங்களில் எளிதில் உணர்ச்சி வயப்பட்டுப் பேசும் வழக்கமுடைய நான், அன்று மட்டும் வழக்கத்திற்கு மாறாக மிகுந்த அமைதியாகப் பேசி, டாக்டர் சுப்பராயனுக்குப் பதிலளித்தேன். அச்சத்தாலல்ல;

அமைதி காக்கும் ஆர்வத்தால்! 'ஆபட்ஸ்பரிக் குழப்ப'த்திற்குப் பின்னர், தமிழ்ப் பயிற்சி மொழிப் பிரச்சினையிலே சூடு பிடித்தது.

சி.சு. கூட்டிய மாநாடு

ஆபட்ஸ்பரி பாரதி விழாவைத் தொடர்ந்து தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டத்திற்கு ஆதரவாகவும் எதிராகவும் பத்திரிகைகளில் கருத்துகள் வெளியாயின. மற்றொரு மத்திய அமைச்சாரான திரு. டி.டி. கிருஷ்ணமாச்சாரியும் திரு. சி.சு.வின் சக அமைச்சராகவிருந்த திரு. ஆர். வெங்கடராமனும் தமிழ் பயிற்சி மொழியாக்கப்படுவதை மறைமுகமாக எதிர்த்துப் பேசி வந்தனர். இதையெல்லாம் காங்கிரஸ் மூலவரும் தமிழக முதல்வருமான திரு.கு. காமராசர் மௌனத்தில் மறைந்து கொண்டு வேடிக்கை பார்த்து வந்தார்.

திரு.சி.சு. தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டம் பற்றி விவாதிக்க சென்னைப் பல்கலைக் கழக செனட் மண்டபத்திலே கல்வி நிபுணர்களின் மாநாடொன்றைக் கூட்டினார். சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்களான டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார், திரு.டி.எம். நாராயணசாமிப் பிள்ளை மற்றும் டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், டாக்டர் மு.வரதராசனார், நாவலர் ச.சோமசுந்தர பாரதியார், டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை, பல்வேறு கல்லூரிகளின் முதல்வர்கள் அந்த மாநாட்டிலே கலந்து கொண்டனர்.

அரசியல்வாதிகளான நானும், தோழர் ப.ஜீவானந்தம், 'விடுதலை' ஆசிரியர் எஸ்.குருசாமி ஆகியோரும் அதில் கலந்து கொண்டோம். கல்வி அமைச்சர் சி.சுப்பிரமணியம் தலைமை வகித்தார். இதிலே கலந்து கொண்ட துணை வேந்தர்களிருவரும் தமிழ் பயிற்சி மொழியாக்கப்பட்டதைப் பொதுப் படையாக வரவேற்றனரென்றாலும், அத்துறையில் அவசரப்படுவதும், கட்டாயப்படுத்துவதும் கூடாதென்றனர். ஆம்; அவர்கள் இந்தப் பிரச்சினையில் அரைக்கிணறு தாண்டினர். நாவலர் ச.சோ.பாரதி, ஆங்கில ஆதிக்கத்தை அழித்தொழிக்க வேண்டுமென்று ஆவேசத்துடன் பேசினார்.

நானும், நண்பர் ஜீவானந்தமும் தேசியப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கல்வியமைச்சரின் பயிற்சி மொழிக் கொள்கையை அழுத்தந்திருத்தமாக ஆதரித்துப் பேசினோம். முடிவில், படிப்படியாகத் தமிழைப் பயிற்சி மொழியாக்கும் கல்வியமைச்சரின் திட்டத்திற்கு மாநாடு ஆதரவு தந்ததென்று பத்திரிகைகளுக்கு அறிக்கை தரப்பட்டது.

மந்திரி மாறினார்

இந்தச் சூழ்நிலையில்தான் — 1962 பொதுத் தேர்தலிலே — திரு. சி.சு. நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மத்தியில் அமைச்சராகப் போனார். தமிழகத்தில் திரு.மீ.பக்த வத்சலனாரைக் கல்வி அமைச்சராக்கினார் முதலமைச்சர் திரு.கு. காமராசர். இந்த மாறுதலைக் கண்டு தமிழ் மொழியிடத் துப் பற்றுள்ள முற்போக்காளர்கள் வியப்பும் வேதனையும் அடைந்தனர். அதே நேரத்தில், பரங்கிமொழிப் பக்தர்கள் புதிய கல்வியமைச்சருக்குப் பல்லாண்டு பாடி, அவரை வரவேற்கப் பாய் விரித்தனர்.

கல்வி அமைச்சர் மாறியது கண்டு நான் கலங்கவில்லை. பயிற்சி மொழித் திட்டத்திற்கு மக்களுடைய ஆதரவைத் திரட் டத் தயாரானேன். அதற்கான முதல் நிகழ்ச்சியாக, கொஞ்சம் முன்னெச்சரிக்கையாகவே கோவையில் ''தமிழ்ப் பயிற்சி மொழி ஆதரவு மாநாடு'' ஒன்றைக் கூட்டச் செய்தேன். திருவாளர்கள் வெ.புருஷோத்தமன், சி.கே. சிவராமகிருஷ்ணன் ஆகிய தமிழரசுக் கழகத் தோழர்கள் அம் மாநாடு வெற்றிபெற முன்னின்று உழைத்தனர்.

கோவை கண்ணன் கலையக உரிமையாளர் திரு.சு. கண் ணன், கோவை நகரில் த.அ.க. சார்பிலோ, ஆதரவிலோ எந்த மாநாடு நடைபெற்றாலும், அதிலே தன் கைவண்ணத்தைக் காட்டுவார். இந்த மாநாட்டிலும் அவர் பணியாற்றினார்.

சர்வோதய வாதியான திரு.கு.அருணாசலம் அவர்கள் தலைமையில் நடந்த இந்த மாநாட்டில், தவத்திரு குன்றக்குடி அடிகளார், முன்னாள் கல்வி அமைச்சர் திரு.தி.சு. அவினாசி

லிங்கம் செட்டியார், திரு.பி.எஸ்.ஜி.ஜி. கோவிந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். பழம்பெரும் காங்கிரவாதியான திரு. அவினாசிலிங்கனார் காங்கிரஸ் அமைச்சரவையின் தமிழ் விரோதப் போக்கைக் கடுமையாகக் கண்டித்துப் பேசினார்.

திரு.மீ. பக்தவத்சலம், தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டத்தைக் கைவிடும் உத்தேசம் தமக்கில்லை என்று அறிவித்தார். இந்த அறிவிப்பு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. ஆனால், ஒரு திங்கள் கழிந்ததும், முன் அறிவித்ததிலிருந்து கல்வி அமைச்சர் பின் வாங்கலானார்.

''தமிழைப் பயிற்சி மொழியாக்கக் கட்டாய முறையை நான் கையாள முடியாது. தமிழுக்காகப் பரிந்து பேசுவோர் அதனைப் பயிற்சி மொழியாக்குவதற்கு ஆதரவான சூழ்நிலையை உருவாக்கப் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

''வருகிற கல்வியாண்டில், தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட மாட்டாது. நன்கு யோசித்த பின்னரே, அதுபற்றி இறுதி முடிவு எடுக்கப் படும்.''

என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார். கல்வி அமைச்சரின் போக்கு காங்கிரசின் நெடுநாளைய பயிற்சிமொழிக் கொள்கைக்கும் காந்திய நெறிக்கும் அறைகூவல் விடுவதாக இருந்தது. அப்படியிருந்தும், த.நா. காங்கிரஸ் கமிட்டியோ, சட்டமன்ற காங்கிரஸ் கட்சியோ, திரு. காமராசர் தலைமையில் இயங்கிய அமைச்சரவையோ அதுபற்றிக் கவலைப்படவில்லை.

காமராசர் பேசினார்!

கல்வி அமைச்சர் தாம் பேசுமிடங்களிலே, ஆங்கிலக் கல்வியின் அவசியம் பற்றி வற்புறுத்தலானார். தமிழின் மூலம் கல்வி கற்றால் உலகத்தோடு தொடர்பற்று விடுவோம் என்றும் பயமுறுத்தினார். கல்வி அமைச்சர் மாறும்வரை தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டத்தில் மதில்மேல் பூனையாக இருந்து கொண்டு

மவுனம் சாதித்து வந்த முதலமைச்சர் காமராசர், இப்போது மவுனத்தைக் கலைத்துப் பேசத் தொடங்கினார். அவரது பேச்சு தமிழுக்கு ஆதரவாக இருக்கவில்லை. ஆங்கில ஆதிக்கத்துக்கு ஆசி கூறுவதிலே கல்வி அமைச்சர் பக்தவத்சலனாரோடு போட்டி போடுவதாகவும் அமைந்தது.

பெரியார் ஈ.வெ.ரா., பக்தவத்சலனாரின் தமிழ் விரோதப் போக்கை வரவேற்றார். ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக்க மட்டுமல்லாமல், வீட்டுக்கு வீடு பேசுகின்ற மொழியாகவும் ஏற்றுக் கொண்டால்தான் தமிழர் முன்னேற முடியும் என்று அறிக்கை விட்டார். அந்த அறிக்கை செய்தித் தாள்களில் பிரதான தலைப்புகள் தந்து பிரசுரிக்கப் பெற்றது.

'என்றென்றும் ஆங்கிலம்' என்று இந்திக்கு எதிராகக் குரல் கொடுத்துக் கொண்டிருந்த சுதந்திராக் கட்சியின் தலைவர் ராஜாஜி அவர்களும், திரு. பக்தவத்சலனார் அவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் அவருடைய தமிழ் விரோதச் செயலுக்கு ஆதரவளிக்க முன் வந்தார்.

காங்கிரஸ் வட்டாரத்திலே சிறந்த கல்விமான்களாக விளங்கிய திரு. நா.மகாலிங்கம், டாக்டர் ப.நடராசன், டாக்டர் மு.அறம் ஆகியோர் கல்வி அமைச்சரின் ஆங்கில மோகத்தைக் கண்டித்து அபிப்பிராயம் கூறினர். கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களிடையேயும் கல்வி அமைச்சரின் போக்குக்கு எதிராக வெறுப்பு வளர்ந்தது.

செயற்குழுவின் முடிவு

நிலைமையை ஆராய்ந்து முடிவெடுக்க தமிழரசுக் கழகச் செயற்குழுவை 11.8.62-இல் கூட்டினேன். எனக்கோ, தமிழரசுக் கழகத்துக்கோ காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதிலே மகிழ்ச்சியிருக்க நியாயமில்லை. அப்போதுதான் நடந்து முடிந்த பொதுத் தேர்தலிலே காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்குத் தமிழரசுக் கழகம் வலுவில் சென்று கைகொடுத்தது. ஆகவே, பொதுத் தேர்தல் முடிந்து சில மாதங்களுக்குள்ளேயே

காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராகக் களம் புகுவதென்பது நினைத்துப் பார்க்கவும் முடியாததாக இருந்தது. ஆயினும், தன் மீது போர் திணிக்கப்படும்போது அதை ஏற்றுக் களம் புகுவதற்கு எனது கழகம் தயங்கினால், அது கோழைத்தனமல்லவா!

தமிழகக் கல்வி அமைச்சரின் தமிழ் விரோதப் போக்குக்கு எதிராக, அவர் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது, அவருக்கு எதிராக கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்துமாறு கழகக் கிளைகளுக்கும், தோழர்களுக்கும் ஆணையிட்டது. இதன்படி, சென்னை நகரிலும் மற்ற மாவட்டங்களிலும் கல்வி அமைச்சருக்கு எதிரே கறுப்புகொடி காட்டி கழகத் தோழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். சேலம் நகரில் ஒருமுறை மட்டும் கம்யூனிஸ்டுக் கட்சியினரும் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தி, தமிழரசுக் கழகம் மேற்கொண்ட போராட்டத்திற்குத் தங்களுடைய தார்மிக ஆதரவைத் தெரிவித்தனர். கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நான் எதிர்பார்த்தைவிடவும் தீவிரமாகத் தொடர்ந்து நடந்து வந்தது.

பல ஊர்களிலே கல்வி அமைச்சர் செல்வதற்கு முதல் நாள் இரவிலேயே கழகத் தோழர்கள் தடுப்புக் காவல் சட்டப்படி போலீசாரால் கைது செய்யப்பட்டு ஆங்காங்குள்ள சிறைகளில் அடைக்கப்பட்டனர். முன்கூட்டிக் கைது செய்யும் வெறித்தனத்தை மதுரை மாவட்டத்திலேதான் மிகுதியாக வெளிப்படுத்தியது காமராசர் ஆட்சி. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தோழர்களைக் கைது செய்து, நள்ளிரவில் நெடுந்தூரத்தில் கொண்டு போய்விட்டு வந்தனர். சில இடங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தடிகளால் அடிக்கப்பட்டு கலைக்கப்பட்டனர். அதனால் கழகத் தோழர்களில் பலர் பலமாகக் காயமுற்றனர்.

புலவர் கீரன் மீது வழக்கு

திருச்சி நகரிலே புலவர் கீரன் உட்பட பலர்மீது அமைதியைக் குலைக்கும் வகையில் பொதுமக்களைப் பயமுறுத்தியதாகக் கிரிமினல் சட்டப்படி வழக்குத் தொடரப்பட்டது. அதிலே,

வக்கீலை அமர்த்தாமல் தாமே எதிர்வழக்காடினார். புலவர் கீரன், குற்றம் நிரூபிக்கப்படவில்லையென்று கூறி, நகர மாஜிஸ்ரேட் அனைவரையும், விடுதலை செய்தார். இவ்வளவும் காங்கிரசின் நீண்ட நாளையக் கொள்கையை அமுல் நடத்தக் கோரிய பாவத்திற்காகத்தான்! தேர்தல் களத்திலே காங்கிரசின் வெற்றிக்காக வலுவில் சென்று உழைத்தவர்களை, தேர்தல் முடிந்த சில மாதத்துக்குள் அடித்து நொறுக்கவும், நள்ளிரவில் காடுகளில் கொண்டு போய் விடவும், தடுப்புக் காவல் சட்டப் படி விசாரணையின்றிச் சிறைகளில் அடைக்கவும், சமூக விரோ திகளுக்கென உள்ள கிரிமினல் சட்டப்படி வழக்குத் தொடுக்க வும் முன் வந்தது காங்கிரஸ் ஆட்சி. ஆம்; 'நன்றி'யுணர்வு!

தமிழரசுக் கழகத் தோழர்கள் கல்வி அமைச்சருக்கு எதிரா கத்தான் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். முதல மைச்சர் பக்கமே போகவில்லை. காமராசர் தலைமையில் இயங் கிய காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராகக் கோஷம் எழுப்பவோ, செயல்புரியவோ இல்லை. ஆனால், கழகம் கடைப்பிடித்த இந்தப் பண்பாட்டிற்குக் காமராசர் ஆட்சி மதிப்புத் தரவில்லை. கழகத்தைத் தனது எதிரியாகவே கருதி, அடக்கு முறையில் ஈடுபட்டது.

கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டங்கள் ஆங்காங்கு நடைபெற் றுக் கொண்டிருந்த நிலையிலே கல்வி அமைச்சரின் தமிழ் விரோதச் செயலுக்கு எதிராகத் தமிழ்நாட்டு மக்களைத் திரட்டு வதற்கான முயற்சிகளை மேற்கொண்டேன். சென்னை, மதுரை, கோவை, திருச்சி, குடந்தை ஆகிய நகரங்களிலே தமிழ் பயிற்சி மொழியாவதற்கு ஆதரவளிக்கும் சிறப்பு மாநாடுகளை நடத்தச் செய்து அவற்றிலே நான் பங்கு கொண்டேன்.

சர்வோதய வாதிகளின் ஆதரவு

திரு.சி.சுப்பிரமணியம் கல்வி அமைச்சராக இருந்து, தமிழைப் பயிற்சி மொழியாக்குவதற்கு அவர் முயற்சி எடுத்த சந்தர்ப்பத்திலே நடந்த பயிற்சி மொழி மாநாடுகளிலே கலந்து கொண்ட பேராசிரியர்களிலே பலர் திரு. பக்தவத்சலனார் கல்வி

அமைச்சரான பின்னர் நடைபெற்ற மாநாடுகளிலே பங்கு கொள்ள மறுத்துவிட்டனர். ஒன்றிருவர் கல்வி அமைச்சரின் தமிழ் விரோதச் செயலுக்கு ஆதரவளிக்கவும் துணிந்தனர். இந்த நிலையிலும் டாக்டர் மு.வரதராசனார், பேராசிரியர் இலக்குவ னார், பேராசிரியர் ம.ரா.போ. குருசாமி போன்றவர்கள் கல்வி அமைச்சருக்கு எதிராக எனது முயற்சியால் நடத்தப்பட்ட மாநாடுகளிலேயும் கருத்தரங்குகளிலேயும் கலந்துகொண்டனர். கோவை பூ.சா.கோ. கல்லூரி ஜி.ஆர். தாமோதரம், திரு. நா.மகாலிங்கம், தவத்திரு. குன்றக்குடி அடிகளார், சர்வோ தயவாதிகளான மதுரை க.அருணாசலம், சிந்தனைக் குழுத் தலைவர் டாக்டர் மு.அறம், புலவர் ர.சீனிவாசன், எம்.ஏ., மதுரை டி.டி. திருமலை போன்றவர்கள் தமிழ் பயிற்சி மொழிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். இப்படி, கல்வி அமைச்சர் பக்தவத் சலனாரின் பறங்கி மொழி மோகத்துக்கு எதிராக தமிழரசுக் கழகம் போராடிக் கொண்டிருந்த நேரத்திலே — அதாவது, 1962 அக்டோபரில் வடக்கே இமயமலைப் பிரதேசத்தை சீனா ஆக்கிர மிக்க முயன்றதன் காரணமாக இந்திய - சீனப் போர் மூண்டது!

நான், அன்றாட வாழ்க்கையிலே முதலில் தமிழன்; அடுத்து இந்தியன் — என்ற உணர்வுடையவன். ஆனால், என் தாய்த் திருநாட்டை அன்னியன் தாக்கும் நேரத்திலே, நான் முதலிலும் இந்தியன்; முடிவிலும் இந்தியன்; நான் இந்தியனைத் தவிர வேறு யாருமில்லை — என்ற கொள்கையுடையவன். அதனால், போர்ச் செய்தி கேட்டதுமே, பயிற்சி மொழிப் போராட்டத்தை நிறுத்தி வைத்திருப்பதாகச் செய்தி இதழ்களில் அறிக்கை வெளி யிட்டேன். வானொலி வாயிலாகவும் அறிவிக்கச் செய்தேன்.

இந்திய — சீனப் போர் நடந்த நாட்களிலே பயிற்சி மொழிச் சிக்கல் பற்றிப் பேசுவதையும், 'செங்கோலி'ல் எழுதுவதையும் கூட அடியோடு நிறுத்தி வைத்திருந்தேன். அதைப் பற்றிய சிந்தனையே இல்லாமல், தமிழ்நாடு முழுவதும் நானும் கழகப் பேச்சாளர்களும் சுற்றுலா செய்து, அரசின் போர் நிதிக்குப் பொருள் தருமாறும், போர்ப் படையில் சேருமாறும் தமிழ் மக்களைத் தூண்டிப் பிரச்சாரம் செய்து வந்தோம். அத்துறை

யில், காங்கிரஸ் கட்சியை விடவும் நாங்கள் அதிக தீவிரங் காட்டினோம். தமிழகத்தின் எல்லைப் பகுதிகள் அண்டையி லுள்ள ஆந்திர — கேரள மாநிலங்களுக்குப் போவதையே எதிர்த்துப் போராட்டம் நடத்திய நாங்கள் எங்கள் தாயகத்தின் எல்லைப் பகுதிகளைப் பறிக்க எங்கோவுள்ள சீனன் படை யெடுத்தால் பொறுப்போமோ? தமிழக அரசு அமைத்த பாது காப்புக் கமிட்டியில் நானும் சேர்த்துக் கொள்ளப்பட்டேன்.

எதிர்ப்பு தொடர்ந்தது!

இந்திய — சீனப் போர் கடுமையாகத்தான் நடந்தது. மலைப்பிரதேசத்தில் போரிடும் பயிற்சி நம் நாட்டுப் படையின ருக்கு இல்லாததால் சீனப் படைகள் நாள்தோறும் முன்னேறிக் கொண்டிருந்தன. தான் உரிமை கொண்டாடிய நிலப் பகுதியைக் கைப்பற்றிய பின்னர், போர் தொடங்கி சரியாக ஒரு மாதத்திற் குப் பின்னர், ஒருதலைப்பட்சமாக சீனா போர் நிறுத்தஞ் செய்தது.

போர் நடைபெற்ற காலத்திலே தமிழகக் கல்வியமைச்சர் என்னையும் எனது கழகத்தையும் மறக்கவில்லை. நாடே சீன எதிர்ப்புப் பிரச்சாரத்திலீடுபட்டிருந்த போது, நமது கல்வி அமைச்சர், தமிழ் எதிர்ப்புப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து நடத்தி னார். ஆங்கிலமே கல்லூரிகளில் பயிற்சி மொழியாக நீடிக்க வேண்டியதன் அவசியத்தை விளக்கி 'நவசக்தி'யில் தொடர் கட்டுரை எழுதினார். அதிலே, வசைச் சொற்களால் என்னை வருணிக்கவும் அவரது எழுதுகோல் தயங்கவில்லை. அந்தத் தொடர் கட்டுரையைத் தனி நூலாக வெளியிட்டது தமிழ்நாடு காங்கிரஸ்.

இந்திய — சீனப் போர் நின்றதுமே கல்வியமைச்சர் தமது தமிழ் விரோதத் 'திருப்பணி'யில் தீவிரங்காட்டினார். மாவட்டத் திற்கு ஒரு ஆண் பள்ளியிலும், ஒரு பெண் பள்ளியிலும் ஆங்கிலப் பயிற்சி மொழி வகுப்புகள் தொடங்க ஏற்பாடு செய்யுமாறு கல்வித் துறை இயக்குநருக்கு அரசின் ஆணை பிறப்பித்தார்.

இதுவன்றி, ''ஆங்கிலப் பயிற்சி மொழி வகுப்புகளைத் தொடங்கி நடத்த அனுமதி தருமாறு எந்த உயர்நிலைப் பள்ளி யிடமிருந்தேனும் கோரிக்கை வந்தால், அது அனுதாபத்துடன் கவனிக்கப்படும்'' என்றும் அறிவித்தார். இதற்காக, உயர் நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மாநாட்டைக் கூட்ட வும் முயற்சி எடுத்தார். தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டம் சில கல்லூரிகளில் நடைமுறையிலிருந்ததால், அதைத் தொடர்வதா, கை விடுவதா? — என்பது பற்றிக் கருத்தறியக் கல்லூரி முதல்வர்கள் மாநாட்டைக் கூட்டப் போவதாகவும் கல்வியமைச் சர் அறிவித்தார். சட்டமன்றக் கல்விக் குழுவினைக் கூட்டி, தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டத்தைக் கைவிடுவதற்கு ஆதரவாக முடிவெடுக்கச் செய்தார். பழையபடி ஆரம்பப் பள்ளிகளில் மேல் வகுப்புகளிலே ஆங்கில மொழிப் பாடம் திணிக்கப்பட்டது.

ஆம்; நான் கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்கு மாறு அரசுடன் போராடிக் கொண்டிருந்த நேரத்திலே, ஆரம்பப் பள்ளிகளிலேயும் ஆங்கிலத்தைப் புகுத்தவும், உயர்நிலைப் பள்ளிகளிலேயும் ஆங்கிலப் பயிற்சி மொழி வகுப்புகளைத் துவக்கவும் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளலானது.

இப்படி, தமிழை ஒரு பாடமொழி என்ற நிலைக்குத் தாழ்த்தி கல்வி முழுவதையும் ஆங்கில மயமாக்கிவிட முயன் றார் பக்தவத்சலனார். சிறந்த தேச பக்தரும் சிறை சென்ற தியாகியுமான அவர் தம் தாய்மொழி விஷயத்தில் இவ்வளவு மோசமாக நடந்து கொண்டது எனக்கு மிகுந்த வியப்பைத் தந்தது. திரு. சி.சுப்பிரமணியம் கல்வித் துறையில் புகுத்திய முற்போக்கான மாறுதல்களையெல்லாம் அடியோடு அகற்றிவிட முயன்றார்.

சீனா ஒருதலைபட்சமாகப் போர் நிறுத்தஞ் செய்ததென்றா லும், நாட்டில் மத்திய அரசு பிரகடனஞ் செய்திருந்த ''அவசர நிலைமை'' காலவரம்பின்றி நீடித்தது. போர் நிதிக்குப் பொரு ளும் பிற சாதனங்களும் திரட்டும் முயற்சி தொடர வேண்டு மென்று பிரதமர் நேரு தேச மக்களைக் கேட்டுக் கொண்டார்.

ஆம்; 'மழை நின்றும் தூவானம் நிற்கவில்லை'யென்பது போல, போர் நின்றும் தற்காப்பு முயற்சிகள் இந்தியாவில் நிறுத்தப்பட வில்லை.

இந்த நிலையில்தான் தமிழக அரசு தமிழ் மொழிக்கு எதிரான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டது. பறங்கி மொழிப் பக்தர்கள் அனைவரும் ஒருங்கு திரண்டுத் தமிழுக்கு எதிராகப் பாசறை அமைத்துச் செயல்பட்டனர்.

எதிர்ப்'பாசறை' அமைக்க நான் விரும்பவில்லையென்றா லும் தமிழ் மொழியின் நலன் கருதி அதனைத் தவிர்க்க இயலாதவனானேன். 2.12.62-இல் தமிழரசுக் கழகச் செயற்குழு வைத் திருச்சியில் கூட்டினேன். நிறுத்தி வைக்கப்பட்ட தமிழ் பயிற்சி மொழிப் போராட்டத்தைத் திரும்வும் தொடங்குவ தென்று செயற்குழு முடிவெடுத்தது. பறங்கி மொழிப் பக்தர்க ளின் தமிழ் விரோதப் பிரச்சாரத்தால் ஆத்திரமுற்றிருந்த கழகத் தோழர்கள் செயற்குழுவின் முடிவால் வீறுகொண்டெழுந்தனர். திரும்பவும் நாட்டின் பல பகுதிகளிலே கல்வி அமைச்சருக் கெதிரே கறுப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்தத் தொடங் கினர்.

இம்முறை தமிழ்நாடே ஆங்கிலத்திற்கு எதிராக எழுச்சி கொண்டதோ என்று ஐயுறத்தக்க வகையில் நிகழ்ச்சிகளின் போக்கு அமைந்தது. 1962 டிசம்பரில் தொடங்கிய இந்தப் போராட்டம் 1964 டிசம்பர் வரை தேவைப்பட்ட நேரங்களி லெல்லாம் — இடங்களிலெல்லாம் தொடர்ந்து நடந்தது. இந்த நிலையில் 1963-ஆம் ஆண்டு இறுதியில் திரு. மீ. பக்தவத்சல னார் தமிழகத்தின் முதலமைச்சரானார். பின்னர், தமிழரசுக் கழகத் தோழர்களுக்கு எதிரான அடக்குமுறை வலுத்தது. முதல மைச்சர் செல்லும் ஊர்களில் கழகத் தோழர்களை முன்கூட்டிக் கைது செய்யும் கொடுமை அதிகரித்தது.

கல்லூரிகளின் முதல்வர்கள் மாநாட்டை செப்டம்பர் 13-இல் நடத்த முதலமைச்சர் திட்டமிடலானார். அம் மாநாட் டின் முன் மறியல் நடத்தப் போவதாக அறிவித்தேன். பின்னர், மாநாடு செப்டம்பர் 26-க்கு ஒத்திப் போடப்பட்டது. அன்று

போலீசாரைக் கொண்டு மறியலைச் சமாளித்து மாநாட்டை நடத்திவிட முதலில் அரசு திட்டமிட்டிருந்தது. ஆனால், மாநாட்டைக் கைவிட்டு விட்டதாகக் கல்வியமைச்சர் செப்டம்பர் 25-ஆம் தேதி இரவு அறிவித்தார். இந்தத் தகவல் கல்லூரிகளின் முதல்வர்களுக்குக் கடைசி நேரத்தில் தந்தி மூலம் அறிவிக்கப் பட்டது. அவர்களில் பலர் தந்தி கிடைப்பதற்கு முன்பே புறப் பட்டு, மறுநாள் காலை சென்னை வந்த பின்னர், மாநாடு இல்லையென்பதை அறிந்து ஏமாந்தனர். அவர்கள் மட்டுமல்லாமல், மறியலில் பங்கு கொள்ள வெளியூர்களிலிருந்து சென்னை வந்த தமிழரசுக் கழகத் தோழர்களும் ஏமாந்து ஊர் திரும்பினர்.

கறுப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களைப் போலீசார் படுத்திய கொடுமைகள் என் மனத்துக்கு மிகுந்த வேதனையைத் தந்தன. மதுரையில் வழக்கறிஞர்களான திரு. மு. மாரியப்பன், திரு. சா.கலியாணசுந்தரம் ஆகியோர் கூட 'வேட்டை'யாடப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

முதல்வரைச் சந்தித்தேன்!

கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் ஆளுவோர்பாலுள்ள வெறுப்பை அமைதியான முறையில் மக்கள் வெளிப்படுத்துவதற்கான சாத்விக சாதனமாகும். எந்த ஆட்சியிலும் இது அனுமதிக்கப்படத் தக்கதாகுமென்றே நான் கருதுகின்றேன். ஆளுவோர், இத்தகைய ஆர்ப்பாட்டத்தை மக்கள் தங்களுக்கு இழைக்கும் அவமதிப்பாகக் கருதி, அதனைத் தடுத்துவிட அடக்கு முறையிலீடுபடுவது ஜனநாயக நெறியாகாது. இந்த உண்மையை நினைப்பூட்டி முதல்வர் பக்தவத்சலனாருக்கு 25.9.64-இல் நான் ஒரு கடிதம் எழுதினேன். அதற்கு முதல்வர் எழுதிய பதில் கடிதத்தை இங்கு அப்படியே தருகிறேன்.

27.9.1964

அன்புள்ள திரு. கிராமணியார் அவர்களுக்கு,

தங்கள் 25உ கடிதம் கிடைத்தது. அதற்கு முன்பே 'பத்திரிகையில் பார்த்தேன். போலீசார் ''வேட்டையாடுவ

தாக''த் தாங்கள் கூறியுள்ளது பற்றி விசாரிக்கிறேன். வேற்றுமையையோ, மாறுபட்ட கருத்துகளையோ, அல்லது வெறுப்பையோ, கண்டனத்தையோ தெரிவிப்பதில் ஆட்சேபம் ஒன்றுமில்லை. ஆனால், கையாளப்படுகின்ற முறையில் கருத்து வேற்றுமையிருக்கலாம். வேறு கூட்டம் அல்லது நிகழ்ச்சி நடைபெறும்போது அதையொட்டி ஆர்ப்பாட்டம் செய்வது சரியல்லவென்பது என் கருத்து.

ஆர்ப்பாட்டம் நடத்த விரும்புகிறவர்கள் தங்களுக்கென்று தனி இடத்தில் ஏற்பாடு செய்து கொள்ளலாம். ஆனால், வேறு ஒரு கூட்டத்திற்குக் கறுப்புக் கொடிகளுடன் வந்து தங்கள் கோட்பாடுகளைப் பறைசாற்றுவது நம் பண்பாட்டிற்கு உகந்ததல்ல என்பது என் கருத்து.

தமிழ் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் பாடுபடுவதில் எனக்குப் பரிபூரண ஆர்வம் உண்டு. என்னால் இயன்றதைச் செய்து கொண்டு வருகிறேன். ஆட்சி மொழி கையாளப்படும் விஷயத்தில் வேண்டிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

கல்லூரிகளில் தமிழைப் போதனா மொழியாக்குவதில் என்னைப் பொறுத்தமட்டில் எதிர்ப்பு ஒன்றுமில்லை. வேண்டிய ஆதரவு அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால், தமிழே கல்லூரிகளில் போதனா மொழியாக இருக்க வேண்டுமென்ற கொள்கையை, நானோ, அரசாங்கமோ, சட்டசபையோ ஒப்புக் கொள்ளவில்லை.

இப்படிக்கு,
பக்தவத்சலம்

காங்கிரஸ் ஆட்சியின் முதல்வர், கறுப்புக் கொடி காட்டி மக்கள் அமைதியான முறையில் ஆட்சியின்பால் தங்களுக்குள்ள வெறுப்பை வெளிப்படுத்துவது ''நம் பண்பாட்டிற்கு உகந்ததல்ல'' என்றார். அவரது சித்தாந்தம் உண்மையானால் பண்பாடற்ற அந்தச் செயலை அரசியலில் புகுத்தியது அவர் சார்ந்துள்ள காங்கிரஸ் கட்சிதான். விடுதலைப் போராட்ட

காலத்தில் எத்தனை எத்தனையோ சந்தர்ப்பங்களிலே, ஆங்கில கவர்னர்களுக்கும், வைசிராய்களுக்கும், சைமன் கமிஷன் போன்ற அந்நியர் அங்கம் வகித்த கமிஷன்களுக்கும் கறுப்புக் கொடி காட்டிப் 'பண்பாடற்ற' முறையில் நடந்துகொள்ள நாட்டு மக்களுக்குப் பயிற்சியளித்த ''பெருமை'' காங்கிரசுக்கு உண்டு.

அடிகளாருக்கே கறுப்புக் கொடி!

பாரத சமுதாயத்தின் வரலாற்றிலேயே காந்தியடிகளை விடவும் பெருமைக்குரிய வேறு மகான் ஒருவர் அரசியல் தலைவராக இருக்கவில்லை. அந்த நடமாடும் தெய்வத்திற்கு எதிராகக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்திய ''பெருமை'' யும் காங்கிரஸ்காரர்களுக்கு உண்டு. ஆம்; 1931-ஆம் ஆண்டில் கராச்சியில் கூடிய காங்கிரஸ் மகாசபையிலே, பகவத்சிங்கும் அவரது இரு தோழர்களும் தூக்கிலிடப்படுவதனைத் தடுக்க காந்தியடிகள் மேற்கொண்ட முயற்சிகளிலே மன நிறைவு பெறாத ''சுபாஷ்வாதிகள்'' அடிகளாருக்கு எதிரே கறுப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்தினர். கறுப்பு மலர் ஒன்றையும் பதினாயிரக் கணக்கான மக்கள் மத்தியிலே காந்தியடிகளிடம் நேரில் கொடுத்தனர். 1947-இல் ராஜாஜி அவர்கள் மேற்கு வங்க மாநிலத்திற்கு ஆளுநராகச் சென்றபோது வங்க மாநில காங்கிரசார் திரு. சரத்சந்திர போஸ் தலைமையில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தி ''ராஜாஜியே திரும்பிப் போ'' என்று கோஷித்தனர். ஆம்; அவர் வங்காளியல்லவென்ற காரணத்திற்காக!

முதல்வர் பக்தவத்சலனாரின் கடிதம் கிடைத்த பின்னர், நான் அவரை நேரில் சந்தித்துப் பேசினேன். அவரும் என்னை அன்புடன் வரவேற்று நீண்ட நேரம் என்னுடன் உரையாடினார். அப்போது கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவது ஜனநாயக நாட்டில் மக்களுக்குள்ள உரிமையாகும் என்று அவரிடம் வாதாடினேன். காங்கிரஸ் நடத்திய கறுப்புக் கொடி ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளையும் நினைவூட்டினேன். என் வாதம் அந்தப் பெரியவரிடம் எடுபடவில்லை. தமிழ் பயிற்சி மொழித் திட்டம் பற்றியும் நாங்கள் விவாதித்தோம். அதிலும், பறங்கி மொழியின்

ஆதிக்கத்தை நிலைநிறுத்த பக்தவத்சலனார் கொண்டிருந்த உறுதியைத் தளர்த்த என்னால் இயலவில்லை. எங்கள் சந்திப்பு பயனற்றதாக முடிந்தது.

1962 செப்டம்பர் தொடங்கி 1965 ஜனவரி வரை நடைபெற்ற தமிழ் பயிற்சி மொழிக் கிளர்ச்சியிலே — குறிப்பாக, கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்களிலே கழகத் தோழர்களில் மூவாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சென்னையம்பதியில் 5.9.64-இல் முதல்வர் பக்தவத்சலனார் முன்பு நடைபெற்ற கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு என் மகன் திரு.ம.சி. திருநாவுக்கரசும் கைதியானான். ஆனால், தந்தையைப் போன்று சிறைவாச அனுபவத்தைப் பெறும் 'பேறு' அவனுக்குக் கிடைக்கவில்லை!

பிரசுரங்கள்

ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் போராட்ட காலத்திலே ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து — சிறப்பாக, தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தை விளக்கி — குறிப்பாக, இந்தி எதிர்ப்பின் பெயரால் ''என்றென்றும் ஆங்கிலம்'' — ''எங்கெங்கும் ஆங்கிலம்'' என்று எழுப்பப்பட்ட கோஷங்களால் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் விளையக்கூடிய கேடுகளை விமர்சித்து ஒன்றன் பின் ஒன்றாக ஆறு நூல்களை எழுதி வெளியிட்டேன். அவை வருமாறு:

- ☆ தமிழா, ஆங்கிலமா?
- ☆ பாரதியாரும், ஆங்கிலமும்
- ☆ காந்தியடிகளும் ஆங்கிலமும்
- ☆ இன்பத் தமிழா, இந்தி — ஆங்கிலமா?
- ☆ மாநில சுயாட்சியும் மொழிச் சிக்கலும்
- ☆ ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வரலாறு

இவையன்றி, படித்தவர்களின் பறங்கி மொழி மோகத்தைக் கண்டித்து பாரதியார் எழுதியுள்ளவற்றைச் சிறு சிறு சுவரொட்டிகளாகத் தயாரித்து நாடு முழுவதிலும் பரப்பியது தமிழரசுக்

கழகம். ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கோஷங்களைச் சிறுசிறு சுவரொட்டிகளாகத் தயாரித்து, அவற்றையும் நாடு முழுவதிலும் பரப்பியது.

இந்த நூல்களுக்கும் பிரசுரங்களுக்கும் மாணவர்களிடை யிலும், பொதுமக்களிடையிலும் நல்ல வரவேற்பிருந்தது. ''இன்பத் தமிழா, இந்தி — ஆங்கிலமா'' என்ற நூலுக்கு 'கல்கி'யில் விரிவாக விமர்சனம் எழுதப்பட்டது.

'பாரதியாரும் ஆங்கிலமும்', 'காந்தியடிகளும் ஆங்கில மும்' என்ற இரு நூல்களுக்கு 'சுதேச மித்திரனி'லே மதிப்புரை எழுதப்பட்டது. 'கல்கி'யும், 'மித்திரனும்' ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக்கு எதிர்ப்புக் காட்டிடும் வகையில்தான் விமர்சனம் எழுதின. இது நான் எதிர்பார்த்ததுதான்.

தமிழரசுக் கழகத்தின் ஆங்கில ஆதிக்க எதிர்ப்பியக்கத் தைச் சமாளிக்க 'கல்கி' இதழிலே ''கருத்தரங்கம்'' என்பதாக ஒரு பகுதி தோற்றுவிக்கப்பட்டது. அந்தப் பகுதியிலே, டாக்டர் ஆ.இலக்குமணசாமி, பிராங்க் அந்தோணி ஆகிய பறங்கிமொழி பக்தர்கள், தமிழ் பயிற்சி மொழிக் கிளர்ச்சிக்கு எதிராக எழுதி வந்தனர். 'கல்கி'யின் கருத்தரங்கம் பல வாரம் தொடர்ந்து பின்னர் ஓய்ந்தது!

தலைவர் ராஜாஜி, என்மீது நேரடியாகவே தாக்குதல் நடத்தினார். அதற்குக் கல்லூரிகளையே தேர்ந்தெடுத்தார். சட்டக் கல்லூரியில் நடந்த இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் பேசுகை யில், ''என்னுடைய நண்பர் கிராமணியார் கட்டபொம்மன் உணர்ச்சி படைத்தவர்'' என்று கூறினார்.

நாவினால் சுட்ட வடு!

சட்டக் கல்லூரிக் கூட்டத்தில் அறிஞர் அண்ணாதுரை அவர்களை அருகில் வைத்துக் கொண்டு மூதறிஞர் ராஜாஜி என்னைப்பற்றிச் சற்று விரிவாகவே விமர்சித்தார். இதோ அவரது விமர்சனம்:

''பேரன்பர் கிராமணியார் இப்போது ஒரு பிரச்சாரம் செய்கிறார். இந்தி எதிர்ப்புக் கூட்டம் என்பதைப் போல ஆங்கில எதிர்ப்புக் கூட்டம் போடுகிறார்.

''ஆங்கில ஆதிக்கம் போய் 16 ஆண்டுகளாகி விட்டன. ஆங்கிலேயர் போன பின்தான் நமக்குச் சுதந்திரமும் வந்தது. ஆங்கில ஆதிக்கம் என்ற பெயரே சரியில்லை. மக்களை ஏமாற்ற இந்தப் பெயர் உதவும்.

''ஆங்கில ஆதிக்கம் என்றால் என்ன? ஆதிக்கம் என்பது மக்கள் மனநிலையைப் பொறுத்தது. அது பாஷையின் உரிமையல்ல.''

மூதறிஞர் ராஜாஜி, வாதில் வல்லவர். ஆனால், வழக்கைத் திரித்துக் கூறி, என்னை வெல்ல முயன்றார். 'ஆங்கிலேயர் ஆதிக்கம்' என்பதற்கும், 'ஆங்கில ஆதிக்கம்' என்பதற்குமுள்ள வேற்றுமையை மறைத்து பிரச்சினையைக் குழப்பிப் பேசினார். பாமரர்கள் அடங்கிய பொதுக் கூட்டத்தில் அல்ல; பட்டதாரிகளான சட்டக் கல்லூரி மாணவர் கூட்டத்திலே!

23.12.62-இல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பேசுகையில்,

''ஆங்கிலத்தின் வாயிலாகப் பயிலாத கல்வி டயரில்லாத மோட்டார் போல. கல்லூரிப் படிப்பில்லாதவர்கள் படிப்பே இல்லாதவர்களைச் சேர்த்து வைத்துக் கொண்டு தமிழைப் பயிற்சி மொழியாக்குமாறு கேட்கிறார்கள்''

என்று கூறினார்.

என் தலைவர் ராஜாஜி, என்னை எத்தனையோ முறை தன் வாய் மணக்க, கேட்ட என் செவியினிக்கப் புகழ்ந்து பேசியிருக்கிறார். என்னை, கண்ணனாகவும், வீர அபிமன்யுவாகவும் கற்பனை செய்து புகழ்ந்து பேசிய காலமுமுண்டு. அது நான் அவருக்குப் பயன்பட்ட காலம்! மொழிச் சிக்கலிலே, நான் அவருக்குப் பயன்படாதவனாகி விட்டேனாதலால், தாய் மொழியின் வாயிலாகவே கல்வி கற்ற என்னை டயரில்லாத மோட்டா

ராக வருணித்தார். பயன்படுகிறபோது புகழ்ந்து புகழ்ந்து போற்றுவதும், பயன்படாதபோது இகழ்ந்து இகழந்து தூற்றுவதும் கட்சிகளின் — தலைவர்களின் அரசியல் 'நாகரிக'மாகிவிட்டது. ஒழுக்க சீலரான ராஜாஜிகூட இந்த 'நாகரிக'த்திற்கு விலக்காக இல்லையே என்பதுதான் அன்று நான் அடைந்த வேதனை!

பாவேந்தரின் பாராட்டு

பறங்கி மொழியின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடியதற்காகச் சிலர் என்னைப் பழித்தாலும், பலர் என்னைப் பாராட்டினர். அவர்களிலே பாவேந்தர் பாரதிதாசன் அவர்களை முதல்வராக நான் கருதுகிறேன்.

19.4.63-இல் சென்னை அண்ணாமலை மன்றத்தில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 74ஆவது பிறந்த நாள் விழா நடந்தது. அதில் நானும் கலந்து கொண்டு பேசினேன். அப்போது புரட்சிக் கவிஞர் பேசியது வருமாறு:

> *''ம.பொ.சி. ஒருவர்தான் இன்று தமிழுக்காகப் பாடுபடுகின்றார். நானும் தேடித் தேடிப் பார்க்கின்றேன்; தமிழுக்காகப் பாடுபடுகிறவர்கள் யாரேனும் இருக்கிறார்களா? என்று. என் கண்ணில் ம.பொ.சி. ஒருவர்தான் படுகிறார். அவர் வயிற்று வலியால் நாளும் தொல்லைப்பட்டுக் கொண்டே, தமிழுக்குத் தொண்டாற்றுகிறாரென்றால், அதைச் சொல்லுங்கால், துக்கத்தால் எனக்குத் தொண்டை அடைக்கின்றது. அவர்; தமிழுக்குத் தொண்டர்; நான் அவருக்குத் தொண்டன்.''*

('செங்கோல்', 12.5.63 இதழில் வெளியானபடி)

தமிழரசுக் கழகம் நடத்தி வந்த ஆங்கில ஆதிக்க எதிர்ப்பை ஆதரித்து வெளிப்படையாகப் பேசுகையிலேயே பாவேந்தர் மேற்கண்டவாறு எனக்குப் புகழ்மாலை சூட்டினார்.

சென்னை, கோவை, திருச்சி, உதகை, குடந்தை போன்ற தமிழ்நாட்டின் பிரதான நகரங்களிலும், வேறு பல கிராமங்களிலும் தமிழரசுக் கழகக் கிளைகளாலும், கல்லூரி மாணவர்

மன்றங்களாலும், கோவை சிந்தனைக் குழு போன்ற பொது மன்றங்களாலும் ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு மாநாடுகள் நடத்தப் பெற்றன. இந்த மாநாடுகளின் நடவடிக்கைகள் சரியாக பத்திரி கைகளில் வெளியிடப்படவில்லை. தமிழ் மொழியின் வளர்ச்சி கருதி ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த மாநாடுகளாக இருந்தும், தமிழ்ப் பத்திரிகைகள் கூட இருட்டடிப்புச் செய்தன.

வடபுலத்தில் வரவேற்பு

தமிழகத்தில் நடந்த ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு மாநாடு களிலே குடந்தையில் திருவாளர்கள் எம்.வி. நரசிம்மாச்சாரி, வி.கே. தருமராசா, இரா. சிதம்பரம், கோ.பே. வையகம் ஆகியோர் முயற்சியாலும் திருச்சி தேவர் மன்றத்தில் திருவாளர் கள் வி.நாகையன், இரா.சந்தானம், பெ.நடேசன், க.மு. சீனிவா சன் ஆகியோரின் முயற்சியாலும் நடத்தப்பெற்ற தஞ்சை, திருச்சி மாவட்டங்களின் மாநாடுகள் மிகவும் சிறப்பாக அமைந் தன.

தமிழ்நாட்டில் நடந்த ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சி வடபுலத்திலும் எதிரொலித்தது. அங்குள்ள ஆங்கில நாளிதழ் கள் அடிக்கடி இங்கு நடைபெற்ற கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டச் செய்திகளை வெளியிட்டு வந்தன. வார, மாத ஏடுகள் என்னை உற்சாகப்படுத்தும் வகையில் அடிக்கடி எழுதி வந்தன.

'தரும யுக்' என்ற இந்தி வாரப் பத்திரிகை, இந்தி மொழியா ளரிடை மிகுந்த செல்வாக்குப் பெற்றதாகும். அதன் 26.10.63 இதழிலே என்னைப் பற்றியும் நான் நடத்திய ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் பற்றியும் எழுதப்பட்ட நீண்ட தலையங்கத்தின் சில பகுதிகள் வருமாறு:

''மாநிலங்களில் பயிற்சி மொழியாக ஆங்கிலம் நீடிக் கக் கூடாது. அந்தந்த மாநில மொழியே எல்லாத் துறைக ளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும். மத்திய அரசிலும் 'என்றென்றும் ஆங்கிலம்' என்னும் கோரிக்கை தவறானது'' என்ற கருத்து இந்திக்கு ஆதரவாயுள்ள வட இந்தியருடை

யதன்று; இந்தியாவில் இன்னும் ஆங்கில ஆதிக்கம் நீடித்தால் இந்திய மக்களின் வாழ்க்கை கெட்டுவிடும் என்று கருதக்கூடிய தென்னிந்தியர் ஒருவருடையதாகும்.

''திரு. கிராமணியார் ஆங்கிலம் அதிகம் கற்றுத் தேர்ந்தவர் அல்லராயினும், அவரது அறிவுத் திறனை, ஆழ்ந்த புலமையை, சீரிய கருத்துகளை இராஜாஜி போன்ற ஆங்கில ஆதரவாளர்கள்கூடக் கௌரவிக்கின்றனர்.

''திரு. கிராமணியாரவர்கள் முயற்சியாலேயே தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக முடிந்தது. அரசாங்க இலாகாக்கள் பல இப்போது தமிழிலேயே நடைபெறுகின்றன.

''இன்பத் தமிழா, இந்தி — ஆங்கிலமா?'' என்னும் பெயரில் அண்மையில் இவர் வெளியிட்டுள்ள நூல் பொது மொழிச் சிக்கலில் தர்க்க ரீதியான இவருடைய எண்ணங்களின் பிரதிபலிப்பாகும்.''

1962 டிசம்பர் இறுதியில் அப்போது கேரள ஆளுநராக இருந்த திரு.வி.வி.கிரி அவர்கள், தமிழ்நாட்டில் தமிழரசுக் கழகம் நடத்திய ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சியை மறைமுகமாக ஆதரிக்கும் வகையில் தெரிவித்த கருத்து வருமாறு:

''தேசிய மொழிகளின் இதர பிரச்சினைகளுடன் ஆங்கிலத்தை ஒரு மொழியாக மட்டும் எடுத்துப் படிக்கும் பிரச்சினையைச் சேர்த்து அடிக்கடி குழப்புவது துரதிர்ஷ்ட வசமானது. இந்தியைப் பொது மொழியாக்குவதோடு, ராஜ்யங்களின் பிரதேச மொழி ஆட்சி மொழியாகவும் வருவதை எதிர்க்கத் தேவையில்லை. அந்த நடவடிக்கை தேவையானதும் தவிர்க்க முடியாததுமாகும்.''

திரு.வி.வி. கிரி இப்படிக் கூறியது கேரள பல்கலைக் கழகச் சார்பில் பிரிட்டிஷ் கவுன்சில் ஏற்பாடு செய்த பத்து நாள் ஆங்கில இலக்கிய மாதக் கருத்தரங்கிலாகும்.

பிரதமரும் என் பக்கம்

பிரதமர் நேரு, 1963 இறுதியில் ஐதராபாத்துக்கு வருகை தந்தார். அப்போது தமிழ்நாட்டில் நடந்து வந்த ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சி பிரதமரின் கவனத்தைக் கவர்ந்ததால், அவர் நேரடியாகவே தமிழ் — ஆங்கில மொழிகளிடையே நடை பெற்று வரும் போராட்டம் பற்றிப் பேசினார். அது வருமாறு:

''இந்தியாவில் பல தலைமுறைகளாக ஆங்கிலம் ஆதிக்கம் செலுத்தி வருவது ஆங்கில எதிர்ப்பாளர்களுக்கு ஆத்திரமூட்டியுள்ளது. ஆங்கில அறிவு அந்தஸ்தைக் குறிப் பதாக ஆங்கிலம் படித்தவர்கள் மனதில் ஒரு எண்ணம் வளர்ந்துள்ளது. இந்த எண்ணம் மிகவும் முறையற்றதும் ஆட்சேபிக்கக் கூடியதுமாகும். நாம் ஆங்கிலத்தை விரும்பு வது வேறு விஷயம். ஆனால், ஆங்கிலத்துக்கே மதிப்பு என்ற மனோபாவத்தை ஆட்சேபிக்கிறோம்.

''இந்தியாவில் சாதி முறையை ஒழித்ததுபோல் 'ஆங்கிலம் படித்தவர்கள்' என்ற சாதி மனோபாவத்தையும் ஒழிக்க வேண்டும். இந்தியாவில் ஏராளமான சாதிகள் இருக்கின்றன. இங்கு எதுவும் தனிச் சாதியாக மாறி விடுகிறது. ஆங்கிலம் தெரியாதவர்களைவிடத் தாங்கள் மேலானவர்கள் என்று ஆங்கிலம் படித்தவர்கள் கருதுகின் றனர். ஆங்கிலத்தையோ, வேறு மொழியையோ கற்பது அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். ஆனால், மொழிப் பிரச்சினை அரசியலோடு கலந்துள்ளது.

''தாய் மொழிதான் போதனா மொழியாக இருக்க முடியும். ஆங்கிலம் அந்த ஸ்தானத்தை வகிக்கவே முடி யாது. ஆங்கிலத்திற்கு நீங்கள் எந்த அந்தஸ்து கொடுப்பதா யிருந்தாலும் அது போதனா மொழியின் அந்தஸ்தைப் பெற முடியாது. போதனா மொழியில் மாறுதல் வந்து கொண்டு தான் இருக்கிறது, வந்துவிட்டது; வந்தே தீரும்.

''இராஜ்யத்தைப் பொறுத்தவரையில் பிரதேச மொழியே பிரதான மொழி. பிரதான மொழி என்று சொன்னால் போதாது; அதைவிட அழுத்தமான வார்த் தையே பொருந்தும்.

''அந்தந்த ராஜ்யத்தில் அந்தந்தப் பிரதேச மொழியே வளம் பெறும். ஆங்கிலத்தின் ஸ்தானத்தை அது பாதிக்கு மேயல்லாது, தமிழை அல்ல. தமிழ் மொழி வேண்டுமா? ஆங்கிலம் வேண்டுமா? — என்பதே பிரச்சினை. ஆங்கிலத்தின் இடத்தைத் தமிழ் எடுத்துக் கொள்ளும்.

''ஆங்கிலத்தைக் கற்றதால் பல வழியில் நாம் நன்மை அடைந்திருக்கிறோம். ஆங்கிலத்தின் உபயோகத்தை நான் மறுக்கவே இல்லை. ஆங்கிலம் தெரிந்த மக்களை ஆங்கிலம் தெரியாத மக்களிடமிருந்து அம்மொழி பிரித்து வைத்து விட்டது. இதன் மூலம் ஒரு பெரிய பிரிவு (ஆங்கிலம் தெரிந்தவர்களின் பிரிவு) ஏற்பட்டு விட்டது.

''மொழிப் பிரச்சினை விஷயத்தில் உண்மையான, அடிப்படையான மாறுதல் ஆங்கிலத்திற்குப் பதில் தமிழ் போன்ற ஒரு ராஜ்ய மொழிக்கு மாறுவதாகும். அதுவே உண்மையான மாறுதல். போதனா மொழி மாறியவுடன் ஆங்கிலத்தின் ஆணி வேர் போய்விடுகிறது.''

(ஐதராபாத் மத்திய ஆங்கிலப் பயிற்சிக் கழக ஆசிரியர்கள் — மாணவர்களடங்கிய கூட்டத்தில் 22.7.63-இல் பிரதமர் நேரு பேசியது)

வடபுலத் தலைவர்கள் ஆதரவு

1963 சூன் 15, 16, 17 தேதிகளில் பம்பாயில் நடைபெற்ற சோஷலிஸ்டுக் கட்சியின் அனைத்திந்திய மாநாட்டில் கலந்து கொண்டு ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் பற்றிச் சிறப்புரையாற்று மாறு நண்பர் டாக்டர் லோகியா அவர்கள் எனக்கு அழைப்பு விடுத்தார். ஆனால், இந்தியாவின் பொது மொழிப் பிரச்சினையிலே — குறிப்பாக, அணுகுமுறையிலே தமிழரசுக் கழகத்திற்கும் சோஷலிஸ்டுக் கட்சிக்கும் வேற்றுமை நிலவியதால் டாக்டர் லோகியாவின் அழைப்பை ஏற்க மறுத்துவிட்டேன். ஆயினும், தமிழ் பயிற்சி மொழிப் பிரச்சினையிலே டாக்டர் லோகியா என்னை முழுக்க முழுக்க ஆதரித்து நின்றார். ஒன்றிரு முறை வெளிப்படையாக அறிக்கையும் விடுத்தார். 6.10.63-இல்

அவர் சென்னையில் எனது இல்லத்திற்கே வந்து, என்னுடன் பேசி தமது ஆதரவைத் தெரிவித்தார். அவரது ஆதரவு எனக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்தது. இந்தச் சந்திப்பின் போது தமது சோஷலிஸ்டுக் கட்சியில் சேருமாறு டாக்டர் லோகியா என்னை அழைத்தார் நான் மறுத்துவிட்டேன்.

சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணர் 26.7.63-இல் எனது இல்லத்திற்கு வந்து மொழிச் சிக்கல் பற்றி என்னுடன் நீண்ட நேரம் உரையாடினார். அப்போது தமிழரசுக் கழகம் நடத்திக் கொண்டிருந்த ஆங்கில ஆதிக்க எதிர்ப்புபற்றி நான் அவரிடம் விவரமாகக் கூறினேன். இந்தியாவின் பொது மொழி பற்றியோ, கல்லூரிப் பயிற்சி மொழி பற்றியோ காந்திய வாதிகளான ஜெயப்பிரகாசருக்கும் எனக்கும் இடையே அடிப் படை வேற்றுமை எதுவும் இருக்கவில்லை. இதற்குப் பிறகும் சென்னை நகரிலும், தமிழ்நாட்டில் வேறு பல ஊர்களிலும் நாங்களிருவரும் சந்தித்து உரையாடினோம். அப்போதும், ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு இயக்கத்திற்கு அவர் ஆதவு தெரிவித் தார். சென்னையில் என் வீட்டில்என்னைச் சந்தித்தபோது திரு. ஜெயப்பிரகாசர் பிரஜா சோசலிஸ்டுக் கட்சியில் சேருமாறு என்னை அழைத்தார். அதை நான் ஏற்கவில்லை.

அனைத்திந்திய ஜனசங்கத் தலைவர் டாக்டர் ரகுவீர் அவர் கள் என் இல்லத்திற்கு வந்து ஆங்கில ஆதிக்க எதிர்ப்பியக்கத் திற்கு ஆதரவு தெரிவித்தார். அப்பெரியார் 3.5.63-இல் வடபு லத்தில் நடந்த மோட்டார் விபத்தில் காலமானார். அந்த விபத்து ஏற்படுவதற்கு 4 நாட்களுக்கு முன்னர் அவர் எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார். அதிலே, ''தாங்கள் தமிழ் மொழியின் வளர்ச்சி கருதி ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து நடத்தி வரும் போராட்டத்திற்கு எனது பாரதீய ஜனசங்கத்தின் ஆதரவையும் ஏற்கக் கோருகிறேன்'' என்று கேட்டுக் கொண்டிருந்தார். அந்தக் கடிதத்திற்கு நான் பதில் எழுதுவதற்குள் அவர் காலமாகி விட்டது எனக்கு மிகுந்த வேதனையைத் தந்தது.

தென்புலத்தில் — தமிழ்நாட்டில் நான் ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சி நடத்திக் கொண்டிருந்த நேரத்திலே வடபுலத்

திலும் அதுபோன்ற எதிர்ப்பு அதி தீவிரமாகி நடந்து கொண்டிருந்தது. அதிலே, சோஷலிஸ்ட் கட்சி, ஜனசங்கம் ஆகிய இரண்டு கட்சிகளும் ஆர்வங்காட்டிச் செயல்பட்டு வந்தன. பொதுவாக, வடபுலத்து மக்கள் தங்களுக்குள்ள நாட்டுப் பற்று காரணமாக, நாட்டு மொழிகளையும் நேசிக்கின்றனர். நாட்டு மொழிகளை நசுக்கிவரும் அன்னிய மொழியான ஆங்கிலத்தை வெறுக்கின்றனர்.

விடுதலைப் போராட்ட காலத்தில் நாட்டில் வீறிட்டெழுந்த பறங்கி மொழி எதிர்ப்புக் கிளர்ச்சி வடபுலத்தில் அடங்கிவிட வில்லை. நாடு விடுதலை பெற்ற பின்னரும் வளர்ந்து வருகிறது. அதனால், வடபுலத்திலுள்ள ஆங்கில எதிர்ப்பாளரோடு தொடர்பு கொள்ள விரும்பினேன். அதற்காக, மகாராஷ்டிரத் தலைநகரான பம்பாய்க்கும், குஜராத்தின் தலையிடமான ஆமதாபாத்துக்கும் சென்றேன்.

வடபுலத்தில் சுற்றுலா

24.9.67 அன்று சென்னை சென்டிரல் ஸ்டேஷனில் தமிழரசுக் கழகத் தோழர்கள் என்னை உற்சாகப்படுத்தி வழியனுப்பி வைத்த காட்சி இன்னமும் என் மனத்திரையில் நிழலாடுகிறது. சென்டிரல் ஸ்டேஷன் பிளாட்பாரம் முழுவதையும் பூக்காடாக்கி விட்டனர்.

அதிகாரப் பதவி எதிலுமில்லாத சாதாரண மனிதனாக நான் வடபுலம் சென்றேன். 'தமிழரசுக் கழகத் தலைவன்' என்பதற்கதிகமான தகுதி எதுவும் இல்லாதவனாகச் சென்றேன். ஆமதாபாத்திலுள்ள பாரதி வாசகசாலையார் விடுத்த அழைப்பை வாய்ப்பாகக் கொண்டு, ''பயிற்சி மொழி யாத்திரை'யை மேற்கொண்டேன்.

''குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்''

என்றார் வள்ளுவர் அதுபோல, என் தாய் மொழிக்கு வாழ்வளிப்பதென்று கங்கணம் கட்டிக் கொண்டு வடபுலம் சென்றே

னாதலால், தெய்வம் எனக்குத் துணை வந்தது — ஆம்; எனக்கு முன் சென்று வழிகாட்டி வடபுலத்துக்கு என்னை அழைத்துச் சென்றது! 24.9.63 தொடங்கி 1.10.63 வரை தொடர்ந்து எட்டு நாட்கள் சுற்றுலா செய்தேன்.

பம்பாய் பல்கலைக் கழகம், குஜராத் வித்யாபீடம், குஜராத் பல்கலைக் கழகம் ஆகியவற்றிற்குச் சென்று, அவற்றின் துணை வேந்தர்களையும், மராத்தி — குஜராத்திப் பேராசிரியர் பலரையும் சந்தித்துப் பயிற்சி மொழிப் பிரச்சினை குறித்து விவாதித்தேன். அவர்களெல்லாம் என்னை வரவேற்று உபசரித்து, எனக்குத் தகவல் தருவதிலே காட்டிய ஆர்வம் உற்சாகந் தருவதாக இருந்தது.

குஜராத் வித்யாபீடம் 1920-இல் காந்தியடிகளாலும், சர்தார் படேல் அவர்களாலும் நிறுவப்பட்டதாகும். இங்கு, 'ஆங்கில ஆதிக்கம்' என்பதன் அடையாளத்தைக்கூட, நான் காணவில்லை. எங்கும் எதிலும் குஜராத்தி மொழிதான்! வித்யாபீடத்தின் நிர்வாகமும் குஜராத்தி மொழியில்தான்! ஒரு சுதந்திர நாட்டின் பல்கலைக் கழகம் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருக்கிறது குஜராத் வித்யாபீடம்!

குஜராத் பல்கலைக் கழகம் மட்டும் அப்போது ஆங்கில ஆதிக்கத்திலிருந்து முழு அளவில் விடுதலை பெற்றிருக்கவில்லையென்றாலும், ஆங்கிலத்திலிருந்து குஜராத்தி மொழிக்கு விரைவாக மாறிக் கொண்டிருந்தது. இதனை அறிந்தபோது, ''மற்றை நாட்டவர்முன் நின்றிடும்போழ்து மண்டுமென் வெட்கத்தின் ஆணை'' என்று மாஜினி சபதத்தில் பாரதி பாடிய வாசகம் நினைவுக்கு வந்தது.

ஆமதாபாத்தில் பாரதி வாசக சாலையின் 16-ஆவது ஆண்டு விழாவில் பேசினேன். அதன் நிர்வாகிகள் தமிழிடத்து நிறைந்த பற்றுள்ளவர்கள். என் பேச்சைக் கேட்க வெள்ளம் போல் தமிழர் கூட்டம் திரண்டு வந்தது. அக்கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழர்களிலே மிகப் பெரும்பாலானவர்கள் ஆலைத் தொழிலாளர்கள். இந்தக் கூட்டத்திலும் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துப் பேசினேன். அதுதானே எனது பயணத்தின் குறிக்கோள்!

சபர்மதியிலே...

ஆமதாபாத் சபர்மதி நதிக்கரையிலுள்ள காந்தியடிகள் ஆசிரமத்திற்குச் சென்று, அங்கு அரை மணி நேரம் தங்கினேன். ஆம்; புண்ணியர் காந்தி தவஞ்செய்த புனித இடமல்லவா! ஆங்கில ஆதிக்க எதிர்ப்பிலே எனக்கு வழிகாட்டி அவர்தானே! சபர்மதி ஆசிரமத்தில் தங்கியிருந்த நேரத்திலே ஏதோ ஒரு சக்தி என்னுள் புகுந்து நான் மேற்கொண்டுள்ள பிரச்சினையிலே மேலும் தொடர்ந்து செயலாற்ற எனக்கு ஆதர்சமளித்தது போல ஒரு உணர்வு எனக்கு ஏற்பட்டது!

பம்பாய் நகரிலும் என் பணி பயனுடையதாக இருந்தது. பம்பாய்த் தமிழரான திரு.கே.எஸ். விசுவநாதன் அவர்கள் பம்பாய் நகரில் என் வேலைத் திட்டங்களை வகுத்தார். அவர், தமிழ்நாட்டில் எஸ்.எஸ்.எல்.சி. படித்து முடித்து பம்பாய் சென்றார். அங்கு, ஏதோ ஒரு நிறுவனத்தில் சிப்பந்தியாகச் சேர்ந்து, அதில் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்தினார். அதே நேரத்தில் மாலை நேரக் கல்லூரியில் சேர்ந்து படித்து பி.காம்., எம்.ஏ., எல்.எல்.பி. ஆகிய பட்டங்களைப் பெற்றார். அவர் மனைவியும் பட்டதாரி! விசுவநாதம் தம்பதிகள் என் கழகத்தின்பால் மிகுந்த விசுவாசம் உடையவர்கள். கழகக் கொள்கைகளிலேயும் அவர்களுக்கு அழுத்தமான பற்றுண்டு. அதனால் வடபுலத்து அறிஞர்களுக்கு என்னை அறிமுகப்படுத்தி, எனது கழகத்துக்கு வலுத் தேடுவதிலே மிகுந்த ஆர்வங் காட்டினர்.

பம்பாய்த் தமிழ்ச் சங்கச் செயலாளர் திரு. கந்தசாமியும் பம்பாய் நகரில் யான் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றிபெற உதவி புரிந்தார்.

மொரார்ஜி — முன்ஷியுடன் பேச்சு

திருவாளர்கள் மொரார்ஜி தேசாய், எஸ்.கே.பட்டீல், கே.எம். முன்ஷி ஆகியோரைச் சந்தித்து, கல்லூரிப் பயிற்சி மொழிச் சிக்கல் குறித்து விவாதித்தேன். இவர்களையெல்லாம் 24 மணி நேர முன்னறிவிப்பின் பேரில் சந்தித்தேன்.

நான் மொரார்ஜியைச் சந்தித்த நாளிலே, அவர், காமராஜ் திட்டப்படி பதவி துறந்து, கட்சிப் பணிகளில் ஈடுபட்டிருந்தார். அப்பெரியார் என்னைக் கண்டதுமே, மிகவும் நெருங்கிப் பழகிய பழைய நண்பரைப் போல, ''கிராமணிஜி! ஆயியே'' என்று இந்தியில் அழைத்து, பின்னர் ஆங்கிலத்தில் உரையாடினார். நாங்கள் நெருங்கிப் பழகியவர்களல்லவென்றாலும், அவர் என்னை நன்கு அறிந்து வைத்திருந்தது — என்னைவிட, நான் அப்போது நடத்திக் கொண்டிருந்த ஆங்கில ஆதிக்க எதிர்ப்பை அவர் சரியானபடி புரிந்து வைத்திருந்தது அவருடன் உரையாடியபோது நன்கு புலனானது.

மத்தியில் ஆட்சி மொழிப் பீடத்திலிருந்து ஆங்கிலத்தை அகற்றாதவரை தமிழகத்திலும் அதன் ஆதிக்கத்தை அகற்றுவது சாத்தியமில்லையென்று மொரார்ஜி உறுதியாகக் கூறினார். அத்துடன், ''தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் தமிழ்தான் பயிற்றுமொழியாக இருக்க முடியும் — இருக்கவும் வேண்டும். அதனை எவ்வளவு விரைவில் கொண்டு வருகிறோமோ அவ்வளவுக்கு நல்லது'' — என்றும் மொரார்ஜி கூறினார். நாட்டின் பொது மொழி, கல்லூரிப் பயிற்சி மொழி பற்றிய சிக்கல்களிலே எங்களுக்குள் அடிப்படை வேற்றுமை இல்லையென்றாலும், பிரச்சினைகளை அணுகுகின்ற முறையிலே வேற்றுமையிருப்பதனை உணர்ந்தேன். ஆயினும், எங்கள் உரையாடல் இருவருக்குமே மகிழ்ச்சியைத் தந்தது எனலாம்.

பேச்சோடு பேச்சாக, ''தாங்கள் மத்திய நிதியமைச்சர் பொறுப்பிலிருந்து விலக வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது?'' என்று கேட்டேன். அதற்கவர், ''அதுவா? என் தலைவிதிப்படி நடந்தது?'' என்று மிகுந்த சோகக் குரலில் பதிலளித்தார்.

மொரார்ஜி தேசாயைச் சந்தித்த அன்றே அறிஞர் கே.எம். முன்ஷி அவர்களையும் பார்த்தேன். அவர் மனைவி திருமதி லீலாவதி முன்ஷி என் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தார். என்னைக் கண்டதும் மிகுந்த கனிவுடன் வரவேற்று, தன் கணவரிடம் அழைத்துச் சென்றார். முன்ஷியின் இல்லம் ஒரு

முனிவருடைய ஆசிரமம் போன்று இருந்தது. அவர், முனிவர் போன்று விளங்கினார். சரியாக 45 நிமிட நேரம் உரையாடி னோம். பயிற்சி மொழிப் பிரச்சினையில் அவரும் மொரார்ஜி தேசாயின் கருத்தையே கொண்டிருந்தார்.

மொழிப் பிரச்சினையில் நாங்கள் பரஸ்பரம் கருத்து களைப் பறிமாறிக் கொண்டோம். இந்தி அல்லது இந்திய மொழிகளில் ஒன்றுதான் மத்தியில் ஆட்சி மொழியாகவும், மாநிலங்களிடையே தொடர்பு மொழியாகவும் இருக்க முடியும் என்ற எனது கொள்கையை அவர் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். அதுபோல, தமிழ்நாட்டில் ஆட்சி மொழியாகவும், நீதிமன்ற நடவடிக்கை மொழியாகவும், கல்லூரிகளில் பயிற்சி மொழியாக வும் தமிழ்தான் வரவேண்டும் என்பதே தமது கொள்கையென்ப தனை உறுதி தோய்ந்த குரலில் அவர் என்னிடம் கூறினார். நாங்கள் சிறிது நேரம் சமஸ்கிருத — தமிழ் இலக்கியங்கள் குறித்தும் உரையாடினோம். அறிஞர் முன்ஷி என்னுடன் உரை யாடிய பண்பும், வரவேற்று உபசரித்து வழியனுப்பிய பான்மை யும், அவர் அரசியல் தலைவர் மட்டுமல்ல; ஆன்மிகவாதியுமா வார் என்ற உணர்வை எனக்கு ஏற்படுத்தியது.

பம்பாய் நகரில் காங்கிரஸ் மேலிடத் தலைவர்களில் ஒருவ ரான திரு.எஸ்.கே. பட்டீல் அவர்களையும் சந்தித்துப் பேசி னேன். அவர் மொழிச் சிக்கலைப் பற்றி விவாதிப்பதிலே ஆர்வம் காட்டவில்லை. மாறாக, தமிழ்நாட்டின் அரசியல் பற்றி என் மூலம் அறிந்துகொள்ள விரும்பினார். மொழிப் பிரச்சினை யில் ஆர்வம் ஏற்பட கலாச்சார உணர்வு தேவைபோலும்! திரு.எஸ்.கே. படீல், வறட்டு அரசியல் தலைவராகவே என் கருத்தில் பட்டார். அவர்கூட, கல்லூரிகளில் மாணவர்களின் தாய் மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்ற எனது கொள்கைக்கு ஆதரவு காட்டினார். அதற்காகப் போராட் டம் நடத்தத் தேவையில்லாமலே அது நிறைவேறிவிடும் என் றும் கூறினார்.

நான் பம்பாய் நகரில் இருந்தபோது, இந்தி வெறியர் என்று தமிழ்நாட்டவரால் கருதப்படும் சேத் கோவிந்த தாஸ் என்பவர்,

பம்பாய் ஜின்னா மண்டபத்தில் 'மொழிப் பிரச்சினை' பற்றிச் சிறப்புரையாற்றினார். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு, ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து நானும் பேசுவதை அவர் விரும்புவதாகக் கூறி, கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள் அவர் சார்பில் என்னை அழைத்தனர்.

பம்பாய் நகரில் தமிழரல்லாதார் திரண்டுள்ள பொதுக் கூட்டத்தில் தமிழரசுக் கழகத்தின் சார்பில் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துப் பேச வேண்டுமென்ற அவா எனக்கும் இருந்தது. ஆனால், சேத் கோவிந்த தாஸ் ஆங்கிலத்தை உடனடியாக ஒழித்துக் கட்ட விரும்புவது, தமிழ் போன்ற பிரதேச மொழிக ளின் வளர்ச்சி கருதியல்ல. ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தியை ஆதிக்க மொழியாகச் செய்வதற்காகத்தான் என்ற கருத்து தமிழ் நாட்டில் நிலவி வருகிறது. இந்த நிலையில் தான் சேத் கோவிந்த தாசுடன் ஒரே மேடையில் பேசுவது என்னைப் பற்றித் தமிழ் மக்கள் தவறாக எண்ணுவதற்கு இடந்தருவதாகுமென்று அஞ்சி னேன். அதனால், சேத்ஜி கூட்டத்தில் பேச மறுத்து விட்டேன்.

'தர்ம யுக்' ஆசிரியர்

பயிற்சி மொழிப் பிரச்சினையிலே வடபுலத்தார் நிலையை அறிந்துகொள்ளும் நோக்குடன் ஆமதாபாத்திலும், பம்பாயிலும் நான் சந்தித்த அறிஞர்களிலே பம்பாய் 'தர்ம யுக்' ஆசிரியர் சந்திப்பு பயனுடையதாக இருந்தது. பம்பாயில் ''டைம்ஸ் ஆஃப் இந்தியா'' (ஆங்கில நாளிதழ்), 'இல்லஸ்டிரேடட் வீக்லி' (ஆங்கில வார இதழ்), 'நவபாரத் டைம்ஸ்' (இந்தி நாளிதழ்)', 'தர்ம யுக்' (இந்தி வார இதழ்) ஆகிய நான்கும் ஒரே நிர்வாகத் தாரால் கூட்டாக நடத்தப்படுகின்றன. 'தர்ம யுக்' ஆசிரியரால் மற்ற பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும் நான் அறிமுகப்படுத் தப்பட்டேன்.

'தர்ம யுக்' ஆசிரியர் டாக்டர் தர்மவீர் பாரதி என்பால் அன்பும் பண்பும் காட்டி, என் காலில் விழுந்து வழிபட்டு என்னை வரவேற்ற முறை மெய்சிலிர்க்க வைப்பதாக இருந்தது. தமிழில் ஓரளவு புலமையுடையவன் என்பதற்காகவே அவர்

என்னை 'வழிபாட்டு'டன் வரவேற்றார். ஒருவருக்குத் தன் தாய் மொழியில் உண்மையான பற்றும், ஆழ்ந்த புலமையும் இருக்கு மாயின், பிற மொழியினருடைய தாய்மொழிப் பற்றையும் புலமையையும் வழிபாட்டுடன் வரவேற்பார் என்பதனை 'தர்ம யுக்' ஆசிரியர் மூலமும் அறிந்தேன். இந்தி பக்தரும் தமிழ் பக்தரும் பரஸ்பரம் பகைவராக இருக்க வேண்டிய அவசியம் இல்லையென்பதனையும் இந்த நிகழ்ச்சி எனக்கு உணர்த்தியது. ஆம்; பறங்கி மொழியின் ஆதிக்கம் பாரத நாட்டிலிருந்து அகற்றப்பட்டு விட்டால், இந்திய மொழிகளிடையே உறவன்றி பகை ஏது? டாக்டர் பாரதியும் நானும் மொழிச் சிக்கல் பற்றி ஒரு மணி நேரம் உரையாடினோம். ஆங்கில ஆதிக்கத்தை அகற்றி, பிரதேச மொழிகளுக்கு அதனதன் பிரதேசத்தில் வாழ்வ ளிக்க வேண்டுமென்ற பிரச்சினையிலே எங்களுக்குள் கருத்து ஒற்றுமை இருக்கக் கண்டேன்.

தேநீர் விருந்து

இந்தச் சந்திப்பு நிகழ்ந்த மூன்று நாட்கள் கழித்து — அக்டோபர் முதல் நாளிலே, எனக்காகத் தேநீர் விருந்து ஒன்று நடத்தப் பெற்றது. மாலை 5.30 மணிக்கு பம்பாய் கே.சி. கல்லூரியில் தேநீர் விருந்து நடைபெறுமென்று எனக்கு அறிவிக் கப்பட்டிருந்தது. சரியான நேரத்திற்கு நண்பர் விசுவநாதன் என்னை அங்கு அழைத்துச் சென்றார். அவர்தானே எனக்கு வழிகாட்டி! ஆனால், நாங்கள் சென்ற நேரத்தில், விருந்து மண்டபத்தில் விருந்துக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்த ஊழியர் இருவரைத் தவிர வேறு ஒருவரையும் காணோம்! குறித்த காலத்தில் நிகழ்ச்சிக்கு வரத் தவறும் குறைபாடு பம்பாய் வாசிகளிடமும் இருப்பதறிந்து முதல் ஆளாகச் செல்ல நேர்ந்த தில் எனக்குக் கொஞ்சம் வெட்கந்தான். ஆயினும் ஒவ்வொருவ ராக அரைமணி நேரத்திற்குள் அனைவரும் வந்து குழுமி விட்டனர். நான் கொஞ்சம் முன்னாடிச் சென்றதால், அடுத் தடுத்து வந்து கொண்டிருந்த ஒவ்வொருவரிடமும் தனித்தனியே உரையாட வாய்ப்பு கிடைத்தது. அது பயனுடையதாகவும் இருந்தது.

இந்த விருந்தில் சிறந்த சிறுகதை ஆசிரியர்கள், நாவலாசிரியர்கள், கவிஞர்கள், பத்திரிகாசிரியர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் பஞ்சாபி, உருது, மராத்தி, இந்தி, காஷ்மீரி, குஜராத்தி, வங்காளி ஆகிய மொழிகளைத் தாய் மொழிகளாகக் கொண்டவர்கள். இவர்களில் பெண்களுமிருந்தனர்.

பிரதான விருந்தினனாகிய என்னை விடவும் அதிகமான உற்சாகங் காட்டினர் விருந்திற்கு வந்திருந்த அறிஞர்கள். அவர்களில் குறிப்பிட்ட சிலர் விருந்து மண்டபத்தில் பிரவேசித்த போது, மற்றவர்களெல்லாம் எழுந்து நின்று வணக்கஞ் செலுத்தி, வரவேற்றதன் மூலமே அவர்களுடைய கல்வியறிவும் செல்வாக்கும் எனக்குப் புலப்பட்டன. வேறு வகையில் அவர்களைப் பற்றி எனக்கொன்றும் தெரியாதல்லவா!

கே.சி. கல்லூரி, இந்தி பரிஷத், இலக்கிய சங்கம், 'நவ பாரத் டைம்ஸ்', 'தர்ம யுக்' பத்திரிகைகள் ஆகியவற்றின் சார்பில் இந்த விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விருந்தின்போது சிலர் தனித்தனியேயும் என்னிடம் உரையாடினர். தமிழ் மொழியின் சிறப்புகளை என் வாயிலாகத் தெரிந்து கொள்வதிலே ஒவ்வொருவரும் ஆர்வங் காட்டினர். தமிழ் மொழி மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதான இலக்கண நூலைப் பெற்றிருக்கின்றது என்று நான் சொன்னபோது அவர்கள் வியப்புற்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தனக்கெனச் 'சிலப்பதிகாரம்' என்ற தலைக் காப்பியமொன்றைப் பெற்றிருந்தது என்று நான் சொல்லக் கேட்டதும், அந்தக் காப்பியத்தை முழு அளவில் அறிந்துகொள்ள ஆர்வம் காட்டினர். அப்போது, இந்தி மொழியைப் படிக்காததன் குறையை நான் உணர்ந்தேன். எனக்கு இந்தியில் நன்றாகப் பேசத் தெரிந்திருந்து சிலப்பதிகாரத்தின் சிறப்பை விளக்கி ஒரு மணி நேரம் அவர்கள் மத்தியில் பேசியிருப்பேனானால், அவர்கள் தமிழ்மொழி வழங்கும் திசை நோக்கித் தொழுதிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. அந்த விருந்தில் குழுமியவர்களுக்குத் தமிழ் மொழியிடம் வெறுப்போ, அலட்சியப் பத்தியோ இருக்க

வில்லை. மாறாக, அவர்கள் அளவற்ற மதிப்பு செலுத்தக் கண்டேன்.

இந்தி எதிர்ப்புப் பற்றி விமர்சித்தேன்

விருந்து முடிந்ததும், டாக்டர் பிரசாத், எம்.ஏ. அவர்கள், என்னை வரவேற்றும், வந்திருந்தவர்களுக்கு அறிமுகப்படுத்தியும் பேசினார். பின்னர் என்னைப் பேசுமாறு பணித்தார். அவ்வமயம், தமிழகத்தில் இந்தி மொழிக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்புக்கான காரணங்களை என் மூலம் அறிய விரும்புவதாகவும் அவர் குறிப்பு கொடுத்தார்.

கொஞ்சம் கஷ்டமான பணிதான். இந்தியன் என்ற சமுதாய உணர்வும், தேசிய ஒருமைப்பாட்டில் நம்பிக்கையும் எனக்கு உண்டாயினும், தமிழ்நாட்டு மேடைகளில் எந்த அளவுக்கு ஆங்கில ஆதிக்க ஆதரவாளர்களை (இந்தி எதிர்ப்பாளர்களை) நிர்த்தாட்சண்யமாக விமர்சிக்கின்றேனோ, அப்படி அங்கு விமர்சிக்க எனது இன உணர்ச்சி இடந்தரவில்லை. ஆம்; தருமசங்கடமான நிலை.

பம்பாய் விருந்தில், தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு தோன்றியதற்கான நியாயங்களை எடுத்துக் காட்டி, அவற்றை அகற்றுவதற்கு வட இந்தியர்கள் பாடுபட வேண்டும் என்பதையே அதிகம் வற்புறுத்தினேன். ''இந்தி, இந்தியாவிலுள்ள மக்கள் எல்லோரும் பேசுகின்ற, படிக்கின்ற 'பொது மொழியாவது வேறு; மத்தியில் அது ஆட்சி மொழியாவது வேறு'' என்பதைப் பிரித்துக் காட்டினேன். பின், ''பொது மொழியாவதைத் தமிழ் மக்கள் எதிர்க்கவில்லை. அவசரப்பட்டு ஆட்சி மொழியாக்குவதையே எதிர்க்கிறார்கள்'' என்றேன். ''இந்தியே வேண்டாம்; 'என்றென்றும் ஆங்கிலம்' என்று சொல்பவர்களும் தமிழகத்தில் இருக்கிறார்கள். அவர்களில் பலர் ஆங்கில மோகம் பிடித்தவர்கள். தமிழ் மொழிக்கு எதிராகவும் ஆங்கிலத்தை அவர்கள் ஆதரிக்கிறார்கள்'' என்று கூறினேன். ஆனால், எந்த ஒரு அரசியல் கட்சியையோ, அரசியல் தலைவரையோ என் பேச்சில் நான் பெயர் சொல்லிக் குறிப்பிடவில்லை. வடக்குக்கும்

தெற்குக்குமிடையே கலாச்சாரத் தூதுக் குழுக்கள் பரிமாறிக் கொள்ளப்பட வேண்டும் என்றும் ஆலோசனை கூறினேன்.

நான் சுமார் அரை மணி நேரம் பேசியிருக்கக் கூடும். நண்பர் திரு. விசுவநாதன், நான் தமிழில் பேசியதை உடனுக்கு டன் இந்தியில் மொழி பெயர்த்தார். நான் பேசியபோது, அந்த அவையிலிருந்த ஒவ்வொருவரும் கூர்ந்து கவனித்துக் கேட்டு, முக்கியமான விஷயங்களை நான் குறிப்பிட்ட போதெல்லாம் தலையசைத்து ஆமோதித்தும், கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்தும் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

வடமொழிகள் சூட்டிய மாலை

பின்னர், சந்தன மரச் சீவல் சக்கைகளால் தயாரிக்கப்பட்ட மணங்கமழும் மாலைகளை இந்தி, மராத்தி, சிந்தி, பஞ்சாபி, உருது, குஜராத்தி ஆகிய மொழிகளின் சார்பில் ஒருவர் பின் ஒருவராகப் பலர் எனக்குச் சூட்டினர். அவர்களில் மூவர் பெண்கள்.

அடுத்தாற்போல், எனக்கு நன்றி தெரிவித்து மொழிக்கு ஒருவராகப் பேசினர். அவர்களில் 'நவ பாரத் டைம்ஸ்' ஆசிரி யர் மகாவீர் அதிகாரி பேசுகையில்,

> *''கிராமணியார் கூறுவதுபோல் தென் பகுதி மக்கள் இந்தியால் தங்கள் வாழ்க்கை நலன்கள் பாதிக்கப்படும் என்று அஞ்சுவார்களானால், இந்தி மொழி பேசுபவர்கள் அதிருப்தி அடையக்கூடாது. கிராமணியாருக்குக் கூறுகி றேன், 'இந்தி பேசும் மக்கள் தென் பகுதி மக்களின் மனோநிலைக்கு மரியாதை காட்டுவார்கள்' என்று. தென் பகுதி மக்கள் ஆங்கிலத்தைப் போல இந்தியிலும் புலமை பெறுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு''*

என்று கூறி, என் கருத்துகள் அனைத்தையும் ஆதரித்தார்.

பல்கலைக் கழகப் பட்டதாரியல்லாத எனக்கு நடந்த விருந் திலே தமிழரல்லாத பட்டதாரிகளான கவிஞர்களும், கதாசிரியர்

களும், பிரபல பத்திரிகாசிரியர்களும் கலந்து கொண்டது எனது வாழ்க்கையில் நான் அதுவரை வடபுலத்தில் பெற்றிராத புதிய அனுபவமாகும்.

பம்பாயில் நடந்த விருந்தோடு எனது வடபுலச் சுற்றுலா வெற்றிகரமாக முடிவுற்றது. வடபுலத்துச் சுற்றுலாவை முடித்துக் கொண்டு நான் தமிழகம் திரும்பிய பின்னர் த.அ.க. தோழர்களுக்கு மிகுந்த உற்சாகம் பிறந்தது. தமிழகத்தில் அனைத்துக் கட்சிகளின் ஆதரவையும் பெற்று விரிவான அளவில் பயிற்சி மொழிப் போராட்டம் நடத்த வேண்டுமென்று அவர்கள் என்னைத் தூண்டினர். நானும் அதற்கு இசைந்தேன்.

பிளவுபடாதிருந்த கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர்களான திரு. பி.இராமமூர்த்தி, திரு. கல்யாணசுந்தரம் ஆகியோரைச் சந்தித்துப் பேசினேன். அவர்கள் மனமுவந்து ஆதரவு தெரிவித்தனர். தி.மு.க. அமைப்புத் தலைவர் அண்ணா அவர்களை 29.11.64-இல் நுங்கம்பாக்கத்திலுள்ள அவருடைய இல்லத்தில் சந்தித்துப் பேசினேன். மொழிச் சிக்கல் குறித்து சற்று விரிவாகவே பேசினேன். அண்ணா அவர்கள் ஆங்கில ஆதிக்கத்தை அகற்றித் தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழுக்கே முதலிடம் தேடவேண்டுமென்ற எனது கொள்கையை மன நிறைவுடன் ஏற்றுக் கொண்டார். அதற்காக, தமிழரசுக் கழகத்துடன் துணை சேர்ந்து போராட்டம் நடத்துவதற்கும் அவர் இசைந்தார்.

இந்தி எதிர்ப்புப் போர்!

எதிர்பாராத விதமாக 1964 ஜனவரி 26-இலே மத்திய அரசு இந்தியை ஆட்சி மொழியாகத் திணிக்க முயன்றதன் விளைவாக தி.மு.கழகம் இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டது. இரண்டு வாரங்களுக்குப் பின்னர் அந்தப் போராட்டம் மாணவர்கள் கைக்கு மாறியது. அதனைச் சமூக விரோதிகள் ஊடுருவினர். தி.மு.கழகத்தாரால் அமைதியான முறையில் தொடங்கப் பட்ட போராட்டம் அராஜகமாக உருமாற்றம் அடைந்தது. நல்ல பலன் எதுவும் ஏற்படாத நிலையில் போராட்டம் பிசுபிசுத்துப்

போய்விட்டது. இதனால், தமிழுக்கு ஆதரவாக ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துத் தமிழரசுக் கழகம் உருவாக்கவிருந்த அனைத்துக் கட்சிப் போராட்டத்தைத் தற்காலிகமாக ஒத்திப் போட நேர்ந்தது

1935 ஜனவரி 26 தொடங்கி இந்திதான் மத்திய அரசின் ஆட்சி மொழியாக மாநிலங்களிடையே தொடர்பு மொழியாக அமைய வேண்டுமென்று அரசமைப்புச் சட்டம் கூறுகின்றது. அதனை நடைமுறைக்குக் கொண்டு வர இந்தி வழங்காத மாநிலங்களுடன் இந்தி மொழியில் தொடர்புகொள்ள முயன்று இரண்டொரு சுற்றறிக்கைகளை இந்தியில் அனுப்பியது மத்திய அரசு.

அரசியல் சட்டப்படி இது சரிதான் என்றாலும், தமிழ்நாட்டார் இந்தி பயிலாத நிலையிலே, அந்த மொழியை முதன்மையான ஆட்சி மொழியாக்க முயல்வது திணிப்பு முறைதான். ஆனால், இதற்கு உதவி புரிந்த 'பாவம்' தமிழ்நாட்டாரையே சாரும்.

மூதறிஞர் ராஜாஜி, திரு. காமராசர், திரு.டி.ஏ. இராமலிங்கஞ் செட்டியார், டாக்டர் ப.சுப்பராயன், திரு. சி. சுப்பிரமணியம், திரு.டி.டி. கிருஷ்ணமாச்சாரியார், சர். அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், சர்.என். கோபாலசாமி ஐயங்கார் ஆகிய மாமேதைகளும் பெருந்தலைவர்களும் அரசியல் நிர்ணய மன்றத்தின் உறுப்பினராக இருந்தபோதுதான் — அவர்களுடைய ஆமோதிப்போடுதான் — அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது.

கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜியின் கையொப்பத்தைப் பெற்றுதான் அரசமைப்புச் சட்டம் 1950 ஜனவரி 26-இல் நடைமுறைக்கு வந்தது. அரசமைப்புச் சட்டத்திலுள்ள மொழிப் பகுதியை ஆட்சேபித்து கவர்னர் ஜெனரல் ராஜாஜி அவர்கள் அதனை அமுலாக்கும் சட்டத்தில் கையொப்பமிட மறுத்திருந்தால், அது நடைமுறைக்கு வந்திருக்க முடியாது.

''அரசியல் சட்டத்தில் மொழி பற்றியதான 17-ஆவது பாகம் தமிழ்நாட்டாருக்கு இந்திக்காரர்கள் தயாரித்துள்ள

தூக்குக் கயிறு'' என்று ஒரு சமயம் வருணித்தார் ராஜாஜி. அவருக்குப் பதிலளித்து, ''17-ஆவது பாகம் தமிழினத்தாருக் குத் தூக்குக் கயிறு என்பது உண்மையானால், அதனை ஆட்சே பித்து அரசியல் சட்டத்தில் கையொப்பமிட கவர்னர் ஜெனரலாக இருந்த போது தாங்கள் மறுத்திருக்கலாமே'' என்று நான் அறிக்கை விட்டேன்.

தமிழர் தலைவர்கள் செய்த தவறு

தமிழ்நாட்டுத் தலைவர்கள் — அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாயினுஞ் சரி — இந்தப் பொது மொழிப் பிரச்சினை யிலே மனசாட்சிப்படி நடந்து கொள்ளவில்லை. தங்களுடைய அரசியல் வாழ்வுக்கு லாபம் தரும் வகையில் எப்படியெல்லாம் நடந்து கொள்ளலாமோ அப்படியெல்லாம் நடந்து கொண்டு, தமிழ் மக்களையும் மத்திய அரசையும் பந்தாடி வருகின்றனர். அதனால்தான், பொது மொழிச் சிக்கல் தீராத பிரச்சினையாகி விட்டது. மத்தியில் ஆங்கில ஆதிக்கம் நீடித்தால் நமது தமிழ் நாட்டிலேயும் அது நிலைத்திருக்கத்தான் செய்யும். ஆகவே, இந்தி எதிர்ப்பு என்பது நடைமுறையில் தமிழ் எதிர்ப்பாகவும் இருந்து வருகிறது என்பதுதான் எனது கருத்து.

மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளமையால், அதி காரப் பதவிகளும் அங்கே குவிந்துள்ளன. மாநில — மத்திய அரசுகளுக்கிடையில் போக்குவரத்து செய்யும் பைல்களும் அதிகமாக இருக்கின்றன. இதனால் மத்தியில் ஆட்சிமொழியாக ஆங்கிலமே நீடித்தாலும், மாறாக, இந்தியே மாற்று மொழியாக வரினும், அந்த மொழிகளைத் தமிழ்நாட்டில் கல்வி பயிலும் அனைவரும் — தங்கள் உத்யோக நலன் கருதி — கட்டாயமா கக் கற்றாக வேண்டியிருக்கிறது.

மத்தியிலுள்ள அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந் தளித்து விட்டால் — அதாவது, மாநிலங்களுக்குப் பரிபூரண சுயாட்சி அளித்துவிட்டால் நாட்டில் பொதுமொழிச் சிக்கல் ஒரு கணத்தில் தீர்ந்துவிடும். மொழிச் சிக்கலைத் தீர்க்க இதைத் தவிர வேறு வழியில்லை.

'கட்டபொம்மன்' போராட்டம்!

கலையில் எனக்கு மிகுந்த ஆர்வமுண்டு. சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற காப்பியங்களைப் பல்கலைக் களஞ்சியங்களாகவே நான் கருதுகின்றேன். அவற்றைப் படைத்த இளங்கோ, கம்பர் போன்ற கவிஞர்களைக் கலைஞர்களாகவும் மதிப்பிடுகிறேன். மகாகவி பாரதியார், இயற்றமிழ்ப் புலவராக மட்டுமே விளங்கிய டாக்டர் உ.வே. சாமிநாதய்யரைப் புகழுமிடத்து, 'குடந்தை நகர்க் கலைஞர் கோவே' என்று கூறி, இயற்றமிழ்ப் புலவனும் கலைஞன்தான் என்பதனை உறுதிப் படுத்தியுள்ளார். அரிதின் முயன்று யான் பெற்றுள்ள இலக்கிய அறிவு என்னை ஒரு கலைஞன் தரத்திற்கு உயர்த்தியுள்ளது என்று நான் நம்புகின்றேன்.

சிற்பங்களையும், சித்திரங்களையும் காணும் போதெல்லாம் என்னை மறந்து அவற்றின் அழகிலே நான் ஈடுபடுவதுண்டு. ஆறு, கடல், மலை, அந்திவானம் ஆகியவற்றைப் பார்க்கும் போதெல்லாம் பரம்பொருளின் படைப்புத் திறனை நினைந்து நினைந்து வியந்து வியந்து வேறு நினைப்பற்று அவற்றோடு நான் ஒன்றிவிடுவதுண்டு. ஆம்; அவற்றிலெல்லாம் கலையழகு நிறைந்திருக்கக் காண்கிறேன்.

திருக்குற்றால வாசம்

ஆண்டுதோறும் சூலைத் திங்களில் திருக்குற்றாலத்தில் ஒரு வார காலமோ, மேலும் அதிக நாட்களோ தங்கி, அங்கு அருவியிலே குளித்துக் குளித்து மகிழ்ந்து இன்புறுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறேனென்றால், இயற்கையழகிலே எனக்குள்ள ஈடுபாடுதான் அதற்குக் காரணமாகும். மற்ற நாட்களில் குரங்குபோல் அங்குமிங்குமாகத் தாவித் தாவி ஆட்டம் போடும் என் மனம் நான் திருக்குற்றாலத்தில் தங்கியிருக்கும் நாட்களில் எப்படியோ ஆட்டமடங்கி, அமைதி பெற்று விடுகிறது. ஆம்;

வேறு சிந்தனையற்று, திருக்குற்றாலத்தின் இயற்கைச் சூழ்நிலையால் கவரப்பட்டு, மஞ்சுசூழ் சோலைகளோடு கூடிய மலைகளைக் கண்டு கண்டு மகிழ்ச்சியடைகின்றது. இதுவன்றி, கோடைக் காலத்திலே நாள்தோறும் மாலை நேரத்திலே சென்னை ஐஸ்அவுஸ் கடற்கரை மணலில் இயற்கை அன்னையாம் நிலமகளின் மடியில் அமர்ந்து நண்பர்களோடு உரையாடுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளேன். இந்த இன்பத்தைத் துறக்க நேரும் நாட்களில் என் மனம் வருந்துவதுண்டு.

நான் முதன் முதலாக 1953-இல் இமயமலையின் அடிவாரத்திலுள்ள 'ரிஷிகேஷ்' சென்றபோது, அதன் இயற்கையழகிலே மெய்ம்மறந்து ஈடுபட்டேன். அப்போது என்னுடன் டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், டாக்டர் மு. வரதராசனார், ஔவை தி.க. சண்முகம், நடிகர் தி.க. பகவதி ஆகிய கலைஞர்கள் வந்திருந்தனர். அந்தப் புனிதமான இடத்தில் அப்போதிருந்த சுவாமி சிவானந்தர் அவர்கள் எங்களை வரவேற்று, விருந்தளித்து, ஒரு சிறப்புக் கூட்டமும் நடத்தி, எங்களைப் பாராட்டிப் பேசியதோடு, எங்களையும் பேச வைத்தார். அந்த மாமுனியின் கம்பீரமான தோற்றமும், கணீரென்ற தொனியும், ஆனந்த பரவசமான நடவடிக்கைகளும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. அங்கு நான் பேசியபோது,

> *''வானோக்கி உயர்ந்தும் திசைதோறும் படர்ந்தும், கருமேகங்களால் சூழப்பட்டும் காணப்படும் இமயமலையின் அழகு என்னைத் தன்பால் ஈர்த்துக் கொண்டு விட்டது. கங்கா நதியின் பிரவாகம் என்னை மெய்மறக்க வைக்கிறது. அத்துடன், ஆசிரமத்தில் நிலவும் அமைதியும், சிவானந்த முனிவரின் அன்பும் என்னை அடிமை கொண்டு விட்டன. 'இங்கேயே தங்கிவிடலாமா?' என்று என் மனம் எண்ணுகின்றது''*

என்று கூறினேன். சுவாமிகள், ''சிவஞானம், எங்களுக்குத் தேவை. இங்கேயே தங்கிவிடுங்கள். இங்கேயே தங்கி விடுங்கள்'' என்று அன்போடு எழுச்சி மிக்க குரலில் கூறினார். ஆனால், என்வினை என்னை அந்த முனிவரிடமிருந்து மீட்டு சென்னைக்

குக் கொண்டு வந்துவிட்டது. உண்மையில் கலை உணர்வு மட்டும் எனக்கு இல்லாதிருந்தால், நான் உருவ வழிபாட்டுக்கு எதிரியாக மாறியிருக்கக் கூடும் — ஏன், நாத்திகனாகக் கூட நான் ஆகியிருக்கக் கூடும். ஆம்; நாத்திகத்திற்கும் கலைக்கும் நெடுந்தூரம்!

சான்றோர் தொடர்பு

கடற்கரையில் அமர்ந்து நண்பர்களுடன் உரையாடிப் பொழுதுபோக்கும் நேரங்களிலேயும் என் மனம் இலக்கியத்தி லேயே ஈடுபடுகின்றது. 1945-ஆஆம் ஆண்டிலே சில நாட்க ளில் ஐ.ஜி. அலுவலகத்திற்கு எதிரேயுள்ள கடற்கரை மணற் பரப்பில் அமர்ந்து பொழுதைப் போக்கியிருக்கிறேன். தனியாக அல்ல; ராஜாஜி, மகாகனம் வி.எஸ். சீனிவாச சாஸ்திரி, டி.ஆர். வெங்கடராம சாஸ்திரி, ஜி.ஏ. நடேசன் ஆகிய சான்றோர் களோடு!

ராஜாஜியும் நானும் அன்றாடம் சந்தித்துப் பழகிய கால மது. அவர் பொழுதுபோக்கக் கடற்கரை செல்லும் நாட்களிலே அவருடன் நானும் செல்வேன். அவர்தான் மகாகனம் சாஸ்திரி யாருக்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்தார். சாஸ்திரியார் சிறந்த புலவர். ஆனால், அவரது புலமையெல்லாம் ஆங்கில — சமஸ்கிருத மொழிகளில்தான்! தமது தாய் மொழியான தமிழில் அவர் புலமை பெற்றிருக்கவில்லை. ஆயினும், ஏதே னும் ஒரு மொழியில் நிறை புலமை பெற்ற ஒருவர், பிற மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்களைக் கேள்வி ஞானத்தால் நன்றாகச் சுவைக்க முடியும். அப்படித்தான் தமிழ் இலக்கியங்க ளைப் பற்றிய சிறப்புக்களை என் வாயிலாகக் கேட்டறிந்து நன்கு சுவைத்தார் சாஸ்திரியார்.

சாஸ்திரியார், சிலப்பதிகாரக் காப்பியத்தின் சிறப்புகளை என் மூலம் கேட்டறிந்து இன்புறுவார். நான் வான்மீகி ராமாய ணத்தின் சிறப்புகளை அவர் வாயிலாக அறிந்து கொள்வேன். எங்களை இலக்கிய சர்ச்சையில் இழுத்துவிட்டு, நாங்கள் விவாதிப்பதைக் கேட்டு ராஜாஜி ரசிப்பார்.

ஒரு நாளைக்கு நான் கடற்கரைக்கு வராவிட்டால், மறுநாள் என்னைக் காணும்போது, ''நேற்று சாஸ்திரியார், கிராமணியாரின் செந்தமிழைக் கேட்க முடியவில்லையே'' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார்'' என்பார் ராஜாஜி. சாஸ்திரியார் குழந்தை போன்று பழகக் கூடியவர்.

உலகில் 'கலை' என்றாலே, 'பாட்டும் கூத்தும்'தான் என்று பொருள் கொள்ளப்படுகிறது. அதனால், 'கலைஞன்' என்றாலே 'நடிகன்' என்று பொருளாகிவிட்டது. இதன் காரணமாக, நாடகமும் திரைப்படமும் கலை ஆர்வமுடைய மக்கள் மீது அளவுக்கு மீறி ஆதிக்கம் பெற்றுவிட்டன. ஒழுக்க வாழ்வு நடத்துபவனை விட உயர் கலைஞன் வேறு யாரிருக்க முடியும்!

எனது இளமைப் பருவத்தில் நாடகத்தையோ, திரைப்படத்தையோ பார்க்க எனக்கு அதிக ஆர்வமிருந்ததில்லை. அவற்றை நான் வெறுக்கவில்லை என்றாலும், அரசியலில் வெறிபிடித்த ஊழியனாக இருந்த காரணத்தால் பொழுதுபோக்குக் களியாட்டங்களை என் மனம் விரும்பவில்லை. டி.கே.எஸ். சகோதரர்களுடன் தொடர்பு ஏற்பட்ட பிறகுதான் நாடகங்களைப் பார்க்கும் விருப்பம் ஏற்பட்டது. அவர்கள் நடத்திய நாடகங்களை ஒன்றுவிடாமல் பார்த்திருக்கிறேன். மற்றவர்கள் நடத்தும் நாடகங் களுக்கும் ஔவை டி.கே.சண்முகம் அடிக்கடி என்னை அழைத்துச் செல்வார்.

ஜெமினி வாசன் விருப்பம்

திரைப்படங்களுக்கு நண்பர்கள் வற்புறுத்தி அழைக்கும் போதுதான் செல்வேன். படத் தயாரிப்பாளர்களோடும் நடிகர்களோடும் எனக்குத் தொடர்பு ஏற்பட்ட பின்னர் அவர்களுடைய அழைப்பு காரணமாகவும் திரைப்படங்கள் சிலவற்றைப் பார்த்திருக்கிறேன். திரைப்படக் கலையை நான் வெறுக்கவில்லை என்றாலும், அதன்பால் என் மனம் அதிகமாக ஈடுபடுவதில்லை. ஆயினும், நல்ல செய்திகளை மக்களுக்கு வழங்குவதற்குத் திரைப்படமே நாடகத்திலும் சிறந்த கருவி என்பதனை நான் அறிந்திருக்கிறேன். அந்த வகையில் கட்டபொம்மன், கப்ப

லோட்டிய தமிழன் ஆகிய மாவீரர்களின் புகழ் பரப்ப திரைப் படத் துறையோடும் ஒரு சந்தர்ப்பத்தில் நான் தொடர்பு கொள்ள லானேன்.

ஜெமினி அதிபர் திரு.எஸ்.எஸ். வாசன் அவர்கள் ஒரு சமயம் என்னை அணுகி வீரபாண்டியக் கட்டபொம்மனின் வீர வரலாற்றைத் திரைப்படமாக்கத் தாம் விரும்புவதாகவும், நான் கதை — வசனம் எழுதி உதவி புரிய வேண்டுமென்றும் என்னைக் கேட்டுக் கொண்டார். அந்த அளவுக்கு சினிமாத் துறையோடு இரண்டறக் கலந்துவிட என் மனம் விரும்ப வில்லை. ஆகவே, அன்பர் திரு. வாசன் அவர்கள் விருப்பத் திற்கு இணங்க பணிவன்போடு மறுத்துவிட்டேன். அப்போதும் அவர் என்னை விடவில்லை. படத்தைத் தயாரிப்பதிலே எல்லா வகையிலும் ஆலோசனை கூறி உதவி புரிவதற்கேனும் நான் ஒப்புக் கொள்ள வேண்டுமென்று என்னை வற்புறுத்தினார். இந்தக் குறைந்த அளவு உதவியைச் செய்வதற்கு இணங்கி னேன். பின்னர், ஜெமினி தயாரிப்பாக ''வீரபாண்டியக் கட்டபொம் மன்'' வருமென்று நாளிதழ்களில் விளம்பரம் செய்தார்.

பந்துலுவின் விருப்பம்

இதற்குச் சில திங்கள் கழித்து பத்மினி பிக்சர்ஸ் உரிமையா ளர் பி.ஆர். பந்துலு அவர்கள் திரு.எஸ்.எஸ். வாசன் அவர் களை அணுகி, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களைக் கதாநாயகனாகக் கொண்டு கட்டபொம்மன் கதையைத் தாம் தயாரிப்பதற்கு அவரது அனுமதியை வேண்டினார். வாசன் அவர்களும் அதற்கு மனநிறைவோடு இசைவு தெரிவித்தார். திரு.பி.ஆர். பந்துலுவும் நடிகர் திலகமும் என்னை அணுகி, ''கட்டபொம்மன்' திரைப்படத் தயாரிப்புக்கெனத் தாங்கள் அமைக்கும் ஆலோசனைக் குழுவின் தலைவனாக இருக்க வேண்டுமென்று என்னைக் கேட்டுக் கொண்டனர். நானும் இசைந்தேன். இதன் மூலம்தான் திரைப்படத் தொழிலோடு முதன் முதலாக எனக்குத் தொடர்பு ஏற்பட்டது.

என் ஜாதகப்படி இந்தத் துறையிலேயும் நான் போராட்டத் தைச் சந்திக்க வேண்டியவனானேன். கட்டபொம்மன் திரைப்

படத்திற்குக் கதை — வசனம் எழுதுவதிலே போட்டி ஏற்பட்டது. அந்தப் போட்டியிலே தீர்ப்புக் கூறும் நிலையில் நான் இருக்கவில்லை. ஆம்; கட்டபொம்மன் படத்திற்குக் கதை — வசனம் எழுதுபவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு முழுவதும் பி.ஆர். பந்துலுவையும், நடிகர் திலகத்தையும் சார்ந்ததிருந்தது. திரு. சக்தி கிருஷ்ணசாமி அவர்கள் ''கட்டபொம்மன்'' நாடகமொன்றை எழுதி சிவாஜி கணேசன் குழுவினர் அதனை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்த நேரமது. அதனால், அந்த நாடகத்தையே சில மாறுதல்களுடன் திரைப்படமாக எடுக்க பந்துலுவும், சிவாஜி கணேசனும் திட்டமிட்டனர். அதற்கு நானும் இசைவு தெரிவித்தேன். சக்தி கிருஷ்ணசாமியின் கதை — வசனம் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. ஆனால், எப்படியோ எதிர்ப்பு தோன்றிவிட்டது. வியப்பென்னவென்றால், எதிர்ப்பாளர் என் மீது பாய்ந்ததாகும். ஆம்; எதற்காகவோ, யார் மீதோ சினம் கொண்டு என்னைக் குறி வைத்துத் தாக்கினர்.

கவிஞர் கண்ணதாசன், தாம் நடத்தி வந்த 'தென்றல்' பத்திரிகையிலே தாக்குதலைத் தொடங்கினார். அத்துடன் கட்டபொம்மன் திரைப்படத்துக்குப் போட்டியாக மருதுபாண்டியரின் வீர வரலாற்றைத் திரைப்படமாக்க முன் வந்தார். அவரது போட்டி மனப்பான்மையை நான் வெறுத்தேன் என்றாலும், சிவகங்கைச் சீமையின் சுதந்திரத்தைக் காப்பாற்ற கிழக்கிந்தியக் கம்பெனியை எதிர்த்துப் போராடிய மருதுபாண்டியரின் வீர வரலாறு திரைப்படமாக்கப்படுவதை நான் விரும்பினேன். அந்தப் படப்பிடிப்பின் தொடக்க விழாவிற்கு கவிஞர் கண்ணதாசன் என்னை அழைத்தார். மனமுவந்து அதிலே கலந்து கொண்டு அவரது முயற்சி வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்துக் கூறினேன். என் அரிய நண்பர் அண்ணா அவர்கள் அந்த விழாவுக்குத் தலைமை தாங்கி, தமிழக விடுதலை வீரர்களின் புகழ் பரப்ப நான் ஆற்றிவரும் பணிக்காக என்னைப் பாராட்டிப் பேசினார். கண்ணதாசனுக்கு என்னுடைய ஒத்துழைப்பு கிடைத்ததற்காக அவர் பெரிதும் மகிழ்ந்தார்.

போட்டி மனப்பான்மையுடன் தயாரிக்கவிருக்கும் ஒரு படத்தின் துவக்க விழாவிலே கட்டபொம்மன் படத் தயாரிப்பு

ஆலோசனைக் குழுவின் தலைவனான நான் கலந்து கொண்டது பந்துலுவுக்கும், சிவாஜி கணேசனுக்கும் வருத்தத்தைத் தந்ததாக நண்பர்கள் மூலம் அறிந்தேன். அந்த வருத்தம் நியாயமானது தான். தொழில் துறையில் போட்டியிடுவோரிடையே அது இருக்கத்தானே செய்யும். ''சிவகங்கைச் சீமை'' தொடக்க விழாவிலே கலந்து கொள்வதன் மூலம் கட்டபொம்மன் படத்திற்கு எதிரான போட்டி உணர்ச்சியைத் தவிர்க்கவோ, குறைக்கவோ முடியுமென்று நான் நம்பினேன். ஆனால், நான் நம்பியது நடக்கவில்லை.

தமிழ்வாணனின் எதிர்வாதம்

''கட்டபொம்மன்'', ''சிவகங்கைச் சீமை'' ஆகிய திரைப் படங்களைத் தயாரிக்கும் முயற்சிகள் நடந்து கொண்டிருந்த நேரத்திலே எனக்கு மற்றொரு முனையிலிருந்தும் எதிர்ப்பு ஏற்பட்டது. திரு. தமிழ்வாணன் அவர்கள் தன்னை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் ''கல்கண்டு'' வார ஏட்டிலே ''கட்டபொம்மன் கொள்ளைக்காரன்'' என்ற தலைப்பில் தொடர் கட்டுரை எழுதப் போவதாக நாளேடுகளிலெல்லாம் விளம்பரம் செய்தனர். கட்டபொம்மனை ஏகாதிபத்திய எதிர்ப்பாளனாக வருணித்து நான் எழுதியது வரலாற்று உண்மைக்கு முரணானதென்பது அவருடைய வாதம். அதனை மறுத்து அவனது உண்மை வரலாற்றைத் தாம் எழுதப் போவதாக விளம்பரப்படுத்தினார். கற்பனைகளையும் பொய்களையும் கலந்து ஒரு புதிய புராணமே எழுதி வந்தார். அதனால் சிறிது பரபரப்பு ஏற்பட்டது. 'கல்கண்டு' பிரதிகள் கூடுதலாக விற்பனையாயின. இதை எதிர்பார்த்துத்தான் தமிழினத்திற்குப் பெருமை தேடிய ஒரு மாவீரனை இழிவுபடுத்துவதிலே அவர் ஈடுபட்டார்.

தமிழ்வாணனுடைய வினோதமான எதிர்ப்பு கண்டு நான் கலங்கவில்லை என்றாலும், மக்கள் குழப்பமடையாமலிருப்பதற்காக மறுப்பெழுத வேண்டியது அவசியமென்று கருதினேன். ''சுதந்திர வீரன் கட்டபொம்மன்'' என்னும் தலைப்பிட்டு 'செங்கோலி'ல் தொடர் கட்டுரை எழுதினேன். இதே பெயரில் அந்தத் தொடர் கட்டுரை பின்னால் நூலாக வெளிவந்தது.

ஆதித்தனாரின் பூலித்தேவன்!

'கட்டபொம்மனு'க்கு எதிராக மூன்றாவது முனையும் தோன்றியது. அப்போது 'நாம் தமிழர்' இயக்கம் நடத்திக் கொண்டிருந்தார் என் பெரு மதிப்புக்குரிய நண்பர் திரு.சி.பா. ஆதித்தனார். அவர் ''பூலித்தேவன்'' என்ற பெயரில் தென் பாண்டி நாடு பெற்றெடுத்த மற்றொரு மாவீரனின் வரலாற்றை நாடகமாக்கித் தன் கட்சி மாநாட்டு மேடைகளிலே அதனை நடத்தலானார். அந்த நாடகத்தைத் திரைப்படமாக்கும் முயற்சி யிலும் அவர் ஈடுபட்டார். பூலித்தேவன் போராடியது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு அல்ல. ஆற்காடு நவாப் ஆதிக்கத்தோடு! அவனது புகழ் பரப்புவதிலேயும் எனக்கு மாறுபட்ட கருத் தில்லை. ஆனால், வீரபாண்டியக் கட்டபொம்மனை இழிவுபடுத் தும் வகையில் ''பூலித்தேவன்'' கதை வசனம் அமைக்கப்பட் டிருந்தது. எப்படியும் பத்மினி பிக்சர்சார் தயாரிக்கும் வீரபாண் டியக் கட்டபொம்மன் படத்தின் வெற்றியைத் தடுத்துவிட வேண் டுமென்ற உள்நோக்குடன்தான் மும்முனைப் போராட்டம் உரு வானது. ஒரு கட்டத்தில் பி.ஆர். பந்துலுகூட கொஞ்சம் பயந்தார் என்று சொல்ல வேண்டும். நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் வளர்ச்சி கண்டு பொறாமை கொண்டவர்களும் இந்த மும் முனைப் போரிலே பங்கு பெற்றனர்.

இந்தப் போராட்டத்தால் கட்டபொம்மன் புகழ் மேலும் ஒளிவிட்டுப் பிரகாசித்தது. எழுத்தாலும் பேச்சாலும் எதிர்ப்பு களை முறியடிக்க முழு மூச்சுடன் பாடுபட்டேன். ஒரு இயக்கமே நடத்தினேன் என்று சொல்ல வேண்டும். 1958 அக்டோபர் 16-இல் கட்டபொம்மன் நினைவு நாளைத் தமிழ்நாடு முழுவதி லும் மிகமிகச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்தேன். சென்னை நகரில் அக்.16 முதல் 19 வரை அவ்விழா தேசபக்தி யுடைய தமிழினத்தார் பெருமைப்படத்தக்க வகையில் நடத்தப் பெற்றது. .

ராஜாஜியின் உதவி

16.10.58 அன்று சென்னை செயின்ட்மேரிஸ் மண்டபத்தில் சென்னை மாவட்ட தமிழரசுக் கழகச் சார்பில் கட்டபொம்மன் நினைவுநாள் கூட்டம் நடைபெற்றது. அன்று நகரில் பெருமழை. கடுங்குளிர் வேறு. கூட்டம் ஆரம்பமான சிறிது நேரத்திற்குள், திடீரென ஒரு பெரியவர் மிகுந்த சிரமத்துடன் நடந்து மண்டபத் திற்குள் நுழைந்தார். அவரைக் கண்டதும், கூட்டத்திலே ஒரே பரபரப்பு! கழகத் தோழர்கள் அவர் பெயரைச் சொல்லி வாழ்த் தொலி எழுப்பி, அவரை வரவேற்றனர். அந்தப் பெரியவர், அறிஞர் ராஜாஜியாவார்! அவரை நான் எதிர்கொண்டழைத்து மேடையில் அமர்த்தினேன்.

யாரும் அழைக்காமலே, கூட்டச் செய்தியை பத்திரிகை களில் பார்த்துவிட்டு, அவராகவே வந்தார், வந்தவர், நான் பேசி முடித்த பின்னர், தாமாகவே விரும்பிப் பேசினார். நீண்ட நேரம் பேசினார். அவரது பேச்சின் முற்பகுதி வருமாறு:—

''நான் வந்தது விழாவில் கலந்து கொள்ளவே; பேசுவ தற்காக அல்ல! பேசுகிறவர்கள் வேண்டிய பேர் இருக்கிறார் கள்; விஷயங்களை ஆராய்ந்து ஆராய்ந்து பேசுகிறவர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்த பிறகுதான் இங்கு வரத் தீர்மானித்தேன்.

''இன்று எனது உடல் சரியாக இல்லை. ஆயினும் விழாவுக்கு வராமலிருந்தால் நானும் அந்த எதிர்க்கட்சியில் சேர்ந்துவிட்டதாக எண்ணி விடுவார்களோ என்று பயந்து, மழையாயிருந்தாலும் சரி; ஜுரமாயிருந்தாலும் சரி என்று வந்து சேர்ந்தேன்.

''கட்டபொம்மனைப் பற்றிய விவாதம் எனக்கு ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது. இந்த மாதிரி விஷயத் தில் யாராவது ஒரு விவாதத்தைக் கிளப்புவார்கள் என்று வேறு எந்த நாட்டிலும் எதிர்பார்க்க மாட்டார்கள். என்ன காரணத்தினாலோ இங்குக் கிளம்பியிருக்கிறது. ம.பொ.சி. அவர்களுடைய ஜாதகம்தான் இதற்குக் காரணம். கட்ட

பொம்மனுடைய ஜாதகம் கூட அல்ல. அதைப் பெரிதாக நினைத்து இவ்வளவு நேரம் பேசினார்களே என்று எனக்கு வருத்தமாக இருக்கிறது. அந்தப் பத்திரிகைகளையெல் லாம் நான் படிக்கிற வழக்கம் கிடையாது. அதனால், என்ன எழுதினார்கள் என்று எனக்குத் தெரியாது. இங்கு. ம.பொ.சி. பேசியதிலிருந்து அந்தப் பத்திரிகைகள் எழுதிய விஷயங்கள் அவர்களுக்கு ரொம்ப வருத்தத்தைத் தந்ததா கத் தெரிகிறது. இல்லாவிட்டால், அதைப்பற்றி இவ்வளவு நேரம் பேசியிருக்க மாட்டார்கள்.

''கட்டபொம்மனுக்குச் சிறப்பு செய்வதை யாரோ ஆட்சேபிக்கிறார்கள். ஆட்சேபிப்பதில் ஏதாவது பிரயோஜ னம் உண்டா? பழைய உபமானம் ஒன்று நினைவுக்கு வருகிறது. சொன்னால் கோபித்துக் கொள்வார்கள். சந்திர னுக்கு ஏதாவது குறை உண்டாகுமா, நாய் அதைப் பார்த்து சப்தம் போடுவதால்?

''சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்ட ஒரு தேசபக் தனை, கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இறந்து போன ஒருவனை — சுதந்திரம் வந்துள்ள இப்போ தாவது பாராட்ட வேண்டாமா? கட்டபொம்மன் எந்த ஆட்சியை எதிர்த்தானோ அந்த ஆட்சி நேற்றுவரை இங்கே இருந்து வந்திருக்கிறது. அது முடிந்துவிட்ட இப்போது அந்த ஆட்சியை எதிர்த்த முன்னோர்களை ஒருவர்பின் ஒருவராகக் கொண்டாட ஆரம்பித்திருக்கிறோம். இதற்கு யாராவது ஆட்சேபணை சொல்வார்களா? தமிழ்நாட்டில் தான் இந்த மாதிரியெல்லாம் நடக்கிறது.

''கட்டபொம்மன் நம்முடைய தேசத்தைச் சேர்ந்தவன். நம்முடைய பாஷையில் பேசியவன். நம்முடைய ஊரின் புறக்கடைலே கோட்டை கட்டி வாழ்ந்தவன். அப்படிப் பட்டவனை நாம் போற்றக் கூடாதென்று யாராவது தடுத் தால் அது பைத்தியக்காரத்தனம். அந்தச் செயல் நம் நாட்டின் துரதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். எதிர்ப்பைப் பற்றி இனி நீங்கள் யோசனை செய்ய வேண்

டாம் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஆராய்ச்சியை விட்டுத் தள்ளுங்கள். செய்ய வேண்டிய தைச் செய்து கொண்டு போக வேண்டியது நமது கடமை.''

இந்தப் பொதுக் கூட்டத்தில் பேசுவதற்கு முன்பே அறிஞர் ராஜாஜி அவர்கள் ''சுயராஜ்யா'' ஆங்கில வார (8.3.58) இதழிலே 'முட்செடிகள்' என்று தலைப்பிட்டு ஒரு சிறப்புக் கட்டுரை எழுதினார். ஆம்; வீரபாண்டியக் கட்டபொம்மனைப் புகழ்ந்து! அந்தக் கட்டுரையின் இறுதிப் பகுதி வருமாறு:

''... அத்தகைய வைரம் பாய்ந்த மற்றுமொரு முட்செடிதான் கட்டபொம்மு. திப்புசுல்தானும் அப்படிப் பட்டவன் தான். 'நாகரிக'த்தின் பாதையில் இத்தகைய 'முட்செடிகள்' பல ஓங்கி நின்றிருக்கின்றன. காந்தியடிகள் கூட அவர் வெற்றி பெற்று 'ஞானி' என்றும் 'வீரர்' என்றும் எல்லா நாடுகளாலும் போற்றிப் பாராட்டப்படும் வரையில் இந்தியாவின் வைஸ்ராய்ப் பிரபுக்களால் இத்தகைய முட்செடியாகவே கருதப்பட்டார்.''

தேசபக்தியற்றவர்களால் வீரபாண்டியக் கட்டபொம்மன் தூற்றப்பட்ட நாளிலே, அஸ்ஸாம் வாசியும், தமிழக ஆளுநருமான மேதகு விஷ்ணுராம் மேதி அவர்கள் அந்த மாவீரனுக்குச் சூட்டிய 'புகழ்மாலை' வருமாறு:

''வீரபாண்டியக் கட்டபொம்மு தமிழ்நாட்டின் வீரர் மட்டுமல்ல; இந்தியா முழுவதற்குமே உரிய தேசிய வீரராவார். எல்லா பாளையக்காரர்களும் ஆங்கில ஆட்சிக்குப் பணிந்து போயிருந்தும், தாம் ஒருவர் மட்டுமே தன்னந்தனியாக நின்று போராடி உயிர் நீத்த வீரர். அவருடைய வீரச் செயல்கள் இந்திய மக்கள் அனைவருக்குமே நாட்டுப் பற்றையும் வீர உணர்ச்சியையும் அளிக்கவல்லவை.''

(30.3.59 அன்று சென்னை அண்ணாமலை மன்றத்தில் ''கட்டபொம்மன்'' 100ஆவது நாடக நிறைவு விழாவில் பேசியது)

கட்டபொம்மன்தான் முதன் முதலாக இந்திய சதந்திரப் போரைத் துவக்கி வைத்தான் என்று நான் எழுதியிருப்பதனை தமிழக அரசும் ஏற்றுக் கொண்டது என்பதனை இங்கு நான் சொல்லியாக வேண்டும்.

9.3.59-இல் தமிழகச் சட்டப்பேரவையில் கட்டபொம்மன் பற்றிக் கேட்கப்பட்ட கேள்வியும், சர்க்கார் கட்சித் தலைவர் — நிதியமைச்சர் மாண்புமிகு சி.சுப்பிரமணியம் அளித்த பதி லும் வருமாறு:

கேள்வி: முதன் முதலாக பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராடிய சிற்றரசர் கட்டபொம்முவே என்பதை அரசினர் ஒப்புக் கொள்கிறார்களா?

பதில்: அதற்கு இந்த அரசின் நற்சான்று பத்திரம் தேவை யில்லை. இது சரித்திரப் பூர்வமான உண்மை.

19.10.58-இல் வடசென்னையில் தொடங்கி தென் சென் னையில் முடியக்கூடிய வகையில் வீரபாண்டியக் கட்டபொம் மன் உருவச் சிலை ஊர்வலம் சென்னை மாவட்டத் தமிழரசுக் கழகத்தால் மிகச் சிறப்பாக நடத்தப்பெற்றது. ஊர்வலம் திருவல் லிக்கேணி திலகர் கட்டத்தை அடைந்ததும் அங்கு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஊர்வலத்தையும் பொதுக் கூட்டத்தையும் பற்றி ''செங்கோல்'' (26.10.58) இதழில் வெளி யான வருணனைக் கட்டுரையின் ஒரு பகுதி வருமாறு:

''தமிழரசுக் கழகத்தின் வரலாற்றில் மட்டுமல்ல; சென்னை நகரத்தில் சமீபகால அரசியல் வரலாற்றிலும் கண்டறியாத அற்புதமாக விளங்கியது சென்ற 19.10.58-இல் கட்டபொம்மன் விழாக் குழுவினர் நடத் திய மாபெரும் ஊர்வலம். இராயபுரம் ராபின்சன் பார்க்கி லிருந்து புறப்பட்ட ஊர்வலம் சுமார் எட்டு மைல்களைக் கடந்து திருவல்லிக்கேணி கடற்கரையை அடைந்தது. ஊர்வலம் ஒரு மைல் நீளம் இருந்தது என்ற உண்மையை பூலித்தேவன் புகழ்பாடும் 'தினத்தந்தி'யும் வெளியிட்டிருந் தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆற்றின் இரு கரையிலும் மோதும் வெள்ளம் போல மக்கள் கூட்டம் வீதி நிறைந்து, வீதியின் இருபுறமிருந்த வீடுகளின் வாயில்கள் நிறைந்து, வானளாவி நிற்கும் உயர்ந்த மாளிகையின் பலகணிகளும் நிலா முற்றங்களும் நிறைந்து காட்சியளித்தது, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அதன்பின்னே விசேஷ உடையணிந்த பாண்டு வாத்தியக்காரர்கள், ராணுவ பவனிக்குரிய பாணியில் இசைக் கருவிகளை இசைத்துச் சென்றனர்.

''அடுத்தாற்போல, தமிழகத்திற்கேயுரிய நாதசுர இசைக் கருவியாளர்கள் மங்கள ஒலி எழுப்பிச் சென்றனர். தமிழரசுக் கழகச் சின்னங்களால் அலங்கரிக்கப்பட்டு தங்க முகப்படாம் அணிந்த யானை வீர நடை போட்டுச் சென்றது. தமிழினத்தின் மானங் காத்த வீரபாண்டியக் கட்ட பொம்மன் திருவுருவச் சிலை வைக்கப்பட்ட அலங்கார புஷ்ப ரதம் அடுத்தாற்போல் சென்றது.

''ஐந்நூறுக்கும் மேற்பட்ட சைக்கிள்களில் தமிழரசுக் கழகத் தொண்டர்கள் 'சைகிள் யூனிட்' படையினர் போன்று சென்றனர். ஆயிரத்திற்கும் அதிகமான ஒரே மாதிரி உடை யணிந்த — தொண்டர்கள் காலாட் படையினர் போன்று சென்றனர். அழகுற அலங்கரிக்கப்பட்ட மோட்டாரில் தலைவர் ம.பொ.சி., கலைக்காவலர் எம்.ஏ. வேணு, கலைஞர் தி.க. சண்முகம், கலைஞர் ஏ.பி. நாகராசன் ஆகியோர் அமர்ந்து சென்றனர்.

''இலக்கியக் கண் கொண்டு இந்த ஊர்வலத்தை நோக்கியவர்களின் உள்ளங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அரச பவனியும் இவ்வளவு சிறப்பாக இருந்திக்குமா என்று மலைத்தனர்! ஆங்காங்கே மாடிகளின் உச்சியிலிருந்து ஊர்வலத்தின் மீது மக்கள் மலர்மாரி பொழிந்தனர். பெண்கள் பலர் தலைவர்களுக்கு ஆரத்தி எடுத்து நெற்றியில் திலகமிட்டனர்.

''மக்களில் பலர் வீர வழிபாட்டைத் தெய்வ வழிபாடாக மாற்றி விடுவதுபோலக் கட்டபொம்மன் உருவச்

சிலைக்குக் கற்பூர ஆரத்தி எடுத்து, மிகுந்த பக்தியோடு கைகூப்பி வழிபட்டனர். சுமார் பன்னிரெண்டு லட்சம் மக்கள் வாழும் சென்னை நகரத்தில் குறைந்தது ஆறு லட்சம் பேராவது ஊர்வலம் சென்ற பாதையின் இரு மருங்கிலும் குழுமி நின்று ஊர்வலத்தைக் கண்டுகளித்தனர் என்றால் அது மிகையன்று.

''ஊர்வலம் சென்ற வழிநெடுகிலும் செய்யப்பட்டிருந்த அலங்கார ஏற்பாடுகள் அபாரம்! குறிப்பாக, மிக நீளமான தங்கசாலைத் தெருவில் செய்யப்பட்டிருந்த அலங்கார ஏற்பாடுகள் கண்களைக் கவர்ந்தன. இருபதடிக்கொரு நுழைவாயில்! ஐந்தடிக்கு ஒரு தோரண வாயில்! — என்ற விதத்தில் வானத்தையே அலங்காரத்தால் மூடி மறைத்துவிட்டனர் தமிழரசு இயக்கத் தோழர்கள்.

''ராயபுரம் ராபின்சன் பூங்காவில் பிற்பகல் 3 மணிக்குப் புறப்பட்ட ஊர்வலம் இரவு 7 மணிக்குத் திருவல்லிக்கேணி கடற்கரையை அடைந்தது. திலகர் கட்டத்தில் வட்டமான தூண்கள் கொண்ட பெரிய அழகிய மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. மண்டபத்தின் முகப்புக்கு மேலே வாளேந்திய கையுடன் பாயும் குதிரை மீதமர்ந்து போர்க்களம் செல்வது போல் கட்டபொம்மன் உருவம் அமைக்கப் பட்டிருந்தது. அந்த உருவம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு காண்போர் கண்களைக் கவர்ந்தது.

''ஊர்வலம் வருவதற்கு முன்பே சுமார் ஒரு லட்சம் மக்கள் கடற்கரைக் கூட்டத்தில் திரண்டிருந்தனர். பொதுக் கூட்ட மேடைக்கு அரை மைல் சுற்று வட்டாரத்திற்கு கடற்கரை மணற் பரப்பே தெரியாத வகையில் மக்கள் திரண்டிருந்தனர்.''

தமிழரசுக் கழகம் நடத்திய மகத்தான ஊர்வலமும் மாபெரும் பொதுக் கூட்டமும் கட்டபொம்மனிடம் தமிழின மக்கள் கொண்ட பக்தியை வெளிப்படுத்துவதாக இருந்தன.

இக்கூட்டத்தில் டாக்டர் மு.வரதராசனார் அவர்களும் மற்றும், திரு.பி.இராமமூர்த்தி (கம்யூனிஸ்டு), டாக்டர் விஜயலட்சுமி (பி.சோ) உள்பட அனைத்துக் கட்சித் தலைவர்களும்

பாஞ்சாலங்குறிச்சி மன்னனின் வீர வாழ்க்கையைப் பாராட்டிப் பேசினர். டாக்டர் மு.வரதராசனார் ''தமிழகத்தின் வரலாற்றில் கரிகால வளவன், இராச ராசசோழன் வரிசையிலே வைத்து எண்ணத்தக்க மாவீரன்'' என்று பேசினார்.

திரு.பி. இராமமூர்த்தி ''கட்டபொம்மனைப் பழிப்போர் ஏகாதிபத்தியங்களின் தாசர்கள், எட்டப்பர்கள்'' என்று மிகுந்த உணர்ச்சியுடன் கூறினார்.

கட்டபொம்மனின் வீர வரலாற்றுக்குக் களங்கம் கற்பிப்பதன் வாயிலாக, பத்மினி பிக்சர்சார் தயாரிக்கும் ''வீரபாண்டியக் கட்டபொம்மன்'' திரைப்படத்தின் வெற்றியைத் தடுத்துவிடலாம்; அந்தப் படத்தில் கட்டபொம்மனாக நடிக்கும் சிவாஜி கணேசனின் புகழுக்குக் கறுப்புப் புள்ளி வைத்துவிடலாம் என்று கருதியவர்களோடு ஒருபுறம் தமிழரசுக் கழகம் போராடிக் கொண்டிருந்த நேரத்திலே, இன்னொரு புறம் ''கட்டபொம்மன்'' படத் தயாரிப்பிலே, பத்மினி பிக்சர்ஸ் அதிபர் பி.ஆர். பந்துலு மிகவும் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

கட்டபொம்மன் வரலாற்றோடு தொடர்புடைய ஊர்களையும் கோட்டைகளையும், பிற இடங்களையும் நேரில் பார்ப்பதற்காக நானும், பி.ஆர்.பந்துலுவும், சிவாஜிகணேசன் ஆகியோரும் பாண்டி நாட்டில் ஒரு வார காலம் யாத்திரை செய்தோம். அது ''வீர வழிபாட்டு யாத்திரை''யாகவும் அமைந்தது.

அன்பர் பந்துலு, பாஞ்சாலங்குறிச்சி பாளையத்தைச் சார்ந்த சுதேசிப் படைக்கும் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சார்ந்த பரதேசிப் படைக்கும் இடையே நடந்த கடும்போரை தத்ரூபமாகப் படமாக்க விரும்பினார். அதற்காக மத்திய அரசின் பாதுகாப்பு இலாகாவுக்கு எழுதி, படத்தில் நடிப்பதற்கு இராணுவ வீரர்களையும், போர்க் கருவிகளையும் தந்து உதவுமாறு கோரினார். மத்திய அரசும் ராஜஸ்தான் மாநிலத்தின் தலைநகரான ஜெய்ப்பூரில் இராணுவ யூனிட்டைத் தந்து உதவ முன் வந்தது. அதனால், போர்க் காட்சிகள் அனைத்தும் ஜெய்ப்பூரிலேயே எடுக்கப்பட்டன. இது, தமிழ்த் திரைப்பட உலகிலே முதல்

முயற்சியாகும். தேவைப்படும் எல்லா சாதனங்களுடனும் நடிக — நடிகையருடனும், டெக்னீஷியன்களுடனும் ஒரு வார காலம் ஜெயப்பூரில் முகாம் செய்தார் அன்பர் பி.ஆர்.பந்துலு. நானும் அவருடன் சென்று அங்கு ஒரு வார காலம் தங்கியிருந்தேன்.

லண்டனிலே 'கட்டபொம்மன்!'

படம் முழுவதும் 'டெக்னிக் கலரி'ல் தயாரிக்கப்பட்டது. அதற்காக, படம் லண்டனுக்கு அனுப்பப்பட்டது. இந்தப் பணி யில் பி.ஆர். பந்துலுவால் ஈடுபடுத்தப்பட்ட திரு. சித்ரா கிருஷ்ணசாமி அவர்கள், இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத் திக் கொண்டு, லண்டன் தியேட்டர் ஒன்றில் பத்திரிகைகளுக்காக வீரபாண்டிய கட்டபொம்மன படத்தைத் திரையிட்டார். பிரிட் டிஷ் பத்திரிகைக்காரர்களும், லண்டனிலிருந்த இந்தியத் தூதர் டாக்டர் விசயலட்சுமி பண்டிதர் அவர்களும், இந்தியப் பிரமுகர் பலரும் படத்தைப் பார்த்து மகிழ்ந்தனர். பிரிட்டிஷ் பத்திரிகை கள் பல விமர்சனம் எழுதின. ஆம்; பாராட்டித்தான்! கட்ட பொம்மனைப் பழிக்கும் பத்திரிகைகள் விலைபோகுமிடம் தமிழ் நாடுதானே!

எந்த ஏகாதிபத்தியம் வீரபாண்டியக் கட்டபொம்மனைத் தூக்கிலிட்டுக் கொன்றதோ, அவனுடைய பாஞ்சாலங்குறிச்சி யைப் பாலைவனமாக்கியதோ, அந்த ஏகாதிபத்தியத்தின் தலை நகரான லண்டனிலேயே அந்த வீரனின் வரலாற்றுப் படம்திரை யிடப்பட்டதிலே நான் மகிழ்ச்சியடைந்தேன். என்னுடைய, என்னைப் பின்பற்றும் தமிழரசுக் கழகத் தோழர்களுடைய உழைப்புக்குக் கிடைத்த மகத்தான வெற்றியாக அதனை நான் கருதினேன். டெல்லியிலேயும் கட்டபொம்மன் படம் இந்திய இராணுவத் தளபதிகளும், மத்திய அரசிலுள்ள தலைமை அதி காரிகளும், உள்துறைத் துணை அமைச்சரும் பார்ப்பதற்காகத் திரையிடப்பட்டது.

தமிழ்நாட்டிலே 1959 மே 16ஆம் நாளிலே, ''வீராண்டியக கட்டபொம்மன்'' வெள்ளித் திரையில் வெளியானான். அதே

நாளில், கவிஞர் கண்ணதாசனின் படைப்பான — வீரமருதுகளின் சரித்திரமான ''சிவகங்கைச் சீமை''யும் திரையிடப்பட்டது. இந்தப் போட்டியைத் தவிர்க்க, இரண்டு வாரம் கழித்து ''சிவகங்கைச் சீமை''யைத் திரையிடலாமென்று தக்கார் பலர் கவிஞர் கண்ணதாசனுக்குக் கூறிய ஆலோசனை எடுபடவில்லை.

கட்டபொம்மன் திரைப்படத்தின் வெற்றியைத் தடுக்க திரைப்பட ரசிகர்களிலே ஒரு சாரார் தகாத செயல்களை எல்லாம் செய்தனர். அவற்றை இங்கு விவரிக்க நான் விரும்பவில்லை. முடிவு என்ன? ''வீரபாண்டியக் கட்டபொம்மன்'' தொடர்ந்து 150 நாட்களுக்கு மேல் வெள்ளித் திரையிலே வெற்றிநடை போட்டான்! தெலுங்கு போன்ற வேற்று மொழிகளிலும் அந்தப் படம் 'டப்' செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.

இதனை அடுத்து திரு.பி.ஆர். பந்துலு அவர்கள் ''கப்பலோட்டிய தமிழன்'' வரலாற்றையும் திரைப்படமாக்கினார். அதற்காக ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி, கோயில்பட்டி, திருநெல்வேலி, கோவை சிறைச்சாலை ஆகிய இடங்களை நானும், பந்துலுவும், சிவாஜிகணேசனும் நேரில் சென்று பார்வையிட்டோம். அந்த நாட்களில் திரு. பந்துலுவுக்கும் எனக்கும் நெருக்கமாக உறவு ஏற்பட்டது. உடன் பிறந்த சகோதரர்கள் போல மன ஒருமைப்பாடு பெற்றோம். என் வாழ்க்கையிலே எனக்குக் கிடைத்த அரிய நண்பர்களில் ஒருவராக பி.ஆர். பந்துலுவை நான் கருதுகிறேன்.

'கப்பலோட்டிய தமிழனி'ல் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் வ.உ. சிதம்பரனாராகவும், ஔவை தி.க. சண்முகம் சுப்பிரமணிய சிவாவாகவும் நடித்தனர். கட்டபொம்மனை விடவும் சிறப்பாக இருந்தது. வ.உ.சி. வேடத்தில் சிவாஜியின் நடிப்பு. வ.உ.சி.யோடு தோன்றும் காட்சிகளில் சிவாஜிக்கு ஈடுகொடுத்து நடித்தார், சிவா வேடத்தில் தோன்றிய ஔவை தி.க. சண்முகம்.

விடைபெற்றேன்!

கட்டபொம்மன் அடைந்த வெற்றியைக் 'கப்பலோட்டிய தமிழன்' அடையவில்லை. ஆம்; காங்கிரஸ்காரர்கள் விடுதலைக்குப் பின்னுள்ள கால் நூற்றாண்டுக் காலத்திலே கடைப் பிடித்த நடைமுறை காரணமாக தேசிய வரலாறு அந்த அளவுக்கு மதிப்பிழந்திருந்தது! கப்பலோட்டிய தமிழன் படத்திற் கென அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவிலும் நான் தலைவனாக இருந்தேன். கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் படங்கள் திரையிடப் பட்டதோடு, திரைப்படத் தொழிலுடன் எனக்கு ஏற்பட்ட தொடர்பை நானாகவே துண்டித்துக் கொண்டு விட்டேன். திரைப்படத் தயாரிப்பாளர்கள் சிலர் என் பெயரைப் பயன்படுத்திப் படம் எடுக்க முன் வந்தனர். தாங்கள் எழுதும் கதை — வசனங்களை நான் மேற்பார்வையிட்டு, எனது பெயரில் அவை வெளிவர அனுமதி தந்தாலே போதும் என்று கேட்டுக் கொண்டனர். எனது போராட்ட வாழ்க்கையானது திரைப்படத் தொழிலோடு பொருந்தாது என்பதனை நான் உணர்ந்திருந்தேன். புதிய தமிழகம் படைக்கும் புனிதப் பணியிலிருந்து சிறிதளவு கூட ஒதுங்கியிருக்க என் மனம் விரும்பவில்லை. 'கட்டபொம்மன்' 'கப்பலோட்டிய தமிழன்'' திரைப் படங்களைத் தயாரிப்பதிலே நான் மனமுவந்து பங்கு கொண்டேன் என்றால், அதற்குக் காரணம் அந்த மாவீரர்களின் புகழ் திக்கெட்டும் பரவ வேண்டுமென்ற விருப்பந்தான்!

மலாசியாவில் சுற்றுலா

1964-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நான் மலாசியா சென்றேன். பினாங்கு நகரவாசியும், இரப்பர் தோட்டச் சொந்தக் காருமான வள்ளல் அரங்கசாமிப் பிள்ளை அவர்கள் அழைப் பின் பேரில்தான் நான் மலாசியா சென்றேன்.

தடைப்பட்ட பயணம்

இதற்கு முன்பாக 1954 ஏப்ரலில் நான் இந்திய அரசாங்கத் தின் நல்லெண்ணக் குழுவில் சேர்ந்து மலாசியா செல்வதாக இருந்தது. அந்த நாட்டிலுள்ள முஸ்லிம்களிடையே பாகிஸ்தானி லிருந்து வரும் முஸ்லிம்கள் இந்தியாவுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து வந்தனர். ஆம்; இந்தியாவில் இந்துக்களாலும் மாநில — மத்திய அரசுகளாலும் முஸ்லிம்கள் துன்புறுத்தப்படுவதாகப் பாகிஸ்தானிலிருந்து வருவோர் அங்கு பொய்ப் பிரச்சாரம் செய்து வந்தனர். அதற்கு மறுப்பு தெரிவித்துப் பிரச்சாரம் செய்யும் குறிக்கோளுடன் இந்தியாவிலிருந்து ஒரு குழுவை அனுப்ப மத்திய அரசு முன் வந்தது.

மலாசியாவிலுள்ள முஸ்லிம்களில் பெரும்பாலோர் தமிழர் களாதலால் அவர்களிடையே தமிழில் பிரச்சாரம் செய்ய தமிழர் மூவர் கொண்ட குழுவை அனுப்ப ஏற்பாடானது. அந்த மூவர் — நான், எஸ்.ஏ.ஷாபி முகமது, இரத்தினம் எம்.பி. ஆகியோ ராவர். மூவருமே காங்கிரஸ்காரர்கள். இந்தக் குழு மூன்று மாதகாலம் மலாசியா முழுவதிலும் சுற்றுலா செய்ய வேண்டு மென்பது இந்திய அரசின் திட்டம்.

அப்போது ராஜாஜி சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தார். அவரது தூண்டுதலின்றியே மத்திய அரசு எனக்கு இந்த வாய்ப்பை அளிக்க முன் வந்தது. ஆனால், ராஜாஜியுடன் கலந்து பேசி, அவருடைய விருப்பத்தை அறிந்த பின்னரே

எனது இசைவை மத்திய அரசுக்குத் தெரிவித்தேன். தொடர்ந்து மூன்று மாத காலம் நான் அயல்நாட்டில் இருப்பதை முதலமைச்சர் ராஜாஜி விரும்பவில்லை. எனது மலாசியப் பயணம் பற்றி நான் அவரிடம் முதன் முதலில் கூறியதும், ''மூன்று மாதங்கள் தாங்கள் அயல்நாட்டிலிருக்கப் போகிறீர்களா? இங்குத் தாங்கள் தானே என்னுடைய வக்கீல்! தாங்கள் இங்கில்லாத காலம் எனக்குக் கவலை தருவதாக இருக்குமே'' என்று கூறினார்.

ராஜாஜி ஆட்சியைக் கவிழ்க்க தமிழ்நாடு காங்கிரஸ் முயன்று கொண்டிருந்தது. அதன் சதியைச் சமாளிக்க ராஜாஜி ஆட்சிக்கு நானும் தமிழரசுக் கழகமும் உதவி புரிந்து வந்தோம். அதனாற்றான், தனது வக்கீலாக ராஜாஜி என்னை வருணித்தார். முதலில் வருத்தத்துடன் தயங்கினாலும் — பின்னர்,

> *''உங்களுக்கும் அயல்நாட்டு அனுபவம் தேவை. அத்துடன், நீங்கள் காங்கிரசின் விரோதிபோல மக்கள் கருதும்படி நம்முடைய நண்பர்கள் (திரு. காமராசர் குழுவினர்) செய்து வருகிறார்கள். இந்த நேரத்தில் மத்திய காங்கிரஸ் அரசின் சார்பில் நீங்கள் மலாசியா செல்வதனால், உங்களுடைய மதிப்பு உயரும். சென்று வாருங்கள்''*

என்று ராஜாஜி அன்பு ததும்பக் கூறினார்.

ஏப்ரல் இறுதியில் புறப்படுவதற்குத் தயாராக இருக்கும்படி மத்திய அரசின் அயல்நாட்டுத் துறை என்னைக் கேட்டுக் கொண்டிருந்தது. எனது மலாசியப் பயணம் பற்றிய செய்தி நாளிதழ்களிலும் வெளியாகி விட்டது. புறப்படுவதற்கு இரண்டு வாரம் இருந்த நேரத்தில், ராஜாஜி முதலமைச்சர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார். ஏப்ரல் 14-இல் தமிழ்ப் புத்தாண்டு நாளில் — காமராசர் முதல்வரானார்.

திரு. காமராசர் 'திருப்பணி!'

முதலமைச்சர் பதவியில் மாறுதல் ஏற்பட்டதால் எனது மலாசியப் பணம் தடைப்படுமென்று நான் கருதவில்லை. ஆனால், திடீரென்று மத்திய அரசிடமிருந்து வந்த கடிதத்தில்,

பயணம் இரண்டு வாரங்களுக்குத் தள்ளி வைக்கப்பட்டிருப்பதாகவும், புறப்பட வேண்டிய தேதியைப் பின்னர் தெரிவிப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு ஒரு வாரங் கழித்து மத்திய அரசிடமிருந்து எனக்குக் கிடைத்த மற்றொரு கடிதத்திலே, மலாசியாவுக்கு நல்லெண்ணத் தூதுக் குழு அனுப்பும் யோசனை கைவிடப்பட்டு விட்டதாகத் தகவல் தரப்பட்டது. முதல்வர் பதவியேற்றதும் திரு. காமராசர் மலாசியா செல்லும் குழுவிலிருந்து என்னை நீக்கிவிட்டு, தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரைச் சேர்த்துக் கொள்ளுமாறு மத்திய அரசுக்கு ஆலோசனை கூறி எழுதினார். என்னை நீக்குவதற்கு முதல்வர் காமராசர் கூறிய காரணம், நான் கம்யூனிஸ்டு என்பதாகும்.

மலாசியச் சமஷ்டி அரசு கம்யூனிஸ்டுக் கட்சிக்குத் தடை விதித்திருந்தது. கம்யூனிசச் சார்புடைய எவரும் தனது நாட்டுக்குள் வராமல் பார்த்துக் கொள்வதிலும் மிகுந்த எச்சரிக்கை காட்டியது. இந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, இந்திய அரசு என்னை அனுப்பினாலும், மலாசிய அரசு என்னை ஏற்காதபடி செய்துவிடச் சூழ்ச்சி செய்தார் காமராசர். அதற்காக, அவர் எனக்கு வைத்த பெயர் 'கம்யூனிஸ்டு!'

நான் கம்யூனிஸ்டு அல்ல என்பது தமிழ் மக்களுக்கும் மத்திய அரசுக்கும் தெரியும் என்றாலும், மலாசிய அரசுக்குத் தெரியாதல்லவா! மலாசிய அரசு என்னைக் கம்யூனிஸ்டு என்று சந்தேகித்து விட்டால், அப்புறம் இந்திய அரசு என்னை அனுப்ப முடியாதே! திரு. காமராசர் கோஷ்டியின் பிரசார 'பேரிகை'யாகத் திகழ்ந்த தமிழ் வார ஏடு ஒன்றில் ''தலைவர் காமராசர் கோட்டைக்குள் நுழைந்ததுமே, அவர் முதலில் எடுத்த கோப்பு (பைல்) ம.பொ.சி.யின் மலாசியப் பயணம் பற்றியதுதான்'' என்று பெருமையோடு எழுதியிருந்தார் அதன் ஆசிரியர்.

திரு.காமராசர் என்மீது சொன்ன புகாரை மத்திய அரசு நம்ப மறுத்துவிட்டது. ''ம.பொ.சி. அப்பழுக்கற்ற காந்தியவாதி'' என்று தமிழ்நாட்டிலுள்ள மத்திய அரசின் துப்பறியும் (சி.பி.ஐ.) அதிகாரிகள் தகவல் தந்தனர். அத்துடன், ''மலாசியா செல்லும் குழுவில் ம.பொ.சி. இல்லையானால், எதிர்பார்க்கப்படும் பலன்

கிடைக்காது'' என்றும் அவர்கள் உறுதியாகக் கூறி விட்டனராம். அதன் பேரில் தமது முடிவைப் புனராலோசனை செய்து என்னை ஏற்றுக்கொள்ளுமாறு திரு. காமராசர் மத்திய அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆனால், அவர் தமது முடிவைப் புனராலோ சனை செய்ய உறுதியாக மறுத்துவிட்டாராம். இதன் பின்னர் தான் மலாசியாவுக்கு நல்லெண்ணக் குழுவை அனுப்பும் யோச னையை மத்திய அரசு கைவிட்டது.

வள்ளல் 'ரெனா'வின் அழைப்பு

இது நிகழ்ந்து சரியாகப் பத்தாண்டுகள் கழித்து பினாங்கு வாசி வள்ளல் அரங்கசாமிப் பிள்ளை அவர்கள், மலாசியாவில் ஒரு மாத காலம் தங்கி, அந்தத் தீவு முழுவதிலும் சுற்றுலா செய்ய வேண்டுமென்று என்னை அழைத்தார். ஏற்கெனவே பத்தாண்டுகளுக்கு முன்பு மலாசியா செல்லத் தயாராகி, கடைசி நேரத்தில் ஏமாந்தவனாகையால், வள்ளல் பிள்ளையவர்களின் அழைப்பை மிகுந்த ஆவலோடு ஏற்றுக் கொண்டேன்.

நான் மலாசியாவிற்குப் புறப்படுவதற்கு முதல் நாள் மாலை சென்னை 'புது உட்லண்ட்ஸி'ல் சென்னை மாவட்டத் தமிழரசுக் கழகத் தோழர்கள் வழியனுப்பு விருந்துபசாரத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர். அந்த விருந்திலே ராஜாஜி அவர்களும், அப் போது தமிழகத்தின் முதல்வராக இருந்த திரு.மீ. பக்தவத்சல னாரும் கலந்து கொண்டனர். என் ஆலோசனையின் பேரில் அப்போது அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த திரு.கு. காமராசரையும் அழைத்திருந்தனர், விருந்துக்கு ஏற்பாடு செய்த தோழர்கள். அவரும் பத்தாண்டுகளுக்கு முற் பட்ட நிகழ்ச்சியை மறந்து புதிய நட்புணர்ச்சியுடன் விருந்தில் மகிழ்ச்சியோடு கலந்து கொண்டார். உண்மையில் காமராசர் கலந்து கொண்டதில் நானும் மகிழ்ச்சியடைந்தேன். இதனை தருமத்திற்குக் கிடைத்த வெற்றியாகவும் நான் கருதினேன். இந்த விருந்தில் ராஜாஜியும் காமராசரும் தாராள மனதுடன் என்னைப் பெருமைப்படுத்தும் வகையில் பேசி, எனக்கு வாழ்த்து கூறினர். இவர்களுடைய பேச்சு மறுநாள் காலை — நான் மலாசியா செல்லு முன்பே — சிங்கப்பூர், கோலாலம்பூர் நகரங்களில்

தமிழர்களால் நடத்தப்படும் தமிழ் நாளேடுகளிலும், சீனராலும், மலாய்காரராலும் நடத்தப்படும் சீன — மலாய் — ஆங்கில மொழிப் பத்திரிகைகளிலும் வெளியாயின. இதனால், மலாசிய அரசும் எனது சுற்றுலா வெற்றி பெறுவதற்காக உதவிபுரியும் நல்ல சூழ்நிலை அங்கு உருவானது.

மலாசியாவில் 29 நாட்கள் மிகவும் வெற்றிகரமாக நான் செய்த சுற்றுலா பற்றி ''மலாசியாவில் ஒரு மாதம்'' என்னும் பெயரில் மிகவும் விரிவாக ஒரு நூல் எழுதி வெளியிட்டுள் ளேன். ஆகவே, இந்நூலிலும் அதுபற்றி விரிவாக எழுதத் தேவையில்லை.

உலகத் தமிழ் மாநாடு

1966-ஆம் ஆண்டிலே இரண்டாவது முறையாக நான் மலாசியா செல்ல நேர்ந்தது. முதலாவது உலகத் தமிழ் மாநாடு ஏப்ரல் திங்களில் மலாசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்றது. தமிழக முதல்வர் திரு. மீ.பக்தவத்சலனார் தலைமையிலே கோலாலம்பூர் மாநாட்டில் கலந்து கொண்ட தமிழக அரசின் பிரதிநிதிகளிலே நானும் ஒருவனாகச் சென் றேன். அப்போது தமிழகச் சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நாவலர் இரா. நெடுஞ்செழியன், ஔவை தி.க. சண்முகம் ஆகியோரும் இந்த மாநாட்டில் கலந்து கொண் டனர்.

கோலாலம்பூர் மாநாடு மலாசிய பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்டது. அவர் இயற்கையாக கோட்டும் சூட்டும் அணிவது வழக்கம். மொழி மாநாடாதலால், மலாசிய கலாச்சா ரப்படி சுதேசி உடையணிந்து வந்து தமிழைப் பெருமைப்படுத்தி னார். ஆனால், மாநாட்டில் கலந்து கொண்ட தமிழர்களிலே பலர் ஐரோப்பியர் பாணியில் உடையணிந்திருந்தனர்.

மாநாட்டின் தொடக்கத்தில் இறை வாழ்த்தோ, தமிழ் வாழ்த்தோ பாடப்படவில்லை. தமிழ் ஒலியே கேட்காத அந்த மாநாட்டிலே இறை வாழ்த்தும் தமிழ் வாழ்த்தும் பாடாததில் தவறில்லைதானே! மாநாட்டின் முதல் நாள் நடவடிக்கை

முழுவதும் ஆங்கிலத்தில் நடந்தது எனக்கு வேதனையைத் தந்தது. பிரதமர் துங்குவின் ஆங்கிலப் பேச்சிலே, ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்ற தமிழ்ச் சொற்றொடர் இடம் பெற்றதைத் தவிர, மற்றபடி அந்த மாநாட்டில் தமிழ் ஒலிக்க வில்லை.

எல்லாம் ஆங்கிலத்தில்!

எட்டு நாட்கள் நடந்த மாநாட்டிலே நாள்தோறும் — இரு வேளைகளிலும் — கருத்தரங்குகள் நிகழ்ந்தன. அவற்றில், ஆராய்ச்சிக் கட்டுரைகள் படிக்கப்பட்டன, எல்லாம் ஆங்கிலத் திலே! ஒருவேளை மட்டுமே — ஒரு கருத்தரங்கு மட்டுமே — தமிழில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் மட்டும் கட்டுரைகள் தமிழில் படிக்கப்பட்டன. ஆங்கிலக் கட்டு ரைகளெல்லாம் அச்சடிக்கப்பட்டு முன்கூட்டியே பிரதிநிதி களுக்கு வழங்கப் பெற்றன. தமிழில் படிக்கப்பட்ட கட்டுரைக ளில் ஒன்றைக்கூட அச்சடித்து முன்கூட்டியே பிரதிநிதிகளுக்குத் தர மாநாட்டினர் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. இதைக் கண்டு நான் ஆத்திரமடைந்தேன்.

ஔவை சண்முகம் அவர்கள், நாடகக் கலைபற்றி ஒரு கட்டுரை படிக்க இருந்தார். அதனை எழுதி, அச்சடிப்பதற்காக மாநாட்டு நிர்வாகிகளுக்கு முன்கூட்டியே அனுப்பி வைத்திருந் தார். அது அங்கு அச்சடிக்கப்படவில்லை. தனது கையெழுத்துப் பிரதியையேனும் தருமாறு அவர் கேட்டபோது, அதனைத் தேடி அலைந்து எங்கோ ஒரு மூலையில் கிடக்கக் கண்டு, எடுத்துக் கொடுத்தனர்.

நான், ''வள்ளலார் வளர்த்த தமிழ்'' என்ற தலைப்பில் கட்டுரை படிக்க இருந்தேன். அதனை, எனது செலவில் அச்ச டித்து மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வழங்க நூற்றுக்கணக்கான பிரதிகளைக் கையோடு கொண்டு போயிருந்தேன். ஆனால், மாநாட்டில் தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ள அநீதி கண்டு ஆத்திர மடைந்து எனது கட்டுரையைப் படிக்க மறுத்துவிட்டேன்.

எதிர்த்துக் குரல் கொடுத்தேன்

அத்துடன் நில்லாமல், தமிழ்க் கருத்தரங்கு நடந்து கொண்டிருந்தபோது, மாநாட்டு நிர்வாகிகள் தமிழ்க் கட்டுரைகளை அச்சடித்து வழங்காத தவறை பகிரங்கமாக எடுத்துக்காட்டி, அதற்கான காரணத்தை அறிய விரும்பினேன். மாநாட்டு நிர்வாகிகளிலொருவர், ''மலாசியாவில் தமிழில் அச்சடித்துத் தர அச்சகம் இல்லை'' என்று உண்மைக்கு மாறான வகையில் எனக்குச் சமாதானம் கூறினார். மலாசியாவில் பல்லாயிரக்கணக்கில் விற்பனையாகும் தமிழ் நாளேடுகள் மூன்று நடக்கின்றன என்பதையும், நவீன யந்திர சாதனங்களுடன் கூடிய — தமிழ் நூல்களை அச்சடித்து வருகின்ற — அச்சகங்களும் மலாசியாவில் இருக்கின்றன என்பதையும் அவருக்கு நினைப்பூட்டி, அவரது சமாதானம் உண்மைக்கு மாறானதென்பதை மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு உணர்த்தினேன். தமிழின் பெயரால் கூட்டப்பட்ட மாநாடு ஆங்கிலத்தில் நடைபெறுவதனை நான் ஆட்சேபிப்பதாகவும் கூறினேன்.

எனது ஆட்சேபணை காரணமாக, மாநாட்டிலே சிறிது பரபரப்பு ஏற்பட்டது. மாநாட்டு நிர்வாகிகளை நான் அவமானப் படுத்தி விட்டதாக அவர்களில் ஒருவர் என்னிடமே மிகுந்த வருத்தத்தோடு கூறினார். மாநாட்டிலே தமிழே புறக்கணிக்கப் பட்டும் அவமதிக்கப்பட்டும் இருப்பதனை அவருக்கு நினைப் பூட்டினேன். ஒரு கட்டத்தில், தமிழைப் புறக்கணித்ததற்காக மாநாட்டு நிர்வாகிகள் மன்னிப்புக் கேட்க வேண்டும்; இல்லையேல், மாநாட்டிலிருந்து நான் வெளியேற வேண்டும் — என்று கருதினேன். ஆயினும், தமிழின் பெயரால் முதன் முதலாக நடைபெறும் உலக மாநாட்டிற்குக் களங்கம் ஏற்பட நான் காரணமாகிவிடக் கூடாதென்று கருதி, தமிழ் மாநாட்டில் ஆங்கிலம் ஆதிக்கம் பெற்றிருப்பதை ஆட்சேபித்துக் குரல் கொடுத்ததோடு ஆறுதல் அடைந்துவிட்டேன். மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளிலே — குறிப்பாக, தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளிலே ஔவை சண்முகம் ஒருவர் தவிர வேறு எவரும் எனது உணர்ச்சியைப் பிரதிபலிக்கவில்லை. எந்தப் பக்கமும் சாராமல் மௌனத்தில் மறைந்து கொண்டு விட்டனர்.

தமிழின் பெயரால் மாநாடு நடைபெற்றாலும், மொழி வேறுபாடுடைய பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநாடு ஆதலால், பொது மொழியான ஆங்கிலத்தில் அது நடைபெறுவது சரிதான் என்று அவர்கள் கருதினர். தமிழ்நாட்டைச் சாராத, தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாத பிறநாட்டார் — பிற மொழியார் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டது சரிதான். ஆனால், அவர்கள் தமிழ் அறிந்தவர்களாக இருந்தாக வேண்டுமல்லவா? தமிழ் அறியாதவர்களுக்குத் தமிழ் மாநாட்டில் என்ன வேலை? உலகந் தழுவிய முறையில் சரித்திர மாநாடோ, விஞ்ஞான மாநாடோ நடைபெற்றால், அதனை, பொது மொழியான ஆங்கிலத்தில் நடத்துவது முறை யாகும். தமிழ் மொழியின் பெயரால் மாநாடு கூட்டிவிட்டு, இன்னொரு மொழியை — ஆங்கில மொழியை — பொது மொழியாகக் கொள்வது கோமாளித்தனமல்லவா?

உலகத் தமிழ் மாநாட்டை ஆங்கிலத்தில் நடத்துவதனை நான் எதிர்த்துப் பேசியது, மலாசிய நாளேடுகளில் பிரதான தலைப்புடன் வெளியிடப்பட்டது. அந்த ஏடுகள் எனது நிலையை ஆதரித்துத் தலையங்கங்கள் எழுதின. பொதுவாக மலாசியத் தமிழ் மக்கள் — குறிப்பாக, இளைஞர்கள் என்னை ஆதரித்தனர். இந்தியத் தமிழகத்திலுள்ள ஆங்கில — தமிழ் நாளேடுகளிலும் செய்திகள் அரைகுறையாக வெளியிடப்பட்டி ருந்தன.

உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள மிகுந்த உற்சாகத் தோடுதான் சென்றேன். ஆயினும், மாநாட்டில் தமிழ் அடியோடு புறக்கணிக்கப்பட்ட நிலை கண்டு வேதனையடைந்ததால், படுக் கையில் கிடக்குமளவுக்கு நான் நோய்ப்பட்டு விட்டேன். மாநாட் டில் முதல் மூன்று நாள் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேன். மற்ற நாட்களில் கலந்துகொள்ள இயலாமல் படுக்கையில் கிடந்தேன்.

நோயுற்ற என்னைத் தமது இல்லத்தில் வைத்து தக்க சிகிச்சை தந்து என்னைக் காப்பாற்றினார் மலாசிய அமைச்சர் திரு. சம்பந்தம். அவர் மனைவியார் என் உயிரைக் காப்பதிலே காட்டிய ஆர்வம் என் வாழ்நாளில் என்னால் மறக்க இயலாத தாகும்.

தி.மு.க.வின் மனமாற்றம்!

1963-ஆம் ஆண்டில் தமிழகத்தின் அரசியலிலே என் மனத்திற்கு மகிழ்ச்சியளிக்கத்தக்க மாறுதல் ஒன்று நிகழ்ந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினைக் கொள்கையை அடியோடு கைவிட்டது. ஆம்; தி.க.விடமிருந்து தான் பிதிரார்ஜிதமாகப் பெற்ற திராவிடத் தனி நாட்டுக் கோரிக்கையை அடியோடு கைவிட்டு விட்டதாகத் தி.மு.க.வின் அமைப்புத் தலைவர் அண்ணா அறிவித்தார். பிரிவினையைக் கைவிட்டதற்காக நான் மகிழ்ச்சி அடைந்தேன் என்றாலும், கைவிட்டதற்கான காரணம் எனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை.

தேச ஐக்கியத்திற்கு எதிரான பிரிவினையை ஆதரிப்போர் தேர்தலில் ஈடுபடுவதற்குத் தடைவிதிக்கும் சட்டமொன்றை மத்திய அரசு கொண்டு வந்தது. இந்தச் சட்டத்திற்கு அஞ்சித் தான் தி.மு.கழகம் பிரிவினையைக் கைவிட்டது என்பதனை ஒளிவு மறைவின்றி அண்ணா அறிவித்தார். தான் இந்த மாறுதலைச் செய்யாவிடில் தி.மு.க. அழிக்கப்பட்டுவிடும் என்றும், அதனைத் தவிர்ப்பதற்காகவே பிரிவினையைக் கைவிடுவதாகவும் அவர் கூறினார். இந்த வாதம் எனக்கு வியப்பையும் சிரிப்பையும் தந்தது. ஒரு இனத்தின் அல்லது ஒரு நாட்டின் விடுதலைக் கிளர்ச்சி அடக்குமுறைகளால் ஓங்கி வளருமேயன்றி, ஒடுக்கப்பட்டு விடுவதில்லை. உரிமைக்குப் போராடிய உலக நாடுகள் பலவற்றின் வரலாறு இதைத்தான் கூறுகின்றது. இந்தியாவின் விடுதலைக்குப் போராடிய தேசிய காங்கிரஸ்கூட, பிரிட்டிஷ் அரசால் எத்தனையோ முறை சட்ட விரோதமாக்கப் பட்டது. அதன் அலுவலகங்கள் போலீசாரால் கைப்பற்றப் பெற்றன. சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டன. ஆண்டுக் கணக்கில் காங்கிரஸ் மகாசபை தடைக்குள்ளாகி செயலற்றுக் கிடந்ததுமுண்டு. இதனாலெல்லாம் அது நடத்தி வந்த உரிமைக் கிளர்ச்சி ஒடுங்கிவிடவில்லை. வெற்றி முகங்காண அவை வழி வகுத்தன.

வெற்று ஆரவாரம்!

தி.மு.க. தோன்றியது உண்மையிலே திராவிடத்திற்கு முழு விடுதலை தேடத்தான் என்றால், அதனை, அடக்குமுறைகள் வளர்க்குமேயன்றி, அழிக்காது. இது, நுண்ணறிவினரான அண்ணாவுக்கு தெரிந்திருக்க வேண்டும். ஆயினும், அவர் அன்று வற்புறுத்தி வந்த திராவிடத் தனி நாடு கோரிக்கை தென்னிந்திய மக்களின் இதயபூர்வமான ஆதரவைப் பெற்றிருக்கவில்லை. தமிழகத்திற்கு வெளியே ஆந்திர, கன்னட, கேரள மாநிலங்களில் தமிழல்லாத பிற தென் மொழிகளைப் பேசுகிற மக்கள் அதனை ஆதரிக்கவில்லை. அனுபவமற்ற அரசியல்வாதிகளின் வெற்று ஆரவாரமாகக் கருதி, அலட்சியப்படுத்தினர். தமிழ்நாட்டிலும் அது திராவிடர் கழகங்களின் வெற்றுக் கோஷமாகத்தான் இருந்தது. இந்தக் கழகங்களும் அதனை முன்னணிப் பிரச்சினையாகக் கொண்டு அதற்காகப் போராட முன் வராமல், வேறு ஏது எதற்காகவோ போராடிக் கொண்டிருந்தன.

இந்த நிலையில், விஞ்ஞான பூர்வமான அரசியல் சித்தாந்தங்களுக்கு எதிரான திராவிடத் தனிநாட்டுக் கோரிக்கையிலுள்ள பலவீனம் அண்ணாவுக்கும் தெரிந்திருந்ததனாற்றான் அதனைக் கைவிட்டார் எனலாம். தி.க.விலிருந்து பிரிந்து வந்த நாளிலிலேயே அவர் திராவிடத் தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டிருக்க வேண்டும். தி.க.வுடன் கொள்கை வேற்றுமை காட்டி — குறிப்பாக, திராவிடப் பிரிவினைக்கு எதிராகத் தேசிய ஒருமைப்பாட்டுக் கொள்கைக்கு உடன்பாடு தெரிவித்து தி.மு.க. வைத் தோற்றுவித்திருப்பாரானால், பெரியாரை அவர் வெற்றி கண்டிருக்க முடியாது. அதனால், மனச்சாட்சிக்கு மாறாகவே திராவிடத் தனி நாட்டுக் கோரிக்கையை தி.மு.க.வின் கொள்கையாக்கினார். ஆனால், அதனைக் கைவிடுவதற்கான அரிய தருணமொன்றை அவர் எதிர்பார்த்து வந்தார். அந்தத் தருணத்தை மத்திய அரசு கொண்டு வந்த பிரிவினைத் தடைச் சட்டம் அவருக்குத் தந்துவிட்டது. இதுதான் அண்ணா பிரிவினையைக் கைவிட்டதைப் பற்றிய எனது கண்ணோட்டம்.

தவறு தவறுதான்!

என்ன சமாதானம் சொன்னாலும், தடைச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு தி.மு.க. பிரிவினையைக் கைவிட்டது அதற்குப் பெருமை தரக்கூடியதல்ல என்பது மட்டும் உண்மை. பிரிவினையை அது மனமார விட்டு விடவில்லை என்றும், வாய்ப்புக் கிடைத்தால் திரும்பவும் அது பிரிவினையைக் கோரக் கூடுமென்றும் கூறி, காங்கிரஸ்காரர்கள் தி.மு.க.வின் மனமாற்றத்தை சந்தேகிப்பதற்கு அவர் இடங்கொடுத்து விட்டார்.

பிரிவினைத் தடைச் சட்டத்தை நான் எதிர்த்தேன். வெளிப்படையாக அறிக்கை விடுத்தும் கண்டித்தேன். பிரிவினையினால் விளையக்கூடிய கேடுகளை மக்களிடம் எடுத்துச் சொல்லி, அவர்களே பிரிவினையாளர்களை வெறுத்தும் எதிர்த்தும் போராடக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்பது என் கொள்கை. இந்தக் கொள்கைப்படிதான் பிரிவினை கோரும் தி.க.வையும், தி.மு.க.வையும் எதிர்த்து 1951-இல் ஒரு இயக்கமே நடத்தினேன்.

இன்னொரு காரணத்திற்காகவும் நான் பிரிவினைத் தடைச் சட்டத்தை வெறுத்தேன். மாநிலங்களுக்குப் பூரண சுயாட்சி அளித்து, மத்தியில் உண்மையான சமஷ்டி அரசை அமைத்தாலொழிய பிரிவினை எண்ணத்தை அடியோடு ஒழிக்க முடியாது என்பது என் கருத்து. மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்க முரட்டுத்தனமாக மறுத்து வருகின்ற மத்திய ஆதிக்கம் பிரிவினைத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்ததனாலும் அதனை எதிர்க்க வேண்டியவனானேன். உண்மையில் பிரிவினைத் தடைச் சட்டத்தை எதிர்த்து அப்போது தி.மு.கழகம் ஒரு கிளர்ச்சி தொடங்கியிருக்குமாயின் எனது அனுதாபம் முழுவதும் அந்தக் கிளர்ச்சிக்குக் கிடைத்திருக்கும்.

உலகில் விடுதலைக்குப் போராடிய இனங்களின் அல்லது நாடுகளின் வரலாற்றைப் படித்துப் பார்த்தால், ஆதிக்கம் செலுத்துவோரின் இராணுவத்தை நேருக்கு நேர் சந்திக்கத் துணிந்தாலன்றி, விடுதலை கிடைக்காதென்ற உண்மையை அறிந்து

கொள்ள முடியும். பரிபூரண அகிம்சை வழியில் காந்தியடிகள் விடுதலைப் போரை நடத்தியிருந்தும் பல்வேறிடங்களில் விடு தலை வீரர்களிலே பலர் இராணுவத்தைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. பஞ்சாப்பில் நடந்த ஜாலியன்வாலாபாக் படுகொ லையே சான்றாகும்.

அண்ணா அவர்கள் தி.மு.க.வை பார்லிமெண்டரி அரசி யல் கட்சியாக மாற்றி, தேர்தலிலும் ஈடுபடுத்தி, சட்டமன்றத் திலே எதிர்க்கட்சியாகவும் அது இடம் பெற்றிருந்த நேரத்திலே தான் — ஆளுங்கட்சியாகவும் அது வரக்கூடுமென்ற நம்பிக்கை நிலவிய காலத்திலேதான் — பிரிவினைத் தடைச் சட்டம் பிறந்தது.

திசை திருப்பம்!

அந்தச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு, பிரிவினையைக் கைவிட்டாலொழிய, தி.மு.கழகம் மேலும் பார்லிமெண்டரிக் கட்சியாக நீடிப்பது சாத்தியமல்ல என்ற நிலை ஏற்பட்டது. ஒரு நாடோ, ஒரு இனமோ சட்டத்திற்கும் சம்பிரதாயங்களுக்கும் உட்பட்ட பார்லிமெண்டரி முறையாலேயே விடுதலை பெற்று விட முடியுமானால், அது ஜனநாயகத்திற்குப் பெருமை தருவதா கும். ஆனால், விடுதலைக்குப் போராடிய நாடுகளின் — இனங்களின் வரலாறு இதற்கு எதிராக இருக்கிறது. காங்கிரஸ் மகா சபை கூட பார்லிமெண்டரிக் கட்சியாக மட்டுமே இயங்கி இந்தியாவுக்கு விடுதலை தேடிவிடவில்லை. விடுதலைப் போரில் ஈடுபட்டு விழுப்புண்பட்ட வீரர்கள் தங்கள் புண்களை ஆற்றிக் கொள்வதற்கு அவகாசம் தரும் முறையிலேதான் ஒன் றிரு சந்தர்ப்பங்களில் காங்கிரஸ் மகாசபை பார்லிமெண்டரித் திசைக்குத் திரும்பியது. ஆம்; அது திசை திருப்பந்தான்! இப்படி, திசை மாறிய போதெல்லாம் அதற்கு காங்கிரசுக்குள் ளேயே கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டதுண்டு. திராவிடப் பெரு நாட்டுக்குப் பரிபூரண விடுதலை தேட விரும்பிய தி.மு.கழகம் பார்லிமெண்டரித் திசைக்குத் திரும்பியதைக்கூட அன்று என் னால் புரிந்து கொள்ள முடிந்தது. அதை ராசதந்திர நடவடிக்கை

யாகக் கருதலாந்தானே! ஆனால், கட்சியைக் காப்பாற்றுவதற்காகக் கொள்கையையே தி.மு.க. கைவிட்டதைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

1962 பொதுத் தேர்தலில் 50 தொகுதிகளில் வெற்றி பெற்று வலிவுமிக்க ஒரு எதிர்க்கட்சியாக தி.மு.கழகம் சட்டமன்றத்துக்குள் நுழைந்ததால், அடுத்து வரும் பொதுத் தேர்தலில் அது ஆளுங்கட்சியாகவும், வந்துவிடக் கூடுமென்ற சூழ்நிலை நிலவியது. இதனைத் தவிர்த்து, தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் பொருட்டாகத்தான் — காங்கிரசைத் தட்டிக் கேட்க வலுவான ஒரு எதிர்க்கட்சி இல்லாமல் செய்து விடுவதற்காகத்தான் பிரிவினைத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. தேசிய ஒருமைப்பாடு, தி.மு.க.வால் அழிந்து விடுமென்ற அச்சத்தால் அல்ல. அந்த வகையில் அண்ணா அவர்கள் ஆளும் கட்சியினரான காங்கிரஸ்காரர்கள் ஏமாறும்படி செய்து விட்டார்.

வரவேற்றேன்!

பிரிவினையை விட்டதற்காக தி.மு.கழகத்தையும், அண்ணாவையும் பாராட்டி எனது 'செங்கோல்' இதழில் நீண்ட தலையங்கம் எழுதினேன். அதன் சில பகுதிகள் வருமாறு:

''திராவிட நாட்டுப் பிரிவினையை அறவே கைவிட்டதாக இறுதியாகவும், உறுதியாகவும் கூறிவிட்டார் திரு.சி.என். அண்ணாதுரை. இந்த முடிவு, நான் எதிர்பார்த்தது; விரும்பியதுங்கூட. அதனால், மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

''தமிழரசுக் கழகம் தி.மு.க.வுடன் நடத்திவந்த நெடும்போர் — கடும்போர் வெற்றி பெற்றுவிட்டது! பிரிவினை என்ற விஷ விருட்சம் விழுந்து விட்டதென்றால், அது யதேச்சையாக நிகழ்ந்த சம்பவமன்று. கடந்த பதினேழு ஆண்டுகளாகவே தொடர்ந்து தமிழரசுக் கழகத்தால் தாக்கப்பட்டதனால் வலுவிழந்து, இப்போது வீழ்ந்தே விட்டது.

அதனாற்றான், 'இந்த முடிவு எதிர்பார்க்கப் பட்டதுதான்' என்று கூறுகின்றேன்.

''தமிழரசுக் கழகம் தேசப் பிரிவினையை எந்த வடிவத்திலும் ஏற்றதில்லை. அதனாற்றான், ''திராவிட நாடு வேண்டாம், தனித் தமிழ்நாடு வேண்டும்'' என்று கூறும் தி.க. — 'நாம் தமிழர் இயக்கங்களையும் தமிழரசுக் கழகம் எதிர்க்கின்றது. இன்னும் உடனடிப் பிரிவினை வேண்டாம். அவசியமானால் பிரிந்து வாழ உரிமை வேண்டும் என்று கூறும் த.தே.க.விடமும் கருத்து வேற்றுமை கொண்டிருக்கிறது நம் கழகம்.

''தி.மு.க. பிரிவினையைக் கைவிட்டதனை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன் என்பதனை மற்றொரு முறையும் கூறுகின்றேன். பிரிவினையைக் கைவிட்டதோடு நில்லாமல், உடன்பாட்டு முறையில் தேசிய ஒருமைப்பாட்டினை ஆதரிப்பதாகவும் தி.மு.க. அறிவிக்க வேண்டும்.

''இனி, தி.மு.க. மேற்கொள்ளவிருக்கும் அரசியல், தமிழரசுக் கழகம் வற்புறுத்தி வரும் மாநிலச் சுயாட்சியாகத்தான் இருக்குமென்று நம்புகின்றோம். இது உண்மையானால், பொறாமை — போட்டியுணர்ச்சியின்றி, நாம் வரவேற்கத் தயார்.

''விரைவில் நமது பாதையிலே பழைய பகைவனை (தி.மு.கவை)ப் புதிய நண்பனாகச் சந்திக்கும் நன்னாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.''

தி.மு.கழகம் பிரிவினையைக் கைவிட்ட பின்னர் அதன் அரசியல் கொள்கைக்குரிய இடம் சூன்யமாக இருந்தது. பிரிவினையைக் கைவிட்டதாக வெளியிட்ட பிரகடனத்திலேயே சுயாட்சித் தமிழகத்தை ஏற்றுக் கொள்வதாகவும் அறிவித்திருக்க வேண்டும். என்ன காரணத்தாலோ அதை அறிவிக்க அண்ணா தயங்கினார். சிறிது அவகாசம் எடுத்துக் கொண்டார். திராவிடத் தனிநாட்டுக் கோரிக்கையை வலியுறுத்தியபோது தமிழரசுக் கழகத்தின் மாநிலச் சுயாட்சிக் கோரிக்கையைக் கடுமையாக

எதிர்த்து வந்தது. தி.மு.கழம். தனி நாடு கேட்கும் தி.மு.கழகம் புலி வேட்டைக்குப் போவதாகவும், மாநிலச் சுயாட்சி கேட்கும் தமிழரசுக் கழகம் எலி வேட்டைக்குப் போவதாகவும் அண்ணா கேலியாக வருணித்தார்.

''மூன்று அதிகாரங்களை மத்தியில் விடுவதென்றால், அப் போதும் உன் குடுமி வடவர் கையில்தானே இருக்கும்? அதை நீ விரும்பலாம்; நான் விரும்ப முடியாது'' என்று என்னை கற்பனையாக முன்னிலைப்படுத்திப் பேசினார்.

9.10.58-இல் 'சிகாகோ டெய்லி டைம்ஸ்' நிருபர் பிரீடெம் பர்க் என்பவருக்குப் பேட்டியளித்தபோது, அண்ணா கூறியது வருமாறு:

''நிருபர்: மத்திய — மாநில அதிகார வரம்புகளில் நீங்கள் மாற்றம் காண விரும்புகிறீர்களா?

சி.என்.ஏ.: பிரிவினை விஷயத்தில் நாங்கள் விட்டுக் கொடுப்பதாக இல்லை. எங்களுக்கு வேண்டியது சுதந்தி ரம். சிற்சில அதிகாரமற்ற வரம்புகளல்ல. மாநிலங்கள் பிரிந்து போகும் உரிமை அரசியல் அமைப்பின் மூலம் வழங்கப்பட்டால், அந்த மாற்றத்தை நாங்கள் வரவேற் போம்.

('திராவிட நாடு', 20.10.58 இதழில் வெளியானது)

தி.மு.க.வின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான திரு. என்.வி. நடராசன் அவர்கள், பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழர சுக் கழகத்தைப் பற்றி விமர்சிக்கையில் மாநிலச் சுயாட்சிக் கோரிக்கையைக் கண்டித்துள்ளார். அவை வருமாறு:

''மாநிலச் சுயாட்சிக் கோரிக்கை என்பது வெள்ளையர் கள் ஆட்சியின் போது நீதிக்கட்சியின் துவக்கக் கோரிக்கை யாக இருந்தது. அன்று அதையே மிதவாதமென்று கேலி பேசினர் காங்கிரஸ் முகாமினர். அரசியல் விவரம் தெரிந்த வர்களுக்கு இந்த உண்மையும் தெரியும். அந்த வெளுத்துப் போன கொள்கையை — இன்று அதுவும் இந்திய அரசிடம் கேட்பதென்பது கேலிக்குரிய செயலாகும்.''

('திராவிடன்', 2.3.63)

கேள்வி: தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சிவஞானம் சொல்வது போன்று அயல்நாட்டுக் கொள்கை, இராணுவம், போக்குவரத்து இவைகளை மட்டும் மத்திய அரசிடம் கொடுத்துவிட்டு மற்றபடி (தமிழ்நாடு) தனித்தியங்குவதில் தி.மு.க.வுக்கு என்ன நஷ்டம்?

பதில்: மூன்று முக்கிய இலாகாக்களின் வாயிலாகத் தமிழகத்துக்கு உரித்தாக வேண்டிய பெருமைகளையும், பலனையும் இழக்க நேரிடும். இதனால், தோழர் சிவஞானத்துக்கு என்ன லாபம் — தி.மு.க.வினருக்கு என்ன நஷ்டம் — என்று கேட்பது பொருத்தமல்ல. பொதுவாக, தமிழகத்துக்குப் பெரு நட்டமும் உலக நாடுகளிடையே தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய பெரும் புகழுக்கு இருட்டடிப்பும் உண்டாகும்.

('திராவிடன்', 1.2.68 கேள்வி பதில் பகுதியில்)

''இன்று குறிப்பிட்ட இரண்டொரு இலாகாக்களைத் தவிர அனைத்திலும் மாநிலமே சுதந்திரமாக இயங்குதல் வேண்டும்... ஆனால், நாட்டைத் தனியாகப் பிரிப்பதுதான் எங்களுக்கு பிடிக்கவில்லை என்று பேசுகின்றனர். இன்னும் சில ஆண்டுகளில் தி.மு.கழகக் கொள்கைதான் சிறந்தது என்ற நிறைவு பெற்ற அரசியல் விவேகத்துடன் காலம் அவர்களைப் பேச வைக்கப் போவது உறுதி.''

('திராவிடன்', 21.12.57)

மறக்கவேண்டிய — மறந்தும் விட்ட இந்தப் பழைய செய்திகளை இங்கு எடுத்துக் காட்டுவது பழைய பகைமையைப் புதுப்பிப்பதற்காக அல்ல. பிரிவினையைக் கைவிட்டதாக அண்ணா அறிவித்த நாளிலேயே மாநிலச் சுயாட்சியை அவர் அறிவிக்காததற்கு மாநிலச் சுயாட்சிக்கெனவே பிறந்து வளர்ந்து வந்த ஒரே இயக்கமாகிய தமிழரசுக் கழகத்தோடு, பிரிவினையைக் கைவிடுவதற்கு முன்பு தி.மு.க. நடத்தி வந்த கருத்துப் போர்தான் காரணமென்பதனை உணர்த்துவதற்காகத்தான்.

பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடுவதென்று அறிவித்ததனையடுத்து (சில வாரங்கள் கழித்து என்று நினைக்கிறேன்) தி.மு.க. சட்டதிட்டத்தின் விதி-2 கீழ்வருமாறு திருத்தப்பட்டது.

> *''தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய மொழிவழி மாநிலங்களும், இந்தியா அரசுரிமை — ஒருமைத்தன்மை — அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்குள் இயன்ற அளவு கூடுதலான அதிகாரம் பெற்று நெருங்கிய திராவிடக் கூட்டமைப்பாக நிலவப் பாடுபடுவது.''*

இதனைச் செய்தி இதழில் நான் படித்தபோது தி.மு.க. பிரிவினையைக் கைவிட்டதால் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி பெருமளவுக்குக் குறைந்துவிட்டதென்றே கூறவேண்டும்.

ஆம்; தி.மு.க. 'திராவிடம்' என்ற மாயையிலிருந்து விடுபடவில்லை. திராவிடக் கூட்டாட்சிக் கொள்கையை கைவிடவில்லை. அத்துடன், ''முழு அளவு மாநில சுயாட்சி'' என்பதற்குப் பதிலாக, ''இயன்ற அளவு கூடுதலான அதிகாரம்'' என்ற வாசகம் தி.மு.க. அமைப்பு விதியில் சேர்க்கப்பட்டதும் எனக்கு ஏமாற்றத்தைத் தந்தது.

இருப்பினும் இந்தக் குறைகளை எடுத்துக் காட்டிவிட்டு, காலப் போக்கில் இவற்றையும், தி.மு.க. கைவிடக் கூடுமென்ற நம்பிக்கையைத் தெரிவித்து, அதன் மனமாற்றத்தை வரவேற்று இரண்டாவது முறையாகவும் அறிக்கை வெளியிட்டேன். தி.மு.க. தேசிய ஒருமைப்பாட்டை ஏற்றதனை தமிழரசுக் கழகத்துக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதி நான் விழாக் கொண்டாடவில்லை. ஆயினும், தமிழ்நாட்டின் அரசியலில் ஏற்பட்ட இந்த மாறுதலுக்காக நான் பாராட்டப்பட்டேன். 'மாலை முரசு' (5.11.62)வில் எழுதப்பட்ட தலையங்கத்தின் ஒரு பகுதி வருமாறு:

''தி.மு.கழகச் சட்ட திட்டம் மாற்றப்பட்டு விட்டது. இந்திய அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய நான்கு மாநிலங்களுக்கும் அதிக அதிகாரம் பெறப் பாடுபடுவதே இனி தி.மு.க.வின் நோக்கம். அதோடு திராவிட கூட்டமைப்பு அமைக்கவும் முயற்சி செய்யும்.

''பிரிவினை கேட்கும் கொள்கையைக் களைந்து விட்டார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சொன்னவுடன் ம.பொ.சி.யின் முகம் மனக் கண் முன் நிற்கிறது. அன்று முதல் இன்று வரை சுயாட்சி என்று விடாது முழக்கமிட்டுக் கொண்டிருப்பவர் அவர்தான்! நாலு பேர்தான் பின்னால் இருந்தாலும் இந்தக் கொள்கையை விடாது பிடித்துக் கொண்டிருப்பவர் ம.பொ.சி.''

சோதனை மிக்க காலம்

1966 போராட்டங்கள் மலிந்த எனது வாழ்க்கையிலே ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திய ஆண்டாகும். நான் காங்கிரசிலிருந்தபோதும் சரி; அதிலிருந்து வெளியேறித் தமிழுக்கும் தமிழினத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் தொண்டாற்ற என்னைப் பணித்துக் கொண்டபோதும் சரி; பொதுத் தேர்தல்களிலே போட்டியிட்டு அதிகாரப் பதவிகளை அடைய வேண்டுமென்ற ஆசை எனக்கு இருந்ததில்லை. அதைப்பற்றிய நினைப்புக்கூட எனக்கு ஏற்பட்டதில்லையென்று நான் உறுதியாகச் சொல்ல முடியும். 1952-இல் சட்ட மேலவைக்குச் சென்று, ஒன்றரை யாண்டுக் காலம் அந்த அவையிலே நான் அங்கம் வகித்தது தற்செயலாக நிகழ்ந்ததாகும். அதுவும் காங்கிரசின் சார்பில் தான்! ஆறாண்டுக் காலம் வகிக்க வேண்டிய அந்தப் பதவியை ஒன்றரையாண்டிலேயே துறந்தேன் என்பதனை முன்பே கூறியிருக்கிறேன்.

தமிழரசுக் கழகத்தை ஆட்சியைக் கைப்பற்றும் குறிக்கோளுடைய அரசியல் கட்சியாக மாற்ற வேண்டுமென்று என்பால் நல்லெண்ணம் கொண்ட அரசியல் தலைவர்களும் என்னைப் பின்பற்றிய தோழர்களும் என்னை வற்புறுத்திய போதெல்லாம் நான் பிடிவாதமாக மறுத்து வந்திருக்கிறேன். அதிகாரப் பதவிகள் மனிதனை ஆசாபாசங்களுக்கு அடிமையாக்கிவிடுகின்றன என்பது என் கருத்தாகும். இந்த எண்ணத்தைக் காந்தியடிகளிடமிருந்தே நான் பெற்றேன். அரசியலில் எனக்கு ஏற்பட்ட அனுபவமும் இதை உறுதிப்படுத்தியது.

சூழ்நிலை நிர்ப்பந்தித்தது

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் நடைபெற்ற மூன்று பொதுத் தேர்தலின்போதும் தமிழரசுக் கழகத்தைப் பார்லிமெண்டரி அரசியல் கட்சியாக மாற்ற வேண்டுமென்று என்னைச் சுற்றி

உருவான நிர்ப்பந்தங்களையெல்லாம் நான் வெற்றிகரமாகச் சமாளித்து வந்தேன் என்றாலும், எனது போக்கிலே வெறுப்ப டைந்த தோழர்கள் என்னைவிட்டு விலகிச் சென்றதையும் நான் மிகுந்த வேதனையோடு சகித்துக் கொள்ள வேண்டியிருந்தது.

தமிழரசுக் கழகம் தமிழருக்கும் தமிழினத்துக்கும் தமிழ் நாட்டுக்கும் ஆற்றியுள்ள தொண்டு அளவிடற்கரியது. கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் சரித்திரங் காணாத சாதனைகளை அது புரிந்துள்ளது. இன்றுள்ள புதிய தமிழகம் தமிழரசுக் கழகத்தின் படைப்பு. ஆகவே, அந்தப் புதிய தமிழகத்தை ஆள தமிழரசுக் கழகத்திற்கும் உரிமையுண்டு என்று என் கழகத் தோழர்கள் எண்ணினால், அதிலே தவறில்லை. ஆனால், மொழிப் பற்றும் இனப்பற்றும் இல்லாத மக்களாக தமிழர் இருக்கின்றனரே! 'பெருந்தலைவர்' — 'மூதறிஞர்' என்போ ரெல்லாமும் சுயசாதிச் செல்வாக்காலுந்தானே தலைவர்களாகி இருக்கின்றனர்!

இந்த உண்மையைக் கால் நூற்றாண்டுக்கு முன்பே உணர்ந் துதான் கழகத்தைப் பார்லிமெண்டரி அரசியல் கட்சியாக அல் லாமல், கலாச்சார இயக்கமாக நான் தோற்றுவித்தேன். ''பாடு படு; பலனைத் துறந்துவிடு'' என்று என் தோழர்களுக்கு சொல்லித் தந்தேன். எனது நிலையிலுள்ள உண்மைத் தன்மை என்னிட மிருந்து பிரிந்து சென்ற தோழர்களுக்கும் தெரியும். ஆயினும், ஆசாபங்கத்தால் மனம் பாதிக்கப்பட்டு அவர்கள் தடம்புரண்டு இடம்மாறிச் சென்று விட்டனர். ஆனால், அவர்க ளில் ஒருவர்கூட தாங்கள் புகுந்த கட்சியின் சார்பில் சட்டமன்றத் தில் இடம் பெற்றார்களில்லை.

ராஜாஜியின் அரசியல்!

1967-இல் நான்காவது பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண் டிருந்த போது, தமிழரசுக் கழகத்தை அரசியல் கட்சியாக மாற்றிப் பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று என்னைப் பின்பற்றும் தோழர்களில் பலர் என்னை நிர்ப்பந்தித்த னர். அந்தச சந்தாப்பத்திலும் அவர்களுடைய நிர்ப்பந்தத்துக்கு

எதிராகவே நான் இருந்து வந்தேன். ஆயினும், அப்போது உருவாகி வந்த அரசியல் சூழ்நிலை எனக்கு மிகப் பெரிய சோதனையாக அமைந்தது. காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்ப்பதற் காக ராஜாஜி எதையும் செய்யத் தயாராகிவிட்ட நேரம் அது. தி.மு.க.வின் தலைமையிலே காங்கிரஸ் அல்லாத கட்சிகள் அனைத்தும் கொண்ட, கூட்டணி ஒன்றை அமைப்பதற்காக ராஜாஜி முயன்று வந்தார். அத்துறையிலே நானும் அவரோடு ஒத்துழைக்க வேண்டுமென்று என்னைக் கட்டாயப்படுத்தி வந் தார்.

இந்த நிலையில், 29.3.66-இல் தமிழரசுக் கழகப் பொதுக் குழுவைக் குடந்தையிலே கூட்டினேன். பொதுத் தேர்தலில் கழகம் நேரடியாகக் கலந்துகொள்வதா, வேண்டாமா? — என்பதுபற்றி விவாதித்து முடிவெடுக்க அந்தப் பொதுக் குழு வுக்கு வாய்ப்பு அளித்தேன். பொதுக்குழு உறுப்பினர்கள் மிக வும் உற்சாகத்துடன் குடந்தையிலே கூடினர். என்மீது கொண்ட பற்றுதலுக்காக — என்பால் வைத்துள்ள மரியாதைக்காக — எதையும் மனதில் ஒளித்துக் கொள்ளாமல், மனம் திறந்து பேசும்படி பொதுக்குழ உறுப்பினர்களைக் கேட்டுக் கொண் டேன். அதன்படி, உறுப்பினர்களில் முன்னணியில் உள்ளவர்கள் தங்கள் கருத்தை வெளிப்படுத்தினர். என்னையும் பொதுச் செயலாளர் கவி.கா.மு. ஷெரீப்பையும் தவிர மற்றவர் எல்லோ ரும் கழகத்தை அரசியல் கட்சியாக மாற்றி, பொதுத் தேர்தலில் ஈடுபட வேண்டுமென்று வற்புறுத்திப் பேசினர். முடிவாக நான் பேசும்போது கழகம் இனியும் ஆற்ற வேண்டியுள்ள பணிகளை நினைவில் கொள்ளுங்கால், அதனை அரசியல் கட்சியாக மாற்றுவது நல்லதல்லவென்று நான் கருதுவதாக உறுதியுடன் கூறினேன். ஆயினும், என்னைப் பின்பற்றுவோரின் போக்கி லுள்ள தவறை அவர்களே உணர்ந்து திருந்துவதற்கு வாய்ப் பளிக்க வேண்டுமென்ற நினைப்புடன் அவர்கள் போக்கில் முடிவு செய்ய அனுமதித்து விட்டேன்.

கழகம் 'கட்சி'யானது

தமிழரசுக் கழகத்தை அரசியல் கட்சியாக மாற்றுவதென்று குடந்தை பொதுக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நான் பிடிவாதம் காட்டியிருந்தால், கழகத்தைக் கட்சியாக்கும் தீர்மானத்தைத் தவிர்த்திருக்க முடியும். அந்த அளவுக்கு கழகத் தோழர்கள் மீது எனக்கு செல்வாக்கு உண்டு. ஆயினும் காந்திய நெறியில் கொண்ட நம்பிக்கைக் காரணமாக, அவர்கள் மீது என் கருத்தைத் திணிக்க விரும்பாதவனானேன். அனுபவத்தின் மூலம் அவர்கள் என் வழிக்குத் திரும்புவார்கள் என்ற நம் பிக்கை எனக்கிருந்தது.

தமிழரசுக் கழகத்தை அரசியல் கட்சியாக மாற்றியதற்கு ராஜாஜி அவர்கள் எனக்குப் பாராட்டு தெரிவித்தார். கட்சியாக் கப்பட்டுவிட்ட, கழகத்தின் பலவீனங்கள் அவருக்குத் தெரியா. மற்றும், எந்தக் கொள்கைகளுக்காக நான் கழகத்தைக் கட்சியாக மாற்றுவது நல்லதல்லவென்று கருதினேனோ அந்தக் கொள்கை களுக்கு அவர் ஆதரவானவர் அல்ல. தி.மு.க.வின் தலைமை யிலே கூட்டணி அமைப்பதற்கு அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்குக் குடந்தை முடிவு பயன்படுமென்ற கருத்துட னேயே அவர் என்னைப் பாராட்டினார்.

தமிழரசுக் கழகப் பொதுக் குழு குடந்தையில் கூடுவதற்கு முன்பு தி.மு.கழகப் பொதுக்குழு சென்னை நகரில் கூடி காங்கிர சுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்துங் கொண்ட கூட்டணி அமைத்துப் பொதுத் தேர்தலிலே போட்டியிட வேண்டுமென்ற தனது விருப்பத்தை ஒரு தீர்மானத்தின் மூலம் வெளியிட்டது. பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டதாக முன்பு தான் நிறைவேற்றியிருந்த தீர்மானத்தை மீண்டும் உறுதிப்படுத்தி விட்டு, மொழிவாரி மாநிலங்களுக்குப் பூர்ண சுயாட்சி கோரு வதே தனது தேர்தல் கொள்கையென்றும் தி.மு.க. பொதுக் குழு அறிவித்தது. தி.மு.க.விடம் வெளிப்பட்ட இந்த மாறுதலும் குடந்தையில் தமிழரசுக் கழகத்தைக் கட்சியாக்கும் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு என்னைப் பின்பற்றும் தோழர்களுக்குத் தூண்டுதலாக அமைந்தது.

தமிழரசுக் கழகத்திற்கும் தி.மு.க.வுக்குமிடயே உறவு ஏற்படுவதிலே ராஜாஜி மிகுந்த அக்கறை காட்டினார். நான் அவரைச் சந்திக்கும் போதெல்லாம் அதைப்பற்றித்தான்

பேசுவார். தி.மு.க.வைக் கண்டிக்கும் வகையில் நான் செங்கோலில் எழுதிய போதெல்லாம் அதைப் படித்துவிட்டு, தி.மு.க. மீதுள்ள கோபத்தை விட்டுவிடுமாறு எனக்குக் கடிதம் எழுதுவார். இல்லையேல், நேரில் சந்திக்கும்போது என்னிடம் விவாதிப்பார். தி.மு.க. தேச பக்த முகாம் ஆகிவிட்டதாகவும், காங்கிரசை விடவும் அதன் தேசபக்தி தூய்மையானதென்றும் என்னுடன் விவாதிப்பார். என்னிடமென்ன, பொதுக் கூட்டங்களிலேயும் ராஜாஜி அப்படித்தான் அப்போது பேசி வந்தார். உண்மையில் தி.மு.க. விஷயத்தில் ராஜாஜி அடைந்த மனமாற்றம் எனக்கு வியப்பைத் தந்தது.

ராஜாஜியிடம் வெளிப்பட்ட இந்த மாறுதலுக்குக் கொள்கைப் பற்று எதுவும் காரணமாக இருக்கவில்லை. காங்கிரஸ் ஆட்சியை — குறிப்பாக, காமராசரை வீழ்த்துவது ஒன்றுதான் அவருடைய குறிக்கோளாக இருந்தது. அதற்காக தி.மு.க.வைப் பயன்படுத்திக் கொள்ள அவர் விரும்பினார். தி.மு.க. மீதுள்ள கோபத்தை விட்டுவிடுமாறு எனக்கு உபதேசித்த ராஜாஜி, காமராசர் மீது தாம் கொண்டிருந்த கோபத்தைக் குறைத்துக் கொள்ளவும் முடியாதவராக இருந்தார். காங்கிரசையும், திரு. காமராசரையும் வீழ்த்துவதற்காக எதையும் செய்ய அவர் தயாராக இருந்தார்.

என்னைப் பொறுத்தவரையில், கொள்கை அடிப்படையிலேயே தி.மு.க. — த.அ.க. உறவு பற்றித் தீர்மானிக்க வேண்டியவனாக இருந்தேன். ஆம்; தி.மு.க.வுடன் கூட்டு சேர்வது பற்றி முடிவு செய்வதிலே ராஜாஜிக்கும் எனக்கும் கொள்கை ரீதியான கருத்தொற்றுமை இருக்கவில்லை.

சேலம் இரும்பாலை

1966-இல் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு புனிதப் பணியில் நான் பங்கு கொள்ள நேர்ந்தது. இரும்பாலைக்கு அனுமதி பெறும் பொருட்டு ''அனைத்துக் கட்சி சேலம் இரும்பாலைக் கோரிக்கைக் குழு''வின் தலைவன் என்ற முறையில் 25.11.66-இல் பிரதமர் இந்திரா காந்தி அவர்களைப் புதுடில்லி

யில் சந்தித்துப் பேசினேன். தொழிலதிபர் திரு. நா.மகாலிங்கம் இந்தச் சந்திப்புக்குப் பெரும் தூண்டுதலாக இருந்ததோடு, சந்திப்பிலே அவரும் கலந்து கொண்டார்.

சேலம் இரும்பு உருக்காலைப் பிரச்சினை பல ஆண்டு களாக இழுபறியில் இருந்து கொண்டிருந்தது. இந்தியாவில் ஐந்தாவது இரும்பு உருக்காலையைச் சேலத்தில் நிறுவுவதா, ஆந்திரத்திலுள்ள விசாகப்பட்டினத்தில் நிறுவுவதா, கன்னடத்தி லுள்ள ஆஸ்பெட்டில் தொடங்குவதா என்பதிலே தமிழக — மைசூர் — ஆந்திர மாநிலங்களிடையே போட்டி ஏற்பட்டு, அதிலே முடிவு காண முடியாமல் மத்திய அரசு திணறிக் கொண்டிருந்தது. பிரதமர் இந்திராவை நானும், நண்பர் மகாலிங்கமும் பேட்டி கண்டு பேசிய இந்தச் சந்தர்ப்பத்தில்தான் பிரச்சினையைத் தீர்க்க ஒரு நல்ல வழியைக் கூறினோம் — அதாவது, சேலம், ஆஸ்பெட், விசாகப்பட்டினம் ஆகிய மூன்று இடங்களிலுமே இரும்பு உருக்காலை ஏற்படுத்தலாமென்று ஆலோசனை கூறினோம். எங்கள் யோசனையை பிரதமர் இந்திரா மகிழ்ச்சியுடன் வரவேற்றார். பிற்காலத்தில் சேலம் இரும்பாலைத் திட்டம் ஒரு கோடி ரூபாய் அளவில் நடை முறைக்கு வந்ததற்கு இந்தச் சந்திப்பு முதற் காரணமாகும். எனது தூதுக்குழு கூறியபடி, சேலம், ஆஸ்பெட், விசாகப்பட்டினம் ஆகிய மூன்றிடங்களிலும் இரும்பாலைகள் ஏற்படுத்தப்பட்டன.

1966 நவம்பர் 19—20 தேதிகளிலே திருப்பத்தூர் நகரில் வடாற்காடு மாவட்டத் தமிழரசுக் கழக மாநாடு நடைபெற்றது. இந்த மாநாடு நடைபெற்றதில் புதுமை ஒன்றுமில்லையென்றா லும், நவம்பர் 5,6 தேதிகளில் நடத்துவதற்காகப் பெரும் செலவில் பிரம்மாண்டமான அளவில் கொட்டகை போடப் பட்டு, அது கவர்ச்சிகரமாக அலங்கரிக்கப்பட்டும் இருந்தது. மாநாடு கூடுவதற்கு ஒரு நாளைக்கு முன்பு (நவம்.4-இல்) அடித்த பெரும்புயலால் அலங்கரிக்கப்பட்ட மாநாட்டுக் கொட் டகை முற்றிலும் அழிந்து போய்விட்டது. தமிழரசு இயக்கத்தின் வரலாற்றிலே இப்படி ஒரு சேதம் முன் எப்போதும் நிகழ்ந்த தில்லை. ஆயினும் ஆற்றல் மிக்க தி.மு. தேவராச முதலியாரைத் தலைவராகக் கொண்ட வரவேற்புக் குழுவினர், முன்பு அமைத்

ததை விடவும் வலுவானதும் பெரியதுமான கொட்டகையைத் திரும்பவும் அமைத்து நவம்.19,20 தேதிகளில் மாநாட்டைச் சீருஞ்சிறப்புமாக நடத்தி முடித்தனர். உழைப்பே உருவாகி வந்தாற்போன்ற திருத்தணிகை ந.ரஷீத் அவர்கள் இந்த மாநாட்டில் தலைமை தாங்கினார். பொதுத் தேர்தலுக்கு இரண்டு மாதங்களே இருந்த நேரத்தில் — கழகம் கட்சியாக மாற்றப்பட்ட பின்னர் — நடந்ததால் மாநாட்டின் நடவடிக்கைகளில் பொதுத் தேர்தல் உணர்வே மிகுந்திருந்தது.

மறக்க முடியாத நண்பர்

1966-இல் என்னை மிகவும் வருத்தத்தில் ஆழ்த்திய நிகழ்ச்சி, எனது குடும்ப மருத்துவர் டாக்டர் எம்.சிதம்பரம் அவர்களின் திடீர் மரணமாகும். அன்னார், மாணவப் பருவத்தில் தமிழரசுக் கழகத்தில் சேர்ந்து, தமிழின மாணவர் மாநாடொன்றை ராஜாஜி மண்டபத்திலே நடத்தினார். அதிலே அவர் தான் தலைமை வகித்தார். அவரும் அவரது மனைவி திருமதி சரசுவதி அவர்களும் என்பால் காட்டி வந்த அன்பு என்னால் நன்றியுடன் போற்றத்தக்கதாகும். அவர் எனக்கு மருத்துவராக மட்டுமல்லாமல், என் ஆருயிர்த் தோழராகவும் இருந்தார்.

நான் முறையாகக் கோயிலுக்குச் சென்று இறைவழிபாடு நிகழ்த்தும் வழக்கம் கிடையாது. டாக்டர் எம்.சிதம்பரம் வெள்ளிக்கிழமைதோறும் தன் மனைவியுடன் திருவான்மியூர் தியாகேசர் கோயிலுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அப்போது அவர் என்னையும் அழைத்துச் செல்வார். அவர் மறைந்ததும் அந்த வழக்கத்தை நான் தொடரவில்லை. திருவான்மியூர் கோயில் கோபுரத் திருப்பணிக் குழுவிற்குச் செயலாளராக இருந்த நிலையில்தான் துரதிர்ஷ்டசாலியான அவர் அகால மரணத்திற்கு ஆளானார். அவரது பிரிவு என் மனத்தைப் பெரிதும் வருத்தியது.

மணி விழா

1966-இல் எனது பொது வாழ்க்கைக்கும் குடும்ப வாழ்க்கைக்கும் சிறப்பு தரும் வகையில் நடந்த மற்றொரு நிகழ்ச்சி எனது மணிவிழாவாகும். இவ்விழாவைச் சிறப்புடன் நடத்தி வைக்கத் தொழிலதிபர் திரு.நா. மகாலிங்கம் அவர்களைத் தலைவராகவும், திரு.ம.சீ. கிருஷ்ணமூர்த்தி, பி.ஏ. அவர்களைச் செயலாளராகவும் கொண்ட ''ம.பொ.சி. மணி விழாக் குழு'' ஒன்று அமைக்கப் பெற்றது.

1966-ஆம் ஆண்டில் எனது மணிவிழா சீரும் சிறப்புமாகத் தமிழகம் முழுவதும் நடைபெற்றது. அறுபது ஆண்டு நிறைவு பெறும்போது மணி விழா நடப்பதுதான் வழக்கம். இதற்கு மாறாக, என்பால் அன்பு கொண்டவர்களும், என்னைப் பின்பற்றும் தமிழரசு இயக்கத் தோழர்களும் அறுபதாம் ஆண்டு பிறந்த நாளிலேயே எனக்கு மணிவிழாக் கொண்டாடத் தொடங்கிவிட்டனர். அறுபதாம் ஆண்டுத் தொடக்க விழா 26.6.65-இல் சென்னை வாலாஜா சாலையிலுள்ள பாலர் அரங்கிலே (தற்போது கலைவாணர் அரங்கு) நடைபெற்றது.

எனது பிறந்த நாள் விழாவிலே யான் எழுதிய ஒரு நூலையேனும் வெளியிட்டுத் தமிழ் அன்னையை நன்றியுணர்வோடு நான் வழிபடுவது வழக்கம். பாலர் அரங்கில் நடைபெற்ற இந்த விழாவிலும் ''இலக்கியத்தில் சோஷலிசம்'', ''மலேசியாவில் ஒரு மாதம்'', ''வள்ளலாரும் பாரதியும்'' என்ற நூல்களைப் பழம்பெரும் தேசபக்தர் திரு.க.சந்தானம் அவர்களைக் கொண்டு வெளியிடச் செய்தேன். அப்போது தமிழகச் சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்த கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் எனது பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு தி.மு.கழகத்தின் சார்பில் எனக்கு வாழ்த்து கூறினார். என்னை வாழ்த்துவதற்குத் தமிழரசுக் கழக மேடைக்கு முதன் முதலாக வந்த தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி

தான். ஆம்; இந்த விழாவில்தான் என்னையும் கலைஞரையும் கருவிகளாகக் கொண்டு தமிழரசுக் கழக — தி.மு.கழக உறவு ஆரம்பமானது.

நகராட்சியின் வரவேற்பு

இந்த விழா நடந்த நாளிலேயே சென்னை மாநகராட்சி எனக்கு வரவேற்பளித்துச் சிறப்பு செய்தது. தொடர்ந்து ஏழாண்டுக் காலம் நான் மாநகராட்சியில் ஆல்டர்மேனாக இருந்திருக்கிறேனாதலால், மாநகராட்சி அளித்த வரவேற்பு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. அப்போது சென்னை மாநகராட்சி தி.மு.கழகத்தின் செல்வாக்கில் இருந்தது. திரு.சி. சிட்டிபாபு மேயராக இருந்தார். இந்த வரவேற்பிலும் கலைஞர் மு.கருணாநிதியவர்கள் கலந்து கொண்டு தி.மு.கழகத்தினர் என்பால் கொண்டுள்ள நன்மதிப்பை வெளிப்படுத்தினார். சென்னை மாநகராட்சியின் ரிப்பன் கட்டிடம் போன்ற தயாரிக்கப்பட்ட பெரிய வெள்ளிப் பேழையொன்றில் வரவேற்பிதழ் வைத்துத் தரப்பட்டது. நான் ஆல்டர்மேனாக இருந்த காலத்தில் ஆற்றிய பணிகள் அதில் போற்றப்பட்டன. இதற்குச் சில மாதங்கள் கழித்து டிசம்பர் 27, 28, 29 தேதிகளில் கல்கத்தா ஹௌரா நகரத்தில் திருவள்ளுவர் கலைக் கழகத்தாரால் எனது மணி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நானும் கலந்து கொண்டேன். என்னுடன் திரு. ம.சீ. கிருஷ்ணமூர்த்தி பி.ஏ., அ.கோபாலகிருஷ்ணன், திரு. பொ.ஆறுமுகம், என் மகன் திரு.ம.சி. திருநாவுக்கரசு ஆகிய சென்னை மாவட்டத் தமிழரசுக் கழகத் தோழர்கள் ஹௌரா விழாவில் கலந்து கொண்டனர்.

ஹௌரா திருவள்ளுவர் கலைக் கழகச் செயலாளர் திரு.எச். இராமமூர்த்தி எனது மணிவிழாவை வங்கத் தமிழர் மத்தியிலே நடத்துவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். எனது வயதைக் குறிக்கும் தொகையாக ரூபாய் அறுநூறு அந்த விழாவிலே எனக்குத் தரப்பட்டது. அறிஞர் திரு. வரதராச ஐயங்கார் தலைமையில்தான் விழா நடைபெற்றது.

கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தார் சிறப்புக் கூட்டம் நடத்தி எனது மணி விழாவிலே பங்கெடுத்தனர். தமிழ் மாணவர் மன்றம், தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆகியவையும் தனித்தனியே என்னை வாழ்த்தும் வகையில் சிறப்புக் கூட்டங்கள் நடத்தின. வங்கத் தமிழர்களின் தமிழ்த் தொண்டு என்னைப் பெரிதும் கவர்ந்த ஒன்றாகும். வங்கத்திலே எனக்கு ஏராளமான நண்பர் கள் உண்டு. அவர்களில் திருவாளர்கள் பிரபஞ்ச சோதி பிரசுராலய உரிமையாளர் திரு. சொக்கலிங்கம் செட்டியார், திரு.அ.ந. தியாகராசன், திரு.கருப்பையா ஆகியோர் முக்கிய மானவராவர். இவர்களெல்லாம் வங்கத் தலைநகரிலே எனக்கு மணிவிழா நடத்துவதில் மிகுந்த ஆர்வம் காட்டினர்.

ம.சீ.கி.யின் துணை!

எனது மணிவிழாவையொட்டி நான் கல்கத்தா சென்றிருந்த நேரத்திலே, அங்குள்ள பல்கலைக் கழகத்தில் ஆங்கில மொழிப் பற்றுள்ள ஆதிக்கத்தை அளந்தறியவும், வங்க மொழி எந்த அளவுக்குப் போற்றப்படுகிறதென்பதனைப் புரிந்து கொள்ளவும் முயன்றேன். இந்த முயற்சியில் பிரதிபலன் எதிர்பாராமல் என்னுடைய தனித் துணைச் செயலாளராக இருந்துவரும் திரு. ம.சீ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பெரிதும் உபயோகமாக இருந் தார். கல்கத்தா பல்கலைக் கழக உயர் கல்வித் துறைத் தலைமை நிர்வாகியவர்களைச் சந்தித்துப் பேசினேன்.

இனத்தாலும், மொழியாலும் வேறுபட்ட அயலாருடன் — குறிப்பாக, உயர் கல்வி கற்று அந்தஸ்திலுள்ளவர்களுடன் நான் உரையாடிய காலங்களிலெல்லாம் திரு.ம.சீ. கிருஷ்ணமூர்த்தி பி.ஏ. என்னுடன் இருந்திருக்கிறார். இந்தச் சந்தர்ப்பங்களில் அவர் காட்டும் பண்பும், பக்தியும் என்னைப் பெரிதும் கவர்ந் திருக்கின்றன. இதனை, கல்கத்தா பயணத்தின்போதுதான் நான் அதிகமாக உணர்ந்தேன்.

மணிவிழா என்பது ஒரு சிலருக்கே கிடைக்கும் பேறாகும். அறுபதாண்டு நிறைவு பெறும்வரை வாழ்வதே அரிது. அந்த வாழ்வும் மனைவியுடன் அமைந்தால்தான் மணி விழா

கொண்டாட வாய்ப்பு. நான் மனைவியோடும், 3 மக்களோடும் வாழுகின்ற நிலையிலே மணிவிழா காணும் பேறு பெற்றேன். எனது மணிவிழாத் திருமணத்தை என் மகன் ம.சி. திருநாவுக்க ரசு பொறுப்பேற்று நடத்தினான். அம்மையப்பருக்கு அருமை மக்கள் திருமணம் நடத்திவைக்கும் வழக்கத்தைத் தோற்றுவித்த வர்களை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும்.

இந்த இடத்திலே என்னுடைய குடும்பத்தைப் பற்றியும் சில செய்திகளைத் தெரிவித்துவிட்டு, பின்னர் எனது மணி விழா பற்றி விவரிக்க விரும்புகிறேன். எனது குடும்பத்தைப் பற்றி இதுவரை மிகவும் குறைவாகத்தான் கூறியிருக்கிறேன்.

தந்தைக்கு மகன் நடத்திய திருமணம்!

என் மனைவி ஐந்து குழந்தைகளைப் பெற்றாள் என்றாலும் திரு.ம.சி. திருநாவுக்கரசு, செல்வியர் கண்ணகி, மாதவி ஆகிய மூவர்தான் எனது மணி விழாவை — அதாவது, என் அறுபதாம் கல்யாணத்தை நடத்தும் பேற்றினைப் பெற்றனர். என் மகனுக் குத் திருமணம் முடிந்து சரியாக இரண்டாண்டுகளுக்குப் பின்னர் அவன் தன் மனைவியுடன்கூடி எனக்கும் என் மனைவிக்குமாக அறுபதாங் கலியாணம் நடத்தி வைத்தான்.

என் மகனுடைய திருமணத்தை 24.5.64-இல் சென்னை ஆபட்ஸ்பரியில் எனது பொருளாதார சக்திக்கும் மீறிய வகை யில் கடன்பட்டு நடத்தி வைத்தேன். என் மருமகள் பெயர் செகதீசுவரி. என் மகன் திருமணத்திற்கு முதன் முதலில் கிடைத்த வாழ்த்துச் செய்தி பிரதமர் ஜவகர்லால் நேருவினுடையதாகும். உடல்நலக் குறைவால் காஷ்மீரில் தங்கிச் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது, என்பால் அன்பு காட்டி தாமே கையொப்ப மிட்டு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

கடன்பட்டுத் திருமணம் செய்து வைப்பது அல்லது செய்து கொள்வது சரியான வாழ்க்கை நெறியாகாது. ஒரே மகன் என்ற ஆசையாலும் எனது மனைவியின் தூண்டுதலாலும் திருநாவின் திருமணத்தை ஆடம்பரமாக நடத்தினேன். என் மனைவி செல்வக் குடும்பத்தில் பிறந்தவள். என்னை மணக்கும் வரை

செல்வச் செருக்கிலேயே வளர்ந்தவள். அதனால், ஆடம்பரத்தை விரும்பும் மனப்பான்மை அவளுக்கு இன்னமும் இருக்கிறது.

திருநாவுக்கரசு திருமணத்திற்கு மூதறிஞர் இராஜாஜி அவர்களும் அப்போது காங்கிரஸ் மகாசபையின் தலைவராக இருந்த திரு. காமராசரும் வந்திருந்து என் குடும்பத்தைப் பெருமைப் படுத்தினர். வாய்ப்பு நேரும்போதெல்லாம் என்பால் தங்களுக்கு இருக்கும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த இந்த இருபெரும் தலைவர்களும் தவறியதே இல்லை. திருமணம் முடிந்தவுடன் என்னுடன் இருந்து உணவருந்தி, அதன் பின்னர் ஒரு மணி நேரத்திற்கும் அதிகமாகத் தங்கி என்னுடன் உரையாடிவிட்டுச் சென்றார் திரு. காமராசர். அரசியலிலே வேறுபட்டவர்களாகவோ, சந்தர்ப்ப நிர்ப்பந்தங்களால் விரோதிகளாகவோ நாங்கள் செயல்பட்டு வந்தாலும் தனிப்பட்ட முறையில் நண்பர்களாகவே இருந்து வருகிறோம். என் மகன் திருமணம் முடிந்து இராஜாஜி தம் இல்லத்திற்குச் சென்றதும், ''ம.பொ.சி. தன் மகன் திருமணத்தை ஒரு பெரிய மாநாடு போல நடத்திக் கொண்டிருக்கிறார்'' என்று தம்மிடம் கூறியதாக திரு.மீ.ப. சோமசுந்தரம் என்னிடம் கூறினார். ஆம்; ஆடம்பர வாழ்வை விரும்பாதவர் இராஜாஜி. இப்படி என் மைந்தன் திருநாவுக்கு நான் திருமணம் செய்து வைத்த இரண்டாண்டுக்குப் பின் அவனும் என் மருமகளுமாகச் சேர்ந்து எனக்கும் என் மனைவிக்கும் அறுபதாங் கலியாணம் செய்து வைத்தனர்.

1966 சூன் 25, 26 தேதிகளில் சென்னை மயிலை ஏ.வி.எம். இராசேசுவரி திருமண மண்டபத்தில் எனது மணி விழா நடைபெற்றது. முதல் நாள் மாலை வாழ்த்துக் கூட்டமும், மறுநாள் காலை வைதிகத் திருமணமும் நடைபெற்றன. வாழ்த்துக் கூட்டத்தில் மூதறிஞர் இராஜாஜி, அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், தொழிலதிபர்கள் நா. மகாலிங்கம், மதுரை கருமுத்து தியாகராச செட்டியார், கம்யூனிஸ்டுத் தலைவர் மணலி கந்தசாமி, 'கலைமகள்' ஆசிரியர் வித்வான் கி.வா.ஜகந்நாதன், திருமதி சௌந்தரா கயிலாசம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அண்ணா அடைந்த மகிழ்ச்சி

திரைப்பட நடிக — நடிகையர், இயக்குநர், தயாரிப்பாளர், பத்திராதிபர்கள், எழுத்தாளர்கள், பதிப்பக உரிமையாளர்கள் உள்பட நகர பிரமுகர்களெல்லாம் ஒருங்கே திரண்டிருந்தனர். மண்டபத்திற்கு உள்ளும் புறமுமாக மக்கள் திரண்டிருந்த காட்சி ''வெள்ளம்போல் தமிழர் கூட்டம் — அன்னார் உள்ளத்தால் ஒருவர்'' என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியுள்ள வாசகத்தை நினைவூட்டியது. ''இது, தனி மனிதர் விழாவா, தமிழ் விழாவா?'' என்ற வினாவுக்கு விடையளிப்பவர் போல, '' இங்கு நடப்பது ம.பொ.சி. சஷ்டயப்த பூர்த்தி அல்ல; மறுமலர்ச்சித் தமிழுக்கு சஷ்டியப்த பூர்த்தி நடக்கிறது'' என்று ராஜாஜி கூறினார்.

அறிஞர் அண்ணா அவர்கள் தம் ஒளிமிகுந்த கண்களால் விழா அரங்கைப் பலமுறை கூர்ந்து நோக்கிவிட்டு,

> *''இந்த இராசேசுவரி கலியாண மண்டபத்திலே முன்னர் எத்தனையோ திருமணங்களுக்கும் வேறு விழாக்களுக்கும் நான் வந்திருக்கிறேன். ஆனால், இன்று காண்பது போன்ற சிறப்பானதொரு கூட்டத்தை முன்பு எப்போதும் இந்த மண்டபத்தில் நான் கண்டதில்லை; இனியும் காண முடியுமா என்பது ஐயமே''*

என்று சொன்ன வாய்மணக்க, கேட்டோர் செவி இனிக்கக் கூறினார்.

ராஜாஜியும் அண்ணாதுரையும் விழாவின் சிறப்பை வியந்து புகழ்ந்தது கூடியிருந்தோரின் எண்ணிக்கையை வைத்து மட்டுமல்ல; கூட்டத்தில் நிலவிய அமைதியையும் கூடியிருந்தோரின் தரத்தையும், அவர்கள் முகங்களில் வெளிப்பட்ட மகிழ்ச்சியையும் கருதியுந்தான்!

எம்.எஸ்.எஸ். பாடிய ஆய்ச்சியர் குரவை

கோகில கான இசைவாணி எம்.எஸ். சுப்புலட்சுமி அம்மாள் இறை வணக்கம் பாடினார். அத்துடன், எனக்கு பிடித்தமான சிலப்பதிகாரக் காப்பியத்திலிருந்து என் மனங்க வர்ந்த ''ஆய்ச்சியர் குரவை''ப் பாடல்களை ஊன் கலந்து உயிர் கலந்து உணர்வு கலந்து பாடி, கேட்போர் மனமுருகும்படி செய்து விட்டார். மணிவிழா நாயகனான எனது அனுபவமும் அதுதான்! எம்.எஸ். கச்சேரி சென்னையில் எங்கு நிகழ்ந்தாலும் ஆய்ச்சியர் குரவைப் பாடல்களைக் கேட்பதற்கென்றே அங்கு நான் செல்வதுண்டு. அவர் பாடுங்கால் என்னை மிகுதியாகக் கவர்வது அவரிடம் வெளிப்படும் பக்தி பாவந்தான்!

மணிவிழாக் குழுத் தலைவர் திரு.நா. மகாலிங்கம் அவர்கள் தமக்கே மணிவிழா நடப்பது போன்ற மகிழ்ச்சியை வெளிப் படுத்தி, அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

நான் எழுதி இன்ப நிலையத்தாரால் வெளியிடப்பட்ட ''கம்பர் கவியின்பம்'' என்ற நூலை அன்று தமிழன்னைக்கு என் பிறந்த நாள் காணிக்கையாக்கினேன. எனது ஆராய்ச்சி நூற்களிலே இது மிகவும் சிறந்ததென்று நான் கருதுகின்றேன். டாக்டர் மு.வரதராசனாரும் இதே கருத்தை என்னிடம் ஒரு முறை நேரில் கூறக் கேட்டு மகிழ்ச்சியடைந்தேன்.

இந்த நூலை 'கலைமகள்' ஆசிரியர் வித்வான் கி.வா. ஜகந்நாதன் வெளியிட்டுப் பேசினார். அறிஞர் கி.வா.ஜ.வும் நானும் தமிழ்ப் பற்றால் பிணைக்கப்பட்டவர்கள். அந்தப் பற்று எங்களில் யாரிடமேனும் குறைந்து விடுமானால், அப்போது எங்கள் பிணைப்பும் தளர்ந்துவிடும். ஆனால், அது நடக்காது. ஏனெனில், எங்களில் யாரிடமும் இனி தமிழ்ப்பற்று குறையாது; வளரும்.

சௌந்தரம்மாளின் அன்பு

என்னைப் பாராட்டும் வகையில் தயாரிக்கப்பட்ட ''கவிஞர் கண்ட ம.பொ.சி.'' என்ற நூலை அறிஞர் அண்ணாதுரை அவர்கள் வெளியிட்டார். 51 கவிஞர்கள் என்னைப் பற்றி எழுதிய கவிதைகளைக் கொண்டது அந்நூல். அவர்கள் ஒவ்வொருவரும் சொற்சுவையும் பொருட்சுவையும் தோன்ற எழுதியுள்ளனர். ஆயினும், அவர்களிலே பெண்மணி ஒருவர் தான்! அவர் சௌந்திரா கயிலாசம். அவர் கவிதைகளிலே, என் தலைமயிர் கருத்திருக்க மீசை மட்டும் வெளுத்து விட்டதற்குக் காரணம் காட்டி இயற்றிய கவிதை என்பால் அன்புள்ளவர்கள் இதயத்திலே நிலைத்துவிட்டது. அது வருமாறு:

''துள்ளிவரும் செந்தமிழாம் தேனின் துளிபட்டு
வெள்ளிநிறம் காட்டிடுதே மீசை''எனக் கேட்கின்றான்
தெள்ளுதமிழ் பொங்கும் சிவஞானச் செல்வமுனைப்
பள்ளிசெல்லும் என் பையன் பார்த்து!

மற்றொரு கவிதையும் அம்மையாரின் புலமைக்கும் என் பால் அவர் கொண்டுள்ள சகோதர வாஞ்சைக்கும் சான்றாக உள்ளது.

''உழைக்கப் பிறந்தாய்; உணர்வெடுத்தாய்; வெற்றி
முடிக்கப் பிறந்தாய் முரசெடுத்தாய்; எல்லை
அமைக்கப் பிறந்தாய்; அரும்புகழை என்றும்
சுமக்கப் பிறந்தாய், சும!''

என்ற கவிதை எனக்கு மட்டுமின்றி, என்பால் அன்புடையவர் களுக்கெல்லாம் இனிக்கக் கூடியதாகும். இதைவிடவும்,

''பொன்னை வெறுத்தான்; புகழ்வெறுத்தான்; போராடி
வென்று சிரித்தான் விலங்குடைத்தான்; அன்னவனை
வாட்டும் வயிற்று வலிதீராய்; கணக்கிற்குக்
காட்டுகிறாய் பன்னிரண்டு கை''

என்ற கவிதைகள் என்னை அதிகம் கவர்ந்தன. எனக்காகப் பரிந்து — என் வயிற்று வலியைப் போக்காததற்காகச் சினந்து

— முருகப் பெருமானை நிந்திக்கும் அம்மையாரின் அன்பை நான் எப்படி மறுக்க முடியும்? அம்மையார் உண்மை உணர்வுடனேயே இந்தக் கவிதையைப் புனைந்துள்ளார்.

வரகவி முருகேச பாகவதர்

''கவிஞர் கண்ட ம.பொ.சி.'' நூலிலே மதுரகவி வி.வி. முருகேச பாகவதர் பாடியுள்ள மூன்று செய்யுள்களிலே முதற் செய்யுள் என் மனத்துள் பதிந்து கிடக்கின்றது.

''மண்பூத்த பழந்தமிழின் நினைவை ஊட்டும்
மாவீரம் தனையள்ளி வழங்கும் மீசை!
கண்பூத்த அஞ்சாத சிங்கப் பார்வை
கனம்பூத்த முல்லைநிகர் தூய ஆடை!
பண்பூத்த உலகுக்கோர் உயிரைப் போன்ற
பாட்டாளர் உழவர்நலம் கோரும் உள்ளம்!
தண்பூத்த காட்சியினை நல்கும் எங்கள்
தகைபூத்த ம.பொ.சி. தன்மை வாழ்க!''

இந்தச் செய்யுளிலே ஒவ்வொரு சொல்லிலும் பாகவதரின் அன்பு மணக்கிறது! தாழ்த்தப்பட்ட குலத்திற் பிறந்த இப் பெரியாரை 'வரகவி' என்று சொல்லலாம்!

தமிழரசு இயக்கப் பேச்சாளர்களிலே ஒருவராக இருந்த திரு. கோ. கலிவரதன் அவர்கள் என்னைப் பின்பற்றிய காலத்திலே பாகவதரின் மேற்சொன்ன பாடலை ''தலைவன் துதி' போலப் பாடிவிட்டுத்தான் தனது பேச்சைத் தொடங்குவார்! ஆம்; இந்தப் பாட்டிலே அவருக்கு அவ்வளவு கவர்ச்சி! எப்போதுமே கவர்ச்சியால் விரும்பப்படும் ஒன்று காலப் போக்கில் கைவிடப்பட்டு விடும். உண்மையான அன்பால் விரும்பப் படும் ஒன்றுதான் ஆயுள்வரை நெஞ்சில் நிலைத்திருக்கும்!

தெ.பொ.மீ. கனிவுரை

மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த திரு.தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மணிவிழாவுக்குத் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையிலே என்னைப் பற்றித்

தம் இதயத்திலுள்ளவற்றை ஒளிவு மறைவின்றி எடுத்துரைத்தார். அவரது பேச்சு வருமாறு:

''இந்த விழாவில் கலந்து கொள்வதால் எனக்குத்தான் பெருமை. எனக்கு மட்டுமா? நான் தொடர்பு கொண்டுள்ள பல்கலைக் கழகத்திற்கும் பெருமை. ஆய்ச்சியர் குரவைப் பாடலிலே திருமாலின் அருட்செயலை வியந்து போற்று, இளங்கோவடிகள், 'மாயமோ மருட்கைத்தே!' என்கிறார். மணி விழாத் தலைவரை நான் அரை நூற்றாண்டுக் காலமாக அறிவேன். ஆதியிலே நான் அவரைக் கண்டபோது இவ்வளவு உயர் நிலைக்கு வருவாரென்று நம்பவில்லை. இப்போது வந்துவிட்டதைப் பார்த்தால், 'இதென்ன மாயமோ?' என்று இளங்கோவைப் போலவே பாடத் தோன்றுகிறது.

''ம.பொ.சி. எங்களைப்போல பல்கலைக் கழகத்தில் புகுந்து வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்ளவில்லை. ஒரு காலத்திலே ஆங்கிலத்தில் பேசினால்தான் அழகாகவும், பெருமையாகவும் இருக்குமென்று நான் எண்ணியதுண்டு. எங்களுக்குள்ள இந்தக் குறைபாடுகளெல்லாம் ம.பொ.சி.க்கு இல்லை. ஆண்டவன் அவ்வரை நல்ல நிலையில் வைத்துவிட்டான். நல்ல தமிழ் — தூய தமிழ் — திருத்தமான தமிழ், நாட்டில் வழங்க வேண்டுமென்பதே ம.பொ.சி.யின் போராட்டம்.

''அவர் எழுத்துக் கோக்கும் தொழிலாளியாக இருந்ததால் இந்த வாய்ப்பைப் பெற்றார். தமிழை எழுத்தெழுத்தாகக் கோத்துப் பழகினார். திருத்தமான தமிழையும் படைத்துத் தருவார் என்று கருதியே ஆண்டவன் அவரை அச்சுக் கோக்கும் தொழிலில் ஈடுபடுத்தினார் போலும்!''

''இன்பத் தமிழின் ஆழத்தையும் அகலத்தையும் அறிவு ஊற்றினையும் அறிந்தவர் ம.பொ.சி. 'தமிழ் நரம்பினை அறிந்தவர்' என்று சிலரைப் பற்றிச் சொல்வார்கள். அதைப்போல ம.பொ.சி. தமிழ் நாடி நரம்பினை அறிந்தவர்.

''ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வழிவழித் தோன்றி வாழ்ந்து வரும் புலவர் உலகம் காணாத புதிய செய்திகளை ம.பொ.சி. காண்கிறார்கள். பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற எங்களுக்குப் புரியாதவற்றையெல்லாம் அவர்கள் சொல்லு கிறார்கள். எல்லோரும் புரிந்துகொள்ளும் வகையில் எளிய தமிழில் சொல்லுகிறார்கள்.

''கல்லூரியில் படித்துப் புலமை பெறாத அவர் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பினை உணர்ந்திருக்கிறார். அவரது பேச் சிலே, உடையிலே, நடையிலே, தமிழ்ப் பண்பாட்டினைக் காண்கின்றோம். தமிழ்ப் பண்பாடு பற்றிப் பேசுமாறு பல்கலைக் கழகம் என்னை அழைத்தால் ம.பொ.சி.யை அவையில் நிறுத் திக் காட்டி, ''இவர்தான் தமிழ்ப் பண்பாடு'' என்று கூறுவேன்.''

தொழிலதிபர் மதுரை கருமுத்து தியாகராய செட்டியார், மணிவிழா மலரை வெளியிட்டுப் பேசினார். மலரின் முதல் பிரதியை ரூ.500 கொடுத்து வாங்கினார் அருட்செல்வர் ஏ.பி நாகராசன். ஆம்; பணமும் மனமும் ஒருங்கிணைந்த பண்பு அது. திரு. தியாகராயர் ''ஔவைப் பெருமாட்டியார், தொண்டை நன்னாடு சான்றோருடைத்து என்றார். ம.பொ.சி. வாழ்வதால், ஔவையின் வாக்கு இன்றும் வாழ்கிறது'' என்றார்.

கம்யூனிஸ்டுத் தலைவர் மணலி கந்தசாமி ''தமிழ் ஆட்சி மொழியாகவும், கல்லூரிகளில் பயிற்சி மொழியாகவும் நீதிமன் றங்களில் நிர்வாக மொழியாகவும் வருவதற்காக அன்பர் ம.பொ.சி. அவர்கள் ஆயுள் முழுவதும் பாடுபட வேண்டும்'' என்று கூறி வாழ்த்தினார்.

எனது மணிவிழாவில் பேசியவர்களிலே அண்ணா அவர் கள்தான் அதிக நேரம் எடுத்துக் கொண்டு மனந்திறந்து பேசி னார்.

> *''நான் பல காட்சிகளைக் கண்டிருக்கிறேன். இந்தக் காட்சியில் ஏற்படக்கூடிய களிப்பு இதற்கு முன்னாலே ஏற்பட்டதில்லை. இனி ஏற்படுமா என்பது ஐயப்பாடு.*

இதே இடத்திலே நான் பல திருமணங்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால், திருமண மண்டபம் என்றால், எப்படி இருக்க வேண்டுமென்பதை இன்றுதான் நான் காணுகின்றேன். நான் காதார பல விஷயங்களைக் கேட்டிருக்கிறேன். ஆனால், எவைகளைக் கேட்க வேண்டுமென்று நான் விரும்புகின்றேனோ அவைகளையெல்லாம் இன்றைய தினம்தான் கேட்கிறேன் — என்று நான் மட்டுமல்ல, நீங்கள் ஒவ்வொருவரும் சொல்லத்தக்க விதத்தில் இந்த விழா அமைந்திருக்கின்றது.

''அரசியலில் நான் மாறுபாடான கருத்து கொண்டவர்களிடத்தில் தைரியத்தோடும், உரிமையோடும், பற்றோடும், பாசத்தோடும், நெருங்கிய பழகத்தக்க ஒரு அரசியல் தலைவர் தமிழகத்தில் ம.பொ.சி. அவர்கள்தான் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அரசியலிலே நடிப்பு மிகுதியாக இருக்கின்ற இந்த நாட்டில் ஒருவிதமான நடிப்புமின்றி நட்பு ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு நாங்கள் இருவரும் முப்பது ஆண்டுகளாகப் பழகிக் கொண்டிருக்கிறோம்.

''எனக்கு இன்னும் அறுபதாண்டு ஆகாத காரணத்தினாலே நான் வாழ்த்துவதற்கு இல்லை. நான் அவருடைய வாழ்த்துக்களைப் பெற்றுப் போகக் கூடிய பருவத்திலே உள்ளவன். நான் மட்டுமல்ல; இந்த அவையிலே இருக்கின்றவர்களிலே நூற்றுக்கு எண்பது பேருக்குமேல் அவருடைய நல் வாழ்த்துக்களைப் பெறத்தக்க பருவத்திலே உள்ளவர்கள். அவர் நம்மை மட்டுமல்ல; நம்மையும் நாட்டையும் உலகத்திற்கு எடுத்துக் காட்டத்தக்க தமிழ் மொழியையும், அந்தத் தமிழ் மொழியினுடைய ஏற்றத்தையும், எதிர்காலத்தையும் வாழ்த்தத் தக்க உரிமை பெற்றவர்கள். அவரிடத்திலே வாழ்த்துகளைப் பெறுவதற்குத்தான் இங்கே நாம் விழா நடத்துகிறோமே தவிர, நம்முடைய வாழ்த்துகளை அவருக்குத் தருவதற்காக அல்ல. நம்முடைய நன்றியறிதலையும், வணக்கத்தையும், பாராட்டுதலையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்வதற்குத்தான் இந்த விழாவிலே நாம் கலந்து கொள்கிறோம்.''

மணிவிழாவில் அண்ணா அவர்களுக்கு முன் பேசிய திருமதி. சௌந்தரா கயிலாசம் அவர்கள், ''நாளை காலை ஐயா ம.பொ.சி. அவர்களுக்கு நடைபெறவிருக்கும் மணிவிழாவிற்கும் இன்று வந்தவர்கள் அனைவரும் தவறாமல் வந்துவிட வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்.

அண்ணா அவர்கள் தமது பேச்சின் இறுதியில் அதுபற்றிக் குறிப்பிடுகையில்,

''திருமதி சௌந்தரம் அம்மையார் அவர்கள் பேசுகிறபொழுது, காலையிலே நடக்கவிருக்கின்ற திருமணத்தைக் குறிப்பிட்டு, தாய்க்குலத்திற்கேவுரிய பெருமையோடு, நீங்களெல்லாம் வரவேண்டும், அந்தத் திருமுணத்தைக் காண என்று சொன்னார்கள். நான் அவர்களைப் பார்த்துக் கேட்க ஆசைப்படுகிறேன். 'இதை விடவும் சிறப்பாகவா அந்தத் திருமணம் இருக்கும்? ரொம்ப சிறப்பாக இதுவே இருக்கிறதே' என்று. என்றாலும், தமிழ்நாடு முழுவதும் நாளைய தினம் அவர்கள் திருமணக் காட்சியினைக் காண வரமுடியவில்லையென்றாலும், மனக் கண்ணாலே அனைவரும் கண்டு அவருக்கு, பெரியவர்கள் வாழ்த்துகளையும், மற்றவர்கள் பாராட்டுகளையும் வழங்குவார்கள். நாளைய தினம் நான் வெளியூருக்குச் செல்ல வேண்டியிருப்பதால் இன்றைய மணிவிழாக் காட்சியினையே ஒரு தடவைக்கு இரண்டு தடவையாகப் பார்த்துப் பார்த்து இதைப்போலத் தான் நாளைக்கும் இருக்குமென்று நானாக என் மனதுக்கு ஆறுதல் சொல்லி, ம.பொ.சி. அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

விழாவில் வரவேற்புரையையும் தலைமையுரையையும் அடுத்து, பேச்சாளர்களிலே முதன் முதலாக எனக்கு வாழ்த்துக் கூறியவர் இராஜாஜிதான்! எண்பத்தெட்டு வயதை அடைந்திருந்த நிலையில் அந்த முதுபெரும் தலைவர் — சுதந்திர பாரதத்தின் முதல் ஜனாதிபதியாக இருந்து கோலோச்சியவர் — தம் புனிதக் கரங்களால் எனக்குப் பொன்னாடை போர்த்தினார். அவர் வார்த்தையை அளந்து பேசிப் பழக்கப்பட்டவர்

— அதிலும், பிறரைப் புகழும் காலத்திலே சொற்களைக் குறை வாகப் பயன்படுத்துவதை விரதமாகக் கொண்டவர். கருமித்தன மல்ல; அது அவர் பண்பாடு!

என்னை வாழ்த்தும்போதும் தமது வழக்கப்படி சுருக்கமா கத்தான் பேசினார். ஆயினும், விரிவுரை கூறும் வகையில் சூத்திரம்போல் அமைந்திருந்தது அவரது பேச்சு. அவரே சுருக்க மாகப் பேசினார். அதையும் சுருக்கிச் சில பகுதிகளை மட்டும் இங்குத் தருகிறேன்.

''ம.பொ.சி. சிறுவராக இருந்தபோது காங்கிரசில் சேர்ந்தார். அந்தக் காலம் முதற்கொண்டே அவரை நான் அறிவேன். அப்போதே 'இவர் முன்னுக்கு வருவார்' என்று எண்ணினேன். அப்படியே வந்துவிட்டார். ம.பொ.சி. நல்ல வீரர்; நன்றாக உழைக்கக் கூடியவர். தேசபக்தி, தமிழ் பக்தி ஆகிய எல்லா பக்திகளும் கலந்த தலைவராக விளங்குகிறார்.

''அவருடைய பெற்றோர் 'ஞானம்' என்று அவருக் குப் பெயர் வைத்தது சரிதான். உண்மை ஞானமும் பெற்றி ருக்கிறார். ம.பொ.சி. இப்படி ஆவார் என்று எதிர்பார்த்து அவருடைய பெற்றோர் பெயர் வைக்கவில்லை. 'ஆக வேண்டும்' என்று ஆசீர்வாதமாகத்தான் வைத்தார்கள்; அது பலித்துவிட்டது. என்னுடைய அனுபவத்தையும் வயது முதிர்ச்சியையும் எண்ணி ம.பொ.சி. அவர்களை யும், அவருடைய மனைவியாரையும் வாழ்த்துகிறேன்.''

தேர்தல் வாடை!

எனது மணிவிழா மேடை அப்போது நெருங்கிக் கொண் டிருந்த பொதுத் தேர்தலுக்கு காங்கிரசுக்கு எதிராகக் கூட்டணி அமைக்கும் பிரச்சாரத்திற்கும் பயன்படுத்தப்பட்டது. ஆன்றவிந் தடங்கிய சான்றோராகிய ராஜாஜியே அதனை முதலில் தொடங்கி வைத்து விட்டாராதலால், பின்னால் பேசியவர்களும் தொடரலாயினர்.

இராஜாஜி என்னை வாழ்த்திய பின்னர், பொதுத் தேர்தல் பற்றி மறைமுகமாகக் குறிப்பிட்டார்.

''ம.பொ.சி.க்கு அறுபது வயது ஆகிறது. அதனால் நாளை சாந்தித் திருமணமும் நடைபெறப் போகிறது. வயதாகி விட்டதே, இனிமேல் வீட்டில் சுகமாக இருந்து விடலாம் என்று எண்ணிவிடக் கூடாது. இனிமேல்தான் முக்கியமான காரியம் தேசத்தில் நடைபெற வேண்டும். அதில் ம.பொ.சி. அவர்களும் கலந்து கொள்ள வேண்டும் (கூட்டத்தில் பலத்த சிரிப்பு). விஷயத்தை நான் சொல்லாமலே நீங்கள் தெரிந்து கொண்டு விட்டீர்கள். அதனால் விளக்கம் தேவையில்லை.

''தேசம் சுதந்தரமடைந்து விட்டது. ஆனால், மக்கள் சுதந்தரமடையவில்லை. அந்தச் சுதந்திரத்திற்காகவும் என்னுடன் சேர்ந்து வேலை செய்வார் ம.பொ.சி. (பலத்த கைதட்டல்).''

கலைஞரின் தீர்க்கதரிசனம்!

இராஜாஜியை அடுத்துப் பேசிய மதுரை கருமுத்து தியாகராய செட்டியார் கூறியதாவது:

''நாட்டில் எதிர்க்கட்சி வலுப்பெறாமையால், அரசு — நெறி பிறழ்ந்து, நிலைகுலைந்து அல்லற்படுகிறது.

''மக்களாட்சி மாண்புறுவதற்கு எதிர்க்கட்சி வலுப்பெற வேண்டியது இன்றியமையாததாகும். அதனால், எதிர்க்கட்சியை வலுப்படுத்தும் பணியிலும் சிலம்புச் செல்வர் ஈடுபடல் வேண்டும். வருகிற பொதுத் தேர்தலில் திரு. சிவஞானம் அவர்கள் போட்டியிட்டு வெற்றி பெறவேண்டும்.''

பின்னர் பேசிய கலைஞர் மு.கருணாநிதி, இன்னும் ஒருபடி மேலே போய், 'பொதுத் தேர்தலின் முடிவில் ஆளுங்கட்சி மாறும்' என்று சோதிடஞ் சொன்னார்.

''இங்கே பேசிய கருமுத்து தியாகராசன் அவர்கள், 'ம.பொ.சிவஞானம் மற்றவர்களுடன் ஒத்துழைத்து நல்ல எதிர்க்கட்சி அமைக்க வேண்டும்' என்றார். ம.பொ.சி. மற்றவர்களுடன் சேர்ந்து பணியாற்ற வேண்டியது நல்ல எதிர்க்கட்சி அமையவா? அல்லது ஆளுங்கட்சியை அமைக்கவா? அது இந்த மன்றத்தில் விவாதிக்க வேண்டிய பிரச்சினை அல்ல, கேள்வியல்ல. அதனால், கேள்விக் குறியாகவே விட்டு விடுகிறேன்.

''அவர் மற்றவர்களுடன் சேர்ந்து காரியமாற்றினால் நல்லது நடக்கும். 'நல்லது எங்கே நடைபெறவில்லையோ அங்கே நான் இருக்க மாட்டேன்' என்று கூறிவிட்டு, 'நல்லது எங்கே நடக்கிறதோ அங்கே நான் இருப்பேன்' என்று வந்தவர் ம.பொ.சிவஞானம்''

என்று கூறினார், 1967-இல் ஆளுங்கட்சி மாறியே தீரும் என்ற உறுதியோடு!

அண்ணாவின் அன்புரை!

தம்பிக்குப் பின் பேசிய அண்ணா அவர்களும் ஆளுங் கட்சி மாறுவது உறுதி என்ற எண்ணத்தை வெளியிட்டார்.

''ம.பொ.சி. பன்னெடுங்காலம் வாழவேண்டும். அவருடைய குறிக்கோள்கள் தமிழர் எல்லோருடைய குறிக்கோள்களாகவும் மாறியிருக்கின்றன. பல லட்சியங்களை அவர் நிறைவேற்றிக் கொடுக்கின்ற தன்மை ஏற்பட வேண்டும். அதற்குப் பிறகு தமிழரசு நல்லவிதத்தில் தமிழகத்திலே அமைகின்ற தன்மையில் அவருடைய தொண்டு நீடித்துக் கிடைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். அதற்கு ஏற்ற வகையில் அவரும் நானும் சேர்ந்து பணியாற்றத்தக்க வாய்ப்புகள் கிடைக்குமானால், அதை நான் மிகப் பெரிய பேறு என்று கருதுவேன்.

''நானும் அவரும் ஒன்றுபட்டுப் பணியாற்றுகின்ற பிரச்சினைகள் ஆயிரக்கணக்கிலே தமிழ்நாட்டில் இருந்தா

லும் வாய்ப்புகள் கிடைக்கவில்லை. ஆகையினால், ஒன்று பட்டுப் பணியாற்றத்தக்க பிரச்சினைகள் வருமானால், நிச்சயமாக ம.பொ.சி. அவர்கள் என்னைத் தம்முடைய நெருங்கிய நண்பர்கள் பட்டியலில் முதல் பெயராக இணைத்துக் கொள்ளலாம் என்று நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதைப் போலவே, ஒன்று பட்டுப் பணியாற்றத்தக்க பிரச்சினைகளில் நான் அவரிடத் திலே ஒன்றுபட்டிருப்பேன் என்பதையும் அவருக்குத் தெரி வித்துக் கொள்ளுகிறேன்.''

தேர்தல் களத்திலே காங்கிரசுக்கு எதிரணியிலே நானும் கழகமும் இணைந்துகொள்ள வேண்டுமென்று ராஜாஜியும், அண்ணாவும் அழைப்பு விடுத்துப் பேசியது என்னைத் தரும சங்கடத்தில் வைத்தது. மணிவிழாவின் வரவேற்புக் குழுத் தலைவரான நா. மகாலிங்கம் அப்போது காங்கிரஸ் எம்.எல்.ஏ. விழாத் தலைவர் தெ.பொ.மீ. கட்சிச் சார்பற்றவர் — மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர். மறுநாள் காலை எனக்கு நடைபெறும் மணவிழாவிலே கலந்து கொண்டு பேச காங்கிரஸ் மகாசபைத் தலைவர் திரு.கு. காமராசரும், அந்நாளைய முதல் வர் திரு.மீ. பக்தவத்சலனாரும் இசைந்திருந்தனர். ஆம்; கட்சிச் சார்பற்ற முறையில் நடந்த விழா அது. உண்மையில், அது நாள்வரை நான் பார்லிமெண்டரி அரசியலில் நேரடியாகக் கலவாதிருந்தேனாதலால், கட்சிப் பூசல்களுக்கு அப்பாற்பட்டவ னாகத்தான் இருந்தேன். இதனை உணர்ந்தே ராஜாஜி தமது பேச்சின் தொடக்கத்தில்,

''எல்லோரும் கலந்து நடத்தும் இந்தத் திருவிழா விலே மற்ற விஷயங்களை எப்படிப் பேசுவது? என் உள்ளத்திலே உள்ள விஷயங்களைப் பேசினால், இங் குள்ள சிலருக்குச் சரிப்படாது. சரிப்பட்டாலும், வெளிக்குக் காட்டிக் கொள்ள மாட்டார்கள். இப்படிப்பட்ட கூட்டத்தில் பேச எனக்குத் தெரியாது.''

என்று கூறிவிட்டு, 'ம.பொ.சி. இனி அரசியலில் என்னுடன் சேர்ந்து வேலை செய்வார்'' என்று நாட்டு மக்களுக்கு

ஒருதலைபட்சமாக அறிவித்தார். உண்மையில் சுதந்திராக் கட்சி தோன்றியதிலிருந்து அன்றுவரை அரசியலில் நாங்கள் ஒருவரோடொருவர் ''ஒத்துழையாமை''யைக் கடைப்பிடித்து வந்தோம்.

நன்றியுரை

வாழ்த்தியவர்களுக்கு நன்றி தெரிவித்து நான் பேசும் போது, ராஜாஜியும் அண்ணாவும் பிறரும் குறிப்பிட்ட ''பார்லிமெண்டரி அரசியல்'' பற்றியும் பொதுப்படையாக என் கருத்தை வெளியிட்டேன். அது வருமாறு:

''அரசியலில் சில நேரங்களில் பிற தலைவர்களோடு சேர்ந்து செயல்படுவதில் நான் தயக்கம் காட்டலாம். அது என் குறையன்று; நான் பிறந்த குடும்பம், வளர்ந்த முறை ஆகியவற்றையொட்டி, எனக்கென ஒரு சூழ்நிலை அமைந்துவிட்டது. ஆம்; மற்றவர்களுக்குள்ள சூழ்நிலை வேறு. எனக்குள்ள சூழ்நிலை வேறு. ஆகவே, எனக்குள்ள சூழ்நிலைக்கேற்ப நான் செயல்பட்டு வருகிறேன்.

''நான் அரசியலிலே தாமதப்பட்டுச் செயலாற்றுபவனாக மற்றவர்கள் கருதலாம். ஆனால், ஒரு காரியத்தை அதற்குரிய நேரத்தில் செய்ய நான் தவறியதே இல்லை. ஒரு செயலைச் செய்ய சந்தர்ப்பம் நிர்ப்பந்திக்கும்போது — அது சரியென்றும் எனக்குத் தோன்றினால் — அந்த நிர்ப்பந்தத்திலிருந்து சுயநலம் காரணமாக தப்பித்துக் கொள்ள நான் முயன்றதே இல்லை. 1954-இல் காங்கிரசிலிருந்து வெளியேற சந்தர்ப்பம் என்னை நிர்ப்பந்தித்தபோது, அதனை ஏற்றேன். நான் அப்போது காங்கிரசிலிருந்து வெளியேறத் தவறியிருந்தால், தமிழகத்தின் தென் கோடியில் ஐந்து தாலுக்காக்களையும் வடகோடியில் ஒரு தாலுக்காவையும் தமிழினத்தார் இழந்திருப்பார்கள்.

''இந்த நாடு சுதந்திரம் பெறப் பாடுபட்டேன். பெற்ற சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமானால், எதேச்சாதிகாரம் ஒழிந்து, ஜனநாயகம் தலையெடுக்க வேண்டும். அந்தப் பணியிலும் நான் முன்னின்று உழைப்பேன். விளைவுகளைப் பற்றிக் கவலைப்பட மாட்டேன். இது உறுதி.''

மணிவிழாக் குழு, மலர்க்குழு ஆகியவற்றின் சார்பிலே நாற்பதாயிரம் ரூபாய் கொண்ட பணமுடிப்பு எனக்கு வழங்கப் பட்டது. எனது பொன்விழாவின் போது ரூபாய் முப்பத்து மூவாயிரம வழங்கப்பட்டது. அதனை வடக்கெல்லைக் கிளர்ச் சிக்காகச் செலவழித்த ஒரு சிறு தொகை போக - அப்படியே எனது மக்களுக்குப் பயன்படக்கூடிய சொத்தாக மாற்றினேன். ஆனால், மணிவிழாவில் வழங்கப்பட்ட தொகையில் பெரும் பகுதியை பொதுப்பணிக்கே — குறிப்பாக, கழகப் பணிக்கே பயன்படுத்தினேன்.

அறுபதாங் கலியாணம்

மணிவிழா மலர் மிகவும் அருமையாகத் தயாரிக்கப்பட் டிருந்தது. பேராசிரியர் ம.ரா.போ. குருசாமி, திரு.வெ. புரு ஷோத்தமன் ஆகியோர் இரவு பகலாக உழைத்துத் தயாரித்த மலர் அது.

மணிவிழாக் கூட்டம் முடிந்த மறுநாள் — அதாவது, நான் பிறந்த நாள் அன்று காலை எனக்கு மணிவிழா நடைபெற்றது. ஆம்; வைதிக முறைப்படிதான்! இந்த மணவிழாவுக்கு வடமொ ழியில் 'சாந்தி விழா' என்று பெயர் வழங்கப்படுகிறது. அறுப துக்கு மேல் உயிருக்குக் கண்டம் உண்டாம்! அதனைச் சாந்திச் சடங்குகளால் கழித்து மணி விழாத் தம்பதிகள் நிறைவாழ்வு வாழவே 'சஷ்டியபத பூர்த்தி' நடத்தப்படுகிறதாம்! என் மனை வியும் சுற்றத்தாரும் சாந்திச் சடங்குகளைக் கைவிடப் பயந்தனர். அதனால், அவர்கள் விருப்பப்படி மணச் சடங்குகள் நடந்தன.

நான் திருமதி திலோத்தமையை மணந்தபோதும் சரி; அவள் மறைந்தபின், தற்போதுள்ள திருமதி. இராசேசுவரியை மணந்த போதும் சரி; என் பெற்றோர் செய்து வைத்த அந்த இரண்டு திருமணங்களும் ஏழ்மை காரணமாக பொம்மைக் கல்யாணம்போல் நடந்தன. ஆனால், எனது மணிவிழாத் திரும ணம் நகரறிய, நாடறிய நடைபெற்றது. என் மனைவியின் கழுத்திலுள்ள — முப்பதாண்டுகட்கு முன்பு நான் கட்டிய பழைய தாலியோடு, புதிய மணிவிழாத் தாலியொன்றையும் நான் அணிவித்தபோது, மதச் சடங்காக மங்கல ஒலி எழுந்தது;

நான் பெற்ற மக்கள் கண்டுகளித்தனர்; நான் வளர்த்த அரசியல் மக்களான தமிழரசுக் கழகத் தோழர்களெல்லாம் 'ம.பொ.சி. தம்பதிகள் வாழ்க', 'மணிவிழாத் தம்பதிகள் வாழ்க' என இதயக்களிப்போடு வாழ்த்தினர். வயதில் என்னினும் மூத்தவர்களான ராஜாஜி, பக்தவத்சலனார், காமராசர் ஆகிய சான்றோர்கள் மலர் தூவி ஆசி வழங்கினர்.

அறுபதுக்குக் குறைந்த வயதுடைய தம்பதிகள் மணிவிழாத் தம்பதிகளின் காலில் விழுந்து வணங்கி, அவர்களிடம் ஆசி பெறுவது மரபு! அந்த மரபுப்படி, கணக்கற்ற தம்பதிகள் அணி அணியாக வந்து வணங்கியது என்னைச் சங்கடத்தில் ஆழ்த்தியது. ஏனெனில், மனிதன் காலில் மனிதன் விழுந்து வணங்குவது எனக்குப் பிடிக்காது. ஒருமுறை நான் காந்தியடிகள் காலில் விழுந்து வணங்கியபோது, அவரே அதை விரும்பாமல் என்னைத் தடுத்தார் என்றால், நான் எம்மாத்திரம்? ஆனால், என் மணிவிழாவன்று சுமார் இரண்டு மணி நேரம் என்னை வணங்குவோரை வாழ்த்தி வாழ்த்திச் சோர்ந்து போனேன். அதனைத் தவிர்க்க முடியவில்லை. கிட்டத்தட்ட அறுபதைத் தொட்டுவிட்டவர்கள் - என்னால் மதிக்கப்படுகிறவர்கள் என் காலைத் தொட்டு வணங்கியபோதுதான் நான் மிகவும் சங்கடப்பட்டேன். ஆனால், என்னைப் போலல்லாமல் என் மனைவி எங்களை வணங்கியவர்களையெல்லாம் சங்கடப்படாமல், சோர்வடையாமல் வாழ்த்தி மகிழ்ந்தாள். அவள் கொள்கை எதற்கும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாதவள்! தாய்மை உள்ளமும் அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

முதல் நாளன்று மாலை மணி விழாவில் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசிவிட்டு சென்ற மூதறிஞர் ராஜாஜி அவர்கள் மறுநாள் காலை மணிவிழாவிற்கும் வந்திருந்து என் மனைவி கழுத்தில் நான் மங்கல நாண் அணிவிப்பதைக் கண்டு களித்தார். அவரே விரும்பி ஒலிபெருக்கியைத் தன்னருகே கொண்டு வரச் செய்து இரண்டாவது முறையாகவும் வாழ்த்திப் பேசினார். பேசியதோடு, மணிவிழாவில் கலந்து கொண்டவர்களுக்கெல்லாம் என் சார்பில் நன்றி செலுத்தும் பொறுப்பையும் தாமே மேற்கொண்டார். அவரது முழுப் பேச்சு வருமாறு:

''எல்லோரும் ஒன்று கூடி இருந்து திருவிழாவை நன்றாக நடத்தி முடித்ததற்காக ம.பொ.சி.யின் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றி செலுத்துகின்றேன்.

''நேற்று நடந்த விழாவிலும் பேசினேன். சொன்ன தையே திரும்பிச் சொன்னால் சொல்லின் மதிப்பு குறைந்து விடும்.

''ஒரு நல்ல மகானுக்கு மணி விழா நடத்துகிறோம். இது நமக்கும் நன்மை தருவதாகும்.

''இந்த விழா எனக்கு நடத்தப்படுவதாகவே நான் நினைத்துக் கொள்ளுகிறேன். மணி விழாத் தம்பதிகளுக்கு என் வாழ்த்துகள்.''

காங்கிரசுக்கு எதிரணியாரால் நான் முற்றுகையிடப்பட் டிருந்த சூழ்நிலையைப் பொருட்படுத்தாதவராய், முதல் நாள் நிகழ்த்தப்பெற்ற மணிவிழாச் சொற்பொழிவுகளால் பாதிக்கப் படாத மனத்தினராய் திரு. காமராசரும் என் மணிவிழாவில் மிகுந்தப் பெருந்தன்மையுடன் கலந்து கொண்ட எனக்கு வாழ்த் துக் கூறினார். அது வருமாறு:

''மதிப்பிற்குரிய ம.பொ.சி. அவர்கள், இன்று நேற் றல்ல; பல ஆண்டுகளாக எனக்கு நண்பர். நாட்டுக்குச் சிறந்த முறையில் தொண்டாற்றி வருபவர். அவருடைய மணிவிழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்ததற் காக மகிழ்ச்சியடைகிறேன். தேச நன்மைக்காகப் பல துன்பங்களை ஏற்று, தொடர்ந்து பல ஆண்டுகளாக நல்ல தொண்டுகள் செய்து வருகிறார்.

''எதிர்காலத்தில் தமது தொண்டுகளை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது அவருக்குத் தெரியும். அதைப்பற்றி நான் எதுவும் சொல்லத் தேவை யில்லை.

''அவருக்கும் அவரது மனைவியாருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.''

முதல்வர் பொறுப்பிலிருந்த திரு. மீ. பக்தவத்சலனா ரவர்கள் பேசியது வருமாறு:

''தமிழ்நாட்டில் திரு. ம.பொ.சி. மிகவும் உயர்வான தொரு தனியிடம் பெற்றிருக்கிறார். அது, அவரது ஆற்றலை வெளிப்படுத்துகின்றது. அவருக்கும் அவருடைய மனைவிக்கும் பரிபூரண அருள் பாலிக்க வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.''

மனக்குறை மறைந்தது!

என்னினும் வயதில் மூத்த முப்பெருந் தலைவர்கள் எனது மணிவிழாவுக்கு வந்திருந்தது — குறிப்பாக, மூதறிஞர் ராஜாஜியும் காமராசரும் கலந்து கொண்டது 1956-இல் எனக்குப் பொன் விழா நடந்தபோது ஏற்பட்ட மனக்குறையைப் போக்கி விட்டது. ஆம்; பொன் விழாவில் கலந்து கொள்ளவோ, வாழ்த்துச் செய்தி அனுப்பவோ தவறிவிட்டார்கள் ராஜாஜியும் காராசரும். இம்மாதிரி குறைபாடுகளில் சில நேரங்களில் அவர்களிடையே வியக்கத்தக்க வகையில் ஒருமைப்பாடு ஏற்படுவதுண்டு. ஆனால், போற்றப்பட வேண்டியவர்களால் — போற்றக் கடமைப்பட்டவர்களால் புறக்கணிக்கப்படும்போது, நான் பொறுமையிழப்பதில்லை. அவர்களை வெறுப்பதுமில்லை. ஏனெனில், நாட்டுக்குத் தொண்டாற்றுவது பிறர் போற்றுவதற்காக அல்ல, பிறவியெடுத்ததனால் ஏற்பட்ட கடமை என்பதற்காகத்தான்! இந்தப் பண்பாட்டில் உறுதியாக ஊன்றி நின்றால் புறக்கணித்தவர்களும் போற்றுகின்ற காலம் வந்தே தீரும். ஆனால், இந்நாளில் அரசியலில் ஈடுபடும் இளைஞர்களிடம் இந்தப் பண்பு வெளிப் படுவதில்லை.

போற்றுதலை எதிர்பார்த்துத் தொண்டாற்றுவோர், போற்ற வேண்டிய பெரியவர்களால் சரியாகவோ, தவறாகவோ புறக்கணிக்கப்படும்போது, அவர்களைத் தூற்றுகிற தவறுக்கு இரையாகி, தங்கள் எதிர்காலத்தையே பாழாக்கிக் கொள்ளுகின்றனர்.

தல யாத்திரை!

சென்னையில் எனது மணிவிழா முடிந்ததும் என் குடும்பத்தாருடன் மோட்டாரில் ''தல யாத்திரை'' புறப்பட்டேன். இளமையில் நடந்த திருமணத்தின்போது காதற் சுவையை அனுபவிக்கத் தேனிலவு சென்றறியேன்! ஆனால், முதுமையில் நடந்த மணிவிழாத் திருமணத்திற்குப் பின்னர், என் மனைவியும் நானுமாக எங்கள் மக்கள் செல்வங்களுடன் ''திருக்கோயில்'' யாத்திரை புறப்பட்டோம்.

எங்கள் தல யாத்திரை சமயபுரம் மாரியம்மன் கோயிலில் தொடங்கி, தமிழரசுக் கழகத்தாரின் உழைப்பால் மீட்கப்பட்ட தமிழகத்தின் தென்கோடி எல்லைத் தெய்வமான குமரியம்மன் கோயிலில் முடிந்தது. இடையிலே திருவரங்கம், திருவானைக்காவல், வயலூர், மதுரை, பழனி, தூத்துக்குடி, திருச்செந்தூர், திருக்குற்றாலம், தென்காசி, இலஞ்சி, சுசீந்திரம் ஆகிய தலங்களுக்கெல்லாம் சென்று அங்கெல்லாம் உள்ள திருக்கோயில்களில் இறை வழிபாடு நடத்தினோம். அந்தக் கோயில்களின் அறங்காவல் குழுவினரும், உள்ளூர் தமிழரசுக் கழகத் தோழர்களும் எங்களைச் சிறந்த முறையில் வரவேற்று இறைவழிபாடு செய்வித்ததோடு, விருந்துபசாரங்களும், பாராட்டுப் பொதுக் கூட்டங்களும் நடத்தினர்.

மதுரை நகரில் பாரதி புத்தக நிலைய உரிமையாளர் திரு.சோ. சாமிநாதன், திருமதி ரகுபதி ஆகிய தம்பதிகள் இரவு விருந்தொன்று அளித்தனர். நகரிலுள்ள அனைத்துக் கட்சிப் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

தல யாத்திரை முடிந்ததும் திருக்குற்றாலத்திலும் திரு. கருமுத்து தியாகராச செட்டியாரின் 'சேதுகாசில் மாளிகை'யில் ஒரு வாரம் தங்கி, சாரல் பருவத்தின் இன்பத்தை அனுபவித்தோம். இதற்கப்புறம் ஆண்டுதோறும் சாரல் பருவத்தில் என்னுடன் திருக்குற்றாலம் வருவதை என் மனைவி வழக்கமாகக் கொண்டு விட்டாள். எனக்கும் திருமதி இராசேசுவரிக்கும் திருமணமான பின்னர் முப்பது ஆண்டுகள் கழித்து இப்போது தான் முதன் முதலாக நாங்கள் சேர்ந்து நெடுந்தூரம் பயணம் செய்தோம்.

இலங்கையிலும் மணிவிழா

தமிழ்நாட்டில் தலயாத்திரை செய்துவிட்டு சென்னை திரும்பிய பத்து நாட்களுக்குப் பின்னர் இலங்கைக்குச் சென்றேன். கொழும்பு ம.பொ.சி. மன்றத்தாரும், திருகோணமலை இளைஞர் அருள்நெறி மன்றத்தாரும் எனது மணிவிழாவைக் கொண்டாடும் பொருட்டு என்னை அழைத்திருந்தனர். அந்த அழைப்பை ஏற்று சென்னை மாவட்ட த.அ.க. தலைவர் திரு.அ. கோபாலகிருஷ்ணன் அவர்களுடன் இலங்கை சென்றேன். தமிழர் பரவலாக வாழும் மலைநாடு முழுவதும் சுற்றுலா செய்தேன். கொழும்பு வணிகர் திரு. சோமசுந்தரம் அவர்கள் எனது சுற்றுலாவுக்காகத் தமது மோட்டாரை உதவி அதனை பாதுகாப்புடன் செலுத்துவதற்காகத் தம்முடைய அருமைத் தம்பி ராசா சண்முகத்தையும் அனுப்பியிருந்தார்.

திரு. கோபாலகிருஷ்ணன் அவர்கள், கண்டிராக்ட் தொழில் புரிந்து, நாணயமாக வாழக்கூடிய நண்பர். எனக்கும் என் கழகத்திற்கும் கிடைத்த ஒழுக்கமிக்க தோழர்களிலே இவரும் ஒருவர். நான் அயல் மாநிலமோ, அயல்நாடோ சென்றால், நம்பிக்கையான துணை எனக்குத் தேவைப்படுகிறது. அன்பர் அ.கோ. அத்தகைய நம்பிக்கையான தோழராக என்னுடன் இலங்கைக்கு வந்து எனது மெய்க்காவலராக இருந்து எனது உடல் நலத்தைக் கவனித்து வந்தார்.

கொழும்பையடுத்து பதுளை, அட்டன், கண்டி, நுவரேலியா, திருகோணமலை ஆகிய ஊர்களுக்கெல்லாம் சென்று அங்கெல்லாம் நடைபெற்ற மணிவிழாக் கூட்டங்களிலும், விருந்துபசாரங்களிலும் கலந்து மகிழ்ந்தேன். பதுளை நகரில் இரண்டு நாட்கள் தங்கி வேறு பல நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டேன். பதுளை மேயர் தலைமையில் நடைபெற்ற விருந்து இன்னமும் எனது நினைவில் பசுமையாக இருக்கிறது. அங்கு தங்கியிருந்த நாட்களில் ஓய்வு பெற்ற ஓவர்சியர் அருமை நண்பர் சிவசண்முகம் பிள்ளையவர்கள் குடும்பத்தார் தங்கள் விருந்தினனாக ஏற்று என்னை உபசரித்த அருமை என்னால் என்றும் மறக்க இயலாததாகும்.

அச்சுத் தொழிலாளியாக இருந்து அரசியல்வாதியாக வளர்ந்த என்னை வர்க்க உரிமை பாராட்டி மலைநாட்டுத் தொழிலாளத் தமிழர்களும் பல்வேறு இடங்களில் வரவேற்றுச் சிறப்பு செய்தனர். குறிப்பாக, நாரங்கொல்லை என்னும் ஊரில் மலைப் பிரதேசத் தொழிலாளர்கள் நடத்திய பாராட்டுக் கூட்டம் சிறப்புமிக்கதாகும். பதுளை நிகழ்ச்சிகளையெல்லாம் திரு. பால சுப்பிரமணியம் என்பவர் சிறப்பாக நடத்தி வைத்தார்.

கண்டி நகரில் 'செய்தி' ஆசிரியர் திரு. நாகலிங்கம், என்பால் பேரன்பு வைத்துள்ள நண்பராவார். அவர், தமது சொந்தப் பொறுப்பிலேயே பாராட்டுக் கூட்டம் நடத்தி எனக்குச் சிறப்பு செய்தார். இந்தியாவின் உதவித் தூதுவர் திரு. சீனிவா சன் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

திருகோணமலையில் இளைஞர் அருள்நெறி மன்றத்தார் நடத்திய விழாவில் வெள்ளம்போல் தமிழர் கூட்டத்தைக் கண் டேன். அதன் நிர்வாகியான சண்முக ராசா தமது ஆர்வம் முழுவதையும் பயன்படுத்தி எனது மணிவிழாவை நடத்தினார்.

கொழும்பு நகரில் விழா

கொழும்பு நகரில் பம்பலப்பட்டியா சரசுவதி மண்டபத்தில் ம.பொ.சி. மன்றத்தார் மன்றத் தலைவர் எம்.பி. சாரதி தலைமை யில் நடத்திய மணிவிழாவில் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம் எம்.பி., இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஜீஸ், இலங்கை தி.மு.க. தலைவர் திரு. மணவைத் தம்பி ஆகியோர் உள்பட அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டு வாழ்த்து கூறினர். கொழும்பு நகரில் ஜிந்துப்பட்டி விவேகானந் தர் சங்கக் கட்டிடத்தில், கொழும்பு தமிழ்ச் சங்கம், விவேகானந் தர் சபை, இலக்கிய மன்றம் ஆகியவற்றின் சார்பில் நடந்த சிறப்புக் கூட்டத்திலும் நான் பாராட்டப் பெற்றேன். கொழும்பு நகரில் நடைபெற்ற கூட்டங்களிலே இதுவே மிகப் பெரியதாகும்.

யாழ்ப்பாணத் தமிழர்கள் வைதிகச் சைவர்களாவர். மணி விழா நாயகனாக நான் கொழும்பு சென்றதால் என்னிடம்

வாழ்த்து பெறுவதற்கென்றே இந்தக் கூட்டத்திற்குத் தம்பதிகள் தம்பதிகளாக ஏராளமான குடும்பத்தினர் வந்திருந்தனர். கூட்டத்தின் முடிவிலே மணிவிழாத் தலைவனை வணங்கும் சடங்கு நடைபெற்றபோது நான் திண்டாடித் திகைத்துப் போனேன். மக்களுடைய முற்றுகையிலிருந்து மீட்டு, சிறிது நேரம் விவேகானந்த சபைக் கட்டிடத்துக்குள்ளே என்னைச் சிறை வைத்துவிட்டனர் நண்பர்கள்.

ஜிந்துப்பட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் நடை பெற்ற கூட்டத்தில் ''சுத்த சன்மார்க்கம்'' பற்றிப் பேசினேன். வெள்ளம்போல் மக்கள் திரண்டு வள்ளலார் பற்றிய பேச்சைக் கேட்ட காட்சி, கொழும்பு நகர நிகழ்ச்சிகளுக்கே சிகரமாக அமைந்தது. கொழும்பு சட்டக் கல்லூரியிலும் மாணவ மணிகள் வரவேற்பளித்தனர்.

எனது இலங்கைச் சுற்றுலா சூலை 29 முதல் ஆகஸ்டு 8 வரை பத்து நாட்கள் நிகழ்ந்தது. மலைநாட்டிலுள்ள இலங்கைப் பழங்குடித் தமிழர்களும், இந்திய வம்சாவளித் தமிழர்களும் தங்களுக்குள்ள இனப்பற்று — மொழிப் பற்று காரணமாக என்பால் அன்பு காட்டிப் பலவகையிலும் எனக்குச் சிறப்பு செய்தனர்.

கொழும்பை விட்டுப் புறப்படும் நாளிலே திரு. இரத்தின சபாபதி, 'செய்தி' ஆசிரியர் நாகலிங்கம் ஆகியோர் நகரிலுள்ள தமிழ்ப் பிரமுகர்களை எல்லாம் கூட்டி வைத்துச் சிறந்த முறை யில் விருந்தளித்து உபசரித்து வழியனுப்பினர்.

எனது மணிவிழா தமிழ் நாட்டில் நூற்றுக்கணக்கான நகரங் களிலும் கிராமங்களிலும் நன்கு நடத்தப்பட்டது. தமிழரசுக் கழகக் கிளைகள் இதிலே மிகுந்த ஆர்வம் காட்டின. கழகத் தோடு தொடர்பற்ற இலக்கிய மன்றங்களும் போட்டியிட்டன.

அறுபதாண்டுக் கால வாழ்விலே போராட்டங்களையே சந்தித்துப் பழகிவிட்ட எனக்குத் தொடர்ந்து ஓராண்டுக் காலம் நடைபெற்ற எனது மணிவிழாவானது களைப்பாற்றுவதாக இருந்ததெனலாம்.

1967 பொதுத் தேர்தல்

1966-ஆம் ஆண்டு டிசம்பர் 30, 31 தேதிகளில் சென்னை விருகம்பாக்கத்தில் தி.மு.கழகத்தின் சிறப்பு மாநாடு நடந்தது. 1967 பிப்ரவரியில் நடைபெறவிருந்த நாடாளுமன்ற — சட்டமன்றப் பொதுத் தேர்தலை முன்னிட்டே இந்தச் சிறப்பு மாநாடு தி.மு.க.வால் நடத்தப்பட்டது.

அதுவரை நான் தி.மு.க. மேடையில் பேசியதே இல்லை. பேச அழைப்பு கிடைத்த நேரங்களிலும் அதைத் தவிர்த்து வந்தேன். முதன் முதலாக நான் தி.மு.க. மேடையில் பேசியது 31.12.66-இல் விருகம்பாக்கம் தி.மு.க. மாநாட்டில் ஆகும். சுதந்திராக் கட்சியின் அமைப்புத் தலைவர் மூதறிஞர் ராஜாஜி, முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் இசுமாயில் சாயபு ஆகியோரும் அந்த மாநாட்டில் பேசினர். அவர்கள் தி.மு.க. மேடைக்குப் பழையவர்கள்; நான் புதியவன்!

தேர்தல் கூட்டணி

விருகம்பாக்கம் மாநாட்டுக்கு முன்பே தி.மு.க. சுதந்தரா, முஸ்லிம் லீக், பார்வர்டு பிளாக், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சி, பிரஜா சோசலிஸ்டுக் கட்சி ஆகிய ஆறு கட்சிகள் இணைந்த 'கூட்டணி' அமைந்துவிட்டது. ஏழாவது கட்சியாக தமிழரசுக் கழகம் தி.மு.க. கூட்டணியில் சேர்ந்திருக்கிறதென்ற செய்தி முதன் முதல் விருகம்பாக்கம் மாநாட்டு மேடையில் எனது அனுமதியோடு மாநாட்டுத் தலைவர் அண்ணா அவர்க ளால் அறிவிக்கப்பட்டது. அத்துடனன்றி, கூட்டணி சார்பில் சென்னை நகரில் தியாகராய நகர் தொகுதியும், செங்கற்பட்டு மாவட்டத்தில் திருத்தணித் தொகுதியும் தமிழரசுக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதென்ற தகவலையும் மாநாட்டு மேடையில் அண்ணா அறிவித்தார். தியாகராய நகர் தொகுதியில் த.அ.க. சார்பில் நான் போட்டியிடுவேன் என்ற தகவலையும் அவர்

அறிவித்தார். இந்த அறிவிப்புகளின்போது லட்சக்கணக்கில் மக்கள் குழுமியிருந்து அந்த மாநாட்டிலே வெளிப்பட்ட மகிழ்ச்சி ஆரவாரம் வருணனைக்கு எட்டாததாகும்.

தமிழரசுக் கழகம் தி.மு.க.வுடன் தொகுதி உடன்பாடு கண்டதோ, நான் முதன் முதல் தி.மு.க. மேடையில் பேசியதோ அந்தக் கழகம் அதுவரை தான் வற்புறுத்தி வந்த திராவிடத் தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு, தமிழரசுக் கழகத்தின் மாநிலச் சுயாட்சிக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பின்னர் தான் என்பதனை இங்கு நான் நினைப்பூட்ட வேண்டும். அதனை நான் இங்கு நினைவூட்டுவது தற்பெருமைக்காக அல்ல; த.அ.க. வுக்கும் தி.மு.க.வுக்கும் ஏற்பட்ட உறவானது தொகுதி உடன் பாட்டையொட்டியது மட்டுமல்ல; கொள்கை உடன்பாட்டையும் ஒட்டியதாகும் என்பதனை உணர்த்துவதற்காகத்தான்.

"ம.பொ.சி. நமது சொத்து!"

ஏழு கட்சிகள் கொண்ட கூட்டணியானது கொள்கை அல்லது பொது வேலைத் திட்ட அடிப்படையின்பேரில் அமைக் கப் படவில்லை. தொகுதிகளைப் பங்கிட்டுக் கொள்ளும் ஒரே குறிக்கோளுடன் தான் திமு.க. — சுதந்திரா — கம்யூனிஸ்டு — பி.சோ. — பார்வர்டு பிளாக் — முஸ்லிம் லீக் கட்சி களிடையே கூட்டுறவு ஏற்பட்டது. ஆம்; ''கூட்டுறவு''க்குக் ''கூட்டணி'' என்று பெயர் வழங்கப்பட்டது.

எனக்குத் தொகுதி ஒதுக்குவதிலே தி.மு.க. தலைவர் அண்ணாவுக்குச் சங்கடமிருந்தது. அவருடைய கழகத்தாரின் கோரிக்கையைப் புறக்கணித்து தி.நகர் தொகுதியை எனக்கு ஒதுக்க அண்ணா விரும்பினார். முதலில் அதை ஏற்கத் தயங்கி னேன். திருவல்லிக்கேணித் தொகுதியையே நான் விரும்பி னேன். எனக்குத் தொகுதி ஒதுக்கும் பிரச்சினை இழுபறியி லிருந்தபோது, ராஜாஜி தலையிட்டு,

''ம.பொ.சி. நமக்குக் கிடைத்துள்ள சொத்து. அவருக்கு எப்படியும் சென்னை நகரில் ஒரு தொகுதியைக் கொடுத்தாக வேண்டும். எந்தத் தொகுதி என்பதை

அவருடன் பேசி முடிவு செய்து கொள்ளட்டும். தி.மு.க. — சுதந்தரா தேர்தல் உடன்பாட்டுக்கு உள்பட்ட விஷயம் இது''

என்று தம் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் மூலம் ராஜாஜி அண்ணாவுக்குச் செய்தி அனுப்பினார்.

என் விஷயத்தில் ராஜாஜி காட்டிய அக்கறை பற்றி 8.12.66-இல் சென்னை கண்ணப்பர் திடலில் நடந்த ராஜாஜி பிறந்த நாள் கூட்டத்தில் அண்ணா பேசியபோது மறைமுகமாகக் குறிப்பிடுகையில்,

''ராஜாஜி மீது நண்பர் ம.பொ.சி. பெற்றுள்ள மிகுந்த செல்வாக்கு கண்டு நான் பொறாமைப்படுகிறேன்''

என்று கூறினார். உண்மையில் எனக்குத் தொகுதி ஒதுக்குவதில் அண்ணாவும் மிகுந்த அக்கறை காட்டினார்.

தி.நகர் தொகுதியில் போட்டியிட நான் இசைவு தெரிவித்த பின்னர், எனக்கு அந்தத் தொகுதியை ஒதுக்குவதில் தமக்கு ஏற்பட்ட சங்கடம் பற்றி அண்ணா கூறியதாவது:

''ம.பொ.சி.க்குத் தியாகராயநகர் தொகுதியை விட்டுக் கொடுத்த திரு.டி.வி. நாராயணசாமி, திரு. சடகோபன் எம்.சி., முன்னாள் மேயர் எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகிய மூவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

''அப்படி விட்டுக் கொடுக்க அவர்கள் மறுத்திருந்தால் நான் நினைத்திருந்ததை இப்போது உங்களிடம் சொல்லுகிறேன்.

''கலைஞர் கருணாநிதி சைதாப்பேட்டைத் தொகுதியில் போட்டியிடாமல், அங்கு ம.பொ.சி.யை நிற்கச் செய்து, கருணாநிதியை, தென் சென்னைப் பாராளுமன்றத் தொகுதியில் நிற்க வைத்து, நான் தேர்தலில் எல்லோருக்கும் வேலை செய்யலாம் என்று இருந்தேன்.''

தி.நகர் தொகுதியில் நானும் தணிகைத் தொகுதியில் வேலூர் திரு.வி.கே. குப்புசாமியும், த.அ.க. வேட்பாளராகப் போட்டியிட்டோம். நான் போட்டியிட்ட தி.நகர் தொகுதியைத் தன்னகத்தே கொண்டுள்ள தென் சென்னைத் தொகுதியில் நாடாளு மன்றத்திற்குத் தி.மு.க. சார்பில் அண்ணா போட்டி யிட்டார்.

தி.நகர் தொகுதியில் எனக்கும் அண்ணாவுக்குமான தேர்தல் அலுவலகத்தை மூதறிஞர் ராஜாஜி அவர்கள் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியது இது:

''நான் திறந்து வைப்பது என்னுடைய நண்பர் ம.பொ.சி.யின் தேர்தல் அலுவலகம் என்பது சம்பிரதாய வார்த்தைதான். உண்மையில் எனது இருதயத்தையே இங்கு திறந்து வைக்கிறேன். அண்ணாவுக்கும் ம.பொ.சி.க்கும் என் வாழ்த்துகள். அவர்கள் வெற்றி பெறுவார்கள்.''

அண்ணாவும் தேர்தல் அலுவலகத் திறப்பு விழாவில் பேசினார். அவர் ''ம.பொ.சி.யின் முகத்தில் என் முகத்தைப் பாருங்கள்'' என்று தம் கழகத் தோழர்களுக்கும் ஆதரவாளர் களுக்கும் கூறினார்.

அண்ணாவின் தேர்தல் பிரச்சாரம்!

எனது தொகுதியில் சைதை வட்டத்தில் முதன் முதலாகத் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்து அண்ணா பேசினார். அவரது பேச்சின் சில பகுதிகள் வருமாறு:

''ம.பொ.சி. அவர்கள், காங்கிரஸ் நல்ல நிலையில் இருந்த நேரத்திலே அதிலிருந்து உழைத்தவர். அத்தகைய தமிழர் தலைவருக்கு இன்று ஆதரவு தேட வந்துள்ளதை நான் பெற்ற மாபெரும் பேறாகக் கருதுகிறேன்.

''சுயராஜ்யம் கோரி ஆகஸ்டுப் புரட்சி நடைபெற்ற காலத்திலே 'அத்தகைய போராட்டம் நியாயமானது. ஆகவே, நாமும் கலந்து கொள்ள வேண்டும்' என்று நான் பெரியாரிடம் வாதாடிய நேரத்தில், அதை ஒப்ப மறுத்தவர் பெரியார்.

''வெள்ளையன் இந்த நாட்டை விட்டுப் போகவா கோட்டை கட்டினான்? பாங்கி அமைத்தான்? இரயில், ரோடு போட்டிருக்கிறான்? பீரங்கியும் விமானமும் கொண்டு வந்திருக்கிறான்?' என்று பெரியார் வாதாடினார். ஆனால், அத்தகைய ஆகஸ்டுப் புரட்சியில் கலந்து கொள்ள முடியாமற் போனதற்காக இன்றும் வருந்துபவன் நான்.

''இன்று ம.பொ.சி.க்கு ஓட்டு கேட்க வருவது என்பதை ஒரு தேசியக் காரியமாகக் கருதுகிறேன். இந்த வாய்ப்பு கிடைத்ததற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

''ம.பொ.சி. அவர்களைவிட, பழைய காங்கிரசின் பிரதிநிதி வேறு யார் இருக்க முடியும்? அவர் காங்கிரசி லிருந்து வெளியேறி காங்கிரசை எதிர்த்து நிற்பதும், அவர் துணையுடன் நான் நிற்பதும் தமிழக அரசியலில் ஒரு புதிய திருப்பத்தைக் காட்டுகிறது.

''நாட்டிலே நடைபெறுகிற அநியாயத்தை, விலைவாசிக் கொடுமையை எடுத்துக் கூறத்தான் நாங்கள் இங்கே உங்கள் பிரதிநிதிகளாக வந்திருக்கிறோம். மந்திரிப் பதவியைப் பெரிதாகக் கருதி வருபவர்கள் எங்களில் யாரும் இல்லை.

''நீங்கள் எங்களுக்கு ஒரு குறையையும் வைக்க வில்லை! நான் தேர்தலில் வெற்றி பெற்று வந்தால், 'அதோ போகிறான் பார் அண்ணாதுரை எம்.பி.' என்று சொல்லியா எனக்குப் புகழ் வரப்போகிறது?

''சிலம்புச் செல்வர் என்பதைவிடவா எம்.எல்.ஏ. பதவி ம.பொ.சி.க்குப் பெரிது? அவருக்குக் கிடைத்திருக் கும் பட்டம், 2000 ஆண்டிற்கு முற்பட்ட இலக்கிய ஆராய்ச்சியின்பாற்பட்டதாயிற்றே!

''தியாகராய நகரைப் பிடிப்பது ம.பொ.சி.க்குச் சிரமமான காரியமல்ல. திருத்தணியைப் பிடித்துக் கொடுத்தவருக்கு அருகில் இருக்கும் தியாகராய நகரைப் பிடிப்பது சிரமமானதா?

''ம.பொ.சி.க்குத் தம்முடைய பலம் நினைவுக்கு வருவதில்லை. அவருடைய பலத்தை நாம் அவருக்குப் புலப்படுத்திக் காட்ட வேண்டும்.''

(7.1.67-இல் சைதையில் நடந்த தேர்தல் கூட்டத்தில் பேசி, 15.1.67, 'செங்கோல்' இதழில் வெளியானது)

ராஜாஜியின் ஆதரவு

எனது தொகுதியில் — தேர்தல் பிரச்சாரத்தின் இறுதிக் கட்டத்திலே 10.2.67-இல் தியாகராய நகர் பேருந்துத் திடலில் நடந்த பொதுக் கூட்டத்தில் சுமார் 20 நிமிட நேரம் என்னை ஆதரித்துப் பேசினார் ராஜாஜி. அப்போது அவர் கூறியதில் ஒரு பகுதி வருமாறு:

''தியாகராய நகர் தொகுதி வாக்காளர்கள் அதிர்ஷ்டசாலிகள். மற்ற 233 தொகுதிகளுக்குக் கிடைக்காத ஒரு சிறந்த அபேட்சகர் உங்களுக்குக் கிடைத்திருக்கிறார். சாஸ்திரம் படித்தவர். யோக்கியதைக்கு ஒன்றும் குறைவு கிடையாது.

அண்ணாவையும் என்னையும் சைதைத் தொகுதியில் சட்டமன்றத்திற்குப் போட்டியிட்ட கலைஞர் கருணாநிதியையும் தோற்கடிப்பதே தேர்தல் களத்தில் த.நா.கா.வின் குறிக்கோளாக இருந்தது. என்னைப் பொறுத்தவரையில் உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாமல் கடுமையாக உழைத்தேன். ஏராளமான கூட்டங்களில் பேசினேன்.

தேர்தல் முடிவிலே பத்தாயிரம் வாக்குகள் அதிகமாகப் பெற்று வெற்றி அடைந்தேன்.

காங்கிரஸ் தோற்றது!

தி.நகர் தொகுதியின் முடிவு தெரிந்த சில மணி நேரங்களி லேயே வெளி மாவட்டங்களிலிருந்து காங்கிரசின் தோல்விச் செய்திகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கிடைத்து வந்தன. விருதுநகர் தொகுதியில் திரு. காமராசர் தோற்றுவிட்டதாகவும், செய்தி கிடைத்தது. காங்கிரஸ் கட்சியின் தோல்வி நான் எதிர்பார்த்தது தான் — விரும்பியதுதான் என்றாலும், எதிர்பார்த்தது நடந்து விட்டதென்ற செய்தி கிடைத்தபோது, ஏனோ என்னால் மகிழ்ச்சி யடைய முடியவில்லை. நான் வாழ்ந்து, வளர்ந்த இடமல்லவா! இது என்னிடமுள்ள அரசியல் பலவீனமோ, என்னவோ! திரு. காமராசரின் தோல்விச் செய்தியைக் கேட்டபோது, அதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு எனது வெற்றிச் செய்தியைக் கேட்டதால் எனக்கேற்பட்டிருந்த மகிழ்ச்சி மறைந்து போய்விட் டது. இது, பலவீனமல்ல; பண்பாடு!

தேர்தல் முடிவுகள் குறித்து நான் கவலைப்பட்டதற்கு மற்றொரு காரணமும் உண்டு. காங்கிரசின் தோல்வி தி.மு.க. வின் வெற்றியாக அமையாமல், எந்தக் கட்சிக்கும் பெரும் பான்மை இல்லாத குழப்ப நிலை ஏற்படுமோ, அதனால், தமிழகத்தின் வருங்காலம் பாழ்படுமோ? — என்பது எனது கவலைக்கான மற்றொரு காரணம். பல கட்சிகள் இணைந்த கூட்டாட்சியை நான் விரும்வில்லை. பிற்பகல் 3 மணிக்கு எனது வெற்றிச் செய்தி கிடைத்தது. மாலை 6 மணிக்கு நான் என் கழகத் தோழர்கள் சிலருடன் சென்று ராஜாஜியையும், அண்ணா துரையையும் பார்த்து என்னுடைய — என் கழகத்தினுடைய வெற்றிக்கு உதவி புரிந்ததற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித் துக் கொண்டேன். அண்ணா அவர்கள், காங்கிரசின் தோல்வி குறித்து மகிழ்ச்சியடைந்தாரென்றாலும், திரு. காமராசரின் தோல்வி குறித்து என்னிடம் தமது கவலையைக் காட்டிக் கொண்டார்.

தலைவர்கள் தோற்பதா?

ராஜாஜி, என்னைக் கண்டதும் தம் செயலாளரைப் பார்த்து, ''ம.பொ.சி.க்கு எடுத்து வைத்தேனே, அந்த மாலையைக் கொண்டு வா'' என்று கூறி, செயலாளர் கொண்டு வந்து தந்த சந்தன மாலையை எனக்கு அணிவித்து, என்னை வாழ்த்தினார். அவருடன் சில நிமிஷங்கள் பேசிவிட்டு விடைபெற்றபோது, அவர் என்னுடனிருந்த ஔவை சண்முகத்தைப் பார்த்து, ''சண் முகம்! ம.பொ.சி. முகத்தைப் பார்த்தீர்களா? 'வெற்றி பெற்று விட்டோமே' என்று கவலைப்படுகிறது'' என்று கூறினார். என் முகத்தில் கவலையைக் கண்டுபிடித்த மூதறிஞர் — ராஜதந்திரி, அதற்கான காரணத்தையும் கண்டு கொண்டிருப்பார். ஆனால், அந்தக் காரணமும் அவருக்கு உடன்பாடல்லவாதலால், அதனைக் கூறாமல் விட்டார்.

நாட்டில் தலைவர்கள் தோன்றுவது அரிது. அதுவும், விடுதலைப் போராட்டக்கால வேள்வித் தீயிலே புடம்போட்டு எடுக்கப்பட்ட திரு. காமராசர் போன்ற ஆற்றல் மிக்க தலைவர் கள் கிடைப்பது அரிதினும் அரிதாகும். அத்தகைய தலைவர் களை அவர்கள் ஆயுள் வரை மக்கள் போற்றி வரவேண்டும். கட்சிப் போராட்டங்கள் — சாதிப் பூசல்கள் தலைவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிட அனுமதிக்கக் கூடாது. தேர்தல் களத்திலே சரித்திர நாயகர்களாகிவிட்ட தலைவர்கள் தோற்றுப் போகாதபடி அரசியல் கட்சிகள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

1967 முதல் 1972 வரை

தமிழகச் சட்டப்பேரவைத் தேர்தல் முடிந்த பின்னர், அமைச்சரவை அமைப்பது பற்றிய விவரம் அறிய சட்டமன்றத் தி.மு.க. தலைவர் அண்ணா அவர்களைச் செய்தி நிருபர்கள் பேட்டி கண்டனர். அப்போது என்னைப்பற்றி நிருபர்கள் எழுப் பிய வினாக்களும், அவர் அளித்த விடைகளும் வருமாறு:

நிருபர்: ம.பொ.சி. அவர்களைச் சட்டப்பேரவைத் தலைவ ராக்கப் போவதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

அண்ணா: பேச்சாளர்களிலே சிறந்தவரான அவரைச் சொந்தக் கருத்தைப் பேசுவதற்கே உரிமையில்லாத சபா நாயகராக அமர்த்துவதால் ஜனநாயகத்திற்கு நஷ்டமாகும்.

நிருபர்: ம.பொ.சி. தி.மு.க.வுக்குரிய உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றாராதலால், அவர் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்படுவாரா?

அண்ணா: ம.பொ.சி. உதயசூரியன் சின்னத்தில் போட்டி யிட்டாலும், அவர் தன் சொந்தக் கட்சியிலேதான் இருந்து வருகிறார். அதாவது, அவர் தி.மு.க. அல்ல. ம.பொ.சி. யின் தமிழரசுக் கழகம் அளவில் சிறியதானாலும் நல்ல கட்டுக்கோப்புடன் விளங்கும் கட்சி.

இதற்குப் பிறகு அண்ணாவும் நானும் அடிக்கடி சந்தித்தோ மென்றாலும், அமைச்சரவையில் நான் இடம் பெறுவது பற்றி அவரும் என்னிடம் எதுவும் கூறியதில்லை; நானும் அவர் கருத்தறிய முயன்றதுமில்லை. அண்ணா அவர்கள் செய்தி நிருபர்களிடம் கூறியது என் மனத்தில் சபலத்தை உண்டாக்க வில்லை. என் போக்கில் நான் செயல்பட்டுக் கொண்டிருந்தேன்.

அண்ணாவை முதல்வராகக் கொண்ட புதிய தி.மு.க அமைச்சரவை 6.3.67 அன்று காலை ராஜாஜி மண்டபத்தில் உறுதிப் பிரமாணமேற்றது. இந்தச் சடங்கில் நானும் கலந்து கொண்டு, அமைச்சர்களில் ஒவ்வொருவரையும் நேரில் சந்தித்து மிகுந்த மகிழ்ச்சியுடன் மனதில் எந்தவிதமான சபலமுமின்றி என் வாழ்த்துகளைத் தெரிவித்துவிட்டு வந்தேன்.

அண்ணா தந்த விளக்கம்

தி.மு.க. அமைச்சரவை செயல்படத் தொடங்கி, சட்டமன்றத்தின் முதல் கூட்டமும் நடைபெறலானது.

30.3.67-இல் சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் உரை மீது நடந்த விவாதத்தை முடித்து வைத்து முதல்வர் மாண்புமிகு திரு.சி.என். அண்ணாதுரையவர்கள் பேசியபோது — பொதுவாக, தோழமைக் கட்சிகள் பற்றியும் — குறிப்பாக என்னைப் பற்றியும் — தமிழரசுக் கழகம் பற்றியும் வெளியிட்ட கருத்துகளை இங்குத் தொகுத்துத் தருகிறேன்:

> *''தமிழரசுக் கழகத் தலைவர் பேசுகிற பேச்சுகளில், கலந்து கொள்ளுகிற கூட்டங்களில், ''திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையை ஆதரிக்கிறேன். ஆனால், அந்த அமைச்சரவை, ஏதாவது காரியத்தைச் செய்யத் தவறினால் அதைக் கவனப்படுத்துவேன். ஏதாவது தவறான காரியத்தைச் செய்தால், தடுத்து நிறுத்துவேன்'' என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விதமான மேற்பார்வை எங்களுக்குத் தேவை. அப்படிப்பட்ட மேற்பார்வை வேண்டும் என்பதற்காகத்தான் தோழமைக் கட்சிகளில் உள்ளவர்களில் சிலரை அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளத் தேவையில்லை என்று கருதினோம்.*
>
> *''அவர்கள் எதிரில் இருந்தால்தான் சில சமயங்களில் நாங்கள் தவறு செய்கிறபோது, அன்பான முறையில், அறத்தின் அடிப்படையில், சொந்தத்தின் அடிப்படையில் எடுத்துச் சொல்வார்கள் என்பதற்காகத்தான் அவர்கள் அமைச்சரவைக்கு வெளியே இருக்க வேண்டும் என்று கருதினோம்.*

''அவர்கள் அமைச்சரவையிலே சேருவார்களேயானால், நான் நிச்சயமாக நம்புகிறேன். எங்கள் வேலையும் எளிதாகும். அமைச்சரவையின் தகுதி, அதன் திறமை, அதன் தரம் கூட ஓரளவுக்கு உயரும் என்பதில் என்னைப் பொறுத்தவரையில், என்னுடைய நண்பர்களைப் பொறுத்தவரையில் ஐயத்திற்கிடமில்லை.''

முதல்வரின் விளக்கத்தை சட்டப்பேரவையிலிருந்து கொண்டு நான் நேரிலேயே கேட்டேன். ஆனால், நான் ஏமாற்றமடையவில்லை. முதல்வரின் விளக்கம் குறித்து 9.4.67 'செங்கோல்' இதழில் ''பார்வையாளன்'' என்னும் புனைபெயரில் நான் எழுதியது வருமாறு:

''தோழமைக் கட்சிகளிடம் தமக்குள்ள நல்லெண்ணத்தையும் நட்புணர்ச்சியையும் அறிஞர் அண்ணா அவர்கள் தாராளமாக வெளிப்படுத்தினார். குறிப்பாக, தமிழரசுக் கழகத் தலைவர் திரு.ம.பொ. சிவஞானம் அவர்கள் பெயரையே சொல்லி அமைச்சர் குழுவில் அவரைச் சேர்த்துக் கொள்ளாததற்குக் காரணம், அவர் வெளியிலிருந்து தங்களைக் கண்காணித்து வரவேண்டும் என்பதுதான் என்றார்.''

அண்ணா அவர்கள் இவ்வளவு தெளிவாகக் கூறிவிட்டது குறித்து அப்போது நான் ஆறுதலடைந்தேன். நான் அமைச்சரவையில் இடம் பெறுவது பற்றிய வதந்திகள் அத்துடன் ஓய்ந்து விடும் என்று எதிர்பார்த்தேன்.

கலைஞரின் தூது

அதன்பின்னர் 8.4.67 அன்று அப்போது பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த கலைஞர் மு.கருணாநிதி அவர்களுடைய அழைப்பின் பேரில் அவருடைய இல்லத்தில் அவரைச் சந்தித்துப் பேசினேன். தி.மு.க. அமைச்சரவை அமைந்தபோதே அதில் அறத்துறை அமைச்சராக என்னைச் சேர்த்துக்கொள்ள அண்ணா விரும்பியதாகவும், எதிர்க்கட்சி வரிசையில் இடம் ஒதுக்குமாறு சட்டப்பேரவைச் செயலாளருக்கு நான் எழுதிவிட்டதால் மிகுந்த வருத்தத்தோடு அண்ணா தமது விருப்பத்தை

அப்போதைக்குக் கைவிட்டதாகவும், திரும்பவும் அவர் என்னை அழைப்பதாகவும், அதனை மறுக்காமல் நான் ஏற்க வேண்டுமென்றும் மிகுந்த அன்போடு என்னைக் கேட்டுக் கொண்டார்.

கலைஞரின் அழைப்பு நான் எதிர்பாராததாக இருந்தது. அமைச்சரவைக்கு வெளியே என்னை விட்டு வைத்திருப்பது பற்றிச் சட்டப்பேரவையில் அண்ணா கூறிய சமாதானத்துக்கும் அமைச்சரவையில் இணைந்து கொள்ள வேண்டுமென்று அண்ணா என்னை அழைப்பதாகக் கலைஞர் கூறியதற்கும் பொருத்தம் காண்பது எனக்குக் கஷ்டமாக இருந்தது. இரண்டுக் குமிடையே முரண்பாடு இருப்பதாகவும் நான் கருத வேண்டி யிருந்தது. மொத்தத்தில் கலைஞரை நான் சந்தித்தபோது, அவரி டம் கூறியது வருமாறு:

''நான் அதிகாரப் பதவி எதிலும் இல்லாமலே தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்துக்கும், தமிழ்நாட்டுக்கும் தொண்டாற்ற விரும்புகிறேன். இந்த உறுதியுடன்தான் ஆட் சியைக் கைப்பற்றும் குறிக்கோளில்லாத ஒரு கலாச்சார அமைப்பாகத் தமிழரசுக் கழகத்தைப் படைத்து, அதனை இயக்கி வருகிறேன். ஆங்கில ஆதிக்கத்தை அகற்றுவதோ, மாநிலச் சுயாட்சிக் கோரிக்கைக்கு வெற்றி தேடுவதோ, கிளர்ச்சியும் போராட்டமும் இல்லாமல் நடக்கக் கூடியவை யென்று நான் கருதவில்லை. அந்தக் கிளர்ச்சியையும் போராட்டத்தையும் நடத்த தமிழரசுக் கழகம் இனியும் தேவைப்படுகிறது. இந்த நிலைமையில் கழகத்தைக் கலைப் பதோ, அதிலிருந்து நான் விலகுவதோ சாத்தியமில்லை.

''எனக்கு வயதாகிவிட்டது. இந்த வயதிலே மந்திரி பதவிக்காகக் கட்சி மாறுவதென்பது மக்கள் என்னுடைய அரசியல் ஒழுக்கத்தை ஐயுறுவதற்கு இடமளிப்பதாகும். எனவே, என்னை விட்டுவிடும்படி அண்ணாவிடம் சொல் லுங்கள்.

இப்படி நான் கூறிய பின்னரும், கலைஞரவர்கள் என்னை விடவில்லை. அமைச்சரவையில் நான் சேருவ

தால் மக்கள் என்னைப் பற்றித் தவறாக எண்ண மாட்டார்கள் என்று அவர் உறுதியாகக் கூறினார். கழகத்தைக் கலைக்காமலே, அதைக் கலாச்சார இயக்கமாக்கி, அமைச்சர் பொறுப்பில் இருந்து கொண்டே நான் அதனை நடத்திடலாம் என்றும் கலைஞர் கூறினார்.

சுமார் முக்கால் மணி நேரம் நாங்கள் இருவரும் உரையாடிய பின்னர்,

''தி.மு.க. சட்டமன்றக் குழுவில் அசோசியேடட் உறுப்பினராக மட்டும் இருந்து கொண்டு அமைச்சர் பொறுப்பை வகிக்க அனுமதிப்பதானால், அதைப் பற்றி யோசிக்க நான் தயார். தி.மு.ழகத்தில் முழு அளவு உறுப்பினராகச் சேருமாறு என்னை வற்புறுத்த வேண்டாம். அதைக் காலத்தின் கையில் விட்டுவிடலாம். இதற்கும் தமிழரசுக் கழகச் செயற்குழுவின் அனுமதியைப் பெற எனக்கு அவகாசம் தேவை''

என்று கூறினேன். கலைஞருக்கு எனது பதில் முழு அளவு திருப்தியளிக்கவில்லை. என்றாலும், அவகாசமளிக்க இசைந்தார்.

கலைஞருக்கும் எனக்கும் நடந்த உரையாடலை நினைவிலுள்ளபடிதான் கூறியிருக்கிறேன். ஆகவே, வார்த்தைக்கு வார்த்தை சரியாக இருக்குமென்று நான் சொல்வதற்கில்லை. ஆனால், கருத்துகளை அப்படியே தந்திருக்கிறேன்.

கலைஞரைச் சந்தித்துப் பேசிய பின்னர் மூன்று வார காலம் வரை அவர் விடுத்த அழைப்புபற்றி நான் முடிவு எதுவும் எடுக்கவில்லை. இந்த இடைக்காலத்திலே நானும் அவரும் மூன்று முறை பொது நிகழ்ச்சிகளிலே சந்திக்க நேர்ந்தபோது ''முடிவு எடுத்து விட்டீர்களா'' என்று கேட்டவண்ணம் இருந்தார்.

அண்ணா அழைக்கிறார்!

இது நிகழ்ந்து 20 நாட்களுக்குப் பின்னர் 27.4.67-இல் பூவிருந்தவல்லி அரசினர் உயர்நிலைப் பள்ளியின் 49ஆவது ஆண்டு நிறைவு விழாவிலே, நானும் அண்ணாவும் பேசினோம். அவரது விருப்பப்படிதான் அந்த விழாவுக்கு நான் அழைக்கப் பட்டேன். அதிலே அண்ணா என்னைப் பற்றிப் பேசி, ''நவமணி'' 29.4.67 இதழில் வெளியான செய்தி வருமாறு:

''எனது மதிப்பிற்குரிய நண்பர் ம.பொ.சிவஞானம் பல ஆண்டுகளாகச் சொல்லி வருபவற்றையெல்லாம் எங்களைக் கொண்டு செயல்படுத்த முனைந்துள்ளார். அவர் எங்களோடு சேர்ந்து இருந்து நிறைவேற்ற வேண்டும் — பணியாற்ற வேண்டும் என்று அவரை வேண்டிக் கொள்ளுகிறேன். நான் சொல்வதன் பொருள் அவருக்குப் புரியுமென்று நம்புகிறேன். (கூட்டத்தில் பலத்த கைதட்டல்) இதற்கு நிலைமை சாதகமாக இருக்கிறது. எதிர்காலம் பளிச்சென்று இருக்கிறது.''

முதல்வர் அண்ணாவின் இந்தப் பேச்சை வைத்துக் கொண்டு தி.மு.க. அமைச்சரவையில் நான் இடம்பெறக் கூடுமென்று செய்திகள் — ஹேஷ்யங்களாக அல்லாமல் — அடிக்கடி நாளேடுகளில் வெளியாயின. பூவிருந்தவல்லியில் அண்ணா பேசியதற்குப் பின்னரும் நானாக அவரிடம் சென்றோ, அவராக என்னை அழைத்தோ நாங்கள் இதுபற்றிப் பேசியதே இல்லை.

படித்த வகுப்பார் நிலை

பூவிருந்தவல்லி நிகழ்ச்சிக்கு முன்பே தி.மு.க. — சுதந்திரா உறவில் விரிசல் ஏற்பட்டுவிட்டது. பேரவைத் தலைவர் பதவியைச் சுதந்திராவுக்கு விட்டுக் கொடுக்க தி.மு.க. மறுத்து விட்டதிலிருந்தே அந்த இரு கட்சிகளிடையிலும் உறவு நலிந்து வரலானது. சென்னை லட்சுமிபுரம் இளைஞர் சங்கக் கூட்டமொன்றில் பேசிய ராஜாஜி,

''தி.மு.க.வுக்கும் சுதந்திராவுக்கும் 'ஹனிமூன்' முடிந்து விட்டது.''

என்று கூறினார். அதே பேச்சில் தி.மு.க. அரசு முக்கிய பிரச்சினைகளில்கூட தம்மைக் கலந்துகொள்வதில்லை என்றும் தம்முடைய ஆதரவாளர்களுக்குத் தகவல் கொடுத்தார். உரிய நேரம் வரும்போது தி.மு.க. அரசுக்கு எதிராகச் செயல்படவும் தயாராயிருக்குமாறு சூசகமாகச் சொல்லி வைத்தார். தி.மு.க. தலைவர்கள், அரசு பொறுப்பை ஏற்றதும் வலுவில் போய் பெரியார் ஈ.வெ.ரா.வைப் பார்த்து அவருடன் உறவு கொண்டது ராஜாஜிக்கும் அவரை ஆதரிக்கும் படித்த வகுப்பாருக்கும் பிடிக்கவில்லை. இதனையும் கருத்தில் கொண்டு தான் தி.மு.க. வுக்கும் சுதந்திராவுக்குமிடையே ‘அனிமூன் முடிந்துவிட்டது’ என்று ராஜாஜி கூறினார்.

இந்தச் சூழ்நிலையால் தி.மு.க. அமைச்சரவையில் நான் அங்கம் பெறுவதனை ராஜாஜியும் அவர்பால் பக்தியுள்ளவர்களும் விரும்பவில்லை. குறிப்பாக, அரசின் அறத்துறையை நான் ஏற்பதனை அவர்கள் கட்டோடு வெறுத்தனர். அந்தத் துறைதான் தி.மு.க. அரசு வழுக்கிவிழும் இடமாக இருக்கக் கூடுமென்று அவர்கள் அனுமானித்தனர். ஆகவே, அது தி.மு.க. வினரிடம் இருப்பதையே அவர்கள் விரும்பினர். வியப்பென்னவென்றால், நான் தி.மு.க. அமைச்சரவையில் சேருவதை உறுதிப்படுத்தும் வகையில் நாள்தோறும் பத்திரிகைகளில் செய்தி வந்து கொண்டிருந்ததாகும். இன்ன தேதியில், இன்ன நேரத்தில் பதவி விசுவாசப் பிரமாணம் எடுக்கும் சடங்கு நிகழும் என்று கூட வெளியானது.

‘இந்து’வின் கற்பனை

தமிழரசுக் கழகத்தாரிடையே மனக்குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய வகையிலும் திட்டமிட்ட முறையில் பொய்யான செய்திகள் பத்திரிகைகளில் வெளிவரலாயின. “நான் தி.மு.க.வில் அங்கத்தினராகி அமைச்சரவையிலும் சேர்ந்துவிடுவேன். என் கழகத் தோழர்கள் விரும்புவார்களானால், அவர்களும் தி.மு.க.வில் சேர்ந்து கொள்ளலாம்” என்று ‘நவமணி’ நிருபருக்கு நான் பேட்டியளித்துக் கூறியதாக அந்தப் பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. அது முற்றிலும் கற்பனைச் செய்தியாகும்.

நல்ல மரபுகளைக் கடைப்பிடித்து வரும் பத்திரிகையாக நான் கருதும் 'இந்து' ஆங்கில நாளேடுகூட இந்த விஷமத்தனத் துக்கு விலக்காக இருக்கவில்லை. நான் பேட்டியளிக்காத நிலை யிலேயே என்னுடன் பேட்டி கண்டு பெற்ற தகவல்களாக 'இந்து' நிருபர் அந்த ஏட்டில் ஒரு நாள் என்னென்னவெல்லாமோ பிரசுரித்திருந்தார்.

பெரியாரின் வசை

இந்தச் சூழ்நிலையிலே பெரியார் ஈ.வெ.ரா.வும் அமைச்சர வையில் என்னைச் சேர்த்துக் கொள்ளக் கூடாதென்று தி.மு.க. தலைவர்களுக்குக் கட்டளையிடுவதுபோல ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். அதிலே தரக்குறைவான வார்த்தைகளால் என்னைப் பற்றி விமர்சித்திருந்தார். நான் அந்தணர்களின் அடிமை என்றும், ராஜாஜியின் கையாளாகவே அமைச்சரயில் நான் இருந்து வருவேனென்றும், என்னைச் சேர்த்துக் கொள்வ தால் தி.மு.க. அமைச்சரவை தனக்கு அழிவையே தேடிக் கொள்ளுமென்றும் தமது அறிக்கையில் ஈ.வெ.ரா. பயமுறுத்தியி ருந்தார். ''ஒரு ம.பொ.சி. பத்து பார்ப்பானுக்குச் சமம்'' என்றும் என்னைப் பற்றி வருணித்திருந்தார். ''ம.பொ.சி.யை தி.மு.க. தலைவர்களால் ஜீரணிக்க முடியாது'' என்றும் குறிப்பிட்டிருந் தார்.

தனக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் அடித்து வீழ்த்த பெரியார் தம் வாழ்நாளில் பயன்படுத்திய ஒரே கருவி, ''பார்ப்ப னர்களின் அடிமைகள்'' என்று வருணிப்பதாகும். அதையே தமது மனசாட்சிக்கு மாறாக அவர் எனக்கு எதிராகவும் பயன் படுத்தினார்.

படித்த வகுப்பார் எதை விரும்பினார்களோ, அதையே நிறைவேற்றித் தருவதாக இருந்தது ஈ.வெ.ரா.வின் அறிக்கை. தம்முள்ளே பகை கொண்டுள்ள இருவர் இருவேறு முனைகளில் இருந்தாலும், சில நேரங்களில் அவர்கள் ஒரே காரியத்தைச் செய்வதுண்டு. அதுபோல, பெரியார் ஈ.வெ.ரா. யாரைப் பிற விப் பகைவர்களாகக் கருதினாரோ, அவர்கள் விரும்பியதையே தமது அறிக்கை மூலம் நிறைவேற்ற முன்வந்தார். பெரியாரின்

அறிக்கைக்குத் தி.மு.க. தலைவர்கள் மதிப்பளித்தனரென்றே சொல்ல வேண்டும்.

கடற்கரைப் பொதுக்கூட்டமொன்றில் என்னைச் சந்திக்க நேர்ந்தபோது கலைஞர் மு.கருணாநிதியவர்கள் கீழ்வருமாறு என் காதிலே ஓதினார்:

"பெரியார் தங்களைப் பற்றித் தவறான கருத்தைக் கொண்டிருக்கிறார். தாங்கள் ஒருமுறை அவரை நேரில் சந்தித்துப் பேசிவிட்டால் அவர் தமது கருத்தை மாற்றிக் கொண்டு விடுவார். அதனால் பெரியாரிடம் தங்களை அழைத்துச் செல்லுமாறு அண்ணா என்னிடம் கூறியிருக் கிறார்."

மறுத்தேன்!

இப்படி, கலைஞரவர்கள் என்னிடம் கூறியதோடு, மறு நாளே பெரியாரைச் சந்திக்கத் தம்முடன் வருமாறு என்னைக் கேட்டுக் கொண்டார். ஒரு வினாடிகூட ஆலோசித்துப் பார்க்கா மல் அவருடைய கோரிக்கைக்கு இணங்க நான் உறுதியாக மறுத்துவிட்டேன். பெரியார் எதிர்ப்புக்கு முதல்வர் அஞ்சுவதா னால், என்னை அமைச்சரவையில் சேர்க்கும் முயற்சியையே அவர் விட்டுவிடலாமென்றும் கலைஞரிடம் தயக்கமின்றிக் கூறி னேன்.

சமயத் துறையிலே நானும் பெரியாரும் சந்திக்க முடியாத இருவேறு துருவங்களாக இருந்தோம். அது காரணமாகவே, அவருடைய வாழ்நாள் முழுவதிலும் அவரோடு எந்த நேரத்தி லும், எந்த ஒரு பிரச்சினையிலும் நான் ஒன்றுபட்டுச் செயலாற்ற முடியாதவனாக இருந்து வந்தேன். அப்படிப்பட்டவருடைய ஆதரவைப் பெற்று அறத்துறையின் அமைச்சராகப் பொறுப்பு ஏற்பதென்பது என்னால் நினைத்துப் பார்க்கவே முடியாததாக இருந்தது. தி.மு.க. ஆட்சியிலே அறத்துறை அமைச்சராக இருந்து கொண்டு பெரியார் ஈ.வெ.ரா.வைத் திருப்திப்படுத்துவ தைவிட, அந்தப் பொறுப்பை ஏற்காமலிருப்பதையே நான் விரும்பினேன். எனது மறுப்பு கலைஞருக்கு வருத்தத்தைத்

தந்ததென்பதனை அவருடைய முகபாவத்திலிருந்து நான் அறிந்துகொள்ள முடிந்தது. அதனால் அதற்குமேல் அவர் எது வும் பேசாமல் மௌனமாக இருந்து விட்டார்.

மீண்டும் மீண்டும் அழைப்பு

1967 ஆகஸ்டு 15-இல் தி.மு.கழகம் கோடம்பாக்கத்தில் 'விடுதலை நாள்' கொண்டாடியது. நான்தான் அந்தக் கூட்டத்திற் குத் தலைமை வகிக்க வேண்டுமென்று கலைஞர் மூலமாக அண்ணா என்னைக் கேட்டுக் கொண்டார். அதற்கு நானும் இணங்கினேன். தி.மு.க.வின் சார்பில் முதன் முதலாக விடுதலை நாள் கொண்டாடப்பட்டது, இந்தச் சந்தர்ப்பத்திலேதான் என்ப தனை இங்கு நினைவூட்ட வேண்டும். இந்தக் கூட்டத்திலே நான் முதலிலும் முதல்வர் அண்ணா அவர்கள் இறுதியிலும் பேசி னோம். அவர் பேசும்போது, கீழ்வருமாறு கூறினார்:

''வறுமைக்கு எதிராக, அறியாமைக்கு எதிராகப் போராடும் போராட்டத்தில் ஈடுபட ம.பொ. சிவஞானம் போன்றவர்களின் தோழமையையும், துணையையும் நாடு கிறேன்.

''தமிழரசுக் கழகத்தின் எல்லாக் குறிக்கோளையும் நிறைவேற்றும் எண்ணம் தி.மு.க. அரசுக்கு இருப்பதை அவர் அறிந்த பின்னரும் தி.மு.கழகத்துக் கருணாநிதி, தமிழரசுக் கழகத்து ம.பொ.சி., இடையே நான் என்று இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. உயர்ந்த இலட்சியத் திற்காகப் போராட்டம் நடத்துவதில் எங்களுடன் ஒன்றுபடுமாறு மீண்டும் அவர்களை அழைக்கிறேன்.

''போருக்குப் புறப்படுபவன் கவசமணிந்து — உடை களைச் சரிபார்த்து — மனையாளைக் கண்டு புன்னகை யுடன் — பயப்படாதே! இது பதினோராவது களம். 'வெற்றியுடன் திரும்புவேன். குழந்தையைப் பார்த்துக் கொள்' என்று கூறிவிட்டு — எதிர்வீட்டுக்காரரைக் கைதட்டி அழைத்து 'நீயும் என்னுடன் புறப்படு' —

என்றுதான் போர் வீரர்களை அழைப்பார்கள். அதுபோல் ஏழ்மை — அறியாமை — இல்லாமையை எதிர்த்துப் போராடுவதில் எங்களுடன் இணைந்து போராடுமாறு சிவஞானம் அவர்களை மனந்திறந்து அழைக்கிறேன். போர் வீரர்களை அழைக்க இதற்குமேல் வார்த்தைகள் இல்லை. இதற்கு மேலும் போர் வீரர்கள் இப்படிப்பட்ட அழைப்புக்கு நல்ல பதிலே தருவார்கள் என்றும் எதிர்பார்க் கிறேன்.''

இந்தக் கூட்டத்தின் தலைவன் நான்தான். ஆதலால், அண்ணா பேசிய பின்னர் முடிவுரையாக நான் பேசக் கூடுமென் றும், அவருடைய அழைப்புக்கு இசைவு தெரிவிக்கக் கூடுமென் றும் கூட்டத்தில் வெள்ளம்போல் குழுமியிருந்த பொதுமக்கள் — ஏன், மேடையிலே இருந்த அமைச்சர்களிலே சிலர் எதிர் பார்த்திருக்க வேண்டும். ஆனால், முடிவுரை கூறாமலேயே கூட்டத்தை முடித்து வைத்துவிட்டேன்.

இரண்டாவது முறையாக கோடம்பாக்கம் சுதந்திர விழாக் கூட்டத்திலும் முதல்வர் அண்ணா அவர்கள் எனக்கு அழைப்பு விடுத்த பின்னர், தி.மு.க. அமைச்சரவையில் நான் சேரும் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர விரும்பினேன். இதை வைத்துக்கொண்டு பத்திரிகைகள் எனது அரசியல் ஒழுக் கத்தைக் களங்கப்படுத்தி, தமிழரசு இயக்கத்தைப் பலவீனப் படுத்த முயன்றதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிடக் கருதினேன்.

விஷமத்தனம்!

நாளேடுகள் சில வேண்டுமென்றே தவறான செய்திகளைப் பிரசுரித்து வந்தன. 'ஆனந்த விகடன்' வார ஏடு என்னைப் பற்றி மக்களுக்குத் தவறான கருத்து ஏற்படும் வகையில் வாரந்தோறும் 'கார்ட்டூன்' பிரசுரித்து வந்தது. தி.மு.க. அமைச்ச ரவையில் சேர்ந்து கொள்ளுமாறு முதல்வர் அண்ணா அவர்களே இரண்டு பொதுக் கூட்டங்களில் வெளிப்படையாக எனக்கு அழைப்பு விடுத்ததறிந்தும், வலுவில் வந்த அழைப்பை ஏற்க நான் அவசரப்படாதது புரிந்தும், நான் நாற்காலியொன்றைத்

தலையில் சுமந்துகொண்டு அண்ணாவின் வீட்டு வாசலில் போய் நின்று பதவி கேட்பதுபோல் 'விகடனி'ல் கார்ட்டூன் வெளிவந்தது. ஆம்; விஷமத்தனத்தின் சிகரத்திற்கே சென்றது 'விகடன்'!

இப்படி, விஷமத்தனமாகப் பிரச்சாரம் செய்த நாளேடுகளுக்கோ, வார ஏடுகளுக்கோ சொந்தத்தில் என்மீது கோபமோ குறைபாடோ இருப்பதற்குக் காரணம் இல்லை. தி.மு.க. அரசு விரைவில் வீழ்ந்துவிட வேண்டுமென்று இந்த ஏடுகள் விரும்பின. நான் தி.மு.க. அமைச்சரவையில் சேருவதால், தங்கள் விருப்பம் நிறைவேறுவது தடைபடக் கூடுமென்றும், அவை அஞ்சின. தேசபக்தப் பாரம்பரியத்தின் நிழல்கூட தி.மு.க. அமைச்சரவையின் மீது படக்கூடாதென்று பத்திரிகை வட்டாரமும் படித்த வட்டாரமும் கருதின. அதன் விளைவுதான் என்மீது விழுந்த தாக்குதல்!

ராஜாஜி அவர்களை ஒருமுறை நான் நேரில் சந்தித்தபோது, அவராக இதுபற்றிப் பேசத் தொடங்கி,

> *''தி.மு.க. தலைவர்களுக்கு உங்கள் ஆதரவு தேவைப்படுகிறது. ஆகவே, அவர்கள் உங்களை விடமாட்டார்கள். ஆனால், அறத்துறையை ஏற்காதீர்கள். அதனால், உங்கள் பெயர் கெடும்படி செய்துவிடுவார்கள். கல்வித் துறையைக் கேளுங்கள்''*

என்று கூறினார். இதனை, ராஜதந்திரியான அவர் நல்லெண்ணத்துடன் கூறியதாக நான் நினைக்கவில்லை.

''என்றென்றும் ஆங்கிலம்; எங்கெங்கும் ஆங்கிலம்'' என்ற கொள்கையுடைய அவர், ''எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்'' என்னுங் கொள்கையை ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கோஷமாகக் கொண்டுள்ள என்னிடம் கல்வித் துறையை விட விரும்புவாரென்று நான் எப்படி எதிர்பார்க்க முடியும்? தி.மு.க.வினரிடமிருந்து என்னைப் பிரித்து வைப்பதிலே பத்திரிகை வட்டாரமும் படித்த வகுப்புந்தான் மிகுந்த அக்கறை காட்டின. அரசியல் கட்சிகள் அக்கறை காட்டவில்லை. தேசபக்த பாரம்பரியத்தைச் சார்ந்த முதியோர் பலர் கடிதம் எழுதியும் நேரில் சந்தித்தும்

தி.மு.க. அமைச்சரவையில் சேருவதற்குத் தயங்க வேண்டா மென்று எனக்கு ஆலோசனை கூறினர்.

நான் சுபாவத்திலேயே அதிகாரப் பதவி எதையும் விரும் பாதவன். மேடைப் பேச்சாளனாகிய நான், அதிகாரப் பதவி யிலே அமர்ந்துவிட்டால், அப்புறம் மனச்சாட்சிப்படி பேசவும் எழுதவும் இயலாமற் போய்விடுமென்ற அச்சம் எனக்கு எப் பொழுதும் உண்டு. நெடுங்காலமாகச் சட்டசபைக்குச் செல்வ தையே நான் விரும்பாமலிருந்ததற்கு எனது இந்தச் சுபாவந் தான் காரணமாகும். இதனாலேயே, கலைஞர் என்னிடம் அமைச்சர் பதவி பற்றி முதன் முதலில் பிரஸ்தாபித்தபோது, தயக்கமின்றி மறுப்பு தெரிவித்தேன்.

முற்றுப்புள்ளி வைத்தேன்!

கோடம்பாக்கத்தில் அண்ணா இரண்டாவது முறையாகவும் அழைப்பு விடுத்த பின்னர், இந்த விஷயத்திலே ஒரு முடிவுக்கு வர எண்ணி, அவரைச் சந்தித்துப் பேச விரும்புவதாகக் கடிதம் எழுதினேன். என் விருப்பத்தைக் கலைஞரிடமும் நேரில் கூறி னேன். அண்ணா அவர்கள், தமது நிலையை எனக்கு விளக்கக் காட்டூர் இராமையா அவர்களை என்னிடம் தூது அனுப்பினார். அவரிடம் நானும் எனது நிலையை விளக்கினேன். அதாவது, அந்தப் பேச்சுக்கே முற்றுப்புள்ளி வைத்துவிட்டதாகக் கூறி னேன். பின்னர் எனது நிலையை விளக்கி ''செங்கோல்'' இதழில் ஒரு தலையங்கம் எழுதினேன். அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:

> *''தி.மு.க. அமைச்சரவையில் சேர வேண்டுமென்று நான் முற்றிலும் எதிர்பாராத நேரத்தில் என்னிடம் கோரப் பட்டது. அதற்கு முன்பு அத்தகைய ஒரு பொறுப்பை ஏற்பதுபற்றி நான் கற்பனை செய்துகூடப் பார்த்ததில்லை. நான் சிறிதும் எதிர்பாராத நேரத்தில் எனக்கு அழைப்பு வந்தபோதும், பல வாரங்கள் ஆழ்ந்து சிந்தித்து, அதன் பின்னரே எனது நிலை இன்னதென்பதை அறிவித்தேன். அதன் பின்னும் அமைச்சர் பொறுப்பைப் பற்றிச் சிந்தித்துக்*

கொண்டிராமல், எனது போக்கில் வழக்கம்போல நான் தொண்டாற்றிக் கொண்டு வருகின்றேன். இரண்டு அல்லது மூன்று முறை பொதுப்பணித் துறை அமைச்சர் கலைஞர் கருணாநிதியிடம் பேசியதைத் தவிர, இதுபற்றி வேறு எப்போதும் எவரிடமும் நான் உரையாடியதில்லை. அந்த இரண்டு அல்லது மூன்று முறையும்கூட அவரால் அழைக் கப்பட்டே அவரைச் சந்தித்துப் பேசினேன்.

''என் வாழ்நாளில் தனிப்பட்ட முறையில் எனக்காக வென்று எதையும் யாரிடமும் நான் கோரிப் பெற்றதில்லை. இப்படி நான் கூறுவது ஆணவத்தால் அன்று. எனது இயற்கை சுபாவத்தை அறியாதவர்களுக்கு மிகுந்த பணிவு டன் அறிவிக்கும் பொருட்டேயாகும். ஒரு சில நாளிதழ் களிலும், வார இதழ்களிலும் என்னைப்பற்றி வெளியிடப் பட்டுவரும் கற்பனைச் செய்திகளும் தரக்குறைவான கேலிச் சித்திரங்களும் என் மனதுக்குப் பெரிதும் வருத்தத் தைத் தந்ததாலேயே இதனை யான் எழுத நேர்ந்தது.

''சுயசாதி பலமோ, பண பலமோ இல்லாமல் மக்க ளுக்குப் பணிபுரியும் எவரும் இப்படிப்பட்ட அவமதிப்பு களைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும் போலும்! உண்மை ஊழியர்களுக்குப் படித்த சமுதாயம் வழங்கும் 'நீதி' இது தான் என்றால், அதனை அமைதியோடு ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை இறைவன் எனக்கு அளித்திருக்கிறான். ஆகவே, என்னைப் பற்றிய பொய்ப் பிரச்சாரங்களைக் கண்டு, நான் தளர்ச்சியடையவோ, தடம் புரளவோ மாட் டேன்.''

சரித்திரச் சிறப்புமிக்க சாதனை!

சட்டமன்றத்திலே எதிர்க்கட்சி வரிசையில் தொடர்ந்து நான்காண்டுக்காலம் அமர்ந்திருந்தபோது, ஆளும் கட்சியின் நம்பிக்கைக்குரிய தோழனாக இருந்து வந்தேன். இந்தத் தோழ மைக்கு நான் ஒரு சந்தர்ப்பத்தில் கூடத் துரோகம் செய்ததில்லை. தி.மு.க.வுடன் அடிப்படைக் கொள்கைகளில் ஒற்றுமையுடைய

— ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்ற ஆசையில்லாத — கலாச்சார இயக்கமாக எனது தமிழரசுக் கழகம் இருந்து வருவதால்தான் இது சாத்தியமானது.

தி.மு.க.வுடன் தோழமை கொண்டிருப்பினும், தமிழ் வளர்ச்சி — தமிழினத்தின் தனிநலன்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளிலே ஆட்சியிடமும் ஆளுங்கட்சியிடமும் கண்டிப்புக் காட்ட நான் தவறியதே இல்லை. ஆம்; மொழி — இனம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளிலே தி.மு.க. ஆட்சி தீவிரமாகச் செயல்படுவதற்கு உந்தி ஊக்கி விடுகின்ற தீவிர சக்தியாகவே 1967 முதல் 1970 வரை சட்டப்பேரவையில் நான் செயல்பட்டு வந்தேன்.

23.1.68-இல் மத்திய ஆட்சி மொழிச் சிக்கல் பற்றிய தீர்மானம் ஒன்று அரசின் சார்பில் பேரவையில் பிரரேபிக்கப்பட்டது. ஆங்கிலம் ஒன்றே மத்தியில் ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டும் என்று அரசின் தீர்மானம் கூறியது. ஆனால், தமிழகத்திலே ஆங்கில ஆதிக்கத்தை உடனடியாக அகற்றி, தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழுக்கு முதலிடம் தேடுவது பற்றி அரசின் மொழித் தீர்மானம் எதுவுமே கூறவில்லை. ஆகவே, அடுத்து வரும் ஐந்தாண்டுக் கால கட்டத்திற்குள் அரசு அலுவலகங்கள் அனைத்திலும் தமிழே ஆட்சி மொழியாகவும், அனைத்துக் கல்லூரிகளிலும் அனைத்துப் பாடங்களுக்கும் தமிழே பயிற்சி மொழியாகவும் வருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று சட்டமன்றப் பேரவை ஆணையிடுவதாக நான் திருத்தம் கொடுத்தேன். முதல்வர் அண்ணா அவர்கள், அப்போது பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த கலைஞர் மு.கருணாநிதியை என்னிடம் அனுப்பி, என்னுடைய திருத்தத்தை அரசு ஏற்றுக் கொள்வதாகவும், அதனை வற்புறுத்தி நான் உணர்ச்சியோடு பேசலாமென்றும் தகவல் தரச் செய்தார். எனது திருத்தத்துடன் அரசின் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. சட்டப்பேரவையில் நான் புரிந்த சரித்திரச் சிறப்புமிக்க சாதனைகளில் இதுவே முதன்மையானதாகும்.

உலகத் தமிழ் மாநாடு

1968 சனவரித் திங்கள் முதல் வாரத்திலே இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னை மாநகரிலே நடைபெற்றபோது, சிலப்பதிகாரக் காப்பிய நாயகியான கண்ணகியின் உருவச் சிலையைச் சென்னைக் கடற்கரைச் சாலையிலே பிரதான இடத்தில் கலைஞர் மு.கருணாநிதியின் தலைமையிலே திறந்து வைக்கும் பேற்றினை அரசு எனக்குத் தந்தது. தமிழ்நாட்டு வீரபத்தினியின் உருவச் சிலையைத் திறந்து வைத்த நேரத்திலே என் உடம்பு புல்லரித்தது.

உலகத் தமிழ் மாநாட்டின் இறுதி நாளிலே, சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா நினைவு மண்டபத்தில் நடந்த சிறப்புக் கருத்தரங்கிலே, பல்கலைக் கழகப் பயிற்சி மொழி பற்றிக் கட்டுரை படித்த திரு.க. சந்தானம் அவர்கள், தமிழைப் பயிற்சி மொழியாக்குவதிலே தீவிரம் காட்டுவோரை, ''மொழி வெறியர்கள்'' என்று குறிப்பிட்டார். அவரிடம் எனக்குப் பெரு மதிப்பு உண்டு. என்னிடமும் அவர் பெருமதிப்பு வைத்திருப்பவர்.

அப்படியிருந்தும், அன்று ஏனோ அவர் என் போன்றோர் மனதைப் புண்படுத்தும் சுடுசொல்லைப் பயன்படுத்திப் பேசினார். இதனை நான் எதிர்பார்க்கவேயில்லை. ஆயினும், தயவு தாட்சண்யமின்றி அவையிலே எழுந்து நின்று, திரு.க.சந்தானம் அவர்கள் தாம் சொன்ன சுடுசொல்லைத் திரும்பப் பெற்றாக வேண்டுமென்று வற்புறுத்திப் பேசினேன். கருத்தரங்கில் குழுமியிருந்த தமிழறிந்த பிரதிநிதிகளிலே பெரும்பாலோர் என் கோரிக்கையை ஆதரித்து உணர்ச்சி வயப்பட்டு ஆரவாரம் செய்தனர். தாம் சொன்னதைத் திரும்பப் பெற திரு.க.சந்தானம் பிடிவாதமாக மறுத்தார். நானும் எனது நிலையில் உறுதியாக நின்றேன். அவர் திரும்பப் பெறாவிடில் மாநாட்டிலிருந்தே நான் வெளியேறப் போவதாக அறிவித்தேன். பிரதிநிதிகளிலே பெரும்பாலோர் தங்கள் இருக்கைகளை விட்டு எழுந்து என்னைப் பின்பற்றி வெளியேறத் தயாராகி விட்டனர். அந்த நேரத்திலே கருத்தரங்குக்குத் தலைமை வகித்த பிரான்ஸ்

நாட்டுப் பேராசிரியர் டாக்டர் பிலியோசா, திரு. சந்தானம் அவர்களிடம் பேசி, அவர் சொன்ன சுடுசொல்லைத் திரும்பப் பெறுமாறு செய்தார். நானும் அத்துடன் ஆறுதலடைந்தேன்.

சென்னையிலே உலகத் தமிழ் மாநாடு முடிந்ததும், அயல் நாடுகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளுக்குத் தமிழகத்தி லுள்ள திருக்கோயில்களைக் காட்டி, அவர்களை மகிழ்விக்கச் செய்யும் சுற்றுலாக் குழுவின் துணைத் தலைவர் என்ற முறையில் மூன்று நாட்கள் அவர்களுடன் விசேஷ ரயிலில் தமிழ்நாட்டில் சுற்றுலா செய்தேன். எனது வாழ்க்கையில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்த நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

'நாட்' என்பதனை 'நாடு' ஆக்கினேன்

அண்ணாவின் இரண்டாண்டுக் கால ஆட்சி புரிந்த சாதனை களிலே, ''மெட்ராஸ் ஸ்டேட்'' — அதாவது ''சென்னை ராஜ்யம்'' என்னும் அவமானப் பெயரை, ''தமிழ்நாடு'' என் னும் தன்மானப் பெயராக மாற்றியதும் ஒன்றாகும்.

மூதறிஞர் இராஜாஜி, ஆங்கிலத்தில் ''டமில் நாட்'' (Tamil Nad) என்பதாக அமைய வேண்டுமென்று அரசுக்கு ஆலோசனை கூறி வெளிப்படையாக அறிக்கை விட்டார். அரசின் சார்பில் அந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்டு விட்டதாக அண்ணா வும் ராஜாஜிக்கு அமைச்சர் மாதவன் மூலம் அறிவித்து விட்டார்.

சட்டப்பேரவையில் அண்ணா அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்திலே, ஆங்கில வாசகம் ''டமில் நாட்'' என்றுதான் அமைந்திருந்தது. அதற்கு 'தமிழ்நாடு' (Thamizh Nadu) என்று நான் திருத்தம் கொடுத்தேன். அண்ணா அவர்கள் என்னை அழைத்துப் பேசி, எனது திருத்தத்தைத் திரும்பப் பெறுமாறு கேட்டுக் கொண்டார். வடக்கேயுள்ளவர்களுக்கு 'ழ'கரத்தைப் பிழையின்றி ஒலிக்க முடியாதாகையால், அரசின் தீர்மானத்தி லுள்ள 'டமில்' (TAMIL) என்ற வாசகத்தை ஏற்குமாறு என்னைக் கேட்டுக் கொண்டார். 'நாடு' (NADU) என்பதனை ராஜாஜி ஏற்காததை எடுத்துக்காட்டி, பெரியவர் அறிவுரைக்கு மதிப்பு தருவதற்காக இதிலும் விட்டுக் கொடுக்குமாறு அண்ணா

என்னை வற்புறுத்தினார். நான் 'ழ'கர விஷயத்தில் அண்ணா வின் கருத்தை ஏற்றுக் கொண்டேன். ஆனால், 'உ'கர — அதாவது 'NAD' என்றில்லாமல் 'NADU' என்றிருக்க வேண்டும் என்பதில் பிடிவாதம் காட்டினேன். அண்ணா அவர்கள் ராஜாஜிக்குத் தந்த உறுதி மொழியைக் கைவிட்டு எனது திருத் தத்தை ஏற்றுக் கொண்டார். தமிழ் மொழியின் ஒலிகூடக் காப்பாற்றப்பட வேண்டுமென்பதில் என்னைப் போன்றே அவரும் அக்கறை கொண்டிருந்தார்.

பெயர் மாற்றத் தீர்மானத்தின்மீது நடந்த விவாதத்தை முடித்து வைத்துப் பேரவையில் அண்ணா பேசியபோது, அதற் காகப் போராட்டம் நடத்திய என்னையும், தமிழரசுக் கழகத்தை யும், அந்தப் போரிலே சிறைப்பட்ட கழகத் தோழர்களையும் மனம் திறந்து பாராட்டிப் பேசினார். தீர்மானம் எதிர்ப்பின்றி நிறைவேறியதாக பேரவைத் தலைவர் அறிவித்தபோது முதல் வர் அண்ணா அவர்கள் 'தமிழ்நாடு' என்று கூற, பேரவை உறுப்பினர்கள் அனைவரும் 'வாழ்க' என்று உரக்க ஒலித்தனர். இப்படி மும்முறை ஒலியெழுப்பப்பட்டது. அப்போது என் உடம்பு புல்லரித்தது.

இந்தப் பெயர் மாற்றத்தையொட்டிய அரசியல் சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர், அதற்காக மகிழ்ச்சி தெரிவித்து, மாபெரும் கூட்டம் ஒன்று கலைவாணர் அரங்கில் நடத்தப் பெற்றது. வரலாற்றுச் சிறப்பு மிக்க அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் பேற்றினை யும் யான் பெற்றேன். தமிழ்நாடு பெயர் மாற்றத்தை முதன் முதலில் கோரிய இயக்கத்தின் தலைவன் என்பதற்காகவே நன்றியுணர்வுடன் தி.மு.க. தலைவர்கள் அந்த வாய்ப்பினை எனக்குத் தந்திருக்க வேண்டும். அதுதான் அண்ணா அவர்கள் தம் வாழ்க்கையில் கடைசியாகப் பேசிய பொதுக்கூட்டமாகும்.

நட்புக்குச் சோதனை!

தி.மு.க. ஆட்சிக்கும் தமிழரசுக் கழகத்திற்குமுள்ள நட்புக் குச் சோதனைகள் பல ஏற்பட்டன, ஆம்; அண்ணா அவர்கள்

காலத்திலேயே! ஆங்கில பக்தர்களான டாக்டர் ஆ. இராமசாமி முதலியாரும், டாக்டர் ஆ. இலக்குமணசாமி முதலியாரும் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடத்திய ஆங்கிலப் பாதுகாப்பு மாநாடு அத்தகைய சோதனைகளில் ஒன்றாகும். தமிழ்நாட்டிலே, தமிழினத்தின் அறிஞர்கள் கூடி, தங்கள் தாய் மொழியின் மீது கடந்த இருநூறாண்டுக் காலமாக ஆதிக்கம் செலுத்திவரும் ஆங்கில மொழியை — அந்த ஆதிக்க நிலையிலேயே — பாதுகாப்பதற்காக மாநாடு நடத்துவது உலக நாடுகளெலாம் எள்ளி நகையாடத் தக்க இழிசெயல் என்று கருதி அந்த மாநாட்டின் முன் மறியல் நடத்தப் போவதாக அறிவித்தேன்.

மாநாடு விரிவான பிரதிநிதித்துவ முறையில் — அனைத்திந்திய ரீதியில் — நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. செய்தி இதழ்களும் மாநாட்டைப் பிரபலப்படுத்தின. எதிர்ப்பு இருக்குமென்பதை அறிந்ததும், டாக்டர் ஏ.ஆர். முதலியார், என்னுடன் பேச வருவதாக தகவல் அனுப்பினார். அறிஞர் முதலியாரிடம் எனக்கு மதிப்பு உண்டாகையால், நானே அவருடைய இல்லத்திற்கு வந்து பேசுவதாகச் சொல்லியனுப்பினேன். மாநாடு கூடுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நாங்கள் சந்தித்துப் பேசினோம். அரசு அலுவலகங்களிலே ஆட்சி மொழியாகவும், கல்லூரிகளிலே அனைத்துப் பாடங்களுக்கும் பயிற்று மொழியாகவும் தமிழே வருவதனைக் கொள்கையளவில் ஆதரித்து டாக்டர் ஏ.ஆர். முதலியார் உடனடியாக அறிக்கை விடுவதானால், ஆர்ப்பாட்டம் கைவிடப்படுமென்று அவருக்கு உறுதி கூறினேன். அதற்கு அவர் ஒப்பவில்லை."

முன்கூட்டி அறிவித்திருந்தபடி 4.11.67 அன்று ஆங்கிலப் பாதுகாப்பு மாநாடு தொடங்கியது. மாநாடு கூடிய மண்டபத்திற்கெதிரே எனது தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தப் பெற்றது. இதில், கலந்து கொள்வதற்கு, கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் காப்பாற்றக் கூடியவர்களையே தேர்ந்தெடுத்து அனுமதித்தேன். சுமார் 350 பேர் கலந்து கொண்டனர். அவர்களில் 30 பேர் பெண்கள். கழக முன்னணித் தோழர்களில் பலர் தத்தம் மனைவியருடன் பங்கு கொண்டனர். நானும் என் மனைவி இராசேசுவரியுடன் கலந்து கொண்டேன்.

புறக்கடை வழியிலே...

ஆர்ப்பாட்டக்காரர்கள் மயிலையிலுள்ள திருவள்ளுவர் சிலையிடமிருந்து அணிவகுத்து ஊர்வலமாகப் புறப்பட்டு மாநாடு நடந்த மண்டபத்தின் தலைவாயிலை அடைந்தனர். அப்போது அந்த வாயில் பூட்டப்பட்டிருந்தது. பாவம்! பறங்கி மொழி பயின்ற பட்டதாரி அறிஞர்களெல்லாம் வேறு ஒரு குறுகிய வழியாக மண்டபத்திற்குள் சென்றனர். அப்படிச் செல்வது அவமானம் என்று அவர்கள் கருதவில்லை. தாய் மொழிக்கு எதிராக அன்னிய மொழிக்குப் பாதுகாப்புத் தேடுவதிலுள்ள அவமானத்தையே அவர்கள் உணரவில்லையே!

போலீஸ் பந்தோபஸ்து பலமாக இருந்தது. நானும் மற்ற ஆர்ப்பாட்டக்காரர்களும் கைது செய்யப்படக் கூடுமென்றே எல்லோரும் கருதினர். ஆனால், தி.மு.க. ஆட்சி அந்த அளவுக்குச் செல்லவில்லை. ஆர்ப்பாட்டத்தை நானே தலைமை தாங்கி அமைதியான முறையில் நடத்தியதும் அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். அறிவித்திருந்தபடி, மாநாட்டிலே முதலமைச்சர் அண்ணா அவர்கள் கலந்து கொள்ளவில்லை. அவர் கலந்து கொள்ளக் கூடாதென்று நான் பத்திரிகைகளில் விடுத்திருந்த வேண்டுகோளுக்கு மதிப்பு தந்தார். ஆனால், தனக்குப் பதிலாக கல்வியமைச்சர் நாவலரை அனுப்பியிருந்தார். அவர் எழுதிப் படித்த சொற்பொழிவிலே, ஆட்சி மொழியாகவும், கல்லூரிகளில் பயிற்சி மொழியாகவும் ஆங்கிலம் நீடிக்கச் செய்வது அரசின் கொள்கை அல்லவென்றும், படிப்படியாகத் தமிழே பயன்படுத்தப்படுமென்றும் கூறி, மாநாட்டை நடத்தியவர்களின் முகத்தில் கரி பூசிவிட்டார்.

மாநாட்டில் பேசிய ராஜாஜி கூட, ''ஒரு காலத்தில் தமிழ் தான் கல்லூரிகளில் பயிற்று மொழியாக இருக்கும்'' என்பதனை ஒப்புக் கொண்டு, ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆறுதல் கூறினார். ஆங்கிலத்தைப் பாதுகாக்கக் கூடிய மாநாட்டுப் பிரதிநிதிகள் தமிழுக்குப் பாதுகாப்பு கிடைக்குமென்று உறுதி கூறியவர்களின்

பேச்சைக் கேட்டுவிட்டு, தீர்மானம் எதுவும் நிறைவேற்றாமல், கலைந்து விட்டனர். மாநாட்டினர் நடவடிக்கைகளைத் திசை திருப்பிவிட்ட அளவில் நான் நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு வெற்றி கிடைத்தது.

அதிர்ஷ்ட ஆண்டு!

1967-ஆம் ஆண்டின் பிப்ரவரித் திங்கள் இரண்டு பெரிய சிறப்புகளை எனக்கு வழங்கியது. முதல் சிறப்பு சாகித்ய அகடமியிடம் பரிசு பெற்றதாகும். அடுத்தது தியாகராய நகர் தொகுதியில் சட்டப்பேரவைக்கு நான் தேர்ந்தெடுக்கப்பட்ட தாகும்.

நான் எழுதி இன்ப நிலையத்தாரால் வெளியிடப் பெற்ற ''வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு'' என்னும் நூல் டில்லி சாகித்திய அகடமியால் 1966-ஆம் ஆண்டின் பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றது. இந்தச் செய்தியை நாளிதழ்களில் படித்தபோது, தேர்தலில் கிடைக்கவிருந்த வெற்றியைக் கூட இரண்டாந்தரமானதாகவே என் மனம் கருதியது. என்னவோ, எப்பொழுதுமே அரசியலை விடவும் இலக்கியத் துறையிலேயே என் மனம் அதிகமாக ஈடுபாடு கொண்டு விடுகிறது!

12.3.67-இல் புதுடில்லி ஜனாதிபதி பவனத்தில் நடந்த சிறப்பு விழாவிலே ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்க ளால் பரிசு வழங்கப் பெற்றது. நான் நேரில் சென்று ஐயாயிரம் ரூபாயையும், ஒரு செப்புப் பட்டயத்தையும் பரிசாகப் பெற்றேன். அவற்றை வழங்கும்போது, ''தங்களுடைய நூலைப் படித்தேன். ரொம்ப ஆராய்ச்சி செய்து எழுதியிருக்கிறீர்கள். அது என்னைப் பெரிதும் கவர்ந்தது'' என்று ஜனாதிபதி அவர் கள் தமிழிலே மிகுந்த ஆர்வத்துடன் கூறி, தனிப்பட்ட முறையி லும் என்னைப் பாராட்டினார். தமிழ்நாட்டின் அரசியல் கட்சித் தலைவர்களிலே சாகித்ய அகடமியின் பரிசைப் பெற்ற இலக்கிய கர்த்தாக்கள் நானும் ராஜாஜியும்தான்.

ராஜாஜியின் பாராட்டு!

இந்த விழாவையொட்டி அகடமியின் சார்பில் ஆங்கிலத்திலும், இந்தியிலும் வெளியிடப் பெற்ற அறிமுகப் பிரசுரத்திலே, என்னைப் பற்றித் தரப்பட்டிருந்த தகவலின் ஒரு பகுதி வருமாறு:

''ஒரு குடிசைப் பிரதேசத்தில், வறுமை மிக்க குடியில் பிறந்தவர். அச்சுக் கோக்கும் தொழிலாளியாக வாழ்க்கை தொடங்கி சொந்த முயற்சியால் இலக்கியம் பயின்றவர். தெள்ளிய நடையில் எழுத வல்லவர். இவருடைய நடையில் வேகமும் கவர்ச்சியுமுண்டு. இவருடைய ''வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு'' தமிழ் இலக்கியக் களஞ்சியத்திற்கு ஒரு புதிய வரவு ஆகும்.''

இந்த நூலின் முதற் பதிப்பு வெளியானபோதே மூதறிஞர் ராஜாஜியிடமிருந்து பாராட்டுக் கடிதம் கிடைத்தது. அதிலே, ''மிகவும் ஆராய்ச்சி செய்து எழுதியிருக்கிறீர்கள். என் அன்பும் ஆசியும்'' என்று குறிப்பிட்டிருந்தார். இரண்டாவது பதிப்பு வெளியீட்டு விழா சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு பேசிய ராஜாஜி, ''இதுபோன்ற சிறந்த ஆராய்ச்சி நூலை என் போன்ற ஆங்கிலம் படித்தவர்கள் எழுதித் தருவது அரிது'' என்று குறிப்பிட்டு என்னை வாழ்த்தினார்.

இராமலிங்கா மிஷன், தமிழ் எழுத்தாளர் சங்கம், இன்ப நிலையம், தமிழரசுக் கழகக் கிளைகள் ஆகிய அமைப்புகளால் சென்னையிலும், வெளி மாவட்டங்களிலும் தொடர்ந்து மூன்று மாத காலம் பாராட்டு விருந்துகளும், பொதுக் கூட்டங்களும் நடத்தப்பெற்றன. 'கல்கி', 'ஆனந்த விகடன்', 'கலைமகள்', 'நூலகம்' ஆகிய தமிழ் இதழ்களிலேயும், 'லிங்க்', 'பவான்ஸ் ஜர்னல்', 'பிரீஇண்டியா', 'சாகித்திய அகடமி' ஆகிய ஆங்கில இதழ்களிலேயும் என்னைப் பாராட்டி கட்டுரைகளும் குறிப்புகளும் வெளியாயின.

பத்திரமும் விருதும்

1972-இல் குடியரசு நாளையொட்டி மத்திய அரசு எனக்கு 'பத்மஸ்ரீ' விருது வழங்கியது. இந்த விருதும் இலக்கியத் துறையில் யான் ஆற்றியுள்ள பணிகளுக்காகவே ஜனாதிபதி யால் வழங்கப் பெற்றது. என் மனைவியுடன் புதுடில்லி சென்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற சிறப்பு விழாவில் அவ் விருதினைப் பெற்றேன். ஜனாதிபதி வி.வி.கிரி அவர்கள் எனக் குப் பரிசு வழங்கும்போது, ''கிராமணி! உங்களுடைய வளர்ச்சி கண்டு மகிழ்ச்சியடைகிறேன். உங்களுக்கு விருது வழங்கு வதிலே எனக்கு இரட்டை மகிழ்ச்சி'' என்று மிகுந்த ஆர்வத்து டன் குறிப்பிட்டார்.

விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறை புகுந்தவன் என்ற முறையிலே மத்திய அரசின் சார்பில் 2.10.73 அன்று சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா நினைவு மண்டபத்திலே முதல்வர் கலைஞர் மு.கருணாநிதியவர்களிடம் 'தாமிரப் பத்திர மும்' பெற்றேன். இது மத்திய அரசு மூன்றாவது முறையாக எனக்குச் செய்த சிறப்பாகும்.

த.அ.க. வெள்ளி விழா

1972 ஜனவரி 8-ஆம் நாளிலே தமிழரசுக் கழகத்திற்கு 26-ஆம் ஆண்டு பிறந்ததையொட்டி அதன் வெள்ளி விழாவைக் கொண்டாட ஏற்பாடு செய்தேன். கலைஞர் தி.க. பகவதி அவர்கள் தலைமையிலே அமைக்கப்பெற்ற வெள்ளிவிழாக் குழு வெற்றிகரமாக விழாவை நடத்தியது. கவிஞர் கு.சா. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் கவியரங்கும், அருட்செல்வர் ஏ.பி. நாகராசன் தலைமையில் பட்டிமன்றமும், இறுதி நிகழ்ச்சி யாக எனது தலைமையில் வெள்ளி விழாவும் சிறப்பாக நடை பெற்றன.

தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் கவி ஞர் அ.செகதீசனார் கலைவாணர் அரங்கத்தில் வெள்ளம்போல் குழுமியிருந்த மக்கள் உள்ளங்களையெல்லாம் கவரும் வகை யில் தமது கவிதைகளைப் பாடி அரங்கேற்றினார். பட்டிமன்றத்

திலே ''சிலம்புச் செல்வரிடம் விஞ்சி நிற்பது மொழிப் பற்றா, நாட்டுப் பற்றா?'' என்பதுபற்றி விவாதிக்கப் பெற்றது. விவாதத்தில் கலந்து கொண்ட அவ்வளவு பேரும் நானே வியக்கும் வண்ணம் அருமையாகப் பேசினர். ஏழை நெசவாளியான சேலம் ஆ.சின்னையன் அவர்களின் பேச்சு பண்டிதர்களையும் கவர்ந்தது. நடுவர் கலைஞர் ஏ.பி.என். அவர்கள், ''மொழிப் பற்றே'' என்று தீர்ப்பளித்தார். அதுபற்றி அவர் தந்த விளக்கம் அவர் மிகச் சிறந்த சிந்தனையாளர் என்பதைக் காட்டுவதாக இருந்தது.

வெள்ளிச் செங்கோல்

வெள்ளி விழாவிலே முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் கலந்து கொண்டு விழாக் குழுவின் சார்பில் வெள்ளியாலான செங்கோல் ஒன்றினை எனக்கு வழங்கி, பொன்னாடை ஒன்றையும் போர்த்தி என்னைச் சிறப்பித்ததோடு, என்னால் வளர்க்கப்படும் தமிழரசுக் கழகத்தையும் வாழ்த்திப் பேசினார்.

தமிழரசு இயக்கத்தின் கொள்கைகளைச் செயல்படுத்தி வரும் அரசின் முதல்வர் என்பதற்காக, அந்த அரசுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தமிழரசுக் கழகத்தின் சார்பில் வெள்ளியாலான சிலம்புக் கேடயம் ஒன்றை கலைஞர் மு.கருணாநிதிக்கு அவ்வை தி.க.சண்முகம் வழங்கினார். கல்வியமைச்சர் நாவலர் இரா.நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்கள், வெள்ளி விழாவையொட்டி தயாரிக்கப்பெற்ற 'செங்கோல்' சிறப்பு மலரை வெளியிட்டு, தமிழரசுக் கழகத்தை மனமார, வாயார வாழ்த்திப் பேசினார். தொழிலதிபர் திரு.நா. மகாலிங்கம் அவர்கள், ''மாஸ்கோவிலிருந்து லண்டன் வரை'' என்ற எனது நூலை வெளியிட்டுப் பேசினார்.

கவலை கலக்காத களிப்புணர்ச்சியை அடைய ஆண்டவன் என்னை என்றுமே அனுமதித்ததில்லை. நான் பெருங்களிப்பு அடைய வேண்டிய நிகழ்ச்சிகளின் போதெல்லாம் கவலையையுமடைய வேண்டிய சூழ்நிலையும் உருவாகிவிடுவது வழக்கம். கால் நூற்றாண்டுக் காலம் வருணித்துச் சொல்ல இயலாத இன்னல்களையெல்லாம் ஏற்று நான் வளர்த்த ''தமிழரசுக்

கழகம்'' என்னும் காளையின் வெள்ளி விழாவின்போது என் மனத்துள் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. ''நான் வளர்த்த காளை'' என்னும் தலைப்பிலே ''செங்கோல்'' மலரில் நான் எழுதியுள்ள சிறப்புக் கட்டுரையைப் படிப்போர் அந்த விழாவின் போது நான் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்ததை உணர்ந்து கொள்ளலாம். மலரை வெளியிட்ட நாவலர்கூட அந்தக் கட்டுரையைப் பெரிதும் பாராட்டினார். எதிர்பாராதவித மாக வெள்ளி விழா நாளிலே குடற்புண் காரணமாக நான் கடுமையாக நோய்ப்பட்டு விட்டேன். இருந்தும், நோயைச் சகித்துக் கொண்டு, என் கழகத் தோழர்கள் அடையும் மனக் களிப்பிலே கவலையும் கலந்துவிடக் கூடாது என்று கருதி, நானும் விழாவிலே பங்கு கொண்டேன். அதனால், நோய் மிகவும் கடுமையாகி, விழா முடிந்த மூன்றாவது நாளிலேயே சென்னை பெரிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். இரண்டு வாரங்களில் முழு அளவில் குணமாகி வீடு திரும்பி னேன்.

தி.மு.க. மீது செல்வாக்கு

சட்டப்பேரவையில் நான் அங்கம் வகித்தது நான்கு ஆண்டு கள்தான்! ஆம், 1967 முதல் 1970 வரை! அந்த நான்காண்டு களிலே சரித்திரத்திலே இடம் பெறத்தக்க பணிகளை ஆற்ற முடிந்ததனை நினைக்கும் போதெல்லாம் நான் பெருமகிழ்ச்சி அடைவதுண்டு. தி.மு.க. அரசு புரியுங்காலத்தில் நான் பேரவை யில் இருந்ததனாற்றான் தமிழுக்காக — தமிழினத்துக்காக நினைத்ததைச் சாதிக்க என்னால் முடிந்தது.

தி.மு.க. அமைச்சரவை மீது பிறர் பொறாமைப்படத்தக்க வகையில் எனக்குச் செல்வாக்கு இருக்குமானால், அதனை எனது சுயநலத்திற்காக நான் பயன்படுத்திக் கொண்டதே இல்லை. அதுபற்றி நான் நினைத்ததுகூட இல்லை. அது எனது சுபாவமுமல்ல. தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவே — தமிழி னத்தின் வாழ்வுக்காகவே தி.மு.க. அரசின் மீது எனக்குள்ள செல்வாக்கை நான் பயன்படுத்தி வந்திருக்கிறேன்.

சட்டப்பேரவைத் தலைவர் அவைக்கு வரும்போது ''ஆனரபில் ஸ்பீக்கர்' என்று சார்ஜண்ட் கட்டியங்கூறுவது

வழக்கம். ஆனால், 'மாண்புமிகு பேரவைத் தலைவர்' என்று தமிழில் கூறுமாறு நான் பேரவையிலே வெளியிட்ட வேண்டுகோளை பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் மறுநாளே நிறைவேற்றி வைத்தார்.

1969 ஆகஸ்டுத் திங்களிலே தமிழினத்தார் கோரும் மாநிலச் சுயாட்சி இன்னதெனத் தெளிவுபடுத்தி அதனை உடனடியாக வழங்குமாறு மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று தமிழக அரசுக்குச் சட்டப் பேரவை ஆணையிடும் உத்தியோகப் பற்றற்ற தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தேன். காங்கிரஸ் கட்சியைத் தவிர — சுதந்திராக் கட்சி உள்ளிட்ட — அனைத்துக் கட்சிகளும் எனது தீர்மானத்தை உறுதியாக ஆதரித்தன.

''உரிய நேரத்தில் இதுபோன்ற ஒரு தீர்மானம் அரசின் சார்பிலேயே சட்டப்பேரவையில் கொண்டு வரப்படும். ஆகவே, இப்போதைக்குத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாம்'' என்று முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி பேரவையில் கேட்டுக் கொண்டார். அதன் பேரில் பார்லிமெண்டரி மரபுப்படி நான் எனது தீர்மானத்தின் மீது வாக்கெடுக்குமாறு வற்புறுத்தவில்லை.

சுயாட்சிப் போராட்டம்!

1969 ஆகஸ்டு 20-இல் மாநிலச் சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்தித் தமிழரசுக் கழகம் போராட்டம் நடத்தியது. தமிழக மாவட்டங்களின் தலைநகரந்தோறும் உள்ள மத்திய அரசின் அலுவலகங்கள் முன்பு கழகத் தோழர்கள் மறியல் நடத்தினர். அதிலே, சுமார் 600 பேர் வரை ஒரே நாளில் கைது செய்யப்பட்டு, ஒரு பகல் முழுவதும் காவல் நிலையத்தில் வைக்கப்பட்ட பின்னர், மாலையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்தப் போராட்டம் நடந்த நாளைக்கு முந்திய நாளிலே தமிழக முதல்வர் சட்டப் பேரவையில் உத்தேசப் போராட்டத்தை ஒத்திப் போடுமாறு என்னைக் கேட்டுக் கொண்டார். மத்திய — மாநில உறவு பற்றி ஆராய்ந்து அறிக்கை தர டாக்டர் பி.வி. இராசமன்னார் தலைமையில் ஒரு குழு நியமிப்பதாகவும், அதன் அறிக்கை கிடைத்த பின்னர் சுயாட்சிக்காகப் போராட அரசே பொறுப்பேற்கும் என்றும் முதல்வர் உறுதி கூறினார்.

இந்த உறுதிமொழியின் காரணமாகத்தான் போராட்டத்தை ஒரு நாளைக்கு மட்டும் — அடையாளப் போராட்டமாக — நடத்தி நிறுத்தினேன்.

காங்கிரஸ் கட்சி அகில இந்திய ரீதியில் 1970-இல் பிளவுபட்டது. அதனால், டில்லி லோக் சபையிலும் ராஜ்ய சபையிலும் இந்திரா காந்தியின் காங்கிரசுக்குப் பெரும்பான்மை யில்லாத நிலைமை ஏற்பட்டது. அதனையொட்டி, ஓராண்டுக்கு முன்னதாகவே நாடாளுமன்றத்திற்குப் பொதுத் தேர்தல் நடத்த மத்திய அரசு முன் வந்தது. அதே சமயத்தில் தமிழகச் சட்டமன் றத்திற்கும் ஓராண்டிற்கு முன்னதாகவே தேர்தல் நடத்த விரும்பி யது தி.மு.க. அரசு. மத்திய அரசும் அதற்கு இசைவு தந்தது. இதனால், 1971 பிப்ரவரியில் நாடாளுமன்றத்துடன் சேர்த்து தமிழகச் சட்டமன்றத்திற்கும் தேர்தல் நடைபெற்றது.

இந்திரா காந்திக்கு ஆதரவு

1969-இல் இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தல் காரண மாக காங்கிரஸ் கட்சி பிளவுபட்டபோது நான் பிரதமர் இந்திரா காந்தியின் தலைமையில் தோன்றிய புதிய காங்கிரசுக்கு ஆதரவு காட்டினேன். ஆம்; தேச அரசியலிலே மறுமலர்ச்சி ஏற்படுத்தக் கூடிய புரட்சிச் சக்தியாக நான் புதிய காங்கிரசை நம்பினேன். திரு. நிஜலிங்கப்பா தலைமையில் இருந்த 'எஞ்சிய காங்கிரசி' டம் எனக்கு நம்பிக்கையில்லை. காங்கிரசில் பிளவு ஏற்படாவிட் டால், அந்தப் பெருமை மிக்க நிறுவனம் அழிந்து, அதனால் நாட்டுக்குக் கேடு நேரக்கூடுமென்றும் நான் அஞ்சினேன். அந்த 'விபத்து' ஏற்படுவதைத் தவிர்க்கும் ஆற்றல் நேருவின் செல்விக்கு இருப்பது எனக்குப் புலனாயிற்று. நிஜலிங்கப்பா, காமராசர், மொரார்ஜி தேசாய் ஆகிய வயோதிகத் தலைவர்களி டம் நாடு நம்பிக்கையிழந்து விட்டதென்று நான் கருதியதாலும் இந்திராவின் தலைமைக்கு ஆதரவளிக்க வேண்டியவன் ஆனேன்.

பிரதமர் இந்திராவோ, அவரது தமிழ்நாட்டு சகாக்களோ என்னைக் கேட்டுக் கொள்ளாமலே நான் இந்திராவின் தலைமையை — அவரது புதிய காங்கிரசை மிகவும் தீவிரமாக

ஆதரித்து எழுதியும் பேசியும் பிரச்சாரம் செய்து வந்தேன். தமிழரசுக் கழகத்தையும் எனது போக்கில் செயல்படச் செய்தேன். ஒரு சந்தர்ப்பத்தில் அப்போது இந்திரா காங்கிரசின் தற்காலிகத் தலைவராக இருந்த திரு.சி.சுப்பிரமணியம் என் வீட்டிற்கு வந்து நான் தனது கட்சியில் சேர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மற்றொரு முறை திரு. பக்தவத்சலம் அவர்கள் வீட்டிற்கு என்னை அழைத்து, அங்குத் தனது விருப்பத்தை வெளியிட்டு, ஆலோசித்து விரைவில் பதில் சொல்லுமாறு எனக்கு திரு.சி.சு. அவகாசம் கொடுத்தார்.

9.10.70-இல் மயிலாப்பூர் ஏ.வி.எம். இராசேசுவரி திருமண மண்டபத்தில் திரு.மீ. பக்தவத்சலனார் பிறந்த நாள் விழா நடந்தது. அதிலே பேசியபோதும் புதிய காங்கிரசில் சேர வருமாறு பொதுமக்களறிய திரு.சி.சு. எனக்கு அழைப்பு விடுத்தார். புதிய காங்கிரசுடன் தமிழரசுக் கழகத்தை இணைத்து விடுவதையோ, நான் மட்டும் தனியாக அதிலே சேர்ந்து கொள்வதையோ நான் விரும்பவில்லையென்றாலும், அந்தக் கட்சியின் சார்பில் சென்னை நகரிலும் வெளியூர்களிலும் நடந்த சில கூட்டங்களில் கலந்து கொண்டு, அதன் சோஷலிசக் கொள்கைகளை ஆதரித்துப் பேசினேன். சென்னைக் கடற்கரையில் பிரதமர் இந்திரா காந்தி பேசிய கூட்டத்திலே — அவரும் மேடையிலிருந்தபோது — அவரை வரவேற்றுப் பேசினேன்.

புதிய காங்கிரசையும் பிரதமர் இந்திரா காந்தியின் ஆட்சியையும் நானும் தமிழரசுக் கழகமும் ஆதரித்ததால், தி.மு.க. வுடன் உள்ள உறவு பாதிக்கப்படவில்லை. காரணம், தி.மு.க. வினர், என்னைவிடவும் பிரதமர் இந்திராவோடும் அவரது கட்சியோடும் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்ததுதான். தமிழ்நாட்டில் புதிய காங்கிரஸ் வளர்வதோ, வலுப்பெறுவதோ சாத்தியமில்லையென்பதனை அப்போதே என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. பிற்கால அனுபவமும் அதனை மெய்ப்பித்து விட்டது. மற்றும், மாநிலச் சுயாட்சிக் கோரிக்கையைப் புதிய காங்கிரஸ் ஏற்காதென்பது ஆராய்ச்சியின்றியே நான் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அதனால் நான் புதிய காங்கிரசில் சேர விரும்பவில்லை.

மயிலையில் தோற்றேன்!

1971 பிப்ரவரியில் நடந்த தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் தமிழரசுக் கழகத்தின் வேட்பாளனாக நான் மயிலைத் தொகுதி

யிலும், நண்பர் ஈ.எஸ். தியாகராயன் திருத்தணிகைத் தொகுதி யிலும் போட்டியிட்டோம். தணிகையில் வெற்றியும், மயிலை யில் தோல்வியும் கிடைத்தன. மயிலைத் தொகுதியிலுள்ள படித்த வகுப்பார் எனது தோல்வியை விரும்பி வருணாசிரம தருமப்படி 'அருச்சனை' செய்தனர். கல்லூரி மாணவர்களில் ஒரு சாரார் என்னைத் தோற்கடிக்க அரும்பாடுபட்டனர். அதன் விளைவாக, தென் சென்னையிலுள்ள ஒரு கல்லூரி என்னை எதிர்த்த காங்கிரஸ் வேட்பாளரின் 'தேர்தல் அலுவலகம்' போல இயங்கியது.

படித்த வகுப்பார் என்னை வெறுக்கக் காரணம், நான் தி.மு.க.வுடன் தோழமை கொண்டதுதான். வருணாசிரமத் தலை மைக்கு நன்றியுணர்வு அந்நியமென்பதனை முன் எப்போதை யும் விட அப்போதுதான் அதிகம் உணர்ந்தேன். ஆனால், அதற்கு விலக்காகவும் சிலர் 'தமிழர்' என்ற இன உணர்வுடன் எனக்கு எல்லா வகையிலும் ஒத்துழைத்தனர் என்பதனை இங்கு நன்றியுணர்வோடு நான் சொல்லியாக வேண்டும். அந்த சிலர் பலராகும் நாள் வந்தே தீரும்.

மனப்புண்ணுக்கு மருந்து

படிக்காதவர்கள் மிகுதியாகவுள்ள தணிகைத் தொகுதி யிலே நன்றியுணர்வு வெளிப்பட்டது. மயிலைத் தொகுதியில் தோற்றதால் ஏற்பட்ட மனப்புண்ணுக்குத் தணிகைத் தொகுதியில் கிடைத்த வெற்றி மருந்தாக அமைந்தது. தேர்தல் களத்தில் அனுபவம் பெறாமலே 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்ல வர்கள்' எனத் தாயுமானவர் பாடியதன் பொருளை முன் எப்போதையும்விட இப்போது தெளிவாக உணரலானேன்.

மயிலைத் தொகுதியில் தமிழரசுக் கழகம் தோற்றதற்கு மற்றொரு சாராரும் காரணமாவர். அவர்கள் நான் தோழமை கொண்டுள்ள கட்சியைச் சார்ந்த 'அதிருப்தியாளர்'களாவர். வெளிப்படையான பகையைவிட, நட்பு வடிவில் மறைந்தொழு கும் பகைதான் பயங்கரமானது! இதனைத் தெரிவிக்கத்தான்,

''வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு''

என்றார் வள்ளுவர். இந்த உட்பகைதான் மயிலைத் தொகுதியில் எனக்கிருந்த வெற்றி வாய்ப்பைப் பாழடித்தது. மயிலைத் தொகுதியில் நான் தோல்வியுற்றது குறித்து என்னைவிடவும்

முதல்வர் கலைஞர் உள்ளிட்ட தி.மு.க. தலைவர்களும் தொண்டர்களும் (அதிருப்தியாளர் தவிர) அதிகமாக வருந்தினர். துன்ப காலத்தில்தான் தோழமையின் பெருமை தெரிகிறது.

அதிர்ஷ்ட ஆண்டு

1971-ஆம் ஆண்டு என் அளவில் தோல்வியோடு தொடங்கியது. அந்த ஆண்டிலே மகிழ்ச்சிதரத்தக்க எதையுமே நான் சந்திக்கவில்லை. ஆனால், 1972-ஆம் ஆண்டு நான் எதிர்பாராத வகையில் எத்தனையெத்தனையோ அருமை பெருமைகளை எனக்குத் தந்தது. அந்த ஆண்டின் தொடக்கமே மகிழ்ச்சி தருவதாக இருந்தது.

ஜனவரி 8-ஆம் நாளிலே தமிழரசுக் கழகத்தின் வெள்ளி விழாவைக் கொண்டாடி மகிழ்ந்தேன். அதிலே வெள்ளியாலான செங்கோல் ஒன்றையும் பெற்றேன். ஜனவரி 11-இல் தமிழக அரசின் பிரதிநிதியாக ஆளுநர் கே.கே.ஷா அவர்களால் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர் பொறுப்பிலே இரண்டாவது முறையாக நியமிக்கப்பெற்றேன்.

ஜனவரி 26-இல் மத்திய அரசிடம் 'பத்மஸ்ரீ' விருது பெற்றேன்.

ஏப்ரல் 20-இல் தமிழகச் சட்டமேலவை உறுப்பினராக ஆளுநர் மேதகு கே.கே.ஷா அவர்களால் நியமிக்கப் பெற்றேன்.

ஏப்ரல் 26-இல் தமிழரசுக் கழகப் பொதுச் செயலாளரும், தமிழ்நாடக உலகின் சக்கரவர்த்தியுமான முத்தமிழ்க் கலாவித்துவ ரத்தினம் — 'பத்மஸ்ரீ' ஔவை தி.க. சண்முகம் அவர்களுக்கு மணிவிழா நடத்திப் பார்த்து மகிழ்ந்தேன்.

ஏப்ரல் 29-இல் சட்டமன்ற தி.மு.க.வின் பேராதரவோடு மேலவையின் துணைத் தலைவர் பதவிக்குப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பெற்றேன்.

விடுதலை வெள்ளி விழா

நான் தமிழகச் சட்ட மேலவையில் அங்கம் பெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் — என்னை வரவேற்கும் முறையிலே — மேலவைத் தலைவர் மாண்புமிகு திரு சி.பி. சிற்றரசு அவர்கள் ''இனி மேலவை நடவடிக்கைகள் தமிழிலே நடக்கும்''

என்று மேலவைக் கூட்டத்திலேயே அறிவித்தார். இந்த அறிவிப்பு எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தது. நான் மேல வைக்குச் சென்றது தமிழுக்கு வாழ்வு தேடத்தானே!

ஆகஸ்டு 15-இல் விடுதலை வெள்ளி விழாவைக் காணும் பேறுபெற்றேன். அன்று நள்ளிரவில் சட்டமன்றக் கூட்டம் நடந்தது. அதிலே கலந்துகொண்டு நான் பேசியபோது, எனது வாழ்க்கையில் வேறு எப்போதையும் விட என் மனம் பூரிப் படைந்தது. உடம்பு புல்லரித்தது! ஆம்! விடுதலைப் போரில் சிறைப்பட்டு சீரழிந்த உடல் அல்லவா! பூரிப்பும் புல்லரிப்பும் அடையத்தானே செய்யும்!

அக்டோபர் 2-இல் மத்திய அரசின் திட்டப்படி தமிழக முதல்வரின் கரத்தால் சென்னை பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற காந்தியடிகள் விழாவிலே ''தாமிரப் பத்திரம்'' பெற்று மகிழ்ந்தேன்.

செப்டம்பர் 5-இல் நான் எவருடைய வீர வரலாற்றைப் பட்டிதொட்டியெல்லாம் பரப்பப் பாடுபட்டேனோ — எவருடைய வரலாற்றை எழுதி முதன் முதலாக 'நூலாசிரியன்' என்ற தகுதியைப் பெற்றேனோ அவருடைய — ஆம்; கப்பலோட்டிய தமிழருடைய நூற்றாண்டு விழாவினைச் சென்னையில் நடத்தி மகிழும் பேறுபெற்றேன்.

அந்த ஆண்டிலே என்னை வளர்த்துவரும் — என்னாலும் வளர்க்கப்பட்டுவரும் தமிழரசுக் கழகத்தின் கொள்கைகள் பல இந்திய உபகண்டத்தில் வெற்றி பெறுவதையும் கண்டு மகிழ்ந்தேன்.

1972-ஆம் ஆண்டு பிறக்கவிருந்த நேரத்திலே வங்கதேசம் பாகிஸ்தானிலிருந்து பிரிந்து சுதந்திர நாடாக ஆனது. இந்தியாவோ, பாகிஸ்தானோ துண்டாடப்படுவதை நான் விரும்பாதவன் என்றாலும், சுயாட்சி மறுக்கப்படுகின்ற இடத்தில் சுதந்திரம் தான் தோன்றும் என்ற உண்மையினை உணர்ந்தவன். அதனால், சுயாட்சி கேட்ட வங்கதேசம் — அது மறுக்கப்பட்டபோது — தனது சுதந்திரத்தைத் தானே பிரகடனம் செய்தது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

நிறுத்தி வைக்கிறேன்!

எனது போராட்ட வாழ்க்கை வரலாறு எதிர்பார்த்ததை விடவும் நீண்டுவிட்டது. என் சொந்த வாழ்க்கையைச் சுருக்கமாகக் கூறிவிட்டு, எனது பொது வாழ்க்கையை மட்டுமே விரித்துரைத்துள்ளேன். ''எனது போராட்டம்'' ஒரு தனி மனிதரின் வரலாறாக மட்டுமல்லாமல், தமிழகத்தின் — தமிழினத்தின் — தமிழ் மொழியின் அரை நூற்றாண்டுக் கால வரலாறாகவும் இருப்பதனை வாசகர்கள் உணர்ந்திருப்பார்கள்.

பாரத விடுதலைப் போரில் தமிழினத்தாரின் பங்கு இதிலே விவரிக்கப்பட்டுள்ளது. பாரதம் சுதந்திரம் பெற்ற பின்னர், புதிய தமிழகம் படைக்க நடந்து வந்துள்ள போராட்டங்கள் விளக்கப்பட்டுள்ளன. ஆம்; தமிழ் மாநிலம் படைக்க, தலைநகர் காக்க, வடக்கு — தெற்கு எல்லைப் பகுதிகளை மீட்க, 'தமிழ்நாடு' பெயர் பெற, ஆங்கில மொழியின் ஆதிக்கத்திலிருந்து தமிழ் மொழியைப் பாதுகாக்க, 28 ஆண்டுக் காலம் நான் நடத்தி வந்துள்ள போராட்டங்களெல்லாம் விவரிக்கப்பட்டுள்ளன. அவற்றுடன், தமிழ் மாநிலத்திற்குச் சுயாட்சி தேட எடுக்கப்பட்டு வந்த முயற்சிகள் பற்றியும் தகவல்கள் தரப்பட்டுள்ளன. மத்தியில் சமஷ்டியும் மாநிலத்தில் சுயாட்சியும் காண்பதற்கான அரசியல் சித்தாந்தங்கள் இந்நூலில் விமர்சிக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பற்றுக்கும் நாட்டுப் பற்றுக்குமிடையே நடைபெற்று வந்த போராட்டத்தைத் தவிர்த்து, அவற்றிடையே ஒற்றுமை காண்பதற்காகக் குறிப்பாக, தேசிய ஒருமைப்பாட்டுக்கும், தமிழின உரிமைப்பாட்டுக்குமிடையே உறவு காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.

சாதி வேற்றுமைகளையும் சமயப் பகைமைகளையும் மறந்து கடந்த காலத்தில் தமிழர் இன உணர்ச்சியால் ஒன்றுபடத் தவறியதன் தீய விளைவுகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

வருணணையில்லாதது

கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழர் ஆகிய சரித்திர நாயகர்களுக்குக் கற்பிக்கப்பட்ட களங்கங்களைப் போக்கவும், அவர்கள் புகழொளி குன்றின் மேலிட்ட விளக்காகப் பிரகாசிக்க வும் எடுத்துக் கொள்ளப்பட்ட நடைமுறைகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. சுருங்கச் சொன்னால், தமிழகத்தின் அரை நூற்றாண்டுக்கால வரலாற்று நிகழ்ச்சிகளை இந்நூலில் தந்துள் ளேன். அந்த வகையில் இது தமிழரசுக் கழகத்தின் வரலாற்றுக் காப்பியமாகவும் அமைந்துவிட்டது. எனது வாழ்க்கையை மையப்படுத்தி எழுத நேர்ந்ததால், நிகழ்ச்சிகள் உணர்ச்சிபூர்வ மாக — தமிழ் மொழியின் அழகுதோன்ற சுவைபட வருணிக்கப் படவில்லை. தற்பெருமையாகக் கருதப்படலாமென்று அஞ் சியே அதனைத் தவிர்த்தேன்.

பொன் விழா வயது

1974-ஆம் ஆண்டோடு எனது பொது வாழ்க்கைக்கு அரை நூற்றாண்டு நிறைவு பெறுகின்றது. ஆம்; பொன்விழா கொண்டா டத்தக்க வயதைப் பெற்றுவிட்டது, எனது பொது வாழ்க்கை. இந்த நீண்ட காலத்திலே நான் ஒழுக்கத்தோடு பொது வாழ்க்கை நடத்த முயன்று வந்திருக்கிறேன். அதில் நான் எந்த அளவுக்கு வெற்றி பெற்றேனென்பது பற்றி வருங்காலம் தீர்ப்பளிக்கும்.

என்னை மறந்து, என் குடும்பத்தை மறந்து நான் பொது வாழ்க்கை நடத்தி வந்துள்ளேன். பி.சோ. கட்சியில் சேர்ந்து விடுமாறு செயப்பிரகாஷ் நாராயணர் ஆலோசனை கூறினார். ராஜாஜி, திரு. சி.என். அண்ணாதுரை, டாக்டர் ராம்மனோகர் லோகியா, திரு. சி. சுப்பிரமணியம் ஆகியோர் தம் தம் கட்சியில் சேருமாறு அன்போடும் மதிப்போடும் எனக்கு அழைப்பு விடுத் தனர். அப்போதெல்லாம் கொள்கையில் கொண்ட பிடிப்பு காரணமாக மறுப்புத் தெரிவித்தேன். அரசியலிலே தடம் புரளா மல் — இடம் பெயராமல் வாழ்க்கை நடத்த முடிந்ததற்காகப் பெருமிதம் அடைகிறேன்.

'நான் சேர்த்த' சொத்து!

அரை நூற்றாண்டுக் காலப் பொது வாழ்க்கைக்கு மத்தியில் நான் என் குடும்பத்துக்காக — என் பிள்ளை, பிள்ளைத் தலைமுறைக்காக என்று எனது சொந்த முயற்சியால் சேர்த்து வைத்த சொத்து ஒன்று இருக்குமானால், அது, ''எனது போராட்டம்'' என்ற இந்த வரலாறுதான்! நான் மேற்கொண்ட பணிகளில் வெற்றியையே கண்டு வந்துள்ளேன். இதனை நான் உறுதியாகச் சொல்ல முடியும். இன்னும் வெற்றி காண வேண்டிய பணிகள் பல இருக்கின்றன என்பதனை நான் மறந்துவிடவில்லை. எஞ்சியுள்ள எனது வாழ்நாட்களில் அவற்றிற்கும் வெற்றி தேடப் பாடுபடுவேன். எடுத்த கடமைகளை இடையில் கைவிட்டு ஓய்ந்துவிட மாட்டேன்.

எனது குடும்ப வாழ்க்கையில் நான் வெற்றி பெற்றேனா என்பது வேறு விஷயம். அதைப்பற்றி எனது சந்ததியார்தான் முடிவு சொல்ல வேண்டும். என் சொந்த வாழ்க்கையை லௌகீக முறையில் வெற்றிகரமாக நடத்த நான் திட்டமிட்டு முயன்றதேயில்லை. அதற்கு எனக்கு நேரம் ஏது? ஆகவே, அதிலே வெற்றி தோல்விகளுக்கு நான் பொறுப்பேற்பதற்கில்லை. ஆயினும், சமுதாயத்தின் முன்னே எனது சந்ததியார் தலைநிமிர்ந்து நடக்கத்தக்க வரலாற்றைப் படைக்கும் வகையில் எனது சொந்த வாழ்க்கையை நான் நடத்தி வந்திருக்கிறேன்.

ஐம்பதாண்டுகளுக்கு முன்பு இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையில் நான் சேர்ந்தில்லையானால், இருபத்தெட்டாண்டுகளுக்கு முன்னர் தமிழரசுக் கழகத்தை நான் தொடங்கியில்லையானால், எனக்கென ஒரு வரலாற்றை நான் படைத்திருக்கவே முடியாது. உயர்ந்த குறிக்கோள்களுக்குரியவனாக என்னை நான் ஆக்கிக் கொண்டிருக்க முடியாது. அதனால், இன்றும் நான் காங்கிரஸ் மகாசபையை நன்றியோடு நினைத்து வருகிறேன். அப்படியே, நான் வளர்த்துவரும் என்னையும் வளர்த்து வரும் தமிழரசுக் கழகத்தை என்னிலிருந்து வேறுபட்ட ஒன்றாக நினைக்க இயலாத அளவுக்கு அதனோடும், அதன் கடைசி ஒரு ஊழியரோடும் நான் இரண்டறக் கலந்துவிட்டேன் என்பதனைப் பெருமிதத்தோடு சொல்லிக் கொள்ளுகிறேன்.

முழுமை பெற்ற வாழ்வு

ஐம்பதாண்டுக் காலம் இடைவெளியின்றி ஒருவர் தொடர்ந்து பொது வாழ்க்கை நடத்துவதென்பது சாதாரண விஷயம் அல்ல. அதுவும், பிற்பட்ட சாதியிலே - ஏழைத் தொழிலாளியின் குடும்பத்திலே பிறந்த என் போன்றோர், சாதிக் கொடுமை - செல்வச் செருக்கு — அந்நிய மொழி ஆதிக்கம் ஆகிய படுகுழிகள் நிறைந்த சமுதாயத்திலே பொது வாழ்க்கையில் முன்னேறுவதென்பது சுலபம் அல்ல. அதிலுள்ள தொல்லைகள் என்னைப் போன்று அனுபவித்தவர்களுக்குத்தான் புரியும். எப்படியோ பொது வாழ்க்கையில் அரை நூற்றாண்டைக் கடத்தி விட்டேன்.

எனது பொது வாழ்க்கை அரசியலின் மூலமாகத்தான் ஆரம்பமானது. ஆனால், அரை நூற்றாண்டுக் காலத்திலே இலக்கியம் — சமயம் — சமூகம் ஆகிய துறைகளோடும் தொடர்பு கொண்டு அது முழுமை பெற்றுள்ளது. அந்தத் துறைகளில் ஈடுபட்டுத் தொண்டாற்றுவதற்குத் தேவைப்படும் தத்துவ — இலக்கிய ஞானத்தை அரிதின் முயன்று பெற்று வந்திருக்கிறேன். அதற்குத் தமிழ் மொழியும் எனக்குக் கை கொடுத்து வந்திருக்கிறது. அதிகாரப் பாதையிலே வெற்றி நடைபோட்டு அகில இந்தியப் பெருந்தலைவராக வளர்ச்சியடைய நான் ஆசைப்பட்டதேயில்லை. ஆனால், அறிவுத் துறையிலே வெற்றி நடைபோட்டு அனைத்துலகோடும் தொடர்பு கொள்ள வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டு.

எனது சொந்த வாழ்க்கையும் சரி; பொது வாழ்க்கையும் சரி; திறந்த புத்தகம் போன்றது. அவற்றில் ஒளிவு மறைவு இல்லை. திசை திருப்பமின்றி, வளைவு நெளிவின்றி நேர்க் கோட்டில் நடைபோட்டு நான் வளர்ந்து வந்திருக்கிறேன். அந்த வகையில், எனது நாட்டின் வருங்காலத் தலைமுறையினருக்கு வழிகாட்டுபவனாகவும் வாழ்ந்து வந்திருக்கிறேன்.

இந்த நூலில் என் மதிப்பிற்குரிய தலைவர்களை, கட்சிகளை, சித்தாந்தங்களைத் தேவைப்படுமிடத்து தயவு தாட்சண்யமின்றி விமர்சித்திருக்கிறேன். அவர்களுடைய, அவர்கள்பால் பற்றுகொண்டவர்களுடைய மனங்கள் புண்படபடக் கூடாது

என்ற எச்சரிக்கையுடன் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துக் கையாண்டிருக்கிறேன்.

சுயசரிதம் எழுதும் யாருக்கும் இத்தகைய சங்கடம் ஏற்படுவதுண்டு. விமர்சனம் கடந்த காலத்து நிகழ்ச்சிகளைப் பற்றியதாதலால், எனக்கு உள்நோக்கம் எதுவும் இருக்க முடியாது என்பதனைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

கமா போட்டு நிறுத்துகிறேன்!

எனது பொது வாழ்க்கை முடிவடையாத தொடர் கதை போல நீளுகின்றது. ஆகவே, ''எனது போராட்ட'' வரலாற்றை முற்றுப்புள்ளி வைத்து நான் முடித்து விடுவதற்கில்லை. கமா போட்டு இந்த அளவில் நிறுத்தி வைத்து, வாசகர்களிடம் தற்காலிகமாக விடைபெறுகின்றேன்,....

சிலம்புச் செல்வரின்
முழக்கங்கள்

"தமிழினமே, ஒன்றுபடு!"
"எங்கும் தமிழ், எதிலும் தமிழ்!"

"மாநிலத்தில் சுயாட்சி; மத்தியிலே கூட்டாட்சி!"

"உறவுக்கு எல்லை இமயம்
நட்புக்கு எல்லை உலகம்!"

"உறவுக்குக் கை கொடுப்போம்
உரிமைக்குப் போராடுவோம்!"

அன்னை சிவகாமி
பதிப்பகம்